கம்பராமாயண வசனம்.

1891.

Copyright, Reserved.

ஸ்ரீராமஜயம்.

முதலாவது,

பாலகாண்டம்.

ஆற்றுப்படலம்.

திருவயோத்தியில் தசரதசக்கரவர்த்தியானவர் அரசாட்சி செய்யுங்காலத்தில், மேகங்கள் திருமேனிமுழுதும் விபூதியை உத்தூளனஞ்செய்திருக்கின்ற உருத்திரமூர்த்திபோல வெணணிறமாய் ஆகாயத்திற் பரவிச்சென்று, கடலினீரைக்குடித்து, திருமகள் கொழுநனகிய திருமால்போலக் கருநிறமாய் மீண்டன. அப்படி மீண்ட மேகங்கள் ஆகாயத்திற்பரவி யெழுந்தது எப்படியிருந்தெனின், சிவபிரான் மாமனகிய மலையனையன் சூரியகிரணத்தால வெதுப்பப்பட்டு வருந்துகின்றனன் ஆதலால அவ்வெப்பத்தை நம்மிடத்துள்ள நீரைக்கொண்டுதணிப்போமென்று நினைத்து சமுத்திரராஜன்எழுந்ததையொத்திருந்தது. மேலும், அம்மலையின்மேல் மழைத்தாரைகளைப் பொழிந்தது எப்படி யிருந்தெனின், தியாகிகள் தம்மிடத்துள்ள பொருள்களையெல்லாம் செல்வநிலையாமையை நினைத்து நாளைக்கு வேண்டுமென்று வைத்துக்கொள்ளாமல் எப்படி வனையாது வழங்குவார்களோ, அப்படியே இருந்தது. அம்மழைத்தாரையினாலுண்டாகிய வெள்ளமானது பெருமையைமேற்கொண்டு தர்மத்தை நோக்கி மநுநீதியின்படி செங்கோல்செலுத்திய அரசனுடைய கீர்த்தியைப்போலவும், ஞானத்தையுடைய பெரியோர்கள்கையில்வழங்கியதானப்பயனைப்போலவும் பெருகிற்று. அவ்வெள்ளமானது அம்மலையிலுள்ள எல்லாப் பொருள்களையும் கிரகித்துக்கொண்டு வருவதனால் விலைமாதரைப்போலவும், முத்து, பொன், இரத்தினங்கள், மயிலிறகு, யானைக்கோம்பு, அகிற்கட்டை, சந்தனக்கட்டை முதலிய பலவகையான பொருள்களையும், ஏந்திக்கொண்டு வருவதனால் வியாபாரிகளைப்போலவும், பலவகையான மலர்களையும், மகரந்தத்தையும், தேனையும், யானைமதத்தையும், பொற்பொடியையும், பொருந்திவருவதனால் ஆகாயத்தில் காணப்படுகின்ற இந்திரவில்லைப்போலவும், மலைகளையும், மரங்களையும் பறித்துக்கொண்டும், இலைமுதலாகிய பொருள்களை ஏந்திக்கொண்டும், வருவதனால் முற்காலத்திற் கடலில் திருவணைகட்டுதற்குப்புறப்பட்ட மனிதரியமுள்ள வானர சமூகத்தைப்போலவும், ஈக்களும், வண்டுகளும், மொய்க்கும்படி எல்லைகடந்து உற்சாகம் மிகுந்து தெளிவில்லாமல்கலங்கி, தேங்கிவருவதனால் கட்குடியர்களைப்போலவும், யானையையும், பல மனிதர்களையும், கொடிகளையும் இழுத்துக்கொண்டு பேரொலியுடன் வந்து ஊன்றிச்செல்வதனால் சமுத்திரராஜன்மேல் சண்டைசெய்யப்போகின்றதுபோல்வும் இருந்தது.

இவ்விதமாகப் பெருகியோடுகின்ற வெள்ளமானது சூரியகுலத்திற்பிறந்த அளவற்ற அரசர்களுடைய நல்லொழுக்கத்தின்படி சகல சீவராசிகளுக்குப்

தாயகமாயிருக்கின்றசரயுநதியில் அதிகமான கோஷத்தோடுவந்து பிரவேசித்து குறிஞ்சிநிலப்பெண்கள் இடித்த குங்குமம், ஏலம், சந்தனம், கஸ்தூரிமுதலிய வாசனைப்பொடிகளின் பரிமளத்தோடு வேடர்கள் வாசம்பண்ணும் பாலைநிலத்தில்பரவி, அந்நிலத்துப்பெண்கள் அஞ்சி வயிற்றி லறைந்துகொண்டு ஓடும்படி அவ்வேடர்களுடைய வில், அம்பு முதலியவற்றை வாரிக்கொண்டு வருகின்றதன்மையினல் குறுநில மன்னனைப்போலவும், ஆயர் வாசம்பண்ணுகின்ற முல்லைநிலத்திற்பரவி அவ்விடத்திலிருக்கின்ற பால், தயிர், வெண்ணெய், நெய், உறிமுதலியவற்றையும், இடைப்பெண்களுடைய ஆடைகளையும் வாரிக்கொண்டுவருதலால் காளியமர்த்தனஞ்செய்த கண்ணபிரானைப்போலவும், கதவுகளை முட்டிமள்ளர்கள் கைதூக்கி ஆரவாரிக்கும்படிபோய் முன்னணி ஓடைகள் பொங்கவும், அவற்றிலுள்ள பூந்தேனை உண்ணவந்த வண்டுகள் குடையவும், நெருங்கிய மணிகள் சிந்தவும், உந்தித்தறிகள் முறியவும், தடக்கையைச் சாய்த்துவருவதனல், மதமழையையுடைய யானையைப் போலவும் போய், மருதநிலத்தைச் சேர்ந்தது. மேலும், அவ்வெள்ளமானது முல்லைநிலத்தைக் குறிஞ்சிநிலமாக்கியும், மருதநிலத்தை முல்லைநிலமாக்கியும், நெய்தல் நிலத்தை மருதநிலமாக்கியும், அளவற்ற பொருள்களை அந்தந்த நிலங்களில் இராமல கலக்கும்படி செய்தும் செல்லுகின்ற தன்மையினல் உயிர்களைத் தேவகதி, மக்கட்கதி, நரககதி, விலங்கின்கதி என்கின்ற நாற்கதிகளிலும் செலுத்துகின்ற வினைபோலவும் இருந்தது. முதலில் ஒன்றுயிருந்து பிறகு அநேகமான வாய்க்கால்கள் முதலியவாகப் பிரிந்துசெல்வதனல் ஒருவனது வமிசம்போலவும் இருந்தது. அன்றியும், முதலில் ஒன்றுயிருந்து பிறகு துறைகள்தோறும் பரவிச்செல்வதனல் அளவற்ற வேதங்களாலும் சொல்லுதற்கரிய பரம்பொருள் அநேகமான சமையத்துறைகளில் வியாபித்து விளங்குவதுபோலவும் இருந்தது. இவ்வாறுபெருகி, சோலைகள்தோறும், சண்பகவனங்கள்தோறும், பூந்தடாகங்கள்தோறும், அழகாகிய மணற்றடங்கள்தோறும், கழுகுஞ்சோலைகள் தோறும், ஓயல்கள்தோறும், சரீரங்களெல்லாவற்றிலும வியாபித்திருக்கின்ற உயிரைப்போல வியாபித்து விளங்கிற்று.

இரண்டாவது.

நாட்டுப்படலம்.

இவ்வண்ணமாக வெள்ளத்தினல் கிறைவை யடைந்த சரயுநதியினல் சூழப்பட்ட கோசலதேசத்திலுள்ள மள்ளர்கள் பலவாறுக அந்நதியின்நீரைக் கட்டிக்கொண்டு வயல்கள்தோறும் உழுது விதைனயை விதைத்து, நாறுநட்டு, அது பயன்படுதற்குமுன்னே, மஞ்சள் இஞ்சி முதலிய ரசகந்தாயப்பயிர்களைச் செய்துகொண்டு, தங்கள் தங்கள் வீடுகளில் சேர்த்துக்கொள்வதல்லாமல், அதியின்மேற்பலனையும் போர்கட்டி, வண்டிகளில் ஏற்றிக்கொண்டுபோய்க் களஞ்சியங்களில் சேகரப்படுத்திவைத்துக்கொண்டு, தேவாலயம், பிராமணர், அதிதிகள், வித்வான்கள், யாசகர்கள் முதலிய பலருக்கும் உபயோகித்துக்

கொண்டும், விருந்தினர் முதலியோனை உபசரித்துக்கொண்டும், தங்கள் தங்களுடைய பந்துவர்க்கங்களுடன் வாழ்ந்துகொண்டிருப்பார்கள். ஆதலால் அந்நாட்டில் வறுமை, பகைவர், பொய்யுரை இவைகளுக் கிடமேயில்லை. அந்நாட்டில் மாதாக்களுடைய கற்பினாலும் மறையோர்களுடைய வைதிகமார்க்க ஒழுக்கத்தினாலும், காலமழையும் அதனல் சகலமான தானதருமமும் தேவதாரா தன விசேஷ உற்சவாதிகளும் குறைவில்லாமல் நடந்துவந்தன.

மூன்றுவது,

நகரப் படலம்.

இப்படிப்பட்ட சிறப்போடுகூடியே கோசலநாட்டிலுள்ள அயோத்தியாநகரமானது, நிலமகளுக்குத் திருமுகமண்டலம்போலவும், அத் திருமுகத்தினிலிட்ட திலகம்போலவும், அத்திருமுகத்துக்கு இன்றியமையாத கண்போலவும், அவளது மங்கலசூத்திரம்போலவும், மார்பில் அசையாநின்ற முத்துமாலைபோலவும், இதயஸ்தானம்போலவும், திருமகள் வாசம்பண்ணுகின்ற பொற்றாமரை மலர்போலவும், இறைவனுடைய கௌத்துவாபரணத்தை வைத்திருக்கின்றபொற்பெட்டிபோலவும், எல்லாவுலகங்களுக்கும்மேலாகியவைகுண்டலோகம்போலவும், சர்வ சங்காரகாலத்தில் சீவராசிகளெல்லாம் வந்து சேர்ந்திருப்பதற்குப் போதுமான ஒரு வீடுபோலவும் பிரகாசித்துக்கொண்டிருந்தது.

இங்ஙகரமானதுமிகவுமுயர்ந்துவிஸ்தீரணத்தையுங்கொண்டிருக்கின்றகோட்டையும், அக்கோட்டையின் மதிலைச்சூழ்ந்து பாதாளம்வரைக்கும் ஆழ்ந்திருக்கின்ற அகழும், அவ்வகழுக்குப்புறத்தில் குறுங்காடும், அதற்குப் புறத்தில் மலைகளும் ஆகிய மதிலரண், நீரரண், காட்டரண், மலையரண்என்கின்றநால்வகையரண்களையுமுடையதும், அநேகமாடமாளிகை கூடகோபுரங்களுடன் கோடிசூரியப் பிரகாசமாய்விளங்கி, எல்லாப்பொருள்களும் நிறைந்திருக்குந் தன்மையால் ஊழிகாலத்தில் திருமாலவயிற்றைப்போலப் பிரகாசிக்கின்றவீடுகளிதிகளும், சகல வேதாகம புராணஸ்மிருதிஇதிஹாஸங்களில் நிபுணரும், பிரமஞானமுள்ளவருமான பிராமணர்வீதிகளும், தேகபலம், மனோபலம் அவற்றோற்செலுத்தப்படுகின்ற வீரம், இவற்றிற்சிறந்த அரசர்வீதிகளும், குபேரனுக்குச்சமானமானவைசியர்வீதிகளும், உழவுமுதலிய தொழில்களில் வல்லவரான சூத்திரர்வீதிகளும், வித்யாசாலை, பானச்சாலை, குதிரைச்சாலை, நாடகசாலை முதலானவைகளால் நிறைக்கப்பெற்று, நான்குவேதம்போன்றநான்குவாயில்களும் உள்ளதாய், தேவேந்திரனுடைய பட்டணமாகிய அமராவதியும், குபேரனுடைய பட்டணமாகிய அளகாபுரியும் இந்நகரத்தின் அழகுக்குத்தோற்றுப்போயின வென்றால் வேறெந்தப்பட்டணத்தை இதற்கு நிகராகச் சொல்லலாம். மாளிகைதோறும் பலநிறமான கொடிகளும், பூரணகும்பங்களும், மகரதோரணங்களும், நிறைந்திருக்கும். வீடுகள்தோறும் மங்கலகீதங்களும், பேரிகைமுதலான வாத்திய விசேஷங்களும் நிறைந்திருக்கும். பரம்பொருளாகிய அருட்பெருங்கடல்திருமகளுடனே கூடி அநேககாலம் இராச்சியபாரம்பண்ணினதலும் இதுவானதே, இத

ற்கு வேறொரு மகிமையும் கற்பித்துச் சொல்லவேண்டுமோ? சுவர்க்க மத்திய பாதாளங்களாகிய மூன்றுலோகத்திலும் இந்நகரத்திற்குச் சமானமான நகர மே இல்லை. இந்த நகரத்துக்கரசன் அரசர்க்கரசனுகிய தசரதசக்கரவர்த்தி. அவன் தன் செங்கோலினது பெருமிதம் ஏழுலோகங்களிலும் செல்லும் படியான கீர்த்தியையுடையவன். இக்காவியத்துக்குத் தலைவனுகிய சீராமபிரா னைப் புத்திரனுகப் பெற்ற பெரும்பாக்கிய முள்ளவன். கல்வி, அறிவு, ஒழு க்கம், பொறுமை, பலம், சௌரியம், உதாரத்துவம், கிருபை, தருமம் இவை முதலிய உத்தமகுணங்கள் எல்லாவற்றையு முடையவன். யாகாதி கிரியைக ளெல்லாம் செய்துமுடித்தவன். உலகத்திலுள்ள உயிர்களுக்கெல்லாம் அன் பில் தாயைப்போலவும், நல்வழியிற் செலுத்துதலில் தந்தையைப்போலவும், பயன்கொடுப்பதில் தவத்தைப்போலவும், நற்கதியிற் செலுத்துதலில் புத்திர னைப்போலவும், நுட்பமாகிய கேள்விகளைக் கேட்குங்கால் அவரவர்களுடைய அறிவுபோலவும் இருந்தான். தரித்திரர்கள் என்கின்ற சமுத்திரத்தை தரவியம் கொடுத்தே கடந்தான். அளவில்லாத நுட்பமாகிய நூல்களை ஆராய்ந்த அறி வென்னும் கடலைக்கடைந்தான். பகைவராகிய சாகரத்தை வாளினுல் கோபி த்தேகடந்தான். சம்பத்தென்கின்ற சமுத்திரத்தை அநுபவித்தே கடந்தான். வெள்ளமும், பறவைகளும், மிருகங்களுமே, வேசையருடைய மனமும் ஒரு வழியிற் செல்லும்படி சக்கரம் செலுத்துவான். சீவராசிகளுக்கெலலாம் தான் ஒரு சரீரம்போல இருந்து பாதுகாத்துக்கொண்டு நிகர்வசிரோமணியாய் இருப்பவன். வேறுதேசத்தரசர்கள் திறைகொண்டுவந்து காணும்போது அவ ரவர்கள் சாஷ்டாங்கமாகத்தண்டனிட அவர்களுடைய கிரீடசிகரங்கள் படுத லால் மாசற்று விளங்குகின்ற வீரக்கழலை அணிந்திருக்கின்ற பாததாமரைகளை யுடைய மகாதுபாவன். இவன்போர் என்னவென்றுல் தசரதசக்கரவர்த்தி என் றுசொல்லுவார்கள்.

இத்தசரதசக்கரவர்த்தியானவன் ஒருநாள் தன்னுடைய குலகுருவான வசிஷ்டமுனிவனை சாஷ்டாங்கமாகச்சேவித்து, சுவாமீ, அடியேன்ஒருவிண்ண ப்பஞ்செய்கின்றேன், அதைக்கேட்டருளவேண்டுமென்றுபயபக்தியுடனேசொ ல்லுகின்றுன். சுவாமீ, என்னுடைய குலத்துக்குத் தாயும் தந்தையும் தவமும் தெய்வமும் சகலமும் நீரே. எங்களுடைய பெரியோர்கள் சூரியனுடைய பிர காசத்துக்குச்சமானமானகீர்த்தியோடு இராச்சியபரிபாலனம் பண்ணிக்கொண்டு வந்தார்கள். அடியேனும் உம்முடையகிருபையினல்இதுவரைக்கும் அப்படியே அறுபதினுயிரவருஷம் இராச்சியபரிபாலனம்செய்துகொண்டுவந்தேன்! மஹாரு ஷிகளும், பிராமணர்களும் துன்பமில்லாமல் சுகமாய்த்தங்களுடைய தவத்தை யும், அக்கினிகாரியமுதலானவைகளையும் வழுவாமல் நடத்திவந்தார்கள். எனக் குப் பிறகு இவர்கள் துன்புறப்படுவோர்களே யென்கின்ற கிலேசம் என்மனத்தில் மிகவும் உண்டாயிருக்கின்றதென்று சொல்ல; பிரமபுத்திரனுகிய வசிஷ்டபக வான் தனது இதயத்தில் முன்னே நடந்த ஒரு தேவரகசியத்தை நினைத் தார். அதுஎன்னவென்றுல், முற்காலத்தில் தேவேந்திரன் முதலான தேவர் கள் இராக்கதராலே மிக்கதுன்பமடைந்து, அந்தத்துன்பம் பொறுக்கமாட்டா

மல்காளகண்டனை பரமசிவனிடத்தில் முறையிட்டுக்கொண்டார்கள். அதைப் பரமசிவன்கேட்டு, அவ்விராக்கதனைச் சங்காரிப்பதில்லை யென்று சொல்லி, தம்மிடத்திற்கு வந்த தேவர்களை அழைத்துக்கொண்டு, பிரமதேவனிடத்திற்குப்போய், தண்டம் ஸமர்ப்பித்து, இராக்கதரால் தேவர்களுக்கு நேரிட்டிருக்கின்ற துன்பத்தைச் சொல்ல, அவரும் இவருக்கு உபசாரம் செய்து, தானுங் கூடப்புறப்பட்டு, மேருபர்வதத்தின் சிகரத்திலிருக்கின்ற நவரத்ந கசிதமான சுவர்ணமண்டபத்திற்போய்ச் சேர்ந்தமாத்திரத்தில், தேவேந்திரன், தன்னை முன்னெருகாலத்தில் இந்திரசித்து நாகபாசத்தால் கட்டி, இலங்கைக்குக் கொண்டுபோனபோது, பிரமதேவன் தன்னை மீட்டுக்கொண்டுவந்த சங்கதியைப் பார்வதீ மனோஹரனுகிய பரமசிவனுடைய திருவுள்ளத்தில் படும்படியாக விவரித்துக் சொன்னன். அதற்கு இருபது கைகளையும் பத்துத்தலைகளையுமுடைய இராவணனுடைய பலத்தை யடக்குவதற்கு எங்களால் முடியாது. திருப்பாற்கடலில் நீலமேகம்போலப் பள்ளிகொண்டிருக்கின்ற கருணாகரமான ஸ்ரீமந்நாராயணன் அந்த இராக்கதர்களை அதம்பண்ணி நம்முடைய துன்பங்களை நீக்கவேண்டுமேயல்லாமல் வேறே உபாயமில்லை யென்று பிரமதேவனும சிவனும் சொல்ல, அப்படியே திருப்பாற்கடலிலே யோகநித்திரை செய்கின்ற மரகதவண்ணனை தேவாதிதேவனை மனத்தில் நினைந்து அநேகவிதமாகத் தோத்திரம்பண்ண, அப்போது பரகதியை விரும்பினவர்களுக்கு அருள்செய்கின்ற திருமகள்நாயகன் அறிந்து, எழுந்திருந்து, பொன்மலைபோலப் பிரகாசிக்கின்றகருடவாகநத்தின்மேலேறி, நீலமேகசாமளரூபமான திருமேனியையுடையவனுய், மார்பிலே மின்னற்கொடிபோலப் பெரியபிராட்டி விளங்கா நிற்க, செந்தாமரைக் காடுபூத்தாற்போலக் கரசரணாதி அவயவங்கள் பிரகாசிக்க, சூரியசந்திரர்களுக்குச் சமானமான திருவாழி திருச்சங்குகளைக் கையிலேந்திக்கொண்டு, கைகூப்பித் தம்மைவணங்கிக்கொண்டிருக்கின்ற பிரமருத்திரேந்திராதியருக்குப் பிரத்யக்ஷமானர். அப்போது அவர்கள் எழுந்து எதிர்கொண்டுபோய்த் திருவடிகளைச் சேவித்து, அநேகவிதமாகத் தோத்திரஞ்செய்து, சந்தோஷமென்கின்ற பெருங்கடலில் மூழ்கினவர்களாய், வணங்குந்தோறும் ஆநந்தக்களிப்பை யடைந்து நடநஞ்செய்து, அந்தப் பகவானுடைய மகிமைகளைப் பலவிதமாக எடுத்துப் புகழ்ந்து சொல்லி நிற்கும்போது, ஆனந்தமென்கின்ற தேனையுண்டு, சகிக்கமாட்டாமல்இராக்கதர்கள்இறந்தார்கள்என்கின்றசந்தோஷத்தினல், திருத்துழாய் பரிமளிக்கின்ற திருவடிகளைக் கிரமப்படிக்குத் தங்தள்தங்கள் சிரத்தில் தரித்துக்கொண்டார்கள். அப்போது மேருமலையின் உச்சியிலிருந்து நீலமேகம் இறங்கிவருவதுபோல அந்தப் பரந்தாமன், கருடபகவானது தோள்மேலிருந்து இறங்கி, மணிமயமான சுவர்ணமண்டபத்தில் அமைக்கப்பட்டிருக்கின்ற நவரத்நகசிதமானசிங்காசநத்தில்எழுந்தருளியிருந்தபின்னர், பிரமருத்ரேந்திராதி தேவர்களும் முனிவர்களும் சேர்ந்து அதிசயத்துடன் இருபுறத்திலு மிருந்து, பகவானை நோக்கி, மஹாபாவிகளாகிய் இராக்கதர்கள் செய்கின்ற துன்பங்களைப் பலவாருகச் சொல்லி, ஓ லக்ஷ்மீநாயகனே, இராவணன், அவன்தம்பி கும்பகர்ணன் முதலான இராக்கதரால், மண்ணுலகத்

திலும் விண்ணுலகத்திலும் கடத்தப்பட்டுவருகின்ற யாகாதி சற்கருமங்கள் தவ றிவிட்டன, இனிப்பிழைக்குந்திறமும் இல்லையென்று பெருமூச்செறிந்து சொல் லுவதாவது, ஓ சுவாமீ, நாங்கள்கொடுத்த அநேகவரங்களின் பலத்தினல், அவ்விராக்கதர்கள் சுவர்க்க மத்திய பாதாளம் என்கின்ற மூன்று லோகங்க ளையும் நிர்மூலமாய் அழித்துப்போட்டார்கள். இந்தச்சமயத்தில் தேவரீரு டைய கிருபையில்லாவிட்டால் ஒரு கணப்போதும் இவ்வுலகமுழுதும் அழி த்துபோகும். எங்களால் அக்கொடிய பாவிகளாகிய அரக்கரை நாசப்படு த்துதற்குக் கூடுமானதாக இருக்க இல்லையென்று சிந்தாகுலராக இருந்தார் கள். அப்போது மிகுந்த பரிமள்ங்கமழும் துளபமாலாதரனன ஸ்ரீவிஷ்ணு மூர்த்தி சிவப்பிரமாதிகள் முதலிய தேவர்களை நோக்கி நீங்கள் பயப்பட வேண்டாம், அக்கபட வஞ்சகராகிய இராக்கதனைச் சங்கரித்து உங்களுடைய துன்பங்களைக்களைந்து ரக்ஷிக்கின்றேமென்று திருவாய்மலர்ந்தருளியபின்னும் ஓர் வசனம் அநுக்கிரகம் செய்ததாவது, தேவர்கள் முதலிய நீங்களும் பூலோ கத்திற்போய் வனங்களிலும், மலைகளிலும், தடாகங்களிடத்திலும் வானரங்க ளாகச் சேனையோடு பிறந்து சஞ்சரித்துக்கொண்டிருங்கள். கொதுகையொத் தவர்களுடைய வரத்தையும் அவ்வரத்தினல் கெர்வமடைந்த இராக்கதரு டைய வீர்ழ்வையும் படுசூரணஞ்செய்ய நாமும், சங்கு, சக்கரம், சேஷன், இவர்கள் தம்பியர்களாக ரதகஜ துரகபதாதிகளையுடைய அயோத்தியாபுரியை யாளும் தயரதசக்கரவர்த்திதிருக்குமாராராகத் திருவவதாரஞ் செய்கின்றேமெ ன்றுதிருவாய்மலர்ந்தருளிய கட்டளையைச் சிவப்பிரமாதிகள் முதலியதேவர் கள்கேட்டு அதிகசந்தோஷக்கடலில் முழுகினவர்களாய் ஆனந்தக் கூத்தாடி னர்கள்.

மங்கலகீதங்கள் பாடினர்கள். இன்றையதினம் நம்மை இரட்சித்தன ரென்கின்ற அதிக சந்துஷ்டியால் சுராதிபனுகிய தேவேந்திரன் எனது மனக் கலக்கம் தீர்ந்ததென்றன். சிவப்பிரமாதி ருஷிகள் முதலிய தேவர்கள் எங்களு டைய சிரமம் இன்றே ஒழிந்ததென்றார்கள். அந்தச்சுவாமியும் ஸ்ரீகருடபக வான்மேலில் எழுந்தருளிப்போனபின்பு, பிரமதேவன் தேவர்களைப் பார்த்து பூலோகத்தில் நான் முன்னமே சாம்புவந்தனைப் பிறந்திருக்கின்றேன். ஆத லால் நீங்களும்போய் அவ்வாறுக உதித்திருங்களென்று சொன்னமாத்திரத் தில் தேவேந்திரன் நான் சத்துருக்களுக்கு ஓர் இடிபோல் வாலியாகவும், அவன் மகனுகிய அங்கதனுகவும் பிறக்கின்றேனென்றன். சூரியன் அந்த வாலி யினுடைய தம்பி சுக்கிரீவனுகப்பிறக்கின்றேனென்றன். அக்கினி எனது அமி சம் நீலனென்றன். வாயுநான் அநுமானுகப் பிறக்கின்றேனென்றன். மற்றதே வர்களெல்லாம் நாங்கள் வானரங்களாய்ப் பிறந்திடத்தீர்மானித்தோமென்றார் கள். திரிபுராந்தகனன பரமசிவன்நான்வாயுவின் மைந்தன் அநுமனென்றார். இவ்வாறுக இவர்களே அவதரிப்பார்களாகில் உலகோர்க்கு நாசமுண்டா? இராது. கிருபாநிதியான பாற்கடற்பரமன் நியமனப்படி பிரமதேவனும ஞானதண்டனுகிய சிவனும்தேவர்களும் அந்தந்தப்பிரகாரமாய் பூமியில் இரு ண்டவனத்தில்வானரராக அவதரித்தார்கள். இக்காரியங்களுக்கு கர்த்தா

வாயிருந்தவர்கள் அவரவரிடம்போய்ச்சேர்ந்தனரென்னும் தேவரகசியத்தைச் சீர்தூக்கி அறிந்தவசிஷ்டபகவான் தசரதசக்கரவர்த்தியைக் கருணைததும்புங் கண்ணால்நோக்கி ஒரு வசனம் கூறுகின்றார். அரசர்க்கரசனே நீர்வருந்தேதல், இவ்வீரேழு பதினன்குலகங்களையும் செங்கோல்செலுத்தி அரசுசெய்யும் புத்திரனைப்பெறுவீர். ஆதலால்ஐயா! புத்திரகாமேஷ்டி என்னும் வேள்விசெய்வீராகில் உமது மனைவியாதிதீருமென்று சொன்னர். அதைக்கேட்டு அரசர்க்கரசனுகிய தசரதமகாராசன் மிக்க ஆனந்தமெய்தி வசிஷ்டபகவானுடைய உபயசரணார விந்தங்களையும் சேவித்துக்கொண்டு ஸ்வாமி உம்மையேசரணமடைந்தவெனக்கும்துன்பமும்வருமா, வரவேமாட்டாது. ஆதலால்அவ்வேள்வியை நிறைவேற்றுதற்குவேண்டியகாரியங்களை அடியேனுக்கு அநுக்கிரகஞ்செய்தால் அப்படியேநடத்துவிக்கொள்ளுகின்றேனென்றான். அதற்குவசிஷ்டபகவான் சுற்ற மற்றதேவர்களோடு மற்றவர்களையுமபெற்ற காசிபமுனிவனுடையபுத்திரர், விபாண்டகருடைய குமாரர், கங்காதரனுகிய ஈசனும் புகழ்தற்குரிய கலைக்கோட்டு மஹாரிஷியென்பவர், பின்னும்வேதசாஸ்திர பாண்டியுத்துவத்தில் தன் பிதாவுக்கே ஒப்பானவர், மனுநீதிநெறி வாய்மை இவைகளில் பிரமதேவனுக்குச் சமானமானவர். மேலும் இவ்வுலகவாழ்க்கையின் தன்மை யறியாத உத்தமச்சிரேஷ்டர், கலைமான் முகமாய் ஓர் கொம்புடனேவிளங்குகின்ற சிரமுடைய மகாநுபாவர். ஆதிசேஷனல்தாங்கும் இவ்வுலகத்திலுள்ள மாதர்களை மிருகமென்றே தீர்மானித்தவர், மகாதவத்தை யுடையவர். பிரமதேவனும் சிவனும் புகழ்தற்குரிய சாதசில குணமுடையவ ராதலால் அவரால் இவ் வேள்விமுடிவுபெறுமாயின் புத்திரருண்டாம் என்றனர்.

இதைக்கேட்ட அரசர்க்கரசனுகியதசரதசக்கரவர்த்தி முனிவர்பிராணுகிய வசிஷ்ட பகவானுடைய திருவடிகளில்சேவித்து ஸ்வாமி அக்குற்றமற்ற தவச்சிரேஷ்டர் யாண்டிருக்கின்றனர். அவரீண்டுவருவதற்கு வேண்டி யான் செய்யுங்கருமம்யாது? தேவரீர் அருளவேண்டுமென்று இரக்கக் கூறுகின்றார். கொடிய துன்பமுதலிய எவையும் தலைக்காட்டாது ஒளிக்கும்படி இவ்வுலகத்தைஆளும்படியான சத்தாகியகுணத்தையும் கருணையையு முடையானையும், எச்சம்பந்தத்திலும் விலக்குதற்குக் கூடாதவனையும, மனுகுலத்தில்உதித்தவனையுமஇருந்த உதானபாதனென்னும் அரசனுடையகுமாரன், உரோமபதனென்பான இவ்வுலகத்தில ராச்சியபாரம் செய்துவரும் காலத்தில் அந்நாட்டில் அதிகாலம மின்னலோடுகூடியமேகம் மழையில்லாமையால், சகலசீவராசிகளும் வருத்தமடையும் துன்பத்தை அறிந்து உரோமபத னென்கின்ற மன்னவன் வேதசாஸ்திர பாண்டித்துவமுடைய அனேகமுனிவர்களுக்கும், பிராமணோத்தமருக்கும், அபரிமிதமான சகலவிததானங்களும் கொடுத்தும் மழை பெய்யாமையைக்கண்டு அரசன்மனத்தில் மிக்கவிசாரத்தைக் கொண்டு திரிகாலங்களையும் உணர்ந்த மகாத்துமாக்களாகிய பெரியோர்களின் தோத்திரம புகன்று அக்கியமுதலிய சோடசோபசாரம் செய்து சேவித்தும்மழைபெய்யாதிருப்பதற்கு யாது காரணமென்று வருந்திக் கேட்கையில், இப்போது காம்

உமக்குச்சொன்ன சிருங்கியான கலைக்கோட்டுமஹரிஷிவருவாராயின் வேண்யுடி மழைபெய்யுமென்று அப்பெரியோர்கள் சொன்னார்கள்.

அதைக்கேட்ட உரோமபத மகாராசன், எல்லாரையும் மிருகங்களாக எண்ணியிருக்கிற அம்மஹாநு பாவரதுபெருமையை யாராற் புகழத்தக்கது! அவரை இவ்விடத்திற்குக் கொண்டுவருவதற்கு உபாயம் என்னவென்று கவலையோடு சிந்தித்துக்கொண் டிருக்குங்காலையில், அச்சபையிலிருந்த காடகப்பெண்டி ரிருவரெழுந்துநின்று அரசனை வணங்கி, சுவாமீ, அம் மஹரிஷியை நாங்களே இவ்விடத்திற்குக் கொண்டுவருகின்றோமென்று சொல்லக்கேட்ட உரோமபத மகாராசன் அளவில்லாத சந்தோஷமடைந்து, அப்பெண்டிருக்குப்பல ஆடையாபரணங்களைப் பரிசாகக்கொடுத்து, அஷ்டமிச்சந்திரனைப் பழிக்கும் நெற்றியையும், இளமைபொருந்திய பசுமையாகிய மூங்கிலை நிந்திக்கும் தோள்களையும், உண்டோ இல்லையோவென்று ஐயப்படும் அதி நுட்பமாகிய இடையையும், வாரணிந்து விம்மிப்புடைத்து,இறுகி,இளகி, மார்பிடமெல்லாம் தமதெனக்கவர்ந்து, வட்டமிட்டு, அடிபரந்து, நாள்தோறும் விருத்தியடையாநின்று, வடமுதலியவை தாங்கி, இறுமாந்து, பட்டவர்த்தன யானையின் மத்தகத்தோடு எதிர்த்துப்போர்செய்துவெருட்டி,மலலிகைப் பூச்செண்டுகளையிகழ்ந்து,பொன்மலையை அவமதித்து இளைஞர்கள்மனத்தைச் சூறையாடி,புளகித்து,வச்சிரச்செப்பினை நட்புக்கொண்டு,சாம்புநதம் என்னும் உயர்ந்தபொன்னைப்பொடியாக அராவி மேலே தூவினற்போலத் தோன்றத் தேமல்படர்ந்து செம்பொற்சரிகைவேலையமைந்து அலங்காரமான கச்சைக் கிழித்து வெளிப்பட்டு, பளபளத்து, தங்கக்கிண்ணங்களையொத்து,இளநீர்,கிரீடம், பொற்குடம், இணைக்கலசம், சக்கரவாகம், தாமரையரும்பு, கோங்கரும்பு, கைத்தாளம்,நீர்க்குமிழிமுதலியவற்றைஇகழ்கின்றஅழகியதனங்களையும்,நீருண்டிருண்டமேகம், பசுமையாகிய கொடிப்பீர்க்கு, கூந்தற்பனை, கொன்றையின் காய், இருள், சோலை, கருமணல், வண்டின்கூட்டம், ஆகிய இவைகளைத் திரஸ்கரிக்கின்ற கூந்தலையும், வண்டு, தாமரை, நீலோற்பலமலர், யமனது சூலம், மாவடுவின் பிளவு, வேல், கடல், விஷம், அமிர்தம், வாள், சேல்மீன், பெண்மானின் பார்வை இவைகளை வென்ற கண்களையும், செங்கிடை, இந்திரகோபம், பவளத்துண்டு, முருக்கம்பூ முதலியவற்றின் மேற்பட்டு விளங்குகின்ற இதழையும், உடையவர்களாகிய கணிகைகளை; அம் மகாருஷியை யெப்படியாயினும் உங்களுடைய லாவண்யாதி சயத்தாலும், சங்கீத சாமர்த்தியத்தாலும்,திவ்யாந்த பாநாதிகளை யுண்பிக்கையிலுலும் வயப்படுத்தி அழைத்துக்கொண்டு விரைவாய் வாருங்களென்று உபசரித்து அனுப்ப, அவர்களும் அப்படியேயாகட்டுமென்று அரசனைச் சேவித்து விடை பெற்றுக்கொண்டு தேர்மேலேறிச் சென்றார்கள்.

அப்படிச் சென்றவர்கள் அநேகயோசனை தூரம்சென்று, இன்னும் ஒரு யோசனைதூரத்தி லிருக்கிற கலைக்கோட்டுமுனிவரது ஆச்சிரமம் தெரியக்கண்டு,தேரைவிட்டிழிந்து, அவ்விடத்திலொரு திவ்யமான பர்ணசாலையுண்டா

க்கிக்கொண்டு, மகரிஷிகளைப்போல் வேடம் புனைந்து அவர் தந்தையாகிய விபாண்டகர் இல்லாத சமயம்பார்த்து, அம் மகாருஷி சமீபத்திற் சென்று அவ்னைக் காணவேண்டியமுறைப்படி கண்டனர். அம்முனிவரும் இவர்கள் பெரியோர்களென்றே நினைத்து,இன்முகம்,இன்சொல் முதலியவற்றுல்முதலில் உபசரித்துப் பின்னர் அர்க்கியபாத்யாசமனங்களுங் கொடுத்து, அழகிய பீடத்திலிருத்தி, சற்றுநேரம் மதுரசம்பாஷணம் செய்துகொண் டிருக்கும்போது, திடீரென்றெழுந்து அம்மகாரிஷியைத் தொழுது விடைபெற்றுத் தமதுபர்ண சாலையிற்போய்ச் சேர்ந்தனர்.

இப்பெண்கள் இவ்வாறுக சிலநாள் கழிந்தபின்னர், வாழை, மா, பலா முதலிய பலவகைகளையும், வேறு பலவகையான சுவைமிகுந்த உணவுகளை யும் அவருக்குக் கொடுத்து உண்பித்தனர். அவரும் உண்டு களித்திருந்தனர். இவ்வாறு சிலநாள் கழிந்தபின்னர் அம்மகாரிஷிக்குத் தங்கள்மேல் அன்புமிகு ந்திருப்பதை யறிந்துகொணடு, அவனைப்பார்த்து, சுவாமீ, அடியேங்களிருக் கும் பர்ணசாலைக்கு எழுந்தருள வேண்டுமென்று பலவாறுகத் தோத்திரம் பண்ண, அத்தவவேடம்பூண்ட மாதர்களுடையவேண்டுகோளுக்கு அம்முனி வரும் இசைந்து அவர்கள் முன்னே நடவாநிற்க, அவர்களுக்குப் பின்னே தானும் நிருமலசித்தராய் நடந்தனர். அக்கணிகைமாதரும் தாங்கள் எண்ணிய எண்ணம் நிறைவேறினதைப்பற்றி மிகவும் சந்தோஷமடைந்து அம்முனிவர் பெருமானை அழைத்துக்கொண்டு வருமபோது, அவர் அப்பெண்களைநோக்கி, உங்களுடைய ஆச்சிரமம இன்னமெவ்வளவுதூர மிருக்கின்றதென்று கேட்க, அப்பெண்கள் இதோசமீபமாயிருக்கிறதென்று சொல்லி அவனை மெல்ல அழை த்துக்கொண்டு தாங்கள் முன்னும் அவர் பின்னுமாகத்தங்களுடைய சுதேசத் துக்கு வரும்போது, அந் நகரம்வந்து சேர்வதற்குமுன்னரே, மேகங்கள் ஆகா யத்திற் பரமசிவனது கண்டத்தைப்போலக் கறுத்துமின்னலோடும் குமுறலோ டும் கூடிக் கர்ச்சித்துக்கொண்டு சள சள வென்றுமழைதானைகளைப் பெய் தன.

அதனல் அந் நாட்டின்கண் நதிகள், குளங்கள், ஏரிகள், மடுக்கள் முத லானவைகளும் தாம் அடைந்திருந்த வறுமைநீங்கி அவைகளின் ஆரவாரத் தால் செந்நெல் கரும்பு முதலிய பயிர்களும் செழித்து ஓங்கி வருவதை யும், ஆகாயத்தில் இடைவிடாமல் மேகங்கள் மழைபெய்வதையும், ரோமபத மகாராசன் அறிந்து ஆச்சரியமடைந்து அக்கலக்கோட்டுமுனிவர், கோவைப் பழம்போன்ற இதழையும், தாமரைமலர்போன்ற முகத்தையும், முத்துப் போல்ப் பளபளப்பையுடைய பல்வரிசையும், அகில், சந்தனம்முதலியவற்றின் பரிமளப்புகையூட்டிய அளகபாரத்தையும் உடைய அக்கணிகை மாதர்களு டைய உபாயத்தால் எனது எல்லைக்குள் வந்துவிட்டனரோ, இப்படி மழைபெ ய்து நமது நகரம் செழித்தோங்கி யிருப்பதற்குக் காரணம் யாதுள்ளன்று பரா னந்தமடைந்து, தன் அவையிலிருந்த வேத பாராயணத்திற் சிறந்த முனிவரர், பிராமணர், மந்திரிகள், பிரதானிகள், சாமந்தர்கள், ரதகஜதுரகபதாதிகளாகிய

சாஸ்வகைச்சேனைகள் ஆகிய எல்லாம் தன்னைச் சூழ்வர, தனது நகரத்தைவிட்டு இரண்டுயோசனை தூரத்தில் எதிர்கொண்டுபோய், அம்மாதர்களுக்கு நடுவில்வருகின்ற முனிவனைக் கண்ணாரக்கண்டு களித்து, அவருடைய உபய சரணார விந்தங்களுக்குத் தீர்க்கதண்டம் சமர்ப்பித்து, கண்களில் ஆனந்தபாஷ்பம் பெருகும்படி நின்றான்.

அவ்வண்ணம்நிற்கின்ற உரோமபதனென்னும் அரசனை, அம்மாதர்கள் அதிகபயபக்தியுடன்சேவித்து நின்றார்கள். அப்படிச்சேவித்து நிற்கின்ற அக்கணிகைமாதர்களை அரசன்பார்த்து, நீங்கள்போய் இம் மகாநுபாவராகிய முனிபுங்கவனை இவ்விடத்திற்குக் கொண்டுவந்தது நான்படும் துயரத்தைக்கண் டன்றேவென்று அவர்களை உபசாரவார்த்தைகளால் திருத்திசெய்து நிற்பதையும், ரிஷிகள் முதலானவர்கள் இருக்கின்ற நிலையையும் கலக்கோட்டு முனிவரைப்பார்த்து, நம்மைக்கபடத்தினால் இவ்விடத்திற்கு அழைத்துவந்தார்களென்று நினைத்து நிதர்சிப்பதைக்கண்டு; சுவர்க்கலோக வாசிகளாகிய இந்திரன், தேவாகள் முதலானவர்கள் மிகவும் பயந்து, இம்முனிச்சிரேஷ்டருக்குக் கோபம் நேரிட்டால் உலகங்கள் என்னபாடுபடுமோ, இதுஎன்னவிபரீதம, இதற்குநமமால செய்யலாவ தொன்றுமில்லையே, நமக்கு யார்துணையென்று பலவாறுக அச்சங் கொண்டு நடுநடுங்கிக் கலங்கியிருக்கும்போது, உரோமபத மகாராசன் வினாவாய்வந்து அம்முனிவனைவணங்கித் துதித்து, சுவாமீ, அடியேனை மன்னித்துக்காக்கவேண்டுமென்று தான் அடைந்திருந்த துன்பமெல்லாம் விண்ணப்பமசெய்து, முறையிட்டு, ஐயனே, கருணைசெய்தருளவேண்டுமென்று பலவகைவாகப் பிரார்த்தித்து நின்றதின்மேல், அக்கலக்கோட்டு முனிவர் தாம்கொண்டிருந்தசினத்தை ஒருவாறு தணித்துக்கொண்டு, அலையற்றகடல்போல அமைந்து, இவ்வரசன் யாவனையும காப்பாற்றும்பொருட்டு இப்படிச்செய்தனனென்று தெரிந்துகொண்டு பயந்திருந்த அரசனுக்கு ஆசிகூறி, சந்தோஷமண்டைந்தார். அப்போதரசன் அம்முனிபுங்கவனை இரத்நமயமான தேர்மேலேற்றிக்கொண்டு, தன் பட்டணமேபோய்ச்சேர்ந்து, அநேகமுனிவரரும் பிராமணசிரேஷ்டரும் சூழும்படி தன் அரண்மனையிற் பிரவேசித்து நவரத்தின கசிதமான சுவர்ண சிங்காதனத்தின்மீது அவனை எழுந்தருளப்பண்ணி அர்க்கிய முதலான கடன்மைகள் யாவுஞ்செய்து அடியேன் முறையிட்டுக்கொள்ளவேண்டிய தொன்றுமில்லையேயென்று சொல்லி, போழகும், சாந்தமும், கற்புடைத்தல், அன்புநாண் மெய்ப்பூசல் முதலிய பதிவிரதா லட்சணங்களமைந்த தன்புத்திரியாகிய சாந்தையென்பாளை வேதவிதிப்படி அவருக்குப் பாணிக்கிரகணஞ்செய்வித்தான். அந்நாளில் வறுமைப்பிணி அந்நாட்டைவிட்டகலுமாறு மேகங்கள் காலமழைபெய்துகொண்டு வருதலால் அந்நாட்டிலிருந்த க்ஷாமம் முதலிய துன்பங்கள் நீங்கி சகலசீவராசிகளும் க்ஷேமமடைந்த பின்னர் அப்பெரியபட்டணத்தில், கற்பிற்சிறந்தாளாகிய சாந்தையினால் ஏவல்முதலான யாவும் நடக்கத்தக்கதாய் அக்கலக்கோட்டுமுனிவர் எழுந்தருளி இருக்கின்றானென்று விஷ்டபீகவான் கூறினர்.

இதைக் கேட்டமாத்திரத்தில், அரசர்க்கரசனுகிய தசரதச்சக்கரவர்த்தி வசிஷ்டபகவானுடைய திருவடித்தாமரைகளை வணங்கி, சுவாமீ, இப்பொழுதே அம்மஹாத்துமாவாகிய கலைக்கோட்டுமுனிவரை இவ்விடத்திற்கு அழைத்துக்கொண்டுவருகின்றேனென்று சொல்லி, தன் பிரதானமந்திரியாகிய சுமந்திரன் முதலிய அமைச்சர்களுடன் அழகானதேர்மே லேறினமாத்திரத்தில், தேவர்கள்முதலான யாவரும் இப்பொழுதே எங்களுடைய துயரம் தீர்ந்துவிட்டதென்று பூமழையை இடைவிடாமற்பெய்ய, பலவகையான வாத்திய விசேஷங்கள் முழங்க, கடல்போல வேதாத்யயந வொலிதழங்க, பிராமணோத்தமர்கள் வாழ்த்த, மதுரவசனத்தையுடைய மாதர்கள் பல்லாண்டுகூற, கடல் வளைந்தாற்போலத் தன் பரிசனங்கள் தன்னைச் சூழ்ந்துவர, சூரியனைப்போல நெடுந்தூரங்கடந்து ரோமபத மகாராஜனுடைய நகரத்தைப்பார்த்த அளவில், ஒற்றர்கள் செழித்தோங்கிப் படர்ந்த கீர்த்தியையுடைய சக்கரவர்த்திவரவையுணர்த்த, அந்த ரோமபதமகாராசன் கடல்போன்ற சேனைகள் தன்னைப் புடைசூழ்ந்துவரவும், ஆடவர்களும் மாதர்களும் அணிந்திருக்கின்ற ஆபரணங்களின் ஒளிவீசவும், மாகதர்கள் திரண்டுபாடவும், மிகுந்த சந்தோஷத்துடன் புறப்பட்டு சக்கரவர்த்தியை எதிர்கொள்ளும்பொருட்டு ஒருயோசனை தூரம் வரக்கண்டு, சக்கரவர்த்தி மேகமுழக்கமும் பின்னிடும்படி யொலிக்கின்ற பொற்றேரினின்றிழிந்து ரோமபத மகாராசனைச் சேவித்தார். அப்போது அவனையெடுத்துமார்பினிலழுந்தத்தழுவிக்கொண்டுமிகவுங்களித்துச் சக்கரவர்த்தியைநோக்கி, தாங்கள் இவ்வளவுதூரம் விசயஞ்செய்ததற்குக் காரணம் நான்செய்த பெருந்தவமோ! அல்லது இவ்வுலகத்தார் நோற்றநோன்போ! அறிந்திலேன் என்று இன்சொற்கூறி அவர் மனமகிழும்படி தனது ரத்நகசித்ரமான தேரின்மேல் அவனையேற்றிக்கொண்டு, பலவளங்களும் நிறைந்த தன் நகரத்திற்கு அழைத்துக்கொண்டுபோனான். அப்படிப்போய்த் தன் திருமாளிகையில் ஒரு ரத்னமண்டபத்தில் பொற்பீடத்தின்மேல் இருத்தி, பாடகமணிந்த செந்தாமரைமலரை யொத்த பாதங்களையுடைய மாதர்கள் பல்லாண்டுபாட, அர்க்கியமுதலிய கடன்மைகளெல்லாஞ் செய்து, விருந்துசெய்ய, இனிதாக ஏற்றுக்கொண்டார். அவர் யாரென்றால், தேவர்களுக்கு அவர்களுடைய லோகங்களை அசுரபாதையில்நின்று நீக்கியளித்த தசரத சக்கரவர்த்தி. அப்படி விருந்துண்ட பின்னர், மிக்க பரிமளமுள்ள சந்தநாதிகளைக் கொடுத்து, அவனைநோக்கி, தாங்கள் இவ்விடத்திற்கு எழுந்தருளினதற்குக் காரணம் யாதென்று கேட்க, சக்கரவர்த்தி நடந்தவர்த்தமானங்களையெல்லாம் சொன்னபின் பொறுமையைநீக்கி மேன்மையை யடைந்திருக்கின்ற மனத்தையுடைய அரிய தவத்தோனுகிய கலைக்கோட்டுமுனிவனைத் தங்களுடைய நகரத்திற்கு அழைத்துக்கொண்டு வந்துவிடுகின்றேனென்று சொல்ல, சக்காவர்த்தி தேரேறி, சேனையோடு திருவயோத்தியைச் சேர்ந்தார்.

அரசர்க்கரசனுகிய சக்கரவர்த்திதிருவயோத்திக்குச் சென்றபின்னர் வெற்றிவேந்தனுகிய ரோமபதமகாராஜன் அருமையான வேதசாஸ்திரங்களை யுருவுகொண்டாற்போன்ற கலைக்கோட்டுமுனிவருடையஇருப்பிடத்தையடைந்து

அவருடைய இரண்டு திருவடித்தாமரை மலர்களைத் தன்திருமுடிமேலணிந்து கொண்டு மேலும் தான்செய்யவேண்டியகடன்மைகளெல்லாம்செய்துமுடித்த வளவில், முனிசிரேஷ்டர் அரசனைநோக்கி, நீர் இவ்விடத்திற்கு வரவேண்டிய காரியம் யாதென்றுகேட்க, அரசன் சுவாமீ, அடியேனுக் கொருவரங்கொ டுக்கவேண்டுமென்றுசொல்ல, முனிவர் அக்காரியமென்னவென்று வினவினர். அப்போது ஒருபுறுவின் உயிரைக்காப்பாற்றும் பொருட்டுத் தன்னுடம்பின் த சையை யரிந்து அதன் எடையளவாகத் தராசிலிட்டு அத்தசை பற்றுதிரு ந்ததைக்கண்டு, தானே அத்தராசேறின பெரும்புகழாளனகிய சிபிச்சக்கர வர்த்தி வமிசத்திற்பிறந்தானும், தருமம் நிலைத்திருக்கின்ற மனத்தை யுடையா னும், தேவர்களுக்குத் தீங்குசெய்கின்ற அசுரர் வலிகெடவென்று அத்தேவர்க ளுக்குச் சுகங்கொடுத்த வடிவேலையுடையானும் ஆகிய செங்கோல் வேந்தனை னைக் கீர்த்திமிக்க தசரதச் சக்கரவர்த்தி மணிமாளிகைகள் சூழ்ந்த அயோத்தி யா நகரத்துக்குப்போய் மீண்டு எழுந்தருள்வீராக வென்று பிராத்தித்துச் சொன்னன்.

அதைக்கேட்ட கலைக்கோட்டுமுனிவர் அப்படியே அவ்வரத்தைக்கொடு த்தோம். இனித்தேனைக் கொண்டுவாருமென்று சொன்னவுடன், அரசன் அரியதவத்தினையுடைய முனிவரது பாதங்களைத்தொழுது, சக்கரவர்த்தி துய ர்தீர்ந்து பிழைத்தானென்று மிகவுஞ்சந்தோஷித்து, அதிர்கின்ற பேரொலியை யுடையதேனைக்கொணர்ந்து, அதில் தேவரீர்தேவியுடன் எழுந்தருளவேண்டும் என்ன அவ்வாறெனறினர். அப்போது வளைந்த வில்லையுடைய அரசனும் கை கூப்பித்தொழவும், பிறவியச்சம் நீங்கப்பெற்ற முனிபுங்கவர் தொடர்ந்து சுற்றி வீரவும், சோமபதமஹாராஜனுடையபெண்ணும்அரியவேதரூபமேயென்றுசொ ல்லும்படியானகலைக்கோட்டு மஹாரிஷியும் வழிக்கொண்டு நடந்தனர். வெப்ப மாய் உயிர்களை வருத்துகின்ற கொடியவினைகளை யழித்துச்சுகத்தைக்கொடுக் கின்ற சத்தியதேவதையாகியஸ்ரீமகாவிஷ்ணுவந்து திருவவதாரம் செய்யும்படி யாக இம்முனிவர்கருணைசெய்வானென்று நினைத்து, தருமதேவதையும் தேவர்க ளும் ஆகாயதுந்துமியை முழக்கி, ஆராய்ந்தெடுத்த மலர்களைச்சொரிந்து களி ப்படைந்தனர். அவ்விடத்திலிருந்த தூதர் திருவயோத்திக்குப்போய், மலைய யொத்த புயங்களையுடைய சக்கரவர்த்திக் கெதிரிலநின்று, கலைக்கோட்டுமுனி வரது வரவைச்சொல்ல, சக்கரவர்த்தியும் அவனைச் சேவிக்கவேண்டுமென் கின்ற ஆசையாகியகடலில்மூழ்கிவிட்டனர். ஆயினும்தேவர்கள் செய்த தபோ மகிமையினல் வினைவாய் எழுந்து அவனை எதிர்கொள்ளநினைத்துத் தேர்மே லேறினர்.

அப்போது தேவர்கள் முதலானோர்களால் புஷ்பமாரி பொழியப்பட்டன. மங்களாசாசங்கள் உண்டாயின. மங்கலவாத்தியங்கள் ஒலித்தன. போகைகள் முழங்கின. அச்சமயத்தில் அதிர்கின்ற சுரலையுடைய முரசவாத்தியங்கள் தன் முன்னைகமுழங்கப்பெற்றசக்கரவர்த்திதீமைகள்வேரோடு அற்றொழிந்தன, எமது மநோதிக்கமாகிய மலைபொடியாயிவிட்டதுஎன்றுசொல்லிக்கொண்டு, முதிர்ந்த

பெரியதவத்தையுடைய முனிவரரும், நல்லதவங்களெல்லாம் ஒருகுற்றமற்ற வடிவத்தைப்பெற்று இவ்வுலகில் வந்ததென்றுசொல்ல விளங்குகின்றவரும், மான்வுரியை இடையிற்சுற்றினவரும், மானினது காட்சியை யுடையவரும், பொலிகின்ற திருமேனியையுடையவரும், தேவர்களுடைய தங்கமும் அரக்குடைய வண்ணமையும் ஒழியும்படியாக விளங்குகின்ற தவத்தொழிலை மேற்கொண்டவரும், கமண்டலம், குடை, விளங்காநின்ற பூணூல், யோகதண்டம் ஆகிய இவைகள் விளங்கப்பெற்ற பெரிய கைகளையுடையவரும் ஆகியகலைக்கோட்டு முனிவனை மூன்றுயோசனைதூரத்திலே கண்ணுரக்கண்டுகளித்து, தேரிலிருந்து இழிந்துபோய், அம்முனிவருடைய இரண்டு திருவடித்தாமரை மலர்களின் மேல் விழுந்து சேவித்துக்கொண்டனர். அப்பொழுது பழைய நான்குவேதங்களாகிய கொடிகள்மேலேபடர்தற்குரிய கொள்கொமபையொத்தவராகிய முனிவரரும் சந்தியபுத்தியோடு அரசருக்கு மங்களாசாசனம்பண்ணினர். அவருக்குப்பக்கத்திலிருந்த முனிவாகளும ஆசீர்வாதம்பண்ணினர்கள். பிறகு அரசன் மேகத்தைப்போலக் கைமமாறு கருதாது இரவலர் முதலானேர்க்குப் பொன்மாரிபொழிகின்ற பெரியகைகளால அவனைத்தொழுது, ஆழ்ந்தகீரிலுள்ள சேலமீனையொத்த கண்களையுடைய சாந்தையுடன் கலைவல்லாணுகிய முனிவனையும் தேர்மேலேறறி மெலல அழைத்துக்கொணடுவந்தான். அப்படியழைத்துவந்த சக்கரவர்த்தி ஒருகடிகைப்பொழுதில், தாமனைமலர்போன்ற ஒளியுள்ள முகத்தையுடைய மாதாகள் பல்லாண்டுபாடி வாழ்த்தாநிற்க, பேரிகைமுழக்கம் இடையறது முழங்குகின்ற அயோத்திமாநகரத்தை அம்முனிவருடன் அடைந்தா. பிறவித்துன்பத்துக் கேதுவாகிய தீத்தொழிலைச் செய்கின்ற அசுடர்களாகிய ஐவனையும் அற்றவராகச்செய்த வசிட்டமுனிவரும் அரியவேதவழிவையொத்து விளங்குகின்ற மேலோராகிய கலைக்கோட்டுமுனிவரும் அத்தாணிமண்டபம் விளங்க இனிதாக வீற்றிருந்தார்கள். அப்போது சக்கரவர்த்தி பெரியரத்தமண்டபத்தையடைந்து குற்றமற்ற ரத்நபீடத்தின்மேல் அம்முனிசிரேஷ்டராகியவேதமூர்த்தியை எழுந்தருளப்பண்ணி, அவருக்குத்தான் செய்யவேண்டியகடன்மைகளாகிய அர்க்கியபாத்யாதி உபசாரங்களும்செய்து வேறுசிலவார்த்தைகளைச் சொல்லுவார்.

மேலோர்க்குமேலோனே, தருமத்தையும் பெரியதவத்தையு மொத்துவிளங்குகின்ற பரிசுத்தனே, கோத்தியால் போகங்களெல்லாம் பரவப்பெற்ற எனதுபழையவமிசமானது தேவரீருடைய கருணையினல் இனியாதோ ரிடையூரில்லாமல் அரசாட்சி செய்துகொண்டு சுகித்திருக்கும். அடியேனது தவப்பயனும் உண்மையாகும் என்று உபசாரவார்த்தைகள் சொன்னர். சொல்லிய அளவில் அம்முனிவரர் சக்கரவர்த்தியைப்பார்த்து, மன்னர்மன்னனுகிய தசரதசக்கரவர்த்தியே, வசிட்டபகவான் என்று எல்லாராலும் மதிக்கப்பெற்ற பெருந்தவத்தோனே இம்மைமறுமைகளுக்குத் துணையாகப்பெற்ற குற்றமற்ற செய்கையையுடையனு யிருக்கின்றனையாதலால், இவ்வுலகத்தில் உன்னைப்போன்ற அரசர்கள் இருக்கிறார்களா, இல்லை, என்றுபலவகையானஇன்சொற்களைச்

சொல்வி, மேலும, சிறந்தமலேபோன்ற கட்டமைந்தவில்லைத் தாங்கிய திரண்ட தோள்களையுடையவனே, இன்று என்னையழைப்பித்தது நன்மையைத் தருகின்றயாகத்தைச்செய்ய நினைத்தோ, இவ்விடத்திலொளிக்காமல் சொல்லவேண்டுமென்றார். அதைக்கேட்ட சக்கரவர்த்தி மாதவசிகாமணியைநோக்கி, அளவில்லாதகாலம் இடையூறு இல்லாமல் பூபாரம் வகித்துச் சுகித்திருந்தேன். ஆயினும் புத்திரர் உண்டாகவில்லை. ஆகையால் ஒலிக்கின்றகடல்சூழ்ந்த உலகத்தைப் பாதுகாத்தற்குரிய புத்திரனை நன்மையாகிய புகழ்பெறும்படி அடியேனுக்குக்கருணை செய்யவேண்டும் என்றுசொன்னமாத்திரத்தில் முனிசிரேஷ்டர் சக்கரவர்த்தியைநோக்கி, ராஜாதிராஜனே, நீயிரங்கவேண்டியதில்லை. இவ்வுலகமொன்றைமாத்திரமோ அன்று, பதினன்குலகங்களையும் காப்பாற்றும் வலலமையுள்ளபுத்திரனைக் கொடுக்கத்தக்கதாகிய புத்திரகாமேஷ்டி என்னும்யாகத்தைச் செய்யப் பிரயத்தனப்படுமென்று நியமித்தார். உடனே அரசனுடைபபரிசாரகர்கள் அவ்வேள்விக்குரியனவாகிய பொருள்களெல்லாஞ் சேகரித்துக்கொண்டுவந்து அரசனுக்கெதிரில்வைத்தனர். அப்போது அரசர்க்கரசனுகிய தசரதச்சக்கரவர்த்தியும் பரிசுத்தமான புண்ணியதீர்த்தத்தில் நீராடி வேதவிதிக்கு விரோதமில்லாமல் திருத்தமாகச் சமைக்கப்பட்ட யாகசாலையிற் பிரவேசித்தனர். அங்கு ஒலிக்கின்ற ஆகவநீயம், தக்ஷிணாக்கினி, காருகபத்தியம் என்னும் மூன்று அக்கினியையும் வளர்த்து அவைகளில் கலைக்கோட்டு முனிவரும் வசிஷ்டமுனிவரு மிருந்துகொண்டு அநேக பிராமணோத்தமரும் ரிஷிகளும் சூழ்ந்திருக்க, பன்னிரண்டு மாதம்வனையில் ஆகுதிகொடுத்து யாகத்தை நடத்திவந்தனர். இவ்வாறு பன்னிரண்டுமாதம் நிறைந்தவுடன், தேவதுந்துமி முழங்கின, தேவர்கள் ஆகாயத்தில் இடமில்லையென்னும்படி மூடிக்கொண்டனர். இவ்வாறு தேவர்கள் முககமலம் ஒளிவிடநெருங்கிஉள்ளிடம்வாசனை நிறைந்த புஷ்பங்களைச்சொரிந்து, ஆரவாரித்துநிற்க, தபோமகிமை யென்கின்ற தகுதியையுடைய கலைக்கோட்டுமுனிவர் அவ்வக்கினியில் புத்திரருண்டாவதற்கேதுவாகிய மந்திரோச்சாரணத்துடன் ஆகுதிகொடுத்தார். அச்சமயத்தில், அவ்வக்கினியிலிருந்து, நெருப்புப்போற் சிவந்திருக்கின்ற செம்பட்டமயிரையும், சிவந்த கண்களையுமுடைய ஒரு பூதமானது, அழகிய பொற்றட்டில், பரிசுத்தமாகிய தேவாமுதத்துக் கொப்பானதிவ்யான்னத்தை யேந்திக்கொண்டு புறப்பட்டது. அவ்வாறு புறப்பட்ட பூதம் அத் திவ்யான்னத்தைப் பூமிமேல்வைத்துவிட்டு மறுபடியும் தான் வந்தவழியாகவே சென்று மறைந்துவிட்டது. அமமுனிவரும் சக்கரவர்த்தியை நோக்கி, பூதத்தினால் கொண்டுவரப்பட்ட இத்திவ்யான்னத்தை உன் மனைக்கிழத்திகளாகிய பெண்களுக்கு அவரவர்கட் குரிய முறைப்படி கொடுப்பாயாகவெனக் கட்டளையிட்டனர். அதைக்கேட்ட சக்கரவர்த்தியும் முனிவர் நியமனத்தின்படி, அகில்சந்தன முதலியவற்றின் பரிமளப்புகையூட்டப்பெற்ற சுருண்ட கூந்தலையும் கொவ்வைக்கனிபோன்ற இதழையுமுடைய அழகிற்சிறந்தாளாகிய கௌசலாதேவிகையில், மங்கலசங்கங்கள் முழங்காநிற்க ஒருபாகத்தைக்கொடுத்தான். பொய்கைகளிலும் நதிகளிலும்

சோலைகளிலும் அன்னங்கள்வசிக்கின்ற கோசலைநாட்டிற் கரசனுகிய தசரத சக்கரவர்த்தி கைகேசிகையிலும் தேவாகளாரவாரிக்க அவ்வாறேயளித்தான். பகைவர்நடுங்கும் இயல்பினையுடையபுயவலியையுடையானும், கிழிமரபிலுதித் தவனுமாகிய சக்கரவர்த்தி இந்திரன் என்பதை இன்றேயொழிந்தகென்று தன் பரிவாரங்களோடு ஆரவாரிக்க சுமித்திரைக்குங்கொடுத்துப் பின்னும் பிரிந்து வீழ்ந்ததையும் அச்சுமித்திரைக்குச் சத்துருக்கனுக்கிடமும், வேறுகிய உலக த்திலுள்ள தேவர்கள் முதலானோர்க்கு வலமுந்துடிக்கக் கொடுத்துவிட்டு, அசுவமேதமும, புத்திரகாமேட்டியுஞ் செய்து தேவாகர் ரு அவிர்ப்பாகமுங் கொடுத்து கலைக்கோட்டுமுனிவன் வெள்ளிச்சாலினைறும எழுந்தபின்னர், தன்னை யாரும்வணங்க பலவாத்தியங்களு முழங்க, வெள்ளிக்குரிய கடன் மைகளெலலாஞ் செய்துமுடித்த அரசர்பெருமான், அத்தாணிமண்டபமேவற்று சேர்ந்து, அழகிய சாந்துகுளமுடைய பிரயணாகட்கெல்லாம் சொர்ணவருஷ மாகப் பலதானம்வழங்கி, மினனரும முடிமன்னாகட்கெலலாம் அவாகள் வெறுக்கவெறுக்கையும், தேரும, பரியும், ஆடையாபரணங்களும், அவர்கள் வரிசைகட்குத்தக்கபடியுதவி, பலவாத்தியமுழங்கிடச் சயபுரத்தையடைந்து நீராடி முரசமாரப்ப, முத்துக்குடைநிழற்ற மன்னர தம்மைப்புடைசூழப்பின் னும் அத்தாணிமண்டபமடைந்து, பரமனுகானுக்கொள்ளவேதவேதாங்கமுணர் ந்த முனிவர்பாதங்களைவணங்கினை. அருமையாகியதவமுடைய வசிட்ட முனிவர் ஆணையால அந்தலைக்கோட்டுமுனிவர் பாதங்களைத்தொழுது உப சாரமொழிபலபுகன்றுஇறைவனேயானுய்ந்தேன், இனிப்பிறக்கடவ செல்வம் பிறிதில்லை, கின்னருளால இடரினின்றுநீங்கினேன் என்றுகூறக்கேட்டுக் கலை க்கோட்டுமுனிவரும, அரசாபெருமானுக்குப் பல ஆசிகள்கூறி தம்மோடுவந்த மாதவருடன்வழிக்கொணடு தேர்மிசை யேறிப்போயினர.

இராசமகிஷிமார் மூவரும் சிறிதுநாள்சென்ற பின்னர் கருப்பவேதனையும் வருத்தமுந்தோன்ற முகமதியேயன்றி அழகெ யொருபடிவங்கொண்டதென் னும் உடன்முழுதுமதிபோலும் விளர்த்தது. இவ்வாறுபருவநேரவே, நிலமகள் வாழ்வடையவும், புனாப்பூசமும், தேவாகளும், கடகமும் எழுந்துதுள்ளவும், சித்தரும், இயக்கரும, அமகளிரும, பெய்யுணர்ச்சியையுடைய முனிவரும, அயர்வறு மமராகளாகிய சித்தருமுத்தரு நெருங்கியார்க்கவும் ;

ஒருபக லுலகெலா முதரத் துட்பொதிந்
தருமறைக் குணாவரு மவனை யஞ்சனக்
கருமுகிற் கொழுந்தெழில் காட்டுஞ் சோதியைத்
திருவுறப் பயந்தன டிறங்கொள் கோசலை.

இதன்பொருள். ஒருகாலத்தில் உலகமனைத்தும் தன்வயிற்றிற்பொதிய அருமை யாகியவேதங்களா னுணர்தற் கரியானும், அஞ்சன நிறமுள்ள பெரியமுகிற் கொழுந் தின் சோதியுமாகிய இறைவனைச் செவ்வேபயந்தனள் கற்பின்வரலாற்றினையுடைய கோசலை. எ-று.

இறைவன் ஒருபாலகனுகப் பாற்கடனடுவண் அறிதுயில்செய்வான்கற்பாந்தத்து எவ்வுயிரையும் தன்னகட்டிற் பெய்துகிடந்தவின் 'ஒருபகலுலகெலா முதரத்துட்

பொதிந்து' என்றும், இங்ஙனம் தோன்றியமைகூறலின் 'அருமறை' என்றும், அவற்று ளுங் காண்டற் கரியனாகலின் 'உணர்வருமவனே' என்றும், கார்முகில் தற்பயன் கருதாது பிறர்பயன்கருதியே உபகரித்தலுடைமைதோன்ற 'கருமுகிற் கொழுந்தெழில் காட்டுஞ்சோதி' என்றும், அன்னேனை மகவாகப் பெறுவதனாலெய்தும் செல்வம் பிறி தில்லை யென்பார் 'திருவுறப்பயந்தனள்' என்றும், அவரின்னனென்பார் 'கோசலை' என் றுங்கூறினர். ஒருபகலென்றது கற்பாந்தகாலத்தை, கருமுகிற்கொழுந்தெழில்காட்டுஞ் சோதியென்புழித் தொழிலுவமமும்வண்ணவுவமமும் விரவிவந்தன.உயர்வு சிறப்பும்மை விகாரத்தாற் பிறந்தது. மாதர்க்குக் கற்பினும்சிறந்தது பிறிதின்மையின் 'திறங்கொள் கோசலை' என்றடைகொடுத்துக்கூறினர். பொதிய என்றது திரிந்துநின்றது.

ஆசையும் விசும்புநின் றமர ரார்த்தெழ
வாசவன் முதலினர் வணங்கி வாழ்த்துறப்
பூசமு மீனமும் பொலிய நல்கினள்
மாசறு கேகயன் மாது மைந்தனே.

இ-ள், திசையினும் விண்ணினு நின்று அமரரார்த்தெழுஞ்சும், இந்திரன் முதலிய இறைவரும் வணங்கிவாழ்த் தெடுப்பவும், பூசநாளு மீனலகினமும் பொலிவெய்தவும், மாசகன்ற கேகயன் மகளாகிய கைகேசி மைந்தனை யீன்றாள். எ-று.

புனர்ப்பூச நான்காம்பாதமும், பூசம் ஆயிலிய மிவற்றின்நாற்பாதங்களும், கடகலக் கினமாகலிற் சந்திரனும், மீனத்திற்குரு நிற்றலானும் பூசமு மீனமும் பொலிய வென் றும், இவள்போன்றஉருவினு நலனினும் பிறரின்மையின் 'மாசறு கேகயன்மாது' என் றுங்கூறினர். கற்பாந்தத்தழியுந் தேவனா 'அமரர்' என்றது உபசாரவழக்கு.

தனையவிழ் தருவுடைச் சயில கோபனும்
கினையுமந் தரமிசை கெழுமி யார்ப்புற
அனைபுகு மரவிலை டலவன் வாழ்வுற
இனையவற் பயந்தன ளினைய மென்கொடி.

இ-ள். மலர்முருக் கவிழ்கின்றகற்பகத்தருநிழலில்வதியும்இந்திரனும், அமரர்களும் அந்தரத்திற் சேர்ந்தார்ப்பவும், ஆயிலியமும் கடக லக்கினமும் வாழ்வெய்தவும், இனைய வனைப்பெற்றனள் இனையவளாகிய கொடிபோல்கின்ற சுமித்திரை. எ-று.

கினை ஆகுபெயர். மலைகளின் சிறகை வயிரப்படையோச்சி யரிந்தாலைகலின் 'சயிலகோபன்' என்றதென்க. மேற்கூறிப்போந்தவாறே ஆயிலிய நாற்பாதங்களுங் கடகலக்கினமாகலின் 'அனைபுகு மரவிலை' என்றார். அங்ஙனங் கூறிப்போந்தமை இவரும் அரவரசாகிய பெருந்தகையின் அமிசாவதாரமாகலின் அந்நாளி லவதரித்தமை தோன்றற்கென்க. இவர் அவ்வமிசாவதார மென்பதனைப்பிரண்டு மிவ்வாசிரியரும்'ஆதி மூர்த்தியொத்தான்' என்பதனாலுமுணர்க. மென்கொடி அன்மொழித்தொகை. தனை யவிழ்தரு வென்பதன்முன் மல லொன்றுசொல்வருவித்துரைக்க. அவிழ்தருவென்பது வினைத்தொகை, ஈண்டெல்லைப் பொருட்டாகநின்றது. இதனைச் சேனுவனாய ருஷை பாலு முணர்க. தனக்குப் பகையாகிய மேகநாதனைப்பொருதுவென்று அவற்குமீட்டும் அப்பதங்கொடுப்பவன் ஆகலின் அக்குறிப்புத்தோன்ற 'தனையவிழ்தருவுடைச் சயிலகோப னுங் கினையுமந்தரமிசை யார்ப்புற' என்றும், இதுகாறும் வெளிப்படாதுநின்ற அவ் விந்திரன் அயினைக்கொல்லுங் கூற்றுவன்றோன்றலின் இனியஞ்சாது வெளிப்பட்டா னென்பது தோன்ற 'கெழுமி' என்றுங்கூறினர்.

படங்கிளர் பஃறலைப் பாந்த ளேந்துபார்
நடங்கிளர் தரம்றை நவில நாடகம்
மடங்கலு மகழுமே வாழ்வி ணேங்கிட
விடங்கிளர் விழியிணண் மீட்டு மீன்றனள்.

இ-ள். படம் விளங்கும் பலதலைகளையுடைய அரவரசால் தாங்கப்படுகின்ற நில மகளும், வேதங்களு நடிக்கவும், சிங்கலக்கினமு மகநாளும் வாழ்வெய்தவும், விடந்தங் கிய கண்ணுளாகிய சுமுத்தினை மீட்டும் பெற்றனள். எ-று.

மறை என்புழி இறந்ததுதழீஇய எச்சவும்மை விகாரத்தாற் 'றொக்கது. மகம் பூச நாட்களின் நாற்பாதமும் அத்தநாண் முநாற்பாதமுஞ் சிங்கலக்கினமாகலின் 'மடங்கலு மகழுமேவாழ்விணேங்கிட' என்றார். இவ்விலக்கினங் கருதியே யிவளைச் சத்துருக்க னென்றார்போலும். மீட்டென்பது பிறிதுமொன்றுண் டென்பதுபட வினைமாற்றுய் நிற்பதோரிடைச்சொல். இதனைப் 'பேச்சின்மை மீட்டதன்றேல்' என்புழி மீட்டென்ப தற்குப் பேராசிரியர்கூறுதலானுமுணர்க. நடமென்றது நாட்டியத்தையன்று. கூத்தின் பொதுமையை. பஃறலையென்றது பண்புத்தொகைச் சந்திமுடிபு வேறுபாடென்று உணர்க. ஒரு நோக்கு நோய்நோக்காகலின் 'விடங்கிளர்விழி' என்றதென்க.

இவ்வாறு திருவவதரிக்கவே அந்தாத்தில் அமைகளிர் நடித்தனர், அழுத மயமானவேழிசைப்பாட்டினைக்கின்னரபாடினர், தேவதுந்துபிமுதலியவாத்தி யமுழங்கின ; அமரர்முழுதும் அரக்கர்மாண்டனென்ற பெருமகிழ்ச்சியாலு தலைதெரியாமல் அங்குமிங்குந்திரிந்தனர். சூதிகாகிருகத்திலிருந்த சிலதியர் மிக்கமகிழ்ச்சியுடையராய் அரசாபெருமானுக்கோடோடியுமவருது மக்களுத யஞ்செய்தமையைத் தெரிவிக்கவே ; அந்தஞ்ளா நாளுங்கோளுநின்றமை சி தூக்கிஉலகினைஉய்விக்குந்திறலினையுடையாதோன்றினனெனக்கூறினின்றனர்.

மேடமா மதிதிதி நவமி மீன்கழை
நீடுறு மாலைகர்க் கடக நீதிசேர்
ஓடைமா களிறனை னுதய ராசிகோள்
நாடினே காதசர் நால்ய ருச்சமே.

இ-ள். சிறந்த சித்தினைமாதம், நவமிதிதி, புனர்ப்பூசநாள், மிக்க மாலைப்போது, கடக லக்கினம், கூடியஇச்சுபதினைந்தில் நெற்றிப்பட்டமணிந்து நீதிசோன்ற பெரு ங்களிறுபோல்பவனைய சீராமபிரான்திருவவதாரஞ்செய்தனன். 'கோள்கள்இராசிகளி லேறி நின்றமை கணிதமாக்கள் ஆராயுங்கால் நானகேகாதசர்உச்சமாக நின்றனர். எ-று.

ஏகாதசர் நால்வனென்றது நான்கேகாதசனென மாற்றியுரைக்கப்பட்டது. இவன் சன்மலக்கினத்துக்குப் பதினென்றுமிடமாகிய இடபத்துச் சுக்கிரனும், அதன் பதினெ ன்றுமிடமாகிய மீனத்துக் குருவும், அதன் பதினென்றுமிடமாகிய மகரத்துச் சனி யும், அதன் பதினென்றுமிடமாகிய விருச்சிகத்துச் செவ்வாயும், மேடமாமதி என்றத னுற் சூரியனு முச்சக்கிரகங்களாய் நின்றனனென்பதூஉம் ; மாலையென உடம்பொடு புணர்த்தினமையான் சூரியனேறி புதனும், குருலக்கினத்தும் நான்கிற் சனியுமிருப்பத னுன் இராகுவும், புனர்ப்பூசநாளாகலின் இலக்கினத்திற்சந்திரனும், இராகு நின்ற நிலை மையானே கேதுநின்ற நிலைமையும், மீன்கழை யென்றமையானே இவன் மரகதப் படிவமுடையானென்பதூஉம், ஏனையானைகள் போல்பவன் அல்லனாகலின் நீதி சேர் என்பதூஉம், உச்சக்கிரகம் உச்சனைநோக்கிற் பிச்சையேற்றிடுஞ்சுடைக் கப்பெறுமற் கானின்கண் ஊணின்றி யிருந்தானென்பதூஉம், எழிற் செவ்வாய்நின் றமையாற் களத்திரதோடமும், சுக்கிரன் ஒன்பதாமிடத் துச்சமாகலின் ஏகபத்தினி

விரதமுடையானென்பதூஉம், பிறவும் பெறப்பட்டன. மேடமதியென்னது மேடமா மதி யென்றமையான் மாதங்களுள் அரசமாதமெனப்பட்டு அஃதுஇறைவன் தோன்றுவ தற்கு ஏற்புடைத்தாயினமை தோன்றக்கிடந்தது. இதுநிற்க, பங்குனிமாதமன்றே திருவவதார மனுட்டிப்பதெனின் சாந்திரமானமே விரதமனுட்டிப்பதிற் சிறந்தமை யானும், அது சாந்திரமான மேடமாத மாதலானும் குற்றமின்மை தெளிக. இங்ஙனங் கூறுது வேறுகூறிச் சொற்குணம் வாளாபோயினருமுளர்.

என்று உலகமுண்டபெருவாயனும் உலப்பில்சித்தியம்மானும், ஆராவு முதனும், அயர்வறு மமரர்கட்கிறையும், கரியகோலத் திருவுருப்பெருந்தகையு மாகிய அறவாழியந்தணனுக்குச் சாதகம் கூறியபின்பு, மற்றைமூவருக்கும் அவ்வாறே தக்காங்கு பொன்னிலையிலவனாகுது சுரகுருவாகிய வியாழபகவா னும வாழ்த்தெடுப்பக் கூறின்றனர். அரசர்பெருமான் வசிஷ்டமுனிவரோடு நீராடிவந்திறைஞ பொருளுமதானமாகவழங்கிச்சங்கத்தானிமுழங்கத் தமது மழவுருப்பெருந்தகையார் திருவுருக்காண்பான்சென்று, பூமிமுழுதும் ஏழாண்டு இறைப்பொருள் கொடாதொழிக, நிதிச்சாலை தாணீக்கிவிட்டு வறியரா வார், தாம்வெறுக்க வெறுக்கையைமுகந்துசெல்கஎன்று வள்ளுவருக்குக் கட் டளையிட்டுப பறையறைவித்து அரசாபடையொழிக; அவா தம்பதிகட்குச்செ ல்ல விடைபெறுக என்றும ; அநதனா தியமமும, குறையின்றியோங்குக, யாணடும கடவுளாக்குக்குற்றமற்றசிறபபொடு பூசனையுமாடத்துக, சிவாலயம், விஷ்ணுவாலயம், பிரமாலயம் என்பனகளிற் பழுதாயினசிறணைத்தாரணஞ் செய்க, பிராமணாவதிக்கும் அக்கிராரங்கள், நாற்சாதியும, முச்சாதியுமான இடங்கள்சமைக்க,காலை மாலை,உச்சிமுதலிய அறுகாலங்களிலும கடவுளர்க்கு மாலை, அணிமுதலியவைதிருத்தச்செய்க, என்று கட்டளையிடவே நகரமாந்த ரும், மினனையொத்த மாதரும்கேட்டு, இன்பக்கடலிலழுநதின்முறை முறை யன்பினால உடன்முழுதுமடபுளகரும்ப, கணகளிற்றிறுமணற்கேணியின் ஆனந் தக்கணணீர்வார, அவ்சமாய்த்தீர்த்தனகிய ஆதிபகவன்திருவவதரித்தானென் றுகருதியோ சொலலினர்க்கெல்லாம நிதிக்குவையெறிநதனர். இங்ஙனமாக மாதர்கூட்டமும், மாந்தர்கூட்டமும், பாங்கியாகூட்டமும், பாங்கர்க்கூட்ட மும், இடமகனற நகரமுழுதும் பச்சைப்பந்தலிட்டு,பூமாலைதூக்கிக் கமுகு வா ழைமுதலிய கட்டு அலங்கரித்துக் களபமும, நானமும், சுண்ணமும், விதிதோ றுந்தூவி, நெய்விழாவயர்ந்துபன்னிருநாளும் களிபபுடன் ஆனந்தங்கொண்டாடி, பத்துநாளுங்கடநத இரண்டாநாளில் உத்தாபனஞ்செய்து மெய்ம்மறந்திருப்ப, வசிஷ்டபகவான் அமமக்களுக்கு நாமகரணஞ்செய்வானுயினன்.

காமலை யத்தளர் கைக்கரி யெய்த்தே
அராவணை யிற்றுயில் வோயென வந்நாள்
விராவி யழைத்தருண் மெய்ப்பொரு ளுக்கே
யிராம னெனப்பெய ரீந்தன னன்றே.

இ-ள். மூதலே வருத்த வருந்திய துதிக்கையையுடைய யானை அரவணையிற்றுயில் கின்றவனேயென்று அஞ்ஞான்று உள்ளங்கனைந்து கூவிய மெய்ப்பொருட்கு இராம னென்று நாமகரணஞ்செய்தனன் வசிட்டமுனிவன். எ-று.

முதலை வருத்த வருந்திய கைக்களிற்றைக் காத்தோன் விழுகாண்கனுள் பாற்கடற் பரமனுகவின் அந்தயந்தோன்ற இங்ஙனங்கூறியதென்க. இப்பெற்றிநோக்கியன்றே இவ்வாசிரியரும் பிறண்டும் "மெய்ந்நெறிகண்ட வரதன்" என்றதென்க. ஐம்புலனவித்த அருந்தவரும் இவன் காடுபுக்க ஞான்று இவன் படிவத்தின் விழைந்தமைநோக்கியன்றே 'இராமன்' என்றார். இங்ஙனநிகழ்ந்தமை பின்னரன்றே முன்னரே கருதியிட்டமை எபெற்றிநோக்கி யெனின், அவர் முக்காலமு மொருங்குணர்ந்த முனிவராகலிற் குற்றமின்மைதெளிக. ஏனையர்க்கு மிப்பெற்றியறிந் தோர்ந்துணர்க. அந்நாளென்றது அக்கரா சாப்பக் கடகளிறுவிட்ட காலத்தினை. முனிவர்விழைந்தமையை இவ்வாசிரியரும் கோசிகர் கூற்றுக "அடவா பெண்மையை யவாவுந் தோளினாய்" என்றும், "கண்டானை யழகாற்றுவக்குண்ணவல்லான்" என்றும் பெரிபாரும் பணித்தலையானு முணர்க. தெய்வயானம்மடி லாயிரயாண்டு முதலை நீரிலிழுப்ப யானை கரையிலிழுப்ப அலைப்புண்டு அதற்குத் தன்னிலமாகையானும் அபிமத சிதநியாகையானும், ஆற்றன மிகுதியாகையானும்; தனக்குத்தன்னிலமாகையானும், அபிமதவாதாயத்தானும, ஆற்றல்குறைவானும,; புனழக்கையமிழ்த்துந் தன்மை விளைவதறனே இதனினுங்கிலமிதன்னுக தாழ்வெய்தி இருமுறான்று தான் புகலிடமெய்துவது இறைவன் பாலாகலினை 'கராமலை யத்தளர் கைக்சரி யெய்ந்தே - பராவணை யிற்றுயில்வோய்' எனக்கூறினர். அன்றீற்றே-தேற்றப்பொருட்டு. அசைநிலை யென்பாருமுளர்.

கரதல முற்பிறளி நெல்லி கடுப்ப
விரத மறைப்பொருண் மெய்ந்நெறி கண்ட
வரத னுதிதனிட மற்றைய வொளியைப்
பரத னெனப்பெயர் பன்னினர் நாமம்.

இ-ள். அங்கைநெல்லிக் கனிபோல மெய்ம்மைகூறுதலேவிரதமாகவுடைய மறையின்பொருளுணர்த்தும் இறைவன் றோன்ற மற்றை நித்தனைப்பரதனென்று நாமகரணஞ் செய்தனன். எ-று.

கரதலமுற்பிறளி நெல்லியென்பதனை வடநூலாரும் அத்தாமலகமென்ப. மெய்ம்மை கூறுதலே விரதமாகவுடைமையின் 'விரதமறை' என்றும, அன்னவடிவாயதனை அயனுக்கோதலின் 'மெய்ந்நெறிகண்டவரதன' என்றும், அவன்போலுமகதப்படிவமுடையாரைகளின "மற்றைய" என்றும், நித்தருளொருவராகிய சதாசிவனென்னும் ஆதியங்கடவுள் அபிசமாகலின் "ஒளியை" என்றும, அவனைப் பரதனென்றுராகலின் 'பரதன்' என்றுங் கூறினர்.

பரதனென்றமை:—இறைமக னேவலான் அயர்வறு மமரர்கட் கிறைவன் கான்புகலும், இறையும் உனையகலகில்லேனென்று இளையோன் பின்படரலும், இத்துணைநிகழ்ச்சியைக்கேட்டு இறைமகன் வான்புகலும், சத்துருக்கன்நின்னையல்லது அறியேனென்றுங் கூறியவமையத்தும், தன்முன்னேன் ஆணைக்கஞ்சிப் புலிப்பொறை பொறுத்தலின் என்க.

உலக்குநர் வஞ்சக ரும்பரு மூய்ந்தார்
நிலக்கொடி யுந்துயர் நீத்தன ளிந்த
விலக்கரு மொய்ம்பின் விளங்கொளி நாமம்
இலக்குவ னென்ன விசைத்தன னன்றே.

இ-ள். வஞ்சகராகிய அரக்கர் கெடுவாராயினர்; அமரரும் பிழைத்தனர்; நிலமகளும் துன்புறுதல் ஒழிந்தனள்; அவ்விலங்கற்கரிய ஆற்றலையுடைய விளங்குநித்தனை இலக்குமணனென்று நாமகரணஞ் செய்தனன். எ-று.

உலக்குநொன்புழி நகரமெய் நிகழ்காலங்காட்டிற்று. உம்மையிரண்டு முறையே இறந்தது தழீஇயது மெதிரதுதழீஇயதுமாம். நனீதவவில்லின் பேராற்றலுடையாருகை வின் 'விலக்கருமொய்ம்பு' என்றும், பொன்னிறமுடையாருகலின் 'விளங்கு' என்றும், அரவரசாகிய பெருந்தகையமிசமாகலின் 'ஒளி' என்றும், அவன்தன் சுடிகையின் இவ்வுலகைப்பொறுத்த ஆற்றலேன்ற 'இகரச்சுட்டை' விரித்தும், அவனை 'இலக்குமணன்' என்ருராகலின் 'இலக்குவன்' என்றுங் கூறினர். இலக்குமணனென்பது திரிந்துநின்றது. அங்ஙனங்கூறினர் இவன் அயர்வறு மமரர்கட் கிறைவனெடு கான்படர்ந்து அவன்குற்றேவல்செய்தமையாய பெருந்திருவுடைமைநோக்கி. இவன் பொன்னிறமுடையா னென்பதனைப் பிரண்டு மிவ்வாசிரியர் கூறலானுமுணர்க.

முந்துருக் கொண்டுசெம் முளரி யலர்ந்தால்
ஒந்திருக் கும்மெழி லுடையவிவ் வொளியால்
எந்திருக் குங்கெடு மென்பதை யுன்னுச்
சந்துருக் கன்னெனச் சாற்றினர் நாமம்.

இ-ள். முந்தம் படிவங்கொண்டு செந்தாமரைமலர்ந்தா லொத்திருக்கும்அழகமைந்த இந்திரரால் எக்குற்றமும் ஒழியுமென்று உய்த்துணர்ந்து சந்துருக்கனென்று நாமகரணஞ் செய்தனன். எ-று.

இவன் வெண்ணிறமுடைமையின் 'முந்துருக்கொண்டு' என்றும், கண் கை கால் முதலியன செந்தாமரைபோல் தோன்றலின் 'செம்முளரி யலர்ந்தாலொத்து' என்றும், பாஞ்சசன்னியமென்னும் சங்கத்தின் அமிசமாகலின் 'ஒளி' என்றும், இறைவன் பால் அன்புடையார்க்கு எண்மையராகலின் 'இகரச்சுட்டை' விரித்தும், இன்னோர்க்கு எத்துணைக்குற்றமு மொழியுமாகலின் 'எந்திருக்குங்கெடும்' என்றுங் கூறினர். சந்துருக்கனென்றமை: இவனைக்கண்டவழி மாற்றலர் மண்ணுண்ணும்படி கிடப்பதுகருதியென்க. இனிப்புறத்தேயுள்ள மாற்றலரன்றி அகத்தேயுள்ள ஐம்புலக்கள்வரையும் களிசறுத்தானென்பார் அங்ஙனங் கூறினுமொன்னு மமையும். எழில்நலமென்னுந் துணையாய் நின்றது. இவன் இன்றைவன்பால் அன்புடையார்க்கு எண்மையான் என்பதனை 'அவனையல்ல தறியாத பரதனை யல்லது வேறென்றறியாத படியாரான்' என்பர் பெரியாரும். இது இல் பொருளுவமையணி. சந்துருக்குரன என்பது திரிந்துநின்றது.

மெய்யொழுக்கமுடைய முனிவர்பெருமான் வேதோக்தமாக அந்நான்கு மக்களுக்கும் நாமகரணஞ்செய்யச் சந்தோஷித்துத் தமதுகையாற்கொடுத்த நிதியாகிய நியால வேதவேதாந்தமுணர்ந்த அந்தணனென்னுங்கடலினிறையச் செய்து, நீலோற்பலமலரும்தாமரைமலருமென்றுசொல்லும ஓவியவுருவத்தொருவனையல்லது தனக்காவியும் உடலமும் இன்றெனத்துணிந்து உலகமுழுதுமுடையஅரசர்பெருமானிருந்தனன். இவ்வாறு நிகழ அமிர்தஞ்சொரியும்குதலைச் சொற்பேசிக் குறுநடையிட்டுநடந்து இருளைக்கீண்டதினகரன்னனவும், உத்தாத்தம், அனுதாத்தம், சுவரிதமென்னும் சத்தரூபமமைந்தசதுமறையெனவும், குமரர்கள் நால்வரும் குறைவற நானொருமேனியும் பொழுதொருவண்ணமுமாகவளர்ந்து காதினைதொளைத்து அரசன்செய்யவேண்டியகருமங்கள்னல்லாஞ்செய்துமுடித்துச் செங்கையாடி, தாலாட்டப்பெற்றுச், சப்பாணிகொட்டி, முத்தமளிக்கப்பெற்று, சிலதியர் வருக வருக, கண்மணியேவருக, ஐயவருக,

அழுதேவருக வருகவென விளிக்கநின்று சாம,தான,பேத,தண்டமுறைப்படி மதியைக்கூவி அம்புனியைவருகவென அழைக்கக்கண்டு சிறுமியரிழைத்தசிற் றில்சிறைதத்துச் சிறுபறைமுழக்கிச் சிறுதேருருட்டுவாராய் ஐந்துவயதுவர வித் தியாப்பியாசம்செய்யப்பெற்றுஏழாம்வயதில அரசர்மரபின்முறைமையால்உப நயனஞ்செய்விக்க வேதம், வேதாங்கம், வில்வித்தை, யானையேற்றம், தேரே ற்றம், குதிரையேற்றம், முதலியபழகித் தேவர்கள் தனிநாயகனுகிய மைவண் ணப்பெருமான் இவ்வண்ணம் தன்சகோதரர் மூவருடன்வளர்ந்துவருநாளில் அருமறைமுனிவரும்,அமரரும்,நிலமடந்தையும், அந்தகரமாந்தரும்இருவினை மிக்கும்பகைவனுகிய இவனைவிட்டு ஒருபொழுது நீங்கலாகாதென 'இறையுமக லகில்லேன்' என்றவாறுநெருங்கியிருப்ப ஆதிபகவனும், இளவலும், நிலமகள் செய்தபெருந்தவமென்று சொல்லச்சிறந்தநதிகளிலும், மேகந்தவழுஞ் சோலை களிலும், வாவிகளிலும, சென்றடைந்து நெய்குழலுறுமிழைபோல ஒருவனா யொருவர் பிரியாது திரிவாராயினர். இவ்வாறே பரதாழ்வானும், சத்துருக்க ணழ்வானும்ஒருகணமேனுமெக்காலத்தினும்பிரியாராகிளம்மையாளுடைய அற வாழியந்தணனும் இளையாழ்வானுமபோலப் பிரியாதுடனுறைவாராயினர். இளவீரர் நாலவரும் முனிவர்கள் வசிக்கும் சோலைகளிற்சென்று அவரிடை அக்காலத்தில் கல்லனகேட்டு இன்புற்று மாலைக்காலமாகமீண்டு எதிர்கின்றவர் கார்காலமேகம்வர அலர்கின்ற பயிர்போலக்களிப்படைந்து நிற்ப அயோத்திநகர மே யடைவர். ஆபாலபண்டிதரீனவரும் இவர்கள் நீடுழிவாழியென்று பல்லா ண்டுகூறி தமதுமனத்தில சக்கரவர்த்தியும், அவர் பட்டமகிஷிமாரும்போலக் கடவுள் தியானம்செய்து களிப்பாராயினர்.

கடலும் கார்மேகமும் விளங்குகின்ற கமலமலர்மலர்ந்து வடவனையாகிய மேருவனையுடன்வருஞ்செயலேயென வேதங்களும் எட்டுதற்கரிய தனிமுத லாகிய ஆதிபகவனும், இளையாழ்வானும் வருவதுகண்டு நகரமாந்தர்கூறவும், எதிர்வருவானைக்கண்டு இறைவன் முதிர்கின்றகருணையால் முகமலரநோக்கி யாதுகாரியமாகவந்தீர்! உமதுமாளிகையில் யாவரும்சுகமாயிருக்கின்றனரோ! குமரர்வலியரோவெனஉளையாடியும், குடிகளும்அகதிகட்குத்தந்தை யன்னைப் உம்மையாம் அசாகவுடையேமாகலின் எமக்குயாதுகுறை ஓர்குறையுமேயின் று;உலகமுழுது மொருகுடைநிழலில் இப்பிரமகற்பம் வருந்துணையும் ஆள்க வென்று கூறிநிற்பவும், இவ்வாறு நகரமாந்தர்யாவரும் மெய்ம்மையான புகழ் மேவ இளையவீரர் மூவரும் குற்றமறத் தன்னடிநிழலிலிட்டுநீங்காதிருக்க சிரு ட்டி, திதி, சங்காரமென்னு முத்தொழிற்குங் காரணராகிய பிரத்தியுமனன், அநிருத்தன், சங்கருஷணன் என்னும் வியூகருக்கு முதல்வராகிய வாசுதேவ ரது திருவவதாரமாகிய பரம்பொருள் எழுந்தருளியிருக்க அரசர்பெருமான் உலகமுழுதும் தன்வெண்கொற்றக் குடைநிழலொதுங்க, தன்கடைவாயிலின் கண் வெற்றிமுரசறைய, முனிவர்கள் வாழ்த்தெடுப்பக் கனையிடற்கரியபெரு மகிழ்ச்சி என்னும் கடலில் அமிழ்ந்தி அரசுசெய்துவந்தான். இதுகிடக்க,

கையடைப்படலம்.

களிரினையுடைய கற்பகநாட்டு அமரர்கள் அடைந்தயிர்க்குஞ் சிந்தைய ராய்நினைத்தற்கரியதும்விசும்பினும்நீண்டதுமானசுதர்மமென்னுஞ்சடைபோல விளங்கும் தனது அத்தாணிமண்டபத்தில் சிங்கஞ்சுமக்கப்பெற்ற தோராசனத்தில் எழுந்தருளியிருக்கையில் வானில் உலாவித்திரியும் சாரணர்கள் தயரத சக்கரவர்த்தி கொலுவீற்றிருப்பதனல் இவன் நமது அரசனுகிய இந்திரனேயா மென முன்னொண்ணிவந்தடைந்து பின் இவனுக்கு ஆயிரங்கண்ணில்லாமை யால் அவ்வையநீங்கிச்செலலவும் ஆண்சிங்கம்போன்ற பேராற்றலையுடைய இச்சக்கரவர்த்திமுன்பு நிலைத்தினை, இயங்குதிணையாகிய இருதிணையை யும் தேவரோடு பிரமனையும வேறுவிதிப்பேனென்று தொடங்கிய சினமிக்க பெருந்தவத்து விசுவாமித்திரனென்னும் கோசிகமுனிவர் அவ்வத்தாணிமண் டபமே நோக்கிவரக்கண்டு தன்மார்பிலணிந்த ஆரமுதலிய அணிகள் ஆகாய த்தில்தோன்றிய பரிதியங்கடவுளும் நமக்கு இத்துணையொளியின்றே யென்று அஞ்ச, ஒளிகொண்டுவிளங்க, தாமரைப்பூவில எழுந்தருளியிருக்கும் நான் முகக்கடவுள்வரவுகண்டுஓடோடியும்சென்றுவணங்கும் இந்திரன்போலவினைவி னெழுந்துசென்று அவரது பாத தாமரைகளில் அடியற்றபனைபோல விழுந் து வணங்கினன். அவ்வாறு அவனைவணங்கிச்சிறந்ததோர்பீடத்தி லெழுந் தருளச்செய்து அவர்சிபாதங்களுக் கர்ச்சனைசெய்துகைகட்டி வாய்புதைத்து நின்று தேவரீர் எழுந்தருள யான் என்னமாதவஞ்செய்தேனை, இன்றுயான் செய்த தீவினையனைத்தும் பாறினவென்றுபேசிநிற்கக் கோசிகமுனிவர் கூறு கின்றார்.

பகைவணைக்கடந்த உளன்மிசைந்த நெடியவேலைக்கைக்கொண்ட புரவ லர்பெருமானே! எம்போன்றமுனிவரரும், அமரரும் இடையூறு நேர்ந்தவழி வெள்ளிமலையையுடைய இறைவனிடத்தும், பாற்கடற் பரமனிடத்தும், பதும பீடப்பெருந்தகையிடத்தும், கற்பகநாட்டுத் தலைவனிடத்தும, அழகியமணி மாடங்களையுடைய அயோத்தியர் பெருமானுகிய நின்னிடத்துமலலாமல் வே றிடம்யாங்கள் புகலடையத்தக்கதன்று. மேலும் இனிமையான கற்பகத்தரு தேனை இடையேதுளித்து நிழல்செய்யு மிருக்கையைவிட்டு இழிந்துவந்து என்றுமழியாமல அடைந்தானைக்காக்குநின் வெண்கொற்றக்குடைநிழலிலொ துங்கிக் குறையிரந்து நிற்பதைக்கண்டு குன்றுபோலுயர்ந்த குவவுத்தோளை யுடைய சம்பரனை நின்மனைவியாகிய கைகேசி தேரின்பரிகளைத்தூண்டிச் செலுத்தப்பொருது அவன் குலத்தொடும்வென்று நீ கொண்டளிக்கப்பெற்ற வாழ்வையன்றே இன்றும் இந்திரனைச் சகலதேவரும் சாருவபௌமனெனத் துதிக்க அவன் அரசெய்திவாழும்வாழ்க்கை! என்றுகூறவே, அரசர்பெருமானும் அவரது திருமுகத்தை யேறவெடுத்துநோக்கி ஒருவராலும் கணையிட்டெத்தடுப் பதற்கரிய சுந்தாஷசாகரத்திலழுந்தி இருகைகளையுக் தலைமேற்குவித்து அர செம்தி யிருந்தபயனை யின்றுதான் அடையப்பெற்றேனென்றுசொல்லி இனித்

தேவரீர் இங்கு எழுந்தருளியகாரியம் அருளிச்செய்யவேண்டுமென்று இரந்து சொல்லக்கண்டு விசுவாமித்திரமுனிவர் கூறலாயினர்.

காருவனத்தில் யான்செய்யும் கவங்களுக்கும் வேள்விகளுக்கும் இடையூறுசெய்வாராகத் தவஞ்செய்வோரை வருத்துகின்ற காமம், வெகுளி, மயக்கமென்னும் முப்பகைபோல நின்ற அரக்கர இடையேவிலக்காதவண்ணம் யுத்தஞ்செய்து காக்கவேண்டும். அவ்வாறுகாப்பதற்கு நின்மக்கள் கால்வருள்மயர்வறமதிகலங்கலுகும் உயாவற வுயாகலமுடைய அயாவாமமர்கட்கிறைவனெனப்படுங் கரியமேகாலத் திருவுருவிராமனெடு தருதியென்று உயிரைவருத்துங் கூற்றுவனுமெனக்கூறினர். தவக்கடலாகிய விசுவாமித்திரமுனிவர இவ்வாறு கூறக் காலனையொத்த வேலையுடைய சக்கரவர்த்திக்கு மாமிலெறிந்தவேலாலுண்டாகிய விழுப்புண்ணில அனல்நுழைந்தாற்போலச் செவித்தெளிசாற்தலும், உள்ளத்திலெழுந்தபயம் பிடர்பிடித்துத் தள்ளுவதனலே ஆருயிர் நின்றாடலாடாநிற்க, கலைமனிமுகதவொருவன கணபற்றிழுந்துபோலக்கொடுந்துயர்க்கடலின்மூழ்கி மாலடைதலுமிழுகின்ற தேன்சொரியுமதியமலர்மாலையணிந்த அரசர்பெருமான ஒருவாறுதுபாரங்கி ஐயனை என்மகனை படைபொருதுஅறியான், படுகாமனைக்கட்குருடு, அக்கரோ இரவிற்றினியும் வாழ்க்கையர்; அவர்மேற்செலலும் போருக்கு யானேதகுதி! கங்கையைச் சடையிற்கரந்த சிவபிரானெனும, கான்முகக்கடவுளெனும், இந்திரனெனும்படுகுந்து அவர்க்குத்துணைசெய்யவரும இடையூற்றுக்கிடையூறுக யானே காப்பேனென்றுகூறினன்.

அதற்கு விசுவாமித்திரமுனிவர் கோபதாபமடைந்துநின்றதனல் மண்படைத்தபிரமனது காலமுடிவு அன்றுதானென இமையாநாட்டமுடையதேவர்கள் சங்கேதிக்கவும சூரிய சுதிரொளிக்கவும் அங்குமிங்குஞ்சிரிதனவும்கின்றனவுமாகியஇயங்குதினை நிலத்திணையென்னு மிருவகையுயிர்களேங்கவும், மேலோங்கியவெகுழுங்கடைப்புருவநெற்றிமுற்றவும, கண்சிவந்து பற்றுத்தினையும்போ யிருள்மூடவும் ஒருமொழிகூறுகின்றார. புரவலர்க்காசே! ஆதியஞ் சோதிபுருவை யங்குவைத் திங்குப்பிறந்த கரியமேகாலத்திருவுருப்பெருந்தகையை ஞானக்கண்ணுற்பாராது ஊனக்கண்ணுற்காணுநீ அவனையோசிறியனென்றுஇகழ்ந்துகூறினாய்; அவனது பெருந்தகைமையோ நீயெம்மாற்றாலுமறியாய், ஞானக்கண்ணுளரே அறிவர்; காட்டாசேவிக்கின்ற நீயறியப்படாது காண் காட்டிற்றவஞ்செய்வாரறியு மவனதுசிறப்பினை; வில்லுங்கையுமாயிருக்கின்ற நீயோ அறிவை டில்லுங்கையுமாயிருக்கின்றானேயறிவேன், தலையுஞ்சடையுமாயிருக்கிற தானறியுமத்தனையும் தலையுமுடியுமாயிருக்கிறநீயறியமாட்டாய், சிங்கம்சுமந்த ஆசனத்திலிருக்கின்றநீபதுமாசனத்திலிருக்கின்ற தானறியுமளவறியாய்; நேதிநேதியென்று அருமறைதான்குமேயறிந்தனவோ என்று அவ்விராசசபையில் கோபித்துநின்றகோசிகமுனிவன் கருத்தினையறிந்த வசிட்டபகவான் நீபொறுத்தருளென்று கூறிப் பின்பு உன்மகனுகிய சிராமபிரானுக்குப் பொருந்துதலரிய உறுதியெய்துங் காலம்நோக்கி அதனைத் தடுத்தனையேயென்று பின்னும் கூறுகின்றான்.

பெய்யுமாரியினல் பெருகுகின்ற வெள்ளஞ்சென்று பெருங்கடலிற் புகு தல்போல இறைவன்பாற் கல்விப்பெருக்கம்பெற்றுள்ள முனிவர் அவனிடத் தேயே கொடுக்கின்றனர் ஆகையால் உன்மகன்பால் அளவிலலாத கல்வியும் பெருமிதமு நேருங்காலநெருங்கியது என்றுசொல்லிய குருவாக்கியங்கொண்டு அரசர்பெருமான் திருமகள்கேள்வனைச்சென்று கொணருங்கோளென்று ஒற்ற னைவிடுப்பக் கற்றவர்பரவும் கருங்கடல்வண்ணன் தம்பியொடும்வந்து முற்றத் துறந்தமுனிவரிருவனையுமபணிந்து பெற்றெடுத்த தந்தையையும்வணங்கிநின் றனன். அதுகண்டுதந்தையாகிய தசரதசக்கரவர்த்தி நான்மறையுணர்ந்த முனி வரபிரானுக்குக்கையடையாகக்கொடுத்துஇவனுக்குந்தந்தையுநீயே, தாயுநீயே இவனை உம்மடைக்கலமென்றுவிடுத்து உமக்கியைந்த பணியை இவரிடம் பெறலாமென்று கூறினன்.

அங்ஙனம்பெருமானையும் இளையபெருமானையும் திகாடுக்கப்பெற்றதனல் சிந்தையின்கண் கோபந்தவிர்ந்து இனிமையானசொற்களாற் புரவலாபெரு மானைவாழ்த்தி மேலடுத்தவேள்வியை இனிச்செய்துமுடிப்பேனென்றுகாமம் வெகுளி மயக்கமென்னுமுக்குற்றந்தீர்ந்த முனிவர்பெருமானுகிய விசுவாமித் திரர் அத்தானிமணடபம்விட்டு நடந்தனர். இளையபெருமானுடன் உலகந்தா ங்கு மொருவன் வெற்றிவாளை மருங்கிற்கட்டிக்கொண்டு என்றும் மெய்ம்மை போலும் அழியாத அக்ஷயதூணிகொணடு இரண்டுமலைபோலோங்கிப் பரந்த துணைத்தோளில் ஒப்பிலலாதவில்லொன்றுதாங்கி அரசாபெருமான் இன்னுயிர் வழிக்கொண்டுநடந்ததென்னச்சிறப்பினையுடையமுனிவர்பிரானை அவனிமேலை போலத்தொடர்ந்து பொன்மயமான அந்தகரின்மதிலைக்கடந்து வரங்கள்பெற மாசறத்தவங்கள்செய்தார் வாழப்பெற்றமுத்திதேக்ஷத்திரங்களில்முதன்மையாக எடுத்துக்கூறப்படும் அந்தகரினைக்கடந்து நாடகசாலையில்ஆடுவா காற்சிலம்பே போல ஒலிக்கு நீரொழுக்கினையுடைய சரயுநதியைத்தாண்டிக் கரும்பு காற் றுன்மோதக் கழுகினின்றும் பெருக்கெடுத் தோடுகின்ற தேன்வரம்பை மீதிடுமருதநிலங்கடந்து அரும்பன்ன கொங்கை யாயிழையார்மென்குழலே போலச் செறிந்த வண்டுகள்வாழுஞ் சோலையிற்றங்கிச் சற்றுவிடாய்தீர்ந்து பின்னேபுறப்பட்டு ஆகாயத்தையளாவிய கார்மேகம்தவழுநெற்றியில்நால்கின்ற பட்டத்தினையணிந்த யானையைப்போலவிளங்கும் அத்தமானகிரியின் வலிய முகட்டில்சூரியனது சப்தாவென்னும்பொருளுடைய பச்சைக்குதிரையேழுற யாறுமேறியப்பாற்சென்று ; திருவுக்குந் திருவாகியசெல்வனும், தெய்வத்துக் கரசும், செய்யதாமரைக்கண்ணனும்,உருவச்செழுஞ்சுடராழிவல்லானும்,உலக முண்டசெவ்வாயனும், திருமறுமார்பனுமாகிய அறவாழியந்தணனைத்தொழுது தேவர்கட்குத் தன்னுவின் அவியையளிக்கும் எழுநாவாகிய அக்கினிகாரிய மென்னும்வேள்வியில் தவழுங்கரும்புகையைக்கண்டு இதையாதென்றுதன்னை யடைந்தார்க்குத் தன்னடிச்சோதிநல்கும் தாரகப்பிரமமாய் எவர்க்கு மேனின்ற ஆதிபகவன்கேட்டருள அதுகேட்டு விசுவாமித்திர முனிவர் கூறுவாராயினர்.

தாடகை வதைப்படலம்.

திங்கள்தங்கிய சடாமகுடத்தையுடையபரமசிவத்தின்மேல் மன்மதன் தன்பெண்சேனையுடன் சென்று பின் கருமபாகிய விலலெவளைத்துவண்டாகிய காணேற்றி மலராகிய அம்புதொடுத்துவிட அவ்வினைவன் தன் நெற்றியி லுள்ள தீவிழியாலெரிக்க அக்கோபத்தீக்கு ஆற்றுமல் பூளைப்பூப்போல அவ னங்கம் வெந்து சாம்பராய்விழ அக்காரணத்தால அவன் அனங்கனெனன். அவன்அங்கம் விழுந்துநிந்திய இடமாகையால இதற்கு அங்காடென்றுபெயர். அக்காரணக் குறியையுடைய காமனைச்சிரமுமாகும். பற்றுகின்ற அவாவும், வெருடனபசையற்றுப் பிறவிக்கிழிந்துபோக மேலாகிய மெய்யுணர்ச்சினை யுடையவாகள் அறிவுசென்றெய்திய சிவபிரான் யோகஞ்செய்திருந்த தான மெனின், இத்தானத்தின் சிறபபினையெடுத்து விரித்துரைக்கபபடுமோ என்று சொல்லிக்கொணடே விசுவாமித்திரமுனிவர்போகையில் தமமை எதிரொன டழைத்த முனிவர்களுக்குப பெருமாளுடனும், இளையவனுடனும விருந்தின ராகி அங்குத்தங்கியிருந்து சூரியன் உதயமாக ஒருசுடுகின்ற பாலெவனமைடந் தனர். மேலும அதனில மெடப்படிப்பட்டதெனின், சூரியன் நிலத்தின் பசை யறவுணடு களிக்குமபடி விருதுமேற்கொண்டு உலாவருகின்ற வேனிலெ யல் லாமல் வேறொரு இருது இலலாமையால் அக்கினிதவனுக்கும நிலைக்குங் காலத்தில் நெஞ்சமும வெநதுநீறுகும. அபபாலெ வனத்தைக் கண்ணுரப் பாரக்கக் கணணுமவெநதுபோம. பின்னும் பூமியினிடத்து அதன்வெப்பத்தை யெடுத்துச்சொன்னால அப்படி யெடுத்துச்சாலலும் காவுமை நீறுய்விடும். இருளும், வான்முகடும் வெநதுபோம், விடியுமெனிற் சூரியனும வெந்துபோம். மேகமும் கரிந்துபொரிந்துபோய்விடுமெ. மின்னலொடியும்வெந்துவிடுமென்று சொல்லுமிடத்துப பூமியிலவெந்து நீறுகாபபொருள்களெவைகள்.

அப்பாலெவனமோ மேகம்போற் சராசரிபெய்து வேலாற்றெளைப்புண்டு போர்முகத்திலெ வருநதிய கொடியோர்மானமாகிய மணியையிழநது அஞ்சிறைப் பவர்நெஞ்சுபோற்சுடுகைனன்றுமாறுமலிருக்கும். அப்பாலெவனத்திலெலலாம் பெய்பிளந்தாற்போல கின்று உலர்கினற பெரிய கள்ளிவிருக்ஷத்தின் அடிப் பாகமானது சிந்தியவயிரங்கொணட அகிற்கட்டைகளும், தனைகளிலலாத மூங்கில்கள் பிளநதுசிநதியவெணமையான முத்தினங்களும் விடத்தையுடைய பாமபுகளின் வாயினின்றுஞ் சிநதிய மணிகளுமெ பரந்திருக்கும். கிலம் கடினத்தன்மையுடையதன்றி நிகழுந் தன்மையில்லாமையால் அந்நிலமிருந்த வண்ணமிருத்தலெயல்லாமல் அப்புறமோடாமலும், அந்நிலத்துக்குத் தெவனை யாகிய காளியும் ஓடாமலும், ஆகாயத்தில் செல்லும் சூரியன் தேர்சேரோ போகாமலும், மேகமும், காற்றுமசெல்லாமலுமிருக்கச்செய்யும். மேகத்தைக் கிழித்துக்கொண்டு பிரகாசிக்கும் மின்னலைப்போலக் கண்ணைத்திறந்து விடஞ் சொரியும் நாகராசனது அந்நிலவெடிப்பிற்பிரகாசிக்கு மாணிக்கராசிகளின் ஒளிகள் பூமிதெவியின் உடம்பினுள்ள புண்கிழித்திட அதினின்று பெருகிய

உதிரம்போலவிளங்கும். இதுவுமல்லாமல் சூரியகிரணங்கள் சுடுவதனல் அந்த வெப்பம் பொறுக்காமல் மறைவுதேடி மதயானைகள் மிகுந்தபசியோடு புரளுகின்ற பெரியமலைப்பாம்புகள் வாய்திறந்துகொண்டிருக்க அவைகளின்வாயிலே நிழலுக்கொதுங்கி இளையாகும். மேலும் அக்கினிதேவனுக்கு அரசிருக்கை என்று சொல்லும்படியான அக்காட்டில், காகங்களும் யானைகளும் பொரிந்து கரிந்துபோவனஎப்படியிருக்கின்றனதெனில அக்கினியாகியவடவாமுகாக்கினி சுட மேகமும்கரிந்துஇடையிலேவீழ்ந்தனபோலத்தோன்றும். அன்றியும்பேய்த் தேர்க்கூட்டம் தன்னிடத்திலே தோன்றுவதனல் அவ்விடமெங்கும்பரந்து ஓடிப்போய் மேலேயோங்குமாயின்விண்ணுலகமழியும்என்று எண்ணித் தேவர் களுக்காக இரக்கங்கொண்டு நீர்வளைந்ததுபோல விளங்கும். மேலும் அது அப்பாலவனத்தைக் காக்கும் வேனிலஞ்செல்வனுக்கு அரசுவீற்றிருக்கச் செய்த பொன்னற்செய்யப்பட்ட கால்களையுடைய பளிங்குப்பீடம்போலவும் தோன்றுவதுமலலாமல் நல்வினை தீவினை என்னும் இருவினைகளையுங் கெடுத்துக் காமம் வெகுளி மயக்கமென்னும் முப்பகையாகிய அரணைக்கடந்து முத்திநெறியாகிய வழியிற் போகமுயல்கின்ற ஞானிகள் மனமும், தன்னைச்சேர விரும்புகின்ற ஒருவன் இன்பத்தை விரும்பாமல அவன் கைப்பொருளையே விரும்புகின்ற வேசிகள் மனம்போலவும்ஈரம்நீங்கியிருக்கும். பொரிகின்ற பருக் கைக்கற் படர்ந்த அந்தப்பாலவனமோ வெடித்துப் பாதலமவனையிலும் குழிந் து வழியாகிவிட்டதனல் மாணிக்கங்கள்பொருந்திய படங்களையுடைய நாக ராசர்கள் வாழும பாதாளலோகத்திலும் சூரியகிரணமபோய்ப் பிரகாசிக்கும் படியிருக்கும். இப்படிப்பட்ட கொடிய பாலவனத்தை விசுவாமித்திரரோடு சீராமபிரானும், இளையவனும் கடந்துசெலகையில விசுவாமித்திரமுனிவரோ இவ்விராம லக்குமணர்கள் அளவிலலாத வல்லமையுடையவர்களா யிருந்தா லும் மலரினுமி மென்மையானவா சிறிது வருந்துவனென்று எண்ணி அவ் விருவர் முகத்தையும் நோக்கித் தான் பிரமதேவனிடத்தில் பெற்றிருந்த பலை அதிபலை என்னும் மந்திரமிரணடையும் உபதேதித்தார்.

அவர்கள் அமமந்திரங்களை உச்சரித்தமாத்திரம் ஊழிகாலத்துத் தீயைப் பழிக்கும் அப்பாலவனமானது தெளிந்தநீரையுடைய கடாகத்திற்போவதை யொத்திருந்தது. அப்போது சிராமபிரான் விசுவாமித்திரமுனிவனைநோக்கிக், இது கங்காதரராகிய உமையொருபாகத்திறைவன் நெற்றிக்கண்ணை லெரிக்க வெந்ததோ? இதுவல்லாமலும் வேறுகாரணமுண்டோ? பழியில்லாதமன்னவர் பெருமான் அரசுசெய்யு மிவ்வுலகத்தில் இங்காடழிவதற் கென்னகாரணஞ் சொல்லவேண்டுமென்றான். அதற்கு விசுவாமித்திரமுனிவர் சீராமபிரானைப் பார்த்து உயிரையெல்லாங் கொன்றுதின்பதே சிவனமாகவுடையவனும், எம னைப்போலும் தோற்றமுடையவனும், ஆயிரம்யானைப்பலமுடையவனும், சகல அண்டங்களையும் வேரோடுபிடுங்கியெடுக்கவும், கடனீரையெல்லாம் தன்கையி னலே யள்ளிக்குடிக்கவும், ஆகாயத்தை இடித்துப் போடவேண்டுமென்றாலும் இடித்துத் தகர்த்துப்போடவும் வல்லமையுடையவனும் ஆகிய அரக்கி

யொருத்தியுண்டு. மேலும் கொங்கைகளாகிய இரண்டுமலைகளும், ஆலகால விஷம்போன்ற கண்களும், இடியைவெல்லும் ஆரவாரக்கூச்சலும், வடவா முகாக்கினிபோலச் செம்பட்டமயிரும் இரண்டு பிறைகளைப்போல வக்கிரத்தங்களுமுடைய ஒருகடல்கடந்துபோவதாலை அவளையொத்திருக்கலாம். பாம்புக்கங்கணமணிந்தகையில் சூலாயுதமுடையவளாயிருப்பாள், காடே வாழுமிடமாகக் கொண்டுதிரிவாள், ஆடவர் தங்கணைகளால் பார்ப்பாலை அவர்பெண்பிறப் பெடுக்காமற் போலேமெய்பன்று எணணத்தக்கதோர் அழகையுடைய சிராமபிரானே தாடகையென்று சொலலபடுவது அக்கொடியவரக்கி பெயரென்றறி.

மலையைப்போலுந் தோளையுடையானே! பிரமன் படைத்த நால்வகையோனி, எழுவகைத்தோற்றம், எணபத்தூரான்குலட்சம் சிவபேதங்களையும் தன்வாயிற்போட்டுக்கொண்டு தன்னுடலிலவளர்க்கும் எமனென்றே இவளைச் சொல்லவேணடும். அவள் வாலாற்றைச்சாலலுகின்றேன். இயக்கர்குலத்தில் உலகமெல்லாம்மதிக்கும் பலமுடையவனும், அக்கினிபோலும் வெம்மையுடையவனுமாகிய மயக்கிலலாத சற்சரனென்னும் பெயரையுடைய்வன் தளாச்சியிலலாத சுகேது என்னும் பரிசுத்தனைபபெற்றான். அவனிலை 'மக்கட்பேற்றிற் பெறும்பேறில்லை' என்றபடி பிள்ளையிலலாமல வெகுநாளாகவருந்தித் தாமரைமலரில்வசிக்கும் பிரமனைக்குறித்துத் தவஞ்செய்ய அக்கடவுள் பிரசன்னமாய் நின்கருத்து யாதென்றுகேட்டனர். அதற்குச் சுகேதுவும் நான பிள்ளையிலலாமல் வருந்தப்பதின்றேன னென்றுசாலல, பிரமதேவனும் நுப்பமாகிய கேள்வியையுடையானை உனக்கோ புத்திரனென்பதுகிடையாது, ஆனாலும் உனக்குப்பிள்ளைகிதாக்கப் பெயரெனருத்தியனைடாவாள். அவளைத் தாமரைப்பூவிலிருக்கும திருமகளைப்போல அழகும், மகமயத்தையுடைய ஆயிரமயானைப்பலமுமுடையவளாய்ப பிறப்பாள். நீ உன்னிருப்பிடஞ் செலலென்று கட்டளையிட்டுத் தானும சத்தியலோகமபோய்ச்சேர்ந்தான்.

இப்படி பிரமதேவன் போனபிறகு அவாகொடுத்த வாத்தின்படி திருமகளைப்போல அழகுடையவளாய் வளாநது மங்கைப்பருவமடையவே இவளுக்குத் தகுந்த கணவன்யாரென்று துணிந்து தன்சுற்றத்தாருக்குத் தலைவனகிய சுந்தனென்பவனுக்கு மணஞ்செய்வித்தான். அவ்விருவரும மன்மதனும் இரதியும்போல் பலகாலும் இன்பமனுபவித்துவர அவர்களுக்குஉலகம்மதிக்கும மலைபோலும் தோளையுடைய மாரீசனும், மற்போருக்குச் சிறந்த சுவாகுவும் பிறந்தனர். அவ்விரண்டுகுமாரர்களும், வஞ்சனையும் அளவில்லாதவல்லமையும் தாயைப்பார்க்கிலும் உடையவராய் அவர்கள் வளரும்போது மிக்க கோபமுள்ள சுந்தனென்னும் இயக்கர்தலைவன் களிப்பின் மிருதியினல் தீமையையுடைய விருத்திரன்முதலிய அரக்கர்கள் தீமையழியும்படி அலையெறிகின்ற சமுத்திரத்தை யொருகையால் ஆசமனஞ்செய்த பெருந்தவத்தையுடைய அகத்தியமுனிவர் எழுந்தருளியிருக்கும் ஆச்சிரமத்தையடைந்து அங்கிருக்கும் சுரபுன்னைமுதலிய மரங்களையெல்லாம் வேரோடும்பிடுங்கி வீசியெறிந்து

கல்லதவுகளால் ஆதரிக்கப்படும் கலைமான்களையும், பெண்மான்களையும் கொன்று பாழாக்குவதை அகத்தியமுனிவர்கண்டு கோபங்கொண்டுவிழித்துப் பார்க்க அச்சுந்தனென்பவன் சாமபரா யெரிந்துபோனான்.

இவ்வாறு சுந்தனென்னும்இயக்கர்பெருமான்மடிந்ததைக்கேள்விப்பட்டுத் தாடகை தன்மக்களோடும் புறப்பட்டு வடவாமுகாக்கினிபோற் கொதித்து அவ்வகத்தியமுனிவனை முழுதுமுடிக்கின்றேனென்று அவனொழுந்தருளியிருக்கும இடம அடைந்து,இடியும சிங்கமும்பிரசண்டவாயுவும்மதுசத்தம்எம்மாத்திரமென்றேங்கவும், தேவர்கள் தங்கள்காவல்கெடவும, சந்திரசூரியர்கள். அஞ்சவும், மின்னலோடுகூடிய மேகக்கூட்டங்கள் சலிக்கவும, அணடங்களெல்லாம் உடையவும், ஆரவாரித்து எதிரிலேகூவிக்கொலோடு கின்றாள். தமிழ் என்னும் அளவிடப்படாத சமுத்திரத்திற்கு முதனூலாக இலக்கணமருளிச்செய்த அகத்தியமுனிவா கோபக்கனல கனவழியொழுக உங்காரஞ்செய்து அழிபத்தக்ககாரியங்களைச்செய்தமையாலநீங்கள் அரக்காகளாகஇழிவைபடையக்கடவீரென்று இடியும் குறைவுபடச்சாபமிட்டார. அவ்வாறுமுனிவாபிரான் சாபங்கொடுத்தவுடனே அவர்கள் சொாக்கமதிய பாதாளமென்னும் மூன்று லோகத்தானையும் கொனறுழல்கின்ற வாழ்க்கையையுடையவரும செம்பையருக்கிவார்த்ததுபோலுங் கணகணையுடையவருமாகிய அரக்காகளானாகள்.

அச்சாபமேற்று எதிர்த்துநின்றுசெய்யும் வலியில்லாதவராய்ச்சுமாலியை யடைந்து உமக்குப்பெரியமக்களென்று உறவுகொணடவராய் அவரிருவிவகு நாள் பாதாளத்தில் வாசஞ்செய்து தவவலிமையுள்ள இராவணனுக்கு மாமன் மானென அப்பாதகி மக்கள் எலலாவுலகையும் அழித்துப் பிரசண்டவாயுபோல எல்லாவுலகத்திலுஞ் சஞ்சரிதஞ்செய்துகொணடிருக்கத்தாடகையோவடவாமுகாக்கினிபோலக் கொதிக்கின்ற மனமுள்ள தன்மக்களைவெறுகவிட்டு மிக்கதவத்தினையுடைய அகத்தியமுனிவர் கோபத்தை எணணிக்கொலோடு, வழியில அக்கினிபொருந்தியதுபோல இவ்வனத்தில வாசஞ்செய்துவருவாள். உள்ளத்திலமிகுந்தபாதமாய்ப்பொருந்திய உலோபகுணமொனறே அளவிலலாதகற்குணங்களை யழிப்பதுபோலச் சொல்லுதற்கரிய கொடுமையையுடைப் அரக்கியாகிய தாடகை அழிவிலலாத வளப்பமுடைய மருதநிலத்தையெல்லாம் பாலிவனமாக அழித்து மாற்றினாள்.

மேலும் அவளொ இலங்காதிபத்தியத்தையுடைய இராவணனுடைய ஏவலில் அமைந்து இடையூறுகமலேபோலும்வலலமையடைந்து என்னுடையயாகத்தையழித்துவருகின்றதுமல்லாமல்மலர்மாலையணிந்தமேகம்போலும்திருமேனியையுடைய சிராமா இவ்வங்கதேசமுழுதும் உள்ள உயிர்களையெல்லாம மிகவும் கொன்றுதிரிகின்றனள். இனிச்சிலநாளைக்குள்ளாக இவ்வுலகத்தில உள்ள எல்லாவுயிர்களையும் தனக்குணவாகத் தன்வயிற்றிற் போட்டுக் கொள்வாளென்பதிற் சந்தேகமேகிடையாது. மன்னுயிரனைத்தையும் தன்னுயிரொன்றெணணும் தயரதமகாராசன் மகனை என்று விசுவாமித்திரர்சொல்ல

அச்சொல்லைக்கேட்டுப் பூமாலையணிந்த தன்றலையையசைத்து இக்கொடுந் தொழிலைச்செய்கின்றவள் எங்கே வசிப்பதென்று தேவர்கள்பொருட்டுச் சங்க மேந்திய கையில் ஒப்பில்லாத கோதண்டமேந்திய சீராமபிரான்கேட்க, அவள் இம்மலையில் வாசஞ்செய்கின்றாளென்றுசெல்லி வாய்மூடாமுன்னமே ஓர் மலை நெருப்பெரிந்துகொண்டு வருவதுபோல மலைகள் பருக்கைக்கல்லாகப் பொருந்தியசிலமடுகள் அணிந்தகாலகளும் பூமியிலழுந்துப்படிமிதித்து அப்படி மிதித்தகுழியில சமுத்திரமடைதலும், தேவபெருமையையுடையளமனு மஞ்சிப் பிலந்திறைதலும், வடவாமுகாக்கினி இரண்டாய்விடலில தோன்றினதுபோல இரண்டுகணைகளைய முருட்டிபயாத்து மகாலமபொழியும பெரிய யானையின் துதிக்கைகள் ஒன்றோடொன்று சேர்த்து வடமபோலணிந்து கொண்டிருபபதனல் அசைகின்ற இடையையுடைய தாடகைதவிலாகமும மற்றையுலகங்களும், எட்டுத்திசைகளும அடங்கலும் நடுங்கவும் இடியுமஞ்சுமபடி யாரவாரித்தாள்.

அவ்வாறு ஆரவாரித்துக்கொண்டுவந்து அவாகளைப்பார்த்து நகைத்து, யாவருமஞ்சக் கூர்மையானநுனியையுடைய சூலப்பை யாகியமனபாரத் துப் பற்களை நெறு நெறுவென்றுகடித்துக்கொண்டு பிளவாகிய வாயைத்திறந்து இடிக்கின்றமேகம்போல ஒருவாத்தைசொலலுகின்றாள். கடபபதற்கருமை யான வலலபத்தையுடைய எனகாவலியுடையது இக்காடு இதிலுள்ள எலலா உயிர்களையும் கருவறுத்துவிடேன். இனிச்சுவையொடுகூடிய மாமிசவுணவு கிடைப்பது அருமை யென்றெண்ணியோ, அலலது விதியானது கள்ளிக் கொண்டுவர இறப்பதை எண்ணியோ நீங்கள்வந்தவிதமென்றுகூறி, மேகங்கள் தொடக்கற்றுவிழுமபடி பார்த்து மனங்கொதித்து ஆகாயமளாவிய மலைகள் வேரோடு அழியுமபடி நிலத்தையறைந்து, மிறைபோலும்விளங்கும கோரப் பற்களை வாயிற்கவ்விக்கொணடு சீராமபிரான்மாபில சூலமனறிவதாக உத்தே சித்து எதிரிலே கோபங்கொணடுநிற்கையில, விசுவாமித்திரமுனிவருக்கு அவ ளைக்கொலவிக்கனனைமெயாளுஞ்சிராமபிரானே அவளைக்கொலலப்பாணப் பிரயோகஞ்செய்யாமல் தான் பெருந்தனமையான குணமுடையவனுகையால், உலகமெல்லாம அஞ்சும்படியான கொடுந்தாழில செய்பவள் என்றறிந்தும் பெண்ணென்றெண்ணிச் சுமமா இருந்தான். வெறித்த செம்பட்டமயினையும், கோரப்பற்களையுமுடைய தாடகை சூலமெறிதுகொல்வேனென்று அச்சூலப் படையைக் கையிலேந்தி யெதிர்ன்றுசொலலிக்கொண்டிருக்கவும், அதைச் சற்றும் எண்ணமல்நெருங்கிய பூக்களாற் முடிக்கப்பட்ட மாலையையுடைய சீராமபிரான்கொண்ட எண்ணத்தையறிந்து விசுவாமித்திரமுனிவர் சொல்லு கின்றார். 'பொல்லாங்கென்பவை யெல்லாந்தவிர்' என்பதற்குமாறுக, பொல் லாங்கென்பவைகளையெல்லாம் செய்தும் என்னைக்கோதென்றெண்ணியேவிட் டிருக்கின்றாள். இதுதான்குறை. என்னென்றெண்ணுவது,இக்கொடியவளையும் மணியாரமணிந்த சீராமபிரானே பெண்ணென்றெண்ணுவதோ! இவளிடத்தில் போர்செய்து காண்முடையவரானவரோ உயிர்பிழைத்தவர். பிரகாசிக்கும்

வாளாற்செய்யும்போரில் வெற்றிகொள்ளத்தக்க சுத்தவீரர்கள் தங்கள்புயவலி யை இவள் பெயரைக்கேட்டமாத்திரத்தில் இழந்துபோவாராயின், ஆண்மை யென்பதுயாரிடத்திலிருக்கும் சன்றுயெண்ணிப்பார், இந்திரனேரருகாலத்தில் இவளொடும்போர்செய்துதோற்று ஓடிப்போனன். தேவர்களும் தானவர்களும் தம்படைகள் இவளால் மண் ணுண்ணும்படிகிடக்கக்கண்டு தோல்வியடைந்து போயினர். பெண்ணைக்கொல்லக்கூடாதென்பது தருமநூல்முறையாகையால் சக்கரவர்த்தித்திருக்குமாரனே மற்றுமொன்று சொல்லுகின்றேன்கேள் என்று முடிவிலலாததவத்தினையுடைய விசுவாமித்திரர்சொல்லுகின்றார். பிரமகுமார ராகிய பிருகுவென்னு முனிவரொருவருண்டு. அவருக்குக் கயற்கண்போலுங் கியாதியென்பவள் வாழ்க்கைத்துணைவியாயினள். அவளிடத்தில் திருமாலால் போர்க்குடைந்துஓடிய அசுராகள் அனைவரும்சென்று அடைக்கலம்புகுந்தனர். அபயதானங்கொடுத்த அவ்வமமையைச் சக்கரப்படையையுடைய திருமாலே உயிர்கவர்ந்துசென்றனன். அதுமாத்திரமோவின்னினும்,மண்ணினும்,மற்றும் பாதலத்தினுமுள்ள உயிர்களெயெல்லாம் தனக்கு ஆகாரமாகக்கொள்ளு மியல் பினையுடைய குமதியென்பவளைத் தன்வச்சிராயுதத்தினல் கொன்று உயிர் வாங்கினன் திரிலோகாதிபத்தியமுடைய இந்திரனென்றறி. இவ்வாறு பெண் கொலைசெய்த உபேந்திரனுக்கும், இந்திரனுக்கும் புகழுணடாயினவே யன்றி அவர்கள் பெண்கொலைசெய்தமையால பழியுண்டாயினவோ மகரந்தந் தங்கி யிருக்கின்ற மலர்மாலையுடைய இராகவனே! என்றனர்.

பின்னும் விசுவாமித்திரர் ஆக்கினை சக்கரம் உலகமுழுதும்செல்ல இவ் வுலகமுழுதும் அரசாண்டுவரும் சூரியகுலத்து அரசர்களுக்குத் திருத்தோன்ற லாகத்தோன்றிய இரகுநாயகனே! இவ்வுலகத்தில் உயிரையெலலாம் கொன்றுதின்று தருமத்தைக்கெடுத்த மாபாவிக்குத்தருமமென்னப்படுமோ! உலகத்தில் பிரமனுலவிதிக்கப்பட்ட காலமுடிவாக அதையறிந்து அவ்வுயிர் பண்ணிய பாவபுண்ணியங்களுக் கேற்றபடி உயிர்கொண்டு போவதேயன்றி, இக்கொடிய தாடகைபோல உயிரைக்கண்டவழி மோப்பம்பிடித்துக் கொல்லு மியலபினையுடைய எமனுமுண்டோ! உலகத்தில் நிலைபெற்ற உயிரையெல் லாம் வாரித்தின்று வாயிற்போட்டுக்கொள்ளும தீமையைப்பார்க்கிலும் தீமை யென்பது வேறுண்டோ! இவளை நீபெண்ணென்று எண்ணி நிற்கும் தன்மை யறியாமையின்பாலதேயாகும். இதுமுடிவில்லாத தருமநூலின் முறைமையை நோக்கிச் சொன்னதன்றி இவள்கோபித்துநின்றதைக்குறித்துச் சொன்னதே யல்லவென்றுதுணி.நீபொறுக்கும்முள்ளமுடையவனுயிருப்பது,தகுதியல்லவே யென்று விசுவாமித்திரமுனிவர்சொல்ல, அதைச்சீராமபிரான்கேட்டுத் தரும மல்லாதகாரியங்களைச்செய்ய நீர் கட்டளையிட்டால் உமதுசொல்லையே வேத வாக்கியமென்றெண்ணிச்செய்வதல்லவா தருமநூல் துணிபென்றகங்கையாறு சூழப்பட்ட கோசலநாட்டுக் கதிபதியாகிய இறைவன் சொல்லைக் கொடிய தாடகைகேட்டுத் தன்சினத்தகையிற்பிடித்த வெப்பமுடைய சூலப்படை யைத் தன் கோபத்தீயொடு பொருந்த மேலேசெல்லச் சுழற்றி யெறிந்தாள்.

அபபுதிய யமன்போன்ற காடகை அவ்வாறறிந்த சூலப்படை விசுவா மித்திரமுனிவரது கட்டளையினின்ற சிராமபிரானமேல பூரணசந்திரனைத் தொடர்ந்த இராகுவைப்போலத்தொடாந்து வருவதைக்கண்டு நான் வில்லை வளைத்து காணைநிட்டு பாணபிரயோகஞ்செய்தது ஒருவருமறியாதவிதமா யிருக்கவே அவளெவிய சூலப்படையாத்திரம இரணடுதுணடுகளாய்விட்டனை யைப் பலருங்கணடார்கள். இராக்கால மடகத்தினும மிக்ககருமைநிறமுடைய காடகைசொல்லியசொல்முடியுமாதரத்தில்கடலெயுதூரத்துவிடத்துக்காய் சரங்களை மழையாகப்பொழிய அவைகளையெலலாம சிராமபிரான் தன்விஞ் னின்றும் விடபபட்ட பாணவருஷங்களால தடுத்துப பின்னும அவளுடைய மார்புருவ முனிவாகளிட்டசாபமொழிபோலத் தடுபபதற்காியஒருபாணத்தை இலக்குவைதது விடுதலும அபபாணம மாரபிலதங்காமல அப்புறமுங்கழன்று போய் மூடர்களுக்கு கலவிலலா அறிவுறுத்திய உபதேசமொழிபோலபயன் படாமல் ஊடிருவிச்சென்றது. பொனமலைபோலும சிராமபிரான் ஏவிய புகர்நிறமுள்ள பாணமாகிய கொடியபிரசனன் வாயுமாதியவளவில் ஆகா யத்தில கலமழைபெய்து இடித்துக்கலடியுகததில எழுந்தமேகம் மின்னலும் இடியும விழ்வனபோல் விழ்ந்தாள்.

அப்படிவிழுந்ததுளபபடியிருந்ததினில் அடாந்த அக்காட்டில்எம்மருங்கும் உதிரவெள்ளம பொங்கும்பவிழுந்தமாமிசம பொருதியபற்களமைந்தபெளந்தடி வாயையுடைய அத்தாடகைவீழ்ந்தது பதத்துத்தலைகளிலு முடிகளையுடைய இராவணனுக்கு மரணகாலம வருகினறதனறு முந்தித்தான்றும உற்பாதம போலவும பூமியிலறுத்துவிழுந்த வெற்றிக்கொடிபோலவும காடபுழுதுருந்திரிந்து, அக்காடு இரத்த சமுத்திரமாகுமபடி அத் தாடகையின் மாரபிலுன்றிய பாணத்தின்வழியே புறபபட்ட இரததெளிவம மாலைக்காலைத்தற்றோன்றிய செவ்வானமபற்றற்றுபபூமியில்விழுந்துபோலவுமிருந்தது. இதுகிற்க, தாடகையி லெழுந்தருளிய பிரமதேவனுக்குச் சமானமான விசுவாமித்திரமுனிவன் ஆக்கினை கடவாமல பசுமபொன்னுலாகிய ஆபரணமணிந்த காகுஸ்தவமி சோதத்தரனுகிய சிராமபிரான் முதற்போரில வாடபடையையுடைய அரக்கா கூட்டத்தார் உயிரைக்குடிக்க இம்மட்டிம பயந்திருந்தயமன் அன்று நடந்த முதற்போரிலே தான்சிறிது உருவியறிந்தானென்றுசொல்லவேண்டும். இவ்வா றிருக்கத் தேவர்களெல்லாம் விசுவாமித்திரமுனிவனைப் பார்த்து நாங்கள் எங்களுக்குரிய இருப்பிடம்பெற்றோம், இனிஉமக்குஇடையூறுண்டாகவேமாட் டாது. நமது காசரதியாகிய சிராமபிரானுக்கு வேணடிய திவ்வப்படைகளை யெல்லாம்அவற்றின்மந்திரங்களுடனகொடுமெனக்கட்டளையிட்டுவிற்கொண்ட மேகம்போன்றஇராகுலதிலகன்மேல் பூமழைபொழிந்துபோயினர்.

வேள்விப்படலம்

இவ்வாறு தேவர்கள்போனபின்பு, அவ்விடமெங்கும்படர்ந்த புஷ்ப வருஷத்தால் குளிர்ச்சியுடையதாகிய காட்டினை விட்டகன்று தாங்குதற்கரு மையானதவத்தின்மிகுந்த விசுவாமித்திரமுனிவன்மண்ணுலகத்தார் வறுமை நோய்க்கு மருந்தையொத்த வெண்ணெய் நல்லூர்ச் சடையப்பமுதலியார் மெய்ம்மைபோன்ற தெய்வப்படைகளை அளிக்கச் சீராமபிரான் பெற்றான்; அப்படிப்பெறவே அப்படைகள்தெளிந்த மனமுடைய ஒருவன் முற்சனனத் திற்செய்த நல்வினைப்பயன் மறுசனனத்தில் அவனைத்தேடிவந்து நெருங்கு வது அப்பெருமானைவிடாது நெருங்கியிருந்தன. அவ்வாறுவந்து சேர்ந்த தெய்வப்படைகள் இராகவனைப்பார்த்து நாங்கள் உம்மைவந்தடைந்தோம்; நீசெய்த குற்றேவல்களை உமதுதமபியாகிய இளையபெருமாளைப்போலச்செய்து நிற்போமென்றுசொல்ல, அதனைபபெருமாள்கேட்டு அவ்வாறேயிசைய அன்று முதல், அத்தெய்வப்படைகள் அவனுக்குப் புறத்தொழிலசெய்திருந்தன; இத்தன்மையானகாரியங்கள் நடந்தபின்பு இரண்டுகாததூரஞ் சென்றனர்; இவர்களுக்கு அங்கோர் பேரோசைசெவியிற்படச் சீராமபிரான் இப்படிப் பட்ட ஓசை செவியிற்படக் காரணமென்னவென்று விசுவாமித்திரமுனிவனை வினவ, அவர்சொல்லுகின்றார். அப்பா! இராகவா! மானசமடுவிற் பிறந்து வருவதனல் சரயூநதியென்று தேவர்கள் துதிக்கும் சிறந்தநதியுடன் கோமதி யென்னும்நதி சங்கமமாகு மிடமென்றுசொல்ல, அப்பாற்சென்று அப்பரிசுத்த நதியையடைந்தனர். இப்படிஅந்நதியையடைந்தபின்பு அந்நதியின்வரலாற்றைச் சொல்லவேண்டுமென்று முற்றத்துறந்த முனிவர்பெருமானுகிய விசுவாமித்திர முனிவனைச்சீராமபிரான்கேட்க அதற்கு அவருஞ்சொல்வாராயினர்.

முற்காலத்தில் தாமரைப்பீடத்திலிருக்கும் பிரமதேவன் குசனென்னும் பெயரையுடைய அரசர்பெருமானைத் தந்தான். அவ்வரசன் தன்மனைவியி னிடமாக நான்குமக்களைப்பெற்றான். அவர்கள்குசன், குசநாபன், ஆதூர்த்தன், வசு என்றுசொல்லப்படுவர். அவருள்சுவுசாம்பிநகரத்தைக் குசனும், மகோதய நகரத்தைக் குசநாபனும், வசந்தமாரணிய நகரத்தை ஆதூர்த்தனும், கிரிவிர சத்தை வசுவும்பெற்று அரசாண்டுவந்தனர். அவருள் குசநாபனென்னும் அரசனுக்கு நூறுமாதர் தோன்றினர். அவர்கள் இன்சொலுடையவராயும், பவளம்போலும் வாயையுடையவராயும் இருக்கக்கண்டு அவர்கள் தோழிமா ருடன் சென்று ஒருபூஞ்சோலையில் விளையாடிக்கொண்டிருக்கும் சமையத்தில் வாயுதேவன் அவர்களைக்கிட்டி அவர்களுடையஅழகிற்கிச்சைகொண்டு அம்மா தனைப்பார்த்து நானே மன்மதபாணத்தால் மிகவாடினேன்; அதனல் இன்று உம்மைநாடினேன், என்னைக்கூடி என்துயரைமோடி ஒளிக்கச் செய்யுங்கோ வென்ன, அதற்கவர்கள்எல்லாமறிந்த உமக்குநாங்கள்சொல்வதென்னே; வேதங் கள்வருத்தமணங்களைட்டில் எங்கள் பிதாவைக்கேட்டு தெய்வமணஞ்செய்து கொள்ளுமெனமறுக்க, அவ்வாயுதேவன் கோபங்கொண்டு அவர்கள் முது

கொடியசச்செய்தான்; அவ்வாறே முதுகொடிந்து வருந்தினர். இவ்வாறுசெய்து விட்டு வாயுதேவன் போனபின்பு அவர்கள் தவழ்ந்துகொண்டேபோய்இதைத் தங்கள் பிதாவாகிய குசநாபனுக்குச்சொல்ல, அவ்வரசனும் அம்மக்களைத் தேற்றி நிறைந்ததவமுடைய சூளியென்னும் முனிவர்பிரான்பெற்ற பிரமதத்தனென்னு முனிவனுக்கு மணஞ்செய்வித்தான். அப்பிரமதத்தன் அவர்களைக் கையால்தீண்டப் பழையபடியே கூனிமிராது பேரழகுடையவராய் விளங்கினர்கள். அரசன் பிரமதத்தன் மகட்கொடைநோக்கதின்பு தனக்குஅரசாளத் தக்க புத்திரரில்லாமையால் வருந்தி சிறந்தமுனிவரை வருவித்துப் புத்திரகாமேட்டியென்னும் யாகஞ்செய்ய அவ்வக்கினிமத்தியில மிக்கவேகமுள்ள குதிரைவீரனுகிய காதிமகாராசன அவதரித்தான். அக்காதிமகாராசன் தக்க பருவமடைந்தபோது அவனைபபெற்றகுசநாபனென்னுமகாராசன்தன் அரசையு முடியையும் கொடுக்கபபெற்று மகோதயாகரில் அரசாண்டுவந்தான். அக்காதி மகாராசனுக்குக்கௌசிகனெனனுமபெயருடையயாளுமனைக்குமுன்கௌசிகி என்னும்பெண்ணும்பிறந்துவளாந்துவருகையில்காதிமகாராசன்பிருகுமுனிவருடைய குமாரராகிய இரிசிகமுனிவருக்கு எனக்குமுன்றோன்றிய கௌசிகியை மணஞ்செய்வித்தான். அமமுனிவன்னன்னுடன்பிறந்தவளோடுமிலகாள் இல்லற கடத்தி அறம்பொருளின்ப மனுபவித்துப் பின்புவீட்டுநெறியடையக் காதல் மேற்கொண்டு இல்லறநீங்கி கல்லதவஞ்செய்து பிரமனிடஞ் சென்றனன். அவ்வாறு முனிவன் செல்வதுகண்டு மனமபொறாது தான்தவடிவங்கொண்டு தன்கணவனுடன் விண்படாவதனல் அடமுனிவனும் இனி இந்தவடிவங் கொண்டே உலகத்திலிருப்பவருக்குத் தன்பதனையொழித்துவருவையென்று கட்டளையிட்டுப் பிரமலோகஞ்சென்றனன். அனறுமுதல் என்னுடன்பிறந்த கௌசிகி இருதியா யிருக்கின்றனளனறு சாலல அதைக்கேட்டு மகிழ்ந்து அப்பாற்சிறிதுதூரஞ்சென்றனர், பெருகதவழ்கின்ற சோலையொன்று அவர்களுக் குத்தோன்றக்கண்டு இச்சோலையின் வாலாறு யாதென்று இராகவபிரான் கேட்க விசுவாமித்திரமுனிவா கூறலாயினர்.

இச்சோலையோ தங்கணவனையே யலலது வேறொரு தெய்வத்தையும் காடாத கற்பினையுடையமாதர்கள்திறைதபோலபபரிசுதகமுடையது; எங்கள் வேதங்கட்கும், தேவாக ளறிவிற்கும எட்டுதற்கரிய திருமால நாராயண ரிஷி யாகவும், நரனுகவும் தாமேதிருவுருவங்கொணடு தவஞ்செய்துள்ளது; இவ் வுலகத்தவரும், தெய்வலோகவாசிகளும, அகப்பற்று, புறப்பற்று என்னும் இருவகைப்பற்றையுமொழித்து திறதையுமொழியுஞ் செல்லாநிலைமையதாகிய அந்தமின்பத்தழிவில் வீட்டையடையவிருமபி உச்சரிப்பது அவன்திருநாம மென்றே சொல்லும்படியிருப்பவன். இப்படிபபட்டவனத்தில் தவஞ்செய்வது யாதுபற்றியென்று அவனது விசித்திரசத்தியை ஒருவரும் சொல்லவும்போ மோ; யாருமிலலென்றுசொல்லும்படியிருக்கின்றதையோ. அவன் எதைகுறித் தத்தவஞ்செய்தானேஅவன் குறித்ததையறியேன்; அவன் நூறுவருஷம் இச் சோலையில் தவஞ்செய்திருந்தான். இதற்கு வரனிகாச்சிரம மென்றுபெயர். இவ்வாறு அவன் தவஞ்செய்வார்போல இங்கே தவஞ்செய்துகொண்டிருந்த

காலத்தில் ஆதிவராகம்போலும் இவ்வுலகைத் தாங்கத்தக்க ஆற்றலையுடைய மாபலியென்னும் பெயருள்ள தானவராசன் விண்ணும் மண்ணும் பாதலமும் தன்வசப்படுத்திக்கொண்டு தேவரும், முனிவரும் செய்தற்கருமையானதாய் நெய்சொரியத்தக்க வேள்வியை முடிக்க ஐயமகன்ற மனமுடையவனுய்த் துணிந்து அழகிய சாந்தகுணமுள்ள பிராமணர்களுக்குப் பூதானம், கோதான முதலிய சோடச மகாதானங்களையும் வழங்க உடன்பட்டிருப்பதைத் தேவர்கள் அறிந்து உலகமுண்ட மாயனையடைந்து வணங்கின்றுஇறைவனே கொடியோனுகிய மாபலிசெய்யுந் தீயதொழிலைத் தீர்த்தருளுமென்றுவேண்ட அப்படியேயாகட்டுமென்று அவர்களுக்குச் சொல்லியனுப்பிவிட்டு திரிகால முணர்ந்த காசிபமுனிவருக்கும், அவருடைய மனைவியாகிய அதிதிக்கும் புத்திரனுக ஆலமரம் அடங்கிய சிறியவிதையைப்போல் ஒரு சிறிய குறளுரு வாகிய வாமன ரூபமானர்.

இவ்வாறு தோன்றி மூப்புரிநூலணிந்து,முஞ்சியும் புற்கையிறும் அரையிலே விளங்கச்சாத்தி,வேதமோதுகின்றநாவினையுடையாராய்நித்தியாக்கினியோம்திய லைகயினராய், மெய்ஞ்ஞான நிலையையுடையார அறிகின்ற தனது சுத்த ஞானமேபோன்ற ஒரு திருவுருவங்கொண்டுசென்று, மாவலி யாகஞ்செய்யும் யாகசாலையை யடைய அதைத் திரிலோகங்களையும ஜெயங்கொண்ட மாபலி யறிந்துஎதிர்கொண்டுவணங்கித் தவத்தாற்பெரியோரே ! உம்மைபபார்க்கிலும் பெருந்தவமுடையானைக்காணேன், இப்படிப்பட்ட தேவரீரைத் தெரிசிக்கப் பெற்றதினும் பெற்றபெருமபேறு யாபெற்றிருக்கின்றனென்றுமாவலிசொல்ல வாமனவடிவாக வந்த மாயப்பிரானும் உன்னைவிரும்பி வந்தடைந்தவருகு அவர்கள் விருப்பத்திறு மதிகமாகக்கொடுக்கும் புகழால் நீண்ட கையை யுடையானே உன்னையடைந்தவரே மாட்சிமையுடையவராவார், அடையா தவரோமாட்சிமை யுடையவரலலாதார என்றுசொல்லினர். அதற்குமாபலி மனமகிழ்ந்து டான்செய்யத்தக்கதுயாதென்றுகேட்க, அந்தணர்பெருமானுகிய வாமனமூர்த்தியும்எனக்கு மூவடிமண்தானமாகக்கொடுபபதாயிருந்தாலகொடு மென்றுகேட்க,அவர்கேட்பதற்குமுன்னமேயான்கொடுத்தேனென்றான்;அந்த மாபலிசொன்னசொல்லைக்கேட்டுமனமுபொறுது அருகிலிருந்தசுக்கிராசாரியும் தடுத்துஅரசனே ! இப்போதுகண்டவுருவமோவஞ்சனையாகக்கொண்டுவந்தே யல்லது வேறல்ல ; மேகமபோலுங்கரியதிருநிறமுடையவாமனமூர்த்தியென்று மனத்திலெண்ணவேண்டாம. அண்டாணடசராசரமாகிய எலலாப்பொருள் களையும் தன்வயிற்றிற்பெய்து ஆலிலையிலறிதுயில் கிடக்கும் கள்ளமாயப்பிரா னென்றே அறிந்துகொள் என்றுசொல்ல, அதற்குமாபலியும் என்கைவுயரவுங் தனக்கியலாதவிதம் என்றுந் தாழாததன்மையையுடைய கரியகோலத்திருவுரு வுடையஇறைவன்கையேதாழுமென்றால் எனக்கு இதைப்பார்க்கிலும் சிறந்த கன்மையாது ! கன்னெறியிற்செல்லுஞ் சிந்தையுடையோர்தங்களிடத்தில்வந்து உயர்ந்தார்களே யேற்கவேண்டுமென்றுநினைப்பர். அன்றி இவர்கட்டார், இவர் பகைவனென்பதனையே கொள்ளமாட்டார்கள் என்றால் இவனைப்போலும் சிறந் தவர் யார் உலகத்திலிருக்கின்றனர் ; நீயோ வெள்ளியென்னும் பெயருள்ளவ

னுகையாலும், அது வெள்ளறிவுடையானெனப் பொருள்படுவதனாலும் இவ்வளவு துணிந்துசொன்னாய், மேலோர்கள் கொடையாளிகளாகும்பொருட்டு இரப்பவர்களுக்குக் கொடுப்பதையன்றி சிலசொல்லி யிகழ்வதென்னபயன்! உலகத்தில் ஒருவன் தனக்குத் திருப்பாக நினைக்கும்உயிரைப்பெறயாசிப்பது என்பதே கெட்டகாரியம்; அதை யிரப்பவருக்குக்கொடுப்பதே கல்லது, மேலும் இறந்தவனென்றுசொல்லப்படுவோர் இறந்தவரேயாகார். வேறியார் இறந்தவர்களென்றால்பிறரிடத்திற்கையேந்தியிரப்பவர்களென்றேயெண்ணும். இதனாலே 'ஏற்பதிகழ்ச்சி' என்று பெரியோர்கள் சொல்லியிருக்கின்றனர். இறந்தவனென்போர் இறந்தவனென்ற சொலலப்பட்டாலும்இரந்தவர்களுக்குக் கொடுத்தவரோ யல்லாமல் இருந்தாரைக் காணேன்; அடுக்கும்படி. அரும் பழிப்பான காரியங்களை ஒருவனுக்குச் செய்கின்றவரும், அவனுக்கு பகையாளிகளலல, இரபபவாகளுக்குக் கொடுப்பவர்கள் எதிரிலிருந்து கொடுக்க வேணடாமென்றுதடுக்கின்றவாகளபகைவர்களாவாகள். அவாகள்தம்மைத் தாமேகெடுத்துக்கொள்ளுகின்றவருமாகும்;அதற்குச்சரியானகெடுதிவேறில்லை மேலும் வேதங்களில தமமிடத்துப பொருள்கிடைத்தகாலத்தில் அதை இரப்பவர்களுக்குக் கொடுத்துப்புகழ்பெற்றுத்தருமமடையமுயல்பவர்களுக்கு உள்ளத்தைக் கெடுக்குமபகையோ உலோபகுணமென்று சொல்லப்படும். அதனல் பெரியோர்களும் அக்குணத்தைவிடவேண்டுமென்று விலக்கினர்கள். தேவரும் 'பற்றுள்ளமென்னு மிவறன்மையெற்றுள்ளு-மெண்ணப்படுவதொன்றன்று' என்றுஞ் சொலலியிருக்கினறனர். ஆகையால ஒருவருக்கெடுத்துக் கொடுப்பதற்கு முன்பேதடுபபதுஉனக்கழகாகுமா. வெள்ளியென்னும்பெயர் கொண்ட தகுதியற்றவனே கொடையைத்தடுக்குங் கொடியோனே! நீயும் உன்சுற்றத்தாரும உணணச்சோறும், உடுக்க ஆடையுமில்லாமற் போய்விடுவார்கள். இதனாலே தெய்வப்புலவரும் 'கொடுபபதழுக்கறுப்பான் சுற்றமுமெப்பதூஉ-முணபதூஉமின்றிக்கெடும்'.எனவும கூறியிருக்கின்றனர் என்றுதகுந்த நீதிமொழிகளை யெடுத்துச்சொலலி மந்திரிகொடியவனென்று அவன்சொல்லைப் பொருளாகக்கொள்ளாமல உமது காலளவாக மூன்றடிநிலம் அளந்துகொள்ளுமென்று வாமனமூர்த்தியின் குறுகியகையில தடாகத்திலுண்டாகிய நீரைத்தாரைவாத்துக்கொடுத்தலும், அந்நீரைப்பரிசித்தமாத்திரத்தில் பெற்றமாதாபிதாக்களும் அருவருக்கத்தக்க வாமனமூர்த்திகணடு எதிரோபார்த்தவர்கள் பயப்பட உயர்ந்தோர்க்குதவிய உதவிபோல மிகவுமுயர்ந்தோங்கினர். பூமியினிடத்தில் நின்ற திருவடியோ பூமிமுழுதும் பரந்து அதுசிறிதென்று சொல்லும்படி அப்பால்சென்று பரந்ததிலலை. வானத்திற்போயளந்த மற்றொரு திருவடியோ தன்னிலடக்கிக்கொண்டு விண்ணுலகையும்வென்ற கால்மேலே செல்ல வெளிபெறுமையினல் திரும்பிற்று. இவ்வாறிருக்க வில்லேயேந்திய தோளையுடைய சீராமனேஇலேயோடுகூடிய தாளவமாலையையணிந்த முடியையுடைய ஆதிபகவன், உயிர்களுக்கிடையூறு உண்டாகாவண்ணம் உள்ளடியிலடக்கிக்கொண்டு மற்றொருதிருவடிக்கு அளவில்லாமையால் அதற்குவழியென்னவென்றுகேட்க, அடியேன் முடிதானென்றுசொல்ல அவன்முடிமேல்

தன்பாதத்தைதலைவத்து அவனைப் பாதாளலோகத்திலிருக்க அழுத்திவிட்டு, தேவேந்திரனுக்கு இவ்வுலகத்தையெல்லாங் கொடுத்தருளி அவ்வாறு உலகமெல்லாங்கடந்த இரண்டு திருவடிகளையும் திருமகள்வருடத் தான்திருப்பாற்கடலில் யோகநித்திரை செய்தருளினன். இதுகிடக்க;

தீவினைதீர்த்தற்கரிய இராகவனே! இச்சோலை இத்தன்மையுடையதாதலால் இதனை அன்பாகக்கண்டவர்கள் பிறவியென்பதைக் காணமாட்டார்கள். வேதநூல்வரம்பினுல் யாகஞ்செய்யத்தொடங்கிய எனக்கிதுவல்லது இடம் வேறுதகுதியானதல்ல. இங்கேயிருந்து யாகத்தைச்செய்து முடிப்பேனென்று கூண்ட மலர்ச்சோலையினையுடைய அவ்வனத்தை முறைமையாக அடைந்து பின்பு யாகத்திற்குவேண்டிய சாதனப்பொருள்களைச் சேகரித்துக்கொண்டு மிக்க அழகுள்ள இராமலக்ஷ்மணர்களைக்காவலமைத்துத்தான்யாகசாலையிற் சேர்ந்தான். அவர்களோ * கண்ணைக்காக்கின்ற இமைபோல அந்தயாகசாலையைக் காத்திருந்தனர்.

---

* எண்ணுதற் காக்கரி திரண்டு மூன்றுநாள்
விண்ணவர்க் காக்கிய முனிவன் வேள்வியை
மண்ணினைக் காக்கின்ற மன்னன் மைந்தர்கள்
கண்ணினைக் காக்கின்ற விமையிற் காத்தனர்.

இ-ள். நினைப்பதற்கும் ஆக்குதற்கும் அரிதாய ஐந்துநாள்வரையும் விண்ணவர் பொருட்டுச் செய்த விசுவாமித்திரமுனிவன் யாகத்தை, மண்ணுலகத்தைக் காக்கும் மன்னவர் மன்னன் மக்கள் கண்ணினை இமைகாப்பதுபோற் காத்தார்கின்றனர். எ-று.

இனி வடநூலார் மதம்பற்றி இரண்டு மூன்றுநாள் என்பதனை ஐந்துநாளெனப் பொருள்கொள்ளப்பட்டது, இதுவேகருத்துஎன்பதனைவடநூலார்வாய்க்கேட்டுணர்க. மண்ணினைக்காக்கின்ற மன்னன் என்றது தசரதனை. கண்ணினைக்காக்கின்ற இமையிற் காத்தனர் எனக் கூறிய உவமைமுகத்தால் அவ்வேள்விச்சாலையே கண்ணுகவும், அவ்வேள்வியே அகக்கண்ணாகவும், அதனைக்காக்கும் இளையவன் நின்றுங்கிருப்பதனால் கீழ்மையாகவும், அவ்வேள்வியைத் தீமைசெய்யு மரக்கர்வராதவழி காக்கும் இறைவனே மேலிமையாகவும், அதனை யிடையூறுசெய்யும் அரக்கரோ அவ்விழியையெதிர்த்தநும்பாகவும், கீழ்மையை மேலிமைதொடுதல் அவ்விளையோனை இறைவன்பரிசிப்பதுபோலும் கூறினமைகாண்க

இனி ஒருசாரார். நினைத்தற்கும் செய்தற்கு மரிதாகிய ஐந்துகாண் மீன்களையும் விண்ணவர்க்கு மாறுகப்படைத்த விசுவாமித்திரன் வேள்வியை என முதலிரண்டு அடிகட்கிவ்வாறு பொருள்கூறுவது மொன்று.

இதுகாறும் எவ்வகைப்பட்ட தவஞ்செய்தாரும் காண்மீன்களைந்தனையும் தத்தங் கதிமாறிவருவனவாகச் செய்தாரில்லையாகலின் எண்ணுதற் காக்கரி திரண்டு மூன்று காள்என்றும், அது திரிசங்கு என்னும் அரசர்பெருமான்புலையனைச் சபிக்கப்பட்டமையான் அவன் துறக்கமெய்தாமை தடுப்பதற்கிலையாத அமரர்கூட்டு மாறுகச் செய்தலின் விண்ணவர்க்காக்கிய என்றுங் கூறினர். எண்ணுதற்காக்கரி தென்புழிஎண்ணும்மையும் இரண்டுமூன்றுநாளென இனைத்தெனவறியும்செவ்வெண்ணின்முன்னர்முற்றும்மையும் விகாரத்தாற் பிறந்தன. காண்மீனைந்தாவன அனுடம், கேட்டை, மூலம், பூராடம், உத்திராடம் என்பனவாம்.

மண்ணினைக்காக்கின்ற மன்னனென்றார் தசரதன் பொதுக்கடிந்து அரச ஞெஞ் தன்மையைநோக்கி என்க.

இவ்வாறு இனையவனும் பெருமானும் யாகசாலையைக்காத்து வருகை யிலும், அவ்விருவீரரினும் மூத்தவனகிய சிராமபிரான் முழுதுமுணர்ந்த விசுவாமித்திர முனிவனை நோக்கி, தேவரீர் கொடுந்தொழில் செய்பவர் என்ற கொடியவர்கள் வருவதுளென்று அருளிச்செய்யவேனெடும் யாவராலுமடுகழுக்து சொல்லுதற்கரிய பெருமானே எனறுகேட்க, அவ்வாறுகேட்டதற்கு விடை யொன்றுங்கூறுமல் முனிவாபெருமான்மௌனமாயிருக்கவும், போர்த்தொழி லில்வல்லகாகுத்தவமிசாத்தான் கார்காலத்து மேகம்போலச்சூழ்ந்து இடியு மஞ்ச ஆரவாரித்து அதட்டிக்கொண்டு ஆகாயமாக்கத்நில வருவதைக் கண்டான். அவர்கள் பாணங்களைப் பிரயோகிக்கவும, வேற்படைமுதலிய வற்றை யெறியவும், எரியுமிருமபெய்யவும, பெரியமலைகளை வேருடன்பிடுங்கி வீசவும், மழுவாயுதங்களை யெறிய வும் நினைத்தார்கள். அவாகள்செய்த கொடியசெயலகளை யளவிடலுமாகமாட்டா, அவ்வாறுஅரக்கர்பாமிசந்தங்கிய படைகளை விட்டெறிந்து மேகம்போல அக்காட்டைவளைந்தனர். அவ்வேள் விச்சாலையைவளைந்தசேனை மீன்கள்வசிக்கும அலைகடல ஆகாயத்திலெழுந்து மறைத்தாற்போல் அவ்வாகாயமுழுது மறைத்தன. விரிவாயபைந்த ப்பற்களை யுடையாரும், கடிந்த வுதட்டினையுடையாரும், செம்பட்ட மயிரினையுடை யாரும், சுழல்கினற கணணில் தீபொறி யுடையாருமாகிய இவர்களை நெருங்கிய சடைமுடியையுடைய விசுவாமித்திர முனிவர் கட்டளையிட்ட கொடியவனென்று தமபியாகிய இளையபெருமானுக்குக்காட்ட, அவரும்கண்டு கடைக்கண்ணில் தீப்பொறிபறக்க ஆகாயத்தைநோக்கிப் பின் தன்னுடைய வில்லையுநோக்கித்தேவர்கட்கிறைவனைஇனிப்பாாத்துக்கொண்டிருரும், என்னால் இவர்கள் உடல்வேறு தலைவேறுகத் துண்டிக்கப்படடு வீழுந்தன்மையென்று தொழுதுசொல்லவும், செந்தாமரை மலர்போலுங் கண்களையுடைய சீராம் பிரானும் புகையுள்ளவேலைநிய அரக்கருடைய நினைமும், குருதியும் அவ் வேள்விக்குண்டத்தில் வீழாவண்ணம நினைந்து தமதுவில்லினின்றும விடப் பட்டபாணங்களால் சரக்கூடங்கட்டியபோது, முன்னுளில ஆலவிடம் திருப் பாற்கடலி லெழுந்ததுகண்டு சந்திரசேகரனகிய அனைதிமலமுத்தனைச் சரண மடைந்த தேவர்களைப்போல வஞ்சனையுள்ள அரக்கருக் கஞ்சிப் பெருந் தவத்தினையுடைய முனிவர்கள்எல்லாம் கரியகோலத் திருவுருவப்பெருந்தகை யாகிய சிராமபிரானே யாங்கள் இன்னடைக்கலமென்றனர். அவ்வாறடைந்த முனிவர்களை அஞ்சவேண்டாமென்று அபயாஸ்தமளித்து வில்லைவளைத்து காணேற்றி அதனைத் தன்காதளவுகிறுத்தி பூமியின்கண் இரத்தவெள்ள மோடும்படி அவ்வரக்கர்களுடைய தலைகளை வாயுவாஸ்திரத்தால் மலைகளாகக் குவித்துப் பின்பு காடடுகைபெற்ற மக்களில மாரீசனைக் காந்தர்வாஸ்திரத்தால் தென்கடலிற் போய்விழச்செய்து, சுவாகுவை ஆக்கினேயாஸ்திரத்தால் தென்திசைக் கனுப்பிவிட்டுநிற்க, எஞ்சிநின்ற அரக்கரெல்லாம் ஆகாயமளாவி நின்ற பிணக்குவியலின்மேல் நடந்துசென்று நம்மைப்பிடிப்பவரிவ்விடத்திலும் வருவனென்று சொல்லிக்கொண்டேஒருவர்போனபழி ஒருவர்போகாமல்ஓடிப் போயினர். அவ்வாரிருடிய சில அரக்கனை இடிபோன்ற சிலபாணங்கள்

விடாமற் பின்பற்றின, கவந்தம் கூத்தாடின, பேய்களும் இறைவன்புகழினைப் பாடியாடித்தன, பறவைகள்பந்தரிட்டன. இவ்வாறுயுத்தமுடிந்தபின்பு தேவர்கள் எல்லாம் பறவைக்கூட்டங்களின் பந்தரைக்கிழித்துக்கொண்டு போகப்பூமழை பொழிந்தனர். மேகத்தின் குழுறலும் நாணும்படி அந்தரதுந்துமி யதிர்ந்தன, இந்திரன்முதலிய தேவர்களெலலாம் நெருங்கினர். கோதண்டமேந்திய சீராம பிரானைவாழ்த்தினர். முனிவர்களோ ஆசிர்வசனமாகியபுட்பவருஷஞ் சொரிந்தனர். அக்காட்டில் உள்ள பூமரங்களும் பூமழைசொரிந்தன. இவ்வாறு நிகழ்கையில் விசுவாமித்திரமுனிவரும் தாம் வேள்வியை நிறைவேற்றிச் சீராம பிரானைநோக்கி இந்தக் காரியத்தைச் செய்துமுடித்ததை யோசிக்குமிடத்தில் எனக்குப் பாக்கியவசமென்றே நினைப்பதல்லாமல் இப்பஞ்சாசத்கோடி பூமண்டலத்தினையும் திருவயிற்றி லடக்கிக்காக்கும் நீஇவ்வொருவேள்வியைக் காத்தாயென்று சொல்லுதல் உனக்குப் பெருமிதமான காரிய மல்லவென்று சொல்லிவிட்டு அன்று அவ்வழகிய மலர்ச்சோலையில் தங்கிய முனிவர்களுடன் எழுந்தருளி யிருக்கின்ற குணமலிபோன்றவராகிய விசுவாமித்திர முனிவனை நோக்கிக் கோசலைநாட்டுக் கதிபராகிய சீராமபிரான் இன்று அடியேன் செய்யும் குற்றேவல யாது கட்டளையிடுமென்று 'மூத்தோர் சொல் வார்த்தையமிர்தம்' என்ற முதுமொழியை உலகத்தாருக்கு அனுஷ்டித்துக் காட்டவந்தமையால் கேட்டருள, இது அருமையான காரியமென்று சொன்ன போதும், அதனை அருமையல்லவென்றே செய்துமுடிக்கவல்ல உனக்கு யாது தான் அருமையான காரியம், நீ பெருங் காரிங்களெல்லாம் முடிக்கவேண்டும், அவைகள் பின்னேயிருக்கின்றன ; ஆனலும் பரந்த நீர்வளமுள்ள மருதநிலம் சூழ்ந்த மிதிலைநாட்டிற் கரசனகிய சனகமகாராசன் செய்யும் யாகத்தைப் போய் பார்த்துவருவோம் வாருமென்று சொல்லச் சீராமபிரானும் இளையபெருமாள் நிழல்போல்தன்னைப் பின்பற்ற விசுவாமித்திர முனிவருடன் சென்றனன்.

அகலிகைப்படலம்.

அலைகின்ற பெருமணிகளுடனும், சந்தனத்துடனும, அகிற்கட்டை பொருந்திய மணற்குன்றமாகிய இன்பந்தரும் முலையினையும், மிக இளமைவாய்ந்த பூங்கொடிபோலும் இடையினையும், புதுமலரணிந்த கருமணலாகிய கூந்தலையும் நிலம்புகுழும் காலையுமுடைய பெண்ணுருவமமைந்த சோணைநதியை சீராமபிரானும், இளையபெருமாளும், விசுவாமித்திரமுனிவருடன் அடையவே, சாரதியாகிய அருணனுடைய கண்ணேட்டத்திற்கு முந்திச்செல்லும் வேகத்தையுடைய சப்தா என்னும் பச்சைப்புரவிபூண்ட ஒற்றையுருளைத் தேனையுடைய சூரியன் உதிக்கும் காலத்தில் இவர்களுக்குக் குளிர்ச்சிசெய்யத் தன் உருவத்தினிடத்தில் கொதிக்கின்றவெப்பத்தை மாற்றுகின்றவன்போல மேற்றிசைக் கடலில்மறையவே, தாமரைகளின் இதழாகிய கதவுகள் மூடப்பட்டமையால் அத்தாமரைக் காட்டைவிட்டுப்பெண்வண்டுகளும் ஆண்வண்டுகளும் நித்திரை

செய்கின்ற சோலையிற்சென்றுதங்க, சிராமபிராலும்விசுவாமித்திரமுனிவனைப் பார்த்து இச்சோலையின் வரலாறென்ன சோலலுணமையாவென்றுகேட்கவிசுவாமித்திரமுனிவரும், இச்சோலையிலே முற்காலத்திலபுத்திரர்களுக்காக ஆராத்துபரங்கொண்டு காசிபமுனிவருடைய மனைவிமார்களில் திதியென்பவள் அருந்தவஞ்செய்தாள். அன்றியும் அம்பாளைக்கட்புறத்தாய் எம்மையாளாகவுடைய மெகநிறமுள்ளபகவான் எழுந்தருளியிருக்கும் வைகுந்தத்தையிடைந்து ஒருவித்தியாதரஸ்திரீ மெகநாயனா மலையென்ற திருவடிகளையுடைய திருமகளைபடிகழ்ந்துபாட அதற்சுரனமகிழ்ந்து வரைதிகள் நீங்காத பூமாலையையளிக்க அபிபைன அருதவிணையிங்கட்டிவரும்பொது, காமம் வெகுளி மபக்கமெனவுரை முக்குருநங்களுமிலலாத தூயவாசமுனிவர் எதிரில் வரக்கண்டு அவருக்கு உலகமுவமட பெருவாயலுகிய ஆரியகவரையையபாயிலிருக்கின்ற பிராட்டிஅளகாபாத்திலருதினைபுபாலே; இதுநீ இதலைபெற்றுக் கொள்ளுமென்றுகொடுக்க வாங்கிதலையிற்சூடி இந்திரலோகத்தையடைந்தான். மனைபெய்பு மிடைமடிவள்ளியலம்பல் ஆயிரஞ்சந்தாமையாகளைபலர்துகொண்டுமை குரியனுடைய கிருங்கிபந்தாகளைபணிந்துகொள்ளுமே தேன்றுமுறைமைபோல விளங்குமுருவத்துடனே இந்திரன் ஐராவதமென்னும் வெள்ளையாளினமேல எழுந்தருளி அமலைய, மெனைக, திலொத்தனை, ஊர்வசியென்று சொலலப்படுமமனைதனது பானமபெய்தகூணிராபோன்ற கணைக்காலிலும், கரிபோனறபாதகளிலுஞ்சிலமடிசத்திக்கவும, கரும்பையும சுவைகைப்பித்த செலலையுடையபாதகள் விளரியனனும பண்ணைபாதபாடலோடு கடனஞ்செய்துவாவும, பெரியகிலமலையினிருபுறத்தும பூமலைசத்திரனுடைய கதிக்கற்றை தவழ்வதுபோலத் தன்னிருபுறத்தும சாமரைபுளவும், அழகமைந்த சாந்திரன குறைவறநிறைந்து ஒளியிளங்குபடி அபலையி லோங்கியிருக்கின்றதுபோல அழகிய ஒபிலைத்த வெண்மையொற்றைக்குடை நிழல்செய்யவும, அடிபடுகின்ற பெரிகை, குறடு, பாணடில்முதலிய வாத்தியவோசை மங்கலகீதத்தை மறைக்கவும், உதாத்தம, அனுதாத்தம், சுவரித மென்னுமூவகை இசையினையுடைய வெகுங்களினோசைசை சமுத்திரகோஷ்டம் பின்னிட்டு உலகத்தை விழுங்குவதுபோலவுபபவனிவருவதைதும தூருவாசமுனிவர்கண்டு பேரானந்தங்கொணடு அதிதிவாகதரின் கையில தாமணிந்திருந்த தெய்வமலாபாலையைக்கொடுக்க, அவன் தனகையிலிருந் தோட்டியால் அதனைவாங்கி மிக்கவலிமையுள்ள அயிராவதத்தின் பிடரில்லைவக்க அதுதன்பணைபோன்ற துதிக்கையினால் வாங்கி முன்னங்காலிற்போட்டுப் பாழ்படுத்தியது.

அதைக்கண்டமுனிவர் தங்கனைகளினின்று மொழுகுகின்ற தீப்பொறிகளால் அண்டம் சாம்பரா யெரிந்துபோமென்று தேவர்கள் தங்கள் கதிகளைவிட்டோட, சூரியசந்திரர்கள் திசைமாற, அட்டதிசைகளு மிருண்டுபோக, எவ்வுலகமும் சுழல, அம்முனிவன் சுவாசம்விடுதையில் புகையெழ, திரிபுரதகனஞ்செய்த பரமசிவனைப்போல நகையுண்டாக, கல்லநெற்றி வனாயும் புருவங்களேறிட, இப்படிநிகழ்வதன்றித்தீப்பொறியெழுகின்றகண்களையுடைய

வராய் இடியுமாறுபடகின்று மிக்க ஆடம்பரமாய் வருகின்ற இந்திரனேப்போர்த் துச் சொல்லுகின்றார். எல்லாவுயிர்களுக்குமிறைவனும், பூமிதேவிக்கு மண வாளனும், ஒப்பில்லாதவேதங்களுக்கு மூலபுருடனுமாகிய பகவானுடையமார் பிலிருக்கின்ற திருமகள்விரும்புகின்ற மலர்மாலையை முன்னேப்பிறவியிற்செய்த மூதுதவத்தினல் பின்னையிப்பிறவியில் ஒருவித்யாதரமாதனிக்கப் பெற்றுக் கொண்டு,நீஇன்றுவருங்கோலாகலத்தைக்கண்டுமகிழ்ந்து உன்கையிற்கொடுக்க அதனைவாங்கிடப்பெறுமல் உன் செல்வக்களிப்பால தோட்டியின் வாங்கி ஐராவதத்தின் பிடர்மேல்வைக்க அது காலால்மிதித்துப் பாழாக்கச்செய்தனை யல்லதுஉன்முடியில் சூட்டிக்கொள்ளாமல்இகழ்ந்துவிட்டாய்;ஆகையால் உன் பெருஞ்செல்வமும் சங்கநிதி, பதுமநிதி யென்னும் நிதிகளும் கடலிற்போ யொளிக்க,நீயொளிகுறைந்து துயரமடையக்கடவாயென்று கொடுஞ்சாபமிட் டார். அவ்வாறு சாபமிடவே அரமடந்தையரும், கற்பகமுதலிய பஞ்சதரு க்களும், நவநிதிகளும், தேவாமிர்தமும், காமதேனுவும், உச்சைசிரவமும், ஐரா வதம் முதலிய எல்லாப்பொருளும் கடலிற்போயொளித்ததனல் தன்னுடைய பொன்னுலகத்தில் ஒரு பொருளுமில்லாமல் தேவர்கள் கண்டு கண்ணப்ப முதலியார் சத்துருக்களைப்போல வோடியொளிக்கத் தலைப்பட்டனர். இவ் வாறு துர்வாசமுனிவர் சாபத்தால் விண மண் பாதலமென்னும் மூன்றுலக மும்வற்மையென்னும் தீப்பிணியால்மெலிந்து துயரமடைவதனல் பிரமாதி தேவர்களும்கூடித்திருமகளைமார்பிலேயுடையவிஷ்ணுவினிடத்திற்சென்றனர்.

அவ்வாறு சென்றடைந்தவர்கள் துர்வாசமுனிவருடையகொடியசாபத் தால் வந்துசேர்ந்த தீமையைச்சொல்லி நின்னையலது ஆதரவொன்றில்லை யென்று அடைந்தோம் என அஞ்சவேண்டாமென்று உலகமளந்தருமால் அபயஸ்தங்கொடுத்து மந்தரகிரியை மத்தாகவும்,வாசுகியை மத்திடுகயிறுகவும், சந்திரனே தூணுகவும் கொண்டு,தேவர்களும்அசுரர்களும்இருபுறத்தேயிருந்து ஓஷதிகொடுத்துத் திருப்பாற்கடலைஅமிர்தமுண்டாகக் கடைவீராயின்யாமும் அவ்விடத்திலேவருவோம், நீங்கள் வினைவிற்செலலுங்கோளென்று சொல்ல, அவனைத்தோத்திரம் செய்துபுகழ்ந்து நமக்குவறுமையென்னும் நோய்நீங்கிய தென்று சந்தோஷத்தால் நடித்துப் பெருமகிழ்ச்சியென்னுங் கடலிலாழ்ந்து மந்தரமலையைப்பிடுங்கி மத்தாக்கி அதற்கு வாசுகியைத்தாம்பாகப்பிணித்துச் சந்திரனே தூணுகநட்டு ஓஷதிகளைப்போட்டு அலைததும்பப் பூமியும்நிலைகலங்க ஆதிசேடனும் பாதலத்தில்சென்று உடல்நெளியக் கடைந்தனர். அவர்கள் இப்படிகடையவே மந்தரமலைசுழல ஆமையாய் ஆயிரங்கைகளாலுமதாங்கி வலிக்க தருமமார்க்கத்தில் நடப்பவர் சிந்தையில் எழுந்தருளியிருக்கும்பகவா னும் அமைத்ததனல், ஓடிஒளித்த நவநிதி,காமதேனு, பஞ்சதருமுதலிய எல்லாச்செல்வப்பொருள்களும்மீண்டும் தோன்றக்கண்டு தேவர்களும் அசுரர் களும்தம்முட்பிணக்கமடைந்தனர். அத்தருணத்தில் மோகினியுருக்கொண்டு அசுரர்கள் தாம்கொண்ட கருத்தையொழிந்து மரணமடையவே தேவர்கள் அமிர்தம்பிழைத்துண்டனர் ; திருமகள் நாயகன் யாவரும்கண்டஞ்சியோடிய ஆலகாலவிடத்தை இடபவாகனத்தையுடையபரமசிவனுக்களித்து,பஞ்சதரு,

சுரபி, உச்சைசிரவம், ஐராவதம், கவிதிமுதலியபொருள்களை யெல்லாம் இந்திரனுக்குவழங்கி தருமகவுஸ்துவமணியையும், திருமகளையும் கைக்கொண்டான். அப்போது தன்மக்களாகிய அசுரர்கள் இந்திரன்முதலிய தேவர்கள் தந்திரத்தால் மாண்டதையறிந்து மிக்கதுபரமுடையவளாய் காசிபனையடைந்து அவர்பாதங்களைவணங்கி எனைமைந்தர்களை படித்த அத்தேவர் கள்மடிய ஒருபுத்திரனை யளிக்கவேணுமென்றுவரங்கேட்க, அவர் அவ்வாறே உனக்கொரு மகனையளித்தோம், இனிநீபூமியிலேசென்று ஆயிரவருஷம் பெருந் தவஞ்செய்யென்று கட்டளையிட அவளும அவ்வாறே பெருந்தவஞ்செய்வா ளாயினள். அதனைக்கேள்விப்பட்ட இந்திரன் வேற்றுருக்கொண்டு அவளுக் குக்குற்றவல் செய்பவனைபிருந்து அவள்செய்கின்ற தவத்தில்சோர்வுநேரிடுஞ் சமயமறிந்து அவள் வயிற்றிற்கிடக்கின்ற மைந்தனைக்கீழ்விழச்செய்து ஏழு கூறுக்கினன். அவ்வளவில் அக்கூறுகளேழும் அழுதகனைகளிலிருந்தும் கண் ணீர்சிந்த அவைகட்கு மருத்துவன்னுமபெயரைக்கொடுத்தான். அதுகிடந்த விடம் இதுவென்று சொலலிக்கொணடே பிறகு சந்திரனைச்சடையிற்புனைந்த அறுதிமலமுத்தரகிய பரமசிவனுக்கு உமாதேவியிடமாகத்தோன்றி அக்கினி யும், வாயுமு, கங்கையும பொறுத்தற்கரிதாகிய வலிமைபடைத்த குமாரக்கட வுள் வளர்ந்த பதுமப்பாசடைச் சரவணபொய்கை இதுவென்று சுட்டிக் காட்டி, காலன்மேனிபோலும் கருநிறங்கொண்ட இருளையொதுக்கும்படிநீல நிறக் கடலிலேதான்றி ஆயிரங்கதிர்பரப்பும் சூரியன் திருமறுமார்பனுடைய கௌத்துவம்புரளும திருவுந்தியினிடத்துள்ள மூலதாமரையிற்பூத்த பிரமன் போல் உதயஞ்செய்ய, அங்குநின்றும பிரமன்முதலிய இறைவர் மூவனையும் ஒப்பர்ராகிய அம்மூவருமம கோபக்கணைகளையுடைய விடையுகந்தேறும்வித்தக னுடைய சடைக்கற்றையினினறுஞ்சுடுதன்பெருக்கெடுத்தோடுங்கொன்றை மலர்மாலையையீர்த்துக்கொணடொழுகுதலால காவிரியாற்றையொத்த கங்கை யைக் கண்டனர்.

இந்தப்பெருமைவாய்ந்த நதிக்குள்ள பெருமையனைத்தும் ஒன்றுமொழி யாமல் முனிவாபெருமானே சொலலவேண்டுமென்று இராகவபிரான்கேட்க, என்னேவேள்விக்செலவமடையப்பாதுகாத்த காருத்தவமிசோத்தரனே! உன் மரபிலேதான்றிய மூதாதையும், அயோத்திநகரையாண்டஅரசர்பெருமானும் விசயலட்சுமிவாழ்கின்ற தோளையுடையவனுமாகிய சகரசக்கரவர்த்தி இவ் வுலகையீயாண்டுவந்தான். அவனுக்கிரண்டு மனைவியருண்டு; அவருள் மூத்த மனைவியாகிய வித்தர்ப்பையென்பவள் கருக்கொண்டு போஷணனென்னும் புத் திரனைப்பெற்றாள். இளையமனைவியும் கருடனுக்கிளையவளுமாகிய சுமதியென் பவள்தருமமார்க்கத்திற் செல்லாத அறுபதினாயிரம் பிள்ளைகளைப்பெற்றாள். போஷணனென்பவன் அஞ்சுமானென்பவனைப்பெற்றான். மிக்கவெற்றியுள்ள சகரராசன்தன்மக்களுடைய செளரியத்தைக்கண்டு அசுவமேதஞ்செய்யவுங் கோபித்துக்கொண்டு தேவர்கள் வண்டுகள் நெருங்கிய மலர்மாலையணிந்த இந்திரனுக்குச்சொல்லினர். அவன்கபிலமுனிவனுடைய ஆச்சிரமத்தில் அஸ்வ மேதக்குதிரையைக்கட்டினன். அக்குதிரையின்பின்சென்ற அஞ்சுமான்மனங்

கலங்கிமுன்னேசென்ற குதிரையைக்காணுதவனுய்ப் பின்புபூமியினிடத்தெங் குந்தேடியுங்காணுமல் இந்திரன் அக்குதிரையையொளித்தவிடம் இன்னதென் றும் அறியாமல் திப்பிரமைகொண்டு மறுபடியும் தன்பாட்டனுகிய சகரசக்கர வர்த்தியினிடத்துத் தெரிவித்தான். அஞ்சுமான் சொல்லிய வார்த்தையைக் கேட்டு வாட்டங்கொண்டு தன்மக்களுக்கு அக்குதிரை காணுதசெய்தியை யெடுத்துச்சொல்ல, அவர்களும் வடவாமுகாக்கினிபோற் கொதித்து மிகக் கோபத்தினுல் கணணில் தீப்பொறிபறக்க மறுபடியும் பூமியிலெங்குந்தேடிக் காணுமல பாதலம்மூன்றுகத்தெரியும்படி அம்மண்ணே நூறுயோசனையகலமும், ஆழமுமாகத் தோண்டிக்கொண்டு சாப்பிட்டுக்கொண்டே தேடிப்போய் வட கிழக்குத்திசையில் கபில முனிவனுடைய ஆச்சிரமத்தில் அக்குதிரையைக் கண்டு அக்கினியைப்போலசீறியெழுந்துவைதுதூறுமாந்து இமிசைசெய்யவே, அம்முனிவனுக்குக் கோபம்உண்டாகிக் கொதித்துத்தீப்பொழிநோக்கினன். அவ் வாறு நோக்கியமாத்திரத்தில் பூளைமலையணிந்த பரமசிவனுடைய நெற்றிக் கண்ணுல் திரிபுரம்வெந்த விருதவிதம்போல சகரசக்கரவர்த்தி குமாரர்கள் அறுபதினுயிரமபேரும் வெந்து சாபபராயினர். உடனே தூதுவரோடி நடந்த செய்தியை சகராராசனுக்குத் தெரிவிக்கக்கேட்டு, அவர் அப்பொழுதுண்டா கியதுயரத்திற் கொருமுடிவுகாணுமல அறிவுசோர்ந்து தன்பவுத்திரனுகிய அஞ்சுமானைக்கூவி யழைத்து அவாகள் இறந்தாராயினும் நாம்வேள்வியை விட்டு விடலாமோ என்றுசொல்ல அவன் திடனின்றழுந்து பெருந்தவ முடைய கபிலமுனிவனிருக்கும் பாதலத்தைச்சேர்ந்துஇறந்தவருடையஉடல் சிந்திக்கிடக்கின்ற சாம்பலமலையையுங்கண்டு நடுநடுங்கிய மனமுடையவனுய்க் கபிலமுனிவனுடைய தாமனைமலாபோன்ற திருவடிகளைவணங்கி இக்காரி யத்தைச்சொல்ல உன்குதிரையை நீ கொண்டுபோவென்று சொன்னதன்றி நடந்தவிருத்தாந்தத்தையும் விவரமாகச்சொலலியனுப்பினன்.

அதைக்கேட்ட அஞ்சுமான் அக்கபிலமுனிவனைவணங்கி அக்குதிரை யைக்கொண்டுவருது யாவராலும் எடுத்துக்கூறும் புகழையுடைய இரகு குலோத்தமனே! அந்தவேள்வியைநிறைவேற்றித்தேவாகளுக்கு அவிர்ப்பாகங் கொடுத்து,சகாராசனுமசுவர்க்கலோகமுபோய்ச்சோந்தான். இதுகிடக்க; சகர ராசன் மக்கள் அறுபதினுயிரம்பேர் தோண்டிச்சனறமையால அப்பள்ளத் திற்குச் சாகரமென்றுபேர் வழங்கிற்று. இவனதுமரபில் பகீரதமகாராசனை னும் அரசன்தோன்றி உலகையன்பாயாண்டுவருதான். இப்பகீரதமகாராசன் உலகமுழுதும் தன்குடைநிழலில்வைத்து அரசாணடுவருகையில் அவ்வரசன் தன் மூதாதையாகிய சகரராசன் மக்களிறந்தமைகேள்விப்பட்டு வசிஷ்ட முனிவர்பாதங்களில்எட்டுறுப்பும்நிலமுறப்பணிந்துகபிலமுனிவன்கோபத்தால் இறந்த மூதாதைகள் முழுதும நிரயத்துன்ப மனுபவியாதவிதம் யான் தவஞ் செய்ய எம்மிறைவனே யருளிச்செய்யவேண்டுமென்று வேண்ட அதற்கு வசிஷ்டமுனிவர் உலகமுழுதுமாள்கின்ற அரசர்பெருமானே! அன்று கபில முனிவன்சாபத்தால் வெந்து சாம்பராய்ப்போன உன்மூதாதைகள் பிழைக் கும்பொருட்டு பெருந்தவத்தைப் பிரமதேவனேநோக்கி பலகாலஞ்செய்வையாயின்

அக்காரியஞ் சித்திக்குமென்றனர். அதுகேட்டுப் பகீரதனும் சுமந்திரனென்னும் மந்திரியினிடத்துத்தனராசையொப்படித்துநாட்டைவைத்தான்கவக்கோலங்கொண்டுபிரமதேவனைநோக்கிஅறுபதினாயிரவருஷம் இயமமிலிச்சாரலில் அருந்தவஞ்செய்யப்பிரமதேவன் பிரசன்னமாய் நீசெய்தஅருந்தவத்திற்குமிகவுமகிழ்ந்தன். உன்மூதாதைகள் கபிலமுனிவன்சாபத்தினால் முன்னே இறந்தனராதலின் பூமியின்கண்ஆகாய கங்கையினைவாகவந்து அவர்கள் எலும்பிற் படியுமானால் அவர்கள் அனைவருமீண்டுமேலுலக மடைவார்கள்; அவ்வாகாயகங்கை பூமியில்வந்தால்அதனைஎற்றியிலொற்றைநாட்டமுடையபின்னமகேசுவரனல்லது தாங்கவல்லவர் ஒருவருமிலரே, நீஇமாசலையையொருபாலுடையவனைநோக்கி அருந்தவஞ்செய்யென்றுசொலி மறைந்தான். பகீரதனுமமலகங்கைப்புருடையமணிகண்டனைநோக்கி அவ்வாயிற யிறுபதினாயிர வருஷம அருந்தவஞ்செய்தான். இவ்வாறு அவ்வரசன் தவருசெய்யச் செந்தீவண்ணராகிய சிவபெருமான் கங்கையைநோக்கித் தவஞ்செய், அவள்வருங்காலத்தில் நாமதாங்குதற்குத் தடையொன்றுமிலதே யென்றுசொலி அமலகாரசனிடத்தில விடைகொண்டேக, அரசனும்கங்கையைநோக்கி ஐயாயிர வருஷம அருந்தவஞ்செய்தான். கங்கையோவருபெண்வடிவங்கொண்டு அரசனை நீசெய்யும தவம்யாது? கங்கையோ அலைமோதும் நீருருவங்கொண்டுவருவாளாயின் அவள்வேகத்தைப் பொறுப்பவர்யார்? சிவபிரான பொறுப்பனென்றசொலலும விநோதமாகும்; அதைபபற்றி யறிந்துகொள்ளென்று சொலலிப்போக, மூதாதைகளைக்குறித்து வருந்தும பகீரதன கரத்தையும மத்தமும எருக்கும விலவமும கொன்றையும் நிறைந்த அழகிய சடாமகுடத்தையுடையனைபலக்கோழுந்தாகிய பரமசிவனை நோக்கிஇரண்டாயிரத்தைந்நூறுவருஷம அருந்தவஞ்செய்தான். அவ்வாறுதவஞ் செய்கையில மலைமகளைபொருபாகமுடைய மணிகண்டத்திறைவன் அவ்வரசனுக்கிதிர்வந்து நீவேண்டியதுயாதென, அதுகேட்டு அருட்பெருங்கடலாகிய இறைவனைவணங்கி கங்கைசானல வாதனையைச்சொலல இறைவனும நீ ஒருசிறிதும அஞ்சவேண்டாம்! கங்கையொருபிரிந்துபிதிந்தாது போகாதவண்ணம் காக்கின்றேம்! என்றுசொலிவிடபோக இரண்டாயிரவருஷம மீண்டும கங்கையைநோக்கித் தவஞ்செய்தான். இவ்வரசன எவ்வாறு தவருசெய்தான் எனின்நீரையும், விபூதியையும, வாயுவையும, உலாந்தசருகையும், சூரியகிரணத்தையுமுண்டும், அவ்வகளையு முணணுமலும முப்படிதுணையிரவருஷம அருந்தவஞ்செய்ததைநோக்கிப் பிரமன் வசிக்கும சத்தியலோகமும், இந்திரலோகமுதலியமேலாகங்களும நடுநடுங்க இரைத்துவரக்கண்டு, மலைமகள்மணவாளனாகிய மகாதேவன்ஒருசிறிதும்பிதிர்ந்துபோகாதவண்ணமஒருசடைநுனியிற்கரந்தான் அக்கங்கை புன்னுனியிற்சொருகிய பனித்துளிபோலச் சுவறிப்போனதைக் கண்டுதிகைத்துநிற்க, நீவருந்தவேண்டாம், கங்கை நமதுசடைநுனியிலிருக்கின்றாள்என்று ஒரு சிறுதுளிவிட அவள் பூமியிலிழிந்தாள். இவ்வாறிழிந்த கங்கை முன் அரசன்வினாவாகச்செல்கையில் சாபத்தால் இறந்தவர்கள்கதியையடையச்செலகின்ற வேகத்தால் மிக்கபெருந்தவத்தினையுடைய சன்னுமுனிவன் யாகத்தைபழிக்கவே, அம்முனிவன் கொழுந்துவிட்டெரிகின்ற தீயைப்போற்

கொதித்து உள்ளங்கையிலேற்றுக்கொண்டு வேதமுணர்ந்த முனிவர்களின் கூட்டங்கள்கண்டு சந்தோஷிக்க ஆசமனஞ் செய்துவிட்டான். அதுகண்டு அரசன் நடந்தவற்றைச்சொல்லக் கேட்டிரங்கி நீகொண்டுபோவென்று காதின் வழியாகவிடவே கங்கைகுதித்து இறந்துபோனவர்க ளுடம்பினின்றுமுதிர்ந்த சாம்பலிற்படிந்தாள். அவ்வாறு கங்கை அவர்கள் சாம்பலிற்படிந்தவுடன் அம் மூதாதைகளனைவரும் பரகதியடைந்தனர். தேவர்கள் கூட்டம் புஷ்பவருஷம் பொழிந்தார்க்கவும், பேரிகைமுதலிய வாத்தியங்கள் ஒலிக்கவும், பகீரதனும் அழகியமதில்சூழ்ந்த அயோத்தியாநகரமடைந்தான். இரகுகுலோத்தமனே! அண்டகோளகைக் கப்புறத்ததாய் அன்றுலகையளந்ததாமரைமலர் போன்ற திருவடியிற்பிறந்து பிரமதேவனுற் கொளப்பட்டதீர்த்தமாய்ப் பரமசிவன் சடையிற்பெய்துகொள்ளப் பகீரதன் கொணர்ந்தமையால் பூமியின்கண் வந்துசேர்ந்தது. மேலும் இந்நதி சகரர்பொருட்டு அருந்தவம்பலகாலஞ்செய்து பகீரதன்கொண்டுவந்தமையால் பகீரதியென்னும் பெயர்பெற்று, பூமியின்கண் சன்னுமுனிவன் காதின்வழிவரலாற் சானவியென்னும் பெயரையும் பெற்றிருக்கின்றது என்றுசொல்லவே வியந்து அதிசயப்பட்டுவணங்க, அவர்களொடும் கங்கையைநீங்கி விசாலநகரத்தரசனுகிய மலைபோலுந்தோளையுடைய அரசர் பெருமான்வந்து அடியிணையிறைஞ்சத் தங்கியிருந்துஅவனுக்கு நல்லுரைகூறி, அவ்விடத்தினின்றுநீங்கித்தாமரைபூத்தவயலிற்பள்ளியுணர்ந்தநாகைகள்களைந் தெறியும் மாதர்களுடைய கள்ளம்பயிலும் மான்போலு நெடுங்கண்களையே நோக்கிக் கபற்கண்டை யென்றெண்ணி நாணங்கொள்ளும் அகன்ற வயலையுடைய மிதிலைநாட்டையடைந்தார்கள். அந்நாடோ அளவில்லாத பெரிய சூளங்களினுடைய மதகுகள்முழவுபோலொலிக்கவும், அருமடும் நறுமலரையுடைய செங்கமலப்பூவாலாகிய விளக்கெடுக்கவும், நரம்பைப்போலொழுகும் தேன்துளிகளைக்கொண்டிருக்கும் நல்லமலரின்கண் வீணையைப்போல்வண்டுகள் இசைபாடவும், சோலையில் மயிலகள் நடனஞ்செய்யவும், அழகியபட்ட மணிந்த நெற்றியையுடைய மாதர்கள் தங்கள்பார்வையாகியதூதினுல் அவர்களையணைய இச்சித்து அங்குமிங்கும் திரியும் ஆடவருடைய மனம்வெறுக்க, வயலில் உழவர்கள் களைபறித்தெறிந்த தாமரைமலரிற் படிந்திருந்து அந்த மாதர்களைப் பழிக்கவும், பொய்கைகளிற் கூவும் மெல்லிய குயில்போன்ற சொல்லையுடைய மாதர்கள் சிறகினையுடைய அன்னங்களைத் தம்மினமென்று அவற்றின்நடையைக்கண்டு பின்றொடரப்போய் ஆடுகின்ற குளிர்ந்த நீரில் நீங்காத குங்குமப்பூச்சேர்ந்த கலவைக்குழம்பின்சுவடு உடம்பெங்கும்படிய, அந்நீரிலிருக்கும்பறவைகள் சேவலும்பெடையுமாகப் பிணங்குவதனுல் மலர்கள் உறங்கினுலும் உறங்காமலிருக்கவும், ஆறுகளில் முறையாகநல்லமுதியளருமைகள்முலையினின்றும்ஒழுகும்பாலும், சோலைகளினின்றும் உயர்ந்தமாமரங்களில் ஒழுகும்சாறும், கரும்புகளை யாலையிலிட்டதனுற் பெருகும் இரசமும், தேன் கூட்டிலிருந்து பெருக்கெடுத்தோடும் தேனுமல்லாமல் வேறுபெருக்கென்பதில்லாதிருக்கவும், நாற்கும் நாலிழையைப்பார்க்கிலும் நுட்பமாகிய இடை குலையுமேலோங்கும தனங்களும், குளிர்ந்த பார்வையுமுடைய மாதர்கள்

செய்யும் நாடகசாலையில் கூத்தர்கள் முழக்காகின்ற முழவின் ஓசைக்குப் பயந்து உயர்ந்த இளமையாகிய எருமைகள் ஓடைகளிற் குதித்துக்கலக்க அதிலுள்ள வாளைகள் தென்னம்பாளையிற்பாயவும, அக்காட்டிலிருக்கும் மாதர்களுடையகண்ணுகிய வாள் உறைஎன்னும்இமையிற்புகும்படிபராந்திருக்குங்கீரில் மூழ்கிமுன்மேகடையத் திருப்பாற்கடலினின்றும்திருமகள்தோன்றியதன்மையைக்காட்டி நெருங்கியவெள்ளிய கைவளைகளும்,பறவைகளுடன் ஓஷிக்கத் தடாகத்திலிள்ள வண்டின்கூட்டங்கள் வாசனையுள்ளமலாகளிற் குடையவும் ; இவ்விதக் காட்சிகளையுடைய, மதிலசூழ்ந்தமிதிலைநகரத்தை அலங்கரிக்கும் நீண்டகொடிகளையுடைய மதினைபுறத்தே இனிமையாகச்சென்றணையமேவ, அகலிகை மனையொழுக்கத்திற்குரிய மாட்சிமையை யழித்து இழிந்த கல்லாகக்கிடக்கும் ஒரு பெரிய பேட்டைக்கனை இப்படிதோன்றிய கலின் மேல சிராமபிரானது திருவடித்துகள்படவும தம்மைவிடாது என்றும்பற்றிக் கொண்டிருந்த அஞ்ஞானமாகிய இருளொழிய வேறுபட்ட உருவங்கொண்டு மெய்ஞ்ஞானங்கொண டறியத்தக்கபகவானது திருவடிகளையடைவதுபோல முன்னே தன்னுடையநாயகனுகிய கவுதமமுனிவன் இட்டசாபத்தினாலாகிய இழிந்த கலலுருவமீங்கப்பெற்றுப் பழையபடியேபெண்ணுருவங்கொண்டுநின்றாள் ; அதைக்கண்டு விசுவாமித்திரமுனிவன இரகுநாயகனைப்பார்த்துக்கங்கா நதியைப் பூமியிற்கொணாந்த பகீரதனுடைய கால்வழியிற்றோன்றிய சிராமபிரானே ! மிக்களிப்புடன் மினனலைப்போல இங்கே ஒதுங்கியிருக்கின்றவள் யாரெனில், தேவினையை விருமபிச்செய்த இந்திரனுக்கு ஆயிரங்கண்ணளித்த கௌதமமுனிவன் மனைவியென்றான். அதைக்கேட்ட இராகவனும் இவ்வுலகிருந்ததனமைமிக்கவியப்புடையதே!இச்செய்கைபழையஊழ்வினையால்வந்தோர்ந்ததோ ! இடையில ஒருகாரணத்தாலவந்துசமபவித்ததோ! தாயையொத்தவராகிய இவ்வன்னைக்குநேரிட்டவிதம் யாதெனறுகேட்க, அதைக்கேட்ட விசுவாமித்திரனும் சிராமபிரானேநோக்கி மிக்கவொளியுள்ள வச்சிராயுதத்தையுடைய இந்திரனும் பஞ்சேந்திரிய நிக்கிரகஞ்செய்த கௌதமமுனிவன்நீங்கும் சமயம்என்றுவாய்க்குமோவென்று மான்போலுங்கண்களையுடைய அகலிகையினது அழகியமுலையையணைய ஆசைகொண்டு அகலிகையென்னும் இப்பெண்ணினது விழியாகியவேலும், மன்மதனற்றொடுக்கப்படும் பாணங்களும், தன்மேல்படவேதான் அகலிகை மேற்கொண்டிருந்த காதலால் ஒருசிறிதுநேரம் பிழைக்கும் உறுதியைத்தேடி கௌதமமுனிவன் இல்லாத சமயம்அகப்படாமல் அறிவுகெட்டு அன்று கௌதமமுனிவனுக்குப் பிரிவையுண்டாக்கி அம்முனிவனுடைய வடிவங்கொண்டு அகலிகையிடத்திற் சென்றான். இப்படி சென்று நலமானகலவியின்பத்தின் இனியசுவையை இவ்வகலிகையுடன்அனுபவித்துக்கொண்டிருக்கையில்,பின்னுமதுதகுதியல்லவென்பதும் இவள் அறியாமல் தாமசமாகக்கிடக்க, சோமசூரியாக்கினியென்னுங் கண்களையுடைய பரம்பொருளாகியசிவபெருமானேயொத்ததோவலிமையுள்ள கௌதமமுனிவனும் மிக்கவேகமாகப் பாணம் ஏவுதற்கு இசைவாகிய வில்லேயல்லது ஒருவராலும் தடுப்பதற்கரிய சாபமிடவல்லவராய்ச் சமீபத்தில்வரக்கண்டு பயந்து அழியாப்

பழியுண்ட அகலிகையும்நின்றாள். இந்திரனும் பூனைவடிவாகிப் பயந்தோடினன். தேவர்களுக்கெல்லாம அரசனுயிருந்தும மிசய்யத்தகாதகாரியஞ் செய்துவிட்டானேனன்றுகண்ணில் தீப்பொறிபறக்க உன்கையிலிருக்கும் தீயபாணங்களோயொத்த என்னுடைய சாபமொழியால ஆயிரமாதர்களுக்குள்ள அறிகுறியுண்டாகக்கடவதெனறு சாபமிட்டான். அவ்வாறு சாபமிடவும் அவைகளெல்லாம இமைபோரத்துக்குள்ளாக வந்துசாந்தன. இந்திரனை காணமடைந்து பார்ப்பவர்களைக்கண்டோரந்தபழியுடன்போனபின்பு, அகலிகையைப்பாராத்துவேசனீயமொத்த நீயும கலலுருவாகக்கடவையெனறு சாபமிட்டான. இவ்வாறுகடக்கையில் இந்திரனைப்பார்த்த தேவர்கள் பிரமதேவன்முன்னிலையில் வந்து கௌதமனைக்கண்டு இந்திரனுக்கு ஆயிரமாதர்களுக்குள்ள வறிகுறிகளும் பிறர்க்குக் கண்ணுகத்தோன்றவும, அவனுக்கு அறிகுறிகளாகத் தோன்றவும் வேண்டிக்கொள்ள அவ்வாறேபெற்றுக்கொண்டு தங்கள்தங்கள் பதங்களிற்சென்று சேர்ந்தனர். இதுமுன்னடந்த முறைமை. இனி இந்தவுலகங்கட்கெல்லாம் உய்யும்விதமன்றிமற்றோர்துயரமெனனுந் தன்மையுண்டாகுமோ ? கருமைநிறங்கொண்ட அரக்கியாகிய தாடகையோரிலமழையோலுமிறமுடையஇராகவபிராணைஉன்கையின்வலலமையை அங்கேகண்டோன, பாதத்தின்பெருமையைஇங்கேகண்டோன் எனத்தீதிலலாத உதவிசெய்தசெவடியையுடைய சிராமபிராணைகுற்றமற்றகுணத்தையுடைய விசுவாமித்திரமுனிவன் சொன்னவற்றைக்கருத்திற்கொண்டு, உனக்குபபெருந்தவமுடைய கௌதமர் கருணையேயுண்டாலைதுன்பமென்பதான்றுணடாமோ! நீ அனனையேயெங்களுடன்வா என்றுபொன்னடிவணங்கியழைத்துக்கொணடுபோய் அருந்தவத்தையுடையகௌதமமுனிவருடைய ஆச்சிரமத்தை அடைந்தபோது விருந்தினைக்கண்டுபரிந்தமனமுடையவராகிய அம்முனிவர் எதிரசென்றழைத்துச்செய்யவேண்டியஉபசாரங்களைச் செய்துநிற்கையில, விசுவாமித்திரமுனிவன் கௌதமமுனிவனைநோக்கி அஞ்சனவண்ணமுள்ள சிராமபிரானது திருவடித்துகள்படியாதமுன்பே கொடிபோலும் இடையையுடைய அகலிகையாகிய உமதுமனைவிமுன்போலுமபெண்ணுருக்கொண்டு நின்றாள். மனத்திற்குற்றமில்லாதவளாகிய உமதுமனவியை நீயழையுமென்றுசொலலப் பிரமனையொத்தகௌதமமுனிவருமதற்கிணங்கி நிற்கச் சிராமபிரானும அமமுனிவருடைய பாதங்களை வலமவந்துவணங்கிக் குற்றமற்ற கற்பினுயாத்த அகலிகையை அவரிடத்தேயொப்பித்துத் தான் விடைபெற்றுக்கொணடு, தமபியுமை விசுவாமித்திரமுனிவனும் தொடர்ந்துவர அச்சோலையைக்கடந்துசென்று அழகிய மதில்சூழ்ந்த அகழியைக்கண்டனர்.

அகலிகைப்படலம்

முற்றிற்று.

மிதிலைக் காட்சிப்படலம்.

குற்றமற்ற தாமரைமலரினின்றுநீங்கி யான்செய்கின்ற பெருந்தவத்திலுல திருமகள் வந்திருக்கின்றாள் என்று செழுமையான மணிகள் கட்டியகொடிக ளாகியகைகளைநீட்டி அக்காவலையுடைய நகரமாகிய பெண்செந்தாமரைமலர் போன்றகைகளையுடைய சீராமபிரானை விளைவாகவருகவென் றழைப்பது போலிருந்தது. தக்கவொருவருமில்லாமையால்தருமதேவதையேதூதுசென் றழைக்கஅளவில்லாத மிக்க அழகுள்ள சானகிபாளைமணஞ்செய்யச் சீராம பிரான்வருகின்றனனென்று அரம்பைமாதர் ஆகாயத்தில் நடனஞ்செய்யும் கூட னம்போல மாடமாளிகைகளின்மேல் கொடிகளாடக்கண்டும், தயிரைக்கண்டை யும் மத்தைப்போல மன்மதபாணம்பட வருந்திப்பினங்கும்மாதர் ஆடவரைப் போல, ஒன்றை மற்றொன்று நீங்காதுகோபதாங்கிய மனமுள்ளவைகளாய், தீப் பொறிகள் செவ்த கண்களிலிருந்தும புறப்பட்டு வயிரம்பற்றிய தந்தங்களை யுடைய யானைகள்போர்செய்யபாபாத்தும், சூரியகிரணம்மறையவும் ஆகா யம்பாற்கடல்போலவும், மிதிலாநகரத்துமாளிகைமேல் பெரியதுகிற்கொடிகள் நெருங்கிநிலைபெற்ற மேககூட்டத்தைத் தடவுந்தோறும் கனைந்து அம்மேக த்தைப்போலச் சூழ்ந்த அகிற்புகைபடியுந்தோறும் உலாந்தாடும்மாடங்களும், விரும்பிஅமிர்தத்தில்தூரியக்கோலத்தோய்த்துஅவயவங்களைஎழுதிவைத்திரிக் கலாமென்று மயங்குவானேயல்லது மன்மதனாலும் எழுதிமுடியாத அழகின யானைத்தந்தமையாலேதிருமகள் விளங்கியிருக்கின்ற செந்தாமரை மலர்போல விளங்கும் பொன்மதிலையுடைய நகரத்துக்குடபிரவேசித்தாகள்.

தமிழ்என்னும் அளப்பருங் கல்விக்கு இலக்கணமருளிச்செய்தசெந்தமிழ் ஆசிரியராகிய அகத்தியமுனிவர் உண்ட ஒளியுள்ளமணிகள்தங்கியகடலைப் போலநெருங்கி இரவிற்சேர்ந்து விளங்கும் பலநக்ஷத்திரங்கள் உண்டாயிருக் கின்ற ஆகாயம்போலவும், ஒளியுள்ள அட்டமச் சந்திரனையொத்த நெற்றியை யுடையமாதரும் ஆடவரும்வெறுத்துநீக்கியபொன்னாபரணங்கள்குப்பையாகக் கிடக்கின்ற நெடுந்தெருவாகிய இராசவீதிவழியே கடந்து, அங்குச்சத்தால் குத்தப்பட்டு அஞ்சாமையையுடையமலைபோன்றயானைகள்மிகுந்தமதநீராகிய அருவியைப்பொழிவதனால் கடிவாளம்பூண்ட குதிரைகளின் வாயினின்றும் ஒழுகாநின்றநுரையால் அவ்வாற்றினதுதன்மைமாறி, வேறோர் ஆறெனச்சொல் லக்கிடந்து உட்னேசேறாகியும், தேர்களோடுவதனால் தூளாகியும், இவ்வாறு ஒன்றோடொன்று மாறுபடுவதாகிய வறிதேயிராத வீதிவழியேசென்று கீக மிஷ்டி மாதராடவரென்னும் இருவரிடத்துந் தோன்றிய காமவின்பத்தை யநுபவித்தபின்பு அக்கலவிப்போரால் இளைத்தமெல்லிய மாதரைப்போலவு, இராகவிமோழிச்சியாகிய மாதர்கள் ஊடலிற்சிதையபூமாலைகள் வண்டோடுடன் இருந்த தேன்சொரிந்து புல்லிதிழின்வழியே சென்றனர்.

வெற்றிவேற்றோளையுடைய தசரதசக்கரவர்த்தியால்விடுக்கப்பட்ட இலட்ச பாட்டுடைத்தலைவிய மணிமிடைபவளச்செல்வனைத் தரிசிக்கவும், அவனும்

காட்டும் கையின்வழியே கண்பார்வைசெல்லவும், கண்ணின்வழியே மனஞ் செல்லவும்,உண்டோஇல்லையோ என்று சொல்லப்படுகின்ற இடையையுடைய மாதர்கள் நடனஞ்செய்யும் நாடகசாலையையும், போர்செய்தெழுந்தவண்டுகள் மாதரிடைக்காக வருந்தியேங்கவும், குற்றமுடைத்தாகிய பிறவிபோல வரவு போக்குடையதாகிக் குற்றமற்றபவளம்போலும் செய்யவாயையுடைய மரகத மணிபோலும் கழுகமரங்களிற்பிணிக்கப்பட்ட ஊசலினிடத்து மாதர்கள் தங் கள்நாயகருடைய கருத்தோடிலாவுவதையும்; அளவில்லாத இரத்தினங்களும், பொன்னும், முத்துகளும், கவரிவாலும், பாலைநிலத்தில் உண்டாகும் அகிற் கட்டைகளும், மயிலின்தோகைகளும், யானைத்தந்தங்களும், ஆகியஇவற்றை வரம்புகட்கணையாக நிரம்பச்செய்த உழவர்கள் குவிக்கக் கனைகளெங்கும் பரம்பும் காவிரியாற்றைப்போன்ற ஆவணம்பலவற்றையும்பார்த்தும், கொள்ளி வட்டம்போலும் வையாளிசெல்லும கடிவாளம்பூண்ட குதிரைகள் குயவன் மட்கலம்வனையும் திகிரிபோலப் பலவிடங்களிலும் மேலோர் கட்டைப்போல இடையே நீங்காதவையாயும், மெய்யுணர்ச்சியுடையார் அறிவேபோல ஒன் றுயும, கட்புலனுக்கு இன்னதெனத் தெரியாமலுமிருப்பதாயும்; ஒவ்வொரு மணிமயமான மாளிகைகளின் சாளரங்களிலும் அரம்பொருத வேல்போலும் மன்மதன்வில்லும் வண்டினங்களோடுபொருந்திய நீலோற்பலமலர்ச் சுருளும் செஞ்சடையுந் தன்னிடங்கொண்டு என்றுமழியாத களங்கத்தையோட்டிப்பல சந்திரருதயமானாற்போல மாதர்கள்காணபதையும்; பளிங்குக் கிண்ணத்தில் வார்த்த தேனைக்குடித்துத் தோன்றுகையையுடையவராய் வெறிகொண்டு பேசிமன்றத்தாலுமமறைக்கப்படாத ஊடலைப்பிறர்க்குத் தெரிவிப்பதுபோலக் களிப்புணர்த்துமசெவ்வியபலதாமனைகளையும்,காமசம்பந்தத்தாலாகியபோகத் தைத்தாமும் ஆடவருடன் அனுபவித்து விலையையும் கொள்ளும் மனமும், தன்னிடத்திற்காட்டிய வன்னம்பற்றும் பளிங்குபோல மையிட்டகண்ணின் பாவையாற்கருகியும், கைபடச்செவந்துதோன்றும் பலபந் தாடமிடங்களை யும்,வளையலும்,காதணியும்,இரத்தினஹாரமும்,நூலாற்செய்யப்பட்டவடமும மகரவீணையும், பந்தயப்பொருளாக அமைத்து வாசனையுள்ள பூமாலைகள் சோரப் பளிங்குப் பாச்சிகையைச் சிவக்கப்பிடித்துருட்டி வேல்போலுங் கண்ணையுடைய மாதர்கள் சூதாடும் இடங்களையும, தாமரை,குவளை,ஆம்பல், பாங்தகொடிகள், வள்ளைச்செடிகள், நீலமலர்கள், செஞ்சடை, அலை, வரான் மீன் இவைகளெல்லாம்நிரம்பமேவமேலோர் ஒப்பில்லாத தங்கள்அவயவங்களுடன் தழுவி மிகுந்த விருப்பமாய் மாதர்கள் நீராடும் பலதடாகங்களையும்; ஐம்புல விடயங்களிற் கொண்டுசெல்வதனால் அவைகளுடன்சென்று மயக்கமுற்று வசித்துநின்று கலக்கம்பெற்ற அறிவைப்போல் தோள்களில் கூட்டுவர்க்க மமைந்த சந்தனச்சேறும் தம்முளொத்த கொங்கைக்குறியும் நீங்காதவெற்றி யுள்ள இளங்குமரர் வாளாவினையாடும் இடங்கள் பலவற்றையும்; கொடிய கோபத்தில் உருவிப்போனதென்றுசொல்லும் சீரழும், தன்னைவந்தடுத்தால் ஒருபொருளை யில்லையென்னுமற் கொடுக்கும் இயல்புடைய மனமும், தோன் றுத்தினையாகிய பரமசிவனுடைய நெற்றிக்கண்ணிலழியாத மன்மதனெருவ

னண்டாயின் அவனைப்போலப் பேரழகும், செங்கரும்புச்சிலையேந்தியகையையுடைய தத்தம் மனைவியர் பிணக்கைத்தவிர்த்துச் சிவந்த சிகையுமுடையவராய்ச் சூழ்ந்துநிற்கும் வாலிபனையும்; பாகொத்த சொல்லையுடைய பசுங்கினியுடன் பலசொற்களைப்பேசிச் சுவர்க்கத்திலிருக்கும் அரம்பாஸ்திரீகள் காணங்கொள்ளப் பூக்கொய்யும் மயிற்சாயலையுடைய பூங்கொம்பையொத்த மாதர்களுக்கு அன்னங்கள் நடையில் தோற்றுப்போகப்பார்த்து வண்டினம் ஆரவாரிக்கின்ற சோலையையும்; தேவர்கள் இருக்கத்தக்கவாசஸ்தானமாகியமானிடைகளில் ஒழுங்காகிய சாயைபாய்வதனல் இவ்வுலகத்தில் தெரிகின்ற தேவர்கள் வசிக்கும் சுவர்க்கத்தின் அழகைக்காட்டி அலைமிகுந்துபொங்கும்கங்கையினும் ஆழமான கால்வகைச்சேனைப் பெருக்கமுடைய சனகராசனது அழகியபொற் கோயிலைச்சூழ்ந்த அகழியையும் பார்த்துக்கொண்டே போயினர்.

அதன்பிறகு பொன்னிணெளிபோலவும், பூவின்மணம்போலவும், தேனிற் சுவைபோலவும், செஞ்சொல்லாற் றொடுக்கப்பட்ட கவியின் இன்பம்போலவும் கன்னிமாடத்தின் மேலிடத்தில் மிகுந்த அன்புள்ள பெண்ணன்னத்துடன் ஆணன்னம் கூடிக்கொண்டிருக்கும் முன்றுறையைக்கிட்டி ஒரு பக்கமாகஅவ்விடத்தில்நின்று பார்த்துக்கொண்டேபின்னும்சொல்லுமிடத்துப்பிரமதேவன் முதலியதேவர்களெலலாரும் எந்தப்பெண்ணினையும் உவமையெடுத்துச்சொல்லும் அப்பெண்ணை சானகியாபோல் வேறே எதை யெவ்விடத்தில் ஒப்பாகவெடுத்துச்சொல்லலாகாதோ அப்படிப்பட்ட சிதையையேகண்டனர். உமையன்னையொத்த மாதரும் உச்சிமேற் கைகுவித்துவணங்கப்பொறுமையே ஒருவடிவெடுத்து வந்ததென்று சொல்லத்தக்க அவ்வன்னையின் மேனியைக்கண்டனர். அவ்வழகின் கரைகாணுமல் இந்திரன்தான் ஆயிரங்கண்ணிருந்தும் அவைகளாற்காணும் பரிசினைப்பெற்றிலனேயென்றும், பிரமதேவன் என்னுடைய எட்டுக்கண்ணுலும் பார்க்கவுமையாதேயென்றும், குமரக்கடவுள் என் பன்னிருகண்ணுமபோதாதே இவ்வன்னையின் பேரழகுகாணவென்றும், மற்றைத் தேவரும் யாங்கள் இமையாநாட்டம்பெற்றும்அவ்விரண்டுகண்களாலும்காணப் போதாதேயென்றும், சொலலிக்கொண்டிருக்க மண்ணுலகத்தவர் இமைக்குங் கண்ணைப்பெற்றதனல் அவ்வழகின்னதெனத் தெரியாமலிருக்கின்றது, நாங்கள் தேவர்களைப்போல இமையாநாட்டம் பெற்றிலமே என்றுவாடவும், அழகியமானெனென்றுவாகைகொண்டேவலும், கொலைத்தொழில்செய்யும்வானும், பின்னிட்டோடியொளிக்கவும், சேற்கண்டை பயந்தோடவும், பிறழ்கின்றகண்களையுடைய சானகியாரோ முன்னே மந்திரகிரி சுழல்வதனல் கூவிக்கொண்டு முன்னேகொடுத்ததிருப்பாற்கடலேயல்லாமல் இன்றுமந்தமாளிகையின் மேல் இடத்தில் வந்திருந்ததிருமகளேயென விளங்கியிருந்தாள்.

பெருந்தேர்த்தட்டினையொத்த அல்குலையுடையஇச்சானகியாளையொப்பவளாகிய பெண்ணைருத்தினையப் பிரமன்படைப்பானென்றுலும் அவனுலுஞ் செய்யத்தகாமோ, முன்னேதிருமகளைத்தந்த பாற்கடலானது தன்குளிடத்திலிருக்கும் அமுதத்தைச்சாப்பிட்டுதின்றுமேவண்டுமென்றபோது அத்தேவர்

கனுக்கு அமுதத்தைக்கொடுக்குமேயல்லாமல் வேறெதைக்கொடுக்கும்.தேவ லோகத்திலிருக்கும இந்திரனும், அவனாள்ளப்பட்ட அமரரும், அவராள்விரும் பப்படும் மேனகைமுதலிய விளங்குகின்ற வேலபோல்கின்ற கண்ணையுடைய மாதர்கள்முகமாகிய சந்திரனுக்கு சீதாபிராட்டியின் முகமானது பகற்காலம் போலவிளங்கும். தாமரைமலைநீங்கிஇச்சானகியார்இப்பூவுலகில எழுந்தருளி யிருக்கப் பலகாலம் வருந்தித்தவஞ்செய்தவர்கள் அளவில்லாத அழகிய தட்ப மாகிய குணமுடையமுனிவரேயோ! நலலதருமதேவதையேயோ! அல்லது இம்மண்ணுலகமோ! வானுலகமோ! தேவரோ இன்னதென்றறியோம், தமக் கொப்பாரில்லாத மாதாகள்செந்தளிரபோன்ற கையையுடையமானே!தாயே! தேனே! அருமையான அமுதே! என்றுபுகழ்ந்து அடிவணங்கவும், அடிபெயா த்துவைக்குந்தோறும எதிரிலேசென்று அடிக்கடி மலரைப்பரபபி அம்மலர் மேல்கால்வருந்தாடாதுசலவாள்.அழகியபாதங்களிற்கிண்கிணியும், மார்பில் இரத்தினமாலைகளுய, அரகுலில மேகலாபரணமும்,அணிந்தபெணகள் தமக் குள்ள அலங்காரத்தைவியாதுபாராப்பதனல்நூறுகோடிமின்னலசேவித்துநிற்க மின்னரசென்னின்று, கொலைத்தொழிலபழகிய வேலையும, யமனையும்வெல் லும் வெல்லுமென்றுசொல்லக் களிக்கும் பார்வையையுடையவளுடைய தன் மையை நாமேசாலவுந் தன்மையுடையதல்ல.ஏனென்றல், மலைகளும்,சுவர் களும், கற்களும், புற்களுமாகிய அசேதனப்பொருள்களும் பார்த்துருக மாத ருக்குள் கனிபோலபவளாகநின்றும், யாவரும்விருமபுகின்ற கணகளினிலக் கணத்தைப்பார்க்கையில் மேலான விழுவையும்,உள்ளுன்றிபபார்த்த அளவில் களிப்பைத்தருவதுமாகி யிருப்பதனல மருந்துபோலபவளவாயிருபபவள் எங் கள் இறையனுகிய சீராமபிரானுக்கு எவ்வகைப்பட்ட பொருளாவளோ! அழ கிய ஆபரணங்களும், காதணிகளுமா, இவைபோலவனவாக உருவங்கொண்டு முன்னுளில்மேகமபோலும் குளிர்ச்சியுள்ள இரண்டுகண்களையுடைய பெண்க ளுடன் பழகியிருந்தபோதிலுமஇப்பதுமைபோலும் திருவுருவமுடையஇறைவி உதயஞ்செய்தலால அழகென்று சிறப்பித்துச் சொலலப்பட்ட அழகானது அழகுபெற்றுக்கொண்டதென்று சொல்லவும, இப்படிப்பட்டதென்றுசொல்லு தற்கருமையாய்அழகமைந்த சீதாதேவியோஇவ்வாறுஅலங்காரங்களுடன்கூடி யிருக்க இரகுநாயகனது பார்வையும் சானகியாரது கணணும்ஒன்றையொன்று பற்றிக்கொள்ள, 'கண்ணெடு கண்ணிணைநோக் கொக்கின்வாய்ச்சொற்கள், என்னபயனுமில' எனத்தேவர்கூறியதை விளக்க, இறைவனும்நோக்கினன், சானகியும் நோக்கினுள். அவ்வாறுநோக்கிய சானகியாரது கூர்மையான வேற் கண்இரண்டும்மிக்கவெற்றியையமைந்த சீராமபிரானது,தாளிலழுந்தின.ஏங்கி கும் வீரகண்டைகட்டிய சீபாதங்களையுடைய இரகுநாயகனது செந்தாமரை மலர்போன்ற கண்களும் திருமகளாகிய சானகியாரது தனபாரத்தில் அழுந் தின. கலந்தபார்வையாகிய கயிற்றினுற்பிணித்து வரிந்துகட்டப்பட்டவில்லை யேந்திய சீராமபிரானது உள்ளம்வள்போலுங் கண்களையுடைய சானகியாரை யும் அப்படியே இவர் எண்ணம் அவளையும் ஒருங்கு இழுப்பதனல் அவர் உள்ளத்தில் இவரும், இவருள்ளத்தில் அவருமாகப்போய்ப்பொருந்தி சானகி

யாரும் இரகுநாயகனும் இரண்டடம்பிற் கோருயிராக விளங்கியிருந்தனர். என் எனின்பெரிதாகியதிருப்பாற்கடலில், கணவளரும்இருவரும்சாபபசயனத்தைத் துறந்துமுறுபடியும்கூடினமையால் இவர்களுக்குணடாகிய தொடர்பைவாயாற் சொல்லவும்வேண்டுமோ.இதுகிடக்க;சானகியாரோ சொல்லிமுடியாத பேரழகினையுடைய இரகுநாயகன்அலாதற்கியலாமையால் அவ்வன்னையோசித்திரப் பாவைபோல் அசைவற்றிருந்தனள். இரகுவீரனெனின் சானகிபிராட்டியி ன்தமனமும், நிறையும், மெய்ந்நலமும பின்னைதொடர்ந்துசெல்ல விசுவா மித்திரமுனிவருடன் மறையச்சென்றனர். அவ்வாறு செலலவே சானகியார் மனமாகியமதங்கொணட யானையினது கற்பென்னுமங்குசம்நிமிர்ந்துவிட்டது. ஆகையினல் பிறைபோலும் நெற்றியையுடைய சானகியாரது பெண்டன்மை யாதுபடுமோ !அவ்வாறு நிறையெனபதுகெடவேநாணம்,மடம,அச்சம, பயிர்ப் பென்னும் மாதாக்குள்ள குணங்களும் நிலைதடுமாறின. தன்னை ஆசையென் பது பொருந்துவதனல் தனது நாவினழையையொத்த இடையானது மெலிவது போல மனமும் தேகமும் மெலியும் சானகியாரது நீர்க்காலொத்தகண்வழியே புகுந்த காமநோய்பாலையடைந்த பினைபோல எங்கும்பரவிற்று. இவ்வாறு காம நோய்மிகுந்து வருந்துகின்ற சானகியார் தாமடைந்த விரகநோயை ஒருவருட னும் சொல்லாமல ஊமைகள்போலத்தமமனத்தில்தாமே நினைத்துக்கொண்டு விசனப்படுவாராயினர். இவ்வாறிருக்கவெந்துவருகின்றகெருப்பில் விறகிட்டது போல மன்மதனும் தன்பாணங்களிலொன்றுகியதாமரைமலை அப்பிராட்டி யின் நெஞ்சிற் பொருந்த எய்வதனல் அவாக்குஆசைமிகுந்தது. நெய்போலும் நெருப்பிற்காய்ச்சாமலும்கூடமையுடையதாகிவிளங்கும்வலம்போன்றகண்ணை யுடைய சானகியார் முடித்திருக்கும கூந்தலும், ஆடையும, நெகிழ நெருப்பி விட்ட பூங்கொடிபோலவாடி மேகலாபரணமும், வளையலும் வருந்தியமனமும், அறிவும், அழகும் இழந்த இவ்வன்னையைத் தோழிமாா தேவர்கள் எல்லாரும் முன் திருப்பாற்கடலைக்கடைந்தகாலத்திலதன்னிடத்திலிருந்த அரும்பொருள் களை எல்லாம்அவர்களுக்குக்கொடுத்துவிட்ட திருப்பாற்கடலைப்போலவறியவ ளாக வருந்தவும், ஆபரணங்களெல்லாம் குழைந்துசிந்தவும், நாணமுதலியன மனத்தினின்றுமொழியவும், நன்மைவிட்டேகவும், தனத்தில மன்மதபாணம் பொருந்தி வேடனுடைய அம்பினல்வருந்தும்பெண்மான்போல உயிர்வருந்திச் சோரவும்கண்டு, அப்பொன்னுபரணம்புனைந்த மயில்போலும் சாயலையுடைய சானகியாரை அருமையாகக்கொண்டுசென்றனர். இவ்வாறுகொண்டுசென்றவர் காதோடும் குழையோடும் போர்செய்யும் சேலபோன்ற கண்களையுடைய சானகியாரைத் தன்பாதமும் கைகளும்போன்ற பசுந்தளிர்களும் மகரந்தப் பொடிக்களும்பொருந்திய குளிர்ந்த நுண்ணிய பனிநீர்த்துளிகள் தெளித்தபூஞ் சேக்கையிற் கிடத்தினர்.

பூனைமலைபோன்றபனிமேகத்திற்குவாடியகொடிகளையுடையதாமரை மலர்பூத்து நிரம்பிய தடாகம்போலவும், நீண்டபம்பிலல் கவ்வப்பட்டுச் சந் திரன்போலவும், அன்றலர்ந்த நறுமணமுள்ள பூஞ்சேக்கையிற்படுத்திருந்து மதுவேமல் சொரியும் மேகத்தினீர்த்துளிபோல் சானகியாரது தனபாரத்தில்

முத்தைப்போன்ற கண்ணீர்த்துளிகள் சிந்தின. வில்லைப்போன்ற புருவத்தின் கடையில் வியர்வைத்துளிகள் கொல்லன் உலைக்களத்தில் உண்டாகும் புகை போல் எழுகின்ற சுவாசத்தினல்வறண்டன. கலக்கமில்லாத கொடிய மன்மத னுடைய வேடன் கையம்பினல் வருந்துகின்ற மயிலையொத்த சானகியாரோ வெதும்புகின்ற மனத்தில்காமானலம்வருத்த வருந்துவதனல் பூம்படுக்கையில் குழைந்துசாய்ந்தனர். புட்பசயனத்தில் பரப்பியமணமுள்ள மலர்கள் உடம் பில்சுறுக்கென்றுதைத்தன ; கலவைச்சந்தனம் பொரியாகப் பொரிந்து கரிந்து போயின ; உடம்பிற் காமானலத்தின்வேகத்தால்ஆபரணங்களிற் கோத்துள்ள தால்கள் அற்றுப்போயின.படுக்கையிற்பரப்பியிருந்ததளிர்களும்கரிந்துபோயின. காதிமாரும் செவிலித்தாயரும் கைத்தாயரும தமக்கையரும் மிக்கதுயரங் கொண்டுவிழுந்தழுதனர். இது யாதுகாரணமோ என அவர் கருத்தறியாதவ ராய் மலரும்சோறும் கலந்த ஆலத்திரீனைச்சுற்றித் திருஷ்டிதோஷத்தையுங் கழித்தனர்.

பின்னும் தோழிமார் சமீபத்தில்வந்து அசைக்கப்படுகின்ற ஆலவட்டக் காற்றனது காமானலத்தை யெழுப்புவதனல ஆபரணங்களும், பூமாலைகளும், கருகுவனவாகவும், தீவனவாகவும், அழல்வனவாகவும தோன்றுவதனல் சானகியாரோ பொற்பதுமையொத்துவிளங்கித்தனக்குள்தானே காகுத்தனது கேசமானது இருளைவகுத்தசோர்பூமாலைக்காடாகுமென்றும்,புயமோவன்மை யானதுரீணையல்லது நீலமலையேயாமென்றும்,இரண்டு கண்களும் செந்தாமன்ர மலரென்றும, இதுவுமன்றி வில்லுடனிழிந்ததோர் கார்மேகமென்றுஞ் சொல் வர் ; அன்றிநெருங்கியென்னுள்ளத்தில் நுழைந்துஅருமையாகியநிறையினையும் பெண்டன்மையினையும் உருக்கி யென்னுயிரொடுங்கவர்ந்துசென்றவனதுமலை போன்ற தோளையணையும் பாக்கியஞ்செய்தது கரும்புவில்லுமல்ல ஆதலால் அவனேமதனென்றுஞ்சொல்லுந்தரமல்லஎன்பர். பெண்டன்மைக்குரியகலமும் யான்பிறப்பெடுத்தபோதே யென்னுடன்பிறந்த நாணமும் எண்ணத்தக்க அறி வும் நான் எங்குங்காணுமலிருக்கின்றேன் ; யான் பார்த்துக்கொண்டிருக்கையி லேயே மண்ணில்நடந்துகால்வருந்தப்போனவன் கண்ணின்வழியாகநுழைந்து போகத்தக்கதொருகள்வனேபோலும் என்பர். இந்திரனீலத்தைப்போன்றஇரு ண்டகுஞ்சியும், பூரணசந்திரன்போன்ற முகமும், முழங்காலவனையும்நீண்ட கைகளும்,அழகிய நீலமலைபோன்றதோளுமேயல்லஇவைகள்உண்பதற்குமுன் என்னுயிரை அவரது புன்சிரிப்பே வவ்விக்கொண்டதென்றல் என்னவென்று சொல்லலாம் என்பர். மேலும்என்னுளத்தில் பொருந்தியவையாவையெனின் பரந்தொளிவிரிந்து என்னுயிரைவவ்வும்அவனுடையமார்பும் தடாகத்திற்பூத்த செந்தாமரை மலர்போன்ற அவனது சீர்பாதங்களுமேயல்ல ; மதச்சுவட்டி னின்றும் மதநீர்பெருக்கும் களிப்பினையுடைய யானைபோல நடந்ததே என் னுளத்திலிருக்கின்றதென்றும், அவனைநினைக்குமிடத்துத்தேவருலகத்திலிருப் பவனுமல்லன், மணமமைந்தசெந்தாமரைமலர்போன்று இமைக்கும் கண்தன் யுடையவன், வரிந்துகட்டியிருக்கின்ற வில்லேந்திய தடக்கையையுடையவன், என்றும் மார்பில் முப்புரிநூலினையுடையவன், அவன் இத்தன்மையன் ஆக

வால் அரசிளங்குமரனேயாகும் அல்லதுவேறல்ல என்பர். என்னுடன்தோன்றியகலனும், நிறையுமாகிய பிணிக்கூப்பட்ட எந்திரம்சுழன்றுதிரியும் என் கன்னித்தன்மையாகிய மதிளையழிக்க அவ்வரசிளங்குமரனைக் கண்ணிற் கண்டறிந்துபின்பு என்னுயிரிழக்கவுமாகுமோ எனவும், இவ்வகையானசொற்களின் இத்தன்மையாகப்பேசுவதன்றி அவ்வரசிளங்குமரன் எதிரில்வந்து நிற்கின்றான் என்றுஞ்சொல்லுவர், மீட்டும்நீங்கினனென்பர், மிக்ககாமவேட்கையால்இப்படியொருவகையேயல்ல பலவகையாகமனங்குழைந்து அன்னம்போலு மெல்லிய நடையையுடைய சானகியானை வருத்தும் காமத்தீதன்னையுஞ் சுடுமென்று அதைத்தரிக்காதவன்போலத் தன்கைகளை ஓடுக்கியோடிச்சென்று பழமையாகியவெவ்விய கிரணமுள்ள சூரியன் மேற்கடலில் அஸ்தமித்தான்.

மலர்ந்த பூவிற்படிந்துவரும் மந்தானிலமாகிய வீசுகின்ற பாசக்கயிறும், தீயினிறத்தையுடைய செக்காவானமும் இருளுங்காட்டலால் அருமையான சானகியாருக்கு அந்திமாலையாகிய கருநிறமும்செம்பட்டமயிருமுடைய யமன் தோன்றி மேலேயொலிக்கின்ற பறவைகளாகிய பறையும், சமுத்திரமாகிய சிலம்பும், உதிரமாகிய செக்கர்வானமும், பாதகவிருள்போன்ற சட்டையும் பற்றியிருத்தலால் பூதம்போலவும் தோன்றியது. குளங்களாகிய நெருப்பின் மூழ்கியும்,வாசனையுள்ள மலராகிய விஷத்தைப்பூசியும்,உலவும்தென்றலானது மன்மதனேவிய பஞ்சபாணத்தாலாகிய புண்ணில்நுழைவதனல் வருந்துகின்ற உணர்ச்சியும்,நன்னலமும் உருகிச்சோர்பவராகியசானகியாருயிருண்ண, அந்திமாலையையுடைய ஆகாயத்தினைப்பார்த்து இதுவோ யமனதுவடிவமென்றார். பின்புகடலோ மழையோ பெரிதாகியநீலமலையோ காயாமலரோ நீலோற்பல மலரோகுவளைப்பூவோ கருநெய்தற்பூவோ இவற்றில் துன்பமிகுகின்ற மாதர் உயிரையுண்பதுயாதோவென்று தளாகின்ற சீதையின் எதிரில் பூமட்டலமைந்த மலர்மாலையணிந்த சிராமபிரானது கரியமேனிபோலும், அந்திமாலைவந்தது. அதைப்பார்த்து ஆகாசமாகிய கருநிறமும்,வான்மீனுகிய பற்களும்,கூதிர்க்காற்றுகிபஉயிர்ப்பும்,செக்கர்வானமாகிய படமுமுடைய அந்திமாலையாகிய பாம்பேயோதுகாரணத்தால்நெருங்கிவந்துபாய்கின்றாய்? பஞ்சபாணங்களையுடையமதவேடனே கரசரதூஷகமொழிந்தானல்லன்,எனக்கோ உயிரொன்றல்லது இரண்டில்லை, நான் எப்படியாயினும் பிழைக்கவிருக்க நீ இப்பழிபூண்பதனல் உனக்கும்எனக்கும் எவ்வாறேனும்பகையென்பதுண்டோ?இல்லையென்றுஞ்சொல்வர்;பின்னும்ஆலவிடமுலகிற்பரந்ததோ!கடலெங்கும்வியாபித்ததோ அவனதுநிறத்தையாவரும்நினைப்பதனல்அதுஇவ்வகையாய்எங்கும்நிரம்பியதோகூற்றுவனதுமேனியைமையிற்கூட்டிக்குழைத்துவானின்மேலும்நிலத்தின்மேலும் மெழுக்கப்பட்டதோ! துன்பத்தை விளைவிக்கும்இருளாக எங்கும்விளைந்தது; மேலும்வெளியே நின்றவரும்போய்மறைந்தார். அவ்வாறு அவர்போவதைத் தடுக்கவொருவனையுங்காணுதிருக்கின்றேன்பெண்பாலோமிகவும்எளியவள்என்று இரங்காமல் அர்த்தயாமத்திருளில் ஒளித்துக்கொண்டிருந்து புட்பபாணங்களோயெய்யும் மன்மதன் உனக்கிந்த மாயரூபத்தாலே? நான்வெகுகாலஞ்செய்ததீவினையே அன்றி லுருவம் எடுத்துவந்தாயோ! என்று இவ்வாறு பலபலவகை

யாகச் சானகியார் எண்ணியெண்ணி வருந்தியதுகண்டு அப்பெரியமாளிகையில் சந்திரகாந்தக்கல்லிறைற் சமைக்கப்பட்ட மேடையிலுள்ள மிக்கவொளியுள்ள நெய்விளக்குகள் மிகுந்த வெப்பமுள்ளனவென்று அவற்றை யெடுத்துவிட்டுத் தோழிமார் தாண்டாமணிவிளக்கிட்டுப் பகல்போலவிளங்கச்செய்தனர். அப் போது மந்தரகிரியை மத்தாகநாட்டி அதிற்பிணித்த வாசுகியென்னும் பாம் பாகிய மணித்தாம்பினுல பரந்தீர்த்துளியுடன் சிந்தியமணிகள் ஆகாயத்தில் பிரகாசிக்கின்ற விண்மீனினும்பிரகாசிக்க, தேவர்கள்யாவரும் தாங்கள் அழுத் பானஞ்செய்யத் திருப்பாற்கடலை மதித்தகாலத்தில் அமுதநிறைந்த பொற் கலசம் மேலேவந்தெழுந்ததென்றுசொல்லக்கடவினிடத்து வெண்ணிறமுள்ள சந்திரோதயமாயிற்று. அது எப்படியிருந்ததென்றால், முன்னளில் ஆலடை கிடந்து பாருநீரும்பசித்துண்ட பகவானதுராபியாகியகடல்வண்டுபோலும் பிர மன் நான்மறைபாடவும்மலர்ந்தது. அதைக்கண்டு அலையுடன்தோன்றிய உவர் நீர்க்கடல் தானும்அப்பெருமாள்போல் கருநிறம் பெற்றுள்ளது ஆகையால் சந்திரனுகிய வெண்டாமரைமலரைப் பூத்ததென்றுசொல்லக்கிடந்தது. டுள் ளிக்குறியிட்டதுபோல பிரகாசமுள்ள விண்மீனுய் ஆகாயத்தில் விளங்கும் உடுக்களிரவினும்சிறந்த இருட்கூட்டத்தையுண்டுமிழ்ந்தநிலாக்கற்றை சானகி யாருக்கு யாதாமோ! கிழக்கின்கண் வெள்ளிக்குமபத்தில்வைத்த கழுகின் இளம்பாளைபோல அச்சுதநிரிகை பரவியது ; இப்படிசந்திரோதயம்மாகவே மண முள்ள தாமரைமலரைவிரும்பித் தன்னிடத்தில் வந்திருக்கும்திருமடந்தையும் வண்டினமும் இரியல்போக ஓடுங்கிப் பொலிவழிந்திருந்தது. செவ்வல்லிமலர் ஆக்கினைசக்கரத்தை யுருட்டி ஒப்பற்றசெங்கோல்செலுத்திவரும் நெடுமுடிமன் னவன் உலகையாண்டிருந்துநீங்கக்குறும்பொறைகாடன்தலையெடுத்ததுபோல விளங்கிற்று. அழகிய மாலைக்காலமாகிய கையைப்பரப்பி உலகத்தைவளைத்து கொண்ட இருளைத்திசைகுக்கும்படி குளிர்ந்தசந்திரோதயகாலத்தில் தோன்றிய நிலாக்கற்றைவிண்ணுமண்ணுமெட்டுத்திக்கும் ஆகியஇவைகளனைத்தையும் விழுங்கிக்கொண்டு எங்கும்படர்ந்திருபபது நீர்வளமுள்ள வயல்சூழ்ந்த வெண் ணெய் கல்லூர்ச்சடையப்பமுதலியார் புகழ்போலத்தோன்றியது. இப்படி சந்திரகிரணம்பரந்தது எப்படியிருந்தது என்றால் நீருள்ளதாகியகடலில்முளைத் தெழுந்த வெண்டிங்களென்னும் விசுவகர்மாமேலே தன் கிரணங்களாகிய கைகளை யுயரப்பரப்பி மிக்க வெண்ணிலவாகிய சுதையால் உலகத்தைக் காக் குந்தாழில்பூண்ட பகவானதுகவுத்துவமணிந்த உந்திக்கமலத்தில் உண்டான காளத்தில் முன்னுள்தோன்றிய பிரமாண்டம் பழையதென்று புதுக்குவான் போலவிளங்கினன் ; ஓங்கிய இருளாய்ப்பரந்து உலகத்தையெல்லாம் விழுங்கிக் கொண்டு மேலு மேலு மதிகப்படும் கருநிறங்கொண்ட நெருப்பில்தோன்றிய வெண்ணிறங்கொண்ட நெருப்பே! நீங்காதிருக்கும் மாயையுடைய அவருக் கிறத்திலுலே சமானமாகாமையால் புறம்போய்சென்று வருந்திக்கொண்டேயிருந்து நின்ற அசேதனமான கடலுலகுக்கும் எனக்கும் தீராப்பகையாகிவினைந்ததின் றேயே! நீயோ கடலில்உதயஞ்செய்தனை ; அப்படியிருந்தும் நீ கொடுமையில்லை, அழுதத்திலேனும் உடன்பிறந்தனை! என்னைப்போலும்வெண்பிறப்பினையுடைய

மடவானையெல்லாம் வருந்தமாட்டா யென்றிருந்தேன்; இப்போதுபார்த்தால் விஷந்தோய்ந்த வந்ததுபோலும் தோன்றுகின்றது. இப்படியல்லாமல் முன் சொல்லியதுபோல வந்தாயென்றால் என்னைச்சுடுவையோ! என்றுசொல்லிக் கொண்டே மேல்நெருங்கியெழுகின்ற வெள்ளியசந்திரிகையின்கதிர்கள் மோது கின்றசும்மட்டிபோலமெலவிபழுலைகள்மேற்படவேபெண்ணன்னம்தீயிற்புரண் டதுபோலப் புட்பசயனத்திற் புரண்டுபுரண்டுவருந்தி, சிறிதும் இடைவிடாது ஏங்கும்பரந்திருக்கின்ற சந்திரிகை தன்தனத்தின்மேல பின்னும் விசுதலால் உடல்வெந்து கரிந்து களாந்து அழியற்றமரமபோல்சாய்ந்து இராக்காலத்தில் தாமரைகள் எவ்வாறுவாட்டமடையுமோ அவ்வாறு வாட்டமடைந்தாள். இவ் வாறு வருந்துவதைக்கண்ட பாங்கிமாகள் மிக்கவாசனையுள்ள கூட்டுவர்க்க முள்ள சந்தனச்சாந்தைக் குழம்பாக்கி வாரிவாரி யிறைக்குந்தோறும் வெதும்பி யும், ஆலவட்டத்தால்வீசப் புழுங்கியும் வருந்தமடைந்தாள். உலகத்தில் சர் வத்திரசாதாரணமாய்ச் சொல்லுவதுபோல ஆசைநோய்க்குமருந்துமுண்டோ ஆதலால் இவைகள் சயித்தியோபசாரஞ் செய்யுமென்று பாங்கிமார் எண்ணிச் செய்தால் அதுசானகியாருக்குத் துன்பத்தையேவிளைத்தன. பின்னும் சானகி யார் படுந்துயரத்தைத் தாயினுமிகப்பரிவுடைய பாங்கிமாகள் அவருடைய மேனியின்கணுண்டான விரகத்தீயால புட்பசயனம் வெந்து கரிந்து பொரிந்து போவதனால் இரண்டாயிரந்தரம் மீளவும் மலாகளையும் பரப்பிக்கொண்டே யிருந்தார்கள். கன்னிகாமாடத்தில் சானகியார இவ்வாறு விரகவேதனை யனுப விக்துக்கொண்டிருக்க, அவளது மின்னலைப்போன்ற திருமேனியைக்கண்டும் விசுவாமித்திரமுனிவர பின்னை அவரது நிழலைப்போலத் தொடர்ந்து தம்பி யுடன் சென்ற சிராமபிரானுக்கு அடுத்தனை இனிச்சொலலுகின்றேன்.

சிராமபிரான் முனிவருடன் தம்பிதொடர்ந்துவரச் சென்றனர். அவ் வாறுசென்று சனகராசனக்கணடு அவ்வரசன் மனக்களிப்புடன் எதிர்கொண் டழைக்கப்போய்ப் போகபூமியிலுள்ள பொன்னகரோயென்று எடுத்துச்சொல் லும் ஒருதிருமாளிகையில் தங்கினர். அவர்கள்தங்கிய காலத்தில் தவமென்ப தனைத்தும் ஒருவடிவங்கொண்டதுபோலக் குற்றமற்ற பேராற்றலையுடைய சிராமபிரானது, பாததாமரைகளால சல்லுருவம்நீங்கி முன்னையுருவம்பெற்ற அகலிகையின் அரும்பேறுகிய புத்திரனென்று யாவராலுஞ் சொல்லப்படும் சதானந்தமுனிவர்எழுந்தருளினர். அவ்வாறுஎழுந்தருளியசதானந்தமுனிவரை ஸ்ரீரகுகுலோத்தமன் மனமாரவணங்கிநிற்க, அதைக்கண்ட அம்முனிவன் அவரை ஆசீர்வதித்துப் பின்பு விசுவாமித்திர முனிவரைப்பார்த்து நீர் எழுந் தருளுவதற்கு இச்சனகராசன் அரசாளும் மிதிலைநாடு என்னதவஞ்செய்தது என்றுதுதித்தார். அதைக்கண்ட விசுவாமித்திரமுனிவர் தாமரைமலரில்வசிக் கும்பிரமனையேயொத்த சதானந்தமுனிவரே! இங்குநிற்கின்றவள்ளற்றன்மை யுடையும் இரகுநாயகனை இடிபோலுங் குரலையுடைய தாடகை யென் னும் கொடியபாவியினது உடலையும், இவனைத்துணையாகப்பெற்ற எனது யாகத்தையும், உன்னையருமையாகப்பெற்ற அகலிகையன்னையினதுசாபத்தை யுந் தீர்த்தருளினனென்று சொல்லியருளச் சதானந்தமுனிவரும் உமது

பெருங்கருணையைப் பூரணமாகப் பெற்றிருக்கின்ற இச்செயலிரருக்கு உலகத்தில் ஆகாதகாரியமென்பதும் ஒன்றுண்டோ? என்றுசொல்லிவிட்டுப்பின் னும் காயாமலரும், இந்திரநீலரத்தினமும், கடலும், மேகபடலமும், நீலோற் பலமலரும் காமே சாதிரியத்தை யளாவும் திருமேனியையுடைய தாசரதி யைத் திருமுகநோக்கி, நறுமலரையணிந்த இரகுநாயகனே! நானுனக்குத் தெரிவிப்பதைக்கேள். இங்கே எழுந்தருளியிருக்கின்ற விசுவாமித்திரமுனிவர் கோசிகனென்னும் பெயருள்ள அரசர்பெருமானுய் மகோதயமென்னும் நகரை யாறிலொரு கடன்மைகொண்டு அரசாண்டுவருநாளில் ஒருநாள் வேட்டை யாட்கா காட்டிற்சென்றார். அவர்வேட்டையாடிக் காட்டுமிருகங்களை யெல் லாம் தனையில் விழச்செய்து பிரமருஷியென்று யாவராலுஞ் சொலலப்படும் பெருந்தவத்தையுடைய வசிட்டமுனிவரது ஆச்சிரமத்தைச்சேர்ந்தது கண்டு கற்பிற்குருவமாகிய அருந்ததி கணவராகிய வசிட்டமுனிவா அரசனை உபசரி த்து இருந்துபோமென்றுவினவ, கோசிகராசனும் வசிட்டமுனிவருடைய கருத்திறகிணசந்து நிற்க, வசிட்டமுனிவர் அரசனைநோக்கி நீர் வெகுதூரஞ் சென்று உடம்புமெலிந்து இருக்கின்றீர். உமக்கும் உமது சேனைக்கும இப் போதே விருந்துசமைக்கின்றேனென்று, 'ஆவிற்கருமுனியா' எனச்சிறப்பித் துச்சொல்லபபட்ட காமதேனுவைநோக்கி இவ்வரசனுக்கும், இவ்வரசனது சேனைக்கும் விருந்தமைக்கவேண்டுமென்று கட்டளையிடவே, அக்காமதேனு வும் அன்று திருபாற்கடலிலேதான்றிய அமிர்தமேயென்று சொல்லுமபடி கார்த்தல், புளித்தல், கைத்தல், உவர்த்தல், துவர்த்தல், தித்தித்தல் என்னும் அறுவகையுண்டியை அரசனே நீயுன்சேனையோடும உண்ணக்கடவாயென்று சொல்லி அவர்கள் உணடு பசிதீர்ந்தபின்பு புட்பசந்தனமுதலியவை பரிமாறப் பெற்று வேட்டையாடியதனல் உண்டான அயர்ச்சிநீங்கியகோசிகராசன் ஆராய் ந்துபார்த்து இருடிகளிற்சிறந்தவரென்றெணணப்படும் வசிட்டமுனிவனைநோக் கிப் பெருந்தவத்தையுடையமாதவனே! நீஇருந்தஇடத்திலேயிருந்துகொண்டு என்னுடன்வந்த இரதகசதுரகபதாதிகளாகிய சாலவகைப்படைகட்கும் எனக் கும் வேண்டியமட்டும் உணடு பசிதீரத்தேவர்களாலும் பெறுதற்கரிதாகிய அமிர்தமும் கைப்பவிருந்துதவினீர்! இதனல் குற்றமற்றகுணத்தால் உயர்ந்த தன்றி நான்கு வேதங்களையும் ஓதியுணாந்து அவற்றை வரம்புகண்டாரும் மேன்மையான எல்லாப்பொருள்களும் அரசர்களுக்கேயுரியனவென்றுசொல் லுவர். மாதவஞ்செய்யும் உமக்கோ இக்காமதேனுவாகிய பசு தகுதியுடைய தன்று. இத்தெய்வப்பசுவை எனக்கே கொடுக்கவேண்டுமென்று வருந்திக் கேட்க, அதற்கு ஒன்றுஞ்சொல்லாமல் மவுனமாயிருந்து பின்பு நாமே மரவுரி தரித்துக்காட்டில் தவஞ்செய்கின்றவன், யானே கொடுக்கமாட்டேனென்று சொல்லுதற்குடன்படமாட்டேன், கொல்ல னுலகக்களத்தில் ஆராவப்பட்ட கூரியவேலையுடைய அரசனே! இத்தெய்வப்பசு தானேவருமாயினும், அல்லது நீயே வலிதிற் கொண்டுபோக எண்ணங்கொண் டிருந்தாலும் தடையில்லாமற் கொண்டுபோகலாமென்று சொல்லியருளினர். அதைக்கேட்ட விசுவாமித்திர ராஜர் கோசிகராசனும்சேனைசூழ்ந்தணைத்துச்செய்வேனென்று விருப்பத்துடன்

சென்று அக்காமதேனுவைப்பிணித்துக்கட்டிப் புறப்படும்போது அன அக்கட்டுகளையெல்லாம் அறுத்துக்கொண்டு அழகியதோளையுடைபகோசிகராசனுக்கு என்னைக்கொடுத்துவிட்டாயோ உள்ளபடிசொல்லென்று வேதங்களை முற்றும் வரம்புகண்ட முனிவர்பெருமானகிய வசிஷ்டனைநோக்கிக் கேட்க, அவ்வசிட்ட முனிவருங்காமதேனுவை உன்னை அரசனுக்குக்கொடுத்தேனில்லை, வெண்கொற்றக்குடையையுடைய அரசனை உன்னைபபிணித்துக் கட்டிக்கொண்டு போகவிருக்கின்றான், இதுதான்நடந்தசெய்தியென்றுசொலல உடனேகாமதேனுவும் மிக்ககோபாவேசமாய் ஆரவாரித்துஇரணடோளியையுடையகோசிகராசனது சேனையனைத்தும ஒருநொடிப்போதில அதமாக்குகின்றேன் பாரென்றுசொல்லித்தன்உடம்பின்மயிரைச்சிலிர்த்தது. அப்படிசிலிர்த்தமாத்திரத்தில அத்தெய்வச்சுரபியினது உடமபினின்றும பபபரா, மறவா, சினா, சோனைகர்முதலிய பல கோடிய மிலேச்சர்கூட்டமாகத்தோன்றி கையில் முப்படைத்திரண்டு ஆயுதமுடையாராய் வெளிப்பட்டு அரசர்பிரானுடைய வலிமையுள்ள நால்வகைச்சேனையனைத்தையும நாசப்படுத்தவே, அதைக்கண்டு கோசிகமகாராசன் புத்திரர்கள்மிக்கசோபாவேசமாய்இதுகாமதேனுவின்வலலமையேயல்ல! இதுவோ ஒருபசு! இதற்கு இவ்வளவு வல்லமையேது? இவ்வளவும் வசிஷ்டமுனிவருடைய வஞ்சனையேபலலது வேறலல. அவாதலையையரிந்துவிடுவதே தகுதியானகாரியமெனறு துணிந்து எழுந்து அம்முனிவருடன் எதிர்த்தனர். 'குணமென்னுங்குன்றேறி நின்றாரெவருளர் - கணமையுங் காத்தலரிது'. எனத் தேவரும் பணிந்தமைபோல அமமுனிவருக்கு அக்கணமே தோன்றிய சினத்தீயால் அவரையெதிர்த்த அக் கோசிகராசனுடைய மக்களனைவரும் பஞ்சப்பொதியிற்பட்ட சுடுகனலி போலும சுருணடு கரிந்து பொரிந்து மாய்ந்து போயினர்.

இவ்வாறு தமது மக்கள் தூற்றுவரும் மாண்டுபோயினமைகண்டு கோசிகராசன் நெய்சொரிந்த நெருப்பேபோலக்கொதித்து நெடுங்கொடிகள் கட்டியிருக்கும்தனைச்செலுத்திக்கையினின்றும் இடையறாதுபொழியும் அம்பினலேதமதுவில்லவளைத்துளய்யவே வசிஷ்டமுனிவரும் தமதுகையிற்பிடித்திருந்த தண்டத்தைவிடுத்து அரசன்விடும் அஸ்திரசஸ்திரங்களைக் கவளீகரஞ் செய்பென்று கட்டளையிட்டருளினர். கோசிகராசனோ தான் நன்றுகப்பயின்ற அஸ்திர சஸ்திரங்களையெல்லாம உகாந்தகாலத்து மழைபோல்சொரிய அத்தனையும் பாலகிலத்தில்பெய்த கடுமடைபலபோல கரந்துகொண்டு மேலாக விளங்கக்கண்டு மிகச் சிந்தைகொதது மேருமலையைத் திரிபுரசங்காரஞ்செய்ய வனைத்தருளிய டரமசிவனை வணங்கி நிற்க, அவ்விறைவன் ஒரு தெய்வப்படையளித்துப்போயினன். அப்படையினையும கோசிகராசன் அவ்வசிஷ்டமுனிவர் கைதண்டின்மேற் பிரயோகஞ்செய்ய அது உலகத்தையெல்லாம் பஸ்மீகரப்படுத்திவருவதுகண்டு தேவர்களெல்லாம் நடுநடுங்கினர். வசிஷ்டமுனிவர் அப்படைக்கெதிர்வந்து தன்னைக் கிட்டிய அத்தெய்வப் படையை விழுங்கிவிட்டு மிகப்பொலிவுபெற்றுவினங்கினர்.. அவரது பொலிவுபெற்ற திருமேனியெங்கும் தோற்படையானது வலிகெட்டு நீப்பொறிசிதறுவதைக் கோசிகராசன்கண்டு

உலகத்தின்கண் சகலகலா பாரங்கதரான முனிவர்களுக், கல்லாமல் தின் ணியதிறலுடைய பேராற்றலும் பிரமதேசும்பிறர்க்குண்டென்பதுதிறந்தே யன்று! உலகமுழுதுமொரு வெண்கொற்றக்குடைநிழலில் ஆளநஞ்செல்வச் செருக்கும் அவர்கள் தவப்பெருக்கின்முன் வெயின்முன் பனிபோலாமென மதித்தறிந்து தவமடிவதே நமக்குநலமென்று துணிந்து இந்திரதிசையை நோக்கிச்சென்றனன். அரசர்பெருமானகியகோசிகரும்வசிஷ்டமுனிவர்செய்து காட்டிய தவச்செருக்கையே மிகமதித்து மிக்கதவஞ்செய்யும் சங்கற்பமேற் கொண்டு தவஞ்செய்வதை இந்திரன்கண்டு உள்ளத்தில் அச்சமுடையானய்த் தன்னிடத்திலுள்ள அரமகளிருள் திலோத்தமையைநாடி அவர் தவத்தை யழித்துவரத் தூண்டினன். அத்திலோத்தமையின் அழகியவடிவைக்கண்டதை னல் மன்மதபாணம தனமேற்பாயக்கண்டு தன்னறிவுகலங்கிக் காமக்கடலுள் அழுந்திக் கோசிகராசன் வெகுகாலம் தொலைத்துத்தெளியுடையாராய் ஆராய்ந்த கல்ல நூற்பொருளைத் தஞ்சிதையிற்றெளிந்து ஆலவிடமபோலக் கோப கைகாகைத்தருளி இது விணனுலகமுழுது மாளும்இந்திரன்செய்தவஞ்சனைச் செய்கையேயென்று துணிந்து கண்மலாசிவக்கவும்,மனங்கன்றவும், கோபமேற் கொண்டு நீபோய் பூலோகத்துப் பெண்ணுதியெனச்சபித்து ஏவி விளைந்து சென்று திக்குப்பாலகருள் தண்டிறலுடைய எமதிசையைச்சேர்ந்து செய் தற்கரிய தவஞ்செய்யுங்காலத்தில் உன்மரபின்கண் அயோத்தியா நகரத்தை யரசாண்டுவந்த திரிசங்கு என்னும் அரசனொருவனுண்டு; அவன் உங்கள் குல குருவாகிய வசிஷ்டமுனிவனைப்பணிந்துசகத்தொடுஞ்சுவர்க்கலோகமுடைய வேண்டினன். அதற்கு அம்முனிவர் உனக்குவயையறுத்தாளாகிய ஆயுண் முடிவில் சுவர்க்கலோகங் கிடைக்குமென்றனர். திரிசங்குமகாராசன் ஐயனே! எனக்குச்சுவர்க்கலோகம் தேகநீக்கத்திற் கிட்டுமாயின் இப்பஞ்சாசற்கோடி பூமண்டலத்தில் எவராயினும் என் மனத்திற்கினையந்தவனைக்குறித்து நாடிஅச் சுவர்க்கலோகம்பெறும்படி யாகத்தைச்செய்வேனென்றுசொல்லச் சினத்தை யுங் கொடுமையையும் வலிமையையுமுடைய அரசனே முன்னை ஒரு குருவை விட்டு வேறொருகுருவை நாடுவதாகச்சொல்லினின்முயாகையால் நீபுலையனதி யெனச்சபித்தனர். இரகுகுலோத்தமனே பிரமகுமாரராகிய வசிஷ்டமுனி வர்சாபமானது உனது அமபினுங்கொடிய வேகமாய்ப்பற்ற அவ்வரசர்பெரு மானுக்கு ஆயிரங்கதிரையுடைய சூரியனும் நாணமடையும் உடலொளிகருகி யும் அன்றலர்ந்த செந்தாமரையினும் பொலிவையுடைய முகம்புலர்ந்தும் உல கிம்பலரும் அருவருக்கத்தக்க நீச. வுருவம்வந்துநேர்ந்தது. தான் அணிந்த மணிமுடியும், ஆபரணங்களும் இரும்பையொக்கவும்,ஆடையும்,முப்புரிநூலும் தோலையொத்திருக்கவும்,அழுக்கொடு உடல்கறுத்து மன்னன்நிறம் ஒழியவும், ஊரிலுள்ளார் சீ சீ யென்று அருவருக்கவும் மனந்திகைத்துக் காடேகதியாகச் சேர்ந்து ஒருநாள் தெய்வகதியாக விசுவாமித்திரர் தவஞ்செய்யும் இடத்தை யடைந்தான், அவன் அவ்வாறடையமேவ அவ்விசுவாமித்திரர் நீசனுகிய நீயார்? இவ்விடத்தில் யாதுநிகழ்ந்தது? என்றுகேட்க அதைக்கேட்டுத் திரிசங்குதன் விருத்தாந்தமுழுதும் ஒன்றுமொளியாம லெடுத்துச் சொல்லமேல், உனக்கும்

இத்தண்மைமேர்ந்ததோ என்று சிரித்து நான்பெருவேள்விசெய்து மீயெண் டியபடியே சுவர்க்கலோகந்தருவேனென்றுசொல்லி அந்தயாகத்தைதன்னிறவேற் றும்படி பலமுனிவர்களும் வந்துசேர, அதற்கு வசிஷ்டமுனிவர் உலகத்தில் அரசனனவன் யாகத்திற்குரியனகளும், புலையன் அதற்குரிய விதிகளுக்குரிய னகளும் இதுவனைபிலும் கேட்டறியோம் ஆகலால், நாங்கள் அதற்குடன் படமாட்டோமென்றார்கள். விசுவாமித்திரர் அதைக்கேட்டு மிகவுங்கோபித்து நீங்கள் என்சொலலைத் தடுத்தமையால வனசரராகப் போகக்கடவீரென்று சொன்ன அளவிலே அவர்களெலலாரும வேடர்களாகிக் காடுகள்தோறுந் திரி வாராயினர். பின்பு விசுவாமித்திரர் அந்தயாகத்தைத் தானேநின்று நிறை வேற்றித் தேவர்களைவரக் கூவியழைத்தார். தேவர்களோ இவருடைய தபோ மகிமையால்வந்து அரசனையிருந்து புலையனைச் சாபமடைந்தவனுக்கு என்ன காரணமாய் யாகஞ்செய்ய எங்களைவருவிப்பதென்று சிந்தித்து இது நன்று யிருக்கின்றது! என்று நகைத்தனர்.

விசுவாமித்திரமுனிவரும் யானைப்படையையுடையதிரிசங்குமகாராசனை நீசுவர்க்கம் புகக்கடவாயெனக் கட்டளையிட்டனர். அதுகண்டு தேவர்கள் இகழ்ந்தமையால் அவர்களுடைய பெருமையுள்ள பதவிகள் முதலாகத்துறக்க முதலியவற்றையும் வேறு படைக்கின்றேனென்றும், சூரியன், சந்திரன், மற் றையநிரகங்கள், நட்சத்திரராசிகள் மாட்சிமைப்பட்டு ஒளிகெடாமல் தெற்கு வடக்காக வருகவென்றும சகலசேதனசேதனப் பிரபஞ்சங்களையும் படைக் கின்றேனென்றும் எணணியகாலத்தில் தோன்றுகின்ற கற்பகநறுமலர்மாலை யணிந்த இந்திரனும் நான்குமுகங்களையுடைய பிரமனும், நீலகண்டத்தை யுடைய உருத்திரனும்,மற்றைக்கடவுளருமெல்லாருமொருங்குகூடிநீர்பொறுத் தருளவேண்டுகிறோம்; உமமிடத்தில் அடைக்கலமடைந்த திரிசங்குவைப் பாதுகாக்கும்அறத்தின்செய்கையேமிகநன்று; அவன் தாராகுணத்தோடுசேரக் கடவது, இன்றுமுதல் நீர ராஜரிருஷியாவீர, உமமால பேதிக்கப்பட்ட ஐந்து நாண்மீன்களும் தென்றிசைக்குவந்து உன்னிருக்கைக்கு ஒளியாய் இருக்கக்க டவதென்றுசொல்லிப்போனபின்பு,விசுவாமித்திரமுனிவரும்வருணனதுதிசை யாகிய மேற்றிசையையடைந்து தவஞ்செய்துவந்தார். அவர மேற்றிசையில் வந்து தவஞ்செய்கையில் குதையையுடைய கட்டியவிலலும வாளும் தாங்கிய சேனையையுடைய அம்பரீஷமகாராசன் அழுதம்போலும் மொழியையுடையா னையும் தன்னைப்போலும் மன்னுயிர் புரப்பவனையும் அரசாண்டு புருஷமேதஞ் செய்ய வெண்ணங்கொண்டு அதற்கு ஓர் சிறுவனைவேண்டிப் பசும்பொற்றிர னைத் தன்தோர்மேற்கொண்டு உலகமுழுதுந்திரிந்தான். இவ்வாறு திரியுங்காலத் தில் பெற்றபிள்ளையைக் கொலைசெய்யக் கொடுப்பாரில்லாமையால் மனம் வருந்திவாடுகையில் தெய்வகதியாய் மிக்கதவத்தையுடைய இருசிகனென்னும் முனிவர்பெருமானிருக்கும் அரும்புகின்ற மலர்களையுடையகாட்டைச்சேர்ந்து கேட்க அதற்கிசைந்து தம்மக்களில் இளையானைத்தாய் எனக்குயாரென்றான், தந்தை மூத்தவனை எனக்குரியானென்றான்.மற்றையமகன் அவ்வரசனைப்பார்; தனனென்னையன்பாகப்பெற்ற மாதாபிதாக்கள் 'வறுமையென்னுந்தொல்லிடம்

பிழைத்தும்' என்றபடி வறுமையான் மிகவாட்டமடைந்தனர். அவ்வறுமைத் துன்பநீங்கவும் அவர்கள் அவாக்கெடவழ்செம்பொற்குவியலைக்கொடுத்து என் னோப்புருடமேதஞ்செய்பக்கொண்டுபோமெனத் தந்தைதாயரைவணங்கி அர சனுடைய தேரிலேறிக்கொண்டு ஆயிரங்கதிர்ப் பரிதியங்கடவுள் உச்சியில்வர அரசனெடு நானும் அக்காட்டைவிட்டுச் செய்பமேவண்டுங் கடன்மைகளெல் லாம்செய்து முடித்து வெகுதூரஞ்சென்று பொறுமையொழிந்த சிந்தையை யுடைய விசுவாமித்திரமுனிவனைக்கண்டு அவருடையபாதங்களை அவ்வீருசில முனிவன் மகன்வணங்கினன்.

தம்மைத்துன்பமிகுதியால்வணங்கிய அச்சிறுவனை விசுவாமித்திரர்கண்டு நீவாட்டத்தொடுமை வணங்கவேண்டியகாரணமென்ன? சொல்லென்றுகேட்க, அச்சிறுவன் அறநூற்பொருளையறிந்த முனிவர்பெருமானே! நானே உமக்கு மூத்தான்மகன், பெற்றோர்பொருளைப பெற்று என்னை அப்பரீஷனுக்குப்புருஷ மேதஞ்செய்யக் கொடுத்துவிட்டனர். இதுதான் நடந்தவாலாறென்றான். இவ் விசுவாமித்திரரும் தன்மைத்துனனும் மூத்தாளுஞ்செய்த முறைமையைக் கண்டு மனம்பதைத்து நீ கலங்கவேண்டாம; நானே உன்னுயிரைக்காப்பேன் என்று உறுதிமொழிசொல்லி, தன்மக்களைநோக்கி அரசனெடுசென்று இப்பணி செய்மினென அவர்கள் அப்பணியை மறுத்துவிட்டனர். தவத்தாற்சிறந்த வசிஷ்டமுனிவர் கோபக்கடுந்தீயால் இறவாத அம்மக்கள் நால்வரும்வேடராக வெனத்தான் சபித்துவிட்டு தன்னெதிரில் பணிவுடனின்ற சிறுவனை நோக்கி நீதுன்பமடையவேண்டாம்! இதோதான் உபதேசிக்கும் இரண்டுமந்திரங்களை யும் பெற்றுக்கொள்ளென்று தன்மூத்தாள்மகனுக்கு உபதேசித்து நீ அரசனெடு அடைந்து வேள்வித்தறியிற்சென்றுசேர்ந்து இம்மந்திரங்களைச்செபஞ்செய்வா யாயின் உந்திவர்தானும், ஊழிமுதல்வனெனிய பரமசிவனும்வருவர். அவ்வேள் வியுமுற்றுப்பெறும், உன்னுயிர்க்கும் ஒருதீங்கில்லாமற்போமென்று சொல்ல அச்சிறுவனும் அவ்வாச்சிரமத்தைவிட்டு அரசனெடுபோனன். இதுகிடக்க;

விசுவாமித்திரமுனிவரும் தாம் வடதிசையைப்படைத்து தமது 'தாமரை மலர்போன்ற கையை நாசிமேல்வைத்து இடகலைபிங்கலையிலடங்க இதயத்தில் எவற்றிற்குமூலமாகிய ஓரெழுத்தினுள் யுன்னிச்செபித்து அங்கிலையில் அணை வறப் பழகாள்சவியாமல் அனிலஞ்சோரா விளக்கேபோலவும், அலையிலாத கடல்போலவும், இருதட்டும் சரிப்படத் துலையொத்த தராசினுனிபோலவும் நிற்கவே, மூலமுகடுவிண்டு தடுக்கப்படாமல் இருட்பிழம்பு தாவிப்போர்த்துக் கொண்டமையால் உலகமுழுதும் நடுங்கின. அப்புகைமூடிக்கொண்டது திரி புராந்தகனெனிய பரமசிவன் யானையையுரித்துப் போர்த்துக்கொண்டதுபோல வும், மேகங்கள் பரந்தெழுந்தாற்போலவும், உலகமுழுதும் மூடிக்கொள்ளவே சூரியனுமொளிமழுங்கினன். திக்குப்பாலகருடைய கண்களும் திக்குயானைக ளுடைய கண்களும் பார்வைமழுங்கின. மின்னுமுழக்கும் அவற்றின்தொகு தியுமுடைய மேகங்கள் நிறைந்த ஆகாயமாகிய வெளியிடமுழுதும் உருவிச் செல்வதனால் உலகிலுள்ள சேதனாசேதனப்பொருள்களும் அஞ்சிப்பயந்தனி

வெவ்வியசூரியனுமீண்டான். தேவாகளும்கடுகடுங்கினர். இவ்வாறுகவேதாமனை மலரிலிருக்கும் பிரமனும், கருடவாகனனுகிய திருமாலும், இடபவாகனத்தை யுடைய உருத்திரமூர்த்தியும், வயிரப்படையையுடைய இந்திரனும், மற்றைத் தேவர்களும் ஒருங்குசேர்ந்து முனிவர்கூட்டத்திற் சிறந்தவராகிய இவ்விசுவா மித்திரனைக்கிட்டி உமக்கொப்பார்கிய முனிவர் யாரிருக்கின்றனர் என்று எடுத் துச்சொன்னர்கள். இதுதான் முன்னைகடந்தவரலாறு; இவனைப்போலும் தவத்திற்சிறந்தார் ஒருவரும் உலகத்திலிலலை. இப்படிப்பட்ட பெருந்தவ னுடைய சகாயம்பெற்றிருக்கின்றீகள். உமக்கரியபொருளொன்று மில்லை யென்று சதானந்தமுனிவாகூறினர. அதுகேட்டு இராமலட்சுமணரிருவரும் தங்களுக்கு விசுவாமித்திரமுனிவருடைய வரலாற்றைச்சொன்ன சதானந்த முனிவனைவணங்க, அவரும் அவ்விருவரையும் ஆசிவதித்துப் பின்பு விசுவா மித்திரமுனிவரிடத்தே விடைபெற்றுத் தமதிருக்கையைச் சென்றடைந்தனர.

இரகுகுலதிலகனை விசுவாமித்திரமுனிவரும் தமபியும் தமக்கினியசய னங்களிலே சென்றடைந்தபினபு இரவும் திங்களும் தன்தனிமையும்சானகி யாரும் ஆகித்தன்னிருக்கையிலிருந்துசொல்கிறார்; மேகத்தினின்றுதோங்கிய மின் னல்இப்படிசகல இலக்கணங்களுமமைந்த பெண்ணுருவம் அடைந்ததுண்டோ என்று ஆராயின் இவ்வகையலலலிவன் றறிமீயன அந்தவடிவந்தையோ அகத் தும் புறத்தும் காணுகிற்கினறேறன். திருமால எழுந்தருளியிருக்கும் திருப் பாற்கடலேபோலப் பிரகாசிக்கின்ற கணவனையுடையாளாயிருக்கின்றஅப்பெண் ஒருபெண்ணுருவத்தையும் நினையாத என் மனத்தாமரையில் வசிக்க இடம் பெற்றுக்கொணடாள். இதென்ன அதிசயம்! எனனிடத்திலே அவள் இரக்க மில்லாதவளாயிருந்தாலும் கான அவளிடத்திலெகொணட தணியாக்காதலா லும் அச்சம்விளைவிக்கும் நோயைத்தரும விடமபோன்ற கண்ணுல என்னை அவள்விழுங்குவதனாலும் உண்மையாகவேகினறும சென்றும் உலகில்வாழ் கின்ற எலலாப்பொருள்களும் அவளுடைய பொனனுருவமாகவே தோன்று கின்றன. பொன்னுபரணமனிந்து பொற்கலசம்போலவிளங்கும் அவளுடைய தனங்கள் எனது பெருமையில்லாத மாபிலே தடவுதலில்லனவாயினும் ஆக ட்டும் ஒளியமைந்த நகையினைப்பெற்றுக் கனிபோலும வாயையுடைய முக மாகியசந்திரனைக்காணக்கூடியதோர் காலமு மினியுணடாகுமோ யான்கணட மின்னுருவமாகிய யமனுக்கு எட்டிவடமாகிய மேகலையணிந்த தேரொன்றும், வானையொத்த கண்களிரண்டும், கதித்தமுலைகளிரண்டும,இதழுக்குள்ளுயர்ந்த முத்தமுறுவலும்உண்டாயிருக்குமெனின்என்னைக்கொலல இத்தனையும்வேண் டுமோ! பொன்மைவடிவங்கொண்ட அப்பெணணை யானென்னுந்தோறும் கரும்புவில்லையுடைய மன்மதன்புட்பபாணத்தால என்னையெய்துதொலப்பு தனல் தின்மையென்று சொல்லப்படுவதுயாரிடத்திலே தானிருக்கும்! என்னுயி ரைக்கொள்ளைகொள்ளக் கோபித்தெழும் பாற்கடற் பள்ளத்தின் பெருக்கினைப் போலும்பரவுகின்றநிலாவோ! அப்பெண்ணை நினைக்குந்தோறும் என்னுடைய உயிரைக்கொள்ளைகொள்ளத்தேடுவதனல் வெள்ளைநிறத்தையுடைய விடமும் அதனுடனிலுண்டோ! இதுவரையிலும் நன்மார்க்கத்திலே சென்ற என்மனம்

னதுதியவழியிற்செல்ல இசைய்யுமோ இசையாதே! இப்போது அப்பெண்ணினி டத்திற்செல்வதற்குக்காரணம் வெல்லப்பாகுபோலும் சொல்லையுடையாளும் பசும்பொன்னுற் செய்யப்பட்ட வள்ளியலை யுடையாளுமாகிய அப்பெண் ஐயப்பாடில்லாமல் கன்னியேயாகுமென்றுஞ் சிந்தித்தான். இவ்வாறு நிகழ்கை யில்நாள்முடிந்தஇரவாகிய அரசனதுகிரணங்களையுடையவெண்கொற்றக்குடை வீழ்ந்தாற்போலவும தன்கணவனுகியசூரியன் கீழ்த்திசையென்னும்பெண்ணை மணஞ்செய்யப் போகின்றானென்னுங் காரணத்தால் வெறுத்த மேற்றிசை பென்னும் பெண்ணினது சுடர்க்கொழுந்துபோன்ற நெற்றியிலணிந்த குற்ற மற்ற சுட்டியானது பேயழிந்தாற்போலவும் சந்திரன்மேற்றிசையில் அஸ்த மானமடைந்தான். சந்திரனுகிய தன்கணவன்பிரிந்துபோகவே அந்தப்பிரிவின் சோகத்தினுல திசைகளாகிய பெண்கள் தமதுநாயகன்பூசிய அலங்காரத்திற் குரிய வெண்சந்தனக்கலவையை நீக்கினதுபோல எங்கும்படர்ந்திருந்தஇலாக் கிரணங்கள் அழிந்தன.

இவ்வாறு இரகுநாயகன் காமானலமாகிய விரகவேதனையால் வருந்து வதைக்கண்டுபிரிவினுலவருந்திய மனத்தில் இருந்தும் துன்பமுடைந்துபோகச் செந்தாமரைமலர்போன்ற முகங்கள்மலரச் சிவந்த கிரணங்களையுடைய சூரி யன் அழுந்திய இருளென்னும் புகர்முகத்தையுடைய யானையினது உரியைப் போர்த்த உதயகிரியென்னும் பரமசிவனுடையநெற்றியினைக்கிழித்தகண்போல உதயமானன். வேகமும் வெற்றியுமுள்ள சப்தாவென்னும் குதிரைகள் தம் முடைய காலிலுள்ள குளம்புகளினுல் மிதிக்கவே உதயகிரியிலுண்டாகிப் படர்ந்த தூசிகளையும்படி அருமறைநான்கினையும் ஐயந்திரிபற அறிந்த அந்த ணர் தமது கையினின்றுமொழுக்குகின்றநீரும், பூவும்மலரும பரவிப்பாய்தலி னுல் அசையாத கெடியமலைகளின் முகடுகளேடாறும் இளங்கதிர்சென்று படிய அம்முகடுகள் சூரியன் திக்குகளைச்சுமக்கின்ற மதயானைகளுக்குச் சிந்தூரம் அப்பியதுபோலச் சிவந்தன. பிரிவதற்குமுன்னே குறித்த தவணையைச்சொ ல்லிப் பாசறையிலும பொருளிடத்திலும் விரும்பிப்போன தம உயிர்போன்ற தலைவர் தேரியலவர அதைக்கண்டு களிப்புமிகுந்து தேமல்படர்ந்து வருத்த நீங்கிய கற்புடைய மாதரைப்போல அழகிய தடாகங்களெல்லாம் தாமரைமல ராகிய முகங்கள் மலர உள்ளே மலர்ந்து பொலிவுற்றிருந்தன. அளவில்லாத வேதங்களினுலே கின்னரா இசைபாடவும், மேலோர் தோத்திரஞ் செய்யவும, தேவர்களும் முனிவர்களும கைகூப்பிவணங்கவும், சமுத்திரமென்னும் முழ வபர ஆகாயமாகிய நாடகசாலையில் நடிக்கும் ஒளியுள்ள சூரியனுகிய பரமசிவ னது பொன்மயமாகிய சடைகள் விரிந்தாற்போல எங்கும் சூரியகிரணம் விள ங்கின. தன்னடியார்கடமுத் தீங்குசெய்வோர்களைக் கொல்லுஞ் சக்கரத்தை நீக்கிக் கோதண்டத்தை யேந்திய மேகம்போலுந் திருமேனியையுடையானும், ஆயிரவாய்ப் பாம்பணையின்மேல் பாற்கடலில் துயிலாமல் துஞ்சக்கடலில் தூங்குகின்றவனுமாகிய பகவான் ஒற்றை யாழியானுகிய சூரியனது இளங்கிர ணங்களாகிய கைகளால் வருடி நித்திரைநீக்க இரவாகிய சமுத்திரக்கணையைக் கண்டான். ஊழிகாலம்போல இரவு தன்னிலையினின்றும்போதலால் நித்திரை

ரீங்கிய பட்டத்துயாஜனபோலெழுந்து அவைவிட்டான முதலியனவைமுடித்துக் கொண்டு விசுவாமித்திரனை வணங்கி தாடியுடனே சனகராசன்யாகசாலைக்கு வந்தான். சனகராசனும் தன் அத்தானிராஜபத்திற்கு வந்திருக்க விசுவாமித்திரரும் தம்பியுடனோடா அம்மைபடத்தில சிராயபிரானு மெழுந்தருளியிருந்தான். இங்ஙகவந்த காளையாபோது நின்னதன்னிருகணைகளாற்பருகி இக்காளையர்கள் யாவா? என்று விசுவாமித்திரனிவனை வணங்கிச் சனகராசன் வின்வ, அதற்கு விசுவாமித்திரரும் இவர்கள் உனக்குரோகதவிருத்தினர், உன் யாகத்தைக்காணவந்தனர், திரியபடபகமென்னும் விலவின்வலியையுங் காண்பர், பெருங்குணத்துத் தயரதன் மக்களாவானெனு அவாபெருமையைச்சொல்வாராயினர்.

மிதிலைக்காடசிப் படலம்
முற்றிற்று,

குலமுறை கிளத்துபடலம்.

---

* சூரியகுலத்தின் முதலரசனுகிய சுவாயம்புவென்னும் மனுச்சக்காவர்த்தியை யறியாதார் பூவுலகத்துணைடோ? பெதபபட்ட வுயிர்களனைத்துமபெரும பசிபடைத்துவருந்தாமல் ஓளியமைமாத தனவரிதுகட்டிய விலவினல் நிலமகள் முலைசுரபடச்சாதித்த பெருந்தன்மையுள்ள பிருது சக்கரவர்த்தியும் இவா குலத்தோரரசனென்றதுணி. பினியால் வருந்தும வினைநீங்க நெடுநாள் தவஞ்செய்வதுமேற்கொணடி மனிகளழுதிய நெடிய முடிமன்னனே! தாமரைமலரிலிருந்தும் பிரமதேவனவழிபட்டு அவனற் பூசிக்கப்படுகின்ற சருப்பப்பரியங்கமுடையஆயிரமாவி யாருடபெருங்கடலே வாமெல்லாங்காண அழகிய அரங்கவிமானத்திதாடிக் கொணாகதஇடசுவாகுவை யறியாதார் அறியாதவனென்றே எணணிவணைடும. மெலும இதிரன தன்னுல வெல்வதற்காரிதாகிய தானவனத்தலைகொய்து சுவாக்கமோகத்தைதத் தரவேணடுமென்று குறைதர அதற்கிசைந்து அவ்வரக்கரை டெதிர அவ்விதிரனை விடையேறுகவர அவ்விடையின முசுப்பினமேல ஆரோகணித்து அவ்வரக்கனைக் கொன்று அவ்விடையின் முசுபபின்மேற்சென்று செயங்கொண்டமையால் ககுசனப்பெயர்கொண்டவனு மிவன்குலத்தோராசனென்றெண்ணுவாய், அவ்வரசன்பின்வந்தானை யித்தனையனென்றென்னுனு மளவிட்டுனைப்பதற்காரிதாகும். கனைதிரை மூப்பினிவைகளால உயிர்கள்கெடாமலபெருங்கடலேண்டமலையால் கடைந்தமுதங்கொடித்தவனு மிவன்குலத்தி னுராசனையாம். மற்றுராசன் புனியும் பசுவும் ஓர்துறையிற்சென்று தெண்ணீரருந்த அரசுபுரிந்தான், அவனு மிவன் மரபேயாம். வேதங்களை கீலபெறச்செய்யும் மணிகள்பதித்தமுடியும் ஆரகேயூரங்களும் பிரகாசிக்கப் பொறையினையுடைய தேவரும் தானவரும் போர்செய்யத்தொடங்கியகாலத்தில் வெற்றியையுடைய அரசர்கள்பணிகின்ற கழலைபணிந்த சனகராசனே! விற்பிடித்த தருமதேவதையேபோலத் திரிந்து

அமராபதிகாத்துத் தேவர்கள் வெற்றிபெறச்செய்தவனும் இவன் மரபிற்பிறந்த அரசனேயாம். உயிர்க்குயிராய்நின்று இருகிலங்காத்தவனென்று பொன்னுற் செய்யப்பட்ட கழலையணிந்த அரசர்களை யாமோடுகழ்வது, ஒலிசெய்கின்ற வேற்படையையுடைய சனகராசனே! மேலோகாளில் ஒருபுறு அபயமென்று வேடனுக்குருக் கபிவந்தடைய அதற்குமாறுகத் தன்னுயிர்கொடுத்த சிபி யென்னு மரசனும் இவன்குலத்தோராசனென்றே யெண்ணவேண்டும். இடறு கின்ற தெங்கங்காயின் ஓட்டைப்போல அக்குலாசலங்களை புழுருட்டி இவ் வுலகம் திடறுகிய மேடுபோலக் கிடப்பப் பகைவருயினையுண்ணும் வேற்படை யுடைய சனகராசனே! இவன்மரபில்வந்த சகரராசன்மக்கள் அறுபதினாயிரம் பேர் கடலைத் தோண்டினாரெனின் இவன்மரபின் புகழினையெடுத்துச்சொல்ல வேறுகட்டினையும் வேண்டுமோ? ஊன்தங்கிய வேலையுடைய சனகராசனே! இவன்மரபின் புகழை அனந்தனாலும் அளவிடற்கரிதானால் யாமே புகழ்ந் தேத்துவேன். இதுநிற்க, மலர்மாலையணிந்த சடாமகுடத்தையும் புகுந்தணை ந்த கங்கையினையும் வானின்றும்கொணர்ந்த பகீரதராசனும் இவன்மரபினர சருளொருவனேயாம். கயலமீன்தாவுங் கடல்சூழ்ந்த உலகனைத்தும் கைநெல் லிக்கனிபோலாக்கி இயற்கைநெறிமுறைமையால இந்திரனுக்கும் இடரியற்றி முயற்கறையில்லாத சந்திரவட்டக்குடையுடைய சனகராசனே! பிறராற் செய் தற்கரிதாகிய பெருவேள்வி யொருநூறுஞ்செய்து கீர்த்திபெற்றவனும் இவன் மரபிற்பிறந்த அரசருளொருவனேயாம். சந்திரனேவென்று உருத்திரனேவெற்றி கொண்டகுவலயாசுவனும்துந்துவென்னு மரக்கனைக்கடுங்கணையாற் சிதைத்த துந்துமாரனும் தோன்றியமரபில இரகுமகாராசன்பிறந்து இந்திரனே வில்லாற் புறங்கண்டு எட்டுத்திக்கினையுந் தன்வசமேயாக்கியாண்டுவந்தான். வில்லென் னும்மந்தரமுலையால் அரசனென்னும பெருங்கடல்கலக்கி ஒளிசெய்கின்றமுத்த ணைகடைத்தநிர்த்தமதியென்னும் திருமாமகள்போல்வாளை இருணிறப்படை த்ததிருமாலேபோல அயனெனனுமரசர்பெருமான்மற்போர்க்கேயுரியதென்று சொல்லச்சிறந்த தன் திரண்டதோளுக் கணியாகவைத்தான். அப்படிப்பட்ட அயமகாராசன் மகனுகிய தயரதனையறியாதாரியாவருளர்? அவன்பெற்ற அரு மந்தமக்களிவர்கள். பலவாத்தியங்களு முழங்காகின்ற பண்டைக்கடலை யுடை யானே! இவர்கள் பெருஞ்சிறப்பைபெடுத்துச் சொல்லப்பிரமனலு மாகாதென் றால் என்னற் சொலலத்தகுமோ? ஆயினும் யான் அறிந்தவனையிலுஞ் சொல் கின்றேன்கேளென்று விசுவாமித்திரமுனிவர் சொல்லலாயினர்

குற்றமின்றி யுயிரவாழுஆக்கினுசக்கரம் சூரியன்முன் பனிபோற்பகையை வென்று பூமினையக்காக்குந் திறமையுடையான், தன்வில்லேயன்றி வேறுதுணை யறியாதான், தருமமாகிய கவசமுடையான், மனுநெறியினைத் தன்கீர்த்தியினால் வெற்றிகொண்டவன். அப்படிப்பட்ட அரசன் மக்களின்றி வருந்துவானுயி னான், அவ்வாறு வருந்தி வில்லேவென்ற நெற்றியினையும் ஆதொண்டங்கனி போலும் செவ்வாயினையும் கருநெடுங்கண்ணையும் வில்லேவருத்தும் கடிதடத் தினையும் மின்போலு மனையுமிடையினையுமுடைய மாதர்க்கனைத் தனமாகிய கோட்டைப் படைத்த விலங்கென்றே யெண்ணி அவருடனனுகி முன்னே

நின்ற கலிக்கோட்டு முனிவரால் துடரம் நீங்கவெண்ணி மலர்மாலையணிந்த நறியகேசத்தையுடைய மக்களை வர்ரையணிந்த அழகிய தனம்படைத்த என் மனைவியர் தம்மணிவயிற்றில் வாய்க்கப் பெற்றிலர். யானே இதுகாறும் நீரா லணைந்த கடல்சூழ்ந்த உலகத்தினைக் காவலகொண்டேன், எனக்குப்பின்பு இப்பாரினைத்தும் காத்தற்குரியராய மக்களை என்பரிபவ நீங்கத்தரவேண்டு மென்று வேண்டியிரந்தான். அச்சொல்லைக்கேட்ட கலிக்கோட்டுமுனிவரும் இர்க்கமுடையாராய் வகையாய் இவ்வுலகமெயலலது எவ்வுலகினையு மினிது காக்கின்ற பெருங்குணத்தையுடைய மக்களைத் தருகினமென்றும், தேவர்கள் விரும்பிப்பெறும் அவிக்குரிய பொருளினைத்துமபெறப புதநிரகாமேட்டி செய் தற்குரியவெலலாம கொணகவென்றார், புத்திரகாமேட்டி செய்தற்குரியபொரு ளினைத்தும் விரைவாயமைத்து அரசன்வேணடி நிற்ப மாதவாகளிற் சிறந்த கலிக்கோட்டு முனிவரும் அவ்வியாகத்தைச்செய்து நிறைவேற்றினர். அவ் வியாகத்தினின்றும் ஒளிவீசுகின்ற மணிகளாலும பொன்னாலுஞ் சமைக்கப் பட்ட கலத்தின்வெணமையான அழுதமபோன்ற வெணசோற்றையேந்திப் பூதகணத்தரசுபுறப்பட்டது. அப்படி அப்பூதகணத்தரசுகொண்டுவந்த அமு தத்தை வேதாகமங்களின்பொருளை முழுதுதாருங்குணாந்த கலிக்கோட்டு முனிவருடைய திவ்வியாக்னைபால தன்னையேநிகர்த்த பெருங்குணத்தினை யுடையதசரதனும்தன்பட்டத்தரசிமாரமூவருக்கும்நான்குகூறிட்டளித்தான். அவ்வாறளிக்கவேதனினைசெய்த பெருந்தவினையாலும் முடிவிலலாதமறைகள் சொல்லிய வழியே நல்வினைசெய்த நலவினையாலும் பெருங்கடக மணிந்தகை களையுடையானகி ஓவியராலும எழுதுதற்கரிய திருவுருவத்தையுடைய இக் கருங்கடல்வணணனைச் செங்கனிபோலும் வாயினையுடைய கோசலைன்பவள் பெற்றெடுத்தாள். நீங்குதற்கரிய பெரிய நீதியென்னும் ஒப்பற்ற ஆறபுகுதற் குப்பள்ளமே போல்பவளாகிய பரதனென்னும பெயருடையானும் பெருங் குணத்தினும அழகினும இவ்விராமனையேபோல்பவனுமாகிய ஒரு மைந்தனைக் கைகேசி பெற்றெடுத்தாள். அருமையான வலிபடைத்தவராய் அறத்தைக் கெடுக்கும்வெற்றிபெற்ற அரக்காகள்விலலோதுவராயின் செம்பொன்மேருவை யும்இரசிதமலையும்போல்கின்ற இவ்விலக்குமணனையும் சத்துருக்கனையும்சுமித் திரை பெற்றெடுத்தாள். தலைமையான பொருளுணர்ச்சியிற் கலைமகட்குத் தலைவராகி வில்வித்தையனைத்தும பயிலவனைபம்போல் அடங்கிநின்று பணி செய்துகிடப்பச் சோடசகலைகளும நிறைந்த சந்திரோதயத்திற் கலித்தோங் கும் அலையொடுகூடிய கடலேபோல மறைநான்கினையுமபோன்ற தசரதராச குமாரர்கள் வளர்ந்துவருவாராயினர்.

இவ்வாறு வளர்கையில் நிறைகொணர்ந்து அரசரெல்லாம் தன் கடை வாயிலில் அளந்துவணங்கும் வீரகண்டையணிந்த காலையும் பொறுமையொடு தொடர்ந்த மனத்தினையு முடைய தசரதராசன் மக்களென்பதே யல்லது உறையினின்று நீங்காத வேலையையுடைய சனகராசனே! இவர்களுக்கெல்லா முபநயனச்சடங்குசெய்து நான்கு வேதங்களையும் பயில்வித்து இவர்களை யெல்லாம் வளர்த்துவந்தாரும் வசிட்டமுனிவனென்றையறி. இதுகடக்க, இவ

தால் என்வேள்விக்கு விக்கினஞ் செய்துகொண்டிருந்த தாடகை மாரீசன் சுவாகுமுதலிய கொடிய அரக்கரையெல்லாம் கொல்விக்கச் சிந்தையிலென்னி இங்கேபெழுந்தருளிய அழகியபாதங்களையுடைய இராம லக்குமணரைக் கொண்டு சென்று வணங்கச்சாற்றினன். அவ்வாறு சேர்வதற்கு முன்னே ஒருவராலும் பெறுதற்கரிய பேராற்றலையுடைய தாடகையென்னுங் கொடியபாவி வந்து தோன்றினள். உலகினின்றுந்தோன்றும் பெருந்தழல்போலுமிழ்கின்ற கோபக்கனலணையுடைய அந்தாடகையி னுரமுருவி மலையுருவி மரமுருவி மண்ணையு முருவிச்சென்றது இவன் அவள்மேலகழிதெய்த அம்பு. அவ்வி பொடிகூடிய கடலதிறவணணைகிய இவனது நீண்டபாந்த நிலையையுடைய புயவலியை நீபுருவமேற்கிடப்பார். அவளோடு பின்வந்த செவ்வானம்போலுஞ் செம்பட்ட மயிர்த்தலைக் குவைகளுமலைபோற்றிரிந்தன, அவை முடிவுகாண் டற்கரிய. அவ்வரக்கிமக்களிற் சுவாகு எனபவன் அக்கினியாஸ்திரத்தால கொல்லப்பட்டு வீரசுவர்க்கமடைந்தான். மற்றையவனுகிய மாரீசனென்பவன் காந்தருவாஸ்திரத்தினல் எறிபப்பட்டான, அவனபுகுந்த விடமறியன். இவனே எனபதையுமுடித்து வருவிட்டான். பிறவுலுமளந்துசொல்வ தற்கரிதாய் உலகனைத்தும கடலொடுமலையோடும சுடவலைபடைக்கலங்கள் செய்தற்கரியதவத்தால யான்தானுமனமகானஇவ்விராமனுக்கையவை எவற் றொழிலுச் செய்யாதின்றன, அதனை நீயெயாராய்ந்துபா. பின்னும கௌதம முனிகருடைய மகனவ்யாகிய அகலிகைக்கு முன்னபுருவத்தைப் பிரசா தித்ததும இவனது தாடகாமலாம்பானற் பாதங்களின பொடியெயல்லது வேறலல; எனதனபும எனனுயிரபெனறி இக்கியவனிடத்தெயுண்டு. இது தான் இவன்வரலாறுமபுயவலியுமென்றெடுத்துச் சொலலிமுடித்தான.

குலமுறை கிளத்துபடலம்
முற்றிற்று.

கார்முகப்படலம்.

அதைக்கேட்டு இடமாயவில்லுக்கு யான் குறிப்பிட்டுச் சொல்வதுயாது? என்மனம் தோற்றதென்றே கவல்கின்றது. எனமகளாகிய சீதையும் தவஞ் செய்தனள். விளாதது இழ்வையன் இக்கார்முகத்தை வளைத்தேற்றுயாயின் என்னை யிடர்க்கடலினின்றும் கணையேற்றுவேனென்று தன்னெதிரோன்ற வனை அம்மலைபோலும் வருந்திக்கட்டிய வில்லைக்கொணருங்கோளென்று கட் டளையிட அவர்களும் ன்றென்றுவணங்கி நால்வரோடிப்போய்ப் பசும்பொன் னுற்செய்யப்பட்ட விலவைத்திருக்கும் சாலையையடைந்தனர். மிக்கவலி யுள்ளவரினையொத்த மேன்மையுடையாருமசிறந்தபயிரினையும், மலைபோலுந் திரண்ட தோளினையுடையாரும் அளவில்லாத பேராற்றலையுடையாருமாகிய

* அறுபதினாயிரம்பேர் தமியாலமைத்து இடையதன்மிசைத்ருங்கி பூமகள் தன் முதுகாற்றவும்கின்றுயர்கின்ற விசாலமானபலகளுமாணமடையவுமிடமில்லை யென்றேயுலகமெங்குங் கடலேபோல அகங்காத்தார் பெராலிசெய்து காணை வந்தார்கள். அதைக்கண்டு சங்குசக்கரமெந்திய பிங்கவெறுபோன்ற திருமாலே யல்லது இவ்விலலைத்தினாட ஒருவனெகுளன். இன்று இவ்விலலையிற்றின் மங்கைபாகிய சினையின திருமனு முழுபிமனபாரும், இனைத்தனுவின் பிரித கைதவமலைதுவிறலை ஆதலினா இது டோனமருவை யென்பாரும், இவ்விலலைமுன்வளைத்துளைத்தவனை யாவன்னை எனபாரும், அதனையதழுகுணுகிய பிரமன்இவ்விலலைத்தினாடிச்செய்தது முன் அவன்செய்தகபாலமையென்பா ரும், திண்ணிதாகிய மகாமேருவைத்திரடிபமதானனபாரும், அழுகியகடலைக் கடைந்த மந்தாகிரிபாகிய மதமதானன்பாரும், மகாகாகுத்துத தலைமை யான வாசுகிதானனபாரும், ஆகாயத்திலை இடாமட இந்திரவிலலைதான் பூமியில்வீழ்ந்தமிதா என்பாரும், எதனைபோருட்டாக இனைத்தெலையுவரைக் கட்டளையிட்டா னென்பாரும், இவ்வாபம்பாலு மதிகெட்டவிலலையென்பா ரும், இதுமுனனின பூழ்வினையினனை முடிகுகலா பெனபாரும், கன்னியும இச்சிலை காணுமோவெனபாரும், இச்சிலையையுனைத்த கொலுகுகலக்கும யாதென்பா ரும்; சிலையைவளைத்தபபின மங்கையாகிய சினைபபலருமிக்கும வெற்றென் பாரும், சக்காத்தினையுடைய இவன் நிச்சயமாகவெடபரபின யென்பாரும், சிற்சிலர் விழியானது செப்த கொடுமைதானை வெனபாருமாகி இவ்வாறு கெருங்கிப்பேசிக்கொணடேயிருக்க, சனகாசன புன்னைவெங்குழற்துபோக அதனை கொணடுவநதுனைத்தாகள். அவ்விலலைக்கணட அரசரெலலம இதை வளைப்பவன் யாமாவென்று மகவிரிதுநின்றனா. இது இவ்வாறுக யாணை போல்பவனுகிய சிராமபிரான முகமலாசகணடும அத்தினையை விளைக்கும விலலைக்கண்டும் தனமகளாகிய சினையின மனவிலையைக்குறித்த கருத் தைச்செலுத்தும சனகாசன கருத்தை நோக்கிய கௌதமமுனிவர் புதலை ராகிய சதானநதமுனிவா சொலலலாயினா.

பொன்மலையை விலலாகக்கொணட இறைவன் தன்பாகத்தில்எழுந்தருளி யிருக்கும உமாதேவியை இகழ்ந்தானெனறு மிக்க கோபத்தினபோற் கொதி த்து ஒப்பற்ற வில்லைக்கைக்கொணடு தக்கனது யாகத்தைநோக்கிச் செலலப் பல்லொடுங கைகளற்றுத தேவாகளோடி அலைபபுத்தகாத இடமெல்லாம் அடைந்தனர். தக்கனது பெருவேள்வித்தீயும ஆறிபபோயிற்று. மூன்றுகண கனையும் எட்டுத்தோளையுமுடைய இறைவனும கோபநீங்கி தேவாகள் ஆயுளை யுடையரா யிருப்பதனால அவர்தம நடுக்கங்கண்டு வலிமையுடைய விடை போலும இச்சனகாசன் மரபின முன்னையுதித்த வாளையுடைய வீரனைப் படும் தேவராதனென்னும மிதிலாகரத் காசனிடத்தில குதையையுடைய வரிந்தசிலையைக் கொடுத்துவைத்தனர். நீள்சடையுடைய சிவபிரானையொத்த

* அறுபதினாயிரர் என்பதற்கு அற்றபதினாயிரவ னெனக்கொண்டுறுபாயிரவ னென னெங்கொண்டு பொருளுரைப்போரு முளர்.

வாதனே! இவ்வில்லின்வலியை யான்சொல்லவும் வல்லேனே! இதையறிவ தற் குலகில் நீயல்லது யாரறிபவர்? இதற்கென்றேதான்றிய சிதையின் இயல் பைச் சொல்கின்றேன். அது வேள்வியின்பொருட்டு இருமபின் வலிபோலும் வலியுள்ள பெரிய நீண்ட கொம்பினையுடைய இரண்டிடங்களினுடைய பருத்த பெரும்பிடரில் பளிங்கிற்செய்த நுகத்தடியைச்சேர்த்து அதனோடு பொரு த்துவித்து இழுக்கின்ற அளவிகந்த மணிகள்பதித்த பொற்கலப்பையில் வைர முள்ள கொழுச்சேர்த்து அதனால் ஒப்பில்லாத வன்மையுள்ள பூமியைப் பல் காலும்உழுதகாம். அப்படியுழுவே உதயஞ்செய்யும் பிரகாசிக்கின்ற சூரியனைப் போலும வளங்களைச்சொரியும பூமிதேவியினது செல்வமே வெளிப்பட்டாற் போலவும் பாற்கடலிலுண்டாகிய தெளிவாகிய அமுதத்தோடு திருவவதாரஞ் செய்ததிருமாமகளும அழகுமுதலியவற்றால்இழிவடைந்து ஒருபுறம்போகவும் பெண்களெல்லாம வணங்கதக்க இயல்புடையபெண்ணரசி அக்கொழுமுகத் திலே பிறந்தாள். அவளது குணதிசயங்களை யாமென்றுத்துச்சொல்வதினாலே யுண்டாகும் பயனென்ன? பூங்கொமபுபோன்ற அச்சானகியைச்சேர்ந்து அக் குணங்களெல்லாம உய்யும்படி தமமிலமாறுபடுவன, அழகென்றுசொல்லப் படுவதே இவளைத் தவஞ்செய்துபெற்றதன்றி வேறல்லவே, இச்சானகிதோன் றியபிறகு, ஆகாயகங்கை பூமியிலிறங்கிய பிறகு கிருஷ்ணை, துங்கபத்திரை, காவேரி, யமுனை, சரஸ்வதி, நருமதைமுதலிய மகாநதிகள் பெருமை யிழந்த வாறுபோல மற்றைப்பெண்ணென்று சொலலப்பட்டவர்களெல்லாம் பெருமை யினின்றும இழிந்தாராயினர். இதச்சானகியினது உருவத்தையொத்த சித் திரமெங்கேதான் கிடைக்கும். அவரவர்செய்த முன்வினைப்பயனல் இன்ன ருக்கின்னதென் றின்னபடியென்று தலையிலெழுதி மயிரால் மறைத்துவிட்ட பிரமனது சூழ்ச்சியை நூலளவையாலுணரு முணர்ச்சியும் பழயசங்கற்பமும் ஒன்றையொன் றொவ்வாமல புறத்திலிருக்கவே அதனைச் சிறிதுமறியாமல் தேவர்களுடைய கூட்டமெலலாம முன்னாளில் அத்திருமாமகளைவிரும்பி யடைந்ததுபோல இப்பூவுலகத்தை யாணடுவரும் அரசரெலலாம் இத்திருமா மகளையடைந்து விருமபலாயினர். மேலும் புகழினையுடைய நால்வகையாகிய சேனைசமுத்திரத்தோடும் ஆரவாரித்தமுதங்கொண்ட யானையினைப்போல்வந்து பேசினபேருக்கு காங்கள் மறுமொழியாக புலித்தோலாகிய ஆடையினையும் யானத்தோலாகிய போர்வையினையுமுடைய பரமசிவனது போர்க்குரிய இவ் வில்லை வளைத்தவனுக்கேஇம்மங்கையர்க்கரசியாகிய திருமாமகள்போன்றவள் மணமகளாவாளென்று உறுதியாகச் சொல்லியிருந்தோம. சொல்லாகிய வில் லைக்கொண்டு உலகைக்காக்கும விசுவாமித்திர முனிவரே! அச்சொல்லைக் கேட்டு அன்று திருப்பாற்கடல்திருமாமகளைப்பெற்றதுபோல இன்று நிலமகள் பெற்ற பெண்ணரசியை விரும்பிவந்த அரசரெல்லாம்இவ்வியவில்லை வளைப்ப தற்கு வலியற்று மனமதனது கரும்பாகிய வில்லினால் சல்லடைக்கண்ணாகத் தொளைக்கப்பட்டவாய் எங்களை யவர்கள் போருக்கழைத்தாராய்ப் போர் செய்யத்தொடங்கினர். ஒளிவீசும் முடியையுடைய வானாடர் மல்யுத்தத் திற்குரிய தோளையுடைய இச்சனகன் இளமையானஇடபவாகனத்தையுடைய

பரமசிவனது வில்லெக்காக்குங்மித்தம் வாட்போரில் வருத்துகின்றனென்ப தறிந்து அவர்கள் மனமிரங்கி ஆயுதங்களை எனக்குக்கொடுத்ததாகக் கேள்விப்பட்டபிறகு அவ்வர்சர்களெல்லாரும் இராததிரிகாலத்தில் காக்கைகளெல்லாம் ஆந்தைகளைக்கண் டஞ்சிப்போவனபோலப் பயந்தோடத் தலைப்பட்டார்கள். அன்றுமுதல் இன்றுவரையிலும் தேடிதேறிச்செலலும அரசர்களில் ஒருவரேனும் இவ்வில்லினருகே போனதுங் கிடையவேகிடையாது! இப்பட்டணத்தின்மருங்கே திரிந்ததுங்கிடையாது! எலலாரும் ஓடி யொளித்தனர். இனி எப்போதும் திருமணமென்பதே யிலலையென் றெண்ணியிருந்தோம்! இச்சிராமன் இவ்வில்லை நாணேற்றுவானையின் சீதையின்கழுத்தில மங்கலநாண் ஏற்றுபவனேயாகும் எங்களுக்கும நன்மையுண்டாகும. அசசானகியின் பெண்ணலமும் பழுதுபடாததேயாகுமென்று சதானந்தமுனிவா சொல்லிமுடிக்க, அவர் நினைந்ததையும் சொன்னதையும முறையே நன்றுயெண்ணி விசுவாமித்திரமுனிவரும் கட்டியிருந்த தமது சடாமுடியையசைத்துப பேரில் விடை யேறுபோன்றவனுகிய சிராமனது திருமுகத்தைநோக்கித் தமது குறிப்பை விளக்கினர். அழகே யோர்வடிவெடுத்தாற்போன்ற சிராமனும் விசுவாமித்திர முனிவர் எண்ணியவற்றையெல்லாம் நன்றுயாராய்ந்து பாத்து அந்த நீண்ட வில்லினருகேபோய்ப் பார்க்கத்துணிந்தார். அப்படி பாாக்கும்படி யாகாக்கினியில் நெய்யாகிய ஆகுதியைப்பொழிய அவ்விடத்தில மேலேயெழுந்தோங்கிய செழுந்தீச்சிகைபோல இரகுநாயகன் எழுந்த மாத்திரத்தில் அதைக்கண்டதேவர்களெல்லாரும் வில்லழிந்தேபோய்விட்டதென்று ஆரவாரித்தார்கள். காமம் வெகுளி மயக்கம் என்னும் முபபகைகளையும வெனற முற்றத்துறந்த முனிவரெல்லாரும் ஆசீர்வதித்தார்கள். பரிசுத்தமாகிய மகத்தானதவத்தைச் செய்தவிசுவாமித்திரமுனிவர் ஏவுதலில்நின்ற காகுத்தவமசோத்தரன் இவ்வலியவில்லையொடிப்பதற்குமுன்னே சித்தசனும அபமெருந்தகையினுடைய வடிவழகைப்பார்த்திருந்த செம்பொனலாகிய ஆபரணம்பூணடமாதர்கள் சித்தந்தேறும மேன்மையான புட்பபாணங்களையெய்து ஆயிரங் கருமடுவில்லையு மொடித்தான். இதுகிடக்க ;

சிலபோர் நீண்டவில்லானது கால் வலியையுடையதென்றும், சிலபோர் நாணத்தையுடைய சீதையினது செந்நிறம் பொருந்திய இப்பெரியோனது அகன்றசெங்கையானது பொருந்தாததனல் இனி அச்சீதையும்வாழ்வடையப் பெற்றிலளென்றும், சிலர் தத்தங் குலதெய்வங்களை வணங்கித்துதித்து இருகைகளையுங் குவித்துநின்று இரண்டுகண்ணினின்றும் நீர் துளிக்கப் பெரியமதயானைபோன்ற இப்பெரியோன் இவ்வில்லை நாணேற்றுவிட்டால் கத்தூரிமணங் கமழும் கூந்தலையுடைய நமது சானகியாகிய பெண்ணரசும் நாமும் தன்னில் வீழ்ந்தாலோக்கொல்லும் அக்கினிப் பிரவேசமாய் விடுவோமென்றும், சிலர் கம்முடைய சனகராசன் சீதைக்குத் திருக்கலியாணத்தை விரும்பினவனனல் நீ கொள்ளென்று எதிரே இப்புருஷோத்தமனுகிய சக்கரவர்த்தி திருமகனுக்குச் சீதையைக்கொடுப்பதை விட்டுவிட்டுச் சடையிற் கங்கைதரித்த கம்புவில்லைபெடுத்து இப்பின்னாமுன்னைத்து வளைக்கவேண்டுமென்றுசொன்

னது அநியாயமென்பதென்றும், சிலர்வில்லுக்கென்றே இப்பிள்ளையையழைத்து வந்த ஞானதாரதியாகிய விசுவாமித்திர முனிவருக்குச் சிறிதேனும் ஞானமில்லையோவென்றும, சிலர் அரசர்களில் இச்சனகனேபோர்க்கிலும் கொடியவனிலையென்றும, சிலர் இச்சிராமபிரான் இவ்விலலை இரண்டுகாலிலும் வளைக்காவிட்டால, பருத்த தனத்தினையுடைய நமது சானகியாகிய பெண்ணரசி பிறந்த பயனடையாளென்றும, இவ்வாறுக மயிலபோலும் சாயலையுடைய சிலதியாகள் சொல்லிக்கொணடேயிருக்கையிலஅவாசெய்கைகளையுங் குணங்களையுமெடுத்து கலலோர்கள் சுகதாஷமாகச்சொலலத் தேவர்களும்மகிழஉயர்ந்த சிங்கமும, பெருமிதமுள்ள விடையேறும், பொன்மலையும, மதயானையும் காணும்படி விலலினருகே கடந்துபோய் உயர்ந்த மகாமேருமலையைப்போன்ற அத்தவில்லைத்தடக்கினையாத இரத்தினமேபோன்றசானகியென்கின்றபொற் கடகத்தையும் வளையலையுமணிந்த கையையுடையாளை சூட்டிக்கொள்ளக் கொடுக்கும இதழ்விரிந்த மணமாலையிதுவென்று கண்டவரெலலாம் அதிசயித்துச்சொல்ல ,அநாயாசமாகவே அவ்வில்லைத் தன்னிடக்கைபாலேயே யெடுத்தான். காட்சியைத் தரிபடைதற்கு இமைபாதவராய் அங்கிருந்தவரெல்லாம் இரகுவீரன தன்திருவடியின் பெருவிரலால அவ்விற்குலையை மிதித்ததையும் காணினை நுனியிலை பூட்டியதையும் செய்கையின்வேகத்தாற் கண்ணிறைக் காணதவராய் அறிவினை மறிந்திலர். கைபாலெடுத்ததைப் பார்த்தாரேயல்லது விற்முறிந்த ஓசைமாத்திரமே கேட்டாகள். தேவர்கள் சிவபெருமானுடைய திரியம்பகமென்னும் வில்முறிந்த ஓசையைக்கேட்டு இத்து பிரமாண்ட கோளகைதான்பிளந்ததனலுணடான ஓசையோவென்றெண்ணிஇனியாரிடத்"திலேபோய்காம் அடைக்கலப்புகுவோமென்று ஏங்கி மனம் வாடிவருந்தினர்கள். பகைவருக்கு அச்சம்பயக்கும் வெற்றிவலியேந்திய சனகராசனுக்கு இன்றுதான் அவன்துகலவினையீடேறிற்றென்று சொலலிக்கொண்டவராய்த் தேரிற்சிலர் கற்பக மலாமழைபொழிந்தாகள். சத்தமேகங்களும் பொன்மழைபொழிந்தன, பரந்தபெருங்கடலெலலாம் பலமணிகளையும்தூவி யாரவாரித்தன. சிறந்தபுலவிலலாம் ஆசிவாதஞ்செய்தனர்.

வெல்கிடந்தாம்போன்ற கணகளைபெற்றுப் பகற்காலத்தும தன்னன்மை திரிபாதுலவுதலைபெற்ற மதிபோலுந் திருமுகத்தையுடையமாதர்கள் அகப்பொருளறிந்த புலவாகூடிய காற்காலத்தைநோக்கும்மயிலகளைபோலக் களிப்பினல் தோன்றுகின்ற முத்தமுறுவல் விட்டுவிட்டுப் பிரகாசிக்க, காதணிகளும் இடைவிடாமல் ஒளிவீசுதிகளிலே கடனஞ்செய்வாராயினர். மதுவுண்டார் கண்ணைபோலச் சிவப்பேறிவிளங்கும் கருங்கண்மாதர் மனவருத்தம் நேரிடும் புலவியாலாயகளிப்பின்மிகுதியால் நீங்காமல்தத்தம்நாயகனைத் தழுவலாயினர், வெள்ளைநிறங்கொண்ட மேகங்கள்மேலுமேலும் விரிகடனீருண்ட விதமேபோல வதியோர்மண்ணையாளும் அரசனுகிய சனகராசனது சேமநிதி பொருளீக் கொள்ளைகொண்டனர். தேவர்களோ,வயிரியரும்பாடுகின்ற இனிய இசையும், மங்கைப்பருவமுழுடையம்வசையர்பாடும் அழுதகீதமும், செல்வரி

யர்வாசிக்கும் மகரயாழினது இனியதேனின் இனிமைபோலும் இனிமைபடை
த்த இசையும், பயிரியர் ஊதும்வேட்டுகுழலும் ஆகிய இவற்றைச் செவியாகிய
வாயால் தெவிட்டாமலுண்டு உயிர்தங்கிய உடம்புமுழுதும் அங்கரத்தின் சித்
திரமேபோல அசைவற நின்றனர். சிராமன் விஸ்லையிறுத்த தோளாற்றலைக்
காணத் தேவருலகத்து அரம்பையர்மாதர்கள் இறுகுசெயலினையுடைவடிவினையும்
ஆடல்பாடல்களினையும் பூலோகமாதரென்றே யுணியாமல் அவனைத் தழுவிக்
கொண்டதன்றி, மையெழுதிச் செவ்வரிபடர்ந்த நீண்டநோக்கமுடைய கண்
கள் இமையாமையால்மயங்கித்திபிரமைகொண்டுநின்றனர். அங்கரமாந்தரிற்
சிலர் இரகுநாயகனைத் தசரதகுமாரனென்றும், சிலர் செந்தாமரைக் கண்ண
னென்றும், சிலர் இவனிறமோ மேகநிறமென்றும், சிலர் அப்பழியன்று அது
காயாம்பூவை யொக்குமென்றும், சிலர் உலகம இவன்பாற் காதலையுடைத்
தென்றும், சிலர் இவன் மானிடனலனென்றும், சிலர் இவன் பாற்கடற் பரம
னேயென்றுஞ் சொல்வாராயுமிருந்தனர். சிலர் ஆணிற்சிறந்த பேரழகினைப்
பார்க்கிலும் பெண்ணிற்சிறந்த பேரழகினட்டு ஆரிவங்கண்வேண்டுமென்பாரும்,
பூங்கொம்பையொத்த நமது அரசிளைக்காணுமிதாவும் இப்பெருந்தகைக்குப்
படியே யாகுமென்பாரும், இளையவனைப் பாருங்களென்பாரும், உலகமோ
பெருந்தவஞ் செய்தது இவர்களைப் பெற்றிருக்க என்பாரும், இவ்வுலகத்தி
லுள்ள இந்நகரில் இவனை அழைத்துக்கொண்டுவந்த விசுவாமித்திரமுனிவனை
வணங்கவேண்டுமென்பாருமாய் இங்கேயிருக்க ; சந்திரனும் இரவும் எப்
போது நீங்கப்போகின்றனவென றெண்ணிக்கொண்டிருந்து அவை நீங்கப்பெற்
றப் பின்னும் ஸ்ரீகாகுத்த வமிசோத்தமனைக் காணவேண்டுமென்னும் ஆசை
யால் ஆருயிர் சிறிதுதாங்கியிருக்கும சீதாபிராட்டியார் உடலினின்றும் போய்
கும் வரவுமுடைய பூசலபோல தீயிலிடடாற்போலத் தன்னுடம்புமெலி
கின்றவராய் மலர்ப்படுக்கையினின்றும் நீங்கிப் பசுமைபொன்னைபூணமணிந்த
தோழிமார்கள் தன்னைச் சூழ்ந்துவருமாபோல் செல்லுந் தர்மனைத்தடாகத்திற்
கருகே பனிங்குக்கலலாற் கட்டப்பட்டமாளிகையில சந்திரக்காந்தக்கல் சி
திய பனிநீரைத்தெளித்த பூப்படுக்கையைப்படைத்தாள். தாமரைமலர்களை
இங்குவந்தவர் ஆண்மகனல்ல பெண்மகளேயென்று சிந்திக்கும் உம்முடைய
பெருந்தன்மையால் காண்பதற்கருமையான திருமேனி நிறத்தையும இலை
களை காட்டிவருவதனால் சோர்வு நீங்கிவிட்டேன். மாதவிர்போலும் நிற
முள்ள என்னுடமபின் நிறத்தைப்பார்வையாலுண்ட திருக்கண்களிலமைந்த
நிறத்தையுமலர்களால காட்டிநீங்கள்என்னுயிர்போலச் சிறந்த இரகுநாயகனைக்
கொண்டுவர உலோபஞ்செய்துவிட்டீர்கள் இது என்னகாரணமோ அறியேன்!
தோளழகைக்கண்டு வெட்கமடைந்துபோன மேருமலைபோன்ற வில்லொடு
காணியமைந்த திருக்கையும், தூண்போன்ற பருத்த நீண்டதோளும், அம்
பறாப் புட்டிலும், சந்திரிகை வீசுமு வெண்மையும், ஒளியுமுள்ள முப்புரி
நூலும் மலர்மாலையுந்தங்கிய மார்பும் மறுபடியும் காணக்கூடுமாயினல் என்
னுயிரை முன்போலிருக்கக்காணலாமென்றும், ஆகாயத்தில் தவழ்கின்ற சந்திர
னைநோக்கி தேனுண்ணுமபடி அதன்மேற்சூழ்ந்து வண்டுகளொலிக்கின்ற மலர்

மாலுதங்கிய சிகையோடும்வந்து நீண்டவில்லுத்தாங்கிய ஒருமேகம் தன்னிர
ண்டு கண்களாலும் என்னுயிராகிய நீனைமொண்டுகொண்டு உண்டதுமுண்டு,
அது என்னெஞ்சில் இப்போதும் நிலைத்திருக்கின்றது, எப்போதும் நீங்கவே
யாட்டாதென்றுஞ் சொலவாள்.

பின்பு தன் கொங்கைகளைப்பார்த்து நீங்கள் பருத்துப் பூரித்திருந்தும்
யாதுசெய்தீர்கள் ? கலைகள் நிரம்புஞ் சந்திரனைப்போன்ற தன்னெளிவாய்ந்த
முகத்தையுடையவனையும, வளைக்காதவில்லைக் கையிற்பிடித்தவனையும், கடை
யிற் சிங்கமேபோன்றவனையுமிருக்கின்ற அவ்வள்ளலுடைய மார்பிற்பொருந்த
அனுபவிக்கும்படி தவஞ்செய்யுங்கோளென்பாள்.என்னெஞ்சே அனங்கனுகிய
மன்மதன் மனங்கொதித்து என்னைநெருங்கிவந்துதாவும் அம்பென்னும்விஷாக்
கினியின் மூழ்கிய தேகமேவகாமல் நின்றெழுந்து கடையிலுல் மதயானை
போலுங் கட்டிளமையுடைய பெரியோனைக் காவின்கணைடைந்து அக்காலொடு
விடாது .அவன் தன்வில்லினின்றும் பாணங்களைப்பொழிந்து பஞ்சையழிக்
குந் தீப்போல என்னுயிரை வருத்துவதனுல் என்நெஞ்சழிந்து சஞ்சலமுறப்
பெண்களுப்புமபடி அஞ்சாதை அஞ்சாதை யென்றுசொல்லாத ஆண்டன்மை
யாதென்றும, இபபடிப்பட்டசந்திரன் இதுவரையிலும்எங்கேதங்கியிருந்தான்?
மன்மதன் என்னெஞ்சிலேகடாது அங்கேயேதான் தங்கியிருந்து எய்தபாணத்
தினுலுணடான காமநோய் பொங்கியெழுந்து தனங்களின்மேல் நிலவாகிய
விடத்தைச்சொரிந்தாலுந் தன்னிடத்திலே களங்கமில்லாமையாலே நேற்றிர
விலேவந்த சந்திரனேபலலவென்றும், ஆகாயத்திலெழுந்த மேகந் தன்பார்
வியிலே தங்கிய முப்புரிநூலோடு இடமணலுலகத்திலே யிழிந்தாற்போலக்
கன்னிமாடத்தருகேவந்து நீங்கிய புருஷோத்தமன் என்மனத்திலிருந்தாலும்
கான் இன்னுனென்றறியமாட்டேன், அது இருக்கட்டும் ; அவன் என் கண்
ணருகேயிருந்தாலும்எபபடிப்பட்டவனென்றுகாணுதிருந்ததுஎன்னகாரணமோ
வென்றும, பாற்கடலிலேயல்லது மற்றைவிடத்திற் பிறப்பதற்கருமையான
அமுதத்தினை அநாயாசமாகப்பெற்றும், அதையுடனே யனுபவியாது பொன்
வட்டிலொடுமிழுந்த அறிவிலார்போல, அவனது வலியதோளை நெருங்கிய
காலத்திலே தழுவியணையாமல் நமதுவசத்திலிருந்தும் புறத்தேபோகவிட்டு
உறுதிமொழிகளை இபபோது சொல்வதனுற் பயனில்லையென்றும், இவ்வாறு
பலபலவிதமாகச் சானகிமனம் நைந்து நைந்து இரங்கி விம்மித் துன்பக்கடலி
லழுந்தி, அதற்கோர் துறைகாணுமல் அக்கடலிலமிழ்கின்ற சமயத்தில் மலை
போன்ற உருவும் வலிமையும்பொருந்திய விலலொடித்த சங்கதியைக்கேட்டு
மனத்திற் களிப்படைந்த முகமதியையுடைய நீலமாலையென்னுந் 'தோழி
யொருத்தி ஓடோடியுள்ளசென்று, வடங்களும் குழைகளும் இந்திரவில்லைப்
போற் பிரகாசிக்க அழிழத்தொடங்கிய ஆடையுங் கூந்தலுஞ் சோர்ந்துபோக,
துவளுகின்ற மின்னலைப்போல வினைவாகவந்தடைந்து மூடிவில்லாத களிப்
புடையாளாய் இறைவியின் பாதங்களை வணங்காமல் ஆரவாரித்துச்சோபனம்
பாடி ஆனந்தக்கூத்தாடி நின்றுள்.

அதுகண்டு பிராட்டி நீயுள்ளத்திற்கொண்ட பெருமகிழ்ச்சியும் அதற்குக் காரணமான செய்தியுஞ் சொல்லெஞ்றுகேட்டருளத் தோழியும்வணங்கின்று யானை தேர் குதிரை காலாள்களாகிய நாற்கடற்படையையுடையவனும் மிக்க கல்வி யுடையானும், மேகம் போலும் வடையாது கொடுக்கும வள்ளற் றன்மையுடையானுமாகிய தசரதராசகுமாரன், கட்டழகில மன்மதனினுஞ் சிறந்தவன், கண்டவர்கள் மராமரங்களை யென்றுசொல்லப்பட்ட தோளினை யுடையவன், பாற்கடற்பரமனென்றே சொலத்தக்கபராற்றலையுடையவன், அவனைச்சீராமனென்றே யாவருஞ் சொலுவர். அவன் தன்தம்பியாகிய இலக்குமணனோடு விசுவாமித்திரமுனிவரைத்தும்கொண்டு தமது மிதுலாக்க ரத்தையடைந்து தமது இராசசபையில்வர, அவ்விசுவாமித்திரமுனிவர் தமதரு சனைநோக்கி இச்சீராமன் அருட்பெருங்கடலாகிய பரமனிவனது லீலைக்கான வதாரனென்றுசொல்ல, தமதரசன்கட்டளையால் அவ்விலலைத் தன்கையாலே அநாயாசமாயெடுத்து நாணேற்றி வினாணுலகம நடுங்க முன் தாடகையாடிய சூத்திர மிதுவென்னும்படி ஒருமாத்திரைபோதிலேயே தாளான் மிதித்து தோளினல் வளைத்தான். அந்தச்சமயத்தில தேவர்களெல்லாருப்புகழ்ந்து கற்பகமலர்மழை பொழிந்தார்கள். இவ்வாறு மலைமகளை பொழியுங்காலத்திலே தமது இராசசபைபடுங்க அவ்விலமுறிந்து வீழ்ந்தமென்று சொல்லினாள். அவள்சொல்லி நிறுத்தியவுடனே ; சிறந்தமுனிவனேறும் வந்த மேகம்போலவா னென்று சொன்னதிலுலும், செந்தாமரைக் கண்ணனென்று சொல்வதனுலும் தமது கன்னிமாடத்தில் அன்னமாடும் முன்றுறைக் கயலினின்ற அப்பெரி யோனேயாகுமென்றுதேறினள். உடனே மேகலையினுள்ளே அலருல்வளர்ந்து இடையேயில்லையென்று முன்னே செலகினறவர்களுடம் இடம்போ தண்டுண் டென்றுதுணிந்துசொல்லவும், மற்றைபுறுப்புகளையன்றிமேன்மையான தனங்க ளும்பூரிக்கவிமமிதமாயிருந்தசானகி தன்தோழியாகிய லீலைமாலைதொல்லினின்ற குறிகளால் அவன் தான்கருதிய அரிளங்குமரனேயாகும், அவனலலனுயின் இறந்துபடுவேனென்று நெஞ்சிலெணணித்துணிந்து சீராகவன்மேல் ஆசை கொணடு சோர்கின்றவளாயிருக்க, இங்கே சனகமகாராசன் அவ்விலமுறிந்த ஓசையினுல வியப்படைந்து, எம்பெருமானே உன்மகளுகிய சீராமபிராஞக்கு விவாகமகோற்சவத்தை வினாவாகஇவ்வொருதனிலே முடிக்கவென்னேமோ, எங்கும் மணப்பறைசாற்றுவித்துச் சத்திக்கின்ற விரக்கழலையனிந்த, காலாட் சேனையுடைய அந்தத் தசரதசக்கரவாத்தியையும வருவித்துமுடிக்க எண் ணமோ சொல்லவேண்டுமென்றுசொல்ல, அதைக்கேட்ட விசுவாமித்திரமுனி வரும் இம்மிதுலாநகரத்திற்குச் சக்கரவாத்தியும்வந்து சேர்வதே கலல தென்றுசொல்ல, அதற்கு அளவிடப்படாத மகிழ்ச்சியுடையவனுய் நடந்த வரலாற்றையெல்லாஞ் சொல்லவேண்டுமென்று தூதுவனைத் திருமுகத்தோ டனுப்பினன்.

கார்முகப்படலம்

முற்றிற்று

எழுச்சிப்படலம்.

அத்திருமுகம் ஏற்றுச்சென்ற தூதுவரும் வாயுவேகமாய்க்காலால்நடந்து முரசொலியிடாது சத்திக்கும் அயோத்தியாநகரத்தையடைந்து அந்தச்சக்கரவர்த்தினைபவணங்கிக் காணஇடமிலலாமல் அரசர்களுடைய முடியோடுமுடி பொருகின்றவாசலிச்சென்று சோந்து அவரது அருளுப்பாட்டை முன்னடைந்து நமக்குத்தக்கமுறையோடனுகி அவரதுவீரக்கழலையணிந்த பாதங்களிள்க் கைதொழுது செல்வமிகுந்த அச்சக்கரவர்த்தியைப்புகழ்ந்து அரசர்பெருமானே! தேவரீர்மக்களாகியஇராமலக்குமணர்போனபின்பு இன்னதென்று கடந்தவரலாற்றைப் பல்படச்சொல்லிமுடித்தார்கள். பிறகு அத்தூதர்கள் தாங்கள் கொண்டுவந்த திருமுகத்தைக்காடடி முடிவில்லாத புகழினையுடைய சக்கரவர்த்தியே இதுவும் அவ்வரலாற்றை யெழுதியதென்று தெரிவித்தனர். தன்னருகிலிருந்த கல்வியறிவாளன் ஆதரத்தோடு வணங்கிநிற்கவே, ஒன்றுக்கொன்று மாறுபட்டொலிக்கின்ற வீரகண்டையணிந்த சக்கரவர்த்தி அத்திருமுகத்தைப்படியென்று கட்டளையிட்டனர். சனகராசனும விசுவாமித்திரமுனிவரும் அனுப்பிய ஓலைச்சுருளில தன் மூத்தகுமாரனுகிய தாசரதியின் விற்றொழிலின் சங்கதியெல்லாம காதிற்கேட்டுவிட்ட மாத்திரத்தில் தன்தோளில் அணிந்திருந்த வாகுவலயங்கள் வளைவுநிமிர்ந்து கழன்றுபோகப்பெரியமலைகள் போலத் தோள்கள் பூரித்தன. சக்கரவர்த்தி கற்றைவார்சடைக்கண்ணுதற் பெருமானது ஏழுலகையும்வென்ற விலவின்பேரொலிதானே அன்று நாம் கேட்க இடித்தென்றுசொல்லி வசிட்டமுனிவர் முதலியோனைப்பார்த்துத் தன்னேநாடிச் சுபச்செய்திகொணாந்த தூதுவருக்குவேண்டிய பொன்னுபரணங்களையும் அழகிய ஆடைகளையுங்கொடுத்து சூரியகுலத்திற்பிறந்த என் முன்னேர்செய்த தவத்தால் மன்மதனுமானத்திருவவதரித்த சீராமன்இருக்கின்ற மிதுலாநகரத்தை நமது சேனைகளும அரசாகளும முன்னேசெல்லும் படி பறையறைவிக்கக் கட்டளையிட, அன்று திரிவிக்கிரமன் மாபலியிடத்து உலகமுழுதுங் தன்திருவடியாலளந்தகாலத்தில் சாப்புவன்திரிந்து பறைசாற்றியதுபோல,வள்ளுவன் அங்நகரமுழுதுந்திரிந்து பறைசாற்றவே,அதைக்கேளாத தன்முன்னே அங்நகரமாந்தரும மாதரும அரசகுமாரரும் வெற்றியுள்ள அரசரும்காற்றினுலெறியப்பட்டஅலைகடல்பொங்கினற்போல ஆனந்தசமுத்திரத்திலழுந்தி கடையுகத்தின்முடிவில் எந்தப்பொருளுங் காற்றினற்பசையற்றுப் போகப்பின்னே உலகத்திற்சிறிதேனு மிடமில்லையென்றுசொல்ல ஒரு சேரகிலையினின்றும் பெரும்கடல்போல வெழுந்துபோயின. இவ்வாறு புறப்படுங் காலத்தில் பூமிசிறிதென்னும்படி நெருங்கிய இரதங்கள் தம்மேல் ஏறிவருகின்ற அரசரால் உதயமாகுஞ்சூரியன்போற் பிரகாசித்தன. யானைகள் தம் முகத்திலணிந்திருக்கிற முகபடாத்தினுல் இந்திரவில்லிட்ட மேகம்போல்வினங்கின. கார்மினின்றும் எழுந்துவிரியும் வெள்ளைக்குடைகள் பால்பரந்ததுபோலப் புறக்குமியல்பினையுடைய எண்ணிலாதஅன்னப்பறவைகள்போலிருந்தன. ஆகாயத்தில் விரிந்தெழுந்தகொடிகள் விண்ணுலகமுழுதும்அவைகளிற்

சூலங்களால் பிருண்டுநிந்துசிந்தும் தோல்களைப்போன்றன. ஆடுகின்ற துகிற் கொடிகள் நுட்பமாகிய கையையுடைய யானைவெள்ளத்தைக்கண்டு இதுகட லென்று பரப்பாய் ஆகாயமுழுதும் எழுந்தனவாய் நீருண்ணத் தாழவரும் வெள்ளை மேகம்போன்றன. ஆபரணங்க ளெல்லாம் இளஞ்சூரியனைப்போற் பிரகாசிக்கும். அந்தப்பிரகாசத்தில் மயிற்பீலிக்குடையி னிடத்துண்டான நிழல்கெடவுலாவும். அந்தப்பீலிக்குடை நீருண்டமேகத்திலுண்டான அழகு கெடப்பரவும். அந்தமேகங்கள் சிதையுப்படி பேரிகைக்கூட்டமுழங்காநிற்கும். பதாதிகள்போகுமிடங்களிலெல்லாம் மாதாகள்தங்கள்தனத்திலெழுதியகோல மும், மாந்தர்மலேபோன்றதோளிலெழுதியசாதனக்கோலமுமடதிர்ந்து கலந்து போய்அந்நால்வகையாகிய சேனைசமுத்திரத்திற்கணையப்போல விளங்கிற்று. தம்மிடத்தே விருப்பமிகுந்த கணவருக்கு வெலல்பபாகின சுவையைப்பார்க்கி லும் சுவைமிகுந்த சொல்லேப்பேசும செவ்வாயையுடைய பெண்கள்மேற் போர்வையிட, அதனுள்ளே அவர்கள் ஆருயிரைவருத்தழெளித்துக்கொண்டிரு க்கும் எமனே தானணிந்திருக்கும் முத்தினெளியால முழுமிலாவைப்போலச் சந்திரகைவீச ஆபரணங்களிற் பதிந்திருக்கிற மணியின்வரிசைகளால் இள வெயிலேப் பரப்பும. இதுகிடக்க ; விலலையுடையாரும் வாளையுடையாரும் பூமாலைமுதலியவற்றினல் மணம்வீசுஞ்சிகையையுடையாரும்மலையைவென்று உயர்ந்த பொன்னுலாகிய வாகுவலயமணிந்த தோளையுடையாருமாகிய மாந் தர்கொடிபோன்ற தங்கள் மனைவியர்பக்கத்திலேவர பிடியானையைத்தழுவிய களிற்றியானையைப்போல நடந்தனர். மாதர்கள் ஏறிநடத்தும் கிங்கிணியணி ந்த குதிரைகள் தங்கள்மேலே தங்கியிருக்கின்ற அன்னப்பறவைகளைப் புரட் டிக்கொண்டு வருகின்ற ஆறுகளைபோன்றிருந்தன. பொன்னரங்களைப் பூண்டிருக்கின்ற தனங்களையும புரிவினையுடைய மெலலியகூந்தலையுமுடைய் பெணகள் மின்னலேப்போன்றிருக்க இளமையான பிடியானைகள் மேகங்களைப் போன்று விளங்கியிருக்கும். மணமமைந்த புதியமலர்கள் மேகத்தாற் சூழப் பட்டாற்போல நெருங்கிய கூந்தலையுடைய மாதர்களுடைய முகமாத்திரம விளங்குவதனல் பலமுழுமதிகள் ஏறிவரும விமானங்களைபபோல அவர்க ளேறிப்போகும் சிவிகைக்கூட்டந் தோன்றுகிற்கும். பட்டத்துயானைகள் மத மயக்கமடைந்து மதமழையிழிவதனலுண்டாகிய சேற்றைக்கடவாமல் அலை கடலேப்போல முழங்கும் மூக்கையுடைய தந்திக்கையைத்தூக்கி அசைப்பது திக்கயங்களைப் போர்க்குத்தேடுவதை யொத்திருக்கும். குதிரைப்பந்திகள் கிங்கிணிமாலையோடும் தாளவொத்தோடுமை தாவியிருந்தாலும் தெய்வத்தன் மைபோலவும் புறத்திற்சேர்ந்தும் அகத்திற்சேராத கச்சையணிந்து தொய்யி லெழுதிய தனங்களையுடைய உருத்திரகணிகையர் மனம்போலவும் பூமியின் மேல் மிதியாமலிருக்கும். சிலர் மனத்தினல் ஊடிப்பிருப்பாரும், அதுவெளியே தோன்றப் பொருந்தாதபார்வையுடையாரும். பெருமூச்செறிவாரும், நெரிந்த நெற்றியையுடையாரும், இதழ்விரிந்தமலர்மாலேதீங்கிய கூந்தலையுடையாருமாய் தங்கணவருக்கு உயிரேபோல அவர்களருகிலே நடந்துசெல்வர். அருவியைப் போல மதம்பாய்கின்ற கன்னத்தின்தொளையில் குத்தும் இருப்புமுட்போல்

அனலெச்சொரியும் கண்ணையுடைய யானைகள் பகையென்றெண்ணி மலைக்ளை மோதிப் பெருமரங்களைக் குறைவுபடுப்படி இடையிலேயொடித்துவிட்டுச் சாய்த்து உராவிச் சரயுந்திபோலச்செல்லும். துன்பத்திலழுந்திய எல்லாவுயிர்களுக்கும் அருளாகிய ஊன்றுகோலாகிய சக்கரவர்த்தி தன்னிருக்கையினின்றும் எழுந்திராமல் அவன் ஆக்கினையாலெழுந்து உலகமெல்லாம் உழுந்திட இடமிலலையென்று சொல்லும்படி நெருங்கி அயோத்தியா நகரத்திற்கும் மிதுலைக்கும்மத்தியிலேசெல்லும்சேனைகளின்முதலணிபோய்க்கொடிகளையுண்டும் மிதுலாபுரியிலே கூடியது; அலங்காரநிறைந்த பண்டிகள் பரிசைபோலனைசாதுசெல்லுவன கண்டோர் கண்கவருமாசையால நட்டுக்கொள்ளத்தோன்றுகின்ற தேனுண்ண வண்டுகளடர்ந்த கூந்தலையுடைய மாதர்கள் முகக்கூட்டத்தால் தாமனைத்தடாகமபோலும் ஒத்திருந்தன. பணடியில்லைவத்த பதுமைபோன்ற ஒருபெணணெடு ஓரிளையான் அன்புடையானுய்ச் செல்பவன்இடைவழியிலே அப்பாவைநோக்கலும்நோக்கியகடைக்கணின்கருமை ஆண்டன்மையுடைய அவ்விளையோனுக்கு இனிமையுடையதாகிய அமுதம்போலாயிற்று. பின்னும் வலையிலகப்பட்ட மான்கன்றினைக்கம்போலு மருண்டநோக்கத்தையுடையாளைவிட்டுப பிரிந்துபோகின்றவனுகிய ஓர் தலைவன் மருதநிலத்தில் அன்னமாகிய பறவையையும அது ஏறியிருந்த தாமனையையுமபார்த்து உள்ளமுந்தானுமையிருந்து அவளைத்தடிப்பபோவதும்வருவதுமாயுசலாடிவருவான். இப்படி அரசர் திரண்டுநெருங்கியிருக்க, மேககர்ச்சனைபோலுஞ் சங்கங்களும் பேரியும் முழங்க, சேனையானதுவெண்பட்டுக்குடைகளும்சாமரைகளுங்கவிதலாற்கங்கையை யொத்திருந்ததுமன்றி, தேவர்கள் அஞ்சுகின்ற அத்தெய்வத்தன்மையுடையமாதர்கள்தம்முடையகண்ணென்றுசொலலும்உயிரைக்கவருங்கூர்மையுள்ள முனையமைந்த யமன் கைவேல்களை ஆடவருடைய மார்பிற் புதையும்படி செய்வதனல் யுத்தபூமியை ஒத்திருந்தது. தூணைகள் நெருங்கினற்போலப் புயங்கணெருங்கின ; மின்னலகள் நெருங்கினற்போல வாள்கள் நெருங்கின; தமமினெருங்கினற்போல காலகணெருங்கின;சிங்கங்கள் நெருங்கினற்போல ஆடவாநெருங்கினர். கச்சுவிருமபியடையும் தனத்தில்வைத்தகண்வாங்கிடப்பேராமல அதனல் விளங்கும்முகத்தையுடையவன் வழிதெரியாதுகுருடோபோற்சென்று ஒரு வலியமைந்த யானையை முட்டியும், சுழிகள் வாய்ந்த காவுமியலடுடைய குதிரைதுள்ள அதினின்றும் தவறிவீழத்தொடங்கிபமயிலன்னசாயன்மங்கையொருத்தியைத்தூணன்னபுயத்தால் எடுத்தேகந்தி அதினின்று மொழியாமலும தறையிலுமவையாமலுந்தாங்கியிருந்தும,தாமனைமலரோன்ற இணடுபோதங்களும் நோவத்தொடர்ந்து போர்செய்யுங் கணைபோலுங்கண்ணையுடையவொருத்தியையோரிடபத்தையொத்தநடையையுடைய ஒருவன்விருப்பத்தைத்தரும் பருத்ததனமாகியயானையைக்கட்ட இப்பெண்ணிற்கு மார்பின் பரபபில்லையென்றும், சுழித்துமுடிந்த மயிர்முடியில் வண்டுகள் சத்திக்க மதயானைமேற் பவனிவருமொருவன் தன்னைநோக்கிய ஒருமாதின் விழியைநோக்கி இவை மிகக்கூர்மையுடையனவென்று மதித்துத்தன்கையிலிருக்கும் வேலைநோக்கியும், அலையின்சுருளையொத்துச் சுருண்டகணைட

கூந்தலையும் தாமரைமலர்போன்ற பாதங்களையுங் கருங்கண்ணுகிய வாளைய முடையாளை ஒருகாளை வளையலையணிந்த நீண்ட தோளையுடையீர் மற்றை யுறுப்புகளெல்லா மொருமிக்க விருக்க இடையைமாத்திரம் எங்கே மறந்து வைத்தீரென்றும், ஒருவள்ளல் எமனது கொலைபோலும் கொலையையுடைய கண்ணினுலல்லது வாயினுல் ஒருசொல்லையுஞ்சொல்லாத ஒருபெண்ணை ஆற்று நீரில் அழகியகையாலெடுத்து அக்கரையேற்றுவா யாரெனென்றும் கடக்க, கற்றிரைரு புறத்தில் யாவராலுங் கொண்டு சொல்லக் கூடாத பாரங்களைச் சுமந்துசெல்லும் ஒட்டைகள் இதயம் உலாந்தாற்போலத் தங்கள்வாய்கள் உலர்ந்தும், கள்ளுண்மாக்கள்போலக் கையாகிய வெமபுழுதலிய பொருள் களைத்தேடாமல் தேன் கருபடுமுதலிய இன்சுவையுள்ள பொருள்களையே தேடியுண்ணவும், சிவந்தகண்ணுமை இருள்திரளாடாலொத்த காட்சியுங்கறுத்த மேனியுமுடைய பப்பரர் இருப்பைத்திருத்தும் சமயட்டினையத் தினையிய கணையத்தொடு பிடரிலேந்திச் செல்லும மயக்கத்தை யுடைய யானைகளைப் போல்தோளிற் சுமந்தகாவடியோடு செல்லவும், மயக்கத்தையுடைய ஒரு மத யானை பாகனைடு மாறுபட்டு பிடியானைமேல் கையைவைக்க அதனைலஅப்பிடி யானைமேல் ஏறியிருந்தமாதாகள் பயப்பட்டு மூடிக்கொள்ளத் தங்களுக்கு இர ண்டுகுடங் கைகளினுந் தங்கள் கணைகளடங்காமையால் மிகவுஞ்சோர்ந்து துன்பப்படவும், மேகலாபரணமணிந்த பெணைகள் கூட்டத்திற் சிந்தாகளும தாமரைக்காட்டில் ஆமையின்மேலவரும் தேரையைப்போல வாள்பூமியின் மேற்படிகின்ற பிடியானைமேலேறிப்போகவும, கமடத்திற்கட்டப்பட்டனவாய் மதிமருண்டு முனைனங்காலகளைவளைத்துஒருபுறங்கொடுபனைவளைச்சுமந்து ஒரு குதிரையோடவும், அப்படியோடுவது இருநிலவுலகத்திலிருக்கத் தகுதியுடை யவளல்லள், இந்திரனுக்கே தகுதியானவளைனறு தெரிவிபதை யொத்திருக் கவும், எமது பெருமானுகிய சிராபபிரான ராஜவிலைல முறித்தானென்று சொலலப்பட்ட சுபசரிதத்தை ஆடவர்கள் பேசிக்கொண்டிருபடது கேட்டு அவிழ்ந்து விழுகின்ற மயிர்ச்சாகதுபூயை கூந்தலகளை யேதாமல சிக்குண டறுதுபோய் மனிகள்சிந்தும மேகலையையுமெணணுமல் மனங்களிதூதாட வும, அரசனுடைய தலைவாயலிற் கட்டப்படட யானையினையும மாதர்களையும் முழுதும் அடையப்பயந்த அந்தணர்கள் குடையையுடையாராயும கமண் டலம் சிக்கத்திலுடையாராயும குந்திய நடையையுடையாராயும் நாசி மேல்வைத்து மூடியகையைத் தொங்கவிடாதாராயும் முன்னேசெல்லவும, மலா மணம்ஷ்சுங் கூந்தலையுடையமாதாகள் தங்கள் கணவர் தம்மைவிடடுப் பிரிந்ததனலுண்டாகும் துன்பத்தினுல அவாகணைகளிலிருந்துணடாகும் நீரூற் றில்நேரோ அக்கணவர்கள் வடிவம்தோன்ற அதைப்பார்த்து என்னிடத்திற் பகைகொணடுபோய் இப்போது நெருங்கவந்தமையால தோமேலறென்று கைகளைத்தாழ்த்தியும், ஆரவாரத்தோடு செல்லும் தோகளும்யானைகளுங் குதிரைகளும் வரிசையாகச்செல்லும் பேரிகைவாத்தியங்களும். நெருக்க மாய்ச்சென்று எங்குஞ் செவிடுபட முழக்கும் ஓசையால் அவ்விடத்தில் போவார் யாவரும் ஒருவரோ டொருவர் பேசுவது அறியப்படாமையால்

ஊனமைபோல கடந்தும், பரந்தவடிவினதாகிய சிலம்புகளின் கூண்டுகளைப் போன்ற துகிலையும் மலர்த்தேன்நிரம்பிய, கரியகூந்தலையுடைய கூட்டங்கள் காற்சிலம்புகள் சத்திக்கடப்பதனல் பலவகையானபறவைகள் கூட்டமாய்ச் சத்திக்கும் பொய்கையைப்போன்றும், தெள்ளியதினைகளையுடைய திருப்பாற் கடலிற் பிறந்த திருமகளைக் கற்பினலும் அழகினலும்வென்ற மாதர் தாம் ஏறிச்செல்லும் வாகனங்களின் இருமருங்குக் கட்டிவிட்டிருக்கிற தினைச்சீலைச் சந்தின்வழியாய்ப் பார்க்கின்ற பார்வைகளைப்பார்த்து ஆடவர் கண்கள்மகிழ்வது யானமதத்தைக்களித்து வண்டுகள்மொய்ப்பதுபோலவும், ஏழுமேகங்கள் சத்திப்பனபோல குதிரைகள்கனைக்க, அச்சத்தமே இனியவாத்தியமாக உயிர்மட்டும் உருவுகின்ற பார்வையமைந்து புகழினைப்படைத்த கருங்கண்ணையுடைய மாதர்கள் காலின்கண் அணிந்திருக்கும் சிலம்புகள் உழையென்னும் இசைகள் சப்தித்தனபோலச் சப்திக்கவும், மண்களிக்கும்படிநடக்கும் பெண்களினுடைய கண்களாகிய வண்டுகள்போலமன்மதன் நமக்குப்போர்கிடைத்ததென்று மகிழக்கண்ட சில ஆடவர்கண்கள் களிப்படையவும், கருதலளவைக் குமரிதாகிய இடையையும், பவளவாயையும், கனிமொழியையுமுடைய மாதர்கள் கச்சிறுக்கட்டப்பட்டுவிளங்கும் செவ்விளநீரினின்றும் உதிர்ந்த சுண்ணப் பொடிகள் அவ் வெளியெங்கும் நிரம்பி, துகளு மடர்ந்தும் சித்திரத்தடந் தேரூர்ந்து செல்லுமாடவரும மாதரும் அறிவினை யொரோவழியாகச்செலுத்திப்பேசவும் நினைக்கவும அளவில்லாதவர் எவ்வளவோ, இப்படிபலபேர் மேற் சொன்னபடி நெருங்கிக்களித்து வழிக்கொண்டு முன்னடப்பாராயினர். இது கிடக்க;

பிடர்மயிருள்ள குதிரைகளும் தேர்களும் வீரர்களும் அவ்விடமெங்குங் கூடி- கால்விசைத்தலோடு விரைதுசெலல, மிகுந்த தூளிப்படலமபெருகி மேகத்தின் ஈரமைந்த துளிகள்வருகின்ற உலராததொளைகளை யடைத்து எல்லாத் திக்கயங்களின் மதத்தொளைகளை உண்மையாகத் தூர்க்கும. ஆடவர்கள் கேடயத்தைப்பிடித்தகையால் வாளையும்பற்றிப்பிடித்துவளையலணிந்த கையையுடைய தமது மனைவியரை மற்றைக்கையால் மெல்லப்பிடித்துப் பொற்பட்டமணிந்த யானையின் மதநீரினலான சேற்றுவழியில் அவர்கள்பாடகமணிந்த கால்களால்நடக்கும்படிசெய்து கொண்டுபோவதும், வயலிலும் நீர் நிலையிலும் நல்லநீரைக்கட்டிய இடங்களிலும் பூத்தநெய்தன்மலரும் குமுதமலரும் செந்தாமரைமலரும் முறையே கைகளினழகையும் முகத்தினழகையும் வாயினழகையுங் காட்டக்கண்டு அவற்றைப்பறித்து தாருமென்று தமது கணவரைக்கேட்பவரும், பந்திபந்தியாய்ச்செல்லுங் குதிரைகளினின்றும் இழிந்தமாதர்கள் யானையருகேவந்து விட்டதென்று கண்டோர் சொல்லக்கேட்டு வாசனையுள்ள பூங்கொத்தணிந்த கூந்தல்சரியவும், இரத்தினபரணங்கள் சிதறவும், அழகிய ஆடைகள் அவிழ்ந்துவிழவும் தாம் உடுத்திருந்த மெல்லிய ஆடையை தளிர்போன்ற கைகளால் அணைத்துக்கொண்டு மயிலினது கூட்டங்கள் ஓடிப்போவதுபோலச் சிதறியோடவும், குடைகளும் யானைகளும் பிளிற்றுஞ்சக்கூட்டமும், கொடிக்காடும் இடையிடைகலந்து எங்கும் வெள்

ளிடையின்றி மறைத்து இருள்செய்யும். ஆயுதங்களும், முடிகளும், ஆபரணங்களும் பரந்திரணங்களைப்பரப்பிச் செலலுவதலால் அங்கே யிடைக்கடி இரவும் பகலுமுண்டாக்கும், முருக்காபூவையொத்த இதழையும் முத்த நகையையுமுடைய மாதர்கள்முகங்களென்னு மதிக்கப்படுகின்ற தலையிலணிந்த சிகாவியென்னுந் திருக்கோலத்தையுடைய தெய்வவுத்தியென்னுமாணியானது காமனைமலரில் தீட்டப்பட்டனவாய் மாறிக்கிடந்த கூரியவாட்களின்கூட்டத்தை இடையிலே யறுக்குமு, நீங்கள் நீங்குங்கோள் நீங்குங்கோளென்றுசொல்லித் தூரத்தேபோவாருமு உளர். கடைபடுத்தருமையான கொடியவழியில் தங்கள் ஆபரணங்கள்சுருங்கி அறுத்து நெதிப்பிரகாசிக்கும் கூட்டமாகியமணிகளும், முத்துகளும், கலாபம சூழ்கிடக்க அணிந்த பாயபின்பாடம்போன்ற அல்குலையுடைய மாதாகள் தங்கள் காற்சிலப்பு கலீகலீனென்றுசத்திக்க, பகும்பொன்னுபரணமணிந்த களிர்போனறபாதங்களில் உறுத்தமயக்கமடைந்துபோவது அருமையென்றுநிற்பா. வெற்றியமைந்த பலவாத்தியங்கள்மேகங்களைப்போல எங்கும் குமுறுவதலை பண்டியிற்பூட்டப்பட்ட எருதுகள், அன்னப்பறவைகளைப்போல மாதர்கள் பயபடப்பட்டு நீங்கத்தூறைவிலலாத பாரமானபொருள்களெல்லாவற்றையும் தமமைக்கட்டிய கட்டோடு சமபாதமொழிய முறைமுறையாக நீங்கிபோய், இலலொழுக்கத்தின் முயற்சிகளாகிய பாரமனைத்தும் அவற்றில்வைத்த அவாவொடும் இருவகைப்பற்றற்று முறைமுறையாகவிட்டுவிட்டு வருத்தநதணைந்த யோகிகளைபோல வருத்தநதணைந்தன. மலைபோன்ற யானைகள் பாகருடைய வில்லினல் விடப்படுமி மிக்கவேகத்தையுடைய உண்டையைச் சிறிது மறியாமலும நீரணையைபற்றி யேறுமலும சிறையாகிய கச்சிலகப்பட்ட தனமாகிய மத்தகங்களும தந்தங்களும மேற்புறத்தேவிளங்க, முன்னோகாலில் திருப்பாற்கடலிற் றோன்றிய பனைக்கைபடைத்த ஐராவத மென்னுந் திசைக்களிற்றைப்போலும் நீலமலின்றும், கருமணல்மேலும் கூந்தலையும் கண்களாகியவாளையும சொல்லாகிய தேன்சிந்நும செவ்வாமபல்போலும்செவ்வாயையுமுடைய விறலியரோடு கலையாழைவாசிக்கும் செயிரியர்குதிரையையூர்ந்துகொணடு கினனர மிதுனப்பறவைபோன்று தேனப்பெய்வதுபோல் பாடுகின்ற குளிர்ச்சிமிக்கமேகராகக் குறிஞ்சிப்பாட்டைப் பாடுகின்றவர் காதுகளில் பொருந்தும்படிசென்றும், மதமயக்கங்கொண்ட சிவந்தகண்ணையுடைய யானைகள் அருவிபொழிபும மலைபோலும் மதசலமபொழிந்து, தம்மைக்குத்தும் அங்குசம வளைவுகிமிரச்சென்று, மாந்தா சிதறியோடுமபடியெங்குமோடுவதலல் தம் மதசலத்தில மொய்த்திருந்த விரிந்த சிறகினையுடைய வண்டுகள் வேறோர் யானையின்து மதசலத்திற்படிந்துண்டு, மாதராற்கரிய கூந்தலின்கண் மொய்க்கும்படி வேறு பிடிகளோடு தொடர்ந்துசெல்லும். சோடசகலைகள் நிறைந்த சந்திரோதயத்தைக்கண்ட நீனிறக்கடல்போலுங் கொட்டும் பேரிகை முதலிய தோற்கருவிமுழங்க, தேரும் யானையும் குதிரையும் பகைவர் குருதி தோய்ந்த வேற்படைபோலும் விழியையுடைய மாதரும் ஆடவரும் அழகு பெறக்கூடி விளைந்துசெல்ல, சக்கரவர்த்தி பட்டமகிஷிகளில் கடர்கத்திற் நந்த தாமரைக்காட்டில் விளங்கும் அன்னப்பறவையென்ன ஆயிரம் பரத்

தையார்சூழ மணியிற்குயின்ற சிவிகையையூர்ந்து அரம்பை மடவார் நாணுட்
கொள்ளக் கைகேசியும், கோவேறு கழுதைகளின்மேலேறிச் செவ்வரிபடர்ந்து
குவளைமலர்போலுங் கண்களையுடைய இரண்டாயிர மாதர் தன்னைச்சூழ்ந்து
வரச் சிவிகையிலேறிச் சுமத்திரையும், பலமணிகள் குயின்ற சிவிகையிலேறிக்
கோசலையும் ஒருபுறஞ் செல்வர். அழுதக்கேள்வி பலமுறை கேட்டுத்தெளி
ந்த சிந்தையுடையாரும், தேவர்கள் நாவில் ஆகுதியைத் தங் கையாலளிக்கும்
பெருந்தவமுடையாருமாகிய பலமுனிவர்பலர்புடைசூழ வசிட்டமுனிவர் சிவி-
கையிலேறிபபோவர். யானைகளும், குதிரைகளும், தேர்களும், காலாட்களும்
கடல்பெரியமலையைச்சூழ்ந்து நெருங்கிறற்போல இருபுறத்தும் பரம்ப,திருமா
மகள்வளரும் மார்புடையாரும் கடவுட்டன்மையுடைய வில்லினையுடையாரு
மாகித் தேரூர்ந்து செல்லும் வீராகளாகிய பாத சத்துருக்கர் விசுவாமித்திர
முனிவர் பின்னடந்த சீராம லக்குணனைப்போலப் பிரியாமற்போதருவர். முத்
துமாலை வச்சிரமாலை மோகனமாலைமுதலிய ஆபரணமணிந்து சக்கரவர்த்தி
ஆயிரமௌலி யமலனைத்தனதிமலர்பணிந்து வாழ்த்தி அனுட்டான முடித்
துக்கொண்டு வரம்பில்லாதமணியையும் பொன்னையும் வரிசையா யமைந்து
கிடக்கும் பசுக்கூட்டங்களையும் தானஞ்செய்து சுபமுகூர்த்தத்தில் புறப்பட்
டுப்போயினன். அத்தருணத்தில் எண்ணாயிரம்பேர் மணிக்கலசமேந்தி வேத
மந்திர முச்சரித்து அறுகமடல்லால நீரைத்தூவிக்கொண்டு வரலாற்று முறை
மையாய் எதிரவந்தனர். மழலைச்சொற்படைத்துப் பருமணி குயின்ற கலாப
முடைய ஒருகோடி சுமங்கலியப்பெணகள் பல்லாண்டுபாடிக்கொண்டு வந்த
னர். இவ்வாறு செலலுஞ்சமையத்தில அரசரிற் சிலர் என்னைக்கண்டானிலலை
யென்பர், சிலர் என்னைக்கண்டானென்பா, சிலர் காதிலணிந்த குண்டலம்
வீழ்ந்தென்பர், சிலர் இனிச்சென்று குறுகுதலோவரிதென்பர், சிலர்புறப்பா
ணிடோவென்பர், சிலர் சங்கவாத்திய முழக்கங்கேட்டோமே யென்பர்,சிலர்
மண்டலத்தையாளும் அரசர்களெல்லாம் மயங்க நெருங்கினரே யென்பர்.
சக்கரவர்த்தியோ சங்கமுழங்க வேய்ங்குழலூத ஊதுகாமடும் பேரிகையு
மொலிபடப் பீலிக்குஞ்சங்களுங் குடைகளும் நிழலைச்செய்யச்சென்ற இவ்
வைபவங்களை எல்லாம் தேவர்கள்கண்டு மயங்கித் தேவேந்திரனே பூமண்
டலத்திற் செல்கின்றனென்று எண்ணிக்கொள்ள, இரண்டுயோசனை தூரஞ்
சென்றுபொன்மலைபோலிருக்கும் சந்திரசைலமென்னும் மலையையணுகினன்.
சேனைசமுத்திரமு மிறங்கிற்று.

எழுச்சிப்படலம்
முற்றிற்று.

வனைக்காட்சிப்படலம்.

யானையொன்று வஞ்சனையில்லாமல் அடங்காதபகைவனை வென்று மறப் பென்பதே இடம்பெறுக அறிவினையுடையானது ஆராய்ச்சிபோலத் தான் வாரினற் கட்டுண்ட பிணையையும் மராமரத்தினது வளாையும் வேருடன் பிடுங்கிக்கொண்டு மலையென நடந்தது. திரண்டபராளையடர்ந்த பிணைகளைப் பிடைத்த மருதமரங்கள் முறியும்படி பின்றொடர்ந்துவர, உரலொடு அம்மரங் களுக்கிடையேசென்றகணணனைபோல,இரண்டுமாமரங்கள் ஒருங்கேமுறியும் படி உருண்டு பின்வரும் காலுந்தொடாதகதியுடன்.அமமரங்களுக்கிடையே நடந்தது. கோபத்தை யாற்றத்தகுந்த இனிய குறிபடுளைகளைச் சொல்லிப் பக்குவத்திலிசைந்துவர நடத்துகின்ற பாகனை அமைச்சனையொத்திருக்க, யானையொன்று பலவகையால ஏற்குமபடி அவ்வமைச்சன் பல நீதிநூற்களி னின்றும் மெல்லென வெடுத்துக்காட்டும் உறுதிமொழிகளை யேற்றுக்கொள் ளாத அரசனையொத்திருக்கவும,பகைகாணடநாகினின்று மேகமபோலமுழங்கி இருட்புழள் பாயும் யானையொன்று வனக்களிறுசென்ற வழியைக் கரத்தாற் பரிசித்துக்கொண்டு பருந்துகள் பின்றொடர்ந்துவரக் காற்றேபோல் முன்னே யோராறுசென்ற வழியிலேயே போகின்ற ஆற்றினையொத்துப்போயிற்று. மற் றொன்று அணியணியாக வருந்துக்கட்டிய யானவரிசையிலமிக்கமதநாற்றம் வீசத் தன்னைக்காத்திருந்த பாகன் கையங்குசம் நிமிர மனைத்தைவிடாது மோந்துசென்று ஏழிலைபபாலியென்னும மரத்தைப் பொடிபபொடியாக முன் னங்காலால் தேய்க்கவும், அளவிலலாத வலிபடைத்த அகேக மதயானைக ளும அவற்றொடுகெருங்கிய திலகமணிந்த பிடியானகளும் கன்றுகளும்அடர்ந் தும்போயின. அவ்வா றடாநதிருபபது கொம்புகள் நீண்ட காட்டின்கண் யானைக் கூட்டத்தையே யொத்தும், அச்சந்திரசயிலம அணைந்தடத்தும் யூதத் தலைவனையே யொத்தும் விளங்கின. இது நிற்க ;

அறியவேண்டுவன வெல்லாமறிந்த மேலோர் அறிவில்லாத கயவனைச் சேரினும் அவருடைய மயங்கிய இழிந்த குணத்தைநீக்கி மேலாய குண முடையாராகச் செய்வதே இயற்கை, ஆதலால அவ்வீதிதோறும் செலலு கின்ற தேர்கள் சக்கரங்களா லுருண்டு சென்றவிடமெலலாம் பொன்னை யுரைத்துரைத் தோடிச்சென்று கருங்கற்பாறைகளையும் தன்னிறமாகச் செய் தனவெனின், அத்தேர்களின் மிகுதியைச் சொல்லவேண்டுமோ ? இவ்வாறு தேர்களுரைந்து செல்லவும், கொவ்வைக்கனியினது அழகினையுடைய வாயினை இந்திரகோபத்தைக்கவ்விய அழகினையுடையனவென்றே காட்டின்கணுள்ள கூட்டமாகிய மயில்கள் மான்போலும் மருண்டபார்வையுடைய மாதராரின் மை மிக்க மேகலாபரணத்தி னழகினையும் அழகிய சாயலினழகினையும் நோக் கத் திரிகின்றனபோலத் திரிந்தன. ஒருபுறத்தே குதிரையினின்று மிழிந்தா ராய் அன்னப்பறவைபோல நடந்து தழைநிரம்பிய மெல்லியமரங்கள்நிழலுண் டாய் நிறைந்தவிடத்திலே புகுந்த மாதரார் தம்முடம்பி லணிந்த் மணிக் கோவைகளாலாகிய கலாபமும் குழைகளும் பிறவணிகளும் பிரகாசிப்பதலல்

மலர்ந்த பூங்கொம்பேபோலத் தோன்றினர். சிலமாதர் வழியின்கண் வருந்தின வராய் இதழையுடைய தாமரை மலரொன்றெண்ணித் தளிர்போன்ற மெல்லிய சிவந்த பாதங்களிலும் முகத்திலும் தேன்வள்ளத்தைக்கொள்ளும் வாழ்க் கையையுடைய வண்டுகள் மொய்த்துச் சுழலவும், விளங்குதும் தம்முருவம் ஓர் பளிக்குப்பாறையில் உபசாரஞ்செய்யவந்த தமது பாங்கியர் சிறிதும் தணியா மல் சங்கேதகப்படவும் கண்வளர்ந்தனர். மின்னலொடுகூடி விளங்கும் மேகங் கள் பூமியிற் படிந்தாற்போல பிடிகள் புகுந்து பூமியிற்படியக் கொடிபோன்ற மாதரார் உடுக்கையைப் உவமையாகப் பெற்ற இடையையுடைய திருமகள் தன்னிருக்கையாகிய செந்தாமரை மலரை நீங்கிக் குடிபுகுந்தாற்போல, அப் பிடிகள்மேலிட்டு விரித்த செம்பட்டுத்தவிசைத் துறந்து பாதங்கள் நடந் தால் கன்றிப்போய்விடுமேயெனக் கிண்கிணிகள் புலம்ப நடந்து குடிபுகுந் னர். உண்ணுதற்குரிய உணவுகளை யுண்பித்துக் குமரர்களால் நகரத்தினின் றுங் கொண்டுவரப்பட்டும், கேட்டோர் நெஞ்சமஞ்சும் முழக்கத்தை யுடையன வும் துருக்கர் கொண்டுவர வந்தனவுமாகிக் கல்லணை யமைந்து வெற்றிமேற் கொண்ட குதிரைகளை நிலமகளினது மார்பிலணிந்த பலவகை நிறமுள்ளமணி களாலாகிய சரப்பணிபோல முறைமுறையாக நிறைத்தனர். அலைகள் நிரைக் கப்பட்டனபோல நீண்ட நிரைச்சிலைகளை நிறைத்தனர். கடல்கள் நிரைக்கப் பட்டனபோல அங்காடிக்கடைகள் நிறைத்தனர். மேகங்களின் வரிசையே போல யானைகளைச் சோலைகளினிடத்தே நிறைத்தனர். காற்றினை நிறைத்தாற் போலக்குதிரையை நிறைத்தனர்.

நடிக்கின்ற மயிலைபோல வருகின்ற மான்போலும் மருண்ட பார்வையை யுடைய மாதராரும், வடித்தவேலையுடைய வீரரும் மயங்கித்திரிந்து இடியைப் போலச் சத்திக்கும் முரசவாத்தியத்தின் ஓசையாலும், எங்கும் பரவச்சத்திக் கும் சங்கவாத்தியவோசையாலும், கொடிகளினாலும் அறிந்து தத்தம் அர சர் மாளிகைகளை யடைந்தனர். கால்கள் மிதித்து நடப்பதனால் எழுந்த தூளிப்படலத்தால் பொலிவிழந்த சரீரத்தில் அமுதத்தினிடத் துண்டாகிய நுரையைப்போன்ற மெல்லிய வெண்டுகிலால் இளங்குமரர் சுத்தமாக அத் தூளிப்படலத்தை யுதிர்த்ததனால் ஓவியமோபோலச் சித்திரங்களைப் புதுக்கி னர்களென்று கண்டோர் சொல்லும்படி இளமாதரார் குற்றமொன்று மின் றித்தோன்றினர். மலையினின்று மிறங்கித் தனையிற்சேரும் பராற்றலையுடைய சிங்கவேறுபோல, முன்னங்கால்களுயர்ந்த யானைகளின்மேலேறிய அரசர்க ளிழிந்து விரிந்த கழுகம்பாளையை யொத்துலவும் சாமனைகளின் காற்றுத் தம்மிருமருங்கும் படப்போய் ஒளிவீச முறைமைப்படவமைத்த படத்தினாற் செய்த வீடுகளிற் புகுந்தனர். தூசிதேடு வெண்படத்தாலமைத்த சிறுவீடுக டோறும் மாதரார் இயற்கை மணமமைந்த புன்னகையொடுகூடிய முகங்கள் மேகமுலவிச் செல்லும் ஆகாயத்தில் தங்கியிருக்கும் சந்திரனுடைய கிரணங் களுக்கொப்பாக வழங்கும் ஒளியால் அக்குடில்களுக்கு எப்புறத்துங்கட்டிய நிலாத்சிலைகள் வெண்மையாகிய நிலாவிழுங்கியதொத்திருக்கும். மண்ணிற் பொருந்த விழுந்து நீண்டவாளைப்பொருந்த நிமிர்ந்து தன்னுடம்பின் கரிய

நிறத்தை முழுதுமறைத்த வெண்ணிறமாகிய நறிய பொடியை உதறிவிட்டு ஒருபாகத்தில் ஒருபுறத்தே வெண்ணிறமுள்ள நறியபொடியை உதருமலே தரித்த மதயானை நெற்றிமே லொற்றைநாட்டமுடைய பரமசிவன் தன்திரு மேனியி னெருகூற்றிற் பொருந்த வருகின்ற கண்ணினேபோல வாகிற்கும். ஒள்ளியபாய்புரிகள் தியவரோடு நட்பமைந்த நிறத்தினையுடைய நல்லறிவுடை யோர் அத்தியாற்குணச்செயலே யாராய்ந்துணர்ந்தாராய் அக்கணமே அவரைத் துறந்தாற்போன்றுபொருந்த வரும் நுண்புழுதியிற் படிந்து புரண்டெழுந்து வினைந்து உதறிநிற்கும். விழுந்த பனிபோன்ற திரைச்சீலகளை நீளக்கட்டியிருக் கும் குடில்களிலெலலாம் அம்மனை கழங்குவினையாடும் மாதராரி கருங்கண் கள், அணிபாகவமைந்து கிடக்கும் ஒலிகடலின்னறிகின்ற அலைகளில துள்ளித் துள்ளி அவற்றிற் பிறழ்ந்தொளிரும் கொழுங்கயன் மீனேபோல விளங்கித் தோன்றும். தெண்ணீரையுடைய ஆறுகள் அங்குசேனையை யிறுத்து நின்ற அரசர்களுக்கும் அவர்கள்பரிவாரங்களுக்கும் வெள்ளநீரைமிகத்தந்தனவேனும் தோண்டச்சுரக்கு நீரையும் சிறிதே யுதவாநிற்பதனல் இரப்பார்க்கு உற வினரைப்போல் விழைந்து தம்பாலுள்ள பொருளை மறுக்காமல் உபகரிக்கும் வள்ளற்றன்மை யுடையாரையும் ஒத்திருக்கும. நெருங்கி நெறித்த சிகை புறத்தே யசைய அழலினெடு மின்னல் திரிவனபோல மணியாரங்களசைந்து கிடக்கும் மார்பினையுடையார் மன்றல் மணநாறுகின்ற படத்திலுலாய வீடு களில் மலைத்துவாரத்திலுள்ள முழைகடோறும் நுழையும்பொறாற்றலையுடைய சிங்கங்களேபோல நுழைந்தனர். தந்தங்கள் வேல்களொத்துச் செம்மயினை யொத்த இங்குலிகத்தால நெற்றியிற் பூசப்பட்ட பெருங்களிறுகள் போர்க் குரிய மணிகள் ஆரவாரிக்க அலையொடுகூடிய நீரைக்கலக்குதலால் பெரு மிதமான கடலைக்கலக்கிய மது கயிடவனை யொத்தன. தமக்கும் அவர்க் கும் ஒத்திருக்க நன்னெறியிற் செலுத்தும் பாகர்சொன்ன குறிகளைக் கொள் ளாதனவாயும் பக்கங்களிற் கூட்டமாக மொய்த்த கயன்மீன்கள் வருத்த மிகமதியாதனவாயும் மதம்பொழியும் புழைக்கையையுடைய களிகள் உலக நடையையொத்திருக்கும்படி நன்னெறியிற்புகநடத்தும் அறிஞர்சொன்னகல்ல பொருளைக் கேளாதானையும், கூட்டமாக நட்பினரும் சுற்றத்தாரும் நின்று அபலவரு மிடித்துக்கூற மிகவு மதியாதாராய் விலைமாதரணிந்த மேகலாபர ணந்தங்கிய அல்குலிலவிழைந்து சேர்ந்தானையுமொத்து நீளக்கனையிலிறுமல் நிற்கின்றன. துகில்புனைந்த இடையையுடைய மாதராரோடு ஆடவர்நெருங்கி அட்டிற்சாலையில் எரிமூட்டப் பரப்பிய அகிற்கட்டைகளினுலாகிய செழும் புகை பரிதியொளிமழுங்கிக் கிடப்பக் கெடுதலின்றி யெங்குந்தோன்றியெழ மேகங்கள் நீரைக்குறைபடுக்க இறங்கும் புபலினையே நிகர்த்திருந்தது அப் பழமையாகிய உளர். இதுநிற்க ;

ஆங்காங்குப்பிளப்புறு மலையின்கண் வாழ்கின்ற வித்தியாதரர் காணவந்து தம்மொடிவந்த உறவினரையும் அறிகின்றவராய்த் திகைத்து நிற்பர். அழகுமுத லியவற்றின் பெருமைநிறைந்த குமரர்களும் மாதர்களும் கூடியிருப்பதனல் அச்சேனைசமுத்திரம் இறுத்த இடமோ தேவர்கள் வசிக்கும் விண்ணுலகம்.

பூமியிலிழிந்ததென்றே சொல்ல விளங்கிற்று. ஒருபுறத்தே முன்னுளில் துயி லுணர்ந்தெழுந்த கலத்தினையுடையாரும் துனியாகிய மிக்க வெறுப்பினையுடை யாரும் என்றுகூறப்பட்ட இருதிறத்தாருமாகிய மாதராெல்லாம் குயிலொடு பேசி சிலமபொடுகூய் மயிலினங் திரிவதென்று சொல்லத் திரிவர். ஒருபால் ஆடவரெல்லாம தமமுடைய தோள்களைப்போலுயர்ந்த அம்மலைகளின்வளங் களைபெலலாம இனிமையாகப்பார்த்துச் சிங்கவேறு திரிவதுபோல இரண்டு பாதங்களிலும் வீரக்கழ லாரவாரிக்கவும, தாமணிநதிருக்கும் மலராள்யி மாலைகளில வண்டுக ளார்பபவும, வாளிகள் இடையின் புடையேவிளங்கவும், செங்நிறம்படைத்த மணியாரங்களும் தோளணிகளும் ஒளிவீசவும் திரிதருவா. உலகைச் சூழ்கிடந்த கடலகளெல்லாம் சுடர்கின்ற மணிகளையுடைய மக மேருமலையைக் கவர்ந்துகொள்ள வளைநததுபோலப் பரவிவந் திறங்கின. சேனைகளும அங்குவந்து தங்கியிருக்கும் அரசரும் அவ்வரசாமனைவியரும் அர சிளங்குமாரும் அரசிளங்குமரிகளும் அமமலையின் வளங்காணத்தொடங்கினர். வானுலகையளாவி நிற்கும தருக்களில ஓங்கிய கொமபுகளை நெருங்கிப் பெண் வண்டுகளும மிஞிறுகளும துமபிகளும பரந்திசையாடிபபாடப் பருங்கையை கீட்டித்தளிரொடு மொடித்துக் கோட்டினையுடைய களிற்றியானைகள் தம்மா ருயிரோபோன்ற இளம்பிடிகளுக்குக் கொடுக்கும். பண்போல் இன்சொலபேசும பவளவாய்ச்சியர்குவளைமலர்போலுங்கண்ணையுடைய குறத்தியர்க்குவேங்கை மரங்கள் மணஞ்செய்பத்தக்க காலமிதுவேயெனனப் பூத்தலாகிய கணிதத் தொழிலைச்செய்பாநிற்கும். தான் தேனை நிரம்பவுண்டு மலர்களைவெறுத்த வண்டுகள் புதியதேனைச்சொரியும் புன்னைமரத்தின் நறுமலரை யடைய ஆகா யத்திலுள்ள தாரகாகணங்களிலை தாவாநிற்கும்.

தாராகணமென்னும் பிடிகளோடு தோன்றும் வெண்மதியாகிய மதகளிறு வளைவாகிய உயர்ந்த இருபாலினும் நுனியுள்ள கோடுகளை உயரநீட்டித் தேனிறுலைக் குத்துவதனால ஒழுகிப்பாய்கின்ற மடையினைத் தடுத்துத் தினைப் புனத்துக் குறவர் நீர்வளமுள்ள ஆகாயகங்கையைப்பாய்ச்சி மலைநெலலை வளர்ப்பர். கடந்து செல்வதற்கு அருமையா யிருப்பதனால் மலைச்சாரலில் தங்கி முகத்திற்குவமையாகப்பொருந்த காணும் மதியாகிய கணணாடியில் குற மாதர் தங்கருத்திற் கிசைந்த அலங்காரத்தை யிருபாலுங் காண்பர். உதி யாகிய துருத்தியினால் ஊதப்படுமுலைத்தீயும் வாயில அதிகமாக இடுகின்ற நீரும் பூசுதலைச்செய்ய நெய்யினையுண்ணுமே யாவிகவரும் கொதிநுதிவேற் கண்ணையுடைய குறமாதர் நெற்றியுடனே ஆகாயத்தில தவழுஞ் சந்திரனைக் குறவர் முகத்தொடு உவமங்கூறலான் மதியோ டொப்புப்பாராப்பர். சிறுகுடில் களின் முன்னிடங்களில் சிங்கக்குட்டிகள் அழகிய பிடிகளின்ற யானைக் கன்றுகளோடு விளையாடும் முற்றத்தின்கண் கோணுதற்குரிய பிறைமதியும் குறமாதர் ஒள்ளியநெற்றியையுடைய மனைவியரின்ற இளஞ்சிறுதோடுதவழும். வித்தியாதாரது அழகிய சிவிகையினுஞ்சிறந்த நீலமணிப்பாறையினும் தமது இயற்கையழிந்த கன்னங்களையுடைய யானைகளைக் கொன்றுங் கடுங்கோப மேற்கொண்ட சிங்கங்களினுடையகாற்சுவடுகளோடு அவ்வித்தியாதரமாதரது

செம்பஞ்சூட்டிய அழகிய பாதங்கள் படுவதனல் உளதாகிய ஈரமாகிய காற் சுவட்டை அம்மலையுடைத்தாயிருக்கும். மாதர்கள் செங்கயல்போலுங் கண்க ளின்பார்வை காதிதாடுபொருந்தாமலும், பறகள் தோன்றுமலும், கூந்தலவிழ் தது வீழாமலும், புருவங்கள் மேலெழாமலும, மலர்போன்ற அங்கையோடை யும், குரலோசையும். ஒருவழியே செலல யாழினரம்பிசையைப் பொருத் திப் பாடக்கேட்டு கின்னரங்கள் மயங்கும. கணவ ராவிசார, மையொடு கலந்து கணணினின்றும் தொடுமணற் கேணியினின்றும் சுரந்து கீர்பாய, ஊடலிறற் சிவப்பேறிய கண்ணராகிய அரமகளிர் தங்கூந்தலி னின்றும். நீங்கிய இதழ்விரிந்த மந்தாரமலாபோலே வாடாமல தேன் நீங்காமல் அம்மலை யிட மெங்குஞ்செறியும். மாந்தளிரோபோன்ற மேனியையுடைய குறத்தியர் மந்தார மாலையணிந்து கூந்தற்கமுகமபாளைகளைத் தங்கூந்தலோடும், ஆப ரணம்பூண்ட அரமகளிர் பாரமென்றே கழற்றியெறிந்த எரியினிறமபடைத்த மணிக்கடகங்களை யெடுத்துக் காந்தணமலரிற்பெய்து உவமைகாணவும், சில அரமகளிர் அமபுகள் பயிலும் வில்லேபோலப டிருவங்கள் தம்மிலதுடிக்க யாழிசையோடு மாறுபடாமல இனிமையாகப பாடுவா, மயிலோடு நடிப்பா, வெறுத்து நீத்த மணிமாலைகளையும முத்துமாலைகளையும் மாமரங்களிலிருக் கின்ற கடுவன்பூண மந்திகண்டு மனமகிழ்ச்சி யெய்துவ. சந்தனமரங்கள் தழைந்துசாய்ந்த மலைச்சாரலகடோறு மிருக்கும் காவிக்கற்களிற்சார்ந்த கூந் தலையுடைய பிடிகளெல்லாம குங்குமமணிந்தாறபோன்றும் ஒளியுள்ள மணித் திரளின்சோதி சூரியகிரணத்தொடு கலந்து மொய்ப்பதனல் ஆகாயத்திலென் றும் செவ்வானம்போன்றிருக்கவும, நிலமகட்கணியென்ன முத்தை வரிசை யாகச் சொரிந்து உமாதேவியை யொருபாலுடைய பரம்பொருள் முடிமேல் வருவீழும் கங்கையையொத்திருந்தன. வராபகன்ற மிக்கபோறறுகளால் நிரம்பிச் சந்தனத்தைச்சாராது அபாடலையினினறு வீழும் அருவியின்மாலை உலகளந்த கள்ளமாயன் உத்தரியமபோல்விளங்கின. கிளைகளடாத புன்னை மலரோடு இலவங்க மலையும் சேர்த்துதொடுத்துச் சூடுவோரும உண்டு களித்து வணடுகளையோட்டித் தூயதேனபபருகுவோரும் இசைதூவிலக் கண வரம்புகண்டு அதனைநீடு மாறுபடாமற் குற்றமற்ற மகரயாழேபோலக் கின்னரமிதுனங்கள் பாடும்பாட்டினல் ஊடலதவிர்ந்த குதினை முகம்போலும் முகத்தையுடைய மக்களைக் கண்டனர். இதுநிற்க;

பளிங்குக்கற்படுத்த இடமென்றெணணிப்பரந்த சுனையில் விளைந்துபுகுந் தவர்களாய் தாமணிந்த நுதலணியானது தாமரைமலர்போன்ற ஒளியமைந்த முகத்தினையுடைய மாதரது மேலுத்தரீயத்தையும் இடையிலுடுத்த தூசினை யும் குற்றமில்லாத அச்சுனைநீர்நனைக்க, வீரக்கழலையுடைய வீரர்கள்கண்டுபளிங் குக்கற்படுத்த இடத்துக்கும் குற்றமற்ற சுனைக்கும் வேற்றுமையறியாராய் தங் கைகளி லணிந்திருந்த கடகங்களையெறிந்து தங்களுக்குள்ளே நகையாடுவர். ஒருபுறத்தே மலர்ப்பள்ளியையும், இந்திரகோபத்தின் செந்நிறம்படைத்த தம் பலத்தையும், ஒருபுறத்தே தம்முயிரினுஞ்சிறந்த இனிய கணவனைப்பிரிந்ததை னல் அறிவிழந்த விந்தியாதரமாதர் படுக்கவெண்ணிய தளிர்படுக்கையையும்

கண்டார்கள். நீலோற்பல மலர்போன்ற கண்பிறழவும், பவளம்போன்ற செவ்வாயின் நகைதோன்றவும், தனத்தி லணிந்த முத்துமாலைக ளசையவும், வண்டுகள் ஒலித்துக் கூந்தலிற்சுழலும், காதுகளிற் சிறந்த மணிக்குண்டல மசையவும், சில அரமகளிலாடும் ஊசலையும், சுவர்க்கலோக வாசிகளாகிய அவ்வரமகளிற் சிலர் சிலந்த இதழையுடைய பவளக் கிண்ணம்போலும் வாயும், பின்னர் வரம்பில்லாத சுரும்புகளும், வண்டும், ஞிமிறும், விலைமகளிர் வெறுத்துச் சிறிது பொருட்பசையு மில்லையென்று பற்றுவிட்ட ஆடவனையேபோல் நீக்கிய இனிய கள்வார்த்திருந்த கிண்ணங்கள் பலகிடக்கவும், வில்லொடு பகைத்த நெற்றியையுடைய அரமகளிர் இரவைப் பகலாக்கும் ஒளியையுடைய பளிக்கறையிலமைந்த படுக்கையில் மற்போர்செய்ய வாய்ந்த திண்டோளினையுடைய தேவர்களோடு மணந்த அலங்காரத்தைப் புணர்ச்சிவிருப்பத்தால் தடையென்று வெறுத்துக் கழித்துவிட்ட கற்பகத்தருவின் நறுமலர்மாலைகள் ஆபரணங்களோடும் கிடந்திருக்கவும் காண்பர். தங்கையென்றுவமைசொல்ல மலரும்படிவேண்டி அருப்புகளரும்பிய காந்தண்மலரைப் பார்த்து இவைகள் படத்தையுடைய பாம்புகளென்றே யச்சுற்று வேற்கண்ணை மூடிக்கொள்பவரும், நெய்ப்பினையுடைய வயிரக்கல்லி னிடத்தில் தோன்றும் நிழலாகிய பூக்களைக்கொய்து தம்மினென்று தங்கணவனைத் தொழுபவரும், அசோகந்தளிரை நகங்களாற்கிள்ளியிட்டு உள்ளங்கையிற்கொண்ட சின்னங்களை முலைமுகட்டிற்பொருத்தித் தேனிரம்பிய பூக்களைக்கொய்பவரும், பல வகை நிறங்கள்தோன்ற நவரத்தினங்கள் பிரகாசிக்கும் மாலையின்கண் வாழ்க்கைசெய்யாத அன்னப்பறவைகள் புகுந்தனவென்று சொல்லும்படிபரந்து சுனையில் மூழ்குகின்றனருமாயினர். இதுநிற்க; நிலமாதரும் ஆடவரும்பெருகியிழியும் தேனையுண்ணப் பூவினிடத்தே மொய்த்த ஞிமிறுபோன்று எங்குமுடர்ந்து அவிழ்ந்தபூக்களினும் தங்கி நீங்காமல் தாமினிதாக விளையாடுவர். சிலர் இறங்குவதென்பதைச் சொல்லுமிடத்தே அது கழிபெருந்துன்பத்தைப் பிறப்பிக்கு மென்பதனைச் சிறிதுமெண்ணுதாராய் விண்ணுலகத்தினிடத்தே இன்பத்தையே நுகரும் தவமுடையாரேபோல, அம்மலையின் இன்பமனைத்தும் நுகர்ந்து அதன் வளப்பத்தைச் சிறிதுமறவாதவராயிருப்பர். மேகந்தவழும் அம்மலையோ! யானையையொத்தது. ஆகாயவீதியிற் செல்லும் சூரியனே! அம்மலைமேற் பாயும் சிங்கத்தையொத்தனன். செவ்வானமோ! அதுபாய்வதனால் உண்டாகிய உதிரம்போல்தோன்றியது. தின்னிய கிளைகளையுடைய மாமரங்களெல்லாம் தம்மேற் செவ்வானத்தி னொளி பாய்வதனாலே குறைவில்லாததளிர்களைத் தளிர்த்தனபோலத்தழைத்துநிற்க, அழகமைந்த அவ்வொளிபாய்ந்து நிறைவதனால் குற்றமற்ற அம்மலையி னுருவமுழுதும் செம்மணிகளாற் பதிக்கப்பட்ட மலையென்றுசொல்லும்படி யிருக்கவும், காண்பார்க் கினிமைதருவதாய் நல்ல தோற்றமுடையதா யிருந்தாலும் கணக்கிட் முடியாமல் விளங்கும் சிகரங்களை யுடைமையாலும் செக்கர் வானத்தினொளி தன்மேற் பாய்வதனாலும் அழகிய சந்தனக் குழம்பை மார்பிலணிந்த கரியமேனிப்பெருந்தகையாகிய திருமாலை யுவமைசொல்லவும் விளங்கிற்று.

ஒருவரோடொருவர் உயிருமுடலுமென்ன நட்பினைக்கொண்ட ஆடவரும் மாதரும் தாம்புனைந்த மலாகளின் மொய்த்திருந்த தேனுமஞ்நிமிறும் தும்பியும் நெருங்கி யாரவாரிக்க, களிற்றியானை நினையும் பிடியானை நினையும் சிங்கவேற்றினினையும் பெண்சிங்கத்தினினையும அம்மலையினின்றும் இழிந்தன வென்று சொல்லும்படி யிழிந்தனர். ஆகாயத்தில் ஒற்றைச்சக்கரமுள்ள தேரூர்ந்துசென்று கோபிக்கின்ற அஞ்சாமையமைந்த அமடுகளைச் சிதைக்கும் கிரணங்களென்னும் பிடர்மயிரையுடைய சிங்கவேறுபோன்ற சூரியன் அத்தமானகிரியிற் பிரவேசித்தலால் தனித்திருந்த மதமயக்கமுள்ள யானைக் கூட்டம்போல மிக்க இருள் உலகமுழுதுமபரவிற்று. குறையாதொலிக்கும் பெருங்கடலிற் சென்தாமனை பூத்ததுபோல, மந்தாரதருவின் மலரினும்முற் பநிந்தேனும் வாசனையும் அமைந்த அழகிய மலர்மாலைபுனைந்த அரசர்பெருமானது சேனைக்கடலில தீபமெழுக்கப்பட்டன. குளிர்கடலில் திவலையைத்தூவும் அலைகளினின்று நீங்கி விண்ணிற்சுடரும்வெணமதி தன்னழகிய வெண்ணிலாக்கதிராகிய வெண்மணலில் விண்மீன்புடைசூழவந்தது கடலினலை நீங்கிய வெண்மணற்பரப்பிலே முத்துகளையின்று விளங்கும வெண்சங்கம் தவழ்வதுபோலவிளங்கிற்று. மீன்கள்தோன்றும் சமுத்திரம்நப்பற்ற வெண்மதியைப் பெறும்பொழுது அதைப்பொறுக்காமலிருக்க,இச்சேனை சமுத்திரமோ அமகளிர்போல விளங்கும் அரசமாதரது முகங்களென்னும் தெய்வில்லாத அநேகஞ் சந்திரனைப்பெற்றது. மேலும் நாடகத்தார் ஆடுமிடந்தோறும் மார்ச்சனையமைந்த மத்தளவோசையும், மாதர்கள் பாடுமோசையும,யாழோசையினின்று மாறுபடுதலில்லாத கையோசையும, புள்ளாங்குழலோசையும் தேவருமயங்க ஒருபுறத்தே முழங்கும. இரத்தினபரணங்களை நீக்கி முத்துமாலையை உயிர்ப்பாங்கியர் கொடுக்க வாங்கி யணிந்துக்கொள்ளும் மாதர்கள் கொங்கையிலெழுதிய சந்தனத்தொய்யில் முதலியவற்றை அகிற்புகையா லுலர்த்துவர். பின்னும் தேன்சொரியும் மல்லிகைப் பூமாலையை வெறுத்துவீட்டு மணமமைந்த கருமுகைமாலையை யணிவாரும இவைபோன்றன பிறவற்றைச் செய்வாருமாயினர். அம்மலையினிடத்துப் புதிதாகப்பிடிந்த யானைகளைக் கட்டுவோரது புனைபாடலோசையும்,மதுவுண்மாந்தர் தம்மனவியரிடத்தே பேசுமோசையும், பொதுமாதர்கள் தமமலகுலிற்புனைகின்ற மேகலாபரணவோசையும், மதயானை செருக்காற் செருக்குமோசையும், பிறவும் ஆங்காங்கெழுந்தன. உண்ணவரிதாகிய தேவாமிதத்தைப் போன்ற நூல்களிலமைந்த உண்மைப்பொருளை ஐயந்திரிபின்றிச் செவியாலுணரவும், பெண்ணரமுதன்னவர் மனத்தே நிகழ்ந்த ஊடலைநீத்தும்,பண்ணெழிடைசந்த பாடலாகிய தேனைச் செவியாகிய வாயாற் பருகியும், அப்பாடலின் பொருளமைந்த நடத்தைக் கண்களாரஇனிமையாகப் பார்த்தும் இராக்காலங் கழிந்தது.

வனைக்காட்சிப்படலம்

முற்றிற்று.

பூக்கொய்படலம்.

ஆகாயத்திற் றோன்றும் காண்மீன்களாகிய பற்களையுடைய இரவாகிய இரணியனைச் சினந்து காடுபோலடர்ந்த கதிர்களென்னு மாயிரம் கைகளைநீட்டி உதயமென்னும் பொற்றூணினின்றும் நரசிங்கப்பெருமான் தோன்றியவாறு போலச் சூரியனுதயமாயினன். இவ்வாறு சூரியோதயமானவுடன் நித்தியக் கடமைகளை வழுவாது முடித்துவிட்டபிறகு அரசர்பெருமான் வலியமைந்த தேர்மேலேறி பலமன்னவர் சூழப்போயினன். சேனைசமுத்திரமும் அவனைப் பிரியாமல் எழுந்து தான் பாயாதொழிந்த விடமெல்லாம் சோலையேயாய்ப் பள்ளமான விடங்களிலெல்லாம் செங்கழுநீர்மலர் மலர்ந்து துறைகளிலெல் லாம் கமலமலர்பூத்த சோணையாற்றையடைந்து தங்கியபோது சூரியனும்ஆகா யத்தினிடையே வந்தான். தம்மனைவியருடன் அரசரும் அரசிளங் குமாரரும் வண்டுகள் குடைந்து தங்குகின்ற மலர்களைக்கொய்து நீராடக் குளங்களும் மடுக்களும் சூழ்ந்த தண்ணிய சோலையைச் சார்ந்தனர். அங்கு வந்திருந்த மாதராரா புருவமாகிய விலலைக்கொண்டு கருங்கண்ணுகிய பாணங்களால தம் மைப் புண்செய்வரென்றே யெண்ணி மயிலகள் அஞ்சிப்போவன போன்றன. அவர்கள் வாயாரப் பேசக்கேட்டுக் கிளிகள் பறந்தன. காலிலணிந்த சிலமபுகள் ஆரவாரிக்குமபடி அவா நடக்குந்தோறும் அன்னங்கள் நடக்கும். செமபொன் னுற்செய்த ஓலைச்சுருளுமை குண்டலங்களும் சேர்ந்து மின்னவும், நெருங்கிய வணடுக ளொலிக்கவும, அணைந்து தோழிமார் கூட்டத்தொடும் விளையாடப் பார்த்து பூங்கொமபுகளுடன் கொடிபோலவானை அடையாள மறிந்து தெளி யாதானை வாசனையமைந்த மலர்மாலையணிந்த ஆடவரும் ஐயமெய்தி நிற்பர். பேசச்சமர்த்துள்ளவரிடத்தே ஒருவர் சென்றுபேசுதல அருமை யாதலால் பொன்னுபூரணத்தை யணிந்த அல்குற் பரப்பையும, இன்னிசை போலும் மொழியையும, தேன்றுளிக்கும் மலரணிந்த கூந்தலையுமுடைய மாதாகள் அடாந்த பேரோசையைக்கேட்டுக் குயில்கள் பேசுதற்குப் பயந்தனவலல, பேசுதற்கேகாணங்கொண்டன. விடத்தினுங்கொடிய கணையை அழுந்தத்தி னும் விருமபிநோக்கித் தாமரை மலர்போன்ற கையால செவ்வையாகப பரி சித்தலும உயர்ந்து நின்ற பூங்கொபுகள் தமது சிலமபணிந்த பாதங்களில மெல்லியபூக்களைச்-சொரிந்துவளைந்தன என்றலகொடிபோலு மிடையையுடை யானை வணங்காதார் ஒருவருமேயிலர். தாமரை மலரில் வீற்றிருக்கும் திருமா மகள்போன்ற மாதர் தமது அழகிய கையால் பரிசித்தலால், மலாமாலைபுனைந்த குடுமியும், சிங்கம் தன்னினமென் றடையும பேராற்றலுமுடைய ஆடவரது தோள்களாகியமலைகள் நெருங்கித்தாழ்வனவெனின்தளிர்த்த மலர்களையுடைய கொம்புகள் தாழுமென்பது எடுத்துக்கூறுந் தன்மையேயன்று. நதியினும் குள த்தினும் பூவாத தாமரைமலர்களைக் குவளைமலருடன் மதிபோலும் நெற்றியை யுடைய பூங்கொடி பூக்க அவற்றைநோக்கி வரிசையாகவரும் வண்டுகள் அதி சயமடைந்து புகுந்து நெருங்கின. புதுமைபார்க்கும் விருப்பமுடையோர் புதிய வற்றைக் கண்டபோது விடுவரோ? ஆகலால் ஓட்டமுடியாவாகித் திரண்ட கல்

லப்போலும் தோளையுடையாரும் மலர்மாலை யணிந்தாருமாகிய தமது கணவரிடத்தே யிணங்கிய மயிலன்ன சாயல் மாதராரைப்போலப் பூத்தகொம்புகளிற் சில துவண்டு வளைந்தன, ஊடிய மாதராரைப்போல அப்பூக்கொய் மாதர்கையில் வராமல் நிமிர்ந்தன. மாதரோ பூக்களையெல்லாங் கொய்துவிடுவதனல் பொலிவற்றுத் துவளாநிற்க அதைக்கண்டு இவைகள் கணவர் கண்களுக்கு செவ்வையாகத்தோன்றும் அலங்கார மில்லையென்றெண்ணித் தாமணிந்திருந்த மணிமாலையையும் முத்து மாலையையும் பொன்னாணையும் குண்டலங்களையும் குழையும்படி பூட்டிக் குளிர்ந்த பூங்கொமபைப் பார்த்துக்கொண்டே யிருப்பர். அடையத்தக்க போகங்களையெலலாம் மிக்க இன்ப முண்டானவிடத்திலே அனுபவிப்பாகளாதலால மிதித்து மலர்த்தியடாத மலாகளிலுள்ள தேனையுண்டு அவற்றைப்பிரியாம லுலவுகின்ற வண்டின் கூட்டங்கள் தாம் விரும்பும் மலர்களையும வேண்டாதனவாய் நல்ல மலர்மாலையையும சின்னங்களையும் நீக்கிய கற்புமுதலிய நல்லியல்பமைந்த மாதரது வெறுங்கூந்தலை மொய்க்கும். இது நிற்க;

ஒரு புறத்தே திருமாமகளுக் கணியையொப்பாகிய பெண்ணொருத்தி பளிங்கினிடத்திற்போய்ப் போதைத் தாங்கி நிற்பள். தன்மேனியினிழலைப் பார்த்து இப்பெண்ணே என்கணவனுக்கு உயிரோலவாளென் றெண்ணிக் கையிலிருந்த மலரொடு கண்முத்தங்கலுழாநிற்பள். இராகுவினற் கவரப்பட்ட திங்கள்போலும் முகத்தையுடைய ஒருத்தி ஓரசன் தன்தோளிலணிந்திருந்த மாலையைத் தன்காதலிக்குச் சூட்டக்கண்டு கச்சினை விறுக்கிக்கட்டப்பட்ட முலைமேல் வாள்போலுங் கண்ணில மழைத்துளி சொரிவாள். மயிலபோல வருபவளது மனநிலையை யறிய அவளிடத்தே மிகுதியுங்காதல்வைத்த மன்னனொருவன் ஒரு பூஞ்சோலையிற் குருக்கத்தி மாஞ்செறிந்தவிடத்தில் ஒளித்துக்கொள்ளச் சிறிதனும முன்னே தன்னைப்பிரிந்தே யறியாமல் உடனுறைபும் அம்மடந்தை நெஞ்சந்துடித்து உயிராகாடித் தளருமுடல்போலச் சுழன்றுதிரிவாள். மையிட்டகருங்கண் கோபத்தாற் சிவப்பேற நெய்தடவிய வேலைத்தாங்கியதன்காதலனிடத்தே யூடிக்கொனைடுநின்ற ஒருத்திதனக்கெட்டாத மலனைப்பார்த்து இவற்றை யானையைக் கொய்துதாவென்று ஒருகையிலைக் கைகூப்புவள். ஓங்கி வளர்ந்துநின்ற தென்னமரத்தினது இளநீரை யோராடவன்பார்த்து வியந்து இவை மங்கைப்பருவத்துப் பெண்ணின் கொங்கைக்கொப்பாமென்று கலுழ்ந் துள்ளங்கொதித்துப் புறத்தே முகம்வெயர்த்துப் பெருமூச்சிறிவன். போன்றுசொல்லப் பூரிக்கும்மலைபோன்ற அழகியதினைதோளையுடைய மாரன்போல்வானுய் மலர்கொய்திருந்த தலைவனைப் பார்த்து ஒருகரிய கூந்தலினையுடையாள் வந்து கண்களைமூட அவன் யாரென்று கேட்கநம்போலும் சரசஞ்செய்யத்தக்க மாதர்கள் பலருளரென் றையங்கொண்டு தீப்போற்கொதிப்பள். ஒன்றும்கொடாதவனுகிய கடுங்குணத்தையுடைய உலோபியைப்போல ஒரு அரசன் சேற்றிற் பிறவாத செந்தாமரை மலர்போன்றகையை ஒருமிக்க நீட்டி ஏற்றவர்களாகிய தன்மாதருக்கு சுரப்பினையுடைய தென்செறிந்த புதியமலனை இனிய முகமுடையானுப் உதவாகுக அவ்விருவ

ருக்கு மிடையே தான் கொணர்ந்த காண்மலனைப் பகுத்துச் சமன்செய்து தந்தால் அவர்கள் தனித்து மாறுபட் டீடிக்கொள்வாராதலால அம்மதண்ணி அவ்விருவருக்கு மிடையே கையேந்தி நிற்பன். மார்பிற்றைக்கும் வேல் போலுங்கூரிய விழியையுடைய ஒருபெண் ணரங்கலத்தினது ஆருயிரோ போன்ற தலைமகன் அமமையுண்ட கண்ணுளுக்கெதிரே மாற்றவளுடைய பெயரையெடுத்துச்சொல்ல, அதனையறிந்த அமமாதுதன்னிலும் அதிகஅன்பு தலைசிறக்க வைத்துக்கொண்டிருப்பதனல் இதுவரையும் தான் அவன்மேல் வைத்த அன்புமுதலியவற்றைப் பற்றி காணங்கொண்டு மனவாட்டமுற்றுக் கண்ணீர்கலுழ்ந்து விம்மத் தான் கைக்கொண்டிருந்த பூமாலை அவளுயிர்ப் பால் கரியும். திண்ணிபதேனையுடைய அரசனெருவன் தன்பட்டமகிஷிக ளுடைய தாமரைமலர்போன்ற முகங்களில விளங்கும மையுண்டகண்களெல் லாம் தன் கட்டழகைக்கண்டு திரிவதனல் அவன் மதத்தை வாய்நிரமப வுண்ணும்படி மதயானையையொதது விருமபித்திரிவன். தான்கொய்துவந்த மலர்களை அந்திப்போதில தோன்றும் கலையையுடைய மதிபோலும் விளங்கும் நெற்றியையுடைய ஒரு தலைவிக்கும், அருந்ததியும வந்திக்கலாகும் கற்பினை யுடைய மற்றொரு தலைவிக்கும, சமமாக வருத்துக்கொடுத்துச் சாமுத்திரிகா லக்ஷணப்படி வடிவமைந்த அவ்வாசன் வேறெனறும செய்யாதிருந்தபோதும் அவ்விருமாதரும அம்மலரினையே யல்லது பலமணிகள்கோத்த இருபத்தொரு வடமாகிய கலாபத்தையு மறுத்துச்சிந்தி வேலபோலுங் கூரிய கண சிவப்பச் செலவர். இவ்வாறு அங்கு நிகழ்ந்தன. இது கிடக்க;

மற்றொருபுறத்தே தென்திசையும் அழகுமேமந்த தமது நிலபேறுடைய ஆவியோ! அதற் கினமாகிய வேறொரு பொருளேயோ! இன்னதென்று யாம் கூறத்துணியோம. மயிர்ச்சார்ந்துபூசிய சோருகுழலினைப் பாராமலும், ஆடை யைக்காவாமலும், வடத்தின்கடைப்பூட்டுதாறு மறுந்து சிந்துமுத்தினமதி யாமலும், அச்சோலையிடமெலலாம வந்து மலரைபபறிக்கத் தேடித்திரிவர். யாழினைபோலுஞ் சொலலையுடைய திருமாமகள்போலும் அழகினையுடைய ஒருமடந்தை திண்ணிய அரசனெருவன் தன்னைத்தானிணங்கினை னல்லன் ஆதலால், தானேசெல்லக்கருதியும இணங்க காணங்கொண்டு மனந்தளர்ந்தும், தான்செய்யும் செயலின்பய னின்னதெனப் பிறர்க்குப் புலப்படாதொழு குஞ் சூதையெண்ணி, அவனிருந்த இடத்திற்குத் தன்கையிலிருந்த கிளி யைத் தூதுபோகவிட்டு அதன்பின்னை தான்சென்றும இவ்வாறிருப்பர். அழ கியமாலையணிந்த மார்பினிடத்தே மன்மதன் பஞ்சபாணங்களை நூறுயிரமாகத் தூவுகின்ற சிறகையையுடைய ஓரரசன் இனித் தான்செய்வதறியாளுய் மாதவி விருட்சத்தைப்பார்த்து மந்தார மலனைத் தரவல்லையோ வென்று இதுவரையு மினிய முகமும் இன்பத்தைத்தரு மியற்கையு முடையளாயிருந்து இதுகாலை இயல்புமாறித் துன்பத்தைத்தருவது கருதிச் சந்தனந்திமிர்ந்த தனத்தையும் மாலையணிந்த கூந்தலையுமுடைய மாதினிடத்தே தளர்வான். ஊடிக்கொண்டு பின்பு தன்கணவன் அனுபவிக்க இன்பத்தைத் தருபவளாகிய ஒருபெண் குற்ற

மொன்று தானேநாடிக்கொண்டு அதுவே தகுதியானதென்று துணிந்து தான் கொண்ட ஊடலையாற்றுளாய் அவன் பக்கத்தில் நில்லாமற்சென்று பலமுறை கொய்துகொடுத்த செழும்பூமாலைகளை யணிந்து கண்ணழிடையைப் பாதத்துத் தபரங்கொள்வள். யமனுக்குணவாகிய வெற்றியைத் தரும் வேலேந்திய கணவன் என்னிடத்தேவந்துசேர இவ்வலங்காரம் பெற்றனையின் அவனைப்பிரியாதிருக்கும் பெருவாழ்வு இப்பிறப்பிற்பொருந்தப் பெற்றிலேனுவேன், இப் பெருமையாகிய அணியாதுபிரயோசனத்தைச் செய்வதென்று தன்னணிகளை யெல்லாம் கொடுத்து ஒருவிறலியைத் தன்கணவனிடத்தே விடுவாள். ஈர்க்கு இடைபோகா இளமுலைகச்சினின்று மடங்காமல் புறத்தே வெளிப்பட்டுத் தோன்றுவதனால் அதனைச்சுமக்க வலியற்று நடுங்கும தமதுநுண்ணிடை நடக்குந்தோறும் நோவெழச்செய்வதனால தயரமெய்துவள். தமமைச்சிறிதுபொழுதும்பிரியாதுடனுறையும் கிள்ளைகள் பூங்கொமபுகளி லொளித்துக்கொள்வதனால் உண்ணச்சமைந்த 'பசுமபொற்கிணைணங்களை மெலலிய விரலகளிலேந்தி மனங்கனைவாள். தன்னைப்பாதத்தும, மெலலிய நடையைப்பார்த்துத் தோழியரேபோலப் பிரியாது தொடரப்பார்த்தும், அதனால நட்பின்மையைப்பார்த்தும் உயிரப்பாங்கியென்று சொலலி உன்னைக் கணடாரிகழ்வர், அதுகொடிது நீயுடைத்துக்கொள்ளென்றே அன்னமாகிய கன்னிக்கு ஒருத்தி ஆடையைத்தரவொருப்படுவள். பாகையொத்த நுண்ணிய கலையையுடையாளொருத்தி தன் படர்ந்தஅல்குலைக்கண்டு ஆடுபாமபெனத்துணிந்து அருகேவருகின்ற மயிலுக் கஞ்சிப் பூங்கொம்பேபோல நடந்துசென்று மலாபூத்த பூங்கொம்புகளின் மறைந்து தன் கையினால இரண்டுகண்ணையும் மூடித்துயர்கொள்வள். அந்தச் சோலையிலே தனனேரில்லாதாளாகிய ஒருமாது பொன்னே தேனே பூமகளே. என்னைப்பாவென்று சொலலிக் கொய்யன் மரத்தின் தளைகளில் நுழைந்து கொண்டு பகைத்துத் தமது மிக்க கடுமையாகிய கண்களைத் கைகளான்மூடிக் கொண்டு சிரிப்பள். வயலிற்கொய்த செங்குமுதமும் விலலொன்றும் கையிலே வைத்த மன்மதனுமாணங்கொள்ளத்தக்க பேரழகையுடைய ஆடவர் பேதை மையுடைய தமது மாதர்மையலாற் சொல்லும் குறிப்புமொழிகளை வேதங் களிற் சொல்லும் கலைகளை யாராய்வதுபோன்று ஆராய்வர். மேலும் அச் சோலையிலே வண்டுகளோசையே புள்ளங்குழ லோசையாகத் தொடைமேவிய கோலக்கொண்ட மன்மதனுகியகோபாலன் குறியிலேசெலுத்தலினால் மாலைக் காலத்திலே நீலநிறங்கொணட மையுண்ட கண்களையுடைய மாதரார் பசுக் கூட்டமேபோலச் சூழ்ந்துவர மால்விடையேபோல ஆடவர்வருவர்.

கொடியிற் பூக்கொய்யும் ஒருத்தியின் கொழுங்கடைப் புருவமே தவ வொழுக்கத்தினை யழிக்கு மாற்றலுடையதாதலால் முற்றத்துறந்த முனிவராவ் காக்கத்தக்கது காமன் கையிற்பிடித்த வில்லென்று சிறப்பித்துச்சொல்வது வாக்குமாத்திரமாய் முடியும். வாசனையுள்ள பூமாலையணிந்த குழலியும் கல்வ நெற்றியையு முடையா ளொருத்தி புன்னைமரத்திலேறிய தன்கணவன் மனத் திற்சென் றேறினுள், எனனினின் பெருகிய ஞானத்தையுடைய முற்றத்துறந்த

முனிவரோ யாயினும் பெரிய கொங்கைகளைப் படைத்த மாதராசையை வெல்ல வலலாரோ? இவ்வாறிருக்க மலர்கொய்யக் கிளை யொன்றின்மேலிருந்த அரச னெருவன் தேவராலு மெழுதவரிய உருவும் கலனும்படைத்த தன்தலைவியின் அழகின்பாலவைத்த எண்ணமும் நோக்கமு நீங்காமல் கைகளால் அரும்புகளை யும் புதிய தளிரையுங்கொய்து கொடுப்பான். தண்டுபோலுந் தோளையுடைய மற்றோராசன் வண்டுகள் தேனுண்டு களித்துவாழும் பூக்களைமுடித்த கூந்தலை யுடைய ஒரு மடந்தை முகத்தைநோக்கி அவளுடைய கொவ்வைக்கனி போன்ற வாய் துடிப்பக்கண்டு கோபமுண்டென்று தெரிந்துஉள்ளம் நிலைகுலை வான். இப்படி பலவியற்கையமைந்துடையாரும, இதுபோலும்பிறதன்மை யுடையாரும் பரிசுத்தமான தண்ணிழலைத்தருஞ் சோலையிலடாந்த பூக்களைக் கொய்தணியும் செயலைவெறுத்துச்சென்று திசைகள் கணையிற்பாயும் நீரோடலை விரும்பினர்கள்.

பூக்கொய்படலம்
முற்றிற்று.

நீர்விளையாட்டுப்படலம்.

தேவினதிர நோற்ற விண்ணவ ருறையும் விண்ணுலகத்தில் அத்தேவ ரும் காணுக்கொள்ளக் குற்றமற்ற செயலையுடைய ஆடவரும் அரமகளினை யொத்த மாதராரும் அமமலர்ச்சோலைகளி னின்றும் களிற்றியானையும் பிடி யானையும் வருவனபோன்று அலங்காரம்பொருந்திய மலர்கள்வாய்ந்த நீர்நிலை களையெண்ணித் தாங்களணிந்த மலர்மாலைகளில மொய்த்திருந்த வண்டுகள் ஆரவாரிக்கிவந்தார்கள். அந்நீர் நிலையினிடத்தே நீர்விளையாட்டைச் செய்ய அமைந்தகாட்சியோ கங்கைவார் சடைக்கணணுதற்பெருமான்போலும் துரு வாசமுனிவன் சாபவாய் நெருப்பாற் சஞ்சலமுற்ற தேவராசன்செல்வம்சிறந்த பாற்கடலில்மறைந்த தோற்ற மொத்திருந்தது. கருங்குவளை மலர்களெல்லாம் அம்மாதரார்கண்மலரோபோலப் பூத்தன.சாமுத்திரிகாலக்ஷணம் கூறியதாலும் விரும்புகின்ற உருவமமைந்த மாதரார் கண்கள் மலர்ந்த குவளைமலர்போலும் தோன்றின. செந்தாமரை மலரெல்லாம் அவரது முகமேபோலப் பூத்தன. அம்மாதரார் முகங்கள் செந்தாமரை மலரைப்பூத்தன. சிலமாதர் தமதுபாதமே போன்ற தாமரைமலர்த்தண்டுகளை மார்பிற் பொருந்தத் தழுவுவார்கள். சிலர் தங்கணவரது தோள்களையே துணையாகப் பற்றி விந்தைமகளை போலத் தோன்றுவார்கள். சிலர் கழுகம் பாளைவிரிந்தவாறேபோல நீரைப்பரவலாகத் தள்ளுவர். வாளைமீன் துள்ளித்திரியக்கண்டு சிலர் தங்கணவனைத் தழு விக்கொள்வர். சிலர் வண்டுகள் உண்ணும்படி அவாவும் வாசனைவீசும் மகரந் தத்தையும் வாசனையூட்டிய தைலத்தையும் கத்தூரியுடன் கையினிடத்தே வாங்கி எதிரே நின்றுகொண்டு ஒருவர்மே லொருவரெறிவர், பூமாலையைக் கையிலெகொண்டு வீசுவர். சிலர் ஆதொண்டங்கனிபோலும் சிவந்தவாயி

னிடத்தே பரிசுத்தமான நீரைப்பெய்து தங்கணவன்மேற் கொப்புளிப்பர். தாமரை மலர்போன்ற தமது கைகளைக்கூப்பி அந்நீரை அவரது முகத்தில் இறைப்பர். இதுகிடக்க; ஆடவர் தாங்கண்ட உறுப்பேயன்றி வேறோருறுப் பினையுங் காணத் தமது மனம் தம்வசப்பட்டிராமையால், மின்னேபோன்ற இடையாரும், கழைபோலுந் தோளினையுடையாரும் சின்னத்தையுமுடையா ரும், தலைமயிர்ப்பாரதியோடு நீரில்முழுகி யெழத் தமது அழகிய முகமறைப்ப தனில் அதைநீக்கிவிட்டு என்னெடு விளையாடவாவென்றே அன்னப்பறவையை நோக்கி யழைப்பாரும; பொற்கலசமேபோன்ற முலையின்கண் நெருங்கிய பூக்க ளொத்த அருவருப்புற்று வருந்துவாரும் உண்டு. பண்போலும் சொற்பயின்று பவளத்தையும் ஆதாண்டங்களினையையும் பூத்ததாமரை மலரைப்போலும்வாயி னையும் குவளைமலரையும் வாளையுமொத்த விழிகளையும் இடையுண்டென்பதே காண்பரிதாகிய கரும்பன்னமாதராரில சிலர் உள்ளே நிறைந்த கயற்கண்டை களைப்பார்த்து ஓடு நீரினையுடைய தடாகங்க ளெல்லாமவிழிகள் பெற்றுள்ளன வோவெனக் கணவனைக் கேட்பர். தேன்வண்டுகள் விழைந்தடையும தேன் துளிக்கும் மலர்மாலையணிந்த கூந்தலையுடைய அரமகளி ரன்ன மாதராரில் தமது அழகுவாய்ந்த மேனியினது நிழல் தடாகத்தினீரிலே தோன்றக்கண்டு இங்ஙலலநெற்றியையுடையாள் யான்சிரிக்கத் தானுஞ்சிரிக்கின்றனள், ஆதலால் இவள் என்னுயிர்ப்பாங்கியே யாவாளென்று குறைவில்லாத விலைபடைத்த மணி மாலைகளைக் கொடுத் துதவுவார்கள்; வண்டுகள் ஆரவாரிக்கவும் மாலை யணிந்த மாதரார் சிலர் வச்சிரப்பதக்கமணிந்த திண்ணிய தனைடேபோன்ற தோளைத்தழுவும் ஆசையினால விண்ணளவு மோங்கிய மலையிலே தங்கியிருக் கும மென்சாயலையுடைய மயிற்கூட்டமேபோலக் காதிலணிந்த குண்டலங் கள் சிறந்தவொளிவீசவும சிறந்தமணியாரங்கள் மின்னவும் தடாகக்கரையிற் சென்றுசார்வர்.

இவ்வாறு அவர்கள் விளையாடுகையில் இடையிலே குற்றம் இன்னதென் றறியோம். செங்கயலென்னுதக்க கணைகள் சிவக்கத் தன்னைச்சிதிச்சென்ற மாதொருத்தி தாமரைமலாகள் அடாஅதிருக்கும் ஓரிடத்திலே மறைய, கண வனேனை இது தாமரைமலரென்றும் இது முகமென்றும் தெரியாது ஐயங்கொண் டேபார்த்துக்கொண்டிருந்தான். பொன்னலாகியவளையலையணிந்த மாதரோரா தளிர்போன்ற கையிலுள்ள சங்கம் வணடினை யாரவாரிக்க, தங்கையால நீரையெறிந்து மூழ்கும்போதெல்லாம் அல்குலினின்றும் கற்றையாகிய மேகலா பரணத்தின் மணிவடங்கள் நீங்கிச் சிறிய பாதங்களைக் கவ்விக்கொள்வதனால், காலிலே நாகங்கள்சுற்றிக்கொண்டனவென்று சொல்லி அச்சத்தால்துடிக்கின்ற வரும்; இதுபோன்ற பிறசெயலையுடையாருமா யிருந்தனர். பாற்கடல் கடைந்த காலத்தில் அமுதத்தொடுந் தோன்றிய தெய்வமகளிர்சூழ இடையே நின்ற மந்தரகிரியேபோல, நீரிலே மூழ்கிவிளையாடுகின்றமாதர்கூட்டம்தன் பக்கத்தே வந்துசூழ, அங்கதமணிந்த புயங்கள்தோன்றும்படி அத்தடாகத்தின்கண்ணே மாலைதங்கிய ஓரரசன் நின்றுகொண்டிருப்பான். வேறோரிடத்தே வேறாய

லுலாவும் தாமரைமலர்போன்ற சிவந்தகையையும் தூய்மையான கைகளையு
மமையப்பெற்ற வாயையும் பூங்கொடியேபோலத் துவளுமிடையையுமுடைய
மாதராரிகூட்டத்தில் ஓரரசன் மணமமைந்த தாமரைவெளிபடைத்த இட
மகன்ற காட்டகத்தில் பிடியானைகள்சூழ இடையேகின்ற மதம்பொழியும்
களிற்றியானையை யொத்து நின்றுகொண்டிருப்பான். அச்சோலையில் வசிக்கும்
மயில்களெல்லாம் செருக்கும்படி செருக்கும் சாயலையும் சோணைமழைபோலும்
நீண்டகூந்தலையுமுடைய மாதர்கூட்டத்திலொருஅரசன் ஆகாயகங்கையைசெரு
ங்கிவிண்ணிற்பலவிடங்களில்சூழவிளங்கும் நாணமீன்கள் இடையேதான்றும
மிரிகதிர் மதியையொத்துத் தோன்றுவான். ஒருபுறத்தே ஆயக்கூட்டத்தில்
செங்கரும்பாகியவிலலைக் கையிலேபிடித்த மன்மதனுமவிரும்பும்தன்மையுடை
யதேயன்றி அவனுக்கும் அமைபையெய்யும் தொழிலைக்காட்டும் நீண்டகண்ணை
யுடைய மாதொருத்தி பலவகைநிறமமைந்த மலர்களெல்லா மலர்ந்தபொய்கை
யிலேதாமரைமலா விளங்குவதொத்திருப்பாள். வேலென்றும்வாளென்றும்உவ
மிக்கமுகத்தில்விளங்கும் விழிகளையுடைய மாதொருத்தி தன்னைத் தோழியர்
சூழ்ந்துகிடப்பது மடலமைந்த போதுகளடர்ந்த கொடிகள் பலசூழப் பாற்கட
லிற்றோன்றிக் கற்பகத்தினையலிலே காமவல்லிக் கொடிபோல விளங்குவாள்.
தேர்த்தட்டினழகைக்கொண்ட அல்குலையும் செவ்விளநீரினழகைக்கொண்ட
முலையையும் அழகிற் சிறந்தோர்யாரும் சென்றடையாத பேரழகையுமுடை
யாள் கச்சினிடத்தே யடங்கிய கொங்கைகள்மேலே தோன்றும்படி சூழ்க,
மேலே அவள்முகந்தோன்றுவது குறைமற்ற சந்திரனிழலே யொத்துவிளங்கிக்
கொண்டிருக்கும்.மலைகளைவெற்றிகொண்ட தோள்களும் மாதரார்ஆடையைக்
கடந்தகன்ற அல்குலும், ஒன்றோடொன்று தாக்கும் கொங்கைகளும், மற்றை
யுறுப்பினும் முற்பட்டுத் தமக்கு நெருங்குவதலால், அம்மடமீர் தன் கணவனைக்
கடந்து பிரிந்தது. பின்னும் அதுசிவந்த வாய்வெளுக்கவும் கண்கள்சிவக்கவும்
நெய்யொடுகூடிய செம்பராகம் அழியவும் உடுத்த ஆடை புறத்தேசோர்ந்
தவிழவும் தொய்யிலணிந்த பருத்த கொங்கைகளையுடைய மாதரார் மூழ்கு
வதனல் காதற்கணவனையே யொத்துவிளங்கியது. இயற்கையிலேல யல்லது
கல்வி கேள்விகளாலமைந்த பேரறிஞரோடும் பிரியாது பயின்றவர் மிகவறிவு
படைத்துத் தோனறுவர். இதுபோலவே அவ்வாடவரும் மாதராரும் மூழ்கிய
மடுவில் பயில்கின்ற மீன்களும் தேன் மணமும் கத்தூரிமணமும் அகிற்புகை
மணமும் காறினவென்றல, அவரது மிகுதியை யெவ்வாறு கூறத்தகும்.
அரசருடைய உடம்பினின்று மிழிந்த சந்தனக்குழம்பும், அங்கே நீராடும் மாத
ரணிந்த குங்குமச்சேறும் அத்தடாக நீரிற்றோன்றுவதனல் அத்தீம்புனலோ
ஆகாயத்திற்றோன்றும் செவ்வானையொத்திருந்தது. தம்முடம்பிலணிந்த அகிற்
கட்டையின்சேறும் கலவைச்சேறும் நீங்கலால் பாகையொத்து சொற்பமிலும்
தொண்டையங்கனிபோலும் வாயினையுடையார் வேகடஞ்செய்த மணிகளை
போலத் தோன்றினர். சிங்கம்போலும் நிலையையுடைய கணவன் கன்றொன்
றைவிட்டுநீங்க தேனைபோல் சாமான சுந்தனத்தால் நிரம்பிவழுகிய தொய்யிற்
குழம்பை அழித்தல் தம்மையாக்கிக்கொண்ட பெண் செம்மலிக்கள் சிலர்.

நிதம்பத்தினையுடைய வேறொருமாதுகாமவேட்கையால்வெதும்பி அவளுடம் பின் வெப்பம் வெம்மைதரப் பரிஷ்ளபபொடியும் சாந்தும் தேனும் உதிர்ந்த பாகமும் நிறைந்த அலையொடுகூடிய நீருஞ்சுட்டது. செந்தாமரைமலரில் எழுந்தருளிய திருமாமகளைக் கையால நீராட்டுமகளிற்றாசேபோல மாலை யணிந்த தோளையுடைய அரசனொருவன் ஒரு பெணணுக்கு நெய்யைத்தட வியகூந்தலில நீனைமொண்டு வீசவும, தாமரைமலரில அன்னப்பறவைகள் ஏறிமிதிப்பது மாதாது நடையை வெறுக்கும நடைபெற்ற நாம் தோற்க நடக்கின்ற இம்மாதராரது சிறடி-யையொதனவென்று தாங்கொண்டகோபம புறத்தேதோன்றி மிதிப்பதுபோ லிருக்கும். கொங்கைகள் நூல்மேற்புறத்தே சுற்றிய கலசங்களையொத்திருக்க அரிய கூரிய நகங்களினல் சந்தனமழிந்து போக அதைக்கண்டு காமவேட்கையாலெரிநத சிநதையையுடைய ஆடவர் அளவோ சொல்லிமுடியாது. தாழ்ந்திருக்கும் தாமரைக்கையால் சக்கரத்தை யுடைய வரசன் தன் ஆசையைத்தெரிவிக்கவும, அதனைவீழிவாய் மெல்லிய லொருத்தி தன் உயிர்ப்பாங்கியின கண்ணிலே தன் கடைக்கண்ணற் குறிப் பிக்கவும, தங்கிலையினின்றும தள்ளப்பட்டோடி அலைகள் போவதும் வரு வதுமா யிருப்பதனல தெளிவாகிய நீரிலமுழுகும செந்தாமரைமலர்கள் மான் போன்ற மாதரது முகங்கட் கொவ்வாமல் தம்மிழிவைநோக்கி நாணியொளிப் பதுபோலவும், இத்தன்மையான செய்கைகளைப்பெற்று நீராடிய ஆடவரும் மாதரும் மேற்கூறிய மடு வறிதாகநீங்கிக் கரைசோநது ஆடையணிகளை யணிந் தனா. இவர்களெல்லாம் நீங்கினமையால் அமமடுவானது சநதிரனும் விண் மீனும் நீங்கிய விணணையும் தன்பாலுள்ள தாமரையெல்லாம் நீங்கியவை போலவுமிருந்தது. சூரியனை மான்போலும் விழியார் ஆடவரோடு நீர்விளை யாடியதைக்கண்டு தானும் நீராடத்தொடங்கினன்போல மேற்கடலில் மூழ்கி னன். வலியின்மையால் தோல்வியடைந்தும் தம்மொடு பகைகொண்ட அரசர் மேல் போனைக்குறித்துவரும் அரசனேபோல, முன்னெலாம் இம்மாதர்முகத் தோடு எதிர்நின்று ஒபபாகாமல் தோற்ற சநதிரன்மீண்டுமுதயஞ்செய்தான்.

நீர்விளையாட்டுப்படலம்

முற்றிற்று.

உண்டாட்டுப்படலம்.

சந்திரன் உதயமானது வெள்ளைநிறமுள்ள மதுவெள்ளம் பரந்ததுபோல வும், பண்ணுருக்கொண்டு பரநததுபோலவும், எல்லாவுயிரிடத்து முள்ளிருந்த காமமிகுந் தொழுகியதுபோலவும் தோன்றி, ஒருவனையொருவர் பிரியாத மாதராடவர்களுக்கு இனிதாகிய மதுவாய், பிரிந்து வாடினவர்களுக்குஉயிரை வருத்தும்விடமாய், பிரியாமலேயிருந்து ஊடனிகழ்ந்தாருக்கு உதவிசெய்யும் புதியதூதுமாய் மன்மதன்வெண்ட விளங்கிற்று. உலகிலுள்ள நதிகளெல்லாம் கங்கையைப்போலவும்,உவர்க்கடல் சிறப்பித்துக்கூறும்பாற்கடலைப்போலவும், மலைகளெல்லாம் ஈறில்லாத பரமசிவனைப்போலவும் இருந்ததாயின், அங்கில

வின் பெருக்கத்தை யெவ்வாறு சொலவது. கடல்புடைசூழுங் காஞினியோ இகழ்ச்சியில்லாத திசைகளோடு அத்திசைகளிலுள்ளாருங் மற்றையெப்பொரு ளும் வெள்ளிய நிலவாற் கோலங்கொள்வதனுல். மன்மதனது வெள்ளணி யணிந்த படைவகுப்பை யொத்திருந்தது. விண்மீனையொத்த முத்துப்பந்தரி னீழலிலும், காற்றினுலியங்குகின்ற மேகம்போற்படர்ந்த தினைச்சீலைகட்டிய விடத்திலும், கயங்களைப்போல்தோன்றும் பளிக்குப் பாறையையுடைய கானி லும், பூப்பந்தரிலும் மாதர்கள் தங்கினர். மலர் முடித்த கூந்தலையுடைய மாதர்கள் இராக்காலங் கழிப்பதற்காக பூவணையின்கண் கலவிப்போனைக்களிப் புடன் செய்யக்கருதிப் பாற்கடலிற்றோன்றிய அமுதமென்றுசொல்லப் பொன் வட்டிலில்வடித்த நறவையுண்ணலாயினர். தாராகணங்கள் சூழ்கின்ற ஆகா யத்தில் வசிக்கும் வித்தியாதரர் தாம்பிறப்பி லுயர்ந்தவராயிருந்தாலும் ஊனு லாய உடம்பினையுடைய மாதராடவா வடிவமொத்திலராகி, அம்மான்போலு மருண்டபார்வையுடைய மாதர்வாயில் தேனையுடைய மலரில் தேனைப்பெய் தாற்போல மதுவைப் பருகினர். இதுநிற்க;

ஒரு பெண்கொடி கையாலெடுக்க அக்கைசிவந்து தோன்றியதனுல் சிந் திப்பரந்த பாலியொத்துவிளங்கும் சந்திரகிரணம்பாய்ந்த வட்டிலும் சிவந்து காட்டிற்று; தன் மையிட்ட கண்ணுஞ்சிவந்தன; ஆகையால் இவள் வாயின் வழி புகுந்த தேன்அமுதமாய்ப்பொலிந்ததென்று சொல்லக்கிடந்தது. ஒருத்தி மதுவில் தன்முகந்தோன்ற அந்நிழலைநோக்கித் தோழியே தண்ணிய மதுவை நீயேன் பொன்செய்வள்ளத்தி லுண்டாயென்று சொல்லினள். இதனுல்லிடம் போலும் நெடுவிழியும் அமுதம்போலும இன்சொல்லுமுடையார் மடமை போலும் மடமையுண்டென்று நாம் வேறுசொலவ தெவ்வாறு? அச்சநுண் ணிடையணங்கொருத்தி தன் அளகமும், விடத்தையும் வேலையுமொத்த விழி யும், சிவந்த வாயையுடைய முகமும வள்ளத்திலுள்ள கள்ளிலேதான்றுவத னுல், அதை ஒரு பெண்ணின் முகமென்றெணணி அடிபிச்சி! சாடியில் மிகுதி யுங் கள்ளிருக்க அதையுண்ணுமல், பயன் சிறிதுமின்றி எச்சிற்கள்ளைக் குடிக் கின்றாயே, நீ யென்னகாரியத்தைச் செய்துவிட்டாயென்று சொல்லிப் பற்க ளாகிய முல்லையரும்பைக்காட்டிச் சிரிப்பள். ஒப்பிலாத மேனியையும், மறத் தொழில் பழகும் வேல்போலுங் கண்ணையுமுடைய வேறொருத்தி மணிவள் ளத்தில் வெண்ணிலாத்தொகுதி பாய்வதனுல், கள்நிறைந்ததுபோலத்தோன்ற அதைக் கள்ளென்று நினைத்துப்புறத்திலுள்ளார் நகைத்தேசவாயிலில் வைத்த னள். அதைத் தான் சுவைக்கப்பெறுமையால் நாணுட்கொண்டனள். யாழ்க் குங் குழற்கும் இன்பத்தை யுதவினவை யிவையென்று கேட்டற்குரிய மழ லைச்சொல்லையும், முருக்கமலர்போன்ற இதழையுடைய வாயையுமுடைய மாதொருத்தி கருங்குவளை மலர்த்தாள்கிடந்த தண்ணிய கட்சாடியில் தன் வாள்போன்ற கண்ணிழலைக்கண்டு அதனைவண்டென்று நினைத்தோட்டி நிற் பள். கனத்த காதணியையுடைய மற்றொருத்தி கட்சாடியினுள்தோன்றும் சந் திரபிம்பத்தி னிழலைக் கண்களிக்கப்பார்த்து நீ ஆகாயத்தில் தவழ்ந்துசென் றால் இராகுவந்து பிடிப்பானென்றெண்ணியோ பயந்தொளித்துக்கொண்டாய்,

காணை உனக்கு அபயதானங்கொடுத்தேன், அஞ்சவேண்டாமென்று உறுதி மொழி புகல்வாள். ஆற்றினது சுழியொன்றி நின்றுலொத்த உந்தியையுடைய வேறொருத்தி செந்தேன்பொழியும் மலர்மாலையால் வேய்ந்தபந்தலைத்தொளைத்துக் கீழ்வந்திழியும் மிக்க நிலாவைத் தன்னறிவழிவதினுலும், இயல்பான பேதைமையாலும் கள்ளென்று வள்ளத்திலேற்பாள். மின்போலுநுடங்கும் இடையையுடைய வேறொருத்தி வெள்ளமுதம்போலும் தான்பேசு மதுரச் சொல் கள்ளின் மயக்கத்தால் இடையே தடுமாறியதுபோல, மேகலையைநீக்கி மலர்மாலையை யலகுவிற் புனைந்து பொன்னரிமாலையைக் கையிலேகொண்டு குழலிலணிவாள். ஒருமாது மதுநிறைந்த வள்ளத்திலே களிக்கும் தன்முகத் தைப்பார்த்து ஆகாயத்தில தவழ்ந்துசெலலும சந்திரன் கள்ளுணசையினுல் இதில் வீழ்ந்தான்போலு மென்றெண்ணி மனமகிழும் நாயகனேடியான்பினங் குங்காலையில வெப்பமொழிந்து தணணியமதிபோலத் தோன்றுவையாலுல் உனக்கு இக்கள்ளைக் கொடுப்பேனென்று சொல்வாள். எள்ளினிளம்பூவை யொத்த அழகிய மூக்கையும், உயர்ந்த ஆபரணங்களையுமுடைய மாதொருத்தி முன்கை கள்ளைத்தள்ளுவதனுல தானிருந்ததவிசினிடத்தே சித்தியதறியாமல் தன்னுள்ள மயக்கத்தால் உட்புறத்தி லுண்டென்றெண்ணிக் கிணணத்தைத் திருப்பியெடுத்து மணிநிறலிதழில்வைப்பாள். மதுவின்மேல்வைத்த காதலால் வாளைப்பிரிந்தறியாத வண்டினங்கள் உலோபரிடத்தே கையேற்று அவர் நிதி யைப்பெற விருமபிய யாசகர்போல ஆரவாரிக்க, வேறொருமாது தேன்பொழி யும் செந்தாமரை மலாபோன்ற வாபைத்திறந்துணைக் கூவிவள்ளத்திலுன்றி நின்ற செங்கழுநீர்மலர் நாளத்தாளினுலுண்பாள். கள்ளுலவும் கமலமலர்வாவி யில் பொருகின்ற கயற்கண்டைகள் பயந்தோட வள்ளுறையினின்றுங் கழித்த வாள்போன்று செவ்வரிபரந்து விளங்குமு கண்ணையுடைய மாது மலர்க்கூந் தலையும் களிமயிலபுமபோன்ற தன்னுள்ளத்தில்வதிந்து தன்பா லன்புடைய நாயகன் பருகானென்று தான் கள்ளைப்பருக நினையாமலுமிருப்பாள்.

கோபமாகிய அபிநயத்தைத் தெரிவிபபவர்போல, ஒருத்தி கள்ளின்மயக் கத்தால யமன்போலுந்தோன்றும் கண்சிவந்து வளைந்து புருவமேலே செல் லும்படிநெரித்துப் பற்களால இதழினைபதுக்கி மாந்தளிர் மயக்கமடையும் கைகளை யுயராீட்டி மறித்துநின்றுள். துடித்த செவ்விதழாகிய ஆதொண்டங் கனியைத் தூயநிலவைபபகைத்தபற்களாலதுக்கிக்கண்களால்வடித்த கூரிய வேல்போன்று உதிரக்கறைபோலச் செவ்வரிபரந்த கண்ணேற்பார்க்கும் மாத ரது மெய்யிலரும்பிய வேர்வை புறத்திலேயும் வழிகின்ற கள்ளையொத்தது. கனிபோன்றவாயின் செம்மை கண்களிற்பொருந்த நினைப்பொன்றும் சொல் லொன்றுமா யிருக்கும் ஒரு பெண்கொடியினது தாமரைமலர்போன்ற முகத் திற் புருவமாகிய வில்லும்வளைந்தது, நெற்றியாகிய குழவித்திங்களும் வியர்த் தது. இது நிற்க ; இவ்விதழ் துவர்நிறமொழியவாலெயிறு ஊறிய நீராகிய செந் தேன்சிந்த முலையிலணிந்த கச்சொடுடுத்த துகிலும் கட்டவிழ, கட்டினிலே போலும் நிதான்றும் குழல்சோர்ந்துவிழ அசதியென்னு மாட்டயர்கின்றவை யால், கவ்வியாட்டயரும் கணவரும் கள்ளுந் தம்மிலொத்துவினங்கின. கணி

கடற்கள்வனால் கலக்கமுற்ற தன்மையைப் பரிசுத்தனுகிய தன்கணவனுக்குத் தெரிவியென்றுவிடுக்கும் ஒப்பற்ற கூட்டமாகியமணிவடந்தாலாகிய கலையை யுடைய ஒருமாது நீயும் என்னல் தூதுவிடப்பட்ட என்மனமேபோலத் தாமசஞ்செய்துவிடுவையோ? அல்லது மீண்டுவினைந்துவருவையோ? என்றுசொல் வாள். மான்போலு மருண்டபார்வையுடைய மாதொருத்தி மதுகைவேந்தன் ஒருவனிடத்தே தனக்கிணங்கிய பாங்கியனையெல்லாம் ஒருவர்பின் ஒருவ ராகத் தூதுவிடுத்துப் போக்கித் தானும் அங்கவர்கள்பின்னேயே தனிமை யாய்ப்போயினுள். வாசனையுள்ள பூப்படுக்கையில் தானடைந்தகனையில்லாத ஆசைக்கடலில மூழ்கிய தேனினு மினிய குதலைச்சொல்லையு முடையவ ளொருத்தி நாயகனுடைய பெயரை யெல்லாம சொல்லத் தழுவுவள். ஒண் ணுதலொருத்தி கிளியைத்தழுவி இன்று என்கணவன்பால் தூதுசென்று அழைத்துவந்தாயில்லை, எனக்கன்றிலை யொத்திருக்கின்றனையென்பள். பொன் வளையணிந்த முன்கையும் மயிற்சாயலுமுடைய வொருத்தி தன்கணவன் தனக்கிளையாள் பெயரிட்டழைத்தலையால், நகைத்து நின்று களகளெனக் கயற்கண்டைபோன்றகண்ணினீர் வடித்துநிற்பாள். தனக்குக்குற்றமுன் செய் தறியாத வரசன் ஊடல்நீங்கத் தன் னலகுலிற் பரந்துசூழ்ந்த மேகலையை விருப்பத்தாற் பற்றவே தானில்லாமற்போவதனுல அம்மேகலையின் எட்டுமணி வடமுமறுந்து சிந்திய முத்தின்முன் அப்பெண்ணின் பொறுக்காத கண்ணீ ராகிய முத்தமும் கலுழ்ந்துசிந்தின. மலர்முடித்தகூந்தலையுடைய வொருமாது என்னுயிர்க்கு வருத்தஞ்செய்யப் பிரிந்த என் கணவன் வருவானெனின் அவனேடு ஊடிக்கொள்வேனே! அல்லது என்னுயினை வருத்தும் விரகநோய் போகக்கலப்பேனே! அவனது நற்குணங்களையெல்லாம விரித்து வீணையிற் பாடுவேனே! நானெதுசெய்ய வல்லேனென்று இவைபோன்றவற்றை யாராய் வாள். மற்றொருத்தி தன்னுயகனுடன் பிணங்கியதைப் பிறர்க்கறிவியாமல் முருக்காணியைப்பற்றிச்சுருதிகூட்டி மகராயாழைத்தன்மலர்க்கையாற்றழுட்டு வாசிப்பாள். பூங்கொமபன்னதோர்மாது கூடலைச்சுழித்தும் அவ்வாறு சுழி த்தபொழுதெலலாம் தவறுதலும் தவறுமல் அம்பினைவிடுக்கும் மன்மதபாண த்தால் வருந்திப் பரவசமாய் உயிருண்டென்னும்படி யுயிர்ப்பாள். பத்தணி விரலினுளொருத்தி துன்பமுடையாளாய்த் தோழியைத் தன்கணவன்பால் தூதுபோக்கி வந்தானென்று சொல்லவே, மணிக்கத வடைத்துத் தாழிட் டாள், அவள் கண்ணே சிவந்தது, அவள்சிந்தித்த கருத்தும் இன்னதென்று தெரியாமலு மிருக்கின்றது, தோழியர் பூக்களாலமைத்த படுக்கையில் ஊட னீங்கவெண்ணமுண்டு, அதை அவளிடத்தே காதலையுடைய கணவனே அறி யாமல் சும்மாயிருக்க, பொய்த்ததோர்மூரியால் உடம்புநிமிர்ந்து காலத்தைப் போக்குபவளாய் இப்போதெத்தனை கடிகையென்றுகேட்பாள். ஒருமாதுஊட லாற்பதைத்துத் தன் கணவனைச் செம்பஞ்சூட்டிய சிற்றடியாலுதைக்கவே, விதைத்தகாதலாகியவிதை அவனுடம்பாகிய புதுக்கொல்லையை அவ்வுதை யாலுண்டான சந்தோட சலத்தால் நனைத்தமையால் முளைத்தான்றிற் போல உரோமராசிகள் சிலிர்த்தன. பொலிவுபெற்ற முகத்தையுடையா

ளொருமாது கொங்கைகள் பகையரசனைப் போரில்வென்ற வாள்வீரன் தம் மியற்கையினின்று மெலிந்தமைகண்டு தன்னெயுமறியாத களிப்பினுல்தன்புயங் கள் பூரிப்பாள். பேரழகுடையாளெருவன் தன்காதலியி னிருக்கையைச் சேர்ந்து எங்கும் அலங்காரஞ்செய்ததுபோல மன்மதபாணம் பாய்ந்த பூம் படுக்கையிற்படுக்க, அங்கேபெய்திருந்த தளிரெல்லாம் தீந்து கரியாகக்கண்டு சிந்தைதிகைப்பான். மெல்லியலையுடையா ளொருத்தி தான்விரும்பிய தோழி யைத் தழுவுங்கையளாய்த் தூதுபோவென்று சொல்வா ளிசைவாள், சொல் லவும் வெட்கப்படுவாள், அவ்வெட்கத்தால் சொல்லவுமதுணியாள், அப்படி பலநாள் காலங்கழித்து வருந்துவாள். பேரன்புடையாளொருமாது தனக் குயிர் வேறில்லாத அன்புடைய கணவன் பிரிந்துபோய்விட்டதை மற்றொரு மாதினிடத்தே சொல்ல நாணங்கொண்டு வேறுவேறுசொற்களை மிகுதி யாகப் பேசுவாள். உருவந்தோன்றும் தன்மையமைந்த உயிருமொன்று, தாம்வைத்த அன்பும் அத்துணையென்று சொல்லப்படும் ஒருமாதும் ஆடவனு மாகிய இருவரும் உடம்பொன் றென்னும்படி பொருந்தச் செய்பவரோபோல ஒருவனையொருவர் புல்லிக்கிடப்பர். வேல்போலுந் தோளையுடையாளொரு த்தி தன் கணவனுகிய அரசன் வந்ததிர்த்தாலும் விருப்பமிகுதியால் தன் மனமெழுந்து முன்செல்லத் தான்செல்லாது சந்திரன்போன்ற முகத்தை வளைத்தாள், அது நூதனமாயிருந்தமையால அவனுக் கச்சந்தோன்றிற்று. நீங்காமல் வருகின்ற அழகுடனே வாடுகின்ற மாதொருத்தியிடத்தே நாயகனை யழைத்துவராமல இனிவருகின்ற இரவும் தென்றற்காற்றும்போலத் தனித்து வந்ததோழியோ இப்படி வருந்துவது தகுதியல்லவேயென்று தன்மகட்கு அறிவுச்சுடர்கொளுத்தி யிடித்துக்கூறுவதனல் தாயையொத்திருந்தாள். கண வன் குணதிசயங்களால் ஆக்கப்பட்ட காதலையுடையாளொருத்தி அந்திக் காலத்திற் றன்மேற்பாய்ந்த தெய்வமுண்டென்னுந் தன்மையுடையாளாய்ப் பார்த்து நின்று தான்சொன்ன செய்தியை யறிந்துகொள்ளாமல தான் அனுப் பிய தூதொடும் அறிவையும்போக்கி நிற்பாள். பூங்கொடிபன்ன மாதொருத்தி பிறப்பிறப்பென்று நிலைமாறுஞ் சிந்தையால் தன்கணவனைமறவாமல் மேகத்திற் றோன்று மின்னலைப்போல அவன் வருகையை நோக்கித் தோன்றுதலும் மறைதலுமா யிருப்பாள். தன்கொங்கைமேற் காமபாணம்பட்டமையால் புண் ணுகிப்போக அவற்றை வளையலையணிந்த கையால் ஒற்றியும அழுதும் சிரித் தும் ஒழிந்திருக்கும் சமயம்பார்த்துத் தூதுபோய்வரும்படி யொருத்தியை வேண்டிக் கைகூப்பிவணங்கியும்நிற்பாள். அயர்ச்சியும் அதனுலடைந்தவருத்த மும்அறிந்து அவருக் கொழிந்தசமயத்தைச் சொலலா லறிவிப்பது அரிதாகை யால், ஒருமாது உள்ளம்வெதும்பி மெலிந்து பூவணையிற்சாய்ந்துகிடந்து தன் வருத்தத்தை வாயாற்சொல்லாமல் தன்மேழியைப் பார்ப்பாள். இதுநிற்க;

தனங்களுடைய இளைமைப்பருவமுடைய மாதரினும்கள்வனுகி அவரவர் மனங்களினுழைந்து அவர்கள் குடிக்கும் கள்ளை அனங்கனும் அருந்தியிருக்க வேண்டும். அவ்வாறின்றேல்மூன்றுபங்கதிகமாய் எல்லாவிடங்களிலும்சென்று களிகொண்டு திரிவதிலன்! பறையறைந்தாற்போல இரகசியமெல்லாம்வெளிப்

படுத்தும் மாதர்களை ஆடவர் கரணவகையறிந்து, கலவிக்குரிய பக்குவ முள்ள அம்மாதரது மேற்போர்வையைநீக்கிவிட்டு, அல்குலைச்சூழ்ந்த மேகலை மணியை யவிழ்த்தெறிந்து விடுவார்கள். புறத்திலுள்ள பொன்னணிகளையும் ஆடைகளையும் நீக்குவது அறியாமையாதலால் அதைநீக்காது ஒருத்தி துறவற மொழுக்க முடையாள் போலத் தன்னையுந் துறக்குந்தன்மை காமத்திலே தங்கிற்று, ஆகையால் தன் னகத்திலுள்ள நாணமொழிந்தாள். மன்மதன் போலும் அழகுடைய ஒருவனும், திருமகள்போலும் பேரழகுடைய ஒருத்தி யும் கலவிப்போரில் ஒருவருக்கொருவர் தோல்வியடையாமல் உயிருமொன்றே, உணர்வு மொருவழிப்பட்டபடி ஒத்திருந்தனர். போர்செய்யும் வாட்கண் ணையுடைய வொருமாது ஊடனிகழ்ச்சியினால் உதைக்க நினைந்து அவள் பாதங்களைத் தன்மார்பினுரோமந் தைக்குமென்றேபயந்து முருகக்கடவுளன்ன அத்தலைவன் மலர்மாலையணிந்த மார்பினை மலர்போன்ற கைகளால் மூடப் பார்த்து நின் மனத்தில வேறொருபொருளிருக்க இடமில்லாமல் தங்கிய உயிர் போன்றவள்மேல என்னுதைபடுமென்றே உன்வஞ்சனையால்மூடுகின்றுஎன்று முன்னையினுங் கோபமூண்டாள். பால்போலும் இன்சொல் சொல்லும் பவள வாயும் பருத்ததனமும் மெல்லியதோளும வேல்விழியுமுடைய மெல்லிய லொருத்தி கடல்போன்ற காம வேட்கைமீதூரு மனமும் மேகம்போலுங் கொடைக்கையுமுடைய கணவனுக்கு அரமபா போகத்தைக்கொடுத்தாள்.

சோலை மயிலபோல்பவளாகிய ஒருத்தி தன்கணவன் பொய்யுரைகினைத் துக் கோபித்து நிற்க, அக்கோபத்தை அவள்கணவனது படுக்கையில் நிகழ்ந்த கலவிப்போரே வெற்றிகொண்டது. கொலைத்தொழிலையுருக்கொண்டதொத்த கண்ணையும், மேகலைநீங்கிய அலகுலையுமுடையதோர் மாது தன்கணவனைத் தழுவிக் கலவினுந் திண்ணிய அவன் மார்பிலே தன்முலைகளுநெருருவிச்சென்றன வென்றுதன்முதுகைப்பார்ப்பாள். மாதரின்பத்தை ஆடவரனுபவிப்பதனால் தொய்யிலெழுதிய குங்குமமுதிர்ந்தன, கூந்தல்சோர்ந்தன, கைவளைகள் ஒலித் தன. சூரியன்முன் பனிபோல ஊடலைக் காதல்நீக்கவே முன்னை ஊடல்தீர்க் கையில் தானிணங்காமற் போனமையால் பதைக்குஞ் சிந்தையுடையாளாய் ஆபரணமணிந்த மயிலன்ன ஒருமாது பொய்யுறக்கங்கொண்டு கனவென்னுஞ் சூதினால் தன்கணவனைத் தழுவுவாள், ஒளியமைந்த முகமும் மயிலன்னசாயலு முடைட்யாளும் ஒருதலைவனும் ஒருவனைபொருவர் கிடைக்கப்பெற்றபோது இரண்டுடலு மொன்றுபடத்தழுவினர். அவ்வாறு பொருந்திய ஊடலைப்பிரித் தலையெண்ணுமையால் தழுவுதலினின்று நீங்கிலர், வைகறையாதலையும் பார்த் திலர். மதயானைபோல்வாளொருவீரனும் கரியகூந்தலையுடையா ளோர்மாதும் கலவிப்போரினால்தொய்யிலெழுதிய தனபாரத்தைச்சுமக்கவலியற்ற இடையே போலத் தன்வலிகுறைந்துநின்றனர். கல்லொழுக்கம் முற்றப்பெறுதார்பெற்ற செல்வம் தேய்வதுபோல் சந்திரன் ஒளிகுன்றினன். திருமாமகள் கண்ண னெனுமிறைவன் மார்பிலணிந்த கவுத்துவமணிபோல் சூரியன் உதயகிரியிற் றோன்றினன்.

உண்டாட்டுப்படலம் - முற்றிற்று.

எதிர்கோட்படலம்.

வேதநெறியே யொழுகும் தசரத சக்கரவர்த்தி பருவ மேகம்போன்ற யானைகள் மதமாகிய வாற்றைப்பொழியும் படைக்கடலொடு கங்கையைச் சேர்ந்தது. அக்கங்கை நீரை அப்படைகளான் மொண்டு பருகப்பட்டு உப்பு டையகடலுந் தெண்ணீர்பருகும் வேட்கைமிக்கது. அங்குநின்றும் அப்படை புடை பரந்துசெல்ல மிதிலைநகரமென்று சிறப்பித்துக் கூறப்படும் நீர்வளம் நில வளம் குடிவளமிருந்த நகரத்துக் கருகே யுலகமுழுதுமுடைய சக்கரவர்த்தி வருகையில், சனகராசனே அவன்வருகையினைத் தூதுவராலறிந்து தன்மனத் திற்களிப்பு மிகுதியெழ,தன்னல்வகைச்சேனையும் சூழ்ந்துவரச்சுந்திரன் சூரிய னைச்சார்வதேபோல, இந்திர திருவமுடையானைத் தானெதிர்சென் றழைக்க வந்தனன். சக்கரவர்த்தி சேனைவெள்ளமோ ஒழிந்தகடல்களெல்லாம் ஒன்று பட்டுவந்தாற்போ னெருங்கின. பதுமாசனியாகிய திருமாமகளைப்பெற்ற பாற் கடலெதிர்வதேபோலச் சன்கராசனது நகரமாந்தர் எதிரவந்தனர். சக்கரவர் த்தி சேனைக்கடல் மயிற்பீலிகளும் வெண்பட்டுக்குடைகளும் பீலிக்குடைக ளும் எங்கு நெருங்கக்கலந்து நிற்பதனல் சூரியனொளிமறைபட்டு செந்தாமரை மலரும் வெண்டாமரைமலரும் பலமலர்களும் தங்கிய தடாகம்போன்றிருந் தது. இவ்வகைப்பட்டாளென நூலுணர்வறியாதவிசையை மடியென்பதனை த்துணையுமில்லாத வெற்றிக்குடையி லுள்ளாளோ ! அவர் செல்லுநிலத்தி லுள் ளாளோ ! கடற்படையி லுள்ளாளோ ! அவன் மார்பிலுள்ளாளோ ! அவனது முடியிலுள்ளாளோ ! வென்று சொலலும்படி நின்றது. அச்சேனையில் யாழ்முத லிய பஞ்சகருவிகளின் குரல்முதலிய யாழொலி கச்சணிந்த முலையையுடைய மாதரார் கரியகுழலிற்படிந்தவண்டினெலியாம், தேரூர்ந்து செல்வதனலாகிய ஓசை கடலொலியாம், யானைகளினது கர்ச்சனை மேக கர்ச்சனையாமெனச் சொல்லக்கிடந்தது. உலகைச் சூழ்ந்துகிடக்கும் கடல்களும் தூர்ந்து மேடாக அச் சேனையிலுண்டாகிய செந்தூளெழும்பி உலகமுழுதும் பரந்ததென்று சொல்வதற்கெளிதாமோ ? அது உலகமுண்ட பெருவாயனும் உலப்பில் சீர்த்தி யெம்மானுமாகியகள்ளமாமாயன் உலகளந்தகாலத்தில் வலத்திருவடிதொளைத் துச்சென்றவழியேசென்று அச்செந்தூள் அப்புறமுமபோய்ப் பரந்தது. அரச ருடைய பெருங்குடைகள் வானமறைத்து நெருங்கிச்செலவதனல் உண் டாகிய கிழலாகிய இருளினை வேலொன்றுற் போக்குதல்கூடாது. அச்சேனை போகுங்காலத்தில் சிதறிக்கிடக்கும் மணிகளி னெளியால் அவ்விருணீங்கும். இவ்வாறு சக்கரவர்த்தி சேனையுடன்வருகையில் சனகராசன் எதிர்கொண்டு வரும்வழியெல்லாம் எழுகின்றபேரொல்லாம் கதம்பப்பொடியும் பொற்றுகளும் பூந்தாதுகளுமாயிருக்கும். அவர்செல்லும் வழியிலுள்ள சேறெல்லாம் கூந்தல் லணிந்த மாலையிற்சிந்தும் தேனும் மயிர்ச்சாந்தும் குங்குமப்பொடியும் அகி லும் சந்தனமும் கத்தூரிப்பெருக்கும் கலவையும் மதச்சேறுமேயாம். அவ்வழி யிலுள்ள நிழல்களோ பொன்னுற்செய்த வாகனங்களிலும் மணிகளாற் செய்த வாகனங்களிலும் போய்வந்தலாவும் கெடாதநிழலும்வெற்றிக்கொடிகள்.விதா னங்கள் வெண்கொற்றக்குடைகள் இவைகளாலுண்டாகும் நிழல்களுமாம்.

இப்படிவருஞ் சக்கரவர்த்தியின் நால்வகைச் சேனையொடு சனகராசன் சேனைவந்து சேர்ந்தபோதுண்டாகியஓசை அலையெறியும் கடலின்மேல்கங்கை யாறு பாய்வதனாலுண்டாகிய ஓசையோ டொத்திருந்தது. எல்லாநற்குண நற்செய்கைகளுக் கிருப்பிடமாகி யாவருக்கும் தந்தையையொத்த பெருந் தன்மையுடைய தசரதசக்கரவர்த்திக்கு முன்னே கட்டுத்தறியை முறிக்கும் யானைப்படையுடைய சனகராசனும காதலாலுந்தப்பட்ட தன் சிந்தையே போல நெடுந்தேரிலேறிவந்து சேர்ந்து தேரைவிட்டிழிந்து தன்றிரண்டசேனை பின்னே நிற்கத் தான்முன்னேநடந்துபோக, அதைக்கண்ட சக்கரவர்த்தியும் கையாற் குறிப்பிக்க வினாந்து சக்கரவர்த்தி தேரிலேறினின்றான். சக்கவர்த்தி யும் தன் அகமு முகமுமொத்துமலர அவனைத்தழுவிக்கொண்டு அவனுடைய சுற்றத்தானையும் நட்பினனையும் உள்ளன்பொடு விசாரித்து முன்னேசெல் லென்று கட்டளையிட்டுத் தான்மிதிலையைநோக்கிநடந்தான். இவ்வாறிருவரும் போகையில் செந்தழல்வண்ணனுகிய சிவபெருமானது பொன்னிறமமைந்து கிடக்கும் நீண்டவில்லைமுறித்துத் தனக்குத்தானே யொப்பென்றுசொல்ல விளங்கும் சிராமபிரான் தன்தம்பியுடன் சனகராசன்தகரினின்றும்புறப்பட்டுக் குதிரைப்படையும்காலாட்படையும் இருபுறத்தே சூழ்ந்துவர மரகதமணியாற் செய்யப்பட்ட தேரிலேறிக் காவிமலரும் குவளைமலரும் காயாமலரும்போன்று சித்திரமுஞ் சுவைகெடத்தோன்றும் வடிவுடன் முன்பிரிந்தவுயிர்மீண்டும்வந்த தென்றுசொல்லும்படி சக்கரவாத்தியையடைந்து தன்தாதையாகிய சக்கர வர்த்தியினது பாதங்களில் மும்முறைவலம்வந்து பணியவே, அவனை வாரி யெடுத்து தோளொடுதோளும மார்பொடுமார்பும்பொருந்தத்தழுவினன். பின்பு இளையபெருமாள் வந்துவணங்க அவனையும் அவ்வாறே தழுவி நிற்க விடை பெற்று, இராமலக்குவ ரிருவரும் தம்மை மக்களாகப் பெற்றெடுத்துவளர்த்த தாய்மார் மூவரையும் பணிந்தார்கள். அவ்வாறு பணிந்த மக்களைக் கண்டபோ தண்டாகிய உவகைக்கோ லெலையில்லையென்று விளங்கியது. தன்னையெப் போதும் நினைக்கின்ற அன்பு உள்ளத்தேநிறைந்து புறத்திலுமொழுகியதென்று சொல்லும்படி ஆனந்தக்கண்ணீர் பொழிந்து வணங்கிய பரதனைச் சிராமனும் மார்புறப்புல்லி நிற்கையில அவ்விராமன் பரதனென்னும் இருவனையும் இலக் குமண சத்துருக்கர் வணங்கக்கண்டு அவர்களையும் அவ்விருவரும் மார்புடன் பொருந்தப்புல்லினர். நான்குவேதங்களே யென்னு மொழுக்கமுடையாராகிய இந்நால்வரும் நிற்கின்றவைபவங்கண்ட சக்கரவர்த்தி சேனைத்தலைவனைநோக்கி முன்னேகொண்டு செலவீதென்று கட்டளையிட்டருளினன். தம்மிருபுறத்துந் தம்பாலன்புடைய தம்பியர்மொய்த்து குதிரையேறிச்செல்லத் தம்மைக்கண்டு ஆசிர்வதிக்கும் மலரும் இனைக்கும் அசுதையும் தன்னைப்பார்க்கும் மாதரார் கண்பாவை மேல்விழாமல் நிற்கப்பவனியாக மிதுலாநகரத்தின்வழியே செல் கையில் அவ்வீதியிலுள்ள மாதரது கைவளைகள் அசைதலாலும் பாதத்தி லணிந்த நூபுரங்கள் நடனவிதியைக்காட்டுவதனாலும் யானைத்தந்தத்தின்பெரு ழிதத்தினைச் செருக்கும்படியெழுந்த கொங்கைகளையுடைய வேசியராடரங்கே காகவிளங்க நிற்தருக்கெல்லா முதல்வனுகிய இராகவபிரான் போகையில்

குறைவற்ற படைகளை யுடைய மன்மதன் தன் கையம்புகளை யேவுதலால் பேதை பெதும்பை மங்கை மடந்தை அரிவை தெரிவை பேரிளம்பெண்ணென்னும்எழுவகைப்பருவத்து மாதரும் அவ்வீதியிலடைந்தனர்தஞ் சொல்வோம்.

எதிர்கோட்படலம்.

மூற்றிற்று.

உலாவியற்படலம்.

இவ்வாறு ஆடம்பரமாய் இரகுகுலோத்தமன் பவனிவருகையில் மானினம் வருவனபோன்றும், மயிலினந திரிவனபோன்றும், மீனினம் நெருங்குவனபோன்றும், விண்மீனினம் விளங்குவனபோன்றும், வண்டினம் மிகவுமாரவாரிக்கக் காலிலணிந்த சிலம்பினஞ் சத்திக்க, எங்கும் அழகிய கூந்தலையுடைய மாதரார் விளைந்து புகுந்து மொய்த்தனர். அம்மாதரார் விரிந்து சோர்ந்த கூந்தலைமுடியாமலும், அற்றனவாகிய மேகலையை மதியாமலும், சரிந்த அழகிய ஆடைகளையுடுக்காமலும்,மெல்லிய இடையில் தடுமாறிநிற்க, அதனாலே சிறிதுங் காலதாமசஞ்செய்யாமல் நெருங்கிவந்து ஒருவனைப்பார்த்து ஒருவர்போங்கோள் போங்கோளென்று தேனையுண்ணவரும் வண்டினம்போல மொய்த்துக்கொண்டு, நாங்கள் காதலென்னும் பொருளைக் கண்ணாலேகாணகின்றேமாதலால், பெண்டன்மை யின்றுதான் பெற்றோ மாகின்றோ மென்றெண்ணிப் பூமியில் நீருண்ட மேகம் பெய்யுமழை சிறிதுமில்லாமல் வறழ்ந்தபோது னை யோரிடத்தே கண்டு தாவுகின்ற மான்கூட்டம்போன்று, மிக்கவேட்கையான் மொய்த்து, பள்ளநிலத்தில் பாய்கின்ற தெளிந்த நீரையுடையவெள்ளத்தினும் பெரியகண்களையுடைய மாதரார் மெல்லிய தொழிலமைந்தசிலம்புகள் ஒலிக்கும்படி பாதமாகிய மெல்லிய தாமரைமலர்கள் தள்ளாடவும், தம்முடைய இடைகள் வருந்தவும், தம்மையும் வலித்துக்கொண்டு அவ்விறைவன்பாற்செல்லும் தங்கள் நெஞ்சினைப் பிடிப்போமென்றோடுவார்கள். அகலிகைகண்டு மகிழ்வெய்திய சிபாதங்களையும், இயற்கைமணநிறைந்த கருங்குழலையுடைய சானகிக்காக வில்லைமுறித்த உயர்ந்ததோளையுங்காண வீதியில் நெருங்கிய மாதரார் அழுதத்தைமொய்த்துக்கொள்ளுகின்ற ஈயினம்போலவும், அவ்வாறுமொய்த்துக்கொண்டமாதருடைய கண்ணெக்கங்களுள் தாவிச்செல்லும் குதிரைகள்பூண்ட தேரிற்செல்பவனுய், யாவருக்குங் கண்ணனென்றுதன்னையாவருங் கூறுகின்ற பெயர்ப்பொருளைக் காரணப்பெயராக்கிச் சென்றான். இரவிகுலோத்தமனுடைய தேரிற்பூட்டிய குதிரைகள் மனோவேகத்தினுமிஞ்சிச்செல்கின்றதென்று அம்மாதரெல்லாம் தங்களுக்குள்தாங்களே பேசிக்கொண்டனர். இவ்வாறு மாதராரெல்லாம் உன்மத்தம் பிடித்தவராய் மண்ணையும் விண்ணையும் தாவியளந்த திருவடியினையுடைய பகவான் தன் கண்மயலைக்காவாமற் காத்துக்கொண்ட சானகியே பெரியளென்று சொல்லும்படி அவ்வீதியினடக்கையில், அவருள் ஒருத்திதன்னுயிரொன்றே யொழிய,புயிர்ப்பையும்

போன்று பிரியாமற்பொருந்திய சேலையும் பழிப்பில்லாத பெண்ணலத்தை யும் கைவனையையும் இயற்கைக்குணத்தையும் குற்றமற்ற அழகையும் என் ணத்தையும் அறிவையும் மாமைநிறத்தையும் வயிரம்பொதிந்த அணிகளையும் நாணத்தையும் கற்பின் வரலாற்றினையும் முழுதுமொழிந்துநின்றுள். காதி லணிந்த குழைகளிற் பாய்ந்துதோன்றும் கண்களாகிய சேல்கள் மேகம்பொழி வதுபோல நீர்த்துளிகளைப்பொழியத், தழையில்லாத கரும்பாகிய வில்லை வளைத்து அதினின்றும் அனங்கன் விடும் பஞ்சபாணம்பாய்வதனால், நாவிழை யும் அதனிடத்தே செல்லாமற்றடைசெய்திறுமாந்து மார்பிடமெலாங்கவர்ந்து ஈர்க்கிடைபோகா விளமுலைமாதொருத்தி சோர்ந்து மேகத்திலில்லாத மின் னல்போன்ற தன்னிடை துவண்டு நின்றுள். பஞ்சின் மெல்லிய விரல்களை யுடைய மாதரது வேற்படைபோன்ற நெடியகண்களெல்லாம் இறைவனது கரிய திருமேனியை யடையப்பெற்றனவோ, அல்லது மேகம்போலுந் திரு மேனியையுடைய இறைவனது அழகிய நிறம் அம்மாதரார் கண்ணெச்சில் படக் கறுத்ததோ தெரியாதென்று சொல்லக்கிடந்தது. மாந்தளிர்போலும் மென்மையுடையாளாகிய ஒண்ணுதலொருத்தி மாதர்மேலெல்லாம்மன்மதன் பூவாளிபொழிந்த போனைக்கண்டு அச்சக்காரவார்த்தியினது ஆண்டன்மையை மதியாமலும், இரகுநாயகன் வில்லாண்மையைப் பாராமலும், இம்மாதர்மேல் தன் மலரம்புகளை யோயாதெய்து நின்றமையால், அப்படி அஞ்சா நெஞ்சு படைத்துப் புட்பபாணம் பொழிகின்றவன் எப்படிப்பட்டவனே வென்று சொல்வாள். சொல்லுக்கும் மற்றெவ்வகைப்பட்ட இன்பங்களுக்கும் மேம் பட்ட காமச்சுவையே யொருருவமாகச்செய்து இன்பநலங்களை யறியவல் லார் எழுதியவாறேபோன்று அசைவற்று நின்ற பொன்னம்பாவையொத்த தன்மையுடையவள், இவளோ தானணிந்திருந்த எல்லாவணிகளையும் நீக்கின ளாய்த் தன்னையுந் தாங்கும் வலியொழிந்து சேலையொன்றனையுமே தாங்கி நின்றனள். மயிலன்ன சாயலாளொருத்தி வில்லினையேபோன்ற நெற்றியில் வெயர்வொழுகவும், பசலை யுடன்முழுதும் போர்ப்பவும், மனந்தளர்ந்து நின்று மற்றொன்றும் காணமே தன்மனஞ்சிறிதும் தன்னிடத்தின்றிச் சிராமல் பக் கல்போயினமையாலே வள்ளற்றன்மையுடைய கோசலராமன் தனியனே வென்று கூறுவாள். மேகம்போலுங், கூந்தலும் சிவந்தவாயும் ஒண்ணுதலு முடையாளொருத்தி மனந்தளர்ந் துருகிநின்று தோழியே இவ்வஞ்சகன் என் னெஞ்சில்வந்து புகுந்தான், இனி அவன் வெளிப்பட்டுப் போகாதவகைசெய் யவேண்டும், அது என்கண்ணென்னும் ஐம்புலக்கதவைச்சிக்கென அடைத்துச் சேமிப்பதே தகுதியென்றெண்ணிச் சேமித்தேன் பூம்படுக்கையைச் சேரலாம் வாவென்று சொல்லுவாள். திருமாமகள்போன்ற தன்மேனியிற் றைத்த காம பாணங்களை மதியாமலும், அணிகலனும் ஆசையும் வெவ்வேறுனமை யறியாம லும், அப்போதுதான்செய்த பசும்பொற்பாவையன்ன ளொருத்தி அவ்விட த்தே சிரம்மீனைக் காண்பவனாயெல்லா மெரியெழப்பார்ப்பாள். களித்து மதர் த்து வீண்டு கதுப்பினையளந்து கள்ளமறைதற் கிடமாய் அப்புறப்பட் டருவு நோக்கிச்சிவந்து உள்ளேவெளுத்துக் கறுத்தவேல்போன்ற கண்ணொருத்தி

மனக்களிப்பாகக் காணவந்து, கண்டபின்னே காமவெப்பத்தோடு மனைக்குட் சென்றாள். இரகுவீரன் மேனியைக் கருங்குழற் பாசத்தாலும் கனபாரத் தாலும் மேகலையணிந்த பாரத்தாலும் மறைக்கப்படுவதனல் சிறிது நீக்கிடம் பெறுமற் புலம்புறு மாதொருத்தி காண விழையுங் கட்டழகு தன்னை எவுவத னல் அம்மாதரிடை வெளியேகண்டு களிபபாள். அவ்வீதிமாதர் மனத்தில் தைத்துக் கழன்றுபோன மன்மதபாணங்களும், அமமாத தொறித்துவிட்ட ஆப்ரணராசிகளும், அவர் முலையில் வியர்க்க ஒழுகிய சந்தனமும், சரிந்து வீழ்ந்த சந்தனமும்,சரிந்துவீழ்ந்த மேகலாபரணமும்,முத்துவடமும்,கைவளை யல்களும், குழல்சோர்ந்து வீழ்வதனற் சரிந்த பூமாலைகளுமல்லது வெற்றிட மிலதென்றுசொல்ல இருக்கும். அவ்விராகவன் வீதிவழியே போகையில் அவன் தோளழகிலே யீடுபட்டவர் அத்தோளினிடத்தே கருத்துவைத்தன ரன்றி வேறிடத்தே மீட்கிதா யிருபபார். வீரக்கழல்பூண்ட சேவடியினழ கிலே யீடுபட்டவர்அச்சேவடியினழகிலேயே சிந்தைவைத்திருந்தனர். விசால மான கைகளினிடத்தே யீடுபட்டவர, அவ்வாறே கையினிடத்தேயே சிந்தை வைத்திருந்தனர். வாளினழகைக்கொண்ட மாதரில் அவனழகை முழுதுங் கண்டு அனுபவித்தவர்யாவரென்றே சொல்லத்தக்கது ; சமயக்குருடர் இறைவ னது உண்மை நிலையைக் காண முடியாவாறே போன்றிருந்தது.

உலகமுண்ட பெருவாயனிலும் பெரியாரினியாருண்டு ; அவனேசிற்றிடை யுடீண்ட கூந்தலுமுடைய பெண்ணைருத்தியினது உள்ளத்தில் அவனுய்யும் படி அடங்கினனென்று சொல்லிக்கொள்வர். ஒருமாது சீராமனைக்காண வேண்டுமென்று சிலம்பு மேகலையுமொலிக்க அலங்காரநிறைந்த பூங்கொம் பேபோல நடந்துவந்துசேர்ந்து தன்வருத்தம் நோக்கிவருந்தும் தோழியர் கைமேற் சென்றாள். தாமரையரும்பையொத்த குவிமுலையினையுடையாளோர் மாது பேரழகே வடிவமாக முன்னைப்பிறவியிற் செய்தழுதுதவமுடையான் தனிமையாய் தேரேறிப்போகவிட் டென்னைதிரோயெய்த கின்றமைதானிவன் செய்தகபடநாடகசாலமோ ! அல்லது கனவிற்கண்ட நிலையோ ! வென்று கனை வாள்.மனத்தையல்லது தூதுபெற்றறியாளாய்த் தன்னினியவுயிர் சோர்பவ ளாகியமாதொருத்தி தாமரைமலர்போன்றுசெவ்வரிபரந்தவிழியினையும், குழை யினையடர்ந்து ஆபரணமணிந்த தனத்தினையுமுடைய சனகி என்ன தவஞ் செய்தனளோவென் றேங்குவாள். சாமுத்திரிகாசாத்திரங் கூறியவண்ணம் எல்லா இலக்கணமுமமைந்த பாவைபோல்வாள் அழுது பெருமூச்செறிந்து தன்பாங்கினின்ற தோழியைப்பார்த்து தொழுது சோர்ந்தயர்ந்து இவ்வரசினங் குமரனை இம்மன்மதனுல் எழுதலாமோவென்று சொல்வாள். அழகிய வாயினை யும் ஒண்ணுதலையுமுடைய வோர்மாது சாதாரணமாய் மானிடவர்க் கிவ்விலக் கணமெல்லாம் எய்தப்பெறுமோ ? இதனையுணர்த்துகின்றேன்,இவளை கண்ணை பிராணேயாம், இதனைப்பின் கண்டிருமென்பாள். ஒண்ணுதலொருத்தி பொன் னற்செய்த காற்சிலம்பு கைவளைகளோடு கழன்றுவிழப் புனிதன் இந்நாளன்று இம்மிதிலை நகரமடைந்தசனகராசன்முன்னைப்பிறவியிற்செய்த தவமேயென் பாள். நீர் துளித்தும் கண்களையும் பசும்பொன்னணியணிந்த வொருமாது தன்

னழுகினலம் நீங்கவருந்தி, இவ்விராகவன் முனிவரும் அரசரும் புடைசூழ்ந்து வராமல் கனவின்கண் தனித்துவருவதேனே! என்பாள். புனத்தை யிடமாகக் கொண்ட கார்காலத்து மயிலன்ன சாயலையுடைய பொன்னங்கொம்பனையா ளொருத்தி தன்மனத்தின்புறத்தே வெளிப்படுத்தவொட்டாமல் மறைத்துவிட வெண்ணி, அவ்வாறுசெய்யக் கருதியதை மனத்தெதப்போல முகமும் மறைக் குமோ? மறைக்காதாகையால் அனங்கனுகிய மன்மதனே இதையறிந்துவிட் டானென்று சொல்வள். ஒத்தவுருவமைந்த நெடுங்கண்ணையும் மேலாய அணி களையுமுடைய மாதொருத்தி பூவணையொன்றிற் சேர்ந்து, இடியோசை கேட்ட நாகமேபோல நெருங்கிய அழகுமிக்க தனங்கள் ஞெமுங்கியதிவு கெட்டு வருந்தி பெருமூச்செறிவாள். செவ்வாம்பலை நிகர்த்துச்சொல்லாகிய அமுதம் பொழியுஞ் செவ்வாயையுமுடைய மாதரார் உள்ளமிகப்பதைத்து உயிர்தடுமாறுவர். கொங்கைப்பாரம் பொறுமேவருந்துகின்ற சிற்றிடையையுடைய சானகியைப்போலச் சிறிது களிப்பையும் பெற்றாரல்லர். எவ்வாறு பிழைப்பர். உயிர்நிலைதளர்ந்து வருத்தத்துடன் விருப்பமு முற்றுப்பெறாது கவலையுறுகின்ற மாதராரெல்லாரையும் இவ்வாணலழகன் சிறிதுங்கருத்தாலும் செந்தாமரைபோலுங் கண்ணாலும் நோக்கிப பாராமலிருப்பதனால் அவன் உள்ளத்தில் அன்பில்லனே என்பள். தேனைப்பற்றித் தொடர்ந்துசெல்கின்ற மாதராரோ அளவற்றவர். அதுகாரணத்தால் அம்மாதரையெல்லாம் எய்கின்ற அழகிய வில்லையுடையாருகிய மதனனும் யாதுதான் செய்யக்கடவன்? கையம் பொழிந்துபோக உடைவாளிலேயும் கைவைத்தான். மணமிக்க கூந்தலை யுடையமாதர்பால் நடந்த போரினையல்லாது வேனிற்காலத்திற் சீறிய மன்மத னுக்குச்சுவர்க்கலோக வாசிகளாகிய அரமகளிர்பால் நடந்த போரினையறிந்த தில்லை, அவ்வம்புகள் படர்ந்து சென்று அவ்வான நாடியர் கொங்கைகளிலுஞ் சென்றுணுகத்தன.

மிகவுமயங்கும் மங்கையரிடத்தே யொன்றையும் விரும்பாமற் சும்மா போவதே இவனதுசெய்கை யாதலால் இவன் கருணையென்பதைச் சிறிதுங் கண்டறியான். மங்கையரிடத்தே கருணையில்லாமையால் பெருமையாகிய பக்குவப்பட்ட ஞானமுடையானேனெவினின், நமது சனகியானைத் திருமணஞ் செய்து கொள்ளச் செல்வதனால் அவனுமல்லன். பின்னையாரெனின், கொலைத் தொழில்வல்லவனே யாமென் றொருத்தி கூறுவாள். தொய்யிலெழுதிக் காமவெப்பமுடைய கொங்கைகளால் உடுக்கைபோன்று இடையே வருந்தும் ஒரு சிற்றிடையுடையமாது கையுமெய்யு மறியாள் கண்டதோழியோ பிழைப் பாள் பிழைப்பாளென்று சொல்ல உடல்தளர்ந்து செயலற்றிருந்தாள். பாகின் மென்மொழியுடையா ளொருத்தி கமுகமரத்திற் பூட்டிய உஞ்சலிலாடுவானைப் போன்று, மலரினும்மெல்லிய பாதங்கள்காய்ப்பேற இரகுநாயகன்திருத்தேரின் பின் பலகாலுஞ்சென்று மீள்வள். ஆசைமிகுந்த பின்னையொருவர்க்கு நாண முண்டாயிருக்குமோ? இராதாகையால், மிக்ககாதலினுல் மருள்கின்ற மாதர் களுக்குள் ஒருத்தி அங்கே மற்றொருத்தியைப் பார்த்து, என்மனத்தையும் இரகுபுங்கவன் பின்னேற்போகக் கண்டதுண்டோ வென்பாள். திருமகளே

போலு மழகினையுடையாளொருத்தி தம்மைவிரும்பி யடைபவருயிர் பிழைக்க இவன்வழிவந்தோர் செய்தனர்; எங்களின்னுயிரை எங்களுக் கீயாதகொடுமை இவனுக்கெவ்வாறு விளைந்ததென்று சொல்வாள். நாமே இவனை விரும்பத் தானென்னை விரும்பாதிருக்கின்றானென்று புறத்தேசொல்ல அச்சத்தாலே தன்னுள்ள மழிபவளாகிய ஒருமாது சானகியினது கன்னித்தன்மைக்குக் காவலாகிய வெற்றிமாலை பூண்டவில்லை இவன் முறித்ததை யெண்ணுமிடத்து, அகிற்புகையும் மாலையும் அமைந்த கூந்தலையும் தூயமொழியையுமுடைய சானகியாரிடத்தில் வைத்த விருப்பத்தாலல்ல, தனுர்வேதத்தில் தானடைந்திருந்த புலமையைப் பிறரறிய வேண்டுமென்றெண்ணியேயென்பாள். முத்து வடமும் ஆடையும் மற்றையணிகளும் சோர்ந்து விழத் தன்னின்னுயிர்சோர்கின்ற சோர்குழலொருத்தி கண்டோர்க்கச்சம்பயக்கும் திரியம்பகமென்னும் வில்லினைவளைத்த இவ்வரசிளங் குமரனுகிய மன்மதனுக்கு முன்னேயென்னை உயிர்வாங்கும் வலிமைபெற்றவர் யாரென்பாள். இவ்வாறு மாதர்களெல்லாம் நெருங்கிநிற்க, வள்ளற்றன்மையுடைய தாசரதிபோய் காமம் வெகுளி மயக்கமென்னும்மூக்குற்றமு மகன்ற சிந்தையையுடைய வசிட்டமுனிவரும் விசுவாமித்திரமுனிவரும் தங்கியிருக்கின்ற அத்தாணிமண்டபத்திற் காசர் கூட்டத்தொடுஞ் சேர்ந்தான்.

அறப்பயிர்வளர்க்க அயோத்தியில்வந் தவதரித்த சீராமன் குற்றமற்ற மணிவடங்கள் மின்ன லுலாவினுற்போல மார்பிலசைந்தாட, கார்காலத்து மேகம் நிலத்திற்படிந்ததுபோல எட்டிறுப்பும் நிலமுற, அம்முனிவரிருவனையும் பணிந்துநிற்கவே, அவர்களும் அவனது குணசேட்டிதங்களைப் புகழ்ந்தவராய் அவ்வளவி லிருவெனவேவ, அலங்காரமமைந்த ஓராசனத்தில்தன் தம்பியர் புடைசூழ வெழுந்தருளினன். பின்பு நித்தர்வசிக்கும் திருமாமணிமண்டபம் போல்வதாகிய அம்முனிவர்களும் இரகுவீரனும் இளையவீரரும் இருந்த அத்தாணிமண்டபத்தில் நால்வகைச்சேனைக்கடலையுடைய சக்கரவர்த்திவிண்மீன் தன்புடைவர வானில்வரும் திங்களேபோலத் தம்முறவினரோடும் போய்ச் சேர்ந்து அங்கெழுந்தருளிய முனிவரிருவனையும்முறைமையால்வணங்கித்தன் மேல்அந்தணர்கள் வாழ்த்தி மலர்மழைபொழிய, இந்திரன்முகநான, இந்திரதிருவனென்னத் தாளைருசிங்காதனத்தில் வீற்றிருந்தான். அப்போதுகங்கர் கொங்கர் கலிங்கர் முதலிய ஐம்பத்தாறு தேசத்தரசரும் வந்துசேர்ந்தனர். மிகவுமோங்கி வளர்ந்துயர்ந்த கீர்த்தியின்பூங்கொழுந்து பொலிவனபோல தீங்கரும்பினுந்தித்திக்கு மினியசொல்லையுடைய மாதர்கள் சாமளைகளைத்தாங்கி இருபுறத்தும்வீசினர். வண்டு, நிமிறு, சுரும்பு சூழ்ந்து திரியும் வாசனையுடைய மலரைமுடித்த கூந்தலையுடையாராகிய சுமங்கலப் பெண்கள் வேய்ங்குழலினேடு பொருந்தக்கூறும் பல்லாண்டிசைசையானது மழலையாழிசையோடு மிகுந்திருக்க, யானைப் படையையுடைய சக்கரவர்த்தியின் வெண்கொற்றக் குடைவிளங்க, சந்திரன்தன்குலத்திற்பிறந்த கொடிபோன்ற சானகியார் திருமணத்தைக் காணவந்து ஓங்கிப் பரந்ததுபோலிருந்தது. எள்ளிடவிடமின்றி யெங்குஞ்சேனைகள் கடல்போற்பெருகி யிருப்பதனல் சனகனது மிதிலாநகரமானது உலகமே என்று சொல்லச்சிறந்தது.

உலாவியற்படலம் - முற்றிற்று.

கோலங்காண் படலம்.

சிங்காசனத்தில் தன்தேவியர் மூவீரும் இனிதுசூழத் தசரதசக்கரவர்த்தி சிங்காதனத்தில் வீற்றிருக்கையில், சனகராசனோக்கி வசிட்டமுனிவன் திருமகள்போலும் அழகினைப்படைத்த சீதையை அழைத்துக்கொண்டுவரக் கட்டளையிட்டார். அக்கட்டளையையேற்ற சனகராசன் தன்னருகிருந்த மாதனை நோக்கிச் சானகியானைத்தருவிக்கவேவ அவர்களும் தோழியருக்கறிவித்தனர். அவர்கள் சானகியானை அலங்காரஞ்செய்து அழகிய செம்பட்டாடை யுடுத்திற்க, சானகியார் சாமனையிரட்டக்கலாப நிழலத்தர, அந்நிழலிலே விளங்குங் கருமயில்போல விதானநிழலில் கடந்தருளிவந்தாள். அவளைக்கண்ட வுடனேசித்திரப்பதுமைபோ லனசவறநின்றுவிட்டனர். காண்பதற்குமுன்னே தான்கன்னிமாடத்திற்கண்ட கன்னியாமெனவும் அல்லவெனவும் ஐயப்படுகின்றசீராமன் அழுதம்போன்ற சானகியானை எதிர்கண்டு நீங்குமோ, நிற்குமோவென்றெண்ணிவருந்தும் உயிர் நிலைக்கத்தக்க ஆர்க்காதலுடன் திருப்பாற்கடலைக் கடைந்தபோது வருந்தி அழுதம்பிறந்தமையால் கழிபெருமகிழ்தலைப் பெற்ற இந்திரனைப்போற்களித்தான். அப்போது வசிட்டமுனிவர் எங்கள் செய்தவமுடைமையாற் சீராமனுகத் தோன்றினன். சங்குசக்கரமுடைய தனிமுதல்வனுகவின், அத்தாமரைமலரி லெழுந்தருளிய திருமாமகளாகும் இச் சானகியாரென்றெண்ணி மனமகிழ்ந்தான். தசரத சக்கரவர்த்தியோ சீதாபிராட்டியி னழகைக்கண்டு உலகமுழுதும் அரசாண்டு வருபவனுயிருந்தாலும், இவளைமருகியாகப்பெறுதற் கென்னதவஞ்செய்தேனென்று சொன்னன். இராமபிரானும் முனிவர்களும் அல்லாத பிறர்க்குச்சீதாபிராட்டியார் தெருங்கிவருதலும், தேகமானது சிந்தைலயப்பட்டதாகலின் காரணங்களெல்லாம் தெய்வமெனப்பொருந்தின. அவரவர் தஞ்சென்னிமேற் கைகூப்பிநின்றனர். தன்னிருக்கையாகிய, செந்தாமரை மலரைவெறுத்து அரசர்வாழ்மனையிற் குடிபுகுந்த சானகியார் முனிவர்களை முன்னேவணங்கிச் சக்கரவர்த்தியைத் திருவடிதொழுது திருமணநிறைவேற்றப்போகின்றதே யென்று மனமகிழ்ந்து ஆனந்தக்கண்ணீர் சொரியும் சனகராசனுகிய தன்தந்தையிடத்தேசென்று அவர் அருகேயிட்டிருந்த ஆசனத்தில் தனித்து வீற்றிருந்தாள். ஆடகமால்வரை போன்ற வில்லைவளைத்ததும் முறித்ததும் வசிட்டர் பொருந்தச்சொன்னமையால் கன்னிமாடத்தில் தன்னைக்கண்டு மால்விளைத்த ஆணிலழகனே யிவனென்று துணிந்தமையால் தான்கொண்டதோ யையமகன்று, சீராமபிரானைத் தன்னுள்ளத்தே மாத்திர மலலாமல் புறத்தும் கைவளைதிருத்திக் கடைக்கண்ணை நோக்கிக்கொண்டிருந்தாள். இவ்வாறு பார்த்துக்கொண்டிருப்பதனல் தன்கண்ணின் கடையினூளியாறு அப்பெருந்தகையின் பேரழகாகிய கடல் வெள்ளத்திற் பாய்வதனல் ஊசலையொத் துயிர்சுழல, உயர்ந்த அணிகளை யணிந்த தெய்வமகளிர்க் காசாகி அருமையாகிய அமிழ்தமுழுதும் வேறொருவர்க்கின்றித் தமக்கே கிடைத்தவளவில் . அதனைத் தாமேயுண்டார்போன்று மனம்பூரித்து, கொல்லுந் தொழிலில் மிக்க யானைப்படையையுடைய அரசர் பெருமான் கல்விகளைக்கண்ட விசுவாமித்திரமுனிவனைப்பார்த்து, பெரியோய்

வல்லிசாதக்கொடிபோலும் இடையையுடைய சானகியினது திருமணத்துக் குரிய கன்னுளிஃதென்றுசொல்லி யருளவேண்டுமென்று வேண்ட, கயல்மீன் கள்தாவிநிற்பதனல் வாளைமீன்கள்ளருமையினது மச்சையுள்ள முதுகுகிழியக் கழுகின்பாளை மலர வாள்மீன்பாய்ந்து குதிக்கும் நீர்வளப்பமுள்ள வயல்கள் சூழ்ந்த கோசலைநாட்டுக் கதிபதியாகிய சக்கரவர்த்தியே! நீர்கேட்டவாறுமது சானகியினது மன்றலுக்குரிய நாள் நாளையே யென்பதிற் சந்தேகமில்லையென் று விசுவாமித்திரமுனிவர் திருவாய்மலர்ந்தருளினர். அம்மொழிகேட்ட அரச ரெல்லாங் கைதொழுது வணங்கி யெழுந்திருக்க, தன்னெற்றை வலம்புரிச் சங்கமுழங்கத் தன்முடிமேல் இளவெயில் பரப்பச்சென்று சூரியமண்டல மளாவு மாடஞ்சூழ்ந்த அழகிய தன்திருமாளிகையிற் புகுந்தார். தாமரையி லிருக்கும் அன்னம்போல்வாராகிய சானகியாரும் அரிதிற்பெயர்ந்து சென்ற வுடன், இரகுநாயகனும் அத்தாணிமண்டபநீங்கித் தன்பொன்மனைபுகுந்தான். மற்றையரசரும் தத்தமக்குவிட்டிருந்த விடுதிகளிற்சென்று சேர்ந்தனர். முனி வர்களும் அவ்வாறே சென்றனர். சுடர்க்கெல்லாம் நாயகனுகிய சூரியனும் மானகிரியில் மறைந்தான்.

கோலங்காண்படலம்

முற்றிற்று.

கடிமணப்படலம்.

இடம்படு புகழினையுடைய சனகராசன் இன்சொல்லுடன் உண்டியினை யுபசரிக்க, மதம்பொழியும் யானைப்படையையுடைய அரசர் மந்திரிமார் சேனை த்தலைவர் முதல் விசாலமான புயவலிபடைத்த சிறியதம்பியர் வரையிலும் இடையே தம்மாற் காணப்பட்டோருமாகிய யாவரும் உடம்பொடு சுவர்க்க லோகபோகத்தை யனுபவிப்பானை யொத்திருந்தனர். நீர் நசையால் வருந்தி யருகே யோர் தடாகங்கண்டு அதனிடத்தே தெண்ணீரைப் பருகுதற்குக் காணுதவர்கள் தம்முடல் வலிகுன்றத்தளர்ந் துன்மத்தராவாரன்றே அது போல, பொன்வளைய லணிந்த குயிலன்ன சானகியாரும் அந்நிலையாய் இரகுவீரன் வில்முறித்த நாள்முதலாக ஒவ்வொருநாளுங் கண்படைபெறுது கங்குலில்வருந்தி நின்று, வலிசிறிதுமில்லாதார் உயிரை யீவோமென்றுகூறி யுலோபஞ்செய்வாரோ! இல்லை, நீயுமவ்வாறு செய்கின்றனை. சூரியன்உதித்த லும் என்னையடிமையாகவுடையான் வருவான். இரவே! நீ கொடியைவிடி என் றும், கருநாயிறு போல்பவரது சிபாதங்களொடுந் தொடர்ந்துசென்று நாளை யருகேவருவாய், வராமலு மொழியமாட்டாய், பலநாள் அவனைச்சேர்ந்து பிரியாமல் தங்கியிருப்பாய், அவ்வாறிருக்க ஒருநாள் தரியாமல் நீங்குவாரு முண்டோ! நீயேன் அவரிடஞ்சென்றனையென்றும், கனைக்கின்ற எழுகடலே போலும் இரவோ தீவினையுடையேனது தீவினையால்விடியாவிட்டால்யானைமரு த்தி னிருக்குமன்றிற் பறவையே; நீ உன்துணையைப்பிரிந்து தனியாகப்பறக்க மாட்டாய், கூவினின் றென்னை வருத்துவதனல் நடுவுநிலை சிறிது மில்லாதாய்

பழியை யெய்துகின்றனை யென்றும், நிலவே! கூரிய வேல்போன்ற அழலை கீகிகிற்கு மொளிகளையுடைய வெயில்போல விரிகின்றனை, யாதொரு குற்றமு மில்லாதார்தம்முடல்மெலிவர் அவருயிரையும் கொள்ளுவாருமுண்டோ! உண் டேற் சொல்லென்றும், மனமென்னும் அழல்சொரிகின்ற வாயையும் ஒளித் தொருதியாகிய நிலவென்னும் நகையையும்பெற்று மலைய,மலையிலுள்ளபெருங் குகையிற் குடியிருக்கும் தென்றற்காற்றுகிய புலியே, இனைதேடப் புறப்பட் டாயோவென்றும், குலமன்னரிற் கன்னியரிடத்தே வருவாருமுண்டோ! இல் லையே! அப்படியிருக்க கரியமேகம்போன்ற வொருவர்தெருவிலே திரிபவராய் இரவும் பகலும் என்னைவிட்டுப் பிரிந்திலர் இதுவென்னவென்றும், பிறரால் அறியப்படாத செயலையோ தீயுவர் தழுவமாட்டார் அவ்வாறிருக்க, அவரருள் செய்யாமையால் அவர்தோள்களைத் தழுவவிரும்புவாரோ! கூடாது, இரவாகி யகடலே! கைகாண்பரிது,எவ்வளவு ஊழிகாலம்இரவேயாயினவோ! அறியே னென்றும், இசையோவொழியாது, பகற்பொழுதோ வருகின்றிலது,என் எண் ணங்களோ நீங்காதன, இரவோவிடியாது, உள்ளத்திலுண்டான வருத்தங் களோ வொழிந்தில, உயிரோ உடலைவிட்டு நீங்காது, கண்களோ தூங்கமாட் டா, இவைதானே என்கடமைகளென்றும், மன்மதபாணத்திற்கு முன்னில் லாமல் இடையாயினகாலத்தே ஒரு நிலையினில்லாமல் வளைசோர்ந்துவிழ வெழுந்து விழுந்திளைத்து காள்முழுதுந் தூங்காமலிருக்கின்றேன், என்னைப் போல கடலே! நீயும் மன்மதபாணத்திற் கிலக்காயஞ்சிச் சங்காகிய வளைகள் புறத்தேவரும்படி எழுந்தும்விழுந்தும் உடல்தளர்ந்தும் காள்முழுதும் தூங்காம லிருப்பதனல் ஒருபெண்ணேவென்றும், இவ்வாறு பன்னிப்பன்னி வேறொன் றுந் தன்னைச் செய்யலாகாமையிற் செயலற்று வருந்தினின்றாள். இது கிடக்க;

இராகூகாயகனே கன்னிமாடத்தில்முன்கண் டளவிடற்கரிய காதற்பெருக் கால் இருகண்ணுலுங்கண்டு என்மனத்தே பதியவெழுதியும், அத்தாணிமண் டபத்தில் பின்னீயுங் காணப்பெற்றும்,அவர்அழகினை லலையக்கண்டேனல்லே னென்றும், சந்திரனே! நீவிளைகின்ற காமவித்துக்கு முதற்காரணமும், அதன் காரியமாகிய கனியும், துணைக்காரணமாகிய வெருவுமாயினை, ஆகையால் நீ திருமகள்போல்பவளாகிய சானகியாரது திருமுகமேயல்லது வேறன்று, ஆகை யால் என்னெருத்தியொடும் உறவாயினையல்லை, நீ செய்யும்விதம் என்னவென் றும், ஏவ்விடத்தும் பரந்த விருளோ உடலினின்றும் நீங்காத நிலைமையை யுடைய என்னுயிரைத் தள்ளும்படி அப்பெண்ணரசியின் விழியேபோல வளர் ந்து குறையாமல் அழிகின்ற போரிலே இறைவன்பட அஞ்சியவீரனது பழியே போல வளர்கின்றதென்றும், புனமான்போன்றவரோடுந் தொடர்ந்து சென்ற வென்மனமே! ஒருகா லென்னிடத்தேவர நினையாய்,வரத்தான் வழித்தூரமோ! நீயென் வந்தனையென்று கேளாதவரிடத்தே விடைபெற்றிலையோவன்றி அவர் போல என்னையும் மறந்தாயோ வென்றும், கடவிடந்தீர்க்காமலும் பாம்பின் பல்லையிடமாகக்கொண் டிருக்குமென்று சொல்வார்கள், இப்போது என்பார் வையினின்றும் நெஞ்சினின்றும் நீங்கா துறைகின்றவரது கண்ணிலன்றே வீருக்கின்றதென்றும்; மலையும் கழிக்கனையும் சோலையும்பிறவுமே அங்குள்ளன;

வாயினும் அமுதத்தின் சுவையினும் இனிய சொல்லினையும் ஒளியமைந்த கூந்தலையுமுடையார் விளையாட்டிடம் இதுபோது என்மனந்தானேவென்றும் தனிநின்று வருந்துவதாயினர்.

சனகராசன் வள்ளுவனை யழைத்து நமது சானகியாருக்குத் திருமணத் தொழில் நடப்பது காளையேயாம். மலாமாலையாலும் மணிவடங்களாலும் இம் மிதுலா நகரத்தை யலங்கரிக்க வேண்டுமெனறு பறையறையக் கட்டளை யிட, அக்கட்டளையேற்ற வள்ளுவனும யானேபறிப் பறையறைந்து கலி யாணச்செய்தியை யறிவிக்க, முதியாரும் இளையாரும மயிர்ச்சாந்து பூசிய கூந்தலையுடைய மாதரும் ஆங்காங்குகூடி யணிய வினைவாரும, உசாவுகின்ற சுற்றத்தோடு திருமணத்தினைக் குறித்துக் களிபபிலே யழுந்துகின்றுரு மாய்க் கனையிடலரிய இரவுக்கோ கனையைக்கணடனர். அஞ்சனமேனி யழ கனும் மலர்மிசை யுறையு மங்கையும் காளை மணமடபுனர்வாகளென்ற சொற் கேட்டுத் தன் செஞ்சுடரால இருளைக்கீறிச் சூரியன ஒரு தோமேல் தன்வழி வந்த காகுத்தனுடைய திருமணக்கோலங்காணைப புறப்பட்டு வருதவன்போல உதயகிரியி லுதயமாயினன்.

இவ்வாறு தோன்றவே, அநகரமாநதரிற் சிலா தோரண நடுவர், தூண் களைச் சித்திரித்த உறைகளான மூடுவர, பூரண கலசங்களுக்கு ஆடையைப் புனைவர், மேகம் தவழும நெடிய மாளிகையில கதிர்மணி மாலைகளை யணிவர், வேதபாராயணஞ் செப்வர், இனிய வுணவுகளை யமைப்பர், அன்னமென் னடையாரும் மழவிடைபோல்வாரும் அழிவிலலாத நகரத்தில் வாழையுங் கமுகு நடுவர். முத்தமாலையை யாராய்ந்தெடுப்பர், பொன்னணிகளை யணி வர், மணிபணிகளை யணிவர், சந்தனத்திலல் வீடுகளை மெழுகுவர். ஓரம் பொன்னுற் செய்யப்பட்டியாந்த பளிங்குத் தின்னைகளில் தீபக்குடம் வைப் பர், இளமுளையாகிய பாலிகைகளை அததின்னைகளில் வரிசையாக வைப்பர், மந்தர மலைபோன்ற மாடங்களின் முற்றத்திலெங்கும இந்திரன் ஆளுகையில் அமைந்த நெடியவானம வினமீனப் பூத்தாற்போல முடிவில்லாமற் பிரகாசிக் கின்ற முத்துவடங்கள் ஒளிவீசவும் பச்சைப்பதர் நிழலைத்தரவும் படர்ந்த வெயிலைக் கடிந்து நீக்குவர்.

ஓரத்தில் வயிரமணிபதித்து மாகதத்தாலமைத்த ஓமகுண்டலத்தின் பக் கத்தில் தீபக்குடங்களை சிலதாதியர்கொணர்ந்துவைப்பர். ஆடவர்களோகொடி களைச் சந்திரன் தவழ்கின்ற மதிண்மேல் நடுவார்கள். அகிற்கட்டையால் புகை யுண்டாக வெரிப்பர். வண்டிகளில் நிறைத்து மணமுள்ள மலர்மாலையைக் கொண்டுவருவர். சோலைகளிலுள்ள வாழைமரங்களி னிலையோடு கனி பலவற்

றைபுங் கொண்டுவருவார்கள். காதிலணிந்த குண்டலந் தோன்றக் குரவைக் கூத்தாடுவர். உண்டையடியைக்கொண்டு கோட்டப்பட்ட மதயானைகளுக்கு நெற்றிப்பட்ட மணிவர். கலவைச்சந்தனம் பூசுவார்கள். நல்ல ஆடைகளை யாராய்ந்து பார்த்தெடுப்பர். மலைக் கூந்தலிலணிவர். நிலைக்கண்ணாடி முன்னர் திலகமணிவார்கள். மணிவடங்களை யணிவார்கள். இலவ மலர்போன்ற விதழில் கோலத்தை யழகுபெற விடுவர். தெரியாது சிந்திப்போன முத்துகளையும் மணிகளையும்கைவளைகளையும் மயிலன்னசாயன்மடவார் அலங்காரஞ்செய்யும்போது உதிர்ந்துபோனமலர்களையும் பவளம்போன்றபரிமளப்பொடியையும் உதிர்ந்த பொற்பொடியையும் குப்பையென்று வாரிக்கொணடு வீட்டினின்றும் நீக்குவர். அரசரில் வருவாரும், அந்தணரில் நிறைவாரும் யாழிசையாகிய கள்ளைச்செவியாகிய வாயால பருகுகின்றும் வாணரில் உலாவுவாரும் சிலதியரில் கூடுவாரும் நாழிகை வட்டிலால திருமணநடக்கவேண்டிய கால நாழிகைகளை யாராய்வாருமா யிருந்தாகள். நிருத்த மாதர்கள் நிறைவார்கள். பரதநூல் கள் பலவற்றையும் ஆராய்வாகள். வடங்களிற்கோத்த ஓரினமாகிய முத்துகளும் அலங்காரஞ்செய்திருக்கின்ற முடிகள் ஒன்றோடொன்று தாக்குவதனால உதிர்ந்தபொன்னும் மணிகளும் மலைபோலக் குவிந்துகிடக்கின்ற சக்கரவர்த்தியெழுந்தருளி யிருக்கும் திருமாளிகையின் வாயிலில் பல தேசராசர்களும் போய் நெருங்குவார்கள். இடக்கையிற் பிடித்த கேடகம் வெயில விசவும் வலக்கையிற்பிடித்த வாள்நிலாவொளிவீசவும் தந்தங்களுயர்ந்து போர்த்தொழிலிற் றேர்ச்சியையுடைய நெடிய யானைகளைப்போன்று ஆடவர் திரிவர். கணிகையர் கண்டு அவர்மனமகிழப் பரதநூற்படி நடனஞ்செய்து அவருடைய உயிரையும் தமது நகையினாலேயே கவர்வர். கிரணங்களையுடைய மணிகள் மிகவும் பிரகாசம வீசுவதினால் விரும்பும்பொருள்கள் இன்னதென்று காண்கிறவர்களுக்குத் தோன்றுமல எதிரொளிவீச அம்மணிகளி னொளியைப்பெற்றுத் தம்மியற்கையானது மாறுதலினால் தேவர்களும் அரமகளிரும் தாமிருந்த சுவர்க்கலோக மின்னதென்றும் தாம்வந்த மிதுலாநகர மின்னதென்று மறியாமல் மயங்குவார்கள். சிலர் தேர்மேல் வருவர், சிலர் சிவிகையேறிவருவர், சிலர் குதிரையேறி வருவர், சிலர் மணியினாலாகிய நெற்றிப்பட்டமணிந்த யானையேறிவருவர், சிலர் பிடியானைமேல் வருவர், சிலர் பூமியிற் காலால் நடந்தேதவருவர், சிலர் வண்டிகளி லேறிவருவர், சிலர் முத்தணிகளை யணிவார்கள், சிலர் முன்னே புனைந்திருந்த மணியணிகளை நீக்குவர், சிலர் பொன்னாலாகிய ஆபரணங்களைப் பூண்பர். சிலர் பூங்கொத்துகளைக் கூந்தலி லணிவர், சித்திரவேலையமைந்த அழகிய ஆடையை யுடுத்துவர். விடம்போன்றகண்ணினையுடையாரும் அமுதமன்ன மொழியை யுடையாரும் செங்கிடையைப்போன்ற இதழையுடையாரும் வெண்ணகை யுடையாரும் மலைபோன்ற பெரிய தனங்களையுடையாரும், நுட்பமாகிய இடை சிறியாரும், பெண்ணன்னம்போலும் நடையினை யுடையாரும், பிடியானைபோல் நடந்து வருவாருமா யிருந்தனர். இவ்வாறு அம்மிதுலா நகரத்தில் நடக்கும் விபவங்களைச்சொல்ல ஒருவராலு முடியாது, பார்த்தளவிடுவது மரிது; இதுவோ மிகவும் வியக்கத்தக்கது. யாவ

ாலு மதிக்கப்படுஞ் சுவர்க்கலோகத்தில் இந்திரன் முடிசூடும்படி யலங்கரித்த திருநாளோயே யொத்திருந்ததென்று யாவராலுஞ் சொல்லக்கிடந்தது. இது கிற்க;

பரப்பின் எல்லை யறிதற்கரியதும் பொற்றகட்டினன் முகடுமூடப்பட்ட தும் மலைபோன்றுயர்ந்ததும சுவர் தூண் முதலியனவைமணிகளாற்செய்யப்பட் டனவுமாகிய திருமணமண்டபத்தில் சக்கரவர்த்தி தன் வெண்கொற்றக்குடை புதுநிலாப்பரப்பக் கண்ணையூடிருவும் மணிபூணைகள் வெயிலெறிப்பவண்டினம் பாடக் குதிரை தன்காலாற் புழுதியெழுபபச் சென்றனன். மங்கல முரசிரட் டன, தாரைகள் ஆரவாரித்தன. அந்தணாகள்வேதவோசை இரவிலொலிக்குங் கடலோசையினு மிக்கது. தேவாகள் யானைகள் குதிரைகள் நிரனிையாகச் சென்றன; கூட்டங்கூட்டமாகக் காலாட்கள் சென்றன. மற்றையரசர் இந் திரனுக்கயலிற்செலலுந் தேவரோபோலதெருங்கிச்சென்றனர். இவ்வாறு சென்ற தசரதன் அம்மணவினை மண்டபமெய்தியங்கிட்டிருந்த பொன்னனும் மணியா னும் புனைதரும் பூந்தவிசினிடையெழுந்தருளினன். முற்றத்துறந்தமுனிவரும் முடிமன்னரும முறையாகச்சென்று சோந்தனர. சனகர் பெருமானும் தன் சுற்றத்தொடும் தான ஓராசனத்திலெழுந்தருளியிருந்தான். சூரியன் முதலிய கிரகங்கள் வலமவருகின்ற மேருமலைபோனற அமமணவினை மண்டபத்தில் யாவரும் சூழ்ந்திருக்கையில அமமயறற்செய்யப்பட்ட மண்டபமானதுமேகங் களும் மின்னலும் விண்மீன்களும் இரத்தினராசிகளும இருசுடரும் உள்ளன வாகலின் பிரமாண்டத்தையும், முனிவரும தேவரும இநதிரன் முதலிய இறை வரும் பிறருஞ் சென்றடங்கி யிருநதமையான் உலகமுண்ட பெருவாயனகிய திருமாலி னழகிய திருவயிற்றையு மொத்திருநதது. பூவுலக முதலிய உலகி னுள்ளார் யாவரும் அம்பணவினை காண விழைந்து நின்றமையால் யான் இத் தன்மையதென்று கூறுந நகையதோ, இனி அரவணை துறநதுவந்து அயோத்தி யெய்திய சிராமபிரானது செயலைச் சொலலாநிற்கிறேன்.

குடங்களில் எழுகடனீரையும கங்கைமுதலிய புண்ணியதீர்த்தங்களையும் ஒருசேரக் கொணரத் திருமஞ்சனமாடிப் பிரமன் முதலாகிய சேதனரும் பிற ரும் தம்மைவிட்டு நீங்காத அவித்தை யிருள் நீங்கிப் பிரபத்தி நிட்டையென் னும் பெருநெறியில வேண்டுதல வேணடாமை யொழிந்தொழுகி யிரும்புண்ட நீரிற் றிரும்பாததாய் மயர்வரு மதிநல மெய்திநினைாய்தும் உயர்வற வுயர்நல ல்குரும் திருமண மண்டபத்தைப் பொருத்தும் தன்துவாதசாம மந்திரத்தை நினைத்துச் கத்தூரிக் கலவையணிந்து தங்குலத்தோர் தொழும் தெய்வப் பிராணுகிய ஆதியஞ்சோதி யாயிரமோலி யமலப்பிரானை யடிவணங்கிக் காதள வோடிய கண்ணியராகியகன்னியனை அருமறையுணர்ந்த அந்தணருக்குத் தான மாகவழங்கி நின்று அறத்தைவளர்க்க நினைத்துக் கருணையே யொருபடிவங் கொண்டாற்போன்று விளங்கும் ஓவியருமெழுதாணுத திருவுருக்கொண்டு இருண்டமேகத்தைத் தழுவினின்ற நிலவேபோன்று கலவைச்சாந்துதிருமார்பு முதலிய இடங்களிலப்பி முழுநிலா வெறிக்கும் திங்களைக்கருங்கடல் பூத்தாற்

போலச் செங்கிடையாலும் செம்பொனலுஞ் சமைத்த சிகழிகையாகியமாலை யும் பிறமாலைகளையும் தன்திருமுகத்தினருகே யடைந்துதொங்க, சுழித்து முடிக்கு மயிர்முடியிற்சூடி மைத்தழையாகின்ற மாமிடற்று மழுவேந்திய இறைவனது நீள்சடைப்புறத்து மதியமணிந்து, தான் கடவுட்டன்மையை யுடைய சுடர்க்கூட்டத்தை யெல்லாம் சூடினற்போல வீரபட்டமும் காவித் திலகமு மணிந்து சக்கரத் தயலில்வரும் சங்கமேபோல விலைமிக்க கழுத் தணி முத்துமாலை முதலியன சானகியாரது புன்முறுவ லுள்ளத்தேபுகுந்து நிறைத்து மெய்பொடித்தாற்போலுந் தோன்ற, கினையாகப் பதித்த வயி ரங்கள் புள்ளிகளேபோலப் பெருமையாகப்பொருந்த வரம்பில்லாத சுடர்மணி கள் செந்தீயைப்போன்று தோன்றலால அழகிய தோளணி முன்னைநாளில் மந்தர மலையைச்சுற்றிய பாமபினை யொத்திருந்தது. பெரிய முத்துவடங்களை யணிந்து கைகள் விளங்குவன மூவகையுலகமும காக்கு முதல்வனென யாவரு முணர்வதற்கோர் குறியிட்டாற்போல விளங்கப பூந்தாமனையாள் பொலிவுற்று விளங்குந் திருமார்பில பலவகை மணியாரங்கள் விண்மீன்கள் தன்பால் விள ங்கு மேகத்தில இந்திர வில்லிட்டிருப்பதுபோலவிளங்கித் தோற்றவும், தன்னி லடங்கியும் அடங்காமலும விரிந்துணராத மெய்யுணர்ச்சியுடையாரது மாசற்ற அறிவேபோல, ஒளிவிட் டெறிக்கும் வெணபட் டுத்தரீயம் அடங்காது பெருகும் கருணையாளன் கழுத்திற் பூணட தரளமாலை யிருபக்கமெறிக்கும் நிலாவைப்போன்றுமார்பிலே கிடந்தசையவும், பரிதியங்கடவுளேபோலவொளி விட்டெறிக்கும் மார்பிற்புரளு முத்தால தேவரும் முனிவரும தெரியொ ணாத மூவர்தங்கோ னிவனென்றுணாக்க விளங்கவும், தன்னைச்சூழப் பருமணி கள் ஒளிவீச மேலிடத்தே யொளிருக வில்லுமிழும பருமணிகுயின்ற உதர பந்தனமென்னு மணி பிரமாண்டமும் பிரமனுமவந்து தோன்றப் பொலிவுற்ற பொற்றுமனைப் பூவேபோலதோன்றவும், மணிகள் வயங்கித்தோன்றிய கடல் ஒன்று பாற்கடலைத் தழுவியதுபோலும வெண்பட்டாடை யணிந்து முத்து வடங்களும், நீலமணிவடங்களும், அலங்காரமாகவமைந்த பொற்சுரிளை தன் னினஞ்சூழ்ந்துவரும் பொன்மலையில வலம்வரும் சூரியனேபோல் விளங்கவும், உடைவாள் வீக்கி உலகங்களை யளப்படதெப்படியென்று அவ்வுலகங்கள் தனித் தனி தடுப்பனபோன்ற இயல்பினதாகி நுண்ணியதொழிலமைந்து கிடக்கும் சிலம்புகள் வீரக்கழலையணிந்த பூந்தாமனை போன்ற பாதங்களைச் சூழ்ந்து கிடக்க இன்னவண்ணம் தன்னைத்தானே நிகர்த்த கோலஞ்சமைந்து நின்ற னன். இதுகிடக்க ;

சங்கருஷ்ணனுக அழித்தும், பிரத்தியுமனனுக நின்று படைத்தும், அநி ருத்தனுகக் காத்து முத்தொழில் புரியு மூவருக்கு முதன்மையாகிய பரவாசு தேவனும், அம்மூவருக்குங் காரணமாகிய பரமபதநாதனும், திருமலையில் எழுந்தருளிய பெருமானும் பாற்கடலி லறிதுயில் செய்யும் பரமனு மாகி விபவநூன்கினுட் சிறந்த சிராமபிரான் தன்னையே பொப்பனைசெய்தமை யாராலேதான் சொல்லிமுடிவுபெறும். இவ்வாறு கோலம்புனைந்து பல கோதா

னங்களும் சுவர்ணதானமும் பூதானமும் தன்னெறிபற்றியொழுகும் அந்தணர்க்குவழங்கிச் சென்றெறியிற்பயிலு முனிவர்கள் பலர் ஆசிகூறத்தேரிலேறிப் பரதாழ்வான் முட்கோல் கைக்கொள்ள, இளையவன் பின்னே காத்துநிற்க, சத்துருக்ன ழ்வான் சாமனைவீசச்சென்றான். இக்கோலங்கண்ட மனிதரெல்லாம் இமையா நாட்டமெய்தினர். தேவரோ உலகெல்லாம் வருத்தும் அரக்கர்கூட்டம் நாசமாவது இன்றுசமைந்ததென்று கருதிவந்து நிரம்பி அரமகளிரொடு ஆனந்தக்கூத்தாடினர். மாதரோ மலர்மழைபொழிந்து பொற்சுண்ணந்தூவி இரவலர்க்குப பொன்னையும் மணிகளையும் ஆடைகளையும் வீசினர். இக்கரமாந்தர் கருத்தின்னதென்று அறியோம், மேலுஞ் சிலர் தமபாலுள்ளனவற்றை யிரப்போர் வெறுப்பக் களிப்பாற் கொள்ளக்கடவீரெனக் கொடுக்குந் தன்மையைப்போல வள்ளற்பிரானுகிய சீராமபிரானை நோக்கிய மாதர் தம் முடலி லணிந்திருந்த பலதாழிலமைந்த ஆபரணங்களெல்லாங் கழலுகின்றனர். குறைவற்ற உலகினுள்ள பகைவர்மே லெய்தற்குரிய அரசர்கூட்டம் யானைத்திரளேபோலச்சூழ்ந்துகிடப்ப வெஞ்சினமமைந்த விற்றொழிலிற்சிறந்த சீராமபிரானும் பொன்மலையிற்சேரும பரியங்கடவுள்போன்று சென்று அதினின்றுமிழிந்து பின்னா இருபாங்குரும இருகரங்களை இளையவனும் பரதாழ்வானும் பற்றிநிற்பச்சென்று அவித்தை யிருளொழிந்த முற்றத்துறந்த முனிவர்களைத் தொழுதுவாழ்த்தி நீதியும் உண்மையும் விரதமாகக்கொண்ட தன்பிதாவின் செய்ய தாளைவணங்கி அவனருகே யிருக்க விலலை மேற்புறத்தேயுடைய இரண்டு கயன்மீன்களை இடையே பெற்ற ஒள்ளிய மதியைச் சுமந்து ஒரு செம்பொற் கொம்பு மூலைகளாகிய அரும்புகள் தன்னிடை யருமபத் தேரின் மேற் கீழ்த்திசையில் முளைத்தாற்போன்ற சானகியார் அலையெறிகின்ற பாற்கடலில் திருவவதரித்து, மீண்டும் பொன்மலையி லுதிக்கின்றுள்போல அம்மண்டபத்தைக் குறுகினுள். பாற்கடலில் அன்றவதரித்த பெருமகிழ்வினும் இன்றுகாணப்பெற்றது பெறலரும்பேறென்று தேவர்களெல்லாஞ்சிந்தைமகிழ்ந்தனர். கடல்புடைசூழ்ந்த காசினியி லுள்ளாரினும் தேவரினும் நாகரினுமிக்குத்தோன்றும் பொலிவு இறைவன் திருமறுமாபின் அழகேயாயின் இவரது திருமணத்தினுண்டாய விபவத்தை வாயானெவ்வாறு எடுத்துரைப்பதென்றுபலரு முரைத்தனர்.

இந்திரன் ஜாணியுடனும் சந்திரசேகரனுகிய பரமசிவன் பார்வதியாருடனும் நான்முகக்கடவுள் கலைமகளுடனும் சீராமபிரானது மணக்கோலத்தினழகுகாண அந்தரமார்க்கத்தில் வந்திருந்தனர். நீந்த வரிய கடல்போல நிறைந்த வேதமுணர்ந்த அந்தணர்சூழவேதத்திற்கூறிய தொன்னெறியில்வந்த கேள்விக்குரிய வசிட்டமுனிவர் குற்றமென்பதின்றியமைந்த தருப்பைகொண்டெய்தி அரிசியைப்பரப்பித் தருப்பையைச்சாத்திமண்டலத்தை வேதநெறியினமைத்து மலர்சொரிந்து எரியை மூட்டி வேதமந்திரங்களைச் சொல்லி அக்கினியாணத்திற்குரிய வேள்வியைச் செய்தான். அத்திருமணஞ் செய்யுமிடத்தில் சீராமபிரான் வந்து வீற்றிருக்கவே, சானகிப்பிராட்டியாரும் அங்கெழுந்

தருளினர். அவ்விருவரும் எழுந்தருளிய காட்சி சாத்தியமான பேரின்பசுக
மும் சாதனமாகிய தியானமும்போன்று விளங்கின. அப்போது சனகர்பெரு
மான் சானகியானை இரகுநாயகன் கையிற் பிடித்தளித்து இச்சீதையோ என்
மகள் தவமும் தருமமும் சரிதமாகவுடையாள் என்று சொல்லித் திருமகளுஞ்
செல்வப்பொருளுமென நிலைபெற்றிருக்கவென்று தாரைவார்த் தளித்தான்.
அவ்வாறு அளிக்கவே அந்தணர்க ளாசிகூறினர். அந்தணமடவார் பல்லாண்டு
பாடினர். முடிமன்னரும் தேவர்களும் வாழ்த்தொலிசெய்தனர். சங்கவாத்
திய முழங்கின. தேவர்கள் கற்பகப்பூமழை பொழிந்தனர். அரசர் பொன்
மழைபொழிந்தனர். ஏனையோர் முத்தமழையும் கறும்பூமழையும் பெய்தனர.
இவற்றால் அம்மிதிலாநகரம் ஆகாயத்தில்வின்மீன் பூத்ததேபோலவிளங்கிற்று.
பின்னர் தசரதராமன் அம்மணவேள்வியில் கலியாணத்திற் குரிய மந்திரங்
களைச் சொலலி யாகுதிசெய்து, சானகியார் கையைப்பிடித்து செய்யவேண்
டியவனைத்துஞ் செய்துமுடித்து, அத்தியின்கண் சங்கற்பஞ்செய்யத்தொடங்கி
அதனை வலமவந்து பொரியினைத்து அமமிமிதித்தலாகிய சத்தபதியை நிறை
வேற்றப் பிராட்டியார் காலைத் தூக்கிவைத்து அருந்ததியைக்கணடு தவமே
பொருளாகவுடைய பாதங்களைத் தன்முடியிற்சூட்டிச் சக்கரவர்த்தி பாதங்
களையும்வணங்கிச் சானகிப்பிராட்டியார் கையைப்பிடித்துக்கொணடே நன்
முகச்சமைத் திருந்த திருமாளிகையிற்புகுந்தான். பேரிகைகள் ஆரவாரித்தன,
சங்கங்கள் முழங்கின, வேதகோஷ்ட முழங்கின, தேவர்கள் ஆரவாரித்தனர்,
பலநூல்கள்ஆரவாரித்தன,பல்லாண்டுகளாரவாரித்தன,வண்டினமுமார்த்தன.
இரகுநாயகனை தன்தாயாகிய கோசலைப்பிராட்டியினும் பேரன்புடன்கைகேசி
பாதங்களைத் தாழ்ந்துவணங்கி நின்று முறையே தன்தாயாகிய கோசலையையும்
சுமித்திரையையுமவணங்கினின்றனா.சானகியாரோ அவ்வாறே அம்மூவர்பாதங்
களையும் வணங்கினர். அதைக்கண்ட கோசலைப்பிராட்டியார் முதலியமூவரும்
இவ்வருந்ததியன்ன பெண்மணி நங்கணமணியாகிய சீராமனுக்கு இல்வாழ்க்
கைத் துணைமணியாகவிருப்பளென வாழ்த்தித் தனித்தனி சானகியாரைத்
தழுவினின்று நமதுமகனுக்கு மனைவியாவார் பெண்பிறப்பிலே இவர்போல் எவ்
வுலகத்தி லிருப்பரென்று கண்ணுமனமுங் களிப்பெய்தி எண்ணில்பலகோடி
பொன்னையும் எண்ணருங்கோடி மாதாவெள்ளத்தையும் இடமகன்றநாடுகளை
யும் உயர்ந்தஆடைகளையும் தெய்வப்பெ ணன்னவரே பெறுகவென்று கூறி
னர். நூற்கேள்வியிற் கடல்போன்றவராகிய முனிவர்பாற் சொல்லின் கடன்
மையைச் சீர்தூக்கிக் காதல் கடலேயொத்த மனத்துச் சானகிப்பிராட்டியா
ருடன் காற்றினால் வீசப்பட்டுப் பொங்கிருங் கடலேபோலக் களிமிகுந்து கரு
ணைக்கடலாகிய சீராமபிரான் தான்முன்னே யோகநித்திரை செய்தருளிய
திருப்பாற்கடலேயொத்ததோர் பாயலிற் கண்வளர்ந்தனன். பங்குனிமாதத்தில்
திருவுத்திராளில் அம்மிதிலை நகரத்தில் அருமறையிற்கூறிய ஆயிரந்திரு
நாமமுமுடையசிங்கமேறன்ன சீராமபிரானுக்குத் திருமணத்தொழிலைச்செய்த
வகையினால் மங்கலத்தீயை வளர்த்தினின்றான். இதுவிடக்க;

*சனகராசனே என்னுடன்பிறந்த குசத்துவசன்பெற்ற மாதர் மூவனையும் நமது இராகுவீரனுக்குப் பின்தோன்றிய பரதாழ்வான்முதலிய மூவருக்கு மணஞ்செய்விக்க வேண்டுமென்றுசொலல அவ்வாறே குசத்துவசன்பெற்ற மாதர் மூவருள் ஊர்மிளை இளையவனையும், மாளவி பரதாழ்வானையும், சுருத சேனை சத்துருக்காழ்வானையும் மணம்புரிந்தனர். அவரவர் மணம்புரிந்த பின்னர் சக்கரவாத்தியும் தொன்றுதொட்டுவந்த புகழைக் கொடுத்திலனல்ல துண்மைவழியிற் றேடிய பொருளெலையுள்ளன, அவை வேண்டியவேண்டியாங்குதவினன். சக்கரவர்த்தியும் அவ்வாறுகொடுத்து வரம்பகன்றுப்பிகந்த. வின்பத்தை யனுபவியா கின்று வைதிகநூல்களை யாராய்ந்து உண்மைநெறியெய்த ஞானக்கேள்வியையுடைய அருந்தவத்தவரொடு அமமிதுலாகாரத்திற் றங்கினன். இவ்வாறு சிலகாள்தங்கியிருந்து காலங்கழித்தனன். இதுகிடக்க;

கடிமணப்படலம்

முற்றிற்று.

---

*கொய்நிறை தாரன் குசத்துவ சப்பேர்
நெய்நிறை வேலவன் மங்கையர் நேர்ந்தார்
மைநிறை கண்ணியர் வானுறை நீரார்
மெய்நிறை மூவனை மூவரும் வேட்டார்.

இதன்பொருள் - கொய்து குறைவறத்தொடுத்த மலர்மாலையணிந்த குசத்துவசனென்னும் பெயரொய்தி நெய் முற்றத்தடவிய வேலினன் பயந்த மையுண் கண்ணியரும் வானின்க ணுறையு நீர்மையருமாகிய மங்கையர் மூவருனையு மெய்யொழுக்கமே வாய்ந்த மூவரு மணர்ந்தனர். எ - று.

மெய்நிறை மூவனொன்றூர் அவருள் பரதாழ்வான் ஓவிய வெழிலுடை யொரு வனையல்லதோ ராவியு முடலமு மிலதென மேவிநிற்றலானும் அவனிட்ட கட்டளை யாதோ அதையன்றிப் பிறிதறியாக் கொள்கை யுடைமையானும், இளையவன் அவன் நிழலேபோ லென்றும் பிரியாது புறத்தொழில் புரியுந் தன்மையானும், சத்துருக்கன் அவ்வயர்வரு மமரர்கட் கிறைவனை யல்லதறியாத பரதனையல்லது வேறொன்றறியாத படியாலுனுகலானு 'மெய்நிறை மூவனை' என்றூர். மையுண்கண்ணியர் மூவனென்றது மாளவி, ஊர்மிளை, சுருதசேனை என்பானை. மூவனையென்புழி முற்றும்மை விகாரத்தாற் றொக்கது. அவனை முறையே பரதன், இளையவன், சத்துருக்கனென்னு மூவரு மணந்தமைகாண்க. இனி ஊர்மிளையைச் சனகர்கோன் மகளென வான்மீகபகவான் கூறியிருப்ப "வள்ளறனக்கிளையோர்கடமக்கும் - எள்ளலில் கொற்றவன்யான் பினளித்த - வள்ளன் மலர்த்திருவன்னவர்' என்றும், 'கொய்நிறைதாரன் குசத்துவசப்பேர்-நெய்நிறை வேலவன் மங்கையர் மூவர்' என்றும் இவ்வாசிரியர் மாறுபடக் கூறினு ராலெனின் 'தேவபாடையினிக்கதைசெய்தவர் மூவரானவர்தம்மூளு மூந்திய நாவினுனாயின்படி நான் தமிழ்ப்பாவினுலி தணர்த்திய பண்பு' என்றமையால் அன்னாலு மொன்றுணர்க.

பரசுராமப்படலம்.

நம்போல் வினைவயப்பட்டுத் தோன்றுமே தானே அறநெறியொழுக்க நிறுத்தத்தோன்றிய சானகியாரும் சீராமபிரான் முதலானேரும் இன்ப கல மனுபவிக்குங்காலத்தே துவாதசாக்கர மந்திர மனுவை மாதவத்தையுடைய கோசிகமுனிவன் சிராமபிரானுக்கருளி வடதிசையில்வவாய்ந்த மேருமலையை நோக்கிகடந்தான். இவ்வாறுசென்றபின்னரும்சிராமபிரான்முதலியோர்மிதுலை நகரத்தில் வசித்துக்கொண்டிருந்தனர். சக்கரவர்த்தியோ நாம் வந்து பலநாள் சென்றன,நமது அயோத்திநகரஞ்செல்லவேண்டுமென்று கருதியமாத்தினாயில் பல அரசரும் திரண்டெய்தி வணங்கிநிற்பத் தேரேறிச்சென்றனர். செல்லவே சீராமபிரான் முதலிய மக்களும் சானகியார்முதலிய மருகிமாரும் கோசலைப் பிராட்டி முதலியமனைவியரும் சுமந்திரன்முதலிய பலரும் நால்வகைச்சேனை யும் வசிட்டபகவான் முதலிய முனிவரும் தொடர்ந்து சென்றனர். இதைக் கண்டமிதுலையில்வசிக்குமநகரமாந்தர் உயிர்பிரிவென்னும் ஒப்பறுதுயரமெய்தி மனம்வருந்தியிருந்தனர். இவ்வாறு சக்கரவர்த்தி தன்சேனையுடன்செல்கையில் மயில்வலமும் காகமுதலியன இடமும் வரக்கண்டு,இதென்ன ? தடையையுணர்த்தும் தூர்ச்சகுனந் தோன்றுகின்றன, இவ்விடத்தில் நமக்கேதோ இடையூறு நிகழுமென்றுகருதிவழிச்செல்வதைவிடுத்துத்தன்தேரோடு நின்றுசகுனக்குறி யாராய்வதில் வல்ல ஒருவனையழைத்து இப்போது தோன்றுஞ் சகுனத்தால் கல்லதோ அன்றித்தியதோபயக்கும்? உள்ளவாறுசொல்லவேண்டுமென,அவன் சக்கரவர்த்தியை மும்முறை வலம்வந்துபணிந்து நமக்கோ இடையூறுண்டாம்; ஆயினும் அதுபின்னே நலம்பயக்குமென்று சொன்னன். இவ்வாறு சொல்லிக் கொண்டிருக்கையில இருள்கெட்டோட விளங்குஞ் சடைமுடி யுடையானும் மழுவாளியுமாகிய, பரசுராமன் கண்டோர் வெருவிப்பயந்தோடும்படி புருவக் கடைநெரிய,வெவ்வியகணதீயுக,இடியேறுபோன்று கர்ச்சித்துக்கொண்டுசக்கர வர்த்திபைவிட்டொதுங்கி இரகுவீரனுக்கெதிரேபோகத்துணிந்தான். அழகிய திருமேனியையுடைய சீராமபிரானும இவன்யாரோவென்றுநினைத்துக்கொண் டிருக்கையில் பரசுராமனுக்குஆராதனைசெய்ய வெண்ணமுடையனைச் சக்கர வர்த்தி அவனைமன்னர்வணங்குந தமதுமுழியைத்தாழ்த்துவணங்கவும் கோபக் கடலின்கனையைக்கடவாதானுய் வடவைத்தீப்போற்கனன்று இடியேறுபோன் முழக்கிச்சொல்லுகின்றான். இராமா! நாளை உன்ஆற்றலுக்கு முறிந்துதோற் றுப்போன வில்லின் வலியையறிவேன். உன்தோளாற்றலைச் சோதிக்கவே இவ் வளவுதூரம்வந்தேன். உங்கள் குலத்தரசனையெல்லாம் ஆவியைக்கொள்ளை கொண்ட என்தோளோ தினவுகொள்ளுகின்றதென்று சொல்லிக்கொண்டிருக் யில் உலகமுழுதுமாளும் சக்கரவர்த்தியும் நடுநடுங்கி பூமிமுழுதும்வென்று காசியபமுனிவனுக்குத் தக்ஷணையாகக்கொடுத்த உதாரகுணமுடையானே! சிவனும் பிரமனும் திருமாலுமென்று சொல்லப்படும் முத்தேவருமே தினக் கொப்பாவாரலோ எனிற் சிறுமனிதரோ ஒருபொருளாம். இவனும் என்று யிரும் இனி உன்னபயம்; கொலையஞ்சாதார் கொலையுண்பதுதீவினைவிளைந்து

செய்யும் கொடியாரிடத்திலன்றே ! நல்வினையை விரும்புமுன்பாலன்று. இவ் விளஞ்சிறுவன் செருக்கினால் உனக்குச்செய்யும் வணக்கங்களில் ஏதேனு மறந்ததுண்டோ, மழுவாளியே ! வலியார்காட்டவேண்டியவலி அவர்போலும் வலியாரிடத்தி லல்லது மெலியாரிடத்தே பயன்படுமெ ; என்மேற்கொண்ட கோபத்தைத் தணியுமென்றிரந்துசொல்வான். என்மகனே என்குலத்தார்க் குத்தொன்றுதொட்டுவந்த பகையுடனபொருதினனல்லன். அவனிறந்துபட் டால் என்சுற்றமுநானும் உயிர்நீங்குமேவாம. அப்படி யாகாவண்ணம என்னைக் காக்கவேண்டுமென்று தன்பாதங்களிலவிழ்ந்துவணங்குஞ் சக்கரவர்த்தியைச் சிறிதுமதியாது தீயெழுக்கனன்று, சிராமபிரானினற நிலையைநோக்கிச் சென் றான். அக்கருத்தின்நிலைமையறிந்த சக்கரவர்த்தி சிறிதுமுனையாடானைய் மின் னலைக்கண்டுசோருமு அரவைபோல வருந்த, அதைக்கனடு சிறிதுமெண்ணமல் தாசரதியைநோக்கிச் சொல்லுகின்றனன. உனகையாலொடித்த வில்லோ அருட் பெருங்கடலாகிய பரமசிவனகையிலுற்றதியபபகமென்னுமவில், அது வந்தவரலாறு சொல்லுகின்றென. ஒப்பறச்சகரமுடைய தெனிலவருஞ் சூரி யனைப்போலமிருதியும ஒளியுடையதுமேருமலைபோலும வலிபெற்றுடையது மான இரண்டுவிற்களை பயனென்னுமதச்சன செய்துமுடித்தான். அவற்றுள் ஒன்றினை உமாபதியாகிய பரமசிவனமகிழ்ந்தேதந்தனன. மற்றொன்றினைத் திரு மால்தாங்கி நின்றனன். இச்செய்தியையறிந்த தேவர்கள் இவ்விரண்டிலை இன் தன வலிபெற்றுடையதென்று அறியாதாராய்க் கமலயலர்மேவிய சடவுளை வினவினர. அவர்களெண்ணம நனமைபயப்பதாகக் கருதி அக்கடவுள் விநய மாகவே யாரினுமுயர்ந்த மூலத்தொருவரா மிருவராகிய திருமாலையும் பரம சிவனையும் வலியமைந்த வில்லைக்குறித்துப் போர்செய்யமூட்டிவிடவே, அவ் விருவரும் இரண்டுவிற்களையும காலினற்றி எழுலகமு மஞ்சிநடுங்கவும் திசைக ளெடுபெயரவும மேன்மேலுங் கோபந்தியெழுதோங்கவும போரசெய்கையில், திரிபுராரியாகிய பரமசிவன் கையிற்பிடித்திருந்த திரியமபகமென்னும் வில்முறி யவே, அதற்குச் சிவபெருமான தினைத்து மீளநிம போரசெய்தனன். தேவர் களோ வணங்கிநின்று அவர் போர்செய்வதைத் தடுக்கவே, அவ்வலி யிகந்த வில்லை இருதிரன் கையில கொடுத்தனன். திருமாலோ தன் கையிற் பிடித்த கோதண்டத்தை இரிசிகமுனிவருக்குக் கொடுத்துச் சென்றன். அதனை அவ் விருசிகமுனிவர் என் தகதையாகிய சமதக்கினிக்குக்கொடுத்தார். அவர்எனக் குக் கொடுத்த வரிசிலை யிதுவாகும ; நீ நினைதியெனிதாக வளைப்பையாயின் அரசர்களி லுன்போற் பிறந்தாரிலலை, யான் எண்ணிவந்த போனையுங் குறித் துச் செய்யேன், நீயோ ஊனவிலலைமுறித்தே மென்று உன்னுற்றலையெண்ணு வது சிறந்ததேயன்று, எனக்கென்றும் உன் மரபினோரிடத்தே சாலப்பகை யுளது ; அது எந்தையாகிய சமதக்கினிசாந்தகுணமுடையானென்பதறியாது, உங்கள் குலத்தரசரு ளொருவனுகிய கார்த்த வீரியனென்போன் முன்னுளில் அசுரனைப்போல் சிறிதுங் கருதாது கொலைசெய்தான். யாமே மனந்தளர்ந்து இருபத்தொருமுறை முடிமன்னரை யெல்லாம் என் கையிலுள்ள மழுப்படை யால் சந்ததியற்றுப்போமாறு கொன்று களைந்து அவர்களுதிரவாற்றினுலாகிய

சிமந்த பஞ்சகமென்னுந் தடாகத்தில் என் தந்தைக் குரிமைக் கடன்மை செய்து முடித்தே சினந்தவிர்ந்து எனக்குக் கிடைத்த இவ்வுலக மெல்லாங் காசிபமுனிவனுக்குக்கொடுத்துவிட்டு என்பகைவனையெல்லாமொடுக்கினேன். நான் அவாசியிற்சென்று சைலாமலையிற் றங்கித் தவஞ்செய்து கொண்டிருந் தேன். ஆங்கு நீ முறித்த வில்லோனைகேட்டுச் சினங்கொடு வந்தேன், நீ யாற்றலுடையாயினின் போரசெய்மேவன், இவ்வில்லைவளைத்துவிடு பார்ப்போ மெனறு சொலலச் சிராமபிரானும் புனமுறுவல கோட்டி இன் முகங்கொண்டு ஏதோ திருமால கையிற்பிடித்த கோதண்டமென்று கேட்கவே, பரசுராமனும சிராமபிரான் கையில அகலாதண்டத்தைக் கொடுத்துவிட்டான். அதைக் கையிற்பெற்று அபபரசுராமன் மனததி லச்சமுற நாணேறிட்டு வளைத்து ஒரு பாணத்தைப்பூட்டி அவனை நோக்கி, நீயா இதில வுலகத்திலுள்ள அரசனை யெல்லாங் கொன்றனை யெனனும வேகவித்தாகிய சமதக்கினி முனிவன் மைந்தனுகையாலும தவமிலடம பூணடனையாகையாலும உன்னைக் கொலலா மல் விடுத்தேன் ; ஆயினும என் கையயட்டு பழுதாகாது ; இதற்கிலக்கியாது ? விரைந்து சொலலுமெனறு கேட்டருளினான். அதற்குப பரசுராமன் பயந்து நீதியையுடைய சிராமபிரானே ! எனபொரு தினஙகொள்ளா தொழி நீ யெப பொருட்டு முதலவனுகிய பாமபொருளனட தறிதீதன். மலாமாலை புனை ந்த ஆழிபபடையையுடைய இறைவ ! வெலலாமதிபதினமையை யணிநத பரம சிவனது வில் வெறுபட்டு முறிவதலலது உனனற் பற்றபோதுமோ ! நீயே கூராழிபபடையேநதுங கொணடலாலது மெய்மையாகவே முடிந்தது. இனி உலகினுக்கியாது இடுக்கணுளது, யான உன கையிற்கொடுத்த விலலும் உன் ஒலிக்குத்தக்கோ தயனறு, நீ யெய்த அமபோ இடை பழுதாகாவண்ணம் யான் செய்தவமனைத்துந் தினைதக்கடவதெனறு இரணடு கரஙகளையுங் குவித்துக் கொணடுக்கினைந்திரா யிலக்காகநிற்க, அநகணையோ அவன் செய்தவ மனைத்துமவாரியுண டமபருத்தூணியி லடஙகிற்று. இதைகணட பரசு ராமன சிராமபிரானநோக்கித துளவடாலை யணிந்த துயரறு சுடரடிதொல் லோய ! நீயெணணிய வெணணியாங் கெய்துகவெனக் கூறிச் சிராமபிரா னிடத்தித விடைபெற்றுச் சென்றனன். இது கிடக்க ;

அவன் சென்றபின்னர ஐமபுல வுணாவுங் கெட்டவிந்து தன்பொருட் டாவி சோர்கின்ற தன் தாதையாகிய தயரதனிடத்தித சென்று அன்பிணை லவன் றிருவடிதொழுது அவனையோ துன்பப பெருங்கடலினின்றுங் கணை யேற்றிச் சக்கரவர்த்தி துன்பக் கவிராது களிப்பென்னும் கடலிலழுந்தி அர சர்பாற் சிறிதேனு மன்பிலலாத சிங்கையையுடைய பரசுராமன் கையிற் பிடித்த வில்லை நீ கைக்கொணடு அவனுக்கு என்றுமொழியாத வசையுண்டா கச் செய்தாயே, மகனே ! யென்று வாரியெடுத் துச்சிமோந்து முத்தமிட்டுத் தோளொடு தோள்பொருந்தத் தழுவித் தன் கணணீரணடினின்றும் ஆனந்த பாஷ்பத்தாற் றிருமஞ்சனமாட்டி இன்று நீ யெளிதாகச்செய்த ஆணமைத் தொழில் இம்மூவுலகத்தவராலு முடிக்கும் வலியுள்ளதோவென்று புகழ்ந்து, இவன்தான் இம்மை மறுமைப் பயன்களை யாருயிர்கட் கருத்து மிறைவ

னென்ப தெண்ணி மகிழ்ந்தான். அதுபோது தேவர்க ளெல்லாரும் பூமழை பொழிந்தனர். அவ்வாறு பொழிந்த தேவருள் வருணனை யழைத்து இக் கோதண்டத்தைச் சேமித்துவையென்று சொலலிக்கொடுத்துத் தன் நால் வகைச் சேனைக ளாரவாரிக்க அயோத்தியை நகர மடைந்தனன். யாவரும் அயோத்தியாநகர மடைந்து களிபடைன்னுய கடலிலழுந்திக் கணைகாணுராய் வசிக்கையில், ஒருநாள் சக்கரவர்த்தி ஓவியவெழிலுடை யொருவனுகிய சீரா மனை யல்லது ஓராவியு முடலழு பிலதென அவனுக்குக் குற்றேவல் செய் தொழிவதே தான் பெறலருமம்பேறெனக்கொணடுலவும் பரதாழ்வானைநோக்கி; தன்னுடி காவலிலானைசெலுத்தும மாதாமகனுகியகேகயன் உன்னைக்காணும் பேராதரமுடையனு யிருக்கின்றனன் ; ஆகலின் நீ கேகயநாட்டிற் கெகென்று

ளையிட அக்கட்டளையை யேற்று தனதையைமுமுறை வலமவந்துபணி

பின்னை இளையவனே டினிது விற்றிருக்கும் சீராமபிரானை யடைந்து தனக்காவியவனலலதிலலை யானையால ஒழிதலில்லாத உயிரைப பிரிந்து உடல்சென்றுற்போனறு உதாசித்தென்னும பெயரையுடைய தன் மாதாமக னண்டிவரும் கேகயநாட்டை 'நின்னலலது பிறிதறியேன்' எனத் தன்னை விட்டனுகாத தமபியாகிய சத்துருக்கனுழ்வானைநோடி மனுகிக் கண்டான். இவன் சென்றபின்னா சக்கரவாதது தன்னுனை செலுத்துகையில் பிரமன முதலிய தேவாகள் செய்த பெருந்தவ முண்மையாலமேலைடந்த செய் தியையும் விரித்துச்சொல்லுவென.

பரசுராமபபடலம,

பாலகாண்டம் - முற்றுப்பெற்றது.

ஸ்ரீராமஜயம.

அயோத்தியாகாண்டம்.

மந்திரப்படலம்.

வானின் றிழிந்து வரம்பிகந்த மாபூ தத்தின் வைப்பெங்கும்
ஊனு முயிரு முணர்வும்போ லுள்ளும் புறத்து முளனென்ப
கூனுஞ் சிறிய கோத்தாயுங் கொடுமை யிழைப்பக் கோற்றுறந்து
காணுங் கடலுங் கடந்திமையோ ரிடுகணண் காத்த கழல்வேந்தை.

மார்ச்சனைத் தடவிய முரசக்கூட்டங்கள் மேகத்தினு மாரவாரிக்க, யானைச்சேனையையுடைய தசரதன் சாமனைபுடையிரட்ட அத்தாணிமண்டப மடைந்து அரசரும் தன் சுற்றத்தவரும் பக்கமாகப் பெயர்கவெனக் கட்டளை யிட்டு ஒக்க நின்று உலகோமபி யோகுசெய்யுந திருமாலேபோலத் தன்னந் தனியனுய் வியாழபகவானை யொத்த தன் மந்திரக் கிழவனை வருகவென்று ஏவியபோது வசிட்டபகவான்வர அவருக் கிருக்கையுதவியிருந்தான். மந்திரக் கிழவரோ உயர்பிறப்பினராயும் சாத்திரவாராய்ச்சிநனகுடையாரும்பலவாகிய முதன்மைப்பட்டகேள்வியுடையாரும் தமக்குகலமொழியினும் கடுவுகிலை நாடு பவரும் கோபமுதலனவொழிந்து நற்றருமநதாங்கியாருமாயோர். இவர்கள்கட லெனப் புடைசூழ்ந்து வசிட்டபகவானை வணங்கி, தம்மரசர் பெருமானையுந் தொழுது அரசனருகே யிட்டிருந்த சிங்காதனங்களில முறையே உட்கார்ந்து அரசனருளும் பெற்றிருந்தனர். சக்கரவாத்தியெழுநதருளிய அத்தாணிமண்ட பத்தில் இவ்வாறு அவனருள்பெற்று மநதிரிமாரிருக்கையில மன்னர்பெருமா னும் அவர்முகங்களை மாபிலேக்கி நான் எண்ணிய அருமையான காரியம் ஒன்றுண்டு ; என்னறிவினை யொப்பீர் ! அதைக்கேண்மினென் றுரைப்பானுயி னன். சூரியகுலத் தரசர்களின் செய்கையின் மாறுபடாது உங்கள் பெருங் குணத்தால் யான் வையமாண்ட வருடம் அறுபதினுயிரம். இப்படி யரசாட்சி செய்துவந்த யான் என்னுயிர்க்குறுதியை நாடி இனி யரசாண்டிருக்க விரும் பேன். நமது குலத்தரசர்கள் தங்குலக்குமரே கடைமுறை யுலகந் தாங்கப் போய் ஐம்புலத்தாறுகடந்து துறவறமெய்திச் சிதையு மொழியுஞ் சொல்லா நிலைமைத்தாகிய அந்தமில்வீட்டினை யடைந்தனர். விண் மண் பாதலமென் னும் மூவகை யுலகமும் வெற்றிகொண்ட யான் காமாதியறுவகைப் பகைவ ரால் வருந்துவனே ! கைகேசி முட்கோல்கொள்ள கொடுங்கோப மெய்திய அவுணர்க்குடைய பத்துத்தேனையும் வென்றேன், மனமேறி நடத்தும் ஐம் புலத்தேனை யடர்த்து வெற்றிகொள்வது அருமையோ ! உலகின்கண் ஒருவன் போரில் சுத்தவீரனையிருந்து இறந்துபட்டானென்றுவது பெயர் பெறவேண் டும். பரமஞானம் பெற்று தெளிந்தானென்றுவது பெயரடையவேண்டும்.

செல்வத்தைத் துறந்தாவது பெயரடையவேண்டும். இலரோ எனின் வீடுபெ றடைந்தவர் யாரென்று சொல்வது. அத்தனிமையாகிய முத்திப்பெருஞ் செல வத்தைத் துய்க்கும் கருத்து இவ்வுலகமாண்டுவருங் களிப்பிலாழுமோ ? உங் களை யான் தோழராகவுடைமையான் உலகமுழுதும் செம்மையாகக் காத் தோம்பிநல்லறமுஞ்செய்தேன், இமமையி னுதவிபுரிந்து நல்லிசையைநடத்திய நீர் அம்மையாகிய முத்திநல மளிப்பதற்குத் துணியவேண்டும். காமை மகப்பே றில்லாமையால் பலகால் வருந்தினேன், இராமனை அங்கோயைதீக்கத்தோன்றி னேன். இனி அவன் வருந்த இவ்வரசபாரத்தை அவன்தோளிற் சுமத்தியானுய்ந் துபோகவேண்டுகிறேன். இராமபிரானைச் சிதையாகிய திருமகள் மணமபுரி யக்கண்ட யான் பூமாதுமணம்புரியவுங்கண்டு களிக்கவேணடும். ஆகையால இராமபிரானுக் கரசு நல்கி அவித்தையின் காரியமாகிய பிரபஞ்ச வாழ்க்கை யைத்துறக்க வேண்டுகின்றேன, உங்கள்கருத்தென்னென ; மந்திரக்கிழவர் சொல்வாராயினா.

இவர் சொன்னதைக் கேட்ட மந்திரக்கிழவர் சிராமபிரானுக்கு மகுடா பிஷேகமென்றகனல் பெருமகிழ்ச்சியும, அரசன பிரிவு நோக்கி வருத்தமுங் கொண்டு, இரண்டு கன்றினுக்கிரங்கிய சேதாவைப்போலிருந்த மந்திரக்கிழவா கருத்தை யுணர்ந்து அரசன் கருத்தினை நெடிதாய்ந்து, வசிட்டபகவான் அர சர்பெருமானே ! உன்குலத் தரசரெல்லாம் அரசாண்டு புகழெய்தினரல்லது, யாரே இராமனை மகனுகப்பெற்றனர் ? கற்றுணர்ந்தோர செய்யவேண்டிய கடமையாகும். அறவொழுக்கமே நினைந்தனையென்றுசொல்ல, அதைக்கேட்ட தசரதன் பெற்றவன்றினும; பிஞ்ஞகன்பிடித்த பெருவில்லொடி-த்தவன்றினும; பரசுராமனை வெற்றிகொணடவன்றினும் பேருவகையெய்தி ; கண்களினின்று மின்பக் கண்ணீரபெருகி நிற்ப, இனியதே சொலலினை, நின்கருணைபெற்ற எனக்கியாது குறையுளது, நீநியஞ் சொலலிவர எங்குலத்தரசர் அளவில புகழெய்திவந்தனென்று சொலலினன். குற்றமற்ற பெருந்தவத்தையுடைய வசிட்டபகவான் சிறிது முனையாடலனுயிருந்தான். மந்திரக்கிழவர் கருத்துக ளெல்லாம் ஒன்றுபட்டிருப்பச் சுமந்திரனென்னும பெரிய மந்திரி சொல்வா னுயினன்.

சிராமபிரானுக்கு அரசுறத்தகுமென்பதை நீதுறக்கின்றனையென்ற சொல சுடுகின்றது. உன்குலத்தோர் மறத்தல் செய்தறியாத தருமத்தை மறப்பிப்பது வழக்கேயன்று,உலகத்தின்கண் அறத்தினும மிக்கதியாது? யானைப்படையை யுடைய அரசருக்கும்; நகரமாந்தருக்கும,மந்திரக்கிழவருக்கும் உள்ளம் முரச மார்க்கும்படி நின மூத்தகுமாரனுகிய சிராமபிரானை முறையா ஸ்ரசனுக்கி, பின் உமக்கு அப்புறத்தி லடுத்ததாகிய துறவற நெறியை மேற்கொள்ள வேண்டுகின்றே மென்று மந்திரி சுமந்திரன் சொல்ல, சக்கிரவர்த்தி நீ நன்று சொல்லினை, நமது சிராமபிரானுக்கு மகுடாபிஷேகஞ் செய்து நின்று அழி யாத நிலைபேறுடைய பரமபதத்தைத் தரும் துறவற வொழுக்கமேற்கொண்டு தீவஞ்செய்வதைப் பின்னே செய்கின்றேன், நீ வினைவிற் சென்று கம்மிரா மனை யழைத்துக்கொண்டு வாவென்று கட்டளையிட, மந்திரி சுமந்திரனும்

சக்கரவர்த்தினியை வணங்கி நின்று, மலைபோன்ற மாளிகைகளையுடைய பல வீதிகளையுங் கடந்து உலகமுழுதும் அடையப்பெற்றவன்தானே யென்று மனக்களிப்புடன், அழகிய தேருடன் இராகவனது திருமாளிகையை யடைந்து பெண்ணினல்லமுதமாகிய சீதாபிராட்டியுடன் தன்னை யென்றும் பிரியாத அழகிய வில்லேந்திய இளையவன் பக்கத்திலிருப்பக்கண்டு, தன் கண்ணு மனமும் வண்டெனக் களிப்பானுய்க் கண்டு கைதொழுது ஐயனே! இவ்வுலகமுழுதுமுடைய உமது பிதா ஒரு காரிய நோக்கி உன்னை யழைத்துவரக் கட்டளையிட்டனர். அக்கட்டளை யாதெனலும் பூமாடீகக்கட் புரவலனுகிய சோமன் விளைந்தெழுந்து அச் சுமந்திரனை கொணர்ந்த தேரிலெறிக்கொண்டு முரசமாக்க மாதரார கைச்சங்கிங்கழலச் சங்கவாத்தியக்கழங்க எங்கள்குறை இன்றுதான் முடியப்போகினறதென்று தேவாகள் களிபென்னுங் கடலிலாழப் புறப்பட்டுச்சென்று அத்தாணிமண்டப மடைந்தான். அடைந்த உடனே, தம்பிபுந தானு முந்திச்சென்று வசிட்டபகவானை முனைவணங்கிப பின்பு சக்கரவர்த்தி பாதங்களையு மனம்பொடு பணிந்து நிறப, தசரதனை அமகனை இருகையாலு மெடுத்தணைத் துபதிம்பாகது முதகமிட்டு மாடுடனை மார்புபொருந்தத் தழுவி அவனது மாலையணிந்த மாலையும் தனது தோள் மார்புகொண்டளந்து அருகேயுடகாருவித்து அன்பாகநோக்கி பழுவாளியாகிய பரசுராமனது தோளாற்றலுவென்ற சிராபா! உனை யருமையாகப் பெற்றெடுத்து வளர்த்த நான் உன்னைவெண்டிக்கொள்ளு தொன்றுணடு. அதாவது, இதுவரையும மிகவருந்தபபட்டேனை, மூப்பும்பா மிகக்கொடியதாக வெனை வருத்தியது, நானிதுவரையிலும் சுமந்துவந்த அரசபாரபுழுது நீயே பொறுத்து என்னைப் புனிதனுக்கவேண்டுமென்று வேண்டிக்கொளளுகின்றனை. என் சொலலைத் தட்டவேணடாமென்று சக்கரவர்த்தி சொலை, அக்கருத்தின் உள்ளுறையறிந்த சிராமன் விருபபவு மிலலை இகழவு மிலலை 'தாதைசொன் மிக்க மந்திரமிலலை.' எனபதனை நமது அரசன் கட்டளையாதோ அதைச் செய்வதே மக்கட்குரியகடன். இது கருதியே 'ஏவாமக்கண மூவாபருந்து.' என்றும் பெரியாரும கூறியிருக்கின்ரனரெனறு அக்கட்டளையை யேற்று நின்றுன். சக்கரவர்த்தி தாசரதியின் சிறைதத் துணிபையறிந்து எனக்கிவ்வரந்தரவேண்டுமென்று மகனை யுயிருறத்தழுவி வேதமன்ன தனமந்திரகிழவருஞ் சூழ மேருவுந் தனக்கொவ்வாத இராசமாளிகையை யடைந்தான்.

தாசரதியும் பலவாசர் புடைசூழ நகரமாந்தர் தொடரத் தனது திருமாளிகையைச்சென்று சேர்ந்தான். சக்கரவாத்தியோ வெற்றி வேந்தனை வருகவென்று தன்னிலச்சினையிட்ட முடங்கலேப்போக்கி வசிட்டபகவானை நோக்கி நமது சிராமனுக்கு மகுடாபிஷேகஞ் செய்யவேணடுவனவற்றைச் சித்தஞ்செய்யவேணடுமென வேண்ட, வசிட்டபகவானு மவ்வாறே செய்கின்றேனென்று தேரேறி அந்தணர் கூட்டம் புடைசூழச்செல்ல, அரசனை நோக்கி நமதிராமனுக்கு திருவும் பூமியுஞ் சிந்தையிற் சிறந்தனவென்று கூறினன். அவ்வாறு சொல்ல அச்சொல்லாகிய இனிய தேனையருந்தினராக யாவருமு முறைதடுமாறி நின்று ஆனந்தக்களிப்பி லழுந்தி நிறைந்த நெஞ்சில்..உவகை

யானதுசென்று மயிர் வழி நிமிர விண்ணில் உடலொடு செல்பவனை யொத்து நின்றனர், யாவரு மொத்த சிந்தையுடையாராய்த் தாமே அரசுபெற்றுப் போலக் கழிமகிழ்சிறந்து சக்கரவர்த்தியை மும்முறை வணங்கி இறைவனே! நீர்கொண்டகருத்து நன்மையை விளைவிப்பதேயென் றறிவிப்பதாயினர். இருபத்தொருமுறை எங்கள் குலங்களை வேரோடுங்களைந்த பரசுராமனைவெற்றி கொண்ட சேவகனுக்கு இவ்வரசுரிமையாக்கக்கடவது! இது அறவொழுக்க மென்றுங் கூறினர். இவ்வாறு மற்றையரசரும் எடுத்துக் கூறவே அதனை மனத்திற்கொண்ட அரசாபெருமான் அரசர்களே! நான் என் மகன்பால் தலை யளிகொண்டு மயங்கிக்கூற நீங்கள் யான மகிழக்கூறியதோ அல்லது தகுதி யாற்கூறியதோ சொலலுங்களென்று கூற, அங்கிருந்த அரசர் கூட்டம் நின் மகனுக்கு அறிஞர் பலர் தந்தமவனையிலும் தாங்கள் செய்தொழுகும் தலை யளியைக் கேளுங்கள், தானமும தருமமுந் தகுதியும் ஞானமும் நலலவனைக் காக்கு நலமும் செலவமும இயையுமடி நினைபபர். உளருணி நிறைந்திருக்க வும், யாருக்கு நிழலைத்தரும் ஆலமரம் பழுத்தற்றுகவும. மேகம் மழைபொழி யவும், கழனியிற்பாய்கின்ற ஆற்றின் புனலபெருகவும மறுப்பவர்யாவர்? பிணை யவாவுகினற புழைக்கையை யுடைய பருமதனைவாய்ந்த யானையையுடை யானே! நினனை யவாவுந்தன்மையை நினைநதுநிலபேறுடைய ஆருயிர்க்குளவ் வகையன்யுடையாளனை இராமன் இவ்விடத்தவனுக் கவ்வகை யன்பினை யுடைய அவைகளுமென்றனர். அவாகள்சொன்னசொற்கேட்டதசரதன்மனத் தைச்சூழ்ந்து பொழிந்த பெருங்களிசிறநதாளைய் காதன்மிகுந்து இடர்கழிந்து களிக்குளுஞ் சிந்தையனைய் ஆனநதக்கண்ணீர பொழிநது அரசாக்கரசனகிய தச ரதசக்கரவர்தி சொலவானையினை. நடவு நிலையினும தருமத்தினும் செய்கை யினும தீங்கைக்குறித்து வெறுதலினும ஒழுக்கத்தினும மேமபட்டபெரியீர! என்மகினென்று பானைசொலவதென! நனனெறிபற்றி யொழுகலிற் றவறெய் தின் உங்களாதரவு வேணடுமென நிரந்து, அரசனையெல்லாம அவரவர் விடுதி களுக் கனுபபிவிட்டு, மருடாபிஷேகத்திற்குரிய காலை நிச்சயஞ்செய்வதிற் பொழுதுபோக்குவானைய் சோதிடநூல் நன்குதெரிந்த சோதிடனை வருவித்து ஒரு தனிமணடபத்திற் புகுந்து ஆலோசிக்கத் தொடங்கினன்.

அரசனிவ்வாறு ஆலோசனை செய்துகொண்டிருக்கையில் காதல் மேற் கொண்டாராயும் கொங்கையை விக்கிய சச்சொழிந்தும் நீண்ட கூநதல் சரிந்தும் நீண்ட ஆடை யவிழ்ந்துபோவதை யறியாமலும் நெருங்கிய ஆனந் தக் கூத்தாடுவாரும பணணின்றிப் பாடுவாரும் பார்த்தவருக்கே காரஞ்சூடு வாரும் சொல்லுவதறியாருமாகி நான்கு மாதர்சென்று நின்றதையன்பாகச். சீராமனைப் பபந்த கோசலைகண்டு, நீங்கள் வந்த கோலங்கண்டால் சந்தோஷ சம்பந்தமான செய்தியா யிருக்கின்றது சொல்லுங்கோளென, அதற்கம்மாதர் கள் சொல்வாராயினர். பல அரசரும் வந்து வணங்கப் பலகாலும் பானை யளிக்கவேண்டுமென்று உன் மைந்தனைய சீராமனை உலகமுழுது முடைய இறைவன் தொன்றுதொட்டுவந்த மகுடத்தைச் சூட்டப்போகின்றான். இது தான் காங்களறிந்த செய்தியென்று மிகக்களிப்புடன் சொல்லினர்.

முழுதுமாளும் பெருஞ்செல்வம் தன்மக னெய்துவ னென்றதனால் உவ
கைக்கடலி லழுந்தியும மன்னவர் பிரிவை நோக்கி வடவைக் கனல்போல்வரு
ந்தியும் அவ்வகைப்பட்டவளாயினும விலையுயர்ந்தமுத்துமாலைகளையும்பொருட்
குவியலையு மவர்களுவப்பக் கொடுத்துத் தன் காதன் மிகுந்த சுமித்தினை
யோடுஞ்சென்று ஆயிரமொலி யமலனதிபிரானெழுந்தருளிய பிரணவ விமா
னத்தையடைந்து பூந்தாமரையாளரும பூமகளென்னுந் தெவிய ரிருமருங்கிருப்
பத் தேவர்கள் யாவர்க்கும் ஆவியு மறிவு முதலாகிய இறைவனது வாவியின்
மலர்ந்த தாமரைப் பாதங்களை வணங்கி எனனிடத்தானறிய மகனுக்கு இனி
யருள்செய்வது உன்னிடத்ததென்று சொல்லி வணங்கி அத்திருமகள் கேள்வ
னுக்கு வேதசமபந்தமான பூசனைபுரிந்து அங்குள்ள மெய்யுணர்ந்தார்க் கெல்
லாம் கன்றையுடைய பசுவைக்கோதானமாகக் கடலைபோலளித்துப் பிராமணர்
களுக்குச் சுவாணதானமும் நவமணித்தானமும கன்னிகாதானமும் பூதான
மும் பெருக்கக்கொடுத்து அன்னதானமும் அன்பாய்ச்செய்து மீண்டும் இறை
வனை வணங்கி விமானத்தை வலமவந்து பல நோன்புகள் செய்யலாயினள்.

மந்திரப்படலம்
முற்றிற்று.

மந்தாகூழ்ச்சிப்படலம்.

வாசனைதங்கிய மலர்மாலையணிந்த அரசாபெருமான் கணிதநூலவல்ல
புலவனை யழைத்து அவாகளை நன்குபசரித்து மழுவாளியாகிய பரசுராமனை
வெற்றிகொண்ட என்மகனுகிய சிராமனுக்கு முடிபுனை * கடிகைநாள் எடுத்
துச் சொல்லுங்கோ ளென்றனன். அதைக்கேட்ட அக்கணிதநூற் புலவர்
உன்மகனுக்கு முடிபுனையும் காலம் நாளையே யென்றனர்., அரசரே குற்ற
மற்ற செம்மையான தவத்தினைச் செய்த வசிட்டமுனிவனை வரவழைத்து
நமது சிராமனுக்கு நன்மையமைந்த மங்கல நாள் நாளையேயாம். அவ்வில்லில்
வல்ல சிராமனுக்கு இங்கே வேண்டுவனவற்றை வினைந்துசென்று அவனுய்யும்
படி பெரிது உறுதியும் வாய்மையுஞ் சொலலவேண்டுகின்றேனென்று வணங்
கிக்கூற, வசிட்டமுனிவனும் உவகை மிகுந்து மனுகுலநாயகனுகிய சிராம
பிரான் வாயிலையடையவே, அவன் வரவைக்கேட்டுச் சிராமபிரான் இனிமை
யாகச்சென் றெதிர்கொண் டழைத்துப்போய்த் தமது திருமாளிகையினுட்
புகுந்து அவருக்கு ஆசனமளித்து இருக்கச்செய்ய, அவர் சிராமபிரானை நோக்
கிச் சிராமா ! உன்பாற் பரிவுமிக்க நமதரசன் இக்கடலிடமுழுதும் நினக்கு
நாளையே தரப்போகின்றனென்று சொல்லிச் சிராமனை நோக்கி உனக்குச்
சொல்லு முறுதிப்பொரு ளொன்றுண்டு, அதைக்கேட்டுநன்றுகக்கடைப்பிடிக்க
வேண்டும். திருமகள் கணவனினும் பரமசிவனினும் தாமரை யாசனத்தினை

---

* "முடிபுனை கடிகைநாள்" என்று தசரதன் கேட்பதே முடிபுனைகின்ற கடிகை
யாகிய நாளென்றும், முடிபுனைதலைக் கடிதலைச் செய்யுநாளென்றும் பொருள்படல்
காண்க.

யுடைய பிரமனினும் ஐம்பூதங்களினும் உண்மையினும்பெரியாவார் அந்தண ரென்றேயெண்ணித்துணி. அந்தணர் முனிவர் மகிழ்ந்தருள்செய்யவும் தேவர் களில் கேடெய்தினையும் சிறந்தானையும் எண்ணிப்பார்க்க அளவுசொல்லப் போமோ, அத்தன்மைய ராதலின் இக்கொடிய தீவினையினின்று நீங்கிய மேலோர் பாதங்களைப் புனையுஞ் சென்னியையுடையாஞய்ப் புகழ்ந்துவணங்கி அவர்கட் கினியமொழி சொல்லி அவர்களேவிய காரியங்களைச்செய்து நடக்க வேண்டும். அவ்வந்தணர் ஏவஞிற்கும் விதியே ஆவதற்கும் அழிவதற்குமென்று சொல்லேமாமாயின் இனியாவ தெப்பொருள் இமையினும் அம்மையினும் தேவர்களை வணங்கிநிற்கும் அளவு நிறைந்தது. சக்கரப்படையும் சூலப்படை யும் வாக்காயுதமும் வல்லமூவர்க்கும் தெருளும் அறமும் மனச்செம்மையும அருளு நீத்தபின்னர் ஆவதுண்டாகுமோ, சூதென்று முந்துறச்சொல்லிய பெருந்துயரம் நீதியையுடைய மைந்தனே! நினக்கில்லை யென்றாயினும் குற்ற மென்பன யாவு மடைதற்கோதுகின்ற மூலகாரணம அதுவென்றெண்ணித் துணி. யாரோடும் பகைகொள்ளிலனென்றபின், போரொடுங்குதும் புகழோ வொடுங்காது தன்சேனையொடுங்கல் செல்லாது அதுதந்தபின்னர்வேரொடுங் கெடுதல்வேண்டுமோ. கொள்ளத்தக்க ஐமபொறியுங்குறைய மெய்மையை யெக்காலுங் கண்டு நடுக்குறும் ஆற்றலான் ஆரு மவ்வரசேயரசெனப்படுவது. அதுதான் வாளின்மேற் செய்யு மாதவமாகும. பரமசிவனுக்கும திருமாலுக் கும் பிரமனுக்கும் சமைத்த தோளாற்றல் தாங்கினவரசாயினும் அமைச்சர் சொல்வழி நடப்பதுதான் ஆற்றலெனபபடுமெ. முன்பின் பின்றி மூவுலகத்தின் கண்ணுமெ அன்பினல்லது ஓர் செல்வமுண்டோ, தேவாகட்கும் மக்கட்கும் வலிமையாகிய புலன்களைக்குற்றமற மாய்ப்பதுயாது? வையமே மன்னுயிராக அம்மன்னுபி ருய்யத்தாங்கும் உடல்போன்ற மன்னவனுக்கு ஐயமில்லாமலெ அறங்கடாவாமலருளும் மெய்மையினின்றபின்புவேள்வியென்பதுவேண்டுமோ? இனியசொல்லெ யுடையானும் ஈகையை யுடையானும் மதிப்புடையானும் தூய்மையுடையானும் வினையையுடையானும் வண்மையுடையானும் வெற் றியையுடையானும் யாவருங்கொள்ளும நீதிநெறி கடவாதானுமாயின் அவ் வகையரசனுக் கழிவுமுண்டாமோ? சிலமல்லாதனகள் நீக்கித் துலகாவன்ன தனிநிலைதாங்கி உலகமுழுதுமாளும் அரசர்க்கு நல்லவர்நோக்கிய காலமெயல் லது கண்ணுமுண்டாகுமோ? நிலத்தின்கண் தூமகேதுவெனத் தோன்றிய அழகிய மேகலாபரணமணிந்த மாதரால்வரும் காமமென்ப தில்லையென்றல் கடுங்கே டென்று சொல்லப்படு காமமுமில்லையாம், நரக மெனப்படுவது மில்லை என்பனவாகிய நீதிகளெயெல்லாம் உலகமுண்ட பெருவாயனுக்கறி வுறுத்தி, அவ்விராகவனெடும் ஆயிரமோலி யமலனதிப்பிரான் கோயிலை யடைந்து அங்கெழுந்தருளிய பரம்பொருளை வேதவிதிப்படித் திருமஞ்சன மாட்டி அறிவுடையோராற் கொள்ளப்படும சற்கருமமெல்லாஞ்செய்து வெண் ணிறமுள்ள தருப்பையை விரித்து அதன்மேற் காகுத்த வம்சோத்தரனை யிருக்கச்செய்து தான் அரசர்பெருமானுக் கறிவித்துச் சென்றான். அதைக் கேட்டித் தசரதனும் தன் நகரத்தை யலங்கரிக்கக் கட்டளையிட்டே, வள்ளு

வனை நமது சீராமபிரான் நிலமடந்தை நாயகனுக நாளையே மகுடாபிஷேகஞ் செய்துகொள்ளப் போகின்றனென்று தேவர்களு மகிழ்வெய்தும்படி அந் நகர முழுதும் திரிந்து பறைபறைந்தான்.

புலவர் பலராலும் கூறப்படும் வலியமைந்த புகழினையுடைய சீராகவ பிரான் நாளையே புவிக்கரசனெனப் போனவானென்றசொல் செவிக்கமுத மாக விளங்குவதெனும் தேவாகளின் அவியமுதமாக விளங்கிக்கிடந்தது. நகர மாந்தரிற் சிலர் ஆரவாரித்தனர், களிபடைடந்தனர், ஆடிப்பாடி னின்றனர், வேர்த்தன, உடலபூரித்தனர், மெய்ம்மயிர் பொடித்தனர, சக்கரவர்த்தி னைப் புகழ்ந்துவாழ்த்தினர், நீணிதியை இச்சுபசெய்தி சொன்னவர்கட்கெல் லாம் தூர்த்தனர். அந்தகாரமாந்தோ மிகுத ஒளியுள்ள சூரியனைத் திருத்து வதுபோலவும், அக்கள்ளமா மாபபபிரான் மாடிற்கிடந்திலங்கும் கவுத்துவ மணியை வேகடஞ்செய்வதுபோலவும அகநகரோ வாழை கமுகுகூட்டு முத்த மாலுகாற்றிப் பூரணகும்பம்வைத்து மகாதோரணை கட்டிப் பவளத்தூணில் தினைச்சிலையிட்டு அலங்கரித்தனர். ஒருபுறத்தே அந்த இராசவீதியானது *முத்துமாலைதொங்கவிட்டிருப்பதனை முழுநிலாவெறிக்கவும, மாணிக்கமாலை யில சூரியகாந்தி விளங்கவும, நீலத்தினவொளி அவ்விரணடொளியையு மடக்கி இருளைச்செய்கின்றமையால சோதிடநூற்புலவா விரித்தகாள்களையே யொத்துவிளங்க, குதிரைகட்டிய தோக்கூடடங்கள் நிலவுலகத்தைக்காண வின்னுலகத்தினின்று மிழிந்த விமானமபோல தோன்றவும, நெற்றிப்பட்ட மசைகின்ற யானைகளோ உதயமலையானது சூரியனைத் தினிவதுபோலவும் விளங்கின. இவ்வாறு அவ்வியோதியா நகரத்தின் அலங்காரம பொன்னு டென்று தோன்றுகையில் உலகத்திறமை நுன்பஞ்செய்துவரும் இராவணன் செய்த தீமையபோல் நெருங்குத லருமையான கொடிய மனமுள்ள மந்

---

*முத்தினின் முழுநில மவறிப்ப மொய்யமணிட
பதுமியி னிளவெயில பரப்ப நீலதின்
தொத்தின மிருள்வர துரண்டச் சோதிட
விந்தகர் விரித்தகா ளொருத வீதியே.

இதன்பொருள் - முத்தில் முழுநிலாவெறிக்கவும் நெருங்கிய மணிகளினையில் இளம் பருதி யொளிவீசவும் தொழிலமைந்த நீலமணியின்கூட்ட மிருள்வரத் தூண்டலான் அவ்விராசவீதி கணிதநூற்புலவர் விரித்த நாளையொத்திருந்தன. எ - று.

நவமணிகளொன்பானுக்குங்கோளென்பாலும் அதிதேவதைகளாதலானும், அவற் றுள் சுபசுகிரகங்களாகிய மதியும் இரவியும் அதிதேவதையாமுத்துமாணிக்க மென்ப வற்றின் ஒளியடங்கப் பாபக்கிரகமாகிய காரியதிதேவதையாம் நீலமணியின் ஒளிவிஞ்சி நிற்பதனால் சீராமபிரானுக்கு முடிபுனைகோல மினறென்பது அவ்விராசவீதியே கணித நூற்புலவர்போன் றுணர்த்திற்றென்க இக்கிரகங்களே அப்மணிக ளொன்பானுக்கு மதிதேவதை என்பதனை முத்திற் கதிதேவதை முத்தினின் முழுநிலவெறிப்ப வென்பத னானும், மாணிக்கத்தினதிதேவதை மணிப்பதியி னிளவெயில் பரப்ப வென்பதனானும், நீலமணியினதிதேவதை நீலத்தின் தொ[illegible]ணமிருள்வரத்தூண்ட வென்பதனானுமோர்ந் தணர்க. வீதிகள் சோதிட விந்தகர் விரித்தகா ளொத்தவென்றார் அப்புலவர் இன்ன ரொகம் இன்னபடி சுபா சுபந் தோற்றும் என்பதுதானே அவ்வீதிவிளக்கலா னென்க.

யுடைய பிரமனினும் ஐம்பூதங்களினும் உண்மையினும்பெரியராவார் அந்தண ரென்றேயெண்ணித்துணி. அந்தணர் முனிவர் மகிழ்ந்தருள்செய்யவும் தேவர் களில் கேடெய்தினுனையும் சிறந்தானையும் எண்ணிப்பார்க்க அளவுசொல்லப் போமோ, அத்தன்மைய ராதலின் இக்கொடிய தீவினையினின்று நீங்கிய மேலோர் பாதங்களைப் புனையுஞ் சென்னியையுடையாரைப் புகழ்ந்துவணங்கி அவர்கட் கினியமொழி சொல்லி அவர்களேவிய காரியங்களைச்செய்து நடக்க வேண்டும். அவ்வந்தணர் ஏவகிற்கும் விதியே ஆவதற்கும் அழிவதற்குமென்று சொல்வோமாயின் இனியாவ தெப்பொருள் இம்மையினும் அம்மையினும் தேவர்களை வணங்கிகிற்கும் அளவு சிறந்தது. சக்கரப்படையும் சூலப்படை யும் வாக்காயுதமும் வல்லமூவர்க்கும் தெருளும் அறமும் மனச்செம்மையும் அருளு நீத்தபின்னர் ஆவதுண்டாகுமோ, சூதென்று முந்துரைச்சொல்லிய பெருந்துயரம் நீதியையுடைய மைந்தனே! தினைக்கில்லை யென்றாயினும் குற்ற மென்பன யாவு மடைதற்கோதுகின்ற மூலகாரணம் அதுவெளிறென்ணித் துணி. யாரோடும் பகைகொள்ளிலனென்றபின், போரொடுங்கும் புகழோ வொடுங்காது தன்சேனையொடுங்கல் செல்லாது அதுதந்தபின்னர்வேரொடுங் கெடுதல்வேண்டுமோ. கொள்ளத்தக்க ஐம்பொறியுங்குறைய மெய்மையை யெக்காலுங் கண்டு நடுக்குறும் ஆற்றலான் ஆளு மவ்வரசே யரசெனப்படுவது. அதுதான் வாளின்மேற் செய்யு மாதவமாகும. பரமசிவனுக்கும் திருமாலுக் கும் பிரமனுக்கும் சமைத்த தோளாற்றல் தாங்கினவரோயாயினும் அமைச்சர் சொல்வழி நடப்பதுதான் ஆற்றலெனபடுமம. முன்பின் பின்றி மூவுலகத்தின் கண்ணும் அன்பினல்லது ஓர் செல்வமுண்டோ, தேவாகட்கும் மக்கட்கும வலிமையாகிய புலன்களைக்குற்றமற டாய்ப்பதுயாது? வையமே மன்னுயிராக அம்மன்னுயி ருய்யத்தாங்கும உடலபோன்ற மன்னவனுக்கு ஐயமில்லாமலே அறங்கடவாமலருளும மெய்மையினின்றபின்புவேள்வியென்பதுவேண்டுமோ! இனியசொல்லை யுடையானும் ஈகையை யுடையானும் மதிப்புடையானும தூய்மையுடையானும் வினையையுடையானும் வண்மையுடையானும் வெற் றியையுடையானும் யாவருங்கொள்ளும நீதிநெறி கடவாதானுமாயின் அவ் வனகயரசனுக் கழிவுமுண்டாமோ? சிலமல்லாதனகள் நீக்கித் துலாகாவன்ன தனிநிலைதாங்கி உலகமுழுதுமாளும் அரசர்க்கு கல்லவர்நோக்கிய காலமையல் லது கண்ணுமுண்டாகுமோ? நிலத்தின்கண் தாமகேதுவெனத் தோன்றிய அழகிய மேகலாபரணமணிந்த மாதராலவருங் காமமென்ப தில்லையென்றால் கடுங்கே டென்று சொல்லப்படி காமமுமில்லையாம், கரக மெனப்படுவது மில்லை என்பனவாகிய நீதிகளெல்லாம் உலகமுண்ட பெருவாயனுக்கறி வுறுத்தி, அவ்விராகவனெடும் ஆயிரமோலி யமலனுதிப்பிரான் கோயிலை யணைத்து அங்கெழுந்தருளிய பரம்பொருளை வேதவிதிப்படித் திருமஞ்சன மாட்டி அதிவுடையோராற் கொள்ளப்படும சற்கருமமெல்லாஞ்செய்து வெண் ணிறமுள்ள தருப்பையை விரித்து அதன்மேற் காகுத்த வம்சோத்தரனை யிருக்கச்செய்து தான் அரசர்பெருமானுக் கறிவித்துச் சென்றனன். அதைக் கேட்டுத் தசரதனும் தன் கரத்தை யலங்கரிக்கக் கட்டினையிடவே, வள்ளு

வேனுமதுசீராமபிரான் நிலமடந்தை நாயகனுக நாளையே மகுடாபிஷேகஞ் செய்துகொள்ளப் போகின்றனென்று தேவர்களு மகிழ்வெய்தும்படி அந் நகர முழுதும் திரிந்து பறைபறைந்தான்.

புலவர் பலராலும் கூறப்படும் வலியமைந்த புகழினையுடைய சீராகவ பிரான் நாளையே புவிக்கரசனெனப் போலிவானென்றசொல செவிக்கமுத மாக விளங்குவதெனும் தேவர்களின் அவியமுதமாக விளங்கிக்கிடந்தது. நகர மாந்தரிற் சிலா ஆரவாரித்தனர், களிபபடைந்தனர், ஆடிப்பாடி நின்றனர், வேர்த்தன, உடல்பூரித்தனர், மெய்ம்மயிர் பொடித்தனர, சக்கரவர்த்தி னைப் புகழ்ந்துவாழ்த்தினர், மீணிதினை இச்சூடச்செயதி சொன்னவர்கட்கெல் லாம் தூர்த்தனர். அந்தகாமாந்தமீர மிக்க ஒளியுள்ள சூரியனைத் திருத்து வதுபோலவும், அக்கள்ளமா மாபடபிரான் மாடிப்பிடத்திலங்கும் கவுத்துவ மணியை வேகடஞ்செய்வதுபோலவும அகநகரினை வாழை கமுகுகட்டு முத்த மாலைகாற்றிப் பூரணகும்பம்வைத்து மகரதோரண கட்டிப் பவளத்தூணில் நிரைச்சிலையிட்டு அலங்கரித்தனர. ஒருபுறத்த அந்த இராசவீதியானது

* முத்துமாலைதொங்கவிட்டிருபடதனை முழுநிலாவெறிக்கவும, மாணிக்கமாலை யில சூரியகாந்தி விளங்கவும, நீலமதினவொளி அவ்விரணடொளியையு மடக்கி இருளேச்செய்கின்றமையால சோதிடநூற்புலவர் விரித்தகாள்களையே யொத்துவிளங்க, குதினைகட்டிய தோரணக்கட்டங்கள் நிலவுலகத்தைத்தாண வின்னுலகத்தினின்று மிழிந்த விமானமபோல் தோன்றவும, நெற்றிபபட்ட மதைகின்ற யானைகளை உதபமலபானது சூரியனைத் திரிவதுபோலவும் விளங்கின. இவ்வாறு அவ்வயோத்தியா நகரத்தின் அலங்காரம பொன்னு டென்று தோன்றுகையில உலகத்திறமெ லுனபஞ்செய்துவரும் இராவணன் செய்த தீமையபோல நெருங்குத லருமையான கொடிய மனமுள்ள மந்

* முத்தினின் முழுநில மெறிப்ப மெய்ம்மணிப்
பத்தியி னிளவெயில பரப்ப நீலத்தினை
தொத்தின மிருள்வர துண்ட சோதிட
வித்தகர் விரித்தகா ளொத்த வீதியே.

இதன்பொருள் - முத்தில் முழுநிலாவெறிக்கவும் நெருங்கிய மணிவரிசையில் இளம் பருதி யொளிவீசவும் தொழிலமைந்த நீலமணியின்கூட்ட மிருள்வர துண்டலான் அவ்விராசவீதி கணிதநூற்புலவர் விரித்த காளையொத்திருந்தன. வ - று.

நவமணிகளென்பானுக்குங்கோவென்பாலும் அதிதேவதைகளாதலானும், அவற் றுள் சுபசுகிரகங்களாகிய மதியும் இரவியும் அதிதேவதையாமுத்துமாணிக்க மென்ப வற்றின் ஒளியடங்கப் பாபக்கிரகமாகிய காரியதிதேவதையாம் நீலமணியின் ஒளிவிஞ்சி நிற்பதனென் சீராமபிரானுக்கு முடிபுனைகோல மினறென்பது அவ்விராசவீதியே கணித நூற்புலவர்போன் றுணர்த்திற்றென்க இக்கிரகங்களே அம்மணிக ளொன்பானுக்கு மதிதேவதை என்பதனை முத்திற் கதிதேவதை முத்தினின் முழுநிலவெறிப்ப வென்பத னானும், மாணிக்கத்தினதிதேவதை மணிப்பத்தியி னிளவெயில் பரப்ப வென்பதனானும், நீலமணியி னதிதேவதை நீலத்தின் தொ[illegible]ணமிருள்வரத்தூண்ட வென்பதனானுமோர்ந் தனர்க. வீதிகள் சோதிட வித்தகர் விரித்தகா ளொத்தவென்றார் அப்புலவர் இன்ன ரென்பும் இன்னபடி சுபா சுபம் தோற்றும் என்பதுதானே அவ்வீதிவிளக்கலா னென்க.

தனையென்னுங் கூனி நெஞ்சுதுடிக்க கோபமீக்கொண்டுவருந்தியமனமுடைய ளாய்க் கண் சிவந்து கொடுஞ்சொற் பேசிக்கொண்டு மூன்றுலகத்தினுக்கும் ஒருதுன்ப மூட்டுகிற்பாளாய் உதாசித்தினப்படும் கேகயகாட் டரசன் மக ளாகிய கைகேகியின் திருமாளிகை யடைந்து சீராகவபிரான் உண்டை வில் லுக்கு வருந்தியதை யுள்ளத்தே நினைந்து அவள் பஞ்சணையிற் கண்ணுறங்கிக் கிடப்பதையறிந்து அவள் சீறடியைத் தன்கையால தடவினின்றனள். கைகேகி யும் உடனே நித்திரை நீங்காதிருக்கத் தான கொண்ட பெருமபழிமுடிக்கும் சொற்களைச் சொல்லத்துணிந்து விடப்பாம்பு தன்னை நெருங்கிய காலத்தும் குணங்கெடாமல் விளங்கும் குளிர்ந்த சந்திரனைபோலப் பேரிடர் உன்னைப் பிணிக்கவரவும் நீயதையெண்ணிவருந்தாமல உறங்கலாமோவென்று சொலவி னின்றனள்.

இவ்வாறு சொல்ல அதைக்கேட்ட. கைகேயியும பகைவனை வெற்றி கொள்ளத்தக்க விலலையுடைய என்பக்கள ரிவு நிலைமை தவறுதவர் தத் தமக்குரிய முறையினின்றும தவறுதவர் ; எனக்கு எத்துயரத்தானடுக்கும? பரவுதற்கருமையான மக்களைபபெற யாவரும் பொருந்துத லருமையான உறுதியைவிட் டிறுதிகான்பவராவர ; நிலவுலகத்திற்கு வேதம்போல்பவனுகிய சீராமனைப்பிபற்ற பின்னர் எனக்கிடையைப துண்டோவென்று மகிழ்ந்துசொல் லக் கூனியாகிய மதனை பொறுதவளாய் உன்னலம் வீழ்ந்தது செல்வமுங் கெட்டது, கோசலையோதன்சூழ்ச்சியிறுல வாழ்ந்தனள்எனக் கைகேசியும்என் மணமகன் உலகமுழுதாளும மன்னவ மனைனை யாயினமையானும், சொல் லரும்புகழ்படைத்த பரதன் எனாடகனையினையையானும் இவ்வுலகத்தில் என் னினும் மிக்கவாழ்வு யாரைடைதனனென்று சொலலினள். கூனியோ ஆண்மக் கள் கைகெய்ய ஆண்மைகெடத் தாடனகையைக்கொன்ற வில்லவளைத்த சீராமன்காளை முடிமிசைகளுஞ் செப்துகொள்ளபோகின்றனென்று சொல்லி முடித்தனள். இச்சொலலைக் கேட்டுக் கைகேகி மனமும் வெற்றியமைந்த கோசலை மனமுமொத்திருந்தன, இம்மாநின் உள்ளத்தில் தசரதன்இருப்பதனை லொக்கும்போலும் ; அவளுள்ளமேவறுபாடெய்தாதிருந்தது. இவ்வாறிருக்கை யிற்கைகேசியினுள்ளம் பொன்பென்னுங்கடல்பொங்கியதிகரிப்பவும் பூரணசந் திரன்போன்ற முகம பொலிவெய்தவும் உவகையி லழுந்தி எவ்வகைச் சுடா கட்குகாபகம்போலவதோர் மாமணிமாலையைக் கொடுத்தாள். அதைக்கண்ட மந்தரை கைகேகியை நோக்கி அதட்டி முறு முறுத்துக் கோபகைசெய்து வைது நெட்டுயிர்ப்பெறிந் தழுது புரண்டு தனக்களித்த மாலையாற் பூமியைக் குழிசெய்து அடிபெதாய்! உனக்குப்பிறந்த மகனுகிய பரதனேடும் நீ துயர மடைய நான் உன் மாற்றவளாகிய கோசலையினது தாதிகட்காட்செயத் தரிக்கமாட்டேன். சிவந்த வாயையுடைய சிதையும் சீராமனும் சிறந்த சிங்கா தனத்திலிருக்க உன்மகன் பரதன் பயனற்றவனுய் வெறுநிலத்தி லிருக்கையா யமைந்தபோது உய்ந்தவாறு என்? [illegible]குறுதிப்பொரு ளென்னவென்று வினவினள். கோசலைக்கு உறுதியை யளிக்கும் மகனுகிய சீராமன் சிறந்த செல்வத்தட் செல்வமடைந்தான், பரதனே பிறந்தும் பிறவாதானையினன்

கபெற்றதனலென்று சொல்லிவிட்டுப் பின்னும் சீராமன் தன்தம்பியுடன் இவ்வுலகத்தை யளித்துவருவானுயின் அளவில் காலம் பரதனும் சத்துருக்கனும் இங்ஙகனை நீங்கிச் சென்று மாதவஞ்செய்யப்போவது நல்லது ; ஆயினும் மதயானைபோல்பவனுகிய பரதன் நிலமகள்மகிழ அரசாள்டுவரும் அரசர்வரிசையின் மதிக்கப் பிறந்திலன், இதைப்பாராக்கிலும் அவன் இறப்பதே நல்லது, மேலும் வேறுரன் றெனக்குப் புலப்படுகின்றது. கலவினை செய்தறியாத பரதனே நமது சக்கரவர்த்தியனறு தன்னுணையால் தெக்கணஞ்செறிந்த மலைவழியைக் கடந்து வெகுதூரமுள்ள கேகயநாட்டுக்கு அனுப்பிவிட்டசெய்தி இப்போதுதான் தெரியவந்தது. உன்னை பெருந்தூரந் பெலைச்செய்தமையால் தந்தையுங்கொடியன், உன்னைபபெற்ற கைகேசியும் அபக்கொடியள் எந்தாய் பரதனே நீயென்செய்வையோ என்று கூவி, கைகேசியை நோக்கி அரசர்குலத்திற் பிறந்து பின் னரசர்வீட்டில வளர்ந்து அரசர் குடியிலே புகுந்து பேரரசியெனச் சொல்லக்கிடந்த நீ கணையிடையிய பெருந்துயாக்கடலிலே வீழ்கின்றனை ! கான சொலலனைத் திறிதும்கேட்டாயில்லை,உனக்குச் சிறிதுந் தெரியவில்லையேயென்று சொலலலிவ, அச்சொற்கேட்டுக் கைகேசி மனம் புழுங்கி நெருப்பில் நெய்விட்டதுபோற் றினைந்து * சூரியகுலத்து மன்னிலலாரும் உயிர் முதலிய பொருள் மாறுபடினும முறைவழுவா திருப்பவராவார். மயிலினது முறைமையுள்ள குலத்துரிமையைச் சிறிது மதியாமல சூற்றமுறப் புல்லறிவால் யாதுகூறினை ? நீயோ எனக்கு நலலவளுமலலள், என் மகனுகிய பரதனுக்கும் நல்லவளு மல்லள், அத்தருமத்தை நோக்குமிடத்து உனக்கு நல்லவளுமல்லள், வந்து முன்செய்வினை தூயனடலான் மனத்துக்கு நல்லன வல்லனவற்றைப் பேசத்துணிந்தனை ! ஒருவனை பிறந்திறந்துபோய்ப பெறுவது

* வெயினமு றைக்குலக் கதிரவன முதலிய மேலோர
உயிர்மு தற்பொரு டிறம்பினு முனைதிறம பாதோர்
மயின்மு றைக்குலத் துரிமையை மனுமுதன் மரணப்ச
செயிரு றப்புலச் சிந்தையா லென்சொனுய் தீயோய்.

இதன்பொருள் - வெயில் பரப்பும் சிறந்த பரிதி முதலிய பேலோர் உயிர்முதலிய பொரு டிறம்பினும் தஞ்சொற் கடவாதவராவர், மயினது முறைமையையுடைய குலத்துரிமையையுடைய மனுமுதலிய அரசர் மரபினைக் குற்றமுறப்பேதையறிவானியாதுகூறினை கொடியாய். எ - று.

மயில் முட்டையிட்டுப் பொரித்த பின்னர் முதற் பார்ப்பின்வயிற் சென்முடினல்லது கலாபந்தோன்முமையின் அம்முறை நோக்கி மயின்முறை யென்ற தென்க. இனி மயிலடிவைக்கு ஞான்று முன்னடிவைத்தலும் அளவிற்சேறலும் பொருந்துமாற்முனும, முதற் பார்ப்பினுக்குச் சூடுதோன்முமை யேனைபவற்றிற்குத் தோன்முமையாலு மங்ஙனங்கூறிய தெனினு மமையும். மயிலடிவைக்கு முறையென்பதனை 'மயிலடித் தொழுக்கு' என்று இவ்வாசிரியர் கூறியவாற்முனு மறிக. உயிர் முதற்பொரு டிறம்பினு முனைதிறம்பாதோ ரென்றது கடபெருட்டார், புறவின்பொருட் டுடறுறந்தார், கங்கை கொணர்ந்தார் வயிற்காண்க. மனுபரிதியங்கடவுள் மகனுகலாலும், அவன் வழிவந்தாரே கடைமுறையுலகங் காத்தனமையாலு மனுமுதன் மரபென்றதென்க. என்விஞப்பெயர். இது உருபேற்று என்னுக்கோவளர்கின்றதே என்றும் என்னுனு மென்றும் வருவது காண்க.

மிழப்பதும் புகழேயாயின் கீர்த்தியே மாறுபடினும் நியாயமேமாறினும் நெறி
யின்வகைமாறினும் செய்தவமாறினும் குற்றந்தீர்ந்த வலிமைமாறினும் வரன்
முறை மாறுதல வழக்காகுமோ? என்னருகே யிருக்கவேண்டாம் என்னைவிட்
டகன்றுபோய்விடு, உன்னற்பமான காலைச் சேதிக்கவேணடும்; சேதிக்காமல
பொறுத்தேன், புறத்தவர் சிலரறியின உனைக்கேடுசூழ்வர். நீயோ நீதியல்ல
வுமெதிமுறை யலலவுமானகாரியத்தை நினைத்தனை பாகையால அறிவில்லாத
பேதாய்! இமமட்டில அடங்கெனறு கூறினாள். இதுகிடக்க;

கைகேசி இவ்வாறு கடுகடுத்துச் சொலலக்கேட்டு அஞ்சி யகலாமலே
நின்று உனக்குறுதிபபொருளை யுணர்த்துமதாழியெனன்று அவளடியில
வீழ்ந்திறைஞ்சிச சொலலுகினறாள். அரசுரைத்தவாக்கெனனு முறைமையைப
பார்த்தால் இவ்வுலகங் காத்துயர்ந்த சகரவாதத்திக்கினியவனேயனறே! கட
லோலுறைத்தையுடைய சிராமன, அரனைபபாவமும வருத்துவணங்கும நீணமுடி
அவனுக்கணிய இனைதானெனறுல பாதனை அச்செலவதனினறுமவிலக
குவதெவ்வணமுடியும? அறத்தினை வழிபாழுறும அருளுடைய அருந்தவா
க்கே யாரையும பயறலருஞ செலவம பெறுபினபு கருதது வேறுகமுடியும
கொடுமை நினைத்து உடமைவருந்தாவிரு ளெமமனத்தாறறிமையை யெணணிச
செய்துவருவா. கன மகனுக்கே பாதெனறுல பூமணடலவாதிக்கமுழுதும
கோசலையதுடைமைபே பலலது வேறனறு ஆதலால உனமகனுக்கு முனககு
மிபபூமியினிடத்தே அவனருகவிப வொருபொருளலலது உரிமையுள்ளதெது?
தனபமும வறுமையும தொடர்நிட்க துனபதகால வருந்திக் கேட்டவாக்கு
வேணடியபொருள்களை அவளோவெணறிக கொடுக்கொடுபபையோ? கோபிப
பையோ? துனபத்திறலவருந்தி மாணடுபோனவையோ? மறுபபையோ எவ்வா
றுயிர்வாழ்வை. மனசெபலாற நினைத்தெதாழிந்தனை? இனிசிலநாளில தத்த
மில்லானுமயும எளிமையும உனபோகமெலாணடு தவிக்க உனதாதையும உறவி
னரும பிறரும உனனைவருத்தாவிரு ளெமமனத்தாறறிமையை யெணணிச
செய்துவருவா. கன மகனுக்கே பாதெனறுல பூமணடலவாதிக்கமுழுதும
கோசலையதுடைமைபே பலலது வேறனறு ஆதலால உனமகனுக்கு முனககு
மிபபூமியினிடத்தே அவனருகவிப வொருபொருளலலது உரிமையுள்ளதெது?
தனபமும வறுமையும தொடர்நிட்க துனபதகால வருந்திக் கேட்டவாக்கு
வேணடியபொருள்களை அவளோவெணறிக கொடுக்கொடுபபையோ? கோபிப
பையோ? துனபத்திறலவருந்தி மாணடுபோனவையோ? மறுபபையோ எவ்வா
றுயிர்வாழ்வை. மனசெபலாற நினைத்தெதாழிந்தனை? இனிசிலநாளில தத்த
மில்லானுமயும எளிமையும உனபோகமெலாணடு தவிக்க உனதாதையும உறவி
னரும பிறரும உனனைவருத்து காணமெணணினால உனமாற்றவள செலவத
தையோ கணடு மகிழுவேமையும. கலலது உனகணவனுக்கருகியே சிறைத்
துத் தாதைபாகிய சனகராசன, உனதந்தையாகிய உதாரிதனோடு போர
செய்யாம லிருக்கின்றனன. இனி அவனுக்கு வாழ்வாவது எவ்வாறு கிடைக்
கும்? பழிபபுக்கபடிறந்தார உனனளவு பாரிருக்கினறனர. உன்பிதாவிற்குப
பலபகைவரிருக்கினறனர. அவர்பகைத்தழுந்தால உன்தந்தைக்குதவி சிறி
தேனுமிலலை, அவன் எலவாறு வெற்றியடைவன்? நீபோ சுற்றத்தைபவலமாக்
கித் துயர்க்கடலிலழுத்தப் பிறந்தனை. உன் மகனை பவலமாகினை? அரசன்
உலகமுழுதுமதன்மகனுகிய சிராமனுக்கென்று மகுடாபிஷேகஞ்செய்யுத்துணி
கையில் அச்செல்வம அவனுக்கும் அவன் தம்பியாகிய இலக்குமணனுக்கும்
அல்லது வேறெவர்க்குண்டாமென்று வடித்து வடித்துச் சொல்ல, தேவர்
கள் சூழ்ச்சியினாலும் அவர்கள் பெற்ற வரத்தாலும் மாயையாலும் அந்தணர்
செய்த அருந்தவத்தாலும் அக்கைகேசி யுள்ளம் மாறுபட்டது. இதுகிடக்க;

அரக்கர் செய்த பாவமும் தேவர்கள் முதலியோர்செய்த வறமும் தரக்க
சோமன்பால் வைத்த அன்பு தரத்துவிட்டனன். அவ்வாறு அவர்கொண்ட

இரக்கமில்லாமை யன்றோ இவ்வுலகங்களெல்லாம் சிரமபிரானது பரந்த பழமையாகிய கீர்த்தியென்னும் அழுதத்தை வாய்மடுத்துண் டவசமாயின. அத்தன்மையளாகிய கைகேசி தீவினையே யுருக்கொண்ட மந்தரையைநோக்கி என்னைமகிழ்வித்தனை. என்மகனுக்கும் இனியை, அவன் முடிபுனையுஞ்சூழ்ச்சி எவ்வாறு சொல்லவேண்டுமென்று குறையிரப்ப, அதற்கு மந்தரையும் என் சொல்வழி நின்றுல இப்பதினெலுலகமும உன்மகனுக்கே ஆக்குவேன். நீ அந் நாளிற் சம்பராசுரன் யுத்தத்தில அரசனுக்குத் தேர்ச்சாரதியாகச் சமைந் தாய், அப்போது அரசன் உனக்கு இரண்டுவரங்கள் கொடுத்திருந்தானல்லவா?. அவ்வரமிரண்டில் ஒன்றுல இராமன் பதினைங்காண்டு காடுறை வாழ்க்கைய னுகவும், மற்றொன்றுல உன்மகன பதினெருண்டுமும அண்டிலரும காடுறை வாழ்க்கையனுகவும், இருக்கும உபாயத்தைத் தேடவேண்டுமம. இதுகா னுபாய மென்றெடுத்துச் சொல்லினள். கைகேசியும அவளை யுயிர்போற்றழுவி முத்து மாலைகளையும் செலவக்குவியலையுங் கொடுத்து என்மக னரசாளத்தகுதியை, இனி எனக்கு தாயகன் மாதர் நீயேயாலையினத் தாழ்மொழிபுகன்று அவ் வாறு இவ்விரண்டு மெய்தப்பெறுவிரின் பொன்றுதல தின்னமென்று சூள் மொழி சொல்லியனுப்பிவிட்டு மலாபபடுக்கையினின்று மிழிந்து, தன் கூந்த விற்சொருகிய மாலையை மேகத்தினுழைபுறுமின்னலைப்போற் தேனை விரும்பியடையும வண்டின மலைமாதினைதந்து கானணிந்திருந்த மேகலாபர ணத்தைத் தன்புகழாகிய கொடியை வெறுத்தாடம்பால கானகிணியொதும் கைவளைதுறந்து மதியில மறுத்துரையாடபாள்ப்பானை யுளகவானுதற்றிலகமு மழித்து இரத்தினபாணங்களையுங் கழற்றி பேற்று மீம்லாம்பல மலர்போன்ற தன் மையுனடகண்ணி னெஞ்சனங்கானறிட அருந்து பூவுந்தாத கோபமெனப் பூமியிற்புரண்டு வீழ்ந்திருந்தாள். இது எப்வாறிருந்தகனின் மாலைவீழ்ந்தாற் போலவும், காடகயில தூயின்றுற்போலவும, சனகியாகிய காமுனாயாள் கீங்குமென்று அயோத்திவந்தடைந்த கைகேசியாகிய மூத்தவள் துன்பமனை தல்போலவு மிருந்தது.

மந்தரை சூழ்ச்சிப்படலம்
முற்றிற்று.

கைகேசி சூழ்வினைப்படலம்

கள்ளிரவாகிய வடன் யாமினை இரைதலைப்பட நிகருந் தொல்லையுடைய கைகேசி மாளிகைக்குப் பல அரசாகள் திரண்டுவந்து முற்றத்தி லவர்களை யெல்லா நிறுத்திவிட்டுத் தான் ஏவியவாறு செய்யும் மாதருடன் சென்று பாயலைத்துறந்து வருந்தும் கைகேசியைக்கணடு உனக்குவந்துசேர்ந்தென்பம் யாது? என்று மனஞ்சோர்ந்து மானையெடுத்தணைக்கும் யானைபோலத் தன் கைகளாதத்தழுவி பெடுக்கக் கைகேசியுந் தன்கைகளால் அவ்வரசன் கைகளை நீக்கி மீண்டும் மின்தவள்வதுபோல மண்ணில் வீழ்ந்தயர்ந்து ஒன்றும் பேசா னாய்நெட்டுயிர்ப்பெறிந்து உன்னைநிகழ்ந்தார்மாண்டாரென்றேதுணி. உனக்கு நேர்ந்ததைச் சொல்லவேண்டும்; சொன்னபிறகு என் செயலெப்பாலென்று

சொல்லக் கைகேசியும் அரசன்முன்னே தன்னிரண்டுகண்களும் நீர்பெருகி முலைவழியொழுக என்னிடத்தில் உனக்கு அருளுண்டா யிருக்குமாயின்முன் எனக்குக் கொடுத்திருந்த வரங்களிரண்டுந் தாவேண்டுமென்று கேட்க அவளுள்ளக்கருத்தை யறியாதானுய் உன் மகன் இராமனுணையின்படி நான் அவ்வரங்களிரணடையுங் கொடுத்தேனென்றான். அவள் அவ்வரங்களிரணடில், ஒன்றினால என்மகன் பரதன்நாடாள்வதும் மற்றொன்றினால் இராமன்காடாள்வதுமென்று விரித்துச்சொலலமே அரசன் புத்திரசோபத்தினல் வருந்திதன் உடமபு முழுதுமவெதுமபி அரவினல தன்வேகமடங்கிய யானைபோல வீழ்ந்து பூமியிற்புரண்டு கொல்லன் உலையிற்கனலேபோல நெட்டுயிர்ப்பெறிந்து நின்றான். அவன்துயரத்தினுக் களவுசொலலவலலவாயாவர். அரசனுக்கு நாபபுலர்ந்தது; உயிராடலுற்றது, உள்ளமபுலர்ந்தது, கணகள் உதிரப்புனல் சொரிந்தன. கோபமதலைக்கொண்டது. ஐம்புலன்களும்அலமந்தன. நிலத்திலநிற்பான், வீழ்வான், சித்திரமபோ லசையாது கிடந்து உயிராப்படங்குவான், இப்பாவியைக் கொல்லவாவெனத் துணிவன, ஆனலும் பெண்பழி சாருமென்று நாணமடைவான். இவ்வாறு அரசன் வருந்தக்கண்ட கைகேசியோ சிறிது மஞ்சாநெஞ்சுபடைத்து நாணமின்றியிருக்க அவளை நோக்கி சக்கரவர்த்தியும நலலுணாச்சிதலைக்கூடி உனக்குப்பொய்ந்நிலையோர் புணர்த்திய வஞ்சமுணடோ? அதனை என்னுணைசொலலவேண்டு மென்றான். எனக்குமாறுபட்டுவருதது மிலலை, எனக்குக் கொடியவர் பலர் இசைத்ததுமில்லை, நீயெனக்கு முன்னாளினிற் கொடுத்த வரங்களிரணடையுங் கொடுத்தாற்பெறுவேன், அன்றேல உன்பால் வசைநிகழுவைத்து மாள்வேனென இமமொழி கேட்பதன்முன்னர் சுட்ட புண்ணில வேல்நுழைந்தாற்போற் சிந்தைநைந்துருகித் தன்மமனலல துயிராநிலை வேறறியாத அரசன் அயாந்து வீழ்ந்து ஆ! கொடியாளெனியன் றுயிரவருந்துவான். அறமென்பதே யறக்கட்டதென்பான், மெய்ம்மையென்ப தழியக்கடவதென்பான், உடலதளர்ந்து வீழ்வான், உலகிற் பெணகளாவா ரிலலையென்று சொலலக்கூரிய வாளைக்கொண்டு கொன்றுதீக்கி யாழும் பூரியனெண்ணின் மதிக்கபபடுவேனென்று சொல்வான், இவ்வாறு மனமவருந்தி சகரவர்த்தி ஆவிசோர்ந்தயர்ந்து நாம்கொடுந்தொழிலை மேற்கொணடு வெட்டத்துணிவதினும் இரந்துகோடலே நல்லதென்று துணிந்து அவள்கால்மேல்வீழ்ந்து வேண்டிக்கொள்வான். இவ்வரசினைநோக்கிச்சகலதருமமு மறிந்தவனுகையால் பரதனை மனங்கொள்ளான், அவ்வாறுகொணடாலும் இவ்வுலகம் அதையொப்பாது, ஞாலத்தாரெல்லாம் புகழ்ந்து நிற்கவே பேரொடுத்துத்திரியவேண்டும். அவர்களெல்லாம் நிந்திக்கும்பெயரைக்கொண்டு திரிவதனு லென்னபயன் பெற்றாய்! நீகொண்ட கருத்தைத் தேவர்களுமஉட்கொள்ளார்கள். மண்ணிலுள்ளாரும் ஒரு பொருளாகக் கொள்ளார்கள். மற்றவர்கள் செய்கைதா னெவ்வாறும்! நீ யாரொடு இவ்வரசாளத்துணிந்தாய்! யானை வலிய வருந்திக்கேட்கத் தான்முறையால் ஆண்டுவரவிசைத்தான், உன்மகனுக்கு வேண்டுமென்றால் தானே தருவான். என்கண்ணே வேண்டு

மெனினும் கொடுக்கின்றேன், என்னுயினை வேண்டினும் தட்டேன், பெண் ணரசியே! ஈகையிற் சிறந்த கேகயனுன்னமே! நீ பெறவேண்டி யிச்சித்தால் மண்ணை பெற்றுக்கொள், மற்றொன்று உன் மனத்திற் குடிகொண்டிருக்கின் றதே அதை மறந்துவிடு. காணை என் வாயாற் சொல்லிய சொல்லை மாற்ற மாட்டேன், உலகத்தில் தாய் தந்தை யென்னத் தனனேயிருந்து நின்றுல் பேயுமகிழ்தியும், நீ யிவ்வரமொன்று தாலை பிழைபடுமோ வென்று பன்னி யிரந்துநின்றுன். அதைக்கேட்டு உள்ளஞ்சிறிதும் தடுமாறுது இவ்வரத்தை முன்னமே கொடுத்திருக்கின்றீர், இப்போது தடுப்பீரோல அரசே! மெய்மைக் கினியாவென்று கூறினுள். அதைக்கேட்டு நெஞ்ச நடுங்கிப் பெண்ணுருவென் பது ஆலவிடமன்றே! என்று நினைந்து இரபடுனையாக நின்மக ணைடுவரு வான், நீ யினிதாள்வாய் எவ்வுலகமு முனவயமேயாகும், ஆயினும என் மக ணும் என் கண்ணும் என் னுயிரும எலலா வுயிருக்கு மிதஞ்செய்தவனுமாகிய சீராமன் இந்நாடு கடவாமைமாத்திரம் வேண்டுகிறன, தாமனைக்கண்ணனுகிய அச்சீராமன் என் கண்ணைவிட்டகல்வானுலை நான் பிழைப்பேனு, நான் உன் னபயமென்று சொல்லிமுடித்தனன். சக்கரவர்த்தி இவ்வாறுசொல்லக் கைகே சியும் நீ கொடுத்த வரத்தைத் தவிரகவென்று சொலவது உரத்தானன்றி நல் லறமாமோ வென்றனள். கொடியவளாகிய கைகேசி சொல்லிய வார்த்தை யைக் கேட்டு முடிசூடாமல நெருங்கிய காட்டினிடத்தே யுண்மையாகச் சீராமன் நீங்குவானுயின் என்னுவி நீங்குமென்று இடியேறுண்ட மலைபோல் மண்ணிடை வீழ்ந்து துன்பக்கடற்கோர் எலலை காணுதானுய்க் கைகேசி சொன்ன கொடுஞ்சொற் குள்ளம்புழுங்கி உலகத்தில் கற்புடைமாதர் தம்முயிர் போன்ற கணவா ஆருயிர விடிவராயின் அவன் முன்னே தம்முயிர்துறப்ப சென்பது திண்ணம், நீ கொல்லத் துணியச் சமைந்தாயே! எனக்குநன்மையு மென்னுய்,தருமமுஞ் சிறிது மெனணுய், அருளேயுங்கொன்றனை,உன் னுவா கிய அமபால் என்னுருயிருண்டனை! * மாட்சிமையின் பகுதி நீங்காத நாணம், மடம்,அச்சம்,பயிர்ப்பென்பனவையும் பூணுகக்கொள்வா மாதராவார். புகழை

ஏண்பா லோவா நாணமட மச்ச மிவையேதம
பூண்பா லாகக் காண்பவர் நல்லார் புகழ்பேணி
நாண்பா லோரா நங்கையர் தம்பா னணுகாரோ
ஆண்பா லாரோ பெண்பா லாரோ டடைவம்மா.

இதன்பொருள் - மாதராவார் மாட்சிமையின் பகுதியினின்று நீங்காத நாணம் மடம் அச்சம் பயிர்ப்பென்னு நான்குபகுதியினையும் அணிகலமாகக் கண்டவராவார், புகழைவிரும்பி நாணின்பகுதியை உணராத மாதரார் தம்பகுதியை நணுகாரோ ஆயின் ஆண்பாலாரோ யாவர், அவர் பெண்பாலாரோ டொருபுடை யொப்பு. எ - று.

பயிர்ப்பு உபலக்கணத்தாற் பெறப்பட்டது. இனைத்தென்றுணர்த்து மென்னுமுற் றும்மையும் விகாரத்தாற் றொக்கன. பயிர்ப்பு - பயிலாத பொருட்கண்வந்த அருவருப்பு. 'உயிரினுஞ் சிறந்தன்று நாணினுஞ் - செயிர் தீர்காட்சிக் கற்புச் சிறந்ததன்று.' என்றும், 'தாயிற் சிறந்ததன்று நாண் டையலாருகு' என்றும் கூறலின் நாண்பாலோரா நங்கையர் என்றதென்க. நாண் புகழ்முதனிலைத் தொழிற்பெயர்கள். பூண் விணைப்பெயர். நாணென் றில்லாமையான் ஆடவரென்றும், வடிவான் மாதராகலின் பெண்பாலோ ரோடடைவென்றுங் கூறினர். தம்பாலென்ற தந்நாற் குணங்களையும், அம்மா - அசைநிலை.

விரும்பி நாணின் பகுதி உணராத மாதர் தம்பால் கணுகாராயின் ஆண்பாலாரோயாம், பெண்பாலரோ டொருபுடை யொப்பாம், இனி உலகத்திற் பாவத்தை நோக்காமல் என்னுயிர் வாங்கப் போகின்றாய்! வல்லமையால் மண்ணாள்கின்றவராகி மதியினால் வைத்து எண்ண நின்றூர் யாராயும் எவ்வகையாகிய போராலும் விண்ணுலகம் வாயுஞ் சென்று வென்ற எனக்கு என் மனைவியால் முடிவு வந்ததென்று சொல்லப் பெறுவேமோ! என்று, நினைப்பான் இடரிலாழ்வான், ஒன்றோடொன் றுவ்வாத துன் பத்திலாழ்வான்; இவனுக் குயிருண்டோ இன் றின்றென்று சொல்லும் வண் ணம் மயங்கி யிடிவான். இவ்வாறு துன்பமெய்திக் கிடந்து புரள்கையில் அரசனே! நீ உன்னுளை யெய்த்தால் என் உயிர்மாய்வேன்! உங்கள் குலத் தரசனொருவன் தன் வாய்மைவளர்ப்பதற்கெண்ணி தன் னருமையான உடம் பைப் புறுவின் பொருட்டரிந்தானன்றோ! நீ வரங்கொடுத்துவிட்டுப் பரிந்தா லென்பது மென்றனள்; சக்கரவர்த்தியும், இவ்வரங்களைக் கொடுத்தேவிட் டேன். என் மகனாகிய சிராமன் வனமேபோக நான் மாள்வதுதிண்ணம், நீயோ வசையினின்றுந் தீராத விடுமனையேயடைவை! என்று துயரத்தினல் வருந் திக்கிடக்க, தன் கருத்து முடிந்ததென்று உவகையோடு கைகேசியுந் துயில் கொண்டாள். இது நிற்க;

பல நாளெல்லாம் உயிர் ஒன்றுபோலவேகாட்டி பின்பு மாட்சிமைப் பட்ட தோளையுடைய தசரதன் இடரடையுமபடி சிறிது மிரங்காத ஒளியுள்ள நிலாவைப்போலு நகையையுடைய கைகேசியின்செய்கையைக்கண்டு ஆடவர் முன்னே நிற்க் நாணினனென்றுசொல்ல இரவாகிய மாது கழிந்துசேண் சென் றனள். அச்சத்தை விளைவிக்கும் விலலெந்திய கையையுடைய சிராடனைத் தொழுகின்ற நாள் நமக்கடைந்தது, காமபாணத்தால் வருந்து மிரவுகழிந த தென்பது கற்பிப்பதுபோலப் பேரிகை யதிர்ந்தன. அவ்வொலியை மாரிகாலம் கண்டு மகிழும் மயிற்கூட்டம்போல மாதர்கேட்டு மகிழ்வெய்தினர். மேன்மை யடங்க நலமனுபவித்துத் தன்குல நன்மையும் போயடங்கப் பெரும்பழி மேற்கொண்டு அரிய புகழைக்கெடுக்கும் அக்கொடிய கைகேசியின் செயலைக் கண்டு சிறந்த கற்பின் நலமமைந்த மாதர்கள் வாயடங்கிறற்போலக் குமுத மலர் வாய்மூடிக்கொண்டன. ஆடவரோ ஆழியாளுகிய சிராமன் முடிசூடு கின்ற பகற்போதிற்கு இடையாகநின்ற பாவியாகிய இரவு நமக்கோ ரூழிகாலம் போல் தோன்றுகின்ற தென்றும், திருமகளும் ஏழுலகமும் தவஞ்செய்யப் பெற்ற கண்களும் எங்கள் மனங்களும் வாழுநா ளீதென்றும் எண்ணித் துயி னீங்கினர். காமனைமலரோ மூவராயும் அம்மூவர்க்கு முதல்வனையும் ஞான மாயும் நின்று மகதேவனுகிய பரமசிவன் கையிற்பிடித்த போர்த்தொழில் மேற்கொண்ட பிரகத்தை யொடித்த சேவகனுகிய சிராமன் மகுடாபிஷே கஞ்செய்வதைக்காண ஆசைகொள்ளு மாதர் முகம்போல மலர்ந்தன. மாதரிற் கற்பின் மிக்கார் கோசலைமனத்தை யொத்தனர். அந்தண ரெல்லாம் வசிட் டர் மனத்தை யொத்தனர், வேறுமன்னைய ரெல்லாம் சுமந்திரனை யொத்தனர், சாதகரெல்லாம் தயரதனை யொத்தனர். அவ்விதியில் மாதர்கூட்டமும்

மைந்தர்கூட்டமு நெருங்கி யெங்கும் ஏகுங்கோள் ஏகுங்கோள் என்றிடை யிடை கிறலான் போதலும் மீளலு மொழிந்தில. வேந்தர்களே பெரிதென் பாரும், வீரர்களே பெரிதென்பாரும், மாந்தரே பெரிதென்பாரும், மாதரே பெரி தென்பாரும், போந்ததே பெரிதென்பாரும், புகுவதே பெரிதென்பாரும், தேர்ந்ததே தேருவதன்றி யாரே தான் அங்குநிகழ்வதைத் தெரியக்கண்டவ ராகச் சொல்லக்கூடுமம. சீராமனது மகுடாபிஷேகங்காண அந்நகரத்திற்கு வந் தவர் இலங்கையிலிருக்கும் அரக்கருமு இவ்வே ழுலகத்திலிருக்கு மலைகளும் திசையானைகளுமலது யாவரும கூட்டமாகக் கூடினா. இவ்வாறிருக்கை யிற் பலகோடி சந்திரென்ன முத்தக்குடை நிழலசெய்யவும, ஆகாயத்தில் வாசஞ்செய்யும் அன்னக்கூட்டமெருங்கியதென்னச் சாமரையிரட்டவும், இந் திரனுக்கு உவமையெடுத்துச் சொலலபபட்ட உலகத்திருக்கு மரசசெல்லாம் வந்து மகுடாபிஷைகஞ்செய்யும அத்தாணியணைபமேபோய்ச் சேர்ந்தனர். தாம் முன்னே பெற்றெடுத்த சாதற் புதலவனை முறையாக இலலறப்பயன் சிறப்பிப்பாபோல நெருங்கிய உவகைநூலை ஞானமறை யுணர்ந்த அந்தண ரும் சீராமனது மகுடாபிஷேகங்காண வந்து நெருங்கினர். விண்ணவ ரெல் லாம் ஆகாயத்தில நெருங்கினர், மாதாகள் திசைகளி லெல்லாம் நெருங்கி னா, மங்கலச் சங்கமுழகுமு முரசினிணையமு கானவந்தவருடைய செவ் களில நெருங்கின. பொனமழை எழுகடலபோல நெருங்கின ; இவ்வண்ணம் நிகழ்கையில சீராமனுக்கு மகுடமசூடுவதற்கு வேண்டுவனவாகிய மங்கல பொருள்களை யெலலாங் கொணாந்து கானகுவேதங்களை கன்முக ஆராய்ந்த வேதபாரகா சூழ்ந்துவரவும அந்தரவாயில நெருக்கநீங்கவும வசிட்டமுனிவ எழுந்தருளிக் கங்கைமுதல கணனிபீருகிபதீர்த்தமும கடனீரும் பூரித்து அ கினி காரியத்துக் குரிய யாவையும சேகரித்துச் சிங்காதனத்தினமேல் வை துச் செய்யவேண்டிய வகனத்துஞ் செய்தனா. சோதிடநூற்புலவாகள் பட்ட பிஷேகஞ் செய்தற் கமித்த காலஞ் சமீபித்ததென்று சொலல வசிட்டமுன வரும் சக்கரவாத்தினை வினாவாக அழைத்துவரக் கட்டளையிட்டனர் ; சும திரன் பரிந்துசென்று அரசனை இராசபாவினைகையிற் காணுமல கைகேசிக்கு தோழியர்களாலறிவிக்க அவர்களுமவளுக்கறிவித்தனா. கைகேசியும் சீராமனை காணே அழைத்துவரச்சொன்னதாகச் சொலலுங்கோளென்றனள். அவ்வாறே மாதரும்சுமந்திரனுக்கறிவிக்கச் சுமந்திரனும்வினைந்துசென்றுஇராசனீதிகடந்து சீராமனையடைந்து வணங்கி நின்று கைகட்டி வாய்புதைத்துத் தாசரதீ ! அர கும்முனிவரும்மற்றையுலகத்துள்ளாரும உபமைப்பெற்றசக்கரவர்த்திபோலு பரிவு செய்கின்றனர். உமது சிறியதாயாகிய கைகேசியோ உம்மைத் தமத திருமாளிகையில் வரக்கட்டளையிட்டனள், அழகிய மகுடாபிஷேகஞ்செய்து கொள்ள வினைவிற்செல்லுமென்று வேணடினன். சீராமனும் அச்சொல்லை கேட்டு ஆயிரமோலி யமலனுதிப்பிரானைக் கைதொழுது அரசர்கூட்டம் கட போலத் தன்னைச்சூழ்ந்துவரவும் தெய்வகீதங்கள்பாடவும் தேவர்கள் மகிழ்ந் வாழ்த்தெடுப்பவும் மாதர்க ளினைந்து பார்க்கவும் தேரிலேறிச்சென்றனன் கடுஞ்சொல்லைச்சொல்லும் கைகேசிபிடஞ்சென்று பொன்முடி தாழ்ந்திலேம

ளாகிய பெருந்திருவைநீங்கி வழிக்கொள்ளா முன்னமே, சீராமபிரான் பண் ணென்னுந் தீஞ்சொல்லையுடைய மாதரார் தோளென்னும் வேயும், அவர் கண் ணென்கிற காலனையொத்த வேலும் நெருங்கிய காட்டிற்புகுந்தான். இவ்வாறு கடந்துதாதையினைத் தேடிவரவே, கைகேசி நமது நாயகனாகிய தயரதனை சொல்லத் தரியான்! நாமே முன்சென்று சொல்லுவோமென்று எண்ணிக் கொண்டிருக்கும் கைகேசி யெதிர்ப்பட அவளைத் தன் மணிமுடி நிலமுறப் பணிந்துநின்று கைகட்டி வாய்புதைத் தெதிர்நின்றான். கொடுமைமிகுந்த கைகேசியும் இன்றுனக்கறிவிப்ப தொன்றுண்டு, அது எனக்கேவிய செயலேயா மென்றாள். சீராமனும் எமது பிதாவே யேவ நீரே யுனைசெய்யப் பொருந்திய தாயின் நானுய்ந்தேன்! உய்ந்தேன்! என்னினும் பிறந்ததனலாகிய பெரும் பயன் பெற்றாருண்டோ? என் தவத்தினலாய பயன்வந்தது தந்தையும் தாயும் நீரோயாகலின் எனக்குக் கட்டளையிடலாமென்றனன். உன்தம்பி பரதனே இவ் வுலகமுழுதும் ஆண்டுவர, சடைமுடியும் மரவுரியும் புனைந்து தவமேற்கொண்டு கானிற்சென்று புணையிலாதீர்த்தங்களில் நீராடி, பதினன்கு வருடங் கழித்து வாவென்று சொலலிவிட, அதைக்கேட்ட சீராமபிரான் திருமுகச் செவ் வியை நோக்குமிடத்து மகுடாபிஷேகஞ்செய்ய மேற்கொண்டபோது எவ்வா றிருந்ததோ அவ்வாறே பொலிவுற்று விளங்கிற்று. சீராமபிரான் சகடத்திற் பூண்ட பெரியதோரேறு அருளுடைய வொருவனுற் பிணிப்பவிழ்ந்த தொத் துத் தாயே! இது இறைவனது ஏவலன்றே யெனினும உமது குற்றேவலே மறுப்பனே, என் தம்பி பரதன் பெற்றசெல்வம் யான்பெற்ற செல்வமே யன்றே! இதனினும் சிறந்த வுறுதி யாதிருக்கின்றது! இக்குற்றேவலைத் தலை மேற்கொண்டு காட்டிற்போக இப்போதே விடைபெறுகின்றேனென்றான்.

கைகேசி சூழ்வினைப்படலம்.
முற்றிற்று.

நகர்நீங்குபடலம்.

சீராமன் கைகேசியிடத்தே விடைபெற்று அவள் பாதமலரில்வீழ்ந்து வணங்கி மீட்டுந் தன் தாதைபாதங்களை அவரிருந்த திசைநோக்கி வணங்கித் திருமகளும் புவிமகளும் மனம்வருந்தக் கோசலை திருமாளிகைநோக்கிச் சென்றான். இருபுறமும் சாமரையிரட்டுதலும தவளவெண்குடை நிழற்றலு மின்றி சங்கற்ப முன்னே நடந்துசெல்லத் தருமம் பின்வருந்தி நடப்பத் தாச ரதி பொன்முடிபுனைந்து வருவானென்று மனக்கிளர்ச்சியுடன் வழிபார்க்குந் தாய் முன்னே தன்னந்தனியனாகப்போய்ப் பணிந்துநிற்க அவனை வாரியெடு த்து முத்தமிட்டு ஆசீர்வதித்து அரசன் நினைந்ததென்? நெடுமுடி புனைதற் கேதேனு மிடையூறுண்டோ வென்றாள். சீராகவபிரான் தாயைவணங்கி அன் னாய்! உன்மகனாகிய பரதனேமணிமுடி சூடிக்கொள்வனென்றான். கோசலையும் முறைமையன்றென்ப தொன்றேயல்லது பரதன் நின்னினும் நல்லவனன்றே! குற்றமிலாதானாய் இவ்வுலகமுழுதும் உன்னம்பிக்குக்கொடுத்து வாழக்கடவை

யென்றனள். சீராமனே இதுவன்றி எனக்கேவிய குற்றேவலும் வேறுன் றுண்டென்றான். கோசலையும் அதென்னவெனப் பதினலாண்டு காட்டின்கண் மாதவரோடு வனசஞ்சாரஞ்செய்து மீள்வதே யென்று சொல்லினன். அம் மொழி செவியிற் புகாமுன்னம் ஏங்கி யிளைத்துத் திகைத்து மனம்விங்கி விம்மி விழுந்து இது வஞ்சமாயிருக்கின்றது, மகனே! இவ்வரசாண்டு வாவென்று சொன்னசொல் நஞ்சமாமோ,நானுயிர்வாழ்ந்திருப்பேனே,என்னுருயிர் அஞ்சா நிற்கின்றதென்று கையொடு கைகொரித்து ஆவிலேபோலும் வயிற்றைத் தன் கையாகிய தளிராற்பிசைந்தும் வெய்துயிர்த்துப் புழுங்கி,நன்று நன்று,அரசன் கருணையென்றுசிரிப்பாள். மகனே! நீயென்று காடுசெல்வாயென்று உயிர்நீங் குங்காலத்திலேயெய்தும் துன்பம்போற் றுன்பமெய்துவாள். உன்னிடத்தே அன்புமிகுதியும்வைத்த அரசனுக்கு நீ பிழைசெய்தவா றெணணி அறமெனக் கில்லையோவென்றும்,தெய்வங்களே! எனக்கு மரணமடுத்தவா றென்னவென் றும்,கன்றுபிரிய வருந்திய சேதாவைப்போல்மனம்வருந்தினுள். இவ்வாறுதுன் பப்படுந் தாயைக் கையாலெடுத்து அருமையாகிய கற்பு நலமுடையாளே! வாய்மைக்கிருப்பிடமாகிய அரசனைப் பொய்யணுக்கத் துணிந்தனையோ,சிறந்த தம்பி செல்வமடைய என் தந்தையாகிய தசரதனை மறந்தும் பொய்மொழி சொல்லாதவனுக்கி, யான் வனத்திற்சென்று வசிக்கு முறுதியைப்பெற்றேன், இதைப்பார்க்கிலும் யான் பிறந்து பெற்றபேறு யாது? விண மண் நீர் முதலிய எல்லாப்பூதங்களும் இறந்தொழிந்தாலும் நமது அரச னேவலை மறுக்கத்துணி வேனே! என்று சீராமன் சொல்லினன். கோசலையும் அரச ஞணையா லேகுவ தாயின் தடுக்கேன், ஆயின் சாகலாகாத வுயிர் தாங்கவலல என்னையும் உன் னெடுகூட்டிக்கொண்டு போகவேண்டு மென்றுள். என்னை நீங்கியிடர்க்கடலி லழுந்தி வருந்தும் என்தந்தையை வற்புறுத்தி வேண்டுவன சொல்லாமல் என் னுடன் காட்டுக்கு வருவதாகத் துணிவது தகுதியோ; தாயே! நீயோ அறத் தைச்சிறிதுமறியாதிருக்கின்றனை! என் தம்பிபரதன்மணமுழுதும் அரசாண்டு வரு மரசனுகவே இவ்வுலகமுழுதும் அவன்வசமாகும், அதன்பின் நமதரசன் செல்வந்துறந்துதவஞ்செய்யுங்காலத்திலே அவனுடன் நீ அருமையானசோன்பு கள் செய்யத்துணியவேணடும். தாயே சிந்தையிற் றுயரங்கொண்டுவருந்துவா னேன்? தேவர்களும் சிறந்த மாதவஞ்செய்தன்றே உயர்ந்தனர், எத்தனை வருடந்தான் காலங்கழிக்கப்போகின்றேன் பத்து நாலும் பகலல்லவோ கழிக் கப்போவது! விசுவாமித்திர பகவான் அருளால் தாங்கிய வித்தையும் பின்ன ரடைந்த பேறும் பிழைத்தனவோ! நான் முனிவ ரேவினவற்றைச் செய்தல் இன்னும் நல்லதாகும். அருந்தவர்க்கு வழிபாடுசெய்து மெய்யுணர்ச்சிபெற்று ஒப்பில்லார்த்த வித்தைகள் குற்றமற்றனதாங்கித் தேவர்கள் காதல்பொறுத்து நானும் வரக்காண்பாய். கடலேழ்ட்ட சகரர் அறுபதினுயிரவரும் தந்தை ஏவ லிற் றலைநின்று உடம்பினின் றுயிர்போக்கிய சிறந்தபுகழ் நிலைபெற்றிருக்கின்ற தன்றே! மழுவாளியாகிய பரசுராமனும் தன்றுதையாகிய சமதக்கினி முனி வன் சொற்கடவாமல் தாயை வுன்சிதையக்கொன்றுனெனின் யான் 'தந்தை சொன்முக்க மந்திரமில்லை.' என்றதைத் தவிர்ந்து நடப்பதோ! என்முவ்வகை

யான பல மொழிகளையும் சொல்லி நல்லறிவுச்சுடர் கொளுத்திய சீராமன் சொல்லைக்கேட்டு உலகையாள்வது பரதன்பாலாகினு மாகட்டும், இவன்மாத்திரம் இக்காடு கடவாவண்ணஞ் செய்யவேண்டுமென்பது கருதித்தான் எண்ணியது முடிக்க தகரத னிருக்குமிடஞ் சென்றாள்.

கோசலை போவதைக்கண்டு இவள்கொண்ட சோகத்தைத் தீர்ப்பவள் சுமித்திரைதானெனத் துணிந்து அவளிருக்குமிடஞ் சென்றான். கோசலையோ நடந்து சென்றுகைகேசிமாளிகை யடைந்து அரசன் தளையில் விழுந்துகிடக்கப்பார்த்து உயிரற்றுடல்விழ்ந்ததுபோல அரசன்மேலவீழ்ந்து புலம்பிநிற்க அப்புலம்பலோசைசென்று கௌசல்யை முனிவரும் மன்னரும இனிக் காலம் செல்கின்றது தகுதியன்றென்று வேண்டா னேலாச்செய்திபு மறிந்து வருவேனெனத் தசரத னிருக்குமிடமடைந்து அவனிலைகண்டு இது என்ன வினைவென்றுணர்ந்து,இவனை இறந்தா னல்லன் இறவாதாழிவானு மல்லன், ஆயின் இப்போதுணர்வு கெட்டிருக்கின்றானென்றும் கோசலையோ ஆறுத்துயரா லயர்கின்றாளென்றும் சிந்தித்துத் தன்னைவணங்கி நின்ற கைகேசியை நோக்கி அரசன் இவ்வாறு வருத்தக் காரணமென்ன சொல்லவேண்டுமெனத் தன்னுளடந்ததைத் தானே சொலலி னின்றாள். அவள் சொல்லி முடிப்பதன்முனமே சக்கரவர்த்தியைத் தறையினின்றெடுத்துச் சயித்தியோபசாரஞ்செய்து அறிவுடையாமே!நீயெனயரவேண்டும ; கைகேசியேஉன்மகனுகிய சீராமனுக்கு முடிசூடுவாள், அப்படி செய்யாலெ னாங்கள் சும்மா விருப்போமோ மென்றுசொல்லத் தயரதன் வசிட்டமுனிவனைப்பாத்து என்மகனைப் புனைமணி மகுடஞ்சூட்டிக் காடேகாவண்ணஞ்செய்து என்னையும் புனிதனுக்கவேண்டுமென்று வேண்டினன். வசிட்டமுனிவரும யாவனையும் முனியுங் கொடுஞ்செய்கையையுடைய கைகேசிமுகமே நோக்கிப் பொன்போன்ற வளை ! உன்மகனுக்கு அரசும் ஏனையோருக்கும்உன்கணவனுக்கும் உயிருதவி செய்து பெரும்புகழையடைய வேண்டினையே னென்று சொல்லிமுடித்தனர். கைகேசியும அரசன் தான்சொன்னசொல தவறுவானேயாயின்உயிர்வாழமாட்டேன் என்சொல் பொய்யாதற்றன்மைக்குப் பொன்ற தொழியேனென்று சொல்லினள். அதைக்கேட்ட அரசன் தனகணவன் இறந்துபடுவனென்றும, உலகந் தான்கொணட கருத்தைக் கொள்ளாதென்றும பழி நிலைபெற்றுயரு மென்றும் பாவம் பெருகு மென்றும் நீ யறிகின்றலை ; அன்றியும் சிறிதும. அறியாதிருக்கின்றனை ! இனிதான் உனக்கென்னசொல்வது நீபேயோ ! தீயோ ! இம்மண்ணில் உனக்குவசையே நிலைபெற்றிருக்கு மல்லதுவேறன்று. வாயால் அரசன்தன்மகனை. வனமேகச் சொல்லாமுன்னம் நீயேசொல்லிவிட்டாயே ! அவன்போய்ப்புகுதல் தவிரமாட்டானே, புகழுடன் உயிரைச்சுடுகின்ற தீயன்னாளே ! உன்போலுந் தீயாருளரோ,உன்செயல் அறக்கொடியதென்றனர்.

இவ்வாறுசொல்வதைக்கண்ட தசரதன் காவினஞ்சமுடைய மாதராளைப் பார்த்து அடபாவி ! என்னுயிரைக் கொடுங்கான் படர்ந்து செல்லென்று ஏவினையோ ! அவனும் போனானே ! நானே உன்கனிவாய்விடத்தை நெடுகானுண்

டேன் அதனலன்றே என்னுயிரைமுதலோடுண்டாய்! உன்னை அக்கினிசாட்சி யாக முன்னுளில் மணமாலைசூட்டியது நானிப்போது பிணமாகும்பொருட் டென்றே துணிந்தேன். என்மகனைக் காட்டிலனுப்பினமையால் உன்கழுத்திற் கட்டியிருக்கிற மங்கலநாணை உன்மகனுக்குக் காப்பிணையாகுமென் றிவ் வாறு சொல்லி தன்னைநோக்கி யிரங்காத கைகேசிக்காக வசிட்டமுனிவனைப் பார்த்து இக்கைகேசியோனைக்குத்தாரமாகவே ஆகபாட்டானென்பதுதுணிந் தேன். இனி மன்னனுகிவரும் அப்பரதனை மகனுவானைனக் கருதேன், அவ னும் என் உருமைக்கடன்செய்வது கூடாதென்றன். அதன்பினபு என்னைக் கண்டும் பேசிப்போகவே இடையூறுடைய சிராமன உன்னைக்கண்டும் போக வில்லையோவென்று கோசலையைக்கேட்க, கோசலையும் இது மாற்றுள் செய லென்றும் தன் கணவன் வரங்கொடுத்து உள்ளமயர்ந்தானென்று கண்டு, அர சனைத்தேற்றியும மகனை நிறுத்திணல அரசன் மெய்ம்மைமொழிதவிர்ந்தானென்று உலகஞ்சொல்லும் பழிக்கும சோகதும மெய்மைதழுவாவகையாலகிந்தியாத நிலைமைவாய்ந்த பெருமைக் கிழிவாமென்று சொலலி அரசனை அன்பான் மகன்மேல் மெலியின, உலகம கொள்ளாதென்றும நமது மகன் போவா தொழியானென்றும் கணவனை சாகாமலிரா னென்றும உள்ளமபுலர்ந்துவாடி மகனை உன் தந்தையைக் காக்கவேண்டுமென்றும புலப்பி வருந்த, அதைக் கண்ட தசரதனை சிராமன எண்ணி கணணீரபோ லுயிரொழுகக் கனைகின் றேன், உன்மேல் அக்கினிகாரியஞ் செய்கையில் புரோகூஷிக்கும கங்கை முத லிய புண்ணியதீர்த்தங்களை எனக்குணணீரா யுதவிக் கானடைய வேண்டு கின்றேன். உலகத்திலுள்ள அரசனை யெல்லாம் மழுப்படையாற் கொன்று வெற்றிகொண்ட பரசுராமனை வில்லாற் செயங்கொணட விறல் வீரனே! பொன்மகுடந்தரிக்கின்றேன் என்று சொன்னவாயால இப்போது சடைமகு டந்தரித்தனுப்புகின்றேனே யென்றுகவலைபபடுவான். வடிவங்கறுத்தாய்! மன மும்கண்ணும் கையும் செம்மையுடையாய்!புரமூன்றெரித்த புண்ணியமூர்த்தி போர் வில்லொடித்தாய்! என்னை இம்மூப்பில விட்டுப்போக மனம்படைத் தாய்! நாமே இனி வாணுள் வேண்டன் வேண்டனென் றிவ்வாறு மிக வும் புலம்பி மூர்ச்சையடைந்தான். இவ்வாறிருக்கையில் வசிட்டமுனிவன் அரசனைப்பார்த்து நீ அயரவேண்டாம், உன்மகனுகிய சிராமனைக் காட்டிற் செல்லாவண்ணம தடுக்கின்றேனென்று சொல்ல, அதைக்கேட்ட அரசன் வசிட்டபகவான் சொல் செல்லுமல்லவா? நாம் வருத்தமொழிவோமென்று எண்ணியிருந்தான். கோசலையும் அரசன்படுப்பாடறிந்தமகனையும் எங்களையும் உலகொடு துறந்தீர்! இதுதானே அறமெனப்படுவது, நீ நிவ்வாறிருக்கின் உல கமுழுதும் துயரமடையும், நமது மகனுகிய சிராமனை வசிட்டபகவான்சொல் தட்டாமல்வரினும் வருவான், வருந்தாதிருமென்று சொல்லி, அரசர்பெருமான் வருத்தந்தீரும்படி சயித்தியோபசாரஞ்செய்தாள். அரசர்பெருமான் கோச லையை நோக்கி ஒன்றுந்தெரியாளுய் சிராமன் வருவனை வருவனை வென் நேங்கிப் புலம்புவான், கொடிய கைகேசியின் வாக்கால் என்னுயிரை முன்னே மாய்க்கக் கூனியின்புணர்ப்பினல் துணிந்தானென்பான். தானும் தன்மக்களும்

அரசுதுறந்தோமென்று சொல்லிப்புலம்புவான். அதுபோகட்டும் என்மகனைக் காட்டுக்குப் போகச்சொன்னளே அது தருமமோவென் றேங்குவான். என் மகன் அவள்பேச்சைக்கேட்டுக் காட்டுக்குப்போகாம லிருப்பனேவென்பான்; அவன் போவானேல் என்னுயிர்போகாம லிராதென்பான், கோசலையானை நோக்கி எனக்கு முன்னளில் ஒரு முனிவனிட்ட சாபமுண்டு, அதைவிரித் துச் சொல்லுகின்றேன். நான் ஒருநாள் வேட்டையாடக் காட்டிற்குப்போய் யானைவேட்டை யாடித்திரிகுதேன், திரியுங்காலத்தில் யானை வரும வழியை நோக்கி ஒரு தடாகக் கரையில வில்லுங் கையுமாய் மறைந்திருந்தேன், அப்போது கண்ணில்லாத பிறவிக்குருடனகிய ஒருமுனிவன் தன்மனைவி யுடனே அக்காட்டிற் பன்னசாலை கட்டிக்கொண்டு தவஞ்செய்பவனுய்த் தன் மகன்குற்றேவல்செய்ய விருந்தான். அவன் தன்மகனைநாவறணடு நீரேவேட்கை யுடையானுய் நீரகொண்டுவர அனுபபினன். அவன் கையிற் கரகங்கொண்டு அத்தடாகத்தில நீரமொள்ளுகையில நான் சித்தபபிரமையாய் யானை நீரருந்து கின்ற தெனியாகவெண்ணி இரவாதலால அமமகன்மேல பாணப்பிரயோகஞ் செய்தேன், நான் யானையென்றெண்ணி பாணபபிரயோகஞ் செய்தலை அம்மகன் அப்பாணத்தால் வருந்திப புலமபினன. அவ்வோசை கேட்டுப் பய ந்து ஓடிவந்து கையிலிருந்த வில்லும அமபும போட்டுவிட்டுத் தன் கையி லிருந்த பாத்திரத்துடன் வருந்துகின்ற அம்மகனைப்பார்த்து நீர்யார் உள்ளபடி சொல்லுமென்று கேட்டேன். அதற் கமமகன் என்வரலாற்றைச் சொல்லு கின்றேன் கேள்? மச்சாவதாரங்கொண்ட மணிவண்ணப்பெருமான் திருவுந்தி யில் வந்தான்முகக் கடவுள்படைத்த நான்குவருணத்தில் அந்தணர்குலத்திற் காசிபமுனிவன் மகன் விருத்தசனென்பவ னிருவனுணடு, அவனுக்குச்சல போசனனென்பவனுக்குச் சுரோசன னென்பவன பிறந்தான்; அவனே யானு கும், என் தந்தை தாயரோ பிறவிக்குருடர்; அவாகள் நீர வேட்கைகொண டயர்ந்தமையால அவர்கள்பொருட்டு நீர்தடிக்கொணரவந்தன. இடையிலே பழுதாயிற்று, நீயோ யானையென்று கருதி என்மேற் பாணப்பிரயோகஞ்செய் தனை! விதியை வெல்லவலலார் யாருளர், நீர் வருந்தவேணடாம, என் தந்தை தாயாநீர வேட்கையால் வருந்துகின்றாராதலின் அவர்களுக்கு நீரைக்கொணடு கொடுத்து என் மரணத்தையு மெடுத்துச்சொல்லி நான் மரணமடைகையில் அவர்களை வணங்கி உயிர்விடுகின்றேனென்று சொல்லுமென்றுவேண்டிக்கேட் டுத்தேவாகள் புட்பவிமானமகொணர அதன்மேலேறிச் சுவர்க்கமபுகுந்தான். மகன்போய் நீரகொண்டு வருவானே அவன் சென்று வெகுநேரமாயிற்றே! இத்தனைநேரந் தாழ்ப்பானேன்! வந்து விடுவானே, வராதகாரண மென்ன வென்று வருத்தப்பட்டுக்கொண்டிருந்த அப்பிறவிக்குருட ரிருவரும்யான் நீர் கொண்டுவர அவர்கள் என்னைத் தம்மகனுக வெணணித் தழுவிக்கொள்ள வாவென்றனர். அதற்கு நான் அவர்களைநோக்கிஉமது மகனல்லன், அயோத்தி நகரத்தி னரசன், சூரியவமிசத்திற் பிறந்தவன், இரவில் யானை வேட்டை யாட ஓர் தடாகக்கரையிற் பதுங்கியிருந்தேன், உமது மகன் கலசங்கொண்டு நீர்மொள்ளுவது யானை நீரருந்துவதுபோலத் தோன்ற அவன்மேற்பாணம் பிரயோகித்தேன்.

அவன் அப்பாணத்தால் அலறிய ஓசைகேட் டோடிவந்து அவன்செய் தினையறிந்து நிற்க, தேவர்கள் அவனைப் புட்பவிமானத்திலேற்றிச் சுவர்க்கம் சேர்த்தார்கள். நான்வேண்டுமென்றுகொன்றேனல்லேன், என்னைக் குற்றேவல் செய்பவனைக்கருதவேண்டுகின்றேனென்று வணங்கினன். அச்செய்தியைக் கேட்டு அவ்விருவரும் வீழ்ந்து புரண்டு இதுவரையிலும கண்பெற்றுடையரா யிருந்தோம்! இன்றுதான் கண்ணிழந்தோமென்று துன்பக்கடலிலாழ்ந்து நீ சுவர்க்கத்திலிருக்க நாங்கள்மாத்திரம மண்ணுலகத்தி லிருப்போமோவென்று கதறி என்னைப்பார்த்து எங்கள் கண்மணிபோன்ற மகனையிழந் துயிரைவிரும்பி உயிருடன் வாழ்ந்திருந்தால உலகம என்சொல்லாது, நாங்களும இறந்துபடு வோம். நீயும் எங்களைப்போற் புத்திரசோபத்தா லுயிர்நீங்குவை, நீ யுள்ளபடி யெங்களுக்குச் சொன்னதலை கொடிய சாபமிடவில்லையென்று சொலலி அவ் விருவரும் புத்திரசோபத்தா விறந்தனர; நானும அயோத்திநகரமடைந்தேன். இக்காரணத்தால் என்னுயிர் நில்லாது என, கோசலையும் மனந்திகைத்து நின்ற னள். வசிட்டமுனிவரும அவலந்தரு நெஞ்சினையுடையாரைய் இராசமாளிகை யகன்று பட்டாபிஷேக மண்டபத்தை யடைந்தார். அதைக்கண்ட அரச செல்லாம் சிராமபிரான் இங்கே யெழுந்தருளுவதற் கேதேனு மிடையூ றுண்டாயிற்றே! மிகுந்தசோகமாய் இராசமாளிகையில் அழுகுர லுண்டாவ தற்குக் காரணமென? என்று கேட்க, வசிட்டமுனிவரும் கைகேசியோ அரசர்பெருமானிடத்தே வரமிரண்டுபெற்றனள்; அவற்றுள் ஒன்றால் சிராமன் காடுபோகவும், மற்றொன்றால பரதன் நாடாளவும் ஆயினர்; இதுதான் செய்தி யென்ன, அம்மொழி காதிற்புகுமுன்னே மாதரும் மற்றநகரமாந்தரும் அரசர் களும் அந்தணரும சக்கரவாத்தியேபோல வீழ்ந்து வருந்தினர். கிள்ளையும் பூவையுமழுதன; வீட்டில வசிக்கும பூனையுமழுதன, கருவிலுருத்தோன்றுத மக்களுமழுதனர், பசுக்களு மழுதன, அவற்றின கன்றுகளுமழுதன, அன் றலர்ந்த மலர்களு மழுதன, நீரிலவசிக்கும புட்களுமழுதன, தேன்சொரியும் சோலைகளுமழுதன, பரவைகளுமழுதன, இவ்வாறியாவருமழுவே கைகேசியும் கூனியுமே அழாதிருந்தனர்; அத்தெருவெங்குங் கண்ணீப் பெருக்கேயாறு யோடினதேயன்றி மனமிருபிளவாகாமையே குறையென்று சொல்லவிருந் தது. இவ்வாறிருக்கையில் இது சிலர்மண்செய்த பாவமோவென்பர், சிலர் மலர் மகள்செய்த பாவ மதனினுமபெரிதென்பர். சிலர் விதி மனத்தைப்புண்செய்த தென்பர். மண்ணுலகத்தோர்கண் செய்த பாவம் கடலினும் பெரிதென்பர். சிலர் பரதன் தனக்குவந்த அரசை யாளமாட்டா னென்பார்கள். நமதைய னுகிய சிராமனே மீளமாட்டான் நமக்கு விதியோ கொடியதென்பார்கள். நம க்கு இம்மகுடாபிஷேகம் நிரகசாரம்போலத் தோன்றியதே என்பார்கள், இச் சொல்லைக்கேட்டுஞ் சாகாத நம்மினும் மனவலிபடைத்தவர் யாரென்பார்கள்; நமது சக்கரவர்த்தியோ கைகேசிமேல்வைத்த காதலினல் கருத்துக்கெட்டா ரென்பார்கள்; சிலர் காமமெல்லாம் சிதாராயகனுடன் காட்டிற்குப்போவோமது அல்லாதல்லாவிட்டால் தீயில்வீழ்ந் தழிவோமென்பார்கள். சிலர் கையால் லெத்தலைத்தட்டிக் கண்ணீரான் மெழுகுவார்கள். சிலர் இச்சொல்லைக்கேட்

டுக் கோசலை தரிக்கமாட்டாளேயென் றெழியாமற் பெருமூச் செறிவார்கள். சிலர் கைகேசி தன்மகனுகிய பரதன் பூமிமுழுதுமாள வரம்பெற்றுளே இவ ளைக் கணிகையென்றேதான் சொல்லவேண்டும். இவள் உள்ளத்தே சுரக்கு மன்புடையவளே யல்லவென்றுஞ் சொல்வார்கள். சிலர் இச்சக்கரவர்த்தி நின்று தவஞ்செய்து தான்றீரவேர்ந்ததுவோ, அல்லது இவ்வுலகத்தில் அருமை யாகிய உயிருடன் வாழ்வானைக்கொன்று களையத்தான் எண்ணிய செய்கை யோவென்றுஞ் சொல்லிக்கொள்வார்கள். சிலர் தான்பிறந்து முழுதுலகாளுஞ் செல்வப்பெருக்கினையுடைய சீராமன் தான்பெற்ற உலகமுழுதும் அவளுக் குக்கொடுத்துவிட்டாலும் நாமெல்லாம் அவனைப் பின்றொடர்ந்து நெருங்கிப் போவோமாயின் அவன்வாழும் காடெல்லாம் நாடாகச் சிலநாளைக்கு ளாக மாட்டாவோ வென்று சொல்வார்கள். இச்சக்கரவர்த்தியை இதுவரையும் சத் தியசந்தனனென் றெண்ணியிருந்தோமே, இவன் முன்னே தன் இராச்சியமுழு தும் சீராமனுக்குக் கொடுத்துவிட்டு இப்போது பரதனுக்கு முறை தவறிக் கொடுத்துவிடுவானுனல் சத்தியந் தவிர்ந்தவனுகமாட்டானே, இவன் அறிவு கெட்டதென்னவகை யென்பார்கள். சிலர்வில்லேந்திய கையையுடைய சீராம னுக்கே கொடுத்துவிட்ட நிலத்தை மற்றுருவர் அனுபவிப்பார்களா! இவன் ஆளப்படாதென்று வஞ்சனையாலடைந்த அறிவில்லாதவளுடைய கைகேசி மகனுகிய பரதனைப்பின் பார்த்துநிற்குமா! சீதை பிரிந்தாலும் செல்வம் சீராமனைவிட்டுப் பிரியாதென்பார்கள். தூண்டாவிளக்கேபோல மாதர்களெல் லாம் நடுங்குகின்றவர்களாய் நமது சீராமனது கடைக்கண்ணேக்கம் பிரியுமோ ஐயோ விதியே என்னசெய்வதென்றுஞ் சொல்வார்கள். இது கிடக்க;

இளையபெருமாளோ தன் சிறியதாயாகிய கைகேசியோ தன் திருத் தமையனுகிய பெருமாளுக்குச் சக்கரவர்த்தி கொடுத்த செங்கோலைத் தன் சொல்லால் வாங்கினுள் என்ற கொடுஞ்சொல்லைப் பொறுமல் ஆலவிடம் போற் கொதித்துப் பிரளயகாலத்தில் தனது பூர்வாவதாரமாகிய அனந்தாழ் வானே யென்றுசொல்ல விளங்கிச் சிங்கத்திற் கிடுஞ் சுவையொடுகூடிய ஊனு ணவை நாயின்குட்டிக் களிப்பதுபோலச் செய்துவிட்டாளே! இப்பேதைக்கு மதிகெட்டது அழகாயிருக்கின்றதென்று கைகொட்டிச் சிரித்து உடைவாள் பக்கத்திற் கட்டிக்கொண்டு அம்புப்புட்டிலை முதுகிற்றுங்கிச் செம்பொற்கவச மணிந்து தன் காவில் வீரகண்டாமணி சத்திக்க வில்லேவளைத்து நாணேற்றி நாணேசையால் உகாந்தகாலத்திற் கடலேழுமொன்றுகக் கோத்துக்கொண்டா லொத்த வோசையுண்டாகவும் தானுந் தன் திருத்தமையனு மல்லாதவர் அவ்வோசையால் நடுக்கமுண்டாகவுஞ் செய்து இனி பூமிதேவி நான் பார மொழிந்தேனென்று சொல்லும்படி என்னுடன் போர்செய்யவந்தோரையெல் லாங்கொன்று அவர்கள் சரீரத்தை யெல்லாம் மலேபோற்குவித்து என் திருத் தமையனுக்குத் தொன்றுதொட்டுவந்த மகுடாபிஷேகஞ்செய்து பார்க்கின் றேன், தடுக்க வலியுள்ளவர்கள் தடுக்கலாம். இது இருக்கட்டும்; தேவர்கள் மனிதர், வித்தியாதரர், நாகர் மற்றும் எல்லாவுலகத்தார்களே வந்தாயினும் இவ்வாழுந்த சிருட்டி திதி சங்காரமென்னும் மூக்தொழிலையுடைய பிரமன்

மால் அரனென்னும் மூவரும் என்னுடன் போர்செய்யவந்தாலும், பெண்ணென்னும் பூண்டில்லாமற் செய்துவிடுவேனென்று மத்தியான சூரியனே போலக் கோபித்து மந்தரகிரிபோல அந்தகரத்தின் மத்தியிற் சுழன்றுகொண்டிருக்கையில் தன்சிறியதாயாகிய சுமித்திரை திருமாளிகையில் இருந்த சீராமபிரான் இளையபெருமாளுடைய வில்லாகிய மேகம் அண்டகோளம் இடியஇடிக்கும் காணேசையாகிய இடியோசையைக்கேட்டு நீருண்டகார்மேகம்போல இன்சொல்லாகிய மழைத்துளி பெய்துகொண்டேவந்து இளையபெருமானை நோக்கி அப்பா! நீயென்ன இளையளவுபோதும் கோபமென்பது குடியிராத மனமுடையவனே யன்றே! நீ விலலைக் கையிலேந்தி யுத்தசன்னத்தனாய் வருவதற்கேது வென்னவென, இளையபெருமாள் பெய்யைக்கெடுத்து முறைதவறிய கைகேசி முன்பாக உனக்குப் பட்டாபிஷேகஞ் செய்யவெண்ணினேன், அதைத்தடுக்கத் தேவர்களே துணிந்தாலும் பஞ்சின்தொடர்நுனியைச் சுடுகின்ற தீயேபோல என் பாணத்தால் அவர்களை யெல்லாஞ் சுட்டுக் கரியாக்கத்துணிந்தேன், என்கையிலேந்தியிருப்பானேயாயின் அதைத் தேவரோயாயினும் விலக்குவதரிது; அப்படி விலக்கத் துணிந்தாலும் என் கைப்பாணத்தால் அவர்களை யெல்லாங்கொன்றுகளைந்து இப்பதினான்குலகத்திற்கும் அரசனாக நானேசெய்கின்றேன் பெற்றுக்கொள்ளென, சீராமபிரானும் நீதியினின்றுந் தவறுத வொழுக்கமாவது உன்னறிவிடத்ததல்லவோ! கருமங்கெட முறைதவறிய கோபமென்பது விளையாதவிடமாகிய உன் மனத்திற்றோன்றக் காரணமென்ன? சொல்லவேணுமென, இளையபெருமாள் நகைத்து இவ்வுலகமுழுதும் உன்னதேயென்று உமது திருத்தந்தைசொல்ல இவ்வரசாளமேற்கொண்டாய்! அதைப்பகையாலிழந்துவிட்டுக் காடுபோகின்றாய் என்றால் எவ்விதமாகத்தான் எனக்கு கோபம்வராதிருக்கும். உன்னிடத்தேயன்பு சிறிது மில்லாதவர்கள் உனையோ வனத்திற்போகச்சொல்ல நான் இவ்வையம்பொறையையுடைய இச்சிறுமனிச வுடமைப்போற்றி வளர்ப்பேனே! நான் முன்னே அரசெல்லாங் கொடுத்துவிட்டுப் பின்பில்லையென்று சொல்லிக் காட்டுக்கனுப்பிய அரசன்போல்வேனேவென, சீராமபிரான் தம்பி! இவ்வரசபாரம் மிகவுங் குற்றமுண்டாக்கு மென்பதெண்ணமல் முன்னே அரசன் இவ்விராச்சியபாரம் கைக்கொள்ளென்று சொல்ல, அதையேற்றுக்கொண்டது என்குற்றமேயல்லவோ! அது அரசன்செய்த குற்றமாகுமோ! நன்னீரில்லாதிருப்பது நதியின் பிழையேயல்ல; இவ்விராச்சியத்தின் பிழையேயல்ல, நம்மைப்பெற்ற தாயினுடைய மதியின் பிழையுமல்ல, பரதன் பிழையுமல்ல, விதியினாலுண்டாகிய பிழையேயாகும். இதற்காக நீ கோபிப்பதென்னகாரியம்! என, கொல்ல னுலைக்களத்தீப்போலப் பெருமூச்செறிந்து மனங்கொதிக்கின்றேன் அதனை யெப்படி நீங்குவேன்; இப்படிப்பட்ட துன்பத்தையுண்டாக்கிய கைகேசியினுடைய மதிக்கு மதியாயும் முதன்மையான வானவர்க்கும் வலிதுமாகிய விதிக்கும் விதியுமாகிய என் வில்லினது தொழிலைக்காணவேண்டுமிறே னென் றிளையவர்சொல்ல, சீராமபிரானும் மறைகளைக்கூறுகின்றகாவல்வாயிலவன் கூறுகின்றாயோ! தன்னையீன்ற தாய்தந்தையரைக் கோபிப்பாரும்

அவனைச் சவித்துக்கொள்வாருமுண்டோ? தாய் தந்தை முதலிய யாவுநீயே எல்லாங்கற்றுவல்லபெரியோனே! இதைநீயாராய்ந்து பார்க்கவேண்டுமென்று கையைமறித்து; வரம்பெற்றவளோ என்னையீன்றதாய், இவ்வரசினைப் பெறுபவனே தம்பி பரதன், அவனே என்தந்தையினுடைய சொல்லாற்பெறுகின்றான், யான்பெறுகின்ற செல்வமோ விரதமாவது; அதினினும் சிறந்தது வேறியாது! நீகோபங்கொண்டாயே! அக்கோபந்தீவது உலகமையலே யறியாத பரதனுகியதம்பியைப் போரிலே தொலைத்தோ? பெரியோரால் புகழப்படும் தந்தையை வாதனைசெய்தோ! அல்லது பெற்றதாயைக்கொன்றே சொலலென, இளையபெருமாள் யாதே பகைவராற் சொல்லப்படுஞ் சொல்லும், இருதோளெனச் சொல்லும்படிச் சோமபிக்கிடக்கும் மலையும் அம்புப்புட்டிலும் கட்டமைந்தவில்லும் சுமக்கப்பிறந்தேன்; நான் கோபித்துநின்றென்னபயன்? என, சீராமபிரானும் எனக்கு நல்லசொற்களைப்போதித்து வளர்த்த தந்தை சொல்லைக்கடந்து இவ்வரசபாரம் பொறுப்பதுதகுதியல்ல, என்சொல்கடக்க வேண்டாமென, அம்மொழிகேட்டு இறைவனுணையால் கடல்கடவாதிருப்பதுபோற் கோபந்துறந்துநின்றான். அப்போது சீராமபிரான் தானும் தன்பாலிருக்கும்மானுரிபோர்த்த மணிகண்டப்பெருமானும்போல அவ்விளையபெருமானைத் தழுவிக்கொண்டு சொல்லின் மாட்சிமையுடைய சுமித்திரை திருமாளிகையையடைந்தான். சுமித்திரையோ தன்கண்போல்பவராகிய மக்களிருவருங் காட்டிற்குப்போகத் துணிந்திருப்பது கண்டு சகியாதவளாய்த் துன்பக்கடற்கோ சொல்லுகாணுமல் மனம்புண்ணுகிப் பூமிமேற்புரளடிழுதாள். அவ்வாறழுகின்ற தாயைத்தொழுதேத்தி, நான் துன்பமென்னும வாளாவாங்கமனந்தேற்றுதற்குத் தக்க காரியஞ்செய்பவனைச் சக்கரவர்த்தியைப் பொய்யனுக்கவேமாட்டேன், காட்டினைச் சிறிதுநாள்கண்டு மீளுகின்றேன். நான் காட்டிற்குப் போனலும் கடற்குப்போனலும வானுலகமே சென்றாலும் எனக் கவையில்லாத் திருவயோத்தியையே யொத்திருக்கும; எனனை யார் வருத்துமியல்பினையுடையார்; நீ மனமவருந்தவேண்டாமென்று சொலலிக்கொண்டிருந்தான். இப்படிசொல்லிக்கொண் டிருக்கிறபோது கைகேசியனுப்பிய தொழுத்தையர் கையில் ம்ரவுரியேந்திக்கொண்டு அழுதுகொண்டே தாங்கொணடுவந்த மரவுரியைக் கொடுத்தனர். அதைக்கண்ட இராமாநுசர் என் திருத்தமையனுனைத் திருவயோத்தியை யிழப்பித்தவர் கொடுத்தனுப்பியவற்றை யெல்லாம் எடுத்தணியப்பிறந்தபெருமானும் நிற்கின்றனன், அவற்றைப் போர்வில்லோடும் காணப்பிறந்தானும் நிற்கின்றேன், அவற்றைக்காட்டவேண்டுமென்று வேண்டினன். சக்கரவர்த்தித் திருமகனர் அவர்தந்த மரவுரியை யாதரத்தோடு மேந்திக்கொண்டு துன்பந்தீரது உடனே செலலவேண்டுமென்று எமது பெருமாட்டி சொன்னுல், அதுவே துணையாமென்று தன் தாயாகிய சுமத்திரையினுடைய அழகிய பாதங்களை வணங்க அவளுஞ் சொல்வாளாயினள்.

உனக்கோ அக்கா டாகாததல்ல நீபோகும் அக்காடு இத்திருவயோத்தியெனவும், பெருங்காதலையுடைய சீராமன் நம்மரசனுகிய தசரதனெனவும், நம்மு பூங்குழலையுடைய சீதையை வையமெலாமீந்தும் போகாத வுயிர்த்தாய

னைவும் எண்ணிச்செல் இவ்விடத்தே யிருப்பாயாயின் குற்றமாம். இவன் பின்னே அடியவன்போல் குற்றேவல்செய்யவேண்டும். தம்பியென்னும்படி நிற்கவேண்டாம், இவன் இத்திருவயோத்தியில் வருங்காலத்தில்வா அப்படியல் லாமற்போனால் அவன்முன்னேமுடியென்று பால்முலைசோரநின்றுசொன்னாள். இவ்வாறுசொல்லவேஇருவரும் தொழுதுநின்றார்கள். அச்சுமித்திரையோ இர ண்டுகன்றுகளைநீங்கிவருந்துகின்ற பசுப்போலவருந்தினள். இராமலட்சுமண ரிருவரும் இடையில் சிலையை யுடித்துப்போயினர். பிறகு தானுடுத்த மரவுரி யைத் தம்பியுமுடுத்துக்கொள்ளச் சீராமன் பாரத்து தேவரும் புகழுங் கீர்த் தியையுடையானே! யான் ஒருறுதிமொழி சொலலுகின்றேன், அதை மறுக்க வேண்டாம், நமது தாய்மாரனைவரும் சக்கரவர்த்தியும்முன்னை நிலைமையுடை யரோவல்லர், கொடுந்துயரத்தில்முழுகியிருக்கின்றார்கள். என்னையும் பிரிந்தார் கள். அவர்கள் துன்பத்திலழுந்தாவண்ணம உன்னை நீயென்பொருட் டுதவ வேண்டுகின்றேனெனத் தம்பியும் தோள்குலுங்காடுக்குற் றுயிர்வருத்தமுற்று யான் உமக்குச்செய்த பிழையாது! நீருள்ளவளையிலு மீனுண்டு அம்மீன யுடைய கடல உலகமுள்ளவளையுமுண்டு பார்க்குமிடத்து காணியொடுகூடிய வில்லையுடைய எமது இறைவனே கானும் என்தாயாகிய சீதையும் ஆரிருந் தால்இருப்போம், எமக்கிதுசொல்லவேண்டும். 'தையல்சொற் கேளேல்' என்ற படி பெண்ணைருத்தி சொற்கேட்டுப் பூமிதேவி யுள்ளகடுங்கவும் காட்டிற்குப் போவென்று சொன்னவன் இன்னும் உயிரோடிருக்கிறான். அவன் சத்தியந்த வறுத அரசனும்! அவன்மகனைபடியால் இப்படிப்பட்டசொல்லை நீர்சொல்லவந் தீர், பின்னும் நீர் காட்டுக்குப் போவதாகக் கேட்டகாலத்தில் எனக்குண்டான கோபத்தினைத் தணியவேண்டுமென்றுசொல்லவே, கானுங்கோபந்தணிந்துநின் றேன். அதனினும் இது கொடியவார்த்தையேயாம்; உலக முழுதுமுடைய செல்வத்தை நீங்கிச்சென்றும் என்னையும கைதுடைத்துப்போக வெண்ணி யிருக்கின்றீரோவென, சீராமபிரானே ஒன்றுஞ்சொல்ல வக்கையறியாதவனாய் இளையபெருமாள் திருமுகமண்டலத்தை நோக்கிப்பார்த்தான். அவனது திருக் கண்களாகிய தாமரை மலரினின்றும் நீர் முத்துகள்போல் வடியக்கணடு வெகு நேரம் நின்றான். இவ்வாறிருக்கையில் இராச சபையினின்றும தன்பால் அன் புடையவராகிய வசிட்டமுனிவ ரெழுந்தருளக்கண்டு சீராமலட்சுமண ரிருவ ரும் தலைவணங்கித் தாழ்ந்தார்கள்; அதைக்கண்ட வசிட்டமுனிவரும் துன் பப்பெருங்கடலிற் காலனைவத்தவராய் அவர் மனத்தையும் முகத்தையு முற் றுப்பார்த்த தல்லது மரவுரியுடுத்த கோலப்பொலிவையுங் கண்டு நாமினி எடுத்துச்சொல்வதென்ன விருக்கின்றதென்று தனக்குண்டான துன்பத்தால் தன்னையும் தனக்கிறைவனையு மறியு மியல்புடையவரா யிருந்தும் மறந்தே போய் வாழ்வையெண்ணிச் செய்யத்தொடங்கிய மகுடாபிஷேகத்திலே தீய வூழின்வலியால் மரவுரிதரிக்க நேர்ந்ததே! எல்லா வுலகங்களையும் படைக்கும் பிரமனுலும் ஊழ்வினை கடப்பதற்கு முடியாதென்றால் விதியைக்கடக்க வொரு வராலு முடியாதே! இதனாலன்றே பெரியோரும் "தாந்தாமுன் செய்தவினை தாந்தமை யனுபவிப்பார் - பூந்தா மரையோன் பொறிவழியே" என்றே சொல்லி

பிருக்கின்றனர். இதுவோ அக்கொடியவளாகிய கைகேசியால் விளைந்தது மல்ல, இவனிடத்தே இவ்வகையான வினையடையத் தகுந்ததுமன்று, இது என்னத்தால் கடந்ததோ, யாருடைய வெண்ணந்தானே செவ்வையாகவே பின்னெருருமுறை தெரியவருமென்று சொல்லிக்கொண்டே வில்லேந்திய செந் தாமரைக் கண்ணையுடைய சிராமபிரானைக் கிட்டிவந்து ஐயனேநீ காடுசூழ்ந்த விடத்தைக் காண்பா யாஞல் உன் தந்தைவீடு காணவேண்டுவது நிச்சய மாய்நினைவேறுமென, சீராமனே அவன் சொன்னசொல்லைச் சிரமேற்கொண்டு கடப்பது எனதுகடமை, அவர் எனது பிரிவால் வருந்துவதைமாற்றுவது உமது கடமை இதுவே முறையென்றுசொல்லி வெம்மையான எல்லையில்லாத காட் டினை யடையென்றனல்லன், பகைவரது அம்பினையொத்த சொல்லைத்தீட் டியவளுக்கு அவ்வரம்பொறுத வேலையுடையசக்கரவர்த்தி சிறிதுமாராயாமல் இவ்வரந் தருவேனென்று ஏற்றுக்கொண்டதுண்டு, அவ்வரங்களைப் பெற்றுக் கொண்டு என் தாயோ என்னைக் காட்டிற்போக ஏவினள், காணே மாதரு வாக்கிய பரிபாலனஞ்செய்ய வென் சிரமேற்கொண்டு செய்யத்துணிந்தேன் எவற்றிற்குஞ் சான்றுகின்ற நீ தடுப்பது தகுமோவெனத் தருமநிலைநிறுத் தத்தேன்றிய தசரதராமன், சர்ப்பப்பரியங்கதுறந்தசானகிமணாளன்சொல்ல, அதைக்கேட்டுச் சித்திரப் பதுமைபோ லொன்றுமுரையாடாமல் தன்கண் களினீர்த்துளிசிந்த நின்றான். அவனது பாதங்களை யலம்போலுந் தோளை யுடைய தாசரதி பொன்னற் செய்யப்பட்ட மதிலையுடைய வாயிலைக்கடந்து மரவுரிதரித்த கோலத்துடன் தம்பி தன்னோடு தொடர்ந்துவர அந்தணர் களும் அருந்தவரும் பூமியையாளுமரசரும் நகரமாந்தரும் நாட்டில்வாழ்வுடை யாரும் கொண்டிருக்கின்ற எண்ணத்தைத்தான் என்னவென்று சொல்வது! தேவர்களும் தமக்கினிவரு முறுதியை பெண்ணைமல்மனம்வருந்தியே நின் றார்கள். இவ்வகையான மரவுரிதரித்த கோலத்துடன் சீராமபிரான்வரக்கண்ட மாதர்க ளெல்லாம் இளந்தளிரால தாமரைமேல்விழும் வண்டுகளைக் கடியும் வகைபோலத் தங்கள் கையால் தங்கள் கண்களை மோதிக்கொண்டார்கள்.

இவ்வாறு நீங்காத அன்பினல் தமமையு மறியாதவராய் மறுமையி விரு வினையை நீக்கவெண்ணியோ அல்லது வருந்துகின்ற தங்களாருயிர் நீங்காமை யாலோ தயரதன்போலச் சிலர் முந்தினர்கள். சிலர் விம்மிவிம்மி மேல்விழுந் தழுதார்கள். சிலர் மேல் எழுந்தனர். சிலர் முகத்தினின்றும் இழிந்த கண்ணி னில் அழுந்தினர்கள். சிலர் அளகமாகிய கொடியில் தீக்கொழுந் தடைந் தாற்போலுந் துயரங்கொண்டார்கள். கரும்பையொத்த சொல்லையுடைய சில மாதர் எலலையில்லாத துயரத்திலழுந்தி மதிமயங்கி யிருப்பதனலோ கண்ணீர் விழாதிருந்தது. கரும்பையொத்த வலிய நெஞ்சுபடைத்திருந்தமையால், அவர் கள் பெரும் பொருளிழந்தார் தன்மையுடையவரா யிருந்தார்கள். உடலோ டுயிர் நிலையினிற்காமல் நெகிழ்ந்தன. இக்கண மிக்கண மென்னுந் தன்மையும் புருந்தன, புறத்திலு மிருந்தன, புண்ணினின்று நீர்வடிவதுபோலக் கண்மலரி னின்றும் நீர்வரண்டி உதிரவாரி பெருகின ; இரண்டு கைகளையுடைய யானை களைப்போலும் எண்ணிலாதவர் பெரிய கைகளாற் பெயர்த்துத் தங்கள்

தலையை விரும்பாதவராய்க் கவந்தத்தின் நிலைமையை யடைந்து ஒருகையிற் கொண்டே யுருட்டுவார்களாய்த் தங்களுடைய சுரிகையாற் கண்மலரைச் சூன்று நீக்கினர்கள். பசியதோணெழுகும் மலர்மாலையைப்போலும் சிந்திய அழகிய மணிகள் சிதறி வீழ்ந்தன; சில மாதர்களது அழகிய முகமும் சந்திரனுக்கு நகையினொளியால் தோற்றன; சக்கரவர்த்தியினது தேவியராகிய அறுபதினாயிரம்பேர்கள் குற்றமற்ற கற்பினையுடையவ ராவார் மழைபோலுங் கண்ணீரைப் பெருக்கித் தன்சிறுவனுகிய சிராமனைத் தொடர்ந்து வானைத்திறந்து கொண்டே எறிகின்ற அலையையுடைய கடல்போலவிரங்கி யேங்கினர்கள். மயில்களுங், குயில்களும், அன்னங்களும் சிறையிழந்து பூமியில் வீழ்ந்து புரண்டாற்போலத் தங்களுக்குச் சிராமபிரா னல்லது தங்களுக்கு உயிர் போன்ற மகனை வேறு பெறுமையால் வீழ்ந்து புறண்டழுதார்கள். கிளி யென்னும் பண்ணினுலும் நரம்பினுலும் நிரம்புகின்ற ஒளியை யுடையன வாய் அளவிறந் துயிர்க் காடுட்டழுந் தன்மையால் தொளைபடுகின்ற குழலினேடு யாழ்க்கு மாதர்களது அழுதினு மினியசொற்கள் தோற்றுப்போயின. அடைக்கலத் தானமாவது கொடியகாடுபோலு மென்று தன் மகனுகிய சிராம பிரான் விஷயமாகவே வருந்துகின்ற மாதாகள் வாய்கள்தோன்றக் கழறுவதனுல் அகன்ற மதிலையுடைய நெடியமனைகளில ஆம்பலகள் பகற்காலத்தில் மலர்ந்த வயலைப்போலும் விளங்கின. முலையாகிய மலையினின்று மிழிந்து மேகலாபரண மணிந்த அல்குற்றடமாகிய கடலிடத்தே புகுந்து கண்ணினின்றும் பெருகிய காட்டாறுமை மேடுபோன்ற குங்குமச்சேறும் சந்தனமும் பலவிடங்களில் சேர்ந்து வண்டலிட்டு முத்துமாலைகளை யிழுத்துக்கொண்டு போயின. விண்ணுலகத்தில் வசிக்கும் இந்திரனுக்கே யாளுலும் தீவினையுண்டானுல் அவனுக்கு வராத இக்கட்டுக ளெல்லாம் வந்தெவிடுகையால் சக்கரவர்த்தியினது மாதனை இதுவனையிலும் காணுத சூரியன் அவர்கள் சிராம பிரான் காடுபோவதனைக் கேட்டு வருந்தி வெளிவந்தமையால் மதிமுகமாகிய தாமரை இன்றுதான் காணப்பெற்றன், தாய்மாரும் பந்துக்களும் அவனைச் சார்ந்தவர்களும் தூதத்தவரும் சமீபத்தவரும் பிறந்த மாதர்களும் தீயில் விழுந்து வருந்துவார்கள் போலத் துன்பமுடையவர்களாய் வாசல்களிலும் முற்றங்களிலும் சூழ்ந்துகொண்டார்கள். இளைத்துக்கொண் டெழுந்தோங்கியெங்கும் அலைகளையுடைய கடல்போல ஆரவாரித்துத் தொடர்ந்து பின்னே செல்லக்கண்டு அவர்களுக்குச் சொல்லுவதை யறியாமலும் ஒழிக்கவறியாமலும் சக்கரவர்த்தியினது திருமாளிகையை நோக்கிக்கொண்டே போய்ப் பட்டாபிஷேகஞ் செய்துகொள்ளப் பொன்றச்செய்த தேரேறிப்பவனிசெல்லக் கண்டவர்கள் காண அத்தெருவழியே மராவுரியைத் தரித்துக்கொண்டு மறுபடியும் அத்தெருவின் வழியேபோனன். அவ்வாறு போகக்கண்ட சிலர் அஞ்சனநிறத்தையுடைய இப்போழகனுகிய சிராமபிரானுக்கடுத்த வஞ்சனையைக்கண்ட பின்னே வகிர்ந்து நீங்காத நெஞ்சினும் உயிர்வலிது! இனிச் சிலவற்றையெண்ணிவிடுவதனு லென்னபயன்! நமதுதலைமேவிடத்தினும்கொடியதென்றே சொல்லிக்கொண்டார்கள். அரசுபெற்று வருவானென்றே யெண்ணி

யிருந்த காம்எண்ணுகின்ற கொடிய சுடுவனத்திற்செல்லக் கண்கள் படைத்துக்கொண்டோம், பெண்ணுகக் கொடிய வினையினல் பிறந்து இங்காட்டில் அவ்வாறு காணப்பெற்ற கண்கொண்டு பிறந்தது அதிலுங்கொடியதென்று சொல்லிக்கொண்டார்கள். சில மாதர்கள் பிறந்து உலகமுழுதுடைய காசு ரதி புலிகள் வசிக்குங் காட்டிற்போய் நான் வாசஞ்செய்வேனெனப் போவதும் அவ்வாறு போகக்கண்டிருப்பதும் அழுவதும் மிகவுமழகா யிருக்கின்றதென்று சொல்லிக்கொண்டார்கள். சில மாதர்கள் நன்மைமுழுதுங் கெட்டுப் போக அறத்தைக் கெடுக்க விரும்பாதவரோ உங்கள் குலமெல்லாம் முழுது மறக்கெடுத்த பரசுராமனை வெற்றிகொண்ட பெருந்திருவாளனுகிய கொண்டல்போலும் நிறத்தையுடைய சீராமபிரானை தங்கள் வலிகெட்டு ஏழையராகி வேந்தனை நோக்கி நிலத்தையாளக்கடந்த கைகேசியோ டொப்பாமென்று சொல்லிக்கொண்டார்கள். சில மாதர் தன் றிருவனையிற் சுற்றிய மரவுரியுடையவனுய் தனக் கொப்பானதில்லாத் துயரத்தால் வருந்துகின்றவனுய் இவ்வளவு பெரியநகரத்திற் றுணையாகச் செல்லுகின்றவன் இருவனைப் பெற்ற உத்தமியாகிய சுமித்திரை மகனுகிய இளையபெருமாளொருவன்றுனை வென்று சொல்லிக்கொணடார்கள். பெரியமலையினும் வலியநமது நெஞ்சினை மழுவாயுதத்தாற் பிளக்கலாமென் றேடுவார்கள். சில மாதர்வழியாவது தங்கள் கண்ணினின்று ஒழுகப்பட்ட நீரால் வெள்ளமாகி யிழுக்குவதனுல கால்வழுக்கி வீழ்ந்து வருந்தினர்கள். சில மாதாகள் பொன்னுபரணங்களையும் இரத்தினபரணங்களையும் உடம்பினின்று நீக்கிச் சுழற்றியெறிந்தார்கள். மின்னலைப்போலத் தோன்றும் தங்கள் உடம்பிலணிந்த விலையேறப்பட்ட பலவகை நிறங்களையுடைய சேலைகளை யெறிந்துவிட்டு நுட்பமாகிய ஆடையைத் தரித்துக்கொள்வார்கள். சில மாதர்கள் நிறைந்த புத்திரசம்பத்துடையவர்களாயினு நெறியேசெல்லும் ஐம்பொறிகள் குறைந்த மக்கள் வருத்தமுற்றுல் அவர்களுக்குத் தங்களுயிரையாயினுங் கொடுப்பார்கள். அரசுக்கேயுரிய திருமகன் காடுபோகத் துணியக்கணடுந் தன் சொல்லைமாத்திரங் காக்கத் துணிந்த இந்தச் சக்கரவாத்தி மனம் இரும்பினும் வலிதென்று சொல்லிக் கொண்டார்கள். சில மாதர்கள் பூங்கொடிபோல் ஒதுங்கிப்பார்த்தார்கள். சில மாதர் அழுதேங்கிய குரலினராய்க் காந்தன் மலர்போன்ற இரண்டு கைகளையும் தலைமேல்வைத்து நின்றுர்கள். மாடங்களில சந்திரன்தவழும் தங்கள் மாளிகைகளினது நிலைகளினின்று பாக்குமாதாகள் சிலர் தனமாகிய மலைகளினின்று மிழிகின்ற ஆலாங்கட்டி நெருங்கிச் சிந்தமலைகளி லடைகின்ற மயினம்போல் மனம் வருந்தினின்றுர்கள். மேகம்போல வகிற்புகையூட்டும் மாளிகைகளினது சாளரவாசலில் வருந்துகின்ற இன்சொல்லையுடைய சில மாதர் தங்களுடைய மைதடவிய கண்களில் நீரருவி பெருக்கெடுக்கக்கூட்டி விருந்தழுகின்ற கிளிபோலப் பலமுறை சொல்லி யழுதனர். சில மாதர்களுடைய கண்ணினின்றும் நீர்த்துளி தானாதானையாயொழுகி அம்மாளிகைகளினது தளத்தினின்றும் விழுவதனல் நமது சக்கரவர்த்தித் திருக்குமாரனை நினைந்துவருந்தி அப்பொன்னுலாகியமாளிகைகளும் அழுவனபோன்றிருந்தன.

தண்பமே நின்று தங்களறிவினைச் சூறையாடுவதனல் தாய்மார் தமது மக்களை மறந்தார்கள். மக்கள் தம் தாய்மாரிருந்த விடமறியாமல் வருந்தி மனமுருகிச் சோர்ந்தார்கள். சிகாமரமென்னும பண்கனிந்தாற்போலுஞ் சொல்லியுடைய மாதர்கள் வீதிகளில் நெருங்கிப் பாடப்பதனல் அவ்வெண்சுண்ணதீற்றிய மாடங்களெல்லாம் இயற்கை மணமமைந்த கூந்தலையுடைய திருமகளைத் துறந்தாற்போலும்விளங்கின. மேகத்தையொத்த தங்கள் கூந்தலவிழித்துண்மணிற்புரண்டு விழும்படி பசுந்தளிரேபோன்ற முகத்தையுடைய மாதர்கள் கூட்டங் கூட்டமாகச் சென்றது தாங்க ளணிந்திருந்த ஆபரணங்கள் சிதற அம்பு பட்டுவருந்தும் மான் கூட்டம்போல ஒருபுறத்தே யிருந்தது. மலிபோன்ற வீடுகளில் கொடிக ளசையாதிருந்தன. முரசவாத்திய வோசையடங்கின. பல வாத்திய வோசைகளு மடங்கிப்போயின. மதிற்புறத்துள்ள விதிகளில் அம் மாதர்கள் அழுத கண்ணீரால் பொடியடங்கிப்போயின. சமையற்சாலை புகையிழந்துபோயின. அகிற்புகையைப் பெரிய மாளிகைக ளிழந்தன. கிளிகள் வைத்திருக்கும் கூடுகளில வட்டில்கள் பாலொழிந்தன. குழந்தைகள் வருந்தும்படி மாதர்கள் தொட்டிலாட்டாதிருந்தனா. உயிர் நீங்கினற்போல முகங்கள் பூரிப்பொழிந்தன. மேகங்கள் நீத்துளியொழிந்தன. குதிரைகள் நீரையுடைய இடங்க ளிழந்தன. மதயானைகளும் மலரிற் கள்ளுண்ணும வண்டினம்போல மதக்களிபபொழிந்தன. குடைகள் கிழலைப் பிரிந்தன. நீண்ட கண்ணுள்ள மாதர்களுடையகூந்தலில மலர்பிரிந்தன. வீரகளுடைய கால்களில் வீரகண்டாமணி நீங்கின. காமபாணமும் துணைபிரிந்த அன்றிற் பறவை போல அழல்நீங்கின. குதிரைகள் கிங்கிணிமாலைகளி னிசைநீங்கின. மத்தளங்கள் வாரினற் கட்டப்படாமல தமக்குரிய ஓசைகள் நீங்கின. மேகம போல நெருங்கிச்செல்லும தேரொலி நெருக்க ளெலலாம் நீங்கின. வெள்ளம்போலவே கடலு மோசைநீங்கின. முழவொலி நீங்கின. யாழினரம்போசை நீங்கின. தேவர் கோயில்களில் திருவிழா வொலிநீங்கின. அவ்வியாசவீதி முழுதும் அழுகைக்குரலே மிகுந்திருந்தன. சிலமடுகள் சத்திக்கும பொன்மனையோசைநீங்கின. கலைகள் ஆராயாமையால அவ்வாறே யிருந்தன. நீரிலவாழ்கின்ற பறவைகளும ஓசைநீங்கின. சோலைகளு மவ்வாறே யோசைநீங்கி யிருந்தன. மலர்களில் தேன்பொழியா திருந்தன ; மதயானைகளும அவ்வாறே மதசலம்பொழியாதிருந்தன. வயல்நீ ரொழிந்தன. குழந்தைகள் தாய்மார் கையிலிருந்தும் நீங்கின. ஆகவனீயம் தக்ஷிணாக்கினி காருகபத்திய மென்னும் முத்தீயும் ஆகுதியாக விருக்கின்ற நெய்யைமறந்தன. நன்னெறியிலே நடந்துவரும் அறிவுடையோர் யாவரும் மெய்மறந்திருந்தனர். வேதங்களும் உதாத்தம் அனுதாத்தம் சுவரிதமென்னும் சுரங்கள்மறந்தன. ஆடிக்கொண்டிருந்த மாதர்களழுதனர். அழுதம்போன்ற இனிமையுள்ள சத்த சுரரூபங்களைப் பாடுகின்ற மாதர்களு மழுதார்கள். காயகரோடு பிணங்கிக்கொண்டிருந்த மாதரும் அழுதார்கள். உயிருறத்தழுவிக்கொண்டு காயகனெடிருந்தமாதருமழுதார்கள். யானைகளும் துதிக்கையைநீட்டி நீரைக் குடியாதிருந்தன. குதிரைகள் புல்லுண்டு தின்னுதொழிந்தன. பறவைகளும் தங் குஞ்சுகளுக்கு இரையுதவாதிருந்தன.

இளங்கன்றுக்குக் கறவைப் பசுக்களும் பாலூட்டா திருந்தமையால் கன்று களும் மனமுருகிச் சோர்ந்திருந்தன. கணவருடைய தோள்களைப்போல மாதர்களுடைய தனங்களாகிய இளநீர்களும் சந்தனப்பூச்சில்லாமல் வறுமை யடைந்தன. அக்கணவருடைய முடிகளைப்போல அம்மாதர்கள் கூந்தலில் மலர்முடியாமல் வறுமையடைந்திருந்தன. யானைகள் நெற்றிப்பட்டமாகிய ஆபரணத்தை நீங்கியிருந்தன. வீடுகள் ஆடைமணிகள் துறந்திருந்தன. மதில் கள் கொடிகளில் கட்டப்பட்ட ஆடைகள் நீங்கியிருந்தன. புறுக்கள் தம் பேடைகளை நீங்கியிருந்தன. * இது தீவினைப்பயனுமென்று மனமுருகுவா களும் நல்வினைப்பயனைத் தேடுவார்களுமாகியஇவர்களைப்பற்றிச் சிராமபிரான் காட்டிற்போதலை நோக்கக் காரணமேயில்லை. இன்பத் துன்பமென்னு மிவ் விரண்டின் கூறுபாடுகளையும் சமமாகநோக்கி நிற்கின்ற யோகிகளும் பெருந் துயரமடைந்தார்கள்.

நீங்காத உயிர் உயிர்ப்போடு முடல்பதைபதைத்துவருந்தி யழுகுகெட்டுத் துன்பமதிகப்பட்டு ஐம்பொறிகலங்கத் தயரதன்போல ஆவிநீக்குகின்ற தொத் ததாயிருந்தது அயோத்திமாநகரம்; அழுது தாய்மாரோடு அருந்தவரும் அந் தணரும் அரசரும் புழுதியாடிய உடம்புடையவாய்ப் பக்கத்தே இருக்கக் குற்றமாகிய மரவுரிதரித்துவரக்கண்டு எழுதுகின்ற சித்திரபபாவைபோன்ற சானகியார் மனந்திடுக்கிட்டெழுந்து அழிந்த சிந்தையை யுடையாளாய் இது இன்னதென் றறியாமல் கண்களில் தாரை தாரையாய்க் கண்ணீ ரொழுக இராகவபிராஜனப்பார்த்து யாவராலும புகழப்பட்ட அரசனுக்குத் தீங்கடித்

---

* திக்கு நோக்கிய தீவினைப் பயனெனச் சிறுதை
நெக்கு நோக்குவோர் நல்வினைப் பயனென நோர்வோர்
பக்க நோக்கிலென் பருவர லின்பமென் றிரண்டும்
ஒக நோக்கிய யோகரு மருந்துய ருழந்தார்.

இதன்பொருள். திக்குநோக்கிய தீவினைப்பயனென - ஆதரவுபற்றிய தீவினையின் பயனென்று, சிறுதை நெக்கு நோக்குவோர் - மனநெகிழ்ந் தாராய்வோரும், நல்வினைப் பயனென நோர்வோர் - நல்வினையின் பயனை யாராய்வோருமாகிய இவ்விருவர், பக்க நோக்கிலென் பக்கத்தேநின் றாராய்வதனாற் பயனில்லை, பருவரலின்பமென்ற இரண்டு மொக்கநோக்கிய யோகரும் - துன்பவின்பக் கூறுபாடுகளாகிய இரண்டனையுஞ் சமமாக வெண்ணுகின்ற யோகியரும், அருந்துயருழந்தார் - அருந்துயரத் தழுந்தினர். எ-று.

தன் காலம்வருந்துணையும் புலனுகாது உயிரைப்பற்றி நின்று அதுவந்துழி உருப்ப தாதலான் திக்குநோக்கிய தீவினைப் பயனென்றதென்க. பக்கம் வடசொற் சிதைவு. உம்மை; யிரண்டில் முன்னது முற்று; பின்னது இறந்ததுதழீஇயதனே யெச்சவுறப்பு. தீவினைப்பயன் நல்வினைப்பயன் என்பன பருவர லின்பமென்பன. இன்பத் துன்பக் கூறுபாடுகளை நோக்குவோர் சிராமன் காடுபோனமைகேட் டாங்குவருந்துதலினியதி; இவ்விரண்டனையு நீத்தாரும் அருந்துய ருழத்தலின் 'பக்கநோக்கலென்' என்றும், இன் புந்துன்பக் கூறுபாடுகளைத் துவரக்கெடுத்தார் நிரதிசய வின்பமாகிய வீடுபேற்றினையே நோக்குவார், அவ்வீடுபேற்றை யுதவுவானே சிராமனுகலின் அவனது நீக்கம்நோக்கிய வழியோகரும் வருந்திஞரென்பதுபற்றி யோகருமருந் துயருழந்தாரென்றுங் கூறினர்.

தேதோ ! இத்துயரமுண்டாகக் காரணமென்னசொல்லவேண்டுமென்றுகேட்க, அதைநோக்கிய காகுத்தவம்சோத்தான் என்தம்பியோ இப்பூமிமுழுது மாளப் போகின்றான், நானே தந்தைதாய ரிருவருடைய கட்டளையையுந் தலைமேற் கொண்டு இன்றுசென்று மின்னுமுழக்குமவற்றது தொகுதியுமுடைய மேகங் கள் தவழுகின்ற மலைகள் காடுகள்முதலியவற்றைக் கண்டு வந்துவிடுகின்றேன், இதுவேசெய்தி, நீமனவருந்தவேண்டாமென, சானகியும் தன்கணவன் காடு போய்வரத்துணிந்தானென்றுமமணணிழந்தானென்றும வருந்தாமல் நீவருந்த வேண்டாம்நானுன்னை நீங்கிக்காடுபோய்வருவேனென்ற கொடியசொல்லொன். றையே கேட்டுப் பொறுக்காமல தன் கணவனை நோக்கித் தாய்தந்தையர்சொ ன்னவண்ணஞ் செய்யத்துணிந்தது தகுதியானசெய்கையே ! அவர்கள்நினைக்க நினைக்கமனம்வருந்தி எனை யிங்கேயிருக்கக் கட்டளையிட்டார்களோ வென, சோமபிரான் வலிய அரக்கனைப்போல பெரியமலையிற்போய் வீழ்ந்து இரவில் அழலிற்காட்டிய உருக்கிய அரக்கினைபோன்று அயலாகிய கலலிலேதையும் கடுமையானதன்று ; உன்னுடைய மெனமையான சிவபடுதிறமுள்ள சேவடிப் போதுகள் என, சானகியாரும் பரிவிலலாதமனத்துடன் எனபால அன்புசிறி தும்மில்லாமல் நீங்கிப்போகிறாய் ! ஊழிகாலத்துத் தோன்றுஞ் சூரியனும எரியு மென்றதுவெவ்விடத்தது, அது உன்பிரிவினைப்பாக்கிலு மிகவுருசுடுமோவென, சோமபிரான் அந்தச் சொலலைக்கேட்டதலலாமலும் அச்சானகியார் கருத்து மறிந்து கண்ணினீர்க்கடல லைவிடாமல என்செய்வதென் றெண்ணுகின்றே னென்று சொல்லிக்கொண டிருக்கையில சானகியாத திருமாளிகையினுட் புகுந்து மரவுரி தரித்துக்கொணடு பெருமாளுக்கயலாக வந்துநின்றார். இவ் வாறுவரக்கண்டு தாய்மாரும் தோழியாரும் ஆயக்கூட்டத்தவரும் தீயின்மூழ் கினவரை யொத்திருந்தனர். சோமபிரானை சானகியாரை நோகதி நீயும் என் னுடன் வரத்தொடங்கினையையால் எலலையிலலாத துன்பத்தைத் தருவ தற் கிடமாகுமென்றான். சானகியாரும் பொருந்தி நின்ற துயரமிதான்று தானே,என்னை நீங்கியிருந்ததனல் உமக்கின்பமுண்டாகுமோவென, வேறொன் றும் பேச வகையறியாதவளைய்க் கோசலைராமன நகராந்தரு பாதருங்கலங்கி யழு வழியினை யரிதிற்பெற்று அவ்வயோத்தி நகரத்தின் வீதிவழியே சென் றான். * மரவுரிதரித்துத் திருமகளாகிய சானகி பின்றொடர்ந்துசோக, வலிய வில்லேந்திய கையுடன் இளையபெருமாள் முன்னைசெல்ல, மேகம்போல் பவனுகிய சோமன் போகக்கண்ட அவ்வயோத்திக்குண்டாகிய துன்பத்தைச்

---

* சீரை சுற்றித் திருமகள் பினசெல
மூரி வில்கை யினையவன் முன்செலக்
காரை யொத்தவன் போம்படி கண்டவவ்
வூரை யுற்ற துணர்த்தவு மொண்ணுமோ.

சினைகுற்றித் திருமகள்பின்செல-மரவுரியை யுடுத்துத் திருமகளாகிய சானகி பின் செல்ல, மூரிவிற்கை இளையவன் முன்செல - வலிய வில்லேந்தியகையையுடைய இளைய பெருமாள் முன்செல்ல, காரையொத்தவன் போம்படி கண்ட - கொண்டல்போன்ற சோமபிரான் செல்லுமப்படிகண்ட, அவ்வூரையுற்றது உணர்த்தவும் ஒண்ணுமோ - அவ் வயோத்திக்குளதாகிய துன்பத்தைத் தெரிவிக்கவும் பொருந்துமோ, எ-று.

சொல்லவும் வேண்டுமோ ; நகரமாந்தர் யாவரும் அழுதுவருந்தினர்கள். சீராம பிரான் காடுபோகின்றனெனக் கேட்டுத் தளருஞ் சிந்தையுடையவர்களெல் லாம் அவனை நெருங்கிச்சூழ்ந்து இவன் போவதற்குமுன்னமே நாங்களும் வன வாசஞ் செய்யப்போகின்றோமென்று போரென்ற ஒலியுடன் உடன்போகத் துணிந்தாகள். சீராமபிரானே தன் தாதையிருக்கும் திருமாளிகையை யடைந்து அவனைக்காணுமலே தாய்மாரையெல்லாம்வணங்கி என்தந்தையார் யான்பிரிந்ததனல் மிகத் துயரங்கொண்டு வருந்துவர், அவரைத் துயரமாற்றிக் கொண்டிருங்கோளென்று வணங்கினன். அவர்களும் சீராமபிரானையும் இளைய பெருமாளையும் சானகியாரையும் வாழ்த்தித் தெய்வங்களைநோக்கி இவர்களைக் காத்திரட்சிக்க வேண்டுமென்று வேண்டிக்கொண்டு நின்றார்கள். அவர்களை அரிதில் நீங்கித் தன்முன்னை நின்ற வசிட்டமுனிவரை வணங்கிக்கொண்டே தம்பியும் சானகியாரும தொடர்ந்துவர ஏழகிய தேரேறிப்போனன். இது கிடக்க ;

நகர்நீங்குபடலம்

முற்றிற்று.

கற்புடையாள் தன்கணவனுக்கு முன்னடந்து சேறலொல்லாதாகலின 'சீரை சுற் றித் திருமகள் பின்செல' என்றும், சுமித்திரை இளையவனை நோக்கி 'தம்பியென்னும்படி யன்றடியாரினி னேவல்செய்தி' என்றுளாகலானும், அவன் முன்னடிகினும் பின னடிகே சிறந்தலான், பின்செல்வானேல் அழகில்படட் டேவற்றொழில் சிதையு மாக லானும் 'மூரிவிற்கை யிளையவனை முன்செல' என்றும், பனகப்பாயலுட் பள்ளிநீங்கிப் போய்த்தோன்றிய நல்லற நிறுந்ததேதான்றியே தேவர்களாகிய உழவர்வேண்ட அரக் கர்கள்கொடுமையாகிய கோடையால் வருந்திய அறப்பைங்கூழ்வளர்ப்பான் தன் வாளி யாகிய மழைபொழியக் கொண்டல்போற் செல்பவனுகலின் 'காளையொத்தவன்' என் றும், மேகம் வில்லிட்டு மின்னிட்டுச் சேறன்முறையாகலின் மின்னற்கொடிபோன்ற திருமகளையும் வில்லையுமென்றதன்றி, எவரானும் வேறலொல்லாத மேகநாதனை வெல் லுதலேக்கி மூரியென் றடைகொடுத்தலும், திருமகள் தன் கணவனே டவவயோத்தி நகளை நீங்கலின் அது உலகமுழுதாளும் வேந்தர்பெருமானை யிழந்ததென்பது பற்றி 'ஊளையுற்றதுணர்த்தவு மொண்ணுமோ' என்றுங்கூறினர். ஒன்றும் என்பது மரீஇயது. ஓகாரம் எதிர்மறை. கார் ஊர்எனபன ஆகுபெயர்கள். உம்மை எதிர்மறை.

இனி ஒருசை. சீரைசுற்றித் திருமகட்குப் பின்செல மூரிவிற்கை யிளையவனென் றும், முன்செலக் காளையொத்தவனென்று மமைத்துக் கொள்க. ஏனையவெளி.

திருமகட் கென்பழி நான்காவது தொகுத்தல் பெற்றது ; ஐந்தவித்தானற்றல் என் பழிப்போல. அகர வுகர மகரமெனக் கிடந்த பிரணவத்துள் அகார வாச்சியனுகலிற் சீராமனைக் காளையொத்தவன் என முன்னும், உகாரவாச்சியையாகலிற் சானகியை நடுவ ணும், மகாரவாச்சியனுகிய இளையவனைச் 'சீரைசுற்றித் திருமகட்குப் பின்செல மூரிவிற்கை யிளையவன்' எனப்பின்னுங் கூறியவாறென்க. அவ்வூரொன்றூர் அயர்வ்ரு மமரர்கட் கிறைவனிண்டுச் சிறுமாமனிசனுகத் தன்கண்தோன்றிய பெரு மிதநோக்கி, ஊளை - உருபுமயக்கம்.

தைலமாட்டுபடலம்.

இவ்வாறு இரகுநாயகன் காடுபோகத்துணிந்து பயணப்படவே அச்சக் காவர்த்தியை நீங்காமல் வசிக்குந் தேவிமாரும உயிரிலாமையால் ஓவியங் களுமேயல்லது யாவரும் அவனுடன்போக வெண்ணினர்கள். சீராமபிரானே தான் செம்பொற்றேரின்மேல் அவர்கள் கண்ணீராறுகப் பெருக்கெடுத்துச் செல்லும் அக்கண்ணீர் வெள்ளத்திலதனைவிட்டுக்கொணடே * நட்சத்திரங் கள் பிரகாசிக்கவும் வெயிலொதுங்கவும மேதியுமானும் ஊரிற்பிரவேசிக்கவும், தான் காடுசெல்வதுதரியாமல் சூரியன் அத்தமானமலையிற் பிரவேசிக்கவுஞ் சீராமன் காட்டிற்சென்றான். அநாட்டு மாதாகள் இராமன்பிரிவால கண்ணி னின்றுமொழுகிய நீர்த்துளிபட்டு ஒளியிழந்த அவர்கள்முகமபோலத் தாமரை மலர்களெல்லாம் கூம்பின. அத்தினத்தினிரவோ கைகேயியின் தூய்மை யான மனமானது மந்தரையென்னும் கூனியாகிய தொழுத்தையினது சொல லாகிய விடத்தால் இருணடது போலிருணடது. எங்கும கவுதமமுனிவன் சாபத்தால் இந்திரனுக் குடமபெல்லாங் கணணுகியவாறுபோல்நக்ஷத்திரங்கள் பிரகாசித்தன ; சீராமபிரான் திருவயோத்தியை யகன்று இரண்டுயோசனை தூரஞ் சென்று ஒரு மலர்ப் பூஞ்சோலையை முனிவருடனுந் தமபியுடனு மடைந்து வசிக்கையில் தன்னை யோாயோசனையளவாய் வட்டபாகச்சூழ் ந்து எள்விழுவிடமிலலாமல் எங்கும்பரந்து அச்சோலையின் புறத்தே சேனை சூழ்ந்துகொண்டிருந்தன. அவர்கள் அங்குள்ள நதிக்கரையின் மணற்பரப்பின் கள் மேலும் பசும்புலலின்மேலுமபடுத்துக்கொண்டு உணவுசிறிதுமுண்ணமல் அழுதுகொண்டேயிருந்தார்கள். செந்தாமரைமலரிலநீலோற்பலமலர் அருமபி னற்போலுங் கண்ணையுடைய மாதர்கள் பாலினுனைபோன்ற ஆடையே தமக்

* மீன்புகழ் பெறவெயி லொதுங்க மேதியோ
டான்புகக் கதிரவ னததம் புக்கனன்
கான்புகக காண்கிலே மென்று கல்லதர்
தான்புக முடுகின னென்னுந் தன்மையான.

இதன்பொருள்.—மீன்புகழ்பெற-நாண்மீன் புகழெய்த, வெயிலொதுங்க - வெயில் கரப்ப, மேதியோ டான்புக - மேதியோடாவினம்புக, கான்புகக் காண்கிலமென்று கல்லதர் தான்புக - சீராமன் கானிற்செல்லக் காண்கிலமென்று மலைவழியிற்போக, முடுகினன் என்னுந் தன்மையான் - முடுகிச் செல்கின்றனனென்னுந் தன்மையுடையா னுய், கதிரவன் அத்தம்புக்கனன் - சூரியன் அத்தமானவனையை யடைந்தான். எ-று

உத்தராநாளினது தாயையும் அத்தநாளினது தாயை மேதியு மானுமாகலின் ஒதுங்க மேதியோடாவென்றும் கூறுவாருமுளர். இவன் திருவயோத்தியினின்றுஞ் செல்கை யிற் பிற்பகலாகலின் வெயிலொதுங்கவென்றும், இவன் அக்கானிலிருக்க நாண்மீன் கள் விளக்காக விளங்கலின் மீன் புகழ்பெறவென்றும், பரிதி தன் குலத்தோன்றலக் கானிற் சேறலாற்றுணுகி அத்தமானவனையை யடைதலாற் கான்புகக் காண்கிலமே மென்று கல்லதர் தான்புகவென்றும்,மாலைக்காலம் வந்துழி மேதியுமானுந் தத்தமில்லந் தோறுஞ்சேறன் முறையாகலின் மேதியோடான்புகவென்றுங் கூறினர். தன்மையான் முற்றெச்சம்.

கணையாகத் தூங்கினர்கள். பகற்காலத்திலெல்லாம் வருந்திச்செவிலித்தாயர்கள் தொடைமேல் அரும்பையொத்த தனத்தையும் அம்பையொத்த கணையுண்டகண்ணையும் கரும்பைப்போலும்இன் சொல்லையுமுடைய மாதர்கள் சிலர் தூங்கினர்கள். மணற்குன்றின்மேல மாவடுவைவென்றோத்த கண்ணராகிய மாதர்கள் மடப்பிடிபோலிருக்க, சேவகத்திற றாங்கிக்கொண்டிருக்கின்ற சிறுகண்ணும் புகர்நிறமுமுள்ள யானைகளைப்போல வீரர்கள் தூங்கினர்கள். இவ்வாறு அவரவர்கள் தூங்கிக்கொண்டிருக்குஞ் சமையத்தைப்பார்த்துக் கண்ணுறங்காதிருக்கின்ற சீராமனும் மந்திரி சுமந்திரனையழைத்து எல்லா நற்குணங்களையுமுடைய உன்னல் இனிமேல் நடக்கவேண்டிய காரியங்கள் சிலவிருக்கின்றன. அவைகளைச் சொல்லுகின்றேன், இவ்விடத்திலே என்னைத் தொடர்ந்துவந்தவனைப் போக்குவதே அரிதாயிருக்கும், அவர்களைப்போக்காமல் இங்கேயிருந்து அப்புறம் அழைவைப்பதே கஷ்டம், நானும்தேரேறித் திருவயோத்திக்குபோய்விட்டதாகத்தேன்றீயோதேரைநடத்திப்போவாயானால் அவர்கள் அச்சுவட்டைக்கண்டு நான் திருவயோத்திக்கு வந்துவிட்டதாகஎண்ணுவார்களென, மந்திரி சுமந்திரனும இவ்விடத்தே உன்னைவிட்டு விட்டு இனிமையான உயிர்நீங்கிப்போய் அங்கே அவ்வகையான துன்பத்தைக்காணச்சமைந்தேனே! கொடியதாயினும் தீயவுளமினும கொடியதுபாதிருக்கின்றது! இரும்பையொத்த மனமுடைய நான்சீராமபிரானைத்தன்தேவியோடும் திருத்தம்பிதொடரப்பூஞ் சோலையினிடத்து விட்டுவந்தேனென்பேனே! சீராமனை என்னுடனேயழைத்துக்கொண்டு வந்தேனென்பேனே! * தாருடைய மலரினு மொதுங்கத்தகாத வாரணிந்த தனத்தையுடைய சானகியோடும் உமது மக்களைப் பாதசாரியாக நடக்கச்செய்தேன், நானே பழமையான சிங்கவாஞ்சை யுள்ளவனையிருந்தும் அவர்களை விட்டுவிட்டு நான்மாத்திரம் தேரேறி வந்தேனென்பேனே! சக்கரவர்த்தியினிடத்தே நீ சொன்னசொல்லைச் சொல்ல யமதூதனைப்போற் போவேனே, நான்கு திசைகளிலுள்ள சனங்களும் நகரமாந்தரும் சீராமனைத்

* தாருடை மலரினு மொதுங்கத் தக்கிலா
வாருடை முலையொடு மதுகை மைந்தனைப்
பாரிடைச் செலுத்தினேன் பழைய ணன்பினேன்
தேரிடை வந்தனென் றீதிலே னென்கோ.

மாலையாகத் தொடுத்த மலரினு மொதுங்கத்தகாத வாரணிந்த முலையையுடைய சானகியாரோடும் பேராற்றலையுடைய மக்களைப் பாரிடைச் செலுத்தினேன் தொன்று தொட்டுவந்த நண்பினையுடையேன் தேரில் தீதிலனெனி வந்தேனென்பேனே. எ-று.

ஆய்ந்து மாலையாகத்தொடுக்கப்பட்ட மலரும் இறைவி நடக்கப்பாதங்களை வருத்துமாகலின் தாருடை மலரினு மொதுங்கத்தக்கிலா முலையொடுமென்றார், 'அனிச்சமு மன்னத் தின்றூவியு மாதரடிக்கு நெருஞ்சிப்பழம்.' என்றாராகலின், தக்கிலா முலையென்றமையைக்க. முலையாகுபெயர். தொன்றுதொட்டுவந்த நண்புடையனை யிருந்தும் அதைக்கருதாது விடுத்துவந்தமையான் பாரிடைச்செலுத்தினேன் பழைய நண்பினேன் என்றும், அவர்கட்குத் தீதிழைத்தே மீண்டேனென்பது தொன்றுத் தீதிலேனென்கோ வென்றுங் கூறினார். என்கு குவ்வீற்றுத்தன்மைமுற்று. உடைய இரண்டும் உருபாகுக்கப்பட்டன.

தேற்றி அழைத்துக்கொண்டு வருவார்களென்ற நான் அந்த அரசனிட்டுச் சென்று நீ போய்விட்டாயென்று யமனியொத்து எவ்வாறு சொல்ல இசை வேன், யாகஞ்செய்து அருமையாகப்பெற்ற சிங்கவேறுபோன்ற சீராமன் போய்விட்டானென்று சொல்லு மென்னைப்பார்க்கிலும் கைகேசி நாட்டைப் பெற்றதன்றி நீபோய்விட்டாயென் றுயிரைவாங்காமையால் அவளை கல்லை ளாகத் தோன்றுகின்றதென்று பல பலசொல்லி நின்று அடியற்ற பனைமரம் போல அச் சீராமபிரானது பாதங்களில் வீழ்ந்து புலம்ப, அவனைத் தன் கைகளா லெடுத்துத்தழுவிக் கண்ணீர்துடைத்து வேறுகவிருக்கச்செய்து தரு மமோ முன்னை கீர்த்தியைப்பெருக்கிப் பின்னை உறுதியையுண்டாக்கும். அது இன்பத்தை யுண்டாக்குமென்றுல கல்லதென்றெண்ணித் துன்பம்வருவதா னல் அதைத் துறந்துவிடலாமோ, நான் பிறந்தபின் காடுசெல்லப்பயந்து இவ் வரசர்குலம் தருமத்தினின்றும் தவறியதென்று பேரெடுத்துத்திரிவேனை ! தன் மகனைக் காட்டிற்போகத் தருமநெறிக்காக அனுப்பினனென்பது என் தந்தையாகிய தசரதனுக் கருந்தவம், அவன்சொல்லைப் பரிபாலிக்கவே காட் டிற்குப்போய் வாசஞ்செய்வ தெனக்குப் பெருந்தவம், இதற்காக நீ மனம வருந்துவது தகுதியான காரியமல்ல, நீ முற்பட்டு வசிட்டமுனிவரிடஞ்சென்று என் வந்தனைமுதலிய யாவுஞ்சொல்லி யென் தாயை எப்பொழுதும் தேற் றிக்கொண்டிருக்க வேண்டினனென்றுசொல்லவேண்டும. என்தாயினுல தீமை நேர்ந்ததாகச் சிறிதும் மனத்திலெண்ணுமல் என்னிடத்தில் எவ்வளவு அன்பு வைத்திருந்தாரோ அவ்வாறே என்தமபியிடத்தும அன்புவைத்திருக்கவேண் டினனென்று சொலலவேண்டும, என்தாயினது துயரத்தை வசிட்டமுனி வரை யழைத்துக்கொண்டுபோய் ஆற்றிவிட்டுப பதினன்குவருடங் கழிந்த பிறகு வருவானென்றுஞ் சொல்ல வேண்டுகின்றேன், எனைப்பெற்ற தாய் மார் மூவருக்கும் என்னுடைய வந்தனைவழிபாடுகளைச் சொலலிவிட்டு என் தந்தைக்கு இதஞ்சொல்லிக்கொண்டே அவனைவிட்டுப் பிரியாதிருக்க வேண்டு கின்றேன், இவைகளை நான் சொலலவேண்டியவைகளென்று சீராமன் சொல் லக்கேட்டு, சீராமனை வணங்கி உயிர்நிலை உளுத்வினையின் வசமையென்றெண் ணிச் சானகியானை வணங்கி நிற்க, சானகியாரும என்னுடைய வந்தனைவழி பாடுகளைச் சக்கரவர்த்திக்கும மாமிமாருக்கும முறையாகச்சொல்லவேணடும, என் தங்கைமானை நோக்கி நான் வளர்த்துக்கொண்டிருந்த நாகணவாய்ப் பற வைகளையும் கிளிகளையும் காப்பாற்றக் கேட்டுக்கொணடாளென்று சொல்ல வேண்டும் என, இவ்வாறு சொல்லக்கேட்டுத் தீங்குநேரிட்டால் யார் உயிர் துறக்கவல்லவர் ! இது இலேசான காரியமுமல்ல வென்றழுதுநின்று சீராமனை வணங்கி இளையபெருமாளைநோக்கி நீர்சொல்லவேண்டியதைச்சொல்லவேண்டு மென்றான். அதற்கவர் தானே வலியவழைத்துச்சொல்லிஎம்மரசனுக் குறுதி யாக்கிய இராச்சிய லட்சுமியைத் தவிர்த்து தான் வேறுருமனைவிக்கே கொடு த்த அரசனைச் சத்தியசந்தனனென்று இன்னுஞ் சொல்விநிற்பதோ, காட்டிற் சென்ற கன்னரும்புதல்வன் காய் கனிகளையுண்ணத் தான் நாட்டிலிருந்து கொண்டு அறுசுவையோடுங்கூடிய உணவைத்தின்ன விரும்பிய பெரியிலாத

அரசனுக்குடம்போடுகூடிய உயினைக்கொண்டு இன்னும்போய் வானடையாத வலிமையைச் சொல்லவேண்டும், மேலும்* அப்பரதராசனுக்கு சீராமனோடு கான் பிறந்திலேனென்றும், மண்ணைக்கொண்டாளுந் தன்னோடு பிறந்திலே னென்றும், தம்பிக்கு முன்னேனல்லே னென்றும், என்னுடன் பிறந்த யானே சுகமா யிருக்கின்றே னென்றுஞ் சொல்லவேண்டுமென்று வருந்திக் கூறக் கேட்ட சீராமபிரான் இளையபெருமாளைநோக்கி ஐயனே! இவ்வகையாகச் சிறப்பில்லாத சொற்களைச் சொல்லவேண்டாமென்ற பின்னே மந்திரியாகிய சுமந்திரன் சீராமபிரானை வணங்கி மனமபதைபதைத்துத் தேரினிடஞ்சென்று குதிரைகளைப் பூட்டிக்குதிரைகள் போனவழியையுங்காட்டித் தன்கல்வித்திறத் தால் ஒருவருமறியாவண்ணம் திருவயோத்திக்குச் சென்றான்; சீராமபிரா னுந் தம்பியோடும் சானகியாரோடுமே தன்வில்லே துணையாக அந்நடுராத்திரி யில் அச் சோலையைவிட் டகன்றுபோனான்.

இவ்வாறு செல்கையில் பொய்வினைக்குதவும் வாழ்க்கையை யுடையவ ராகிய அரக்கர்களைப் பொருந்தி அவர்கள் செய்யும் காரியத்துக்குதவு கட்பி னுற் போவானைத் தடுப்பதொத்திருக்கும் கரிய மைவிளக்கியதேயொத்த இரு ணீங்காமையால் அதுகைவிளக்கெடுத்துக் காட்டியதேபோலச் சந்திரோதய மாயிற்று. சீராமன் மூங்கிலடர்ந்த காட்டிற்செல்லும் வறுமையையெண்ணிச் செங்கழுநீரும் தேமபிக்குவிந்து சாய்ந்துபோகவே, சானைப்பாமபின் தலை யைப்போலப் பரிந்து சாய்ந்து குவிந்தன.

---

* மின்னுடன் பிறந்தவாட் பரத வேந்தற்கு
மன்னுடன் பிறந்திலென் மண்கொண் டாள்கின்ற
தன்னுடன் பிறந்திலென் றம்பி முன்னலென்
என்னுடன் பிறந்தயான் வலிய னென்றியால்.

மின்னுடன்பிறந்த வாட்பரத வேந்தற்கு - மின்னலோடு தோன்றுகின்ற வானை யுடைய பரதராசனுக்கு, மன்னுடன் பிறந்திலென்-சீராமபிரானோடு யான் தோன்றினே னல்லேன், மண்கொண் டாள்கின்ற - மண்ணைப்பெற் றாள்கின்ற, தன்னுடன் பிறந்தி லென் - அப்பரதராசனோடுந் தோன்றினே னல்லேன், தம்பி முன்னலென்-சத்துருக்க னுக்கு முன்தோன்றினே னல்லேன், என்னுடன் பிறந்த யான் வலியனென்றி - என் னுடன் தோன்றிய யானே சுகமா யிருக்கின்றேனென்று கூறு. எ-று.

பரதவேந்தற் கென்றியென்றியைக்க. மின்னல்தோன்றிய துணைநில்லாது கழி வதனால் இவன் வாளுமென் பேராற்றலின் முன்தோன்ற லரிதென்பார் மின்னுடன் பிறந்தவாளென்றும், யான் என் திருத்தமையனை முடிசூட்டி அவனுக்குக் குற்றேவல் செய்யும் விதியிலேனென்பார் மன்னுடன் பிறந்திலனென்றும், தனக்குரிமையல்லா வரசைத் தாளைத் தொடங்கினமையான் மண்கொண் டாள்கின்றவென்றும், அவன் பிறந்தமையானே தம்மரபு முறைதவறிற்றுகலி னவனைநோந் தோன்றல் மிக்கபாவ மென்றதுபற்றித் தன்னுடன் பிறந்திலை னென்றும், சத்துருக்கன் அவனையே சார்ந் தொழுகுபவனுகலின் யானுமுடன்தோன்றினேனெனப் படுவதனல் பூரியர்வருக்கத்தி லெண்ணப்படுவேனென்பார் தம்பி முன்னலெனென்றும், இவரோ டுறவுபெரிதுடை மையினனல் நிரயத்துன்பமாகவின் அவருறவொழிந்தேனென்பார் என்னுடன் பிறந்த யான் வலியனென்றியென்றுங் கூறினார். ஆல் - அசைநிலை.

இவ்வாறு ஆம்பற்பூவும் மற்ற பின்றமலர்களும் அலர்வதுண்டோ! இவ்வா றிருக்க அஞ்சனமலைபோன்ற அழகுவாய்ந்த சிராமனும அழகன்மேற்குறையாத பொன்போர்த்தாலொத்த இளையபெருமாளும் நடக்க, விற்போலும் புருவத்தை யுடைய சானகியாரது மெல்லிய பாதங்களுக்குத்தக்கபடி சந்திரனைவெண் மையாகிய நூற்பஞ்சினை இடையே பரப்பிறற்போல வெள்ளிய சந்திரிகை யைப்பரப்ப அவர்கள் சூரியன் உதயகிரியை யடையாமுன்னமே தெற்குத் திசையைநோக்கி இரண்டியோசனை கடந்துசென்றார்கள். சுமந்திரனை அழுத கண்ணுஞ் சிந்திய மூக்குமுடையாளைப் மனவருத்தத்தோடு தேரைநடத்திக் கொண்டே ஐந்துநாழிகைக்குள் திருவயோத்தியைக்கண்டு வசிட்டமுனிவனை யடைந்து அவனை மும்முறை வலம்வந்து பணிந்து நடந்த செய்தியெல்லாஞ் சொல்ல அதைக்கேட்டு மனம்வருந்தி நடக்கப்போவதையு மறிந்து கொண்டு இனி அரசன் முடிந்துபோவானென்றுதுணிந்து சிராமனைனென்னசொல்லித் தடு த்தும் பழிக்கஞ்சியே நேர்ந்திலனென்றும், உலகத்தில் விதியினைவெல்லுவார் யாரென்றும்இராசமாளிகைக்குச்சுமந்திரனுடன்போனன். தேரேறிக்கொண்டு சிராமன்வந்துவிட்டானென்று தங்கள்மனமுற்பட்டுச் செல்லப்பரிவேடஞ்சூழ் ந்த சந்திரனைப்போலச் சக்கரவர்த்தினை மந்திரிமாரெல்லாம் சூழ்ந்துகொண்டு தன்கண்ணில்வற்றுதநீர்ப்பெருக்கினையுடையதேர்ப்பாகனதுநிலைமைகண்டே அவர்கள் நிலைமாறி நின்றார்கள். தேர் வந்துவிட்டதெயென்று யாவருஞ் சொல் லிக்கொள்ளவும் சிராமன் வந்துவிட்டானென்றுசக்கரவர்த்தியும்மயக்கந்தீர்ந்து கண்விழித்துப்பார்த்து வசிட்டமுனிவனைநோக்கிச் சிராமன்வந்தானேனென்று கேட்க, அதற் கவனில்லையென் றுணைக்க வாயெழாம லேங்கிநிற்கு முகக்குறிப் பைக்கண்டு சோர்ந்துவிழ இங்கேகின்றும் இவ்வல்லலைக் காண்பதாவென்று வசிட்டமுனிவரபபாற்போயினர். சக்கரவர்த்தியும் தன் தேர்ப்பாகனைப்பார்த் துச்சிராமன் தூரத்திலிருக்கின்றானே சமீபத்தில்வருகின்றானே வென்றுகேட் டனன், அவன் சிராமன் தமபியுஞ் சானகியாருந்தொடரக் காட்டிற் சென்ற னென்றுசொல்லவே தன்னுவி நீங்கித் தன்னை இந்திரன்முதலிய தேவர்களெல் லாம்நெருங்கிச் சூழ்ந்துவரச்சந்திரன்போலுட்பிரகாசத்தையுடையவிமானத்தி லேற்றினெங்கள் பிதாமகன் வந்தானென்றுசொல்லி மனங்களித்துபிரமலோகத் துக்கப்பாலிருக்கும்பரமபதநாட்டிற்கொண்டுபோகச்சென்றான். சக்கரவர்த்தி உயிர்ப்புந்துடிப்புமில்லாததைப்பார்த்துஉருவதீண்டச்சந்தேகித்து அரசனுக் குயிர் நீங்கினதாகவேதெரிந்துகோசலை மனங்கலங்கி வீழ்ந்து புத்திரன்பவர் புத்தென்னு நாகத்தினைநீக்கி மறுமைப்பயனைத் தருவதே யல்லாமல் இம்மை யின்பத்தைத் தருவாரல்லரோ, மக்களைப்பெற் றுயிர்வாழ்கின்றவர்க்கு அவ மான காரியமுண்டோ! இங்கேவந்து பயப்படவேண்டாமென்னுமல் என்மக னென்று சொல்லப்படுபவன் தன்தந்தையைக் கொன்றுவிட்டானே! என்று சொல்லுவாள், அடகைகேசி! உன் எண்ணத்தால் உலகமுழுதும்பெற்றாய், அழி யாத வரமும்பெற்றாய்! அதைப்பெற்றும் அரசனைக் கொன்றாயல்லவோ, உன் எண்ணம் பலித்ததேயென்றுகதறுவாள், தேரிற்சிறந்த சம்பராசுரனைப் போரில் வென்று தேவர்களுக்கெல்லாம் அவர்கள்பதங்களைக்கொடுத்துவாழ்வித்தாயே!

இப்போது அத்தேவர்களோ 'தினைத்துணைநன்றி செயினும் பனைத்துணை யாக் - கொள்வர்பயன் தெரிவார்.' என்றபடி, அவ்வுதவியின் பயனை யறிந்தவ ராகையால் அவர்களுக்கு நல்விருந்தாகச்செல்கின்றுய்! என்று கதறிப்புலம்பி யழுதாள். இவ்வாறு சக்கரவர்த்தியினுடைய பெருந்தேவியாகிய கோசலை யழுதுபுலம்ப அதைக்கேட்ட சுமித்தினையும்மனம்வருந்தியழுதாள். இவர்கள் கூடியழக்கண்டுசக்கரவர்த்தியினது அறுபதினுயிரம் தேவிமாரும்மயிற்கூட்டம் போல் நெருங்கியழுதார்கள்.

மெய்வார்த்தை தவறுமைக்காக உயிரிழந்தும் மகனைப்பிரிந்தும் கடை யோடச் சத்தியசந்தனுகிய சக்கரவர்த்தியினது அழகிய உடம்பைப்பிரியா மல் அழுதுவிடாதிருந்தவர்கள் பித்தமயக்காகிய சுறவெறியும்பிறப்பாகியகடல் கடக்கச்செலுத்திமீண்டகப்பலில் தாமும்போவானையொத்திருந்தார்கள். இவ் வாறு அறுபதினுயிரமனைவியரும் கோசலையும் சுமித்தினையும் வருந்தி யழுது கொண்டிருக்கையில் மந்திரியாகிய சுமந்திரன்போய் சக்கரவர்த்தியினது தன் மையையெடுத்துச்சொல்ல, வசிட்டமுனிவர்கேட்டு மனம்வருந்தி இவருக்குரி மைக்கடன்செய்யும் மக்களோ ஒருவருமிங்கில்லை, நடக்கவேண்டிய காரியத் தைப் பரதன் வந்தாற் பின்னே செய்யலாமென்று பெண்கள் சூழக்கிடந்த சக் கரவர்த்தி திருவுடம்பைத் தயிலமாட்டி அறுபதினுயிரம் பேனையும் அரசனைச் சிதையில்வைக்கும்போது சமுகமனமாவினைக் கட்டளையிட்டுத் தேவிமா ரிருவனையும் இராசமாளிகையில் இருத்திப் பரதனைக்கொணடு வாருங்கோ ளென்று அரசனுணைதீட்டிய சுருளோலை கொடுத்துத்தூதனை கேகயதேசத் திற்குப்போக வனுப்பிவிட்டுத் தான் சுமந்திரனைச் சேனைத்தலைவற்குரிய காரி யத்தைச் செய்துவர வேவிச்சென்றார். இதுகிடக்க;

இங்கே சீராமபிரானைச் சூழ்ந்துகொண்டிருந்தநகரமாந்தரெல்லாம்நடந்து வந்தவருத்தத்தால் வருந்திச் சீராமனை அங்கிருக்கின்றுனென்றே யிருந்து தூங்கிவிட்டுப் பின்பு எல்லாருமெழுந்தார்கள். அவர்கள் கருணையொழுகுகின்ற செந்தாமரைபோலுங் கண்ணையுடைய கொண்டல்போலு மேனிப்பிராட்டைக் காணுமல்மயங்கிக் கண்கள் தம்மைநித்திரைவிளைவித்தேவருத்தமுண்டாக்கின வென்று எட்டுத்திசையுமோட வெழுந்திருப்பார்கள். சிலர் நம்மைத் துன்பக் கடலிலாழச்செய்து போய்விட்டானேயென்று சொல்லிக்கொள்வார்கள். சிலர் நமதையன் செய்கையோ கொடியதென்பார்கள். சிலா இவன்போன தண்டக வனமும் இந்தவுலகத்திலிருப்பதல்லவோவென்று அறிவைச் சுட்டியாராய்ந்து அவர்எறிப்போன தேரினது அடிச்சுவட்டைத்தொடர்ந்துபோவோ மென்பா கள். சிலர் தேரின்சுவட்டைநோக்கி இச்சுவட்டால் நமது திருவயோத்தியே சென்றுன் என்பர். சிலர் கோசலையீன்ற கொண்டனிறத்துக் குழகன்போலு னென்று அச்சுவட்டை யொற்றிக்கொண்டு யாவரு மஞ்சவேண்டா மென்று சொல்லி இடியொடுகூடிய மேகமும் கடலுமொருவழியேசென் றுரவாரித்தாற் போல ஆரவாரத்தோடும் போனர்கள். அவர்கள் சர்ப்பத்தின் வாயிலுள்ள காளுன், காளாமுகன், யமன், யமதூதை யென்னுநான்குபற்களாலுங் கடியுண்ட விடத்திற்கு அவ்விடத்தை நீக்க அருந்தவர் தேவாமுதம்பெற்றுயர்ந்து சீராமன்

மீண்டானென்பதுபற்றி போனபொழுதில் புகுந்த வுயிர்பொறுத்தவனை யொத் திருந்தார்கள். இவ்வாறு வழிக்கொணடி அவர்களெல்லாருமொரோ முகமாகத் திரண்டு செல்கையில் அவலிலை அப்பால் வேறுகச்சென்ற நெறிகாணுமல் சுந்தோஷமே மிகுந்து கடல் உகாந்தகாலத்தில பெருக்கெடுத்துக்கொண்டு மண்முழுதும் புரண்டுவருவதுபோல மதில்சூழ்ந்த திருவயோத்தியை யடைந்து அரசன் பொன்னுலக மடைந்தானென்ற உணமையான செய்தியைக் கேட்டு மனங்கெட்டுபோய் உயிர் நீங்கினனை யொத்திருந்தார்கள். இனி யென்னசொல்வது நமது காகுத்த வம்சாத்தான் காடுபோனனென்பதையே துணிந்து உயிர்நீங்குவதற்குக் காலமல்லாமையாலே அதுவொன்றும் நீங்கா திருந்தது. மன்னவனுக் காகாதவரும வனம்போன மகனுக்காகாதவரும் துன்பமாகிய சிறையினிடத்தி லகப்பட்டிருந்தார்கள். அங்கேயிருந்த வசிட்ட முனிவரும் நாம்பழிக்கஞ்சி யலலதவா வொழிந்ததென்று பல பல நல்லமார்க் கங்களையும் சொல்லிக்கொண்டு தம்மனபபதைப்பு நீங்கினா. திருவயோத் தியோ கடலினடுவே யிருந்துகொண்டும அக்கடலினைக் கடக்காமலிருக்கின்ற வடவாமுகாக்கினிபோல வசிட்டமுனிவா ஆணையைக் கடவாமல துன்பமே வடிவமாய் அத்திருவயோத்தி இவ்வாறிருக்க, மந்திரியாகிய சுமந்திரனைத் திருவயோத்திக் கனுப்பிவிட்டுத் தாமும் தம்பியோடுஞ் சானகியாரோடும் நேராத்திரியிற் சிராமண காடுசெல்வதைச் சொல்லுகின்றோம.

தைலமாட்டுபடலம்

முற்றிற்று.

கங்கைபடலம.

மையோ மரகதமோ கருங்கடலோ நீருண்டமேகமோ இவன்வடிவ மென்று யாவரும் அதிசயித்துச்சொலல உண்டோ இல்லையோவென்று சந் தேகங்கொள்ளு மிடையையுடைய சானகியாரோடுமி இளையபெருமாளோடும் சூரியனொளி தன்மேனியில்விரிந்த பிரகாசத்தின்முன்னே மறைந்துபோக அழகனுகிய சிராமபிரான் சென்று களிய'ன்னமும் மடவன்னமு நடமாடுவன வற்றைக் கண்டான். காமபாணங்களஞ்சையும் அப்பெருமானது அலகினை யுடைய அம்பினையும் அளந்து விடத்தைவெல்லும கண்களையுடையவளா கிய சானகியோ அங்கே தங்கிய களிப்பினையுடையனவாகி இசைபாடுந் தன்மையையுடைய வண்டுகள் தன் குழலைப்போலச் சுழலாநிற்கும் தாமரை களைநோக்கி இறைவனுகிய சிராமபிரானது பாததாமரைகள் சிரிப்பதைக் கண் டாள். இவ்வாறு பார்த்துக்கொண்டே செல்கையில் பிராட்டி தன் விழியைப் போல வயல்களிற் களை களைபவர்தளையினின்றும விட்டெறிகின்ற குவளைத் தொகுதியையும் கருப்பேந்திர முதலானவை பார்த்துக்கொண்டே நடந்து வருவதனுலாகிய இளைப்பறியாதவளாய் நடந்துசென்று சின்னந் தருகின்ற மலர்களைத்தரும் நெருங்கிய நந்தனவனங்களையும் பொற்சன்னங்களை யுடைத் துக்கொண்டுவரும் நதிகளையும் பார்த்து மகிழ்ந்து சூரியனைப்போலும் பிரகா

சிக்கும் இரத்நிறைபரணங்களை யணிந்த பலமாதர்கள் வசிக்கின்ற மருதநிலத் தார்களையும் பல கடந்து வேதாகம சாஸ்திர புராணங்களை நன்முக ஐயந்திரி பற வறிந்தவர் பலரும் வாழ்கின்ற அலையெறியும் கங்கைக்கரையை யடைந்தார் கள். அக்கங்கைக்கரையில் வாழ்கின்ற தவசிகள் யாவரும் யாங்கள் பெறும் பேறுகிய சிராமபிரான் எழுந்தருளிவந்தானென்று களிப்பாய் வரக்கண்டு இல் லறவாழ்வையுடையார் காம்எவ்வாறு பெண்ணிலை லனுபவிக்கும்இன்பத்தைச் சொல்லிமுடியாத வகைபோலத் துறவறவாழ்வினையுடையார் தம்மனத்தால் எண்ணி யாய்ந்தனுபவிக்கும் சொல்லரிய பேரின்பம்போன்றவனும் தெய் வப்பாடலால்சொல்லித் துணியமுடியாத அமுதம்போன்றவனுமாகிய ஞானக் கண்ணுலறியும் சிராமபிரானை ஊனக்கண்ணுற்கண் டுள்ளங்களித்து எதிர் கொண்டு வணங்கி இன்னிசைபாடி மதுரவாரியில்தோன்றிய அமுதமென வனுபவித்து தங்கள் மனையில் வாழ்கின்ற மக்களையென்று நினைக்கு மியல் பினையுடையவராயிருந்தும் அவர்களைக் காணுது தேடிவருந்துகையில் அவர் களை மீண்டுங்கண்டால் எப்படியோ அப்படியே தமக்குரிய இனியதாகிய தவச்சாலையில் அழைத்துக்கொண்டுபோய்த் தம் கண்களினின்றும் பொழி கின்ற ஆனந்தபாஷ்பத்தால அவர்களை நீராட்டி இன்சொல்லாகிய மலர்சூட்டி அன்பென்னு மருமையாகிய அமுதமூட்டி வழியில்வந்த வருத்தத்தையோட் டிக் காட்டிலுள்ளனவாகிய பரிசுத்தமான காயுங் கனியுங் கிழங்குந் திருத்திக் கொணர்ந்துகொடுத்து அக்கங்கைநீரில் நீராடித் தியையோம்பி அமுதுசெய்ய வேண்டுமென்று வேண்டிக்கொண்டார்கள்.

பெண்களில் விளக்கேபோன்ற மானையும் தேவர்கள் துன்பநீங்கத் தஞ் காருத்தனேசெங்கையாற்பற்றிக்கொண்டுதாமரைமலரிலிருக்கும் பிரமன் தன் பாதத்தின்கண் தன்னழகிய கையால் திருமஞ்சனமாட்டிய அக்கங்கையில்நீரா டினன்கன்னித்தன்மை நீங்காத கங்கையுமகதொழுது வணங்கி சொல்லவே யருமையான பாதகங்களை யெல்லாம பூமியிலுள்ளவர்கள் என்னுல் நீக்கிக் கொள்வார்கள், இன்று யான்செய்த பாதகங்களை யெல்லாம் என்னை யின்ற உன்னு னீக்கிக்கொண்டேன். என்று சொல்லிநிற்க, சிராமன் * நாகசங்கண முடைமையாலும், வெண்ணிறக் கங்கைதங்கிய சடையுடைமையாலும், கற் புடைமங்கை காணின்முடுகின்றமையாலும், சந்திரசேகரன்போலும் அக்கங் கையின் அலைநடுவே தோன்றுவதனல் வல்லிசாதக்கொடிபோலும் இடையை

---

* வெங்க ணைகக் கரத்தினன் வெண்ணிறக்
கங்கை வார்சடைக் கற்றையன் கற்புடை
மங்கை காணநின் முடுகின் முன்வகிர்த்
திங்கள் சூடிய செல்வனிற் சேறன்றினன்.

இதன்பொருள், வெங்கண் நாகம் கரத்தினன் - தறுகண்மையையுடைய யானைப் புனழக்கையைப்போலும் நீண்ட கையையுடையானும், வெண்ணிறம் கங்கைவார்சடை கற்றையன் - வெண்ணிறமுடைய கங்கையொழுகும் சடைக்கற்றையை யுடையானும், கற்புடைமங்கை காணநின்முடுகின்முன் - கற்பினையுடைய சானகியார்காண நீராடுகின் முனுமாகிய சிராமபிரான், வகிர் திங்கள்சூடிய செல்வனின் தோன்றினன் - பிறை சூடிய பரமசிவனைப்போலும் விளங்கினன், எ-று.

யுடைய திருமகளோடு முன்னுளில் திருப்பாற்கடலில் தோன்றுகின்ற தன்மை போலும் விளங்கினன். சானகியோ தன் இடைக்குக் கொடிநாணவும், அன்னம் மடநடைக்கொதுங்கவும், தன்பாதங்கள்போன்ற தாமரைகள் நீரிலொளிக்கவும், கண்போன்ற நீரில் ஓடிப்போகவும் நீராடினுள். அக்கங்கையோ தேவர்கட்கெல்லாம் பெருந்தெய்வமாகிய பரமசிவனது கற்றையஞ்சடையில் எருக்க மலராற்றொடுக்கப்பட்ட கோவைமாலையோடு கொன்றைமலரால் மணம்பெறுதிருந்தும் சானகியாரது கூந்தலின் கத்தூரிமணத்தாலும் பூமணத்தாலும் மணம்பெற்றுக்கொண்டு நுனைக்கொழுந் தெழுந்தோங்கித் துவளுகையால் நனைத்தகூந்தலையுடைய மந்தாகினியாகிய அக்கங்கை சானகியாருடைய தனிமையையெண்ணித் தன் கையாகிய அலையைக்கொண்டு நீட்டிச் செவிலித்தாய் போல் நீராட்டினுள். அச்சானகியாரது கூந்தற் கற்றையாகிய மழைக்குலம் நிலநீரிலே தங்கிக்குழைவது கங்கைநதியிலிருந்தும் காவிரிநதியிலிருந்து மிகுந்த நீர்ச்சுழிபோவதை யொத்திருந்தது. அவ்வாறு சுழியிட்டோடுகின்ற மிக்க வொலியுள்ளவாற்று வெள்ளத்தில் தன்கண்ணுகிய சேற்கண்டைகள்புரளத் தான் நீராடி எழுவதனுல் முன்னுளில் திருப்பாற்கடலிற் பிறந்ததை யொத்திருந்தது. முற்காலத்தில் கங்கை அயர்வரு மமரர்கட் கிறைவனுகிய கள்ளமாமாயன்பாததாமரை தீண்டலால் கொடிய பாதகங்களெல்லாம் நீங்கி விளங்குவாளாலுல் இந்நாளில்அப்பெருமானது திருமேனிமுழுதும்பட்டால் இவ்வுலகமானது நரகத்திலழுந்தி வருந்துவதற்கிடமுண்டோ! அக்கங்கைநதியிலுள்ள கட்டங்களிலொன்றில் நீராடி வேதபாரகராகிய முனிவர்கள் வசிக்குமாச்சிரமத்தையடைந்து மெய்யுணர்வுடையோ ருணரும் இறைவனைக்கைதொழுது அக்கினிகாரியமுஞ் செய்துமுடித்துப் பின்பு அம்முனிவர்கள் விருந்துண்டுகளித் திருந்தார்கள். வருந்தித் தான் தரவந்த வழுதத்தையும் அருந்தும் நீரொனத் தேவர்களையூட்டி மகிழ்வித்த சீராமபிரான் விருந்தாகி மெல்லிய இலைமுதலியவற்றையுண்டு விளங்கிநின்றதைப் பார்க்குங்காலத்தில் பெரியோர்

தண்டியாசிரியர் 'ஒருவகைச்சொற்றொடர் பலபொருட்பெற்றி-தெரிதரவருவது சிலேடையாகும்' என்ற மாத்திரையொழியாது 'அதுவே,செம்மொழி பிரிமொழியென விருதிறப்படும்' என்றுராகலின் செம்மொழிச் சிலேடையாகக்கொண்டு வெங்கண்நாகம் கரத்தினன்-தீயைக்காலுங் கண்ணையுடைய நாகமாகிய கங்கணமணிந்த கையையுடையானும், வெண்ணிறம் கங்கைவார்சடை கற்றையன் - வெண்ணிறமுடைய கங்கையை யணிந்த நீண்ட சடைக்கற்றை யுடையானும், கற்புடை மங்கைகாண நின்றுடுகின்றுன் - மலையனையன் பயந்த பாவைகாண இரணியமன்றில் ஆனந்தத்தாண்டவஞ் செய்வானுமாகிய, வகிர்த்திங்கள் சூடிய செவ்வணிற் றேன்றிருவெனவும் கொள்ளக்கிடந்தமைகாண்க. சானகியைக் கற்புடை மங்கை என்றுர்,அது இவ்வாசிரியர் சீராமன் கூற்றுக' அருந்ததியனையாளே' எனப் பிறுண்டுங்கூறலானும்,இவள் கற்பினிலமையை அயோத்தியர் பெருமான்சோதித்தலான்று அக்கற்புநிலைமையால் தீயினின்றுமெழுந்து தீயையுஞ் சுட்டமையானு முணர்க. இனி வெண்ணிறக் கங்கைவார்சடைக் கற்றையனென்புழி வெண்ணிற நீரைக்கையின் ஒழுக்கும் சடையென்னு மறையின் பிரிவினையுச்சரிப்பானுமென் றுரைப்பாருமுளர், அவர்சடைக்குக் கற்றையெனக்கூறல் பொருத்தமை நோக்கிலர்.

பாற்செய்தலை குறையாதென்னும் நிலைமைமேற்கொண்டிருந்தது. அத்தருணத்தில் ஆயிரம் படகுகளுக்குத் தலைவனும் குகப்பெருமானென்னுந் திருநாமமுடையானும்,கங்கையைத் தாண்டுகின்றவர்களுக்குப் படகுவிடுவானும், வில்லேந்திய திரண்ட தோளையுடையானும், துடியுடையானும், நாயையுடையானும், தோலாலாகிய செருப்பணிந்திருக்கும் காலையுடையானும், இருளைப் போலு நிறமுடையானும் தன்பெருஞ்சேனை தன்னைச்சூழ்ந்து மெருங்குவதனல் நீருண்டமேகம் இடியோடெழுந்ததென்னுந் தன்மையுடையானுமாய்ப் புறப்பட்டுக்கொம்பு துத்தரி பம்பை முதலியவற்றை முழக்கிக்கொண்டு வருஞ் சேனையோடுவந்து அவற்றை நிறுத்திவிட்டு திருவயோத்தியினின்று மெழுந்தருளிய வள்ளற்பிரானுகிய சீராமபிரானைக் காணவந்தான். சிருங்கிபேர புரத்திலிருந்து சீராமபிரானைக்காணவந்த வேடுவாபெருமானுகிய குகப்பெருமாள் தன்னையிற் கட்டியிருந்த உடைவாளெறிந்துவிட்டு வில்லுங்கணையுந்துறந்து பேரன்புடையவனுய் இறைவன் எழுந்தருளியிருந்த வாயிலை யணுக, அதைக்கண்ட இளையபெருமாள் நீயாரென்று கேட்க, இளையபெருமாளை யன்பாய்வணங்கி இறைவனே ! நின்பாதங்களைச் சேவிக்கவந்தேன்,காரேை இக்கங்கைக்கரையிற் படகுவிடுமமேடுவாகட்கரசன் என்றுன். இளையபெருமாளோ இறைவனை மும்முறை வலமவந்து பணிந்து இறைவனே ! நின்னைத் தெரிசிக்கவந்திருக்கின்றுன். தன்சுற்றமும் தானும் உள்ளந்தூய்மையுடையான், தாயினும் நலலவன், கங்கைக்கரையில் ஓடம்விடுகின்றவர்கட்குத்தலைவன், சிருங்கிபேரபுரத்திலிருந்து வந்திருக்கின்றுன், அவன்பெயர் குகப்பெருமானென்றுல்லுவார்களென்றுசொல்ல,அதைக்கேட்டசீராமபிரான் அவனையென்பாசொலைழக்க வேண்டுகின்றேன், ஈதேபாவென, இளையபெருமாள் குகப்பெருமாளையணுகி வருகவென்றுசொல்ல அவனும் விரைவிற்சென்று கண்ணனைக்கண்காரப்புரித்து முனக்கனிவொடுமை இருண்டகுஞ்சி மண்ணுறவணங்கி யுடல்வளைத்து வாய்புதைத்துக் கைகட்டிக்கொண்டு நின்றுன், அவனைக் கருணையோடுபார்த்து இங்கேயிருவென்று கட்டளையிட அதைக்கேட்டு மிருக்கையிராமல் பேரன்பே யுருவமுடையவனுய் தேவரீர் பொருட்டுத்தேனு மீனும் திருவமுதுசெய்யத் திருத்திக் கொண்டுவந்திருக்கினறேன், தேவரீர் சம்மதம் யாதென்றுவினவ, இரகுநாயகன் அதைக்கேட்டு சிறுநகைபுரிந்து தன்னருகேயிருந்த முனிவர்களைநோக்கி அரியனவாய் உவக்கும்படி யுள்ளத்து ஆராவன்பு மீதூரக் கொண்டுவந்த பொருள்களென்றல் அது தேவாமிர்தத்தைப் பார்க்கிலுஞ் சிறந்ததல்லவா? நாம் அன்பாற் பரிசித்ததனல் பவித்திரமாம், எமக்குமுரியனவேயாம், இனிதாக நாங்களுமுண்டதனேடொப்பாகுமென்று திருவாய்மலர்ந்தருளிப் பின்னும் குகப்பெருமாளை நோக்கி யான் இன்றிங்கேவசித்து நாளைக் கங்கைக் கரைசெல்ல வுத்தேசித் திருக்கின்றேன், இன்று நீயும் உன் சுற்றத்துடன் சிருங்கிபேரபுரஞ்சென்று நாளைக்காலை உன் படகுகளோடும் வரவேண்டுகின்றே னென்று விடைகொடுக்க,அதைக்கேட்ட குகப்பெருமாள் இரகுவீரனே! தேவரீரை இக்கோலத்தோடும் பார்த்தளன் கண்ணீரங்கைச் சூன்றெடுப்பதுபோல வெடுக்காத கள்ளத்தன்மையுடையேன், இத்

துன்பத்தைப் பார்த்தும் இறவாதிருக்கின்றேன், என்னடிமைத்திறம் நன்று யிருக்கின்றது இனி உன்னைப் பிரியாமலே அடிமைத்தொழில் செய்துவருகின் றேனென்று சொல்லக்கேட்ட சிராமபிரான் சிதையைப் பார்த்தும் தம்பியா கிய இளையபெருமாள் திருமுகத்தைப் பார்த்தும் இவனே நீங்காத பேரன் புடையவனுகு மென்றுசொல்லிக் கருணைபொழியும் கணகளையுடையவனுய் என்பாலன்பு மிகுந்தவனே ! இங்கே யெமமோடிருவென்று கட்டளையிட, அக் கட்டளையையேற்றுத் தானும் இளையபெருமாளைப் போலப் புறக்காவல் செய் துகொண்டு இளையவனைப் பார்த்து பெருமாள் திருவயோத்தியை நீங்கிய காரணம் யாதென்றுகேட்க, தம்பியும் பரிவொடும் அவனுக் காதியோ டந்த மாக வெடுத்துச் சொல்லக்கேட்டுத் துன்பக் கண்ணீர்பெருக ஐயோ ! நில மகள் நோற்றும் நம்மிறைவன் தன்னை யாளப்பெற்றிலளே யென்று நெட் டுயிர்ப் பெறிந்துநின்றுன். சூரியனும் இருட்பகையை யோட்டித் திசைகளை வென்று மேலேநின்று தனித்திகிரியைச்செலுத்தி யுயர்ந்த புகழைநிறுத்தி என்றும் இந்நிலவுலகத்தி லெவர்க்கு முள்ளத்திருந்தானென்று சொல்லவிறந்த சக்கரவர்த்தியேபோல மறைந்தான். இவ்வாறு சூரியன் அந்தமான வனையை யடையவே மாலைக்காலத்திற்குரிய நியமங்களைச்செய்து முடித்துஇரவின்நாண வினுல் தொடுக்கப்பட்ட மாலையைப்பரப்பித் தனையாகியபடுக்கையில் சீதை யும் இரகுநாயகனும் நித்திரைசெய்தனர். வில்லேந்தியகையுடன் இளையபெரு மானும் சிறிதும் கண்ணிமை கொட்டாமல் புறத்தேதகாத்திருந்தனன். புற்றீசல் போலத் தன்னைச் சூழ்ந்துவருஞ் சுற்றமுடைய படகுவிடுவோர் தலைவனுகிய குகப்பெருமாள் தொடுத்த விலலையுடையானும, மனமெதும்பி வருந்துகின் றனும் இமையாத கண்ணையுடையானுமாகிநிற்கும் இளையபெருமா ளியற்கை யையும் இரகுவீரனது இயற்கையையும் பார்த்துக் கணணீராறுகப் பெருக் கெடுக்கநின்றுன்.

இவ்வாறு நிகழ்கையில *சூரிய னுதையமாயினன். இரகுநாயகனும காலைக்கடனை முனிவருடனேசென்று முடித்துக்கொண்டு குகப்பெருமாளை நோக்கி விரைவாகப் படகைக் கொண்டுவரவேண்டு மென்று கட்டளையிட அச்சொல்லைக்கேட்டு மனம்பதைத்து அருவிநீரைப்போற் கண்ணீர்தும்ப உயிர்வருந்துமியற் கையுடையானுகிய குகப்பெருமாள் பெருமாளையும் சானகி யாரையும் திருவடிதொழுது இறைவனைப்பார்த்து நாங்களோ பொய்ம்முறை யில்லாதவர்கள் ; நாங்கள் வசிக்குமிடமோ காடு, நாங்கள் ஒன்றிலும் குறை வுடையரல்ல, வலிமையுமுடையவர்க ளாகையால் உமக்குச் செய்யத்தகுந்த

---

*துறக்கமே முதல வ்வாய தூயன யாவை யேனும்
மறக்குமா நினைய லம்மா வரம்பில தோற்று மாக்கள்
இறக்குநா ளிதுவென் பான்போன் முன்னைநா ளிறந்தான் பின்னுள்
பிறக்குநா ளிதுவென் பான்போற் பிறந்தனன் பிறவா வெய்யோன்.

இ-ள். துறக்கமே முதலாகிய தூயபொருள்கள் யாவையேனு மறக்குமாறு நினை தல் வரம்பகன்றன ; பிரமனுற் படைக்கப்பட்ட மானிடர் இறக்குநா ளிதுவென்று சொல்லப்படுவான்போல முன்னைநாள் அந்தமான வனையில் மறைந்துசென்றுன்,

விதமாகக் குற்றேவல் செய்துவருகின்றோம். இவ்வாறு எங்களைவைத்துக் கொண்டு எங்களிடத்தே யிருக்கவேண்டுகின்றேன், எங்களிடத்திலே தேனும் தினையுமுண்டு, தேவரு முண்ணத்தகு மினிய மாமிசமுண்டு, உமக்குத் துணையாக எங்களுயிருண்டு, விளையாடக்காடுண்டு, நீராடகங்கையுமுண்டு கானிருக்கும் வனையிலும் என் சிருங்கிபேரபுரத்தி லிருக்கவேண்டும், துகிலெப்போலும் தோலிருக்கின்றது; மஞ்சம்போலப் பரணிருக்கின்றது, விளாவாயோடக்காலும் சிலையைக்கொண்டிருக்கும் கையும் உடையோம், ஆகாயத்திலுள்ள பொருளையேனும் கொண்டுவந்து கொடுப்போம், என்னிடத்திற் பன்னீராயிரம்பேர் வேடரிருக்கின்றார்கள். எனக் கவர்கள் குற்றேவல் செய்வார்கள்; அவர்கள் தேவர்களினும் வலிமை படைத்தவர்கள், எங்களிடத்தே வந்து தேவரீர் ஒருநாளைக் கெழுந்தருளி யிருப்பீரேயானல் யான் பெறும்பேறு சொல்லிமுடியாதென்று சொல்ல, அதைக்கேட்ட இரகுநாயகனும் சிறுநகை செய்து பெருங்கருணையோடு நோக்கி நாம் புண்ணியாதிகளி லெல்லாந் தீர்த்தமாடிப் பெரியோரை யெல்லாம் வழிபாடுசெய்து தாயாற் குறிக்கப்பட்ட பத்தினன்கு வருஷமும் போனவுடனே மீண்டு உன் சிருங்கிபேர புரத்துக்கு வருவேமென்றான்.

அக்கருத்தை யறிந்த குகப்பெருமாள் விளைந்துபோய் படகுகொண்டு வருகின்றேனென்று விடைபெற்றுச்சென்று கொண்டுவந்தேனென் றறிவிக்க, சீராமபிரானும் அந்தணர்களிடத்தே தான் விடைபெற்றுத் தம்பியோடும் சானகியாரோடும் அப்படகிலேறி விளைந்து படகுவிடக் குகனுக்குக் கட்டளை யிட்டான். அக்குகப் பெருமாளும் அக்கங்கையில் படகை விளைந்து செலுத்தவே, அது அன்னத்தின் நடைபோலுஞ்சென்றது, சீராமபிரானதுபிரிவுக்குஅவ்வந்தணரெல்லாம் எரியுறுமெழுகா யேங்கி மனம்வருந்தினர். அப்படகேறிச் செல்லையில் சானகியும் சீராமனும் அக்கங்கைநீரைச்-சிந்தி விளையாடினர், அப்படகும் வண்டைப்போலுஞ்சென்றது. அப்படகை மணற்குன்றுகிய முலையை

பிற்றைநாளில் பிறக்குநா ளிதுவென்று சொல்லப்படுவான்போலப் பிறவாத வெய்யோனுகிய ஞாயிறு தோன்றினன். எ-று.

நிரதிசய வின்பம் பயக்கும் வீடுபேறு கருதிநிற்பார் துறக்கமுதலாய யாவையும் கருதலாகாமையின் 'துறக்கமேமுதலவாய மறக்குமா நினையல் வரம்பில' என்றும், நிரயத்துன்பத்தை நோக்கியவழித் துறக்கவின்பஞ் சிறந்ததாகலான் 'தூயனயாவையேனும்' என்றும், உலகிற் பிறப்பிறப்புக்களை ஞாயிற்றி னுதயமு மத்தமனமும் போன்றென உவமை முகத்தான் விளக்குவான் 'தோற்றுமாக்கள் இறக்குநா ளிது வென்பான்போல் முன்னைநா ளிறந்தான் பின்னுள் பிறக்குநா ளிது வென்பான்போற் பிறந்தனன்' என்றும், இவனுக்கு நாடோறும் பிறத்தலிறத்தலியல்பன் றென்பார் 'பிறவாவெய்யோன்' என்று தற்குறிப்பேற்றமென்னு மணிகலம்படக்கூறினர். மறக்குமா நினையலென்பதனை 'கற்றவாகடவான்' என்புழிப் பேராசிரியர் கூறியாங் குணைத்துக் கொள்க. என்பானென்புழிச் செயப்பாட்டுவினை செய்வினைபோனின்றது; இதனை 'இல்வாழ்வானென்பான்' என்புழி என்பானென்பதற்குப் பரிமேலழகர் கூறலானு முணர்க. தோற்றும் தல்வினைக்கும் பிறவினைக்கும் பொதுவான வினையேனும் ஈண்டுப் பிறவினையாய் நின்றது; தொல்காப்பியனெனத் தன்பெயர்தோற்றி என்புழிப்போல.

யுடைய கங்கையும் அந்நீரிலுள்ள இரத்தினங்கள் பிரகாசிக்கவும், தன்பாலுள்ள தாமரைபூத்த அலைபாகியகையினல்தானேயேந்திச்சென்று அக்கரையில்விடுத் தாள். அக்கரையையெய்தியவுடன் சீராமபிரானும் தன்பாலன்புடைய குகப் பெருமாளைநோக்கிச் சித்திரகூடத்திற்குப்போம் வழியாதென்று கேட்க, பத்தி யினல் தன்னுயிரையேனும்கொடுக்கும் போன்பேயுருவமாகிய குகப்பெருமாள் சீராமபிரானைநோக்கித் தேவரீரோடுயான்வரக் கட்டளையானல் இக்காட்டில் செல்லுதற்கருமையான விடங்களிலெல்லாஞ்சென்று பரிசுத்தமாகிய கனியுங் காயுந் தேனும் கொண்டுவந்து கொடுப்பேன. தாங்கள் வசிப்பதற் குறைவிட மமைப்பேன், மலைபோலுள்ள கவலைக் கிழங்கு முதலியயாவுங் கொண்டுவரு வேன், வெகுதூரஞ்சென்று திரிப்பாகிய சலங் கொண்டுவருவேன், யானை வில்லினமுடையேன் பயப்படவுமாட்டேன், நின்னடித்துணை யல்லது வேறு புகலிடமறியே னகையால உம்மைப் பிரிதற்கு மனங்கொள்ளேன், தேவரீருக் குத் திருவுளமேயானல் என் சேனைகளையு முடனேகொண்டு உம்மோடப் போது நீங்காமல்வசிபபேன், சத்துருக்கள் எதிர்ப்படுவாராயின் முன்னே நானிறந்துபடுவேன், உமைமவிட்டுப் பிரியவேமாட்டே னென்று சொல்ல, அதைக்கேட்ட சீராமபிரான் அவனன்புக்கிரங்கி என்னுயிரனையானே! நீயே யென் தம்பி, இச்சேனையை யினமாதனி, இக்கடலருந்த வுலகமுழுது முன்னு டையதே, யாரை உன் தொழிலுரிமையி னுளனவன், இதுவரையிலும் சக்கர வர்த்திக்கு என்னெதிரானகு மகளுடையபினனுஞ்சாலவே நிலைபெற்றி ருந்தது. இனி உனதுரிமை அவனுக்கு ஐசுவரியக்களென்று சொல்லுப்படி சிறக் கும், உன் தம்பியாகிய பரதன் யான் காட்டிலவிக்குங் காலமெல்லாம துன்ப மடைந்துகொண்டே யிருப்பான், அத்தனபமே யலலது பகையென்பன யாவை! நீசென்று திருந்திபபுரமாகிய நகரிலவசிக்கும சனங்களையெல்லாம் என்சொற்கடவாம லாணைவரவேண்டும், எனசொலலைக் கடக்கவேண்டாம், கான் வடதிசைக்குப் போங்காலத்தில் உன்னிடத்தேவந்துபோகின்றேன். திரு வயோத்தியிலுள்ள பந்துவர்க்கங்களைப் பாதுகாக்க, உன் தம்பி பரதனும், இங் குள்ள பந்துவர்க்கங்களைப் பாதுகாக்க நீயுமலலாமல் வேறியாரிருக்கின்றனர். உன்சுற்ற மென்சுற்றமலலவோ! கான் துயரமடைவது தகுதியோ! இச்சிருங்கி பேரபுரத்திலிருப்பவர் என் சுற்றமானகையால் என்சொலலைக் கடவாமற்போய்ப் பாதுகாக்கவேண்டுமென்று சொலல, குகபெருமானும சீராமபிரான் சொல் லிய சொல்லைக்கடவாதவணஞ்சித் துன்பத்தைக்கடக்க முடியாமல் பிரிவென் னும் நோய் கொண்டானென்று சொலலுமபடி சிருங்கிபேரபுரஞ் சென்றான்; சீராமபிரான் சானகியாரும் தமபியும் தன்னைத்தொடர்ந்துவரக் காட்டில் வெகுதூரம் கடந்துசென்றான்.

கங்கைப்படலம்

முற்றிற்று.

வனம்புகுபடலம்.

கீழோர் அடையும் பொதுமாதர் மனம்போல ஈரம் உள்ளது இல்ல தென்று அறிதற்கரிதாகிய இளவேனிற் பருவமானது சீராமபிரான்வரக்கண்டு அழுதமாகிய குளிர்ந்த மேகத்தினது குறியைக்காட்டியதெனச் சொல்லக் கிடந்தது. சூரியனே இளநிலவெரிக்கவும் மரங்களெவ்லாம் நிழலெத்தரவும் மேகம் பனித்துளிவீசவும், தென்றற்காற்றெறு கலந்து மலர்மணம் வீசவும், மயிலினங்கள் தங்கள் சிறகைவிரித்தாடும் வழிகளைக்கடந்துபோகையில் சீராம பிரான் சானகியானை நோக்கி இந்திரகோபம் கொன்றைமலர்களில் தங்கியிருப் பது பொன்னிற்றிணிந்த மணிகளைப்போலத் தோற்றுகின்றனவென்றும், வண் டுகளே பாடுவோராகவும், மழையே வாத்தியமாகவும் கொண்டுநடிக்கின்ற மயில் கள் உன்சாயலைக்காணப் பலகண்களாற் காண்பதுபோ லிருக்கின்றதென்றும், சிவந்த வாயுள்ள பசுங்கிளிகள் சிவந்த காந்தட்பூவிலேறி அதைக்கோதுவது உன்கையிலேந்தி யிருப்பதுபோலத் தோன்றுகின்றனவென்றும், மயிலு மானும் உன்சாயலை நோக்கித் தம்மினமென்று வந்தடைகின்றன வென்றும், குராமல ரும் பிடாமலரும் பூத்திருக்கின்ற விடத்தில துயினீங்கியமயிலொன்றின் தூவி யில் அம்மலர்களின் மணம வீசக்கண்டு துணைபிரிந்த பேடையும் அச்சேவ லோடுபிணங்கித் நிரிகின்றனவென்றும், காந்தளினரும்பைக் கண்ணுற்கண்ட மயில் அதைப் பாம்பென்றெண்ணி யிருக்கிறதென்றும, யானைக்கன்றும் சிங்கக் குருளையும், பகைபற்றுப் பிரிவென்று சொல்லப்படுவதே யில்லாததால் சிறுகை மாக விளையாடுகின்றன வென்றும், பூங்கொம்புகள் எல்லாம் ஆற்று நீரில் மூழ்குவன பெண்கள் நீராடுவதுபோ லிருக்கின்றதென்றும், வண்டுகள் தேகாங் கமலரிலேறித் தூங்குவது பொன்தகட்டில் நீலரத்தினம் பதித்தாற்போலிருக் கின்றதென்றும், தேனை வாயிற்கொண்டு கண்கொள்ளாத களிப்பினால் நாங் கள் வேகமாகவரும் வழியையு மறியாமல ஆண்வண்டுகள் குருடனைப்போல் வர இசைகள் பாடிவரும் பெண் வண்டுகள் வழியறிவிக்கும் கண் போல விளங்குவதென்றும், வேங்கைமலர்கள் அளகத்தின் நீலள்ள நெற்றியி லப்பு கின்ற சின்னமலர்கள்போலச் சிந்துவனவென்றும், தென்றற்காற்று வீசுவதனால பரந்தபராகங்கள் மலைக்கற்களிற்படிவது உன்தனத்தின் தேமலைப்போல விளங் குகின்றனவென்றும், அடியிணைகள் கல்லில் நடக்கப் பொறுக்க முடியாதென் றே மரங்களெல்லாம் இடையிடையே மலர்களைச் சிந்துகின்றனவென்றும், பூங்கொடிகளோடு கொம்புகள் தழுவ்வது உன்னிடைக்கு நாணியோவென் றும், மலர்போன்ற அடிகளையொத்த களிர்களில் தங்கியிருக்கும் வண்டுக ளினைவையென்றும், உன்கூந்தலையே யொத்திருக்கின்றன மேகங்களென்றும், உன்தோளையொத்திருக்கின்றன மூங்கில்களென்றும், பூவும் அரும்பும் சினைய நெருங்கிப் பறவைகள் இடையிடையே யிருக்க பல கிறங்களையுடைய வல்லி சாதக்கொடிகள் அளவில்லாதன நெருங்கி மானினங்களும் மயிலின் கூட்டங் களும் குயிலினமும் வருகின்ற காடுகள் நெருப்பினையொத்திருக்கும்படி, தொழி ல்செய்துள்ள ஆடைகள் அலைபோல் தோன்றுகின்றனவென்றும், சொல்லிக்

கொண்டே சானகியாரோடும்விளையாடிச் சிராமபிரான் எழுந்தருளிப்போகை யில் பொழுதுபோய்விட்டது, இதுபெரியோர்களுக்கு வாசஸ்தானமென்று சொல்லவே சித்திரகூடமென்பது இம்மலையோவென்று சொல்ல, அத்தரு ணத்திலே இவர் வருகையைக்கேட்டு மனமுவந்து நெடுநாள்செய்த தவமீடே றிற்றென்று பாரத்துவாசமுனிவன் அன்பொடுமே இராகவனை எதிர்கொண்டுவந் தான். அம்முனிவனைக் கண்டவுடன் மலர்தூவி மும்முறை வலம்வந்துபணி ந்துநிற்க, அம்முனிவனும் இராகவனை மாரம்போடு மாரபுபொருந்தத் தழுவி அப்பா ; இவ்வுலகமுழுதாளும் பெருஞ்செல்வத்தை விட்டுவிட்டு எங்களைப் போலக் காட்டிற் றவஞ்செய்யத் தமபியோடும் வருவானேனென்று சொல்ல, அதைக்கேட்ட இராகவனும் நடந்தசெய்தியனைத்தையும ஒன்றுமொழியாமல் விண்ணப்பிக்க,பாரத்துவாசமுனிவன் கேட்டு விதிசெய்தகொடுமை! இதைப் போலும் வேறுண்டோ பெருநிலகிழுதி தான பல நோன்புசோற்றும் நீ யரசனுகவிருக்கப் பெறுமற்போயினாள, உனைனச் சானகியு தமபியுநொட ர்ந்துபோகத் தனியேயனுபவிவிட் டேவ்வாறு என்றிகைகுகிய அந்தத் தச ரதன்மனந்துணிந்திருபபான,எனக்கு உலகத்தில்லை துனபவின்பக் கூறுபாடுகள் இருப்பன சகசமே ; கலலிசெய்கைகளுமி பிசெய்கைகளு மிருக்கின்றன, நாம் இங்கிருந்து வருந்துவதுதறற் பபனிலலெயன்று துணிந்து அயோபனைத் தம் மிடத்திற் கழைத்துக்கொணடுபோய் அவர்களிருக்க இடமுதவி அநிதிபூசனை க்கு வேண்டியவற்றைக் குறைவறநடத்திக் காய் கனி கிழங்கு முதலியவற்றை யும் வேண்டியமட்டுங்கொடுத்து இதவார்த்தைகளை அவ்விராம லட்சுமணர் களுக்குச்சொல்லிக்கொண்டு காலங் கழித்து வந்தான். அவர்களும மனக் களிசசியோடு மிருந்தார்கள். அப்படி யிருக்கையில் பொழுது விடியவே அப்பாரத்துவாச முனிவா காலைக்கடனை முடித்துக் கொண்டு சிராமனை யுபசாரமாக அழைத்து தன்னருகேயிருத்தி சலபமூர்த்தியாயும் கனி காய் கிழங்குகள் மிகுதியாயு மிருக்குமிடமிது, தவஞ்செய்வதற்கு வாசயோக்கியமா யிருக்கும். இதைப்பார்க்கிலும தகுநதவிடம் வேறுன்றுங்கிடையாது, கங் கையும் சரஸ்வதியும யமுனையும ஒனறுகக்கலக்கு மிடமாகையால் இதற்குத் திரிவேணிசங்கமம் என்று பெயர். அதனால இதைவிட்டுப்பிரியாமல் வாசஞ் செய்கின்றேன். இது பிரமதேவனாலும் பெறுதற்கருமையான தீர்த்தமாம். இது எங்களைப்போன்றவர் தரத்ததல்ல. இங்கேவாசஞ்செய்வதேதக்கதென்று பாரத்துவாசமுனிவன் சொல்ல, இதுவோ அயோத்திக்கு வெகுதூரமான விடமேயல்ல, இங்கேயே யான்வாசஞ்செய்வேனென்ன அயோத்தி யரத்திலிருக்கும் சனங்களெலலாம்வந்து நெருங்கி வருத்துவார்களென்றன்.

அதைக்கேட்ட பாரத்துவாசமுனிவன் ஆனல் கேட்ட அச்சித்திரகூட மென்பது இதற்குப் பத்துக்காதவழி தூரத்திலிருக்கின்றது. அது தேவர்களும் வணங்குதற் குரியது. தேவலோகத்தைப் பார்க்கிலும் மனோரம்மியமாயிரு ப்பது. நீ மனவிருப்பங் கொண்டிருப்பதறற் போகலாமென்று விடைகொடுக்க, அவனா வணங்கி விடைபெற்று மத்தியான காலத்தில் காளிந்தி நதியைக்கண் டார்கள். அந்த நதியைக்கண்டவுடனே நீறுபூசினந்த அழகிய மேனியையுடைய

இராமலட்சுமண ரிருவரும் சீதையுடன் அந்தியில் நீராடிச் சுவைமிகுந்த காய் கனி கிழங்குகளையுண்டு நீரருந்தி இளைப்பாறினர்கள். பிறகு இளையபெருமாள் இந்தியை யெவ்வாறு கடப்பதென்று அங்கிருந்த மாணைக் கொடியாலும் மூங்கிலாலும் தெப்பங்கட்டித் தன் திருத்தமையனையும் சானகியனையாயும் ஏறச் செய்து தான் அவர்களை அக்கரையைக் கடக்கச்செய்தான். அதைக்கடந்து சீராமபிரான் தன்தம்பியும் சானகியாரும பின்றொடர வெகுதூரம்நடந்து ஒரு பாலைவனத்தை யடைந்தான். இப்படிப்பட்ட பாலைவனத்தைச் சானகியார் கடக்கமாட்டாளென்று நினைந்தபோது சூரியன் சந்திரன்போலக் கதிரைச் சிந்தினன். உலர்ந்த கொம்புகளும தழைந்தன, பக்கத்திலிருந்த கொடுங்கனலும் தாமரைவனம்போ லிருந்தது. வறுத்து விதைத்தாற்போன்றிருந்த பருக்கைக்கற்களெல்லாம் பறித்து விதைத்த மலாபோலிருநதன. பிடுங்கியெறிந்த கொடிகளெல்லாம் இளந்தளிரீன்றன. பெருமபாம்புகளின் விஷப்பற்களும் அழுதஞ்சிந்தின. மேகங்களொனறுசேர்ந்து சூளிர்ந்த நீர்த்துளிகொண்டுவந்து சுமிறின. வேடர்களும் முனிவனைப்போலத் தோன்றினாகள். புலியின்முலைப் பாலை மானினங்களுண்டன. மலைத்துவாரத்திற்கிடந்து வயிறுவெந்து வருந்தும் பாம்புகள் அலலற்படாமல் கடலிடத்தே தங்கியிருந்தாற்போ லிருந்தன. புற்கள் பசுநிறக்கமபளம் பரபபிக்கிடநதாற்போலிருந்தன. மயில்கள் நாடக மாதனைப்போலப் பலவிடங்களிலும நடனஞ்செய்து கொண்டிருந்தன. வண்டுகள் பாணனைபபோலப் பாடிக்கொணடிருந்தன. அகாலமாயிருந்தும் கனிகள்பழுத்தன. நல்லபரிமளம காரணமில்லாமலும் வீசிக்கொண்டிருந்தன. மலர்க்கொம்புகள் அலங்காரம்பெற்ற மாதனைபபோலத் தோன்றின. ஒழுக்கத்தை யல்லாமல் செய்யத்தக்கதவம வேறுண்டாயிருக்குமோ. வேடர்களிருப்பிடம் இருடிக ளிருப்பிடமாயின. பலவிடங்களிலும இந்திரகோபங்கள் தோன்றியிருந்தன. பெடையோடு கூடியிருக்கும குயிலினங்கள் பலவிருக்ஷங்களிலும் தங்கியிருந்தன. இவ்வாறு அவ்விராமலட்சுமணாகள் சீதாபிராட்டியாரோடு வனத்தைக்கடநது சித்திரகூடத்தைக் கணடார்கள்.

வனம்புகுபடலம்

முற்றிற்று.

சித்திரகூடப்படலம்.

கினையும் தேவர்கட்கும் நமக்குமொரு புடையொத்து கின்ற பரிசுத்த ஞகிய சீராமபிரான் சானகிக்கு அச்சந்தனமர மடர்ந்திருக்கும் சித்திரகூட மலையின் சிறப்பையெல்லாம் எடுத்துச்சொலலத் தொடங்கி வாளும் வேலும் விட்டளாவிஞற்போன்ற கண்ணையுடைய மயிலனையாளே! ஏலமுந்தமாலமும் தொடரப்பட்டிருக்கிற இம்மலையிலே தூங்கிக்கொண்டிருந்த யானையும்நீருண்ட காளமேகமும் வேற்றுமைதோன்றுமையால் இன்னதெனத் தெரியா திருப்பதையும், மலையினுச்சியில் குதிக்கின்ற ஆடி அம்மலையில் பச்சையொளி சூழ்வதனல் சூரியன்தேரிற் கட்டியிருக்கும் பச்சைக் குதிரைபோல் விளங்கு

வதையும், யானைகளைப் பசிகொண்டகாலத்தில் விழுங்கிவிடும் மலைப்பாம்புக
ளின் தோலுரி இம்மலையிலுள்ள மூங்கிலைச் சுற்றிக்கொண்டசைவதனல் நமது
திருவயோத்தியிலுள்ள மாளிகைகளின்மேல் அசையும் துகிற்கொடிபோலத்
தோன்றுவதையும், பவளமணித்தடங்களிலும் மற்ற இடங்களிலும் நெருங்கி
கவரிமானினது பானிறமுள்ளவால் அசைவது பவளமலையின்மே விருந்து
வரும் அருவியையொத்திருப்பதையும், இம்மலை சந்திரமண்டலம் வளையும்போ
யெட்டியிருப்பதனல் சந்திரசேகரனைப்போலவும், இமமலையினுச்சியிலிருக்கும்
மணிச்சுடர் அதன்கற்றையிற் சொருகுவதனல சிவபெருமானது சடையிலிரு
க்கும் கங்கையின் தோற்றத்தையும ; இம மலையிலிருக்கும மலைப்பாமடுகள்
மணியொடு விளங்கிய யானை வெங்கைமலரொடு நெருங்கி விளங்கிநிற்பது
நெற்றிப்பட்டமணிந்தனையும், சந்தனமரங்கள் நெருங்கி இமமலையி லிருபபது
சந்திரனைத் தான் செல்லுங்கதியைத் தடுபபதையும், மிகுந்த அன்பினல்
தழைகளைக்கொண்டு வண்டுகளை யோச்சித் தேனை முழையினின்றும்வாங்கி
இளம்பிடிக்கு மதயானை தருவதையும், இறைவன் மாயையிற்புகுந தடங்கின
ணனலும் இந்திரியநிக்கிரகஞ்செய்தவாக்கு மறையாததுபோல ஒளிதனக்கொ
ண்டிருந்தாலும்பளிங்குக்கற்பாறையில நமமுருவந்தெரிகின்ற பிரமுகமாக்களை
யும், தங்கள்கணவனைக்கூடாமலும தங்கள்மனமகொதிக்கபபினைங்கிக்கொணடு
யிருக்க அவர்கள் மனமுருகுமபடி கின்னர மிதுனமென்னும் பறவைகள் பாடு
வதையும், கொடிகள் தாவுகின்ற மூங்கில்கள் தாக்குவதனல் வழிந்திழிகின்ற
தேன்குறவர் கவலைக்கொடிகளைக் கல்லிய குழிகளை நிறப்புவதையும், மிகுந்த
அன்பால் இனிமையாக நடித்த பெண்குரங்கு அருவி னீரைக்கொண் டெறிய
அப்பாற்சென்று ஆண்குரங்கு மின்னு முழக்கு மவற்றது தொகுதியு முடைய
மேகத்தை யுதிர்ப்பதையும், சீறுகின்ற வெங்கதிர் நெருங்கிப் போமமலும் திரியா
மலும் மாறுபடுதலிலலாத மண்டலமாக நிரமபிய மணிகற்பாறை வேறொரு
சூரியனைப் போலப் பிரகாசிப்பதையும் நீலநிறத்தையுடைய ஏண்டின் கூட்டங்
கள் படிந்தெழுதலினல் வளைந்துட னிமிர்வதாகிய வேங்கைமரத்தின் பூங்கொ
ம்புகள் பொன்மலர்சொரிந்து காலில்வீழ்ந்து தொழுதெழுஅதுபோலிருப்பதை
யும், இம்மலையினுச்சியில் தினைப்புனங்காக்கும குறபபெண்கள்குருவியினங்களை
யெறியும் குருவிந்தக்கற்கள் வானில நின்றும நட்சத்திரங்களைப்போல வீழ்வ
தையும், வேடர்கள் மழுவாலெறிந்த அகிற்கட்டைகளின்பசுமபுகைப்படலம் அரி
யவேதங்களையுணர்ந்த பிராமணர்கள் ஆகுதிப்புகையோடு கலந்து மலைக்கொழு
ந்தைப்போலத் தோன்றுவதையும், சுவாக்கலோகத்திற்செல்லுங கங்காநதியின்
மீன்கள் தோன்றிறற்போல நீர்வறணட காட்டாற்றினகண் கூட்டமாகியஇரத்
தினங்கள் பிரகாசிப்பதையும், வித்தியாதரமாதர் தங்கள் நாயகரோடு பிணங்கி
யதனல் பஞ்சளாவிய அவருடைய சிறிய பாதச்சுவடுகள் மேகமளாவிய மாணி
க்கப்பாறையின் மறைவனவற்றையும், செம்மையாகவே மரகதப்பாறையின்
தெரிவனவற்றையும் கொழித்தமணிகளை யடித்து வரும் அருவியோடு இழுத்து
வருவனவாகிய அரமகளிர் கூந்தலிற் கழித்து நீங்கிய கற்பக நறுமலர்மாலையும்,
வேடர் தினைப்புனங்காக்கும் பறையை யெடுத்து ஆண்குரங்கடிப்பதையும்,

பிறையெவெட்டிப் பிடித்து இதற்கிது பிழையென்று அதன் களங்கத்தைத் துடைக்கும் பேதைமையையுடைய வேடப்பெண்ணையும், பலகாலம் தம்கண வனைப் பிரிந்தானென்பதை நமக்கறிவிப்பார்போலக் கறுத்திருண்ட மலைச்சுழ வில் தெய்வப்பெண்கள் படுத்திருந்த தளிராகிய படுக்கைகளையும், வேங்கை மரத்தினும் கோங்கமரத்தினு மூசல் ஆடிக்கொண்டிருந்த வேடப்பெண்கள் பாடிக்கொண் டிருந்த குறிஞ்சிப் பாட்டைக் கேட்டு அசுணமாவருவதையும், மலையருவியில் அரம்பையர் நீராட அவ்வருவிகலனையும் சாந்தும் குங்குமமும், கற்பகமுமாகிய இவற்றினல் பரிமளமுண்டாவதையும், இம்மலையில் சூரியன் மத்தியானத்தில்வர இம்மலைக்குப் பொன்முடிதரித்தாற்போல் விளங்குவதையும், நீலரத்தினக் கற்பாறையில மூங்கிலிற்றேன்றிய முத்தங்கள் சிதறுண்டுகிடப்பன செவ்வானில் தாராகணம்போலத் தோன்றுவதையும், முழுது மலர்விரிய அன்றலர்ந்த முருக்கிடத்தே தெருங்கிய சோலையானது தீப்பற்றிக் கொண்டதுபோலத் தோன்றுவதையும், தொளையைக்கொண்ட தாழ்ந்த தடக்கையாகிய பெரிய துருத்தியால்துக்கி அளவில்லாத மூப்பினராகிய அருந்தவர்க்கு அருவிநீரைக் கொண்டுவருது யானைகள் கமண்டலத்திற் சொரிவதையும், இடுகுகணணினை யுடையவரும் இடர்கின்ற மூப்பினருமாகிய மாதவர் வழிசெல்லத் தங்கள் நீண்டு வளைந்த வாலை நீட்டி யுருகியமனமுடைய ஆண்குரங்கு வழிகாட்டிவருவதையும, பிராமணாகளுடைய ஆகுதிக்கு இயைந்திருக்க, மயில்கள் தம்முடைய தோகையைக் கொண்டு எரியெழுப்புவதையும், பிராமணருடைய மார்பினுக் கிசையாதடிச் சிலம்பிநூல் நூற்பதையும், பெண்குரங்குகள் மாங்கனி கொண்டு வருவதையும், வாழைக்கனிகளை அன்பாய் ஆண்குரங் களிப்பதையும், பன்றி நிலத்திற் கிழங்கைத் தோண்டிக்கொடுப்பதையும், சாமை தினை மூங்கிலரிசி முதலியவற்றை மாதவ ராச்சிரமந்தோறுஞ் சென்று கிளிப்பிள்ளைகள் கொடுத்து வருவதையும், யானையை விழுங்கிவிடும் மலைப்பூம்புகள் படித்தறிந்தவர்போ லடங்கி முனிவர்கள் மிதித்தேறப் படிகள்போ லிருப்பதையும், முற்றத்துறந்த முனிவர்கட்குத் துறக்க நாட்டைக் கொடுக்க ஆகாயத்தைத் தூர்ப்பனபோலப் பிரகாச மிகுந்த விமானங்கள் போவனவற்றையும் வருவனவற்றையும், தம்முடம்பு வருந்துகின்ற பிடியானைகளை அடைந்து ஆண்யானைகள் துதிக்கைகள் நோகாமல் தாங்கி நிற்பதையும், உன்னிடையே மின்னலென் றெண்ணி நாகங்கள் முழையிற்போய்ப் புகுந்து கொள்வதையும், சிங்கக்கர்ச்சனைபோல மேகங்கள் குமுறக்கேட்டு மதயானைகள் வீறிட்டோடுவதையும் பாலென்ற ஓவ்வொன்றையுஞ் சொல்லிக் காட்டிக் கொண்டேபோய்த் தன் வரவைநோக்கி அருமையான முனிவர்கள் எதிர்வரக் கண்டு அவர்களை வணங்கி அவர்களாலுபசரிக்கப்பட்டு அவர்களுக்கு விருந்தாக விருந்தான். இது கிடக்க ;

அப்போது உதயகிரியாகிய திருமால் பகையாகிய இருளென்னும் அவுணர் அழிய அத்தமானகிரியாகிய காலநேமிமேல் சூரியனுகிய சக்கராப் பிரயோகஞ் செய்ததுபோலச் சூரியனும் அத்தமான மலையையடைந் தான். அச்சக்கரம் அவ் வரக்கனுடைய உடம்பில் தாக்கப்பட்டபடியால்

பரந்த உதரம்போலச் செவ்வானம் எங்கும் பரந்தது. அவன் வாயினின்று நீங்கி பூமியில் கோரப்பல்லைப்போலச் சந்திரன் உதயமானான். சூரியன் அஸ்தமானமாகவே எங்களுக்கெல்லாம் முகம்போல விளங்கியிருந்த தாமரைகளெல்லாம் குவிந்தன, நக்ஷத்திரங்களைப்போலப் பிரகாசித்துக்கொண்டிருந்த வெள்ளிய ஆம்பற்பூக்கள் வானைப்போல தடாகங்களில் எல்லாம் மலர்ந்தன. ஆண்குரங்குகளும் பெண்குரங்குகளும் மரங்களைநோக்கிச் சென்றன. யானைகளும் பிடிகளும் சாரலைநோக்கிச் சென்றன, குற்றமில்லாத சகுந்தப்பறவைகள் கூடுகளை நோக்கிப்போயின, இப்படிப்பட்ட சமயத்தில் அறிவினால் நோக்கப்படும் இரகுநாயகன் அதனையநோக்கின்றான். *சில மலர்கள் மலர்ந்தும், சிலமலர்கள் குவிந்துகொண்டுமிருக்க இரகுநாயகனும் சானகியும் இளையபெருமாளும் சந்தியாவந்தனஞ் செய்துகொண்டு மாலைக்காலம் கழிந்தபின் சானகியுடன் தான் திருப்பாற்கடலை வந்திருந்ததென்று சொல்லத்தக்கதாகி இளையபெருமாளால் செய்யப்பட்ட பன்னசாலையிலெழுந்தருளினான். பின்பு அயோத்தியர் பெருமான் மிதிலைநாட்டன்னத்தின் பாதங்களும் இங்கே நடக்கப்பெற்றன, தமபிரைகளை பன்னசாலை கட்டிவருந்தினவென்றால் யாதுமில்லாதவர்க் கியையாதவை யாவையென்று நினைத்துக்கொண்டு இளையபெருமாளைப்பார்த்து கண்ணீர் சொரிந்துகொண்டே இப்பன்னசாலையைக்கட்ட எங்கே கற்றுக்கொண்டாய்! எனக்குச் செல்வத்தைக் கொடுத்த தமதரசன் ஆணையால் காடுவாழும் இராக்கதரை நடத்திச் சூரியனைப்போல விளங்கும் புகழைத் தேடிக்கொள்ள உனக்குத் துன்பம் வெகுநாளைக்குண்டாக்கினை யென்ன, இளையபெருமாள் குறிப்பாகவே துன்பத்திற்கங்குரம் முன்னமே தோன்றியதென்று தெரிவிக்க, அதனைக்கடந்து நடப்பது முடி-

---

*மய்யறு நறுமலர் மலர்ந்த வாஞ்சில
கொய்யுறு நறுமலர் குவிந்த வாஞ்சில
அய்யமே டிளவறகு மமிழ்த னுரைகருங்
கய்களுங் கண்களுங் கமலம் போன்றவே.

குற்றமற்ற நறியமலரிற் சிலமலர்ந்தன, கொய்தற்குரிய நறியமலரிற் சிலகுவிந்தன, சோமபிராமே டிளையவனுக்கும் அழுதன்னவளாகிய சானகியாருக்கும் கைகளும் கண்களும் தாமரைமலர்போற் குவிந்தன. எ-று.

ஆண்டெய்தியது மாலைக்காலமாகலி னன்றே 'மய்யறு நறுமலர்மலர்ந்தவாஞ்சில' என்றும், 'கொய்யுறு நறுமலர் குவிந்தவாஞ்சில' என்றுங் கூறுவாராயினர். அவற்றுள் சில புலரியிலெழுந்து நீராடிக்கொய்த லியல்பாகலின் 'கொய்யுறும்' என்றும், இஃதன்னமல்லாது இன்பநலமொன்றனையே யுணர்த்தற் கறிகுறியாக நின்று மலர்தலின் 'மய்யறும்' என்றும் அடைகொடுத்தும், கமலம் குவித லியல்பாதலின் 'கய்களுங்கண்களுங் கமலம்போன்றவே' என உவமைமுகத்தாற் கூறினமையானே இளையவடே டய்யனுமமிழ்தன்னாளுந் துயில்கொண்டானெனக்கொள்ளின் இளையவன் பதினான்காண்டுந் துயிலாமையின் மாறுகொளக்கூறலாக முடிதலானும், 'பின்னர்ச் சாலவந்தெய்தினை' என்றும், முன்னரே அந்தியை நோக்கினனென்றும் கூறிப்போந்தமையானும், மாலைக்கடன்செய்வான் கைகூப்பிக் கண்முகிழ்த் தாயிரமோலி இறைவனைச் சிந்தித்தானெனக் கொள்ளக்கிடந்தமை காண்க. அமிழ்து-வடசொற்சிதைவு.

யாது என்று அவர்து தன்பந்துடைத்துத் தம்பியைப் பின்னும் பார்த்து அரசச் செல்வத்திற்காயினும் ஒருவாம்புண்டு, இதுவோ சிந்தையுமொழியுஞ் செல்லாநிலைமைத்தாகிய அந்தமி ன்பத்தினையடைய அழிவில்லாச் செல்வமல்லவோ வென்று தெளிவித்துத் தேவர்களும் கைதொழுத் தவஞ்செய்துகொண்டிருந்தான். இனி வசிட்டமுனிவர் கொடுத்த திருமுகத்தைக் கையிலெடுத்துக்கொண்டு கேகயதேசம்சென்ற தூதர் செய்தியைச் சொல்லுகின்றேன்.

சித்திரகூடப்படலம்.

முற்றிற்று.

பள்ளியடைப்படலம்.

தூதுவர்களோ வசிட்டமுனிவர் எழுதிகொடுத்த திருமுகத்தை யெடுத்துக்கொண்டு இரவும் பகலுமடைது கேகயதேசத்தை யடைந்து பரதராசனது திருமாளிகையைச் சேர்ந்து காவற்காரனைநோக்கி நாங்கள் வந்தமையைப் பரதராசனுக் கறிவிக்கவேணுமென்று சொல்லியனுப்ப அவர்களும் இவர்கள் வரவைத் தெரிவிக்கக்கேட்டு அவாகளை வருமபடி கட்டளையிட்டான். அவர்களுஞ்சென்று திருவடிதொழுது நமது அரசா பெருமான் சுகமாமிருக்கின்றனை, எமது பெருமானுகிய இராஜாயகனும் இளையபெருமாளும் சுகமாயிருக்கின்றனரோ வென்ன அவர்களும சுகமாயிருக்கின்றார்க ளென்றுசொல்லதயரதனையும் இராஜாயகனையும் தி பாணித்து அவாகளிருந்த திசைநோக்கிவணங்கிநின்றனன். தூதுவரும அரசாபெருமான் முத்நினையிட்டிருக்கும் திருமுகத்தைக்கொடுக்க,அதைவாங்கிமனமுருகிநோக்கி முடிமேற்சூடிக்கொண்டு அதை யவிழ்த்து வாசித்துபபார்த்து அதைக்கொண்டுவந்து கொடுத்த தூதர்களுக்கு வேண்டிய திரவியங்கொடுத்து மயிக்குச்சென்று தன் திருத்தமையனைக் காணவேண்டுமென்னும் ஆசை அதிகப்படத் தன் மாதாமகனுகிய கேகயராசனிடத்தே விடைபெற்றுத் தன் தம்பியோடு மேறி காளுங் கோளுங் குறியாமல் தன்னை யாளை குதிரை தேர் காலாள் என்னும் காலவகைச் சேனைகள் சூழவும் அரசாகூட்டங்கள் புடைசுற்றவும் சங்கத்தானி முழங்கவும் பேரிகைகள் கடல்போ லொலிக்கவும் புறபபட்டு ஆறுமை காடும் மலையும் கடந்து ஏழாகாள் கோசலைநாட்டை யடைந்தான். அத்தேசத்திலோ வயல்கள் ஏர் பூட்டி யுழாமலிருந்தன, வீரர்கள் தோள் மாலையிழந்திருந்தன, வயலிலுள்ள நெல்லும் நீர்பாய்ச்சாமலிருந்தன, திருமகள் தாமரையை நீங்கினற்போல அந்நாட்டை நீங்காதிருந்தாள். பிதிர்ந்து சாறுதுளைகளி லெல்லாம் நெருங்க இனிமையான கனிகளை முதிர்ந்துபோய்க் கொய்வா ரில்லாமையால் சிதர்ந்து சிந்தின, மலர்க்கூட்ட மெல்லாம் உலர்ந்துதிர்ந்துகிடந்தன, ஏய்ந்தகாலமிது இதற்காமென்று ஆராய்ந்து அரியும் மள்ளரில்லாமையால் மாம்பழச் சாற்றினால் செஞ்சாலிமுளைத்தது. கிள்ளைகளும் தூதுசெல்லா திருந்தன, அழகிய வீதிகளில் பேரிகை குடமுழா முழக்கநீங்கியிருந்தன, திருவிழாவு கடக்க

வில்லை. புள்ளாங்குழற் பாட லொழிந்திருந்தன, காடகசாலைகள் ஆடலொழிந்திருந்தன, நீராடுதலும் செய்யாதிருந்தனர்; மாலைகள் சூடாமலிருந்தனர், வீடுகளில மங்கலவள்ளை யென்னும் பாட்டைப் பாடாதிருந்தனர்; முகம் கைகழுவாதிருந்தன, வீடுகளெல்லாம் வாசனைகமழ்கின்ற அகிற் புகையிழந்திருந்தன, விளக்குகளெல்லாம் அழற்றிலை திருத்திருந்தன, மாதர்கள் கூந்தல்கள் மலர்சூடாலே இழந்திருந்தன, அலாத பாயிகள் நீர்செல்லும்வழியிற் சலம் செலலானமையால உலாவிகள் கடைத்தலைவாயிலில் வருந்தும் யாசகர்களை யொத்திருந்தன. இவ்வாறு அதிதிகரம் பொலிவிழந்து ஆவி நீங்கியஉடல்போ லிருந்தது. இவ்வாறு அதிதிகரத்தைப் பார்த்துக்கொண்டு இதென்ன? இங்கே கடந்த தூய்மைசெய்தி யொன்றுங்காணியமில்லையேயென்று நினைத்துத் தான்தியகானகாரியங்கடக விருந்துமென்றுன்று பெருமூச்செறிந்து விளைத்து தேதேரிச்சென்று நகரவாயிலைக்கடந்து நீபுகமுழுதுமேசென்று வருந்துகின்ற யானையால் இங்கே தங்கிபோவென்று சூரியனைக்கிட்டியழைப்பதுபோன்ற கொடியின் கூட்டங்களைக் காலைமலரும் புகழைந்தேடச்சம் பாதித்தபொருள்களை யெலலாம் கொள்ளை கொள்ளுங்கோளென்று அழைப்பதுபோன்ற பேரிகையோசை கேளாமலும், யானைகளையும் பிடிகளையும் செல்வங்களையும் தியாகங் கொடுபோவர் கொடுக்காமலிவர் பெற்றுப் போவதும் பசுக்களையும் யானைகளையும் குதிரைகளையும் செல்வத்தையும் பிராமணர்கள் தானமாக வாங்கிப் போவதும் இல்லாமையைப் பார்த்துக்கொண்டே இது இராசதானிபோ லிருக்கவிலலையே யென்று கம்பிளைபோக்கி இங்ஙகரம் திருகீங்கிய மாநகரம்போல இருப்பதுகாணென்று பரதாழ்வான்சொல்ல; இத் திருநகரத்தில் காக்குண்டான துயரமொருவகையன்று, ஊழிவாழ்நகரம் திருநீங்கிக் கிடக்கின்றதென்று இரண்டு கைகளையும் நிலமேற் குவித்துக்கொண்டு தம்பி வணங்கிச் சொலல பின்பு இருவரும் இராசநீதிகள் எல்லாம் கடந்து தம் பிதா யினிதிருக்கும் மாளிகையை யடைந்தனர். பரதாழ்வான் விருப்பத்தோ டடைந்து அவரிருக்கு மிடமெல்லாம் தேடியும் காணுமல் அருமையா யிருக்கின்றதெனறு ஐயமடைந்து நிற்கையில அவ்வாறு தாதையைத் தேடித்திரியும் பரதாழ்வானை உமது தாயார் அழைக்கின்றனர், எம்மொடு வருகவென ஒரு தோழி யெடுத்துக்கூறலை, அதைக்கேட்ட பரதாழ்வானும் அவ்வாறே தன் தாயிருக்கும் இடத்தையடைந்து அவ்வன்னையை வணங்க, அவனை மார்புறத் தழுவியெடுத்து என் தந்தை தாய்மார் தங்கைமார் சுகமேயிருக்கின்றனரோ! என்று கேட்டனள்; அதற்குப பரதாழ்வானும் அவர்கள் சுகமாவே யிருக்கின்றனரென்று சொல்லிவிட்டு என் தந்தையைக்காண ஆசைகொண் டிருக்கின்றேன், அவர் எங்கிருக்கின்றனர்? கட்டளையிடவேண்டுமென, அதைக்கேட்ட கைகேசியும் சிறிதையில் துயரமேயற்று சம்பரன் முதலிய அசுரனைக்கொன்று குவித்த படைகளையுடைய அவ்வரசர் பெருமான் தேவர்கள் தன்னைக் கைதொழுது வணங்க, சுவர்க்கலோக மடைந்தான்; அதற்காக நீ வருந்தவேண்டாமென்றுள். அச்சொல்லைக்கேட்ட பரதாழ்வான் தன்னை யறியாமல் உயிர்ப்படங்கி இடியால் மராமரம் வேரொடும் வீழ்ந்தது

போல் பூமியில்வீழ்ந்து புரண்டழுது வாயொளி மழுங்கவும், தன் தாமரை மலர்போன்ற கண்களினின்றும் துன்பக்கண்ணீர் பெருக்கெடுத்தோடவும், கொடியகொற்பைக் காதிற் சொருகிலைலாத்த இக்கொடுஞ்சாலலை யீயல்லாமல் இன்னொருவ ரொடுத்துச் சொலலவும் நினைப்பாரோவென் றெழுந் தேங்கியிரங்கிப் பின்னும் விழுந்து விம்மி வெய்துயிர்த்துப் புலம்பலாயினன்.

அறத்தை வேரறுத்தே அருளைக்கொன்றனை ! சிறந்தநின்றண்ணளியை யழித்து இறந்தனையென்றுல் நீ நீதியைமறந்தவனுகின்றனையே! உனக் கிதைப் பார்க்கிலும் இழிவும் வேறுண்டோ ? சினந்தவிர்த்துங் காமத்தை யவித்து மதற்கு இனமாகிய மயக்க முதலியவற்றையுங் களைந்தும் யாவருடைய மனத்திற் கிசைந்த மார்க்கத்திற் செலலு மீகையாளனே! மறந்துபோய் உனக்குற்றமார்க்கத்திற் செல்லுதல் ஒழுக்கநெறியாமோ ! சூரியனை முதலிய முன்னையோர் பழங்கதையையும் புதுக்கிய தலைவனும், கணனுதற் பெருமானுடைய மலை போன்ற பிறைமென்னும் விலலின் பெருமிதத்தையு மழித்தவனுமாகிய உன் மகனை யெவ்வாறு பிரிந்துபோய்விட்டாய் ! நடுவு நிலைமையிலையே ஆஞ்ஞாசக்கரத்தை யுருட்டிய அருமையாளனே ! இவ்வுலகில எவ்வழி நோக்கினலும் ஏற்போ ரில்லாமைநோக்கி அத்துறக்கநோக்கி நடந்தனையோ ! அறுபதினுயிரம் வருஷம் உன்னுடைய வெண்கொற்றக் குடைநிழலை நிற்பனவும்நடப்பனவுமாகிய எவ்வகையுயிரையும சுங்கச்செய்கையைபோல இப்போது அவைகள்வருந்த நீ கற்பகத்தருவினது நிழலை விரும்பி நடந்தாயோ! நீ இருக்குமிடமொழிந்திவ்வுலகத்தைவிட்டுப் போயினையே! தேவாகள் வந்து உன்னுடைய காற்கீழொதுங்கினர்களோ ! சம்பராசுரனைப்போன்ற அசுரர் இன்னும அத்துறக்கநாட்டிலிருக்கின்றர்களோ ! அதனல் அத் துறக்கநாட்டைச்சென் றடைந்தாயோ ! உனக்கிவ்வுலகத்திற் பல அரசாகள் கொடுத்துவந்த திறைப்பொருளை அந்தணர்கட்குக் கொடுத்துதவித் தேவர்கள் பொருட்டு அசுவமேத முதலிய யாகங்களைச் செய்து அவர்களுக் காக்கிய உலகத்தை யடைந்து தங்கவில்லையோ ! ஏழுறுப்புயாந்த மும்மதக் களிற்றையுடையானை வாழ்வினையுடைய இராகவன் வறியவன் கையைப்போலேந்த வலிமையுள்ள அழகிய உன் தோளினின்றும் நீங்காத ஆஞ்ஞாசக்கரத்தை இனி அவனுக்குக்கொடுக்க எண்ணியோ கடந்து போயினை ! தவத்தினைப் பற்றினையல்லை ! நீ பெற்ற மகனுக்கு முழுதுலகாளுமரசுரிமை யளித்து முறைமையாக வடைந்த அவ்விராசசூயமானது மகுடாபிஷேகக் கோலங்காணவும் உன் பெரியகண்களாற் பெற்றிலைபோலு மென்றே பலவாறு பரதவித்துக்கொண்டு தொடுமணற் கேணியிற் சுரந்த நீர்போலக் கண்ணினின்றும் துன்பக்கண்ணீர் பெருக்கெடுப்ப மனமுருகும் பரதன் தன்னைத்தானே தேற்றிக்கொண்டு ஒருவகைத் தேறியபின் தாயைநோக்கி என் தந்தையும் என்தாயும் என்கடவுளும் என்தமையனும் அந்தமில் பெருங்குணத் தருட்கடலாகிய சீராமனுகையால் கானவனை வழிபாடுசெய்தா லல்லாமல் என் சிந்தைத்துயரந் தீராதென்றன் ; அவ்வாறுசொல்லிய மகனைப்பார்த்து சீராமனும் தம்பியும் சீதையுடன் காடுசென்றனனென்ன ; அவன் வனசஞ்சாரியாகப் போயினனென்ற் சொற்கேட்டு நெருப்புண்டான்போல நினைத்திருந்து

வினைவகை பெத்திறத்தது! இன்னமும் விளைவதாகிய துயரங்கள் என்காதாற் கேட்க எவ்வளவோ வுள்ளனவென்று, சிந்தித்து விம்மியேங்கியிருந்த பரதாழ் வான் தாயைநோக்கி என்தமையன் காடுசென்றதுதான்தீங்குசெய்ததனலோ! தெய்வஞ்சிறியோ! அல்லது விதியினலோ! யாதினலென்றறியேன், சீராமன் தியகாரியங்களைச்செய்வானேயாயின் அவைஉலகத்திலுள்ளார்க்குத்தாய்செய லென் றெணணப்படுவதல்லவோ! அப்படியானல் அவன் காடுசென்றது தந் தை இறந்தபின்னரோ அலலது அதற்கு முனனரோ விளக்கவேண்டுமென்று வேண்ட, அதைக்கேட்ட கைகேசி குரவாகளை யிகழ்ந்ததனலுமல்ல, கெரு வத்தாலுமல்ல, தீவினையாலுமல்ல, அரசாபெருமா னிருக்கவே அவன் காடு போனனென்றுள். அவ்வாறு குற்றமொனறிலலை யாரையும் வேறொருவர் கோபித்ததுமிலலை யாரையும் தெய்வத்தாலுமலல வாரையும் பெற்றவனிருக் கப் பிள்ளை காடு சென்றதும அவன் போனபின் அவனிறந்தது மென்னகாரண மென்றுசொல்ல, அதைக்கேட்ட கைகேசி என் வாக்கினல் வரதரப்பெற்றுக் கொண்டு சீராமனைக் காடுபோக்கி உலகமுழுதாளு மரசுரிமையை யெனக்கே யாக்கினேன், அது பொறுக்காமல் அரசன் தன்னுயிரை நீங்கினனென்றுள்.

இவ்வாறுசொல்லி வாய்மூடுதற்கு முன்னம் வினைகாதினையு மூடிக் கொண்டு செற்றிவளையிலும் பருவஞ்செலாது தெரித்துக்கொள்ளப் பெருமூச் செறிந்து கோபதைகளைத்துகளைகள் இடத்தும் பிதுத்தன்னைகளாற்பூமியை யறைந்து *பாதங்கள் பெயர்தொறுமபாரும மெருவும யானனையை பெற்றிக் கொண்டுவருகின்ற மரக்கல மபெருங்கற்றிரைக் கடலிலை வருத்துவதுபோல வருந்திநிற்க, அதைக்கண்ட தேவரகளும் பயந்தனர், அவுணாகளும் அச்சத் தால இறந்துபட்டனர, மதமபொழியும திக்கயங்களும மதமொழிந்தன, சூரி யனு மீணடனன், யபறுய விழிடுதைத்து மிடைனன். இவ்வாறு கோபங் கொண்டு தன் தாய் தொடரபினளா தெயரணுமல சீராமபிரான் கோபிப் பானெனென் றஞ்சிமெலலவி னின் றிடைபோற் காரதித்துச் சொல்லலுற்றினன்.

என் தந்தையோ இறநதுபட்டானா, என் தமைபனை பெருந்தவமேற் கொண்டான், இவ்வளவும் கொடிய சூழ்ச்சியலன்றி வேறல்ல வென்று

பாதங்கள் பெயர்தொறும் பாரு மேருவும்
போதங்கொ ணெடுந்தனிப் பொருப்பில கூடபோதி
மாதங்கம் வருகல மறுகிக் காற்பொர
ஓதங்கொள் கடலினின் றுலவ போன்றவே.

{இதன்பொருள்) நமது பாதம் பெயரும்தோறும்,பாரும் மேருவனையும் மரக்கலங் கொண்ட தெடிய தனியொப்பிகந்தபாய் மரத்தொடு யானையேறிவருமரக்கலம் காற்றி னற் பொரக்கலங்கிப் பெருக்கினையுடைய கடலினின்று வருந்துவன போன்றனவென்க.

கூம்பு - பாய்மரம். ஓதம் - பெருக்கு. மாதங்கம் - யானை. போதம்-கலம் என்பன ஒருபொருட் பல்பெயர்க்கிளவி. பாதங்கள் பெயர்தொறும் பாரு மேருவும் கலங்கியவா றென்க. இது உவமையணி. பெயர் என்னும் வினைத்தொகை வினைச்சொல் தொறு என்னும் இடைச்சொற்தொண்டது, இடைச்சொல்லும் ஒருபுடைப் பெயரொ டொப் புடைமையாகலின்.

எடுத்துச் சொன்ன வாயைத் துணிக்கவேண்டும், அதைக்கேட்டுச் சும்மாவிரு
ந்ததனல் நானரசை யாசையா யாண்டேனுகின்றே னல்லவா ? நீ யின்னமு
மிருக்கின்றனை, யானும் சும்மாவிருக்கின்றேன், உன்னைச் சிக்கிரமாய் அழிக்கா
திருக்கின்றேன், காய்மோன்ற மனமுடையானுகிய சிராமபிரான் கோபிப்பா
னென்று பயந்திருக்கின்றே னல்லாமல் தாய் என்ற பெயரொன்னைத் தடுக்க
வல்லதோ ! உன்னெருசொல்லால் ஒரு அரசன் மாளவுமாயிற்று, மற்றேரு ரா
சன் மீளவுமாயிற்று, அவன் விரும்பி யாளவேண்டிய பூமியை ஆளவும் நின்று
னெரு பாதனென்றல் இது குற்றமேயலலது அறநெறிக்குக் குறையுண்டாக
முடியுமோ ? சூழியையுடைய தாயினது கொடிய சூழ்ச்சியினல் பரம்பனையாக
வரும் மரபைமாய்த்து முன்னளில பரதன் பழியுடைய தாக்கினன் என்னும்
மொழியெங்கும் வழங்குதலினும் முறைமைவேறுண்டோ ? போயிரல்லீர் உம்
முடைய கணவனுயினை யுண்டீர் போயீரோ ! நீரின்னமு முயிரோடிருக்கப் பெறு
வீரோ, மாயீரோ கெடாதவனமையான பழியையும் விளைத்தீரோ முலையையும்
கொடுத்தீரோ தாயீரோ நீரெனக்கின்னமு மென்னதரமாட்டீர் ! என்றுகோபித்து
நின்று சிறிதும் பொய்யாதமனனவர் பெருமானவாய்மொழியாலே உயிருடன்
நின்றும் நீராதவலியபழிகொண்டுந திருவுவயடைதும என்றும் நீரோவாழுவிரு
க்பினீர்; அவன்போகக் கன்றுமை தாய்பசுவுமபோல அவற்றைப்பார்த்தும் கழி
யீர் ; தான்கொடுத்த வரதானுங் கிழிவண்டாகாமல் தந்தை யிறந்தான், இதுவே
அறமென்றெண்ணி அவ்வரசன்பெற்ற சிராமன அரசாட்சிமுழுதும் தாயின்சூழ்
ச்சியால் துறந்தான், அவ்வரசுமுழுதும அவனுடையபிறதான் ஆண்டுவருகின்று
னென்னு மிது என்னுற் பொறலாமோ ! என் தாதைமாண்டுபோவா னென்
பதை யெண்ணி வரைகொணடவன் கோளுமென்றலையென்பது கொண்
டான், அதுவலலாவிட்டால அவன் மீள்வானலலவா ? மெய்யாகவே யுலக
மெல்லா மாளுவானனறலலவா உலகமுழுதாள்வான் போயினன். யாவரா
லுஞ் சோலலப்பட்ட தொன்மையான குலத்திற் பிறந்த அரசன் உணாவு
அப்பால் யாதாயினுமாகுக ! எனக்கு பணிசெய்பவன தியசிந்தனை செய்தா
னென்றுசொல்ல என்தாயாகிய இக்கைகேசி தெடிக்கொணடபுகழ்போதாதா !
இன்னமும் நான் பிழைத்திருக்கினேறனை, என்னுடன் பிறந்த சிராமன் கையி
லார்ந்த கல்லையில்லைத்த புனையான காய்கனிகிழங்குகளைஉணவுகொள்ளப்
பொற்கலத்தை யேந்தி இனிமையான சாபாவரிசிச் சோற்றை அமுதெனக்
கொண்டு நெய்யோடு வைத்துணை கின்றதை நிலைபெற்றவர்களும் நினைக்க
மாட்டார்களோ, வில்லமைத்த தோளையுடைய சிராமன் கொடுங்கானடைந்தா
னென்ற சொற்கேட்டன்றே நமதரசனிறந்துபட்டனன், நான் அவன் சென்ற
தைக்கேட்டிருந்தும் நஞ்சையொத்த தாயைக் கொல்லாதிருக்கின்றேனை, வன்
பழியாற் குறையாதிருக்கின்றே னல்லேனை, மேலும் அன்புடையார்போ
லவுமழுதுகொண் டிருக்கின்றேன். இதைப் பூமியிலுள்ளாரும் கொள்ளார்கள்,
யானை உயிரைவிரும்பிப் பழிபூண்டிரோன், தன்பற் தீராதொன்றுதானை இக்
ககரத்தும் திருமகள் வசிக்கவேமாட்டாள், ஆரோடு நீயாலோசனைசெய் தாரு
டைய யோசனை மேற்கொண் டிவ்வாறு செய்யத்துணிந்தாய் ! அறத்தையெல்

லாம் வேருடன்கெடுத்து என்னகாரியத்தை விளைவித்தாய்! என் தந்தையை உன் கொலைத்தொழி லமைந்த வாயால் கொன்றேனன்றே! அதுபோகட்டும்; என் அண்ணனைக் காட்டிலுஞ் செலுந்தினேனை, அரசாளவு மிற்கின்றே னென்று சொல்வதனல் இதனல் உனக்குப் பிழையுணேடோ பழியுண்டாமோ! என்றுலும் என் புகழ்மாயு மிடமுண்டாமோ! கணணிலை யென் செய்கை யைக் காணும் மண்ணுலகத்தவர் பாராதென்னுவார்கள், நீயோ பழிபூண்டு கொண்டாய்! ஒருவன் உண்ணுமலை நஞ்சமானது கொலலமாட்டதென்னு முறைமையுண்டென் றெணணுகின்றேன், அல்லாமலெனலுயிர்தாடிகொன், கானி! சைந்து பாவத்தொழிலணமந்த குமபிபாகமபோன்ற உனபாழ்வயிற்றிற் றங்கியி ருந் தென்றுந்தோன்றுகின்ற தீராதபாதகமொழிந்து அத்தாயமொழிவதன் பொருட்டுநல்லறமாக உலகமூன்றும காணும்படி பெருந்தவஞ்செய்ய முயல் கின்றேன். இவ்வளவுமபெரியோர சொலலும நலலசொற்களைச் சொன்னேன், கல்லசெய்கையெல்லாம அறக்கெட்டவளாணய் உன் னுயிர்துறப்பையானல் தூயையுமாவாய் உலகத்திற்பிறந்ததனற் பேறடைந்தாயுமாகின்றுய்! இதல்லா மலும் வேறிலலையென்று சொல்லிவிட்டு இக்கொடுபபாவியிடத் திலேனென்று தன்னைநெருங்கியதுன்பங்கெடத் தூயதன்மையையுடைய கோசலையார்பொன் னடிவணங்கி யுய்வேனென்று அவ்வன்னையது திருமாளிகையேநோக்கி நட ந்துபோனன். அவ்வாறு நடந்துசென்று மண்கிழிய வீழ்ந்துவணங்கி அவளது பாதங்களைத் தன் கையினற் பிடித்துக்கொண்டு புலம்பிநின்று அன்னையே!என் தந்தை யெவ்வுலகி லிருந்தின்றுன், என் தமையன் எங்கேசென்றுன், தானும் இங்கேவந்தது இத்துன்பங்களை யெல்லாம எனகணகளாரப் பாரப்பதற்கோ! என் சிந்தைத் துயரந் தீரக்கவேண்டுமென்று தெவ்வுலகும பரதாழ்வான் படுத் துயரங்கண்டு அழுதுசோரும்படி சொலலத்தொடங்கித் தான் புழுதியாடிய தோளையுடையானுப்ப புரண்டுசோர்ந்து எனனையனன அழைத்தலங்கணடிலேன், அரசன் பூமியைநீங்கிப் பெயருவானே! நீர பிழைத்திலலீரபோலும! நினைத்தி ருக்கின்றீர்களெனறு கொடியவாக ளெலலாம நங்குலங்கள் வேறற்றுப்போகக் கொல்வேனென்று சொல்வது எவ்வாறு? அஞ்சிருக்கட்டும; கொடியவளாகிய கைகேகிவயிற்றிற்பிறந்த கள்ளத்தன்மையுடையேன என் துயரமுழுயும்படி முடிவேனென்றும்; ஒற்றையாழியர தேருருந்து இருனபோட்டும அச்சூரி யனைப்போலக் கீர்த்திபெறவளர்ந்த பழமையான இக்குலமானது பரதனென்று சொல்லப்படும் ஒருபழி படைத்ததென்றும்; வானையெதிய சேனனை யுடைய அரசன்வீடெய்தவும், மற்றுருரு அரசன்காடெய்தவுங்கண்ணிலாமலே உலகமுழுதும் துயரத்தில் வருந்துவதோ வென்றும், பரதன் சொல்லிக் கொண்டிருந்தான். அதைக்கேட்டுக் கோசலை இவ்வரசபாரம் பொறுக்க மன மில்லாதவனையும் நெஞ்சந் தூயனையும் நடுவு நிலைமையையுடையனையும் பரதன் தோன்றுகின்றுனென மனத்திற் சிந்தித்துக் கைகேசிசெய்த பழிபாவங் கண் டஞ்சியாயோ வென்றுள். அதைக்கேட்ட பரதன் கல்லறடுங்க காவினல் கட் டுரை சொல்லத்தொடங்கினன்.

தருமங்கெட முயன்றவனும், அருளில்லாத நெஞ்சமுடையானும், பிறன் கடைநின்றானும், பிறனைச் சிறுகின்றவனும், பிறவுயிரைக் கொன்று வாழ்ந்தவனும், அறந்தார்க்குத் தன்பஞ்செய்தவனும், குரவர்களையும் பெண்களையும் வானாற் கொன்றவனும், அரசன் பொருளைச் சூதாற் கைக்கொண்டவனும், முதுகுகாட்டிப் போரி லோடினவனும், ஏழைகள் கையிற் பொருள் பறித்தவனும், திருமகள் கோனைக் கடவுளல்லவென்று சாதித்தவனும், அந்தணர் அருகெறிக்குக் குற்றஞ்செய்தவனும், வேதநிந்தை செய்தவனும், பொய்பேசுதலையுடையவனும், தாய் பசித்திருக்கத் தான் புசித்தவனும், போரில் தன் தலைவன்பட்டத் தான் நடந்துபோனவனும, தன்னைப் புகலடைந்தவருக்கு வஞ்சினங் கொடுத்தவனும், அறமறந்த சிலையுடையானும, பொய்ச்சாக்ஷி சொன்னவனும், போருக்கஞ்சினவனும், கையிற்பொருந்திய அடைக்கலப்பொருளை யனுபவிப்பவனும், வருந்தியிருந்த சமையத்தில் இடனாவிளைத்தவனும், பிராமணர் வீட்டை கெருபபை மூட்டினவனும், மக்களைக்கொன்றமா பாதகனும, தேவர்களை நிந்தனைசெய்தவனும், கன்றுக்கிரங்கிப் பாலூட்டாதவனும், இரந்தசம்பையிலேயே பிறர்பொருளைக் கவர்ந்தவனும், செய்ந்நன்றியை மறந்தவனும, தன்னுடன் வழிவருமாதனைப பிறர் துன்பஞ்செய்ய அதை நீக்காமல் தன்னுயிர் சுமந்தவனும, தன னாபவிலிருந்து சாப்பிடாதிருக்கத் தான் சாப்பிட்டவனும், போர்முகத்திற் பகைவருக்கஞ்சித் தன்னுயிர்வளர்க்க ஆசையுள்ளவனும், தருமத்திற்காக்கியவன் பொருளை விரும்பிய அரசனும், அழிவருகின்ற அரசியலை யடைந்தாகுமென்று இழிவடைகின்ற சிறு தொழிலைச்செய்து அங்கதின்வழிவருகின்ற தருமத்தை மறந்து மற்றொரு பழிவரும்மார்க்கத்தைப் படர்பவனும் இதுபோன்றவரும் அடைகின்ற கொடிய நரகத்தை நானடையக்கடவே னென்றுசொல்லிமுடிய அவ்வாறு சொன்னமகனைக் காட்டிற் சென்ற சீராமபிரான்மீளவும வந்தாற்போல மதித்து அழுதணைத்து அரசன் செய்கையும் தாய்செய்ததீமையும எடுத்துச்சொலலிப் பான்முலை தோரநின்று அப்பாபரதா! உன் குலத்தில முன்னோர்களில யார்தான் உனக் கொப்பாவார்களென்றுசொலலிப புலமபியழுதாள். அவ்வாறு புலமபக்கண்ட பரதன் கோசலையாகிய தாயைவணங்கித் தானும புலம்பிக்கொண்டிருந்தான். அந்தச் சமையத்தில் வசிட்டமுனிவரும அங்கேயெழுந்தருளினர். அவனைத் தாளில் வீழ்ந்துவணங்கி எதனைதயான் மன்னாய் அருளிச்செய்ய வேண்டுமென்று வேண்ட, அதைக்கேட்ட முனிவர்பெருமான் சிறிதுஞ் சொல்ல காவெழாமல சொந்துவருந்தி உன் தந்தை .இறந்துபட்டுப் பதினைந்து நாளாகின்றன, மக்களாவார் செய்யவேண்டிய உருமைக்கடன் செய்யவேண்டுமென்று சொல்லி முடிக்கபரதனும் தாயாகிய கோசலையன்னையினிடமுந்தரவுபெற்றுக்கொண்டு வசிட்டமுனிவரோடுஞ் சென்று தன்னைத் தந்தை தருமத்தைநாட்டிய அறப்படிவத்தைக்கண்டு மன்னின்மேல் விழுந்தலறிப் புரண்டு சக்கரவர்த்தியினுடைய தயிலமாட்டிய பொன்மேனியைத் தன் கண்ணீரால்நாட்டிக் கழுவி அங்குன்றும் பனிவின்வாங்கி கான்மறையுணர்ந்த அந்தணர்கூட்டம் சிறைந்து சுற்றி அரசனை மியனத்திலேற்றி மந்திரிகள், பிரதானிகள், சேனைவீரர்; கண்

டத்தலைவர், யூகத்தலைவர், சாமந்தர், குறுநிலமன்னர, பட்டவர்த்தனர், மகுட வர்த்தனர் முதலானோ சூழ்ந்துவர படடத்துயாதனபேற்றிகொண்டுசென்றனர். அப்போது சங்கமும பேரிகையும திருச்சினனமும் எங்குமகின்று ஆரவாரிக் கச் செல்கையில் யானையும், குதிரையும, தேர்களும், அபசரும், நான்மறை யுணாந்த அந்தணரு முன்செலல, தெவிமாருடனெ கொண்டுசென்று சரயு நதியை யடைந்தார்கள். அவ்வா றடைந்தவுடனெ பிரதமஸ்காரமுழுதும் செய்து சிதையிலிருந்திந் தீமூட்டித் தகனதக் குருமைகடன் முழுதுஞ்செய் யத்துணிய; அருகிருந்த வசிட்டமுனிவரும உன தாய்செய்த கொடுமை யால அரசன் நின்னெயு மகனலலெனவனிற துறந்துபோனென்று சொல்லி னர். அதைக்கேட்ட பாதாழ்வானும தன திறந்ததுலை பொறுமை தவிர்ந்த தென்றண்ணியெ யென்னப் பரிகரித்தான்போலும இச் சூரியவமிசத்தில் தோன்றியும் யான் என் தகதைக் குருமைக்கடன்செய்யா பாக்கியம் செய் யாதிருக்க அரசுசெய்யமாத்திரமா ஆனன், மறுமுறுதலாகிய அரசர்களெல் லாம் தருமநெறியால் தேவாகளாயினர் தாயுகருவிலினது பதடியாதனன், என்னை யீன்றுகாத்த என்தாய்செய்த கன்மை தன்றுகமிவ யிருக்கின்ற தென்று தன்தமபியாகியசத்துருக்கனெனயழைப்பித்து அவனெக்கொண்டு சகலகாரியங்களெயு நடப்பித்துநின்றுன். ஆபரணங்கள் முதலிபனை யணிந்து கொண்டு தாமனைபூத்த காட்டிற் புதரில பீலியையுடைய மயில்கள்போல அறுபதினுயிர மாதரும் சனகமனமாதிர் தங்கள் கணவரிறந்துபட்டபின் மாத ரடையும திவ்வியவுலகம் சென்றடைந்தனர். இங்கே நடத்தவேண்டிய காரி யங்களெ யெல்லாம் முடித்துவிட்டுபர தாழ்வானுங் களிபபிலலாமல்தன் இராச மாளிகை சேர்ந்துகிற்க; அவனெ வசிட்டமுனிவர் தன்னைப் பல அந்தணர் புடைசூழக்கண்டனர்; அபபோது 'அரசனெவ்வழி அவ்வழி குடிகள்.' என்று பெரியோர்கள் சொல்வார்களெ, அரசனிலலாமல் உலகம வருந்திற்பது தகுதி யல்லவென்று படை, குடி, அமைச்சு, புரோகிதர் முதலானேரும் பெரியாரும் சேனைத்தலைவர்களும் தண்டத் தலைவரும சாமந்தரும் மகுடவர்த்தனரும் பட்டவர்த்தனரும் குறுநிலமன்னரும சூழ்ந்துபோய்க் கண்டார்கள்.

பள்ளியடைப்படலம்

முற்றிற்று.

ஆற்றுப் படலம்

அவ்வாறு காணப்போகையில் வரலாற்று முறைமையினுல் வேத நான் கையு முணர்ந்த பெருந்தவமுடைய வசிட்டமுனிவர் அவ் விராசமாளிகையி லெழுந்தருளியிருக்கின்ற தென்பது கேட்டுணர்ந்து பரிந்த நெஞ்சினையுடையா ராய்ப் பரதாழ்வானைக் கண்டுகொள்ள, அவருள்சுமந்திரனென்பவன் [illegible] குறுபொருள் குறித்த உள்ளத்தனுய் எல்லாமுணர்ந்த வசிட்டமுனிவனை முக நோக்கினன்கின்ற. அதை அவன் வாயிறற் சொல்லாமலறிந்துகொண்ட

அம்முனிவர்பெருமான் உலகங்காப்பதுன் கடனுமென்று பரதாழ்வானுக்குத் தெரிவித்து பிராமணரும் முனிவரரும் விருத்தாகளும் அரசர்களும் நகரமாந்தரும் உன்னிடத்தேஅடைந்தகாரியம் நீதியையும் தருமத்தையும் நிலைநிறுத்தற்கென்றே துணி. தருமமென்கிற ஒருபொருளைத்தந்து காட்டுதல் அருமையானகாரியமெனப்பெரிது மறிவாய்! இம்மைமறுமையுமாகியஇண்டையும் தருவதற்கினையந்தன, இது தெருண்டவினையுடையார்செய்யும் செயலாம். அரசில்லாத உலகம் சூரியனில்லாதபகலும், மதியில்லாத இரவும், பரவான்மா சீவான்மாவென்னுமிரண்டுமில்லாத உடம்பேபோலும என்றறி. தேவர்வசிக்கு முலகத்திலுந் தீமைசெய்தேஉயிர்வாழும் நாடுகளிலும ஏனைய உலகங்களிலும் அரசனில்லாதிருக்கக் கண்டிலோம், முறைதெரிந தொருவகையாராய்ந்து பார்க்குங்காலத்தில் பிரமனால் படைக்கப்பட்ட மணணிலும் வானிலும் நிற்பனவும் நடப்பனவுமாகிய எல்லாவுயிர்களும் தலைவனிலலாதிருக்கக் கண்டதிலலை. இனி இவ்வுலகமோ அரசனில்லாமல் வருந்துகின்றது ; உன்தந்தையோ இறந்துபட்டனன், உன் தமையனோ நாடுகடந்து காடுசென்றான், இவ்வுலகமோ உன் தாய்பெற்ற வரத்தினால் உனக்கேவந்து சேர்ந்தது, நீ இவ்வுலகமுழுது மாண்டேவரலாம், அதுதான் நான்கொண்ட கருத்துமென்று சொல்ல, அச் சொல்லைக் கேட்ட பரதாழ்வான் நஞ்சையுண்ணுகென்றபோதுநடுங்குவானைப் பார்க்கிலும் அஞ்சியயர்ந்து அருவிபோற் கண்ணீர் சொரிந்து நடுநடுங்கி நாத்தடுமாற மாதனைப் போனின்றழுது தன் வய மகன்று ஒருவாறு தெளிந்து இராச சபையைப் பார்த்துச் சொல்வானுயினான். இந்த மூன்றுலகங்களுக்கு மொரு முதல்வனுய் என் முன்னே தோன்றிய சிராமபிரானிருக்க யான் மகுடாபிஷேகஞ் செய்துகொள்ளுமபடி பெரியோர் சொல்லத்தக்க தருமமாகையால் தாய் செய்கையிலும் இழுக்காக முடியுமே? என் தாய்செய்கையே நீங்கள் கலலதென்பீராயின், இனி கலிகாலத்தின் ஆட்சியென்றே சொல்லவேண்டும். இராசசபையிலிருந்தீர் இவ்வுலகத்தில் மூத்தவனிருக்க இளையவன் மகுடாபிஷேகஞ் செய்துகொள்வதாக இருக்க நடந்தானை யறிவிக்கவேண்டுகிறேன். இது நன்னெறியேயாயினும் நான்இவ்வுலகபாரஞ் சுமக்கமாட்டேன், இங்ஙகருக்குரிய அரசனை யழைத்துக்கொண்டு பழமுறையாக முடிசூட்டிக் காண்பேன், அதற்கவன் மனங்கொள்ளாவிட்டால் காட்டிலிருந்து அவனுடனே அருந்தவஞ் செய்வேன். அல்லது என்னுயிரையு நீக்கிக்கொள்வேன். போரசனிருக்கவே அரசனும் முடிபுனையும் பாக்கியம் பெற்றுக்கொள்ள விசைந்தான், அரசர்பெருமானே ! பெருஞ்செல்வம் உனக்கு சேர்ந்தும் நீ அதை மறுத்துவிட்டாய்; உன்னைப்போன்ற இளந்தோன்றல்கள் யாரிருக்கின்றனர். ஆக்கினைசக்கரஞ் நடத்தியும் வேள்விசெய்தும் தருமத்தை வளர்க்கவேண்டுமோ? பதினன் குலகமழிந்தாலும் நின்புகழொன்றும் வாழுக்கடவதென்று வாழ்த்தினர்கள்.

பின்பு பரதாழ்வான் தம்பியைக் கூவியழைத்து இந்தகரமுழுதுமறியமுரசறைவித்து இக்ஷகரத்தரசனை அழைத்துவரத் தெரிவிக்கவேண்டுகின்றேனென்று கட்டளையிட, அவன் அவ்வாறேசெய்ய உயிரில்லாத உடம்பைச் சேனல்லென்று மழுதத்தால் வளர்த்தது போல யாவரும் பயனமாயினர். இவ்

வாறு நால்வகைச்சேனையும் பயணப்பட்டன. தானையும் சங்கமும் ஊது கொம்பும் பம்பையும் பேரியு முழங்கின. இவ்வாறு சக்கரவர்த்தியினுடைய சதுரங்கசேனையும சீராமபிரானை யழைத்துவர விசைந்து பரதாழ்வானும் தானும் மரவுரி யணிந்துகொண்டு தன் தம்பிபொடுமை பிறந்த துன்பத்தோடும் தேரேறிச் செல்வானுயினான். இதையறிந்த தாய்மாரும் தவமுடைய முனிவர்களும் தந்தைதோன்ற மந்திரிமாரும் பிராமணரும அளவில்லாத சுற்றங்களும் தன்னைச் சூழ்ந்துவரத் திருவயோத்தி நகர்க் கோட்டைவாயிலில் அடைந்தான். இவ்வாறுபோகையில் மந்தரையென்னும் யமனும் வழிச்செல்வாருடனேபோகக்கண்டுதம்பியாகியசத்துருக்கனழ்வானுடிச்சென்று அவளை ஆகாயத்தில் எறியும்படி கினைத்துக் கோபித்துப்பற்றலும், அதைக்கண்ட பரதாழ்வான் இதுவரையிலும் பரம்பரையாக நடந்துவந்த வழக்கத்தைக் கெடச் செய்த மாபாவியைச் சின்னபின்னமாக்கி என் கோபத்தையே தீர்த்துக் கொள்ளுவேன்; என்னை இன்றுஎன்னையன் துறந்துவிடுவானென்றெண்ணியே விட்டேனல்லாமல் அன்னையென்று மதித்தவளுகவேமாட்டேனென்று சொல்லிவிட்டு,நாம் இவளைக் கோபிப்போமாளுல் நம்மையன் நம்மைக் கோபித்துக் கொள்ளுவா னுதலால் மந்தரையைக் கோபிக்கவேண்டாமென்று தம்பியை அழைத்துக்கொண்டுபோய்,சீராமன்தம்பியோடுசிதையும்,தொடரக்காடுசெல்கையில் தங்கியசோலையில் அன்று தங்கிக் கண்ணீர்பெருக்கிக்கொண்டேஅழுது புலம்பிக் காய் கனி கிழங்குண்ணுமல் வில்லேந்திய உயர்ந்ததோளையுடைய அச்சீராமன் படுத்திருந்த புல்லணையின் பக்கத்தின் புழுதியிற் படுத்திருந்தான். அங்கிருந்துதன் தமையன்கால்நடையாகவேநடந்துபோனதைகேட்டுத் தானும் தம்பியுடன் நால்வகைச் சேனைகளும் புடைசூழக் கங்கைக்கரையையடைந்தான்.

ஆற்றுப் படலம்
முற்றிற்று.

குகப் படலம்

வீரகண்டையையணியாமலும் அலங்காரஞ்செய்யபெறுமலு மிருக்கிற சேனையையுடைய பரதாழ்வான் காவிரிசூழ்ந்த காடாகிய சோணைட்டைப் போன்ற கழனிகள்சூழ்ந்த காட்டைவிட்டுவிட்டுத் தாவரசங்கமமாகிய எல்லாப் பொருள்களுமிரங்கக்கங்கைக்கரையை யடைந்து நிற்கவே அங்கே சுரும்பினங்களுக் கல்லது கங்கையெங்கும்பரதாழ்வானுடன்வந்தயானைகள்மதம்பாய்வதனல் உண்ணவும் நீராடவும் உரித்தல்லாதிருந்தது. பாலைப்போன்றநிறத்துடன் பண்டுதான்செல்லும் அன்னீர் ஒல்லென்னும் ஒலியுள்ளகடலில் பாயாதிருந்தது, அப் பரதாழ்வானுடைய சேனையாகிய கடலினுல் உண்ணப்பட்டதனலாயிற்றென் றுணர்ந்திடலாம், இச் சேனையானது கங்கைக்கரையை யடைந்தது கேட்ட குகப்பெருமாள் சூலம்பிடித்த யமன் இருபத்தைந்து லட்சம்வடிவங்கொண்டாற் போன்ற தன் சேனையுடனே சுரிகையைக் கட்டிக்கொண்டு

வாய்கடித்துக்கொண்டு வெட்டிப்பேசு மொழியுடையாளைப்த் துடிகொட்டிக் கொண்டு கெர்ம்புகுறித்துத் தோள்தட்டிக்கொண்டு அச்சேனையைநோக்கி இப் பாதனுடன்வந்த அறுபதினாயிரம்அக்குரோணிசேனையும் எலியாக, அவ்வெலி கட்குயான் நாகமாமென்று கூவிக்கொண்டு புலியெல்லாம் ஒருவழி புகுந்தாற் போலஅக்கங்கைக்குத் தென்கரையில் வந்துதோன்றி ஊழிகாலத்துமேகமும் கருங்கடலும் ஒன்று கூடினாற்போல அடைந்து, அவர்கள் எமது தலைவ னாகிய இரகுநாயகன் விஷயத்தில் அபசாரப்பட்டமையால் அவர்களை வானி லனுப்பி அந்த இராச்சியத்தை அவனுக்கேபட்டாபிஷேகஞ்செய்விக்கின்றேன்; என் திராணியைப்பாருங்கோளென்றும், நீங்கள் ஓடியெறிக்கும் படகுகளைச் செலுத்தவேண்டாமென்றும், அக்கரையில் வந்திருப்பவனைப் பிடியுங்கோள் எறியுங்கோள் கொல்லுங்கோளென்றும் ஆஞ்ஞைசெய்து விட்டுப் பின்னுஞ் சொல்லுகிறான்.

அஞ்சனவண்ணனாகிய என்னருயிர்க்கு நாயகனைதும் சீராமனை உலகாள வொட்டாமல் வஞ்சனையால் அவ்வரசைப் பிடுங்கியாளும் வேந்தனும் வந்தா னல்லவா? நெருப்பைச் சொரியும் செஞ்சரங்கள் இவன்மேல்விட அவை பட் டுருவிச்செல்லாவோ? என்னையில் இப்பாதன் முதலானவர்கள் தப்பிப்போய் விடுவார்களானால் உலகம் நாய்க்குகனென்றெண்ணி என்னைச் சொல்லமாட் டாதோ? ஆழமாகிய இக்கங்கையைக் கடந்தும் இக்கரைவழியாய்ப் போவார் களோ? நான் யானைப்படையைக்கண்டு விலகிப்போய்விடும் வில்லாளோ! அச் சீராமன் என்னைத் தோழனென்று சொல்லியசொல்லு மொருசொல்லல் லவோ? அதைக் கடப்பேனானால் எழைவேடனிறவாமற் போனானேயென்று பார்த்தவர் பரிகாசிக்காமற் போவார்களோ? அவ்விராமன் எனக்கு முன்ன வனென்று கினையாமற்போய்விட்டானே, அதுபோகப் பின்பிறந்தவன் இங்கே இருக்கின்றானென்பதும் சிறிதும் எண்ணமற்போனானே. என்ன இவனென்ன யிகழ்ந்தகாரியம்? இக் கங்கையைக் கடந்தல்லவோ போகவேண்டும், வேடர் பாணம் விட்டால்அரசன் மார்பில் பாயக்கூடாதென்ற நியதியும் உண்டோ? பாவமும் பழியும் பகையும் கேடும் துன்பமும் என்பனவைகளை அரசாள்பவர் எண்ணமாட்டார்களோ? என்னருயிர்த் துணைவனாகிய சீராமன்மேற்போகிற சேனையும் இக்கங்கையைக் கடந்தல்லவோ உயிர்கொண்டு போகவேண்டும். அருமையான தனுஞ்செய்கையை எமதுதலைவனாகிய சீராமன் கைக்கொள்ள இவன் பூமியை யரசாண்டுவரலாமோ? உயிர்மருந்தா; புகழை மேற்கொண்டு உயிரையேனும் விடுத்துப் போர்செய்யமாட்டேனே! நான் சீராமபிரானைப் போகாமல் இங்கேயேயிருந்தது கல்லகாரியமாகத்தோன்றுகின்றது, என்கடனை இன்றே கழிக்கின்றேன். யானையும் குதிரையும் சூழ்ந்த பெரும்படையுடனே வந்தவர்களும் தங்கள் வாள்வலிகாட்டி யுத்தஞ்செய்து கங்கையைக் கடந்தல் லவோபோகவேண்டும், வேடர்களை நம்துதுறையில் ஓடங்களை விலக்க வேண் டுமேறன். நம்முடையசேனைக்குஇறைபோதா இப்பாதனுடைய சேனை; அது கிடக்கட்டும், தேவர்களே போர்செய்யவந்தாலும் வில்லாகிய மேகம் பாணமா யெம்மழைபொழிய குடல்சூறைபடவும்வாளுடன்சேனைவிழவும் யானைபடவும்

அச்சேனைகளைச் சாய்க்கமாட்டேனே! வள்ளற்றன்மையையுடைய சீராமன் மாவுரிதரிக்கக்கொடுத்த அக் கைகேசியினுடைய மக்கள்வவியை இன்றே பார்க்கின்றேன்; அவர்களை என் அம்பாலே இன்றேகொன்றுகுவிக்க அந்நிணங் கொண்டபினைக்கு வியலைக்கொணேடோடிக்கடலில் இக்கங்கையாறு தூரத்தே விடப்பார்க்கமாட்டேனே! ஆடுகின்ற கொடியையுடைய படைகளை எதிர்த்து வேடர்கள் போர்செய்து சீராமபிரானே யாள இராச்சிய லக்ஷ்மியைச் சம்பாதித்துக்கொடுத்தார்கள் பாருங்கோளென்று சொல்லும் இத்தப்புகழையடைய மாட்டீர்களோ! காட்டைக்கொடுத்த நமது நாயகனுகிய சீராமனுக்கு இவர்கள் நாமாளும் காடும் கொடுக்காமல் படையெடுத்துக்கொண்டுமை வந்துவிட்டார்களே பாருங்கள். பெருந்தவமுடைய முனிவாகட்கு உறவாகி வனத்தில் வசித்துக்கொண்டிருக்கும் சீராமன் கோபிக்கத் தகுமென்று சிறிது மனத்திற் கொள்ளாமல் பாணங்களைச் செலுத்தும் போர்முனையில் எழுகடல்போன்ற சேனையாளையும் ஆழுனையிற் சிறுகூழைபோல இடைபோதே முடியாதோ! என்று பலபலசொல்லி இருண்டைபோற்ற மற்றவர்களுடனே வில்லேந்திக் கொண்டு மல்யுத்தத்திற்குத் தகுந்த தோளையுடையவனும் சீராமபிரானுக்குத் தோழனுமாகிய குகப்பெருமாளிருக்க; அக்கணையில் பரதாழ்வான் முன்னே சுமந்திரனுகிய பெரியமந்திரி எதிர்வந்து சொல்லத்தொடங்கினன்.

அதோ நிற்பவன் இக்கங்கையாற்றினிருகரையுமுடையவன், கணக்கிறந்த படகுகளையுடையவன், உங்கள் குலத்துக்குத் தனி நாயகனுகிய சீராமனுக்கு உயிர்த்தோழன், தோள்வலியையுடையவன், யானையை வெல்லும் சிங்கம் போன்றவன், விலைலந்திய சேனைக் கடலையுடையவன், குகனென்னும் பெயரையுடையவனென்றுசொல்ல, அதைக்கேட்ட பரதாழ்வான் தன்றனையன்முன்னேசொல்லுகின்றசொல்லைப்போலவேகேட்டுமகிழ்ந்துகுற்றமற்றமனமுடைய அவன் எம்மிறைவனுல முன்னே கட்டிக்கொள்ளப்பட்டு அவன் மனத்திற்கான உயிர்த்தோழனுவானுயின், என்னை அவன் காண்பதற்குமுன்னே நான் அவனையே காண்பேனென்று தானிருந்த இடத்தைவிட்டுத் தம்பியாகிய சத்துருக்கனுழ்வானேடுமெழுந்து தன்னுள்ளத்தே தோன்றுகின்ற ஆராவன்புடனே மலையெழுந்து சென்றாற்போலஅக்கங்கையாற்றின் கரையையடைந்து நின்றனன். அவனைத் தூரத்தேகண்ட குகப்பெருமாளும் அவனது திருமேனியின் நிலைமையையறிந்து திடுக்கிட்டு மரவுரியையணிந்து மாசடைந்த மெய்யுடன் கலையொடுங்கூடாத சந்திரன்போல முகப்பொலி விழுந்து கல்லுங்கண்டு கரைந்துருகுந் துன்பக்கடலிலழுந்தித் துறைகாணுமல் வருந்திக்கொண்டிருக்கக்கண்டு தன்கையிலிருந்த வில்லைத் தூரத்தே யெறிந்துவிட்டுத் தானும் துன்பத்தால் வருந்திச்சொல்கின்றனன். இப் பரதாழ்வானும் என்னையகனுகிய சீராமனையே யொத்திருக்கின்றனன், இவனுக் கயலிலிற்கின்ற தம்பியோ இளையவனையே யொத்திருக்கின்றனன், இவர்களும் தவவேட மேற்கொண்டு அவன் சென்றதிசையைநோக்கித்தொழுதுகொண்டிருக்கின்றார்கள். எமதுபெருமான் பின்பிறந்த தம்பிமார்கள் தவறுனகாரியத்தையும் செய்துவருவார்களா? இவரோ தம்பிமான் முடையாராயிருப்பதன்றி மாறுத அன்புமுடையாராயிருக்

கின்றனர். நமது பெருமான் கொண்டிருந்த தவவேடத்தையே மேற்கொண்டிருக்கின்றனர், இவர் கருத்தறிவோமென்று போகின்றேனென்று தன் சேனைகளைநோக்கி யெடுத்துச்சொல்லி அதுவனையிலும் இங்கே வழியைக் காத்துக்கொண் டிருங்கோளென்று அத் துறையிலிருந்த படகொன்றில் தானேறிக்கொண்டு தான் தனியேபோனன். * அவ்வாறு வந்ததிலேதொழுத குகப்பெருமானைத் தாமனையில் வசிக்கும் பிரமனும் தன்னை வணங்கும் பெருந்தவமுடைய பரதாழ்வான் கலைவணங்கிநின்றனன். அதைக்கண்டகுகப்பெருமாள் அவன்பாதங்களில்வீழ்ந்து எட்டுறுப்பு நிலமுறப்பணிந்தான். பரதாழ்வானே அவனைத் தந்தையினும் மகிழ்வாகத்தழுவினின்றனன். இவ்வாறுதழுவப்பட்ட வேடர் பெருமான் பரதாழ்வானை நோக்கி நீயெழுந்தருளியகாரண மென்ன வென்றுகேட்க, உலகமுழுதாண்ட அரசர்பெருமான் பரமபனைவழக்கத்தைத் தவறினனன் ; அவ் வழக்கத்தைக் கெடுக்காமல அதை யாளவேண்டியவனை யழைத்துக்கொண்டுவர வந்தேன் இதுதா னென்வருகையென்று சொல்ல, அதைக்கேட்டு நெட்டுயிர்ப்பெறிந்து மண்மிசை வீழ்ந்துபணிந்து விம்மி மகிழ்வு பெருக அவன் பாதத்தைத்தொட்ட கையையுடையானுய் மெய்ம்மையான வுள்ளங்கொண்டு சொல்லலாயினன்.

அரசனே ! தாய்சொல மேற்கொணடு தந்தையுதவிய நாடுமுழுதும் தீய காரியமெனத் துணிந்து சிந்தனை முகத்திற்றேக்கிப் போந்தாயென்றல் அதனல் நீபெற்றபுகழினை உன்னெடு ஆபிரம சீராமா தாமேகிகராவரோ ஆகாரோ! என்னவென்று தான் வேடகுலத்திற் பிறந்த ஏழையான தானெடுத்துச்சொலலவல்லேன், சூரியனுடைய ஒளிக்கற்றைகள் மற்றையொளிக் கற்றைகளைத் தவிர்ப்பதுபோல மண்ணுலகத்தாராற் புகழப்படுகின்ற உங்கள்குலத்து மூதாதைகள் புகழையெல்லாம் உன் புகழாக்கிகொண்டாயே என்று சொல்லி வேடர்பெருமானகிய குகபெருமாள் அப பரதாழ்வானிடத்தே அன்பு மிகுந்து நின்றனன். யாரோதான் பரதாழ்வானிடத்தே அன்பில்லாதவரா யிருப

* வந்ததிரே தொழுதானை வணங்கினன் மலரிருந்த
அந்தணனுந் தனைவணங்கு மவனுமவ னடிவீழ்ந்தான்
தந்தையினுங் களிகூரத் தழுவினன் தகவுடையோர்
சிந்தையினுஞ் சென்னியினும் வீற்றிருக்குஞ் சீர்த்தியான்

இ - ள். தன்னைவந்து எதிரே தொழுத குகனைத தலைவணங்கினன் தாமரை மலரிலிருந்த பிரமனும் தலைசாய்க்கு மியல்பினையுடைய பரதன் ; பின்னர் அவன் தாளில்வீழ நடுவு நிலைமையுடையார் மனத்தினும் தலையினும் வீற்றிருக்கும் சிறப்பினையுடைய பரதன் அக்குகனைத் தாதையினு மகிழ்சிகூரத் தழுவினின்றனன் என்க.

அந்தணன் - அழகிய தட்பமாகிய குணமுடையான், அற்றுகலினன்றே, 'அந்தணென்போ ரறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ் - செந்தண்மை பூண்டொழுக லான்' என்றுர் பிறரும். இக்கருத்துணராத நச்சினர்க்கினியரும் 'ஆறறி யந்தணர்' என்றகலியினும், 'அந்தணர் வேள்வியார்க்கும்மே' என்ற படையினும் வேதத்தினந்தத்தை யணவுவா னென்றுனைத்துப்போதருவர் ; அவர் செந்தண்மை பூண்டொழுகலா னென்ற வேதுவை யறியார்போலும். இச்செய்யுளிரு தொடர். இவ்வாறு கூறுது வேறுகூறிச்சொற்குணம் வினாவுபோயினருமுளர்.

ர்கள். அவ்விதமாக அவனைப் பார்த்து அருட்கடல் போன்ற செம்மை யான குணமுள்ள பரதாழ்வான் தென்றிசையே நோக்கி வணங்கிக்கொண்டு எந்தவிடத்தில் எழுந்தருளி யிருந்தான் எங்களிறைவனென்று கேட்க, நான் காட்டுகின்றே னென்று கார்கால மேகம்போல் விளைந்து சென்று கல்லை யடுத்த இடத்தில் நீண்டவில்லையுடைய சீராமன் படுத்திருந்த புல்லாலாகிய சயனத்தைக் காட்டக்கண்டு பூமியிற் பதைத்துவீழ்ந்து துனபக்கடலிலழுந்திப் பூமிமுழுதுங் கண்ணினின்றும பெருக்கெடுத்துவரு நீரினுற்குழுவி என்னுல் இத்துன்பத்தை யனுபவித்தா யென்றபோதும, கிழங்குமகாயும் அமுதம் போலும் நினைத் துண்டா யென்றபோதும இப் புற்படுக்கையிற் படுத்துக் கொண் டிருந்தா யென்றபோதுமகேட்டு என்னுயிர் நீபோ நிருக்கின்றேனே, இரத்தினபரண முதலியவற்றை யணிந்து மருடாபிஷேகம் நான்மாத்திரஞ் செய்துகொள்ளலாமோ வென்றுசொலலிப் பின்னும குகப்பெருமாளைப் பார் த்து இறைவன் மாத்திரம இங்கே சயனித்திருந்தா னென்று சொன்னையே, அவ னிடத்தே அன்பு மேற்கொண் டன்பேயுருவமாக அவன்பின்னே தொடர்ந்து வந்தஇளையவன்காலங்கழித்தவிட மெதுவென்று பரதாழ்வான்கேட்க, அதைக் கேட்ட குகப்பெருமாளும அவனே பெருமாளும் தாயாரும் இப் புல்லாலா கிய திருவணையிற் கணவளரவே, விலகலுனறிய கையுடனே பெருமூச்செறிந்து கொண்டு கண்களினீரசொரிந்துகொணடிருக்கவெரூரியோதயமாகின்றவனையி லும் கண்ணெடுகண் ணிமைக்காமல் இருந்தானென்றுசொல்ல, பரதாழ்வானும் சீராமனுடன் பிறந்தாரில் நானே முடிவிலலாத துனபத்திற்கேதுவானேன், அவனே அதைத் துடைக்க நிற்கின்றான். அம்ம கெலலையென்பதுண்டோ! என்னடிமைத்தன்மை அழகாயிருக்கின்றது! எனறு சீராமன் படுத்திருந்தபுற் படுக்கையினருகே புழுதியிற்படிந்து குகபெருமாளைநோக்கி இக்கங்கையைக் கடத்தினை யாலல் என்னைத் துன்பக்கடலினினறும் கடத்தினவனுகி, என்னை எமதிறைவனிடத்தில விடுத்தா யாகின்றுயென்றுசொலல, அவ்வாறே செய் கின்றேனென்று தன்உறவினனையழைத்து * கயிலையும் மேருவும் புட்பகவிமா

---

* நன்றெனப் புளிஞர் வேந்த னன்னினன மமனை நாயாய்
சென்றினித் தருதி யென்ன வந்தன சிவன்சோ வெள்ளிக்
குன்றெனக் குனிக்கு மம்பொற் குவடெனக் குபேரன் மானம்
ஒன்றென நாணிப் பல்வே றுருவுகொண் டனைய வான.

இ - ள். நல்லதென்று வேடர்கட் கிறைவன் தன் னுறவினனை யடைந்து நாவா யினைச்சென்று இனிக்கொணர்வீயென்ன, சிவனது இருக்கையாகிய வெள்ளிமலையும் அவனல் வணக்கப்பட்ட வில்லாகிய மேருமலையும் குபேரனது புட்பகவிமானமும் ஒன் றுயிருந்தனவாக அவை நாணமெய்திப் பல வேறுருவங்கொண்டெய்திளுற் போலும்வந் தன வென்க.

புளிஞர் - வேடர். நாவாய் - மரக்கலம். இதுகாறும் வெள்ளிக்குன்றும் மேருமலை யும் புட்பகவிமானமு மொன்றெனக் கூறலாயின; அவை இற்றைஞான்றுபலவே றுருக்கொண்டெய்திளுற்போன்றன வென்க.

குபேரன் மானமென்பதற்குச் சந்திரனது விமானமெனினுமிழுக்காது. சிவனென் [illegible]டபரமசிவனை. விமானமென்றது முதல் குறைக்கப்பட்டது.

னமும் ஒவ்வொன்றுள்ளன, நாம் பலவுருவாயேமென்னும்படகுகளைக்கொண்டு வரும்படி கட்டளையிடவே, அவர்களும் அவ்வாறே கொண்டுவந்தனர். படகுகள்வந்து சேர்ந்தவுடனே உன் சித்தமென்னவென்று குகப்பெருமாள்கேட்க, சுமந்திரனைப்பார்த்து இச் சேனைகளை முன்னே அக்கரைபோகக் கட்டளையிடவேண்டுமென்று சொல்ல அவ்வாறே அச்சேனைகளை முறையாகவனுப்ப அவைகளும் அக்கரையை யடைந்தன. அச்சேனைகள் படகேறிக் கரைசேரத் தவத்தினும் சிறந்தது சுவர்க்கமத்திய பாதலமென்னு மூவித வுலகினுமில்லையாதலால் அவைகளைப்போலத் தாங்களும்படகேறுமல் மனத்திற்செல்கின்றவராய்ஆகாயமே யோடமாகத் தேவர்களைப்போல முனிவரும் போயினர். இவ்வகையாக அறுபதினுயிரம்அக்குரோணிசேனைகளும் நகரமாந்தரும் மாதர்களும் கங்கை பிற்படச்சென்று அக்கரைசேரக் கள்ளஆசையை அழித்துநின்று உலகமுழுதுமரசாண்ட அரசர்களை யெல்லாம் இழித்து மேற்படின்ற பரதாழ்வானும் குகப்பெருமாளைப்பார்த்து தம்பிசத்துருக்கன் தாய்மார் மூவர் சுமந்திரன் இவர்களுடன் எஞ்சியிருக்குமம்மெல்லோரையும் அக்கரையிற்கொண்டுபோய்ச் சேர்க்கவேண்டு மென்ன, அப்போது குகப்பெருமாள் சுற்றத்தாரும் தேவர்களும் தொழுகின்ற கோசலையைப் பார்த்து இவரானென்றுகேட்க, அரசர்களெல்லாம் வணங்கு முற்றத்தையுடைய சக்கரவர்த்தி மூத்தமனைவி; மூன்றுலகமும்பெற்ற பிரமனையின்றசீராமபிரானுகிய பெருஞ்செல்வம் பெற்றதன்றியான் ஒருவன் பிறந்ததனல் அச் செலவமிழந்த பெருந்தன்மையுடையவளென்றுசொல்ல, அதைக்கேட்ட குகப்பெருமாளும் அவள் பாதத்தில் வீழ்ந்து புலம்பினின்றான். அதைக்கண்ட கோசலையும் இவன் யாென்று பரதாழ்வானைக்கேட்க இரகுநாயகனுக்கு இன் னுயிர்த்தோழன், எனக்கும் தம்பிக்கும் இளையவனுக்கு மூத்தவன், குகனென்று சொல்லப்படுகின்றவ னென்ன, அதைக்கேட்டகோசலையும் மகனை இனிவருந்தவேண்டாம், துன்பத்தால் இராமன் காடுகடந்து காடுசென்றதும் நல்லதாகவே முடிந்தது; இக்குகனைடு நீங்களைவரும் ஒருதன்மையராயிருந்து இவ்வுலகையரசாளுங்கோளென்றுசொல்ல; அவளிடத்தே விடைபெற்று அவ்வன்னைக் கருதே யிருந்தானைநோக்கி இவரா ென்ன ? தன் மெய்யை நிற்பதாக்கி இறந்துபோன சக்கரவர்த்தி மனைவிகளிற் சிறந்தவள், யாவரும் வணங்கும் சீராமனுக்குப் பின்பிறந்தானு. மொருவ னுண்டென்று சொல்லும்படி அவனைப் பிரியாத இளையவனைப்பெற்ற பெருங்குணத்தா ளென்று சொல்ல; அவளையும் வணங்கி விடைபெற்றுப் பின்பு காட்டில் தன் துணைவனுகிய சக்கரவர்த்திசெல்ல, தன் மகனுகிய பரதன் துன்பக்கடலிலழுந்தி நிற்க, கடுங்கானகத்தே கருணைக்கடலாகிய சீராமன்போக உலகமுண்ட பெருவாயன் அன்றளந்த உலகமுழுதும் தன் மனத்தால் நினைந்து செய்யுங் கொடுமையாலளந்தவளை யாென்றுகேட்க, அதற்குப் பரதாழ்வான் சொல்லத்தொடங்கினன். துன்பத்தை யுண்டாக்கிவிட்டுப் பழியைவளர்க்குந் தோழியாய்த் தன் பாழான பாவிக்குடலிலே பத்துமாதந் தங்கியிருந்த எனக்கும் உயிர்ப்பாரங் குறைந்துபோகவும் உடல்களெல்லாம் உயிரில்லாதனவாயின வென்று சொல்லவும் தோன்றும் இப்பூமியில் துன்பமெனப்பட இனியதில்

லாம லிருக்கின்ற முகத்தாளைப் பார்த்தமாத்திரத்திலேயே யறிந்துகொள்ள லாமே! இவளே என்னைப்பெற்ற கைகேசியென்றான். அவ்வாறுசொல்லிய அவ்விரக்க மில்லாதாளையும் தாயென்று வணங்கி அவர்களுடன் தோணியேறி அக் கரைசேர்ந்தான். பின்பு தாய்மாரைச் சிவிகையிலேறும்படி செய்து பரதாழ்வானைகுகப்பெருமாள் தன்னைத்தொடரத் தம்பியுடன் பலகாதம்காலால் நடந்து பரத்துவாசமுனிவ ராச்சிரமத்தினை யடைந்தான். அதைக்கண்ட அப் பரத்துவாசமுனிவரும் சிலவேதியருடன் எதிர்சென் றழைக்கவந்தனர்.

குகப்படலம்

முற்றிற்று.

கினைகண்டு நீங்குபடலம்

இவ்வாறு தம்மை யெதிர்கொண் டழைக்கவந்த பரத்துவாச முனிவனை வணங்க, சந்திரசேகரனாகிய சிவபெருமானையொத்த அம்முனிவரும் பரதாழ் வானைக் கண்டிரங்கி யாசிகள் கூறி, உயர்ந்த மாமுடி சூடிக்கொண்டு உனக்கு வந்தடுத்த பேரரசுசெய்யாமல் சடைக்கற்றையையுடையவனுய் மரவுரிதரித்து இவ்விடம் வருவதற்குக் காரண மென்னவென்று கேட்டனர். அதைக்கேட்ட பரதாழ்வான் சிறிதுபொழுது கோபங்கொண்டு எனக் கடுத்தது கூறுது உமக் கடுத்ததுசொல்லாதிருப்பதுந் தகுதியன்றென்றுசொல்ல, பரதாழ்வானும் முனி வனைநோக்கி நானே முறைதவறிஅரசைக்கைக்கொள்ளேன், எம்மிறைவன்கை க்கொள்ளானையின் அவன் மேற்கொண்ட பதினன்கு வருடமும் நானும் அவ னுடனே காடேகதியாக வாழ்ந்துகொண் டிருப்பேனென்று சொல்ல, அதைக் கேட்ட பரத்துவாசமுனிவரும் அளைத்தசாந்துகொண் டப்பியதுபோல மனங் குளிர்ந்து அப்பரதாழ்வானைத் தன் பன்னசாலைக்கழைத்துக்கொண்டு அவன் சேனைக்கு விருந்தமைப்பே னென்று அங்கினியில ஆகுதியளித்திருக்கையில் துறக்க நாடேவந்ததுபோல யாவரும் முன்னையவாழ்வை மறந்துவிட்டார்கள். கெடுதலில்லாத நல்லறம் விருத்தியாயிருந்போல அந்தரவாசிகளாகிய அரம் பையர்அன்பினையுடையராய் அவ்வீரனையடைந்து சந்திரனப்போலும் விளங் கும் பளிக்கறையில் வந்துவந தெதிர்நோக்கி யழைத்துக்கொண்டு வான நீரினு லாட்டிக் கற்பக மலர்மாலையைப் புனைந்து செம்பொற்கலந்திருத்தி இனிய அமிழ்தினை யுண்பித்துப் பஞ்சசயனத்தில் பஞ்சுட்டிய பாதங்களையும் நஞ்சு தீட்டியகண்ணையுமுடைய மாதர்கள் மான்போன்றுறங்க அத்தனைபேரு முறக் கங்கொண்டார்கள். இவ்வாறு அரசர் முதல் சிவிகையைக் காவுவோர்வரை யிலுமுள்ள் யாவரும் தத்தமக்குரிய வரிசை வழுவாமல் தெய்வ மகளிர் கொண்டாடத் தேவபோகத்தை யடைந்தனர். மாதர்களும் தேவமாதர் செல்வத்தை யனுபவித்தனர். வாடையும் கற்பகச்சோலையின் மணமுகந்து மெல்லென வீசிற்று. மயங்கின வண்டின் கூட்டம் மதசலமருந்தின, தேன் மணங் கமழ்கின்ற கவளத்தையும் செங்கதினைத்தரும் நெற்கதினையும் கற்பக [illegible] ஞண்டன, நரகத்தின் வழிச்செல்வோர்க்கு அறத்தைத்

தரும் நீரைத் துதிக்கையையுடைய கோபமுள்ள யானைகள் காலை நிமிர்த்துண்டன. மரகதக்கொழுந்தென வார்ந்த புலவுக் குதிரைக் குழாங்கள் அருந்தின. இன்னவிதமாக உயர்திணை அஃறிணைப்பொருள்கள் இந்திரபோக மனுபவித்தன. இவ்வாறிருக்கையில் பரதாழ்வான் சிராமபிரானுண்டு வருவது போலத் தானும் காய்கனி கிழங்குகளை யுண்டு அன்று தன் அழகிய மேனி புழுதியிற்படப் போக்கினன். இன்னவிதமாக அந்த இராத்திரி யெல்லாம் நீங்கலும் நீங்குகின்ற அக்காரணமில்லாத கனவிற்சிறந்த செல்வமுற்றுப் பெற இயைந்த கல்வினை யனுபவிப்பவர்க்கு ஒன்றுமில்லாத காலம்போலச் சூரியனுமுதயமானன். காமசமாகநின்று அறஞ்செய்யாதவர் வாழ்வுபோலச் செல்வம் மாறிப்போக வருந்தாதவாய் உடன்மாறிப் பிறந்தாலொத்து முன்னைச் சிந்தையுடையவராயினர்.

சூரியன் எழுந்ததுகண்டு சேனைகளையல்ல இதுகடலேயென்று தேவர்கள்கண்டு மயங்கவும் போமவழியிலுள்ள சோலைகளும் மலைகளும் சுண்ணமாகவும் பரதாழ்வானுடன் செலலும் சேனை பாலைவனமடைந்தது. திசையெங்குமெழுந்தன. அதனல் வெப்பமுள்ள சூரியனும் தன் வெப்பநீங்கினன். யானைகள் மதம்பொழிவதனல் சனங்கள் காலடிவைத்துப் போகமாட்டாமல் வருந்தினர். கூர்மையுள்ள வேலைத்தாங்கிய அரசர் வெண்குடை மராமழலைப் போல நிழலைச்செய்தன. தீபோறியானது பூமியிற் கிடக்கும் பருக்கைக் கற்கள் உள்ளபாறைமேல் உயர்ந்த கொடிகளால் பந்தலைப்போலக் குளிர்ந்தன. பெருகுகின்ற செல்வத்தை நீ பிடியென்ற தன் தாயாகிய கைகேசியினிடத்து மாறுபட்ட கோபத்தால் செம்மையாய் நிறங்கருகிய பரதாழ்வானைக்கண்டு உலவைக்கூட்டம், காதலால் உருகித் தளிர்த்தன ; பாலையை மருதமாகவே யெண்ணிக்கொண்டு நடந்தசேனை சித்திரகூடஞ் சேர்ந்தது. இவ்வாறுவருஞ் சேனையின் கோலாகலத்தை இளையவன் மலையின்மேலேறிப்பார்த்துப் பெருங் கோபங்கொண்டு இதென்னவிபரீதம்! தன்னுள்ளத்திற் பகைவைத்துக்கொண்டே வெளிக்குபபட்சம்காட்டி இப்பரதன் படைகூட்டிக்கொண்டு விரதமேற் கொண்டிருந்த சிராமபிரான்மேற்பகைகொண்டுவந்தானென்று அம்மலையினின்றும் குதித்துப் பூமியிலுள்ள மலைகளை நீறுப்பொடியாகமிதித்துச் சிராமபிரானை வினைந்தடைந்து நமது பரதன்சேனையைக் கூட்டிக்கொண்டு போர்க்கோலங் கொண்டுவருகிறான். நம்மைச் சிறிதுமமதித்திலனென்றும் உடைவாளை யிறுக்கிக் கட்டிக்கொண்டு வீரகண்டாமணியையும் பலசரங்கள்நிரம்பிய புட்டிலையும் தரித்துக் கவசமணிந்து வரிந்துகட்டிய வில்லேந்திக்கொண்டு சிராமபிரானை அடிவணங்கி நின்றதைக்சொல்வானுயினன். இரகுநாயகனே! இம்மை மறுமை யென்னு மிரண்டையு மிழந்த அப்பரதனுடைய தோட்பருமையும் அவன் படைத்த சேனையின் பெருமையும் உன்னெடுபிறந்த என்னெருமையும் காண வேண்டுமேறன். படாத துன்பமெல்லாம்படப் பிறந்த யானைத்திடர்கள் உருண்டு கிடக்கவும் தேர்கள் இழுத்துக்கொண்டு போகவும் குடர்களெல்லாம் திரைத்துகிடக்கவும், உதிரவெள்ள மோடவும், காலாட்கள் அம்பைடைகளும் க்கைகளும் துண்டமாகக் கவசமணிந்த மார்புதனைக்[illegible]

உதிரத்தையும் தோயாமல் சுடுகணைகள் திசையானைகளையும் பயப்படும்படி செய்கின்றேன். யானைத் தந்தத்தாற்செய்த மேகலைகளும் முத்துமாலைகளும் பொற் றகட்டினிடத்தே அலைகளற்றுப்போன கேடகத்தை யணிந்த தடங்கைகள் காலக்கொண்டு சங்கிரமபாடி ஓடக் கடிப்பதையும் இயற்றையுடைய சேனைவெள்ளத்தை இமைப்போதிற் கொன்றுகுவித்து வின்முதுகு கெளியவும் மண்முதுகு ஆற்றிக்கொண்டிருக்கவும் படையெலாம் இப்படிப்பட்ட இரத்தவெள்ளத்தினமல் நீந்திக்கொண்டு மெய்சிவந்த குரள்களும் பாரிடமும் கவந்தமும் இவ் வுலகமுழுதும் சீராமபிரான் வசமாய்ப் போய்விட்டதே யென்று ஆனந்தக்கூத்தாடவும் பாக்கலாம். நெற்பிடாட்டமணிந்த யானைக் கூட்டங்களும், குதிரைக்கூட்டங்களும் காலாட்களும் யுத்தகளத்திலே மடிய வீழிமலர்போனற சிவந்த உதிரத்தால அலையாபுடைய கடலகளிழுபொன்று பட்டு கின்று ஒலிக்கவும் காணலாம். மேலுங்காலாட்களிழுபியவும் வீரருடைய கைவாளற்றுபோகவும் விறகள்துணைடாகவும் யானைகளதாளற்றுபோகவும் குதிரைகள் தலைகளற்றுபோகவும் சில வீரருடைய தாளும் தோளுமற்றுப் போகவும் கான் வடிக்கணை தொடுபடேன். இதுநிற்க ;

இச்சேனையை கடத்திவந்த அப்பரதசத்துருக்குருடைய மார்பை யூடுருவிக்கழுகிறருபூணை ழுதலில பொன்வடிம பிழைத்துள்ள என் பாணங்கள் துவாரமாக்கிப் போகக் காணலாம். அபபரதனை கைகேசி சூழ்வினையால் உலகமுழுதும் வருத்தமுணடாக்கிய அத்தபாதனை கட்டளையால தானபெற்ற இருநிலத்தை ஆளுவதாழிந்து இனறைனகட்டளையால காகத்தையே யாளச் செங்கோல் கொடுக்கினறேன் பாரும; உலக முழுதும் அறத்துவிட்டு கீர் காட்டிலவந்துவிட்டதைக்கண்டு வருந்துகின்ற கோசலையானையின்வருத்தங்கணடு சஞ்தோஷிக்கிற கைகேசி தன் மகன் பட்டதுகணடு வருந்தியழுவதையும் பார்க்கலாம். மேலும் ஒருகொடிபோழுதிலேயே இக்கடலேபான்ற சேனைவெள்ளத்தை மாடு துருவிச்செல்லும வடிக்கணையொன்றினல் கான்வெந்நிகொணடு திரிபுராந்தகனைப்போல விளங்குவதைப் பாருமென்று சொல்லிக்கொண்டிருக்கையில் சீராமபிரான் இளையவனைப பார்த்து தம்பீ! இப்பதினன் குலகத்தையும் நீ கலக்குவேனென்பதை யெண்ணினல் அதை விலக்குவ தரிது, அதைச் சொலலவும வேண்டுமோ! உன் மனத்திற்குரிய மெய்மையைச் சொல்கின்றேன்கேள். நமதுருலத்தாரோ குற்றத்தினின்று நீங்கினர் எண்ணிப் பாக்கையில் யார்தான்யாண்டுமுடிவெய்துவா? தருமதவறினரும் உண்டோ? வேதங்களெத்தனையோ அதனையும் தமபிபரதனுடைய செய்கைகளேயாம், அவற்றிற்கூறுதன அவன்செய்கைகளாகக் கொள்ளப்படமாட்டா, அதை நீன் னிடத்துவைத்த மிக்க அன்பினல் சிறிது மெண்ணமம விருக்கின்றாய் ; பரதன் என்னிடம் சேனைகளைக் கூட்டிக்கொண்டு போர்க்கு வந்தானென்று நினைக் கின்றயே! அவனென்னேடும் போர்செய்ய வந்தானென்று நீயும் நினைக்கலா மா! அப்பரதனை தரும தேவதை, நடுவு நிலைமைக்கோருணையாணி, அவனை இப்படியும் நினைக்கப்போமா! என்னைக் காணும்போருட்டே இவ்வளவு தூரம் தேடிவந்தானென்றறியினைச் சொல்லிக்கொண்டிருக்கையில்பரதாழ்வான்தன்

சேனையைப்பின்னேவரக் கட்டளையிட்டுத் தன்னைப் பிரியாத தம்பியாகிய சத
துருக்கனைழ்வானே யழைத்துக்கொண்டு தான் முற்படக் கைகளையுயரவெடுத்
துக்கொண்டு துன்பமே யொருவடிவங் கொண்டதென்று சொல்லும்படி வந்
தான். அவன்தூரத்தே வருவதைப் பார்த்தசிராமபிரான் வில்லேந்திக்கொண்டு
போர்க்கோலங் கொண்டிருக்கும் இளையவனே! நீபரதன் போர்க்கோலங்
கொண்டுவந்தானென்றுயே! அவன்கொண்ட போர்க்கோலத்தை யுற்றுப்பா
ர்த்துதம்பிக்குக்காட்ட, அதைக்கண்டஇளையவன்ஒளியிழந்தமுகத்தையுடை
யானுய்ப் பரதாழ்வானே வைத சொல்லும் உணர்வும் கோபமும சோரவிலலை
யெறிந்துவிட்டுக் கண்ணீர் பூமியிற்சிந்த நின்றுன். பரதாழ்வானே குற்றமறத்
தவஞ்செய்து குறிப்பிலுலகடைந்த நாயகனைப் பிரிந்துதலத்தினீங்கிய வேதனை
மேற்கொண்ட நிலமகள் பொருட்டுவருகின்ற தூதனென்று சொல்லுமபடி-த
தோன்றி இறந்ததாதையை யெதிர்கண்டாற்போலச் சீராமனேப்பார்த்து நீ அற
த்தைநினைந்தாயிலலை! அருளீங்கினே! முறைமையு மாறிவிட்டனையென்று
சொல்லிக்கொண்டே தன்னேமறந்து அச்சீராமபிரானது மலர்போன்ற பாதங்
களில்வீழ்ந்து வணங்கியபிருண்டோ இலலையோவென்றுசாலல உயிர்ப்படங்கி
நின்றுன். அதைக்கண்ட சீராமபிரான் கலைந்திய தாமரை மலரினின்றும
பொழிகின்ற துன்பக்கணணீர அபரதாழ்வானுடைய சடாமகுடநிறைது
வழிந்துபோகப் பெருமூச் செறிந்து அழுத கண்ணீரருவி பெருக மாபிலிறுக
வணைத்துக்கொண்டு தபாமூலந்தன்மத்தைத் தழுவிஞற்போலத் தழுவினறு
அப்பரதாழ்வானேகொண்ட வேடத்தைக்கண்டு பொருமி விம்மித் தயபியாகிய
பரதனே அப்பா! பரதா! வாளேந்திய தோளையுடைய நமது பிதாவானவர
சுகமா யிருக்கின்றனரோ வென்றுன். அதைக்கேட்ட பரதாழ்வான் சீராம
பிரானேப் பார்த்து அண்ணு! அவர உன் பிரிவென்கின்ற நோயாலும் அதற
யினது கொடிய வரமாகிய யமனுலும தனக்குரிய பெய்யை நிறுத்திக் தான
பரமபதஞ் சென்றுனென்ற வெய்ய சொலலைக் கேட்கவே, சீராமபிரான் புண்
ணில் வேலசொருகியதுபோல கண்ணும் மனமுங் கறங்கேபோற் சுழலும்படி
மண்ணிடை வீழ்ந்துபுலமபிச் சிறிது முயிர்ப்பிலலாமல் இடியோசைகேட்ட
நாகம்போல் வருந்தி யுணாவொழிந்து பலவிதமாகப் புலம்பலானன். கெடாத
தீபம்போன்ற நாயகனே! உலகமுழுதுக்கும் தந்தையே!,ஒப்பில்லாத தனி
யறத்தின் தாயே! தயைக்கிருப்பிடமே! எந்தையே! பகைத்த அரசர்களா
கிய யானேகட்குச் சிங்கம்போன்றவனே! நீஇறந்துபட்டாயோ! இனி வாய்மை
யைக் காப்பவரா ரிருக்கின்றனர். வேதங்கள் சொல்லுகின்றபடி வழுவாமல
யாகஞ்செய்யவல்ல கலேக்கோட்டு முனிவனைக்கொண்டு புத்திரகாமேட்டி
செய்து என்னே மகனைகப்பெற்றது நீ உன் இனிய உயிரை இழக்கவேவா! உயிர்
களேக்காத்துவரும் அரசபாரநான் சுமந்துவர நீ யுடமபினேவிட்டது இவ்வகை
யோ! நான்உன்னுயிரக்ருயமனுகவேதான்றினேனல்லவா! இவ்வரசுரிமையை
என் பாரமாக்கி இந்தியங்கள் அவமாகக் கழிபத் தவஞ்செய்தது இதன்பொரு
ட்டோ? வேண்டுகின்ற திறத்தினுல் யாரும் வேண்டாத அரசாட்சியை மேற்
கொண்டு இவ்வுலகத்திற் கிடனையே பெருக்கிய புல்லறிவினையுடையேனுகிய

யான் மாண்டு முடிவதையல்லாமல மாயாத வுடமையைக்கொண்டு ஆண்டுவருவ தினி யாருடைய முகத்தை நோக்கிக்கொண் டிருப்பதற்கு? யான் திரு வயோர் த்தினை விட்டுக்காட்டுக்குப் போய்விட்டேனென்று கேள்விப்பட்ட மாத்திரத் திலே பொறாது வானடைந்தாயே! அடியேன வாழ்வு விரும்பி யுயிர்வாழ்ந் துகொண் டிருக்கின்றேனே, குளிர்ச்சியைச் சந்திரனுக்குங் கொடுக்கும்கண்ணனி யையுடையானே! ரகையும் மானமும் மேலே தேவர்களாலும் போக்க முடி யாத வன்மையும் செம்மைகானெறியும் கெடாத வுணர்வுமென்று சொல்லப் படுவனவற்றை நீயுடன்கொண்டுபோய்விட்டாயோ! வென்று பலபலவிதமாகப் புலம்பிக்கொண்டிருந்த இருகுகாயகனைத் தம்பியாசூவரும் மற்ற அரசரும்தாங் கிக்கொண்டார்கள். வசிட்டமுனிவரோ அவ்விராகவனைத் தேற்றினார். அத்தரு ணத்திற் சொல்லற் கரிதாகிய கோன்பிழையுடைய பரத்துவாச முதலியமுனி வரும் அமைச்ச அரசாகளும் மந்திரிமாகளும் பிறரும் வந்தேசாந்தார்கள். சிராம பிராணப்பார்த்து வசிட்டமுனிவா அபா! இராமா! குறைபதுடையலறத்துணை யுமையல்லாமலேவறுதுணை யென்பதுபிசகட்குங் கிடையவேகுடையா து, உண் மையிலே பிறவிகள் பலகோடியெனத்துணிபாயிடும. அவை குணமையுமவம் மையும் குழவினவென்கின்ற வுணமையை நோக்கிய யாவரிடத்திற பொறுமை யிருக்கினறதென்று நினைக்கலாமோ! மேலும அறுபதினாயிரவருடம இவ்வுலக த்தையரசாண்டஉன்தகப்பனைக்காகநீயிரங்குவதுமதியாயமாமோ' இதுவுமன்றி * திரிமூர்த்திகளும காலமெனனு மொரு வலியைக் கடபடாதகளா! கண் முதலாகிய காட்சிகளுக்கு விடயமாவனவும் கரையிலலாத கீளமுடையனவும், உள்பொருட்கெல்லாம ஊற்றமாவனவுமாகிய மனமுதலாகிய பூதங்கள் மாய மெனறபோது எணணறு முதற்பொருளாகிய உயிர்க்காக நீயிரங்கலாமோ! † புணணியமாகிய நறுநெய்யும காலமாகிய திரியும விதியாகிய தீயுமாகிய விள

* நிலமுந் தருவுமுந் சிதையில செயகையுமே
சூலமுந் திகிரியுந் சொல்லுந தாயிய
முலடவம் துதவிய மூவாக காயினுமே
காலமென் றிருவலை கடக்க லாருமோ.

இ - ள். ஒழுக்கமும் அறனும கேழ.ல் செய்கையுமுடையராய சூலப்படையும் சக்கரமும் வாக்காயுதமுந தாங்கிய முதற்கடவுள் உதவிய மூவாக்காயினும காலமென்ற தேர்வலை கடதறபாலதாந் தன்மையோ எனக.

மூலம் - முதற்கடவுள். மூவர்-பணடதது காத்தல் அழிதலென்னு முத்தொழில் கடாத்து மிறைவர்.

ஆயினும் என்னும் உம்மை உயர்வுசிறப்பு, ஏகனய என்ன. காலத்தை வலியாக உரு வகஞ் செயப்பட்டது. இது எதிர்நிரணிறை. ஓ எதிரமறை. நிலமும் சொல்லும் தருமமும் திகிரியும், சிதைவில் செய்கையும் சூலமுமுடையாா முறைமே பிரமன் மா லுருத்திர னென்னு மிறைவர் மூவா; அவர் பரமபொருள வம்மூர்த்தாறலின மூலம்வந் துதவிய மூவரென்றும், அவர்களுங் கற்பாந்தகாலத தொடுபகலின காலமென்றிரு வலைகடக்க லாருமோ வென்றுங் கூறினர்.

† புண்ணிய நறுநெயிற் பொருவில் காலமாம்
திண்ணிய திரியினில் விதியென் றீயினில்
எண்ணிய வின்வகை யிரண்டு மெஞ்சிலை
அண்ணலே யவிவதற் கைய மாவதே.

க்கில் நிரியும் நெய்யும் எஞ்சினல் தீ யவியாமற் போய்விடுமோ! இந்த வுலக த்திலும் இடரிலே கிடந்து அந்த வுலகத்திலும் நரகத்திலாழ்ந்து பின் வெவ் வினை யனுபவிப்பனவாகிய விரிந்த யோனி பேதங்கள் இவ்வளவினவென்று எண்ணப்படுமோ! ஆகையால் நீ சிறிதும் வருந்தவேண்டாம், இதைப்பார்க்கி லும் அவர்க் குய்யுந் திறமுண்டோ! செய்யத்தக்க கருமங்களையெல்லாம் செய்துமுடித்து உன்கையால மும்முறை எள்ளுநீரும் கொண்டு தருப்பணஞ் செய்யவேண்டுமென்றார். இவ்வாறு சொல்லவே சீராமபிரானைத் தாங்கிக் கொண்டு அரசெல்லாந் திரண்டுபோய்ச் சேர்ந்தனர். வசிட்டமுனிவரும் அவ் விடத்திற் சென்றனர். உடனே இரகுநாயகன் நீரில் முழுகி யெழுந்து வசி ட்டமுனிவர் தந்தைக்குரிய கடனைச்செய்ய மூன்று கைநீர் விதிமுறை விடு த்துப் பின்னுஞ் செய்யவேண்டிய கருமங்களெலலாஞ் செய்துமுடித்தான். பிறகு இரகுநந்தனன் மந்திரத்தவரும் மாதவரும மன்னவரும் பிறரும் சூழச் சானகியிருந்த சாலையை யடைந்தான். அபோது தனியே நடந்துவந்த பரதன் தன்கைகளாற் கண்ணிலறைந்துகொண்டு அவ்வன்னை காலில் வீழ்ந்து அழ அதைக்கண்ட இரகுவீரன் அவனைத் தாங்கிகொண்டு சீதையைப் பார் த்து அரசர்பெருமான் அணபிலை இறந்துபட்டானென்றான். அதைக்கே ட்ட சானகி கணணென்னும கடல பெருங் கலுழினையைச் சொரிய மன்னென் னுஞ் செவிவித்தாய்மேல் வைத்த கையை யுடையளாய்த் தன் கணவன் பின் னே நடந்துவருதமையால் தனக்குக் காடானது திருவயோத்தி நகரத்தையே யொத்திருந்த தாயினும் மன்னாபெருமான் இறநதுபட்டானென்ற சொல தன்செவித் தொளையில புகுருதமையால துயரமாகிய கடலுக் கடிவைத்தாள். அதைக் கண்ட முனிவாகளுடைய கருமப பத்தினிமாகள் அவளைத் தங் கையா லேந்திக்கொணடு நீராட்டித் துயர மகற்றி இரகுவீரனிடத்திலே சேர் த்தினர். அப்போது மந்திரியாகிய சுமந்திரன் இரகுநாயகனை முதலிய கால் வனாயும் பெற்ற தாய்மார மூவருடனேவநது அவ்விரகுநாயகனை வணங்கி நின் றான். இரகுவீரனை தனக்கு முன்னே யெழுநதருளிய தாய்மார மூவனை யும் பார்த்தருளி அவாகள் பாதங்களில வீழ்நது வணங்கி 'எந்தையா ரொங்

இ - ள். புண்ணியமாகிய நல்ல நெய்யினுனும ஒப்பிகந்த காலமாகிய தின்னிய திரியினுனும விதியென்கின்ற தீயினுனுமாகிய எண்ணப்பட்ட விளககில் அவைக ளிரண்டும் குறைபடின், பெரியானே! அவ்விளக் கவியுதற்கையமாவதுண்டோ என்க.

ஒருயிர்தான்செய்த புண்ணியம்பற்றியே மனிதவுடலெய்துவதனுற் புண்ணிய நறு நெயிலென்றும், காலமென்னும் அருவப்பொருள் உலகியல நடாத்தற்பொருட்டு ஆதித் தன்முதலிய அளவைகளாற் கூறப்படுவதல்லது தானுகக் கூறப்படாமையின் காலமாந் தின்னிய திரியென்ற மாத்திரையொழியாது பொருவிலென் றதனையடைகொடுத்தும், தீத்தன்னைப் பற்றினுனைக் கெடுப்பதுபோலத் தன்னை யாக்கினுனைக் கெடுத்தலின் விதி யென் தியினிலென்றும், விதியாகிய தீயும், காலமாகிய திரியுமெஞ்சியவழிப் புண்ணியத் தானைய மனிதவுடல்விட் டொழிந்து உயிர்நீங்கலின், என்னிய வின்னவையிரண்டு மெஞ்சினுல் அவிவதற் கையமாவதோ வென்றுங்கூறினர்.

* இது இயைபுருவகம். அண்ணல் - ஆருபெயர், பெரியான். பொரு - ஒப்பு. எஞ் சல் - குறைதல், அவிதல் - கெடுதல்.

குற்றூர் சொல்லுங்கோள்' என்று கேட்க, அதைக்கேட்ட தாய்மார்களும் கதறியழத் தொடங்கினர். அதைக்கண்ட சேனைகளும் மாதர்களும் அழுது புலம்பினர்கள். பின்பு தாய்மார்கள் மூவரும் சானகியைக் கட்டிக்கொண்டு புலம்பி யழுது நின்றார்கள். இவ்வாறிருக்கையில் சேனைத்தலைவரும் நகரமாந்தரும் மற்றையோரும் அரசர்களும் மாதவரும் கூடிக்கொண்டு சிராமபிரானிருந்தவிடஞ் சென்று சேர்ந்தார்கள். இங்ஙனமாகவே சர்ப்பசயனந் துறந்து திரு வயோத்தியிற் பிறந்த இரகுநாயகன் தன் குலத்தே தோன்றிய இறைவனைகையால் சூரியனும் அவனைப்போலத்தானுமதனக்குரிய கடன்செய்யுமபடி. நீன்முழுக வேண்டினன்போல மேற்றிசைக் கடலில் முழுகினன்.

அத்தினங் கழிந்த பிறகு அரசர்கள் கூட்டமும சேனைக் கூட்டமும் மாதர்கள் கூட்டமும சூழ்ந்து இருந்த பரதன் இளையவன் சத்துருக்கனனும் தம்பிமாரும் புடைசூழ இரகுநாயகன் வீற்றிருந்து பரதனைப்பார்த்து நமது பிதாவோ இறந்துபட்டனன், பூமி முழுதும அவன் ஆணையால் உனதே யாயின, நீ விரதவேடங் கொள்வானேனென்று கேட்க, அதைக்கேட்டு மனம் பதைபதைத்தழுந்து கைகூப்பிக்கொண்டு நின்று,இரகுநாயகனைப்பார்த்து நீயல்லது அறத்தினவழிநிற்பவர் யார்! அதைத் தவறலாமோ! மனத்திற் பொருந்தாத வரத்தினால் உன்னையும் உனக்குபபொருந்தாதநிலையில் நிறுத்திய சக்கரவர்த்தியினது மனத்திற்குப் பொருந்தாதவளாகிய கைகேசிபெற்ற மகனுகையால் எண்ணிப்பாக்கையில் தவம அடுபபது எனக்குப்பொருந்தாதே! உலகமுழுவதும் நோவதாக நோய்மூட்டிய பாவகாரியாகிய கைகேசி பெற்ற பாவியாகையால் நான்சாவவுமறியேன், தவஞ்செய்வானுமல்லேன்,யார்தானுகி இப்பழியினின்றும் கரையேறுவேன், கற்பினைநீங்கிய மாதர்நிலைமையும் பொறுமையினீங்கிய தவமும் அருளாகிய துறையினீங்கிய அறமும தொல்லையோர் முறையினீங்கிய அரசினும முந்துமோ! நீ பிறந்தநாளுலுள்ள பிரிவில்லாத தொன்மையான அப்பதத்தைத்துறந்து மாதவஞ்செயத் தொடங்கினையென்றால் மறந்து நீதியினின்றும் மாறுபட்டு வாளிற்கொன்று அறத்தைத் தின்றாற் போல அரசாளத் தொடங்குவேனே! உன்னிடத்தே போன்பினாலே அரசர் பெருமான் இறந்துபட நீகாடேவாழ்க்கையாகப் புறப்பட்டுப்போகவஞ்சகனைப் போல இவ்வரசாட்சியைக் கைக்கொள்ள நீயில்லாத சமையத்தை நோக்குவதற்கு நான் பகைவனே! உன் தாயைசெய்த தீமையும் உலகமிதுவனையு மடையாதநோயைத் தந்த தாய்செய்த பெருந்தீமையுநீங்க நீயிங்கிருந்துமீண்டு போய் அரசாள வேண்டுகின்றே னென்று தன் கருத்தைத் தெரிவித்தான். இப்படிசொன்ன பரதாழ்வானுடைய கருத்தைச் சீர்தூக்கிப்பார்த்த இரகுநாயகன் இவன் எண்ணம் இப்படியா யிருக்கின்றது! என்று அவனைப்பார்த்துச் சொல்வானுயினன்.

உலகத்திலே முறையும்வாய்மையும்நீதியும் மேன்மையும் அறமு முதலிய யாவும் சுருதிநூல் விடாத இறைவர்கள் ஏவலினுற் பொருந்துவன வென்று தெரிந்துகொள்! மேலும் மேலான கேள்விச் செல்வமும் ஞானமும் ஒழுக்க

மும் வினையின் மேன்மையும் நாம் தொழற்குரிய கடவுளரும் நம்மை மீன்ற இருமுது குரவனென்றே தெரிந்துகொள், ஆகையினல் 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்றும், 'தாயிற் சிறந்தொரு கோயிலு மில்லை' என்றும் பெரியோர்கள் சொல்லியிருக்கின்றனர். தாய்வரம் பெற்றுக்கொள்ளத் தக்தையினது ஆணையால் நமது குலதருமமாகிய சத்தியவாக்கிய பரிபாலனஞ் செய்யமே இக்காடுவந்து சோந்து தவஞ்செய்வதாகிய அறத்தை மேற்கொனே டேன், அதை நீ தவிர்ந்து அரசுபுரிய அழைபபதுக் தகுதிமீயா? மக்களாவார் கடமை தாய் தக்தையனைப் புகழுக் குரியராகச் செய்வதோ; அலலது பழி தூணுமபடி செய்து முடிப்பதோ! இமமையிலே பொய்புனைந்து உலகத்தில உலோபியாகச் செய்துவிட்டு நமது தந்தைபை மீளாத நரகமாளுமபடி யாக்கி நான் மாதக்க ளின்பநல பனுபவித்து அரசச்செல்வம் பெறுவதுவோ தகுதி! வாதத்தினல் நமது தந்தைசொல மரபிலை வந்த பூமி முழுவதும் உன்னதே யென்று சொலலிவிட்டமையால் இவ்வர சுனக்கே யுரியது நீயே யாளவே ண்டுகின்றே னென்றான். அதைத்கேட்ட பரதாழ்வான் என்முன்னே வந்து பிறந்து உலக மூன்றினும் மின்னே பொபடுனைக்கப்படாத நீ பிறந்த இவ்வரசுரி மை என்னிதன்று நீ சொலலுதானல அவ்வரசுரிமையை நானே கொடுத்து விட்டேன்; நீமகுடாபிஷேகஞ் செய்துகொணடி ருக்கின்றனன், அதுவனையும் எனக்கு நீகொடுத்த அவ் வரசுரிமை முழுதும் என்றலோ கடவாதபடி நீயரசாண்டு வரவேண்டுகின் றேன். இதுநிற்க; நான் சக்கரவாத்தி யிருக்கையிலே 'மூத்தோ சொல்வார்த் தையமிர்தம்'என்றபடி அவரிடட கட்டளைக்கஞ்சி யொப்புக்கொண்டேனே, அப்படியேயும நானசொனனபடியேகேட்டு நடக்கவேண்டுமெ, நான் சொன்ன படியே செய், துபரப்பட வேண்டாமென்று சொல்ல, அப்படி சொல்லிக் கொண்டிருந்த பரதாழ்வானைத் தடுத்துவிட்டு வசிட்டமுனிவர் சொல்லத் தொடங்கினர்.

முன்னளில் திருமாமகள் கொழுநனகிய பகவான் தன்னதியஞ் சோதி யுருவை யங்குவைத்து இக்கடலிடத்தி லின்றும் ஆதிவராகத் திருவுருவாய் இங்குத்தோன்றி இப் பூப்பிராட்டியைத் தன் வெண்கோட்டிற்சந்திரனிடத்தே யுள்ள மறுவைப்போல ஏந்தி விளங்கினன். அப்படிப்பட்ட காலத்தில் ஐம் பெரும் பூதமும் வெளியொழித் தெனவையும் புகுந்தபின்பு இறையனும் மீனை யும் கட்டவைப்படைத்து அதில் அறிதுயி லமர்ந்தருளினன். அக் கடல்வண்ணனைப்

பெருமான் தன் உந்தி மலரிற் றோன்றிய நாற்றிசைக் கமலத்தி லிருந்தும் வினைந்து யாரையும படைக்கப் பிரமதேவன் அவதரித்தான். அன்று அவனை படைக்க ஆகிய இவ்வுலகமுழுதும உன்குலத்திற் பிறந்த அரசர்கள் இன்று வரையிலும் முறைதவறுமல அரசாண்டுவருதாகள். ஆயினும் நான் உனக்குச் சொல்லவேண்டிய தொன்றிருக்கின்றது, அதைச் சொல்லுகின்றேன் கேள்! உலகத்தில் ஐம்பெருங் குரவனென்று நீதிநூல்கள் எடுத்துச்சொன்னவற்றில் இம்மை மறுமையென்னு மிரண்டையும தரும் கல்வியைப்போதித்த போதகாசிரியனே சிறந்தவனென்று சொலவார்களே. நான்உனக்குவேண்டிய சமஸ்த வித்தைகளையும் கற்பித்தேன், அது பெய்மையாலைபால என் சொற்படி நீயுனக்குரிய காட்டிற்குவந்து அதைக்கைபபற்றிக்கொன டரசாளவேண்டுகின்றேன் என்று சொலலிமுடி-த்தார். அதைக்கேட்ட காகுஸ்தவமதோ தான் வசிட்டமுனிவனைத் தாமரைமலைபபழித்த தமதுகைகளாலதொழுது வணங்கிப் பெரியோரே யாகட்டும, தன்னசிரியரே யாகட்டும், தாய்போன்றவரே யாகட்டும், தமது மக்களே யாகட்டும், பிரமதேவன் பெற்ற சிறுவனுகிய எமதுகுலதெய்வமே! நானின்னது செய்வேனென்று ஒப்புக்கொண்டபின்பு அதைமறுத்துப்பேசுவதுந்தகுதியாகுமா! தாய் அன்றுவரங்கொள்ளவிசைந்து தகதை மகிழ்ந்துசெய்யக் கட்டளையிட்ட எப்பொருளும் நானே செய்வேனென்று ஒப்புக்கொண்டபின் பதைச் செய்யாதிருப்பதைப் பார்க்கிலும நாயகத் திரிவதேதல்லது, முன்னமே அவர்கள்கட்டளையிட்டபடியே அதைச் செய்வேனென்று ஒப்புக்கொனடபின்பு இப்போது தேவரீர கட்டளை பிறந்தது! நான் எப்படிச்செய்யமனக துணிவேனென்றனன். அதைக்கேட்ட பரதாழ்வானும் அப்படியானலை நாடு ஆளவேண்டிய கருத்துடையவாகள் காட்டை யரசாண்டு வரட்டும், நான் காட்டிலிருந்துகொணடு தவஞ்செய்கின்றே னென்றான். அச்சமையத்தில் தேவர்களெலலாரும இபபரதாழ்வான சிராமபிரானை யழைத்துக் கொண்டுபோய் விடுவானனல் நமக்குக் காரியக்கேடாய் விடுமேயெனறுகாயத் தின்மறைந்துகொணடு நின்று புகழுவரிய பெருங் குணத்துப் புனடரீகக்கட் புரவலனுகிய சிராமபிரான இங்கே தன் தகதைசொற் கடவாமல பதினைலாணடும் வனசஞ்சாரஞ் செய்தே வரவேணடும், அதுவனையிலும நீ அவனசொற் கடவாமல இவ்வுலகமுழுதுமே அரசாண்டு வரவேண்டுமென்று பரதனை நோக்கிச் சொல்லினா.

அதைக்கேட்ட இரகுநாயகனும தேவாகளும தன்கருத்தையே சொனனமையால் இனி மறுப்பது தகுதியல்ல, இதுவனையிலும நீனன்றனை யைக்கடவாமல் அரசாண்டு வரவேண்டுகின்றே னென்று பரதன் கையைப் பிடித்துச்சொல்ல, அதைக்கேட்ட பரதாழ்வான் இரகுநாயகனை பபார்த்துத் தேவரீர் கட்டளையின்படியே நான் பதினலாண்டும் நாடடைந்து அரசாண்டுவந்தாலும, பதினலாண்டுங்கழிந்ததே நீயெழுந்தருளி அரசாட்சியை மேற்கொள்ளமாட்டாயின் யான் அக்கினிப் பிரவேசமாவது சத்தியமென்றனன். அதைக்கேட்ட இராகவபிரான் மிக மகிழ்ச்சி பெருகி அப்படியே யாகட்டுமென்று சொல்ல, பரதனும் வேறுசெய்யவகையறியாமல் தேவரீதிருவடிநிலைகளாகியதிருப்பாதுகங்களை

ண்டையும் எனக் களித்தருள வேண்டுமென்றே வேண்டிக்கொள்ள, எல்லாச் செல்வமும் தருவனவாகிய அத்திருப்பாதுகங்க ளிரண்டனையும் பெற்றுக்கொண்டு அழுதகண்ணும் சிந்தியழுக்குமாய் அவைகளைத் தன் முடிமேல் எழுந்தருளப்பண்ணிக்கொண்டு இராகவபிரானிடத்தே விடைபெற்றுக்கொண்டு தாய் மாரும் மாதவரும் பெரியேரும் சேனைகளும் தம்பியும் தன்னைச் சூழ்ந்துவரச் சென்றான். வசிட்டமுனிவரும்பரத்துவாசமுனிவரும் குகப்பெருமாளும்சிராம பிரானிடத்தே விடைபெற்றுக்கொண்டு சென்றனர். ஆகாயத்தில் மறைந்திருந்ததேவர்களும் போய்விட்டனர். பரதனும் அத்திருப்பாதுகங்களைத் தலைமேற் சுமந்துகொண்டு கங்கையைக் கடந்து திருவயோத்திக்கணுக்கமான நந்திக்கிராமத்தி லெழுந்தருளி யிருந்துகொண்டு திருப்பாதுகங்களே செங்கோல்செலுத்திவரப் பஞ்சேந்திரிய நிக்கிரகஞ்செய்துகொண்டு அல்லும் பகலும் கண்ணீரருவிபோலப் பெருக்கெடுப்பத் தான் தென்றிசையே நோக்கித் தமபியுடனிருந்தான். இப்பால் சித்திரகூடத்திலிருந்த இரகுநாயகன் நகரமாந்தரும் தம்பியரிருவரும் தாய்மாரும் நம்பால் வைத்திருந்த அன்பால் இங்கே வந்து அடிக்கடிநம்மை வருத்துவார்களே, இங்கேயிருப்பது நமக்குச் சரியல்லவென்று தம்பியும்சானகியும் தொடர்ந்துவரத் தென்றிசையே நோக்கிநடந்தான்.

இவைகண்டு நீங்கு படலம்,

அயோத்தியாகாண்டம்

முற்றுப்பெற்றது.

ஆரணியகாண்டம்.

விராதன் வதைப்படலம்.

பேதி யாதுநிபிர் பேதவுரு வம்பி றந்திலா
ஞதி யோதியண ருந்தொறு முளாசகி யுரவுமை
வேத வேதியர் விரிஞ்சன்முத லோர்தெ ரிகிலா
ஆதி தேவரவ ரெம்மறிவி னுங்க ரிவரோ.

முத்திருத்தி அவை யிருந்தாற்போன்ற நகையாளாகிய சானகியாரோடும வில்லாளிகளாகிய இராம லட்சுமணரிருவரும் காபம் வெகுளி மயக்கமென்னு முக்குற்றமுங் கடிந்த காரணத்தால் அத்திரியென்னும் பெயரையுடைய முனி வரது ஆச்சிரமத்தை யடைந்தனர் அது இலைகளடர்ந்த ஆலமரங்கள் நெரு ங்கிய சோலையுடையது; அவ்வாச்சிரமத்தை யடைந்து அதி லெழுந்தருளி யிருக்கும அமமுனிவரது பாதபலனை வணங்கி நின்றனர். அதற்கு அம்முனி வா நீங்கள் இவ்விடத்தி லெழுந்தருளித் தெரிசனந் தந்தது எளிதாமோ! தே வர்க ளியாவரும் இங்கே யெழுந்தருளியதற்கொப்பாகுமே. எமமவரில் யாவர் இப்படி நீங்கள் வந்தருளத் தவஞ்செய்தவா! என்று மனமுருகி நின்றான். அன்று அமமுனிவருடன் அவ்வாச்சிரமத்தி லெழுந்தருளியிருந்து அவரது மனைவியாகிய அருந்தவ நீயகியாளெனனும காரணப்பெயர்ருள்ள அருந்தவ யென்பவள் பணியால் ஆடையாபரணம பெற்றுச் சானகியாருடனும் தம்பி யுடனும தாம் தண்டகாரணிய மடைந்தனா. இவ்வாறு தண்டகவனத்தை நாடிவருகையில பதினறு யானைகளும் அதற்கிரட்டி சிங்கங்களும் யாளிகள் பதினறுமாகப பிணைத்துப் போட்டிருக்கும கையிலே சூலம் பிடித்துக்கொண் டும், மேகங்கள் சுற்றிக்கிடந்த செம்பட்ட மயிரையுடையமுடியும் ஆலவிஷம் ஓருருவங்கொண்டு நடந்ததென்று சொல்லத் தன்னடையாற்பஞ்சுபட்டபாடு படும்படி மலைகளைச்செய்யுப்பாதமுமுடையவளைப்புண்துளங்கியகணைகள் தீப் பொறிசிதறவும்ஆகாயங்குலுங்கவுமமலைகள் குலுங்கவும்சூரியனுமகண் டுள்ளங் கலங்கவும் கடல்புடை சூழ்ந்த காசினி குலுங்கவும் கூற்றுவனு மனந்தளரவும், சிங்கங்கள் முழங்குஞ் செவிகளிற்படுகுந்து தங்கவும், அழகிய மேருவும் குழைய வும் யுத்தத்தின்மடிந்த வீரருடைய உதிரத்தினலாகிய செச்சையோடு நால்வ கைச்சேனைகளையும் வாரி மலைப்பாம்புகளாற் பிணைத்து மாலையாக வினங்கும் தோளும் மலைகள் நெருங்கினவே யெனத் தக்க யானைகள் ஒன்றோடொன் றடுக்கியனவாய்த் தடக்கையுதவ அவற்றை யென்று தின்னுகின்ற பகுவாயும்

அவ்வாறு தின்று மடங்காப் பசியையும், காகாதிபருடைய மணிகளைப் பதித்தாலொத்து அவற்றைப் பகுத்தாற்போன்ற தேவர்கள்விமானங்களை யிடையிட்டு நவக் கிரகங்களையும் தாராகணங்களையுந் தொகுத்து ஆக்கிய சன்னவீரம் பிரகாசிக்கின்ற விசாலமான மார்பும் செம்பட்டமயிரும் ஒருபக்கம்விளங்கக் கும்பம்போன்ற நெற்றியில் வசித்து ஐராவதத்தினது நெற்றிப்பட்டமும், தந்தத்தினற் பூணப்பட்டிருக்கும் கிம்புரிப் பூணுகிய பெரிய வாகுவலயம் விளங்கவும், கருமையான தொரு வடிவங் கொண்டதுபோல நின்று கொடிய செயலனைத்தும் புழுங்கி யெழவும் பாதகங்களும் விடமுங் கனலும் மிகவும பிரகாசிக்கவும், கலிகாலமென்னும்படிப் புலித்தோல்களையும் யானைத் தோல்களையும் ஆடையாகக் கொண்டு திசைக் களிறுகளையும் மகா நாகங்களையும கச்சாக வணிந்து சர்ப்பராசர்களை வாகுவலயமாகப் பிடித்தணிந்து சலஞ்சலம் கங்கணமாகக் கைகளில விளங்கவும் பொன்மலையும் வெள்ளிமலையும் தம்முள் மாறுபட்டுப் பந்துபட்டபாடுபடச்செல்லும் தன்மையனுய் இந் நிலவுலகத்தி லிருந்தாலுமினும தேவர்கள் சிந்தையிலும் விழியிலு மிருக்கின்றனென்று சொல்லத்தக்க தன்மையனுய் * மகாபூதங்க ளொருவடிவங்கொண்டு புதியதென் றேதத்தக்க வுருவமுடையான், இடியுமாறுபடுங் குரலுடையான் பிரமசிருட்டியிற்பட்ட படைப்பிலாகிய இலக்கத்திற் காற்பங்கா மதயானையினது போராற்றலு மடைந்துள்ளவன்; அப்படிப்பட்ட அக்கொடிய தானவன் சாரவந்து அயலில் விலங்கி மரங்கள் எலலாம வேரற்றுப்போய் விழவும் மலைகள் பிளந்து தூளெழவும அவ்விராம லட்சுமணரெதிரில் விராதனென்னும் பெய

* பூத மத்தனையு மோர்வடிவு கொண்டு புதிதென்
றேத வொத்தவுரு வதனுரு மொத்த குரலன்
காத லித்தய னளித்தகடை யிட்ட கணிதப்
பாத லக்கமத வெற்பிடை படைத்த வலியான்.

இ-ள். பூதமத்தனையு மோருருக்கொண்டு புதிதென்றுகூற வொத்தவடிவினையும் இடியேறுபோலுங் குரலையும் விரும்பி அயன்படைத்த என்பத்திலக்கம் பிறப்பில் காலென்னு மெண்ணிலைய மதயானை வலியும் பெற்றுடையான் என்க.

பஞ்சீகரணப்பட்ட மகாபூதங்களுட் சிறிது கூறு அப்பூத பரிணுமமாய தானரம் பென்பு முதலனவாய தாதுக்களாதலின் இவ்விராதனுருவமங்ஙனமன் றென்பார் பூதமத்தனையு மோர்வடிவு கொண்டென்றும், அவை அங்ஙன முருவமாகக் கண்டாரின்மையின் புதிதென்றேத வொத்தவுருவத்த னென்றும், இடியேறு இவன்குரல்கண்டாங்குரலின் உருமொத்த குரலனென்றும், அயன்படைப்பு என்பத்திலக்கமாக, அவற்றிற்காற்கூறாய இருபத்தோரிலக்கமதயானை வலியுடையனுகலின்காதலித்தயனளித்த கடையிட்டகணிதப்பாதலக்க மதவெற்பிடைபடைத்த வலியானென்றுங் கூறினர்.

மதவெற்பு - யானை; கணிதம் - கணக்கு; பாதம் - கால்; காதலித்து - விரும்பி; அயன் - வடமொழிச்சிதைவு; உம்மை - முற்று.

அயனளித்த கடையிட்ட கணிதமென்றது - 'ஊர்வ பதினெண்ணுமொன்பது வானுடம்; நீர்ப்பறவை நாற்காலோர் பப்பத்தாஞ் சீரிய - பக்தமாந் தேவர்பதினுலயன் படைத்த, அந்தமில்சீர்த் தாவரமா லைந்து.' என்றதனுனறிக.

ருள்ளவன் ; இடியேறுபோன்ற கொடுந்தொழிலையுடையவனுய் நில்லுங்கோன் நில்லுங்கோளெனத் தோன்றி நின்று கோரப்பல்லும் பகு வாயுந்திறந்தவரு சொல்லெச்சொல்லி வாய்மூடிக்கொள்ளுவதற்கு முன்னமே சானகிபபிராட்டி யானையொரு கைக்கொண்டு ஆகாயமாாக்கத்திற்பறந்து சென்றான்.

அதைக்கண்ட இராமலட்சுமண ரிருவரும் மிக்க கோபங்கொண்டு வில்லை யிடக்கையிற்பிடித்து வலக்கையில பாணங்களையேந்தி எங்கே போகின்றாய் சற்று நில்லு நில்லென்ற அளவில அவன் அவர்களைப்பார்த்து நான் பிரமனுற்பெற்ற வரத்தினல் என்னுவி ரீங்களை, நான் ஆயுதங்களொன்றுமெடாதிருந்தும் உலகமுழுதும் என்னெடு பகைகொணடு போா செய்தாலும் என்னுற் சாதிக்கப்படாத காரியங்களே யில்லை, உங்களுயிாப பிழைஷகொடுத்தேன் இப்பெண்ணை விட்டுவிட் டோடிப்போய்ப பிழைபுங்கோ ளென்று சொல்ல, இரகுநாயகன் கணடு சிறுநகை புரிந்து இவன் போனென்பதைச் சிறிதேனு மறியான், இவன தூரமும் வாமும கழிந்துபோமெனத் துணிந்து தன் கையிலிருந்த கோதண்டத்தை வளைத்து நாணேணை செய்ய அவ்வோசையொறுத்து மலைகளும் நாகராசர் வாழுமி பிலங்களும வானங்களு மாதியாகிய பதினு லுலகமும் இடியேற்றி ணைசை கேட்டாற்போற் கெட்டொழிந்தன. அவன் பூனவாய்ப்பட்ட பஞ்சரக் கிள்ளைபோலப் பொருமிவிமமிய சானகியானைவிட்டுவிட்டு மனங்கலங்கிச் சிறிதுநேரின்று நினைத்து அஞ்சன மலைபோன்ற சீராமபிரானெதிரேவந்து கோபித்துக்கொண்டு நின்று வடவாமுகாக்கினி போன்ற தன்கையிலிருந்த சூலப்படையை விட்டெறிந்தான். அது திசைகளையும் தேவர்களையும் திசையானைகளையும் எல்லா வுலகங்களையும் கலக்கி ஆலவிடமெனக்கோபித்துமின்னிக்கொணடுவர அதைக்கணட இரகு நாயகன் மேருமலையே முதலாகிய பெரியமலைகளினும் வலியுள்ள ஒரு பாணத்தையெடுத்து அபிமந்திரித்து விட்டான். இன்றேடே இவ் வரக்காசுல நாசமானதென்று சொல்லும்படி பகற்போதில் வெள்ளிடையாகிய ஆகாயத்தினின்றும் வான் மீன் வீழ்வதுபோல அச் சூலப்படை இரண்டு துண்டாக வொடிந்தது. அவ்வாறு ஒடிந்த துண்டங்களும் திசையின்புறத்தேபோய் விழுந்தன. சூரபதுமனை யொடுக்கிய வேலைப்போன்ற அமழுவிலேவலாகிய சூலப்படை யொடிந்துபோகவும் சிறிதும் போராடுங்காமல மறத்தாற் புழுங்கிப் பாணையுமொடுக்கும் தன்கையால பருவதங்களை யெல்லாம் ஊரிவேரோடும் பிடுங்கியெறியத் தலைப்பட்டான். அவ்வாறெறியத் தலைப்பட்ட மலைகள் வட்டமிட்டுக்கொண்டுவா அவை பொடிப்பொடியாய்ப் போம்படிப் பாணங்களைச் சீராமபிரான் விடுக்க அவை வந்தவிடம் போனவிடந் தெரியாமற்போயின. * அதைக்கண்ட

* ஓம ராமனாயொ ருங்குமுணர் வோரு ணர்வுறும்
நாம நாமவனை நல்லற நிறுத்த ணுணுகித்
தாம ராவணை துறந்துதனை நின்ற வனையோர்
மாம ராமர மிறுத்தது கொடெற்ற வரலும்.

இன். பிரணவப் பொருளாகிய தாசரதியாவாரும், முழுதுமுணர்ந்தா ருணரவல்ல பெயரினரும், தோன்றிய நல்லற நிறுத்த அராவணை துறந்து தனைமே னின்றரு

அக்கொடிய அரக்கன் ஒரு பெரியமராமரத்தை வேரொடும் பிடுங்கிக்கொண்டு வந்தெறியவே, சராமபிரான் நான்குபாணங்களைக் கோதண்டத்திற் பூட்டிவிடுத்து அதைத் துண்டுகளாக்கிப்பின்னும் ஆறுபாணங்களைத் தோளிலும் ஆறுபாணங்களை மார்பிலும் அழுந்தப் பிரயோகித்தான். நெருங்கிய முட்கள்தன்னுடம்பில்லைதத்துத் தொளைக்க விளைந்துபிடுங்கி யெறியும் பெரும பொறிபோலத் தன்னுடம்பில்லைதத்த பாணங்களைப் பிடுங்கியெறிந்துவிட்டு நின்றான். அதைக் கண்ட சராமபிரானும் எரியைச்சொரியும் பாணங்களை யபரிமிதமாகப் பிரயோகிக்க அதனற்சிறிது மறத்தன்மை நீங்காத அவ்விராதன உடமபிலமலையினின்றுவிழும் அருவியாற்றைப்போல இரத்தவெள்ளம்பாய வலிகெட்டுனாவு கெட்டுநின்றான். அதைக்கண்ட இராமலட்சுமணரிருவரும இவனேமன்மையானவரங்கள் படைத்துள்ளவன், நமது பாணங்களாற் கொல்லப்படமாட்டானென்றுதுணிந்து இருவரும் அவன்கையினைத துணிக்கலாமென்றே வினைந்து அவன் தோளிலேறவே; அவனுக்குமுன்னே உணர்வுவந்துகூட அவர்களைத தன்தோளிலேற்றிக்கொண்டு தன்விசையினும பதின்மடங்கதிகமாய்ச் சாரிகை திரிந்தான். அது சூரியசந்திரா வலமவரும மேருமலையை யொத்திருந்த தலலாமலும கருடனையும்போன் றிருந்தது.

இவ்வாறு நிகழ்கையில் பெருங்கருணைக் கிடமாகிய தன் கணவன் வஞ்சகனுகிய விராதன் வசப்பட்டிருப்பதுகண்டு மனங்கலங்கி வருத்தப்பட்டுபூமியிற் கோதையோடு மொடிந்த கொமபாபென விழுந்து சேவலபிடியுண்டஅன்னம்போல ஆற்றாமல் பிறிதொரு துணையுமினறி மின்னைபோன்ற இடைநுடங்க விளைந்து தொடர்ந்து தாய்போனற அன்பினையுடைய அறவோனைவிடுத்து என்னையுண்டு பசியாறென்று புலமபிபழுதாள். அவ்வாறு சானகியாபடும் கண்கலக்கங்கண்ட இளையபெருமானும இருகாயகனைத்துதித்துநின்று தேவியார்வருந்த நீர் திருவிளையாடல் செய்வதழகோ! இது பழுதுபழுதென்றதன்றி, இவன்வெகுதூரம போய்விடச் சிந்தித்திருக்கின்றான், இவன் சாவது

மாகிய சக்கரவர்த்தித்திருமகனை யோர்பெரிதாகிய மராமரம பிடுங்கியதனன் மோதவரலும் என்க.

வரலும் எதிர்கால வினையெச்சம், உம்மீறுகாலங காட்டிற்று ஓம குறிப்புப் பெயசொசம், உம்மை முற்று. தாம அசை. கொணடென்பது மர்இயது. தோனறிய நல்லற நிறுதத அண்டசதனி லருந்துய றுறந்து ஆதியஞ்சோதியுருவை யங்குவைத் திங்குத தோன்றிணைகலின் நல்லற நிறுதத நணுகித தாமராவணை துறந்து தனைநின்றவனை என்றும், அவன் இரவிகுல திலகனுவாணுகிய தாரகவாச்சிய னெனபதுணாத்தற்கு ஓமராமனை என்றும், அவன் திருநாமம துவரக்கற்ற பெரியரானன்றி யேனையராலோத வொல்லாதாகலின் ஒருங்கு முணர்வோ ருணர்வுறு நாமரர்மவவனை என்றும், அன்னனை இவ்விராதன் மராமரங் கொண்டோச்ச வருதலின் மாமராமர மிறுத்தது கொடைற்ற வரலும் என்றுங்கூறினர்.

ஒருங்கு - முழுது, நாமர் - பெயரினர், துறத்து - நீங்கி, இறுத்து - பிடுங்கி, எற்ற. மோத, 'ஒருபொருள் குறித்தவேறுபெயர்க்கிளவி-தொழில்வேறு கிளப்பினென்றிடனிலவே' என்றதனனன் இராமர்முதலிய பலபெயர்வந் தொருதொழில் னெத்தி எற்ற வென்னும் பயனிலைகொண்டது.

உமக்கொருபொருளல்லவென, இரகுநாயகன்சிரித்ததமதுதிருவடியால்அவனை உதைக்க விராதன் பூமியில் வீழ்ந்தான். இராமலட்சுமண ரிருவரும் அவன் தோளிரண்டையும வாள்கொண்டு வெட்டிப் பூமியில் வீழ்த்திக் தாமும் நிலத் திற் குதித்தவராய் இவனைப் பூமியில் கொலைசெய்துவிட்டு நிலத்திற்றோன்றிய பள்ளத்திற் புதைப்பது நலமென்ன, அவ்வாறே இளையபெருமாள் அந்நிலத் திற் பெருங்குழி சமைத்துவைக்க அனபாகள் வேண்டிய வேண்டியாங்கெய் தப் பயக்கும திருவடிகளால் இறைவன் எட்டிதத்தள்ள அப்போது விரிஞ்ச னென வோர் முட்டைதந்து அதில்வந்த முன்னவனுகிய ஆதிபகவனைப்போல முன்பெற்ற சாபத்தாலாகிய கடையான அரக்கனுருவமொழிந்து தேவரூபம பெற்றுவிளங்கி,

“ வேதங்களறைகின்றவுலகெங்கும்விரிந்தனவுன
பாதங்களினையெனனிற்படிவங்களெப்படியோ ?
ஓதங்கொள்கடலன்றியொளிமேனிடொன்றுமுவவாப்
பூதங்கடொறுமுறைந்தாலனையனனப்பொறுகுமோ ? ”

* * * *

“ஒப்பிறையம்பெறலரியவொருவாமுன்னுவந்துறையும்
அப்புறையுறைந்தடியேனருந்தவத்தாலனுகுறலால்
இப்பிறவிக்கடல்கடந்தேனினிப்பிறவேனிருவினையும்
துப்புறழுநோத்தசுடர்ததிருவடியாற்றுடைத்தாய்நீ.”

இவ்வாறு பல பல விதமாகத் துதித்துநின்றதைப் பார்த்து நீயார் ? நீயிப் படி யானவிதமென்ன? உள்ளபடியே தெரிவிக்கவேணுமென்று சிராமபிரான கேட்க, கள்ளமாயப் பிறவிகளைக் களைந்தெறியும் சிபாதங்களையுடைய ஆதி பக்வனே யென் வரலாற்றைக் கேளென்று சொல்லத்தொடங்கினன்.

நான் இவ்வுலகத்தில் அரக்கனுக வுருக்கொண்டேன் ; நாளை தும்புரு வென்னும் பெயருடையவன், இருதிநிக் கிழவனுகிய குபேர லோகதில வசித்துக் கொண்டிருந்தவன், நடனஞ்செய்திருந்த அரமனையைக்கண்டுகாமாந கனைப் அவள் பாட்டோசைகேட்டு மகிழ்ந்து அவளைக்கூட இக் கூடுகிடைத் தது. அப்படி காமகோய் என்னைத் துரக்கச்செய்த குற்றத்தினல்இரக்கமில்லா மல் ஏவ நான் இவ் வரக்கன் மகனுகப் பிறந்துவிட்டேன். அவ் வியக்கராசன் என் துன்பத்தைத் தீர்க்கநினைந்து பிரதிசாபமாக இரகுநாயகன் பாதந்தீண் டினற் போமென்று எனக்குத் தெரிவித்தான். வானும் வையமும் வலமாகத் திரிந் துயிர்களை வ்ருத்தித்தன்ன வேற்படையால் உயிரைக் கவர்ந்து வெற்றி கொள்ளும் கிலிஞ்சனென்னுமரக்கனுக்கு மகனுகத் தோன்றிய .அன்றுமுதல இன்றுவனையும் நன்மை தீமை யென்பனவற்றைச் சிறிதேனு நாடாமல் உயிர் களையெல்லாங் கொன்றுதின்று தீயகாரியங்களையே தெடிச்செய்தேன். முன் செய்த புண்ணிய முதிர்ச்சியினல உன்னுடைய திருவடித்தலைடப்பட்டு இன்று அக்கடையான பிறவி தொலைதொழிந்தேன். நானறியாமற் செய்தபிழை யத் தனையும் பொறுக்கவேண்டுகிறே னென்று விடைபெற்றுப் போயினன். இவ் வாறு விராதனைக்கொன்றுவிட்டுப்பிறகு அவ்விடநீங்கி முனிவர்கள் வசிக்கும் இடங்களாகிய ஆச்சிரமங்களை நாடியடைந்தார்கள்.

விராதன் வதைப்படலம்
முற்றிற்று.

சரபங்கர் பிறப்பு நீங்குபடலம்.

சானகிப் பிராட்டியாரோடும் சரபங்கர் தவஞ்செய்யும் ஆச்சிரமத்திற்கு இரவில் இராமலட்சுமண ரிருவரும் அடைந்தனர். அந்தச் சமையத்தில ஆயிரங் கண்ணையுடைய இந்திரன் வந்திருந்தான். அப்படிவந்த இந்திரன் அச் சரபங்க முனிவனாயடைந்து நிற்க, அதைக்கண்ட சரபங்கமுனிவா இவ்விடத் திற்கு நீ வந்தகாரண மென்னவென்று கேட்க, அதற்கிந்திரன நின்னு வியற்றப் பட்ட தவம் எவ்வகையாலு மெடுத்துச்சொலவ தருமை, ஆகையால உன பத்தினியோடும் உன்னை அப் பிரமதேவன் தன் னுலகமாகிய சத்தியலோகத் திற்கு அழைததுவரக் கட்டளையிட்டான். அருந்தவர் பெருமானே! நீ வர வேணடுகின்றே னென்று சொலல, சொல மிகுகின்ற பெருமபுகழினையுடைய இந்திரனே! சிலநாளில அழியும அப்பதத்தைச சிறிதேனு மனத்திற் கருதவே மாட்டேன். யான்செய்தமாதவமோ அளவிலலாதன, அவைசெய்யப பலகற்பங களுங் கழிந்தன. யாதே சிறுகாலே யில்லாததும நிலே திரியாததும் குறுகாத தும நெடுகாததும் குணம வேறுபடாததும காற்றே முதலிய பூதங்களெல லாம் அழிந்தபோதும கலங்காததுமாகிய அப்பரமபதம் அடைய விரும்புகின நேனெனறு இவ்வாறு பலபலவிதமாக வெடுத்துச்சொல்ல, அச்சமயத்தில இராமலட்சுமண ரிருவரும் வந்தாாகள். அவாகள் இக்காட்டில் இவ்விதமான பேரொலி யுணடாகக் காரண மெனனவென்று நினைந்து, ஐராவத மிருகக கண்டு இமமுனிவரிடத்தே இநதிரன வந்தனனெனத் துணிந்து அவ்விடத்தி லேயேஇளையபெருமாளையும சீதாபிராட்டியானையும நிறுத்திவிட்டு ஆனேறு போலவும ஆளரிபோலவு நடநதுசென்று அமமுனிவருடைய ஆச்சிரமத தினுட் புக, * இநதிரன்தன்னுயிரங்கணகளாலும தாமனைக்கண்களையுடையகரு ஞாயிறுபோன்ற அருமறைக் கனியைக்கணடுமனமொந்துகவன்றுபுருஷோத்தம னும அந்தணர் நாயகனுமாகிய பரமபொருளை யென்றும் வணங்கு நன்முடியா லுந் தொழுது, தாழ்ந்திய தோள்கொணடு தழுவி நின்று துதிப்பானுயினன்.

" துவசமார்தொல்லமருட்டின்னைசசெற்றுஞ்
சுருதிபபெருங்கடலினசொற்பொருளகறபித்தும்
திவசமாநல்லறததினசெநநெறியிலுய்ததுந
திருவளிததும்வீடளித்துருசிங்காமைததங்கள்
கவசமாயாருயிராய்த்தவமாய்ககண்ணுய்க
கடையிலாஞானமாய்க்காப்பாஜனக்காணு
அவசமாய்ச்சிந்தையழிந்தயலேநின்று
னறியாதான்போலவறிந்தவெலாஞசொன்னன."

* * * *

" வல்லவரம்பில்லாதமாயவினைதன்னென்
மயங்கினரோடெயதிமதிமயங்கிமனுள்
அல்லையிறையவனீயாதி யெனப்பேதுற்
றலமருவேழுன்னுயறப்பயனுண்டாக
எல்லைவலயங்கணின்னுழையென்றந்நா
ளெளியோனைத்தீணடியெழுவனெனின்ற
தொல்லைமுதன்முனிவர்சூளுற்றபோதே
தொகைகின்றவையந்துடைத்திலையோவெந்தாய்!"

---

* கண்டா மவையா யிரமுங் கதுவக்
கண்டா மனைபோல் கருநா யிறைனக்
கண்டா னிமையோ நிறைகா சினியின்
கண்டா னருநான் மறையின் கனியை.

என்று பலவிதமாகத் தோத்திரம் புகன்று முனிவரிடத்தே விடைபெற்றுக்கொண்டு இந்திரன் போய்விட்டான். அவ்வாறு இந்திரன் விடைபெற்றுச் சென்றபின்பு சீராமன் தம்பியையும் சீதையையு மழைத்துக்கொண்டு அச் சரபங்க முனிவருடைய ஆச்சிரமத்துக்குப் போனன். முனிவர் பெருமானும் அறவுணர்வினத்தும் சீராமனுக்குச் சொலலிக்கொண்டிருந்து இராக்கால மணையக்கண்டு தன்மனைவியுடன் வேள்வித்தீயில் நுழையுங் கருத்துடையவனைச் சீராமபிரானை நோக்கி நீ யெனக்கு விடைதரவேண்டுமென்று வேண்டித் தான் அக்கினியை வளர்த்தினன். அதைக்கண்ட சீராமன் அம் முனிவர். பெருமானே நீர் செய்யும் காரியம் யாதெனறு கேட்க, யான் நிரதிசய வின்பத்தைத் தரும் மீள்விலா வுலகம்பெறவேண்டியே யெரியிற்புக நினைத்தேனென்றார். இரகுநாயகன் யான் வருங்காலத்தில இவ்வகைப்பட்ட காரியத்தைச் செய்யத்துணிந்த காரணமென்னென, அதைக்கேட்டு உடலபூரித்துச்சொல்வாஞயினன். நீவருவது நோக்கியேயாயிரயுகமாக அருந்தவஞ்செய்துவருகின்றேன்; இருவினையும் இன்றேபோயொழிந்தன, இனி யெனக்குவினையென்ப தறக் கெட்டொழிந்தது. எனக்கு முத்திச்செலவந தாவெண்ணியே இந்திரன் வந்து பிரமலோக மடையும்படிக் கேட்டுக்கொணடான், அதைச் சிறிதேனும் விரும்பமாட்டேன், நாலை சிந்தையு மொழியுஞ் செல்லா நிலைமைத்தாகிய அந்தமி வின்பத் தழிவில் வீட்டினைப் பெற முயலகின்றேன், இதுதான் எனகருத்தென்று தன்மனைவியோடு அவ்வேள்வித் தீயிலமுழ்கி அந்நிரதிசய வீட்டினைப சுகத்தையடைந்தான்.

சரபங்கர் பிறப்பு நீங்குபடலம்
முற்றிற்று.

அகத்தியப் படலம்.

இராம லட்சுமண ரிருவரும் சானகியோடுமை அம் முனிவரது இறுதியைக் கண்டு அதையரிதி னகன்றுபோய் மலைகளும் மரங்களும் மணிக்கற்பாறைகளும் ஆறுகளும் அருவிச்சாரலும் சோலைகளும் காறுறுகளும் தடாகங்களுங் கடந்து தண்டகவனத்தை யடைந்தனர். அத் தண்டகவனத்திற் சஞ்சரிக்கும் பிரமபுத்திரர்களாகிய வாலகில்லியரும் முண்டரும மோனருமாகிய முனிவர்களெல்லாரும் சீராமபிரான் அங்கு வந்ததறிந்து அவனைக்காணவந்தனர். அவர்கள்கருத்தை யறிந்துகொண்டு சீராம னெதிர்வரக் கண்டு அவனருள்பெற விர

இ - ள். தேவர்கட் கிறைவனாகிய இந்திரன் தன கண்களாயிரமும் பொருந்தக் கண் தாமரைமலர் போல்கின்ற கருநாயிறே யென்னலாம்படிசொல்ல அரிதாகிய நான் மறைகளினிந்தகனியை நிலமேற் கண்டான் என்க.

கதுவு - பொருந்த, இமையோரிறை - இந்திரன், காசினி - பூமி. தான்-அசை.

உம்மை முற்று. வேதநான்கின் முடியில்விளங்கும் பொருளாகலின் அருநான்மறையின் கனியையென்றும், தன் அரந்தை யிருள்கெடத் தோன்றுவதனால் கண்டாமனாயோல் கருநாயிறென வென்றும், அவனைத் தான்செய்த முன்னை நல்வினைப்பயனால் நிலமேலகண்டவின் காசினியின்கண் இமையோ ரிறைகண்டான் என்றுங் கூறினர்.

ங்கி இதுவனையிலும் அர்க்கரால்வருத்தமடைந்து அரக்கனென்ற பேரைக்கேட்டாற் பெரும்பயமெய்தி யிருந்தவர்களாகையால் இராகவனது வருகையைக் கண்டு துன்பக் கடற்கோர் மரக்கலம் பெற்றாற்போற் களிப்படைந்து அவ்வரக்கரது துன்பத்தைஇதுவனையும் காமம் வெகுளிமயக்கமென்னு மூன்றினையும் அறக்கடிந்தவ ராகையாற்பொறுத்திருந்தார்கள். அப்படி பொறுத்திருந்த முனிவர்களெல்லாம் இரகுநாயகன் இருந்த இடத்தைநோக்கியடைந்து எதிர் சென் றழைத்துவந்து இருக்கை யளித்து அவரிடத்தே தங்கள் குறைகளை யெல்லாமெடுத்துச் சொல்வாராயினர்.

இரக்கமென்ற வொரு பொருளில்லாத நெஞ்சமுடையவர்களாய், அறத்தினீங்கிய அரக்கரென்பாரோ சிலருண்டு, அவர்க ளெங்களைவருத்த நாங்கள் அறத்துறையாகிய தவவொழுக்கத்தைத் தவிர்ந்து தீயவொழுக்கங்கடைப்பிடித் தொழுகிலேம்; இதுவனையிலும் புலிகள் பலதிரியும் காட்டிலே மான் போல இரவும் பகலும் நொந்திரங்கி வருந்தியிருக்கச் சகிக்கமாட்டோம். எங்களுக்குரிய தவவொழுக்கத்தை விட்டோமாகையால் நாங்கள் விடுதிபெறுவது எப்போது? நாங்கள் அந்தணர்க ளாகையால்எமக்குரிய ஓதல் ஓதுவித்தல் வேட்டல் வேட்பித்தல் ஈதல் ஏற்றலென்னும் அறுதொழிலு மிலலாதிருந்தமையால் நாங்களோ அந்தணர்க ளென்று சொல்லவுஞ் சிறந் திருக்கவில்லை. இந்திரனே வென்றால் அவன் அரக்கர்கள் ஏவிபவற்றைச் சிந்தையாலும் சென்னியாலும் கொள்ளுஞ் செய்கையை யுடையானு யிருக்கின்றான்; எங்களுடைய துன்பத்தை நீக்குவோர் உம்மையல்லது யாரிருக்கின்றனர். யாங்கள்செய்த தவத்தின் மாட்சிமையால் நீர் இங்கேயெழுந்தருளினீர்! யாங்களுன் னபயமென் றுரைத்தனர். அதைக்கேட்ட இரகுநாயகன் அவ்வரக்கரென்போர் அடைக்கலமென் றடையாவிட்டால் அண்டப் புறத்திற்சென்றடைவாரோனும் அவர்கள் என் கையம்பாலே வீழ்வர்; நீங்கள் துன்பமொழியுங்கோள், அரசனிறக்கவும், தாய்வரமடையவும, பெருங்குணத்தையுடைய தம்பியாகிய பரதன் வருந்தவும், நகரமாந்தரெல்லாம் துன்பப்படவும், யான் திருவயோத்தியை விட்டு இவ்வளவு தூரமாயுள்ள இக்காடுவந்து சேர்ந்தது யான்செய்த புண்ணிய முதிர்ச்சியே யல்லது வேறல்ல, அறத்தைக் கைவிடாத அந்தணர்களை அறக்கெடுத்த அரக்கர் வலியைத் தொலையே னென்றால் அதைவிட நானிறப்பதே நல்லது, அல்லது யான் பிறந்ததலைவாகிய பேறுயாது! நீங்கள் அக் கொடியவர்களாகிய அரக்கரது கவந்தக் கூட்டங்கள் நடனஞ் செய்வதைக் காண வில்லும் அம்புப்புட்டிலு மேந்திய தோளும் பொறைத்துயர் தீரும். உலகத்தில் ஆவின்பொருட்டாயினும் அந்தணர்பொருட்டாயினும் பிறர் யாவர்பொருட்டாயினும் சாகப்பெற்றவர் யாவரோ அவரே சுவர்க்கலோகத்தில் வாழுந் தேவர்களாலும் தொழப்படும் தேவர்களாக விளங்குவார்கள். இதுநிற்க; அவர்கள்பொருட்டாக என்னைத்தடுக்கச் சூரனைத் தடிந்த சுடர்நெடுவேற் பெருந்தகையும் சுதரிசனமென்னுந் திருவாழியையுடைய கள்ளமாமாயப்பிரானும் முப்புரம் பொடித்த முக்கட்பெருமானும் தடுத்தாலும் எதிர்த்து என்னுடன்பொர அருமையான அறத்தினை

பகைத்துநின்ற அவ்வரக்கனையெல்லாம் வேரொடுங் களைவேன்; நீங்கள் பயப் படாதிருங்கோளென்றான். அவ்வாறு சொலலிய சொல்லைக்கேட்ட அம்முனி வாகளெல்லாம் சந்தோஷித்தாற் பெருமுழக்கஞ் செய்து துன்பமெல்லாம் அற்கெட்டாராய்த்திரிதண்டகனை யுபாயபடி பிடித்துக்கொண்டு வேதகோஷ்ட முழங்கக் குடாதமபட்டுக்கூத்துமாடிச் சொலவாராயினர்.

இரகுவீரனே! நீ கோபிப்பாயாயின் இடபுவன முன்றேபோல முப்புர கோடிவக் தெதிர்ந்தாலும் எதிராகமாட்டாவே; அதற்கு நான்கு வேதமும தவமும ஞானமுமே சான்றுகும் பலன. அன்னதானைகயினை யுமயமத் தானையேனின காலமெல்லாம எங்கள் துன்பத்தைத் தவிர்த்துக்கொண்டு இக்கேயேயெழுந்தருளி யிருக்கவேண்டுமென்று வேண்ட, அவ்வாறுவென்டிய அம்முற்றத்துறந்த முனிவனாயெலலாம வணங்கித்தான். அவ்வாத்திலேவெகித் திருந்தனன். அவ்வாறு அவ்வனத்திலேயே பத்துவருடமளவுமவரிதுக்கொண டிருக்கையில் அம் மாதவர்களெலலாம்பொருகுசோதரு சொதாபுராகினியாராகிய தியமுனிவனைத்தரிசிக்கவேண்ட, சீராமபிரானும் அவ்வாறேதமபியும் தானகி யாரும்புடைசூழ்ந்துவரத் தான் விருக்கங்களும முங்கிலடாகதகாடுகளுமடைந் தசின்னெறியை மெல்லமெலலக்கடந்துசென்று சுதீட்சணனென்னு முனிவர் பெருமான்வசிக்கும்சாலையையடைந்தான். அமமுனிவனைச்சீராமன இலட்சு மணனேடும் சிதைதேவியோடும வணங்கின்றனன. அவர் அவாகளை அங்கேயிருக் கவேண்ட அவ்வாறே வசித்துக்கொண்டிருக்கையில அவாகளுக்குச் செய்யத் தகுவனயாவையுமசெய்து மேகளிங்கெப்பொழுதனைத்தவஞ்செய்தனென்றான். இரகுவீரனும அவன்பால மெய்யன்புபடைத்துச் சொலவானையினன். முனி வர்பெருமானே! யாவராலும் எடுதுதுச்சொலலபபட்ட கானமுகன் வழியிற் பிறந்தாரிலேல உலகத்தின்கண் உயர்தவம முற்றச்செய்தார்உமதினுமபிறாயார? உமதருள்பெற்ற என்னிற் சிறந்தவர்யார? எனை, அவனைநோக்கி எனக்தமைவ தாகியகுற்றமற்ற விருந்தின்னுகி எனனுலனைத்தவத்தையெலலாம் நீதகுமோ யாகக்கொள்ளவேண்டுமென்ன, அதறகுச் சீராமபிரானும உன்னருள் எதவ த்தினுலுமடைவதரிது, ஆயினுமயான்சொல்லத்தக்கதான்றுணடு, அதுயான் செந்தமிழாசிரியராகிய அகத்தியமுனிவனைச்சென்றடைவதே; அக்குறையொ ன்றெயென்னுள்ளத்திற் கிடக்கின்றதென்றான். அதைக்கேட்ட முனிவர் பெரு மானும்நீகல்லதெனினைந்துகூறினாய்! நானும்உனக்குமுன்னேகானேசொல்லவே ணுணிந்தகாரியமு மதுவாம், அவனை நீசென்று சேவதேதகடமை, அவனைச் சோந்தபிறகுன்னிடத்தெய்தப் பெறுதனவொன்றுமில்லையே, அதுவல்லாம லும்நின்வரவினை யெதிர்பார்த்துக்கொனடே அமமுனிவரிருக்கின்றனர். அவ னை நீசென்றடைவதே தேவர்களுக்கும முனிவர்களுக்கும் யாவர்களுக்கும் கல்லதன்றே யெண்ணுகின்றேனென்று அவரிடத்திற்குச்செல்லும் வழியும் உணர்த்தி கல்ல ஆசீர்வாதமும் செய்தனுப்ப, அவனைச் சீதையும் இராமலட்சு மணரிருவரும் வணங்கித்துதித்து விடைபெற்று அவ்வாச்சிரமத்தை அரிதினைக ன்றுசெந்தமிழாசிரியராகிய அகத்தியமுனிவரது ஆச்சிரமத்தையடையவருணீ கில் அதிதூரல் உலகத்தைத் திருடாலேபோல அளந்தவனும்தேவர்கள் குரை

யிரப்ப விருத்திராசுரனைக்கொல்லக் கடலியொருகையால் முகந்து ஆசமனஞ் செய்தவனும் குறுமுனிவனென்று சொல்லப்பட்டவனும், வாதாவி சமைத்த வில்வலனென்னு மாட்டிருக்கொண்ட அக்கோடியவதுன ஊனைநுகர்ந்து உல கோரிடர்தீர்த்தவனும், உயிர்வகைகள் வருந்தாவண்ணம்போம்வழி யாதென, தன்திருவடியால் மிதித்து அடியிலேறி மேகக்கூட்டங்கள் தவழ்கின்ற விந்த மலையென்கிற நாகமது நாசமுற நாகமென நின்றவனும், சிவாஞ்ஞையால் வட திசை தாழ வானிலேங்கிய மாமலயநேராக இறைவன்போல உலகு சீர்பெற வெழுந்தருளி யிருந்தவனும், முயற்சியைத்தரும் வேதநான்கினு முயாந்து உலகமோதும் வழக்கினும் அறிவினு மாபிழைநீடி மழுவாளியாகிய பரமசிவ னிடத்தே செந்தமிழிலக்கண முழுது மையந்திரிபறவுணர்ந்து அதனைப்பரம்பச் செய்தபரமகாருணிகனும், விண்ணிலும்மண்ணிலும்நாகலோகத்திலும் எண்ணி லும் இருக்கிலு மிருக்குமென்றேயாவரும் உள்ளத்தே கினைக்கும்கருத்துப்பொ ருளும்காட்சிப்பொருளுமா யிருப்பானைத் தன் ஊன்கண்காணக் களிக்கின்ற மனத்தினையுடையவனும், வேதாகமங்கள் முறையிற்கூறிய மெய்யுணர்ச்சியை நெடுங்கல்லினிட்டனைத்தும் அபனலும உணர்வரும் அப்பொருளைக் காணப் போகின்றேனென்பவனுமாகிய அம்முனிவர்பெருமான் உலகமேழும் உவகைக் கடல்பெருக அவ் விராமன்சரண்வழங்கவெதிர்வந்தான்.

தன்னைநாடிவந்த சிராமனைக்கமண்டலத்தில்காவிரியாற்றைக்கொணர்ந்த செந்தமிழ்ப் பரமாசாரியராகிய அகத்தியமுனிவர்கண்டு தமது புண்டரீகமலா போன்ற கண்களில் ஆநந்தவாரிபொழியநின்று தாசரதீ ! உனதுவருகை நல வருகையேயென்றான். என்றுமுள்ள செந்தமிழிலக்கண மியம்பிப்பெரும்புகழ் கைக்கொண்ட முனிவர்பெருமான் அவ்வாறு சொல்லலே, அங்குள்ள வேத வேதியர்களெல்லாரும் காதலபெருகிவேதகோஷடம்செய்து தங்கள்கமண்டல சலத்தினைப் புரோக்ஷித்தனர். அகத்தியமுனிவரோ அத்தசரதாத்மசனையும் சானகியாளையும இளையபெருமாளையும்அழைத்துக்கொணடுபோய் மலர்மண ம்சும்குளிர்ந்த சோலையிற் கொண்டுபோயினர். அவ்வாறே இரகுவீரனும் தம பியுடனும் சானகியாருடனும் எழுந்தருளி அவர் விருந்தமைபபவுண்ணமுனிவ ரும் நீயென்கிருகத்திலவந்து என் னருந்தவ முடித்தனையே யருட்கரசனே யென்றார். இவ்வாறுசொல்லிய அகத்தியமுனிவனை சிராமன்தொழுதுவணங்கி எவ்வகை அருந்தவஞ்செய்து தீவினையெல்லாந்தீரநோற்ற முற்றத்துறந்தமுனி வர்களும் பெறலரும் உன்னருள்பொறுத்தேன், இனி எனைத்துலகமும்வென் றினிதாளினேனென்றான். அதற்கவர்கண்டகாரணியத்தில்வாசஞ்செய்யென்ற சொல்மேற்கொண்ட உன்வருகை இவ்வனத்தினுமுளதாக வறிந்து .கழிமகிழ் சிறந்திருந்தேன், எண்ணத்தக்க குணத்தினையுடையானே ! எனப் பின்னுஞ் சொல்லுகின்றார். இங்கேயே நீவிற்றிருப்பையாயின் வேண்டிய வேண்டியாங் கெய்தப்பெறுகின்றபெருந்தவங்களெல்லா மொருங்கு முடிப்பாய்' மிக்கமோபத் தினையுடைய வாளரக்கர்வந்து தோன்றுவாரேல்மாண்டுபோக அவருடன் மலை க்குலங்கள்மனத்துயரையு மொழித்துவிடுவாய்,இனிமறைநெறிவாழும், மனுநீதி யும் அறநெறியும்வாழும், இதுகாறும் தாழ்வெய்திய தேவர்களெல்லாம் உயர்

வார்கள், அரக்கரெல்லாந் தாழ்வடைவர், சக்கரவர்த்தித்திருமகனே! இதற்குச் சிறிதேதுணையமேயிலதே; மெய்யாகவே ஏழுலகமும் வாழ்வெய்தும்; இங்கே நீ வாசஞ்செய்துகொண் டிருக்கவேண்டுமென்றான். அதைக்கேட்ட சீராமபிரான் செருக்கடைந்த அரக்கர்கள்செய்கின்றதீமைநினைந்துபோய் அவர்கள் தருக்கொழியக் கடிந்துகொல்வான் நான் சமைந்திருக்கின்றேன். அவர்கள் வருகின்றதிசையில் முந்தியிருப்பதுவே கல்லகாரியம, உமதுதிருவருள் யாதென்று சொல்ல, அகத்தியமுனிவரும் நீ சிறந்த செய்தியே சொலவிழைத்தனை! என்னிடத்தில் வில்லொன்றிருக்கின்றது, அது முன்னளில் இறைவன்வைத்துக் கொண்டிருந்தது; மூவுலகத்தாரும் யானும்வழிபாடுசெய்ய இருபது; அதனின் வடித்த பாணங்களின் குழு அடர்ந்த புட்டிலொடும் கொள்ளெனச் சகலமந்திரமு முறையாகவுபதேசித்துக் கொடுத்ததன்றி இவ்வுலகமுழுதும் ஒருகட்டினிடத்திலிட்டால் ஒப்பாந்தன்மை யில்லையெனச் சொல்லுதற்கரிய வாளும் பரமசிவன்மேருமலையேயில்லாகக்கொண்ட காலத்தில் முப்புரமழித்த காராயணத்திரமும் உடன் அளித்துச் சீராமபிரானே நோக்கி மரங்களொங்கி மலைகளொங்கி மணலொங்கிப் பூங்குயில்குலாவுகின்ற குளிர்ந்த சோலைகள் புடைசூழ்ந்து அலைவீசிவருகின்ற யாறுதவழ்கின்ற ஒருகுன்றினிடத்தில் பஞ்சவடியென்னு மிடமொன்றிருக்கின்றது. அங்கே இளவாழைகள் கனிகளைத்தரும், கீண்டவாலையுடைய செந்நெற்பயிர் செழித்திருக்கும், தேன்பொழிகின்ற பூக்களுமுண்டு, காவிரியாறு என்றுசொல்லத்தக்க ஆறுகளுண்டு, இச்சனகியோடு நீ விளையாடிக்கொண்டிருக்கப் போதாவு மன்னமுமுண்டு, நீ இங்கேயிருந்து புறப்பட்டு அங்கேபோய் தவஞ்செய்யலாமென்று சொன்ன அகத்தியமுனிவரை வணங்கி விடைபெற்றுக்கொண்டு இரகுநாயகன் தம்பியும சானகியும் பரிவுற்பின்றொடர, முனிவாகள் சிகைதமேற்பட வினாந்துசென்றான்.

அகத்தியப்படலம்

முற்றிற்று.

சடாயுகாண்டபடலம்.

அவர்கள் ஆகாயம் காவதாடாத நதிகள் மலைகள் குன்றுகள் காடுகள் வனங்கள்வளந்தரங்கள்கடந்துசென்றுகழுகரசாகிய சடாயுவெனப்படும்பெரிய வுடையானைக் கண்டனர். அவர் உதயகாலத்துச் சூரியனது உருக்கிய பசும் பொன்னிறமொத்து உச்சியில் அச்சூரியன்து உலகமுழுதும படர்ந்த சுடர்க் கொழுந்தேபோல்சிறைவிரித்துவிளங்கிக்கொண் டிருபபதையும், ஒரு கருமலையினது உச்சியில் சந்திரனெளியுடன் பொருந்தச் சாத்திய மந்தாகினிபோல விளங்கியிருப்பதையும், விசும்பினதொளி மறையத் தன்மணிமயமான காலினிறத்தின் செவ்வொளிபற்ற இடமகன்ற நீலமலையினிற் பவளக்கொடியினது நிறம் பொலிந்தாற்போல்விளங்கிக்கொண்டிருப்பதையும், தூய்மையும் பெருங்கலையும் துணிந்த கேள்வியும் வாய்மையும் குற்றமின்மையும் அறிவின் கூர்மையும் மந்திரத்தினுன்போலச் செய்கையினெக்குஞ் சிறுகண்ணுடைமையையும், வா

ளரக்கர் வருக்கத்தைக்கொன்று களைந்து நமனுக்கு விருந்தூட்டிவீழ்கின்ற மிச்சிலைத்தானுமுண்டு காடோறுந்திட்டி இந்திரனது வெள்ளையாணையினது அங்குசம்போல் விளங்கும் மூக்கினிடத்தே அலகுடைமையையும், கவக்கிரக மாலைபோல் விளங்குங் கழுத்தினழகையும், மேருமலையின் உச்சியையடைந்த சூரியனைப்போல விளங்கு முடியையும், சொல் தமது புகழ்சொல்லுதற்கிலேயாக முடிகின்ற கீர்த்தியினது கூட்டத்தையும்பெற்றுள்ளார்; இருள் பங்கமுற வருகின்ற அருணனுடைய குமாரரும், தின்மைகொண்ட பகலைபோல வினைந்துதிக்கின்ற அதிககற்பங்கள்கண்ட தன்மையுமுடையாருமாகிய அச்சடாயுவருமெடிய மலையொன்றினின்று அது தன்னைத்தாங்க வலியில்லாது பிலத்திற்புக வலிபெற்றிருந்தமையைச் சாதகங்கொண்ட மனத்தராய் வந்து அடைந்தனர். அவனைநோக்கி இவன்முடிவினைத்தன்னிடத்தே செய்யவெண்ணினைன் அறிவிலியாகிய அரக்கனுமல்லனெனல் கருடனேயாமெனக் கருதி அவ்வீரிருவரும்சோவுடன் பாராத்தனர். அவாகளை அப்பெரியவுடையாரும் இவர்கள் தீவினைதீர கோற்பாருமல்லர், வில்லினையுடையராயு மிருக்கின்றதன் றிச்சடைமுடியையுமுடையராயுமிருக்கினறனரா. இவாகள்தேவராவரோ! அல்லர்; கான் இந்திரன்முதலிய இறைவரொண்மையும் நிரந்தரமும் பார்த்திருப்பேனே! பிரமன்மா லுருத்திரனென்னுந் திரிமூர்த்திகளையுங் கண்டிருக்கின்றேனே! காமனென்பவனையுங் கண்ணினற்பார்த்திருக்கின்றேனே, செந்தாமரை மலர்போன்ற கண்களுமு ஆஜானுபாகுவுமுடைய இவ்வீரர்களுடைய காற்பொடியினு மவனை யொப்பாமெனப்படாதே, இவராரோ தெரியவில்லையே! உலகமொருமூன்றினையுந் தமக்குடைமையாக்கிக்கொள்ளும் அளவற்ற இலக்கணமமைந்து தனிமுதல மாபினுறையு மலர்மகளுக் குவமைகூறப்பட்ட பெண்ணருங் கலத்துடன்வந்த இவ்விலவீரின்னுனென்றுந் தெரியாமலிருக்கின்றதே! மேலும நீலமலையும செம்பொன் மலையுமபோலுந் தோற்றப்பொலிவுடையராயு மிருக்கின்றனரே. திருவிருந்தமாபினையுடையாகிய புண்டரீகக் கட்புரவலன்போல்பவராகிய இவ்வீராகள் என்றுமுழுகியசக்கரவர்த்தினையபோலுஞ்சாயல்படைத்திருக்கின்றனரேயென்றுபலபலமனத்தினிலேநினைத்து அவ்விருவாமேற் செல்லுமன்பினையுடையானுப் நீங்கள் யார், என்மனம்பொருந்த விளக்கவேணுமென்று வேண்டிக்கேட்டுக்கொண்டான்.' அவ்வாறுகேட்ட பெரிய உடையானை நோக்கி வாய்மையல்லது வேறுகூறவரியராதலின் நாங்கள் உலகமுழுதுமாண்டதயரதசக்கரவர்த்தி திருக்குமாராகளென்றனர். அவ்வாறு சொலலலே களிப்பென்னுங் கடலிலாழ்ந்து தனையிலிறங்கி அவர்களைத் தழுவுங் காதல்சிறந்தானுய் மக்காள்! சக்கரவர்த்தி சுகமே யிருக்கின்றனரோ வென்றுகேட்க, அவனவாய்மை நிறுத்துவதன்பொருட்டாகத் துறக்கமடைந்தானெனத் தன்முன்னெடுத்துரைக்கவே ஏங்கி உறங்கினனென்று சொல்லும்படி உணர்வழிந்தனர். சக்கரவர்த்திக் திருமகனுரும் அவனை யெடுத்துத் தழுவித் தமதிருகையாலும் தம் புண்டரீகக் கண்ணினின்றும் பொழியும் அருவி நீரைக்கொண்டு முகங்கழுவவே வழுவிப்போன வுயிர் மீளவும் வந்தாற்போன்ற சடாயுவும் தெஞ்சழிந்து புலம்பலாயினன்.

பாவுதற்கரிய கொடைக்கும் நின்றன்பனிக்குடைக்கும் பொறுமைக்கும் முறைமையெனுமெபண்புதோற்ற * கரவலருமகற்பகமும சந்திரனும் கடலிடமும் மகிழ்ந்து வாழுஅரசர்க்கரசனே! யாசகரும கல்லறமுமபாலு மினரியா தாகவிட்டுப்போயினையே! அலங்காரமென்று சொல்ல உலகுக் கழுதமளிக்குந் தனிக்குடையானே! நிலத்தைக்காவல்செய்யவேண்டியநிருக்கமிலையாத நிலையுடையேனது நேயநெஞ்சின்கலத்தைக்காண்பதற்கு நடாதனையோ! நாயகனே! தீவினையுடையேனுகிய என்நட்பினின்றும் விலங்காமனுனைகையால் விலங்கினேன்; இன்னமும் உயிர்விடாதிருக்கின்றேன், தயினை புடைக்கு மத்தேபோல உலகுயினை வருத்திய சம்பராசூரனைக் கொன்றகாலதில நுண்மணல்கிடக்கும் கடல்சூழ்ந்த பூமணடலத்தில் அயலாரறிய நீயுடையாளுவியென்று கோபஞ் சிறிதேனுமிலலாத அழகிய மனத்தையுடையாளே! நீமுன்னைசொல்லியிருக்காயே! உன்சொலலும் அதினின்று மாறுபடுமோ! அறிவு சிறிதேனுமிராத யமன் உடலாகிய என்னை யிருக்கச்செய்து உயினை விசுமபேற்றி விட்டானன்றே! எழுகின்ற கோத்திபெருக இப்போதே ஒபபுனைக்கப படாத எரிகின்ற தீயினிடத்தே விழுவதேதகுலம! அபபடியிருக்கப பெணகளைப்போலவே கின்று தேம்பித்தேம்பி யழுவதோதகுதியென்று முன்னை நல்லறிவுதான்ற வெழுந்து அங்கே நிற்கின்ற இராம லட்சுமணனைபபார்த்துச் சக்கரவர்த்திருக்குமாரர்களே! நான்சொல்வதைக்கேளுங்கோளென்றுசொல்லலாயினன்.

முன்னாளில் தக்ஷப்பிரசாபதிக்கு ஐம்பது ராதர் பிறந்தனர். அவருள் பதின்மூவனைக் காசிபமுனிவர் மணஞ்செய்துகொண்டனர. அப்பதின்மூவனில் அதிதியென்பவள் முப்பத்து முக்கோடி தேவனைப்பெற்றாள். திதியென்பவள் அறுபத்தாறுகோடி அசுரனை வயிறுவாய்த்தாள். தனுவென்பவள் தானவர்முதலியோனைப் பயந்தாள். மதி யென்பவள் மனிதா முதலானவனை வருணங்களுடன் பெற்றாள். சுரபி யென்பவள் தேனுவுடன் காதருவர்முதலியவனைப்பெற்றாள். சுரோதவனை யென்பவள் கழுதை மனை ஒட்டகமுதலியவற்றைப்பெற்றாள். விநுதை யென்பவள் வானிடி மின்னல கூகை பருந்து முதலியபெரும்பறவைகளோடு அருணன் கருடனிவர்களையும்பெற்றாள். காபபனை யென்பவள் ஊர்க்குருவி சாவல் காடை முதலியவற்றைபபெற்றாள். கதை யென்பவள் கொடி செடி முதலியவைகளைப் பெற்றாள். கத்துருவென்பவள் அனந்தன் முதலிய நாகராசர்களைப் பெற்றாள். சுதை யென்பவள் ஒருதலை யுள்ளநாகங்களைப்பெற்றாள். அருட்டை யென்பவள் ஓந்தி உடும்பு அணில்முதலியவற்றைப் பெற்றாள். இளை யென்பவள் சலசரங்களைப்பெற்றாள். இவ்வாறு அதிதிமுதலியவர்களால் உலகம்படைத்தற்றொழில் நடக்க, விநுதை மகனுகிய அருணன் அரம்பையை மருவ அவள் சடாயுவாகிய என்னையும் எனக்கு மூத்தவனுகிய சம்பாதியையும் பெற்றாள். நான் உமது திருத்தந்தையாராகிய சக்

* கரவலரும் கற்பகமென்பது தானிங்கேயிராமல் விண்ணுலகத்திற் கரக்தலரும் கற்பகமென்றும், கரவலரும் உபெதி என்பது கரவாக இருளில்தோன்றும் அழகிய சந்திரனென்றும், கரவலரும் கடலிடமென்பது மாயிருளாலமாதலின் காத்தல் அருமையான கடல்சூழ்ந்த நிலமென்றுங்கூட்டிப் பொருள்கொள்க.

காவர்த்திக் குயிர்த்தோழன், தேவர்களுடன் வருணங்கள் தோன்றிய அக்கால த்தே பிறந்தவன். கழுகுகளுக் கரசனென்று சொலலிமுடிக்க, அதைக்கேட்ட இராம லட்சுமண ரிருவரும் அஞ்சலித்த மலர்க்கைகளை யுடையாராய்க் கண்ணினின்றும் மழைபோலுங் கலுழிபெருக்கெடுக்கப் புகழுடம்பை நிறுத் தித் தம்பொருட்டிறந்த சக்கரவர்த்தியை மீளக்கண்டாற்போல மனமகிழ்ந்து நின்றனர். சடாயுவும் அவ்விருவனையும் இரு சிறகாலு முறத்தழுவி மக்களே! நீங்களே எனக்குரிமைக்கடனுஞ் செய்யவேண்டும் ; இரண்டுடலுக்கு முயி ரொன்றுகிய சக்கரவர்த்தி பிரிந்தும் பிரியாதிருக்கும் இவ்வுடற்பாரத்தை இப்போதே யொழித்துவிடாமற் போவேனையாலுல இந்தத் துயரத்தை நான் மறக்கவேமாட்டேனென்றான்.

அவ்வாறு சொன்ன பெரியவுடையாராகிய சடாயுவை இராமலட்சுமண ரிருவரும் வணங்கிக் கணணீருகுத்து நின்று சொல்வாராயினர். எந்தையோ சத்தியந்தவறவெண்ணுமல் வினணுலகஞ்சென்றனன் ; இவ்விடத்தில்எங்களை நீருங் கைவிடுவீராயின் எமக்குக் கலைகணவார் யாரென்று மனமறுகிக்கூற, அதைக்கேட்ட சடாயுவும் அது அப்படியன்றெனின் நீங்கள் திருவயோத திபையடைந்தபிறகேனும அவனைச்சாமலாழியேனென்று சொல்லிவிட்டு அவர்களை நோக்கி நீங்கள் அரசன் இறந்தபின்பு அரசாண்டுவராது காடுறை வாழ்க்கையராகவரக் காரணமென்ன ? எனக்கு நன்றுகத் தெரியச்சொலல வேண்டும். என்மனம்வருந்துகின்றதே ! தேவா தானவா நாகர் முதலிய யாவ ரேனும் உமக்குத் தீங்குசெய்திருபபாராயின் அவர்களை யெல்லாங்கொன்று களைந்து நானே அரசைத் தருவேனென்றுசொலல, அதைக்கேட்ட இராகவன தம்பியைநோக்க, அவன் தன் சிறியதாயால் நேர்ந்ததனை யொன்று மொழியா மற்சொலலிமுடித்தான். பெரியவுடையாரோ இராகவபிரானை நோக்கி உமது தருதையையுணமை யுடையனுக்கி உன் சிறியதாய் தந்தசொல்லைத் தலைமேற கொணடு உலகமுழுதும உன்பின்றேன்றிய தம்பிக்குதவியவள்ளலே! எந்தை செய்துமுடித்தது யாவாவல்லாமென்று சீராமபிரானை அன்பாய்ப் புல்லிமோ ந்துபொழிந்த கணணீராயுடையாராய் என்னையும அரசனையும அளவில்லாத புகழை யடைவித்தாயேயென்று சொல்லிவிட்டுச் சீதையை நோக்கி, இவா இன்னுரென்று சொல்லவேண்டுமென்று வேண்ட, இருளை யிறுத்தாலொத்த தாடகை முதலாகவும் விலலிறுத்து மணஞ்செய்துகொண்ட திடையாகவும முன்னாளிலே தருப்பைப் புல்லில் தாதைக்குரிமைக்கடன் செய்துவந்தது கடைசியாகவும்நிற்கடந்த எல்லாச்செய்திகளையுஞ் சொல்லி இளையவன்முடி-க்க,நீங்கள் காடுதுறந்து காடுறை வாழ்க்கையராகவந்தீர் ஆதலால் இவ்வன்னை யொடும் வாசஞ்செய்துகொண்டிருந்தால நான் உங்களைக் காத்துவருகின்றே னென்றார். பின்பு சீராமபிரான் சடாயுவை நோக்கி அகத்தியமுனிவராற் கட்டளையிட்டுள்ள பஞ்சவடிக்குச்செல்லும் வழி யாதென்று கேட்க, நீங்கள் அங்கேசெல்ல வழிகாட்டுகின்றேன், அங்கேசென்று தவஞ்செய்வது தக்கதே யென்று சீராமபிரான் முதலிய மூவரும் தன் சிறகின் நிழலில்வரத் தான் ஆகாயமார்க்கத்திற்சென்று காட்டி விடைபெற்றுப்போக ; அவர்களும்அங்கே

இனிதாக வசித்துக்கொண்டிருந்தனர். சடாயுவும் தன் மருகனையும் மக்களையும் பொருந்தச் சிந்தனையிட்டு அரக்கரது வாலைவச் செவ்விதாகாடிச் சேக்கையிற் பார்ப்பைப்பார்க்கின்ற பறவைபோற்பாத்து வருவானாயினன்.

சடாயுகாண்படலம்

முற்றிற்று.

சூர்ப்பனகைப்படலம்.

சிராமபிரான் முதலிய மூவரும் சானகியார் கலிபெனத்திடந்து மகாகவியினைக்கண்டனர். அவ்வாறுகண்ட அவ்வாற்றின் கலையில சக்கரவாகம அன்னம பூங்கொடிகள் முதலியவற்றைபபாதுகுகொலையிட பருச்சுவடுயைக் கணடு தமபியாற் சுமைக்கபபட்ட சாலையில சானகியாபெமிம தான எழுந கருளி யிருந்தனன். இது நிறக ;

நீலமணிபோன்ற நிறமுடைய இராவணன காசமாகச்செய்யும வலியாளும முன்னளில் உயிரொமிம பிறந்து தான விளையுயகாலதையதிர துடன் வசிக்குங் கொடிய நோய்போல்வாளும, செமபட்ட மயினையுடையாளும, இராகுவும் வருந்தும உடமபினையுடையாளும, நிரிலோகத்தாருகுகும காசமுனடாக்குபவளுமாகிய சூர்ப்பனகையானவள்தவாகள் அரக்கரால நாங்கள்படுந் துயரத்தை நீக்கவேணடுமென்று வேணடிகொள்ள நானை உங்கள் துயாரந தீர்ப்பேனென்று சாப்பபப்பரியங்கதுறந்த ஆதிபகவனகிய சிராமபிரானிருந்த இடத்தையடைந்து தன் குலநாசஞ்செய்யக கருதுவதுபோல பின்வருமாறு நினைப்பாளாயினள். சித்தசனென்னும் பெபாகொணடு திரியும மன்மதனை உருவிலியா யிருக்கின்றான், இந்திரனுக்கு ஆயிரங்கணகள் பரமசிவனுக்கு மூன்றுகண்கள், பிரமனுகு நானகுமிதாள் இவன் அவ்வாறலலாமையால அனனவரல்லன், அம்மன்மதன் நற்றையஞ்சடைக் கடவுட்பெருமானகணணிற காய்ந்தமையால அழிந்தபோனபிற கன்றுமுதலினறுவானையும தானகலலதவஞ் செய்து கல்லுருவம பெற்றவநதானபோலு மென்றும, இவனது தோள் தருதியாலமைநதாழ்ந்து அழகின சாபினையுடையனவாகியமராமரங்களையு மொத்தில, மலைகளும புலலிய தன்மையுடையன, வலிமையாலுயர்ந்த திசையானைகளின் துதிக்கைதா னெப்பன் றெடித்துச்சாலல நேருமென்றும, மேருமலையையில்லாகவுடைய இறைவனது வீரத்தோளிணடும கன்மலையும ஒப்பாகாது; நீலமலையே யலலாமல மேருமலையாகிய பொன்மலையும் அவற்றினுக்கொப்பாகாவென்றும், தாளையுடைய தாமரைத்தளங்களோடும கட்டாக வுயர்ந்தகாட்டத்தையுடைய இம்மலைபோலபவன் தோளொடுதோள்சேலத் தொடர்ந்துபார்க்கையில் கண்கள் நெடியவேயல்ல, மார்புநெடியவென்றும், மிகவும் விளங்கு மிப்பேரழகினையுடைய நாள்முகமானதுமுருக்கவிழ்ந்த தாமனை மலரைப்போல்வதோ! சந்திரனை யுவமமாகச்சொல்லையிற் கலைகுடையும், அச் சந்திரனிடத்திலுமொரு களங்கமுண்டாயிருக்கும, இவனிடத்திலை அவ்வாறு

ஒன்றுமிருக்கக் கண்டதில்லையே என்றுஞ் சொல்லுவாள். எவன் செய்ய இனிய இப்பேரழகினையடைந்தவன் பயனின்மையாகத் தான்தன்திருவுடம்பு வருந்தத்தவஞ்செய்கின்றானே, புதுமையாகவமைந்த இத்தாமரைக் கண்ணன் தவஞ்செய்யத் தவந்தானேசெய்ததவம் யாதென்றும், கடலையாடையாக வுடுத்துஉருவச்செவ்வியமைந்துபிடிபோலுருடையுடையாளாகிய பூமிதேவியினது பெண்டன்மை நன்று நன்று, எங்கும் புல்படாதிருப்பது இவனடித்தலமதீண்டலின் அவட்கு மயிர்க்குச்சிறந்ததுபோலும், ஐயோ சூரியன் ஆகாயத்தில் தன் புலலொளி செலுதற்குச் சிந்தையில் நாணங்கொள்ளாமல் நடக்கின்றானே, வாளின்பிடிப்பைபபோலும இடையையுடையானது திருமேனிப்பொலிவைக் காணுதிருப்பானேனே ! என்றுஞ் சொலலிக்கொண்டே வானில்வினைந்த தேர் மாதரோவியமேபோன்று வெமபிப்புலர்ந்தயர்ந்து தேளிற்சென்ற கண்ணைட் டங்களை ஊன்றிப்பறிக்க முடியாமல் வருந்தினள்.

இவ்வாறெண்ணி நினைந்துருகி இராகவன்மேற் காதல்கொண்டு தன்னை அரக்கியென்றுளத்தேதினைத்துத் தடுத்துவிடுவானென்றெண்ணி மயிற்சாயலை யுடையாளெனக் கருதப்போவதேதலமெனத்துணிந்து திருமகளை மனத்தே பாவித்து அவள் மருவைவருச்சபித்து ஆகாயத்திலே மறைந்து அழகமைந்த காமனைமலை யிருக்கையாகக்கொண்ட பூவைபோலும பூவையாகிய திருமகளழகு தன் பின்னழகேயாக வாள்போலு மிரண்டுகணைகள் விளங்கும் திருமுகத்தையும் மேகலையணிந்த அலகுற்றடத்தையுமுடைய மின்னற்கொடியொன்றுவிண்ணினின்று மிழிகின்றதென்றுசொலலவிழிந்துகற்பகத்தருவிடையேபூத்த காமர்வல்லிக்கொடிபோல நடுங்கித் தேன்மொழிசொரிந்து மான்போலுமருண்டபார்வையடைந்துமயிலேபோல நடந்துவந்தாள். இவ்வாறுவந்த அம்மாதை மெய்ஞ்ஞானக் கண்ணருள்செய்யுங் கண்ணன் கண்டு மூவுலகத்தினும் இத்தனை யற்புதவடிவமுடையாளைக் கண்டதிலையேயெனப் பார்த்து இவளையாரோ ட்டோப்புக்கூறும் தன்மை ; அழகிற்கு மெலலைசொல்ல முடியுமோவென்றுநினைத்துக்கொண்டிருக்கையில், அவள்வினைந்துவந்துதன்கணணுகிய வேலைவீசி யயலிற்பார்த்து மானினைதுங்கி அயலிற் சிறிதுநாணினின்றாள். அதைக்கண்ட இரவிகுலதிலகன் தின்னுடைய வருகைகாலதாக, வெகுதூரத்தே நின்றும் இங்கே வந்திருப்பது எமமிடத்திலுள்ளதோர் புண்ணியமேயன்றே ? உமதூரொது ? பெயரென்ன ? உமமுறவாவா ரானென்ன ? என ; அவ்வாறு கேட்ட வேதமுதல்வனுக்குப் பேதையாகிய சூர்ப்பனகை சொலலவாளாயினள்.

காமனை தாமனைப்பூவை யிருக்கையாகவுடைய பிரமனது மாசைபுத்திராகிய புலஸ்தியமுனிவர் மகன் விச்சிரவசுவின் மகள், பரமசிவனுக்குத்தோழனாகிய குபேரன் தங்கை, திக்குயங்களையெல்லாம்வென்று சிவபெருமானினிதுவீற்றிருக்கும் வடகயிலைமலையை ஊசிவேரோடும்பறித்த இராவணனுக்குபின்பிறந்தாள் ; காமவல்லியாகியகன்னிகானெனைக்கேட்டு ஐயம்படாத்த நெஞ்ஞினையுடையனுய் இவள் செய்கையோ செவ்வையானதன்று ; இனிச் சிறிதறியலாமென் றெண்ணி, நீ இராவணனுடைய தங்கையாவது மெய்யேயாயின்

தென்றாயமன்டந்தன்மை யாதென்றுவினவ, இறைவன் அவ்வெழுவரிடத்தே பிலைத்தற்முன்னமே நான் மானைகள் வல்ல அரக்கருடன் வாழ்க்கையினும் வனத்தருதியாமல் ஆராய்ச்சியையுடைய மனமுடையேனெனி அறத்தின் கிழ்ய வென்னி தீவினையே நோற்றத் தேவரி னிவ்வுருவ மடைந்தேன். இரு காலன் இந்திரனும் எளிதாக வேவல்செய்யும்படி உலகமூன்றையுமாள்கின்ற இரவணன் தங்கையானல் நீ பெருஞ்செல்வத்தொடுந் தோன்றுமல். யாருந் தனையின்றித் தன்னந்தனியாக நீவரக்காரணமென்ன சொல்லவேண்டுமென் றகேட்க, அவள் அச்சிரியரல்லராகிய அரக்கரோடு வாழ்க்கை செய்கலாது தேவர்களிடத்தும் முனிவர்களிடத்து மடைந்துள்ளேன். இங்கோர் காரியம் பற்றி உம்மை காடிவந்தேனென்றுள். இரவிகுலதிலகனுமை நோழும் பார்க்கினும் மனிசனுங்கெஞ்சாழுமோ அறியவொணணுதே, நன்னெறிப்பாலு மிராதே, பின் னதையறியலாமென நினைத்துச் சூப்பகையையோக்கி என்னிடத்தேயாது காரியம்பற்றி வந்தாய் என்னலாவதற்செய்வேன் சொல்லென்றுகேட்க, அதற்கு அவள் தாமடைந்த யாமத்தன்மை தாங்களே சொலவதென்பது குலமகளிருக் கடுக்கதல்ல, நானே உயிர்வருந்துகினறேன், யாதுசெய்யவல்லேன், யாருமிலேன், காமனென்னும் பெயருள்ள ஒருவன் செய்யும் வன்மையைக் காக்கவேண்டுகின்றே னென்றுள். இராகவீரன் அதைக்கேட்டு இவள் காண முடையாளல்லள், அற்பத்தன்மையுடையாள், கல்லவளுமல்லளென் றெண்ணி முனையாடாம விருந்தான். அவனிருந்த நிலையையறியாது இவள் நமமேல் ஆசைகொண்டாளே அல்லதேனவென்னு மயக்கத்தா லுலாவு நெஞ்சமுடை யாளாய்ச் சொல்வாளாயினுள். எழுதரிய திருமேனியையுடையானே! இங்கே எய்தியதறியாமல் முழுதுமுணர்ந்த முனிவாக்கே யேவற்றொழில்செய்துகொ ண்டு பெண்டன்மையும் இளமையும் பயனின்றிவறிதே கழிய வீணைகட்பொழு தேபோக்கினேனென இராகுநாயகனே நீதிநெறியிற்செல்லாத இவ்வரக்கியேது மனத்திலெணணி இங்கே வந்தனளாகுமென்று மனத்திற்றெரண்டி அவளைநோக்கி இதுமுறையுமன்று, நீயோ அந்தணன்மகள், நானே அரசன் மகன்தம்மிருவர்க்கும்பொருந்தாதேயென்ன; அதற்கவள் என்தந்தையோ பிர மணனெனும ஏன்னையின்றதாயோ உலகைப்புரந்த அரக்கர்பெருமான்மகன்நீ ஏன்னைவிரும்பாது என்ன யிகழ்தற்கொத்த காரணமிதுவாயின் என்னுயிர் காண்டேனென்றுள். அவளவ்வாறு சொலலக்கேட்ட இராகுலதிலகன்சாவக் குறுநகைபுரிந்து அரக்கனை மானிடர் மணஞ்செய்துகொள்ளல் பொருக்கமு வ்வென்றே அறிவுடையோர் கூறுவராகளென, அதற்கவள் நானே அரக்கரி வீந்திக்தேவர்ப்பராவி அப்பழிபடு பிறவிநீங்கினேன் என்றுசொல்ல, இரு சோதரன் உன்னுடன் பிறந்தவரில் ஒருவனே உலகமூன்றையும் அரசபுரியும் செல்வரலுடையான், மற்றொருவனே சிவபிரான் தோழனெனத்தரும் பு பெயரன், அவரனோ என்பாலவந்து உன்னை மணஞ்செய்ய கொடுப்பாரேல் நான் ஏற்பேனென்றுசொல்ல, அதற்கவள் உலகத்தில் அமிலோர் ஏற்றதை மனம் வகுத்திருக்கின்றனர், அவற்றுள் காந்தருவமனமென்பது நின்னாலே அன்பும் அருள்கையுடைய மாதரும் ஆடவரும் தாமேகூடுங் கூட்டமென

வருத்திருக்கின்றனர். இதனல் காமொன்றுபட்ட சிந்தையராய்க் கூடுவோ மாயின் எனக்கு மூத்தவராகிய அவ்வேந்தர்களும் கழிமகிழ் சிறப்பொன்றுள்.

இராவணன் முதலான அரக்கரோ முனிவருடன் முதிர்ந்தபகையுடை யரா யிருக்கின்றனராதலின் முறைமை நோக்கிலாய் நீ தனியையாதலால் அவ ருடன் தழுவுதற்கான சமைய மிதுவல்லாமலில்லை, விண்ணுலகமு நின்னுரி மையாக்கி இனியராய் அவர் நின்னேவல் செய்தாழுகுவர் என, சீராமபிரா னும் சூர்ப்பநகையைப்பார்த்து அரக்கராருளரும் நின்னின்பாலமும் பெற்றேன் நின்னெடு நீங்காப் பெருஞ்செல்வத்திருந்து வாழ்வேன் ; நான் திருவயோத்தி நீங்கியபின்பு செய்தற்குரிய தவம்பயந்தென்று சிரித்து நின்றான். அச்சம யத்தில் அப்பன்னசாலையினின்றும் தேவர்கள்பெற்ற வரத்தால் வந்த சீதை யெழுந்தருள; அவ்வாறெழுந்தருளிய சீதையாகிய அரக்கர்கூட்டத்தையழிக்க வந்த கற்பாகிய நெருப்பைக்கண்டு இம்மணாறும் கூந்தலையுடைய பெண்ணை வனத்திலிவன் கொண்டுவரவேமாட்டான், இப்படிப்பட்ட உருவமுடையாளை உலகத்தில் காமெங்குங்கண்டதேயில்லை, தாமரைமலரினீங்கியடியிணைபூமியிற் படியத் திருமகளார் இங்கே யெழுந்தருள்வாரோவென்று மனந்திகைத்து நின் றான். பெண்பிறப்பெடுத்த எனக்கே இப்படிப்பட்ட திப்பிரமை யுண்டாக்கு மாயின் பிறருக்கென்னுகாதென்று சீராமனையும் சீதையையும்பார்த்துப்பிரமன் றானே அழகென்று சொல்லப்படுவதை இரண்டுருவாகப் படைத்தானென்று சொல்லவேண்டுமே இவர்களே அவ்வழகுக்கு வரம்பானவர்கள் என்பாள்.

இவ்வாறெண்ணிப் பின்சானகியை இகழ்விப்பேனெனத் துணிந்து இங்கே கடந்துவந்தாள் மாயைவல்லவள் வஞ்சனைக்குணமிகுந்த அரக்கி இவள்நெஞ்ச மறியவல்லதல்ல, இவள்கொண்ட உருவமோ மெய்யானவடிவமல்ல, மாமிசமே யுண்ணும் வாழ்க்கையுடையாளைக்கண்டு பயந்தேன் நான் அவளை அடையா திருக்க விலக்கவேண்டுகிறேனென்று சொல்ல, அதைக்கேட்ட காகுத்தன் சொல்வது நன்ருயிருக்கின்றது, உன்னை யாரொளிக்குந் தன்மையர், தெளிந்த வறிவால் உன் எண்ணந்தெரிந்தது. இவளோ கள்ளத்தன்மையுடைய அரக்கி யேயாமென நகைத்துக்கொண்டிருக்க, சானகி காகுத்தனை நெருங்கினள். அவ னைப்பார்த்து கள்ளத்தன்மையுடைய அரக்கியே நீ யிடையிலேவந்த தென்ன காரணம்? என்று சூர்ப்பநகை யதட்ட சானகி யஞ்சி தன்னிட்டிடை நோவ நடந்துவருந்தி பஞ்சின்மெல்லடிகள்பதைக்கப் பருவகாலத்திற்றோன்றும் மேக த்தில் விளங்கும்பவளக்கொடியேபோல அங்கெழுந்தருளியிருந்த இராகவனைத் தழுவிக்கொண்டாள். அரக்கரோடுவரும் விளையாட்டேயென்றுணரும் தீமையே விளையுத்தன்மையாம் என்பதையறிந்து இராகுகாயகன் வருத்தமுறுவனவாகிய காரியஞ்செய்யவேண்டாம், உன்னிலையை இளையவன் காண்பானுயின் கோபிப் பான் விளைந்துபோய்விடென்று கட்டளையிட, அதைக்கேட்ட சூர்ப்பநகைதன் னைத் திரிமூர்த்திகளும் மன்மதனும் பிறரும் என்னைப்பெறத் தவஞ்செய்கின் றனரோ! என்னை மிகழ்வதனு லென்னகாரியம்? பொறுமையென்பது சிறிதே னும் இல்லாத இக்கள்ளியை விழுங்கென்று சொல்லிக்கொண்டிருந்தாள். இன்னன்னெறுக் தொடர்புடையோம் அல்லோமென்று சொல்லவும் நீங்கா

திருக்கின்றுளென்றே எனஇராகுகாயகனும் சானகியாருடன்பன்னசாலையுட்புகு
க்தனர். இறைவன் போனபிறகு உணர்வுகெட்டதென்னும் தன்மையளாகிய
அச்சூர்ப்பநகை உடம்பினின்று நீங்கி யுயிர்போய்விட்டதென்றுசொல்லும்படி
யொடுங்கினின்று உயிர்ப்படங்கிக்கோபித்து அச்சானகியிடத்தேமிக்க மனவுவி
மையுடையாளென்றே அவனைச்சேரும் நெறியை நினைந்துசென்று இன்றுஇவ
னது திருமேனியை யணையேனேயாயின் உயிரிழப்பலென்று துணிந்து ஒரு
பூஞ்சோலையிற் புகுந்தாள். சூரியனும் அத்தமானவனையை யடைந்தான்.
எங்குஞ் செவ்வானமூடிக்கொண்டது.

இவ்வாறு சூரியன் அத்தமானவனையை யடையவே சூர்ப்பநகைக்குக்
காமானலம் உடம்பு முழுதும் பற்றிக்கொண்டது. அவளோ தாடகைமேல்
விட்ட கொடுங்கணைபோல மன்மதன்விடுங் கணைபட்டு மன மறுகி நின்றுள்.
இவள் காமபாணத்தால் மொத்துண்டு தன் கொங்கைகள் ஞெமுங்க ஆகாயத்
திற்செல்லும் மேகத்தை இறைவனுருவமென்றெண்ணித் தழுவுவாள், அவை
கள் இவளுடைய மேனியின்வெம்மை வெதுப்பச்செல்லக்கண்டு வருந்துவாள்.
இவள்கொண்ட மோகத்திற்கே யளவைகிடையாம லிருந்தது. இவளோ வழி
த்தீப்போன்ற காமா னலத்தினல் வெதுமபப்பட்டும் தான் இராகுவீரனை
யடைந்து வாழலாமென்னும் ஆசைமிகுந்து சிறிதும் ஆவிதீங்காதிருந்தாள். வஞ்
சனையாகிய கொடிய மாயையைவளர்க்கும் என் நெஞ்சிற்புகுந்து என்னுடை
ய ஆபத்தை நீக்கவேண்டுமென்பாள், அஞ்சனமலைபோல்வானே யருளாயென்
பாள், பின்னும் கஞ்சுண்டார்போல நடுங்குவாள், காவிமலரோ கயலிணையோ
வென்று சொல்லப்படும் இரண்டு கண்களையுடைய அவனது மனைவியோ
திருமகளினும் சால அழகுபடைத்தவள்,பாவியாகிய என்னையும் பார்ப்பனை
வென்பாள், இவ்வாறு ஆவிவருந்தியும் ஆசைநோய் நீங்காதாளாய், காதலால்
மொத்துண்டுகிடந்து வருந்தாநிற்க மூன்றுலகத்திலுமுள்ள அரக்கராகிய இரு
ளைத்தொலைக்க இராகுவீரன் தோன்றினற்போலச் சூரியனுதயமானன்.

சூரியோதயங் கண்டவுடனே கன்னுயினைக் கண்டேனென்று சொல்
லத்தக்காளாகிய அக்கொடியவள் இடையென்பதே யில்லாதவளாகிய இச்
சானகியிருக்குமளவும் என்னை அவன் கண்ணெடுத்துபாரான்,வினைந்து காமோ
டிப்போய் அவனையொளித்துவிட்டு அவளுடைய காதற்கணவனைச் சேரு
வதேதலமென்பது துணிந்துவந்து அப் பன்னசாலையை நோக்கி இராகவனில்
லாதிருக்கக்கண்டு இதுதான் தக்கசமயமென்று எண்ணினள். இராகவ னக்கர
லக்காலக்கடன் கழிக்கச்சென்றதனல் இளையவன் அயலிலேகாத்துக்கொண்
டிருந்தான். அங்கேஇளையவனிருக்கின்ற தறியாமல்இவளோதனியேயிருக்கின்
ருள்; என் எண்ணம்பலித்தது இங்கேதனிகின்று என்னுவதனல் பயனில்லை
யென்றேநினைத்துக்கோபமிகுந்து அப்பன்னசாலையைநோக்கிநடந்தாள். அதை
இளையவன் கண்டு நில்லடி அரக்கியேயென விளைந்து சென்று அவள் பெண்
மையை நினைந்து வில்லைக் கையிலெடாமல் அவளுடைய கூந்தலைப் பிடித்திழு
த்து அவன் வயிற்றில் ஓருதை யுதைத்து உடைவாளை யுருவிச் சானகியைப்
பிடித்துப்போகலாமென்று எண்ணிவந்த அவளுடைய காது மூக்கு

என்னு மூன்றுறுப்பினையு மறுத்தெறிந்து விட்டுவிட்டான், அப்போது அவள் அழுதழுபுலம்பிய ஓலைபோ தினசயனைத்துஞ் செவிடுபட்டது, தேவர்கள் காதி லும்போய்ப்பட்டது, நிலமுழுதும் அவள் அறுப்புண்ட உறுப்பினின்றும் பெரு னிய இரத்தவெள்ளம் பாய்ந்தது இராவணவேட்டை யாடுவான் அவனுடைய மணிகள்பதித்த தலையைத்துணிக்க முகூர்த்தங்கொண்டதுபோ லிருந்தது. தண்காலடியதிர நடக்கத்துணிந்த அரக்கஇராவணன்முதலிய சூரர்களுடைய ஆவிசிக்க உற்பாதமென்ன இரத்தமழை சொரியும் கார்மேகமொத்துயர்ந்தும் பின் மண்ணில்விழுந்தும் உழைத்துக்கொள்வாள், அயர்வடைவாள் கைகு லைத்தலமருவாள், ஆருயிர்சோர்வாள், பெயர்ந்துசெல்வாள், பெண்பிறந்தேன் பட்டதென்னென்மை நன்றுயிருக்கின்றதென்பாள், வருந்துவாள், அறுப்புண்டமூக் கையொற்றுவாள், உலக்களத்தியேபோற் பெருமூச்செறிவாள், கையை நில த்தி லோங்கியறைவாள், தன் கொங்கையைப் பற்றிப்பார்ப்பாள், காலாலோடு வாள், இரத்தஞ்சொரிய நிற்பாள், ஊற்றுமிக்க நீருருவியேபோல ஒழுகுகின்ற உதிரச்சேற்றிற் பாய்கின்ற வெள்ளத்திற் றிரிகின்றுளாய்த் தன் குலத்துள் ளோர்பெயரையெல்லாம் எடுத்துச் சொல்லிப் புலம்பலாயினள்.

நிலையாக இந்தவுலகத்திலிருக்கத் தவஞ்செய்வோர் வில்லெக்கையிலெடுத் துத்திரிவது சிறியதன்றே! தேவர்கள் எதிரே தலையெடுத்து விழிக்காதிருக் கச் சமைப்பது போன்றதன்றே! பரமசிவனுடைய கைலாயமலையை ஊசி வேரொடும்பறித்த தனிமலையே! நீ என்னைப்பார்க்க வாராயோவென்றும், புலிப்புறத்தாகக் குட்டியகப்படாதென்ன உலகம் எடுத்துக்கூறும் உரைபொய் த்துவிடுமோ! ஊழிகாலத்தும் சலியாத மூவருக்கும் வானவருக்கும் தானவரு க்கும்மேம்பட்ட வலியையுடையானே!யான்பட்ட துன்பத்தைப் பார்க்கவாரா யோவென்றும், காற்றையும்நீரையும் நெருப்பையும் விண்ணையும்யமனையும் சுவ காங்களையும் ஏவல்கொண்டாயே! காமனை இங்கேஇரண்டுமனிசருக்கு ஆற்ரு திருக்க உன் வல்லபத்தை மாற்றிவிட்டாயோவென்றும், அழகிய வடிவம் மன்மதனை யொத்தாரேயாயினும் உன்செருப்படியிற் பொடியொவ்வாத மனி சனாச் சிறுவாயோ! என்றும், திசைக்களிற்றையெல்லாம் வெற்றிகொண்ட வீரனே தேனுடைத்தெரியல் புனைந்த தேவனையும் வருத்துகின்ற போரா ற்றல் உனக்கும்உன்தம்பியர்க்குந் தவிர்த்துவிட்டதோவென்றும்; மாமிசபோதகம் பெற்று கம்மவர்க்கெல்லாமுணவாயிருக்கின்ற இம்மனிசரிடத்தில் உங்கள் வலி யொடுங்கிப்போய் விட்டதோவென்றும், மரங்களடர்ந்த நெடியகாட்டில் மறை த்துவைக்கும் தவசிகள் வலியேயோ! வல்லபம் அமைந்த அரக்கர்களுக்கு ஓம்படையாலேமோ தன்னைநெடுந்தூரத்தபகைவர் அரணை அடுதலை அரியோவென்று சொல்லுமாறோற்றலேப்படைத்த காமனோ! என்பட்டசெயலின்னமையைக்காண வாராயோவென்றும், இந்திரனும் பிரமனும்சிவனும் தேவரும் குற்றேவல்செய்ய சபை மண்டிக்கை பல்லாண்டுகூற எல்லாவுலகங்களும் தழைக்க சக்கரவட்டத் தூடேநிலவிவீற்றிருக்கும் சனபதனெனவேலைசூழ்ந்து சாணுமல்லுன்னுகங்களை வருவதுவென்றும், என்மாற்புனைதெரியலை உனைத்தரற்றி என்னுக்கை புனிதனெனமனிசனிருந்தனென்றே இவ்வெற்றிகொண்டதென்று பார்த்

துக்கெண்டிருக்க நானிங்கிருந்து புலம்புவதுதகுமா! இது காரணிருக்கும் காணி யாட்சியாகிய சனஸ்தானமென்னும் வனமன்றே? நானிக்கேடையலாமா! என்றும், தேவர்களைக்கருவறுத்து இந்திரனை விலங்கிட்டு வானவர்களைக் குற் றேவல்செய்யப் பண்ணிக்கொண்ட என் மருகனுகிய இந்திரசித்தே காணை காதல்மிருந்து மூக்கிழந்து நாணமில்லாமல் அடைந்த வசையால் உங்கள் புகழ் மாசுண்டதா மன்றே வென்றும், மலையையும் வருத்துந்தோளையுடைய கரதூடணன் திரிசிரன் முதலிய அரக்கர் குலத்தவரோ; நீங்களும் நம் அண் ணனுகிய கும்பகர்ணனைப்போலத் தூங்கிக்கொண் டிருக்கிறீர்களோ வென் றும், நானழைத்ததைக்கேட்டு வந்துகேளீரோ வென்றும் இவ்வா று பலவித மாகப்புலம்பி அரக்கியாகிய சூர்ப்பநகை யழுதிரங்கிப்பூமியிற்புரண்டு வீழ்ந் தகொண்டிருக்கையில் ஆற்றங்கரையிற்சென்று அநுட்டான முடித்துக்கொள் ளப்போன இரகு நந்தனன்வர அவனைக்கண்டு மழைக்கண்ணீர் பெருக்கெடுப் பத்தன் அரிந்த உறுப்புகளினின்றும் உதிரம்பெருகஉனது அழகிய திருமேனி யில் அன்பிழைத்தவன்பிழையாலே எமமிறைவனே! யான்பட்டகொடுந்துய ரம் இதுகாணென் றெதிரிலேவிழுந்தாள். அவளைக்கண்ட இரகுநாயகன் இவள் யாதேனுங் கொடுஞ்செய்கை செய்திருப்பளென்று தன்னெப்பில்லாத மனத் தெண்ணி இவளை மூக்குமுலையும் காதும்தமபியே யரிந்திருப்பானெனத் துணி ந்து அவளைப்பார்த்து நீயாரென்றான்.

அச்சொல்லைக்கேட்ட அரக்கி என்னை நீயறியமாட்டாயோ யான் பகை யென்பது தனக்கோருலகத்தினுமில்லாதகோபத்தினையுடைய இராவணனுகிய எவ்வுலகமுமுடையானுக் குடன்பிறந்தா ளல்லளோவென்றாள். அப்படியிருந் தால் அரக்கரிருக்குமிடத்தை நீங்கி யாமிருக்கு மிடந்தேடி நீர் இங்கே யாது காரணமாக வந்தீரென்று சொல்ல, வேகின்ற கரிக் குவியலைப்போன்ற கொடிய காமமாகியநோய்க்குமாமருந்துபோல்வானை நேற்றும்யான்வந்திலேனெனை, நாமோ நேற்றுத் திருமகளார்போலும் அழகிய படிவங்கொண்டு வந்தனென்று இரகுவீரன்கேட்க, அதற்குச் சூர்ப்பநகை கொங்கையு மூக்குங் காதுமரிந் தால் ஒருவர்க் கழியமாட்டாதோ அழகென, இரகுவீரன் குறுநகைபுரிந்து இளையவனை இவளை நீயரிவானேனென, இளையவன் சக்கரவர்த்தித் திருமக னது பாதங்களை வணங்கிநின்று இவள்தன் வாயிற்பெய்துண்ணவோ? அல் லது தீவினை செய்துழல்பவராகிய அரக்கர் கூட்டம்புறத்தேயுளதோ அறி யேன்; விரைந்தோடி வந்து சானகியானை வலிதிற் கைக்கொண்டெடுக்கச்செ ன்றான்! நானதுகண்டு இவ்வாறுசெய்தேனென, அச்சொல்இரகுநாயகன் செவி புகாமுன்னேசூர்ப்பநகை சேற்றிலுள்ள தன்கணவனருகிருக்க மனத்திற்கோபி த்துக் கண்கள் நெருப்பெழச் சூல்கொண்ட தவளை நீரைக்கலக்குகின்ற கீர்த் தனையையுடைய அயோத்திநாட்டரசே! மாற்றாளைக் கண்டால் என்மனம் வருந்தாதோவென்றுதொல்லைமூடித்தாள். நான் ஆண்டன்மையில்லாத அரக்க ருடன் பொருத அவர்கள் குலத்தை யொருங்கழிக்கத் தேடியேயிருக்கின் றேன், நீகொடியசொற்களைப் பிதற்றவேண்டாம், இக்காட்டைக்கடந்துபோய் விடென்ன இரகுநந்தனன்சொல்ல, அதைக்கேட்ட சூர்ப்பநகை நான்மூகனை

கரன்வதைப்படலம்.

அவ்வாறுசென்ற சூர்ப்பகைகை கரீனது பாதத்தின்மேல் வீழ்ந்து புரண் டழுதனின்றாள். அதைக்கண்ட கரன் தன் வாக்கினைப்போலும் புகைமுந்தும் வாயினையுடையாளைய் உன்னைக் கூசாமல் இவ்வாறுசெய்தவன் யாென்று கேட்கவே, இருவர் மானுடர் அவர்கள் மேலும் தவப்படிவமுடையவர், வில் லும் வாளுமுடையவர், மன்மதனைப்போலும்போழகுபடைத்தவர், தருமசிந் தையுடையவர், தயரதமகாராசன் மக்கள், போரிலெதிர்ந்த அரக்கர்வருக்கத் தைக் கொல்லச்சமைந்துள்ளவர், உன் ஆற்றலைச் சிறிதேனுமதியாமல் அறத்தை நோக்கிநிறுத்து நினைப்பினையுடையவர், அவர்க ளொருபெண்ணருங்கலமன்ன ளொருத்தியுடன் வந்திருக்கின்றனர். அவளைக்கொண்டுபோய் இலங்காதிபதி யாகிய இராவணனுக்குக் கொடுக்கலாமென்று துணிந்துபோனேன், அதைக் கண்டு கோபித்து என்னை அவர்கள் வலிந்துபற்றி மூக்கு முலை காது இவை களைத் துண்டமாக்கினர், இதுதான் நடந்தசெய்தியென்று சொல்ல, அதைக் கேட்டுக்கோபமூண்ட கரன் உன்னை இவ்வாறுசெய்தானைக்காட்டென்று எழுந் தான். பின்பு அருகிருந்தவனைப்பார்த்து தேனைக்கொண்டுவாருங்கோளென்று சொல்ல, அங்கிருந்த பதினான்கு சேனைவீரர்க ளெழுந்துநின்று இக்குற்றேவலை நாங்களே செய்யக் கட்டளையிடவேணுமிறும், தேவர்கள்மேற் போர்செய்ய வாபோகின்றீர்? அல்லவே, மானுடர்மேல் போர்செய்யலாதலால் நாங்களே போகிறேரும் எங்களுக்கு விடைகொடுமென்று சொல்லினர். அதைக்கேட்ட கரன் நன்றுரைத்சொன்னீர்கள், நான் அக்குழந்தைகள்மேற்சென்று போர்செய் வேனுயின் தேவாகள் நகைசெய்யார்களா. நீங்களே அவர்களைப்போய்க்கொன்று அவர்க ளுதிரத்தைப் பானஞ்செய்து வெற்றிகொண்டு வாருங்கோளென்று சொல்லினன். அவ்வாறுசொன்ன கரனை வீழ்ந்துபணிந்து யமதூதரென்னும் படி சூர்ப்பகை தங்களைத் தொடர்ந்துவர, சக்கரவர்த்தித் திருமகனிருக் கும் இடத்தையடைந்து ஆயிரமௌளி யமலனதிபதிரா னடிமலை மனத்தி லிருத்தும் இறைவனைக்காட்டி நின்றாள்.

அவர்களைா போயடைந்ததே மோதுங்கோள் எறியுங்கோள் பாசத்தால் பிடியுங்கோள் கட்டுங்கோளென்று சொல்லி அச்சாலைமுழுதுஞ் சுற்றிக்கொ ண்டார்கள். சிராமனை இளையவனைப்பார்த்து சிதையைக் காத்துக்கொண் டிருவென்று சொல்லிவிட்டு, கற்பகம்போலும விளங்கும் தன்கையால் வில்லை வளைத்து நாணேற்றி அச்சாலையைநீங்கி இவ்வழியாக நெருங்கோளடாவென் றதட்டிப் போர்செய்யத்தொடங்கி மழுவும் வாளும் முத்தலைச்சூலமுமுடைய யமன்போன்ற ஆற்றலையுடையவர்களாகிய அப்பதினான்குபேருடைய விற்பிடி த்த கைகள் பதினாலையும் பாணங்களால் வெட்டித்தள்ளினன். மராமரங்கள் வேர்பறிந்து வீழ்ந்தாற்போல அவர்களுடைய தோளற்றுவிழவே வாள்கொ ண்டுபோர்செய்தனர். அதைக்கண்ட இரகுநாயகன்விடும் பாணங்களை அத் தஷ்டர்களுடைய தலைகளையும் அறுத்துத்தள்ளின. இவ்வாறு தன்னெடும் வந்த சேனைத்தலைவர் பதினால்வரும் வந்தவழி போனவழி தெரியாமற்போய்

விட்டது. சூர்பபகை யோடிப்போய்க் காணுக்கு நடந்தவிஷயத்தை யெல் லாம் எடுத்துச்சொன்னாள். காணும் சுங்காணனும் நடுப்பரும் கோபமூண்டதி கரிப்ப யானைறத் தேனைக்கொணடு வருவதனறிபபோர்க்குச் செல்ல வெற்றி முரசறையுங்கோ ளென்றான். அப்படி பேரிகையோசை கேட்டவுடன் மாரி காலத்தின் மேகம் அளவில்லாதன வதாற்போலத் தோச்சேனை திரணடன, தேவாகளுலகமும் நாகருலகமு நடுங்கின. அச்சேனையிற் போாக்கெழுமுரசமே முழுக்கமாகவும, தோள்களே அலகளாகவும இறுதிக்காலத்திலே கருங்கடல் காலகிளர்ந்தாற்போல ஆரவாரித்தெழுந்தது. காடு நெருங்கி விணமுழிக்கொ ண்டாற்போல நீண்டெங்குமோங்கிய நெடிய கொடிகள் எங்கள் பசியோடிப் போமென்று சந்தோஷித்தெழுந்து துள்ளியாடிக்கொண் டிருக்கின்ற அல கைகளைப்போல ஆடமதயானைக் கூட்டமே பொன்ற அரக்கர்கள் கையி லுள்ள வாளோடு வாள்தெய்த்துக் பொறியினைபபோலக் காடெங்கும் தீப் பொறிபொங்கப பல வாத்தியங்களெழுந தாரவாரிக்க ஆதிசேஷனும அச் சேனையின் பாரத்தைச் சுமக்கமுடியாமல தலைவளித்துக்கொள்ளஉலகத்தில் உள்ள மலைகளெல்லாம் ஒருபுறத்தேவாது சேர்ந்தாற்போலவும் புலியின்கூட் டமோ, மேகக்கூட்டமோ, யானைக்கூட்டமோ, மலைகளோ அல்லது சிங்கத்தி னினமோவென்று சொல்லத்தக்க பல பதினாயிரம படைவீரர்கள் போயினா ரெ தேர்கள் ஆளிகள்பூணடனையும, சிங்கங்கள்பூணடனையும், யானைகள் பூணடனையும், புலிகள் பூணடனையும, நாய்கள்பூணடனையும், கரிகள்பூணட னையும், கூளிகள்பூண்டனையும, குதிரைகள்பூணடனைய மாகச்சனறன ; அப்போதே எருதுகளாரவாரித்தன, மறைகளாரவாரித்தன, காற்றினமாரவா ரித்தன, கழுதைகளாரவாரித்தன, தேனறியமாத்திரத்தில் உலகமுழுதும சுழ்ந்துசெலலும பருந்துகளாரவாரித்தன, சங்குகளாரவாரித்தன, தேரினங் கள் நெருங்கின, யானைகளுநெருங்கின, குதிரைகளுநெருங்கின, காலாட்களு நெருங்கின ; மழுக்களும, வேலகளும, வயிரவாட்களும, இருப்புத்தடிகளும, தோமரங்களும, எறிபீட்டிகளும, முசுணடியும, சூலமும், உலக்கையும், கால பாசமும, சுந்தமும, வயிரமும, கோலகளும, பிணடிபாலமும், விலலும, பாண முமு, சக்கரமும, வலயமும, சங்கனுபத்தமும கப்பணமும பாசமுமாகியபடை களும நெருங்க, சூரிபனும தீக்கடவுளும அஞ்சுஞ் சோதியை யுடையனவாகி உதிரமும் மாமிசமுந்தங்கிய படைகளைக்கொணடாராய் தேவாகடகெல்லாம் துன்பத்தை யுணடாக்கியவைகளாய் வெற்றிமாலைவேய்ந்து அநேகமாயிரம் யானைகளின்பலமுடையாராய் உலகமுழுதும்கவளங்கொள்ளும்வாயினையுடை யாரும் தீயைப்போலுமிழிக்கும்கண்ணையுடையாருமாகிய பதினன்குசேனை த்தலைவர் புறபபட்டனர். தூஷணன் திரிசிரன்முதலிய வீரர்களும வந்து கலந் தனர். அச்சேனை சமுத்திரத்தின் மத்தியில் கருங் கடலமேருவை வளைந் தாற்போலக் கரனும் சூரியனுடைய பசும்பொற்றேரும் சேனைகளாலுண்டா கின்ற தூளியால் வெண்மையடைந்தது. அச்சேனைகள் நெருங்கிச் செல்வத னற் காடுகள் துகள்பட்டன, மலையிற் சஞ்சரிக்கும் மேகங்கள் துகள்பட்டன, கடல்கள் தூர்ந்தன, நிலத்திலும் ஆகாயத்திலும் நெருங்கிச் செல்வதனல்

ணிண்டமலையின்மேல் மலையினம் வருவனபோல மலையொன்றைவிட் டொன் றைத் தாவிச்சென்றனர். இவர்களைக்கண்டு பயந்து மிருகங்கள் ஓடிமுன்னே போவது இவர்கள் வரவைத் தெரிவிப்பதற்குத் தூதனைப்போல விளங்கிற்று. இரகுவீரன் சேனைகள்வந்து சேர்ந்ததென்று நினைத்து மின்னின்ற சிலையை யுடையாளுய் கவசமணிந்து வாளேயேந்திப் பாணங்களமைந்த புட்டிலைக்கட்டிப் புகையு நெஞ்சங்கொண்டு யான்செய்யு நிலைமையை நின்றுகாணென்று விரு மபி நேர்ந்துமுன்னே நின்றுதன்பின்னேதான்றிய இளையபெருமானைப் பார் த்துநெறிகொண்டமாதவர்க்கு முன்னானிருதருயினைக்கைக் கொள்வேனென்ற சொல் பழுதாகாவண்ணம சிதையைக் காத்துக்கொண்டிருவென்று சொல்லி விட்டுமரங்களடர்ந்த காடெங்குமபடர்ந்த இச்சேனையோ கான்சேனையென்று துணிந்து இரகுநாயகன் வாளிகளடாந்த புட்டிலைக்கட்டிக்கொண்டு வில்லேந்தி யுடம்பிற் கவசமணிந் துடைவாளைக் கட்டிக்கொண்டு என்மேல் திரிலோகங் களு மெதிர்த்துவந்தாலும காலுலக தழியுமல்லவா? சிங்கம்போல்பவனே! இப் போனை யெனக்குக் கொடுத்துவிடுமென வேண்ட, அதற் கிராமபிரானும் மன மிசையாமல் நின்றகுறிப்பை மனத்திலறிந்து அவனது ஆணையை மறுக்கப் பயந்து தன் செங்கையைக்கூப்பி நின்றுகொண்டு கண்ணீர்விட்டுக் கதறி யழுது சீதையிருந்தவிடத்தி லிருந்தான்.

பூங்கொம்பன்ன சானகிமனங்குழைந்து வருந்தப் பன்னசாலையினின்றும் இரகுநந்தனன் அரக்கர்க ளழியும்படியாகக் குகைக்குளிருந்த சிங்கம்குஞ்சரங் களைத் தேடிவருவதுபோலவந்தான். அவ்வாறுவந்த தாசரதியை மூங்கிலிற் றேன்றிய தீ அம்மூங்கிலை யழிப்பதுபோலத் தான்றேன்றிய குலத்தையழிக்க வந்த கொடியவளாகிய சூர்ப்பநகை சானகிராமனைச்சுட்டிக்காட்டினுள். அப் படி சூர்ப்பநகை காட்டக்கண்ட கரன் இதோநிற்கின்ற மனிசனுடைய வல்ல மையையழித்து வெற்றிமாலையைப்புனையுங்கோளென்று விரித்துச்சொன்னன். வந்தவனே மனிசனொருவன், இவ்வளவிமைமிருந்த சேனைக்குக் காடிடங்கொள் ளாதே! அப்போதுயானடைந்த வெற்றியென்னும்? யாவருமபார்த்திருங்கோள் மாமிசந்தினிந்த இவனை இப்போதே கொன்றுகளைகின்றேனென்று சொலல, அச்சொல்லைக்கேட்ட அகம்பனென்பவன் நமக்கா சகுனமும் நல்லனவாகத் தோன்றவில்லை, இரத்தமழையோ மேகங்கள் குமுறிப்பெய்கின்றன, பகலில சூரியனைப் பரிவேடஞ் சூழ்ந்திருக்கின்றது. உன்கொடியின்மேல் காக்கைக் கூட்டங்கள் சண்டைசெய்து வீழ்ந்து புலம்பாகின்றன, வாளின்வாய்களை ஈவனைக்கின்றன, வெற்றிவீரருடைய தோள்களும் கண்களும் இடந்துடிக் கின்றன, வீரர்களுடைய குதிரைகள் தூங்கிவிழுகின்றன, நாயு நரியும் கூடி ஊளையிடுகின்றன, பெண்யானைமதம் பெருக்கெடுத்துப்பொழிய ஆண்யானை களினுடைய தந்தங்கள்முறிபடுகின்றன, உலகம் அசைகின்றது. வானில் இடி விழுகின்றது. பெருந்திசைகள் கரிகின்றன. எல்லாச் சேனவீரர் முடிமாலை களிலும் புலானுற்றம்வீசுகின்றன. அவனை நம்மாலானதெல்லாங்காட்டிச்சுல பம்மாகவேவெற்றிகொள்ளத்தக்கவனுமல்லன்; சற்றேதாமதிக்கவேண்டுமென்று சொல்ல, அதைக்கேட்ட கரன்கோபநகைநகைத்து தேவனையெல்லாம் தேய

அனைத்தஅம்மியாகிய என்தோளோ போர்செய்யவிருமபிபூரிக்கின்றன; இம மனிசனுக்கின்றெனியவோவென்று சொல்லினன். அத்தருணத்தில் எறிபடை யிடிபோல்வீசி சேனைகள்சக்கரவர்த்தி திருமகனைவளைந்தன; அவ்வாறேவளை நதகாலையில் சீராமனது கைவில்லும் வளைந்து அதனல்விளைந்த போரையும் ஆனவனையிலும் சொல்லுவேன். எப்படியென்றல்சூலமற்றிருரும, மழுவும்வாளு மற்றிருரும், தண்டிபிண்டிபால மற்றிருரும, பாணங்களொழிந்தாரும், வேற்படை நீங்கினருரும், விற்களற்றிருரும, பல்லயமற்றிருரும, தொடியணிந்த தோளொடு தோமரம் இழந்தாரும,யானையை யிழந்தாரும, அச்சுடனே தோ கொடி முத் லியனைக ளிழந்தாரும், குதினைகளிழந்தாரும, முடியிழந்தாரும்,முசலந்துணி ந்தாருமாய்இப்படிபலவிதமாகப்போரில அககாகளினனுபினைபபடஎங்கே பார்த்தாலும் இரத்தவெள்ளமும் பிணமலையுமாகக் குவிந்திருந்தன. எங்கே பார்த்தாலும கவந்தபந்தங்கள்கூத்தாடின. அரக்கரதுகிணமணியைப்பிடுங்கிக் காகங்களும் கழிமகிழ்சிறந்தன, இவ்வாறுகவே போரசெய்யச் சீராமபிரானை அரக்கர்கள்எல்லாம் ஒன்றுகக்கூடியெதிர்தார்கள். அப்போதுஇரகுநாயகன் தன் வில்லைவளைத்து காணைற்றிப் பாணப்பிரயோகஞ்செய்தான, செய்யவே அப்பாணங்கள் வானத்திற் செல்வனவும் கடறபுறத்தேயுள்ள இடத்திற்செல் வனவும் சந்திரனைச்சூழ்ந்த நக்ஷத்திரமண்டலத்திற் செலவனவும் காட்டிற் செல்வனவும் மலையிற செலவனவும திசையானையிடத்திற் செலவனவும் மண மேலனவும் மலைமேலனவும விணமேலனவும் கடலின்மேலகீழனவும் வெற்றிரா டிய அவுணர்களுடைய மார்பையுருவிச் செல்வனவுமாயிருந்தன; அதனல் போரிற்சிலர் அயர்ந்தார்கள், சிலர்கழிந்தனா, சிலாவருந்தினா, சிலர்பெருமூச் செறிந்தனர், சிலர் புறணடனா, சிலா உதிரவெள்ளத்தில மூழ்கினர், சிலர் பாணமழைபடட பூமியிலமாணடாகள், சிலர் உயிரதுறந்தாகள். இப்படி அரக்கவீரர்கள் மடியக்கணட பதினைகு படைத்தலைவீரர்களும மேருவில்லி யாகிய பரமசிவனைத திரிபுராதிகள் முனனளில்வளைத்துப் போர்செய்தவாறு போல இரகுநாயகனை மதியாது கணணில நீப்பொறிசிதற வருந்தி வளைந்து போர்செய்யத் தொடங்கி அவன்மேற் பலபாணங்களை யெய்தாகள், சிலர்பல படைகளை யெறிந்தாகள். சிலாமழுவால வீசினர்,சிலர்எழுவால் போர்செய்ய வளைந்தனர். இபபடி போர்செய்தானை யெலலாம இரகுநாயகன் பதினன்கு பாணங்களைவிடுத்து அவர்கள் கையிற்பிடித்த விற்களைப் பொடிப்பொடியாக்க அவர்கள் வில்லிழந்து வெகுளிமேற்கொணடு மலைகளைப்பிடுங்கி யெறிந்து ஆகாயமார்க்கத்தினின்றுகொணடெறிதாகள். அதைக்கண்ட இரகுநாய கனைதன்புருவச்சிலையையும் கைச்சிலையையுமவளைப்ப அம்மலைகள் வந்தவழி போனவழி தெரியாமற்போயினவன்றி அவர்களு மவ்வாறுயினர். இப்படி படைத்தலைவர்படவே திரிசிரனென்னும் பெயர்கொண்ட அரக்கர்பெருமான் இரகுநாயகன்முன் தோன்றிப் பாணப்பிரயோகஞ்செய்ய அவனையு மெதிர்த்து நின்றனன். இரகுநாயகனை அவனெடுவந்த அவுணவீரனையெல்லாம் தன் பாணத்தின் வாய்மையால் தேவராக்கினன். அதைக்கண்ட திரிசிரன் கோபங் கொண்டு இரகுநாயகனது திருவுருவமறையப் பாணப்பிரயோகஞ்செய்தான்.

இரகுநாயகனும பதினன்குபாணங்களேபவி அவனெறிவந்த தேனையழித்து அதைச்சலுத்தும சாரதியையுங் கொன்றான். பின்னும் இரகுநாயகன் அத் திரிசிரனுடைய முதுகலையினில இரணைடைத் தன்பாணங்களா லறுத்துத் தள்ளத திரிசிரனும தன் தேரழிந்தும திரிசிரனென்னும் போரழிந்தும தன் ஆற் றலபினழபாலுய் மேகசாலமபோலக கணமாரிபொழிந்தான், பினனும இப் படி அவன் சலியாமற் போர்செய்து, அவன கையிற்பிடித்த விலலையும அறிக் கத்தானிறிதுமமனத துளங்காமல மாயபபோரசெய்யத் துணிந்தான், அதைக் கணட இரகுவிரன தாளிரணடுக்கும தோளிரணடுக்கும இரண்டுபாணங்களை விட் டறுத்தெறிந்ததுமலலாமல அவன தலையையு மறுத்துத்தள்ளினன. திரிசிரன இறநததைககணட அரக்காகள் தூஷணன விலக்கவும நிலலாமல விறிட்டோடினா. அதைக்கணட தேவாகள கையபப்புடைதத தாரவாரித்த னா. பினமலை சுமக்கின்ற நிலம குழிபுறக் காலபுதைநது நினைத்தினமேல விழுந்தழுந்துவாரும பினைத்தின்மேல விழுந்துருணடு போவாருமாய்ச் சிலா உயிரபிழைத்தோடினா. சிலா உதிரவெள்ளத்தில பாய்நது காலபறித்தழுந தினர். சிலர் இரத்தவெள்ளதிற்படுத்து நிலைகொள்ளாமல பயநது நீநதினா. சிலர்கச்சும் வாளும் தங்கள் காலத்திதாடாந் தீரப்பனவற்றைக் காணமலும் அச்சமென்பது ஒருருவங்கொண்டாற்போல தினறுமனம் வருந்துவார்கள். இவ் வாறு அரக்காகள் மனத்திநிலைடைநது போருக்காற்றும லொழிபபோக அவா களை நோக்கி நீங்கள் மனிசருக்குச் சிறிது மஞ்சமவேண்டாம, உமக்குச் சில சொலலுவன் கேளுங்கோளென்று தூஷணன சொலல ஆரமபிததான.

உலோபமென்னும பய மனத்திலுளைடன வாழ்கின்ற கொச்சைத்தன் மையையுடைய ஆடவனைக்கணடு மாதருமம பனங்கூசார். உணமையெனனுங கவசந்தான் நிலைநிற்பதலலாமல் அச்சமெனனு மிது ஆருயிர்க் கருநதுணை யாகுமோ ! இந்திரனுமம திரிமூர்த்திகளுமம போரசெய்தகாலத்தில இராக் கதரில எவாகளை யொழிபபோகாதவா. உங்களுக்குப் பயந்தோடிப்போன தேவர்களிடத்திலா நீங்கள்இப்படி யொடுக்கற்றுக்கொணடீர்கள். இங்கொரு மனிசனுக்கு இத்தனைவீரர்கள் இடைந்துபோனீர்களே. உங்கள்கையிலுள்ள வாளொடுபோய்விழுநது ஊடுகலுற்றீரோ ! மாதாகளுடையகொங்கைதாங்கிய மாபிறகுளிக்க களிப்புற்றிருந்தும கொழுமையாகிய கண்ணையுடைய அம்மா தாகளை யிச்சிக்கவாயினீரா! நீங்கள் அவாகளைப் புல்லிக்கொணடிருப்பீரோ ! செம்பைப்போலுஞ் சிவந்துகாட்டுமை கண்ணிரணடும் பாலெனத்தெளிந்தீர ; வருந்துகின்ற காட்டின்கண நுழைபுந்தோறும முதுகி லுறப்பாய்ந்த அம பைக்காட்டுவீரோ ! கவசமணிந்த விசாலமான மாபிற்குளித்த அம்பைக் காட்டுவீரோ ! சொல்லுங்கள். துன்பமிங்கேஇதன்மேலுமுணடோ ! மனிசன் செய்யும் போராற்றல் அத்தேவாகளுக்கு மிதாகஉங்களரசன் தங்கையினது மூக்கேயல்லாமல் முதுகுகாட்டியோடும் பழியையு மேற்கொணடீர்கள். நீங் கள் வணிகராக அமைவீரகளோ ! வீரவாளைக்கொண்டு வேல்மடுத் தழப்படு வீரோ ! எவ்வாறு வாழ்வீர்கள் சொல்லுங்கோள் என்று தானும் தன் கடல போன்ற சேனையுடன் எதிர்நின்றுபோர்செய்யத்தொடங்கி அவர்களைநோக்கிச்

சிறிதுகோரம் பார்த்திருங்கோளென்று இராகுகாயகனை எதிர்த்து நின்றான். தேவர்களும்மனந்திகைத்து நின்றார்கள். இராகவபிரானும் அவனைகன்றுகக்காத்துக்கொள்ளென்றே எதிரோக்கி நடந்துசென்றான். அப்போது தூஷணன் படையிலுள்ள யானைகளிற் சில கோடிழந்தன, தேர்கள் சில கொடி கொடிச்சீலை அச்சுமுதலிய வுறுபடிழந்தன, கெல் சூடறுபடபுனைடாற்போலச் சிலகுதினைகள் கழுத்தறுப்புணடன, சில பாணங்கள் அரக்க ருடலிற்பட் டருவிச்சென்றன, கச்சையும கவசமுமிழந்து அருவியாற்றெழுக்கேபோற் சிலருடமபினின்றும் உதிரவாறெழுகக் கேடகத்தட்டினை யுடமபை யுருவிச்சென்றனர். இவ்வாறு தூஷணனுடைய படைவீராகளும தூஷணனும புங்கானுடங்கமாகவிட்ட படைக்கலமாறவும் அவ்வரக்கருடைய சேனைக்கடல வறளவும இராகுகாயகன் குறைத்துத்தள்ளினன். தேவாகள் ஆரவாரித்தெழுந்தனா, உதிரவெள்ளமோ மலைகளையும மரங்களையும இழுத்துக்கொணா டோடின ; இராகவனது பாணங்களோ திசைகடோறும் தொடாந்து அரக்காவெள்ளதைப் புரட்டின. கிணத்தையுணடு அலைகளின வயிறு கிழபடின. போனா விருமபி வந்தாரில்லாம அழிந்தனர். யமனே அவ்வரக்கராவியைப்பிடித்து மெய்ய்மமறந்தான். தூஷணனே இவ்வாறு சேனைகள் மடிவதைக் கணடு தனதேனா அரக்கர் பிணக்குனறின்மேல் விரைவாகச் செலுத்தித் தானும் அரிதினடைந்து யமனைதிரோ ஆவிசென்றுற்போல இராமபாணத்தை யெதிர்த்து நின்றான். அவன் எறிவக்த தேனையும் அத்தூஷணனையும பார்த்த இராகவன் நன்று நன்று நினனிலையென்று சிலசொலவிருமபிக்கூற; அச்சொலசொலலிக்கொண டிருக்குங்காலத்தில அக்கொடியவனகிய தூஷணன் மூன்று பாணங்களை யெவினன். அது எட்டுத்திசைகளை தனித்தனியேசுமக்கும பாரமாகிய எட்டு நாகங்களுடனே சிந்தூபாரசக்கரமுய அனந்தனுமாகிய இரண்டினையுமொன்றினமிசயாகிப சகுகாத்தினமிசபூதனுகிப பாதாழ்வானை .அசாளபபேரச்செய்த இராகவனது நெறுநியிற்பூணடிருகுபு விரபட்டத்தைத் தேவாகள் வருந்தவெட்டிதள்ளியது. அபபடிபாகவே அவனைப்த காலமும்வலியுகலலிவன்று நினைந்து இராகுகாயகனை புன்முறுவலசெய்து பாணகளைத்தெரிந்தெடுத்து அவனது வேகத தேராழியவழிதது கையிற் பிடிதிருந்தவிலலையும கவசத்தையு மறுத்தெறிநதான. இபபடி போரசெயது அததூஷணனைநோக்கித் தேவாகள் ஆரவாரிக்கவும முனிவாகள வாழ்த்தெடுப்பவும நீ வலியுள்ளவனனல் இதைக் காத்துக்கொள்ளெனறு ஒரு பாணத்தை யெவி அவனது தலையையு மறுத்துத் தள்ளினன்.

தன் தம்பியிறந்ததையும் தன்கடல்போன்ற சேனையை இராகவன் துணிப்பதையுமறிந்து கான் மிகவும்கோபங்கொண்டு சுந்தரன் மேகக்கூட்டங்களை வளைப்பதுபோல இராமபிரானைச் சேனைக்கடலொடுஞ் சூழ்ந்துகொண்டான். அவ்வாறு சூழ்ந்துகொள்ளவே சீராமபிரான் தன் விலலினின்றும பாணங்களைப் பிரயோகஞ்செய்தான். அவ்வாறு சூழ்ந்துகொண்ட அரக்கர்கள் மாயுப்போர்செய்து மாண்டனர். கானென்னும் பெயருள்ள வீரன் தன் சேனைகள் முழுது மாண்டதுகண்டு கோபங்கொண்டு நினைச்சேறடாந்த உதிரவெள்ள

த்தினதமில் தெடுங்கடலிலே மந்தரமலை தனியே நிற்பதுபோல நின்று தேரி லேறி இராமனை எதிர்த்தான். இராக்ஷஸனும் தன்னையெதிர்த்த கொடியவனுகிய கரன்மேல பாணங்களை யாராய்ந்தெடுத் தெறிந்தான். கரனே தியுருவின தாயும் காற்றின்வினையுள்ள தாயும கொடியனவாயுமுள்ள ஆயிரம் பாணங்களை யெய்யவே இராகவனும் அவ்வாறே யாயிரம்பாணங்களைவிட்டறுத்துத்தள்ளி மீண்டும் ஊழித்தீப்போன்ற ஒன்பது பாணங்களைப்பிரயோகஞ்செய்தான். கர னும் அவ்வாறே அத்தனை பாணங்களையேவிடத் தலைகளை யறுத்துத் தள்ளி னன். கரனே அவ்வா றறுத்துத்தள்ளியதுமன்றி மாயப்போர்விளைத்து சீராம னதுதிருவுருவைப்பாணமழைபெய்து மறைத்தான். தேவர்கள் கரனதுபோர்த் திறலைக்கண் டோட்டெடுத்தொளித்தனர். இராமனும கோபங்கொண்டான். கரனே மற்றுருகணைதொடுத்து தொளுற வாங்கிவிடுக்க இடியோசைபோல அவ்விராமன் பிடித்த வில்லொடிந்தது. இதுவரையிலும் இராகவனுக்குவெற்றி யுண்டாருகவென்று சொலலிக்கொண்டிருந்த தேவர்கள் இராகவன் பிடித் திருந்த வில்லொடிந்ததைக்கண்டு நெஞ்சம் துளங்கி வருந்தினர். சீராமனே தன கையிலிருந்த விலலொழிந்து தனனந்தனியே யிருப்பதற்குச் சிறிதேனு மஞ்சாமல தன் கையைப் பின்னுக்குவிடக்கண் டுணர்ந்து கருத்தினை யறிந்த வன்போல இராகவனது கையில முனனே பரசுராமரிடததேபெற்றுத் தான் சேமித்துவைத்திருந்தவிலலைவருணபகவான்கொணடுவந்துகொடுத்தான். அப படி வருணன்கொடுத்த விலலைக் கையிலேந்திபபோது தன்னைறிபற்றி யொழு காதபேருக்கெலலாம இடக்கணனும இடத்தோளும் துடித்தன. இராமனே அவ்வில்லில் தாணைப்பிக் கூற்றுவனுமஞ்சுமபடிகுனித்து எதிரது நாறுபாண ங்களைவிடுத்து அக்கரனேறியிருந்த தேரை யழித்தான். தேரிழக்கவே கரன் அந்தரத்தி லாரவாரித்தெழுந்து தன் கையிலிருந்த பாணங்களையெல்லாம இராமனது மந்தரகிரிபோன்ற தோள்மேல மழைபோற் சொரிந்தான். தயரத ராமனே தூணியினின்றுமெடுத்து சுடுகின்ற கொடிய பாணங்களைபபொழிந்து அவ்னதுவலக்கையும தோளும அறுத்துத்தள்ளினன். வலக்கைவீழ்ந்துபோக வே தன் இடக்கையால்வெற்றியைததருமம உலக்கையை யெடுத்துச் சுழற்றி யெறிந்தான். இலட்சுமணனுக்கு முன்னிறுனறலாகிய இராமனும ஒருகொடிய பாணத்தால் அனைதையும விலக்கினர். விடாதங்கிய பலலொடிந்தபின பாபட கோபங்கொண் டெழுந்தாற்போன்ற தன் வல்லமையால் மராமரங் கையில வாங்கிவந் தெதிர்ந்தான். இராமபிராணே அதன்மேல ஒரு பாணத்தை செலு த்தினன். அரக்கனே வரம்பெற்றிருப்பதனாலும மாயையில வலலபழுடைமை யாலும் உலகேழும பாரமுருக்கிய பாவதத்தாலும் வலக்கரமபோலக் கர னை கண்டதுண்டமைடந்தான். உட்னேதேவர்கள் ஆரவாரித்தெழுந்து ஆடிப்பாடி மலர்மழைபெய்து தூதந்தனா. சீராமபிரானும் சூரியன் உலகிற்படர்ந்த பனி மூடல்களினின்று நீங்கிவிளங்கினற்போலவிளங்கினன்..அப்போது முனிவர்கள் முறைமுறையாகவந்து நெருங்கப் போனாநாடிந் தன்னருயிரன்ன கணவன் கடைக்கத்தன்னைத்தனியேயிருந்த சீதையிடம் இராமனுமடைந்தான். இராமனைத் தம்பியும் அன்னமும் தங்கள் கண்ணினீரினால பாதங்களுவினர்கள். முகூர்த்த

மொன்றில் கரன்முதலிய அரக்கனை யெலலாங் கொலல அவர்கள் உடம்பி னின்றும்பெருகுகின்ற உதிரவெள்ளமோடவும், தேவர்கள் வாழ்த்தெடுக்கவும் இரகுநாயகன் எழுந்தருளியிருந்தான்.

இங்கிப்படியிருக்க இராவணன்தங்கையாகிய சூர்பபநகை தன்கையாலே வயிற்றிலறைந்துகொண்டு இரவுபோன்ற கானத்தழுவியெடுத்து அவன திதிர வெள்ளத்திற் புரண்டழுது நின்று காமனை மனத்தி லாசையாயுண்டாக்கிக் கொண்டேன். அவ்வளவுடன் போகாமல அவ்வாசையா லென்மூக்கினையு முடிய முடிந்திலேன், வாக்கினை லுங்கள் வாழ்வையும போக்கிவிட்டேனே யென்று இலங்கையை நோக்கிகடந்தாள்.

கரனவதைப்படலம்

முற்றிற்று.

மாரீசன் வதைப்படலம்.

அரக்கரிறந்ததை மறந்ததுபோல இராமனது பலிபோலுற தோளிலை வைத்தபோராசை மனத்தைவருத்தச் சகியாமல சினதையினது தன்மையை யுணர்ப்பேனென்று இலங்கைநகரிற் செலல அப்போது இராவணன்கொலுவிற் றிருந்தான். அதுகிலையிலாவுலகினுட்துச் சாவசரபதங்களைப்பனைத்தகான முகக்கடவுளாகிய பிரமனுலும வகுப்பரிதாக ஒப்பிலாத வரம்பகன்ற ஆற்றலை நுனித்தெண்ணவரிதாய்க் கெடாதவகைமுயன்ற தருமமபோல வேண்டிய வேண்டியாங் கெய்தப் பெறுவிக்குந தெய்வதத்தச்சனது அறிவனைத்தும் விளங் குவதாகியமணியாலலங்கரித்த மண்டபத்திலை ஏ ந்திநிசாசரர்களினமருப் பொடியப்பாடர்ந்த அழகிய தோள் வீங்கித தழைத்து உதயாசலம்போல விளங்க வும், அவனது குண்டலங்கள் மேருமலையை வலமவரும சூரியனது பிரதாசம பொருந்திய மண்டலங்கள் பனிரண்டுமே இருடிதாகத தோன்றுமாறு விளங்க வும், புலியுரியணிந்த புனிதனுமே, பொன்னுடைபுனைந்த கணணியனுமே, பூமிசை மேவிய புண்ணியனும் அழிக்கும் வல்லமையுடையாரலலர், தேவாகளில் இனிவெல்லும் தகையாரியாவரோ ! என மாதாகள்புலவிக்காலத்தலலதுவணங் காதமுடிகள்வணங்கவும,மணிப்பிரகாசங்கள் ஒளிக்கற்றைவீசவும,வயிரத்தோ ள்கள் அனந்தன்மணிமகுடம்போலதோன்றவும,நகூதத்திரங்கள் ஒளிவிட்டெறி ப்பதுபோலவும தான் வாரியிட்ட கிரகங்களெலலாம நெடுஞ்சிறையிற் கிடந் தாற்போலவுமமுத்துமாலைகள் விளங்கவும, அரக்கர்தலைவராவார் தாமவீழ்ந்து பாணங்களால் தேய்ந்து தேய்ந்து பெயர்ந்து செஞ்சுடர் பரப்பும மணிகள் பதித்த வீரகண்டாமணி யாரவாரிக்கவும், திரிவித வுலகத்தினு முதல்வராகிய முந்தையோர் நீங்காமலுதவிய பரிசேபோலத்தேவர்கள் அவுணாகள் பலதிசை களினின்றும் தூவும பூக்குப்பை பொருந்தவும், இன்னகாலத்தில் இவ்வழி நோக்குவானென்பதையெண்ணுமல் காதலந் தலையிற்கூப்பிய தன்மையராய் விந்தியாதர்ர் முறைமுறையே சூழ்ந்திருக்கவும், மாதர்விஷயமாகவே யொரு வார்த்தைசொல்லினும் தங்களையே சொல்லிறற்போலத் தாழுமுடியராயும்

அங்கைபுல் முள்ளமுங்குவிந்த யாக்கையராயும சிங்கமேறெனச் சித்தர்கள் சூழ வுமதான் மந்திரிமாரைநோக்கி கல்லனமொழி பகர்ந்தாலும் அதைக்கேட்டு நடு நடுங்கு மனமுடையராயும் எங்களுக்கு யாது பணியென்று வணங்குவாராய் பயங்கிடாத நெஞ்சம்படைத்த கின்னரர் சூழவும், மிக்க பயங்கரமான தண டேந்திய கையையுடைய யமனைக் கண்ணிறைக்கிய நரகவாசிகளைப்போல ஓருங்கு நானுடையராய் நாகர்கள் தங்கள் மனங்கெட்டுச்சூழவும், நிசை யாசனகளைச்செயங்கொண்டு பரமசிவனும் வசையையடையக் கயிலைமலையை ஆணிவேரொடும் பிடுங்கித் தேவர்கள் நடுங்க இந்திரனையும் பொருதுவென்று தோளிறற்றலையெடுத்து தும்புரு நாரதர் வீணையிற்பாடவும், மேகமாகிய துரு த்திகொண்டு தேவரும் வித்தியாதரருலகத்துப் புன்னகமரமுஞ்சுரந்த இனிய தேனுகிய புனலொடு கலந்து மான்போன்ற பார்வையையும மயிற்சாயலையு முடையாரது துகிலிலே தோயுமென்னுமச்சங்கொண்டுநீர்த்துளியைவருணன சிந்தவும், பூநதாதுவும தேனும் மகுடகோடிகள் முறைமுறையறையச் சிந்து கின்ற மணிகளும முத்துக்களும் தனையில விழாமுன்னம தாங்கித துறைகள் தோறும அச்சனை குப்பையாகாவணணம தொடாநது நின்று வாயு துடைக் கவும், வேத்திரக் கையரும் கஞ்சுகப்போாவையரும் அருகேநின்று வியாழ பகவானும சுக்கிரபகவானும இந்திரன் முதலாேனரும வந்தடைய அவர்களுக் கிருக்கை யளிக்கவும, சூலமுதலிய படைகளைத்துறந்து சுற்றிக்கொண்டிருக் கிற ஆடையால தன் வாய்புதைத்துத் தன் செங்கையால முசசறையுந் தோறும யமன்வந்து காழினை யறிவித்துக்கொண்டேயிருக்கவும, பரிமளத் தயிலமளாவிக் கர்ப்பூரமாகிய பஞ்சியிற்கொளுத்தித் தடாகத்தில் தாமரைக் காடு பூத்தாற்போல அக்கினி கர்ப்பூரவிளக்கெரிப்பவும், அதிசயமளிக்க அரு ளறிந்து புதிதாகவலரும் கற்பகத்தருவும சிந்தாமணியும் காமதேனுவும இரு திதிகளும முறைமுறையே வேணடுவனவற்றை நிறைவிக்கவும, குணடலமுத லியவற்றிலுண்டான பேரொளிமிகுந்துவிசுவதனல் இரவென்பதினியுலகத்தி லுண்டோவென்று சொலல இருளென்பதிலலாமற்போகவும், கங்கையே முத லிய நதிகளாகிய மாதர்கொங்கைகள் சுமந்து தங்களிடை கொடிபோலத் துவ ளச்செங்கையிற் புட்பங்களைச்சிநதி முறைமுறைநின்று மங்கலவாழ்த்துக் கூற வும, ஔவாவதி யென்கின்ற உயிர்பெய்த ஓவியமேபோலவ்வாள் மேகத்தைக் கணடு களிக்கும கலாபத்தையுடைய மயிலேபோல முழுவொலிமுதலியவற் றிற் கிணங்க அபிநயங்காட்டி நடனஞ்செய்யவும மூன்றுலகமும் தன்னருந் தவத்தாலும அளவில்லாத வாற்றலாலும் அடங்கிநிற்கப் புருவமாகிய வில்லை யும் கருந்தடங் கணணையுமுடைய மாதர்களுடைய கண்ணின் வெள்ளஞ் சூழவும் கொலுவீற்றிருந்தான.

இவ்வாறு கொலுவீற்றிருந்த இராவணனது அத்தாணி மண்டபத்தில் தலையிற்றூங்கிய கையையுடையாளாயும உதிரம் பெருக்கெடுத்தோடும் கொங் கையும் மூக்கும் காதுமுடையளாயும மேகத்திணைவிகெடத் திறந்த வாய் கொண்டு ஒருவர்முடிகளோ டொருவர்முடி நெருங்கிநிற்கும் கொலுமண்ட பத்தின் வடதிசைவாயிலின் புறத்தேவந்து முறையிட்டு உகாந்தகாலத்தின்

கடலொலியேபோலக் கூவியழுது மேற்றிசையிலிட்ட செவ்வானம்போலச் செம்பட்ட மயினையுடையாளாய் வந்தாள். அவ்வா றவள்வரக்கணட அரக்க மாதர்கள் எதிர்ந்துநின்றுவயிறலைத்தேங்கியிரங்கிநின்றுதிரிலோக கண்டகனது தங்கையோ மூக்கில்லாதவளாய்த் தன்னந்தனியேவரச் சகியாதாராய் நின்று பொருக்கெனவெழுந்து பார்ப்பார்கள், இன்னது சொல்லலாமென்வு மறியமாட் டார்கள். அதைக்கண்ட அரக்காகளும் இடியேறுபோலவே பெருங்குரலிட்டுக் கையொடு கையைப்புடைத்து கண்கள் நெருபபெழவிழித்து வாய்மடித்துநின் ரூர்கள் ; அவர்களிற்சிலர்இவள் இவ்வா றடைந்த அலங்கோலத்தையெண்ணி னல் இந்திரன்மேலதாமோ? பிரமன்மேலதாமோ? திருமான்மேலதானுமோ? சந்திரசேகரனுகிய பரசிவன்மேலதா னெணணப்படுமோ ? இனிமுடிவு யார் பாலோவென வருந்துவார்கள், சிலர் கொல்லத்தக்கபகைவர்கள் யார்தானிருக் கின்றூர்கள்? சிலர் இதுமூன்றுலகமுமடங்கிய இவ்வண்டத்தார்செய்த செய்கை யாகத்தானே யெணணப்படாது, அப்புறத்தண்டத்தார் செய்கையாகத்தானே முடியுமென்று சொல்லிக்கொள்வார்கள். என்னவிது ! சொற்பிறந்தார்க் கிது துணியப்பொருந்துமோ ? இல்லிற்பிறந்தார்க் கிவள்பொருந்துங்காரியம்செய்யா மற்போய்க் கற்பழிந்தாளென்றுதாணை கரன்ருனே இவள் அழகைக்கெடுத்து விட்டான்போலுமென்பார்கள். சிலர் இதென்னவிந்தை ? இவளை இராவணன் தங்கையென்று சொன்னபிறகும் அச்சொல்லைக் கேட்டவர்கள் இவளை அடி வணங்கிப்போவாரேயல்லாமல் ஒருவரால் வேறுன்றெண்ணப்போமோ; அப் படியானகையால் இவள்தன்னைத்தானே அரிந்துகொண்டாளோ வென்பார்கள். சிலர் போர்செய்யமுடியாமல் இந்திரன் ஏவலாளியாகத்திரிகின்ருனே! செந்தீ வண்ணனுகிய பரமசிவனும் மலைமேலேறிக்கொண் டிருக்கின்ருனே ! இனியார் தான் இப்படிசெய்யவல்லவனென்பார்கள். சிலர்தத்துறுகின்ற சிந்தைகொண்டு தளருகின்ற தேவரில்பிழைப்பில்லாத சூழ்ச்சியையுடையார்பித்துறவல்லரோ! சிலர்திரிவிதவுலகத்தினையும் முடிக்கவெணணுபவரோ இவ்வாறு செய்ய வெண் ணங்கொண்டார்கள்போலு மென்பார்கள். சிலர் இனி ஒரு கற்பமிருந்தாலன் றிக் கழலையணிந்த வாள்வீரர்கள் வல்லவராவாரோ ? அப்படியன்று; காட்டிற் சுற்றமறத் தவஞ்செய்யும் வாழ்க்கையராகிய முனிவர்களுடைய சாபமாகிய நெருப்பினுலேதான் இப்படியானதென்று சொல்லிக்கொள்வார்கள். எல்லை யில்லாத அவ்விலங்காநகரத்தில் வசிக்கும் இராக்கதப் பெண்களெவ்வாம் வளையலையணிந்த கைகளைநெரித்துப்பார்த்துப் பினையிட்டபாலென நிலைகலங் கிய சொல்லை யுடையாராய் ஒருவர் முன்னெருவ ரோடுவார்கள். முழவி னலும் வீணையாலும் முரளி யென்னும் பணணை வாசிக்கின்ற யாழினலும் குழலினலும் சங்கினலும் உண்டாகின்ற ஓசை யில்லாமல் என்று மில்லாத ஓராழுகுரல் அவ்விலங்கையிற் பிறந்தது. கள்ளையுடைய கிண்ணமும் அதை மொய்த்த வண்டும் மனமு மொருவழி கிடக்கவோடி வெள்ளமே யன்ன கண் ணீர்தளர்ந்த இடையாராய்த் தழுவிக்கொண்டு சென்றனர். சிலர் தண்டதரனை யுந் தண்டஞ்செய்ய வல்லவர், கோபங்குடிகொண்ட மனமுடையவர், வாடிய காலத்தில் சிவக்கும் தன்மையினும் கண்மிகச்சிவந்து கண்ணீர் பெருக்

கெடித்தோட, சூர்ப்பகைகை பாதங்களை வணங்கி நின்றனர். சிலமாதர் ஆடல் முதலிய தூறந்து தெருவினின்று புலம்பினர், தன்னேரில்லாத கும்மரசன் இவ் வாறிதைக் காண்பாணையின் என்ன பாடுபடுவமேறை வெனவெண்ணிச் சிலர் புல ம்பி வருந்துவார்கள். சிலாகணவன் தருஞ்சுகத்தையுமறந்தாராய்க்குழல்சோர கலேசாரக் கொங்கைததும்பதடப்பர் ; தூங்கிக் கொண்டிருந்த சிலமங்கையர் அதுதவிர்ந்துதளர்வார்கள். இவ்வாறு அவ்விலங்கையிலுள்ளமாதர்களெல்லாம் வருந்திக் கொண்டிருக்க அவள்நடந்துபோய் இலங்காதிபதியாகிய இராவணன் கொலு வீற்றிருக்கும் அத்தாணி மணடபத்தை யடைந்து புரண்டழுதாள். அப்போது உலகமெங்கும இருட்படல மூடிக்கொண்டது, அனந்தனும் பயந்து தன்பண மகுடங்களை நெரித்துக் கொண்டான். அட்டகுலாசலங் களு நடுங்கின, சூரியனு மயிர்த்தான், திசையானைகளு நிலைபெயர்ந்தா டின, தேவர்களு மொளித்துக் கொணடனர். தோளிலணிந்த வலயங்கள் படாரமேவிட்டுக் கண்கள் நெருப்படப் பொறியோ கோரப் பற்களின்மேற்சென் றெரிப்ப நெரிந்த புருவங்கள் நெற்றியிற்சென்று படாத்திரிவித வுலகமும் சுழ லத்தேவாகளுமு அயாத்தார்கள். தெனறிசையில வசிக்கும யமனுமு மற்றை யருமு இனறு நமக்கும முடிவுகாலம் வாததென்றே உயிரவருந்தியுடல்வருந்தி ஒன்று முணையாடாமலிருக்க இராவணனை வாயிதழைக் கவ்விக்கொண்டு இது யாருடைய செய்கை சொல்லென்றுகேட்டான்.

அதற்குச்சூர்ப்பகை இப்படிசெய்தவரோ இராசகுமாரர்கள், அவர்கள் காட்டில்வாதிருக்கின்றனர், மன்மதனைப்போலு முழுகுபடைத்தவர்கள், ஒருவ ருந்தங்களுக்கொப்புரைக்கப்படாத மனிசரேவாளுருவித்தடிந்தார்களென்றாள். மனிசர்களை செய்தார்களென்றவுடனே திசையனைத்தும பொருந்தகைத்தது மன்றிக் கண்கள் தீப்பொறிபறக்க வினைந்திப்படிசெய்வானேன் பயமொழித்து விடுநடந்தசெய்தியென்ன சொலலமேவணடுமென்று இராவணன்கேட்க,சூர்ப்ப கை சொல்லலாயினாள். அண்ணா ! அவர்கள் மன்மதனையொத்த அழகினை யுடையவர்கள்,தோள்வலியால மேருவினது வலியைக் கெடுப்பர், வில்லொன் றாலேயே உலகத்திலுள்ளாரெல்லாம எதிர்த்தாலும் அவர்கள் செருக்கையழி ப்பவர். முனிவர்களிடத்தேதவந்தனைத்தொழிலேயாசரிப்பவர்,சுதரனைப்போலு முகமுடையவர்கள்,தாமரைமலர்போன்ற கண்களையுடையவர்,முடிவுசொல்ல வரிதாகிய தவத்தினை யுடையவர். அவரையொப்பவர்யார் ? மாவுரியணிந்து கொண்டிருக்கின்றவர், மார்பிற் பூணூலுடையார், விற்றொழில் மிகுந்துடை யவர், வேதபடனஞ் செய்பு காவினை யுடையவர், சத்தியவாக்கிய பரிபால னஞ் செய்பவர, உன்னை யொரு தூசெனவு நினையாதவர், அக்ஷய தூணி சுமந்திருப்பவர், அரக்கருக்களஞ்சி யடைந்தோமென்று சிறந்தனனெறிபற்றி யொழுகும் அந்தணர்முறையிட அரக்கர்கள் குலத்தையெல்லாம் வேரொடுங் கினைவோமென்று சூளுரைத்து நம்மைத் தேடியிருப்பவர், திரிமூர்த்திகளையு மொப்பானவர். தசரத மகாராசன்பெற்ற மக்கள், பழி நீங்கினவர், அவ்வர சன்கட்டளையாலே காட்டிலவந்து இருக்கின்றார்கள், அவர்கள் பெயர் இராம லக்ஷ்மணர்க ளென்றாள்.

இராவணனே தன் தங்கையாகிய அருமருந்து போன்ற சூர்ப்பநகையி னதுநாசியைவாளாலரிந்தாரும் மானிடராம, அரிதுமுயிர்வாழ்வாராம்! யான் இன்னுமுயிர்கொண்டிருந்தவனைப் வெற்றியடைந்து வலியாலரசுகொண்டேன், கடந்தசெய்கையிது, குறையாத முறைகடந்தனை, உலகத்திலுள்ள முதன்மை யான வீரர்களுடைய முடிகளெலலாம அறவிபொழுதிலும இது பொருந்து மெனலாமா? மூள்கின்ற பழியை எனைவிடதீத முடித்தோர் ஆணைம யுண்டாம்! அவரருயிரு முணடாம்! ஓரவிடமுணட இறைவன அளித்த வாளும வாழ்நாளு மிருபதுமீதாளுமுடையாயைய காணுமிருக்கின்றேனன்றே?. புதியவுறவாக பழிவந்தடைந்தனிறு மனம்மனி வருந்துவதெனை மனமே! நதளரவேண்டாம, எந்தத்துயர முனக்குணடு;இனிபடபழிசுமகபபத்துத்தலைக ளுமதோள்களிருபதுமிருக்கினறனவன்றே! என்றுபொலனிகனகத்து தியெழ விழித்துத் துஞ்சையிலலாத இருமனிசனை வாளரிலை கொலலாமற் போய் விட்டாகளா? சனஸ்தான மெனனும பருங் காட்டிலை வதிதரும காணை முதலாகிய அரக்கரகளினறனை. அதற்குத் தூபடபலைக கணணீபபெருக் கெடுக்க வயிற்றிலறைந்துகொண்டு பூமியிறபரனடழுந்துபலைவி என்சொலலிக் கேட்டவுடனே தங்கள் தெரனபடனே கரதூடணை தனிசரராகிதிபரராகளும் சோமன்பிடித்த ஒளிவிலலாலை எறனறுகழைகளுள்ளாகக் கொலைபபட்டனர் என்றுள். இராவணன் தனைநாதனியலவாத ஒருவனைசெய்த பொழலதும் பிய சிறகுபட்டனிலனறு தெரலைக்கிடநதக் கொளளுமனி வருதுவதெனை மனமே! நதளரவேண்டாம, எந்தத்துயர முனக்குணடு;

ணுகியவாளைத்தான் சொல்லுவேனே ! அவையொழிந்த மற்ற அவயவங்களை த்தா னெடுத்துச்சொல்வேனே ! மீளவீந் திகைப்பதல்லாமல் கான் தனித்தனி சொல்லமுடியாதே, காளையே கீபோர்க்கக்கூடும்,கானுன்க்குச் சொல்வதென்ன விருக்கின்றது.வில்லையொக்கும் நெற்றியென்றுலும்,வேலொக்கும் கண்ணென் றுலும், முத்தொக்கும் பல்லென்றுலும்,இதழ்பவளமென்றுலும் சொல்லொக் குமே யல்லது பொருளொவ்வாவே ! அவற்றிற்குச்சொல்லத்தக்க உவமையு முண்டோ ?நெல்லொக்கும் புல்லென்று சொன்னபோது நேராகவெடுத்துச் சொல்லவல்லதோ ! இந்திரனை ஜராணியைமணந்திருக்கின்றன், தாமரைமலர் போன்றகண்ணையுடைய திருமகள் நாயகனும் திருமகளைமணந்திருக்கின்றன், கீயோ சீதையைப்பெற்றுய் முடிவாகப்பார்க்கினன்மை யவர்க்கேயில்லை உன க்கேயுண்டென்றும் ; பரமசிவனை பாகத்தில் உமையைவைத்திருக்கின்றன், திருமகளை மார்பில்வைத்திருக்கின்றன், பிரமனை நாவில்வைத்திருக்கின்றன், மேகத்திலே யுண்டான மின்னை இடைமைப் பருவத்திலே வென்ற நுண்ணிய இடையையுடையாளை நீயும் பெருமிதமமைந்த தோளையுடைய வீரனே ! பெற் றுல் எவ்வாறுவைத்து வாழ்வாயென்றும், பிள்ளைபோலும பேச்சினை யுடையா ளைப் பெற்றபின் கொள்ளை போகின்ற செல்வம் அவளுக்கே கொடுப்பாய் ; ஐயனே ! வள்ளற்றன்மையை யுடையானே ! உனக்கு நல்லேன் மற்றும் உன் மனையில்வாழும் கிளியைப்போலும் மொழியையுடையார்க்கெல்லாம்கேடுசூழ் கின்றே னென்றும்சொல்லி, சீதை தேவமாதரும் மண்ணுலக மாதரும் வயிறு வாய்க்கத் தந்தாளுமல்லள், முன்னளில் திருமகளைப் பாற்கடல் தேவர்கள் மந்தரகிரியாகிய மத்திட்டுக் கடையத்தந்தது, இவளையோ நிலம் தந்து கிரம் பிற்று, நீ அச்சானகியைப் பெற்றுக்கொண்டு சீராமபிரானை யான் பெறத்தரு வாய் ! அப்படிதருவது விதியே யானுலும் தவம பெரிதே யுடையராயினும வருவது வருநாளன்றி கைகூடவல்லதோ ! பத்து முகமும் கண்களு முருவ மும் மார்பும தோள்க ளிருபதும் படைத்த செல்வத்தை இனி நீ யடையக் கடவாய் ! அவளை உன்னிடத்தே* கொணடுவரத் தொடங்கிய காலத்தில் என்னை அவ்விராமன் தம்பியாகிய இலட்சுமணன் இடையேகோர்த்து வாளால் மூக்கரிந்து விட்டான், என்வாழ்வு முடிந்துவிட்டது, உன்னிடத்தே சொன்ன பிறகு உயிரை நீக்கிக்கொள்ளலாமென்றே துணிந்திருந்தேனென்றுள். அப்படி சொல்லவே கோபமும் பராக்கிரமுமான கொதிப்பும் ஆதிய பாபநின்ற விடத்து நில்லாத தன்மையைப்போற் பற்றுவிட்டன ; தீபமொன்று ஒன்றை யுற்றுற்போன்ற செயலிற் புகுந்தவாறென, தாவமும் காமநோயும் உயிரைக் கவர்ந்தன. அவ்விராவணனேகாளையு மறந்தான், தங்கை மூக்கையும் கடிந்து கின்றன், வன்மையு மறந்தான், தானடைந்த பழியு மறந்தான். சிவபிரானை யும் வெற்றிகொண்ட காமனம்பினல் முன்னளில் தான் பெற்ற வரமு மறந் தான். தான்கேட்ட மங்கையாகிய சீதையை மறவாம விருந்தான். அவ னிவ்வாறு காமத்தால் வருந்தி நின்றெழுந்து பதினு லுலகத்தவரும் ஆசி கூறச் சங்கமெங்கு நின்றூரவாரிக்கப் பூமழை பொழியப் புறத்தோருக் கெல் லாம் விடை கொடுத்தனுப்பித் தன்னாண்மனை நோக்கிச் சென்று பூவினல்

வேய்ந்த புட்ப சயனத்தில் தன் மனைவிமார் நீங்கச்சோர்ந்து சானகிமேற் கொண்ட காதல் தன்னுடல் முழுதும் வெதுப்ப மெல்ல மெல்ல வருந்தினன்.

அவனை காதல் பல வகையாகத் தோன்றலால் தான் படுத்திருந்த பூவால் வேய்ந்த சயனம்கரிந்து திசையானைகளை வெற்றி, கொண்டதோளும் யாக்கையும் தீயவுள்ளமு மாருயிரும் வேவலானன். மேலும் சந்தனமும் அழகியதனிரும் மலரும் கொண்டடுத்த போதுண்டாகியதீ மருந்தினல் வேது கொண்டாற்போல.உடல் முழுதும் வெந்து கொல்லனுலைக்களத்துத் துருத்தி யிற்றோன்றியதீயேபோலும் உயிர்த்துயிர்த்துவருந்தியும்காவியாமலும தீதென்- றமலும் சானகியை மெய்மையாகப் பாவியாத போதில்லாத அவரது மேனி யைக்காண. அதிகப்படு மாசையால் உயிர் நொந்தும திசையானைகளையும் வென்ற இராவணன் மரங் குடைந்த வண்டேபோல மன்மதபாணம வந்து வந்து தாக்க உரங்குடைந்து மிகவு நொந்து வருந்தியும் கொன்றைக் காய் போலும் கூந்தல் படைத்த பூங்கொம்பு என்னெஞ்சில் நின்றதுண்டு கண்ட தென்றென்று சிந்தையழிந்துமவருந்துகின்றதன்மையால்தானிருக்குமிடத்தே நெருங்கி மலர்வாசனை படிந்து தென்றற் காற்றுவந்து பட அக்காற்றைச் சீறியும் இன்னவண்ணம் செய்யலாமென்று சிந்து மறியாமல் பலதீபமாலை களை வாளைப்பழித்த மொழியையுடைய மாதர்களெடுக்க அங்குள்ள வோர் பூஞ்சோலையை நாடிச்சென்றனன்.

அச்சோலையில் பனசமாணிக்கத்தையும் வாழைமரகதத்தையும் தேமா வயிரத்தையும் வேங்கை ஆணிப்பொன்னையும் கோங்கு பதுமராகத்தையும் கமுகு நீலத்தையும் சாலம் குருவிந்தத்தையும் தென்னை வெள்ளியையும் நாகம் பளிங்கையும் பாதிரி பவளத்தையும் தருமென்றல் பாணித்தன்ன. பயன் ? வானளவுநீண்ட மிக்க செந்நிறமபடைத்த மணிமரநெருங்கி நகைத் திரங்களொடு மலர்களில் வேற்றுமையறியப்படாத தேனைச்சொரியும் பூஞ் சோலையின்மத்தியில் செம்பொன்னுலாகிய மண்டபத்தில் பாலினிறமபோன்ற பூம்படுக்கையைச்சேர்ந்து வருந்தினன். கனிகளிலும் மலரிலும்வந்த கள்ளை யருந்திக் கனிகளைப்போல மாதர்களுடைய மழலைச்சொற்போன்று கிளிக களும்குயில்களும் வண்டுகளும் இனியனவாய்ப்பாடினல் அவைகளையெல்லாங் கேட்டுக் கோபிப்பானேயென்ற அச்சத்தால் ஊமைகளைப்போற்பாடாதொழி ந்தன. பருவத்தினுலாகிய வாடையின்வந்த பசும்பனி மன்மதபாணம் உரு விப் புகுந்தொளித்த புண்ணிற்படுதலும் வருந்தி என்ன இருதுவென்றெடுத் துச் சொல்ல அதைக்கேட்டுப்பயந்து பனிக்காலம்போய் வேனிற்காலம்வந் தது. மரங்களும் மலைகளுங் குளிர்வாழும் பனியேயெரிந்ததென்றல் வேனிற் பருவத்தையும் சொல்லுந்தரமோ ! இன்பத்துன்பங்களாகிய இரண்டும் உள் ளத்தோடினையந்தனவாகும், உலகத்தில் அன்பெனும் விடத்தையுண்டானை யாற்றலாகு மருந்துமுண்டோ ? திசை யிறுதிவரையிலும் தன்மனத்தேதான் றியமையல் வேதனையுண்டாக்கும் வெப்பமூன்விக்க வேனிற்பருவமும்வெதுப் புங்காலத்தில் என்னிது ? முன்னைவந்த பனிப்பருவமேயல்லது,இவ்வேனிலே கேஞ்சிவிட்டுக் கூதிர்ப்பருவத்தை யனுப்புங்கனென்று சொல்லக் கூதிர்ப்பருவம்

வருதலும் தன்குவிந்தமேதாள்கள் கொதித்தன, சிகமுஞ் சுடவல்லதோ ! இதுமுன்னைத்தோன்றிய பனிக்காலமோ வென்று சொலல, அதுஉன்னுடைய ஆஞ்ஞைக்கது அஞ்சுமல்லவா ? வென்று அருகேகின்றார் சொலல, என்பால வந்தயாவும் இருதுக்களாகமாட்டா ஆதலால அதையு மகற்றுங்களென்றான். இவ்வாறு சொலல இருதுக்களெலலாம போய்விட்டன, அவை யாவையும தக் தமக்குரிய பருவங்களைச் செய்யாதனவாய் யோகிகளேபோலப் பற்றிழுழிந்து விட்டன.

பின்னே உலகமெல்லாம் பிணிமுதலாகிய பாசங்களை நீங்கி நெருங்குதற் கரிய தாழ்வினுலடையப்பெறும சுவாக்கமபோற் றோன்றின. உலகமுழுதும் குளிர்ச்சியும வெப்பமு நீங்க இராவணனுடைய உடமபு நெய்யின்றியெரிந்தது காலத்தால் வருவதன்றே? காமானலம ஒழுக்கத்தால் ,அவிவதலலாமல்செய் யத்தாணுகுமோ ! இவ்வாறுசெய்வதால சகிகமாட்டாதவனைப் சந்திரன்சாந்த முடையானெனபாரே, நீங்கள்போய் அவனைக்கொண்டுவாருங்கோளென்றனை. அதைக்கேட்ட இராவணனது இலங்காபுரத்துக்குவரப் பயபபடுமை சந்திரனை பார்த்து நமதரசனுகிய இராவணன் உனைனவருமபடி யழைத்தானென்று சொலலுவை, அதைக்கேட்ட சந்திரனும உதபமானுன். அச்சந்திரன் அவ் விராவணனுடைய உயினைவருத்தக் காலனைபோலத் தோன்றி விளங்கினுன். சந்திர கிரணமோ அவனைவருத்துவது அராவணதுறந்துபோந்த அமோத் தியாரானைடனை இராவணன உயிரைமற்செலுத்திய சக்கரமபோல விளங்கிற்று. இராவணன் தன கருத்தைபபாத்து தணிணிய மேனிலையயுடைய சந்திரனை யழைபுங்கோளென்ன, அவன்படிமை வருத்ததால சீதமதியாகிய சந்திரனும் வடவா னலமென்று சொலலுமபடி வெப்பமுண்டாக்களன்னைச் சூரியனை யழைப்பித்து வருதலுகின்றவாயா ? என்று சொனனுன் ; அயலிலுள்ளார் சூரி யன்தேரிலே யனறி விமானமூர்ந்து வரமாட்டானை, நீங்கள் கொடியதே யெனின் விமானத்தின்மேலே யிருக்கின்றான், பாருமென்றார்கள். இராவண னை மாதராருங் கன்புபூணட மனிசரொலலாம்படுகின்ற குணத்தை யொரு பொழுதுமுணரா தானுய் வருந்தி சந்திரனை நோக்கி நீபுதேபாகின்றுய் காணுந்தெய்கின்றேன், நீபுமெய்வெளுத்தாய் தானு மெய்வெளுத்தேன், நீபு முள்ளங்கறுத்தாய் தானு முள்ளங்கறுத்தேன், நீ நிலைதிரிந்து காய்கின்றுய், தானும் நிலைமாறுபட்டுக் காயப்படுகின்றேன், நீபும் கண்டாசொல்லக் கேட் டிருக்கின்றுயோ ? என்மேற்பாய்கின்ற புட்பபாணத்தைப் பறிக்கின்றவரிலை லாமையால் வருந்துகின்றேன், ஆகையா லென்னுயினைக்காப்பவர்யார் ? ஆற்று மற்போரையின் நமமைக்கொண டடங்கமாட்டாரோ ; என்னரிய வுயிருக்கு யமன்போன்ற சானகியாரது குவளைமலர்போன்ற கண்ணுக்குத் தோற்றுப் போனுய், அதனல் உள்ளங்கரிந்து மெலிந்துபோனுய் ! வெதும்பவுந் தொடங் கினுய் ; மாற்ருருடைய செல்வத்தைக்கண்டு மனமழிந்தால் வெற்றியாகவல்ல தாமோ ! வென்றுசொல்லி அவன்வருந்தி இரவினைநீடி சந்திரனையு நீக்கிவிட்டு முன்னைப்பகலும் சூரியனும் வரவேண்டுகின்றேனென்று சொல்லி வாய்மூடா முன்னமே சூரியனும் பகலும்வந்து விளங்கின. வெதமந்திரங்களைச்சொல்லி

முத்தியினிடத்து விழுகின்ற நெய்யைப்போலச் செம்பொன் உருக்கியத்
போன்ற கதிர்கள்பாய அனலெப்போல்த் தாமரைமலா விகசித்தது. சூரியன்
வரவே அமைந்தடங்கி வாழாமல் அடாதபொருளையடைந்து கர்வங்கொண்டு
இடையே செல்வமிழந்த சிறியோனைப்போன்றன குளிராத செவ்வாம்பல்
மலர்கள் ; சந்திரனே நாணங்கொணடு நின்ற ஒளிமழுங்கிப்போய் நடுங்குகின்ற
வடம்பை யுடையானுய்ச் சேணினின்றும் புறத்தே சாய்த்து இரவாகியமனை
வின் செல்லச் சூரியனெருரு திசையாகவே பிரவேசிக்கப்போய்ப் புகழினைப்
படைத்த அரசர்கள் ஆணை நடக்க நிலைகெட்ட அரசனை யொத்திருந்தான்.

தம்மை மணந்த நாயகனைப் பூம்படுக்கையிற்புணர்ந்து அவரிடத்தே மிக்க
கோபங் கொள்ளலால மாதர்கள் இரவுநீங்கியபுணராமலே கனவினு மூடறீரா
திருந்தனர். தள்ளுகின்ற உயிரையுடையராய்த் தலைவ னீங்குவதனுல் கள்
ளிரவில்நடுக்க நீங்காமல கூட்டமாக அலர்கின்ற குவளைபூக்கள் கள்ளொழுகு
வனபோல அழுகின்ற கண்ணியராயிருப்பா, நிலமாதர் மலர்பபடுக்கையி
லாடலை நீங்கிப் பணைகளைத் தழுவிய பவளக் கொடியேபோலத் தங்களிரு
கைகளாலும இறுகத்தழுவித் தங்கள் உயிரேபோன்ற தலைவரொடும் துயில்
கொண்டிருந்தனர். வண்டுகள்மதச்சுவடுதொறும ஆரவாரிக்க ஆய்ந்தகதிர்ஒளி
படவுணர்ந்தில, வாயுறங்காநிற்கின்றன, தெளிவில்லாதன, இனியநித்திரைசெய்
யும் படுக்கையில் கள்ளுண்டாரைபொத்தன, மதயானைகள் அருமையான
துறைநிரம்பியிருக்கின்ற உயிரைபொத்த கணவனைப்பிரிந்துவசிக்கும குலமக
ளிரைப்போல இல்லங்கடோறுமவைத்திருக்கின்றவிளக்குகளெலலாம எரிந்து
நெய்குறையாமலு மொளியிழந்திருந்தன. இவ்வாறு அவ்விலங்கா நகரமுழு
தும் இரவு ஊடல்முதலியவற்றுல்நிகழ இராவணனை கண்ணேனைக்கி னின.
க்கின்ற மனத்தையும நெருப்பினுற் றீக்கின்றது ; ஆகையால இது சந்திரனே
யாமெனமதித்தான். அப்போது சிலர் இதுவோ சந்திரனல்ல,பச்சைக்குதிரை
கட்டிய தேரையுடைய வெங்கதிர் சுடுவதல்லாமல் உடலிற் பொருந்தச்
சந்திரனது கண்சுடர் சுடத்தகாதென்று சொல்லினா. நீலமலைபோன்ற இரா
வணன்காய்கின்ற சூரியனைப்பார்த்து இச்சூரியனே ஆலகாலவிடத்தினும
கொடியனு யிருக்கின்றான். மேலும விடாமலே சுத்திக்கும கடலொனையையு
மகற்றிவிடுங்கள்,வினைவாக மாலைக்காலத்தில தோன்றும பிறையையழையுங்க
ளென்றுசொல்ல, அப்போது நிரமபிய சோடசகலைகளையுடையனு யிருந்த சந்
திரன் மூன்றும்பிறைச் சந்திரனைப்போலத் தோன்றியதென்றல தவமையல்
லாமல் இப்படிப்பட்ட காரியமெல்லாம் கைகூடுமோ ? மேற்றிசையில் மூன்
றும்பிறை தோன்றக்கண்ட் குணக்கடலையிய இராவணன் இதுவடவாமுகாக்
கினியல்லவென்றல் மண்ணைப் பிடர்மேல்வைத்த அனந்தனது விடத்தை
யுடைய பல்லன்றெனின் என்னைக் கோபிக்க மாலையானது வாளுருவிக்
கொண்டு தோன்றியதாகும். மகரந்தங்கிய சடையினிடத்துக் கங்கைவைத்
தது மோதுகின்ற கடலில் முன்னைநாளிற் பிறந்தபோது விடத்தைத் தன்கண்
டத்தின்கண் வைத்த பெருமான் இதுவும் விடமென்றே எண்ணிய வெண்ண்
மாகும், இடியைப்போலவருந்தி உயிரைவருத்திய சந்திரனெடியும் • சிறிய

பிறையானது குறைந்ததேயில்லை; கடுமையாகிய கறையினையுடைய கெஞ்சினிடத்தே நஞ்சுகலந்த பாம்பின்பெருமை சிறுமைகட்கு ஒரு தன்மைகுறைந்ததுண்டோ? கருமைகனிந்த இருளையும் காண்போமன்றே மூன்னைக்கதிரோகல்லது. இதையு மகற்றுவீர்கள். முன்பு நிரம்பியது என்னைச் சுடுமென்னின் இவ்வேழுலகத்து வாழ்வோரிற் பின்னைச் சிலருய்வானென் றங்கொருவார்த்தையுண்டோ? அங்கே அந்தப்பிறை நீங்கிவிடலும் அந்தகாரமெய்தியது! அதுஉண்மையாகிய தீங்கில்லாத கேள்வியாகிய ஒளிபுகுந்துவழங்காமல் குருடிதென்றுசொல்லும்படிகுறிக்கொண்டு கண்ணேட்டங் குறைந்து அருளில்லாத நெஞ்சினும் கரியநிறமுடைய தென்பர். கடலிடத்து வந்து ஒருவன் வலியால் விழுங்கும் ஆலவிடத்தி னடங்குவதன்றிது; உலகத்தினேடு விண் முதலாகிய எவற்றையும்விழுங்கும் உகாந்த காலத்தீ பசியவிடமுண்டேகருத்தது; மருளால் வந்தமயக்கமோ? மதிமற்றுமுண்டோ? தெருளாமல் இதென்ன திணிந்தமையிழைத்தாலு மொத்திராத இருளில் இருகுண்டலங்கள் கொண்டும் இருண்டநீலச் சுருளினேடும் வந்தடைந்து ஒருபிரகாசமுள்ள சந்திரன் தோன்றுகிற்கின்றனன். புடைபரந்தெழுந்த கொங்கையும் அல்குலும் பொருந்திநிற்கும் இடையைக் கண்டறியே மல்லாமல் எல்லா வடிவத்தையும் அறிந்தாம், விடம் பொருந்திய கண்ணுடையாளாகிய இவர் மெல்லமெல்ல மடப்பத்தை யுடைய மாதராயினர். முன்னுளிலே ஈரேழுலகத்துமுள்ள படைபோன்ற விழியையுடைய மாதரைக் கண்டிருக்கின்றேன், இவளைப்போல ஓர் பெண்ணுருவத்தைக் கண்டறியேன். வேறினி யுண்டானால் என் தங்கை யறிவித்திருந்தவண்டுக ளடர்ந்த கூந்தலையுடைய மாதரிவராகும், நான் இப்பிணியால் வருந்துவது பொறுமல் தேடிவந்தார் போலும்! இனிச்செய்வதாகிய கைம்மாறுமுண்டோ? காண்பதற் கினியவராகிய அம்மாதருடைய உருவத்தைக் கண்டு அவனைக்கேட்டேவிரகத்தால்வருந்திய அந்தக்ஷணமே சூர்ப்பநகையை அழைபுங்கோளென்றனன்.

அவ்வாறு சொல்ல அங்கே அருகே யிருப்பவர்கள் விளைந்து கூவிய காலத்தில் சூர்ப்பநகை இராவண னிருக்குமிடத்தை நோக்கி வந்தாள். அப்படிவந்த சூர்ப்பநகையை நோக்கி தங்காய்! மையுண்ட வாட்கண்ணும் மயில் போலும் சாயலுமுடையா ரிவரோ சீதையாகுமென்றனன்; செந்தாமரைக் கண்ணும் செங்கனிவாயும் சந்தணிந்த தடந்தோளும் தாழ் தடக்கையும அழகிய மலர்மாலை யணிந்த மார்பு முடையரைப் அஞ்சன மலைபோல் நின்ற இவனே இராமனுமென்றுசொன்னாள்; அதற்கிராவணன்நான்பெண்ணுருக்கண்டிருக்கப்பேதையே நீ யென்ன ஆணுரு வென்கின்றாயே உலகத்தில் பிறனை மயக்கக்கற்ற நமக்கு மண்ணினுள்ளாரோ மாயைய்ய விளைப்பவ ரென்றனன். வென்றுகின்ற உணர்ச்சியு மப்புறமோடாமல் மிக்க வாசையால்வருந்தின்ற உனக்கிசைந்து உன்னெதிரிலேகாணும் இடங்கடோறும் அவள் தோன்றுவாள், இது தொன்னெறியதாகு மென்றாள். அவளது சொல்ல அரக்கனுகிய இராவணனு மதுவாகுக; உன்னலே யவ்விராமனைக் காணுந்தன்மை யென்னவென்றனன்; எந்தகாள் எனக்கு இக்கீழ்காத துன்பத்தைச் செய்தானே அந்தகாள்முதலாக யானு மவனை யயர்த்திலேனென்று சொல்லிவிட்டு நீ அச்சானகியைக் கொண்டுவரப்போவென்று அச்சூர்ப்பநகை அகன்றுபோனாள்.

இவ்வாறு சொலலிய சூர்ப்பநகை சொலலுக்கேட்டு இராவணனு மீடழி
ந்து ஒன்றையு முணராளனுய் உயிர் வருந்திச் சோர்ந்து நின்றுன். இது நிற்க,
இறந்தவர் பிறந்தாரென்று சொல்லுமபடி உயிர்பெற்ற தசமுகன் தன்னருகே
யிருந்தானைத் தெண்ணீர் சுரக்கும் சந்திர காந்தக்கற்களால் நிறந்தமைந்த
மணடபமொன்று கட்டவேண்டுமென்று கட்டளையிட்டான். அப்படிசொல்லி
யானவுடனே தெய்வத்தச்சன் மனத்தினறிந்து ஆயிரந்தூண்கள் அமைந்த
மணிமண்டபமொன்று பிரமனும் காணங்கொள்ளத் தன் கைத்தொழிலானும்
மனத்தொழிலானுஞ் செய்துமுடித்துத் தெரிவித்தான். இராவணனு அந்த
கம் தெய்வப்பெண்கள் மணிவிளக்கேந்திவர அம்மணி மணடபத்தைக்கலைடு
அதனருகே யிருந்த காவிலுள்ள பசுமரமுயிர்த்த பைந்தளிர்ப் படுக்கையிற்
சோந்தான். அப்போது தென்றற்காற்று மெல்லெனவந்து வீசிற்று. அதனை
மலைப்பாமபொன்று வரக்கண்டாற்போலவே சிந்தித்துத் தன்னருகே யிருந்
தானை நோக்கிச் சொல்லலாயினன். கிணற்றிலுளடான சிலநீ உலகினைக்
குப்புறச்செய்வதுபோலத் தேவரில் ஒருவன்வது எனக்குத்துன்பத்தையுஞ்
செய்யத்தக்காரு யிருக்கின்றுனே ! என்னுடைய ஆருளையில்லாமலும் இவ்
வழியே வந்துவிட்டானே ! வினைவாக நீங்கள் வாயுதேவனைக் கொண்டுவாருங்
கோளென்றுன். அக்கட்டளையையேற்ற காவலாளர் அவனைப்போய்க்கொண்டு
வர அவனைத் தீயெழுப் பாதத்துத் தென்றல்வர நீயோ கட்டளையிட்டா
யென்று சொல்ல, அதற்கு வாயுதேவனும் நீ நிப்படி யிருந்தகாலத்தில் அவ
னுக்கொரு தடையுமிலலையேயென்று சொல்லிப்போனுன். இராவணனே வாயு
தேவனைச் சும்மா கோபிப்பதனுற் பிரயோசனமே யிலலை, அவ்வாறு குறுகப்
போவதை யோசிக்குமிடத்துச் சானகியாரது மெய்ம்மையான அருள் பெறே
னென்றுல எமனை வந்து குறுகுகின்றவனு யிருக்கின்றுன் ; ஆதலால தங்கள்
உணர்ச்சியால எனக்கடுத்ததை யெண்ணு மந்திரிமாரை யழைத்துக்கொண்டு
வாருங்கோளென்றுன். அப்படிவந்த மந்திரிமார்களுடன் ஆராய்ந்து மனத்தி
லெணணியதைச்செய்து முடிக்குஞ் செய்கையனுய்த் தெளிவிலலாத நெஞ்ச
மொடு அந்தாத்திற் போவதாகியதோர் விமானத்திலேறிப் பஞ்சேந்திரிய ரிக்
கிரகஞ் செய்துகொண்டிருந்த மாரீசனிடத்தையடைந்தான். அதை மாரீசன்
அறிந்து தன்பாலவந்த இராவணனைக் கணடு பயந்து சிறதை திகைத்து அவ
னுக்குச் செய்யவேணடியவற்றைத் திருந்தச்செய்து அவனழகிய முகத்தை
நோக்கிச் சொல்வானுயினன்.

கற்பகத்தரு நிழலிலிருக்கும் இந்திரனும் யானு மஞ்ச வரசாண்டுவரு
கின்ற இராவணனே ! இவ்வற்பமான காட்டிலுள்ள என் சிறுகுடிசைக்கு நீ
எளியோனைப்போலவந்த கருத்தென்ன ? வென்றுகேட்க, அதற்கு இராவணன்
சொல்வானுயினன். ஐயா ! எல்லாக் காரியமு மாய்விட்டது, நானே உயிர்தரித்
தயர்கின்றேன். என் புகழு மேன்மையும் போய்விட்டன, அதை நான் உனக்
கெப்படி சொல்வேன், அதைக்கேட்டாலு நாணமடிக்கும், வசையாகும் ; மிக்க
வல்லண்மபடைத்த மனிசர் சிலர் தங்கள்கைவாளால் உன்மருமகளாகிய சூர்
ப்பநகை தண்டத்தைத் தண்டமாக்கினர், என் மரபுக்கும் உன் மரபுக்

கும் இதைப்பார்க்கிலும் பெரிதாகிய அவமானம் வேறென்ன விருக்கின்றது ? ஈம்மனிசரி லொருவன் முதிரமலைந்தகான் முதலிய உன்மருகனை யெல்லாங் கொன்றேகளைந்தனன். அவர்களுடன் வாழும் சீதையைக் கைக்கொள்ளத் துணையாயிருக்க வெண்ணங்கொண்டே அத்தப்பழி உன்னுல் தீரவந்தேனென் றன். இச்சொல்லெல்லாம் சொல்லி இராவணன் எரிகின்ற நெருப்பில் உருக் கிட்டாற்போலும் கிளராமுன்னமே சிச்சீ யென்று தன் செவிபொத்தி யுள்ளங் கலங்கி அச்சமகற்றிக் கோபத்தோடுஞ் சொல்லலாயினன்.

அரசனே ! நீ உன் வாழ்வைமுடித்தாய் ! அறிவற்றாய் ! உன்னிலையலவி இது ஊழ்வினையென்றே நான் நினைக்கின்றேன், நாணுதுன்பமுடைய மன முடையேன்! இதமான வார்த்தைசொல்வனை என்று அவனுக்குத்துணிவான சொற்களெல்லாஞ் சாலலத்தோடங்கினன். இராவண ! நீ அற்றதாகியகையு டன் தலையையுமிட்டு நெருப்பில் வெகுநாள் யாகஞ் செய்தாயே, பசியால வருந்தி உயிரோய நின்றாயே ! அதனலன்றே இப்பிறலருஞ் செலவம் பெற்றனை. பின்னே அதைஇகழ்ந்தாற்பெறலாமோ ? பிறனதாரத்தைவிரும்பினனைத்தரும தேவதையுந்தனடனைசெய்யுமே ; கணடகராவாரிற் பிழைதகவ னெவா ? இந திரனேஅகலிகைக் காசைப்பட் டழிந்தானை. இந்திரனை யொத்தவர் எத்தனை பேர்களோ இழிவடைந்தாகளை. திருமகளைபபோன்றவா எத்தனையோபோ உன்செல்வத்தை யனுபவிக்கின்றரோ, நீயோ ஆலோசனையில்லாமலே புத்தி யற்றுப்பிதற்றுகின்றாயே ? நீ யபபடி செய்ய முயன்றலும் தீவினையும் பழியுமல லாமல் வேறுண்டாக மாட்டாதே, அபபடி யடைநதாலும சீராமனை பிரம னிட்டசாபமேபோன்ற தன பாணங்களால உனவலிமுற்று நாசஞ்செய்து விடு வானே ! என்னகாணும் நீ சிறிதுமறியாமலிருக்கின்றாய் ; கரனென்பவன் நமது சேனைக்கெல்லாம் மேலான வலலமைபடைததவனென்ப தியாவருமறிந்தகாரி யமே ! அவன்தன்சேனையுடனேமாள விலலொனறற் கொலலத்துணிந்த இரா மனேயாவனையுங் கொல்லச்சமைநதிருக்கினறனை. விராதனேபோலும் கொடி யவர்கள் உலகில் ஒருவருண்டோ ? அவனும ஒருபாணத்தாலே இறந்துபட் டான் என்றுல்நம்மவரில் அவனைகைக்குத் தபபிபபிழைப்பவர் யாவர் ? இதை எண்ணுந்தோறும் என்மனம வருந்துகின்றதை, இதை நீசொலலிக்கெதியடை வாயோ ? இதுநிற்க ; என்தமபியாகிய சுவாகுவும என் தாயாகிய தாடகையும படத் தன்கைப்பாணம் பிரயோகஞ்செய்யும் இராமனுக்கும், அவனயலிலே நிற்கும்தம்பியாகிய இளையவனுக்கும் நம்முடைய ஆண்மையெல்லா நீங்கிச்சய முண்டாகும் ; என்மனமோ அவனுயிருக்கலாமென்றே கவலைப்படுகின்றேன். சராசரங்களாகிய எப்பொருளும் நிலையில்லாதனவா யிருக்கின்றன். அவை யெல்லாமழியுமென்னு முண்மையு மறிந்திருக்கிறேம், நீயோ சிறுதொழில் செய்யத் துணிவுகொண்டாய் ; என்சொல்லையுங் கொள்ளமாட்டாய், இனி உயர்ந்த செல்வத்தில் எப்போதும்வாழ்ந்துகொண் டிருவென்றுசொன்னன்.

அதைக்கேட்ட இராவணன் மாரீசனை நோக்கிக் கங்கையைச் சடையில வைத்த சிவபெருமானேனும் கயிலை மலையை ஓரங்கையிலெடுத்த எனது

தோளாற்றலை இங்கொருமனிசனுக்கு எளியதென்றனையே யெனத் தன்வெங் கணைறிப் புருவமீதுசெல்லாநிற்கச் சொலகின்றான். மாரீசனே ! நீ நடந்ததைச் சிறிது நெஞ்சில் நினைத்தாயில்லையே, அஞ்சாமலு மிகழ்ந்தாயே ! எனக் கினையவளாகிய சூர்ப்பநகை முகமெங்கும அகழ்ந்தவாகளை நீயும வாய்விட்டுப் புகழலாமோ ; அந்தப் பிழையையும பொறுதனனென்று வென்றான். இவ் வாறு தன்னைக்கோபித்த இராவணனைநோக்கி மாரீசன்உன்னைக் கோபித்துக் கொண்டதும உன் சந்ததியானைக் கோபித்ததே யலது என்னைக் கோபித் ததன்றே ; மேலும் நீயெடுத்த கயிலை பலையையே நினைததாயாயின் அவ் வினைறவன் விலலாகக்கொண்ட மலையே இது, இதைவலித்தியென்று சொலல் அதைவாரியெடுத்து காணைறிட் டொடிததனையு முலகமறியாததோ ! நீ யெனன ? ஏதுமறியாதிருக்கின்றாயே ! என்சொலலையும நிறுதுமகொள்ளாய் போலும; இராமனை தன்வில்லிலாணேற்றி விடுவதற்குமுனனே உன்னுயிர் போமென்பதை நீயுறுதியாகக்கொள்ள வேண்டுகிறேன், நீ அறியாமையினலே யேயெணணுருவமென்றுனினைதத அருகசிதையினுருவைப பேசிவிட்டாயே! .அதுநம்மவாது தீவினையென்றே நினைக்கவேணடும ; திவலோகமுதலிய உல கங்களும் மற்றதேசமுழுதும ஓரினமபோதில உயிராகுடிப்பன கோதிகளுகிய விசுவாமித்திரமுனிவன அளிதத தெய்வத்தனமை பொருநதிய படைக்கலங் கள் ; அவைகளோ அளவிலலாதன ; அவ்விராமனுக்கு எகாளுங் குற்றவல செய்துகொணடேயிருப்பன. இதுகிடக்க ; ஆயிரநதோளையுடைய கார்த்தவீ ரியனென்னு மரசனைவெற்றிகொணட மழுவாளியாகிய பரசுராமனது போத் திறலெய்றியாதாரு முணடோ ! அவனது வலிமுழுதும அவன் கையிலிருந த விலலோடும் கைக்கொணட அவ்விராமனது பராக்கிரமதனைச் சொலலத் தான் முடியுமோ ! எனனைத்தான்முடியுமோ ! என்னகாணும வேதனைசெய் கின்ற காமாகனினி மேலிட வருநதிய நீபோ கொடிய வாத்தைகளையுஞ் சொல்லிமுடித்தாயே ! இபாடிபபட்ட காரியநதான் கெடுதிக் கேதுவன்றே ! நாமனை மாமனுபுரிகபடதுராபல முனைவநதானுயி மிருப்பதனற் சொல்லிமுடித் தேனை, இநத லெண்ணதனைதமாதிர மொழிந்துவிடென்றான.

இவ்வாறு சொலலிய மாரீசனது சொலலைக்கேட்ட இராவணனும் மாரீ சா ! நீ என்ன ? உன்தாயாகிய தாடகையைக்கொன்ற சீராமனைப் பழிக்குப் பழிவாங்காமல் பயந்துகாணடிருக்கின்றாயே ! உன்னையு மொரு சுத்தவீர னென்றெணணப்போமோ ? திசையானைகள் ஒளிக்கவும தேவர்கள்நிலைகெட்டு நடுங்கவும் அவாகளிருக்கும பதங்களையெலலாம நெருப்பிட்டுப் புகையாக்கி எல்லாவுலகத்திலும் என்னுக்கிணைச்சக்கர நடத்தவுமவல்ல என்னையோ சாதா ரணமான் அந்தத்தயரதன்மக்கள் கொல்லவலலவர். இந்தச்செய்தியோ நன்று யிருக்கின்றதே. காலை எதிரொருவருமிலலாமல் திரிலோக கண்டகனென்றே யெயொடுத் திருக்கின்றேன், சத்துருக்கள் கிடைத்தால் அதன்மேலு மினிமை யுண்டோ ? என்னுக்கினைக்குள் ளடங்கி நடக்கவேண்டியது முன்கடமையே ! நீ யதை மறுத்துப் பேசுவையேயானால் உன்னை யென் கைவாளால் வெட்டிக் கொலைசெய்துவிட்டே என் மனக்குறையை முடித்துக்கொள்வேன் ; நான்

பொறுக்கத்தக்கதாகச் சொல்லிவிடுவதை விட்டு நீயுயிர்கொண் டுழல்வதா னல் என் குறிப்பின்வழி நில்லென்றான்.

இவ்வாறு இராவணன் சொல்ல மாரீசனும கெருவங்கொண்டவாகள் கெடுவார்களென்பது உண்மையான காரியமன்று ? செருக்கி லழிவோமென் பாரிலும் யாமோ செருக்குடையவனென்று உருக்கியசெம்பில் நீர்வாசத்தது போற் சொல்லத்தொடங்கினன். இராவணு ! உன்னிடத்தேயுள்ள வுறுதியை நோக்கி யுண்மையினுலே இதையறிவித்தேன், நானே எனக்கு நோப்போகும கேட்டைநோக்கி அச்சங்கொண்டு சொன்னேனல்லேன், நாசமநோந்தபோது நன்மையுந் தீமையாகவே முடியுமன்று ? அற்பமான தன்மை யுடையவனே ! ஆயினும் நான் செய்யவேணடியதைச் சொலலென்று கேட்க, இராவணனும அதைக்கேட்டு மனமகிழ்ந்து தான்கொண்ட கோபந்தணிந்து மன்மதபாணத் தால் நான் அழிவதைப்பார்க்கிலும் அவ்விராமபாணத்தால் இறப்பதே புகழுக் கிடமன்றே! நீ யெனக்குத்தென்றற்காற்றைபபகையாகச்செய்த சானகியைத் தரவேண்டுமென்றான். அதற்குமாரீசனேசொல்கின்றான்; ஐயா! சிலநாள்முன் நானிரண்டாகக் கருடன்கூடிக்கொண்டு அவன் தங்கியிருந்த பஞ்சவடிக்கு போயிருந்தேன், அவனே எனக்குத் துணைவந்தானையும தன்விலலினின்றும் தொடுத்துவிட்ட பாணங்களாலே கொன்றுகளைந்தான் ; நான் அவாகள் தலை கள் பூமியின்கணுருளக்கண்டு நெஞ்சநடுநடுங்கிமீண்டேன். அவ்வாறுமீளட நான் செய்யத்தக்க காரியம் யாதிருக்கின்றதென்று சொல்லி முடித்தான. அப்படி சொன்னதை இராவணன்கேட்டு உன்தாயாகிய தாடகையைக்கொன் று களைந்தவனை யான்கொல்லவே சமைந்து நின்றேன், நீபோய்ப் புணர்ப்பது இன்னதென்றே பொருந்தியதன்றே ! நமதுமாயையாலே வஞ்சித்தேயன்றே அச்சானகியைக் கவரவேண்டுமென்றான். அதற்கு மாரீசனே வேறுசொலல இனியென்னவிருக்கின்றது; அவ்விராமன் மனைக்கொடியை நம்மாற்றலைக்காட் டிக் கவர்வதல்லாமல் நாம் வஞ்சனையாகக் கவர்ந்து கொள்வதே மிகச்சிறுமை யாய் முடியும். நீ போர்செய்து வென்று கைக்கொள்வதே அறத்துறை எனபா கள்? அப்படி போர்செய்துவென்றே உன்மறத்துறையை நிறுத்தவேண்டுமென் றான். இராவணனே அவர்களை வெலலச் சேனையும்வேணடுமோ ! என்கையி லிருக்கின்ற வாளொன்றே போதுமானதென்றறி ! அவ்விருவரும் போரில் என்கையா லிறந்துபடுவராயின் தன்னந்தனியளாயிருக்கும் அச்சானகியு மிற ந்துபடுவளன்றே ! மான்போன்றவளாகையால் அவளை நீ மான்வடிவாய்க் கவ ரப்போவென்றான். மாரீசனே சீதையைக் கைக்கொள்வதற்கு முன்னமே இவன் தலைகள் பாணத்தாற் சிந்திப்போம் வகையைச் செய்வேன் என்று நினைக்கும் எனக்கும் ஆம் வகையானதுமில்லை, யாரே விதிவலிகடப்பவர், நா னேவியதுசெய்வதேயல்லாமல்வேறொன்றில்லையென்று நினைத்து யாதுமாயஞ் செய்வது நீ சொல்லென்றுசொல்ல, பொன்மா னுருவங்கொண்டு தசமுகன் பொன்போன்ற அந்தச்சானகியை மதிமயங்கிவிடச் செய்யென்றான். அப்படி யேசெய்துமுடிக்கிறேனென்று மாரீசனும் அமைந்துசென்றான் ; இராவணனும் தான் வேறொரு வழியைநாடிச்சென்றான். இதுகிடக்க ;

அடமானசீலை முன்னுளில அவன் விலைபற்பலக்கையிழ நிருப்பவனுகளால அவ்விராகவன் விற்றிருக்கின்ற காசினநாடிப் பொன்மானுருக்கானை நீ சென்ருன். அதைக்கண்ட கலமான் முதலிய யாவும் அனைசயினவர்கடந்தமை கிலையாத மனமும் வஞ்சனையும் மீதபறமும நிறைந்து பெய்தபபிறந்த விலையாத பிடத்தே யாரும விழுந்தாற்போலு மிருந்தது. இவ்வாறு அவன பொன்மா னுருக்கொணடு வந்திருக்கைபிலை யாவரும இதுவரைவரை பிரப்தபபிறந்தபபெருக் தயாரமனுபவிக்கப்போகின்ற சானகியாள அடமோனக்கலைநீ இது வகதவாள னெனமே துணியாதிருந்தனர். அதை இராவணன பாளவெனழியதுனுளு. அவனவிழுங்காலத்திற பூமியில தருமபபிரமாகபபோவதனுலும அவரன் மேல ஆசைகொணடு இதைபபறறிகொணடுபோனது விணைபபிரகளெனபதை கோதனைடபாணியாகிய இராகூரியகனிடருதசானு விணைபபிரதா அதா வது இறைவனே! ஒருபாலை பொன்னுருவம பனைத்திருக்கின்றது, தன்மனை யாலவிசுமனையும விளக்குவது, செவியும காலுமபாணிகருதினை சுடர் பாபபி யுள்ளது, அவ்வகைபபட்ட பாலனைனைக்கணீட்ன், அதைத் தெவரீகாணைத் தருமெனறு வணங்கி விணைபபிரத்தா அதைகேட்ட இரகுவிரனும இம மான் இக்கிலத்திலுமிலலையபெனிலும அது இனைவகையான மானை என்று தன் சிங்கையிற் சிறிதுபோன்னுமயில தானு மதன்மே லெகைகொண் டான். இறைவன் அதன்மே லெகைகொளைடா னென்றதையறிந்த இளைய பெருமாளும இரகுவிரனைநோக்கி இதுபாபபாரனையலைது வேறனேர! அதற் குச்சிறிதும ஐயுறமேலைழியதிலலையெனருன். இரகுநாயகனுபகபீ! இவ்வுல கத்தின்கண எத்தனையோகோடியுயிரகள இருக்கினறன; அவ்ருகளினன்றே உணர்ச்சியுடையாரும உலகினிலலைமையை யறிகின்றிலை. இது பாபபானென் றும் பொன்னுருக்கொணடதாகிய மானை எங்கேனும் கணடதிலலையென்று மெண்ணுகின்றனையே; முன்னளிற் பொனனுருபபடைத்த அன்னங்களெழும பிறந்தவென்றுசொல்வதறிந்திலையோ! உலகிலமுறையும மூடிவழுயிர்கட் கிலை யென் றிளையாரை டிறைவனருளிச்செய்ய, அவ்வாறு கூறியதைக் கேட்டுக் கொண் டிருந்த சானகியார் அது பலநெறியிற்சென்று மறைவது கண்டு வருந்தினர்.

அவர் கருத்தை யறிந்து அஞ்சனமலிபோனற இராகவன் சானகியே! அதனைக்காட்டென்றுபோயினன். அவ்வாறு போதலைக்கண்டு பொறுதயனத் தையுடைய இளையவன் பின்னடந்துசென்றன். உடனனெருவராலும் கடக்க வொண்ணுத விணையேபோல வந்துநின்ற மானு மெதிரோவந்து தோன்றியது. இராமனும அம்மானைநோக்கித் தன்னைஞ்சினென்று மாராயாமல இது நன்று யிருக்கின்றதென்றன். அவ்வாறு சொல்லிவிட்டுத் தம்பியை நோக்கி தம்பி இதனை நன்றுகப்பார், தன்னையொப்பது பிறிதில்லதாக விளங்குகின்றதே! இதன்படிவங்கண்டமாதர் மைந்தர் முதலாரினரில் யாரோதான் இதை விரும் பாதவராவார்! உருகிய நெஞ்சமுடையனவாய் ஊர்வனவும்பறப்பனவுமாகிய எல்லாவுயிர்களும் சுடர்விளக்கைக்கணட விட்டிலைப்போல இதைக்கண்டே

வீழ்கின்றன என்ன ; அதைக்கேட்ட இளையவனும் இது பொன்மானேயா யினும் நமக்கென்னகாரியம ! இறைவனே காம்மீண்டுபோவதே நலமென்றான்.

அவ்வாறு இளையவன் சொல்லி வாய்மூடி முன்னமே அரிந்தமனைய ஆணிலழகான அழகே யொருதிருவுருவங்கொண்டு நின்ற சானகியார் சக்கர வாத்திக் திருக்குமாரமோ ! அக்குழையுந் தன்மையையுடைய மானின வினை விற் பற்றித் தரவேண்டுகின்றே னென்றா. சானகியார் கேட்டலைதக்கண்ட இளையவனை அவாகேட் டாங்கே இறைவனே செய்யத்தொடங்க மேற்கொண் டனனென்று தெளிந்து அண்ணா ! கொடியவராகிய அரக்காகள் வஞ்சனையை மேற்கொண்டு இங்கேவந்திருக்கின்றனரா ; தினனை இது மாயமானென்ற பெய் ணமையைக் கடைமுறைமை துணியப்படுமேனவே, அதற்கு இராகவபிரான தமபி ! அது மாயாசமபந்தமான மானைச்சிலலி முடிந்தாயே, அப்படியே அது மாயமானையினு மடிந்துபோய்விடு மன்றே ? அப்படி மடிந்தபோது நாம அரக்காகளென்று கடன் கழித்தவாகளாகின்றோம, சரியானமானயின கைப்பிடியாகப பிடித்துக்கொண்டு வருகின்றோம ; இணடி லொனறுகினறது, நீயோ தீயகாரியதனைத் தெடியுனாதாய், தினனை நினறவர் இனறொன றும் அவர்கள் பிடித்த மாயவஞசனை இதுவென்றும் தெரியாதிருக்கின்றோம, யாதோ விதுவென்றும அறியாதிருக்கினறோம, முன்னின்றவர் முறையினினற வர், முனிபத்தக்க வேட்டையாடலே புகழுடையதாமன றென்றான். இவ்வா று இராகுநாயகன சொலலிமுடிக்க, சானகியாரும இராகுநாயகனை நோக்கி இதை நீயே பற்றித்தருகவென்று குதலைச்சொலலா லுணாக்க, அவருடைய ஊடலை நோக்கி இமமானை நானேபற்றிகொணடுவாது கொடுக்கினறேன் ; அதுவனை யிலுமசானகியானாக்காத்துக்கொணடிருவெனறு தன்வில்லலஇளையானிடத்து வாங்கிக்கொண்டுவிரைவாது சென்றான. இளையபெருமானை முனனேகபபால மேகவாகவாத மூவரிலொருவன போயினான் ; அம மாரீசனை இம மானுகும, யானவனென்ற இமமானைநோகதிச் சுடடதகிக்கினறோன், அதைச் சிறிதுநேரத திற்குள்ளாகவே யறிவலாமென்று இருகைகூபபிக கூவியுனைத்துத் தான அப பனனசாலைபக்காத்துக்கொண்டிருநதான். இதுநிற்க ;

இராகவனை மானை நாடிச் செலலைகயில அது மிதிக்கும் வெறிதாபபாக்கும பயதது மேலே மிதிகாகும காலை நீட்டிக் குளமபினையுடைய பாத த்தை மாற்பிற் கூட்டி வாயு வேகமும மனனவேகமும் பின்னிடையுமபடி போம், அதுவையு மன்றித் தன் கதிக்கு வேறே கலவியொன்று காட்டுவது போலத் தோற்றும் ; இராமன மண்ணளந்த திருப்பாதத்தை நீட்டி நடந்து செல்வதனால் அதை யளந்துசாலல நமமான் முடியுமோ ? அவன்போவது எங்கும் பரிபூரணமாக நிறைந்திருக்கும் தன்மையைக்காட்டி நிற்பதாத்திரு நதது. அவன்சென்ற வேகம் நம்மா லளக்கமுடியாதே ! மானே மலையிலேறும், மேகங்கள் கூட்டமாக விருக்குமிடத்திற்சென்று குதிக்கும், நெருங்கப்போனால அகன்றுபோய்விடும், நாமசமாக நடந்தால எட்டிப்பிடிப்பதற் கியலவதுபோல விளங்கும், நின்றதேபோல நீங்கும், விலைமாதர் நெஞ்சேபோல அறியப்படா திருக்கும், இவ்வாறு அம்மான் ஓடிவதைக் கண்ட இராகுநாயகன் இதுகாயமும

வேறுகத் தான் செய்யும் காரியமும் வேறு யிருக்கின்றதன்றே ! அது பொருந்துமே யென்றால் முன்னம் இளையவனுக்கு நேர்ந்த வெண்ணை முடைடாயிருந்ததன்றே ? ஆராய்ந்து பார்க்கின் இது அக்கர் நாடிய மாயமா மெனவே தோன்றுகின்றதே ! நான் வீணைகவருந்திய தெனைத்துக்கென்று நீயெனக்கான். இப்படிநினைக்கையில் அமைசீசமேனி இவனைகாணைபடிடிக்க வெண்ணைங்கொண்டதாக விருக்கவில்லை, இனித்தன் பாணத்தைவிடுத்துகொலைசெய்யத் துணிந்திருக்கின்றனனென்று தன்மனத்தேதுணிந்து அதிவேகமாகஓடக்க அமைசீசனுத்தன்சக்காத்தாலுமதடுக்க வரிதாகிய பாணமொன்றை யெவு; அப்பாணம் உடனே சென்று அவனுயிரோயிலக்காக நோக்கி அவன வருந்தன நெஞ்சமே யிடமாகப்பட்ட பொழுது அவன் தன்பருவாயாலை இளையவனை அய்ய யைய மென்று எட்டுத்திசையினு மதன்டறுத்தெழுந்து சென்று மேகட்க விடனைழுத்து ஒரு மலைபோலும் வீழ்ந்தனன.

அப்படி வீழ்ந்தவன் தன சுயரூபதுடன் விழுவே ; இது பாயமா வென்றும் மாரீசனே இவ்வழிவந்தகாணடனென்னும் மெனன தமபியைத் தாலையும் என்னையன்வலலான் என்றருயினனுனை வலலானென்றும யாணப்பவதவன் வலலானென்று மதித்து ஆலைசீளத நாற்றிவீழ்ந்த அநதசீசனுடைய மாரீச னுடமைபென்று நோக்கி இராகவன இவன மாரீசனே யெனத் தெரிந்து இவன்மார்பே இலக்காகச்சென்ற வானி மார்புருவவே தான் என்றுவிட்டழுதனன், அதைக்கேட்டு சானகியோ மனமவருந்துவினென்று சிங்கைநோக்கு வருந்தினை தபதி முன்னறிநதுலோக்க வல்லுனையபால ஒருவனைகேறறி யேவிடுவனென்றுத் துணிந்து இவனே நாவிறபடாதுகருதிய வந்தானலன், யாதோ ஒருதீமையைகாடிய வந்திருந்தனை, அதனுலை தீமையேதேரு ; அது நேருமுன்னமே காயமின்வந்த தணையையம்று மீனைடான.

மாரீசனவைப்படலம

முற்றிற்று.

சடாயு வுயிர்நீத்தபடலம்.

இப்படி மாரீசன் இராகுவீரனுடைய குரலேபோல வாய்விட்டார்க்க அது வைதேகியினுடைய செவியிற்சென்று சோதனும அவா குயில் பூமியில் அடைந்தகொள்கையேபோலத் தன்வயிற்றிலடித்துக்கொணடு விழுந்து மயங்கி, அந்தோ ! எம்பெருமானேனக்கம்மானைப் பிடித்துத்தாவென்றுபேதையேனுகிய யான் என்வாழ்வுநீங்கினேனென்று கூந்தல்கொடியிற்படர்ந்ததுபோலவும இடியோசைகேட்ட நாகம்போலவு மேங்கியழுது தன்காதலனுகிய சீராமபிரானுக்கு அரக்கனுல் துன்பமானது வந்து அடுத்திருக்கவும் அப்படி நடந்ததையறிந்தும் தம்பீ ! இன்னமுமவருத்தமொன்று மில்லாமவிருக்கலாமோவென்று சொல்லினுள். அதைக்கேட்ட இளையவன் சராசரங்களுக்கெலலாந் தாயீர் ! உலகின்கண் நீர் எம இறைவனுகிய சீராமனைப்பார்க்கிலும் ஏற்ற முடையார்

பிறருளனைத் துணிபப்பதுமோ! தேவீர்! பேதைமையென்பதுமோதற்கணி கலமே என்றபடி, பெண்டன்மையாலே இவ்வாறு பேசிமுடித்தீர்! என்றை அறி ந்தவண்ணம் அவாக்குணர்ந்தகலாயினன். தாயீர்! கடலேழுமை உலகமபதினை லும அலைவலகத்தைச்சூழ்ந்த மலையெழுமை தொடர்ந்திருக்கிற இப்பூமியின்கணை வாழுமேனிழையா சிறுவலியைக்கு எமது நாயகனது வீரத்தன்மையும் தாழு மோ! பாரென்றும்தியென்றுமரீரென்றும் பிறவென்றுங்கூறப்படுகின்றபஞ்சபூத ங்கள் அவர்கோபித்தமாத்திரத்திற் பெயர்ந்து விடுமே; கார்போலுந் திருமே னியைபபுடைய அப்பெருந்தகையை யாரென்றெளிணி இவ்விடரிலாக்கினீர! நன்னெக்கண்டவழி மண்ணெக்கவ்விக்கொள்ளவல்ல அரக்கருக்குஞ்சோமமோ வினைடவதுண்டோ! அதற்குவாய்விட்டுமழைபடதுணேடோ! அப்படியாமாயின தெருங்கியிருகினற அண்டங்கள் மேலதீறாகமாட்டாவோ? அனைடங்கள் உ னைடக்தும்போகமாட்டாவோ! பிரமனுநி யிராகளெலலாம தீயமாட்டாவோ? இராகவனுக்கும ஒருதுன்பமெருமாயின மூவலகாலகமு முடியுமே;முற்பட்ட தெவர் முனிவர் முதலாகிய பெரிபோர யாவருமு இறதுடுவரோ! தருமதெவ தைபம துன்படமைடவளே! இனி விஸ்தரித்துச் சொலலவென்ன விருக்கின நது! இராகவன் தன்விலனின்றுமு பாணந்தைதது,தாடுக்க அதனலை விழு கின்ற சமயத்து அக்கனைடுத்து யம பெருமான் குரலெம்போலக் கூவியழைத தான். அதற்காக நீ இரங்கமவண்டாம; இம்மியையிருக்க வெணைடுகின்றன வன்று இனைவாறு இளைபவன் எடுதுரசாலை,எடுத்த சிற்றமுனைடயளாயும கொனறுலனன துன்படமுனைடபளாயுமெகாந்துமுள்ளமுனைடயளாயும் இளைய வசனமோக்கி நீ கின்ற நிலை தருதியானதன்மை, உலகிலை ஒருநாட் பழகினைர் தம்முயினையெனும் கொடுப்பமோ, நீ தனையபன படான்கின்ற தனைமனைபக்கெட்டு மெ சிறிதும் பயப்படவிலலையெ! நான் வெற்றம் செய்வது! இனி நான் அங் கினிப்பிரவேசஞ்செய்த உயிரிழபபினன்று தாமனைக்காட்டிலை தாவிச் செல்லு மன்னமசேனாலை புனைபடாத்தகொடிய கருபடுப்பற்றியெரியுமகாட் டில் நடந்தனர். அவ்வாறு நடக்கின்ற சானகியானை இளையபெருமாள்கண்டு விலக்கி அவருனைடய பாதங்களை வணங்கி நின்று சொல்லலாயினன். தாயீர்! நீர இறத்துபடத்துணிந்த தெனனகாரியம! நீர பெரியசாலலுக்கஞ்சியோகடபு பேன், மறுக்கமாட்டேன், உமதவலநீரது இனிஇம்மெயிருமை,நான்போய் வருகின்றென், கொடிதாகிய விதிவலியைக் கடக்கவல்லாரு மூளரோ; நான் போமவேனையாயின்கேடுவெருசிக்கிரமாகவே நேர்ந்துவிடுமே,நீரோ தனையனை கட்டளனையைமறுத்துப்போகவும் கட்டளையிடுகின்றீர், தனியிருக்கின்றீனென்று வினடபெற்று இங்குனெ நானிருப்பேனையின் எரியினடைமூழ்கி யிறத்துபடுவா; அரசனிடஞ்சென்று சேர்வேனையின் கேடுவந்து சேர்வதுதிண்ணம், நான்யாது செய்யக்கடவேனென்று பொருமிவிம்மி அறத்தினலழிவிலதானல் ஆக்கவாம், இவர் இறந்துபடுவேனென்று துணிவதைப்பார்க்கிலும் நாம் துறந்துபோவதே ன்னமென்றுதுணிந்து எப்படி- ஆயினும் ஆருக எதற்குஞ் சடாயுவிருக்கின்றார், சானகியாருக்குக் கேடுவராமற் காப்பனென்றே கினைந்துத் தெவர்கள் செய்த கவத்தால் இளையபெருமாள் செல்லலாயினன்.

இவ்வாறு இளையவர்சென்றபிறகு இவர் அற்றகோக்கிய வளைந்த பற்களை யுடைய இராவணன் வஞ்சனைசெய்யத் துணிந்து முப்பகையாகிய காமம் வெகுளி மயக்க மென்பனவற்றை யொழித்தோமென்பது தெரிவிப்பதற் கறிகுறியாகிய திரிதண்டமேந்திய தாபதவடிவங்கொண்டு ஊனிலனுமென உலந்த மேனியனையும் வெகுதூரத்திலிருந்து நடந்துவந்த வருத்தந்தோன்றச் செய்யுஞ் செய்கையுடையனையும் பாணியில நடத்தினைப் படிக்கின்றனென்று சொலலுமபடி வீணையில இசைதோன்ற வேதமவாசிப்பானையும் பூபபொதி யவிழ்ந்தா லொத்தநடையை யுடையானையும பூதலம் தீப்பொதிந்ததாமென் மிதிக்கும் செய்கையுடையானையும காத்தலருமையான நடுக்குறுமகாலையுடை யானையும் மூப்பென்று சிறப்பிதது்ச் சொல்லபபடும் பருவமும முனியமுற்றினை னையும தாமனா மணிகளாலாகிய அழகிய தவமாலை யுடையானையும் ஆமையி னிருக்கை யுடையானையும வளைந்த உடலையுடையானையும் அச்சமவிளங்கும் நூலணிந்த மார்பினையுடையானையும பரிசுத்தமான சிந்தனைய யுடைய சானகியாரிருக்கு மிடத்தை யடைநதான்.

அவ்வாறு நடந்துவந்து அப்பன்னசாலையை யடைந்து நாக்குழறிட நடுங் குஞ் சொலலினையுடையானைய் யாவர் இப்பன்னகசாலையி லிருபபவனென்று தேவரு மருட்சியையடையத் தெரிந்த மேனியையுடைய இராவணன் கேட் டான். சானகியாரும அவ்விராவணனைக் குற்றமற்ற நோன்பினனெனக் கரு திப் பாகியல்நிளவியுடையாராய்ப்பவளக்கொமபேபோன்று நின்றுஇவ்விடத்தே எழுந்தருள வேண்டுகின்றே னென்றார். அதற்கவன் அவ்வாறே எதிரேவந் தடைந்து யானை மதப்பெருக்குப் பொழிவதேபோல வெயாக்கும் மேனியனை யும் அன்பின் கனைபுரளு மாசைக் கடலுடையனையும் கற்புக்கரசியும கட் டழகிற் கழகினையும் புகழ்க்திருக்கையுமாகிய சானகியாரைக் கண்களாரக் கணடான். அவ்வாறுகணடவுடனே அவனதுவீரத்தோள்களோ வீங்கிமெலிக் தன. கண்ணுங் கருத்தும இசைபாடிம வணடினகூட்டமேபோற் களிப்பெய் தின, பின்னுமதாமனாமலனைத்துறந்த தையலா இங்கெய்தியமைகாண்பதற்கு இருபதுகணைகள்போதாவே, ஆயிரங்கணைகள்வேணடுமேமெயன்று அல்லற்பட்டே மூன்றனைகோடியாயுளரும் யான்தவத்தாற்படைத்தது இவரது காமநலக்கடற் படியப்போதுமோவென்று மனத்திலுன்னியதனறி தேவரு மவுணரும் தத்தந் தேவிமாருடன் குற்றேவல்செய்யவும திரிவிதவுலகமும் இவர்முறையினளவும் யானே யேவற்பணிசெய்து வாழ்வேனென்றுமெண்ணினன். இவர்க்குத்தன் பத்தொடுபொருந்திய முகத்திளெளியிதுவேயாமெனின்முளைக்கின்றபற்களிற் றொன்று மொளியையுடைத்தகையென்ன பயத்ததாம், இதுகிடக்க ; இத்தன் மையராய கட்டழகினுக்காசியை எனக்குக் கொணர்ந்து கொடுத்த என் னினையவளாகிய சூர்ப்பநகைக்கு என்வாழ்வும அரசுங்கொடுப்பதே தகுதி யென்று மனத்தினினைந்துருகி நின்றான். இவ்வாறு அவன்மனத்தினினைந் தினைந் தாசைப்பெருக்கி லலைந்துகொண்டுநிற்கையில் முறைமையல்லாத சிந் தைபடைத்த அவ்விராவணனைக் கண்களாரக் கண்டு எம்பா லெழுந்தருள வேண்டுகின்றே னென்றுசொல்லி அவன் மாதவருருக்கொண்டே போந்தமை

யால் பிரம்பினுலாகியதோ ராசனத்தை விதியிற்கொடுத்து அதிலுட்காரச் செய்ய அதிலவனிருக்கையில் மலைகளுமரங்களு நடுங்கின ; காவடங்கி விலங்குகளும் பறவைகளு மடங்கின; பாம்புகளும் படங்குறைந் தொடுங்கின, இராவணனே சானகியானை நோக்கி இப்பன்னசாலையி லெழுந்தருளி யிருக்கும் பெருந்தவன்யார் ? நீர்யார் ! இவ்வாச்சிரமத்திற் கென்னபெயரென்று வினவ, அதைக்கேட்ட சானகியார் சொல்வாராயினர்.

அருந்தவரே ! இவ்வாச்சிரமத்தி லிருப்பவர் இவ்வுலகமுழுதாண்ட சக்கரவர்த்தி திருக்குமாரர், அவர் தமது தமபியுடன் 'தாய்சொற் றுறந்தால் வாசகமில்லை' என்றபடி, தாய் சொன்மறுது தலைமேற்கொண்டு இப்பன்ன சாலையில் வசித்துக்கொண் டிருக்கின்றனர். அவர் டெயர் தங்களுக்கே தெரிய வருமென்றனர் ; அதைக்கேட்ட இராவணனே பெண்மணியே ! நான் கேட் டிருக்கின்றேன் ஆயிற்கண்டறியேன் ; ஒருமுறை கங்கைக்கரைநாட்டிற்கு வந் திருக்கின்றேன், ஆயினும் காவிமலையும வாளும் பழித்த கண்ணரோ ! நீர்யாருடையபுத்திரி? இக்காட்டில பலகாலுமகழிக்கின்றீரேயென்றான். அதற் குச் சானகியாரும் பரிசுத்தமான நல்லொழுக்கம்படைத்த உம்மைப்போன்ற பெருந்தவத்தினரோ யல்லது வேறுதெய்வஞ் சிந்தையிற் கருதாத சனகராசன் மகள் ; என்பெயர் சானகியென்பா, காகுதத வமசோத்தரன் மனுவியென்று கூறி இராவணனைப்பார்த்து இருவினையொழிக்க எண்ணியசிந்தையீர ! நீர எங்கிருந்துவருகின்றீர் ! சொல்லவேண்டுமென்றார். அதற்கிராவணன் சொல வானுயினன். பெணமணியே ! இந்திரனுக்கு மிந்திரன், ஒருவராலு மெழுத லாகாத பேரழகுபடைத்தவன், நான்முகனுகிய பிரமன்வழியில் வந்தவன், இவ்வுலகேயுமன்றி எவ்வுலகையு மாள்பவன், மந்திரங்கள் நிரம்பிய வேதந்தங் கிய நாவையுடையவன், பரமசிவ னெழுந்தருளியிருக்கும் கயிலைமலையைபூரி வேரோடும்பறித்த பெருந்திறலையுடையவன் ; நினையாணைகளுடனே போர் செய்து அவற்றின் கொமபுகளை தகர்த்த பேராற்றலை யுடையவன் என்பா. ஒருவன் அவன் கடைத்தலைவாயிலில தேவாகளை நினறு யாது எமக்கிடுங் குற்றேவலென்று இரங்கிநிற்பா. கற்பகம், பாரிசாதம, பாரிசாதம, சந்தானம, அரிசந்தனம், சுரபி, சிந்தாமணி முதலியன அவனபாலுள்ளன, அவன் அரசிற்கிருக்கை இலங்காபுரமெனப்படும. நிலாத்தனம, ஊர்வசி, அரமபை, மேனகை முதலிய மாதர்களை வானாட்டைத் துறந்துவந்து அவன்செய்த பெருந்தவச் சிறப்பால் அடப்பை முதலியன வேந்திக் குற்றேவல்செய்து நிவர், சூரிய சந்திராகள் அவன் சிந்தனவழியே தமதுகதியை நடத்துவர். இந்திரனே முதலிய இறைவரெண்மரும் ஆகாயமள்ளாவிய அவனது திருமாளி கையிலே காவலாயிருப்பர், அவனது பெருந்தவத்தாற் பொன்னுட்டினும் நாகர் நாட்டினும் மற்றையுலகத்தினும் சிறந்ததென்று சொல்லப்படும் பொருள்க ளனைத்தும் அவ்விலங்காபுரத்திலே யொருங்குசேர்ந்திருக்கும். அவனே பிரம னுல் அளவிலாக்காலம் உயிர்வாழ்க்கைசெய்ய வரம்பெற்று உமையொருபாகத் தொருவனுகிய பரமசிவன்கொடுத்த வாளைப்பெற்றுடையனு யிருப்பதன்றி நவக்கிரகங்களையுஞ் சிறையிட்டுக் குணங்களிற் சிறந்தவனென்றுஞ் சொல்லத்

தக்கான். மேலுங் கொடுமையல்லாத ஒழுக்கமுடையான், விரிந்த கேள்விச் செல்வம்பெற்றுடையான், மன்மதனும்நாணங்கொள்ளும் போழகுடையான்; எம்போன்றவர் கடவுளென்ன றெண்ணும் மும்மைப்பெருந்தேவா பெருமித முழுதும் பெற்றுடையான், இப்படிப்பட்டவனே தன்னிடத்தே எல்லாவுல கத்தினுமுள்ள மாதர்களெல்லாம் அவனருள்பெறக் காத்துக்கொண்டிருக்க அவர்களுக்கிரங்குஞ் சிந்தையனல்லாமல தன்மனக்கினியதோர் அழகினுக் கழகினையாடித் திரிகின்றான். அவனாசாண்டிருந்த அங்கதத்தினை விரும்பிச் சிலநாள் வாழ்க்கைசெய்து அவனைபபிரிந்த நெஞ்சினேனையும் மீண்டேனென்று சொல்லிமுடித்தான்.

அதைக்கேட்டசானகியாரும் வேதமும அவ்வேதமோதுமந்தணர்களும் விரும்பாமே உலகுயிர்களை வருத்தித்தின்னுமை தொழிலையே மேற்கொண்ட அரக்கருடைய நகரத்தில் நீர்வசிப்பதுந் தகுதியோ! உடம்பொடுகூடி வாழும வாழ்க்கையையே மிகையெனவாழ்வான் வனத்தின்கண் முற்றத்துறந்த முனிவர்வசிக்கும் ஆச்சிரமங்களில் வசிக்காமலும் புனத்திரு காட்டிலிருக்குமரு களில் வசிக்காமலும அரக்காவசிக்குமிடத்தில் வசிப்பதுதகுதியாமோ வென்றார். சானகியார் அவ்வாறு சொல்லக்கேட்ட வரமடுகடந்த நடக்கையுடைய இராவணனே குற்றங்களி னின்று நீங்கலாற் கொடுந் தொழிலை யுடைய அரக்கனென்று நிற்துமஞ்சமாட்டோம், மெய்மையையாராயும்போதுமதிமுகத் தினையுடையீர்! அத்தேவரினும் எமபோலவார்க்கும அவ்வரக்கரே சாலுமல லனென்றுந் தீயரல்லனென்றுங் கூறி முடிக்க, சானகியாரோ மனந் தூய்மை யுடையார் தீயவனைச் சேரவேமாட்டார்; வேதவொழுக்கேபற்றி நடப்ப வனென்றே மாய வல்லரக்கர் தாம வேண்டிருக்கொண்டு திரிவதென்பதறியா ராதலால் அயலிலே வேறொன் றெண்ணுமலே யெடுத்துக்கூறினார்! இராவ ணனே தான்சொன்னசொல்லால் தன்பால ஐயப்பாடெய்துவனென்ப தெண் ணி அதைமீட்டுந் துடைக்கக்கருதி மயக்க மகன்றாராய் அவ்வகரத்திலே வாழ் வதனால் அவர்களாற் செய்யத்தக்க தெறி யாதென்றான்.

அவ்வாறு சொல்லக்கேட்ட சானகியார் எமது பெருந்தகையாகிய இரகு வீரன் அருந்தவஞ்செய்வான் முயலுங்காலத்தில்மறமேசெய்துழலும்வாழ்க்கை யுடையாராகிய அரக்கராவானையெலலாம வருக்கத்துடன் கொன்றுகளைவர். பின்னே யோரிடரு முலகமெய்தப் பெறுதென்றார. இராவணனே மானுடர் அரக்கனை யெல்லாம் அவர் வருக்கத்துடன் கொலவனின் யானையின த்தை யெல்லாம் இளமுயல் கொல்லும, பின்னும கூரிய உகிரையுடைய சிங்கவேற்றை மான்கூட்டமும கொலலும்போலுமென்றான். அதற்குச்சானகி யாரோ மின்றிரண்டாலன்ன மயினையுடைய விராதனும் கோபமிகுந்து கன்றிய மனமுடைய கரன் முதலானைருவும் இறந்துபட்ட போர்த்திறலைச் சிறிதேனும் கேட்டிலீர்போலுமென்ற தன்றி அப்பெருந்தகையால் இலங்கை யில்வாழும் அரக்கனென்பார் தம்வருக்கத்துடன் சாதலும் தேவர்கள் ஏங்கி வாழ்தலு நாளையே நீர் பார்க்கப்போகிறீர; குற்றமற்ற பெருந்தவமுடையீரே, நீரறியாத்துமுண்டோ! தருமத்தைப் பாவமும் வெல்லுவலலதோ வென்றார்.

இவ்வாறு சானகியாரது அழுதளாவிய மெல்லிய சொன்மாலை தன்செவியிற் படுதலும் களிர்த்துவீங்கும் உளனலாயு உடம்பில் நாணமும் மானமு மூன்றவே மானுடர் வலியொன்றசொல்லாற் கோபமிக்காணுய்ச் சிலைவலி படைத்த அன்னர்க்கு ஒருமனிசனே இறுதியைத் தேடிவைத்தானென்று கூறுவையே யாயின் இருபதுதோளையுடைய அவ்விராவணனேடு நடக்கும் பெரும்போரில் அவர் பூளைப்பூவெனக் கெடுவதுண்மை யென்பதை நாளையேயறிவை! மேருவைப்பழிக்க வேண்டினலும் விண்ணையிடிக்க வேண்டினலும் நீரைக்கலக்க வேண்டினலும் நெருப்பையவிக்க வேண்டினலும் பாரையெடுக்க வேண்டினலும் பெண்மணியே! நீ யாரென்றேயெண்ணிச்சொன்னீர்! அவ்விராவணனலும் ஆகாதகாரியமு முண்டோவென்றான்.

அதைக்கேட்ட சானகியாரும் காத்தற்றொழில் அமைந்த திரண்டதோள் பலவுளவென்றலும் லல்வமையுளதாமோ! கடல்மத்தியிலுள்ள இலங்காதிபதியாகிய இராவணனைச் சிறையிலிட்ட கார்த்தவீரியனது ஆயிரந்தோளையும் சிறியபருவத்திலேயே இரண்டுதோளையுடைய பரசுராமனன்றே மழுவால்வெட்டியெறிந்து வெற்றிகொண்டானென்று விரித்துச் சானகியார்சொலலலவே; கண்களில் தீப்பொறி சிதறின, திரண்டதோள்கள் திக்கிற்சென்றன, மணிமுடியோ வானத்தைத் தீண்டின, தினணியகைக ளொன்றேடொன் றடித்துக்கொண்டன, மேகத்தினிடியேபோலப் பற்கள் வரிசைமென்று கோபமதிகப்பட அவ்விராவணன்கொண்ட மாயையு நீங்கிற்று. அப்போது சானகியாரோ இவன் இருவினையுந்துறந்த மேலோனேயல்லனென்றுகருதி ஐயப்பாடடைந்து யாரோ இவனென்று சிறிதும் தெரியாத நிலைமையுடையாராய் நிற்க, இராவணனே பெரும்பாம்பு மிக்க சினங்கொண்டு படமவிர்த்துயர்ந்ததுபோலத் தன்னுருக்கொண்டு விளங்கினன். சானகியாரோ மிக்கத் துயரமுடையாராதலின் பெருமிதமென்ன நினைக்கலாம், எதிரேயெடுத்துச் சொல்லலாகுஞ் சொலலுமொன்றில்லை, செய்யுங் காரியமுமில்லை, தெனறிசைக்காசனுகிய யமன் வந்தகாலத்தில் உயிர்களடையும் கொடுந்துன்பத்தை யடைந்திருந்தார்.

அப்போது இராவணனே சானகியாரைப்பார்த்துத் தேவர்கள்குற்றேவல் செய்ய உலகமெல்லாம் வென்ற என்வீரத்தைப்பார், மண்ணினிடத்துப் புழுவைப்போலும் வாழு மானுடனை வலிமைபடைத்தவனென்று சொன்னையே! அப்படிச்சொன்ன உன்னைப்பிளைந்தேதின்ன வெண்ணிவிடுவேன், நீ பெண்ணைகையாற்கொல்லாமலே விட்டுவிட்டேன், அப்படி யெண்ணி யிருந்தேனையின் என்னுயிரையு மிழந்தேனுவேன், பெண்கள் காயகமே! மனனைதரியமவிடவேவேண்டாம், யானையுங்கும்பிடாத வென்றலேமென் முடியென்றுசொல்லத் தனித்தனி இனிதுதாங்கிப் பலவாபரணம்பூண்ட அரம்பாஸ்திரீகள் உனக்குக் குற்றேவல்செய்யப் பதினலுலகத்தையுந் தனியரசு செய்யும்பெருஞ் செல்வத்தில் இருக்கவேண்டுகினறே னென்றான்.

இப்படி சொன்னதைக்கேட்ட சானகியார் தமது செவிகளைத் தளிர்க்கையாற் பொத்திக்கொண்டு காகுத்த வம்சோத்தரன் கற்பின் வரலாற்றை

யுடைய காதலியாயிருக்கின்ற என்னைப் பூமியின்கண் நல்லொழுக்கம்பற்றி நடவாத பாதகனே! தேவர்கட்கீயும அவியுணவை காயான திச்சித்தாற் போல யாதுபேசினை, புன்னுனியி னீரினெய்தாக மிக அற்பமாகக்கழியும் உயிரிழப்பதற்கஞ்சியே இற்பிறப்பழிவ துண்டோ? இராமபாணம்வந்து நெருங்கா முன்னமே உன்னுயிர்க்கே யுறுதியை நோக்கினல் நீ ஓடிப்போ யொளித்துக் கொள்ளென்றார்.

இரக்கமில்லாத அரக்கனே சானகியார்சொன்ன சொல்லைக்கேட்டு உன் னருயிர்த் துணைவனுகிய இராமன்விடும் பாணம திசையானைகள் மருப்பொடி யப் போர்செய்த என்மார்பிற்பட்டாற் குன்றின்மேற் நெடுத்துவிட்ட பூங் கணைபோலாம், தெய்வப் பெண்களுக்கெல்லாம தலைமையுடையீரே! மிக்க ஆசைநோய் வருத்த வருந்திய உடம்பினை னுளமகிழ அத்தெய்வப் பெண்க ளெல்லாம் வந்து வணங்கும் பெருமபதம் கைக்கொள்ளுவீரென றுலகந் தாங்கு மலையினும் வலியதோளையுடைய இராவணன் வணங்கின்றான். தன் னடியில் அவ்விராவணன் சாழ்தலும் சானகியார் கறைதங்கிய வாள்பட ஆவி கலங்கியதுபோல் இறைவனே! இளையோனே! யென்றேங்கியயிரபோவதுபோற் புலமபுவாளாயினர். அவ்வாறிருங்கையில இராவணனைசானகியானைத்தீண்டி னல்தனக்குக் கேடுவருமென்றே ளகூபானிட்டகொடுஞ்சாபத்தையும் வேத வதிமுதலானேரிட்ட சாபத்தையும செவ்வேமனத்திற் கொதித்துத் தானைனைக் கூறப்படுவதாகிய தன்தோள்வலியால் கீழ்மூடுமேல ஒருமியாசனையகழ்ந்து தன்தேரி லெழுந்தருளச்செய்து நிற்க அதைக்கண்டசானகியாரோ வனுதன னருயிர்தரியாதாராய் மணனிற்பொருந்திய மின்னென மயங்கின்றார். இரா வணனை ஆகாயமார்க்கமாகத் தேரை விரைந்து செலுத்தவே கொடுங்க னலல்வருந்தும் கொடியேபோற் புரண்டு சூலைநோ தயாநது துடித்து விழுவா, துயரத்தாலே மீளவு மெழுந்திருப்பா; என்னைத் தருமதேவதையே காத்தரு ளென்பார். மலைகளையும மரங்களையும மயில்களையும் குயில்களையும் கலை களையும் பிணைகளையும் களிறுகளையும பிடிகளையும் நிலையாவுயிர்களையுங்கண்டு அவைகளை விரித்து நிலைதளிப்போய்க்கெடாத வலையைடைத்தசரதராச குமாரரிருவரிடத்தும எனக்கையந்திய கொடுந்துயரஞ் சொல்லுங்கோளென்பார். மேகங்களே! பொழிலகளே! வனதேவதைகளே! நமது வினைது நிலைமை னன்றறிவீர; என்னை அஞ்சற்கவென்றே கருணைபாலிபபீராயின் உய்வேன், அவ்வாறுய்வேனனின் அதுஇழிவாகுமோ சொலலுங்கோளென்பார். திருநர் முதலானேர் தங்குலத்தொடுங் கெட்டழிய நீண்டமுகிலேபோற் பாணவரு ஷம்பொழிந்துகொல்லமாட்டீரோ! வரதனே! இளையவனே! குற்றமெய்தப் பெறுத பரதனே! சத்துருக்கனே! நீங்களுமவழிமேற்கொண்டீரோ! என்பார். கோதாவிரியே! குளிர்ச்சியுங் குழைதலுமுடையையாகித் தன்னையடைந்தா ருக்கு மாதாவன்னளாய்த் தெளிவுவனென்பர், நீ ஓதாதுணைக்க வல்லாராகிய எமது தலைவனிடஞ்சென்று என்னிலையைச் சொல்லமாட்டாயோ என்றும்; சுனைகளே சிங்கங்களே நானிருந்த இந்நிலத்தொடு மெடுத்த கைகளிருபதும் தலைபத்து முதிர்ந்துபோகக்கணடு சிரிக்கவண்டுகிறேனென்றும் சானகியார்.

பல புலம்பாகிற்ப; அதைக்கண்ட இராவணன் தெம்பல்படர்ந்த மெல்லியகொங் கையையுடைய பூங்குழைபோல்வீர்! அம்மனிசர் என்னைக்கொன்றே உன்னை மீட்கும்வலியுடையாராவரோ வென்று தன்கையை யெறிந்து சிரித்தான். அப் போது சானகியாரோ மாயையால் மானென்றையேவி யுன்னருயிருண்ணும் கூற்றுவனைப்போக்கி இப்போது கவர்ந்துசெல்கின்றாய்! நீ போர்செய்து காத் துக்கொள்வதானால் இப்போதே தேரையோட்டிப் போகாமலிரு, பின்னும் நீ சுத்தவீரனேயானால்வினைவிலுன் கூட்டாமரகனையெல்லாங் கொன்றுகளை ந்து உன்தங்கையின் மூக்குமுலையுங் காதுமரிந்த மனிசர் இக்காட்டிலிருக்கின் றார்களென்ற அச்சத்தாலேயன்றே இம்மாயைகளைச் செய்து கவர்ந்தனை யென்றுசொன்னர். அதைக்கேட்ட இராவணனேவலியற்றசாரமுள்ள இழிந்த மனிசருடனே போர்க்கெழுவேனெனின் நெற்றிமே லொற்றைநாட்டம்பெற்ற கின்மலக்கொழுந்தின் கயிலைமலையை யெடுத்த என்தோளாற்றலுக்குப் பழி வருமென்றும் மாயமே கல்லபயன்விளைக்குமென்றும் இவ்வகையான காரியஞ் செய்யத் துணிந்தேனென, சானகியாரும் தங்குலப்பகைவர்பாற் போவது குற்றம் வாளிற்பொருவது காணமாம், கற்பினையுடைய மாதனை வஞ்சிப்பது வல்லமையல்லபோலாம், இரக்கமில்லாத அரக்கருக்குப் பாவமும் பழியு மின்றே? என்றார். அவ்வாறு சொலலிக்கொண் டிருக்கையில் எங்கடா போவது நில்லு நில்லென் றடித்த சொல்லையுடையனுய் நெருப்புப்பொரி பறக்கும் கண்ணையும மின்னெனவிளங்கும் துண்டமும் பொன்மலை வானின் கண் வருவதேபோலு மெய்யுடையனுய் தன்சிறகினல் வீசும் காற்றில் மலைக ளெல்லாம் ஒன்றேடொன்று புழுதியிலுதிரக் கடலு முலகு மொன்றையழிய முழுதும்வீசும் ஊழிகாற்றேபோல ஊதைக்காற்றுவீசச் சாகையுடன் மரமும் காழ மேகங்களும் விண்ணிற்செல்ல மேலே கருடன் வருகின்றனென்று நாகங்கள் படமொளித் தொதுங்கிவருந்த யானை யாளி முதலிய மிருகங்களும காணெடு மரத்தினெடும் புதர் முதலியன மெனிறைந்து மூடிக்கொள்ளவும், வானமும் காடு மாறுகொள்ளவும், உத்தமனுகிய இரகுவீரனது தருமபத் தினியை எங்கடா தேரில்வைத்துச் செல்கின்றனை இத்தனைதிசையையும் வா னெடு மறைப்பேனென்று தன் இலேபோலுஞ் சிறைகளைப் பரப்பி அத்தேரைத் தடைபடுத்தச் சடாயுவாகிய பெரிய உடையார்வருவது செவ்வானமணிந்த கயிலைமலையை யொத்திருந்தது.

அவ்வாறு வந்த சடாயு சானகியாரைப் பயப்பட வேண்டாமென்று சொல்லிவிட்டு இவனே நமது சானகியாரைத் தீண்டிலன் என்றே சிந்தை தெளிந்து பெருங்கோப மெய்தாமலே சில சொற்களைச் சொல்ல லாயினன். அடா இராவணு! உன் சுற்றத்தோடும் உன் பெருவாழ்வையுங் கெடுத்துக் கொண்ட தன்றிச் சுட்டுவிட்டாய்! என்ன காரியஞ்செய்யத் தொடங்கினை! நீ இறந்து பட்டா யென்றே யெண்ணற்பாலது. இத்தரும பத்தினியை விட்டு விட்டாயாயின் நீசாகாமலே யிருப்பாய். பேதையே என்ன பிழை செய்துவிட்டனை! உலகுக்கெல்லாம் தாய்போன்றுளை மனத்தில் நீயாதா யெண்ணி யிவ்வாறு செய்து விட்டாய், உனக்காதாரமினியார்? நீபிழைத்

தப் போகாமலே போர்செய்து உன்னருயினை மெய்மையாக விருந்துசெய்யத் தன் கைகளாரமுகந்து ஐயா ! புதிதாக உணடதறிவாயே ! உலகத்தின்கண் விடத்தையுண்டும் உயிர பிழைத்தவருணடோ ! எலலா வுலகங்களுரும் இந்திரனும் இத்தேவர் ஒழிந்த மும்மைப் பெருந்தேவரும் மான் புலியைக் கண்டதுபோற் கலங்குவரோ யலலது விலலாளராகிய இராமலட்சுமணனை வெல்லும் வலியுமுடைய ராவரோ ? இமமையிலே யுறவாடிமகிழியாகின்ற கொடுந் தொழிலோ இதைப்பார்க்கிலு மிலலை, மறுமையிலும நுமபோகம் இரௌரவ முதலிய நரகபேதங்களையும பயக்கும. எவ்வித மானிடனென்றே யெண்ணத் துணிந்தனை ? மும்மைப் பெருந்தேவராகட்கும முழுமுதற் பொருளாகிய பரம்பொருளே இவ்விராகவனாக திருவவதரித்தமையான் இவனை எந்தத் தேவருடனே ஒப்புமை கூறலாம ! அறிவிலலாதவனே ! பிற்றேதறிணையாதலால் பிழைசெய்யவே துணிந்தனை ! முபபுரம பொடிபடுத்த புணணிய மூர்த்தி யருளால் நீ பெற்றவரங்கள் மற்ற கல்விகள் வலிமைகள் முதலாயின பலவும் இவ்விராகவன் பிரயோகிக்கும பாணம படுமளவே உனக்குப் பொருளாகத் தோன்றும.

சூரியகுலத் தோன்றலாகிய இராகவனே தன்விலலவளைத்துன்று சேர்படுவானுயின் அவனை யாருமுன்னின்று தடுப்பதாவரிதை, இப்பெண்மணியை நானேகொண்டு சென்று அங்கேவிடுகிறென் நீ வினாகதுபோவென்று சொலல, அதைக்கேட்ட இராவணனே வாயைமடி-த்து நீ வெற்றியாளனென்று சிறப்பித்துச் சொல்லப்படுவோனைக் காட்டாயென்று கோபித்துரைக்க அதற்குச் சடாயுவும் நீ யுடல்முழுதும பாணங்களால தொளைக்கபபட்டுப், பெருமபுணணுவாழுன்னே இவ்விடமவிட்டகன்றுபோய்விடென்ன, அதற்கிருமபுணட நீர் ஒருக்காலத்தின்மீண்டபோதும் என் கையிலகப்பட்ட கருமபன்னை சொற்காரிகை மீளாளென்பதையும மெய்யாகவுணாகதுகொள்ளென்றான். அச்சமையத்திலே சானகியாரோ முன்னைப்பார்க்கிலு மிருமடங்கு பயமடைந்தனர், அன்னம்போன்ற சானகியார் வருந்துதல்கணட சடாயுவோ இவ்வாக்கனுடம் போ சின்னபின்னப்படும், நமது சக்கரவர்த்தித் திருக்குமாரன் இங்கே வாரு திருப்பதே அதற்குத் தாமசம், இனி நீ சிறிதும் மனங் கவலற்க ; முத்துவடஞ் சிந்திஞற்போலும் கண்ணினின்றும் நீர்த்துளிசிந்தி வருந்தற்க ; மனத்தளர்ச்சி யொழி, இவன் தலைகள் பணமரத்திற் றொத்திக்கொண் டிருக்கும் சூலைகள் பூமியில்விழுமாறு இவன் வெற்றிகொண்ட பத்துத்திசையிலும்சென்று விழுவதைப் பாக்கலாமென்று, இடிபோன்ற முழக்கத்தினல் தன் பெருஞ்சிறகை வீசியெறிந்து அவனது முடிவரிசைகளைப் பூமியிலிட்டு காசியினலகாற்கொத்தியெறிந்து வினாவில் வீணை யெழுதியிருந்த கொடியையு மொடித்து விட்டுத் தேவர்கள் வாழ்த்தொவிகொரண்டான்.

அந்தச் சமயத்தில் இராவணனே அரக்கினுருக்கொத்த கண்ணையுடையாளுய்இதுவனையும் இவ்வகையான அபசெயம்பெறுமையால் உலகேழுநடுங்க கைத்து மலைபோன்ற தன்கையிலுள்ள வில்லையெடுத்து வளைத்தான்

றித் தன் புருவவில்லையும் வளைத்துநின்று தன் வில்லிற் பாணவருஷம்பொழிய அதைக்கண்டசடாயு இவற்றையெல்லாம் தன்சிறகிலழுங்காற்றால் அடித்தும் சிலவற்றைத்தன்னகத்தால துணடப்படுத்தியும் சிலவற்றைமூக்கினலகாற்றுண்டப்படுத்தியும் வருவதல்லாமல சருப்பங்களையெல்லாம் கண்டதுண்டப்படுத்தும் கருடனேபோல் அவ்விராவணனுடைய தலைபத்தினும் வீட்டு மூக்கினல கென்னுஞ்சக்காமுடையானுய் அவன்விலலைவளைக்குமளவிலேஇரத்தினகுண்டலங்களைக்கவர்ந்துசென்றான். இராவணனே அதைக்கண்டுபுகர்நிறமுள்ள பதினுலுபாணங்களை அச்சடாயுமார்பெயிலக்காகவிட, தேவர்களெல்லாம் இனிச் சடாயு விழுந்தானென்றே யெண்ணி வருந்தினர். சடாயுவோ மிகக்கோபமடைந்து அவனது தோளிருபதையும் வரிசையாகத்தத்தி நகத்தாற்கொத்திக் குடைந்து சிறகாற் புடைத்து முத்தாரமணிந்த மார்பிலிருக்கும் கவசத்தையு முட்டறுத்தான். அப்படி யறுக்கக்கண்ட இராவணன் சடாயுமேல நாறம்பு அவன்மார்பெ இலக்காகத் தொடுத்தவிடத் தேவர்களஞ்சி வெருக்கொண்டனர். அப்படி கொள்வதற்கு முன்னரே சடாயுவும் அவன் வில்லைப் பல்லாற்பறித்தொடித்து விட்டான், தேவாகளுமஆனந்தக்கடலிலழுந்தினர். உலகநாங்கு மிறைவனுடைய ஆற்றலுக்கெற்ற விலலைமடியக்கண்டு கோபித்தநெஞ்சங்கொண்டு முப்புரம் பொடிபடுதத முதல்வனது அம்பே போன்ற சூலமெடுத் தெறிந்தான். சடாயுஇராவணனைப் பார்த்து இவன் இதைப்பொறுக்கமாட்டானென்றே யெண்ணிலொழி, என் வல்லமையைப் பாரென்று அச்சூலத்தைத்தன்மார்பிலேற்று நின்றான். இப்படியுஞ்செய்பவல்லாருமுண்டோ என்று தேவர்களெலலாம் தம தோள்புடை கொட்டி யாரவாரித்தனர். சடாயுவோ இராவணன் அம்முத்தலைவேல் இழுத்தமையால் படைவேறெடாமுன்னே ஆகாய மறையுமபடி நீண்டகுதிரைபூண்ட தேரைச்செலுத்தும பாகனுடைய தலையைப் பறித்துச் சானகியானை நாடிக் காமாதுரனுயிருக்கின்ற அவ்விராவணனதுமுகத்திலவிசியெறிந்தான். அப்படியெறிந்த சடாயுவினது ஆற்றலை இராவணனே தன்னெஞ்சினமதித்து அச்சடாயுமேல் ஓர் ஆடகத்தண்டினைவாங்கி மோதியடித்தான். அதனற் சடாயுவும் மலைபோல மண்மேல்விழுந்தான். இராவணனே சடாயு மனமேல் மூர்ச்சையாய் விழத் தன் குதிரைபூட்டிய தேர்களினெலியுந் தொடரா வணணம் செலுத்தி ஆகாயமார்க்கமாகச் சென்றான். அதைக்கண்ட சானகியாரோ நிலத்திலேயே பசும்புண்ணிற் நீருழைந்தாற் போலத் துடிதுடித்துப் புரண்டழுதனர். இவ்வாறு சானகியார் வருந்துவதைக்கண்ட சடாயு அவலத்திலழுந்த வேண்டாம் அன்னை யென்று உயிர்த்தெழுந்து, நீ யெங்கடா போவதென்று இராவணன் தேரின்மேல் தேவர்கள் ஆரவாரிக்கப்பாய்ந்தான். அப்படி தேரிற்பாய்ந்த சடாயு தண்டினை யெறிந்து தேரை யழித்துவிட்டுத் தன் மூக்கிலுள்ள அலகாகியவாளால் அவனதுதேரிற் பூட்டியிருக்கும்குதிரை அறுபத்துநான்கையும் அழிந்துபோகச் செய்ததன்றி அவன் தோளிற் கட்டியிருந்த அம்பறாத்தூணியையும் தன்னகத்தாற் பறித்து, சிச்சிரப் பறவைபோலப் பாய்ந்து அவன் மார்பின் மேலும் தோளின்மேலுந் தன்சிறகை யோச்சி நின்று அவனைக்

கீழ்த்து இவ்வளவுதானே உன்வல்லமையென்றான். அத்தச்சமையத்தில் இரா வணனே அதிகசினங்கொண்டு தன்பானின்றும் விடுக்கும் படைக்கலங்கள் வேறுகாணுஞ்சய் இக்கணமே இவனை யிறந்துபடச் செய்வேனென்று துணிந்து தன்கையினிருந்த வாளையுறையினின்றும் தீர்த்தெறிந்தான். அஞ்சா நெஞ்சம் படைத்த சடாயுவோ யாவராலும் தடுப்பதற்கரிதாகிய தெய்வத்தன்மை பொருந்திய வாளால் தன்தலை யிழந்து விடுமென்பதல்லாமல் தனக்கு வாழ் நாளும் முடிவாயு மிருப்பதனால் இந்திரன் தன் வச்சிரத்தினைக் கொண்டெறி யச் சிறையகன்ற மலையேபோலப் பூமியில் விழுந்தான். விரிந்த சிறை கீழ் மிகுதியாகமண்ணில்விழுந்ததைக்கண்டு தேவாகளெலலாம் இரியல்போயினர், முனிவர்கூட்டங்களோ சானகியார்துணையிழந்தாென்று வருந்தினர். சுவர்க்க லோகத்தார் பசும்பொன் மழையைப்பொழிந்தனர். அதைக்கண்ட சானகி யாரும் மனநடுங்கினர், போரில் நாணங்கொண்ட இராவணனேசடாயுவிறக் கவே ஆரவாரித்தான். சானகியாரோ கானவர்வலையிலகப்பட்டமானேபோல மனஞ்சோர்ந்து வருந்தி நினைந்து பெருமூச்செறிந்து ஒருதுணையு யில்லா ளாய் கொழுகொம்பொடியக் கொடிவீழ்ந்ததுபோல மனங்குலைந்து பின்னும் துணையாகவந்த சடாயும் இறந்துபட்டனன், இனி எனக்குத்துணைவருவார் யார்? என்றே இனியதுணை பிரிந்தின்னவினைல மிகவருந்தும் அன்றிற்பெடை போல நின்று புலம்பத் தொடங்கினர்.

இளையவன் சொல்லை மறுத்துப் போதையேன் அவனை விளைந்துபோக நீக்கினேன் இச்சடாயுவால் சிறைநீங்குமென்றிருந்தேன், விதியார் இன்னமும் என்னசெய்வரோ! என்றுவருத்தப்பட்டுக்கொண்டிருந்த என்பால்வந்து பயப் படவேண்டாமென்றுசொலலிய இந்த கல்லவன் தோற்றுப்போவதா! கொடி. யவன் வெல்வதா! எனக்குத் தருமதேவதை துணைசெய்யலாகாதா! நாணங் கெட்ட என் சொல்லைக்கேட்டுப்போன அயோத்தி யரசர்களே! தருமநெறி யில் நிற்பவர்கட் கெல்லாம் உளையாணி போன்றவரும் உம்பிதாவுக்கு உயிர் நண்பருமாகிய இச்சடாயுவைபபார்க்க வாலாகாதோ! கற்பழியாதிருப் பது என் கடமையேயாயினும் அழகழிக்கும்படி ஆவலங்கொட்டச்செய்யும் போர்த்தொழிலில்வல்ல எமது நாயகன் வில்லோ பழிபட்டது; நான்வந்த குடியோபழியேற்றது, சுவர்க்கமே நாடிப்புகுந்த சக்கரவர்த்தியே! உம்மிட்ட தில் நட்புக்கொண்ட இச்சடாயு தன் கடமை கழித்துவிட்டனன். ஆதலால் அப்படிப்பட்ட இப்பெரியோனை நீ மார்போடிறுகத் தழுவுவையோ! என்று சடாயுவைக்கண்டுவருந்துஞ் சிதையினது தன்மையும் தன்னிறகிழந்தசடாயுவி னதுதன்மையுங்கண்டுமண்ணெடுமட்கும் அச்சானகியானையெடுத்துத்தேரில் வைத்தமையால் அவ்விடத்திருந்தும் அப்பிராட்டியானைத் தன்தோளிலெடுத் துக்கொண்டு ஆகாயமார்க்கமாகவே நடந்தான். சடாயுசூர்ச்சைதெளிந்தெழு ந்து சானகியான்னா மண்ணெடும் அரக்கன் தன்னுளிலெடுத்துக்கொண்டே போவதைப்பார்த்து மனம்வருந்தி நமது மக்களோ இன்னமும்வந்தாரிலலையே, நம்து மருகியாரடைந்ததுன்பத்தைத்தீர்த்தாரென்றபுகழையுங்கைக்கொள்ளா திருக்கின்றனரோ; விதியாரோ தருமவேலியைச் சிதைத்தனரோ; இனிச்செய்

வதியாதிருக்கின்றது? வெற்றித்திருவுடைய இராமலட்சுமண ரிருப்பாராயின் பிராட்டியாருக்கு மிவ்வகைகடைக்குமோ? நடந்த விபத்தோ இத்தன்மைய தென்று அறிய வல்லேனல்லேனே; நிறிய தாய்செய்த வஞ்சனை கைவந்தாற் போலிருக்கின்றதே; சர்ப்பப்பரியங்கத்துச் சர்வசுவாமியே சீராமனைத் திருவவதரித்தா னென்னப்படுவதனால் அரக்கரால அவன் வெல்லப்படுவனே? இவன்கள்ளமாயையால வஞ்சனையிழைத்தே அவர்களையகற்றினன்போலும்; அரக்கனை வேருடன் கொன்றுகளைந்து அன்பனுகிய சீராமனே தன் பழி தீர்த்துக் கொள்ளுவான். அரக்கனே தாசரதியாமனைக்கொடியாகிய சானகி யானைத் தீண்டவு மஞ்சுவான்; இவனுக்கோ பிரமனிடப்பட்ட சாபமு மிருக்கின்றதேயென்று மனந்தேறித கன்சிறகு உதிரவெள்ளத்தி லமிழ்ந்து போயும் சானகியானை மீட்காமற்போய் விட்டேனே யென்னு மானமும இராம லட்சுமணர்கள் மேற்சென்ற அன்பும நெஞ்சைக் கவரத்தான் உணர்வு நீங்காமற் சிறிதயாச்சி யடைந்தான். இதுதான் சமையமென்று இராவணனும வினைந்து இலங்கையிற்கொண்டுபோய்ச் சானகியார் திருமேனியைத் தீண்ட வஞ்சி அரக்கியா ருடுவில அவனை அசோக வனத்திற் சிறையிட்டான். இது கிடக்க;

மானைத் தொடர்ந்துசென்ற இரகுநாயகன் நிலைமையை யறிவாயென்று தன்னைச் சானகியாரனுபபச்சென்ற இளையபெருமாளும சானகியார் தனிமை யையெண்ணி மனம பதைபதைக்கும சிந்தையராய் பெருமாளைப் பிரிந்ததனல் வருந்தும பரதாழ்வானது செய்கையை யொத்துக் கடலிலே செல்லு மரக்கலமே யென்ன வினைந்துசென்று தாமனைக் காடுபூந்து ஒரு காமேகந் தாணியிலிழிந்தென்று சொலலதக்க கோலம் பண்டத்த இரகுநாயகனை வினைந்து தன் மனமெனக் களிக்கும சிந்தையை யுடையாரைக் கண்டான். பெருமாளோ துண்ணென்று மாரீசனிட்டழைத்த ஓசை சென்று மயக்கச் சானகி தன் பெண்டன்மையால் மனமயர்வாளென்றெண்ணிகொண்டேவரு கின்ற சமயத்தில இளையவனைக்கண்டனன. அவ்வாறு கண்டு தன் சொல்லைக் கடந்து தளரு நெஞ்சமுடைய என்னிடத்தே எனசொலலைக்கடந்து மனமுரு தளர்ந்த இளையவன் வருகின்ற நியமம் புன்மையான சொற்களிலே பழகிய பிளந்த வாயையுடைய அரக்கனுகிய மாரீசன் வாய்விட்டழைத்த குரலை என் குரலென்றே நினைத்துச் சோர்ந்து என்சொல்லையும்கடந்து சானகியேவ என் நிலைமையைத்தேரவந்தமருளையாம்? என்றுநினைத்து விதியானது இன்ன மும் என்னென்ன முடிக்குமோவென்று வருந்துகிற இரகுநாயகனை இளைய பெருமாள் திருவடி தொழுது நிற்க; அவனை மார்போடிறுகத்தழுவி. அப்பா! இளஞ்சிங்கமே! என் சொல்லையுங் கடந்து நீ வரவேண்டிய காரணமென்ன? வென்றுகேட்க, அதற்கு உலகத்திற்கேட்டறியாதகொடுஞ்சொல்கூறிச் சான கியாரென்னையேவ, நான் அது மாயவரக்கன் உனையென்று தடுக்க, மீண்டும் அன்னையார்போயறியென்றே வற்புறுத்த நான் தேவரீரது புயவலியையெடுத் துச்சொல்ல அதைமறுத்து நீ போய்ப் பாராவிட்டால் யானெருப்பில்வீழ்ந்து போவேன் என்று மனங்கொதித்துக்காட்டிலோடக்கண்டுபயங்கொண்டு நான்

போகாதிருந்தால் இறந்துபடுவாரென்றே கினைந்து இவ்வளவு தூரம்வந்தேனல் லது வேறன்றென்று விண்ணப்பித்தான். அதற்கு இராகுகந்தனரை சான்கி சாவாதிருத்தலில்ள் அவளடைந்ததுண்டமோ தடுக்கமுடியாது; ஐயோதுன்பப் படும் அப்பெணமணி கருத்தோ மனத்தினளவிடப்பட்ட பெருந்துன்பமேயா கும்; இது அவனைக் கைக்கொண்டுபோகிறவர்கள் செய்தவஞ்சனையேயல்லது வேறல்லவென்று தன் மனந்துணிந்து நாம் குற்றம் ஆராய்வதி லடங்குவதே யன்று; அவரோ தன் மனவருத்தத்தாலே சொன்ன சொல்லாகத் தோன்று கின்றதே; அது நீங்குமென்று தெரிந்திருக்கின்றாய்! நீ முன்னமேதடுக்க முய் லாமல் வந்தமையால் காரியக்கேடாய் விட்டதென்றெண்ணியெண்ணி மன மழிந்து இனி இங்கே கின்று நாம் தாமதிப்பதனால ஆம்பயனென்ன? சானகி யானைக் கண்டால் நமது துயர நீங்குமென்றே விரைந்து தன் பாணத்திறு மிக்க வேகமாக நடந்துபோய்ச் சானகியானைவிட்டு நீங்கிய இடத்தையடைந் தான். அவ்வாறடைந்து சானகியானைக் காணுனிபபறனைவதன் கூண்டைக் காணுது வருந்தியதுபோல கின்று வருந்தித்தான பெறலரும் பாக்கியமபெற்று மதுமணைணுடு மறைந்தாலெப்படியோ அப்படியே தன் சிந்தை மிகவுந்திகை த்தகின்றான்.

அப்போது மண் சுழன்றது மலைகள்சுழன்றன, அறிவுடையோர் நெஞ்சு சுழன்றது, கடலேழுஞ் சுழன்றன, விண்ணும் சுழன்றது, வேதகான்குஞ் சுழன்றன, உலகைச்சிருட்டிக்கும் பிரமனுடைய கண்ணும் சுழன்றது, சூரிய சந்திரரும சுழன்றனர். இப்படிநிகழ, அறத்தைக்கோபிப்பாரை! அருளையே கோபிப்பாரை! தேவர்களையேகோபிப்பாரை! முற்றத்துறந்த முனிவரையே கோபிப்பாரை! யாதோமுடிவென்று சிராமன வேதங்களையே கோபிப் பாரைவென யாவரு மனகடுங்கினர். பிரமகற்பத்தில் எப்பொருளும் ஒடுங்கிப் போவதேபோல் கீழ் மேலும் மேல கீழுமாகக்கலங்கின; இவ்வாறுக. ஒரு புறத்தே தேர்ச்சக்கரம் பதிந்திருப்பதாகக் காணப்படுகின்றதை, சானகியா னைத் தீண்டவஞ்சிப் பூமியோடு தோணடியிருபடதாகவும் தெரியுவருகின் றதை, நாம் அறிவிலார்போலநின்று யோசிபபதனால ஒருபயனுமில்லை; அவர் கள் நெடுதூரமபோவதன்முன்னே நாமதொடாவதேகருமமென்று இளையவன் தொழுதுசொல்ல, இராகுகாயகனும் ஆமஆம் அப்படிசெய்வதே தக்கதென்று தன்முதுகில அம்பறுத்தூணிமுதலியவை தாங்கிக்கொண்டு மலை மரம்முத வியவைமடிந்துபோக நிலத்தின்மேல் அவன் தேர்சென்ற வழியைநோக்கியே நடக்க இளையவனும் அவனைப பின்தொடர்ந்துசென்றான். பூமியில்தேர்ச் சுவடுநோக்கிநடந்து அச்சுவட்டைக்காணுமல் இனி விண்ணின்வழியே சென் றிருக்கலாமெனத்துணிந்து புண்ணிலே வேல்நுழைந்தாற்போல மனம்புழுங்கி காமினிச்செய்வதென்னென்று இளையவனைநோக்கிச் சொன்னன். இளைய வனும் தேரோ தெற்குநோக்கி நடந்ததென்றே தெரியவருகின்றது! உமது பாணத்திற்கது நெடிதன்று; மனம்வருந்தி கிற்பதனலென்னபிரயோசனமென் றான். அதுதான் தக்கதென் றிருவருமத்திசைநோக்கி நடந்துயோசனையிரண்டு கடந்துபோக பூமியில் வீணைக்கொடியொன்று வீழ்ந்திருக்கக்கண்டனர். அக்

கொடியைக்கண்டு அக்கண்டகரோடுமது சானகிபொருட்டாகத்தேவர்களுக்குப் போர்தடந்ததென்றேசந்தேகித்து இது சடாயுவால்தடந்த போரென்றுணராமல் புண்டரீகம்போன்ற தன்கண்ணில் நீர்வாரச்சொல்லிமுடித்தான்.

அதற்கு இளையவனே மாறுட்டமாக யோசித்துப்பார்த்தால் இது உமது பிதாவாகிய சடாயுவினது மூக்கினால் முறிந்ததென்றே தோற்றுகின்றது, தன் வல்லமையால் மிகவும் தாக்கினன்போலும்! நடவடித்தது தெரியாதிருக்கின்றது, தனித்துப் போர் செய்வதற்கோ வயோதிகரானகையால் மிகவும் வருந்தியிருப்பர், மிகவும் வல்லமைபடைத்தவராகையால் காழும்சென்று கூடலாம் பொழுதெல்லாம்தடுப்பதோ திடம்; வென்றுமீட்கினும்வென்றுமீட்கும், இங்கே தாமதித்துக்கொண்டிருப்பதனற் பிரயோசனமில்லையென்ன, இராகவனும் காற்றேபோலும் காற்றுடிபோலும் வினைந்து செல்கையில் ஒரு வில்லை ஆகாயத்தினின்றும் இந்திரவில் முறிந்தாற்போலவும் கடலினடுவில் மந்தரமலையிருந்ததுபோலவும்தோன்றக்கண்டு இளையவனைநோக்கி இவ்வில்லோதேவர்களாற் கடையப்பட்ட பாற்கடலின்மத்தாகிய மந்தரகிரிபோலத்தோன்றுகின்றதே! நமது பிதாவாகியசடாயுவோ இதைவினைந்தொடித்திருக்கின்றார். இது கிடக்கின்ற நிலையை நோக்கிப்பாரென்று சொல்லி வெகுதூர நடந்துபோகையில் முத்தலைச் சூலம் பலபாணங்கள் நிரம்பிய புட்டில் இரண்டும்மலைபோலக்கிடக்கக்கண்டு நெருங்கிப்பின்னும் வெகுதூர நடந்துபோகவே ஆகாயத்தில் சுடர்விட்டெறிக்கும் சோதிகள் யாவும் கூடியதென்று சொல்லத்தக்கதாகவும் அக்கானகமெல்லாம் பரந்த சோதியை விளக்குவதாகவும் இராவணனது மார்பினின்றும்பறித்த கவசத்தைக்கண்டார்கள்.

பின்னு நடந்துபோகையில் அக்காடுமறையும்படி குதிரைகளும்சாரதிகளுமிறந்துகிடக்கக்கண்டார்கள். பின்னு மவ்வாறுசெய்கையில் சூரியமண்டலம் பல மண்ணிற்கிடந்தாற்போல மணிக்குண்டலங்கள் பல பூண்களின் குவியலுடன் தோளணிகளும் இரத்தினகிரீடங்களும்இருக்கக்கண்டு நமதுபிதாவோ வெகுகாலங்கண்டவர், அவருடன் பலபோர் நெருங்கிப் போர்செய்திருக்கலாமென்று இரகுநாயகன்சொல்ல, சுமுத்தினை சிங்கமாகிய இளையபெருமாள் தோள்பலவும் தலைபலவும்தோன்றுமாயின் இவ்வளவுதூரம் நமதுதந்தையுடன் போர்செய்ததாகத்தோன்றுவதனல் அவன்இராவணனுகவே யிருக்கலாமென்றுசொல்லிக்கொண்டேதானும் பின்னுநடக்க; இருவரும்கடலினைட்டிய மந்தரவனைபோல உடலினின்றும்பெருகுகின்ற உதிரக்கடலினடுவிலேவிழுந்துகிடக்கின்றசடாயுவாகிய பெரிய உடையானைக்கண்டார்கள். இரகுவீரனே சடாயுவைக்கண்டவுடன் தாமரைமலர்போன்ற கண்ணினின்றும் நீர்த்துளிசிந்த வெள்ளிமலைமேல் அஞ்சனமலைவீழ்வதேபோலவீழ்ந்து உயிர்ப்படங்கியொரு காழிகைவனையிலுழுணர்வில்லாமல் இருக்க அதைக்கண்டதம்பியாகியஇளைய பெருமாள் அருவினைக்கொண்டுதெளிக்க அயர்வுநீங்கிச்சொல்வானுயினன்.

• உலகத்தின்கண் தம்பிதாக்களைக் கொலைசேர்ந்தவர் முன்னுளில் யாவரோயுண்டு, முன்னே ஒருவன் என்பிரிவால் இறந்துபட்டான், என்பொருட்டாக

இந்தானில் நீ இறந்துபட்டனை! உங்களுக்காக கானை கமனகத்தோன்றி னேன்: பெண்பேச்சைசக்கேட்டுப் பின்னடப்பதறியாமலே மதிமயங்கிப்போ னேன், அவளடைந்த துன்பத்தைத்தீர்க்க நினைத்தே யுன்னுறவுநீங்கினைப்! ஓருறவுமில்லாதவனகிய யான்னதையடையவேனடித் துன்பமடைகின்றேன். மாண்டேனேயல்லவோ! அத்தணர் குறைதீர்க்க விரதமேற்கொண்டதனல் உயிர்பொறுத்திருக்கிறேன்; மரம்போலநிற்பதானேன், புன்றொழிலையுடைய யான் இனி மாயப்பிறப்பினை வைத்துக்கொணடிருக்க விரும்பமாட்டேன். சொல்லையுடையவ ரென்போவினியாரிருக்கிலாரனர்; என்மனவியாகிய சான கியின்பொருட்டு இறகினையும் எண்ணிலாதபற்களையுமுடையவனே! உன்னைப் படைகைக்கொணடொருவன் கொன்றுபோக விலலைக் கையிலேபடைத்த யான்வலிமைபெற்றவ ருவேனன்றே! என்று இராகுவிரனழுதுபுலம்ப இவ் வயனும் அத்தன்மையனுயிருக்கக் கழுகுகளுக்கரசனகிய சடாயுவுக்குச்சற்று தன்னறிவுதோன்றக்கண்டுணர்வுதுறிதோன்றச் சடாயுதுன்பத்தாலவருத் முயிர்ப்புடையவனுய் இராமலட்சுமணரிருவரையுமபாரத் துள்ளமகிழ்வடை ந்து அறுபட்ட சிறகு முயிரு மேழுலகுமபெற்றதாத்து கான் பழியினின்று நீங்கினேனென்று சொலலிகொண்டே யான்செய்த பாக்கியத்தால் இப்பய னில்லாதஉயினைப்போக்குகின்றசமயத்தில உங்களைத்தரிசித்தேன், புண்ணிய வடிவினரோ! வாருங்காளென்று இராவணனது பொன்முடியையுடைத்த மூக்கினலுச்சிமோந்து இதுவஞ்சனையாலவந்தவருகையென்றே என்மனமுன் னமே நினைந்ததாயினும் அருந்ததியையொத்த சானகியானை நீங்கினீரோ நீங்களிருவருமென்றுசொல்ல, இலையபெருமானும ஒன்றுமொழியாமல் மாய மான்வந்ததுமுதல் அச்சடாயுவிழுந்திருக்கக்கண்டதனைத்து மெடுத்துச்சொல் லினன். அதைக்கேட்ட சடாயுவும் அவாகள் மனத்திலே துன்பமடையாத வணணஞ்தேற்றுவது கல்லதென்றுதுணிந்து அதிசயமொருயாலும் அமைக்க லாகுமோ! பிறவியின்கண் இன்பத்துன்பங்களிருவன விதிவசமென்றே மேற் கொள்ளாவிட்டால மதியை விதியாலும் வெல்லபோமோ! துன்பம்வந்த மனத்திற் பொருந்துங்காலத்தில கலக்கங்கொள்வது அறிவின்மையேயாம்; உலகத்தையெல்லாம்படைக்கும் பிரமனுக்கும் கன்றலேநீங்கியதுந் தெரியாத காரணமோ! துன்பமுமின்பமும அணுகும்படாது விலக்கமுடியுமோ! திரி புராந்தகனகியபரமசிவன்தலைக்கலனுல் இரந்துணடதுதவந்நின்பாலதாமோ! ஆகாயத்தில் சஞ்சரிக்கும் சூரியனும் இராகுவினுலபீடிக்கப்படுகின்றது அறி யாததோ! உலகத்தினிருணீக்கும் சந்திரனும் வளரவும்தேயவு மிருக்கின்று னன்றே! துன்பம்வருவதும் அது நீங்குவதும தொன்மை நீர்மையேயாகும், தேவகுருவால் இந்திரனடைந்த சங்கடங்கள் எண்ணிமுடியாவே! ஏட்டி லடங்காவே! சம்பரனென்னும் அரக்கனல் இந்திரன்பட்டபாடு தான்சொல்லி முடியுமோ! அது உமது பிதாவாகிய சக்கரவர்த்தியாலல்லவோ நீங்கியது, நீங்களஞ்சானகியாளைப்பிரிந்தமைநினைக்குமிடத்தேதருமதேவதையும்தேவர் களும்பட்ட துயரத் தவிரும்பொருட்டென்றே யெண்ணவேண்டும், நீங்கள் அரக்கனென்னும் களைகளைந்துவாழ வேண்டுகிறேன். இராவணன் சரணத்

யானை அவனெழுந்தருளியிருந்த பன்னசாலையோடும் தூக்கிக்கொண்டுபோனன். அப்படி போகக்கண்ட யான் என்னுற்றலால் என்னுலானவகையெல்லாமுழுதுந்தடுத்தேன்; அவனே தான் சிவபெருமானிடத்தேபெற்ற வாளாற் கொன்றான், இங்கேவிழுந்தேன் இதுதானடந்தசெய்தியாகுமென்றான். இப்படி சொன்னசொல்காதிற்படாமுன்னேகணமேணி உதிரமயமாயின; நெருப்பேபோலப் பெருமூச்செறிந்தது, புருவமேல்மேலேறின, சுடர்களெங்குமிழிந்தன, அண்டகோளங்கலங்கியது, மலைகளெல்லாமபிளவுபட்டன, மண்ணுலகம்திரியவும்பெரியமலைகள் திரியவும் மற்ற பூதமைந்தும் திரியவும், சூரியசந்திரர்திரியவும், விண்ணுலகம் திரியவும்பிரமனுந்திரியவும் நின்றதனுல் இரகுநாயகன் எப்பொருளுந்தானே யாமென்பது விளங்கக்காட்டியது, இவன் கொண்டகோபமயார் பாலதோவென்று பயந்து வெறித்துநின்று வருந்துகின்ற சமையத்தில் இராகவபிரான் கோபகையுடன் சொலலலாயினன். பெணமணியொருத்தியை அறிவிலலாத அரக்கன் கைப்பற்றிச் செல்லவும் நீர் இவ்வகையான தன் பத்தையடையவுமாய் விட்டதனுல் எட்டுத்திசையுமடைய உலகமெல்லாம் தேவர்களுடனே இப்போதே யழிக்கின்றேன், நக்ஷத்திரங்கள் உதிர்வதும் சூரிய சந்திரர் பிதிர்வதுமவானமெங்குமெரிதோன்றுவதுமநீர் நிலம் காற்று முதலிய பஞ்சபூதங்கள் அழிவதும் தேவாகளிறப்பதும் சத்தலோகங்களழிவதும் அண்டகோளமுமப்பாற்றந்தாகிய இடமுமதோதுநோக்குமிழிபோலழிவதும் பார்க்கப் போகிறீரென்று கோபிக்குங் காலத்தில சூரியனுமமேருவில் மறையலானன், அட்டதிக்கயங்களுமலைபயற்றோடின, உலகமெல்லாம அழிந்துவிடப்போகிறதென்று துணிந்த நெஞ்சினை யுடையவனுய் இளைய பெருமானுமவருத்தங்கொணடனன், இவ்வாறு கோபங்கொண்டதையறிந்த சடாயுவுமஇராமா! நீ கோபிப்பதுக் தருமமா! தேவர்களுமுனிவர்களும் இராவணனை உன்னுல் வெலல வெணணியிருப்பாகள்; அவனுக்குப் பிரமனும் கொடுக்கபபட்ட வரத்தாலாகிய தோளினை போராற்றல என் யுத்தத்திற் கண்டிருப்பைபாலுல் வேறு சொலலவேணடுவது முண்டோ! அந்தப் பிரமன் முதலாகிய தேவர்கள் அவனுக்குத் தூற்றவல செய்வதெதையல்லாமல் அறஞ்செய்து வருகின்றார்களோ! நீங்களுஞ் சானகியானைத் தனியே விட்டுவிட்டு மான்பின்சென்று பழியைத்தேடிகொண்டீர்களே! இதுநீங்கள்செய்துகொணட பிழையேயலலாமல உலகாசெய்த பிழையுண்டோ! ஆகையாற் கோபிக்கவேண்டாம, அருந்திபோன்றகற்பினையுடைய சானகியாரதுதயாதத்தை நீக்கித்தேவர்கள் கருத்தை முடித்து வேதமார்க்கத்தை நிலைநிறுத்தித் தமையைத் தவிர்க்க வேண்டுமென்று சொலலி முடித்தான்.

இராகவனே அச்சடாயு சொல்லிய சொல்லைத் தன் பிதாவாகிய தயரத மகாராசன் கட்டளையேபோலச் சிந்தையிலெண்ணி அயலிற் கோபித்தாவதென்ன? அரக்கனை வருக்கத்தோடுகொல்வதே கடமையென்று கோபநீங்கி நின்றனன். சீராமனே சடாயுவை நோக்கித் தேவரீர் கட்டளையிதே செய்வதல்லது வேறொன்றுண்டோ! அவ்வரக்கன்போன தெவ்வழி யென்று கேட்க, அவனும் அறிவுகலங்கியுரையாடாமல் உயிர்நீங்கினன். அதைக்கண்ட

இராமலட்சுமண ரிருவரும் அழுது சோர்ந்தனர; பூமியிலுள்ள மரங்களு மிருகங்களுங் கணைத்துருகின, இராகுதாயகமே அறந்தலைநிற்காத அரக்கனல் ஆண்மை யொழிந்தன், துறந்து தவஞசெய்மவனே! உயிரைத துறப்போனே! தாதைதமார்கள் இறந்தபின்னரும இன்னுமுயிர கொணடிருக்கிறனன்றே; என்னசெய்மவன! இளையவனேயென்றுசொல்லிமுடித்தான். இப்படிசொன்ன சொல்லைக்கேட்ட இளையபெருமாளும இராகவனை வணங்கி விதியின் றன்மை யால் விளைந்ததானன்றே! காம இங்கு நினைவதனை என்னபயன்! காம் அரக்கனை வருக்கத்தோடும் கொன்றபின்னன்றே நமது கொடுந்துயரநீங்கும்? தேவரீரா சானகியானையும பிரிந்திருக்கனரா! அதுவுமலாமல உமது பிதாவை யுயிரகொணட இராவணனை யுயிரவாங்காமனிருந்த தவஞ் செய்வதென்னகாரியம! என்று இளையபெருமாள்சொலைக்கேட்டு இராகவனு மயர்ச்சிநீங்கி இவ்வாறு எண்ணிக்கொண்டிருப்பது மதியீனமெனறுணர்ந்து தன் கண்ணீரைவிலக்கி இறந்த பிதாவுக்குசெய்யவேணடிய உரிமைக்கடனகளையெலலாம்செய்துமுடிக்கவேணடுமென்றனன; அதற்கு அகிறகட்டை சந தனக்கட்டைமுதலியனவை சிதையாக அடுக்கித் தருபலைமுதலியகொணர்ந்து திருத்தி மவனையுஞ்சிந்தி இளையவன் பணலமேனடையிலிறஞ்சி நீராட்டத்தன் னிருகையா லீமத்திலேற்றிச் சாந்து மலருந்தூவி நெருப்பிட்டுச் செய்யத்தக்க வற்றையெல்லாம வரன முறையாக இராகுதாயகன்செய்துமுடித்தான். சூரிய னும் தன்குலத்தலைவனுகிய இராகுவீரனதுன்படதாலநீராடிச்செய்யத்தக்கனவை செய்தாறுபோலத் தானும் மேற்றிசைக்கடலினை மூழ்கினன்.

சடாயுவுயிர்நீத்தபடலம்

முற்றிற்று.

அயோமுகிப்படலம்.

அத்திக்காலம்வரவே அச்சடாயுவுயிர்நீங்கிய இடத்தைக்கடந்து மேகந் தவழும் மலைச்சிகரத்திற்றுயில்கொண்டனர். இந்திரனுக்கடங்காத இராக்கத சேனை யெங்குஞ்சூழ்ந்துக்கொண்டாற்போலக் கொடுந்துயரத்திற் கூன்று கோலேபோன்ற விரிந்த இருள் எங்குநெருங்கியது. இராகவன்படுந் துயரத் தைச்சகியாமல் மலைகளருவிபாயவும் மரங்கள் தேன்சிந்தவும் கண்ணீர்போல த்தோன்றின. மானமுங் கோபமும் தாதைமரணமும் இராமலட்சுமணர் சிந்தையில் ஞானமும் துயரமு மலைபோலகின்று வருத்தியது. மெய்யுணர்ச்சி யிற்செல்லாத அறிவைவினையிற்செலுத்தும் பொய்ப்பிறவிபோலப் போக்குதற் கரிய இரவும் நெய்விட்ட நெருப்பேபோல மிகுந்தோங்கப் பெருமூச்செறிந்து செயலின்மை யடைகின்றவராற் காண்பதற்காம் கணையைப்பெற்றிலாததாக விருந்தது. இதுகிடக்க;

இராகுவினது தாமரை மலர்போன்ற கண்கள் இரவிலும் குவியாதிருந்தமை * சானகியாராகிய திருமகளைநீங்கியதனாலோ அல்லது அவரது முகமாகிய சந்திரனைக் காணுமையாலோ இன்னதன்மையாலென்றுணியக் கூடாமலிருந்தது; அரக்கனை சானகியானைப் பிரிந்தமையே இன்னதுகருதியென்றே தோன்றவில்லை; இராகுநாயகனுடைய கண்களும் தம்பி கண்களைபோல் இணைத்தலொழிந்தன. சானகியார் முகம் வானின்கண் தோன்றுதலால் அவனுக்குக் காதலியாங்குக் காட்டுவதேபோலத் தமிழ் நாட்டிலிருந்து தோன்றுகின்ற வசந்தக்காற்றென்னும் வலியபாம்பானது தவழுகின்ற மலைச்சாரலிலே வெண்மதி விரிந்தது, களிப்பையுடைய மன்மதனுகிய கள்ளனை, மறைந்து வசிக்கின்ற இராக்காலத்தைவெளிப்படுத்தி யுலகமனைத்தும்விளக்குகின்றநிலாவெள்ளமானது இருட்பிழம்பாகியவிடத்தையுடையாகத்தினதுபல்லால் ஊன்றியதுபோலச் சுட்டது. மானமாகிய துன்பத்தை யிருளானது தரவிடம்பரந்தாற்போன்ற வெண்ணிலாவானது தன்னை வருத்தப் படமபோன்ற அல்குற் பரப்பையும், பாலபோன்ற இனிய சொலலையும் தடங்கண்ணையுமுடைய சானகியானை நீங்கியிருக்கின்ற தனிமையை நினைப்பானுய், மடித்தவாயும் பெருமூச்சுமதுடித்துவிங்கி பொடுங்குந்தோளுங் கொண்டு வாங்கியவில்லையுடையவனுக நமதுகணவன் வருவானேயென்று சானகியார் நாம் வருகின்ற வழியைப் பார்த்துக்கொண்டே போனுளோ என்பான், மின்னலைப் போன்றவளைந்த பற்களையுடைய அரக்கன் நிலலுநிலலு என்று நெருங்கியகாலத்தே அவள் தன்னுடைய சிலதையிலே என்னத்தை நினைந்தாளோவென்பான், நஞ்சையுடைய பாம்பாகிய இராகுவினல் வருந்துகின்ற சந்திரன்போல மண்ணெடு மணைப் மட்குவாளாகிய நமதுசானகி அரக்கனது கொடுமையை நோக்கிப் பயந்தாளோ வென்பான், மேற்கொண்ட காணமும் நீங்குவதற்கரிய காதலும் தன்னைத்தூண்ட ஆருயிர்வருந்துகின்றமையால் எனக்கு இன்னமும் வேண்டுமோ, இதைப்பார்க்கிலும் துன்பமென்ப தென்னென்று நெஞ்சினினைப்பான். பின்னும் இராகுநாயகனே தன்விலலைநோக்கிச்சிரிப்பான், மலைபோன்ற புயத்தைநோக்கிச்சிரிப்பான், பிரசணட வாயுவேபோலத்தேரும்சொல்லைநோக்கி வருந்துவான், கூதிர்க்காற்றுகிய யமனை நோக்கி வேதத்திற்கூறப்பட்ட யாகத்தில் விதிமுறைதோன்றிய என் காதன் மகினியாகிய சானகி பிரிந்தாளோவென்பான். எவ்வுயிரையும் பாதுகாக்கநேர்ந்தநான் எனக்குத்துணையாயிருந்த ஒருபெண்ணைடைந்த துன்பத்தைத் தவிர்க்காமற்போவேனுயின் என்புயவலிநன்றுயிருக்கின்றமிதன்பான், அன்புகொண்டி தம்பிகொணர்ந்தகாய் கனி வருக்கங்களை விருந்துண்ண வருவோனைப் போய்விடுங்கோவென்று சொல்லவுமாய் விட்டதேயென்றுயிர புழுங்க வருந்துவான். வாயு நெஞ்சமும்புலர்வான் அவனுக்குச்சிதைபிரிந்த வேதுவினுலேயோ அபிமானத்

---

* சானகியாராகிய திருவை நீங்கினதினுலோ அவரதுமுகமாகிய சந்திரனைக்காணுமையாலோ சிராமபிரானது கண்ணுகியதாமரைமலர் இரவிலும் குவியாதிருந்தன என்றருத்தி இருவிராத தாமரைமலராதலின் குவியா திருந்ததன்றிச் சந்திரனைக்கண்டால் தாமரைமலர் குவியுமென்பதுமேயாக இவரதுமுகமாகிய சந்திரனைக் காணுமையால் கண்ணுகிய தாமரைமலர் குவியாதிருந்தன என்பது.

தாமலோ தெரிந்தேதையில்லை, செந்தாமரைமலர்போன்ற கண்ணிலைமகள் பொருந் தாமல் ஆயிரங் கற்பகாலம்போலத்தோன்றுவதனல் இரவுவிடியும் காலத்தை இன்னதென்று காணுதவனுயிருந்தான்.

இவ்வாறு காணுமலிருந்து தன் தம்பியைநோக்கி இற்றைப்போல ஒவ் வொருநாளும் இரவும் பகலுமாகக் கழியப்பார்த்திருக்கின்றுயலலவோ, இவ் விரவு மாத்திரம் இன்று நீடித்திருக்க வேதுவென்னவென்று கேட்பான், மா லைக்காலத்திலே தோன்றுகின்ற சந்திரனேநோக்கி நீ தினமு மீண்டு மீண்டும் மெலிந்து வெள்குகின்றுயே, எங்கள் சானகியார்முகம்போல இப்போதுகன்ற தத் தோன்றுகின்றுயே யென்பான், நிலவே போலும் பரந்த கீர்த்தியை யுடைய உன்குலத்துக் காணியாகியபழிவந்ததே என்பதற்கு நாணங்கொண்டு நாடுகடந்து நடந்துபோனுனே ஆகாயத்திற்செல்லும சந்திரனென்றுஞ்சொல் லுவான். பின்னும்தன்னைச்சுட்ட கங்குற்போதோகெடியதென்றுவருந்துகின்ற இராகவனே சனியோடு சூரியனையுங் கட்டி இராவணன் சிறையிட்டானே வென்று நினைப்பான். சானகியாரோ தோன்றமாட்டாரெனிற் கொடியகாரிரு ளாகிய கற்பகாலம்போய் முடிந்தால் இக்கடல சூழ்ந்த வுலகமெல்லா முடியுமென்றே நினைப்பான், தீமைகளைச் செமையானதவத்தோரடைய உலகத்தை வருத்தி யுயிர்களை யுண்டுழல்கின்ற பாவிகள் வலியாரேயாக வாழ் வாரென்றல் அறந்தினல் பயன்யாதென்பான். தக்ஷணைமூர்த்தங்கொண்ட பரமசிவனது கோபத்தால் இழந்த உடம்பையும் பழந்துயரத்திற்குப் பரியும் தன்மையால்வன்மையொன்றுகிடைத்தாலே முடியுமென்றுஇரகுவீரன்மேலெ ய்யப்பூங்கணைகொண்டுகருப்புவில்லால்வெற்றிகொள்கின்றமன்மதனுப்எண்ணி யிருந்தான். நீலநிறம்கொண்ட இறைவனது உந்தித் தாமரைப் பூவிற்றோன் றியநான்முகக்கடவுளாகிய பிரமன்முடிகின்ற கற்பாந்த காலமேபோல கங்குலா கியஇராத்திரிகாலம் கழிந்துவிட்டது.இப்படி இராக்காலம்கழிந்துபோகையிலே, வெள்ளம்பரந்த பாற்கடலில் விரும்பும் துயிலைவெறுத்து வண்டுகள் மொய்க் கின்ற தேன் மணங் கமழுகின்ற மலர்மாலையணிந்த குழலையுடைய சானகி யாரது கற்பாகிய கடலிலே படிகின்ற இரகுவீரனுக்குப் பறவைகளும் சத்தித் துக் கொண்டிருந்தன, சோலைகளு மொழியாத வோசைகொண்டிருந்தன, நீருமொலி நீங்காதிருந்தது. சானகியாரது தோற்றம்தன்னுள்ளத்தே தோன்று வதனல் அவனுக்கு உயிர்வருந்தும் வகையுமுண்டோ ; இதுகிடக்க ;

மயிலும் பெடையுமுடனேதிரியவும்,மானும்கலையுமருவி வரவும்; பிடியும் களிறும்வந்து திரிவதைப் பார்க்கின்ற இராகூயகன் குயிலையும் கரும்பையும் தேனையும் புள்ளாங்குழலையும் யாழையும் பாகையும் அழுதையும் சுவையிற் பழித்த மொழியையுடைய சானகியாளைப்பிரிந்ததனல் வருந்திக்கொண்டிருந் தான். இவ்வாறு நடக்க, இரவுகழியும் வளையிலும் கிளிபோலு மொழியை யுடைய சானகியாரது சொல்லைக் கேளாத இராமனேநோக்கி முன்னுளில் செந்தாமரை மலரிலொதுங்கும் அன்னம்போல்வாராணிய அன்னையாரிலர்,

நானடைத்த செந்தாமணைமலனை நன்றுகப் பாருமென்று அம்மலனையவிழ்த்துக் காட்டுவான்போலச் சூரியன் உதயமலையிற் றோன்றினன். கூந்தலையும் தனபாரத்தையும் அதன் றொழிலையு நோக்கியும் தன்றோளை நோக்கியு நாளைக் கழிக்கின்ற இரகுநாயகன் சோலையையும் அச்சோலையில் வசிக்கும் பறவைகளையும் பூங்கொம்பினழகையும் இளமயிலின் சாயலையும் பார்ப்பான்; இப்படி பார்த்துக் கொண்டிருப்பதைக்கண்ட இளையவன் இராகவனைநோக்கி நாம் சானகியாளைத் தேடிப்போகாதிருப்பது தகுதியோவென்று சொல்ல இரகுநாயகனும் நாம் அவ்வரக்கன் கொண்டுபோய் வைத்திருக்குமிடத்தைத் தேடித் திரிவோமென்று பலகாடுகளையுங் கடந்து பதினெட்டு யோசனை தூரஞ் சென்றனர். இப்படித் தேடித்திரிந்தும் சானகியாளைக் காணமற் போயினர், சூரியனும் மேருவை வலங்கொள்ள மறைந்தான். பத்துத்திசையு மிருள் மூடிக்கொண்டது. இரகுவீரன் பளிங்குக் கற்பாறையைக்கண்டு அதிற் சயனித்துக்கொண்டு நீர்வேட்கை மிகுதியு முடையானாய் இளையவனைநோக்கி கானருந்த நீர்கொண்டுவர வேண்டுகின்றே னென்றான். இளையவனே எங்குந தேடியு நீரைக்காணமல் திரிகையில் அயோமுகியைக் கண்டான். அவளோ மந்திரத்திற் றடைபடாப் பாம்பேபோலத் தொடர்ந்து இவன் மன்மதனே வென்றெண்ணிக் காதலால் எதிரோகின்று என்னைவருத்தும்நோவா லிவனை யணைவேனே அல்லது விழுங்குவேனேவென்றும், இவனைக் கேட்டுப்பார்ப் போம் இவனிணங்காவிட்டால் நமதுகுகைக்குக்கொண்டுபோய்க்கட்டித்தழுவு வோமென்றுந் திடங்கொண் டெதிரே நின்றாள். அவளை இளையவன் பார்த்து மூக்கு முலையுமிழந்த சூர்ப்பநகை, தாடகை முதலிய அரக்கியர் கூட்டத்தைச் சேர்ந்தவளே இவள்; இப்படிப்பட்ட செய்கையையுடைய அரக்கியோ நம்மை நாடிவரக்காரண மென்னவென்று நீயாரடீ! இங்கேவந்தா யென்றான். அதைக்கேட்ட அயோமுகி காணமல் ஊசல் வடம்போல மனமுடையாளாய் உன்னிடத்தே காதல்கொண்டுவந்த அயோமுகி என்பவள்நான், இன்னுமொருவனையும்விரும்பாத என்னையணைந்தாளென்னுயிரைத் தாவேண்டு மென்றாள். தன்னிடத்தே இவ்வாறு சொலலிய அயோமுகியை நோக்கி இளையவன் கண்சிவந்து இவ்வகையான சொல்லை வாயினற் சொல்லையே யானால் உன்னுடம்பை என்பாண்த்தாற் கூறிடுவே னென்றான்; இளையவன் சொன்னதைக்கேட்ட அயோமுகி கோபங் கொள்ளாமலே தன்மேற் கைகளை யஞ்சவியமைத்து என்னுயிர் கொள்ளப்பெற்றால்இன்றுநான்பிறந்ததலைலாகிய பயன் பெற்றேனுவேன், நீர் நீர்வேண்டித்திரிகின்றீர், அழகியகையையமைத்து என்னை யஞ்சவேண்டா மென்றால் கங்கையின் நீரையேனும் கொண்டுவந்து கொடுக்கின்றேனென்றாள். சுமித்திரைசிங்கம் அதைக்கேட்டுப் பொறாது நான் உன்காது மூக்கு மரிவதற்கு முன்னமே நீ யோடிப்போய்ப்பிழை யென்றான்; அயோமுகியும் இமைக்காமனின்று இவனை நாமெடுத்துக்கொண்டு போய்க் குகையிலடைத்தாற் இவன்கோபமகன்றபினுடன்படுவானென்று சிறிதுதூரஞ் சென்று மோகனமந்திர முச்சரித்துக்கொண்டு சந்திரனைடு செல்லுமேகம் போற் கைக்கொண்டுசென்றாள். இதுகிடக்க;

இப்பால் நீர்வேட்கைக்காக நீ கொணரச்சென்ற தம்பி வராமையை நோக்கி இரகுநாயகன் இக்காட்டிலநீரில்லாமையாலோ? வேறென்னகடந்தோ? அவன்வினைந்து வராதிருக்கின்றனை ; இது என்ன ? அங்கேசானகியையெடுத்துக்கொணடு போன அரக்கரோடு சண்டை கடக்கின்றதோ! அல்லது நமது தம்பியையும் அவ்விராவணன் கைக்கொண்டு போனனே! விதிகூட்ட அக் கொடியவன் தீச்செயலாற் கொலையுணடானே! கான் சானகியில்லாது வருந்துவது நோக்கித் தன்னுவி யிழந்தானே! எனனருமையான உயிர் போன்ற வனே! நீபுமொளித்துக் கொணடாயோ! நீ பிழைசெய்தமை மிகக் கொடிது! இதைபுலகமுங் கொள்ளமாட்டாதே! உனதுலே என் தந்தை யிறந்தமையும் தாய்மானையும் சானகியையும பிரிந்தமையு மறந்திருக்கின்றேனே! இதுவனையிலும சானகியானைத்தேடி வருந்துவதிலே முயன்றேன், இனிபுன்னையுந் தேடிவருந்த நிபப்பிவிட்டாயே! நானே இன்றே சாகாதொழியேன், நமமவரோ இறவாதொழிபார், உன்சுற்றத்தானை யெலலாங் கொலலச் சமைந்தாயே! இதுவுங் குணக்கேடலலவோ! மாந்தாதா முதலிய அரசர்களெல்லாந் தருமநெறிதவறுதவாகளாயிருந்தாகளே; அவர்கள்சந்ததிக்கு அரசனுக மகுடாபிஷேகஞ்செய்தனைத் தவிரதலலாமலுறவினையையும் விட்டுவந்த என்னுடனே நீ யிவ்வளதூரம வந்தும இபபோதென்னை விட்டுப்பிரிந்துபோகலாமோ! என்று சொல்லி வருந்தப்பட்டுத் தமபி தம்பியென்று பரதவித்துத் தேடிக்கொண்டே வாடிச்சோர்ந்து மநிமயங்கி தருமங்கைகூடுவதாயிருந்து கான் பிறப்பதாயின் அவனுக்குத் தமபனாகவவது பிறக்கவேண்டுமென்று தன்னுடைய வுபினைத்துறக்க நினைத்து உறையினின்றும் வாளைக்கழற்றுஞ் சமையத்தில் அயோமுகியினது மோகனமந்திரத்தினின்றும் தான் பெயர்ந்து அவளைப்பிடித்து மூக்கையரிய அவள் அழும் பேரோசை தன்செவியிற்பட்டு இது அரக்கியினது குரலாகவே தோன்றுவதாகக்கண்டு தனவில்லையெடுத்து வளைத்து ஆக்கினேயமாதிரம பிரயோகிக்க அவ்விருளும் பகற்போதாகவே தோன்றியது. பினனை விளைநதுகடந்து தமபியையெதிர்ந்தான். அதைக் கண்ட இளையவனை அண்ணை! வருந்தவேண்டாம் வருந்தவேண்டாம்! இதோ வந்தனனவநதனனை றி இழநதகண் மீண்டும் வாதாற்போலத் தாசரதியை வநதடைந்தான்.

தன்னைப்பிரிந்த தம்பியைக்கண்டதாசரதி அவனைத்தழுவி உச்சிமோந்து முத்தமிட்டுத் தன்கண்ணீராட்டி நடந்தவரலாறெனனவென்றுகேட்க, இளையவன அயோமுகி வந்ததும அவள்தன்னைக்கொணடு சென்றதும் அவளைத்தான் காசியரிந்தது மென்று மெமாழிபாமற்சொலல அவள்கைக்கொண்டுசென்றமைக்கு மனம் வருந்தமும் காசியரிந்து மீண்டமைக்கு மனமகிழ்ச்சியுங்கொண்டு தம்பியை நோக்கி மும்மைப்பெருந்தேவரும் உலகமூன்றும் என்னை வெல்ல வல்லரோ! எனக்குப் படைத்துணையாக நீ யிருக்க அவனும் வேண்டுமோ! பிரிபவரெல்லாம பிரியட்டும், எனக்கு வருந்துன்பமெல்லாம் வந்தேதீரட்டும், அவையெல்லா முன்னுலே நீங்குமல்லது எனக்குத் துன்பமென்பது கேடுமோ! என்று சொல்லிவிட்டுப்பின்னும்தம்பி அவளைவென்று மீண்டனனென்

ருயே! அவனைக் கொல்லாமல் விட்டாய்போலுமென்று இரகுவீரன் கேட்க, இளையவனும் அவனை நான் மூக்கு மூலைகாதென்னும் இவ்வுறுப்புக்களையரிந்து களைந்தேன், அப்போதவளிட்ட பேரோசையே தேவரீருக்குக்கேட்டதென்று தன்னிருகரத்தையு முச்சிமேல் அஞ்சலியாக வைத்துச் சொன்னான். இப்படிப்பட்ட விருளில் உன்னைக்கொல்லத் தொடர்ந்தாளையும் நாசி முதலியவை யே கொய்து நீக்கினாய்! மனுமுதலிய பெரியோர் வழியைப் பெருமைப்படுத் தவேபிறந்தபெரியோனேயென்று மார்பொடிறுகத்தழுவித் தம்பியுடன்கடந்து சென்று விடுவை நோக்கியே யெண்ணி, அங்கேயொருபுலையிற்றங்கி யிருந்து தம்பி காவ்பிடிக்கச் சானகியைப்பிரிந்த வருத்தத்தால சாய்ந்தான். இவ்வாறு வருந்துவதைக்கண்டு பொறாது வருத்தந் தணிபடான்போலக் கீழ்த்திசையிற் சூரியனு முதயமானான்.

அயோமுகிப் படலம்
முற்றிற்று.

கவந்தப்படலம்.

சானகியானைத் தேடிவருந்திப் பறவைகளும் விடியற்காலத்திலேயழுவன் போலத்தோன்ற இராமலக்ஷ்மண ரிருவரும் தேடி இருபத்தஞ்சு யோசனை தூரங்கடந்துசெனறனர். சூரியனும் உச்சியிலவந்தான், அப்போதவ்விருவரும் கவந்தன் வசிக்கும் வனத்தையடைந்தனர், யானைமுதல் எறும்பு கடையான எல்லாவுயிர்களும் கெட்டொழிந்தன, அவைகள்கிட்டப் பயப்படுகின்றனவா கிப் பறிக்கக்கூடாத வலிபிற்பட்ட தன்மையவாயிருக்கும். அங்கேயிருந்த உயிர்கள் கொடுங்கோன்மன்னன்வாழுநாட்டில்வசிக்குமகுடிகளேபோலப்பயந் தோடிப்போய் மயங்குமியல்பின, பெரியமலைகளருள்வனபோலப் பெருமரங் களருள்ண்டுவருவன்வும் காட்டாறுகள் கால்கள் பறிந்துவருவனவும், மேலுள்ள தினச்யிணேடுவெளிபயுமறைத்துச்சூல்கொண்டமேகங்கள்சுருண்டுவீழ்வன வும் பார்த்துப்பின் நாற்கடலும் கற்பகந்தத்திற்மேறுன்றுங்காற்றேபோல வுலகத் திற்காற்றுமோதிச் சூரியன்திக்குமாறிவந்திடுங்குவனபோலத் திசையனைத்தும் சுற்றியகையிலே இராமனும் இளையவனுமடுகுதனர். அவர்கள் சானகியைக் கைக்கொண்டுசென்ற அரக்கர்சேனை நம்மைவந்து சூழ்ந்துகொண்டதென்று களித்துச் சக்கரவாளகிரியேவந்து நெருங்கியதென்னும்படியான அம்மதிற் குள்ளாயினர். இப்படியிருக்க, இரகுநாயகன் இளையவனைப்பார்த்து சானகி யைக்கவர்ந்துபோன இராவணன்வாழுநகரமுமிவ்வளவினதாகும், ஆனையால் நம்து பெருந்துயரமு மொழிந்தகென்றேதுணி; இது அரக்கருடைய சேனை யாலல் மூரசொலியும் சங்கொலியும் பெற்றிருக்கக்காணவில்லையே, இதலல் இது வேறுன்றெனத்துணிகின்றேனென்றான். இச்சொற்கேட்ட இளையவன் தாசரதியை நோக்கி இதை நோக்குமிடத்துத் தேவர்களுமெதிர்க்கடைந்த போது அடைகயிருவிருந்த வாசுகியாவது, அல்லது வேறுருபாம்பாவது வாலென்றதலையினுலவனைத் துள்ளேகொள்ளத்தொடங்கியதுபோ லிருக்கின்ற

தென்றான். இவ்வாறு தம்பிசொல்லக்கேட்டவனுடன் இராகவனுங்கன்றென்று கடந்து இரண்டுயோசனை யுள்ளேபுகுந்து மலைகின்றுற்போலிருந்த கவந்தனைக் கண்டனர். மேருமலையானது இரண்டுசூரியனைத் தனபா லனைத்துக் கொண்டாற்போலும் கோபக்கண்ணையும் பல்லிற்குக்கீழிரண்டுகாதம் அளவுள்ள நினையுமுடையகடலேபோன்றவாயையுடையவனுமதேவர்மாடவுயோகள் சந்திரனைத் தாழ்பாவும் மந்தாகினியை மத்தாகவும வாசுகியைக்கயிறுகவும்கொண்டு கடைந்தபோதமைந்த விடம்போன்ற கையையுடையானும, கருமான் உலைக்கூடத்துண்டாம் புகைபோலப் புகையுண்டாகு மூக்கையுடையானும,கடல்எப் பருகும் அக்கினிதேவனது சிகைக்கொழுந்தெனபடும் காவினையுடையானும், வேதநூல்முதலாகிய ஆப்தகலைகளிற் கூறப்படாத பெரும்பாதகமே திரண்டுபிர்படைத்தாலொத்த பண்பினையுடையானும, சூரிய சந்திரனை விழுங்கும் இராகுகேதுக்கள் செய்கை இதுவென்னப்படும் செவித்தொளை யுடையானும், எல்லாவுயிரையும கைக்கொண்டுசெல்லும் தன்மையாலமனது கோட்டை வாயிலேபோன்ற வாயையுடையானும, கடலோசையேபோன்ற குரலையுடையானும், ஆலவிடமேதிரண்டாலொத்த தேகமுடையானும,கள்ளமாமாயப்பிரானது சுதரிசனப்படையால தலைஈங்கியகாலமேமியென்னும் அரக்கனைபோலக் கவந்தத் தோற்றமுடையானுமாய், கற்றல்மோதப்பட்டு முன்னைசிகரமிழந்த மேருமலைபோலும் விளங்கிக்கொண்டிருக்கும அந்தக் கவந்தனைநன்றுகக்கண்டு உலகமுழுதுமடங்கும் பிளந்த வாயினைப்பார்த்து இது அரக்கரது நகரவாயிலோவென்று இருவரும் நினைந்தனர். பின்பு இளையவன் நன்றுகச்சிந்தித்து அண்ணல! இதுபூதமேயாம், கடலசூழ்ந்தபூமியினிடமோ அறிதனறுசொல்லப் பரந்த மெய்பையுடையது, பூமியிடம் வலம்வரப் பரந்த கையையுடையது, பூமியை முன்னளவிடநெடுத்த ஆதிவராகமபோலு மாற்றலையுடையானே! இக்கொடியபூதநம்மைக்கவர்ந்துவியப்பெய்துக்கொள்ளத்தொடங்கியிருக்கின்றது, காமென்செய்வது? சானகியும்பிரிந்தாள், நமது பிதாவோ இறந்துபட்டனன், காணை பழிக்காளாய் உடல்கொண்டுதிரிய விரும்பேன், இதற்குணவாய்விடுகிறேன், நீபிழைத்துப்போ, என்னைப் பெற்றதாய்மார்கள்வருந்தவும என்தம்பி துன்பப்படவும் பெரியோரொல்லாம் வருத்தப்படவும் பழிக்குச்சார்பாயிருப்பதைப்பார்க்கிலும் என்னுயிரைத்துறப்பதேநலம், இல்லாவிட்டால்வந்திருக்கும் பழி நீங்கிவிடுமோ! நீர் தானைநீர்வாரித்தளித்த சானகியோ அரக்கர் மனையிலிருக்கின்றுளெனச்சொல்லித் தூணியைச்சுமந்தும்வில்லேச்சுமந்தும் மிதிலைநாட்டரசனிடத்தே போகலாமோ!சானகியொருத்தியையேகாவாதொழிந்தேன், தம்பிவிரும்பி யளிக்குங்காய்கனிகளை நுகர்ந்து காலங்கழிக்கின்றேன் என்னுஞ் சொல் நிகழ்வதைப் பார்க்கிலும் இறந்துபடுவதே நலலதென்று இராகுகாயகன் சொல்லிமுடித்தான். அதைக்கேட்ட இளையவனே தேவரீர் பின்னே வந்தபிறகு இத்துன்பம்வந்துமூண்டால் முன்னே என்னுருயினைத்துறக்காமல் மீண்டேபோவது நன்றென்று சொன்னால் என்னடிமைத்தொழில் நன்றுயிருக்கின்றதே, வீரனெனப்படுவோர் துன்பத்தை அறக்கடிந்தவரோயன்றே! பகைவரோபோலத் தன்தாய் தந்தை தமையன் என்னும் தன்மையருக்கு முன்னே

சாவாணையின் புகழ் நீங்குவதல்லவோ, சானகியாருடன் தேவரீர்மலைகளடர்ந்த காட்டில் தங்கியிருக்கக் கண்டோமாகில் அயலென்று காத்துக்கொண்டிருக்கலானேன், இது என்னையென்றவர்முன்னே யவனைவிட்டு காணுந் தன்னைத் தனியே வந்ததனென்பதைப்பாராக்கிலும் வேறு தவறுண்டோ; என் தாயாகிய சுமித்திரையோ தேவரீர் ஏவிய ஏவற்றொழிலனைத்தும் பின்னிடாமற் செய்து வரவேண்டுகிறேன், அவர்களுக் கழிவு நேர்ந்தால் அவர்களிறந்து படுவதற்கு முன்னே நீ இறக்கவேண்டுமென்றாள். அவள்சொல்லுக்குப்பழுதுவராமல நடப்பதனலன்றோவாய்மை யெனப்படுவதுநிலைபெற்றிருக்கும். என்னையின்ற சுமித்திரையும் யானுமெவ்விதமும் மும்மைப்பெற்றிருக்கு மனக்கோணலில்லாமல் குற்றேவல்செய்துவருகிறோம, நல்லவாவிரும்ப மிகவும் நிற்கும் சொல்லேப்பெற்றுலல்லாமல் உயிரைவிருமபித்துறக்கமாட்டேன்! எல்லாப்பொருள்களும்முடிந்து மும்மைப்பெருந்தேவருமழியுங்காலத்தும அழியாதவனே! யானகளைத்தின்று இக்காட்டிலே வாழும பூதத்தாலே நீ கொல்லப்படுவாயோ! இதைக்கேட்டவருமகொள்ளமாட்டார்கள், கண்டவரும்விருமபார்கள், போர செய்து சானகியார்வருத்தப்படாத வணண மீட்டாரென்னும் பெருமிதகழ் கொள்ளாமல் இறந்தாரென்றபிறகும் வசையிருக்கிறதல்லவோ! இன்றுதாமதபடாமல் இப்பூதம் பிணித்தகையையும பிலமபோன்ற வாயையும தவறுமல துணித்துத் துன்ப நீங்கவேண்டுமென்று சொலலிக்கொணடே இளையவன் இரகுவீரன் முன்னேநடக்கவும் இராமன் இளையவன்முன்னேநடக்கவும் இவர்களைத்தடுப்பார் பிறரில்லாமல தேவர்கள்கணடு அழுதனர். இவ்வாறிருவரும அணுக்கண்ட கவந்தன் வினையால் வந்தடைந்த வீரர்களே! நீங்கள் யாரென்றுமகட்க, இருவரும கண் இமையாமற் கோபித்து நின்றனர். அதைக்கண்ட கவந்தன் இவர்களழிவாருமல்லர், என்னை இகழ்ந்தனரென்று கோபங்கொண்டு விழுங்குவேனென மோதிய அவனது தோள்களை இருவரும் உடைவாளால் வெட்டியெறிந்தனர், இறைவன் கைப்பரிசம் பட்டமையால தனக்கு முனனுண்டான தன்சாபமுழுது நீங்கி ஆகாயத்தில் தெய்வவுருவங்கொண்டுநின்று பிரமன்முதலிய தேவர்கட்கும் அறிவின்கண் விளங்கினவன், இவ்விராமனென்று தன் கருத்திலே தெளிந்து அளவைபடாத அவன குணதிசயங்களையெடுத்துப் புகழத்தொடங்கினன்.

* என்றவனே வெப்பொருளு மெல்லைதீர் நல்லறத்தின்
சான்றவனே தேவர் தவத்தின் றனிபபயனே
மூன்று கவடாய் முளைத்தெழுந்த மூலமோ
தோன்றி யிருவினையேன் சாபத்திடர் துடைத்தாய்.

* * * * *

மாயப் பிறவி மயனீக்கி மாசிலாக்
காயத்தை நல்கித் துயரின் கனாயேற்றிப்
பேயொத்தேன் பேதைப் பிணக்கறுத்த வெம்பெருமான்
நாயொத்தே னென்ன நலனிழைத்தே னெனென்றான்.

கவந்தன் பலதுதிகளா இராகுவீரனேநோக்கிச் சொல்லிக்கொண்டேஇவனே யுள்ளமறியக்கூறுவனேயானால் தேவகாரிய முடிவுபெறுதென்று நினைந்து தன் தாய்ப்பசுவைக்கண்ட கன்றெத்து விம்மியழுதுகொண்டு தான் நேரே நின்றான். இப்படி நின்றவனைப்பார்த்து நம்மாற்கொலலப்பட்ட இவன்வேறோர் பெருமித முடையானைத் தெய்வவுருப்பெற்று ஆகாயத்தில் நமக்கு நேரேநிற் கின்றான்;நீஇவனையாரென்றுகேளென,அதற்கவன்சொல்வானுயினன்.வீரனே! நான் தனுவென்னும் பெயருள்ள கந்தருவன், சாபத்தாலிக் கடையான பிறவி கொண்டிருந்தேன், என்மேல் உங்கள் கைப்பரிசம் பட்டமையால் முன்னை. வடிவம் பெறலானேன், எந்தை தந்தை தந்தையாயிருக்கு மிறைவனே! வில்லாளிகளாயுள்ள உங்களைக் காப்பவரில்லையேனும் சானகியானைத் தேடத் தகுவதற்குக் கடலைப் புணைகொண்டு நீந்தினலன்றி முடியாததேபோற் பகை வனை வெல்லுவது துணைகொண்டேயாகவேண்டும்; உமதாண்மையோ சொல் லுந் தரமல்ல, பிரமசிருட்டியிலகப்பட்ட எப்பொருளையுமழிப்பதற்கான இறை வனும் பல பூதகணங்களுடன் வசித்துக்கொண்டிருப்பதை நீங்களுமறிவீர்கள். இது அறத்துறை யென்றெண்ணிக் கொடியவனைச் சேராது தக்காரைச்சேர் நது சவரியைக்கண்டு அவள் சொன்னவழியே சென்று இருசிய சிருங்க மலை யிலேறிச் சுக்கிரீவனை நட்புக்கொண்டு சானகியானைத் தேடுவதே நலமென்ற னர்;அதுவே தக்கதென் றிருவரும் சொல்ல, அவனு மவர்களிடம்விடைபெற் றுச்சென்றனன். இருவரும் காடு மலைமுதலியவைகடந்து மதங்காச்சிரம மடைந்தனர்.

கவந்தன்படலம்.

முற்றிற்று.

சவரிபிறப்பு நீங்குபடலம்.

வேண்டிய வேண்டியாங்களிக்கும் கற்பக தருவேபோல உண்ணக் கனி கள் குறையாத சோலைகள் இன்பமேயன்றிக் துன்பங்களில்லையாக அக்காடு புண்ணியம்புரிந்தோர் வசிக்கும் துறக்கநாட்டை யொத்திருக்கும். அப்படிப் பட்டவிடத்தைத் தனக்கு வசிக்குமிடமாகப்பெற்று அங்கே யிருந்துகொண்டு அளவில்லாத காலம் தன்னைநினைந்ததவஞ்செய்யும் சவரியைக்கண்டுஅவளுக் கின்சொற்கூறிச்சுகமாக விருக்கின்றீயோவென்றான். அதைக்கேட்டசவரியும் அன்பாகச் சிராமபிரானைத் துதித்து வணங்கி யானந்தக் கண்ணீர் பொழிந்து என் மாயப் பாசமாண்டது, பலகாலமு நான்செய்த பெருந்தவத்தால் என் பிறவிவேரறுத்தேனென்று சிராமனுக்கு வேண்டுவனவற்றைக் கொண்டுவந்து கொடுக்க அவனும் கல்விருந்தாக வமைந்தான். அந்தச் சமையத்தில் உருத்திரனும் பிரமனும் இந்திரன் முதலிய மற்றதேவரும் நெருங்கிவந்து சவ ரியைப்பார்த்து, உன்னுடைய குற்றமற்ற தவமோ இப்போதுபூரணமாய் விட் டது,சிராமனுக்கான பூசனையைவிரும்பிச்செய்து எம்மிடத்திலேவரவேண்டுமே றுமென்றனர். அவர்கள் போனபின்பு சவரியோ இரவிகுலதிலகனை நோக்கி

இவ்விடத்தில் தேவரீர் எழுந்தருளியதனல் என்தவமோ பலித்துவிட்டதென்று சொல்லினுள். அவ்வருந்தவத்தினையப்பார்த்து தாசரதி எம்பாலண்பாக காங்கள்வந்தவழி வருந்தகீக்கினை நீவாழியென்றுன். அவள் இராகவனையும் தம்பியையும்பார்த்துச் சூரியகுமாரனகியசுக்கிரீவன்வசிக்கும இருசிய சிருங்க பூலைக்குப் போம்வழியை நன்றுக எடுத்துச்சொலல, மேலோடெடுத்துக் கூறும் மெய்ம்மைப்பொருளேபோல அவள்சொன்னதை யெல்லாம் கேட்டுக்கொண் டிருந்தனர். பினபவள்தானித்து வனையிலுமசெய்தியோகப் பயிற்சியாலே தன் னுடமைபை நீங்கிச் இந்தையுமொழியுஞ் செலலா நிலைமைத்தாகிய அந்தமின் பத்தழிவில் வீட்டையடைந்தாள். அதன்பினபு அவவிருவரும் அதைக்கண்டு மகிழ்ந்து அவள்சொன்னவழியே தொடாந்துபோய்க் காடுமலை வனம் வனந் தொங்களைக்கடந்து தன்பாலவந்து நீராடுவோருக்குப் பாவத்தை நீக்கிவிடும் புண்ணியமபழுத்தாலொத்த பமபை யென்னும் பொய்கையையடைந்தனர்.

சவரிபிறப்பு நீங்குபடலம்

முற்றிற்று.

மூன்றுவது

ஆரணியகாண்டம் - முற்றுப்பெற்றது.

ஸ்ரீராமஜெயம்.

கிட்கிந்தாகாண்டம்.

பம்பைப்படலம்.

காப்பு.

மூன்றுரு வெனக்குண முட்மை யாமுதற்
றோன்றுரு வெவையுமிம் முதலேச் சொல்லுதற
கேன்றுரு வமைந்தவு மிடையினின்றவர்
சான்றுரு வுணர்வினுக் குவந்த தாயினன்,

அப்பம்பையென்னும் பொய்கை வண்டுகள் நெருங்கு மலையுடையது, கோபக்கண்ணையுடைய வேங்கைகள் படிவது, தெளிவு நிரம்பியது, மின்னல் படிகிற மேகம்படியக் கடல்நீர் வானிற்படிந் தலகிற் கிடக்கின்ற மாட்சிமை யுடையது, பிளந்த நுண்ணிய படிகக் கல்லேபோலத் தெளிந்த நீர் மணிகள் படர்ந்த பித்திகையிற் சேர்ந்துழித் தன்னிறத்தை யடைவதலுல் அறிந்து முணர்வில்லாருள்ளமே போல்வதும்; மணலையுடைய தடாகங்களில் பவளம் போலுங் காலையுடைய அரசன்னமும் பேடையும் காணபதலுல் நெடிய வானில் விளங்கும் நாள்களுடனே புவாமதியளவில்லாதன தோன்றுவன போல் வதும்; கடலசூழ்ந்த உலகத்தையும உயிர்களையும் வேதபார கையும் விதி க்கத் தொடங்கிய காலத்தில் குளிர்ந்த கட்லையும் வெற்றிகொள்ள விசுவா மித்திரமுனிவலுல் படைக்கப்பட்ட கடலெனப்படுவதும்; நாகர் வசிக்குமிட மெனத் தோன்றுவதாயினும மிகவாழ்ந்து கற்பகத் தருவேபோன்ற அத் தெய்வப் புலவர்களால் நாட்டப்பட்ட சொற்பொருளேபோலும் தோன்றத் தகுவதும்; அன்னமே முதலிய பலபறவைகள் அங்கே நெருங்கிக்கூவ அவை இன்னது கூவிய தெனத்தோன்றலாகாமையினுல் அயோத்தி நகரத்தின் ஆவ ணம்போல விளங்குவதும்; ஆரதனு லயமெனச் சொல்லக்கிடந்த தாயினும் நல்லுணர்வைப் பேதைமை மறைத்தாற்போலப் பசிய இலைகள் அடர்ந்திருப்ப தும்; சானகியிருந்த இடங்காண்ப தரிதாகையால் நம் இராகுவீரன்முகத் தை நோக்குவதோதன்றன்று, நாம் துணிந்துஇறந்து படுவதேநலமென அன் னங்க ளெரிபுகுவனபோல வண்டுகள் நெருங்கிய தாமரை மலரிலொளித்துக் கொள்வதும்;நம்மை அச்சானகியினுடைய கண்ணினினேமேயென்று கருதியோ ருக்காலும் கண்ணீர்விடாத இராகுவீரன் கண்ணீர் விடுவானென்று ஏளித் துக்கொள்ளும்மீன்களையுடையதும்;மூங்கிலிலுண்டாகுமுத்துகளையும்யானைக் கோட்டிற்றோன்று முத்துகளையு மணியுடன் வாரிக்கொண்டு இழைகள் நெரு

ங்கியதேபோல் அருவியாறடைவதனல் மாதர்கள் செய்துகொண்டஅலங்கா
மே போலத் தோன்றுவதும்; யானைகள் பொதுவாக நீரைக் கலக்குவதனல
இரவிலெதிர்ந்த கலவிப்போரில் உடல்வருந்திய |விலைமகளிர் |வடிவுமேம்போல
வருந்து மெய்யையுடையதும், ஆகாய மளாவிய மலையினின்றும் தேனும
யானையின்மத மழையு நெருங்கிப் பாய்வதனல் அந்நீரையுண்டார் பெருகளி
யெய்துவது நோக்கி மாதர்களி னிதழேபோலத் தோன்றுவதும், வடமொழி
யே முதலான பலபாடையும். வல்லரல்லரான மூடர்கள் ஒருவழி புகுந்தாற்
போன்று அறியப்படாத வச்சொற்களுந்தோன்றுதனவாய்ச் சோர்வில்லாம
லே பறவைகள்தோன்றுவதும்; தன்னுயிரனைத்தழுவிக்கொண்டிருந்தபெடை
யைத்தன்னுயிர் பிரிந்தாற்போலும் பிரிந்த அன்னம் ஆமகளிர் காற்சிலம
போசைகேட்டு அதைத் தேனினைச் சிந்தும் மழலைச்சொல்லேபோலக் கேட்
பதும்; மலையினின்றும் ஈர்த்திழிகின்ற ஆற்றிலிடுகின்ற வாசனைகமழும் அகில
சந்தனமுதலியவற்றின்சேற்றிலுலாகியநீரேபோலவிளங்கும் தனமையதுமாகிய
அத்தடாகத்தைக் கண்டான்.

மான்போன்ற கண்ணையுடையார் இதழ்போன்ற செவ்வாம்பலுள்ள
பொய்கையில்தேனையுண்ணும் மாதரோபோல மயக்கமடையுமகரமீன்கொக்கு
கள்துன்பநீங்கியபிறப்பிலேழிறப்பென்றுசொலலக் கடிதுமீனெடு முழுகியெழு
வன கொக்குகள் கவளங்கொள்ளுகின்ற யானைபோன்ற சீராமனுக்குச்|சானகி
யானையும் கொடுத்தோமில்லை, நம்மாலான காரியத்தையேனும் செய்வோ
மென்று அன்னங்கள் நடையைக் காட்டுவன, குவளை மலர் கண்ணைக்காட்டு
வன, இதழைக் குமுதமலர் காட்டுவன, அணிந்த ஆபரணங்களில் விளங்கு
மொளிபுறத்தேதோன்ற என்றும் அரமகளிர் அங்கே நீராடுவார்கள், செய்கை
யன்னங்கள் அவ்வாபரணங்களை யேந்திக்கொண்டிருக்கும் நீழல் இடையிடை
யே வீசுவதனல் படிகமபோலும் நீர் புகுந்ததென்ற பொங்கி மீன் கூட்ட
மேயஞ்சும், மாமரத்தில் இருஞ்சிறகைக்கொக்குகள் புலர்த்தும், அத்தடா
கத்தின் ஒருபாகத்தில நீலமணி நிழலெறிப்பதனலும், ஒருபாகத்தில பதும
ராகம் ஒளிபரப்புவதனலும் இரவும் பகலுமெனத் தோன்றுமை கையையுடை
மையால் மாதர்முலையேபோலச் சக்கரவாகப் பறவை விளங்கும், வாள்போல
வாளைமீன்கள் பாயவும், அலைகளில் நீர் நாய்கள் உருள்வன கழைக்கூத்
தரோபோலத் தோன்றும். தேனைகள் சந்திப்பன அதைப் புகழ்வதுபோல
த்தோன்றும். அப்படிப்பட்ட தடாகத்தைக்கண்டு அன்னம் தவளைமுதலிய
வற்றை நோக்கிக்கொண்டே தன்னைவிட்டுநீங்கிய சானகியார் பிரிவைக்குறித்
துள்ளங் கலங்கி யுணர்வொழியத் தன்னந்தனியே இரகுநாயகன் புலம்பலாயி
னன்,

சக்கரவாகப் பட்சிகளே! அன்னங்களே! என்னைநீங்கிச்சிறிதும் தரியாத
சீதை நடந்தாள் இல்லாவிட்டால் தளர்ந்துமோதும்தகுதியோ! வருந்துகின்ற
உயிருக் கிரங்கினல் இசையல்லவோ! பிரியாதிருந்த எனக்கொரு சொல்லைச்
சொன்னல் சண்டை வீளையுமோ! என்றும்; தாமனாமலரும் குவளைமலரும
புன்னைனெரியும் நெஞ்சினை வருத்தாமலிருக்க மருந்தேபோலுதவப்பட்ட

பொய்கையே! கண்ணு முகமும் காட்டுகின்றனையே! வடிவத்தையு மொருகா லத்திற் காட்டாயோ! அப்படி கூடுமாயின் அதை யுதவாமலேஉலோபப்பட்ட வரும் உய்ந்தார்களோ! என்றும், குவளை கெணடை ஆம்பல் அலை காமனை வள்ளை வரால் ஆமை இவைகள் முறையே கண்ணும் வாயும் முகமும் காதும் கணைக்காலும் புறவடியுமாத்தோன்ற அவைகளை நோக்கி மருண்டேபோன்ற சா னகியார்திருவுருவத்தை உங்களிற் கண்டேன், கொடியவரக்கன் கைக்கொண்டு செல்கையில அவனுண்டுபோனானே அபடோதுரிதியனவாவறியேனென்றும், மயிலே! அச்சானகியினுடையசாயலுக்கொதுங்கியுள்ளழிந்து கூடாதிங்கே, திரி வதுபோல நீயுமனம் குளிர்ந்தாயோ எனறும், அபபடி நீதெடினுலும நீ அவளை நனறாக வறிவாய் மனமகிழ்ச்சி யுடனுடா தினறாய் ஆயிரங்கணனையுடைய உனக்கொளிக்கும் வகையுமுணடோ வென்றும, நாங்களடையவிலலையென்னு மொரு சொலலேயனு மறிந்த வண்ணம் சொல்லுங்கோள். அன்னப் பெடை களே! சிறிதும் பேசப்படாதா! அவருக்கெதாவது பிழையைச் செய்தனை டோ! கடை நீங்களழிபச் செய்தாரோ கடினலாதவா அவருடன் பகைகொண டிருக்கின்றீர்களே! உங்களைப பார்த்து மகிழுமென்னையும கோபிபபீரோ வென்றும், வண்டுகள் இனசபாடுமை காமனையே! என்பாலுமில்லை, அப்பா லு மிருப்பாரு மல்லர், விருபப மென்பாலுள்ள உன்னிடத்தே இலலையென்றுல் ஒளிக்கின்றவரோடு முறவணடாமோ வென்றும; ஆமபற்கயலே இருக்கும சுங்கிடையே! அவள் கனிவாயைப்போலத் தோன்றுகின்றுயே; அவ்வாய் தரும் அமுதையும சொல்லியுத்தருவாயோவென்றும, வள்ளையே! நீ சானகியா ரது காதெயல்லது வேறுவணமையாக மாட்டாய், நீ பொன்னுலாகிய குண்டல மும்குழையும்முத்தினுலாகியதோடும விலக்கிவருதிருக்கின்றுயே, நீசொல்லாம விருந்தே நின்றுமன வருத்தஞ் செய்யலாமோ வெனறும, செம்பஞ் சூட்டிய காலாகிய பவளமபூத்த பதுமவிழியையுடைய சானகியே! நீ என்மனத்தாமரை வீட்டி லெப்போதும வாசஞ்செய்து கொண்டிருப்பவளாய்; மேகம்போன்ற மலாபுனைந்த கூநதலையுடைய அசபானகி கணமேனிபோலும அழகிய குவளை மலரே! நஞ்சு பூத்தாற்போலும விளங்குகின்றுய், என்னைக்கண்டுவருந்துவை யோ என்றும் பெருமூச்செறிந்து நிற்கும இரகுநாயகன் இவ்வணணம புலமபி வருந்திக்கொண்டே ஒருபுறத்தமைகளிரு தலைபிடிக்குவாயில நீரையளிப்பதுபார் த்துக்கொணடிருந்தான். இவ்வாறு நின்றசிராபிராளை அன்பென்னுமருமை யானஆபரணம பூணடஇளையபெருமாள் இறைவனை பொழுதுபட்டது;நீர் இத் தடாகத்தி னீராடி நுமதுசைசையென நீண்ட கள்ளமாமாயபபிராளை வணங்க வேண்டுமெ யென்றான். அதைககேட்ட இரகுநாயகனை அரிதாக நடந்து சென்று அத்தீர்த்தஞ்செய்த மாதவத்தினல் மதயாளனை நாண நீராடினான்; அவ்வாறு நீராட்ட யாந்தான் சானகியாளை பிரிந்த வருத்தத்தாலாகிய தீயால் உலையிற் காய்ந்தஇரும்பை நீரிலே தோய்த்தாற்போலும் விளங்கிற்று. இவ்வாறு அத்தீர்த்தத்தில் நீராடி அன்னமாய்அருமறையைப் பிரமனுக்குபதே சித்த ஆயிரமோலி ஆராவமுதனை வணங்கி, அவன் சேவடிசென்னியிற் சூடி முற்றத்துறந்த முனிவர்கூட்டஞ்சேர்ந்துள்ள ஓர் சோலையினிடத்தேஎழுந்து

வினுன், உடனே பொழுதும் பட்டது. அந்திவரவே சானகியார் பிரிவை யெண்ணி வருந்தும் இரகுநாயகன் சிந்தித்துத் தேயும்பொழுது வானிலுள்ள சந்திரனும் சூரியனேபோல இருந்தது. இராத்திரி காலமாகவே மலர்களொடுங்கின, சோலையில் பறவைகளடங்கின, வண்டுகளும் பாடலொடுங்கின, கிளிகள் இலையிலொடுங்கின, மயில்கள் நடத்தை யொழிந்தன, குயில்கள் கூவுதலொழிந்தன; களிறுகள் பிளிறுத லொழிந்தன, மண்ணும் கண்ணுறங்கின. மலையும் கண்ணுறங்கின, இரவிற் பண்ணும் பாடா தொழிந்தன, பேய்களும் கண்ணுறங்கின, இரகுநாயகனே கண்ணுறங்காமலே யிருந்தான். மீண்டு மூணர்வுகைவர இரவுநீங்கியது. கமலமலர்களும்தலையெடுத்தோங்கின, கீழ்க் கடலின்கண் சூரியபகவானு முதயமானன்.யாவருந்துயர் தீர்ந்தனர். இவ்வாறு காலையாகவே கடல்போன்ற சோலைகளையும் மலைதழுவும் காடுகளையும் கடந்து இரகுவீரனும் இளைய பெருமானுமை அழுத மொழியையுடைய சானகியாளைத் தேடித் திரிவாராயினர்.

பம்பைப் படலம்

முற்றிற்று.

மராமரப்படலம்.

இராமலட்சுமண ரிருவரும் சவரிசொலலிய வழியேசென்று இனிய சிருங்கமலையி லேறினர். அதையறிந்த மகாராசாவும்செய்வதறியாமேஇவர்பகைவரா மென்றெண்ணி அம்மலை முழையிலோடிப் புகுந்தான். அவ்வாறு புகுந்த அம்மகாராசாவாகிய சுக்கிரீவனும் வாயு புத்திரனுகிய அனுமானை நோக்கி இதேர் வருபவர் வாலியேவலால் வருபவரா யிருக்கின்றனர்; வில்லேந்திய மலைபோல விளங்குகின்றனர். இவர்கள் வரும்காரணமோ தெரியவில்லையே என்று சொல்லிச் சுக்கிரீவமகாராசனும் தன் னருகிருந்த நீலன் மாருதி முதலான பேருடன் ஆலோசிக்கையில் அனுமான் சுக்கிரீவனை நோக்கி கானறிந்து வருகின்றேன், நீங்களிங்கிருமென்று சொல்லிவிட்டுத் தான்பிரமசரியவொழுக்கமேற்கொண்ட அந்தண ருருவங்கொண்டு ஒருமாச்செறிவி னிழலினிருந்து கொண்டு இவர்கள் மும்மைப் பெருந்தேவராகிய முதன்மைப் பொருளா மென்றுல் அவர்கள் மூவரோ, இவர்க ளிருவரன்றோ! உலகின்கணிவரை யொப்பாருமிக்காரும் யாரிருக்கின்றனர்; இவர்க்கரிய பொருள் யாது? எதனல் இவர் கிலேமையையாமறிய வல்லேம்! சிந்தையில் சிறிதுதுயரதோ வருந்துகின்றரோ னும், பிறரால் தோவடையத் தக்காரு மல்லர்; இவரோ வானவரு மல்லர், மானிட யாக்கையை யுடையராயிருக்கின்றனர்; சிந்தையிலோர் பொருடேடி வருந்துகின்றனர். தனமும் தருமமும் பெருமையு மிவரோயாம், கருமமும் பிறிதொன்றைக் கருதியேயன்று, நிலைக்குமிடத்து அருமருந் தன்னதோர் பொருளை இடையி லீங்கிளர்போலத் தோன்றுகின்றது; அதை இருபுறமும்

தேடி வருந்துகின்றனர். கோபமென்பதே யில்லாதவர், கருணையின் கடல் போல்பவர், யாவருக்கு நன்மைசெய்வதே இயற்கைக் குணமாக வுடையவர், இந்திரனும் அஞ்சு நிலைமைபடைத்தவர், கூற்றுவனு மஞ்சத்தக்க சரிதமுடை யவர், மன்மத னஞ்சும் பேரழகுகொண்ட திருவுருவ முடையவர், மறையு மஞ்சும் பராக்கிரம முடையவர். இவ்வகை யெல்லாம் பலபல வெண்ணிக் கொண்டு அவ்விருவனையும் ஏறப்பார்த்து முன் பிரிந்தானைப் பின்னுமெதிர் கண்டாற் போலும் அன்பிலை லுருகின்றவனுய்ச் சிங்கங்களும் யானைகளும் தமதுகன்றைக் கண்டாற்போலு மனமுருகுகின்றன. பேய்களும் மனம் வருந்தப் படுகின்றன; மயில்முதலிய பறவைகள் தஞ்சிறகைப் பந்தாபோ லமைத்து இவர் அழகிய மேனிமேல் வெயில் படாமற் செய்கின்றன. மே கங்களும் சிறுதிவலைதூவி இருபுறமும் நெருங்கி வருகின்றன. எரிபோற் சுடு கின்ற கற்களும் இவர் வரவை நோக்கிக்கள்ளையுடைய தாமரைமலாபோன்ற பாதந் தோயுந் தோறும் குழைந்து தோன்றுகின்றன.

இவர்கள் போமிடமெல்லாம் புல்லொடு மரமெல்லாம் சாய்ந்து தொழு வதுபோலத் தோன்ற நின்றன. இவர்களோ தருமமே வடிவானவர், இதுவு மல்லாமல் இவர்கள் பிறவிப்பிணி நீக்கி என்றும் அழியாத முத்தி நிலையை யளிப்பதற்கு இடமானவராய்த் தோன்றுகின்றனரே! எனக்குள்ளம் இன்று நெக்கு நெக்கு நீராய்க்கசிந்துருகுகின்றதே! அன்பிற்கோர் அளவு தோன்ற மலிருக்கின்றதே, இனியாவ தறியேன் என்றே அனுமான் எண்ணிக் கொண் டிருக்கையில் இராம லட்சுமணரிருவரும் நெருங்கிவிட, அனுமானும் தான் அவர் முன்னே நெருங்கிச் சென்று உங்கள் வரவே நல்வரவாகவென இறைவ னும் அனுமானைப்பார்த்து நீயார்? நீயெங்கே வழிதப்பிப் போனாய் என்றான். அதைக்கேட்ட அனுமான் யான் காற்றின் மகன், அஞ்சனை வயிற்றிற் பிறந் தேன், என்பேரோ அனுமானென்பர். இம்மலையில் வசித்திருப்பவர் சுக்கிரீவ மகாராசா, அவர்சூரியபகவான துகுமாரர், நான் அவருக்குக் குற்றேவல் செய் வேன். இறைவர்களே! உம் வரவுநோக்கி இவ்வளவுதூரம் காணவந்தேன்; அவர்கட்டளையால் பிறந்தசெய்தியிதுதானென்றான். அதைச்திருச்செவி சா த்தியருளியசிராமன் இளையவனைப்பார்த்து இவனைப்போலுஞ் செம்மையுடை யார் பிறரிலர்? ஆற்றலு நிறைவும் கல்வியமைதியும் அறிவும் வேறுபாடாகவே தோன்றுது; இவனறியாத கலைகளும் வேதங்களுமிலவே; அப்படிப்பட்ட தன் மையுடையானென்பது இவன் காட்சியிலேலே விளங்குகின்றது; இவனைப் பிர மனென்னலாமோ! இந்திர னென்னலாமோ! இவன் பிரமசாரியாக வுருக் கொண்டிருக்கின்றா னென்று நினைக்கின்றேயோ! இவ்வுலகத்திற் குரையாணி யென்றே சொல்லவேண்டும். இவன்பெருமையும்ஆற்றலும் முற்றுமறிந்தேன். இதையெல்லாம் பின்னே யறியலாமென்றுசொல்லிவிட்டு அனுமானைநோக்கி நீ சொன்ன கவிக்குலத்தரசு னெங்கிருக்கின்றான்? காங்கள் அவனைக்காண வே ண்டு மென்னும் போராதர வுடையோம்; இங்கே அவனைக்காணவருகின்ற எங் களுக்குத் 'தேடப்போன மருந்து குறுக்கே யகப்பட்டாற்போல' நேரிட்டதே; அவனிருக்குமிடத்தைக் காட்டவேண்டு மென்று சொல்லியருளினான். அதற்

கனுமான் இவ்வுலகத்தில்உம்மையொப்பார் யாவரிருக்கின்றனர், அவனைக்காண் பதற்கே யனுகினீர்கள். அவனுதீமையுனைத்துந்தீர்ந்துபெருஞ் செல்வமுடை யனனன். அந்தச் சூரியபகவான் மகனுகிய மகாராசா இந்திரகுமாரனுகிய வா லியோ அன்பில்லாமற்பகைத்ததனல் துன்பத்திற்கொருவனுய் வருந்தினன்னெ மும் இவ்விருசிகசிருங்கமலையி லிருக்கின்றனன். அவனுவாழ்வடையவேவழு தருளினீர்கள். இனிச்சொல்லவேண்டியதென்ன? இருக்கின்றது, கடல்புடைசூ ழ்ந்த உலகமுழுதும் உவந்தனவற்றை யுதவி லேள்விமுயன்று செய்து மற்ற தொலலற நிரம்பவுஞ் செய்யத்தவறினும அபயதானங்கொடுத்தார்பெறும்பெறு மிகச் சிறந்ததெனப் பெரியோர் கூறுவர். எங்களைக் காக்க வேண்டுமென வேண்டியதும் எளிதோ, உங்களைப்புகலிட மென்றடைந்த எங்களுக்கினனு முறுதி வேறுண்டோ? நான் சென்றடைந்தால தேவரீர் இன்னனென்றுனை க்க வேண்டுமாதலால் உம்மை எமதரசனுக்கின்னனென்றுனைக்க விளக்க வே ண்டுகின்றேனென்று கேட்க; இளையபெருமாள் சொல்லின்றித் தங்கள் வரலா ற்றையும் சொல்லலாயினன்.

சூரியன் குலத்துத் தோன்றி யுலகமுழுதாண்ட அயோத்தி நகரத்துத் தயரதமகாராசன் செய்த தவமேள்வியிற் பிறந்த ஆண்டகை இப்பெருமான், இவன் தன் சிற்றன்னை யேவலால் இக்காலை யடைந்தனன், இவன் பெயரோ இரகுராம னென்பர், இவன் தன்னரசுரிமை முழுதுந்தம்பிக்களித்தானுயினும இவனுக்கேவல்செய்யுங்கடமை பூண்டொழுகாநிற்பவன்யானென்றுஇராகவன் திருவவதாரமுதலிராவணன்கைக்கொண்டுசானகியைக்கொடு சென்றவனை யிலு முள்ளவரலாற்றை முழுது மொழியாம லெடுத்துஇளைய பெருமாள் சொ ல்ல, அனுமான் கேட்டே அரிதமன் மலரடியிற்ருழ்ந்தான். அதைக்கண்ட இராகவன் நீ தகாத காரியம செய்வதற்கமையுமோ வென்ன, அனுமானும்யா னும் அவ்வனசரத்தி லொருவனேயென்றதன் றிமின்னுருக்கொண்டதூலோர் வியப்பெய்த வேதமாகிய ஆப்தகலைகள் பின்னுருக்கொண்ட தென்னும பெரு மையாம் பொருளுந் தாழ்வெய்தப் பொன்னுருக் கொண்ட மாமேரு தன்றே ளினைக்கு முவமமாகாத தன் மோட்டிருக் கொண்டு அனுமானிற்க, வேத முதலிய ஆப்தகலைகளைமுன்னேபரிதியங் கடவுளறிவிக்க அறிந்த அனுமானது மோட்டிருவைக்கண்டு தன் தம்பியை நோக்கிக் கீழ்பட்டனவ்வகளை யெலலா நீக்கிக் கிளரப படாதாகி யென்றும் மறைகளாலும ஞானங்களாலும் குறிக்கப படாத பெரும்பதமே இக்குரங்குருவென் றுணரவேண்டுமு, காமோ கல்லன வாகிய நிமித்தமும பெற்றேம். இவனையும துணையாகப் பெற்றேம், துன்ப மென்பதினியறக்களைந்தோம், இவனைப் போன்றவன் அம்மகா ராசாவுக்குக் குற்றேவல்செய்வானுனல் அவனிலைமைசொல்லும்தன்மையோ! என்றகமிக மகிழ்ந்து அழகிய முகமலர்ந்துநின்ற அவ்விருவனையும்பொருந்தநோக்கி அனு மான் நான்சென்றவனையிங்கே கொணர்கின்றேன், தேவரீர் இங்ஙனே யிருமி னென்று விடைபெற்றுச் சுக்கிரீவமகாராசனிருந்த சூழலைவந்தடைந்தான்.

அவ்வாறுவினைந்தடைந்தஅனுமான்யானுமுன்குலமும் இவ்வுலகமுமுய் கதோமென்று இரகுவீரன் வரலாற்றை முழுதுமெடுத்துச் சொல்லி வானிகால

னத்தேடிக்கொண்டேனென்றான். அவ்விராமன் மானுகர் தாழுமாழினக்கப் பெருந்தகையே யல்லது மானிடனென்று துணியததக்கதோ! நீயவனைக் காணவா வென்றவனை யழைத்துக்கொண்டு இரகுநாயகன் சந்நிதியை நோக்கி யழைத்து வந்தான். அவ்வாறழைத்துவர அவன் இராகவனது திருமேனியைக் கண்டு உலகஞ் செய்த பாக்கியப்பயனே இப்படி இரண்டுருக்கொண்டு சமைந்ததென்றே சொல்லிப் பின்னுமிவரோ மானுடரல்லர்; மும்மைப்பெருந் தேவரோ இப்படியுருக்கொண்டு வந்தனரென்று துணிந்து காதல் வெள்ளம் புரண்டு மீப்பாயக்கண்ணினை களிப்பக்கண்டு அவனைக் குறுகினின்றார். இரகு. நாயகனும் அம்மகாராசாவைக் கையை நீட்டி அங்ஙனே யிருவென்று சொல்ல, அவனு மங்கிருந்தான். இதனால் அரக்கனென்னும் இருட்பகையைக் கடியுங் காலத்தின் குறிப்பேபோலவும் சூரியனும் சந்திரனும கூடும் கூட்டம போலவும் அரக்கனென்னும் தீயவினையை வேரின்வாங்கக் கேட்டறியுங் கல்வியுடன் ஞானமுங் கிடைத்தது போலவும் விளங்கினர்.

அச்சமயத்தில் சுக்கிரீவ மகாராசா இரகுநாயகனைநோக்கினன்னைப்பார்க் கிலும் தீவினையைதிரநோற்றார் யாவர்? உலகுக்கெல்லா நாயகமாகியஉம்மை விதியே கூட்டுமாயின் யானடையத் தக்கது யாது! என்றான்; குற்றமற்ற தவத்தின் முதிர்ந்த சவரிநின்நல்லொழுக்கத்தையும நீஇம்மலையி லிருப்பதையு மெடுத்துச் சொன்னாள். யாமோ எங்கள் துயர நீங்கவே யுன்னை நாடி வந்தோம்! என்ற இரகுநாயகனைச் சுக்கிரீவ மகாராசன் கைகூப்பி வணங்கி எனக்கு முன்வந்த வாலி என்னை இருணிலப்புறத்தின்காறும் உலகமெங்கும் தொடர நான் வினைந்துஇம்மலையில் அவனேற மாட்டானென்றே இம்மலையே புகலிடமாக வெண்ணி யுயிர் பிழைத்திருந்தேன்; உம்மை புகலிடமாக வடைந்தேன் என்னைக்காப்பது தருமமென்றான். அவ்வாறு சொல்லிய மகாராசாவை இராகவனு மிரங்கி நோக்கி உனக்குள்ளஇன்பத்துன்பங்களெல்லா மெனக்குரியனவென்றே எண்ணவேண்டுமம, இனிச்சொல்ல யாதிருக்கின்றது, இன்றுமுதல் உனக்குப் பகைவராவார் என் பகைவரோ! கொடியவரோயா யினும் உன்னை யடைந்தவரோ என்னை யடைந்தவர், உன் சுற்றமென் சுற்றம்; நீயே யென்னுருயிர்த் தோழ னென்றான். இவ்வாறுசொல்லவே குரக்குச்சேனை யாரவாரித்தது, அனுமான் மேனி புளகம போர்த்தது. தேவர்கள் மலர்மாரி பொழிந்தனர். அதைக்கண்ட அனுமானும் நீயும நின்னுருயிர்த் தோழனும் வாழியென்றுகூறி இதுஎன்றும் நிலைபெற்றிருக்கவேண்டு மென்றான்; அங்ஙனமே யாகுகவென்று இரகுநாயகனும் எழுந்தருளத் தம்பியு மகாராசாவும் மற்ற வனசர வீரரும் தொடர்ந்து சென்றனர். இவ்வாறு தொடர்ந்து செல்லச் சந்தன மரங்களும் அகின் மரங்களுமடர்ந்து பளிக்கறை யளாவித் தெய்வமகளிர் ஊசலாடு மிடங்களையெல்லாம் பார்த்துக்கொண்டே ஒரு சோலையை யடைந்தனர்.

அச்சோலையை யடைந்தபின்பு மகாராசாவும் சீராமபிரானு மொருவ ரோ டொருவர் பூவணையி லுட்கார்ந்துகொண்டு அளவளாவிக் காய் கனி யிலை முதலியவற்றை விருந்துண்ண வானரங்கள் கொணர அவற்றைச் சீராம

பிரான் மஞ்சனமாடி மிசைந்து மகாராசாவை நோக்கி நின்னில்லறத்திற்குரிய நின்மனைவியை என்போலு நீயும் பிரிந்திருக்கின்றனை யன்றே வென்ன, அத் தருணத்தே மாருதி யெழுந்து நின்றுவாய்பொத்திக் கைகட்டிக்கொண்டு வின் அஞ்சலி முகிழ்த்து யான் தேவரீர் சந்நிதானத்திற்கொருவிண்ணப்பஞ்செய்து கொள்ளப் போகிறேனென்று பின்வருமாறு சொல்லத் தொடங்கினன். இறை வனே! அதோதெரிகின்ற கிட்கிந்தை மலையின்கண் சிவபெருமானருள் பெற் றுள்ளனுய் வரம்பில்லாத வாற்றல் படைத்த வாலியென்பவ னொருவனுண்டு, அவன் தேவர்கள் பொருட்டொரு புறத்தே நின்றுமந்தரகிரியிட்டுப்பாற்கடலை கடைந்து வாசுகி வருந்தமுன்னுள் அமுதங் கொடுத்தவன். பஞ்ச பூதங்களில் ஆகாய மொழிந்தமற்ற நான்கு பூதங்களின் வல்லமை பெற்றுள்ளவன். சக் கரவாளகிரியினின்றும் இங்கே வந்துபாயும் போராற்றலும் படைத்தவன். தன் னெதிர்நின்று யார்போர்செய்தாலும் அவர்கள் வாத்திலும் உரத்திலும் பாதி யடையத்தக்க பெருவரம் பெற்றுள்ளவன். அவன் முன்னே காற்றும் வேக மாகவேகடவாது, அவன் மார்பிற்சண்முகங்கொண்ட சதுரப்பெருமான்வேற் படையுநுழையாதுஅவனெட்டுத்திசைகளையுந் தினந்தோறும்திரிந்துசென்று சிவபூசை செய்து வருபவன். இவன் வால் செல்லாத விடத்திலே தான் இரா வணன் செங்கோல் செல்லும்; இவன் பெயர்ந்து நடந்தால் மேருமலை முத லாகிய மலைகள் எல்லாம் பெயர்ந்து செல்லும். இவன்தோள் வீச்சினுல் மேகமும் வானமும் கதிர்களும் நாகங்களும் தூர்ந்துபோம். ஆதிவராகம் வா சுகி யென்பவற்றைப்போல வலிமைபெற்றவன், தூணிற்றோன்றியஇரணியனை மார்பிடந்த அழகிய சிங்கப் பெருமானும் இவன்முன்னே நின்று போர்செய்ய வல்லானல்லன். உலகமுழுதும் அனந்தன் தன்சிரங்கொண்டு தாங்குவான்; அதனை இவனே நடந்தே தாங்குவான். கடல் உளைப்பதும் காற்றுச் சலிப்ப தும் பன்னிரு சூரியர் தேர் ஆகாயத்திற் செல்வதும் தொடர்ந்து அவனெற்று வதனுலல்லது வேறொன்றுலாவதன்று, எழுபத்திரண்டு வெள்ளம் வானரங் களுக்கும் அரசனுக விருக்கின்றனன். அவன் சார்விடத்தில் தம்மிறுதியை நோக்கி மழையு மடியாது, சிங்கங்களும் தம்முழையி லிருந்துகொண்டு கர்ச் சிக்காது, காற்றும சலிக்காது, இவன் வாலினுற் பிணித்து இராவணனைக் கொணர்ந்த காலத்தில் அவன் உதிரஞ் சிந்தாதவெற்றிடமே கிடையாது, இவ் வண்ணமான அக்கொடியவன் இந்திரனுக்கு மகனுகத் தோன்றினவன்; சந் திரனைப் போலும் வெண்ணிறம் பெற்றுள்ளவன். கூற்றுவனு மஞ்சத்தக்க ஆணையுடையவன், இச்சுக்கிரீவ மகாராசாவுக்கு ஓர்தாய் வயிற்றிலே முன் னேதோன்றிய முற்றேரூன்றல், அவனை எங்களுக்கரசனுக இம்மகாராசா இள வரசாக விருந்து அரசாண்டு வருங்காலத்தில் மாயாவியென்னு மரக்க னொரு வன் இவனுடன் போர்செய்ய வந்தான். அவனை யெதிர்ந்து மார்பினைோ மோத அவன் ஓர்மலையின் பிலத்துவாரம் புகுந்தோடினன். அவனை நான் கொணர்ந்து வினைவில் வருகிறேன், அதுவனையிலும் நீ வானரங்களைக் காத் திருவென்று தம்பிக்குக் கட்டளையிட்டுக்கோபத்துடன் சென்று தான். அவ னுடன் ஒன்றனையாண்டு போர்செய்து வெற்றியைநாடி யிருக்கையில் இம்

மகாராசாவும் அவன் சோகத்தைநோக்கி மனமுருகியழுது கின்றான். அப்படி வருந்தி கின்ற இம்மகாராசாவை காங்களைழைத்துவந்து அரசு செய்வாயென்று வேண்டினோம், இவன் அவனைக் கொன்றுகீனைக் கொல்லவேண்டும்; அவ்வா றியையா விட்டால் பாவ முடிவேனென்று தானு மப்பிலத்தைநாடிச் சென் றான். இவனை நாங்கள் எங்களா லானவரையிலும தடுத்து அவன் வருத்தந் தணியாமல் ஒருவாறிணைந்து எங்கள் அரசை யாங்கள் கொடுக்க வராண்டு வந்தான். நாங்களோ ஒருவேளை அம்மாயாவி அப்பிலத்தின் வழியே வந்து எங்களைக் கொன்று விடுவானென்றே அநேகம் குன்றுகளைபடுக்கி அப்பிலத் துவாரத்தை யடைத்துச் சேமித்தே இவனைக் கிட்கிந்தைக் கழைத்துவந் விட்டோம். அவ்வாலியோ மாயாவியைக் கொன்றுகளைந்து வினைந்து அப் பிலத்துவாரம் குன்றுகளடுக்கிச் சேமித்திருந்தமைநோக்கி இளையோன்செய்த காரிய நன்றுயிருக்கின்றதென்று வால் வினைத்தாங்கி யடிக்க அக்குன்றுக ளெல்லாம் தகர்ந்து பொடிப்பொடியாயின. பின்னை வாலி கிட்கிந்தையிலவர வே, இம்மகாராசா அவனை யெதிர்சென்று வணங்கி கின்வரவிலாமை நோக்கி நீசென்றவழிப் படாத கினைத்தென், என்னை இவர்கள் தடுத்து நீர்வருமளவும் இவ்வராண்டு வரவேண்டினர்; உம்மாணையை மேற்கொள்ளாத செய்தி யாலாகிய என்குற்றம் பொறுக்கவேணுமென்றுவேண்டிக்கொண்டான். அச் சொற்கிரங்காமல இம்மகாராசாவைப் பற்றிக் கடலெக்கடைந்த தன்தோளால் உடலையும் கடையத்தொடங்கவே இவன் இரண்டாடி எழுகடலையுங்கடந்து அண்டச்சுவரையு மடைந்து அங்கையும் அவன் தொடர்ந்து சென்றமையால் அங்கேகின்றும் பொருபடைநக்கடலைத் தாவிநானென்றுசொலல, இரகுநாயகனும் அன்றுதானே இவன் அவ்வாலியிலை தாவியோடக் கற்றுக்கொண்டானே மென்றுசொல்லி அவன் செய்தமையைப் பின்னுஞ் சொல்ல வேண்டுமென்ன மாருதி சொல்லத்தொடங்கினன்.

அபரபெருமடுநக் கடலிற்புகுந்த காலத்திற் சூரியனும் சென்றடையாத அச்சக்கரவாளகிரியி னுச்சிக்கு மத்தப்பக்கத்தை யடைந்து வினைவாகப்பற்றி யஞ்சாமல் மிக்க கோபங்கொண்டு தன் வலிய கையால் எற்றும்படி எழுவே, இவன் தப்பித்துக்கொண்டு ஒருவழியாக வகன்றனன். எம்பெருமானே! அவன்பலலைக் கடிப்பானையின் யமனுக்கு மோரணங்கிடையாது; அவனுக்கு இருசிகமுனிவன் சாபமிருப்பதனல் இம்மலையைவந்தடைந்தான். இதுகிடக்க; இம்மகாராசாவினுடைய மகிமையையும் கவர்ந்து கொண்டிருக்கிறன். இம் மை மறுமையென்னுமிரண்டையுந் துறந்திவ னிருக்கின்றனன். இதுதானடந்த செய்தியென்று சொல்லி முடித்தான். இவ்வாறு மாருதி சொல்லி முடித்த வுடனே கோதண்டபாணியாகிய இரகுநாயகன் கோபங்கொண்டு ஒருவன் தன்னிலையோன் தாரம் வெளவினனென்றசொல் தரியாமல் ஈரேழுலகமும் ஒருசேரவந்து அவனுயிர்க் குதவிசெய்தபோதிலும் என்வில்லினின்றும்பொழி கின்ற பாணத்தாற்கொன்று அரசுடன் இவன்தாரத்தையு மின்றேதருகுறன், என மாருதியை நோக்கி அவனிருக்குமிடங் காட்டென்றனன். அதைக்கேட்ட மகாராசா பேருவகைக்கடலின் பெருந்தினையிப்ப இதுவரையிலும் அழுந்தி

யிருந்த தண்பக்கடற் கப்புறங்கணடானுய் இனி வாலி வலியிறந்துபட்டானே யெனத்துணிந்தும் இவ்வீரனுக்கு யாம் நினைப்பதொன்றுண்டென மாருதியே முதலான கல்வியு நீதியுஞ் சூழ்ச்சியும் கற்றுத் துறைபோயமந்திரிமானை வேறழைத்துச்சென்று சொலல அதற்குமாருதி சொல்வானுயினன்.

மகாராசாவே! நாலுன்னுள்ளத்தை நன்முயறிந்து கொண்டேன். அவ்வாலியைக் கொல்லும் போராற்றல இவரிடத்தில இலலையெனவே துணிந்தனை, நான் சொல்லப்போகிற விஷயங்களைக் கடைப்பிடி; கையிலும் பாதங்களிலும் சங்குசக்கரக் குறிகளிருக்கின்றன, எங்கும் இவ்வகைப்பட்ட இலக்கணங்கள் யார்க்குமே கிடையாது, அறத்தை நிறுத்துதற் பொருட்டே அறவாழியாதனனுகிய இறைவன் ஆதியஞ்சோதியுருவை யங்குவைத்து இங்குத் தயாதன் மகனுகத் தோன்றினன்; திரிபுரங்களைத் தீயெழக்கோபித்துக் காலனைக காலாற் கடிந்த கண்ணுதற்பெருமான் கரத்தேதபிடித்த பிறைகத்தை இவனெடிப்பதானுல் அம்மாயவனையல்லது பிறரால ஒடிக்கும் வன்மையுண்டோ! எனனைப்பெற்ற வாயுபகவான் இவ்வுலகங்களனைத்தையுமீன்ற சொந்தாமனைமலிருக்கும் கான்முகப்பெருமானை யுந்தியினின்ற ஆதிபகவனுக்கு அடிமைத்தொழில்செய்யும செய்தவமெய்தப் போகின்றனை! அதுவே உன்னைப்பெற்ற எனக்கும் பெறலருங்கதியை யடைவிக்கும்; இன்னும அதற்கேதுவுமுண்டு சொல்கின்றேன் கேள்! அவன் தண்பந்தோன்றியபோ துடன்றோன்றுவானை, அப்பெருந்தகையை யானறியுமாறெவ்வண்ணம் பென்றேன், அதற்கவன் அன்பே சான்றுகுமென்றான்; எனக்கிங்கு யாக்கையில் என்புதோன்றில், நெக்குப்பட்டுருகாநின்றன, அவன் பெருவலியைப் பரிகூறித்தரியவேண்டுமென்றால் ஒருஉபாயஞ்சொல்கினறேன்; கேள்! அதோபார்! மாமரங்கள் ஏழுகாம்செல்லும் வழியில் மாறிநிற்கின்றன, அவற்றிலொன்றில் இவன்பானமெய்வாலுயின் அறியலாமென்றான். மகாராசாவும் இதுவே சரியானபரீக்ஷையென்று தன்றோள்களால் அம்மாருதியைத தழுவிக்கொண்டு சாமனிடத்திலனைடந்து யான் செப்பவேண்டுவ தொன்றுண்டென்றான். சாமனும் அதென்னசொல்லவேண்டு மென்றான். நாம இவ்வழியே செலலவேண்டுமென்று அச்சாமபிரானை இளையவனே டனைத்துக்கொண்டு, ஆகாயமளாவிய அம்மராமரங்களினருகேசென்று இவற்றினைன்றில நின்னம்பு செலலவேணடும், சென்றால் என்மனத்திடர் போமென்றான். இவ்வாறு சுக்கிரீவன சொல்ல, இரகுநாயகன் கேட்டுப் புன்சிரிபபுக்கொண்டு இவணண்ணிய வெண்ணமதிந்து தன்கோதண்டத்தில் நாணேற்றி அவற்றினருகேசென்று பாணத்தைத் தூரக்கவெண்ணி வில்லைக்குணத்தொனிசெய்தான். அவ்வோசை கேட்ட மாத்திரத்தில் திக்கயங்களுமயங்கின, திசைகளும் திகைத்தன, பிரமலோகத்தும்போய்ச் சலிப்பறக்கேட்டது. இவ்வாறு தூரத்தேயானுல் பின்பக்கத்தே நின்றவருக்குரைத்தது சொல்லவேண்டுமோ! சீராமபிரான் வில்லைக்குணத்தொனி செய்தவுடன் தேவர்களும் பயந்தோடினர். கற்பாந்தகாலமென்று நினைத்தனர். தன்பாலண்புள்ள தம்பியோ பக்கத்திருந்தான். மற்றையோர் பட்டபாடு சொல்லவேண்டுமானுல் அவனைப் பழிவந்துபுணருமே. இவ்

வாறிருக்க அனுமான்முதலியோர் பாணமெய்தலிப்பாக்கலாமென்றறிது வந் தெய்திச் சீராமபிரானைப் புகழச் சீராமபிரானும் நாணினை முறையாக வாங்கி வில்லினின்றும் பாணத்தையெய்தான். அவ்வாறுவிடவே அதனழுமாமாமாங்க ளையு முருவிக் கீழுலகமேமெழுனப்படும் அவற்றை மூடுருவிச்சென்று பின்னே மெழுனப்படும் கணக்குள்ள பொருளில்லாமையால மீண்டது; ஏழுகண்ட பின்னுருவு மின்னு மொழிவதுமன்று, ஏழுகடலும் மேலேழுலகமும் ஏழுமலை களும் ஏழுமுனிவரும் ஏழுகுதிரையும் ஏழுமாதரும நடுக்கமுற்று அங்கே ஏமெழன்பதுதான் இக்கணக்கிலட்சியமோ வென்றிருந்தினர். அவ்வாறுயினும் அறத்தினுக் காருயிர்த்துணைவ னிராமனெனபதை யெனனி யாவரு மனுகி யிருந்தனர். சுக்கிரீவனே அழகிய சொதாமரை மலர்போன்ற சேவடியை முடிமேற்புனைந்து இனைவ சொலலலாயினன.

உலகமுழுதுதவிய இரகுநாயகன் நீயனைவபரும் வானமுமற்று மாகாதின் றனை, மலர்மேல வசிக்கும பிரமனு நீயே! கடவுளுமே நீ! அக்கடவிற் கண்வ ளரும தனைடாமனைக் கருனாயிறு நீயே! யாங்களசெய்த தீவினை வேருடன் களையுமேதவு நீயே என்னும்படி எழுந்தருளினை யல்லது வேறில்லை; எனக் கருணையான பொருளொன்றுமேயிலலை, எனக்கெல்லாமெளிதே! யான் செய்துகொண்ட நலவினைப்பயனை தேவரினை என்பாற் கூட்டிவிட்டது; தா யைப்போன்ற உன்னடியருக் கடியவனுகத்திரிவேன்; அந்த அறவாழியந்தண னை நீயென்று வணங்கினை. அங்கிருந்த வானரமெல்லாம் ஆடியும் பாடியு மங்கு மிங்குங் கலந்தோடியு மகிழ்ச்சி யென்னும் கனையிலாக்கடலி லாழ்ந்து பரவசப்பட்டு வாலி காலனைத் தேடிக்கொண்டோமென்று அதுவனையிலும் வாடியிருந்த தோள்களெல்லாம அவாகட்கு வளர்ந்தன. பின்னை அண்டமும் அகிலமும முழுதும் அன்றனவில் முன்னுளில வொருநீருகிப் பசையற்றுவா னத்தொடுவதாக விருக்கின்றதனறு சொல்ல எற்புடம்பு அம்மலையின்மேல் மலையென இருக்கக்கண்டு இது எமனது எருமைக்கடாவாகனமோ! தினைசக்க ளிறிறங்து கிடக்கின்றதோ! மகாக்கடல எனபுபட வுலர்ந்ததோவென்று ஐய முற்று அன்பிற் சிறந்தானை எனக்கிதைத்தெரியச் சொல்ல வேண்டுமென்று இரகுநாயகன் கேட்கச் சுக்கிரீவன் சொலலலாயினன்.

மராமரப் படலம்
முற்றிறறு.

துந்துபிப் படலம்.

இது துந்துபி யென்னும் பெயரையுடைய தானவனுடம்பு, அவனை வானிலே செல்லுகின்ற சந்திரனைத்தொட நிமிர்ந்தெழுந்த தந்தங்களை யுடை யவன்; மந்தரகிரியெனப் பெருங்கடலைச் சிதறச்செய்து, கருங்கிறத்துக் கள்ள மாமாயனை வெண்டிப் போருக்கழைத்தான். பொருவரிய அக்காரவைக்கடிந்த கருமுகிற்சோதி அவன் கண்முன்னேதோன்றிக் கங்கையைச் சடையிற்கரந்த கண்ணுதற் பெருமானே உம்போல்வார் பெருவலியை யடர்த்தழிக்க வல்லா னென்றான். அவ்வாறு சொன்னதைக்கேட்ட அத்துந்துபியும் திருமார்புகள்

கொழுநனையகன்று கைலைமலையை யடைந்து அமைலையைத் தன் காதங் களாற் பெயர்த்தெடுத்தான்; இத்தியசெய்கையைக் கண்ணுற்ற கறைமிடற் றிறைவன் அவன் முன்னேதான்றி நின்குறை யாதென்றான்; அவனும என்னுடு போர்செய்ய வேண்டுமென்றான். வீரமே வடிவங்கொண்ட உன் னுடு போர்செய்ய நானல்லாது, நீ தேவருடனே போர்செய்வது தக்க தென்று விடுக்க அவ்வாறே அவன் இந்திரலோகஞ்சென்று இந்திரனைக்கண்டு போர்செய்ய வேண்டினன். இந்திரனே நீ பலநாள் போர்செய்ய வேண்டி னால வாலியிடஞ்சென்றே போர்செய் யென்றான். அதைக்கேட்ட துந்துபி இந்திரனிடம்விடைபெற்று வனசராதிபனாகிய வாலியிருக்கும் அக்கிட்கிந்தமலை யைச் சின்ன பின்னம்படச்செய்ய எனக்கு முன்னவனாகிய வாலியும் அவ னுடு முனைந்து ஒருவனை யொருவர் முட்டியு மோதியும் போர்செய்தனர், தானவர் வானவர் முதலியவர்கள் அவர்களை நெருங்கவு மஞ்சினர். அவர் கள் செய்த போரினால் ஆகாயமுழுதும் தியெழுந்து திசைமுழுதும் பர யடைந்தது. புகை மூடிக்கொண்டதனால் உடனே முழுக்கமு மெழுந்தது. சமுத்திரமும் மலைகளும அதிர்ந்தல மெடுப்பதனால் தம்பெருமை யழிந்தன, மேகமும் வானும் கடலும் கடல்சூழ்ந்த இடமும் விழுகின்ற தூளியாலறிவ தற்கே யரிதாயிருந்தன. மயன் மகனாகிய அத்துந்துபியும் வாலியும் பதினெ மாதம் போர்செய்தனர். அபபடி அவாகள்போர்செய்யும்காலத்திலே வாலியை அவ்வரக்கனுடைய தந்த மிரண்டையும் பிடுங்கி மோத அவனை வானத்திடி போலு முரறிடுங்கி தலைமேல் மோதிய அவ்வடியால் வினாந்து சாய்ந்து தாள்கள்வருந்த வாயாகிய முழைதிறந்து உதிரவாரெழுக மலைமேல்இடியிடித் தாற்போல வானுமண்ணும் குலைய என்டிசையுஞ் செவிடுபடக் கதறினன். கவரி யிதுவென்னும்படி தன்கையை நோக்கிச் சுழற்றிவதனு லுண்டாகின்ற உதிரம்பட்டு என்டிசைக் களிறுகளும் பவள மணிந்தாற்போலத் தோன்றும படி விளங்கின. மேகங்களைக்கடந்து சூரியமண்டலமுங்கடந்து அபலுள்ள நட்சத்திர மண்டலமுங் கடந்து மேலவச்சிரமபோன்றகைபால அன்றவ னுயிரும் நீங்கிற்று, உடம்பு மிக்கதியாகிப் பின்னு முட்டி வானின்முகட் டினுமபோய் இம்மலையில் வீழ்ந்தது. இம்மலையிலதவஞ்செய்துகொண்டிருந்த இருசிகமுனிவர் இம்மலையில் வாலிவரி னவன்தலை பொடிப்பொடி யாகுகவெ னச் சாபமிட்டனர். அச்சாப மென்னுயிரைக் காத்தது என்று சொல்லி முடித் தான். இராகவபிரான் சுக்கிரீவன் சொன்னதை யெல்லாம கேட்டுத் தமபி யை நோக்கி இதையோட்டென அவனும்தன் காற்சிறுவிரலா லுந்தினன். அது சத்தியலோகஞ்சென்று மீண்டது, அப்போது வானரங்கள் எல்லாம் இடியும் நான ஆரவாரித்தன. சுக்கிரீவனும் நான் தேவரீருக் கறிவிப்ப தொன்றுண்டென்று சொல்லத் தொடங்கினன்.

துந்துபிப்படலம்
முற்றிற்று.

கலன்காண்படலம்.

இவ்விடத்தில் நாங்கள் வசித்திருக்கையில இராவணன் சானகியானை பெடுத்துக்கொண்டுபோகையில் அவ்வன்னையோ மிகத் தூரத்திலிருந்துகொண்டு துன்பத்தால் அழுதிரங்கித் தூதாலறிவிப்பா மென்றே வறியேம், தன்னுபரணங்களெல்லாம் கழற்றி கண்ணீரோடுமே அங்கிருந்தபடியே உன்னையும இளையவனையுங் கூவிக்கொண்டேயெறிந்தாள், நாங்களைதையேற்றேமென்று கொணர்ந்து கொடுத்தான். பின்பு இரகுநாயகன் செவ்வையாகத் திருவாபரணங்களையெல்லாம் கண்களாரக்கண்டு மெழுகினாலாகிய உடலை போலுருகினனென்போமோ,உயிர்க்கூற்றமாய்ப் பருகினனென்போமோ வேறென்னசால்வோம், சானகியாரணிந்திருந்த திருத்தனபாரத்து ஆபரணங்களெல்லாம் திருத்தனமேபோல் விளங்கின, கையிலணிந்த வாடாமலைகள் மைபோலவிளங்கின, அலகுவிலணியுமேகலைமுதலிய ஆபரணங்களிலலாம அதைபோலவிளங்கின, பல்கலன்பிறவு மவ்வவ்வடிவமாகவேவிளங்கின, அவ்வாபரணங்களெவ்வொன்றும் அவனுணர்வைச் சூறையாடிய தென்பேனே, உயிரைத்தான் சூறையாடியதென்பேனே, அவனுடமையைச் சுட்டதென்றே சொல்வேனே வேறென்னவென்றேதான் சொலவேன், அது மோந்திட நறுமலரேபோல விளங்கிற்று, தோளில்தாங்க உத்தரியம்போலும விளங்கிறறு, சாந்தமும ஒளியாலவிளங்குவதனால் துகில்போலவும்தோன்றியது. கலைமனிற்றுடுமணற் கேணியிற்சுரந்து நீர்பாய உடலமுழுதும் புளகம போர்த்தது, மயிர்க்குச்சென்றிந்தது; தோள்கள் வேர்த்தன வெனறே சொலவேனே வெதுமபினனென்றே சொல்வேனேவேறென்ன வென்றே சொல்வேன், விடங்கரந்தூற்றினற்போல் வெப்பமேற்கொள்ள வெகுரோடம் உணாவுழுயிர்ப்பு நீங்கி அவசமாயிருந்த அவ்விராமனைத் தன்னுடம்பிலிருக்கும மயிர் சுருக்கென்றேறத்தாங்கி யிருக்கச்செய்து அத்துயரம் கண்டுபொறுதுவங்கியகெஞ்சினனுயிரங்கி விமமி இறைவனே! இவ்வாபரணங்களை வருவித்தே தேவரீரைவருந்தச் செய்தேனென்று சொலலிவிட்டு அவ்விராவணன் சானகியானைச் சத்தியலோகத்திற் சென்றெளித்து வைத்துக்கொண்டிருந்தாலும் மயக்க மறத்தேதடி என்வலியையும் காட்டி உமது தேவியானையு முதவவலேன் கின் மனத்துயர மகலவேணுமென்று வேணடி நின்றன். பின்னும் அவன் திருமகளையேயொத்த அச்சானகியானைப்பயப்படச்செய்துவிட்ட தின்னியதோளிருபதும், தலைபத்தும தீர்விடுமொருபாணத்திற்கே இலக்காகுமோ, அஃதிருக்கட்டும, நானீரேழுலகும் போய்த்தேடி அவ்வராக்கனையுங்கொன்று தேவியையும் கொண்டுவந்து சேர்த்தே விடுகிறேன்; என்கைத்தொண்டைப்பாரும், நாங்களோ உமக்குக் குற்றேவல்செய்யும் துணைவரோம், இங்கே நிற்கும் தம்பியோ கெடலரும் வலியுள்ள மகாபுருடன், உம்மாண்மையே இதுவாமென்றால் நீர் சிறுகநோக்கி என்னபயன்? பெருமையோரானாலும் பெருமையைப்பேசார்கள். கருமமேயல்லது வேறுகண்டதுயாதிருக்கின்றது, கருமமுமீரோயல்லது தனித்து வேறென்றிருப்பதுண்டோ! உம்க்கருமையான தியாதிருக்கின்றது, நீர் பிறனைப்போலவே நின்று அவ்லமாய்

வருந்தலாமோ! பிரமனும் முருகனையின்ற உமையொருபாகத் தொருவனும் திருமாலும் கூடி யொன்றுவதோ யல்லது. தனித்தனி துணையாகக் கிடைப் பதோ! என் சிறுகுறை முடிப்பது பின்னையாகட்டும், முன்னே சானகியாளை விடுவிப்பதே கலமென்று சொல்ல இரகுநாயகனு மொருவா றுணர்வுகூடச் சொல்லலாயினன். மகாராசாவே! நானும் என் கையில் வில்லைவைத்துக் கொண்டிருக்கையிலேயே தன்னுபாணங்களைக் கழற்றிவிட்டெறிந்தானே, இப் படி கற்புடைய மாதாகளில் செய்தவர் யாவர்? என்வரவு நோக்கிச் சானகி வருந்திக் கொண்டிருக்கவும் நான் மலைகளிலும காடுகளிலும் தேடிக்கொண் டலைபவும்வில்லைச்சுமந்துகொண்டு நாணமில்லாமலே காலங்கழிக்கின்றேனே. இம்திருக்கட்டும்; வழிச்செல்வோர் யாரோனு மொருமாதை யொருவன் வருந்தினால் தனக்கிடையூறுண்டானாலும தன்னுயிரையேனும் கொடுப்பர். எங்கள் மூதாதைகளோ கடலைத்தாணடினர், கங்கையைக் கொண்டுவந தனர், பகீயு மானு மொருதடாகத்தில் நீராருந்தச் செய்தனர். நான் எனக குத் தலைவியாகநேர்ந்த சானகிதுயரத்தைத் தீர்க்காம விருக்கின்றேனே. முன னோனிலே இந்திரனைத் தன்பஞ்செய்து கொண்டிருந்த சம்பரனென்னு மசுர னைக் கொன்று அவனுக்கே கழிபெருஞ் செலவ மளித்தான்; என்னைப் பெற்ற தந்தையாகிய தசரதச் சக்காவாத்தி யென்று சொலலிக் கொள்ளு கிறார்கள். கானவனுக்கு மகளைகப்பிறந்தும் வில்லைத் தாங்கியும் பெரும்பழி தாங்கி யிருக்கின்றேன். என்தந்தை சொல்லை நிறுத்தும பொருட்டோன் மகுடந்தாங்காமலே காட்டில் வந்து விட்டேன்; சானகியைப் பகைவன் கைக்கொள்ளப் பெரும்பழியை மேற்கொண்டேன், இனி நான்பிழைத்தென்ன பலன்! என்று இவ்வாறு பலவிதமாகச் சொல்லியீடழிந்து துயரத்தால்வருந்து கின்ற சீராமபிரானைச் சுக்கிரீவன் மிகவுந் தேற்றத் தெளிகதான். அப்பால இரகுநாயகன் நீ யாற்றுவதனால் ஆறினேன், அல்லாமற் பிழைப்பேனே; எனக்கிதைப்பார்க்கிலு முறுதியுண்டோ? பூமியில் இப்பழிதீர மாய்வேன், அதுவும் உன்குறை முடிந்தல்லாமற் செய்யே னென்றான். அந்தத்தருணத் தில அனுமான் இரகுவீரனை வணங்கி நான்சொல்வ தொன்றுண்டு, அதைக் கேட்க வேண்டுமென்று வேண்டிக் கொண்டான். இறைவனே! கொடுந்தொ ழிலை யுடைய வாலியைக் கொன்று சுக்கிரீவனுக்கு முடிசூட்டி மிகுந்த சேனை களைக் கூட்டினலல்லாமல் அரக்கரிருப்பிடமறிவதரிது; எல்லாவுலகங்களையு மிமையோரனையில் அடைவர், அவ்வழியில் மகிழ்ந்த பொருள்களையும் வவ் வுவர், கொடியவினை வந்ததுபோலவு மீள்வர், அவர்கள் உறைவிடத்தை யறி யும் பான்மையோ! ஒருமுறையாகவே பரவி உல்கம் யாவையுஞ் சென்று சானகியா ரிருக்குமிடத்தை யாராயவேண்டும், உலகத்தை வரன்முறையாக நாடவம்பில்லை, அருமையுமுண்டு, நாம் தேடவளவிடற்கரிய வாண்டுகள் வேண்டும், எங்கள் படையோ எழுபதுவெள்ள மென்பர், ஊழியிற்கடல் உல கைப் போர்ப்பதுபோற்போக்கவல்லது, ஆழிநீரையுங்குடிக்கவல்லது, பிரமன் படைத்த இவ்வுலகத்தையும் நீழ்மடித்தெடுக்க வல்லது, இன்னுமினைடத்தவற் றையுஞ்செய்யவல்லது, ஆகையால் அதுவே அமைத்தென இன்றவனென்

மனத்தே நினைந்தேன் என்றான். இராகவனும் காம் வாலிபாற் செல்வோ மென்று சொலல யாவருமுடன் போயினர். அவாகளுமை அமயலையினைக்கடந்து சென்று ஒரு யோசனைக்கப்பாற் பொன்னுடு பூமியில இழிந்தாலொத்த வாலியிருக்கின்ற அக்கிட்கிந்தமலையை யடைந்தனாகள்.

கலன்காண்படலம்
முற்றிற்று.

வாலிவதைப்படலம்.

இராகவனவர்களுடனடைந்த பினபு சுக்கிரீவனையழைத்து நீ வாலியுட னே போர்செய்யுமபொழுது வேறுகினறு பாணமவிடத் துணிந்திருக்கின்றே னென சுக்கிரீவனு மப்படியே கல்லதென்றுநிசதித்து வாலியையனுக நீலமேக மும் நாண மண்ணுளாரியல்போகவும விண்ணுளாகள் விபமுதலையடைய வும் நின்றேயாரவாரித்தான; அது உலகமுணட பெருவாயனுண்டவனைடமு றுமுண்டது; சுக்கிரீவனும இடித்துரப்பிடபோர்செய்யவந்து எதிர்ப்டாயானுல அடர்ப்பேனனறு அடித்தலங்கள் கொட்டி வாய்துடிதுடித்துத தோள்புடை த்து நின்று செய்த ஆரவாரமிங்கே டுகுந்தது, தனைக்குவலதுடிக்க அங்கே யுறங்கும் வாலி செவிதனிலில யாகையினது பிளிற்றுனைசையைச் சிங்கம தன்செவியில் ஏற்பதுபோலக்கேட்க, படுக்கையில்ஒருபாற்கடல்கிடந்தபோ லத் தோன்றுகிறதைக்கணடு கோபமாய்த தனனுடன் போக்குவந்தமையை நோக்கி மனத்திலெண்ணிச் சிரித்தனை, அச்சிரித்தமவாசை அவ்வுலக மீதோழி லும் சென்றுபட்டது, வாலியோ வினைகதழ்ந்து ஊழிக் கடலபோலக் கிளர் நதுசெல்ல அமமலையோ பூமியிலழுந்திவிட்டது. அதன்பின் தோள்வீச்சினுலா கிய காற்றினல் மால்வனைகளெலலாம விழுந்தன, மயிர்ப்புறம் பொடித்தன, வடனைவக்கனலும் கண்கெட்டது. கைதடிநிற்பதனுல திகயங்களுமி மதச் செருக்கைகச்சிந்தின, தேவாகளுமவருந்தினாடைநதனா. மலைகளெல்லாம் நெக் குப்பட்டழிந்தன. இதோவந்தேன்வந்தனென்றுசொல்வதனுல் சந்திரனமுத லிய நகஷத்திரக் கூட்டங்கள் சிதறின, வினைகாற்றல வொபறிந்த மலையின் கூட்டங்கள் திசைகளெலாச் சென்றனடைந்தன, வெணணிறதிஜன யுடைய மயிரி னின்றும் பொடித்த தீப்பொறியால அணைபபடுத்தினைக டூடபபட்டன. கூற்று வனு முள்ளங்குலைந்தான. கழிந்தவாயினினறு முயலடாகிய தீப்பொறிகள் மேகத்தினின்று முனடாகிய இடியினபபோலச் சிந்தின, வாகுவலயத்தினின் றுஞ்சிந்தும் இரத்தினங்கள் மின்னல்வீழ்வதேபோலத் தோன்றின, அவனை உலகமும் காற்கடலும் நாகரும் மூலமும் முற்றமுடிவிலே தீக்கும் அக்கற்ப காலத்தை யொத்தான். அதுவேயு மன்றி அக்கடலைக்கடைந்த காலத்தில் தோன்றிய ஆலவிடத்தையுமொத்தான. அப்போது தானையென்னும் அழுதே போலத் தோன்றிய வேய்த் தோளையுடையாள் தடுக்க அவன் வாயிடையே புகைவரக் கண்ணில்வரும்தியினைல் தன்கூந்தலுர்திய நின்றுள், அதைக்கண்டு வானி என்னை விலக்கவேண்டாம்விட்டுவிடு, இங்கேவந்துபோருக்கழைத்தின்ற

சுக்கிரீவனுடைய உரத்தைக்கலக்கி அற்காளில கடலிலக்கலக்கி அழுதுகண்டாற் போலவருந்தும்படி அவனுயினைக்குடித்து விளைத்துமீள்வேன் என; அதைக் கேட்டமலைக்குல மயில்போல்வாளாகிய தாரை சொலலத் தொடங்கினள்.

இறைவனே! நின்புயவலிக்கு அவன் இக்காலத்தவனல்லன், முன்னாளில் உன்னுலே உதையுண்டேவருந்தினவனுயிருந்தாலும் அவனுக்கு நெடுந்துணை யுடைமையால் போர்க்கு வந்திருக்கின்றுன் என்றுள், அதைக்கேட்ட வாலி சுறன்றுலகமு மெனக்கு நேராக வந்தெதிர்ப்பினும் அவை தோற்றுத் தொலையு மெனின் சான்றுவண்டுமோ? அதற்கேதுவுங்கள்! மந்தரமலையே மத்தாக வாசுகியே கயிறுக, அடைகல் கள்ளமா மாபபபிராணுக, சந்திரனே தூணுக, எதிர்தருக்கி வாங்குவோரா இந்திரன் முதலிய தேவரோயாக, பெயரவலிக்கவும் அவர்களுக்கு மிடுக்கிலலாமையால நானதை நோக்கித் தயிரெனக் கடைந்து அழுதந் தந்தேன். அதுமறக்கத் தகுந்ததோ, தேவரு மவுணரும் என்னுடன் போர் செய்தே தோற்றனரென்றுல அதைச்சொல்லவுமாமோ! எமனு மென் பெயர்சொல்ல நடுங்குவானை, எனக்கார்தான் நிகா? என்தம்பிக்குயார் துணை யாக வந்துபோர்செய்வா, அறிவிலலாதவ ரென்னுடன் போர்செய்வாரெனின் அவர்கள் பெற்றுடைய வரமும உரமும பாதியென்பால்வந்தசேர்ந்துவிடுமே, அதனைப் பகைப்ப தெப்படி? நீ துயரமொழிந்து விடெனறுன். இவ்வாறு சொல்லிய வாலியை நோக்கித் தாரை இறைவனே! அச்சுக்கிரீவனுக்கு ஆரு யிர் நண்பனுக சீராமனென்பவன உன்னுயிர்கொள்ள வந்திருக்கின்றுனென்று நில அன்புடையாா என்னிடத்தே சொன்ன ரென்றுள், அதற்கு வாலியும் இருவினைக்கூறு காணுதலமந்தெப்பயரு முலகத்தினுக்கு அறத்தாறெல்லாம இழுத்துக்காட்டிய சீராமனுக்கு இயலபலலாதனசொலலி யென்செய்தாய்! பாவி! உன்பெண்டன்மையால பிழைத்தாயே, இம்மை மறுமை யென்னு மிரண்டினையு நோக்குமியல்பினை யுடையாாக்கு இதுபெருமையாமோ! இங் கே இதனைப் பெறுவதென்னை? அருமையாக நின்று உயினைக்காக்கும் தரும மே தன்னைத்தான் தவிர்க்குமோ, உலகமுழுதும் தன்னுரிமையாகப் பெற்று அதைத் தன் மாற்றவளாகிய சிற்றன்னையேவலால் அவள்மகனுகிய பரதனுக்கு மனமகிழ்ச்சியோடு அவ்வரிமையெல்லாமகொடுத்துவிட்டே வனசஞ்சாரியாக வந்த அச்சீராமனைப் புகழ்ந்துபேசாமல இப்படிசொல்லத்தகுமோ! உலகமுழு தும் தன்னை யொருங்கு நின்றுபொருதாலும் வெற்றி யடைய மக்கோதண்ட மேயன்றி வேறுதுணை வேண்டுவமோ? தன்துணை யொருவருந் தன்னில் வேறல்லாதனுகிய இராகவன் புன்றொழிற்குரங்கோடு பொருந்து நட்பினையுடை யானுவனோ! தன்தம்பியரல்லது வேறுயிர்தனக்கு இவ்வுலகத்தில்லை யெனத் துணிந்திருக்கின்ற அவ்விராகவன் என்தம்பியும்நானும் போர்செய்வதற்குடன் பட்டபொழுது இடையில் அருளாழிபோல்வானுயிருந்தும் அம்பினைத்தொடுப் பானே, நீ சிறிதுபோதிரு, இமைக்கும் நேரத்திற்குள்ளாக நான்கோபித்துச் சென்று அவனுயினைக்குடித்துத் திரும்புகிறேன். அவனை உயிர்குடித்துவருவ தல்லாமலும் அவனுக்குத் துணைவருவானையும் கருத்தழித்து வருகின்றேன், கலங்கவேண்டாமென்றுன்; அதற்கவளோ வேறுனைசொல்ல அஞ்சினின்றுள்.

பின்பு வாலியோ போரென்று சொல்லவே பூரிக்கின்ற தோள்களுடன் கிழக்கிலை சயி லுதயஞ்செய்கின்ற சூரியன்போல யாவருங்கண்டு பயப்படத் தூணிற்றோன்றிய அழகிய சிங்கனைபோலப் புறப்புட்டு அக்கிட்கிந்தை மலை யிலேறிப்புறத்திலே நின்றான். அவ்வாறுலகத்தைத் தாவியளந்த கள்ளமாமாய னகிய திரிவிக்கிரமனேபோல ஆகாயமளாவிய வடிவுடன் நிற்கின்றவாலி தன் தமபியைக் கண்ணுற்றுக் கொக்கரிக்க எல்லாவுலகங்களுஞ் செவிடுபட்டன, அந்தத்தருணத்திலே வாலியைப்பார்த்து இரகுநாயகன் அருகினின்ற தம்பி யைக் கடாட்சித்து அப்பா இலக்குமண! அசுரரும் அமரருமிருக்கட்டும். எக் கடல், எம்மேரு, எச்சண்டமாருதம், எக்காலாக்கினி, இவன் சரீரத்தையொ க்குமென்பதனை நீயே கன்றுகப்பாரா ? என்றனர். அதைக்கேட்ட இளைய பெருமாள் அண்ணா! இப்படிப்பட்ட தமையனைக் கொல்லவும் நமனைத்தேடிக் கொண்டு வந்துவைத்து தமமினைச் சண்டைசெய்ய கோர்த்தாயே! நிறைதும் மன வருத்தங் கொள்ளாமலு மிருக்கின்றனை யென்று சகிபாராய் அறநெறி தவ றும்படி நேராமல் நடப்பவர்களை நாம நம்பித்தேறுவது நலமன்று, தன் தமையனையே கொல்லச்சமைந்த இவன் நம்மைப்போன்ற பிறருக்குச் சகாய மாக எவ்வாறமைவான் என்றனன். அச்சொல்லைக்கேட்ட இரகுநாயகன் அப்பா! நான் சொலவதொன்றுகேள்; இப்பிதாகியகுணத்தையுடைய மிருக வொழுக்கத்தைப் பேசவும் வேண்டுமோ ! எத்தாய்வயிற்றிலும பிறந்த தம்பி மாரெலலாம் முன்பிறந்த தமையன்மாரோ டொத்திருப்பாராயின் நமது பர தன் மிகவுத்தமனென்று வழங்குகின்ற சொல்லுமுனேடோ? உலகத்திலே நல் லவர் சிலருமதீயர் பலருமாயிருக்கின்றனர், இஃது உண்மைதான். காரிய சாத கத்தை நோக்குகின்றவாகள் ஒருவரிடத்துள்ள குணத்தைமாத்திரம்பார்த்துக் கொண்டு நடக்கவேண்டுமே யல்லாமல் அவர்கள் குற்றம் பார்க்கவுமாட்டார் கள். அவ்வாறுபார்த்தால்குற்றமில்லாதவரோருவருமிலர். இக்கருத்தேபற்றி யே பெரியாரும 'குணங்காடிக் குற்றமுகாடியவற்றுள் மிகைகாடி மிக்ககொள்ளல்' என்றுஞ் சொல்லியிருக்கின்றனர் என்றனர். இவ்வண்ணம் மைவண்ணமேனி மரகதமலைபோன்ற இரகுநாயகன் சொலலிக் கொண்டிருக்கையில் வாலியும் சுக்கிரீவனும் இரண்டுதிசை யானைபோன்ற மலையுமலையும எதிர்த்ததுபோல வும் சிங்கமும் சிங்கமுமெதிர்த்தது போலவுமெதிர்த்து நின்றுந்திரிந்தும் மிக்க வேகமாய்ச் சாரிகைவந்தனர். அப்போ துலகமோ குலாலனது சக்கரம்போற் சுழன்றது. தோளோடு தோள்மோதியுமகாலொடுகால்பின்னியும்கோபாக்கினி மிருதியுங் கொண்டுடம்புதெரியாமல் வீராவேசமாய் போர்செய்துவந்தார் கள். இவர்கள் ஒருதாய் வயிற்றிற்பிறந்து அரம்பையின் பொருட்டுப் போராடி முடிந்த சுந்தோபசுந்தனை யொத்துப் பின்வாங்காமற் போர்செய்தனர். இவ் வாறு போர்செய்கையில் மேருவோடுமேருவும் கோபந்தானே இரண்டுருவங் கொண்டது போலவும் போர்செய்துவருகையில் இவரிருவரும் கோபிப்பதனா லுண்டாகிய தீயினல் மேகங்கள் கரிந்துபொரிந்து போயின, மலைகளெரிந்து போயின, திசையானைகள் நடுங்கின, உலகவடுக்குகள் குலைந்தன, இவர்கள் யுத்தவேடிக்கையைப்பார்க்க ஆகாயத்தில் நின்றுகொண்டிருந்த தேவர்களும்

கடுகடுங்கி மறைந்துபோயினர். இவ்வாறு போர்செய்யும் வாலிசுக்கிரீவர்க ளிரு வரும் இருந்தாற்போலிருந்து ஆகாயத்திற்செல்வர்; மலைச்சிகரத்திற்குதிப்பர்; பூமியில்வருவர் திக்குகளி லோடித்திரிவர், சகலவுயிர்களின் கண்ணிலுமிருப் பாரோபோல அங்கங்கேதிரிவர், ஒருவனையொருவர் உதிரம் கக்கும்படிகடிப்பர் பத்துத்திக்கிலும் சென்று மூட்டுவர் சத்தசாகரவோசையிலும் ஐந்துபங்கதிக மாகக் கர்ச்சிப்பர்; இவர்கள் உடம்பிலிருந்து வடிகின்ற உதிரம்பாய்வதனால் ஆகாயத்தில்தோன்றுநக்ஷத்திரங்கள் எல்லாம்செவ்வாயென்னும் கிரகம்போல விளங்கின, மேகங்களெல்லாம் செவ்வானம்போல் விளங்கின, ஒருவரோடொ ருவர் இரணகளத்தில் கருமானுலைக்களத்தில்வெந்த இரும்பைப்பாறைமேல் வைத்துச்சம்மட்டியினல் அடிக்கத்தீப்பொறி சிதறுவதுபோல்தீப்பொறிசிதற வாலியினுடையதோளும் சுக்கிரீவனுடைய மார்பும் சக்கைசக்கையாய்ப் போ ன்தன. அவ்விருவரும்ஒருவனையொருவர்மார்பாலுந்தியும்காலாலுதைத்தும்கை யாலெடுத்தெறிந்தும் கடித்தும், இடித்தும் மரங்களை வேருடன்பிடுங்கியடித் தும் மலைகளைப்பிடுங்கித் தலைமேல்வீசியும் அதட்டியும் களைத்தும் கண்ணில் தீயெழவிழித்தும் பின்னும் ஒருவனையொருவர் நெருக்கிப் பிடித்துத்தூக்கியும் வெகுநேரம் போர்செய்தனர். இவ்வாறு போர்செய்கையிற் சுக்கிரீவன் மிகவு மெலிந்து இரகுநாயக னிடத்தேவந்து முறையிட்டுக்கொண்டனன். அத ற்கு இரகுநாயகன் நீங்கள் இருவரும் போர்செய்கையில் உங்களிருவருக் கும் வேற்றுமை தெரியாமையால் அம்பெய்யாமலிருந்தேன். இப்போது இம் மலனைத் தரித்துக்கொண்டுபோனல் நானிடையே யம்புதொடுக்கிறேன் போ வென்றனன். அதைக்கேட்ட சுக்கிரீவன் அவ்வாறே அம்மலர்புனைந்து சென் று வாலியிடமணுகி யுருமுரானைக் கர்ச்சித்துப் பலமுறை போர்செய்தனன். வாலியோ சுக்கிரீவன் வருந்த உயிர் நிலைதோறும் தன்னுடைய வயிரமாகிய கைகளாற்குத்த அதனற் பெருமூச்சு விட்டுக்கொண்டுயிர்நீங்கியவன்போன்று மூர்ச்சையடைந்தனன். பின்னும்அவன்செவியின்வழியாகவும் கண்ணின்வழி யாகவும்உதிரங்கான்றது. இவ்வாறுஅடிபட்டுநொந்துவருந்திஇரகுநாயகனிருந்த இடநோக்கி யோடவே, அதைக்கண்ட வாலியோ ஓடிவந்து தோள்பிடித்துக் கொண்டு மடல்நெரிய நெருக்கி யனையிலொருகையும் கழுத்திலொரு கையுமா கக்கொடுத்து நிலத்திலறையும்படி தூணிந்தனன். அத்தருணத்தில் இரகுநாய கன் இவ்வாலியோ, சுக்கிரீவனைத் தப்பாமற் கொல்வானென்றெண்ணித் தன் கோதண்டத்தைவளைத்து நாணேற்றித் தோளளவும்வாங்கி யொருவாளியைப் பிரயோகிக்க, அது வாலியினது மார்புக்கு நேரேவந்தது; அவ்வாறு இலட்சிய மாக அதுமார்பையே நோக்கி வரக்கண்டுவாலி தம்பியைக் கொல்லத் தூணிந் ததை விடுத்து நின்றனன்.

அந்தப்பாணமோ பஞ்சபூதங்களின் பராற்றல் முழுதுமொரு சேரத்திர ண்ட வாலியினது மார்பிலே கதலிக்கனியிலூசி நுழைவதுபோல் தடைபடா மல் நுழைந்தது. அப்போதுதனக்குத் தோற்றோடிய தம்பியைக் கொல்லத் தூணிந்திருந்த வாலிமனங்கலங்கி ஊழிகாற்றால் வேர்பறிந்துவீழ்ந்த மகாமேரு வேபோல விழுந்தான். அவ்வாறு இடிவிழுந்த மலைபோலவிழுந்த வாலி தன்

தம்பியைக் கொல்லத்துணிந்ததை விட்டுவிட்டுத் தன் மார்பிலுருவிப்போ
கின்ற அவ்விராம பாணத்தைத் தன்போராற்றலால் அம்மார்பில் நுழைந்து
போகாமல் தடுத்துத் தன்கையாற் பிடித்துக்கொண்டு ஆகாயமட்டுங் கிளம்பி
அண்டகடாகத்தையு முடைத்துவிடுகிறேனென்று கர்ச்சித்து எழுவான். ஒரு
ளுந்துருளு மளவில் திக்குகளையெல்லாம் நிர்த்தூளியாகச் செய்கிறேனென்று
கோபிப்பான். மீளவும் விழுந்து பூமியிற்புரண்டு நிலத்தைவேருடனே பறிக்
கின்றேனென் றுறுக்குவான். இப்பாணத்தை யென்மார்பி லெக்காக வெய்
தவன் யாரென்றே யையப்பட்டு அதிசயமாய்ப் பூமியைத் தன்கையாலறை.
வான். நாற்றிசையையும் சுற்றிப்பார்ப்பான், அத்தப்பாணத்தைத் தன்கையா
லும் வாலினாலு மிறுகப் பிடித்துக்கொண்டும் பறிக்கக் கூடாமையால் நிலத்
திலே யொருமலையுருள்வதுபோலுருள்வான். இக்கரந்த செய்கையைச் செய்
தார் தேவர்களோ வென்றையப் படுவான். மற்றும் அத்தேவர்கள் இச்செய்
கைக்குத் தக்கவரோ அன்றே யென்றும் நினைப்பான். அவர்களுக்கும் இவ்
வளவு போராற்றலுண்டோ வென்றும் சிந்திப்பான். உடனே சிரிப்பான். பின்
னும் மும்மைப் பெருந்தேவருக்கு மொப்பானவனன்றே இச்செய்கையைச்
செய்திருக்க வேண்டுமென் றெண்ணுவான். என்மார்பிற் பட்ட படைக்கலம்
விஷ்ணுவினது சக்கரப்படையோ, முக்கண்முதல்வன் சூலப்படையோ, குமர
நாயகன் கைவேலோ, இந்திரனுடைய வயிரப் படையோ, எப்படிப்பட்ட
படைக்கலங்களும் என்மார்பிற் சென்றுடருவ மாட்டாதே, ஆயினும் இது
மற்றதுவோவென்று நினைப்பான். இதைமுற்றத்துறந்த முனிவர்கள்தங்கள்
வல்லமையாலேவினரோவென்றுஞ் சிந்திப்பான். தன் பற்களாற்பலமுறைகடித்
திழுத்தும் பறிக்கக் கூடாமற்செல்லுகின்ற அப்பாணத்தைவிடுத்தவன் இன்று
னென்றறிவோமென்றும், இதுவோபாணமேயென்றுந்துணிந்து அதைமீண்டும்
வாலையும் இரண்டு கையையும் காலையுங் கொண்டுறுதியாகப் பிடித்துக்
கொண்டு இழுத்துப் பறித்தான். அதைக்கண்ட தேவர்கள், அசுரர்கள் முத
லானவர்களும் வாலியைப் புகழ்ந்தனர். உலகத்தில் வீரர்களைப் புகழாதவர்
கள் யாரிருக்கின்றனர். அவ்வாலியினது மார்பாகிய மலையிலிருந்து உதிரப்பிர
வாகமெழுந்தது. அது அருவியாறுபோல வினங்கிக் கிடந்தது. அதைக்
கண்ட சுக்கிரீவனும் உடற்பிறப்பென்னும் பெரும்பாசத்தாற் பிணிக்கப்பட்
டுக் கண்களினின்றும் நீர் தானா தானையாகப்பெருக நிலததிலே விழுந்தான்.
இதுகிடக்க ;

வாலி தன்மார்பிற்சென்றுதைத்த பாணத்தைபறிக்கின்றேனென்று துணி
ந்துங் கூடாமையால் நான் மகாமேருவையும் பறிக்கத்தக்க போராற்றல்சமைந்
தவனாக விருந்தும் இப்பாணத்தை முறிக்க என்னாலாக வில்லையே யென்று
சிந்தித்து இதில் யாருடைய பெயரெழுதி யிருக்கின்றதென்று பார்க்க மும்மை
யுலகங்கட்கு மூலமந்திரமாயும் தியானஞ் செய்பவருக்குத் தற்சுவரூப மளிக்
கின்ற தாரக மந்திரமாயும் இம்மை மறுமை யென்னுமிரண்டினையு மளிப்ப
தும் பிறவி நோயைகெடுக்குமருந்துமாகிய சீராமனென்றெழுதியிருக்கக்கண்டு
கொண்டான். அதைக்கண்ட வாலி எப்போதும் வேதமுதலிய கலைகளிற்றேர்

சொல்லப்பட்டுள்ள இச்சூரியவமிசத்தில் இந்தராமன் பிறந்து இல்லறத்துறந்து வானைப்பிரத்த மடைந்தும் எங்கள்பொருட்டு வில்லின் தருமத்தையுமிழந்தே நெறியிற்கோணினனென்று காணங் கொள்வான். தன்தலையை யசைப்பான அதிக வார்ப்பாடமாய்க் கலகலவென்று கைகப்பான். மீளவுஞ் சிறிது நேரஞ் சிந்திப்பான். இதுவும் ஒரு தருமமோ வென்பான். காலிற் பூட்டிய விலங்கோடு குழியில் விழுந்த மதயானை போலுழைத்துக் கொள்வான். பின்னரும் தன்மெய்மறந்து சோர்ந்து கிடப்பான். உலகங்கட்கெல்லா மிறைவனுகிய இராகூகாயனே தருமவிரோதமாக கடப்பானனுல் மற்றவர்கள் எவ்வாறுக வேண்டுமென்று சிந்திப்பான். இராகூகாயகனும் தன்செய்கையில் மாறுபட்டானல்லவாவென்று சொல்லும் வாவிமுன்னே அப்பெருந்தகையு கடந்து போக அவனை வாலியும் நீலமேகமம் கமலமலாபூத்து மண்ணிலடைந்து கட்டமைந்த வில்லேயேந்தி வருவதேபோலுமாகனாடு என்னகாரியஞ் செய்துவிட்டாய் என்று சொல்வானுயினன். அப்பா இரவிகுலதிலகனே! நீ மெய்ம்மைக் குயிர்விட்ட தயரதன் மகனேயன்றே! எல்லாற்குணங்கட்கு மிருப்பிடமாகிய பரதனுக்கு முன்றேன்றலேயன்றே! தீமையென்பது பிறர்செய்யாமல் தான் செய்வதோ! குலம் கல்வி வெற்றி நலம்பெற்றிருப்பதன்றி இம்மும்மையுலகங்கட்கு நாயகமுநீயன்றே! தடலேயாடையாகவுடுத்த உலகத்தைத்தாங்கும்வல்லமை யிதுவென்றல் உன்ணண்மையை இப்படியுங் காட்டலாமோ அறிந்திருந்துமயர்ந்தவர்போல வென்றுசொல்லிவிட்டுப் பின்னுஞ்சொல்லுகின்றன். சானகியைப் பிரிந்தபின்பு நின்செய்கையில் மாறுபட்டனேபோலும்! அரக்கர்கள் ஒரு தீயகாரியத்தைக் செய்துவிட்டால் அதன்பொருட்டு ஒரு கூரங்கைக் கொல்லும்படி உங்கள் மனுநூலிற் சொல்லியிருக்கின்றதோ! நீ யெங்கே யிரக்கத்தை விட்டாய்! என்னிடத்தே என்னபிழை கண்டாய்! நீயே மிக்க தீமையான காரியங்களைச் செய்துவிட்டால புகழை யார்தான் பரிப்பவர்கள். இவ்வுலகத்தில் ஒருகூரங்கு மிமித்தமாகக் கலிகாலந்தான்றியதோ! ஒழுக்கமும் விழுப்பமும் எளியவரிடத்திலேயோ! வலியார் மெலிய காரியங்களைச் செய்தாற் புகழே யல்லாமல் வசையு முண்டாமா! தீனையொருவனையும் வேண்டாத சீராமா! உன் தந்தைகொடுத்த இராச்சியபாரத்தைத் தம்பியாகிய பரதனுக்கே கொடுத்து நாட்டிலொருக்கருமத்தைச் செய்தாய்! என்தம்பிக்கிந்த அரசைக் கொடுத்துக் காட்டிலொருகருமஞ் செய்தாய்! கருமமென்பதிதன்மேலுமுண்டோ? என, அதற்கு இராகவீரன்சொலலத்தொடங்கினன். நீ முற்காலத்தில் பிலத்துவாரவழியே சென்று வராமலிருந்தனை! அப்போதுஉன் தம்பியாகிய சுக்கிரீவன்துன்பமடைந்து தானும் அப்பிலத்துவாரத்துக்குள் உன்னிடம் வரப்புறப்பட்டான். இவனை உன்குலத்து முதியோரும் படைத்தலைவரும் பிடித்துக்கொண்டு நீயும் போதியேல் எங்களுக்குயார் கதி! இனி நீயேனும் அரசுபுரியென்று வேண்டினர். அவர்கள் அவ்வாறுனைத்தும் கேளாமல் என்தமையன் இறந்துபட்டும்யான் உயிருடனிருப்பதுதகுதியோவன்றே, தானும்இறந்துபடுகிறேன். தானரசும்புரிவதில்லை; என்ன வார்த்தைபேசினீர்கள்! என்றுமறுத்தான். அவர்கள் மீட்

டும் இணங்கும்படி சொல்லக்கொண்டு அரசுபுரியச் சம்மதித்தான்; பின்வேந்த போதனன்னனப் பணிந்துன்னரசைக்கொடுத்து விட்டதன்றி கடந்த செய்தியையும் தெரிவித்தான். நீ இவனிடத்திரக்கமின்றிக் கறுவுகொண்டு உபவத்திரவஞ் செய்தனை, அப்போதிவன் 'சிறியோர்செய்த சிறுபிழையெல்லாம் பெரியோராயிற் பொறுப்பதுகடனே' என்றபடி என்பிழையுனைத்தும் பொறுத்தருள வேண்டு மென்றும் கெஞ்சிக் கேட்டான். அவ்வாறு கேட்டும் தம்பியென்பதை யெண்ணுமல் இவனைக்கொலலத்துணிந்தனை. காற்றினையுலுமோட்டெடுக்கத்துரத்தினை. உனக்குச் சாபநோந்த இம்மலையையடைந்து இவன் தன்னுயிரைக்காத்துகொண்டான். அம்மலையில் நீ யேறக்கூடானம்யால் இவனுயிர்பிழைத்தான்; என்று மதிவினையுடைய மேலோர் பிறன்றாரத்தை நச்சார்கள் தருமநெறிதவறுவதாவது பிறர் மணஞ்செய்து கொண்ட பெண்ணைக்கைக் கொள்ளுவதன்றே துணி. அது அன்பும் உயர்குடிப்பிறப்பும் வீரமும் கல்வியும் மெய்மையும் நீதியுஞ் சிதைக்கும். நாம் போற்றலுடையோமென்றே தகாதகாரியத்தைச் செய்யவு மொணணுது. நீ தருமத்தைச் சிந்தியாது இம்மைமறுமையிரண்டினையு நோக்காது உனக்குரிய பெருமையுங் கைவிட்டு உன்னருமைத், தம்பிக்குரியதாரமாகிய உருமை யென்பவளையும் கைக்கொண்டதனலும் நானிவனுக்குப் பிராணபதமாகிய நண்புடையதனாலும் அன்னியனேனும் எளியானேனும் அவர்க்கெய்திய துன்பந்துடைப்பதையான்கொண்டவிரதமாதலானும் இவ்வாறுசெய்தேனென்றான். அதைக் கேட்ட வாலி இராகுநாயகனை நோக்கி நீ தகாதசெய்கையென்ற இத்தனையும் நாங்கள்விலங்காகையால் எங்களுக்குரிமையென்று சொல்லிவிட்டுப் பின்னுஞ் சொல்லத் தொடங்கினன். உங்களைப்போல நான்முகக்கடவுள் எங்களுக்கும் விதித்தானில்லை. எங்களுக்குத் தாயென்றும் தங்கையென்றும் தமக்கையென்றும் தம்பிமனைவியென்றும் தன்மனைவியென்றும் அயலான் மனைவியென்றும் பேதமே கிடையாது. நாங்கள் கலியாணஞ் செய்துகொள்வதுமில்லை. நாங்கள் விலங்கின்சாதியாகையால் மனம்போன வழிகடப்பதையமதுகொள்கை. எங்களுக்குவேதமோதாகிற்குநெறிகிடையாது. ஆதலாலனன்பாற்சிறிதுங்குற்றமில்லையென்றனன். அதற்குக்காருத்தன்சொல்லத்தொடங்கினன். நீங்களிருவருமெவர்க்குமேலாகிய தேவர்களுக்கு மக்களாகப்பிறந்துதருமநெறியுணர்ச்சியுடையராயிருப்பதனுவ உமக்குவிலங்கின் றன்மையேயிலலை. ஆதலால் நீங்கள்அதருமநெறியி லொழுகுவது அடாது. அறநெறியொழுகும் புலனிற்செல்லாததுசடமாகியதேகமேயன்றே! ஆன்மாவன்றே! எல்லாத்தருமங்களையுமறிந்திருக்கின்ற நீயே பாவத்தைச் சுமையாகக் கட்டிக்கொள்ளலாமோ! முதலை பிடித்திழுக்கத் தன்னைக் காத்தருள வேண்டுமென்று மூலப்பொருளைக் கூவியழைத்தது யானேயேயன்றே! அக்கயேந்திரனும்விலங்கினுருவமுடையானேயன்றே! தரும சிந்தனைமேற்கொண்டு சானகியின்பொருட்டு இராவணனைப் போர்செய்து உயிரைத்துறந்த எமது பிதாவாகிய சடாயுவும் கழுகுகட்கிறை வனேயன்றே! ஆதலால் அறிவென்பதே சிறந்தது. இதுவன்மை இதுதீமையென்றுணராது நடப்பவரேயன்றே; விலங்காவரென்வேதநூல்முறையிற்கின்

றன. இதெல்லா நீ யறியாததுமன்றே, இது தக்கது இது தகாததென் றுணரா தாரெல்லாம்மனித யாக்கையை யுடையாரோனுமவனை மனிதனென்றேகொள் ளற்பாற்றே, விலங்குருவ முடையாரோனும் நீதிநெறியொழுகுவரேல் அவ னைத்தேவரோடொப்பக் கொளல்வேண்டும், நீயோகாலனைக்கடந்தகறைமிடற் றிறைவனைப் பூசித்து ஆகாயமொழிந்த மற்ற நான்குபூதங்களின் வல்லமையும் பெற்றிருக்கின்றனை, உலகின்கண் அநேகர் அறநெறி யொழுகா நிற்கின்றனர். அநேகர் அறநெறி யொழுகாதிருக்கின்றனர். தேவரிலுந் தீமைசெய்து திருத் தப்பட்டிருக்கின்றவர் பலர், எந்தக் குலத்திற்பிறந்த எப்படிப்பட்டவராயினும் 'பெருமைக்கு மேனைச் சிறுமைக்குந் தத்தங்-கருமமே கட்டளைக்கல்' என் றபடி பெருமையுந்தாழ்வும் அவரவர் செய்கையால் உண்டாகின்றன. அதனை யறிந்திருந்தும் நீ இல்லறவொழுக்கங்கடந்து நடந்தனையேயென்றான். அதற்கு வாலி நீர் வேடரம்பெய்வதுபோலவே மறைந்திருந்து அம்பெய்யலாமோ வென் றான்.

அதைக்கேட்டருளிய இராமபிரான் சொல்லத் தொடங்கினன். முன் னேவந்துபின் றோன்றலாகியஇச்சுக்கிரீவன் புகலென்றடைந்தனன். அது போது என் தமையனாகிய இராகுநாயகன் முறைதவறிய உன்னைக் கொன்று தீர்த்து இவனைக் காப்பேனென்றனன். எம்மிறைவன் உன்னெதிரே வருவ னேல் நீயும் அவன்பால் 'தன்பிராணன்தித்திப்பு' என்றபடி உன்னுயிர்மே லா சைவைத்து அடைக்கலம் புகுதியேல் தன்சொற் பிறழுமேயென்று நினைத்து மறைந்திருந்தே யம்பெய்தனனென, அதைக்கேட்ட வாலியுந் தான்கொண்ட கோபந் தணிந்து அறவாழியந்தணனாகிய இராகுநாயகன் பிழைபட வொழுகா னென்பது துணிந்து கேள்விச்செல்வத்தாற் றோட்கப்பட்ட செவியையுடைய வாலி மெய்யுணர்ச்சியுடையனாய் அப்பெருந்தகையைப் பணிந்துதுதிப்பானாயி னான்.

தாயெனவுயிர்கூட்குக் கருணைசெய்து தருமமும் தகவும் சால்புடைமை யும் நீயெனநின்ற இறைவனே! நெடிது நீ நோக்கு மாற்றலுடைமையு யிருந்தும் நாய்த்தன்மையுடைய என்பாற்குற்றம் அறியலாமோ! தீயவற்றைப் பொறுத்தியென்று சொல்லிப் பின்னும் இவன் குரங்குதானேயென்று நான் கூறிய சிறிய அபராதமொழிகளையுமனத்திற்கொள்ளவேண்டாம். பிறவிப்பிணி க்கு மருந்தே போன்றவனே! யான் சொல்வதைக்கேளென்று சொல்லத் தொடங்கினன்.

எவ்வூர் வாளியா லெய்துநா யடியனேன்
ஆவிபோம் வேலையா யறிவுதந் தருளினாய்.
மூவர்நீ முதல்வநீ முற்றுநீ மற்றுநீ
பாவநீ தருமநீ பகையுநீ யுறவுநீ.

* * * *

உண்டெனுந் தருமமே யுருவமாய் நின்றநிற்
கண்டனன் மற்றினிக் காணவென் கடவுளை
பண்டொடின் றளவுமே யென்பெரும் பழவினைத்
தண்டமே யடியனேன் றருபதந் தருமதே.

என்றுதுதித்து என்தம்பி என்னைக்கொல்ல உன்னைக்கொண்டுவந்துவிடுத்துச் சிற்றினமாகிய குரங்கினத்துள்கூடியிருந்தாராய்ந்து அரசாண்டுவரும் வெற்றரசினைத்தானேற்றுனிராதிசயவின்பத்தைத்தரும்சிங்காதனமொழியுஞ்செல்லாநிலைமைத்தாகிய அப்பேரின்பவீட்டையெனக்குக் கொடுத்துவிட்டானே. இதைக் காட்டிலும் பெரிதாகிய உதவிவேறுண்டோ! உம்மிடத்தில் நானொருவரங் கேட்கத்துணிந்திருக்கிறேன். அது என்தம்பியாகிய இச்சுக்கிரீவன் குரங்கினத்தியல்பாற் கள்வெறிகொண்டு அறிவுமயங்கி உம்மிடத்தேயாதேனுங்குற்றமே செய்துவிடினும் என்மேலேவிய பாணமாகிய கூற்றுவனை அவன்மேலேவ வேண்டாம். இன்னமொன்றுண்டு; அதாவது என்தம்பியைத் தேவரீர் தம்பிமார் தன்தமையனைக்கொல்வித்தவனென்று இகழ்ச்சிசெய்யாவண்ணம் பாதுகாக்க வேண்டுகிறேன். நீரோ அவனுக்கு முன்னம் அபயங்கொடுத்தேயுன் குறையை முடிக்கிறேனென்று சொல்லியிருந்தீர்; அதைக்கர்மானுகுணமாய்க் கடக்கக்கூடுமோ! ஞானம்மாயாவியாகிய அவ்விராவணனைப் பிடித்துவந்து தேவரீருடைய சந்நிதானத்தில்விடுத்து என் குரங்கின்றுழிலைக் காட்டாமற் போய்விட்டேனே. இனி அதைச்சொல்வதனற்பயனென்ன? ஆயினும்இங்கே நீர் நினைத்ததைச் செய்யவேண்டுமென்றால் இவ்வனுமானே செய்யவரிமையுடையான். இவனைத் தேவரீர் கையிற்பிடித்திருக்கின்ற கோதண்டம்போலெண்ணவேண்டியதன்றி இவனைத் தேவரீர் திருத்தம்பியைப் போலவுநினைக்கவேண்டும். இவனுக்கொப்பானதுணையுமக்கொருவருமிலர்! இவனல்நமது சானகியானைத்தேடிக் கண்டுபிடித்துக்கொள்ளுமென்று சொல்லினன்.

பின்பு தன்னருகேயழுதுகொண்டுநின்ற சுக்கிரீவனைநோக்கி தம்பீ! தழுதீவருந்த வேண்டாம்; என்னருகே வாவென்றணைத்திறுகச் சேர்த்துத்விக்கொண்டு வேதமும் முற்றத்துறந்த முனிவரும் பிரமன்முதலிய கடவுள்ரும்சமஸ்தகலோகளும் எடுத்துச்சொல்லும்பரம்பொருளே இங்கு கோதண்டங்கையிலேந்தி இராமனென்று திருப்பெயர்கொண்டு அறத்தைநிறுத்த அவதரித்திருக்கின்றது. இதற்கெவ்வளவு மையமேயில்லை. நிலைபேறுடைய நிராதிசயவின்பத்தைவிழைந்து அதற்கியைந்த வழியில் நிற்கின்ற சேதனர்களெல்லாம் இவனது திருநாமத்தையே கற்கின்றனர். இவனையே யுள்ளத்திற்சிந்திக்கின்றனர். இதற்குச்சாட்சிவேண்டுமாயின் என்னைக்கொன்றவொன்றே அதற்கத்தாட்சி. என்றென்றும் இவனுக்குத் தீயகருமங்களைச் செய்பவரும் வீடுபேறெய்துவரொனின் இவன்றாட்கே குற்றேவல் செய்தொழுகுபவரடையும் பேறு எண்ணத்தான்வேண்டுமோ, அதைச்சொல்லத்தான் வேண்டுமோ! உனக்கு விதிபோ இவ்வுதவிசெய்தாரொனின் அருமையென்பதியாதிருக்கின்றது. இனி செய்யத்தக்கதுமென்ன! திருமறுமார்பனுகிய கள்ளமாமாயப்பிரானது திருவவதாரமெனப்படும் இவ்விராகூராமனுக்குக் குற்றேவல்செய்துகொண்டு சிந்தையை யொருவழியே நிறுத்தி மும்மையுலகத்தவரினு முயர்ந்திருக்கக் கடவை. மதத்த குரங்கினறிவைக்காட்டாமல் உன்பாற்செய்த நன்றியையே நினைந்து இவற்காபத்து நேர்ந்தபோது உன்னுருயிரோனுங்கொடுத்து யாவருக்கும் பரமபதத்தைக் காணியாகத்தரும் இவனது கட்டளையைத் தடுக்காமற்

அவள்இவ்வாறு புலம்பிக்கொண்டுமூர்ச்சையடைந்தாள்; அனலவ்வண்ணமயர்ந்திருப்பதை அறுமாண்கண்மிகாராசாவினுடைய ஆக்கினையால் அவளருகுத்தேறுதல்சொல்லிவானரமாதருடனே அவளுடையமாளிகைக்கனுப்பிவாலிக்குக் கடத்தவேண்டிய கருமங்களை அங்கதப் பெருமானைக்கொண்டு கடத்திச் சக்கரவர்த்தித் திருமகனிடத்தே அதையெடுத்துச்சொல்லினன். அப்போது இருள்வேரற்றுப் போகக் கதிர்களைப் பரப்புகின்ற சூரியன்மேற்கடலிலுள்ள அத்தமான மலையையடைந்தான். அச்சூரிய பிம்பமோவாவிழுகமேபோலச் சிவந்தது. அவ்வாறுசூரியன்மறைந்துஇரவுண்டாகவே இரகுநாயகன்சானகியானாகினைந்துதுயரமடைந்துஅவ்விரவென்கின்றகடலிலழுந்தினன். சூரியனே தன்மகன்பொன்மகுடந்தாங்கும்பேருவலைக்குமுற்படுவானை யாவருக்கும் எல்லாச்செல்வமுமளிக்கும் திருமகள்சேரும்படி அவ்வன்னையெழுந்தருளியிருக்கும் தாமரைமலராகிய வீடடைத் தன்செங்கையாகிய கதிராலதாழ்நீக்கினன். அப்போது அருட்குநாயகனாகிய சக்கரவர்த்தித் திருமகன் அறிவிற்சிறந்த தம்பியை நோக்கிச் சூரியன்மகனாகிய சுக்கிரீவனையன்னைகளால் விதிமுறையே மகுடாபிஷேகஞ்செய்துவாவென்றுகட்டளையிட்டனன். இளையபெருமானும் அனுமானைநோக்கி அம்மகுடாபிஷேகஞ் செய்வதற்குரிய பொருள்களையெல்லாஞ் சித்தஞ்செய்யென்றலும் அனுமானும் சுத்தோதகமுதலிய தீர்த்தமும் பொன்முடிமுதலியவும் பிறவும கொணர்ந்து வைக்கவேதியர்களாசிவழங்க தேவர்கள் மலாமாரிபொழிபத்தான் அச்சுக்கிரீவனுக்குப்பட்டாபிஷேகஞ்செய்தான், அவ்வாறு செய்யவே சுக்கிரீவனும் அவ்விராகவனையடைந்து அவனது பாதங்களைவணங்க அதைக்கண்ட அவ்விராகவனும அவனை மார்போடிறுகத் தழுவிக்கொண்டு வேண்டிய புத்திமதிகளையும சொல்லியருளினன்.

அப்பா! சுக்கிரீவா! இக்கிருந்து நீ கிட்கிந்தைக்குச் சென்று வேண்டுவன வற்றை மரபினெண்ணி விதிமுறைசெய்து நீமேற்கொண்ட அரசியற்கேற்பயாவையுஞ் செய்துமுடித்துப்போரின்மாண்ட வாலி புமாரனாகிய அங்கதனேடு பெருஞ்செல்வத்துடன் வாழவேண்டுகிறேன, மேலுமவாய்மை நியமித்திய நட்பணைந்துகுற்றமற்றதொழிலையுடையையாய்ச்சேய்மையோடு அணியையின்றித் தேவனைப்போல யாவருக்கும் தெரிய நிற்கவேண்டுகிறேன். யாண்டுப் புகையுண்டோவாண்டுத் தீயுண்டென்னும் அனுமான பிரமாணமாய் உன்பால் கருணையுண்டென்பது தோன்றப் பகைவருடனும் கடுஞ்சொழிகூறுமல் நகை முகத்துடன் இன்சொற்கூறும் பெரியோராகள் அனுசரிக்கும் நற்செயலைத் தழுவவேண்டும், தேவருமதிமயங்கத் தக்கசெல்வமோ உன்பால்வந்திருக்கின்றது, அதுவேவா உன் அரசாட்சிக்குரிய தென்றல் அதனையு நீயே யோசித்துப் பார். யாவரிடத்து இனிய நட்புமேற்கொண்டவனுய் இம்மூவுலகினுள்ளும் நட்பினரொழிய அயலவர் பகைவனென்பதின்றிநடந்துகொள். செய்யத்தக்கனாரியங்களையேசெய்யவேண்டும். தீயகாரியங்களையோயாண்டுஞ் சிந்திக்கக்கூடாது. யாதோனுமொருகாலத்தபோதும் இனியவை கூறவேண்டும். மெய்ம்மையுமொழிகளையே கூறவேண்டும். தம்மால் விரும்பத்தக்கபொருளைவிரும்பக்கூடாது.

திடியவொன்றிழந்து தாழ்ந்த காரியங்களைச் செய்துவிடவேண்டாம், இச்செயலையைக்கடந்துகூனிவிஷயமாய்ஒருதீமையைச்செய்துவிட்டமையால்ராவன்வனப்பிரவேசமாய்வந்துவிட்டதைத் தெரிந்துகொள். மாதர்கள் பொருட்டால்மனிதருக்குமரணமுண்டாமென்பதனைச் சங்கையிலலாமல் வாலியிடத்தே கண்டுகொள். அவர்களால் அல்லலும் பழியுமடைதலே எங்களிடத்தேகண்டுகொள். இதற்கேதுவேறியாது. உன்னை வந்தடைந்தவர்கள் இவன் நமக்கரசனல்லன்; நம்மை மிகவுமன்பாய்பபெற்றெடுத்த தாயென்று எணணுவாராயின் அவர்களைத் தாங்கவேணுமே. இதுகிடக்க; நீபாபாயின அவாகள் அறநெறிகடந்தால் தீயனகண்டவழித் தண்டிக்கவேணுமே. இதருந்து நோக்கியே பெரியோருமே 'கொலையிற்கொடியானை வேந்தெறுதலை பைங்கூழ் களைகட்டதனெதிர்' என்றுஞ் சொல்லியிருக்கின்றனரா. உலகின்கண் பிறபிறப்பெண்பன முறைமையாக யோசித்தாலுயிர்செய்தவினைபோகமேகுகும, அஃதொழிந்தால் இறபடி நிகழுமென்றறி, இதபாறியே 'வினைபோகமும் யொருதேகங்கண்டாய் வினைதானெழுந்தால தினைபோதனவு நிலலாது கணடாய்' என்றும்பெரியோாசெலலியிருக்கின்றனரா. பறந்திலினிச் செலலுவதியாதிருக்கின்றது, தாமனைமலரிலிருந்துலகதனைபபடைக்கும்பிரமனுக்கும்கற்பாந்தகாலத்திலமரணமுணடென்படதுமிதனியலபு. ஒருவாசெல்வமபெறுவதுமிழப்பதும் அவரவாசெய்தகலவினைபபயனென்றறி, இவற்றையெல்லாமஆராய்ந்தே யுத்தாய்ந்தங்கனைக் கண்டுபிடித்து அரசுசெய்து வாவேண்டும். இப்போது மாரிகாலஞ் சமீபித்திருக்கிறபடியால இந்த இரணடு மாதப்பரியந்தம் உன்கடலபோன்ற சேனையுடனே கிட்கிநதையே போய்ச்சேர்ந்துமாரிகாலங் கழிந்தவுடன் இங்கிகவாவென்னு நிருவாய்மலாந்தருள; அதைக்கிகட்ட மகாராசாவும் எங்கள் கிட்கிநதைபோ லுயாவுமிந்த மிடமென்பதல்லதாகட சாலைகள் மிக்க இந்நிலையிருந்துக்கு இராசதானியினிற் சொல்லத் தக்கதாகவிருக்குமே, அங்கே மனையங்களுடாந்து அருவிபொரியு மலுகளும் சூழ்ந்திருக்கும், அவ்விடத்திலே தேவரிருந்தமபோலினை எழுந்தருளியிருந்துகொணடு எங்களாற்செய்யபபட்டகுற்றவலகளையங்கிகரித்துக்கொண்டிருக்கவேண்டுகின்றேன். பின்னுமே உயனைபபடைத்து உமது கருணைக்குப் பாத்திரனுகியும் உம்மைப்பிரிந்துநின்று மெலுங்கலைடையுடனேலவமானதுபெற்றும் பெறுமை போலாம். உலகமாதாவாகிய சானகியாளைத் தேடுதற்குரியகாலஞ்சமீபிக்கிறவனையிலும எம்மோடிருக்கமே வேண்டுமென்றுநியாகவனதுபாதகாமனையை வணங்கிக்கேட்டுக்கொணடான. இவ்வாறு சொலலவனைக்கேட்டகாசாதிகுறுகைகடுரிந்து வேந்தாகளிருக்குமதிருமாளிகையில எம்போன்றவிரதியரிருக்கக் கூடாது. அடபடிதானுமேகயிருப்பனுனல் என்னைப் பாதுகாப்பதிலே உனக்குக் காலப்போக்காம. உனக்கும் இப்போதுணடான அரசியல் நடத்தவுமுடியாமற்போய்விடும், காலை பதினைன்குவருஷம் வனவாசஞ்செய்து வருகின்றேனென்று தாய் சொல்லிமற்கொண்டு வந்திருக்கின்றேன். காலை அரசரிருக்கும் வளாகத்திற்சென்று வசிப்பதடாது. தான் சானகியைவிட்டுப் பிரிந்திருப்பது பற்றியெனக்கிங்கேயென்ன சித்தமகிழ்ச்சி, சானகியோ அருக்கனிட்ட

கடுஞ்சிறையிலிருக்க என்னுருயிர்போன்ற துணைவரோடும் அளவிடப்படாத இன்பத்தைப்பெற்றுக் கொண்டிருக்கிறு னிராமனென்ற கொடுஞ்சொல் மும் மையுலகத்தினிடத்துக்கற்பாந்தகாலம்வரையிலுழுற்றலாமோ ! அப்பா! யின் னும் இல்லறந் துறவாதவர்களுடைய இயல்பையெதிர்த்து போரில்வில்லின் கருமத்தைத்துறந்து வாழ்கின்றேனென்ற உணமையேயல்லாமற் துறவறமேற் கொண்டு இப்போதடைந்த தீமைகளெல்லாம் தீரும்படி இல்லைத்துறந்தமை யால் வந்தகுற்றமறத்தவஞ் செய்வேனென்று சொல்லிவிட்டுப்பின்னும் உன் னரசாட்சிக்குரிய காரியங்களையெல்லாம் செய்யத்தக்க வண்ணமாகச் செய்து விட்டுஉன்கடல்போன்ற நெடுஞ்சேனையுடனேஇங்கேவந்து சேரவேண்டுகிறே னென்று கட்டளையிட, அதைக்கேட்டுச் சித்திரப்பதுமைபோற் கேட்டிருந்து கண்ணீர் விட்டுக்கொண்டே சுக்கிரீவன்கிட்கிந்தையைநோக்கிநடந்தான்.

பின்பு அங்கதப்பெருமான் இரகுநாயகன் சேவடியைவணங்க அவனைக் கார்முகில் பொருவும் கருணைக்கடல் அருளால் நோக்கி நீ மிக்கவொழுக்க முடையை யாதலால் நீ இவனைப்பெற்ற தாதையினும் பெரிய தாதையேயாக வெண்ணி நடந்து கொள்ளென்ன, அவனு மதைக்கேட் டகன்றான். பின்பு அனுமானை நோக்கி நீ சுக்கிரீவாக்கினைக்குத் தக்கபடி நின்று அமைச்சுத்தொ ழில் மேற்கொண் டிருவென்றான். பொய்யிலா வுள்ளத்திலன்பு பொழி கின்ற அனுமானும் இவ்விடத்திலிருந்து தேவரீருக்குக் குற்றேவல்செய்து கொண்டிருக்கிறேனென்று தன்கருத்தைக்காட்ட,இரகுநாயகனே இனி வாலி யாலே யாளப்பட்டுவந்த வரசைவேமெறுருவனுகிய சுக்கிரீவன் வலிதிற்கொண் டாளப் போகின்றானே!அதில்நன்மையுந்தீமையுந்தோன்றும்ஆகையால்அப்பா! உன்னையொத்த சிறந்த வறிவுடையவர்சகாயமிருந்தாலொழிய வேறுவகையா லரசு நிலைபெறமாட்டாது. நீதான்சுக்கிரீவனுக்குரிய அரசகாரியத்தைநடத்தி எனக்கிசைந்து சானகியைத் தேடுங்காரியத்திலும் தலையெடுத்துக்கொண்டு கண்டுபிடிக்க வேண்டுமே யொழிய வேறுருவாற்சாத்தியப்படுங்காரியமு மன்று, அறத்துருவம் போன்றானே!நீயேபோகவேண்டுமென்றான். அதைக்கே ட்டமாருதியும் தேவரீர்ஆணையே நான் போகவேண்டுமென்றுல்கானப்படியே செய்வது என்கடமையென்று விடைபெற்றுச்சென்றான்; பின்பு இரகுநாயக னும் தம்பியோடும்வேறுருமலையையடைந்தனன். இவ்வாறுதாசரதிகட்டளை யினுற்சென்றசுக்கிரீவன்தன்படைமுதலியவற்றுடன்கிட்கிந்தையிற்சென்றுதா னையைவணங்கி அவளைத் தாயாகவும் இராகவன்திருவாக்கே தந்தையாகவும் கொண்டு தானரசுசெலுத்தியாவருஞ்சுற்றம்போலுதவவானராராச்சியமுழுதும் தன்செங்கோல்செல்ல அங்கதப்பெருமான் இளவரசுகட்டத்தவிருந்தான்.

ஆசியற்படலம்.

முற்றிற்று

கார்காலப்படலம்.

இவ்வாறுஇராகவன்திருத்தம்பியுடன்அவனற் சமைக்கப்பட்ட பன்னசா லையில் இனிது வீற்றிருக்கையில்பெருமையை யமைந்தவடதிசையின்றுசூரி யன் பதுமைபோல மிக்க பேரழகினையுடைய சானகியாரைநாடி முன்னே தென்றிசைக்கேகிய தூதனென்னச் சென்றான். ஆயிரம் பணைகுடங்களா லும் அனந்தன் தாங்கப்பட்ட நிலமே தகளியாகவும, கடலே நெய்யாகவும், சூரியனே விளக்காகவும், மேருமலையே அழகிய திரியாகவும், அதில்தங்குமிருள் போல மேகமானது தோன்றியது. பொருந்துத லருமையான ஆலவிடத்தை யமுதாகவுண்ட இறைவனது கண்டம்போலக் காட்சியிற் பொலிந்துவிண்ணக மிருண்டது. சூரிய கிரணங்கள் தண்ணியவாகி மெலிந்தன. மேகமெங்கும் படர்ந்தது. மேலும் அதுவிடமேபோலும் நெடுங்கடல்போலும் மாதராரம்மை யுண்ட கண்ணேபோலும் அவிழ்ந்த கூந்தலேபோலும், வஞ்சனையுள்ள அரக் கர் மேனியேபோலும் அவரது செய்கையேபோலும அவர் நெஞ்சேபோலும் இருண்டது. வான்மீன்போலப் பெரியகடனீராவின்மிகஇச்சையாலுண்டமேக ங்கள்மின்னுவன, வாளாற்றங்கைகளிற்கலந்த் போரில் மதமொழுகும்யானைக ளில்நிறைந்த புண்கள்திறப்பனபோலுமிருந்தன. நீலநிறமிகுந்தயானைகள் நினை படவைத்த தன்மையேபோலச் சூற்கொண்டமேகக்கூட்டங்கள்நெருங்குவன அலைகளை யெறிகின்ற கடலேயொத்து வான்மேல் நிறைத்தாற்போலு முழ க்கமிருந்தது. மின்னல் தோன்றியது திருமால் முதலிய தேவர்களினுடைய ஆபரணங்கள்விரித்திருப்பதுபோலும்மலைமேல்தீத்தோன்றுவதுபோலும்திசை கள் சிரிப்பனபோலு மிருந்தது. திசையாகிய கம்மாளன் மேகத்தாலிருண்ட ஆகாயமாகிய கரிக்குவியலில் வாடைக்காற்றுகிய துருத்தியிட்டதே, சென்றி. உமிழுமுலையுமொத்தது. மேலும் அம்மின்னலெல்லாம கணவனைப்பிரிந்து முலும் மாதர்களும் பிலத்துள்ள பெரும்பாம்புகளும் வருந்தியுயிர்நடுங்கும்படி சூரியகிரணங்களையரிந்தாற்போலவுமஇடியினதுகாவேபோலவும எட்டுத்திசை யிலும்விரிந்ததன்றிச் சூடிக்கொண்டமணிமுடியையுடையகுற்றமற்றவித்தியா தரர் கூடாகிய உறையினின்று நீக்கிய உதிரந்தோய்ந்த வாட்களும் திக்குப் பாலகர் பெயருந்தோறும் அவர்களேறிச் செல்லும் திசையானையின் நெற்றிப் பட்டத்தினொளி பிறழ்வதும் போலிருந்தன. அட்டமா நாகங்கள் எட்டுத் திசைகளிலும் நின்று தங்கள்நாவைவளைத்தாற்போல் மின்னல்தோன்றக் கண் ணன் திருமேனியேபோல நிறங்கருகிய கரியமேகங்கள் உள்ள நிறைந்த உயிர்ப்பென்னும்வாடைக்காற்றை வீசியும், தலைமையுங்கீழ்மையுந்தவிராமல்ம லையிலு மரத்திலுமற்றும்பலவற்றிலும்விலையையெண்ணிப்பொருளுள்ள வழிப் பிரிந்துவிடும் வேசையருள்ளமேபோல அவ்வாடைக்காற்று லுலாவியது. மேலி டம்ஆரவாரித்தெழுகின்றதுகள் ஆகாயத்தையடைத்தலானும்மின்னல் மிகுத் தெழுகின்ற வாள்போலத் தோன்றும் கொள்கையாலும் சேனையிலடிபடுகின்ற மூரச வாத்தியம்போல விண்ணில் சத்திக்கின்ற வலியினாலும் போர்க்களமே யென்று சொல்லச் சிறந்தது. இனிய நகையுடைய சானகியாளைப் பிரிந்த

இரகுநாயகன்மேல் மன்மதன் பஞ்சபாணங்கள் வழங்கிறற்போலப் பொன் மலைமேற் பொழிந்த தாரைகள் மின்னழிலோடு நெருங்கின. மலையிற்றோன்றும் சீர்த்தளியாகிய திவலைமேகத்திலிட்ட வில்லினின்றும் பெய்கின்ற பாணமே போல, விசையாய் விழுந்தன. எதுபோலிருந்ததெனின் இரவில் மணிகள் சிதறி அழலைச் செய்வதுபோலும்மேகத்திற்பிறந்தசெங்கனலேபோலும்விளங் கின. பகைவருடைய மாறுபட்ட சேனையாவது பெருமிதமுள்ள யானைமேல் வெள்ளிவேலை யெறிவதே போலிருந்தமேகத்தின் தள்ளுதற்கருமையானநீர்த் தளிபடத்தகர்ந்து சாய்கின்றமலைகள் புள்ளிபெற்ற வெம்மையாகியமதயானை புரளாநிற்பனபோலும்.

வானவில்லே மன்மதன் கையிற்பிடித்த கரும்புவில், மழையோ பஞ்சபா ணம், அம்மழைத்தளியோ பெருஞ்சார்பாகியதுணைவனைப்பிரிந்த தன்மையை யுடையவர் ஊரிலாகிய உடம்பிலெல்லாம் அப்பாண மூழ்குவதுபோலும். இது கிடக்க இராகவனும் கவிகளுமாகச் சேர்ந்துகொண்டு கமபகையையொழி த்தனென்று சொல்லிக்கொண்டு தேவர்களெல்லாமாரவாரித்தாற்போலமேக மாரவாரித்தன ; அவர் பொழியுமலர்மழைபோலநீர் மழைபெய்தன. அழகிய வில்லைக் கையிலேகொண்டு வாட்படைபேந்தி ஆகாயமார்க்கமாகப் பெண் ணருங்கலமாகிய சானகியானைக் கவர்ந்துபோகையில் அப்பெண்ணழுது கண் ணீரவிட்டுக் கதறியழுததுபோலக் காமனழைபெய்தது, தலையில் விளங்கும் சந்திரனையணியும் பரமசிவன் ஆகாயத்தி லுலாவிக்கொண்டிருக்கும் முப்புரங் களையு மெரிக்கவரும பாணத்தையொகுமன்னினம். அது அத்தாலாவு கின்றபோதுதீபபொறிசிதறும் வெகிணலை ஆடவாமார்பைவருத்துவதைபோலப் பிரிந்தவர்கட்கெல்லாம் வருத்தமுணடாக்கும். அம்மழை பொருள் வயிற்பிரி க்கதலைவனைத் தன்தேரி லேறிவரச் செய்கின்றமையால் மயக்கத்தைத்தரும் பிரிவென்னும் பெரும் பாம்புகடக் கருடனைப்போலவும் விளங்கும். பாதிரி மலர் வறுமையடையவும் சூரியன் தன்காந்தியிழக்கவும் கோடல்கள் பூக்கவும் குவளைமலர் சிறுமையடையவும ஆடுகின்றமயிலகள் பேசாமலடங்கின, குயில் தன் கணவனைத்தேடித் தளர்ந்தார்போலும செல்வமுண்டாகக் களிச்சி யடைந்தார்போன்றும்விளங்கின, பலவகைப்பானவண்டுகளுடன்மலைச்சாரலில் தேன் சிந்தமலர்ந்து சாய்ந்த சிவந்த விதழையுடைய காந்தண்மலர்களிருந்த தோற்றம் வெனிலைக் காப்பருவம வென்ற தம்மாவென்று வியந்து பார் த்துநிலமகள் கையைமறித்துக் காட்டுவதுபோன்று விளங்கிற்று. நீண்ட பற்களையுடைய பாம்பேபோலுந்தன் வன்மையான தலைகான்ற பெரியதாள் களையுடைய கோடல்கள் தம்மைத் தழுவிக் கொண்டிருந்து, காதல்மி குதியால் மீளாதனவாய் விழைவினு லுணர்வொழிந்து அப்பாம்புகளே போல வொன்றோடொன்று பின்னிக்கொண்டு குழைந்து சாய்ந்திருந்தன. வள்ளிட விடமில்லாமல் எழுந்த இந்திரகோபங்கள் அன்புடையதலைவர்தம் மைத்தழுவிப்பிரியப் புகையூட்டிய கூந்தலையுடைய மாதர்கள் பலமுறை துப் பிய எச்சிற் றம்பலம்போல விளங்கின, மேருமலையில் ஞாயல்மாத்தின் சா றெழுக அதனையுண்டாகிய பொன்னை யருவியாறடித்துக் கொண்டுவரும்,

அன்றைச் சாம்புறதமென்று சொல்வார்கள். அற்றைச் சாம்புறதம்போன்ற வேங்கை மலரையும் கொன்றை மலரையு மருவிபடிந்துக்கொண்டுவரும். காந்தண் மலரில் கொன்றை மலர் இந்திர கோபத்தைதும் தோன்றுவது வண்டுகள் இசைபாடக்கண்டு பூமியானது கன்மலாம்போன்ற கையை யேந்திப் பொன்னையும இரத்தினங்களையும் தேடிக்கொடுப்பதுபோல் விளங்கும். வண்டுகள் கின்னரம் போன்றன. மேககாச்சனை தூரியமடிப்பது போன்றன. மயில்கள் மாதர்கடிப்பது போன்றன. செந்தானறிப்பூமலர்ந்திருப்பது விளக்கினம் போன்றன. விளையின்மலர் கான்போர விழிகளைப் போன்றன. பேடையும் ஞிமிறும் பாய்வதனாலுண்டாகிய லொலியானது மாதர்கள் ஆட்குக்குரிய இயலையுடைய பாணிக் கொத்திருக்கின்றன. பாடற்குரிய தாளங் கொட்டுதற்குக் கூதாளமலா மலாவதாத்திருக்கும. கான்யாறு பெருகி வருவது மாதிலமாகியபெண் தன்மக்கட்குக் கொங்கையினிடத்துச் சுரந்த பாலொழுக்கை யொத்திருக்கும். விருப்பமிருது கேட்டவர்க்கு என்றும வேண்டித் தளிர்களாடும் கொன்றைபூந் தோங்குலை கற்பகமபோலும விளங்கும். ஆருயிரனை தன்கணவன் தோமேற் கெலலச் செருக்கழிந்தாடுங்கு மாதர்கள்கண குவளைபோற் குவிந்தன. மலைமதன்போன்ற தன்கணவன் வானவக்கணடு மனமகிழு பாதாகனையேபோல முலலை மலாந்தன. மயினங்களைக் கணைழக்கூத்தரின மெனக்கண்டு மனமகிழ்ந்து அவர்க்குப் பரிசிலைக் கொடுக்கும் மன்னாபோல மணழயருவிவழங்கின. விருந்தினர்வரவுள்ளமகிழ்கின்ற மாதர்கள் முகமேபோலக் காவிருந்தனைக் கமலமலர் மலர்ந்தன. சாதகாண்மலர் யானையுங்குடைந்து தடவிக காமநூலறிந்த விடர்போலத் தேன்கொணடு சேகரிக்கவும, பாதநூற்படி நாடகம பயன்படப் பகுப்பான் இரதமீட்டுகின்றகவிஞனையு மொததன தேனீகள். பார்வையால கம்மை வெற்றிகொண்ட சானகியாருக்கு மிக்கதுயரத்தை யுணடாக்கி விட்டான் நம் முருக்கொண்டே மாரீசனைறு அமபகிழ்ச்சியைப் பேசவடங்காததுபோற் களிப்புக்கொண்டனமானினங்கள். நெஞ்சின் மிருந்த அன்பால பெரிதும்பிரிந்து வாடுகின்றனவாகி மயக்கத்தைத்தரும காதலால மயங்கி ஆற்றிடாதோறும் கீராடப்படிநதாடுகின்ற அன்னம நாயகனை யொத்திருநதன. மேகமெண்ணும் திருமால் மார்பிலணிந்த ஒளியுள்ள முத்துமாலையையும போன்றன கடலிலுள்ள நீரையுண்டு மாலைபோன்று ஒழுங்காகப் பறக்கும கொக்குகள். நாயினங்கள் நெருங்கி மாலைபோல மேகங்களினருகே செலவதனால பாரம் பொருனென்றே வேதமளந்து சொலலும கள்ளமாமாயப்பிரானது உந்தீயம் போல விளங்கும். கொடுந்தாழிலையுடைய வேனிற்பருவ மொழியக் கார்ப் பருவமென்னும் கல்லோன் சேரமகிழ்ச்சியால் நிலமாதினுடைய உடம்புமுழுதும் புளகம் போர்த்தாற் போன்று புற்கள் விளங்கின. மயிலகள் இரகு காயகன் வருந்துவதனல் அவன்விரும்புகின்றசானகியாரைநாடி அக்கானமுழுதுங் கண்முழுதும பரப்பி நின்றழைப்பன போலிருக்கும். வீரர்கள் குடுமியிடத்துச் செங்நிறந்தரும் மாதர் பந்தடி-போல் தாமரை மலர்ந்து விளங்குவன. அம் மாதரிடைபோற் கொடிகள் அசைந்தன. நீங்கள் அவர்களுடைய குதலை

போன்ற மொழியை யுடையீராதலால் என்னைவிட்டு நீங்கிய சானகியாளைக் கொணர்ந்துதர வேண்டுமென்று இராகவன் சொல்லத் தேசமெல்லாந்தினி க்துவந்து கூவிக் கூவிக்குரலடங்கியவாறுகுயில்கள்போல விளங்கும். மாதிலம் புல்லிலத்தரக்குமட்டியன இளங்கன்று; அங்கேயுள்ள ஆம்பிகள் கட்டிதத்தயிரை யொத்திருந்தன, பிடவமலர்பாவின் நாளையென்று விளங்கும்; வேங்கை மலர்குறமாதர்கூந்தல்விளங்கும், நுளைமாதர்கூந்தல்புன்னை மலரிருக்கும், இடைச்சியர்கூந்தலில் முல்லைமலரிருக்கும. பள்ளச்சியர் கூந்தலில்நீலோற்பல மலரிருக்கும், இராமன் சானகியினதுதிருமுகத்தைக் காணுனுய்யாரைக்கண்டு கான்உயிரையாற்றுவான், மெய்புணர்ச்சியைநீங்கியிருக்கின்றான். மன்மதனுக்கு எண்ணிலாத பாணங்களைவகுத்துக்கொடுத்த கார்ப்பருவம்வரக்கண்டு வெம் மையான துயரத்திற்கவலைதுறைகாணமலிருந்தான். அளவிடப்படாதகாலை ன்னும் அப்பருவம்வந்தடைந்தால்மனத்தளர்ச்சியுடையவராவரென்பதுதவஞ் செய்வார்க்குத்தகுந்ததே, தேனினும் அமிழ்தினும்சொல்லமைந்துவேய்போல் கின்ற தோளையுமுடையாராகிய சானகியாளைப் பிரிந்திருப்பதனலவன் வரு த்தமடைவனென்பதும்சொல்லவேண்டுமோ! காவிமலரையும்கருங்குவளைமல ரையும் நெய்தன்மலரையும் காயாம் பூவையும்போல்பவனுகிய இராகுநாயகன் சிறிது மனந்தளர்ந்து புலம்பி ஆவியுஞ் சிறிதுண்டென்னும்படி சங்கேதிக்கச் சானகியார் பிரிவைநோக்கிப் பின்வருமாறு புலம்பத் தொடங்கினன்.

நமது சானகியாளை மறைத்துவைத்திருப்பவராரோவறியேன்; நானுமுயி ரோடுழல்கின்றேன். நீரோயுடைய என்னிடத்தே யருளில்லாம லிருக்கின் றனையே! மழையே என்னுவினையைக் கலங்கச் செய்யலாமோ! நீ வெப்பமிகு க்த மின்னலைப் பற்களாகப் பெற்றிருக்கின்றனை, எப்பக்கமும் கோப மிகுந்து ஆகாயத்தி லிருண்டெழுகின்றனை, அப்பாதகராகியவஞ்சமிகுந்த அரக்கனைபு மெல்லா விதத்தாலு மொத்திருக்கின்றனை, நீ என்னுயிர்கொண்டா லல்லது போகாய்போலும். வெல்போலும் கண்ணையும் அழுதம்போலும் குயில்போ லும் சொல்லையுமுடையாராகிய அச்சானகியாளைக் கொண்டுவரவேண்டும்; அவளைக் காணுமல் நான் கண்ணுறங்கேன், என்னுயிர் சோர்வதையுமறிவாய், மயிலே நீ யென்னுடன் வாதாடுவது நன்றே! வானைக்காற்றே டாடிவலிந்து என்னுயிர்மேல் நுழைகின்ற கொடியே! எமது சானகியாரதுஇடைபோலிடை யே குழைகின்றனை, நீயுமென்னுயினைக் குழைப்பாய்போலும். எனக்கு விரு ப்பமானவற்றை நானும் விரும்பேன், மேன்மையினின் றிழைக்கேன், உணர்ச் சியுமுடையேன், அனையில்லாமையால் பிழைக்க மாட்டேன். அச்சானகி யாரோ என்னுயிரோடு பிரிந்துபோயினர், மானே அவரெங்குள்ளார் சொல்ல வேண்டும். பாடகமணிந்த மெல்லடி பஞ்சியூட்டி யிருக்கத்தக்கார், என் பாற் கோபஞ் சிறிதேனு மில்லாதார், நீயுமவருடன் போகின்றனையோ! சங் கேதியாமல் உடனே போவாயலையோ! உயிரோ என்னுறவைச் சிறிதேனுமறி யாய்போலும். ஒன்றைச் சொல்லவேண்டும். நீயோ குழலுக்குத்தோற்றுப் போகின்றனை! வயிரம் பெற்றிருக்கின்றனை, கொன்றையே நீயும் சானகியா ளைக்கொணர்ந்துகாட்டமாட்டாயோ! நீ என்றைக்குந்தானென்னுடறவாளுய்,

குராவருமேபோன்றகூரிய பல்லையுடையராகமவிடத்தாற் கொல்வதுபோலும் முலலிமலா துயரமூட்டி நீங்காதுவருத்துவதுதானே இராவண கோபகிற்க இந்திரகோபமென்னே! சானகியானை யொளிக்குமுபாயந்தெடி மாரீசனும் பொன்மானுருக்கொணடு வஞ்சித்தானே! வாடைக்காற்றுகிய யமனும் தன்னுருவமாற்றியே வந்திருக்கினறானே. கேடுநினைப்பவர்க்கு வேண்டியவுருவமெல்லாமெடுக்க இயைந்ததலலவா! என்றும தீயவரக்கனெனனுப்படி ஆகாயத்திலு யாவருமயங்குமபடி முழங்குகினற மேகமே! நீயுமின்னுகின்றாயோ! தருவேனென றிரக்கங்கொண்டாயோ நீயும சானகியுருவத்தைக்காட்டி காட்டி மறைக்கின்றாயே! உள்ளே நிறைந்து பெருமூச்செறியும வெப்பம் உடலெயுயிருடன்வருத்தி உள்ளமே புண்ணுகப்பாணங்கள் தூர்க்கும் தன்மை பழுதாகும இனி மன்மதனேபோ! உன்னைச் சகலகலாபாரங்கதனுகிய இளையவன் காண்பானுனுல் அவனது கோபத்தையடக்க வல்லவரா நிருக்கின்றனர். வீராகள் போர்க்கருதினுர் மேல் வில்லும கணையுமகொணடு போர்செய்யார்கள். அவ்வாறு செய்வது விரம்மெவன்டாதா வாழ்க்கையேயாகும், இரவும்பகலுநீங்காமல என்னுடன் போராடுகின்றாயே! அருள் சிறிதுமிலலாதிருக்கின்றாயே! நீ போபென்றெளிதாக வேணடிகொள்ளும எம்மையுமிப்படி வருத்தலாமோ என்று இவ்வாறு பலபலதன்பெருமைதானறியாத் தன்மையனுய் வருந்துகின்றஇராகுகாயகனை நோக்கிச்சாலவருந்தியதம்பிகின்னையென்ன தன்மையனென்றெண்ணி வருந்துகின்றனை! எனறுதலைமேற்கைகூப்பிப்பின் வருமாறு சொலலலானுன்.

மாரிகாலம் வருதென்ற கவலைக்கோ! அரக்கா வலலமையை நினைந்து வருந்திய தன்மைக்கோ! வானிசனை எமதன்னை இருக்கும் இடமறிந்து காடி வரமாட்டாதென்பதற்கோயெண்ணி வருந்தலானுய்! வேதமெகலங்கினுலும் சந்திரன் நிலைகலங்கினுலும் வானும் கடலசூழ்ந்த உலகமும் நிலைகலங்கினுலும் நீ நிலைகலங்குவது மியற்கையோ! அரக்கா பெருமைமுழுதும் நீசிறிது புருவத்தை வளைப்பாயானுல் இருக்கும் பரிசாமோ! அநுமனென்பவன் அளவறிந்திருக்கிறும! அங்கதன் முதலானவர் எத்தன்மைய னென்பதாகிய முடிவறியாதிருக்கின்றும். மாரிகாலமோ கழிந்துவிட்டது! சானகியாரோ இனிவந்து சேரப் போகின்றனர். உன் துயரத்தை நீங்கிவிடு முன்னுளில் தண்டகாரணியத்தில் முற்றத்துறந்த முனிவர்கள்எல்லாமவந்து எங்களைவருத்துகின்றஅரக்கர் பயம்கெடுக்கவேண்டுமென்று வேண்டிக்கொள்ள நீங்கள்பயப்படவேண்டாம், அந்தவஞ்சகனை வழியோடு மழிக்கின்றேனென்று அபயங் கொடுத்திருக்கின்றீர்! அதுவும்தானை வந்துசேர்ந்தது. அவர்களையெலலா மொருசேரமுடித்துக் கீர்த்திபெற்று தேவர்களையும் தத்தம்பதவிகளிலும் வாழ்விக்கவேண்டுகின்றேன். வெற்றியுமக் கல்லது அரக்கருக்குமுண்டாமோ! நீர்வேதனைக்கிடமாக வருந்துவது உமது வீரத்தன்மைக்கடுக்குமோ! உம்மால் முடியாதகாரியம்யாதிருக்கின்றது. வருந்தவேண்டாமென்று தம்பிசொல்ல அதைக்கேட்ட இராகுகாயகன்கொண்டு வருத்தமீண்டு மதிகரிக்கமீண்டு மழைபெய்யத் தொடங்கியது.

அத்தருணத்தில் குளமெல்லாநிறைந்தது. அலைகள் நெருங்கின, கருங் குயில் வாயடங்கின. உயர்ந்தமலைகளுங் குளிர்ந்தன, திசைகளெல்லாம்மறைத் தன. தலைவனைப்பிரிந்த மாதர்கள் வருந்தினர். அன்றிலுடன்அன்றில் உயிர் பொருந்தத் தழுவிக்கொண்டிருந்தன.மாதர்கள் ஆடும்ஊசலைத்தொடர்ந்துவா டைவீசியது. அவ்வாடைக்காற்று ஆசைமேற்கொண்டார்மேற் கூரிய அம்பு போற்பட்டு வருத்தியது. கடலும்நிறைந்தது, வெப்பமுள்ள சூரியகிரணங் களும் தண்ணியகிரணமாக விளங்கின, கன்னலாலல்லாமல் மாலையும்பகலுமறி வரிதாயிருந்தன. நெற்கிழியும்படி நெற்பொதி நிரம்பின, கிளிகள் நிரம்பாத சொல்விழியவும், முத்துகள் பற்கிழியவும், பாதர்முற்றத்தில் •கிளையொடு கூடிய புன்னைமரங்கள் பொற்கிழிவிரித்தன. நிறங்கருகுகின்ற கங்குல்பகலி னின்றன, அறங்கருதுகின்ற சிந்தையையுடைய அந்தணர்போல ஆலங்கட்டி கள் நெடுந்துளிசிதறின. மலைகளில்யானைகள் உறங்காமல் விலகாதிருந்தன. சந்தனவிலையாலாகிய வேதிகை யிடத்திலெல்லாம் அந்திக்காலத்தி லெடுகின்ற அகிற்புகையால் நடந்தகுளிரையுடையஅன்னம்மந்திதுயி லும்குகையில்இந்திய மவித்த யோகியர்போலிருந்தன. சுனைகளிலும்அருவிகளி லும் மாதர்கள்கூந்த லின்மணந்தோன்றுதிருந்தன. தினைப்புனத்தில்கவணினின்றுமணிகள் மேகம் நெடு மழைத்துளிவீசுவதனல் வீசாதொழிந்தன. தாழைமடல்களில் காதல் தரும் தன்மையையுடைய மலர்கள் கிளைகளில் பொருந்திவிளங்க, நாரையின் பெடைகள் ஆடவனைப்பிரிந்த மாதரோபோலும் சிறையொடுங்கி யுடல் பேராதிருந்தன. பதங்கள் முழவொத்தன. சுரும்பும், ஞிமிறும், வண்டும், சு ம்பியும் பாடிக்கொண்டிருந்தன, மயில்கள் மதங்கியனையொத்து நடித்தன. மரத்தின் மேகங்கள் முழங்கவொதுங்கின, விளக்கொளியை யகிற்புகைவிழு ங்கப் படிக்கையில் மெல்லியபூங் கொம்பேபோலவருந்தும் இடையையுடைய மாதருமாடவரும்மறவும் மலர்த்தவிசை நீங்கி சந்தனமரத்தாலையில் துயில் செய்துகொண்டிருந்தன, தாமனைத் தவிசை நீங்கி அன்னங்கள் மாமரங்க ளின் பொதும்பரில் நுழைந்துகொள்ள மரங்களினடுக்கிலாகிய பரணிடத்தி லிருந்தகுடிசையிற் குறமாதரும் ஆடவரும் துயில்செய்துகொண்டிருந்தனர். வள்ளிக்கொடி பக்கங்களிற் சுற்றிக்கொண்டிருக்கு முயர்ந்த பச்சிலைமரந்தோ றும் ஆடுகளொடு மிடையர்கள் வசித்திருந்தனர், கள்ளைப்போல் ஒளித் துழல்கின்ற பேயுமொடுங்கிப் பல்லைக் கடித்துக்கொண்டுபெயினல் வாடியிருந் தன. மழைத்துளியை வீசுமேகங்கள்சாரவானைகள் ஒளிக்க நினைந்து பிலத் துவாரத்தில நுழையும். இவ்வகையான மாரியினு ளிருளடையச் சானகி யார்மேல்வைத்தசிந்தையறாது நெட்டியிப்புடையானைஇளையவனைநோக்கிச் சொல்லலாயினன். இராக்கதமாயை யென்று தெரியாமல் சானகியாரும் தெரியாம லகப்பட்டுக்கொண்டு துன்பத்தினல் மிகவும் வருந்துவாள். உயினையும் விடுவாள். எனக் கொன்றுலும் பிழைப்பில்லை, இதென்ன தன்மை? மேலும் வில்லுங்கையுமாக நானிருக்கலாமோ! மன்மதபாண த்தால் வருந்துகின்ற மனமுடையனைய் மிக்க வருத்தத்துடனு மிருக் கலாமோ! சாதாரணமாக மின்மினி விளக்கெரியத் தூக்கணங்குருவிகள்

பெடையுடன் கூண்டில் தூங்காநிற்கின்றனவே. மேகமினமுவனதையும் இடிமுழக்கத்தையும் கேட்டு என்மனம் வருந்தா நிற்கின்றதே! காட்டிற்குவந்தான் செய்துவிட்ட காரியத்தைக்கேட்டு மேலுலகமும் கீழுலக முஞ் சிரிக்குமே! இனி என்னசெய்யவேண்டியிருக்கின்றது. மறந்திருந்துய்வேனே! இப்படிப்பட்ட மழைக்காலமென்றுல காளிறப்பதுமெய், இப்பழியுடன் உயிர்வாழ்வதும்தகுதியோ! நான் அங்கேயிருந்து போய்ச் சானகியை யொளித்து வைத்திருக்கும அரக்கரிடதனைதக் கண்டுபிடிக்க வதனையோ, பலயுகங்கள் வேணடுமே! அப்படி வேணடியதைபபாக்கிலும கோயால மானை. டானென்றபோபெறுவதுமிகவுங்கல்லதல்லவோ! செய்யையுருக்கிணற்போன்ற இம்மழைத்தூளிவெப்பமுறத்தேகதனைதச்சுடவெந்தழிவதோ! அக்கினி சாட்சியாக நிறுத்தி இச்சானகி உன் கையடையென்ற அந்தச் சனகராசன் உறுதி மொழியைப்பொய்யாக்கிய யானை யெய்மையடையாமாட்டாமையால், இனி இறப்பதே கல்லது! மேலும தேற்றுகின்றவனீயிருக்கின்றாய், ககதேதறிகின்று துன்பமாறியிருக்கின்றேனைகளும சானகியுபனைகன்னுகுதேன்றுவாளல லள்; இத்துன்பத்தை யாதான்மாற்றுவாகள். துயபதந்நிகோரெல்லையுமுண் டோவென்று தம்பியையோக்கிச்சொல்ல, அதைககேட்ட இளையபெருமானும நீரெண்ணுகின்றதென்ன! மழைகாலமும் கழிவதாயின, காமும தேடிதற்கு ரிய காலமுங் கிட்டிவிட்டது, ஆதிபகவன அமுதத்தைக் கடலினின்று பெறுவதாயினும் அத்தொழிலே விரும்பாது மந்திரகிரிமுதலிய உபகரணங்க ளாக்கொண்டு கடலைக்கடைந்து தன்னையா லமுதமபெற்றுச்சிறந்தான். மனத்தினல் உலகத்தையெலலாம் வகுத்து வாயிற்பெய்யும கினைப்பினையுடைய னையிருந்தாலுமஅவன்அனேகம் படைக்கலமகொண்டு யாரையுமவறறிகொள் வான். நெற்றிமேலொற்றை காட்டம்பற்ற கடவுட்பெருமானும திரிபுர தகனஞ்செய்யத் தொடங்கியகாலத்தில எணணிய எண்ணங்களுமதான் தேடிக்கொண்டனவும ஒருவரு மறியாததோ! ஆகதத்தபோனையுமதுனை வர்களாக்கிப பினனேருங்காலத்தி லெனனெனித் துணிவதாயின் வெற்றி கொள்வதும வழுவிப்போமோ! தருமமாக்கந்தையுங் கடந்தவாகள் வல்ல லமையு முடையவாகள் வீரதொழிலே கமக்கென்றெண்ணும தன்மையர்; அவ் வரக்காகொடுஞ்செய்கை முன் நனனெறியே! திருடபுமானுல்பார்க்குமிடத்தே வெற்றியமையும் என்று சொல்லிக்கொணடிருந்த அமமழைகாலமும் கழிந் தது. பின்னுமது அழியாத பெருங்கோடை மருவி சான்றோர் வெண்டிய பொருளையெல்லா முதவி தம் கைவறண்டபோது யாசகாக்கு ஈவதில்லாமை யால் வெட்கமடைந்த மனிதர்போல மேகங்கள்வளுத்தன, தீவினை கல்வினை யென்னும்படி தோன்றியவினைகளை யறிந்து தாமபெற்ற ஆராய்ச்சியாகிய மெய்யுணர்ச்சியணுகக் குற்றமுறு மாயைபோல மழையிருண் மாய்ந்தது. போர்க்களத்தில் யுத்தமொழியவே முரசத்தின் ஒலியடங்கிறற்போல மேகங் கள் குமுறலொழிந்தன. போரில் விடுமம்புகளைபோலத் தளியு நீங்கின. வா ளுறையடைந்தாற்போலமின்னலு மறைந்தன. மேகங்கள் பெரிய மலைகளின் புறத்து வீதலால் வாளுறுவருவாயற்றன மிகமுயன்றரித்தேடிய கற்பொருள்

போய்விட நல்வழியில் ஒழுகாதவன் செல்வத்தை யொத்திருந்தன. மதச்சுவ டழிந்து எழுகின்றமேகங்கள் இடைநீங்கிச் செல்வதினுல்சந்திரனும் விளங்க மா டந்தோன்றியது கடத்தினிலக்கணம் பயில்கின்ற மாதர்கள்முகம் திரையினி ன்று நீங்கத் தோன்றியதுபோல விளங்கியது, பொன்னுபரணமணிந்த மாதர் கள் முலையிற்பூசிய சாந்தினைப்புலர்த்துகின்ற குங்குமம் நெருங்கி மட்சேறு ழிய மொண்டு நறுமலராவிணடு வாடைக்காற்றுவீசிற்று. மன்னவன்மகனுகிய தாசரதியினது வருத்தத்தை நீக்கும்படி அப்பருவம்வந்தமையால் சானகியா ரைத்தேடுகின்றேமென்பதுபோல அன்னம பலதிசைகளையு நாடிச்சென்றன. தங்கள் சிறையொடுங்கித் துன்பத்திற்கிடமாய் நெஞ்சிற்பயனற்றனவாய் கினை ப்பு மிகுந்ததாய் மழைபோகவேலமயில மிதிலைநாட்டன்னம்போற் பிரிந்து போயின. வஞ்சனையுந் தீவினையு மறந்த பெருந்தவத்தவர்கள் மனமேபோல நீர் தெளிந்தது. நீடுதாறும பஞ்சனைச்சிவக்கும மெல்லிய பாதங்களை யுடைய பேதைகள் அஞ்சனந்தீட்டிய கண்ணேபோல மீன்பிறழ்ந்தன. முதிர்ந்த தாமனைகள் வாடியமாதர்கள் முகத்தைப்போன்றன. முகைவிரிந்த செங்கிடைஉடல்நீங்கிப் புணர்ந்த மாதாகளுடையபவளம்போன்ற இதழ்க்கோ லங்கண்டன. கல்வியை முன்னே பழகும் கணக்காயர் முன்னே கற்பிக்கும் பலவகையான சிறுபிள்ளைகளைப் படிபடிப்பதுபோலத் தவளைகள்சத்தித்தன. செல்லிடத்திலேயல்லது ஒன்றையுமறிவிக்காத நல்லறிவாளர்போவடங்கின. மிக் கநீரோலாகிய பூந்துகிலை அலைகளாகிய கைகளாற்றினைத்துக் கான்மடித்தொத் ததுபோன்ற ஓதநீர்க்கடலாகிய கணவனையடைந்து ஆறுகளெல்லாம் முத்து களை யீனுவது முறுவலிப்பதுபோலிருந்தன.

கார்காலப்படலம்

முற்றிற்று.

கிட்கிந்தைப்படலம்.

அக்காகாலமொழிந்தவுடனே இராகுகாயகன்இளையவனைநோக்கித் தம்பி தான்சொன்னதவணைகழிந்தும் மகாராசாவரவில்லையே! நாம் செய்கின்றவகை யென்ன? பெருஞ்செல்வம்பெற்றுதவினையச் சிறிதேனு மறியாம விருக்கின் ருன். சிறப்பினின்று நீங்கினன். அறத்தைமறந்தனன், அன்புகிடக்க நம்வி ரத்தன்மையுமறியாம விருக்கின்ருன், வாழ்வின் மயங்கிக் கிடக்கிருன். நன றியைமறந்து நட்பிலுலாகிய அன்பினையொழித்து மெய்மைசிதைத்து சொ ற்றவறியபவனைக்கொன்று களைதல்குற்றத்தினீங்கும்; நீ சென்றவனெண்ணத் தை யறியவேண்டுகிறேன். கண்டகர்கள் விண்ணிற்புகவேரறுத்து இவ்வுல கத்தில் அறத்தை நிலைநிறுத்தப்பிடித்த வில்லாகிய கொம்புண்டு, கூற்றுவ னுமிருக்கின்ருன், உங்களம்பு மிருக்கின்றதென்று நம்மானையைத் தெரிவி. கொடியவனை வருத்தினுல் அது வஞ்சகத்தன்மையேயன்று மனுவழக்கே யாம். அஞ்சிலறியாதவன்ஐம்பதிலொன்றறிவானு? அவன்நெஞ்சிற்பொருந்தவறி

விக்கவேண்டும். ஊரும் அரசும் சுற்றமும்நீயாண்டுவரவேண்டுமென்றுசொல்ல நம்பாலவன்விடைபெற்றுப்போனசமயத்தில் வைத்ததவணையைமறந்தமையால்குரங்கென்னும்பேரோதவ இண்ணம் செய்துவிடுவேனென்பதையும்உறுதியாகச்சொல்லு. நம்மைப் பார்க்கிலுமிக்க வலியுடையானைத் தேடிக்கொள்வோமென்றெண்ணுவானேயானால்,உன்னைவெல்லஇமமுமமையுலகத்துமரீயல்லாமற்பிறரின்மையையுமறிவிக்கவேண்டும. நீதியாகவெடுத்துச்சொல்லு, அதற்கு அவனிணங்காவிட்டால் அவன்மேற் கோபியாமல்அவனசொன்ன சொல்லைமீண்டுமெனக்குத்தெரிவிக்க வேண்டுகிறேனென்று கட்டளையிட்டான்.

அதைக்கேட்ட இளையவனை அவ்விரகுநாயகன் சொல்லைத் தலைமேற்கொண்டு சிறிதுமதாமதியாமல் அகூயதாணீர முதுகிற்கட்டிக்கொண்டு வில்லையெடுத்துக்கொண்டு அவனைச் சிறைதையினீங்காதவனை யாயினும் வெகுதூரஞ்சென்றான். இவனைதமையன் கட்டளைபெற்றுச்சென்று மரமலை முதலியவற்றையெல்லாங் கடந்து அவனிட்டிருக்கும் வழியேசெல்லாமல் வேற்றுவழிச்சென்று தன்முன்னேறுகிய அவ்விரகுநாயகன் பாணமேபோல விரைந்துவருவதைக்கண்டவானரவீராகள் எமனைக்கண்டாற்போல் நெஞ்சங்குலைந்து அங்கதப்பெருமானையடைந்து ஐயா ! இளையவனை மிக்க கோபத்துடன் வருகின்றனென்று பயந்து கூறினா. அதைக்கேட்ட அங்கதப்பெருமானும் இன்னதென்று சொல்லாமுன்னை யறியவலைமாருதியை யடைந்து இளையவன்வரவைத் தெரிவிக்க, அவனும் அங்கதப்பெருமான் கருத்தறிந்து தன் தந்தையாகிய வாயு செல்லும் வேகத்தினுமிக்க வேகமாய்ச் சென்றான். களனியற்றிய கோயிலுள் பூஞ்சேக்கையில மாதாகள் கடல்சூழ்யிருக்கத் தூங்கிக்கொண்டிருகின்ற மகாராசாவைக் கண்டுநின்று; மகாராசாவோ சீராமபிரானுதவியபெருஞ்செல்வத்தைப்பெற்று மெய்மமறந்துகிடக்கின்றனகள். ளையுங்குடித்துக் கலங்கியிருக்கின்றன் ; இக்கள்ளையலலாமல மாதர்கள் இன்பக்கள்ளையுங்குடித்து மிகவுமயங்கியிருக்கின்றன். நான் என்செய்வேனென்று எண்ணி அப்படி தூங்கிக்கொண்டிருக்கின்ற மகாராசாவைநோக்கி இரண்டுகைகளையும் தலைமேற்குவித்து வணங்கி அங்கதப்பெருமான் துயிலெழுப்பிச் சொல்வானுயினன். எமது பிதாவாகிய மகாராசாவே ! அந்தச் சீராமனுக் கிளையவனுகிய இளையபெருமாள் மிக்க கோபத்துடன்வெகுவேகமாய்வருகின்றன்,உன்மனக்கருத்தியாதென்றன். இதமொழிசொன்னனென்ற எண்ணமே யில்லாமல் மிகுந்த செல்வச்செருக்கால் கள்ளுண்டுமயங்கித் தன்னையுமறந்திருந்தது கண்டு சிறிதுமவேறுசொல்லாமல் அனுமானையழைத்துக்கொண்டு அவனேடுமே பல படைத்தலைவர் சூழ்ந்துவரத் தன் தாயாகிய தானையினது திருமாளிகையை யடைந்து இனிச் செயத்தக்கது யாதென்று நடந்ததெல்லாந் தெரிவித்துச் சொன்னன். அவ்வாறு சொல்ல அதைக்கேட்டதானையோநீங்கள்மிக்க பொல்லாங்கெல்லாமிப்போதுதேடிக்கொண்டீர்கள். அவற்றை நீக்கவும் வகைபார்க்கின்றீர்கள், உதவியையும் கொன்றீர்கள், இனிப்பிழைப்பீர்கள்போலுமென்றுசொல்லிவிட்டுப் பின்னுஞ் சொல்லத்தொடங்கினள். உங்களைப் படைகூட்டுங்களென்று அவர்கள் சொல்லிய நாள்திறம்

பிறகு உங்கள் காள்திறம்புமென்று கேட்டிருக்கின்றீர்கள்; இனிக் கிடைப்ப தைப் பாருங்கள். வாலி யாருயிர்வாங்கிய சிராமனும் கோதண்டத்தை வளை த்துக்கொண்டே உங்கள் அருகேயிருக்கின்றனன். உம்போன்றவருக்கெல் லாம் செல்வமுங் கொடுத்துவிட்டிருக்கின்றனன். தாரை தேவியாகியசானகி யை நீங்கி ஆவிதீங்கினன்போல வருந்துகின்றனன், அதைச் சிறிதுமெண்ணு மல் உங்கள் மனைவியரோடுகூடி இன்பநுகர்ந்துகொண்டிருக்கின்றீர்கள். மெ ய்யினின்றும் திறம்பினீர்கள் கன்றியையுகொன்றீர்கள், உங்களுக்குத் தீவினை நேர்ந்துவிட்டது, புகழ்பெற வாழுவு மாட்டீகள் அவன் போர்க்கெழுந்தா ணின் ஒருங்குமாள்வீர்கள், இனிச் செய்யப்போவது யாதிருக்கின்றதென்று சொல்லிக்கொணடிருந்தாள்.

இப்புடிச் சொலலிக்கொண்டிருக்கையில் சில வானரவீரர்கள் நீண்ட தூணடார்ந்த நெடுவாயிலைத் தாளிட்டுமை பெருமலைகளைக் கொண்டுவந்தடுக்கிச் சேமித்தார்கள். அதைக்கண்ட இளையவனை தம்மைக் காத்துக்கொள்ளவே இத்தனையுஞ் சொன்னாரகளென் றெண்ணி நகைத்து தன்காளினுலெட்டி யுதைத்தான். இவ்வாறுதைக்கவே பாவம பற்றெழிந்து போனதுபோலுஞ் சென்றன. முதுவாயிலுமகதவும் கன்மத்திலும பத்துயோசனைதூரம போய் விடவே வானரவீரரெல்லாம பயந்தோடினர். இவ்வாறுகவே பயந்தோடி அவர்கள் மலையைவிட்டுக் காட்டிற்செலலத்தொடங்கினர். கிடகிந்தையோ நகரத்திரங்கள் நீங்கிய வானைபோல விளங்கின. அத்தருணத்தில்இளையபெ ருமாளோ அக்கிட்கிந்தையின் வீதிவழியே நடந்துபோனன். அத்தாளையுடன பேசிக்கொணடிருந்த அங்கதன் முதலாமேனாகள் திகைத்து இனி யென்னசெ ய்வதென்று சொலலிக்கொண்டனர். அதைக்கேட்ட தாரையோ அவன் கருத் தறியலாமென்றெணணி அவ்விளையுவன் வருவழியை மாற்றினள், இளையவ னை அவ்வழியை நோக்காமலிருந்தான். தாரையோ நீங்கள் எல்லாம் அய லிற் போய்விடுங்கோள், இளையவன் கருத்தறிகிறனென்றுள், யாவரும் பெ யர்ந்துபோயினர். தாரையோபெயராமலவானரமாதருடனேநடந்துபோகஇள ையவனைஇராசவீதிகடந்துசுக்கிரீவமகாராசன்மாளிகையைக்கிட்டினன். அதை த்தாளையும விலக்கிநிற்க, அதைக்கணட இளையபெருமாளோ தன்முகத் தைச் சாய்த்துக்கொணடு விலலைத் தறையிலூன்றி பாமிடோ கூட்டத்தில வந்தமருகன்போல நின்றதைக்கணட தாரையு நடுங்கிப்பின் வருமாறு சொல லத்தொடங்கினள்.

இளையபெருமாளோ! பலகால மருந்தவஞ்செய்தபாக்கியத்தால் பெறுவ தன்றிஇந்தான்முதலாமேனரும உன்பாதசேவைபெறுவதுதூர்லபம்! நாங்களோ உன் பாதங்கொணடு எங்கள்மனையில் வரப்பெற்று வாழ்ந்தோம். நாங்களும் பிழைத்தோம, இதைப்பாக்கிலும் உறுதியுண்டோ? நீர் கோபமாகவரக் கண்டே உமது சேனை பயப்பட்டது. தாசரதியைப் பிரியாத நீரோ இப்போ து பிரிந்து இங்கேவரக் காரணமென்னவென்றுள். அதைக்கேட்ட இளைய பெருமானும் நம்மை யார் வினவினதென்று கோபந்தணிந்து பூரணசந்திரன் பகலிற்றோன்றிய காட்சிபோலுமுகத்தியனையுடையதாளையினதுமுகமேறவெ

டுத்துப்பார்த்து தன தாய்மானை நினைத்து மிகவும வருந்தினன். அத்தானை யோ மணிப்பூண்கள் துறந்து மலர்மாலைதீங்கிக் குங்குமமுஞ் சாந்தமு மப்பி யழுலையுடன் கழுகுபோன்ற கழுத்துமறையப் போர்த்தபடியே விளங்கி னள். அவளைக்கணடு கண்ணீருகுத்துப் பெருமூச்செறிந்து சொலலலாயி னன், தானும சினையுமாகச் சானகியானைதம்கடித் தருமவாமென்றவார் த்தனையை மறந்தமையான் தாசரதி நீம்பாயறிந்துவாவென்று கட்டளையிடஅக் கட்டளையால் இவ்வளவுதூரம் வந்தேன். இதுதான் சரியானசெய்தியென்று சொன்னன். அதைக்கேட்ட தானை இளையபெருமாளைப்பார்த்து இனிமேல், நீர் கோபிக்கவேணடாம. 'சிறியோர்செய்த சிறுபிழையெல்லாம பெரியோ ராயிற் பொறுப்பதுகடனே' என்றபடி நீரபொறுக்கவேணடும. நீர்பொறுப்ப தன்றிவேறியார்பொறுப்பர். சுக்கிரீவமகாராசனை உதவிகொன்றனல்லன், வேறுவேறிடங்களுக்குத் தூதனைவிடத்து வானரங்களை வருவிக்கத் தாமதித் திருக்கின்றன். தூதர்களும இன்னுமவந்து சேர்ந்தாரல்லர். அவர்களும் வானரங்களை யழைத்துக்கொண்டு வந்துவிடுவார்கள். உம்மை யடைக்கல மடைந்தவனைத தாயினுமன்புடைய நீர்ர கோபதணியவேணடும. இதுவே அறநெறியென்று சொலலப்படும். சானகியார பொருட்டுநேரும் போர்க்க ளத்தில மாண்டுபோகத் துணியாராயின் நட்பென்பது கிலைபெற்றிருக்கு மோ! நீங்கள்செய்த பேருதவி நீங்காத கொடுமையமைந்த பகையைமாற்றி அவனுக் கரசுங்கொடுத்து விட்டீர்கள். உம்மையே இகழ்வானென்றால் எளி மையாகப்போய்விடுமோ! இமையில வறுமையடைந்து மறுமையு மிழந்து விடுவார்களன்றே! வாலியையே வெற்றிகொண்ட உங்களுக்குத் துணையும் வேண்டப்படுமோ! நீங்கள் சானகியாளைத் தேடுமபொருட்டுத்துணைவேண்டு கின்றீர்கள். உங்களை யடைக்கலம்புகுந்தவரும அதனைமேற்கொண்டு நின்று செய்யவேண்டியிருப்பவரேயலலது வேறலலவென்று சொல்லிமுடித்தாள். இவ்வாறு பேசிக்கொணடிருக்கையில் அவற்றையெல்லாம் நன்றுகக் கேட்டுக் கொண்டிருந்த இளையபெருமானும அருள்ததும்பு முகமுடையானைய் நானுட் கொண்டான். அத்தருணத்தில இளையபெருமான் நீர்பேசுகிறதென்றுமாருதி அவ்விளையபெருமானருகேவந்து மும்முறை வலமவந்துபணிந்துநிற்க, அவனை நோக்கி நீயும்காலம்போக்காயிருந்தனையன்றேவென்று இளையான்கேட்டான். அதற்கு மாருதி தாயையும் தாதையையும் குருவையும அத்தணையும் பால னையுமாதனையும் கொன்றவர்களுக்கு கழுவாயுணடு;உதவிகொன்றார்க்குக்கழு வாய் கிடையாதே. இதனலன்றே பெரியாரும் 'எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டோ முய்வில்லை - செய்ந்நன்றி கொன்றமகற்கு' என்று சொல்லியிரு க்கின்றனர். உங்களுக்கும் எங்கள் மகாராசாவுக்கும் நட்பினை யுண்டாக்கின மையும் என் செய்கையன்றே! அது கெடுமாயின் உய்வகை யெவாக்குமுண் டோ! உணர்வு மாசுண்டதேயன்றே! தேவரும் தவமும் அறமும் மற்று முள்ளனபிறவும் நீரேயென்று என்பாற்கிடந்த மெய்மை மும்மையுலகத்தை யும் காக்கின்ற பேராற்றலையுடைய சேனைகள்வரவே தூதனை யனுப்பியிருக் கின்றன். அறத்தின் துணைவராகிய உங்களுக்குத் தன்வாய்மையை யுழிப்பா

ணயின் பிறந்தவனல்லவல்லவா! அவனை நாகமும் விடாதே! என்றுசொல்லிச் சுக்கிரீவமகாராசனைக்காணலாமென்றழைத்துக்கொண்டுபோனான். அப்போது இளையபெருமாளோ இவர்கள் நன்மிமறந்தவரல்லரென் றெண்ணிக்கொண்டு சென்று பின்னும் அவனிடத்துச் சானகியார்பிரிவும் மானத்தியும் சீராம பிரானை வருத்தா நின்றன. அப்பெருமானை யாறற்றிக் கொண்டிருப்ப தற்கேசாலநாள்கழிகின்றனவே. அப்படிநாறற்றுவிட்டாலுமும்மையுலகமும் அழிந்துவிடுமே. தேவர்களு மழிந்துபோவரோ, தருமமு மழியுமே; விதியினை விலக்கவல்லவர் யாரிருக்கின்றனர். நீங்கள் தவணையைக்கடந்து துன்பத் தைத் தேடிக்கொண்டீர்களே என்று சொன்னார். இப்படி சொல்லிக்கொண்டு போகையில் தானையும் தன்னைமாதர்கள் புடைசூழத் தன்திருமாளிகையை யடைந்தாள். தானைபோனபினபு அங்கதன்வலலனையுள்ள மந்திரிமார்கள் தன்னைப்புடைசூழ்ந்துவர இளையபெருமாளைக்கண்டுவணங்கி நின்றான். அதற் கிளையபெருமாள் நீ விரைவாகச்சென்று என்வருகையை உன்தாதைக்குத் தெரிவிக்க வேண்டுமென்றான். உடனே அக்கட்டளையை யேற்றுத்தன் தாதையினது திருமாளிகையைபடைந்து அவனை மும்முறைவலம்வந்துபணிந்து இளையபெருமாளோ நமது தலைவாயிலில வந்திருக்கின்றனன். மிகக்கோப மாயுமிருக்கின்றன னென்றான் அங்கதன் சொல்லவும் கள்ளின் வெறியாலும் மாதர்கள் நெருக்கத்தாலும ஒன்று மறியாமலிருக்க அவனும்உபசாரஞ்செய்யத்தெளிந்தான். அப்போது சுக்கிரீவமகாராசனுக்கு அங்கதன் நடநதசெய்தியெல்லாம சவித்தாரமாகத்தெரிவித்தான். அதைக்கேட்ட சுக்கிரீவமகாராசன் இளையவன்வருகையையெனக்குத்தெரிவிக்காமலேயிருந்தது! என்னமதிமோசமென்றான். அங்கதப் பெருமானே அப்பா! தங்களுக்குநானேவந்துதெரிவித்தேன். நீர் சிறிது முணர்ச்சியில்லாம விருந்துவிட்டீர். நீர் வினைவாகவந்து இளைய பெருமாளைக் காண்பதே நல்லசமயமென்றான். அதற்குச் சுக்கிரீவமகாராசனும எனக்கு அவரால்நோநத உதவி ஒருவராலும் பெறுதற்கரிய தல்லவா! நானிதுவனையிலும பட்டதுன்பத்தைக் கள்ளுணடுமயங்கி மறந்தேனே, நானும் அவனைப் பார்க்க நாணமாயிருக்கின்றதே. இதுநிற்க;

மேலும் ஏவிய இதுவேயலலாமல் மற்றுமேமழுமை யாதிருக்கின்றது, தாயிவள்மனைவியிவள், என்னும் தருமமென்னும? பஞ்சபாதங்களி லொன்றுகிய கள்ளுண்டு களித்திருந்தேன், மாதர்சையோகத்தின் மயங்கினேன். தெளிந்து தீவினையை நீங்கினேர் பிறவியைத் தீர்வொன்று மெய்யுணர்ச்சி யுடையாரும் வேதமுதலிய ஆப்தகலைகளு மெடுத்துச்சொலலவும் புழுக்கள் நிரம்பி நெருங்கியிருக்கும் கள்ளுண்டு களிக்கின்றேன். தன்னையும் தனக்கிறவனையும் கண்டால்பிறவியொழியுமென்பது வேதாகமமுதலிய மெய்ந்நூல்களின் துணி வென்பர். முன்னையே தன்னையுந் தலைவனையு மறியாத பெரும்பிணியுடனே கள்ளின் மயக்கமும்கலந்து பெரும்பித்தாக்கி விட்டதே! என்று பலபல சொல்லி இளையபெருமாளைக் காண்பதற்கு வேண்டுவனகொண்டு நடவென்று கட்டளையிட்டு அத்தலைவாயிற் கடையில்தானைதிர்கொள்ளும்படி நின்றான். பின்னே அங்கதப்பெருமானை மங்கலவாத்தியங்கள் இளையபெருமாள் வரு

கிறவீதிகளில் முழங்கக் கட்டளையிட்டுத்தான் இளையபெருமாளைப் போய் வணங்கினன். அவனைநோக்கி உன்தாதை யெங்கிருக்கின்றான் சொல்லென் னை, அவர்தங்களை யெதிர்கொள்ளத் தலைவாயிலிற் காத்துக்கொண் டிருக்கின்றே னென்றான். இவ்வாறு சொல்லிக்கொண்டு யாவரும் போகையில் சர்வாடம் பாங்களுடனே சுக்கிரீவ மகாராசன் இளையபெருமாளை யெதிர்கொண்டான். அவ்வாறெதிர்கொண்டு தழுவி அவனை யழைத்துக்கொண்டு இராச மாளிகை யை யடைந்தவுடனே ஓரழகிய பீடத்திலிருக்கச் சொன்னன். இளையவனே எமதுபெருமான் புலஸ்தியற்கிடப்ப னெக்கஷ்டங்களை முரியதாமாவென் றான். அதைக்கேட்ட சுக்கிரீவனு மின்றுவிமலக் கண்களினுருகக் கதிக் கற்படுத்த விடத்திலேதான் தமபியுடன் உட்காராத பின்பு நீர் நீராடி யென்னல் செப்பப்பட்ட விருந்தருந்தவேணு மென்றான். அதற்கிளையவர் மகாராசாவே!வருத்தமும் பழியும் வயிற்றில நிரம்பியிருக்க இங்கே எனக்கு விருந்துஞ் செய்யவேணுமோ! எமமை வருத்துகின்ற பழியென்னும் தீயை யவித்து விடுவாயாயின் காலைநீராட்டினபோலாம், எங்கள் சானகியானையும் காட்டினையாயின் தேவாமிர்தமுண்டதுபோலாம. காய்பழச்சில, காய், கிழங்கு களிறுதலியவை காபொருத்தமையாகியநிராமன் உண்டபின் எஞ்சியவற்றை காலுண்டபின்த கோன்பெற்றதன்றிவேறுணணவிச்சித்தேதுயின் அதுகாயுண்ட எசசில, அதற்குக்காரணமொன்றுங் கிடையாது. அலலாபலும வேறுண் டு. இனிமேல்தாமதித்திங்கிருப்பதுறற் பயனில்லை,கான் போய்க்கனிகாய் கிழங்குகளைக் கொணர்ந்து திருத்திலலலது நம்பெருமானுக்குத் திருவழு தாகாதே! கான்விளாதது போகவேண்டுமென்று சொலல, சுக்கிரீவனுமதை கினைந்து மனம்வருந்தி விளைந்தெழுந்து மாருதியைக் கூவிபழைத்துத் தூதர் களைசென்று அழைத்துவரும் சேனையை நீ யழைத்துக்கொண்டு வாவெ ன்று கட்டளையிட்டு அவனை யங்கேயிருக்கச்செய்து தான் இளையபெருமாளு டனே அங்கதப்பெருமான் முன்செலல மற்றவானவீரருமுடன் செல்லப்புறப் பட்டுகடந்து இருசுடாயகன் விற்றிருக்கினற மலையையடைந்தான். அடைந்த வுடனே சேனையைப் பின்வாக் கட்டளையிட்டுந் தானும் தம்பியும் அங்கதனு மாகச்சென்று வணங்கினர். தன்னை வணங்கியமகாராசாவை முன்டுகொண்ட கோபம் நீங்க இற்கப்புலவி நீ காக்கும் யாவருமசுகமா யிருக்கின்றனரா! வெனக்குசலத்தைகவினவியபோது அதற்குச் சுக்கிரீவனும் கின்னருள்பெற்றே யான்காக்கும் காலேஇடனென்பதனுறுதியாவென்றான். பினனும் விலங்கறிவால் யான்காமதித்திருந்துவிட்ட புன்மையைத் தவிர்த்தருளவேண்டும். நீர்வருந்தி க்கொண்டிருக்கவும் யான் பொய்வாழ்வால மயங்கிவிட்டேன், இனியான் செ யத்தக்கது யாது? கட்டளையிட வேணுமென்றான். அவ்வாறு சொல்லிய சுக் கிரீவனுக்கிராகவ னினிய வார்த்தைகளைச் சொல்லி மாருதியெங்கேசென்றன னென்று கேட்க,அவன் உம்முடையசேனையுடன் வருவானென்பதன்றி நான் கோடி தூதரை யனுப்பிச் சேனைகளைக் கொண்டுவரும்படி யனுப்பியிருக் கிறேன், இன்றோ நாளையோ வந்துவிடுமென்றுந் தெரிவித்தனன். பின்புசீராம பிரான் அங்கதனோடு மளவளாவி அவனைச் சுக்கிரீவனோடு மனுப்பிவிட்டுத்

தம்பியை யழைத்து நீ சுக்கிரீவனிடத்தே போனபோது நடந்த செய்தியை யெடுத்துச் சொல்ல வேண்டுமென்ன, இளையவன்நடந்ததை யெல்லாம் ஒன்றுமொழியாமல் சொல்லி முடித்தான். சீராமன் இளையபெருமாளுடனே இனிது வீற்றிருந்தான். இவ்வாறு இருக்க, இனிச்சேனைகள் வரவு சொல்வாம்.

கிட்கிந்தைப் படலம்
முற்றிற்று.

தானை காண் படலம்.

சதவலியென்னும் படைத்தலைவனே ஆயிரமாயிரம் யானைபலமுள்ள இரண்டாயிரகோடி வானரசேனையுடனும், சுசேடனனென்னும் படைத்தலைவனே மேருமலையையும பிடுங்கியெறியும் வலியுள்ளனவாய் தேனை யாராய்ந்துண்டு தெளிந்த வானரங்கள் பத்துநூறுயிரகோடி சேனையுடனும், உருமையைப் பயந்தவனாகிய படைத்தலைவன் கடலையு மிமைப்போதிற்கலக்கிச் சேறுகாணும் நாற்பத்தெண்ணூயிரகோடி சேனையுடனும், அனுமனைப்பெற்ற கேசரி ஐம்பதினூயிரகோடி சேனையுடனும், இரண்டாயிரகோடி காடிக்கூட்டங்களுடன் இடும்பனும், ஆயிரகோடி வானரசேனையுடன் கவயாக்கனும், பன்னீராயிரகோடி வானரசேனையுடன் பனசனென்பவனும்,பதினைந்துகோடிவானரசேனையுடன் நீலனும், முப்பதுகோடி வானரசேனையுடன் நிருமுகனென்பவனும், முப்பதினூயிரகோடி வானரசேனையுடன் கயனென்பவனும், ஆயிரத்தறுநூறுகோடி சேனையுடன் சாம்பனென்பவனும், இருபதுகோடி வானர வீருடன் துன்முகனும், கோடி கோடி நூறுயிரமென்னு மெண்கொண்ட சேனையுடன் துமிந்தனும்,பத்துநூறுயிரப் பத்துக்கோடி. வானரவீருடன் மயிந்தனும் மற்கசேகாமுகனும், ஒன்பதுகோடி சேனையுடனே குமுதனும, பதினைன்குநூறுயிரகோடி வானரசேனையுடன் பதுமுகனும, தொளாயிரகோடி சேனையுடன் இடபனும், தீர்க்கபாதனும் வினதனும, சரபனும், அநேகமாயிரகோடி சேனைகளுடன் வந்தனர். இவ்வாறிருக்க கைகளாயிரங்கொண்ட சூரியபகவானைக்கண்டும் மெய்யெஞ்சாதவனைகிப்பத்துததினையுடிதின்னும்படி நீண்டமாருதி இருபத்தையாயிரம் சேனையுடனேவந்தான். நூறுயிரகோடி வானரசேனையுடனே நளனும் வந்துசேர்ந்தான். குமபனும் சங்கனும் பன்னூறுயிரகோடிசேனையுடனே வந்து சேர்ந்துவிட்டனர்.

அப்படிவந்தசேனைகள்எண்ணிப்பார்க்க எழுபதினூயிரம் பிரயாசாலு முடியமாட்டா. அவைகட்குஅண்டங்களெல்லாம் உண்ண ஒரு கவளத்திற்குமடங்குமாட்டா? கண்ணிறற் பார்க்க உருத்திரமூர்த்தியாலுமுடியா; அவைகளில் ஒவ்வொன்றும் மேருவை வேருட னெடிக்கவேண்டினு மொடித்துவிடும், இடிக்கவேண்டுமானாலும் வான் முகட்டையுமிடிக்கும், பிடிக்கவேண்டுமானாலுங் காற்றையுங்காலனையும் பிடிக்கும்,குடிக்கவேண்டுமானாலுமெழுகடலையுங் குடங்கையிற் குடித்துவிடும்,வானராதிபரோ அறுபத்தேழுகோடிபேர்,அவர்களோ

திசைப்பதிலும் குதிக்க வல்லமையுடையவர், மகாராசா கினைந்ததை முடிக்கு மியல்புடையவர், இப்படிப்பட்ட சேனையுடன் வந்து சேரவே சுக்கி ரீவமகாராசாவும் விரைவாய்த் தாசரதியையடைந்து மும்முறைவலம்வந்து பணிந்து உமது சேனைகள்வந்து சேர்ந்துவிட்டன ; கடாட்சிக்கவேண்டுமெ ன்றான். அதைக்கேட்ட சீராமபிரானே அகமுமுகமுமலர்ந்து சானகிவந்த சந்தோஷமேபோலக் களித்துத் தானங்கோர்மலைச் சிகரமேறினன். மகாராசா வோ அச்சேனையிருக்குமிடத்தேவந்து சேர்ந்தான். அச்சேனை ஐம்பதியோ சனையகலமாய் வடதிசையினின்றும் தென்றிசைநோக்கிச்செல்லக் கட்டளை யிட்டுத் தானும் படைத்தலைவருடன் மீண்டான். அவ்வாறு மீண்டு சீராமபிரா னையடைந்து அவற்றை வரன்முறையேகாட்டி யருகிருந்தனன். அச்சேனை யும் பாற்கடலேபோலப் பரந்துகின்றது, இச்சேனையிறுலெழுந்த புழுதிசென் று எத்திசையும்போய்மூடி யப்புறத்தண்டத்தையும் செப்புருவாக்கிவிட்டது. பின்னும் சுக்கிரீவன் இச்சேனையைப் பார்க்கவையமென்று இருபதுகா னிர வும்பகலு மிடைவிடாமற் பார்த்தால ஒரு நிமிதுதான் பார்க்கவியலும், முழு துமுடியாதே, இதைக் கடலென்ற சொலலவேணுமல்லது வேறுசொல்லப் படுமோவென, மும்மைபுலகத்தும் தன்னல தொப்பில்லாத சீராமபிரான் கண் ணினுலும் சிந்தையினுலும் கலவியினுலும் ஞானத்தாலு மெனனித் தம்பி யை நோக்கிச் சொலகினனுன்.

அப்பா தம்பி இலக்குமண ! இப்பெருஞ்சேனைக்கு அறிவால் உடல்கண் டோம், இனி முடிவுங்காண முடியுமோ ! கடலைப் பார்க்கக்கூடும், அதை முடிவுகண்டாரு முலகினுனேடா ? உலகத்தில இறைவன்மனிசையையும் பத் துத்திசையையும், இயற்கையையும, ஐம்பெருமபூதத்தையும, அறிவையும, பேசும் பேசினையும், சமயபரிணக்கையும் யாதான் முடிவெணணவல்லவர் ! காம் செய்யத் துணிந்த காரியத்திற்கேவுவதே சரியானகாரியம் ! என்றுன். அதைக்கேட்ட இளையவன சொல்லுகின்றுன். இவ்களவாகாதகாரியமுமுல கத்தில் ஒன்றுமிலலையாகவே தானறுதினறது. அணணு ! இவர்கள் சானகி யானை காடவருவது சிரியகாரியம் ! பாவமேதாற்றது தருமமேவென்றது என் றதிச்சேனையாலையறிபலாம், இவை பிரமனுல் படைக்கப்பட்ட உலகத்தில் மலைகள் உயிரைப்பெற்றெழுந்ததொக்கும். குரங்கின் சேனையுறையிடவும்போதா ! இனித் தாமதிப்பதென்ன ; இனி வினைதது என்தாயை காடக் கட்டளையிடுவ தே சிறந்த காரியமென்றுன். அதைக்கேட்ட தாசரதி சுக்கிரீவமகாராசா வைநோக்கிச் சொலலலாயினன்.

தானைகாண் படலம்

முற்றிற்று.

நாடவிட்டபடலம்.

அப்பா சுக்கிரீவா! இச்சேனையோ உறையிடப்போதாதிருக்கின்றன; இதற்குத் தொகையுமுண்டோ சொல்லவேண்டுமென்றான். அதைக்கேட்ட சுக்கிரீவ மகாராசன் இச்சேனைக் கெண்ணிக்கை எழுபதுவெள்ள மென்பார்கள். அறுபத்தேழுகோடிபேர் இதன்படைத்தலைவர்கள்; இவர்களுக்கெல்லாம் நீலனென்பவனே சேனாபதியென்றுசொலலப்படும், அவன் யமனையும் புறங்காணவல்லமை யுடையவன் என்றான். அவனைப்பார்த்து இரகுநாயகன் நாம் பேசிக்கொண்டிருப்பதனால் என்னகாரியம்! இனிச் சானகியானை காடுவதே நமக்குக் காரியமென்றான். அவனும் அனுமானைப்பார்த்து நீயோ உன்தந்தையாகிய வாயுவைப்போல் எங்குஞ்சென்று சஞ்சரிக்கும் வல்லமையுடையை! நீ சிறிதும் மறியாமல் தாமதித்துக் கொண்டிருக்கின்றனை! நீயும் குரங்கின் செயலைக் காட்டிக்கொண் டிருக்கின்றனையோ! நீயினைந்து போய்ச்சானகியாரிருக்குமிடங் தேடவேண்டுமாதலால் எங்கும்போய்த் தேடிப்பார்க்கவேண்டும். உன்வேகத்தை இப்போதுதான் காட்டவேண்டும். இராவணனிருக்குமிடம் தென்றிசையென்று தோன்றுகின்றது. நீபல்லாமல் வேறியார் அத்திசையிற்சென்று காணவல்லவர். அவன் சானகியானைக் கொண்டுபோகையில நமக்கெலலாம் தெற்குநோக்கியேபோனனென்பது தெரிந்தவிஷயம! நீயுமவ்வாய். நீ அங்குதேடும் சாம்பதேடும் நீலதேடுமசேர்ந்துகொண்டு இரண்டாயிரவெள்ளஞ்சேனையுடன்போகவேண்டுகின்றேன்; மேற்றிசைக்குச் சுஷேடனனும, வடதிசைக்குச் சதவலியும், கீழ்த்திசைக்கு வினதனும இவ்விரண்டாயிர வெள்ளம் படையுடன்செல்லவேண்டும; அபபடிசெல்பவர் ஓருமாதத்திற் குள்ளாகவே வந்துசேரவேண்டும். மேலும் அனுமானே! நீ தென்றிசையில போவாயாயின் ஆயிரங் கொடிமுடியுடன் விளங்கும் விந்தமலையைபடைத்து ஒருமதனைப்பக்கடத்தரம கூடத்தைத் தாண்டி விதர்ப்பதேசத்தைத்கண்டு நீங்கித் தண்டகங்கண்டோழிந்து முண்டகமலர்ந்தசோலையைத்தேடிபோய் பான்மிமலையைப்பார்த்துக் கழிந்துக் கோதாவிரியைக்கடந்துச்சூர்முதறிந்த சண்முகப் பெருமானைழுந் தருளிய சுவணத்தைத் தெரிசித்து அருந்தமலையைபகன்று நாகராசர்களுக் கமுதங்கொடுத்துத் தாயையேவற்றொழினின்றுங்கருடனீக்கியமாகதப்பொருப்பைவிட்டுப் பின்பு வடசொற்குநதென்சொற் தமவரம்பாகிநான்மறையு மற்றனாலும் சொன்னபொருட்கெல்லா மெலலையாய்த் தருமத்திற்கு முடிவாய்த் துணையின்றிப் புகழ்பொதிந்த மெய்ம்மைபோலச் சாலையுடைய வடவேங்கடத் தைக்காண்பீர்கள். அம்மலையிலோ அமரகர் அருந்தவஞ்செய்வர், அவர்களோ நாமிங்கிருந்தேவணங்கத்தக்க சிலமுடையார்கள். அம்மலையில் மெய்யுணர்ச்சியையுடைய அருமறையந்தணர் ஓதாடுகின்ற கோனேரியும் மாதவர்களாச்சிரமங்களும் தடாகங்களுமுண்டு, தேவமாதர்கள் கீதமொத்த கின்னரங்களின் இனிய நரம்புகளை வருடும்போதெல்லாம் தோன்றுமோசையால் யானைக்கன்றும் புலிப்பறழும் வேற்றுமையின்றி யுறங்குமிடமுண்டு. அம்மலையையடைவீராஞல் நீங்கள் பிறவிப்பிணி நீங்கிவிடுவீர்கள், ஆதலால் அம்மலையை

நெருங்காமலே தூரத்தேயிருந்து வணங்கி அப்பாற் செல்லவேண்டுகின்றேன். செல்வீராஞல் இராமகாரியம் பங்கமாய்விடும். அதன்பின்பு அம்மலேனய் வடவெல்லேயாகவுடைய தொண்டைநாட்டைக்கண்டு சோணுடுகடந்து மலே நாடுசேர்ந்த பின்பு செந்தமிழ் நாடாகிய பாண்டிநாட்டைக் காண்பீர்கள். செந் தமிழ்நாட்டில் அகத்தியமுனிவன் எழுந்தருளிய பொதியினேயடைவீர்கள், அதையகன்று சென்று தாமிரவருணி நதியையுங்கடந்து மகேந்திரமலேயுங் கடலுங் காண்பீர்கள். இப்படிபோய் ஒருமாதத்தவணைக்குள் வந்து சேர வேண்டுமென்றான்.

இப்படி சொல்லிக்கொண்டிருக்கையில் இரகுநாயகன் நிறைந்த கருணே யோடும் அனுமானே அழைத்துவேற்றிடத்திலிருந்து தேடிச்செல்கையில சா னகியாருக்குரிய இலக்கணங்களே யெல்லாஞ் சொல்கிறேனென்று சொல்லத் தொடங்கினன். அப்பா அனுமானே! பாற்கடலிற்பிறந்தசெம்பவளத்தைப்பஞ் சியூட்டி மேலே சந்திரனேயுஞ் சூட்டினாற்போல விளங்கும் கால்களுடன் விரல்கள் கமலமும் பிறவும் உவமமாகக் கூறப்படும். அவையே ஏற்பலவின் னின் அப்பாதங்களுக் குவமையாக வெவற்றைத்தான் கூறலாம்! புறவடிக் குவமையாக அறிவுடையவர்கள் ஆமையென்றே சொல்வர்; அதுவுமாகாது! கணைக்காலுக்குவரால் மீனையே யுவமையாகக்கூறலாம்! நெற்சினையென்றும் கூறவமையும்; மாதாகள் தொடைக்குவாழைத தணேடென்றே சொல்லலாம், அல்குலாகிய தடங்கடற்குவமை பூமியைச் சுமக்கும் அனந்தனேயையல்லது சூரியனுடைய ஓராழித்தேர்ச் சக்கரம்களாட உனக்குரான் வேறு சொலவது முண்டோ! இடைக்குவமையையெடுத்துச்சொல்ல யாவருக்குமரிது, வயிற்றி னுவமையாக ஆலிலே, அச்சமானபலகை, தட்டி, வட்டமாகிய கணைடி முத லியவற்றைச்சொன்னலும் அவையுமுவமமாகா, சிறுகூதாளப்பூ, கந்தியாவட்ட ப்பூ, அவற்றினுடையதாளெனறாலும உவமையாகமாட்டா, ஆயினும் கங் கைச் சுழியென்பர், அதை நீ கங்கையிற் சென்றறியலாம். மயிரொழுக்கிற்குவ மமாகச்சிறுகொடியினுடைய நுடக்கந்தீரச்செய்யவைத்ததாகக்கொள். வயிற் றினிடத்தில் மூன்றிரேகையிருக்கின்றன; அவை மன்மதன்மூன்றுலகில் வாழு மாதனாவென்ற பெய்மையை யெடுத்துரைத்துச்சொலலிய வாம்வெற்றிவனா யெனத்தோன்றும், முலேக்குவமையாகவோ செப்பென்று சொல்லேன் கலச மென்றுஞ்சொலலேன், செவ்விள நீருமென்றுணர்வேன், பவளத்தாலாகிய சூ தாடுகருவியென்றுசொலலேன், தப்பில்லாமல்பகலில்வந்த சக்கரவாகப்பறவை யென்றுசொல்லவறியேன், பலபல நினைந்தின்னும் வருந்துவேன். கரும்பைக் கண்டாலும் மூங்கிலைக்கண்டாலுங் கண்ணீர்சோர வருந்துகின்ற யானறிவ தண்டோ! அவளுடையதோளே நினைந்துவமை சொல்ல இரும்பையொத்த நெஞ்சமுடைய எனக்கில்லையாயின்யாதுசொல்லவல்லேன், முன்கையைக் கா ந்தளென்று சொல்வார்கள், யாழின்கையென்று சொல்லுதல் மற்றொன்றினை யறிவித்தாலன்றிச் சானகியாரது தடங்கையாமோ! மேலுலகத்தின்மேலு கல முண்டோ! அசோகந்தளிர் நிருக்கட்டும்; கற்பகத்தின் அழகிய தளிரும் ஒப்பா காவேயிராது, கமலமலரும் அவள் காலுக்கொப்பே யாகாவிட்டாற் கைக்கொப்

பாகத் தானெடுத்துச் சொல்லலாமோ! அவளுடைய உகிருக்கு நீங்களே மூக்கையிகழுகின்றீர்களென்று பின்னும் கிளிப்பிள்ளைகள் முருக்கம்பூவைக் கிழிக்கும்; இதையழிக்கலாமோ! அங்கையும் மடியுங்கண்டால் தாமரைமலனை கினைப்பதுபோற் செம்மையான களிப்பைச்சிதறி நீலஞ்செருக்கிவாட்கண் மங்கையினுடைய கழுத்தை நோக்கின்கமுகுங்கடற்சங்கமும்கினைவையாலல் அவையென்று துணியவேண்டும். பவளமும செங்கிடையும் கோவ்வைப்பழமும் ஆம்பன்மலரும் இலவங்கமலரும் இந்திரகோபமு முருக்கமலருமாகிய இத்தொடக்கத்தனசாலவும் உவமமென்று சொல்லும்வண்ணம் சிவந்து தென்றதும்புமாலல் குவளைமலர் போன்றமையுணட கண்ணையுடையாய் வாயாகும், அதன்குறியுமதுவே, உலகத்தினிடத்தில் சிவந்ததாகிய அமுதமுங் கிடையாது, தேனில்லை, அவையுண்டெனறலும் உண்டோ தல்லாமல் அவையெண்ணஇனிக்கமாட்டா? முல்லையுமுருந்துமுத்தருகையுமென்றபோது சொல்லை அமுதும்பாலும் தேனுமென்றுனைக்கத் தோன்றுமல்லாமல் வேறென்றுவதில்லை, அமுதுக்குமுவமை சொல்லப்படுமோ! இல்லையேயாயின் மாறில்லாத வகை யறிந்துகொள். ஓந்தியும எள்ளினிளம்பூவும தொளையையுமுடைய குமிழமலரு மூக்குக்கொப்பாகச்சொல்வார்கள். வள்ளைகத்திரிகை மயிர்வினைக் கருவியென்று சிறுவாகள் சொன்ன வுவமையைப் பெரியவருனைத்தாற் பித்தாம். தோடுசெய்த பாக்கியமென்றே யெண்ணவேண்டும்; உலகத்தில் உவமைக்குவமை யுண்டோ! பெரியவாய்க்கடலை யொப்பாகா, வேறென்று கினைந்து பேசவரியவாய் ஒருவருள்ளத் தடங்குவனவல்ல, தெரியும்படி ஆயிரவினை நோக்கினுல தேப்பெருமாள்போலக் கரியவாய் வெளியவாகித் தோன்றுங்கண்கள். மேலும் அவள் புருவத்திற்கொப்புக் கூறவேண்டுமாலல் தாளொத்திங்கேவளைந்து நிற்குமன்மதன வில்லிரண்டில்லையாகையால் அதற் கொப்புக் கூறவரிதாயிருக்கும, முகத்தினைய நெற்றியையுநாடிப் பலநாளுஞ் சொல்லி யாற்றுத முதியென்னும் பண்பினையுடையதாகி முன்னுள்முளைத்த வெண்டிங்கள் முறைநாளுங் குறைவாய், எநநாளு வளர்ந்ததென்று சொல்லி விடுவோமாலல் நிறைதொத்திருக்கு மியல்பினையுடையதோ! மேகம் ஆம்பல் வில் வள்ளைகண்டை முத்து இவற்றையுடையசந்திரமண்டலமிருக்குமாலல் அவள் முகமென்று சொலலலாம், தாமரைமலரும அதறகொப்பாகும. அவள் கூந்தலோ மேகத்தைக்கொணடுவந்து புகையூட்டி இருட்பிழம்பு தோய்ந்து இருப்பதொத்திருக்கும், முழவும்யாழும் படைத்து குயிலொடுகினியுங்கூட்டி மழலைமுதலியவற்றைத்தந்து பிரமன் அவளுடைய சொலலைச் செய்தானன்றி வேறலல, உவமையைக்காட்டபிறந்திலான் எனின் இன்னும்பெறுவதேறு! வாய்ச்சுவையை யமிழ்தன்றி வேறுசொல்ல இயையாது! அவள் மொழிக்குவமை சொல்ல வேண்டுமாலல் தேனே அமிழ்தோ வென்போமாயின் அவை செவிகளுக் கின்பத்தை விளைவிக்கமாட்டா! அவள் நடைக்குவமையாக அன்னப் பெடை, பிடியானை யென்பனவும் விரும்பியடையுமென்றே சொல்லவேண்டும். அவள் நிறத்திற்கொப்பாக மாந்தளிரினிறமும் மற்ற பொன்னுங் கறுக்கு மென்றல்மணிநிறமுமொப்பாகுமா! மின்னிறமோவாணத்தால்வெளிப்படாமல்

ஒளித்துக்கொள்ளும், உலகத்தில் மாதர்களில் அவர்க் கொப்பாவாரில்லை யென்பது கொண்டு அவள் நிலைமையனைத்தும் அளந்தறிந்து அருகே சென்று சொல்ல வேண்டும்.

மேலுமநான் விசுவாமித்திர முனிவனேடு மிதிலைக்குச் சென்றபோது கானவளைக் கன்னிமாடத்திற் கண்டதைச்சொல்லவேண்டும்; அதன்பின் நான் இராசசபையிற் பிரகவிலலை யொடித்தபிறகு இளங்கொடி தூவள்வதுபோல வந்ததையும்சொல்லு, பின்னுமவள்முனிவனேடுகண்டகாளையே பிரகவில்லை யொடித்தவ ரகானென்றுல் நானுயிர்விடுவேனென்று தோழிமாருக்குச் சொ ன்னதையுந் தெரிவிக்கவேண்டும். நான் தாய சொன்மேற்கொண்டு காட் டுக்குவருகையில் ஏன்பின்னேவர நினைக்கின்றுயே, உன்னுயிர் தித்திப் பாக வெண்ணுகின்ற நீ காட்டிலென்னுடன் வந்தால் வருத்தப்படுவையே! என்றலும், அக்காட்டில் யானில்லாத பொருள்கள் உனக்கினியவோ வென்று கண்களினீர்விழ வருந்தியதுஞ் சொல்,நாங்கள் அயோத்திநகரத்தை நீங்கிவரு கையில் கோட்டைவாயிலைக் கடவாதமுன்பே காடெதுவென்று கேட்டாள், அதையுமெடுத்துக்காட்டு; இவற்றையெல்லாம் அவளுக்கு அடையாளமாகத் தன்னுமமந்திரமெழுதிய முத்திரைமோதிரத்தையுங் கொடுத்து விடையை யுங் கொடுத்தான். அனுமானே நீலன் சாம்பன் அங்கதனிவர்களுடனே இரண்டு வெள்ளஞ்சேனை சூழ்ந்துவர்த் தென்றிசைநாடிச் சென்றுன்.

நாடவிட்டபடலம்

முற்றிற்று.

பிலநீங்குபடலம்.

இப்படி அனுமானும் சாம்பனும் அங்கதனும் நீலனும் இரண்டுவெள்ளஞ் சேனையுடனேதென்றிசையைநாடிப்போளபினபு சுக்கிரீவன் சுசேடணனேமே ற்கும்,சதவலியைவடக்கும், வினதனைத் தெற்குமாகப் போகவனுப்பிவிட்டுச் சீராமபிரானேடிருந்தான். இப்படிபோகத் துணிந்த அனுமான்முதலியோர் வெகுதூரநடந்து விந்தைமலையையடைந்து நருமதையாறுசேர்ந்து அங்கே அன்னமாடுமிடங்களும் அரமகளிர் நீராடுமிடங்களும தேவர்கள்வசிக்குமிடங் களும் தேன்பாடிநிற்கும் சோலைகளும் சுற்றித்திரிந்து காணுமல் அதையுந்தா ண்டி. ஏமகூடத்தைக்கண்டு அதனருகேயிருக்கும் குன்றுகளையு மரங்களையும் பார்த்துக்கொண்டே அதிகவுயர்வாயிருக்கும் ஒருமலையைக்கண்டனர். அது வித்தியாதரர் பாடலும் அரமகளிர்பாடலும் மேகமுழக்கமும்பேரிகைமுழக்க மும்மிகுந்திருந்தது. அதைக்கண்ட அனுமானேமுதலிய வானரவீரர்கள் இது இராவணனிருக்கு மலையேபோலும் தோன்றுகின்ற தென்றெண்ணி மிகக்கோ பித்துக்கொண்டு அம்மலையிற் சென்றேறினர். யானைகளும்யாளிகளும்வலசை வாங்கிப்போயின. சிங்கங்களும் பயந்து மறைந்தோடின, அவர்கள் எங்கும்

திரிந்துஞ் சானகியாளைக்காணுமல் ஐம்பத்திரண்டு காதவழியகன்று வானளாவிய நகரத்தையுடைய அம்மலையை ஒருகணத்திற்சென்று தேடியுங்காணுமல் மிகவுமயர்ந்தார்கள்; அப்படியே வானரவீரர் இரண்டுவெள்ளமும் சானகியாளைத் தேடியுங்காணுமற்போயின. பிறகு அவர்களைத் தனித் தனிசானகியாளைத் தேடிக்கொண்டுவரக் கட்டளையிட்டு ஆகக்கடைசியில் தென்கடலுக் கருகேயுள்ளமகேந்திரமலைக்குவந்து சேரவேணுமெம. அவர்களு மவ்வாறே விடைபெற்றுசென்றனர். அனுமான்முதலோர் நீரென்னும் பெயரோயடையாத ஒருபாலைவனத்தைக்கண்டார்கள். அதில் பறவைகள் வந்துசாரா, விலங்குகளும் வசிப்பதரிது, புன்முதல் மரங்களிறுதியாக வொன்றுங்கிடையா, கற்களும் வேம், மலையில்வசிக்கும் பாம்பும் புழுதியொட்டுதலான் இறந்துபோமேயல்லாமல வேறொன்றில்லை. அப்படிப்பட்ட பிலதையடைந்து தென்புலத்தில் எரிநரகத்திலகப்பட்ட ஆருயிபோலவெப்பமடைந்து அத்தப்பிலத்தினந்தமடைந்தார்கள், அதனுல் எழுந்திருந்து நடக்கமுடியாமலும வழியுண்டென்னுமெண்ணமேயில்லாமல் இழுகிய நெய்போன்றவிருள் மிகுதியுமுடைய பிலத்தையடைந்தார்கள். அப்படியடைந்துசெய்யும வகையறியாமல் இறந்துவிட்டோமென்ற வெண்ணமேமிகுந்து அனுமானேநோக்கி இன்று எங்களைக் காக்கவேண்டுமென்று முறையிட்டார்கள். அதைக்கேட்ட அனுமானும் தன் வாலையுறுதியாகப் பிடித்துக்கொள்ள வேண்டுமெனக் கட்டளையிட்டுக் கையினுல் தடவிக்காற்றேபோல அவ்வழியைக் கடந்தான். எப்படி கடந்தானென்றுல் பன்னிரண்டு யோசனையளாவிய மேனியும் மின்னிரண்டேபோலக் குண்டலங்கள் தோன்றவும இருளுடையவும் தோன்றி அவ்விருள்நெருங்கிய பிலத்துவாரங்கடந்து அப்பால் விண்ணுலகுகாணத் தகுந்ததாயும் திருமகள் முகம்போல்வதாயும கற்பகக்காடுடையதாயும கமலமலர்த் தடாகமுடையதாயும் கோடுரங்களும மதில்களுடையதாயும் அற்புதமாகத் தேவருமடையத் தக்கதும் இருள்களைக் கெடுத்தோங்குவதும் சோழமகாராசனைப்பாடிப்பரிசுபெற்ற கவிராசர்கள் மலைபோலச் சொன்னராகியும் ஆடைமுதலியவற்றின் குப்பைகளு நிரம்பியதுமாயிருந்தாலும் மாதர் ஆடவனென்பவர் சஞ்சரிப்பதில்லாமையால் துயிலவும் பார்க்கவும் தூணையதில்லாமல உயிரில்லாத பாலைவனென்றே சொல்லச்சிறந்தது. அப்படிப்பட்ட நகரத்தைத் தங்கள் கட்புலனுகக் கண்டு இது இராவணனிருக்கு நகரமாமென்று துணிந்து சொல்லிக்கொண்டு உவக்துமியந்தார்கள். அந்நகரவாயிலின் வழியேபுருந்தாகள். அந்நகரத்திலே மக்கள் தேவர்களைச் சித்திரத்திலே கண்டிருப்பதாழிய அந்நகரத்திலொருசேதனப்பொருளுமிடையாது. அங்கே தடாகங்களும் பொய்கைகளுஞ் சோலைகளும் மாதர்கள் சொல்லேபோலக்கூவுகின்ற கிளிகளும் காகனைவாய்ப்பறவைகளும் குயில்களும் அன்னங்களுமுண்டு; ஆனல் சுவடுமாத்திரம் கிடையாது. அந்நகரத்தினியல்பையறிந்து இதுமாயையோவென்று நினைந்து பிலத்திலகப்பட்டு வருந்தினேமே, அதிலினுமிறக்கம் தாயதெனத் துணிந்தனர். ஈதுமிறந்தோமில்லை, இதற்குரிய தெண்ணிலம், எதுவுமறந்தோமில்லை, பிறந்தவர் செயற்குரிய செய்தல்பிழையே யின்றென்று நினைத்தார்கள். இவ்வா

திருக்கையில் சாம்பனென்றுனை செய்வான். சானகியானைக் கொண்டபோன
கள்ளன் நாமெல்லாம் அகப்பட்டுக்கொள்ள அமைத்த பொறிபோலிருக்கின்
றது. இதற்கு முடிவும்கிடையாதே? விதிப்படியே யாவுமடக்குமென்றான்.
இதனை நாம் சகரர் முன்னை மண்ணைத்தினறுகொண்டு பாதலஞ் சென்றவர்
போலக் கடந்து விடுவோம், அப்படி யில்லாவிட்டால் வஞ்சனையுள்ள அரக்
கனையடங்கக்கொன்று கலைவோ மஞ்சவேண்டாமென்று சொல்லி மாருதி
கோபித்தான். மற்றவரும் அப்படியே செய்ய ஒருப்பட்டார்கள். இப்படி
சொல்லிச் செல்லும்போது நலந்தவமெல்லா மொருருக்கொண்டா லொத்துக்
கற்றையாகவிரிந்த அழகிய சடையையுடைய பெண்ணருங் கலத்தைக் கண்
டாகள்; அவளோ மரவுரிதரித்துக்கொண்டு சக்கரவாளமும் கலசமும்போன்ற
முலைத்தட மாசனைடைந்து கலைபொடுகூடிய மதிமுகமுடையளாகிக் கண்ணு
கிய கயல்மீன்களிப்படைய முக்கிலுதிமேல்வைத்த கணைணையுடையளா யிருந்
தாள். அப்படி யிருந்தவளைச் சானகியாவென்றெண்ணி வணங்க நின்றெண்
ணினர். இப்படி வானரவிரர்களெண்ணி அனுமானை நோக்கி இவர் குறியனை
த்து மாராயவேண்டுகின்றோம், இவரோ சானகியாரென்றுசொல்ல, அதைக்கே
ட்டமாருதி எந்தக்குறியுடன்எந்தக்குணத்தை யெடுத்துச்சொல்லுவேன், இக்
குறியையுடைய பெண்மணி சானகியாராவரோ அக்கினமணி முத்துமாலையை
யொக்குமென்றால ஒருவேளை யொப்பாகலாமென்று மாருதிசொல்ல மற்ற
வானர வீரரும அவளிருக்குமிடத்தை நாடிச்சென்றனர், இவர்கள் வரவை
அம்மாதும் ஞானதிருட்டியாலறிந்துகொண்டு தன்முன் அவர்கள்வருவதுகண்டு
நீங்கள் விண்ணவருமல்லர் நீங்கள்வந்தகாரியமென்ன! நீங்கள்இன்னரென்றுஞ்
சொல்லுங்களென்றுகேட்டாள். அதற்கிவ்வுலகின்கண தனபஞ்செய்துகொ
ண்டிருக்கின்ற அரக்கர்கள் மாயையால் சானகியானையொளித்தார்கள். அவர்
கள் ஒளித்தவிடத்தைத்தேடி யறியவே நாங்கள் புறப்பட்டுத்தேடுகின்றோம்.
நாங்கள் சீராமபிரானால் அனுப்பப்பட்டதூதர்களென்றுஞ்சொல்லினர். அதை
அம்மடந்தைகேட்டுச் சாலமனமகிழ்ச்சியடைந்து ஆனந்தக்கூத்தாடிப் பர
வசமாய் இன்பக்கணணீர்பொழிந்தனள். அந்தப்பெண்மணி எங்கே இரகு
காயகனிருக்கின்றனன், தெரிவிக்கவேண்டுமென்றாள். அப்படிகேட்ட அம்மா
தரிய யாவு மாருதிவிடுத்துச்சொன்னன். அம்மொழிகேட்ட அப்பெண்மணி
யான்செய்த பெறலருந்தவத்தினால் நீங்கள் வரப்பெற்றேன். அதனால்வீடு
பேறுகாணப்பெற்றேனென்று அவனைக்கான்யாற்றுநீரால் நீராட்டி அமுதன்ன
சுவையொடுகூடிய உணவையளித்து மனங்குளிரச் சிலவார்த்தைகள் சொல்
விழுமிதித்தாள்.

மாருதியும் அவள் பாதங்களை வணங்கி இக்கருக்கரசன்யார்? உன்இயற்
பெயரென்ன? சொல்லவேண்டுமென்றுகேட்க, இக்கரமோ மயனால் படை
க்கப்பட்டது. ஒருதானவன் அரமகளிரில் ஒருபெண்ணை விரும்பிற்க;
அதையறிந்த நான் அவளை இசைந்து இங்கே கொண்டுவந்தேன், அவ்விருவ
ரும் அன்றில்லிழைபோகமயர்ந்து பெரும்பகல்கழித்தார்கள். நானே அப்
பெண்மணியினிடத்தே அருந்துணையாய் அருகிருந்தேன். இப்படியவனின்பக்

கடலிலழுந்தி அவன் வெகுநாள்கழிகையில் இந்திரன் அவனைத்தேடி எங்குங்காணுமல் இங்கேகண்டு அவ்வரக்கனைடவளிருக்கு மலங்கேர்லத்தையுங் கண்ணுற்று அவனையுங்கொன்று களைந்து அவளைதிரோன்றுகொண்டிருந்த என்னையும்பார்த்தான், அவள் கண்சைகையால் இவளால் இந்த விந்தைமுடிந்த தென்றுதெரிவித்தாள், அதைதோக்கிய அவ்விந்திரன் என்னை இங்கேயிருத்தி இங்கராமுன்காவலென்றான். இவ்வாறு சொல்லிவிட்டு இவ்வழியீருளாகவென் றதன்றி மிக்க வவ்லமையுள்ள வானரங்கள் இராகவனுணையால் வரும், அதனல் உன்னிடர் நீங்குமென்றான். இங்கரிலே உண்ணவுணவுண்டு, பூசப்பூச் சுகளுண்டு, சூடுதற் காபரணங்களுண்டு, புனைய ஆடைகளுண்டு, இவற்றைப் பெற்றுக்கொண்டிருந்தேன். இதுவோ ஐயிருபதுயோசனையமைந்த பிலத்தில் உய்யுநெறியாகியஉபாயத்தையுண்டாக்கனினைக்கவேண்டுமென்றாள்; இவ்வாறு அப்பெண்ணமுதமன்னவள் சொல்ல அவளைவணங்கி உனக்குதேவர்கள் சேர்ந்து வசிக்கும் பொன்னுலகந்தருகின்றேனென்று சொலலிவானரர்களையுமஞ்சவேண்டாமென்று அப்பிலத்தையிடந்துபூமியோடுமேற்கடலிலோக்கி விட்டெறிந்தாலாரித்தான், இன்றும் அது மேற்கடலில் பிலத்தீவென்று சொல்லவிளங்குகின்றது. இப்பால் அவ்வானரர்கள் அனுமானுடன் விடைபெற்றுச் சானகியானைத் தேடச்சென்றனர். அவளும அவர்களிடத்திலே விடைபெற்று ஆகாயமார்க்கமாகவே போய்விட்டாள். அவளும்போய்விட்டபின்னர் வானரரெல்லாம் அனுமானுடைய பராக்கிரமங்களையெலாம் புகழ்ந்துகொண்டு பூமியில் தேடிச்சென்று நீர்வளம்பொருந்திய சேமியென்னும் பொய்கைக் கரையினைக்கண்டுதங்கினர்; சூரியனுமத்தமானமடைந்தான். இதுகிற்க;

பிலநீங்குபடலம்

முற்றிற்று.

ஆறுசெல்படலம்.

அவர்கள் அப்பொய்கைக்கரையையடைந்து தேன் கனிகாய்க ளுண்டு நித்தினைசெய்தனர். அப்போது மலையையும் கடலையும் போன்றவனும் யமனைபோன்றவனும் கொடுமைக்கிடமானவனும் குணக்கேடனும் பிறையேபோலும் கந்தமுடையவனும் கோபக்கண்ணையுடையவனும் மின்னலு முழக்குமுதலியவற்றின் மிகுதியையுடைய மேகம் கைகளைச் செலுத்தி மேலிடத்தில் சோகத் தன்மேனி சென்றுலாவியொற்றலா லருஷ்பாயு மலையேபோன்றவனும் வானவர்கட்கு மற்றவர்க்கும் சோகியதானவர்க்கு மெய்வலிமையிற் சிறந்தவனுமாகிய புட்கலவனனென்னும் தானவனொருவன் கறங்கேபோலும் எங்கெங்குஞ் சுழன்றும் செம்பட்டமயிர்பெற்றுப் பிசையும் கையையுடையானைய்ச் தருமசிந்தனையைப்பெற்றுத் தேடியலையு முயற்சியாலயர்ந்து படித்துறங்கும் வானரவீரரிடத்தில் வந்தணைந்தான். அவன் அங்கணைந்து அவர்களை நோக்கி இத்தப்பொய்கை யென்னுடையதென் றறிந்திருந்தும் யாசோசில

அற்பர்கள் வந்தடைந்தனரென்று காலனேபோல நெருங்கி ஐயனுகிய அங்கதப்பெருமான் மார்பிலறைந்தான். உடனே நித்திரைதெளிந்து இவனேதான் அவ்விராவணனென்று நிந்தித்துத் தன்னேமோதிய அத்தானவனைத்தானு நேரேமோதியடிக்க அதனல் அவன் தளர்ந்து வீழ்ந்தான். அவ்வோசையைக்கேட்ட வானரவீரரெல்லாம் விழித்துக்கொண்டு யாரிங்கேவந்தது! இங்கே நடந்தகாரியமெனனேயென அனுமான் தனியே வினவ ; அறிவிற் சிறந்தவனே யாரென்று மறிந்திலேமென்றனன். அதற்குச் சாம்பனும் யாலிங்கே வசிக்கின்ற தானவனேயறிவேன் அவன் பெயரோ தூமிரனென்னும் பெயரோடுகூடிய தானவனென்றன், வெறும் போர்செய்பவருண்டோவென்றனன். பின்பு அப்பொய்கையைக் கடந்தப்பால் சானகியானைத் தேடுமுயற்சியையுடையராய்நின்ற நிந்தனேயை மேற்கொண்டு பெண்ணேயாற்றைக் கடந்தார்கள். அந்தவிடத்திலே தண்ணீர்த் துறைகளையும் மயிலகள்நின்று நடனஞ்செய்கின்ற சோலைகளையும் புட்பத்தடாகங்களையும் பளிக்கறைகளையு தேடிக்கொண்டே சானகியாளைக் காணுமல பெண்ணேயாற்றையுங் கடந்து காடுமலைகடந்து பிராமணர்கள்போல வடிவங்கொண்டு விதர்ப்பதேசஞ்சென்று அங்குந் தேடிக்காணுமல் தண்டகமடைந்து முண்டகத்துறையையுந் தேடிபபார்த்துப் பாண்டுமலையைப பார்த்துதிரிந்து தேடிக் கோதாவரியையுங்கண்டு சுவண்ணத்தையடைந்து குலிந்தத்தையுங் கடந்து அருந்திமலையைத் தரிசித்துத்தேடி மாகதமலையைக்கண்டு தேடி வடவேங்கட மலையையடைந்து பின்னும பிராமணவடிவங்கொண்டு தேடியுங்காணுமல தண்டகாட்டைத் தேடியடைந்து கடந்து பொன்னியாறுசூழ்ந்த சோணாட்டிலுந் தேடிக்காணுமற் கடந்து சேந்தமிழ்நாட்டிற்றேடி யெங்குந்தங்கண்டறியாமல மேகந்திபலேயைபபடைந்து தென்கடற்கணையைக் கண்டார்கள்.

நூறுசெல்படலம்
முற்றிற்று.

சம்பாதிப்படலம்

இவ்வாறு தென்சமுத்திரக் கணையைக்கண்டு அங்கிருக்குங்காலத்தில் எம்மருங்குஞ்சென்று துருவித்தேடிவந்து மகேந்திரமலையை யடையுங்களெனறு அனுப்பப்பட்ட வானரசேனையும் வந்துகூடிற்று; யாவருமவந்து சேர்ந்தவுடனே அவர்கள் சானகியாகனைக்காணுதாராய் இன்னதைச்செய்யலாமென்பதுந் தோன்றுமல் நாக்குழறச் சொல்லத்தொடங்கினர். நமக்குச்சொல்லியனுபபிய தவணேயும் கழிந்துவிட்டது; நாமோ சானகியானையுங் காணுதிருக்கின்றுமே. இராகவனுயிரும் பொன்றுமே! சுக்கிரீவாக்கினேயுஞ் சுபமாவிடாதே! நாதுசெய்கையறக்கெட்டது, நாம் அருந்தவஞ்செய்வோமோ! அப்படியல்லாவிட்டால் ஆலவிடமுண்டேனுமாய்வோமோவனத்தங்களுயிரைவிடத்துணிந்தவராய் என் செய்வோமென்று மெண்ணினர்கள். இப்படி வானரவீரரெல்லாம்

சொல்விக்கொண்டிருக்கையில் அங்கதப்பெருமான் சொல்லத்தொடங்கினன். காம் சானகியாளைத்தேடிக் கண்டுபிடிப்போமென்று இராகவணிடத்திலேயிடம்பமாகப் பேசிவந்தசெய்திபொய்யாய்ப்போய்விடின்றதே! காம்செய்துமுடிப்போமென்பதைசெய்யாதிருக்கின்றோம், வெறுங்கையாய்காங்கள்கண்டுபிடிக்காமற்போய்விட்டோமென்றுசொல்வதுமாகாது, எந்தையாகியமகாராசாவும் கோபிப்பார், சீராமபிரானுஞ் சிந்தைவருந்தித் திகைப்பான், அச்செய்கையைப் பார்த்துக்கொண்டிருப்பதழகல்ல, காணுபிர்விடத் துணிவதேநல்லது, நீங்கள் யோசித்துச் சொல்லவேண்டுமென்றான். அதைக்கேட்ட வானரவீரருள் சாம்பன் நீ சிறந்த சொல்லையே சொல்லினாய்! காமழுதுகொண்டிருப்போமோ! நம்மன்பு பாழ்படப்போய்த் தொழுதுமோ வென்றதன்றிப் பின்னுஞ் சொல்லுகின்றான். காம் மாண்டுபோவதேநல்லது, அதைவேண்டுவது உயிர்க்குறுதி வேண்டப்படுவதென்றான். அதைக்கேட்ட அங்கதப்பெருமான்நீங்கள் இறந்துபடதான்மாத்திரம்போலவேனுல்அதுநல்லதோ, அது உலகம் விரும்புஞ்செய்கையா! அல்லவே; பெரியோராற்புழிக்கப்படுஞ் சொலலுக்கஞ்சித்தனதுயிர் போன்றவர் இறந்துபடபமாணவனைஉலகத்தார்சொல்லுவதற்கு முன்னே காள் இறந்துபடுவதேநல்லது, நான் இறந்துபட்டோமென்று கேள்விப்பட்டால என்தாயும் தந்தையும இறந்துபடுவா, அதைக்கண்ட இரகுநாயகனும் இளைய பெருமானும் இறந்துபடுவா, இச்செய்தி அயோத்திக்கெட்டினால் பரதனும் சத்துருக்கனும் இறந்துபடுவர்; அயோத்தியிலுள்ள கோசலையன்னையையுள்ளிட்ட தாய்மாரும் நகரமாந்தரு மிறந்துபடுவா, சானகியாளென்னும தவகொழுந்தினால் உலகத்திற்குநேர்ந்த ஆபத்துசொலலற்கிடம்பெறுமேதனறு அங்கதகுமாரன் சொல்லச் சாம்பன் பினவருமாறு சொலலுகின்றனன.

அப்பா அங்கதா! நீயும் உன்குலத்தாருமொழிய உன்குலத்தரிமைக்கு வேறொரு மகன்கிடையாதே. அதையெண்ணியே காங்கள் இறந்துபடுவதாகச் சொன்னது சுக்கிரீவாக்கினைக்குப் பாகமேதயாம. அப்படியல்லாவிட்டால காயகாரியத்தையுஞ் சொல்லத் தருணதா! நீயிங்கிருந்தும புறப்பட்டுப் போய்விடு! போய் அவகே காங்கள் சானகிபாளைக்காணுமையும் எங்கள்மரணத்தையும் தெரிவித்துவிடு, சோகங்கொள்ள வேணடாமென்றான். அங்கே சாம்பன் இப்படிசொல்ல அருகேகின்றஅனுமான்சொலலுகினனான். இயலுன்றுலகினுள்ளும் ஒருபக்கத்தினும் சானகியாளைப் பாக்கவிலலையே! வேகமாண்டவர்போலவும் தருக்கிலாதவர்போலவும மிக்க வேகத்தினையுடைய நீங்கள் கழிந்துவிடலாமோ, காம் பிலத்திலும் வானத்திலும் மலைகளினுச்சியினிலும புறத்திலும அண்டத்திலும சானகியாளைக் காணத்தேடித் திரிவோமென்றால் தவணையைக்கழிந்து வந்தார்களென்று நமது சுக்கிரீவமகாராசா சொலலுவாரோ! காமோ இன்னும் சானகியாளைத் தேடித்திரிவதேநல்லது, அப்படி தேடித்திரிவது சானகியார் பொருட்டுப்போரின்மாண்டுபோனசடாயனவைப்போல்இறந்துபோவேமானுற் பெருமிதமல்லதுபழியென்று சொல்லப்படுமோ!என்றான். இப்படிசொல்லிக்கொண்டிருக்கையி லதைத்தூரத்தேகேட்ட சம்பாதி அவ்வாறு தன் தம்பி யிறந்துபட்டமைபால் மனகெக்குருகி வருந்திப் புலம்பிக்குன்று

போலகடந்து அவர்களை யடைந்தான். அதைக்கண்ட அனுமான் கண்சுவரிக் கண்டுந் தீப்பொறியெழக்கோபித்துஇதுகள்ளமாமாயக்கசட்டரக்கருருவமென் றே யெண்ணினின்றான். இப்படிநின்ற அனுமானை இங்கிதமாகச்சமபாதி நோக்கி வாக்கினால் வேறொன்றுஞ் சொலலாமல் சடாயுவை யுயிர்வாங்கினவர்கள் யார்! அதையுண்மையாகச் சொல்லவேண்டுமென்று கேட்டான். அதற்கு அனுமான் நீ உன்னையுள்ளபடி இன்னனென்று தெரிவிப்பாயானால் பின்னைசொல் வேனென்றான். சம்பாதியும் நீங்கள் சொன்ன சடாயுவுக்கு நான்முன்பிறந்தவன், என்பேர் சம்பாதி யென்பானென்றான். அதற்கனுமான் தனக்கும் இராவணனுக்கு நடந்தபோரில் அவன் கைவாளாற் கொலையுண்டிறந்தானென்று தெரிவித்தான். அப்பால் சம்பாதியும் சடாயுவை யெண்ணிப்புலம்பியழுது நின்று எவ்வாற்றானும் கொல்லப்படாத என் தம்பியாகிய சடாயுவை இராவணன்வாளாற்கொன்றவகையெப்படியென்றுசொல்ல,இராமகாரியத்தின் பொருட்டு இராவணன்கைவாளாற் கொலலப்பட்டானென்றான். பின்பு சம்பாதி தம்பியை நோக்கிப் புலம்பியழுது தம்பி மரணத்தைச் சவித்தாரமாக அனுமான் சொல்லக்கேட்டான். பினபு சமபாதி தருமசொரூபியாகிய இராமனேடு சிநேகஞ்செய்து சானகியார்பொருட்டையிற துறந்தானென்பதனால்அவனிறந்தவனேயலலன், பெறுதற்கரியவீவின்பமடைந்தான். இதைபபார்க்கிலும் அவன் பெறவேண்டிய பேறென்னவிருகின்றதெனறு சொலலி அருகேயிருந்த தீர்த்தத்திற்சென்று நீராடிமெலலெனவந்து அனுமான் முதலானவர்களை நோக்கி இன்னை நீங்களெலலீரும அவ்விராமதாரகமந்திரத்தை யொருங்கே பாராயணஞ்செய்யவேணுகினறேனன்றான. அவாகளப்படியே அவ்விராமதாரகமந்திரத்தைப் பாராயணஞ்செய்தனா. உடனே அச்சம்பாதிக்கு ச்சிறகுமுளைத்து வானளவுந்தாவியது; இவ்வாறுசினைகளைபபெற்று விளங்குகின்ற மேனியையுடைய சமபாதியுலகங்கு மூடி நின்றான். அதைக்கண்ட வானரவீரர் நீமுன்னுளுற்ற தன்மையாதெனறு கேட்கச் சம்பாதி சொல்லத் தொடங்கினன். அருணனுக்குச் சம்பாதியென்றும் சடாயுவென்றும்இருமக்கள் தோன்றி அதுமுதல் கழுகுகளுக்கரசாக வரசு செலுத்திவந்தோம். ஒருகாள்மெலுலகங் காணவேணுமென்னு மவா மிகுதியால்சூரியமண்டலம் வரையிலும்போய்ச்சூரியன்தனைப்பார்த்துத்திருமபினும். எங்களைப்பார்த்த சூரியன் கோபித்து எவ்வகைத்தீயையும வெதுப்புகின்ற தன் கட்டீயினல் எங்களைத்தீயெழநோக்கிப்பார்த்தான்.என்தம்பிவருத்தப்பட்டு அவ்வக்கினியினல்தன்சிறகுவருந்தலாலுகி என்னைக்காப்பாற்ற வேணுமென்று புலம்பியழுதான். அதைக்கண்ட நான் அவனை என்சிறகினல் காத்தேன். அதில்அவன் மறையப்போனன்.நான்என்னுடம்புமிறகும்வந்து தீர்ந்துவிழுந்துவிட்டேன். விழுந்தமிறவாமலிருந்தேன். என்னைக்கண்டசூரியனும் சற்றே இரக்கமாய்ச் சானகியாளைத் தேடிவருகின்றவானரங்கள் இராமதாரகமந்திரபாராயணஞ்செய்யுமானல் அதைக்கேட்டு உனக்குச்சிறகு மெய்யுமுன் போலாமென்றுவரங் கொடுத்திருந்தான். நானுஉலோகசாரங்கமுனிவனைச்சிரமத்தில் விழுந்ததனல் என்னுருயிர்விடத்துணிந்தேன். அவ்வருந்தவன்என்னைநோக்கி நீயென்வருத்

தப்படுகின்றனை. உனக்குச்சிலகாலைக்குள் இறகுமுளைத்துவிடும், இனிவருந்த வேண்டா மென்றான். காணுமுயிர் நீங்காதிதுகாறுமிருந்தேன், அவ்விராவணன் கெட்டொழிவதுமெய், என்தம்பிவீழ்ந்தமையால் கான் கழுகுகளைக்காக்கச் செல்கின்றேன். இதனை தசரதராமனுக்குத் தெரிவிக்கவேண்டுமென்றான். பின்பு அனுமான் சம்பாதியைநோக்கிநாங்கள்இராவணன்சானகியாளைக்கொண் டுவந்தது தென்றிசையாகையாலெங்குந் தேடிப்பார்த்தோம், எங்குங்காண வில்லையே, என்செய்வோமென்றனர். அதைக்கேட்ட சம்பாதி சொல்லுகின் றான். அப்பாதகனுகிய இராவணன் சானகியானைக் கொண்டுவருகையில் பார்த்தேன். அவனெடுத்துக்கொண்டுவந்து சிறையில் வைத்திருக்கின்றான். இன்னுமச் சிறையிலேயே கிடக்கின்றாள். இந்தச் சமுத்திரத்தில் நூறு யோசனை தூரங்கடந்து சென்றால் இலங்காநகரம்தான்றும். அந்நகரத்தில பாசக்கயிற்றால், உயிரனைத்துங் கட்டிக்கொண்டு செல்லும் காலனும் புகவஞ்சு வானென்றால் யான்சொல்ல வேறென்னவிருக்கின்றது. நீங்களெவ்வாறு அந் நகரத்தையடைய வல்லீர்கள். காலுமுகங்கொண்ட பிரமன் உமையொரு பாகத்தொருவன் இவர்கள் நிற்க, பாற்கடலில யோகநித்திரை செய்யும் கள்ள மா மாயப்பிரானை வலிந்தால் அந்நகரத்திற் செல்வதாயிருந்தாலும் தகுந்தகால மனே செல்வதாயிருந்தாலும் கடினமாயிருக்கும். இக்கடலைக்கடந்து யா வருஞ் செல்வதோ துர்லபம்; அவ்விலங்கைக் குட்சென்று காணவேண்டுமெ ன்றால ஒருவரோ தான்போகவேண்டும். எலலாரும்போவது கஷ்டசாத்தியமா யிருக்கும். ஆகையால் ஒருவர் மறைந்துசென்று சானகியாருக்கு உண்மை யைத்தெருட்டி மீளவேண்டும. அப்படியல்லாவிட்டால் என் சொல்லாவது கேட்டுத்தெளிந்து இரகுநாயகனுக் குணர்த்தவேண்டும். மேலும்கழுகுகளோ தங்களைப் பாதுகாப்பாரில்லாமையினால் அவைகள் எல்லாம் மிகவும் மனங் கன்றிச் சேக்கையைவிட்டிரியல் போய்த்திரிதராநின்றன. அதைத் தீர்க்கும் காரியம் எனக்குரித்து, ஆகையால் நான போகவேணடும் விடைகொடுக்க வேண்டுமென்று விடை பெற்றுக்கொண்டு தான் கழுகுகளைகாக்குங்கார ணமாக ஆகாயமார்க்கமாகவே சென்றான். வானரவீரரெல்லாம் இவன பொய்யுரையான், நாம் அங்கை நெல்லிக்கனிபோலனைத்து மறிந்துகொண் டோம், உய்யும் சொல்லுதவக்கொண்டு சாலமகிழ்வெய்திடும். இனி கல்லன வெல்லா மெண்ணிச் செய்துகொள்ள வேண்டுமென்று தத்தமக்குள் பேசிக் கொண்டனர். இதுநிற்க;

சம்பாதிப்படலம்

முற்றிற்று.

மகேந்திரப்படலம்.

வானரவீரர்கள் எல்லாம் அங்கதப்பெருமானையடைந்து சிராமபிரானைத் தொழுது நடந்தவர்த்தமானங்களையெல்லாம் சொலலுங்கோள், நம்மிற் சமுத்திரத்தைதத் தாவிக்கடந்து யார்போகவல்லவரெனத்தம்வலியெல்லாம்சொல்லிக்கொண்டார்கள். நமக்கு இக்கடலைத் தாண்டிச்சென்று காணும்வலியே கிடையாதுதே, என்னசெய்வோமென்றார்கள். இவ்வாறு நீலன் முதலாகிய படைத்தலைவர்கள் சொல்லிக்கொள்கையில் வாலிகுமாரனாகிய அங்கதப்பெருமான் நானே சமுத்திரத்தைதத் தாவிக் கடப்பேன், பின்னே மீண்டுவரவலி பெற்றிராமலிருக்கின்றே னென்று சொல்லிவிட்டான். பிறகு சாம்பனென்னும் படைத்தலைவன் வேதமுதலாகிய ஆப்தகலைகளெல்லாம் சொல்லியுமுணராப் பரம்பொருளாகிய கள்ளமாமாயப்பிரான் வாமனப்படிவங்கொண்டு காசிபனுக்குப் புத்திரனாயும் ஆகண்டலனுக்குத் திருத்தம்பியாயும் தோன்றி மூவுலகத்தினையு மீரடியாலளந்த காலத்திலயான் உலகமுழுதையும் பறையறைந்துகொண்டுவர மேருமலையென்னமோதவிளைத்துக்கால்வருந்தினேன், அதனல் இச்சமுத்திரத்தையுந் தாண்டுமிடக்கில்லாதவனு யிருக்கின்றேன், எவ்வாறுசானகியானைக்காண்பேனென்றுசொலலி முடித்துப் பின்னும்சொலகிறான், இப்போது நாம்இத்தன்மையானதுன்பத்தையனுபவித்துயாரைத்தான் சானகியானைத்தேடுமபடி யனுப்புவோம. ஆயினும் குரங்கு சானகியானைத் தேடிச் சிறந்தென்னும் புகழை நிலைநிறுத்த வல்லவன் அனுமனேயாம், அவனே சிராமபிரானுலே கணையாழியைக்கொடுத்தனுப்பப்பட்டமையாலும் எல்லாக்காரியங்களையுஞ்சொல்லாமலேமுடிக்குந தன்மையினலும் வேறொருவா அவனுக்கு ஒப்பாவார் இல்லையென்று அவன் ரூளாண்மையையே வியந்து சொல்லத்தொடங்கினன். ஐயா அனுமானே ! பிரமகற்பமுடிந்தகாலத்திலும் அழியாதவனே; சகலகலைகளையும் ஐயந்திரிபறக்கற்று வல்லவனே, யமனும் பயப்படத்தக்க கோபத்தையுடைய தோள்வல்லமை யுடையவனே, ஆலமுண்ட உருத்திரமூர்த்திபோலும் போராற்றலுடையவனே ! பஞ்சபூதங்களாலுமழியாதவனே, எவ்வகையான தெய்வப்படைகளாலும் கொல்லப்படாதவனே, உம்மையொப்பார் உலகத்திலொருவருமிலலாதவனே! ஒருகால் ருப்புற்றாலும் அண்டத்துக்கப்பாலும் குதிக்கத்தகுந்தவனே ! எப்படிப்பட்ட வைகளையும் சொல்ல வல்லமையுடையவனே! இக்காரியத்துக்குநீயே முதன்மையாகத் துணிந்துவந்தனை, எங்கேயும் செல்லவல்லாய், மீளவும் வலியுடையாய், வலல்மையுண்டானுல் கொல்லவும்வல்லமையுடையாய், தோளாற்றலாற் சிறிதும் குறையாதவனே, நன்றுக அறிந்து துணிந்து தருமமார்க்கங்கெடாதவண்ணம் கெட்டருளும்படி வாலியைக்கொலவிக்கு மதிநுட்பமுடையவனே, இந்திரன் உன்னை இளம்பருவத்தில கன்னத்தில் வச்சிரமெறியச் சிறிதேனும் புன்மையிருமிழுவாதவனே, முன்னுளிற் சூரியனிடத்தே சகலகலைகளையும் கற்றவனே என்று இன்னனபோன்ற பலவகையாகிய தோத்திரம்சொல்லிப்புகழ்

ந்து நீயே இக்காரியத்திற்குச்சென்று எமக்கெல்லாம் புகழையுண்டாக்கிஉமது தானையக்கண்டு செய்திசொல்லி வரவேண்டும். அதன்பொருட்டாக இக்கடலையும் கடக்கவேண்டுமென்றான்.

இவ்வாறு சாம்பன்சொல்ல அனுமான் அகமுமுகமுமலர்ந்து தலைமேற் கைகூப்பிக்கொண்டு தன்குலத்தாருக்கெல்லாம சகதோடமுண்டாகத்தன்சிற் றைமகிழ்ச்சியாய்ச்சொல்கின்றான். ஐயாசாம்பனே! நான் தங்களுடைய கருணையாலும் சானகிராமனுடைய அருட்பெருக்காலும் இலங்கையையடைந்து அதனை வேரொடுபிடுங்கி இங்கேகொண்டுவாவென்றுசொன்னாலும், என்னோடு போர்செய்ய எதிர்ந்தானையெல்லாம்கொன்று சானகியானையேகொண்டுவரக் கட்டளையிட்டாலும், தாங்களே யென்னையொருபொருளாக மதித்தேவினமையால் அக்காரியத்தைச்செய்யாதொழியேன். இந்த நூறுயோசனை தூரமுள்ள கடலென்னுள்ளடியிலடங்க முன்னாள் பகவான் மூவடியாலளந்ததுபோல் இக்கடலைத்தாவிச்சென்று இந்திரன்முதலியதேவர்கள் என்னோடெதிர்த்தாலும் இலங்காநகரத்துள்ள துன்மார்க்கனையெல்லாம கொன்று களைத்து நினைத்துவந்தகாரியத்தை முடித்துவிடுவேன். நீங்களும் நினையன்மாத்திரத்தில் இவ்வெழுகடலையும் கடந்து உலகனைத்தையும வென்று சானகியானைக்கொண்டுவரவல்லவரேயல்லது வேறல்ல; நீங்களானென்னை இப்போதேவியதைச்செய்யக் கட்டளையிட்டு என்னறியாமைவிளங்கத் துணிக்கத்துணிந்தீர், என்னைப்போலும் பிறவியெடுக்கப் பாக்கியம்செய்தாரிலர். இக்கடல்முழுதும் உலகத்தை மூடிக்கொண்டாலும் அண்டமே யுதிர்ந்துபோனாலும் உங்கள்கிருபையும் எமதிறைவனுகிய இராகவனுடைய கருணையுமிரண்டு சிறகாகவிருப்பதனால் நான்கருடனைப்போலக் கடக்கவலலேன். நான் வருமளவும் இவ்விடத்திலேதானே இருங்கோள், இலங்கைக்குச்சென்று சானகியானைக்கண்டு விளைத்து திரும்புகின்றேனென்று விடைபெற்று வானரவீரரெல்லாம் சகதோடமாகவாழ்த்தெடுப்பவும் தேவர்கள் பூமழைபொழியவும் மகேந்திரமலையின் மேலேறிச்சென்றான்.

மகேந்திரப்படலம்

முற்றிற்று.

கிட்கிந்தாகாண்டம்முற்றுப்பெற்றது.

ஸ்ரீராமஜயம்.

ஆந்தரகாண்டம்.

கடல்தாவுபடலம்.

அலங்கலிற்றோன்றும்பொய்ம்மையரவெனப்பூதமைக்தும்
விலங்கியவிகாரப்பாட்டின்மேவறபாடுற்றவீக்கம்
கலங்குவதெவனைக்கண்டாலவனென்பகைவில்லேந்தி
இலங்கையிற்பொருதான்றேமறைகளுக்கிறுதியாவார்.

அப்படி மகேந்திரமலையின்மேல்நின்ற அநுமான் தன்கண்ணுக்குநேராகச் சமீபத்தில் தெய்வலோகம்தோன்றக்கண்டு இதுதானே இலங்கையென்றுநினைத்துஜபப்பட்டுஉடனே இதுஉயாத்திரிருக்கிறபடியினாலே இலங்கையல்லதெய்வலோகமென்றும், இதில் சீதாபிராட்டியாரில்லையென்றும் தெரிந்துகொண்டு, பார்வையைத்தாழ்த்திப்பபாங்க அத்தெய்வலோகத்திலும் மிகவும் அதிசயமாகிய மணம்வீசும் சிங்காரவனங்களும் வட்டமாகிய பொன்மதில்களும் வெற்றிக்கொடிகட்டிய வாசல்களும் இரத்னகசிதமாயும் கனகமயமாயும்விளங்கும் மாடமாளிகை கூடகோபுரகளும் வீதிகளுமுண்டாகித தகத்தகாயமாயிருக்கின்ற இலங்கையைகண்டு மிக்கசந்தோடமாய் அண்டகடாகமும் அட்டதிக்குகளும் குலுங்கநடபடி புயங்களைக்கொட்டி அட்டகாசம்செய்து, முடிவில்லாத உன்னதமான விச்சுவரூபத்தையுடைய அநுமான்நின்றபடி இரண்டுகாலையும் ஊன்றி மிக்க பராக்கிரமத்துடன அப்பால் தாண்டுவதற்கு முயன்றான். அப்போது அம்மலை நெறுநெறுவென்று தெரிந்துகீழேயழுந்தி வயிறுகிழிந்து அதன்குடல்கள் பிதுங்கினவைபோல, அதிலே வெகுகாலமாக வசித்துக்கொண்டிருந்த மலைப்பாமபுகள் வெளிப்பட்டுப்புரண்டுபோகத்தலைப்பட்டன. சுனைகளிலே நித்திரைசெய்துகொண்டிருந்த சிங்கங்கள் நெரிபட்டு வாயிலுல் உதிரங்கக்கிக்கொண்டு மடிந்தன. பறவைக்கூட்டங்களெல்லாம் எழும்பிக்கடலானது காணமடையும்படி இரைச்சலிட்டுக்கொண்டு பறந்து பகலென்பதேதெரியாமல் ஆகாயத்தை மறைத்தன. ஆண்யானைகள் இரண்டுசெவிகளுந்தாழ்ந்து முதுகிலேமோதுவதினால் கடுங்காற்றுவீச ஆகாயத்தினிடத்திலிருக்கின்ற சந்திரனும் அஞ்சப் பிடியானைகள் நடுநடுங்கி உடலத்தழுவிக்கொள்ளத் தம்முடைய தும்பிக்கைகளால் மரங்களைப்பேர்த்துச்சுழற்றிக்கொண்டு வீறிட்டோடினை. பொன்மயமாகிய சிகரங்கள்பொடிப்பொடியாகஅனற்பொறிகள்சிதற

அம்மலையின்முதுகு தெரிந்தபோது அங்கே மயிர்முளையாமலும் கண்திறவா மலுமிருக்கின்ற இளங்குட்டிகளை வாயிலேகௌவிக்கொண்டு புலிகளெல்லாம் பயந்தோடின. இருந்தாற்போலிருந்து, அம்மலை தெரிகின்ற முழக்கங்காணவே அதில்வசித்திருந்த வித்தியாதர குமாராகளெலலாம் பயந்து கையில் வாளுங்கேடகமுமபிடித்துக்கொண்டு அந்தரமார்க்கத்தில் எழுமபி போர்க்கள த்திலே பகைவர்கள்காலத்துணிக்குமபடி கத்தியைக்கொணடு ஓங்கியபோது அதைத்தப்பித்துக்கொண்டு அதிகவிசையாய் மேலெழும்பிய வீரர்களைப்போ லப்போயினர். காண்மீன்களும் சந்திரசூரியர்களும மேகங்களும் மேலே கவழ்ந்துகொண்டிருந்த அமமலை அவைகளெல்லாம ஆகாயத்தில் நிற்க, அது மானுடைய சரீரபாரத்தினாலே பூமியிலழுந்துவது, கொடிமரமானது மேலே காணக் குமிழிகளுண்டாகக் கடலிற் பெரியகபல அமிழ்கின்றதுபோலிருந் தது. சந்தனமரம்குங்குமமரமுதலானவைகள்கற்கள்தெரிகின்ற சந்துகளிலே அரைபட்டுச் சுனைநீரில் கரைபட்டு இங்குலிகப்பொடி புட்பத்தின் மகரந்தப் பொடிகளுடனேகலந்து சிவந்து வெளியில அருவியாயோடிவருவது, அம்மலை கிழிந்து அதனுடைய உதிரம் புறபபடுவதுபோலிருந்தது. அதில் வசித்துக் கொண்டிருந்த தவசிகளெல்லாம் அம்மலை முன்னாளில் திருப்பாற்கடலில் கட்டுக்கடைந்த மத்தாகிய மந்தரகிரியைப்போல்ச் சுழலவே, தாங்கள்செய் கின்ற தவமுழுந்தும முடியாமலும் தேகபாசத்தை ஒழியாமலும் மோட்சப் பிரதேசத்திற்குப் போகின்றவர்களைபபோல ஆகாயமார்க்கத்தி லெழும்பிப் போயினர். அம்மலைநெக்குவிட்டுப்பிளந்தபோது அதிலுண்டாகியஓசையைக்கே ட்டுத் தேவமாதர்கள்பயந்துதடுமாறித் தத்தம்நாயகாகளைக் கட்டிக்கொணட னர். அப்படி அவர்களால்தழுவப்பட்ட அத்தேவர்கள் முன்னாளில் கைலாய மலையை இராவணனெடுத்தமாதிரத்தில உமாதேவியைபயந்து கட்டிக்கொள் ளும்படி அதிலிருந்த சிவபெருமானை ஒத்திருந்தனர். பின்னும் அமமலையில் பிணங்கி மிக்கதோடமாயிருந்த அநேகந் தெய்வப்பெணகள் இப்பயத்தினால மனந்திடுக்கிட்டு அக்கோபம நீங்கிப் புருடர்களைத் தழுவிக்கொண்டவாகளாய் அந்தரமார்க்கத்தில் எழும்பிப்பயந்தோடி தாங்கள்விட்டுவந்த கிளிகளைக்குறி த்து இரங்கிக்கிலேசித்தனர். இப்படிப்பட்ட சமயத்தில் தேவர்களும் முற்றத் துறந்த முனிவர்களுமமற்றும் மும்மையுலகத்திலுமிருக்கின்றஉத்தமபுருடர்க ளும் வரிசைவரிசையாய் அந்தரத்தில்வந்துநின்று புட்பங்களும் சந்தனமும் வாசனைப்பொடிகளும் இரத்தினங்களுமாகிய இவைகளையெல்லாம்சொரிந்து மகாதபோவராகிய அனுமானை! நடவுமையாவென்றுசொல்லி வாழ்த்தினர். வீராதிவீரனாகிய அனுமானும் மிக்கசிக்கிரமாகத் தாவிப்போகத் தீலிப்பட்ட னன். அப்போது கூடவந்திருக்கின்ற சாம்பன் அங்கதன் முதலானவர்களெல் லாம்பார்த்து ஐயா அனுமானை! இக்கடல் குறுமுனியாகிய அகத்தியமுனிவ ரால் உண்ணுமபடி அடங்கியதானைபோல் இவ்வற்பமான கடலேயா? நாம் தாண்டுகின்றதென்று இகழ்ச்சியாக மனத்திலெண்ணுமல், போகின்ற காரியம் பெரிதாகையால் அதைப்பிரதானமாக எண்ணிக்கொண்டு போய்வாவென்று சொல்லினர். தேவர்களெல்லாம், அனுமான் இப்பொழுது இவ்வடிவமெடுத்

தது அவ்விலங்கைமட்டுமே போவதற்கன்று அதற்கப்புறம் போவதற்காகவும் காண்கின்றதென்று அதிசயித்துப்பார்க்க, அவ்வனுமான் முன்னே தாழ்ந்து தன்காலினுலழுத்தவே அம்மலையின்சிகரமும் அதன்மேலிருந்த தன்பாதமும் பூமிமட்டுமழுந்தின. வாலைவீசி கீட்டிக்கொண்டு கால்களைமடக்கி மார்பை யொடுக்கித் தோள்கள் பூரித்துவளரக் கழுத்தைச்சுருக்கிக் கைகளை கீட்டித் தலையை உயர எடுத்து வாயினுல இராமாமவென்று சொல்லிக்கொண்டே பார்ப்பவர்களுடைய பாணைக்கெட்டாமல அதிகவிசையாக மேலெழுமபினன். உச்சியானது பிரமலோகத்தை அளாவுமபடி அவனெழும்பினவுடனே அவ்விசையிலே அநேகமரங்களும் குன்றுகளும் யானைமுதலாகிய பல்வகை மிருகங்களும் இது இராமகாரியமென்று அந்து தாங்களும உடன்போக எழும்பினவைபோல எழுமபின. அவ்வளவாக எழும்பினகுன்றுகள் கற்கள் மரங்கள் மிருகங்கள் மற்றுமுள்ள சகலசீவராசிகளும தென்றிசையிற்போய் அஞ்சனை இளஞ்சிங்கத்துடனே இலங்கைக்குப்போவதற்கு விசைபோதாமல் நின்றுபோனவைபோல அங்கங்கே விழுந்துவிட்டன. அப்படி அக்கடலினிடத் திலே மேலுங்கீழுமாகவிழுந்த மிருகங்கள் மரங்கள் கொடிகள் செடிகள் குன் றுகள் முதலானவைகளும அவ்விடத்திலே சிராமபிரானவருக்கு கோபஞ்செய்வா னென்று முன்னமே அனுப்பட்டனதுபோல விளங்கின. அனுமான் பாய்கிற விசையினுலே அக்கடல கிழிபட்டுப் பாதாளமடமே வெளியாக நாகலோகத் தின் மாணிக்கபிரகாச முதலானவைகளையுங்கண்டு அனுமான் நமக்கு நாக லோகமுங்காணுமபடி கடைத்தது என்னபாக்கியஞ்செய்தோமென்று மகிழ் வடைந்தனன். அப்போது அநாகலோகத்தாமுன்னுளில கருடன்கடலின்நீர் கிழிபச்சிறகைவீசிக்கொண்டுவந்து அமிர்தத்தை எடுத்துப்போயினனே, அவன் இப்போதும வருவதுபோலகுகாணுகின்றதே! இனிஎப்படிநாம்பிழைக்கப்போகி ன்றோமென்றுபயந்துதடுமாறி அப்பால்ஓடிப்போனார்கள். மேலும்கடல்கிழிந்து மகரமீன்கள் துடிக்க, சுறாமீனகள மிதக்க, பெரியமீன்கள் இறக்க யுகாந்தகால மாருதமபோல அனுமானபோகின்ற வேகத்தைச்சகிக்காமல் அலைகளெழும்பி இரைத்துக்கொண்டு அனுமானுக்கு முன்னே இலங்கையினமேற்போய் வீசின. திக்குயானைகள் கடுகடுங்க வடகமகயிருந்து தெற்கேபோகின்ற அனுமான் எப்படி யிருந்தானென்றுல் முன்னுளில சாப்பாசனுடன் பிரதிக்கினைசெய்து வாயு பகவான் பிரபலமாக மோதியடித்து ஓடிதுக்கொண்டுபோன திரிகூடமலை க்குஞ்சப்பாயிருந்தனன். பின்னும் அவனுமான பாற்கடலிற்பிறந்த உச்சைசிர வமென்னும் வெள்ளைப்புரவியும தெய்வசமபத்தினஆதிபத்தியமும்உண்டான இந்திரனுடைய ஆயிரங்கண்களுக்கும் எட்டக்கூடாத விசையுடனேபோவது இவ்வளவுங்களையெலலாம் கொள்கின்ற ஒரு புட்பகவிமானம் இலங்கைக்குப் போவதுபோலவு மிருந்தது. தேவா திதிசெய்யவும் மூற்றத்துறந்த முனிவர் கள் வேதவாக்கியங்களைச்சொல்லி ஆசீர்வதிக்கவும் பூலோகத்தார் வணங்க வும்போகின்ற அனுமான் இராவணனை மூண்டு அழுத்தியதுபோல இன்னமும் அழுத்துவோமென்றுகினைத்து நெற்றிக்கண்ணையுடைய சிவபெருமானை நீங் கிப்போகின்ற கைலாயமலைபோலவும விளங்கினன். பிரமசாரிவேடத்தாங்கி

விவேகத்தில் பிரமனைப்பார்க்கிலும்விசேடப்பட்டு, உலகத்திற்கெல்லாம் ஏரச் சாணிபோல நிலைபெற்றிருந்து தருமார்த்தங்களைப் பூர்த்திசெய்கின்ற அனுமான் பொன்மயமாகிய மகாமேருதன்னை நீங்கித் தென்திசையிற் போயிருக்கின்ற திரிகூடமாகியபிள்ளையைக்கண்டுவெகுநாளாயிற்றேயென்றுபார்க்கப்புறப் பட்டுவருவதுபோலவும் தோன்றினன். மற்றும் யுகாந்தகாலத்திலே மேகபடலங்களைக்கிழித்து நாண்மீன்கள் உதிரக் கடல்பொங்கிப்பாயத் திக்குகளெல்லாங்குழைய மேருமலையுங்குலுங்க மற்றமலைகளெல்லாம் வேர்பறிந்துவிழுந்து அழிபப் பிரசண்டவேகமாய் வருகின்ற தம்முடைய பிதாவாகிய வாயுபகவானைப்போலவும் காணப்பட்டனன். பத்துத்தலைகளும் இருபதுகைகளுமுண்டான இராவணன் பஞ்சேந்திரியங்களையுமென்று செய்த தபோபலமெல்லாம் மாண்டுபோய்விட்டனவென்று அறிந்து கிழக்கினிருந்து உதயமாகின்ற வழக்கந்தவிர்ந்து விபரீதமாய் வடக்கேயெழுந்து இலங்கையின்மேற்போகின்ற சூரியன்போலவும் பிரகாசித்தனன். மனுகுலத்தில் அவதரித்த சக்கரவர்த்திதிருமகனைத் துணைபற்றிக்கொண்டு, பாவகிருதியத்தையுடைய அரக்கர்கள் வசித்துவரும் இலங்கையின்மேற் போர்கின்ற அறக்கடவுளின் ஆக்கினைசக்கரம்போலவும் விளங்கினன். தன்வெண்மையாகிய தேககாந்தி இருளை நீக்கவும் மேருமலைநாணவும் ஆகாயமார்க்கத்தில் எழுமபிப்போன அஞ்சனபுத்திரன் உலகங்களையெல்லாம வடவாமுகாக்கினி தகிக்கின்ற ஊழிகாலத்தில் வடதிசையில் உதயமாகிய பூரணசந்திரனைப்போலவும், மேலும் சக்கரதாரனுகிய ஸ்ரீமந்நாராயணனுக்குத் தான் வாகனமாயிருக்கின்ற தன்னுடைய பராக்கிரமத்தைக்காட்டவும அரக்கர்களுடைய குடர்களெல்லாம் சிந்தவும் மலைகளெல்லாம் பின்தொடர்ந்துவரவும் மேகங்கள் ஆகாயத்தில் ஒதுங்கவும் கடல்களெல்லாம் கலங்கவும் தாவிபபறக்கின்ற கருடனைப்போலவும் காணப்பட்டனன்: முன்னளில் அண்டகடாகத்தையெலலாம் விஷ்ணுமூர்த்தியின் காலினால் அளந்தான் ; இவன் வாலினல் அளக்கின்றனென்றுசொல்லித் தேவர்களெல்லாம் பிரமிக்கப் பாய்ந்துபோகின்ற வாயுபுத்திரனுடைய வால் கிருபையையுடைய வேதத்தை ஓத்த அவ்வனுமானுகிய தருமதேவதையைத் துணைபெற்றுக்கொண்டு அற்பச்செய்கையையுடைய அரக்கர்கள் பார்ப்பார்களென்றே அவனுக்குப் பின்புறத்திலே ஒளித்துப்போகின்றியமபாசத்தைப் போலிருந்தது. பின்னும் அவ்வால் மகாமேருமலையை முழுதும் சுற்றிக்கொண்டிருந்த ஆதிசேடன் விஷ்ணுமூர்த்தி அனுப்பவந்த கருடனைக்கண்டு மனஞ்சோர்ந்து சுற்றியிருந்த சுற்றுகளை விட்டுப்பெயர்கின்றதுபோலவும் பிரகாசித்தது. அப்படி அனுமான்போகின்ற வேகத்திற்பிறந்த காற்றினதுமோத தேவர்களேறுகின்ற விமானங்களொன்றோடொன்று அடிபட்டு உடைந்து கடலிலேவிழுந்தன. வச்சிரபாணியாகிய இந்திரனுடைய லோகமும் நடுங்குகின்றதே, இப்பொழுது அனுமானுடைய சருக்கத்தானென்னவோ! இவன்வேகம் இலங்கைமட்டும் போவதற்காகவல்லவென்றே பூலோகமெல்லாம் அஞ்சியது. அளவிறந்த யோசனைப்பிரமாணமாகிய தூலசரீரத்தையுடையவைகளென்று சாத்திரங்களும் பெரியோர்களும் சொல்லுகின்ற திமிங்கிலம் திமிங்கிலகில

மென்கின்ற மீன்களுடனே சமுத்திரங்கலங்க, அனுமானுடைய கரசரணாதி அவையவங்களி லிருந்து தோன்றியகாற்றிலை மற்றுள்ள மச்சங்களெல்லாம் இறந்தமிதந்தன. அனுமானுடைய இரண்டுகைகளும் ரண்டு வேகத்துடனே முன்னேபோய்ப் பிரகாசிக்கின்றது இராமலக்குமணர்க ளிருவரும் அவ்வனு மானுக்கு முன்னே இலங்கைக்குப்போவதுபோலவு மிருந்தது. அப்படி அவன் வாயுவைப்போல விசையாய் ஆகாயத்தில் காவிபோமபோது கீழ்த்திசைக் குக் காவலாகிய ஐராவதமென்னும யானை சமுத்திரதிலவதரின்றதுபோல அக்கடலில் அனேககாலமாய் ஒளித்திருந்த மைநாகபாவதம மேலெழுந்துவந் தது. அவ்வகையா யெழுந்த அமமலை தனனுடைய ஆயிரஞ் சிகரங்களும் பொன்முடிகளைப்போலவும, ஓயாமல ஓடுகின்ற அருவிக கூட்டங்கள் தோவி லணிந்த உத்தரீயத்தைப்போலவும பிரகாசிக்க விஷ்ணுமூர்த்தி தூச்சனர்க ளால் வந்த துயரத்தை நீக்கும்படி கடலினிருந்துளெழுந்ததுபோலவு மிருந்தது. மேலும் அமமலை முன்னுளில் அமிர்தங்களைடந்த மததாகிய மந்திரகிரி பூமியி லழுந்தியதுகண்டு, விஷ்ணுமூர்த்தி ஆமையுருவமெடுத்துத் தாங்கினதினால் அது உயர எழுமபியதுபோலவும எழும்பியது. பின்னும் இரண்டுபக்கத்தி லும் அதன் சிறகுகள் தழைத்தோங்க வெண்ணிறம் பிரகாசிக்க மேலெழும்பி யது எவ்வகை யிருந்தென்றால் பாதாளலோகத்திற்போய் அமிழ்தமெடுத்து க்கொண்டு கடலைக்கிழித்துப் புறப்பட்ட பறவைக்கரசனுகிய கருடனுக்கு ஒப்பாயுமிருந்தது. அன்றியும் உலகங்களையெல்லாம் சிருட்டிக்கும் பொருட் டுப் பிரமனை யுண்டாக்கு நிமித்தம் மகாப்பிரளயத்தில் தோன்றிய சுவர்னசா யையான அண்டம்போலவுமிருந்தது. மற்றும அமமகாப்பிரளயத்தில் தோ ன்றியபிரமன் இத்தப்பிரளயத்திலிருந்து என்னையுண்டாக்கிய என்பிதாவாகிய ஸ்ரீ நாராயணனைக் கண்டாலலது நான்செய்யுங்காரியமொன்றுஞ் செய்கின், றதில்லையென்று அவனைத் தியானஞ்செய்துகொண்டு ஆகாயத்திலே கடனீரி லே மூழ்கியிருந்து தவஞ்செய்ய அத்தவமுடிந்தபினனர் அவன் அதினிருந்து எழுந்ததுபோலவு மிருந்தது. அல்லாமலும் முற்காலத்தில பட்டபமாலையை வெள்ளையானை தன்காலின்கீழிட்டு மிதித்ததைக் குறித்தறிந்த அருவாசமுனி. வன் கோபித்துச் சபித்ததினால கடலிற்போயொளிதத இந்திரனுடைய சம்ப த்துகலெல்லாம்மீண்டுவரும்படி என்றும் அழிவில்லாத ஆதிநாயகனுகிய பக வான் தேவதானவர்களுடனே அக்கடலை மத்திதபோது அதினிருந்துதோன் றிய சந்திரனைப்போலவுமிருந்தது. அமமலையின சிகரத்தில் பிணைமீனுடனே உறங்கியிருந்த மகரமீன்கள் அமமலைமேலெழுமபியபோது சுவாசம்விட்டுஉலா வியோடின. முத்துகளையின்ற சிப்பிகள் காணமீன்கள்சூழச் சந்திரோதய மானதுபோலப் பிரகாசிக்கவும் உபபரிகையின்மேல் கொடிகளாடுவதுபோல அருவிகள்ஒழுகவும் சுனைகளிலேயிருந்த பனைமீன்கள் திமின்மீன்களுடனே தொடர்ந்து துள்ளின. அறுபகையும் நீக்குற்றமும் வெந்துபோகும்படி ஞா னதையமாகி கிட்டைநீங்கிய பெரியவர்களைப்போல அநேககாலம் நீருக்குள்ளே கிடந்து வருந்தின நாகங்கள் நீரைவிட்டு வெளியிலேவந்தமையால் வெகு காலமாக அடங்கிக்கொண்டிருந்த சுவாசம்விட்டு மகிழ்வடைந்தன. இப்படி

மிதமற்ற சிங்காரங்களுண்டாகிய அம்மைகாகமலை ஆகாயமட்டும் வளர்ந்து எதிர்கிற்பதை அனுமான் பார்த்து மிகவும் அதிசயப்பட்டுக் கொஞ்சமேனும் அஞ்சாமல் இது என்னவென்று ஐயமடைந்து பின்பு மலையென்றறிந்து அம்மலையை அதிசிக்கிரத்தில் அலட்சியமாய்த் தலைகீழாகத் தள்ளிவிட்டு ஆகாயமார்க்கத்திற் பாயநினைத்தனன். அச்சமயத்தில் அம்மைகாகமலை நடுநடுங்கிப் பயந்து உடனே அதிக அன்புண்டாய் ஒரு மனிதனைப்போல் உருவமெடுத்து அநுமானை நோக்கி ஐயா! இதைக்கேளெனறு சொல்லத் தலைப்பட்டது. என்னை நீப்பகைவனென்று நினைக்கவேண்டாம; முன்னாளில இந்திரனுடைய வச்சிராயுதத்தினால்உலகத்திலுள்ளமலைகளினசிறகையறுத்தான்; அப்போதுஎன்னை வாயுபகவான் இவ்விடத்தில கொண்டுவந்து சேர்த்துக்காத்தான். நீஅமமகானுபாவனுடைய குமாரனுகையால உனக்கு ஏதேனும் உதவி செய்யவேண்டுமென்றே மிகவும ஆசையுண்டாயிருக்கினறது, ஆகையால் என்சிகரத்தின்மேலேனும் சிறிதுநேரமதின்றுவிருந்துண்டுஇளைபபாறறிக்கொண்டுபோ; சமுத்திரராசன் ஸ்ரீராமபிரானுடையஎவலைமேற்கொணடு வாயபுத்திரனுகிய அனுமான் தேவர்கள்உய்யும்படிசீதாபிராட்டியைத்தேடிக்கொண்டுவருகின்றான்; நீபோய் அவனைக்காண்; இதைப்பார்க்கினும் பெறதற்கபேறுவேறொன்று மில்லையென்று சொன்னான். அதைக்கேட்டு எனக்குநீ பெற்றதாயினும் மிகவும் கலலையென்று எண்ணிவந்தேன், உன்னுயியையறனை நீ பெற்றுக்கொள்ளென்று சொல்ல அச்சொல்லை அநுமான்கேட்டு இவன்குற்றமில்லாதவனென்றே நினைத்துத் தாமனைமலருக்குச் சமானமாகிய திருமுகம் பிரகாசிக்கச் சிரித்தனன். சிரித்து உடனே தானபோகினற திசையைநோக்கி அம்மலையின் சிகரத்தைக்கண்டு சர்வலோகசரணியனுகிய இரகுநாயகனிடத்திற்கொண்ட பத்திமையினுல தானெவ்வளவும் வருத்தப்படமாடடேன்; என்னுடைய இட்டத்தை நிறைவேற்றுமல் யாதொன்றும உண்ணமாட்டேன்; மிகுந்த தேனைப் பொழிகின்ற சாரலுடைய மைநாகமலையே! நீ இவ்வளவு அன்பைச்செலுத்தியபோதே தானிருந்தேன், விருந்துமுண்டேன், இதன்மேலும் நீ எனக்குச் செய்யத்தக்க உபசாரமுமுண்டோ? அன்பைப்பார்க்கிலும்விசடமாகியபூசையாரிடத்திலிருக்கின்றது. இப்போது தான்வினைவாய்ப்போய் இலங்காபுரியைச் சேர்ந்து எங்களாண்டவனுகிய இரகுநாயகனுடைய அடிமைத்தொழிலைசெய்வதைப்பார்க்கிலும் சிறந்தகாரியம என்ன இருக்கின்றது? அங்கிருந்து திரும்பிவரும்போது விருந்துண்டு போகின்றேனென்று உபசாரமாகச் சொல்லிவிட்டு அநுமான் அதிசிகக்கிரமாய் அப்புறம்போனான். அவ்வண்ணமாக அவன் கடன்மேல் உயர்ந்து போவதைப்பார்த்துப் பூமியிற்பாதத்தை வன்றிடனாத இளமைப்பருவத்திலேதானே என்னுடைய தேரின்மேற்பாய்ந்த இம்மகாநுபாவன் இவ்வளவுவேகமாய்க் கடலைத்தாண்ட நினைத்தது யாரிடத்திற் போகவோவென்று சூரியனும் ஐயமடைந்தான். அப்படி அதிகவினைசயாய்ப்போகின்ற அனுமானைத் தேவர்கள்பார்த்து, அதிசயித்துக் களங்கமற்ற மனத்தினையுடைய சுரசையென்பவளை அழைத்துத் திரிலோகத்தாருக்கும் வந்த துன்பத்தை நீக்கும்படி. வாயுபுத்திரன் வருகின்றான், நீபோய் அவனுடைய பாக்கிரமத்தைப்

பரிசோதித்து எங்களுக்குத் தெரிவிக்கவேண்டுமென்றுசொல்லி அனுப்புவிக்க, அவ்வண்ணமே செய்கின்றேனென்று சம்மதித்தவளாய் அவள்பெரியவாயினை யுடைய ஒரு வடிவங்கொண்டுவந்து அவன்போகின்ற மார்க்கத்தில் தன் சிரம் அண்டத்தை முட்டும்படி நின்று கொக்கரித்து நான் வாசஞ்செய்யுமிடத்தில் ஒரு அற்பக்குரங்காகிய நீ எப்படி வருவாய்? இப்பொழுது பிரளய காலாக் கினிபோல எரிகின்ற என்பசிப்பிணியைத் தீர்க்கும் பொருட்டாகவே வந்தது போலக் காண்கின்றதே, இவ்வாகாயத்தில் உனகுப்போவதற்கு வேறேவழியி ல்லை, என்வாய்க்குள்ளேதான்புகுந்துபோவென்றுசொன்னாள். அதை அநுமான் கேட்டுப் பெண்பிள்ளையாகிய நீ பசிவருத்தமபடி நொந்தாயாதலால் உன்னி ட்டப்படியே உண்ணக்கடவாய், என்சரீரத்தை உனக்கு உணவாக நான்கொ டுக்கின்றேன். இத்தருணத்தில் இரகுநாயகனுடைய காரியமாய்ப் போகின் றேன். அதைச்செய்து நான்திருமபிவருமபோது அப்படியே உண்ணென்று சொல்லி நகைத்தனன். அதற்கு அவ்வரக்கமாதுருவங்கொண்டசுரசைகோபி த்து ஏழுலகத்தாருங் காணுமபடி நானுன்சரீரத்தைத்தின்று பசிதணிகின் றேன், பாரென்றுசொன்னாள். அவ்வார்த்தைகேட்டு நல்லது அப்படியே உன் வாய்க்குள்ளே தானே புகுந்துபோகின்றேன், உன்னிடத்தில் வல்லமையுண் டானால் தின்றுவிடென்று சொல்ல, அப்போது அவள் அநேக அண்டங்கள் ஒருமிக்கப்புகுந்தாலும நிறையாமலிருக்கின்ற தன்பெருவாயைத்திறந்து அனு மானைத் தட்டாமல் விழுங்குபவளாயிருந்தாள். அதுகண்டு அவள் வாய்சிறி யதும் தன் சரீரம் பெரியதுமாக வளராதனன். அவ்வகையால் வளர்ந்தவன் சுருங்கி ஒருதரம் சுவாசம் விடுகிறதற்குள்ளே அவள் வாயிலே புகுந்து வெளி ப்பட்டான். அதுகண்டு தேவாகள் எங்களை யாணடுகொணடவனுகிய இவ் வனுமான் மகாசமர்த்தனென்று மகிழ்வடைந்து பூமாரிபொழிந்து வாழ்த்தினர். தோன்றிமறைகின்ற மின்னலைப்போல அதிசிக்கிரத்தில சரீரமபருத்துச் சுரு ங்கும்படி திருவடிகள் வாய்க்குள்ளேபுகுந்து வெளிப்பட்டதைக் கண்டு அச் சுரசை தன் சுயவடிவமாய் நின்று இவரால் எக்காரியமுதான் ஆகாதென்று மகிழ்வடைந்து துதிசெய்தனள். அநுமானு அவளை யாசிர்வதித்து அப்பாற் போனன். அத்தருணத்திலே கின்னரர்கள் கீதம்பாடினர்; தேவரம்பையர்கள் கடனமாடினர்; மூற்றத்துறந்த முனிவர்கள் வேதகோஷஞசெய்தார்கள். சகல சிவராசிகளும தோத்திரஞ்செய்தன, இலங்கையிலிருந்து மகாரமலரின் மகரந் தப்பொடிகள் மணக்கின்ற தென்றற்காறறுவந்து அநுமானுடைய செக்காமனை மனருக்கு ஒப்பாகியமுசத்தில்வீசி வேவையுலர்த்தி ஆயாசந்தீர்த்தது; வித்தி யாதரர்கள் தங்கள்கையிலுல் இசைக்கின்ற வீணையோசை செவியில்வந்து நுழைய அதைக்கேட்டு ஆனந்தப்பட்டுக்கொண்டு அவன்போகும்போது போ ங்கூடாமல் தடைபட்டுத் தான்போகின்ற தென்றிசையைவிட்டு வடதிசை யில்விலங்கயத்தினப்பட்டான். அதுவும்கூடாமையால் கீழ்த்திசை மேற்றிசை யிலாவது ஏதுங்கிப் போகலாமென்று பார்த்தான். அதுவும் முடியாமையால் ஊர்த்துவழுகத்திலாவது எழும்பிச்செல்லலாமென்றே நினைத்தான். அதுவும் இசையாமைபால் அதோழுகத்தில்வலிப்பதுகண்டுஇதென்ன ஆச்சரியமென்று

அனுமான்பிரமித்தனன். அப்பொது கடலிற்படித்துக்கொண்டிருந்து ஆகாயத்தில் எவ்வளவு உயரத்திலானலும் தனக்கு கோகசச்சஞ்சரிக்கின்ற பலசெந்துக் கலாயுங் கண்டான், அவற்றின் சாயையைக் கையினற் பற்றித் தன்வாய்க்கு நேராக இழுத்த மாத்திரத்தில் அச்செந்துக்களெல்லாம் வாயில்வந்துவிழு நாள் தோறும் விழுங்குகின்ற அங்கார தானையென்னும்அரக்கி அக்கடலினுல் வேவறுருகடல உணடாக்கப்பட்டு எழும்பினதுபோலவும் ஆலகாலவிஷம் எழுந்தது போல்வும இங்கே யாரடா போகிறவனென்று மகாபயங்கரமானவடிவத்துடனே எழும்பினுள். அவ்வண்ணமாக எழும்பினவள் காற்சிலம்புகள்கடலோசைபோல ஒலிக்க வேதமுடிவிலே நடனஞ்செய்கின்ற பரஞ்சுடராகிய விஷ்ணுமூர்த்திக்கு முன்னே முன்னுளிற்கடலிலிருந்துபுத்ததத்திற்குபோயெதிர்த்தமதுகைடவாகளைப்போல அநுமானை எதிர்த்துநின்றுள். இரண்டுபிறைபோல் விளங்குகின்ற வக்கிரதந்தங்களையும் யானைத்தோலாகிய போர்வையையுமுடையவளாய்ப் பிரமனுல இவ்வண்டத்திற்கு ஒருஉறைபோலச் சிருட்டிக்கப்பட்ட பெரியவாயைத்திறந்துகொண்டு, தன் காலகள்கடலெக்கலக்கவும்தலையானது அண்டமுகட்டையளாவவும் பூமிக்கும் ஆகாயத்திற்கும் ஓர்வடிவமாய் அப்படி நிற்பவளை அநுமான் கண்டு, இவள் தருமத்தையும் கருணையையும் அழித்த அரக்கியெனறும துணிந்துநின்று அவளுடைய பெரியவாய்க்குள்ளேயல்லாமல் ஆகாயத்திலே தான்போவதற்குவழிகிடையாமையால்அவள்வாயிற் புகுந்து வயிற்றைக்கிழித்துக்கொண்டுபோமபடி நினைத்துச் சொல்லுகின்றான். தான் ஓயாமல் வந்தவேகத்தைக் கண்டறியாமல் வாயினுலே ஆகாயமார்க்கத்தை அடைத்துக்கொணடு இபபடி யிருக்கின்றையே, நீயாரடியென்று கேட்டான். அதற்கு அங்காரதானை என்னைப பெண்ணென்று நினையாமல் எதிர்த்தால் தேவர்களானலும் உண்மையாகவே மாண்டுபோவர். எனது கண்முனே எமன் வந்தாலும கொன்று நின்று விடுவேனென்று சொலலிப் பின்னும் பெரியதாகத் தன்வாயைத திறந்தாள். அஞ்சன மகளை அக்கணமே அவள் வாயில நுழைந்து வயிற்றிலே புகுந்தான். அப்போது தருமமானது முறையோ முறையோ வென்று அழுது துயரப்பட்டது. தேவாகளும் கிலேசித்தனர். இறந்துபோனவர்போல அவள் வயிற்றுள்ளே புகுந்த சீராமதூதன் ஓரினமைப்போதிலே மறுபடிபிறந்தானென்று சொல்லும்படி சிங்கம்போல் வெளிப்பட்டான். அவ்வரக்கி கோவென்றுகதறும்படி அவள் வயிற்றைப்பீறிக் குடர்களைப்பிடுங்கிக்கொண்டு ஆகாயத்திலெழும்பிய அவ்வநுமான் மலைக்குகையிற் புகுந்து அதற்குள்ளிருக்கின்ற பாம்புகளை வாரிக்கொண்டு மேலேஎழும்பிய கருடனைப்போல விளங்கினுன். பின்னும் அசுவதீதாமா மகாபலி வியாசன் அநுமான் விபீஷணன் கிருபன் பரசுராமன் என்கின்ற சிரஞ்சிவிகளெழுவருள்ளே சிறந்த இவ்வநுமான் அவ்வங்காரதானையினுடைய குடலைப்பிடுங்கிக் கொண்டு உயர எழும்பியது மற்றும் எப்படி யிருந்ததென்றால், பெருங்காற்று வீசக் கயிறு பூமியிலிருக்க வாலுடனே ஆகாயத்தி லெழுந்து பறக்கின்ற காற்றாடியைப்போ லிருந்தது. அதுகண்டு தேவர்கள் மகிழ்ந்தினைத்தார்கள். அசுரர்கள் வருத்தத்தினுல் உடல் வெயர்த்தனர், பிரமதேவனும் அதிசயப்பட்டுப்

பூமழைபொழிந்தனன். கைலாயகிரியிலுள்ள சிவபெருமானும்பார்த்து ஆனந்தத் தாண்டவஞ்செய்தனன். முற்றத்துறந்த முனிவராயிருக்கின்றவர்கள் ஆசீர்வசனம் பண்ணினார்கள்; அவ்வாக்கி இறக்கும்படி வாய்முதல் வயிறுவரையில் கிழிக்க அநுமான் பின்பு மகாமேருவுந்தாழும்படி உயர்ந்து மனோவேகத்திலும் அதிவேகமாய் அப்பாற்போகத்தொடங்கி இக்கடல முன்பு சம்பாதிமுதலானவர்கள்மூடனேசொன்ன அளவையுடையதேயன்று அதிலும் அதிக விசாலமுடையது, அதுவலலாமலும மத்தியில் மததியில பற்பல இடையூறுகளும் உண்டாகினறன எவ்வகையாலாவது இலங்கையிற் போய்ச் சேர்ந்தான் இலைகளெல்லாம் நீங்குமென்றும, தீமைகளையெல்லாம் தொடியிற் பொடி செய்வது தருமமே, அப்படிப்பட்ட தருமத்தை நினையாத அரக்கர்கள் செய்கின்ற துன்பங்களெல்லாம் நீங்குவதற்குத் தக்கதாகிய ஏது எங்கிருக்கின்றதென்றும் ஸ்ரீராமநாமபாராயணஞ்செய்தால எலலா இடையூறுகளும் நீங்கும். அதற்கு ஒப்பானது வேறொன்றிலலையென்றும் நினைத்து ஸ்ரீராமநாம சங்கீர்த்தனஞ் செய்துகொண்டு பூரணகலசங்கள் வைத்திருக்கின்ற சுவர்ணமயமாகிய இலங்கை மதிலின்மேல் போய்த் தங்காமல சுவர்க்கத்தின் மார்க்கமாய் விலங்கிச்சென்று அவ்விலங்காபுரிக்கு அருகே பசுமையாகிய சோலை சூழ்ந்திருக்கின்ற உன்னதமாகிய பவள மலையின்மேற்பாய்ந்தான். அநுமான்பாய்ந்த மாத்திரத்தில் கடல்சூழ்ந்த இலங்காபுரியாகிய மலையானது தன்னிலைபெயர்ந்து குலுங்கத்தலைப்பட்டது. அது எப்படியிருந்ததென்றால் பெருங்காற்று மோதக் கடலை கடினிலிருக்கின்ற கபபல அலைவது போலிருந்தது. பூமியில் வேர்விழுந்து ஆகாயமட்டும உயாந்த அப்பவளமலையின் சிகரத்தில் நின்று கான்குபுறத்திலும் நோக்கிச் சுவர்க்கமாகிய மாது அழகு பாாக்க நிலைக் கண்ணாடி வைத்ததுபோலத் தேசோமயமாய்த்தோன்றுகின்ற இலங்கையைச் செவ்வையாகப பார்த்தான. அவ்வண்ணமாகப் பார்த்து அதிசயப்பட்டுக் கைகொட்டித்தேவர்களுடைய பொன்னகரம இதற்கொபபாமென்று சொல்லுவதுந் தக்கதனோ? அகாகாரமென்ன இவ்விலங்கையினும சிறந்ததா? எல்லா லுலகங்களையும ஆள்கின்றவன் யாவனோ அவனை இக்காரத்திலிருந்து வாழ்கின்றவனாகவேணுமெ. ஒருவனைக இன்பதனை மாத்திரந்தருவது இக்காரமென்று சொல்லக்கூடாது. வேண்டியவைகளை வேண்டியபடியே அடைந்து வெறுப்பில்லாமல் அநுபவிக்கின்ற போக சுகங்கள் முடிவில்லாதனவாயிருக்குமடி எவ்விடத்திலகாண்கின்றோமோ அதுவே மோட்சமாகும். இப்படியேயிருங்கின்றது வேதத்தின கிச்சயமாம். இதன் உள்ளிடமோ எழுதாறுயோசனையென்று சொல்லுவர். மூமமையுலகங்களினுமிருக்கின்ற பதார்த்தங்களெல்லாம் இவ்விலங்கைக்குள்ளே அடங்கியிருக்கின்றனவென்றுற் சாத்திரக் கேள்வியையுடைய பேரறிவாளர்கள் பார்த்தாலும் அவர்களுடைய பார்வைக்குத்தான் அடங்குமா? இதுவென்ன அதிசயமென்று நினைத்து மீண்டும உற்றுப்பார்க்கின்றனன்.

கடல்தாவுபடலம்
முற்றிற்று.

ஊர்தேடுபடலம்.

மேகமண்டலந் தாண்டிச் சந்திரமண்டலமுட்டும் உப்பரிகைகளெல்லாம் பொன்னிறஞ்செய்து இரத்தினங்கள் பதித்தனவைகளும் மின்னலைக்கொண்டு சமைத்தனவைகளும் வெயிலைக்கொண்டுஅமைத்தனவைகளும் பின்னும் இவைகள் எதைக்கொண்டு செய்தனவென்று அறியப்படாதனவைகளும் தேவலோகமும் நாகலோகமும் தமக்குள்ளே அடங்கும்படி மேலுங்கீழும் உயர்ந்தும் தாழ்ந்தும் இளந்தென்றற்காற்று வருகின்ற சாளரங்களை. யுடையனவைகளுமா யிருக்கின்றன. இவைகளிலுள்ள மாதர்கள் மின்னற்கொடிகளைமடக்கி அடுக்கித் தடைப்பக் கற்றைகளாகப் பிடித்துக்கொணடு மேலதளங்களி லிருக்கின்ற பூக்களின் பாகங்களாகிய குப்பையைவிளக்கி ஆகாயகங்கையின்நீரைக் கையி னல் அள்ளிச் சாணைநீராகத் தெளிக்கின்றனர். புள்ளாங்குழலும் மகாவீணையும் குழைய மிருதுவாகிய தங்கள் மழலைச் சொற்களைக் கிளிகளுக்குப் பயிற்றுகின்ற மாதர்கள் இவ்வுப்பரிகைகளின் பளிங்கிறைக் கட்டப்பட்ட சுவர்களிற் பிரதிபலித்துக் காண்கின்ற சாயையையும் தமமுருவத்தையும் வேறு பாடறியாமல் மயங்குவர், இப்படிப்பட்ட உபரிகைகளை இந்நகரனுடைய மாளிகைக்கு ஒப்பாகச் சொலவதெப்படி! சொற்றனல் அத்தச்சொல்லுக்குங் குற்றமுண்டாமே. இவைகள் கள்ளமாமாயபபிரான திருமாபிலே தரித் திருக்குமகவுத்துவ மணியினும் மிக்க ஒளியையுடைய கவரத்தினங்கள் அழுத் தித் தெய்வத்தச்சனாலே செய்யப்பட்டிருக்கின்றன. சகல சீவகோடிகளும் ஒருபக்கத்தில் அடங்கியிருக்கத் தக்க விசாலமுளடானதினால இந்த நகரமோ இறைவனுடைய திருவயிற்றுக்கே ஒப்பாகும. இதற்குள்ளிருக்கின்ற விருட்சங்களெல்லாம் கற்பகங்கள், வீடுகளெல்லாம சுவாணங்கள், அரக்கியர்களுக்குத் தாதிமார்களெல்லாம் தேவரம்பைகள், அரக்காகளுக்கு ஏவலாளிகளெல்லாம தேவர்கள், சூரியனுடைய ஸப்தாசுவங்களினுடனே மற்ற உலகத்திலுள்ள பரவிகளெல்லாம் இங்கிருக்கினறன. இராவணனுடையபோரிலே தோற்றுப்போன திக்கயங்களைக் குறித்துச் சொல்வதென்ன? ஐராவதைகளையுடைய விக்கினேசுவரனுகிய யானையும் சூரியனுடைய தேருமே இக்கரத்திலில்லை. மற்ற தேவர்களுடைய விமானமுதலாகிய வாகனங்களெலலாம அவ்வீதிகளிலே சஞ்சரிக்கின்றன. இப்பட்டணத்தையாள்கின்ற அரசனுக்கு ஏவல்செய்யாததேவர்களு யாவரிருக்கின்றனர். ஆ! ஆ! இவன் மும்மைபெருந்தேவர்களிலும் விசேடப் பட்டவனென்றல் இவன் செய்ததவமல்லாமல் வேறென்று இவனுக்கு இப் படிப்பட்ட சாமபிராச்சியத்தைக் கொடுக்குமா? பெரிகையின் ஒலியும் யானைகளின் முழக்கமும் கடலோசையும் மாதர்களுடைய பாதச்சிலம்பொலியால மறைக்கப்போகின்றன. மரகதத்தினாலும் மற்றுமுள்ள பலவகை இரத்தினங்களாலும் அழகாகச் செய்திருக்கின்ற குதிரைக் கொட்டாரங்களும் இரதசாலைகளுமே சூரியனும் வெட்கும்படி விளங்குமானால், இக்கரத்திற்குமுன் சுவர்க்கம் நரகத்திற்கே ஒப்பாகுமென்றன்றோசொல்லவேண்டும். அழகே நிலைபெற்றிருக்கின்ற இப்பட்டணத்தின் ஒளி பாய்வதினால் இதிலிருக்கின்ற அரக்கர்

களுடைய நிறம் கறுத்துக்காணவிலலை. உயரப்போகின்ற சந்திரனுங் களங்க மற்று விளங்குகின்றான். கடலும் பொனனுருகுகின்ற தொத்திருக்கின்றது. அண்டமுழுமையும் நிறைந்த இருளையோட்டுகின்ற சூரியன் இங்கரத்திலிருக் கின்ற மானிடைகளின் புலிக்குமுன் தன் ஒளிக்கெதிரே ஒளிமழுங்கிய மின் மினி யத்தனையும் விளங்கமாட்டான். தேனும் சுதனைமும் கத்தூரியும் கற்பக மலர்களுமெ யதனமதங்களுமெ இப்பட்டனைதுமாதர்கள் நீராடுகின்ற நீருடனை கலந்து பெருக்கெடுத்தோடிவந்து கடலினிடதில பாய்கின்றதனல் அதிலிருக் கின்ற மீன்களுமெ செவ்விதாகவெ மணக்கினறன.

இங்கரத்தைதவிதித்த விச்சுவகர்மாவையெ புகழ்வோமா? அல்லது இரா வணன் உண்மையாய்ச்செய்த தவத்தையே அதிசயிப்போமா? அல்லது அவ னுக்குப் பிரமதேவனகொடுத்த ஐயப்பாடிலலாத வரத்தையே மதிப்போமா? அறியாத சபலித்ததையுடைய காம எவ்வகையில யானைத்தான் துதிப் போம்? காடுகளுமெ சோலைகளுமெ சுவாணைதினைலும இரத்னங்களினலும் செய் யப்பட்டனவென்றலுமெ, ஏதனையும மலாகளையும கனிகளையுங் கொடுக்கின்ற தனல இனைபபாக்கிலுமெ சுவர்க்கத்தாரும பூலோகத்தாரும் பெறத்தக்க வரம் வேறென்ன இருக்கின்றது; இங்கரத்திலுள்ள கோபுரத்தின் உயரத்தை மாமேருகண்டால் வெட்கிபபோமென்பதற்கையமையிலலை. தசமுகனுடைய ஆணைகரு அஞ்சிச் சூரியனை இலங்கையின்மேற் போவதில்லையென்று சொல் லுவர். அது உன்மைபென்று இமமதிலேத்தானடி அப்புறம் போகமாட்டா மையாலன்றே ஒதுங்கபபோகின்றனை. மற்றுமெ தசக்கிரீவனை தேவர்கள் பகை வர்களானகையால அவாகளவரத்தக்க வழியில்லாமல் ஒரு எல்லையை யேற்படு த்துமேவாமென்று அண்டமுகட்டையுங் கடந்து செலலும்படி இமமதிலை உண் டாக்கியதுபோ லிருக்கிறது. இப்படிபபட்டமதில சூழ்ந்திருப்பதனல்இப் பட்டனத்திற்குள்ளே காற்றுமெ நுழையமாட்டாது. சூரியகிரணமும் பாயாது. எமனுடைய ஆணையுஞ்செல்லமாட்டாது. சர்வசங்காரகாலத்திலே யாவும் அழிந்துபோயினுமெ அழியாமலிருக்கின்ற தருமமுமபுகமாட்டாது. ஆகையால் தேவாகள் இதற்குள்ளேபோகமாட்டாகளென்பது ஒருபுதுமையன்று, தேவர் களில் பலர் பாடுவார்கள். பலராடுவார்கள். பலர் வாத்தியமுழக்குவர். அவை களை அரக்கர்களில் பலர் சபைகூடிக்காணபர் கேட்பாகள். தேவரம்பையர் களாடுவதையுமெ பாடுவதையும் பழித்து வித்தியாதர மாதர்களாடுவார்கள், பாடுவாகள் அவர்களாடலையும் பாடலையும் பழித்து இயக்கிபர்களாடுவார்கள் பாடுவார்கள். அவர்களாடல பாடல்களைப்பழித்து இராக்கதமாதர்களாடுவார் கள் பாடுவார்கள். அவாகளாடவுமெ பாடவுந் தொடங்கும்பொழுது நாககன் னியர்கள் இலையைதாள சுதிமுதலாகிய நடனத்தொழிலகளைச் செய்வார்கள். அரக்கியர்களுக்குத் தெய்வப்பெண்கள் பணிப்பெணகளாய் ஆபரணங்களும் ஆடைகளும் பூமாலைகளும் சந்தனமுமெ எடுத்துக்கொணடு எடுத்துக் கொடுத் துக் கொண்டிருப்பர்; பிரமன்சொல்லத் தெய்வச்சணகிய விச்சுவகர்மா பல காலமாக வருந்தப்பட்டுக் கைதேர்ந்த பொன்மலையின்மேல் இரத்தினமழை பொழிந்ததுபோல சுவர்ணத்தினுற்செய்து இரத்தினங்களிழைத்து அருமை

யாகப் படைத்தான். வீணையோசையில் வேதகோஷமறைகின்றது. வேத கோஷத்தில் கடலொலி மறைகின்றது. உப்பரிகையினிடங்கள்தோறும் மாதர் கள் வாசனையுண்டாகும்படி ஊட்டுகின்ற அகிற்புகையில் மேகமறைகின்றது. பளிங்கிறற் செய்யப்பட்ட மாளிகைகள்தோறும் தேன்துளிக்கின்ற கற்பகச் சோலைகள்தோறும் யாவரும கள்ளுண்டு ஆடுகின்றவர்களும் பாடுகின்றவர் களுமாய்க் களிக்கின்றார்களேயன்றி துயரப்படுகின்றவர்களைக்காணும். அரக் கியர்களுக்குப் பிராணபதமாயிருக்கின்ற அரக்கர்கள் அந்த மாதர்களுடைய அதரபானத்தையுண்டு அவர்களுடைய இனிமையாகிய சொற்களைக்கேட்டு அவர்களுடலைக்கண்டு அவர்களை வணங்கி அதனைத்தீர்ப்பார்கள் இவ்விலங் கைதன்னில் வசிக்கின்ற மாதர்களுடைய சிவந்த வாயினல் கடலினிடத்தில் பவளக்கொடி படர்ந்ததுபோலவும், அவர்களுடைய கண்ணல் குவளைகள் பூத்த தடாகம்போலவும், முகங்களினல் தாமரைக்காடுபோலவும் விளங்குகின் றது. அரக்கர்கள் எழுந்து திரிவதினலே இக்காள்வையில் அணடமானது கிழிந்துபோகாமலிருக்கின்றது அதிசயமென்றே சொல்லவேண்டும். பிரமதி பிபீலிகாந்தமாகிய சீவகோடிகளெல்லாம் இவ்வரக்கராதிக்கு தூற்றுக்கு ஒன்றுக உறையிடுவதற்கும் போதாதே. மற்றும் தூல்தேகத்தை யுடையவர் களும், அளவில்லாதவரங்களையுடையவர்களும், எவர்களாலும் அறியப்படாத மாயையையுடையவர்களும், உலகத்தையெல்லாங் கொல்லுகின்ற பலமுண் டாகிய மாதர்கூட்டத்தை யுடையவர்களுமா யிருக்கின்றனர். இக்நகரத்தின் தெருக்களில் ஒரு தெருவிலிருந்து மற்றொரு தெருவுக்குப்போவது ஒரு தேசத்திலிருந்து மற்றொருதேசத்திற்குப் போவதுபோலிருக்குமே. விரகண டையில்லாத காலும், ஆயுதமில்லாத கையும், அக்கினிப்பொறி பறவாத கண்ணுமுடைய புருடர்களேயில்லை. அவர்களுடைய உச்சியிலுறைத்துச செம்பஞ்சழியாத பாதமுடைய மாதர்களுமிலை. இப்படணத்தை யழித் திறதைக்குறித்துப் பின்பு பார்த்துக்கொள்ளலாம். முதலபமுடைய வானர சேனைகள் இதில்வந்து பிரவேசிப்பதே அருமை. ஆயினும் அதுவும்பரி தன்று. வரினும் அரக்கியர்களும் புருடர்களுமா பிணங்கிலை வெறுத்துக் கழ ற்றியெறிந்த ஆபரணங்களினுலே வீதியிடமெலாந் தூர்ந்துபோவதனல், அவ்வானரங்கள் அடிபெயர்த்துச் சஞ்சரிக்கவேமுடியாது. ஆரங்களும் குண டலங்களும் மற்றுமுள்ள பலவகைப் பூடணங்களும் பூமாலைகளும் சந்தனமும் யானமதங்களும் குதிரை நுனையுமாகிய இவைகளெலலாம் ஆற்றுநீரோடு வந்துவிழ, தனக்குள்ளே அடங்கும்படி கொள்ளுகின்ற இச்சமுத்திரத்தைப் போலும் ஆழமுடையது வேறென்றுமுண்டோ? சக்கரவர்த்தித் திருமகன் சிடத்திற்போய்ச் சொல்லுகின்றகாலத்தில் வீலவீரர்கள்தான் மிகுதியாயிருக் கின்றார்களென்பேனே? வேல்வீரர்கள்தான் அதிகமாயிருக்கின்றார்க ளென் பேனே? வாள்வீரர்கள்தான் விஸ்தாரமா யிருக்கின்றார்க ளென்பேனே? தண்டு பிண்டிபால முதலாகிய பலவித ஆயுதங்களைக்கொண்டு போர்செய் கின்றவர்கள்தான் பிரபலமா யிருக்கின்றார்களென்பேனே? மற்சண்டைசெய் கின்றவர்கள்தான் அதிகராயிருக்கின்றார்க ளென்பேனேவென்று இப்படியாக

அநுமான் அவ்விலங்கையைப்பார்த்தே யோசித்து இங்கே அரக்கர்கள்வந்து கம்முடனே போரிசெய்தாலுஞ் செய்வனென்று குனித்துத் தமமுடைய தூல ரூபத்தைச் சுருக்கிக்கொண்டு சிறிய உருவமாய் அமமலையினிடத்தி லிருந்தனன். அப்போதே சூரியன் மேற்கடலிற்சென்று மறைந்தனன்.

முன்னேப்பிறவிற்செய்த புண்ணியத்தினலே முடிவிலே பாக்கியத்தைப் பெற்றுச் சுயபுத்தியுமில்லாமல், தெரிந்தவர்கள் சொலலுஞ்சொல்லையுங்கேளாமல, தனக்கு எப்படியும மரணம்வருமென்கிறதை நினையாமல், சத்தியபாகிய நிலையிலும் நில்லாமலிருக்கின்ற ஒருவனுடைய பாவங்கள் அவனைச்சூழ்ந்து கொள்கிறதுபோல இருள்வந்து எங்குஞ்சூழ்ந்துகொண்டது. பினனும் சிவபெருமானுடைய போரவையாகிய யானைதனதாலவாங்கிப் பிரமன் அணடத்திற்கு ஒரு கௌசனையாகப் போர்த்ததுபோலவும், ஆதிசேடன் தன்னுடைய ஆயிரமவாய்ப்பற்களினும அதிககாலமாக உளறிக்கொண்டிருந்த விடத்தையெல்லாங்கக்க, அது உலகமெல்லாம் நிறைந்ததுபோலவும, மேலாகிய பிரமலோகசத்திலேதானறிய இராவணனே கற்பினையுடைய பிராட்டியானையெடுத்துவந்து சிறைவைத்த பின்பு அவனுடைய கீர்த்தி தூலியமாகிய வெள்ளை நிறம்போய்க் கறுத்து அது புவனமுழுதும் பரவியதுபோலவும், அண்டமுழுதும் அவ்விருள்பரந்துமூடிக்கொண்டது. அப்படி இருள்பரந்தவேளையில் இராவணனுடைய எவுதலிலுலே அநேகபரக்காகள் அவ்விருளின்மார்க்கமாக இந்திரலோகத்திற்குப்போவாகள். அநேகர்கள் சந்திரமண்டலத்திற்கோடி வார்கள். அநேகர்கள் யமலோகத்திற்குப்போய்விடுவாகள். தேவர்கள் முன்னே போய்விட்டார்களெ. இந்திரவனையிலும் நாம போகாமலிருந்தோமே இதைக் குறித்து நீங்கள் தாமதமாயிருந்த தினனவென்று நமமுடைய அரசன் கோபிப்பானேயனறு சாலவுநினைத்துச் சித்தாகள் முத்தாரங்களுமதலையிற்சூடியமாலைகளும உத்தரியமும சரிந்துவிழுபடி ஓடிவருவாகள். தெய்வமகளிரகளும வித்தியாதராதாகளும நாகமடந்தையாகளும இயக்கியாகளும் கிரமக்கிரமமாகப் பணிவிடைசெய்யும்படி மின்னற்கூட்டங்கள் திருங்கிவருவதுபோல ஆகாயத்திலிருந்து வருவாகள். தேவாகளும அசுரர்களும் நாகலோகத்தாரும் இயக்காகளும வித்தியாதராகளும மறறுமுள்ள யாவரும் பிரதாபஇலங்கேசனுடைய குற்றேவல்களைச்செய்ய வானத்திலிருந்து தங்கள் தேககாந்தியினல் இருள் நீங்கும்படி கூடிவருவாகள். இவைபெல்லாம வாயுபுத்திரன் பார்த்துக்கொண்டிருந்தான்.

அக்சமயத்திலே சந்திரோதயமுமானடாயிற்று. அது எப்படியிருந்ததென்றல், அரிதாகிய தீவினையென்னுங் கொடையானது தகிக்குமபடி உலாந்து தீந்துபோகிய தாமமாகிய முளையானது அநுமானென்கின்ற மனமுவந்து உதவிசெய்ய முளைத்தெழுந்ததுபோலிருந்தது. மற்றும் சீராமதூதனுகியஅநுமான் வந்தபடியினலே என்னுயகனுகிய தேவரதான் இனிச் சுகப்படுவானென்று மகிழ்ச்சியடைந்து எட்டிப்பார்த்த கீழ்த்திசையாகிய பெண்ணின் முகம் போலவும், எங்கள் பகை இற்றைத்தினத்துடனே தொலைந்ததென்று நினைத்

தெழுந்த இந்திரனுடைய தவளக்குடைபோலவு மிருந்தது. உதயமாகிப் பிர காசிக்கின்ற சந்திரனுகிய வெள்ளிக்குடத்தினுல் பாற்சமுத்திரத்தை மொண்டு வானமானது சொரிந்ததுபோல, துளித்ததுளிகள் விளங்குவனபோல, விண் மீன்கள் பிரகாசிக்க நிலவின்பிரகாசம் ஆகாயம் பூமியெங்கும்பரந்து நிறைந் தது. வானமே காமதேனுவாகியும் சந்திரோதயமே அதன்மடியும் சந்திர கிரணமே அம்முலையிலிருந்து வருந்தாரையாகியும் சந்திரனொளியே தா ரையாய்ச்சொரிந்த பாலாகியும் பிரகாசித்தன. அத்தருணத்தில் அனு மான்மேல் தேவர்கள் பூமழை பெய்தார்கள். அம்மலர்கள் இராவணனுக் குப்பயந்து பூமியில விழாமலும் அப்புறம்போகாமலும் அந்தரத்திலேதானே தங்கி நிற்பதுபோல காட்சத்திரங்கள்பிரகாசித்தன. நிலவினுலே அழிந்த இரு ளானது பல வடிவமெடுத்து அந்நிலவின் குஞ்சுகளைக்கடித்து விழுங்கு வதுபோல மல்லிகைப்பூக்கள்தோறும் வண்டுகள்மொய்த்துச்சூழ்ந்தன. சந் திரகிரணத்தின் பிரகாசமு லங்காபட்டணமெங்கும் நிறைந்தது. பின்னும் அந்தச் சந்திரபிரகாசம் சீராமபாணத்தின் வேகத்தைப்போல அநுமான் வந்துசேர்ந்தநினல் அந்த சீராகவனுடையகீர்த்தி இலங்கையின் அகழ்அரண் முதலாகிய எவ்விடங்களிலுமபோய் நிறைந்ததுபோலவுமிருந்தது. அப்போது அனுமானும் இலங்கைக்குள்ளே எந்தவழியினற்போகலாமென்று யோசனை செய்து பின்பு ஒருவழியாற்போகும்படி பவளமலையைவிட்டெழுந்து அப்பால் கடந்தனன். அதுகண்டு தேவர்கள் வாழ்த்தினர்கள். பின்பு சமுத்திரமே அகழாக மேலேழுலோகத்திற்கு அப்புறத்திலும் உயர்ந்து மகாபிரளயம்வரும் காலத்திலும் அழியாதிருக்கின்ற சுவர்ணமதிலின் அருகே போய்ச்சேர்ந்தான். சேர்ந்து அமமதிலின் உன்னதத்தைப்பார்த்துச் சுதாகூரியர்கள் வஞ்சகனு கிய தசக்கிரீவனுடைய ஆணைக்குப்பயந்து இவ்விலங்கையின்மேல்வருகின்ற திலலேயென்றுசொல்லுகின்றார்களே அதுதானேயன்று; இமமதில் உயர்ந்திருப் பதனல ஏறி அபபாலமபோகக்கூடாமையால்தான் விலகிப்போகின்றார்களென் றும் அன்றியும் இதலங்கைமதில் சத்துருக்களுடைய அளவில்லாத சைனியங் களெலலாம நடுவேபுகுத்தக்க விசாலமுடைய தென்போமாயின், அவ்வளவு மாத்திரமேயலல; பிரமாண்டத்தின்மத்தியில் எவ்வளவுவிசாலமுண்டோ அவ் வளவு விசாலத்தையும் அதன் உன்னதம எவ்வளவோ அவ்வளவு உன்னதத் தைபுமுடையதென்றுமெண்ணி, அதற்குஅரசனுகிய இராவணனக்குறித்துச் சாலவும் அதிசயப்பட்டுச் சிங்கமுமம மதயானையும காணுமிடமிடமெங்கு தனியே அப்பட்டணத்திலே புகுந்து பிராட்டியாளைத் தேடுமபடி பிரயத்தனப்பட்டு மகாகண்டகனுகிய எமனுடைய வாய்க்கு ஒப்பாகிய அந்தக் கோட்டை வாயிலே எதிரேபார்த்து இவ்வாயில் மகாமேருவைவிறுத்தி நடுவே வெளிசெய் ததுவோ? தேவலோகத்திற்குப்போகும்படி சமைத்தபடிக்கட்டோ? மேலே ழுலகமும் நிலைநிற்கிறதற்கு நடுவேநாட்டிவைத்த தூணே? கடல்நீரெல்லாம் புகுந்துபோவதற்குவிட்ட வழிதானே? ஏழுலகங்களிலும் வாழ்கின்ற சகல உயிர்களும் இராவணனுடனே வந்து எதிர்த்தால் இதற்குள் ஒன்றின் பின்னே யொன்றுப்ப புகவேண்டுமென்னும் நிரமம் வேண்டியதில்லை. எக்காலத்தி

லேயே எல்லாம் ஒருமிக்க நுழைந்துபோகத் தக்கதா யிருக்கின்றது. நம்முடைய வானரவீரர்கள் வந்து புகுத்தக்க வழி இதுதானென்று துணிவோமாயின் இங்கே பகைவர்கள் ஏழுசமுத்திரத்திலும அதிகமாயிருக்கின்றனர். இதற்கப்புத்திலும் கள்ளச்செய்கையையும் மிருந்த பராக்கிரமத்தையுமுடைய இருநூறுவெள்ளம் அரக்கர்கள் இயைந்கையிலும வாளா யுருவிப்பிடித்துக் கொண்டு இத்தவாள்கள் பளபள வெனறும, முள்ளைபோலுங கூர்மையாகிய கோரதந்தங்கள் தகதகவென்றும் பிரகாசிக்க ஒவ்வொருவா ஒவ்வொரு கரிய மலைபோல கின்றவண்ணமாயும, பின்னும அநேகா சூலம, மழு, தோமரம, இருப்புலக்கை, வில், அம்பு, கபடணம, முசுண்டி, கணையம், சக்கரம், வச்சிரம், சுய்கை, குந்தம, பினாடபாலம, அங்குசம கவன் பாச முதலாகிய பல வகை ஆயுதங்களையும் ஏந்திக்கொணடு பங்குனிமாதத்திலே மலாந்திருக்கின்ற முருக்கங்காடுபோலச் சிவந்தமயிரும மிகுந்த கோபமுமுடையாகளாயு மிருக்கின்றார்கள். அன்றியும் அநேக அரசர்கள் வாயிலுக்கெதிரே ஆயுதபாணிகளாய் எமனும்கண்டு நடுங்கும்படி கூட்டமாயிருந்து காவலுகாகினறனர். ஆகையால் எந்தத்தேவர்கள் எந்த அசுரர்கள் எப்படிப்பட்ட சாமர்த்தியமுடையர்களாயினும இக்கோட்டைவாயிலைக்கடக்கமாட்டுவாகளா? சத்துருக்களாகிய இவர்களுடைய காவல இப்படிப்பட்டதாயின இனித்தாரகமந்திர வாச்சியனும காமும்வந்து யுத்தமுதொடங்கினால ஏதாம் முடியுமோ? மேலும் அக்கடலைக்கடந்தது பிரயாசமன்று, இவ்வாசலைக கடக்கிறதுதான் மிகவும பிரயாசமா யிருக்கின்றது. மனஞ் சிறிது சலனப்பட்டாலும காம் எண்ணிவந்த காரியத்தை முடிக்கக்கூடாது. போர்செய்யத் தொடங்குவோமாயின் இவ்வரக்கர்கள் வெகுகாள் யுத்தஞ்செய்வாகள். ஆகையால இவ்வாயிலின் வழியாலேபோவதற்கு மிக்க கடினமாகும் நமனைப்போலும பராக்கிரமசாலிகளா யிருக்கின்றவர்கள் பகைவர்கள் உணடாக்கிய வழியால போவது அழகன்று சூரியசந்திரர்களுஞ்சஞ்சரியாத மதிலைத்தாணடி தான்உள்ளேபோகவேண்டுமென்றெணணி ஒருபக்கத்திற்போயினன. அப்போது அவ்விலங்காபுரியைத் தன் பிராணனேபோலக் காத்துக்கொணடிருக்கின்ற இலங்காதேவியென்றும், இலங்கிணியென்றும் சொல்லப்படும் பெயரினையுடையவள் இவ்வநுமானைக் கண்டுகாகம்போற்சிவந்த கண்களில, கொடுப்புப்போறிபறக்க ஓடிவந்தாள். அவளைப்படிப்பட்டவளென்றுலகளந்தோளும காலுமுகமும ஸப்தலோகத்தையுஞ்சூழ்ந்து கவிகின்ற சரீரப்பிரகாசமும சூழலின்ற கணகளும மும்மையுலகத்தானையும உள்ளேவராமல தடுத்துக்காக்கின்ற மிக்க வாற்றலும்பொறுமையில்லாமையுமுண்டானவள், யாரையாயினும இப்பட்டணத்திற்குள்வருகின்றார்களோவென்று நான்குதிசைகளையுமபாத்து மேகத்தானிபோலக் கொக்கரித்துக்கொண் டிருக்கின்றவள். காற்சிலமடுகள் சத்திக்க மின்னலைப்போல ஆபரணங்கள்சொலிக்க வேலாயுதம், வாளாயுதம், சூலாயுதம், பாசம், சங்கு, அம்பு, வில்முதலானவைகளும் கையிலேதரித்துக்கொண்டு உலாவுகின்றவள் மகமேரு மலையேபோலப் பருத்த உயர்ந்தசரீரமும் அர்த்த சந்திரனைப்போலவளைந்த பற்களுமுடையவள், வாய்களிலே புகையெழும்ப எமனுங்கண்டு

பயப்படும்படி கோபம் அதிகரித்திருக்கின்றவள். பஞ்சவர்ணப்பட்டாடையு முடித்து சுவர்ண உத்தரீயம் போர்த்து முத்காரம்தரித்திருக்கின்றவள் கருட னைப்போல அதிவேக முடையவள், மந்தாரமாலை பிரகாசிக்கக் கிரீடங்களணி ந்து இலங்காபட்டணத்தைத் தன் கண்ணுக்குள்ளே வைத்துக்காத்துக்கொண் டிருக்கின்றவள், அப்படிப்பட்ட இலங்காதேவி ஆடாகில்லில்லென்று அதட் டினாள். அதுகண்டு அநுமான் வாவாவென்றுசொலலிக்கொண்டே அவளுக் குச்சமீபத்திலேபோயினன். அப்படிவந்தவனைப்பார்த்துப்புத்தியில்லாதவனே அச்சமில்லாமல தகாதகாரியஞ்செய்தாய்! நீ இலையும் காயும் கனியும் தின்று திரிகின்ற குரங்கானபடியினாலே உனனுடன எனக்கு என்னபேச்சு? மதி வின்மேலேறி உனனுடைய பிராணனைப போக்கடித்துக்கொள்ளவேண்டாம்; சும்மா ஓடிப்போய்ப் பிழையென்றுசொனனாள். அவ்வார்த்தையைக்கேட்டு அனுமான் மனத்திற்குள்ளே களித்துப பினபு அதிககோபங்கொண்டு தானும் அவளை அதட்டி அழைத்துகான் இதுப்படடணத்தைப்பார்க்கவேவந்தேன்; எளியவனுகிய நான்வந்தால உனக்கென்னகஷ்டமென்றுசொன்னன். அதற்கு லங்காதேவி கோபித்து அடாகுரங்கே! நான போகச்சொன்னாலுமபோகாமல எதிருத்தாஞ் சொல்லிக்கொணடு பயப்படாமல நிற்கினறையே நீயாசொல? திரிபுராந்தகனை சிவபிரான முதலானவர்களும -இவ்வூர்க்குள் வரப்பயப்படு வரோ! இப்படியிருக்க உன்னாலே பாதகமென்ற ஒளா இவ்வூரென்றுகைத்தாள். அவள் கைத்ததுகணடு அநுமானும மனத்துக்குள்ளே கைத்தனை, அது தெரிந்துகொண்டு அடாகுரங்கே நீயாதனுப்பவந்தாய்? உன் பிராணனைபோ னால்லாமல் நீயோடிப்போகிற தில்லையென்று சொன்னாள். அதற்கு அநுமான நானிந்த ஊருக்குள்ளே போய்ப பார்த்தாலலாயம் போகிறதில்லையென்று சொல்லிமுடித்தனன். அவ்வசனத்தைகேட்டகூவ இவன் வானரனலலன்; வஞ்சத்தைக்கொண்டுவந்தவனுகவேணுமம. காகுயமனுமந்திரிக்கிட்டு மூச் சைபோலவனை; இவனுமவனாலல அதிகமைதிரியதுடனை பிரளயகால ருத் திரனைப்போலகைகளினறனனை; ஆனையாலநீயாரென்றுமனங்கலங்கிக் கோபம் அதிகரிக்க இவனை அவதிபமரணகாலமென்; கொலலாமற்போனால இவ்வூருக்கே மோசமவருமென்று எண்ணி எட்டுத்திக்கனைகளிலும் கான்குவாயி லும் திக்திக்கென்று அக்கினிபானது பொங்கியெழுட்ட, அடா, நீ மதினமேலை போவாய் போவாயென்று உருக்கித்தன்னையிலிருந்த சூலாயுதத்தை உக்கிரத் துடனை அநுமான்மேலெறிதாள். அச்சூலமானது மினனலைப்போலத் தக தகாயமாய்ப் பிரகாசித்துக்கொணடு தனக்கெதிரா வரக்கண்டு அனுமான் அதைக் கையினற்பிடித்து ஆகாயத்திலே கருடன் நாகத்தைத் தூணிப்பது போலத் தேவர்கள் மகிழ்வெய்தவும அவள்நெஞ்சு திடுக்கிடவும் கொடிக்குள் ளே ஒடித்தெறிந்தான். சூலாயுதம் ஒடிபட்டு நீறுப்பொனதுகண்டு இலங்கா தேவி யுகாந்தகாலாக்கினிபோல மிக்க கோபங்கொண்டு பின்னும் தெய்விக மாகிய பலவகையான ஆயுதங்களையும் பிரயோகஞ்செய்யுமபடி முயன்றாள். அதையறிந்த அநுமான அவள் கையிலிருந்த ஆயுதங்களையெல்லாம் ஒன் றொழியாமல சிக்ரத்தில்பறித்து ஆகாயத்திலவிட்டெறிந்தனன். அதுகண்டு

அநுமான்மேற் பிரயோகஞ்செய்வதற்கு வேறே ஆயுதமில்லாமையினாலே இலங்காதேவியானவள் பிரளயகாலமேகம்போலக் கர்ச்சித்துப் மலைகளையெல்லாமெடுத்தெறிந்து பந்தும் அம்மனையும் ஆடுகின்ற தன்கைகளினால் ஒருப்புப்பொறி சிதறும்படி திருவடிகளை ஓங்கி அடித்தாள். அப்படி அடித்தும் அடியாததற்குமுன்னே அவளுடைய கைகளையெல்லாம் ஒருங்கே தாம் ஒருகையினால் சேர்த்துப் பிடித்துக்கொண்டு இவள் பெண்பிறப்பையுடையவள்; இவளைக்கொன்றால் தோடம் வந்து நேருமாகையாற் கொல்லலாகாதென்றே நினைத்து ஒருகையினால் அவள் மார்பில் ஒரு அறை அறைந்தனன். அவ்வறைபடவே இடிவிழுந்தமலையேபோலத் திடீரென்று பூமியில்விழுந்தாள்; விழுந்துகொந்து வாயினால் உதிரங்கான்றுகொண்டு அவ்வுதிரவெள்ளத்தில் அழுந்தி மூர்ச்சித்து மனஞ்சலித்து முன்னளிற் பிரமன் தனக்குக் கட்டளை யிட்டிருந்ததைநினைத்துக்கொண்டு எழுந்திருந்து எல்லாவுலகங்களினுமுள்ள யாவரும் யாவையும் சிதத்தா பத்திவிசுவாசத்துடனே வந்தனஞ்செய்கின்ற திருவடித்தாமரையையுடைய சீராமபிரானுக்கு இணங்கிய தூதனாகிய அனுமானுக்குமுன்னே வந்துநின்று அவனைப்புகழ்ந்து ஐயா மகானுபாவனே! முற்காலத்திற் பிரவஞ்சத்தையெல்லாம் சிருட்டிசெய்த பிரமன் என்னை இவ்விலங்கையைக் காத்துக்கொண்டிருக்கச்சொல்லிக் கட்டளையிட்டனன். என் பெயர் இலங்காதேவி. நான்கிருத்தியம் தப்பி மனந்திகைத்து உம்முடைய விடயத்தில் இவ்வற்பகாரியத்தைச்செய்தேன். நீர் என்னைக்கொல்லாமற் பிழைத்துப்போம்படி கருணைசெய்தீரேயானால் உமக்கு உண்மையைச்சொல்லுகிறேனென்று சொல்லத்தலைப்பட்டனள். அந்நாளிலந்த நான்முகப்பிரமனே கோக்கிச் சுவாமி நான் எத்தனைகாலம் இவ்விலங்கையைக் காத்துக்கொண்டிருப்பேனென்றுகேட்க, அவர் நீ வெகுகாலங் காத்துக்கொண்டிருந்தால், ஒரு குரங்குவந்து உன்னைக்கையினாலே தீண்டியடிக்கும். அப்பொழுதே இவ்விலங்கைக்காவலைவிட்டு நம்மிடத்திற்கேவந்துவிடுவாய். பின்பு அப்பட்டணம் அழிந்துபோமென்று சொல்லினர். அவ்வண்ணமேவந்து முடிந்தது. "தருமம் வெல்லும் பாவந்தோற்கும்" என்பதைக்குறித்துச் சொல்லவும்வேண்டுமோ? இனிமேல் நீ நினைத்தகாரியமெல்லாம் யாதொருதடையுமில்லாமன் முடியும். மேலும் உன்னாலாகாதகாரியமும் ஒன்றுண்டோ? நீ சுகமாய்ப் பட்டணத்திற்குள்ளேபோய் உன்னுடைய காரியத்தைப் பார்த்துக்கொள்ளென்றுசொல்லி அனுமானவணங்கி அவள் பிரமலோகமேபோய்ச்சேர்ந்தனள். அப்போது வீராதிவீரனாகிய அனுமான் மகிழ்ச்சியாகப்பார்த்து அப்படிதான் முடியுமென்றெண்ணித் தாரகபிரமமந்திரார்த்தமாகிய சீராமனுடையதிருநாமத்தை மனத்திலே தியானஞ்செய்து துதித்து அவனைவணங்கி அவ்வரக்கர்கானுடையஇலங்கைமதிலைத்தாண்டிப் பட்டணத்திற்குள்ளேபோய்ப் பெரியபாற்கடன்முழுதுஞ் சிறிய மோர்த்துளியாகிய பிரைகலந்ததுபோல எங்கும் வியாபித்தானாய் இரத்தினங்களிழற்செய்யப்பட்ட உன்னதமாகிய உப்பரிகைகளெல்லாம் தேசோமயமாய்ப் பிரகாசித்து இருளேதுங்காட்டாமல் தூண்டிவிட்டுப்பகலைஉண்டாக்குகின்றமையினால் அதைக்கண்டு ஞானிகளாயினோர்

வென்று அச்சங்கொண்டனன். உடனே செவ்வையாய்ப்பார்த்துச் சூரியோதயமானதன்று. இக்ககரத்திலுள்ள மாடமாளிகைகளின் பிரகாசமென்றே தெளிந்து. ஆ ஆ! இவ்விரத்தினகாந்திக்குமுன்னே சூரியன்வந்தால் மின்மினி போலன்றோ தோற்றுவானென்று அதிசயப்பட்டனன். பின்னும் பகாமேருவுக்கு ஒப்பாகிய சுவர்ணமதிலின் மத்தியிற் குற்றந்தீர்ந்த இரத்தினங்களழுத்திய உப்பரிகைகளின் பிரகாசத்தினால் இருள் நீங்குதலால், இவ்விலங்கையிலிருக்கின்ற அரக்கர்கள் பகற்காலத்திற் சஞ்சரிப்பதுபோல நிசியாகிய காளிராவுப்போதிலும் சாதாரணமாய்ச் சஞ்சாரஞ்செய்வதனாலே, இவர்களுக்கு அக்காரணத்தைப்பற்றி நிசிசரனென்று பெயருண்டாயிற்றென்றே நினைத்து, இப்படிப்பட்ட பிரகாசத்தினாலே வீதியில் நாம் பகிரங்கமாய் நடப்பதினாற் குற்றம்வருமென்றே தன் சரீரத்தைக் குறுகச்செய்துகொண்டு மாளிகைகளின்பக்கத்தில் மந்தாகினியைப்போலவும சோமபிரானுடைய கீர்த்தியைப்போலவும் உயர்ந்த தோளினையுடைய அனுமான் ஒதுங்கி நடக்கத்தொடங்கினன். பசுக்கள்நெருங்கியதொழுவங்கள்தோறும், யானைகள்கட்டிய கூடங்கள்தோறும், பந்திபந்தியாகிய குதிரைக்கொட்டாரங்கள்தோறும், திருமகள்வசிக்கின்ற வீடுகள்தோறும் பரிமளம் வீசுகின்ற பூஞ்சோலைகள்தோறும் கடலைக்கடந்த பாதத்தினால்தாவிப்பூக்கள்தோறும் தாவிச்செல்கின்ற வண்டேபோலச் சென்றனன். சூரியன் சந்திரன்முதலாகிய நவக்கிரகங்களுக்கும் நட்சத்திரங்களுக்கும் ஒப்பாகிய அநேக விரத்தினங்களினாலை, பத்திபத்தியாக உண்டாக்கப்பட்டிருக்கின்ற சுவர்த்தலங்கள்சொரிகின்ற சோதிச்சாயைகள் தன்திருமேனியிற்பாய்வதனால் வாயுகுமாரனாகிய அனுமான் கறுத்த நிறத்தையுடையவனாகியும் வெளுத்த நிறத்தையுடையவனாகியும் சிவப்பு நிறத்தையுடையவனாகியும் காணத்தலைப்பட்டனன். அக்காட்சி எவ்வாறிருந்ததென்றால் காண்பதற்கு அரியவனாகியும் எளியவனாகியும் தன் இதயகமலத்தில வாசஞ்செய்கின்ற பல வகைவடிவத்தையுடைய அந்தரியாமியுமாகிய சோமசுந்தரனைப்போலவேயிருந்தது. எங்கும் தேவகன்னியர்கள் சுவர்ணக்குடங்களில் ஆகாசகங்கையைக் கொண்டுவந்து நீராட்ட அரக்கியர்கள் மயில்களும் அன்னங்களும் நீர்விளையாடுவதுபோல நீராடல் செய்கின்றதையும், இளந்தளிரையொத்த கைகள் சோவ வீணை மீட்டி இலயைகானசுதி கானப்பிரமாணத்துடனேபாடுப்பாடல்கள் மேகங்கர்ச்சிக்கின்றதனால் அந்தப்பிரமாணந் தப்பிப்போகின்றனவென்று வித்தியாதரமாதர்கள் உப்பரிகைகளின்மேல் தவழ்கின்ற மோகத்தின்வாயைத் தங்கள் கைகளினால் மூடுகின்றதையும், பூப்பந்தலிடப்பட்டு இரத்தினதீபங்கள் விளங்குகின்ற பொன்மயமாகிய நடனசாலைகளில் பூப்படுக்கையில் வந்திருந்து கந்தர்வமாதர்கள் ஆடுகின்ற காட்டியத்தைப் பார்க்கின்றவர்களையும் பளிங்கினாற்கட்டிய மேடைகளின்மேலிருந்து பயிருக்கு நீர்பாய்ச்சுவதுபோலத் தங்களுக்கு காயகன்மார்களிடத்தில் காமம் அதிகப்படும்படி கள்ளுண்கிறவர்களையும், செம்பவளத்திற்கு ஒப்பாகிய பாதத்தில் செம்பஞ்சின்குழம்பாற் சித்திரமெழுதிச் சரீரத்தில் மிகுந்த வாசனையையுடைய கலவைச்சாந்து பூசிக் கண்களில் மையிட்டுப் பலவகை ஆபரணங்களும் கற்பகவிருட்சங்கொடுக்க

வாங்கி அணிந்துகொள்கின்றவர்களையும், காயகன்மார்கள்செய்த குற்றம் தங்கள் உயிரைவருத்த ஊடியமாதர்கள் பெருமூச்செறிந்து இடைதுவளக் காற்சிலம்பு சத்திக்கும்படி உதைக்க மகிழ்ந்து மயிர்க்குச்செறிகின்றவர்களையும், உள்ளேகொண்ட மயக்கத்தினால் கண்சிவந்து வாயிதழ்வெளுத்துப் புருவம் வளைந்துதுடிக்க வெம்பாவுண்டாக முகம்வேறுபட்டுக் கள்ளினிடத்திலே காணக்கண்டு சக்களத்தியென்று நினைத்துப் புருடாகளைக் கோபிப்பவர்களையும், காயகன்மார்களைப்பிரிந்து தனத்தின்மேல் அணிந்த சந்தனந்தீயும்படி தாமரைமலரின்மேல் வேறொரு தாமரைமலர் பூத்தாற்போல முகத்தினிடத்திற் கையைவைத்துகொண்டு அசைவற்றிருந்து பெருமூச்செறிகின்றவர்களையும், காயகன்மார்கள்மேற் கோபத்தாற் சயனத்தில உணர்ச்சிங்கிக்கிடந்து காமம் அதிகப்படுவதனால் அவர்கள்வரும வழிபார்த்துத் தாங்கள் அனுப்பினதாதிகள் நகைத்துக்கொண்டுவரக்கண்டு உயிர்வந்து தூதர்களையறவாகளையும், சகல வாத்தியமுழக்கத்துடனே தங்கள் தங்கள்விட்டுத் தெய்வங்களைக் கொண்டாடிப் பூக்களால் அருச்சித்துப் பூசைபண்ணுகளையுட, காமபாணக்குறும் புருடர்களது பக்கத்திற்படித்துப் பொய்புறக்கணிகொண்டிருந்து பின்பு அபிணக்குநீங்கிச் சையோகஞ்செய்ய நினைத்துக்கொண்டு மெல்லக்கணவனைத் திறந்துபார்ப்பவர்களையும், அறிவுடனே அந்தக்காரண முதலானவைகளும் காயகன்மார்களிடத்திற் சேர்ந்திருக்க அவர்கள்மேற் பிணங்கிப்போய்க் கதவைச்சாத்துகிற்பவர்களையும், மேகத்தைப்போலப பரிகைமுழங்கத் தேவர்கள்வந்து ஆசீர்வதிக்க முற்றத்துறந்தமுனிவர்கள் சோபனங்கள்கூற அரமகளிர்கள் பல்லாண்டுபாடக் கல்யாணஞ்செய்து மகிழ்கினறவர்களையும், மற்றும்பலவகைச்செய்கைகளைச்செய்துகொண்டிருக்கிற இயக்கியர்கந்தர்வமாதர்வித்தியாதரமாதாமுதலாகிய அனைவரையும் அநுமான் தெளிவாகப்பார்த்துக்கொண்டேநடந்து, அப்பால் குங்குமகாணலையடைய மாளிகைக்குப்போயினன். அவ்விடத்தில எழுதப்பாதனை விஸ்தரிக்கிறது. அன்று உயர்ந்து சுவர்களைஉடைய மாய்த் தேவேந்திரனையடைய பட்டணத்திலேக மனைடபமாகிய சுதர்மைபோல அதிக சிங்காரமாகிய ஒரு மண்டபமிருக்கின்றது; அது எட்டுத்திக்கிலும் இருளை நிலைபெறுமல் ஓடுகின்றது; அதன் நடுவே ஒரு பஞ்சுமெத்தையின்மேல் காகாசன் சயனித்துக்கொண்டிருப்பதுபோலவும், சமுத்திரங்கிடப்பதுபோலவும், பாவங்களெல்லாம் திரண்டு ஒருவடிவு மெடுத்ததுபோலவும் கும்பகர்ணன் படுத்துக்கொண்டு சமுத்திரத்திலே மூழ்கியெழுந்து மூவகைப்பட்ட கதிகளுடனே கற்பகக்காட்டிலே சஞ்சரிக்கின்ற இளமைதன்றற்காற்று வந்து முகத்திலே மிருதுவாய்த்தவழவும், தேவகன்னிகைகள் பாதம்வருடவும், அவர்களுடைய முகமாகிய சந்திரனைக்கண்டு சந்திரகாந்தம் கக்குகின்ற நீரானது மேலே தளிக்கவும் நித்திரைபண்ணிக்கொண்டிருந்தனன். அவனுடைய சுவாசமென்னும் வேகத்தையுடைய பெருங்காற்றானது அநுமானையே வாயலின்புறத்திலே தள்ளிக்கொண்டுவந்துநிறுத்தி, மீண்டும் பராக்கிரமமுள்ளடான அந்தக்கும்பகர்ணனுடைய மூக்குக்குள்ளே யிழுத்துக்கொண்டுபோயிற்று. அதைக்கண்டு அநுமான்பயந்தாடுங்கிச் சீக்கிரமாயங்கிருந்து வெளியிலே

ருதித்து ஆச்சரியப்பட்டுக் கைவிரலைத்தறித்தான். புழுதிக்கூட்டங்களெழும்பி ஆகாயத்தை அளாவும்படி அவன் மூக்கினின்றும் வெளிப்பட்டுப் பின்னும் அதற்குள்ளே நுழைகின்ற அந்த உகுவாசநிசுவாசம் எப்படியிருந்ததென்றால் உலகங்களையெலலாம் காசஞ்செய்கின்ற பிரசண்டமாருதமானது யுகாந்த காலத்தின்வரவை எதிர்பார்த்துக்கொண்டு சஞ்சரிப்பதை ஒத்திருந்தது. அவன் சந்திரனைத் தன் பகைவர்களிற் சேர்ந்தவனென்றுபிடித்து இருபினை வாக்கித்தின்னும்படி தன் பெரியவாயினிடத்தில் வைத்ததுபோல, அவனுடையமுகத்திற் கோரதந்தங்கள் பிரகாசிக்க, மந்திரத்தினாலே தடைபட்ட காகம்போலவும், யுகமுடிவைப்பார்த்துக்கொண்டு பொங்கிவராமல் அடங்கியிருக்கின்ற கடல்போலவும் உறங்கிக்கொண்டிருந்தனன். அக்கும்பகர்ணனைப் பார்த்து இவன்இராவணனேவென்று எண்ணி அனுமான் மிக்க கோபமாய்ச் சமீபத்திலேபோய்ப்பார்த்து இவனுக்குப் பத்துத்தலையும் இருபதுதோளும் இல்லாமையினால்இராவணன் அல்லனென்றுகுறித்துக் கோபமாகியவடவாக்கினியை அதிவாகிய கடல்நீரால் தணியச்செய்துகொண்டு, பின்பு இவன்யாரோ தெரியவில்லை ; கல்லது எவனையிருந்தாலுமிருக்கட்டும் ; இன்னஞ் சிலகாள் வரைக்குந்தானே உயிர்கொண்டிருக்கப்போகின்றனனென்றுமனத்திலெண்ணி, அந்த மாளிகையைவிட்டு அப்பாலிருக்கின்ற மாடங்கள், கூடங்கள், மாளிகைகள், ஆடரங்குகள், சபாமண்டபங்கள், தேவாலயங்கள், வேதிகைகள், வித்தியாசாலைகள்முதலாகிய பலவகையிடங்களையும் ஸ்ரீதாசரதியினுடைய கீர்த்தியே ஒருவடிவெடுத்ததுபோலிருக்கின்ற அனுமான் தேடிக்கொண்டேசென்றான். மேருமுதல் அணுவனையிலுமுள்ள சகல சராசரங்களிலும் நிறைந்திருக்கின்ற பரம்பொருளைப்போல மாணிக்கமயமாகிய வாசல்களுக்குள்ளும், சிறிய சாளரங்களுக்குள்ளும், புட்பங்களுக்குள்ளும், புட்பத்தின் தண்டுகளுக்குள்ளும், காற்றுக்குள்ளும், புகைக்குள்ளும், அதற்குத்தக்கபடி தூலமும் சூக்குமமுமாகிய உருவமெடுத்து நுழைந்து உலகமாதாவைத் தேடிக்கொண்டுபோகின்ற அவ்வனுமானுடைய நிலைமையை யார்தான்தெரித்து சொல்லக்கூடும்;இப்படி எவ்விடங்களினும்போய் எவ்வகைப்பட்ட மாதர்களையும் காணும்பொருட்டுச் சுவர்க்கமர்த்திய பாதாளங்களிலுள்ளவர்களெல்லாம் விரும்பும்படி அவதரித்த புண்ணியசீலனாகிய விபீஷணாழ்வானுடைய திருமாளிகைக்குள்ளே புகுந்தனன். பவளத்தினால் அழகாகக்கட்டியிருக்கின்ற அம்மாளிகையில் பளிங்குமேடையின்மேல் தேன்துளிக்கின்ற பாரிசாதபுட்பப்பந்தலிலே அந்த விபீஷணாழ்வான் படுத்துக்கொண்டிருந்தனன். அவன் படுத்திருந்தது எப்படியிருந்தென்றால், தருமமானது தனக்குரிய வெளுத்தநிறத்துடனே அவ்வூரிலுள்ள அரக்கர்களுக்குமுன்னே இருக்கமுடியாதென்று அவர்களைப்போலக் கறுத்தவடிவமெடுத்து ஒளித்துக்கொண்டிருந்ததுபோலிருந்தது. அப்படிப்பட்ட விபீஷணாழ்வானைக்கண்டு அவ்விடத்தினின்றும் அவனுடைய விவேகத்தைத் தன்னுடைய விவேகத்தினால் அளவிட்டு, இவன் குற்றமற்ற சற்குணத்தையுடைய பரமோத்தமனென்றே அவனைக்குறித்து மகிழ்ச்சியடைந்து, அப்பால் வடக்குமேபோய்ச் சுவர்ணச்சாலையாய்ப் பிரகாசிக்கின்ற ஒவ்வொருகோடிமாட

ங்களை ஒவ்வொரு இமைப்பொழுதிற் றேடினன். (அவ்விடங்களில் இந்திரசித்தென்பவனாற் சிறைவைக்கப்பட்டிருக்கின்ற தெய்வமாதர், இயக்கியர், கந்தர்வமாதர், கின்னரமாதர், பன்னகமாதர், வித்தியாதரமாதர், கிம்புருடமாதர் முதலாகிய அநேககோடி மாதர்கூட்டங்களினுந் தேடிக்கொண்டேபோய் அவர்களுடைய பலவகையாகிய கிருகங்களையுங்கடந்து முன்னுளில் இந்திரன் சிறையிருந்த இந்திரசித்தினுடைய ஆசாரவாசலுக்கணைடான். அவ்விடத்திலே கைகளில் ஆயுதங்கள்பிரகாசிக்க மிதமற்ற அரக்கர்கள்நின்றபடியே பூர்வகதைகளும் விடுகதைகளும் சொல்லிக்கொண்டு கண்களை இமையால் சாக்கிரதையாய்க்காவலிருந்தார்கள். அவர்களுடையகடினமாகியகாவலுக்கடந்துஉள்ளேபோய் அநேக மாதர்கூட்டத்தின் மத்தியில மஹா உல்லாசமாய்ப் படுத்துக்கொண்டிருக்கின்ற இந்திரசித்தைக்கண்டு முக்கட்பெருமானுகிய சிவபிரானுடைய புத்திரனென்கின்ற சுப்பிரமணியன் தன்னுடைய ஆறுமுகங்களில் ஐந்துமுகங்களையும் பன்னிரண்டுகைகளிற் பத்துக்கைகளையும் மறைத்து ஒரு முகத்துடனும் இரண்டுகையுடனும் வந்திருப்பது போலிருக்கின்ற இவன் அரக்கனே? அல்லது அச்சுப்பிரமணியன் தானே? சிங்கத்திற்குச் சமானமாகிய மிக்க போராற்றலுடையானுகவும் காண்கின்றனன். ஆகையால் யாரோ தெரியவில்லை. இளையபெருமாளும், பெருமாளும்வந்து யுத்தஞ்செய்கின்ற காலத்திலே இவனே அநேககாள் இளையாமல் யுத்தஞ்செய்வான். இப்படிப்பட்டவனைத் தனக்குத் துணையாகப் பெற்றிருக்கின்றஇராவணன்மும்மையுலகத்தையும்வெற்றிகொண்டதைஒரு பொருளாகச்சொல்லக்கூடாது. இவனுக்குச் சிவனும் பிரமனும் விஷ்ணுவுமாகிய மும்மைப் பெருந்தேவர்களும் ஒப்பாவார்களென்று சொல்வது விவேகமாவென்று தன்னுடைய கையை அசைத்து இவ்விடத்தில் நான் தாமசமாக இருந்து காலத்தை வீணுகப்போக்குவது கன்மையன்றென்று அவ்விடத்திலுள்ள அநேகமாயிரம் மாளிகைகளையும் வெகு சீக்கிரத்தில்தேடி அவ்விந்திரசித்துவின் அரண்மனையைவிட்டு நீங்கிப் புகை நுழையாத இடத்திலுங் காமரூபங்கொண்டு நுழையத் தக்க திருவடிகள் அதிகாயன் மாளிகையையும் பின்னும் அவன் தமபிமார்களுடைய மாளிகைகளையும் மற்றுமுள்ள படைத்தலைவர்கள் அணித்தலைவர்கள் யூகத்தலைவர்களுடைய மாளிகைகளையும் தேடிப்பார்த்து அப்பால் மந்திரி பிரதானிமார்களுடைய மாளிகைகளையும் ஆயிரகோடி சுவர்ணமாளிகைகளையும் சீராமபாணத்தைப்போல அதிவேகமாய்த்திரிந்து தேடி, பின்பு அந்த மூன்று சுற்றுக்கோட்டைக்கும் நடுவேயிருக்கின்ற அகழிக்குநேராகவந்தனன். குழந்தைப்பருவத்திற் சூரியனை மாங்கனியென்றே பிடிக்கும்படி தாவிய அனுமான் அவ்வகழியைக்கண்டு ஏழுகடல்களும் ஒன்றுகச் சேர்ந்திருக்கின்றதுபோலிருக்கின்றதே இவ்வகழி, இதைக் கடப்பதாவரிது. இனி சீராமகாரியத்திற்கு விக்கினம் வந்தென்று கிலேசித்துப் பின்னும் அதைப்பார்த்து இதை அகழியென்று சொல்வார்களானால், அசுரர்கள்கூடி வாழிகாலபரியந்தம் தோண்டினாலும் தோண்டமுடியாது. இராவணனுக்குப் பயந்து ஏழுகடல்களும் இங்ஙனந்தித்துக்கொண்டு இப்படிச் சூழ்ந்திருக்கின்றதென்று நினைத்து அவ்வகழிக்கு

அருகே போய் கான் முன்பு கடலைக்கடந்துவந்தவேகத்தைப்பார்க்கிலும் இரு மடங்கு அதிகவிசைகொண்டு தாண்டினபோதும் இதைக் கடக்கக்கூடாதென்றும், மேலிருந்து நால்வகையான மேகங்களும் கீழ்விழுந்து சுவியும்படி தாக்கிறற்போலப் பொங்கியெழுகின்ற கீர்ப்பெருக்கையுடையதாய், பிரதாப இலங்கேசனுடைய சேனைசமுத்திரத்தை யொத்திருக்கின்றதே. இவ்வகழியைவாயிலற் சொல்லவுங் கூடுமாவென்றும், இதில யானைகள் பொழிகின்ற கர்ணமத முதலாகிய மூன்றுவகைபபட்ட மதங்களும், குதிரைகளின் வாயிலிருந்து ஒழுகுகின்ற நுரைகளும் தேவரம்பையர்கள் நீராடல்செய்கின்ற குங்குமங் கலந்த சலமும், இலங்கையிலிருக்கின்ற மாதர்களுடைய கூந்தலுக்கு ஊட்டிய மயிர்ச்சாந்தும, அகிற்புகையும் தேனும் திவ்வியமாகிய கந்தமும பரிமளிக்கின்றனவென்றும், பூவைகள் கொய்யடி காகைகள் அன்றில்கள் டிதாக்கள் உள்ளான் அன்னம் நீர்க்கோழி நீர்க்காக்கை சக்கரவாகம கின்னரம் கொக்கு முதலாகிய பறவைகள் நிறைந்திருக்கின்றனவென்றும், மாதர்கள் அணிகின்ற அகில்சந்தனம் கத்தூரி செம்பஞ்சின்குழம்பு முதலானவைகளும் சேர்ந்திருக்கின்ற இந்த அகழியின் மூழ்கிப்போகின்ற களிற்றியானைகளைப பிடியானைகள் கண்டு தமமுடைய காயகன் வேறொரு காயகினையைப் புணர்ந்து வருகின்றானென்று கினைத்துப் பிணங்குகின்றனவென்றும், நீர்த்துறைகள்தோறும குவிந்திருக்கின்ற தாமரைமலர்கள் சீதாபிராட்டியாருடையகாசரணத்தி அவயவங்களுக்கு சுட்பாகையால் அப்பிராட்டி சிறையிருப்பதைக் குறித்து முகம் வாடியதுபோலிருக்கின்றனவென்றும், அலலாமலும நீலமுதலாகியஇரத்தினங்களும் முத்துகளும கரையின்மேலும் சலத்திற்குள்ளும் பலவகையாகப் பிரகாசிப்பது, பாற்கடல்முதலாகிய பலகடல்களும ஒன்றுகக் கலந்திருப்பதுபோலிருக்கின்றதென்றும் குறித்து அப்படிப்பட்ட அகழியைக் கடலைக் கடப்பதுபோலவேகடந்து மதிலையுந்தாண்டி உட்புகக்கூடாத காவலையுடைய அக்கரத்திற்குள்ளே போனான். அப்போது அர்த்தராத்திரி யாய்த்து. அத்தருணத்தில் யமனும பயந்து ஓடத்தக்க அரக்கர்களுடைய பட்டணத்தில் அநுமான் தானொருவனுப் ஒவ்வொன்றும பன்னிரண்டுயோசனைதூர பிரமாணமாயிருக்கின்ற மூன்றுலட்சம நிசாசரர்கள் நிறைந்தனன். ஆடல் பாடல்கள் அடங்கின. வீணை முதலிய முதலாகிய சகலவாத்திய முழுங்கங்களும அடங்கின. காவற்பணிமாத்திரமே முழுங்கத்தலைப்பட்டது. கூடினமாதராடவர்களெல்லாம்உறங்கினர்கள். கதவுகளெல்லாஞ்சாத்தப்பட்டன. பூரணஞானத்தைப்பெற்றஉத்தமாகளெல்லாம் நித்திய நியமாதிகருமங்களை முடித்துக்கொண்டுநித்திரைசெய்தார்கள். போகிகளும் உறங்கினர். மதயானைகளும உறங்கின. மயங்கித்திரிகின்ற பித்தர்களும் உறங்கினர்களென்றால் மற்றவர்களைக் குறித்து என்னசொல்லுவது. அந்தச்சமயத்திலே அம்மதிலுக்குள்ளே இரண்டுகோடி அரசவிதிகளைத்தேடிப்பார்த்து அப்பால் ஆகாமியசஞ்சிதபிராரத்தகர்மங்களை ஒழித்த திருவடிகள் தசக்கிரீவனுடைய இருப்பிடத்தைச் சுற்றியிருக்கின்ற அகழையும் மதிலையுங்கடந்து உள்ளேபோய்ப் பிரவேசித்தனன். அங்கே இராவணனை சந்திரனைச் சந்திரனைச் சூழ்ந்திருக்கின்ற நட்சத்திரங்களைப்போல

அவ்விராவணனைச் சேர்ந்திருக்கின்ற மாதர்களுடையதிரத்தினமயமாகியமாளி
கைகளையெல்லாம தேடத் தலைப்பட்டவராய், களங்க நீங்கிய சந்திரனும்
தோற்கும்படி பிரகாசிக்கின்ற முகத்தினையுடைய இயக்கியர்கள் வாசஞ்செய்
யும் மாளிகைகள்தெருங்கிய வீதிக்குப்போனன். சோமதூதனுகிய அனுமான்
வச்சிரத்திறவுகோல நுழைகின்ற துவாரங்கள்தோறும நூலிழைபோலவும்,
சிறுதென்றல்போலவும் அதிக நுட்பமாகிய உருவங்கொண்டு நுழைந்து மனம
தெளியும்படி பார்த்தனன். அவ்விடத்திற் சில மாதாகள் தங்கள் காயகனுகிய
இராவணன்மேல் மிக்கமோகமாய் மனம அவனிடத்தில்போயிருக்கக் கணனி
மையாமல் சித்திரமபோ லிருந்தார்கள். சிலாயனைய பாணதிறுப பயங்
தோ கனவிலாயினும் அவ்விராவணனைச் சேரலாமென்று எண்ணியோ என்ன
வோ ஒன்றுந் தெரியவிலலை; அவர்கள் கணணைமூடிப் பொய்யுறகங் கொண்
டிருந்தார்கள். சிலர் கிளிப்பிள்ளைகளையுமாகணவாய்ப்பறவைகளையும்கோடா
ரமாய்ப்பார்த்து, நீங்கள் ஆகின்றகாரியம் ஒன்றுஞ்செய்யவில்லை. என் பிரான
சிகேகனை அழைத்து வரவுமில்லை. என்னுடைய சமாசாரத்தையும அவ
னிடத்திற்போய்ச் சொல்லவிலலையென்று கண்ணீர்பெருகத் துனபபடுவார்
கள். சிலர் தனங்களில் மன்மதபாணம் தைக்கப் பெருமூச்செறிந்து அழுது,
இனிச் செய்வதென்ன இருக்கின்றது; இராவணனுடைய உருவத்தைச் சித்தி
ரத்திலாயினும் எழுதலாமாவென்று நினைக்கினறார்கள். சிலர் மகாமேருவை
வில்லாகவளைத்து மகாவிஷ்ணுவை அமபாகத்தொடுத்துத் திரபுரதனை
எரித்த சிவபிரானுடைய கைலாயமலையை எடுத்த அதிசூரனுகிய தசகண்ட
னுடைய தோள்களில் அணிந்த சந்தனக்குழமபு தோய்ந்த தங்கள் தனத்
தைப் பார்த்துச் சந்தோடிக்கின்றார்கள். சிலர் இலங்கேசனுடைய பிரதா
பத்தை விணையிற்பாடுகினறார்கள். இத்தவணைம அவ்வியக்கிமார்களிருக்
கின்ற ஆயிரகோடி மனைகளையுந்தேடி அவற்றைத்தாண்டி அரக்கியர்களிருக்
கின்ற ஆயிரகோடிமாளிகைகளையும போய்த்தேடத்தலைப்பட்டனன். அதிகார்
கெய்வினக்கில்லாமல் இரதினசோதியய திருளை நீக்குமபடிப்ப பிரகாசிக்கின்ற
மாடமாளிகைகளில் தோழிமார் தாதிமார முதலாகிய பெணகள் கூட்டமெல்
லாம் நீங்கிப்போகத் தாங்கள் கொண்ட ஆசையும் காமுமாய் ஒருபக்கத்தி
லிருந்து இராவணனிடத்திற் போயிருக்கினற தங்கள்மனத்துடனே பிணங்கு
கின்றவர்களும், அதிகர் தங்கள் மேனியே ஆகாயமாகவும, முத்தாரமே கட்
சத்திரங்களாகவும் இடையே மின்னலாகவும சிவந்தகூந்தலே செவ்வானமாக
வும், நெற்றியேசந்திரனுகவும் தோன்ற அந்திவானத்திற்கு ஒப்பாயிருக்கின்ற
வர்களும் அதிகர் உயர்வாகிய உப்பரிகைகளின்மேலிருந்து கணகளின்கிற
மாறவும் அளகபாரஞ்சோரவும் வானத்திலிருக்கின்ற நட்சத்திரங்களை வரி
யெடுத்து அம்மனையாகவும் ஏழாங்காயாகவும ஆடுகின்றவர்களும் தெய்வமா
தர்களின்கூட்டங்கள் சத்தியலோகத்திலிருந்து மொண்டு கொண்டுவந்த நீ
ராட்டுகின்ற ஆகாயகங்கைகுளிர்ச்சியாயிருக்கவில்லை யென்று அவர்கள்மேற்
கோபித்து மேன்மாடங்களின்மேல் ஏறிப்போய்மேகத்தின்வயிற்றைத்தொளை
த்து அதிலிருந்து ஒழுகுகின்ற நீரினால் சுத்தரோடுகின்றவர்களும் அதிகர்

ராகராசர்களைப் பலாத்காரமாகப் பிடித்து அவர்களுடைய சிரோமணிகளையும் சித்தியாதர ராசர்களுடைய கிரீடங்களையும் இரத்தினத் தாம்புடங்களையும் மற்றுமுள்ள ஆபாணங்களையும் பறித்துப் பந்தயமாகவைத்து சித்தினையில்லா மற் சூதாடுகின்றவர்களும், அகேகர் புதுமையாகிய பூஞ்சேக்கையிற் படுக்கப் பொருமல் அதைவிட்டுக் குளிர்ச்சியாகியபளிக்குமேடையிலே போய்ப்படுத் துக் காமாக்கினியினாலே வெதும்பிப் புழுங்குகின்றவர்களும், அகேகர் சித்த மாதர்கள் வீணைமாட்டிப்பாட காககன்னியர்கள் மத்தளந்தட்டத் தேவரம் பையர்கள் ஆட அற்கடனம் ஆர்த்துக்கொண் டிருக்கின்றவர்களும், அகேகர் விரகாக்கினி மனத்தைச்சுடக் கண்ணிலே நீர்பெருக சித்தினையில்லாமலும் இன்னத்தைச்செய்யலாமென்றும் அதுவல்லாமலும் மகரவீணையும் புள்ளாங் குழலும் தங்கள் கண்டமும் வேற்றுமைதோன்றுமல் அமிர்தமொழுகும்படி பாடுகின்றவர்களும், அகேகர் ஆடையும் மேகலாபரணமும் சோரும்படி குரை வைக்கூத்தாடுகின்றவர்களும், அகேகர் கள்ளும் உதிரமுமுண்டு பித்தேறிக் கொண்டாட்டத்தால் கடிக்கின்றவர்களும, அகேகர் கள்ளுண்டமயக்கத்தால் அறிவுதடுமாறக் கண்சுழல என்மேல் தெய்வம்வந்தது பாருங்களென்று பெரு மூச்சுவிட்டு இரண்டுகையையும் உச்சிமேற் கூப்பிக்கொண்டு குழறிப்பேசு கின்றவர்களுமா யிருக்கின்றனர். இவ்வகையாய்யிருக்கின்ற அவ்வரக்கியர்க ளுடைய காலுகோடி வீதிகளையுந் தேடிப்பார்த்துக்கொண்டே அப்புறம் சித்த மார்தர்களிருக்கின்ற வீதிக்குப்போய் அங்குந்தேடிப் பார்த்துக்கொண்டு பின்பு அநுமானே வித்தியாதரமாதர்களுடைய வீதிக்குப்போனான். இராவணனை வரக்காணுமல்தங்களிடையைப்பார்க்கிலும் மனந்தளர்ந்து கடுங்க உயிருமின்னி லைதடுமாற, பாணர்கள் பாடுகின்றபாடலானது பாம்பைம்போலச்செவியிலே வந் தநுழைய வருத்தப்படுகின்றவர்களும், இவர்கள் இராவணனிடத்திற் பரிவுகொ ண்டிருக்கின்றவர்களென்கின்ற பகைமையைக்கொண்டு சந்திரன்சொரிகின்ற கிரணங்கள் தனங்களைவெதுப்ப கெருப்பில்வீழ்ந்த இளங்கொடிபோலத் துடிக் கின்றவர்களும் ஒரு கணப்பொழுது அகேக ஊழிகாலங்களாய்த் தோன்ற மனம்வேறுபட்டுக் காமரோயால் வருந்துகின்றவர்களும் தனத்தில் எழுதிய சந்தனக்குறிகள் உயிரை வருத்தக்கண்கள் சிவக்கப்பார்த்துக் கோபித்துப் பெருமூச்சு விடுகின்றவர்களுமாய் அந்தவித்தியாதரமாதர்களிருக்கின்ற பன் னிரண்டுகோடி மாளிகைகளையும்தேடிப்பார்த்துக்கொண்டுபோனான். மும்மை யுலகத்திற்குமாயனாகிய பிரதாப இலங்கேசனுடைய பெரிய அரண்மனையை சோடிப்பேர்கிய அநுமானே பூரணசந்திரனும் ஒளிமழுங்கும்படி மிக்க பிர காசமாய் விளங்குகின்ற முகத்தினையுடைய மயன்மகளாகிய மண்டோதரிவா சஞ்செய்கின்ற அந்தப்புரத்தைக்கண்டனன். கண்டு தன்னுடைய கண்கள்பிர மிக்கச் சித்தம் நிலைக்கிட எங்கள்கர்த்தவாகிய சீராகவனுடைய பிராணபதமா கிருக்கின்றசகன்மாதாவாகியசானகியம்மை இவ்விராவணன்எடுத்துக்கொண்டு வந்துவைத்திருக்கின்ற இடமிதுதானோ? இங்குள்ள மாளிகைமயமாகிய சகல மாளிகைகளிலும் இது ஸ்ரீமகாவிஷ்ணுவின் மார்பில்வீற்றிருக்கின்ற லக்ஷ்மிதேவி யைப்பிரதிஷ்டிக்கின்றவிதம்போல அதிசயப்பட்டனன். அரம்பை மென்மை நிலா

த்தமை ஊர்வசி முதலாகிய தெய்வப்பெண்கள் இளந்தளிர்போன்ற பாதத் னைதவருட, வெணசாமரைவீச, கரும்பைப்பார்க்கிலும் மிக்க மதுரமாகிய மொழியையுடைய மாதர்கள் யாழ்மீட்டிபபாடுகின்றபாடலானது காதுக்குள் ளேவந்து நுழைய, மூன்னிடதிலகற்பகபூ வாடையானதுசேர்ந்துமணக்க, இப்படிப்பட்ட மிக்க சமபிரமத்துடனே பூம்பருக்கையினமேல் மாணிக்க தீபப் பிரகாசமும் மழுங்கச் சொலிக்கின்ற மேனியையுடைய திரிலோக பயங் கரன் மனைவியாகிய மண்டோதரி துயிலகொளக்கண்டு, இவள் அப்பிராட்டி யோவென்று நினைத்து ஐயங்கொண்டு மனத்திலிருந்தெழுந்த கோபதாபங் கம்முடலையும் உயினையுஞ்சுட மிகவுத்தபரப்பட்டுச் சொலலுகின்றனர். நான எடுத்த யாக்கையினல் அடையத்தக்க பயனை இழந்துவிட்டனே; அந்தருக கட்டும், இவள் அன்பையும் குடிப்பிறப்பையும் தெய்விகமாகிய தன்கற்பை யும் இழந்துவிட்டாளேயானல, சக்கரவாத்தித் திருமகனுடைய கோதண்டமும் தேஜசுமானும் இவ்விலங்கையும் அரக்கரனைவரும் இற்றைத்தினமே மாண்டு போவது நிச்சயமென்று எண்ணி, மறுபடியும் செவ்வைபடாகப பாத்து அவ்வுலக மாதாவோ மதத்தகிய சிறந்த உருவத்தையுடையவர். இவளை அவருடைய திருவுருவத்தின் சதாமிசத்தில ஒருமிசமும் ஒவ்வாததும விகார முமாகிய உருவத்தை யுடையவளா யிருக்கின்றனள். ஆகையால் இவள் இயக்கமாதோ அசுரமாதோவென்று ஐயமாயிருக்கின்றது. சகலான்மாக்களையும் மோகிப்பிக்கின்ற மன்மதன் இரகுநாயகன்மேல அம்பினையுடைய பிராட்டி யாரிடத்தில் அணுகுவானே? நாம இப்பொழுது இவளை அச்சானகியாவென்றே நினைதததும மாபாதகம. உத்தமமாதருக்குரிய இலக்கணங்களும் இவருக் குச் சிலவுணடாயிருக்கின்றன. ஆனலும இவள் சீதகத்தில் தோற்றுகின்ற அவலட்சணங்கள் சிலதாளுள்ளன மகத்தகிய துன்பத்தை யடைபவ வென்று சொலலுகின்றனர். தலையிற்அளிந்து சோகத்துவிழ வாய்வெருண்டு ஏதேதோ தியவசனங்களை பிதற்றுகின்றதனல் இவள்சாயகனுக்கும, அவ னுள்கின்ற இக்கரத்திற்கும் மேலே சமீபத்திருக்கிறதாகவே தோன்றுகின்ற தென்று அறிந்துகொணடு அவ்விடத்தைவிட்டு நீங்கி மகாமேருமலை வந் திருப்பதுபோல நிச்சலனமாயிருக்கின்ற ஒரு விசித்திரமாகிய சிருகத்தில இராவணனும எடுக்கப்படாத வெளளிமலையைப்போற்ற தரணடதோளினை யுடைய அனுமான்போய்ப்பரிசலிசித்தனன். அவாபிரமலிசித்தமாத்திரத்தில் பூமியதிர்ந்தது. எலலாமலைகளும் அசைந்தன. அரக்கியர்களுக்கெல்லாம் அவர்களிடையைப்போல வலபுறத்துப புருவமும கண்ணும் தோளும் துடித்தன. திக்குகள் கம்பிதபபட்டன. மினனலுமெகமும மில்லாமல் ஆகா யத்தில் இடியோசை யுண்டாயிற்று. மங்களகரமாக வைத்திருக்கின்ற பூரண கும்பங்களெல்லாம் வெடித்தன. இப்படிப்பட்ட துர்நிமித்தங்கள் உண்டாக வே, அனுமான் தம்முடைய அறிவைக்கொண்டு ஆராய்ந்துபார்த்து வினை வாக இவ்விலங்காபட்டணத்தின் சாமபரத்துகளெல்லாம் நாசமாய்ப் போய் விடுமென்றே நினைந்துச் சற்றே மனங்கிலேசித்து உடனே எக்குலத்திலே தோன்றினவர்களா யிருந்தலும எப்படிப்பட்ட தபோதிட்டர்களாயினும

யாவருக்கும் கல்வினையும் தீவினையும் சமமாகவே முடிந்திருக்கின்றனவன்று! ஆகையால் ஊழ்வினையைப் பார்க்கிலும் வலிமையையுடையது வேறென்ன இருக்கின்றதென்று கவியாகரண பண்டிதரானகையால தமக்குள்ளே தணிவு கொண்டு, சேனைசமுத்திரம் புடைசூழ்ந்திருக்கின்ற அம்மாளிகைக்குப்பெரிய பாற்கடலில் அநேக அலைகளை வீசிக்கொண்டு ஒருகருங்கடல் கிடப்பதுபோல வும், இளஞ்சூரியர்கள் மலையின்மேல் உதயமானதுபோல இரத்தினமிழைத்த கிரீடங்களுமற்றுமுள்ள பலவகைபூடணங்களும் இருளோக்கிப்பிரகாசிக்க, இரணியனைச் சங்கரித்த உக்கிர நரசிங்கமூர்த்தி அநேகமாகிய தலைகளையும் தோள்களையும் பரப்பிக்கொண்டு படுத்திருக்கிறதுபோலவும் உறங்கிக்கொண் டிருக்கிறவனும், ஆயிரந்தேவமாதைகள் வினையசயாய்ன்று சாமரைகள்போட, அவற்றால் உண்டாகிய காற்றினாலசைகலத்து கற்பகப்பூந்தேன் துளிக்கு நோறும் தன்மேனி வெதுமபச் சானகியாளை அடிக்கடிநினைத்து நினைத்துப பெருமூச்செறிந்து தேய்கின்றவனும், கைலாசபருவதத்தை யெடுத்தலங்கரித்த தோள் களின் பராக்கிரமத்திற்கும அந்தமில்லாமல் மன்மதபாணங்கள் மார்பிலே உருவிப் பாய்ந்ததனாலுண்டாகிய பச்சைப்புண்களை, அந்தடிக்கபங்களின் கொம்புகள் னைத்த பழந்தழுமபுகளின் மத்தியில் மந்தபலஉதிரங்கசிந்துகொண்டிருக்கக் காமாக்கினியை மூட்டுகின்ற நுரைத்திரைபபோலமந்தமாருதத்தினாலசைந்தாடிய கலனைச்சந்தனத்தின்மேல் தவழ்ந் சானகபாபோல மனமுதலிய அந்தக்கர ணங்கள்செல்லப பாடபடுகள் சூழ்ந்போன புன்னாபோலப பாழாயிருக்கின்ற இத யத்தானத்தை யுடையவனும, நினைத்தபோதெலாம திக்குகள் தோறுஞ்செ ன்று தேவர்களுடனேபோர்செய்து அவர்களுடைய பழமாகிய அமிர்தத்தைக் கைகளினால வாரிவாரி உண்போது அதனைக்குடித்தவிட்டுத் தலைகடலாய் களின்வழியே ஒழுகிபதுபோலத தாவள்யமாய்ப் பிரகாசிக்கும் கொற்றத்த களையுடையவனும, வெண்ணைபோகிய மலைபோலப்பட்டபயனம வெகு பொடி யாகப் புழுங்குகின்ற தன்தேகத்தில சமுதாயத்தினாலாகிய நீக்குமிழி போல வெபர்வுதோன்றிப் பூமாலைகளிலெயாய்த்துருகின்றவனைகள் கரிய, அந்தமாலைகளும் தீபம்படி பொருளற்ச விங்கினறவனும், இருபாபகனுக்குச் சீதாபிராட்டியாரிடத்தில எப்படி மனந்தெலைகின்றதோ அபடியே அவ ரிடத்தில தனனெஞ்சு செல்லுமபடி பொய்புறக்கங் கொண்டிருக்கின்றவனும், அச்சானகியார்மேலுண்டான ஆசையாகிய நீரவாகத்தை தனலையிராகிய பதார்த்தத்தைப் பெருமூச்சாகிய அமரிலிட்டு அனைக்கினறவனும, இடை விடாமல் சீதாபிராட்டியானைநினைத்துக்கொண்டிருப்பதனால அவரெதிர்ப்பட் டதுபோல உருவெளி காணுமபோதெலலாங் கலகலவென்று சிரிக்கின்றவ னும், விரகத்தினால் சரீரம் நடுங்குகின்றவனும, சனகர்குலவிளக்காவார்பள்ளி யறைக்குள்ளேவந்து புகுந்தானென்று மயிர்க்குச்சொறிகின்றவனும், சூரியனைப் போல விளங்குகின்ற நவரத்ன ஆரங்கள் புரளத்தக்கதாய் மும்மைப்புவனங் களையும்படைத்துக் காத்துச்சங்காரிக்கின்ற பிரமன்மாலுருத்திரனுகிய மும்மை ப்பெருந்தேவாகளுடைய ஆயுதங்களும் இந்திரனுடைய வச்சிராயுதமுமபட்டு முனைமடிந்துபோமபடி மிக்கபராக்கிரமத்தைப்பொருந்திய மார்பினையுடையவ

னும், சத்துருக்களாகிய அசுரர்கள் தன்கையிலேந்திய வேலாயுதத்திற்குப்பய
ந்துநடுங்கி ஓடிவந்துவணங்கும் பொழுதிலாம், அவர்களுடைய கிரீடங்கள்
பட்டுத் தேய்ந்துதழும்பேறிய பாதத்தையுடையவனுமாகிய பிரதாபலங்கேச
னைக்கண்டார். திருமால் முன்னளந்தகொண்ட வாமனவடிவத்தைப் பார்க்கி
லும் அறச்சிறிதாகிய வடிவத்தையுடைய அனுமான் "அவ்விராவணனுடைய
பத்துத்தலைகளையும் இருபது தோள்களையும் தெரியக்கண்ட மாத்திரத்தில்
அவருடைய நெஞ்செரிந்தது. கண்கள் காலாக்கினியைப்போலக் கோபாக்
கினியைச் சொரிந்தன. அண்டமானது மேலுங்கீழும் வெடித்தது. அப்
பொழுது அவர் உலகமாதாவை வருந்தினசெய்து கொண்டுவந்த இவன்மேல்
இக்கணமே எழுந்திருந்து இவனுடைய மணிமுடிகளைக் காவிரியை எற்றி
உடைத்திதிரிந்து எனதனுடைய பராக்கிரமத்தைக் காட்டாமற் போவேனா
யாகில், நான் இராகவனுக்கு அடிமையாகவேமாட்டேன். அவ்விராகவனுக்கு
ஊட்பட்டிருக்கின்றதினால விளையாடுகின்றா ? என் கண்ணிறுகுமாகிம் இவ்
வாக்கள் உயிரோடிருப்பானா ? இவனுடைய இருபது தோள்களையும் மடக்கி
அடக்கிப்பிடித்து ஒடித்துப் பத்துத்தலைகளையும் வெடி உடைத்து கிலத்தில்
உருட்டிக்கொன்று, இவ்விலங்கையையும் எரியாக்கிரியாடாகச்செய்கிறேன்.
அப்படிச்செய்தால் அப்பால் உலகு அழிந்திடுமன்று கினைத்து பற்களை நெற
நெறவென்று கடித்து இரண்டகைகளையும் நெருடியுடைபோதி பறக்கப் பிசைந்து
கொண்டே மிகவுங்கிரமாய் எழும்பினை. அவ்வகைபாகக் கோல்லுப்படி-
கோபித்து எழுந்திரு . அநுமான். சம்பாதியின்று திகந்து, இவ்வாணாகச்
செய்யும்படி இளவல் கடந்து ஊக்கினை செய்யவில்லையே; ஆகையால், ஒன்
னைச்செய்ய எத்தனையாயிரவது வெளிநடையாகச் செல்வது அறிவுடைமைக்
குத்தக்கதன்று. ஆகையால் இதுவிலை இதுவிடுவதும் நற்றமுடையதாகுமை
ன்று கோபத்தணிந்தனனா. இராவணனைக் கொலைத்துணிந்த அநுமான்
கொல்லாமல் விட்டிவிட்டதற்குக் காரணமென்னவென்றால் முடிபோழுது,
ஆலவிடத்தையுண்ட சிவபிரானுக்கு ஒப்பாகிய மகாவலிபுடையர்களானாலும்,
உலகத்தையெல்லாம் முழுக்கத்தக்க உபாயங் தெரிந்திருந்தாலும், யோக்கி
யர்கள் இப்படிச்செய்தால் இப்படி முடிபுன்று முன்னெயாராயாமல் யா
தொன்றையாவது செய்வார்களா ? ஆகையால் காலபாசத்துக்கனைகடவாம
லிருக்கின்ற சமுத்திரத்தைப்போல அவ்வலுவானும அதிக்கிரமிக்காமல் அட
க்கி யிருந்தாகக் காண்கின்றது. பின்னும் அவர் தன் இற்றைத்தினத்தில்
கொடிய பாபியாகிய அரக்கனைப்போர்செய்து கொல்லுவனேயாகில், கோத
ண்டதீட்சாகுருவாகிய சிராமபிரானுடைய தெவியாளைச் சிறைவைத்த திரி
லோகண்டகனாகிய இராவணனை ஒருருங்குவந்து கொன்றுவிட்டுப்போன
தென்று உலகத்தார் எளிதாகச் சொலவார்கள். எம்பெருமானுடையவில்
வீரத்திற்குரிய இகழ்ச்சி யுண்டாகுமென்று எண்ணி உக்கிரத்தணிந்து, என்தா
யாகிய சானகியார் இவனுடனைகடத்துகில்லைசெய்கின்ற மாதர்களுக்குள்ளே
சம்பந்தப்பட்டிருக்கவிலலை, இவனுடைய கீலைமையோ அற்பமாகிய காமத்தி
னல் மெலிந்திருக்கின்றதாகக் காணகின்றது. இதனல் அந்தக் கருணைநிதி

யாகிய சானகியார் கற்பழியாதிருக்கின்ரு ரென்பது எனக்கு நிச்சயமாகவே தோன்றுகின்றதென்று குறித்துக்கொண்டு, இனியிவ்விடத்திலிருந்து சும்மா ஆலோசித்துக் காலதாமதஞ் செய்வதனல் யாதொரு பயனுமில்லையென்று நினைத்து, அவ்விராவணனுடைய அரண்மனையைவிட்டு அப்புறம்போய்த் தேடுவதற்கு வேறிடமில்லாமையால், அங்குநின்று ஐயோ இந்தகாரமுழுமையும் தேடிப்பார்த்தும் சானகியாளைக்காணேனேயென்று மிகுந்த கிலேசத்துடனே பிரலாபிக்கத் தொடங்கினர்.

கோசிகக்கலிப்பா.

கொன்ரு ரேனைகற்பழியாக்குலமகளைக்கொடுந்தொழிலால்
இன்ரு ரேனவப்புறத்தேசேர்த்தாரேனிறையிறியேன்
ஒன்ரு னுமுணரகில்லேன்மீண்டினிப்போயென்னுனைக்கேன்
பொன்ரு தபொழுதெனகுக்கொடுந்துயரம் போகாதால். (க)

கண்டுவருமென்றிருக்குங்காகுத்தன்கவிகுலத்தோன்
கொண்டுவருமென்றிருகுகும்யானிழைத்தகோளிதுவால்
புண்டரிகநயநத்தான்பாலினியானபோவேரே
விண்டவரோடுடன்வீயாதியான்வாளாவிளிவேரே. (உ)

கண்ணியநாள்கழிந்துளவாற்கண்டிலமாற்கணங்குழையை
விண்ணைடதுமென்ரு ரையாண்டிருத்திவினைந்தயான்
எண்ணியதுமுடித்திலேன்யான்முடியாதிருப்பேரே
புண்ணியமென்றிரு பொருளெனனுழைநின்றுப்போயதால். (ங)

ஏழுநூரேரசினைசூழ்ந்தெயில்கிடந்திவ்விலங்கை
வாழுமாமன்னுயிர்யான்காணுதமற்றிஃதில்லை
ஊழியான்பெருந்தேவியொருத்தியையிழ்யான்காணேன்
ஆழிதாயிடராழியிடையேவீழ்ந்தழிவேரே. (ச)

வல்லரக்கன்றனைப்பற்றிவாயாறுகுருதிவரக்
கல்லரக்குங்கரதலத்தாற்காட்டென்றுகானைகேரே
எல்லரக்குமயினுதிவேலிராவணனுகிப்பூரும்
மெல்லரக்கினுருகிவிழவெந்தழலால்வேய்கேரே. (ஞ)

வானவரோமுதலோனைவினவுவனல்வல்லரக்கன்
தானெருத்தனுளனுகவுனைசெய்யுந்தருகிலரால்
ஏனையர்களெங்குனைப்பவொவ்வண்ணந்தரிக்கேரே
ஊனழியநீங்காதவுயிர்சுமந்தவுணர்வில்லேன். (சு)

எருவைக்குமுதலாயசம்பாதியிலங்கையிலத்
திருவைக்கண்டனனென்ரு னவனுனையுற்சிதைந்ததால்
கருவைக்குமெடுநகைக்கடலிடையேகனையாதென்
உருவைக்கொண்டின்னமுநானுளனுகியுழல்வேரே. (எ)

வடித்தாய்பூங்குழலாளைவானறியமண்ணறியப்
பிடித்தானிவ்வடலரக்கனெனுமாற்றம்பிழையாதால்
எடுத்தாழியிலங்கைதனையிருங்கடலினிட்டிவனை
முடித்தாலேயான்முடிதனன்றென்றுமொழிகின்ரு ன். (அ)

கற்பழியாத மிக்க பதிவிரதையாகிய உலகமாதாவை இப்பாவி கொன்று விட்டானே? அல்லது கொடியசெய்கையை யுடையவனைகையால் தின்று விட்டானே? மற்றெவ்வுலகத்திலாகிலும் வைத்திருக்கின்றானே? அவன் சிறைவைத்த இடத்தை நானெருவகையிலாயினும் அறியேன். இவ்விடத்திலிருந்து இனித்திரும்பிப்போய் யாதுசொல்லப்போகிறேன். இத்துயரம் கான் இறந்தாலன்றி என்னைவிட்டுநீங்காது. இரகுநாயகனே அநுமான் பிராட்டியாரைக்கண்டு வருவானென்று எண்ணியிருப்பனே. நமது மகாராசாவோ அவசியம் கொண்டுவருவானென்று நினைந்திருப்பார். நான்வந்து சாதித்தகாரியம் இதுதானே! இவ்வளவுசெய்யமாட்டாத நான் வெட்கமில்லாமல் புண்டரீகக் கண்ணையுடைய இரகுநாயகனிடத்திற்கு இனிப்போனைடனே போவேனே? இந்தச்சத்துருக்களை யுத்தஞ்செய்து எப்படியுங்கொன்று இவர்களுடனே கூட இறப்பேனேயல்லாமல் நான்மாத்திரம் தனியே யிறப்பேனே? நம்முடைய மகாராசாகுறித்த தவணைநாள் கழிந்துபோய்விட்டதே. இன்னமும் எம்பெருமாட்டியாகிய சிதையைக் காணவில்லையாகையால், நாமெல்லாம் மாண்டு போவோமென்று சொல்லித்துக்கித்த அங்கதன் சாம்பவந்தன் முதலாகிய வானரவீரர்கட்குத் தைரியஞ்சொல்லி இறக்கவேண்டியதில்லையென்று மகேந்திரமலையில் நிறுத்திவிட்டு நான் சம்பாதி சொன்னபிரகாரம் இலங்கையில் போய் வினாவாய்த் தெரிப்பாரத்து வருகிறேனென்று வந்தேனே. அப்படிவந்த நான் எண்ணியகாரியத்தை முடிக்கவில்லையே. ஆகையால் இறவாமலிருப்பேனே? புணர்பமென்று சொல்லப்பட்ட ஒருபொருளானது என்னிடத்தைவிட்டு நீங்கிப்போனதுபோல் தோன்றுகின்றது. எழுநூறுயோசனை விஸ்தீர்ணமாகிய இவ்விலங்காபுரியிலிருக்கின்ற சிவகோடிகளுக்குள்ளே நான் காணுதது வேறொன்றில்லை. சகல புவனகர்த்தாவாகிய இரகுநாயகனுடைய தேவியாரொருவர் மாத்திரமே பார்க்கக் கிடைக்கவில்லை. மகா சமுத்திரத்தைக்கடந்தும் இப்போது துக்கசமுத்திரத்தில் விழுந்தழிவேனே? இத்தோவியாகிய அரக்கனோடிழுத்திழுத்து வாயின்வழியே குபீர்குபீரென்று உதிரங் கொப்புளிக்க, பல்லுதக்கைத் துப்சஞ்செய்கின்ற என்னையாற் குத்திச் சீதையைக்காட்டடா வென்றுசொல்லி அவன் காண்பிக்க நான் கண்டுகொள்வேனே? அல்லது அந்த இராவணனும் இவ்வுருமி அக்கைப்போல உருகிக் கருகிப்போமபடி தொப்பையிட்டுக் கொளுத்துவேனே? அப்படி செய்யாமல் தேவர்கள் முதலானவர்களை அவன் சானகிபானை எவ்விடத்தில் சிறைவைத்திருக்கிறானென்று கேட்பேனேயானால் அவர்கள் அவனுக்குப்பயந்து வாய்விட்டுச் சொல்லமாட்டார்கள். அப்படியானால் மற்றவர்களைப்பிடிச்சொல்லுவார்கள். நானெவ்விதத்தில் அறிந்துகொள்ளுவேன். இன்னமும் பிராணனை விடத்துணியாமல் பூமிக்குச் சுமையாக இச்சரீரத்தைச் சுமந்துகொண்டிருக்கின்ற அறிவில்லாத நான் மூண்டு, கழுகுகளுக்கு அரசனுகிய சம்பாதி அவ்விராமபிரான்பத்தினியானை இராவணன்கொண்டுபோய் இலங்கையிலே சிறைவைக்கக் கண்டேனென்று சொன்னதினை அவனுடைய சொல்லும் பொய்த்துப்போய் விட்டதன்றே. இவ்விலங்காநகரத்தை எடுத்துக் கடலிலிட்டுக்

கனைத்துவிடாமல் தேகத்தை வைத்துக்கொண்டு அனுமானின்னமும் உயிரோடிருக்கிறானென்று சொல்லும்படி 'உழல்வேனை? சுவர்க்கலோகத்தாரும் பூலோகத்தாரும் அறியும்படி அரக்கரையிய படுபாவியானவன் சானகியானை எடுத்துக்கொண்டு வந்துவிட்டானெனகின்ற நிந்தனையோ தப்பாது. ஆகையால் இப்பட்டணத்தை எடுத்துக் கடலிலே விட்டெறிந்து அவனையுங் கொன்று அதன்பின்பு கானிறக்கின்றதே உத்தமமாகுமென்று நினைத்து, மீண்டும் என்னிலும, அதிலும சிறியதாகிய அணுவிலும், அணுவுக்கணுவிலும நீங்காமல எங்கும வியாபகமாயிருப்பதுமன்றி, தமமுடைய இதயத்திலுமிருக்கின்ற பரப்பிரமமாகிய இரகுநாயகனைப்போல எவருமேபோய்ப்பாத்து, அப்பால் ஒருபக்கத்திலே இனிதாகிய தேனையுண்டு வண்டுகள் ரீங்காரஞ்செய்கின்ற ஒரு திவ்வியமாகிய பூஞ்சோலையைக்கண்டனன.

ஊர்தேடுபடலம்
முற்றிற்று.

காட்சிப்படலம்.

கண்டு, இச்சோலையினிடத்தில் போய்த் தேடிபபார்ப்பேனுகில் என்னுடைய துக்கம் நீங்கும். இதிலுமு காணுமற்போனால அப்புறம் நினைக்கவேண்டியது ஒன்றுமிலலை. உடனே இவ்விலங்கையையும் நாசமாக்கி நானும் சிந்தமாய் மாண்டுபோவேனென்று நிச்சயித்துக்கொண்டு அனுமான் அச்சோலைக்குள்ளே போயருளினன். அப்பொழுது அவர்மேல் தேவர்கள்கூடிப் பூமழை பொழிந்து தோத்திரஞ்செய்து ஆனந்தபபட்டார்கள். அவர்கள் சரித்திரம் அப்படியிருக்க, முன்பு இராவணன் எடுத்துவந்து அசோகவனத்திலே சிறை வைத்த சானகியாள எப்படியிருந்தாளென்றால, கபோதாமாகிய அரக்கியர் அசோகர் தன்னை நெருங்க அந்தச்சோலையில் ஒருசஞ்சீவிமருந்து மலையினிடத்திலே முளைத்து ஒருநாளும மழையெனபதைக்காணமல் உலர்ந்திருப்பது போலச் சரீரமெலிந்து நித்திரைவந்ததென்று கணகளை மூடுதலும, இமைத்தலுமில்லாமல் வெயிலில் ஏற்றிய விளக்கைப்போலத் தேகத்தின்ஒளிமழுங்கி ஒருபெண்மான் புலிக்கூட்டத்தின் நடுவில் அகப்பட்டுக்கொண்டதுபோல விம்மிவெதும்பிப் பயந்து ஏங்கி இரங்கி இராமபிரானை நினைத்துத்தொழுது சோர்ந்து நடுங்கித் துக்கித்துப் பெருமூச்சுவிட்டு அழுதுகொண்டிருக்கிறதேயன்றி வேறொன்றுமறிகிலர். தங்கண் மழைக்கண்ணென்கின்ற காரணத்திற்கு ஒத்தபடி என்றும் இரண்டு விழிகளிலுமிருந்து மேகத்தானையைப்போல் ஒழுகாகின்ற பொன்னிறத்தையுடைய மலைகளில் ஒழுகுகின்ற அருவியைப்போல முலையின்வழியே ஆறுபோலப்பெருகி ஓடும்படி நீருண்ட மேகத்தைக்கண்டாலும் கருமையாகிய பொருள்களில் யாதொன்றைக்கண்டாலும் வேதனையாகாகிய இராமபிரானுடைய திருவுருவத்தை நினைத்துக்கொண்டு புலம்பி உலகத்தில அன்பினையுடைய நாயகன் நாயகிமாருள் ஒருவனையொருவர் பிரிவதனுலுண்டாகிய துன்பமே உருக்கொண்டதுபோல மிகுந்த பெருந்துயரத்தையடை-

வார் செம்பவளம்போலச்சிவந்த திருக்கரத்தையும் திருவடிகளையும் நிலமகத் திற்கு ஒப்பாகிய திருமேனியையுமுடைய இராமபிரானை நினைக்குந்தோறும் கண்கள்பொழிகின்ற நீரினால சற்று நனைகின்றதும் தேகத்தின் வெப்பத்தினல் சற்று உலர்கின்றதுமாகிய உடையையுடையவளாய்ப் பிரமதேவன் விதித்த விதியைக்கடந்து போவதோ வருத்தமென்று நினைபபார். சூரியவமிசத்திற்கு உரிய பெருமையையும அதற்குத் தமமாலுமோகத பழியையுமே நன்கு பகுத் தறிந்து நமமுடைய நாயகனுகிய இறைவா வருவார் வருவானென்கின்ற நிச் சயத்தினல் திசைகளையெலலாம் ஊடுருவப்பாபபார். பூமியினிடத்திலிருக் கின்ற ஒரு பூரணசநதிரனை முழுமையும விழுங்கிக் கக்குகின்ற கரும்பாம்பே போலத் தமமுகத்தினை இருபக்கத்தையுந்தழுவி ஒன்றுகதிரணடு சடைபற் றிய கூந்தலோடிருந்து, தாம முன்பு உடுத்த புகைபோல மெல்லிதாகிய ஒரு ஆடையையன்றி வேறொரு ஆடையைக் கணணினாலும் பாகமாட்டார். திருப்பாற்கடலிலே தோன்றிய தேவாமிதததினல் மன்மதன்செய்த சித்தி ரப்பதுமை புகைசூழப்பட்டிருப்பதுபோல நீராடாமல் மாசுபடிந்திருக்கின்ற திருமேனியையுடையவராய் இளையபெருமாளானவர் மானின்பினனேயெகிய சுவாமியைக் காணாமபோனதே, அவரகளுடனேரே கானவிலலையோவென்றும, கணடாலும இலலையென்பதைச்சுருத்திரதினல மந்திரியிருகினறதையும, இராவ ணன்னனனென யெடுத்துக்கொணடுவநது விட்டனதையும இராமலட்சுமணர்கள் அரிபாகள்போலிருக்கின்றனென்றும மனமகுலைநது புண்ணுறகி அப்புண்ணி னிடத்தில அனல நுழைநததுபோலப புலகமெழுபபட பெருமூச்செறிவார். எனனை இவ்வாகுல எடுத்துவருமபோதுபாதாத்த சடாயுவும இறந்துபோனார். மறறவாகள் எனபிராணநாயகருக்கு எபபடி எனனிலலைமையை அறியபபடுத்து வாகள். இச்சனமதிலல இருகுகாயகளுடைய திருமுகம கானகாணக்கிடை க்கின்றபோத அருமைபாயிருகின்றதெ யெனறு எணணிப பிரலாபிபபார். உடனே சித்தஙகலஙகுவார. மெலல மெலலும மிலலிபபார. நாரமுடைய தமபி யாகிய இளையபெருமாளை மதிபபாலல மகாபாவிபபேன கானெசென்னவார்த் தையைக்கெள்விபபட்டு, இவள் சிறிதாவது பிதறறிலலாதவளாயிருக்கினறு னென்று மனமெவறுத்து ஏனை காயகா எனனை நீக்கி ... டபோனா? அலலது பூர்வ சனமதநிலெசெய்த காரத்தினலெதான இப்படிவநதெனகதகாவென்று ஓயாமல் அழுக்கடி சொல்வதனல வாய் புலர்ந்து அறிவுசோரநது உயிர் பறதபபாள். இறைவன் நீராடி நித்தியகருமஙகளை முடிதததுகொணடு அழுது செய்யுமபோது, அவருக்குக் காய்கனி கிழங்குமுதலானவற்றை ஆர்பரிமாறு வாரோவென்றும, அவரிருக்குமிடத்தில யாரேனும விருந்துவநதபோது தம் மடியானாகிய என்னை நினைப்பாரோ வென்றும அங்ஙனை சோகிப்பார்; தாமி ருந்த இடத்தில் தமமைச் செல்லாதிதபோதும அவ்விடத்தைவிட்டு எழுந்தி ராதாராய், கான் அடைந்த மகிழ்வியாதிக்கு ஒருமருந்தும உணடாவென்று சொல்லித்நினைபபார். கொடிய வஞ்சனையையுடைய அரக்கர்கள் இத்தனை காள்வரைக்கும சிதையைச் சுமாரவைக்கமாட்டார்கள்; தின்றுவிடுவார்களா கையால், நாம செயதக்கது இனிபொன்றுமில்லையென்று தேடாமல் விட்டு

விட்டனரோ? தம்முடைய வமிசத்தாருக்கு இயற்கையாயிருக்கின்ற சாது குணத்தையெலலாம தம்முடையதாக மேற்கொண்டு, இந்த இராவணனுடனே எதிர்த்து யுத்தஞ்செய்வது என்னவதிசயமென்று கோபத்தைத் தணித்துக்கொண் டிருக்கின்றாரோ! நான் ஏதென்று நினைப்பேனென்று, இரவென்பதும் பகலென்பது மில்லாமல் என்றும் இவ்வண்ணமாகக் கவலைப் படுவார். பெற்ற தாய்மார்களும் தம்பிமாகளும் மீண்டும்வந்து, சுவாமியை அயோத்திக்கு அழைத்துக்கொணடு போய்விட்டார்களோ? அவர்கள் அழைத்தபோதும் சிற்றன்னை குறித்துச்சொன்ன பதினன்குவருடகாலமும், அரணிய வாசஞ்செய்து போவாரேயல்லாமல அதற்குமுன் போகமாட்டாரோ, பின்னையென்ன சம்பவித்தபோதாவென்று ஒருவரும படாததோய்படுவார். பஞ்சவடியில் யுத்தஞ்செய்த கரன் முதலானவாகளைப்போல, இப்போதும் அரக்காகள் யுத்தஞ்செய்யுமபடி கோர்தபோதாவென்றுவிமமி, அக்கரனமுதலானவர்கள் சக்கரவாத்தித் திருமகனுடனே எதிர்த்து இறந்ததைக்குறித்து முன்பு விசனப்பட்டதுபோல, இப்பொழுது இறைவனுடனே எதிர்த்த அரக்கர்களுடனும் அபபடியே இறபபார்களே என்று லோகமாதாவாகிய தாயமிக வருத்தயரப்படுவார். கைகேசியார் இராமபிரானே கோக்கி இராச்சியமோ பரதனுக்கு உரியதாய்விட்டது. இனியுனக்கு யாதொருசமபந்தமுமில்லையென்று சொனனபொழுது, எள்ளளவாவது வாடாமல முன்னிலும மூன்றுபங்கு விசேடமாய்ப் பிரகாசித்த முகாரவிந்தத்தையுடைய இறைவன் சாந்த குணத்தையே தியானஞ்செய்வார். இராச்சிய சாம்பிராச்சியத்தை நீ பெற்றுக்கொள்ளென்று தசரதமகாராசா சொனனபொழுதும, இச்சயபத்தையெல்லாம்விட்டு நீ வனத்திற்குபபோவென்று சிறியதாயா சொன்னபொழுதும, சித்திரத்திலெழுதிய மலாத சொதாமனைப டட்பதற்கு ஒப்பாயிருந்த லோகாரத்தியனுடைய திருமுகபபொலிவை மனதற்கில நினைப்பார. கங்கை யையணிந்த சடாமகுடத்தையுடைய சிவனுடையவிலல நிநிலையில் ஒருகணமாத்திரத்தில, இரண்டநுணடாய இற்றுவிழுமபடி செய்த டுயபராக்கிரமத்தை எண்ணுவிமலிவார. கரதூடணரியாகளுடனே பதிறலாயிரம் அரக்கப்படையை மூன்றுகாழினைக்குள்ளே இறக்குமபடிசெய்த வீரகோதணடத்தின் பிரதாபத்தைக்குறித்துதகோத்திரஞ்செய்து சரமவெதும்புவார். கங்காதியிலே ஓடமவிட்ட எளியவனுகிய குகனென்னும வேடனைப்பார்த்து, என்தம்பி உன்தம்பி, எனக்கு நீ நேராழன், உனக்கு இதசசினை மைத்துனியென்று இறைவன்சொல்லிய அங்கியோங்கியமாகிய சிநேகச்செய்கையை நினைத்து மதிமயங்குவார். கலிபாணம கடந்தசமயத்தில தன்பிதாவாகிய சனகம்காராசாகைகளைநீட்டிப் பாதபூசைசெய்ய எத்தனப்பட்டபோது, அதைதீக்ஷித் தர்ப்பைப்புல மேலைமேலவைத்துப பூசிக்கச்செய்த வைதிகநியமத்தை உன்னுவார். பரதன் மணிமுடிதரியாமல் சடைமுடிதரித்துக்கொண்டு வந்ததைக் குறித்துச் சித்திரகூடபர்வதத்தில் இரகுநாயகன் அங்கலாய்த்ததை நினைத்து இரக்கப்படுவார். சகல சம்பத்தையுந்துறந்து வனத்திற்குவருகின்றகாலத்தில் ஒருவைதிக பிராமணன்வந்து கோதானம்கேட்க அவனுக்கு அநேகம் பசுக்

களைத்தானஞ்செய்தும், திர்ப்தியடையாத அவனுடைய போராசையைக்கண்டு சுவாமி சிரித்ததை நினைத்தழுவார். அரசாகளை இருபத்தொருதலைமுறைவ ளைக்கும் கருவறுத்து அவர்களுடைய உதிரநீரிலே ஸ்நானஞ்செய்து, அதைக் கையினல் அள்ளிப் பிதிதருப்பணஞ் செய்த மழுவாயுதத்தையுடைய பரசுரா மன் கொடுத்தவில்லை வாங்கிவளைத்து, அதன் வழியாக அவருண்டைய தவத் தையும் பலத்தையும் கிரகித்துக்கொண்ட மிக்கவீரத்தை எண்ணி உயிரவாடு வார். இந்திரகுமாரன் காக்கைவடிவங்கொண்டுவந்து அபசாரப்பட அக்காகா சுரன்மேல் ஒரோபாணத்தைப் பிரயோகித்து அது அவனுடைய ஒருகண்ணைப் போக்கடித்த நாள்முதல உலகத்திலுள்ள மற்றகாக்கைகக் கூட்டங்களுக்கெல் லாம் ஒருகண்ணிலலாமற் போம்படிசெய்த பிரதாபத்தை விசேடமாய் நினைப் பார் விராதனென்னும் அரக்கன் தன்னையெடுத்துக் கொண்டபோது அவனைச் சங்கரித்து அவனுடைய அழிக்கப்படாத சாபத்தையும ஒழித்த அத்தராத குமாரனை நினைத்து நினைத்துத் தன்னுயிரைசாத்து அறிவழிந்து சரீரம்நடுங்கு வார். இப்படி துபரபபட்டுக்கொணடிருக்கின்ற அப்பிராட்டியாருடைய பக்கத் தில சமீபமாயிருக்கின்ற விபீடணருடைய குமாரத்தியும் திரிசடையென் னும் பெயரினையுடையவளும் பிராட்டியாவிடயத்தில் மிகுந்த அன்புள்ள வளும் மேலுநதிருந்திய இனியவார்த்தைபையுடையவளுமாகிய அவள் அநேக ரம் நித்தினைசெய்தாள். மற்றகொடிய செய்கையுடைய அரக்கியரும் கள்ளு ண்டமயக்கத்தினுலே அவ்வர்த்தராத்திரியிலே உறங்கினர்கள். அப்பொழுது சானகியானவர் சாட்சாது தாயைப்பாராக்கிலும அதிக வாற்சல்யத்தையுடைய அத்திரிசடையென்பவளை எழுப்பி அவளைப்பார்த்து அமமா எனக்கு மாசில் லாத குணத்தையுடைய சகோதரியைப் போலுமிருக்கின்ற திரிசடையே! ஒன்றுகேளென்று சொல்லத்தொடங்கினர். இன்றைத்தினம் எனக்கு நன்மை யே விளையுமோ? அல்லது நான்செய்த பாவத்தினுலே இன்னமும் தீமையே விளையுமோ? என்னவோ? ஒன்றும்தெரியவிலலை. புருவமுங்கண்ணும் வலது பக்கத் துடித்துக்கொண்டிருந்ததுபோய் இப்போது இடத்துபக்கந் துடிக்கின் றன. விசுவாமித்திரர் பினனே சுவாமி மிதிலைக்குவந்தபோது இப்படிதான் இடக்கண்ணும் புருவமுந்துடித்தன. இன்னமொன்று சொல்லமறந்தேன், கேளமமா என்பிராணநாயகர் அரசைத் தம்பிக்குக் கொடுத்துவிட்டு அரணி யத்திற்குப் புறப்படுகிறபொழுது வலதுபக்கந் துடித்தது; இப்பாவி என்னை யெடுக்கவந்த நாளிலும் அப்படியே வலந்துடித்தது; இப்பொழுது உண்டாகி யதைப்பார்த்தால் நன்மைபோலவே காண்கின்றது; இதுவனையிலும் என்னைப் பயப்படாததையென்று சொல்லிக்கொண்டு வந்ததையே, இந்தச்சகுனம் எதாய் முடியுமோ சொல்லென்று சானகியார்வருந்திக்கேட்க திரிசடை அம்மா! இம் மங்கலக்குறி நன்றுயிருக்கின்றது, நன்றுயிருக்கின்றதென்று அன்புடனே சொ ல்லிப் பின்னுஞ்சொல்லுகின்றுள். என்தாயாகிய சானகியாரே! நீர் எப்படியும் உம்முடைய காயகளைச்சேருவீர்; இதற்கு ஐயமேயில்லை; அல்லாமலும் உமது திருமேனி பசந்து புளகிக்கவும் திருவுள்ளங்குளிரவும் திருச்செவியில் இப்பொ ழுது தேனுண்டுகளித்து ஒருபொய்வண்டுவந்து மிருதுவாய் ரீங்காரஞ்செய்து

போயிற்று, அதையாராய்ந்து பார்த்தால் உம்முடைய பிராணபதமாயிருக்கின்ற காயகராகிய இரகுநாயகன் அனுப்புவித்த ஒருதூதனே உமக்கெதிரே வரக் காண்பீர், மேலும் பாதகர்களாகிய இவ்வரக்கர்களுக்கு ஆபத்துவருவது சத்தியம், இன்னமும் என்வாய் மொழியைக்கேளுமென்று திரிசடை சொல்லுகின்றாள். நீர் நித்திரை செய்யாததிறற் கனவுகாணவில்லை. நான்கண்டகனவைச் சொல்லுகிறேன். கேளும் என்கனவு அவசியந் தவறுமற் பலிதமாகும், எங்கள் பெரிய தகப்பனுகிய இராவணன் பத்துத்தலைகளிலேயும எண்ணெயிட்டுக் கொண்டு கழுதைகளேயும் பேய்களேயுங் கட்டிய தேரின்மேலேறிச் சிவந்த ஆடையைத்தரித்துக்கொண்டு தென்முகமாய்ப்போனான். கூட அவன் பிள்ளைகளும் பந்துசனங்களும் மற்றும் சகலமானவர்களும அத்திசைனயை நோக்கிப்போயினர். அவர்களெல்லாம் திரும்பிவரவில்லை. அதுவுமல்லாமல், இராவணனுடைய ஓமாக்கினியும் அணைந்துபோய்விட்டது. வானத்திலிருந்து வெள்ளிடியிடித்து விழுந்தது. மாளிகைகள் அங்கங்கேவெடித்தன, மதயானை மதம்வற்றிப்போய்ப் பெண்யானைகளுக்கு மதமுண்டாயிற்று. பேரிகைகளெல்லாம் முழங்குகிறவர்களிலலாமல இடிபோலத் தாமேமுழங்கின, கட்சத்திரங்களுதிர்ந்தன, பகலென்பதில்லாமல் இரவிலேயே நிலைபெற்றிருந்தது. அரக்கர்கள் மார்பில்தரித்திருக்கின்ற கற்பகப்பூமாலைகளெல்லாம தீநதுபுலால் நாற்றம் வீசிக்கொண்டிருந்தன. இவ்விலங்கையும இதைச்சூழ்ந்த மதிலுஞ்சுழன்றன; திக்குகளெல்லாம் நெருப்புப் பற்றிக்கொணடெரிந்தன. சிங்காரத்தோட்டங்களும் பூஞ்சோலைகளுமகரிந்தன, பட்டணமுழுதும வெறுவெளியாய்விட்டது. மங்கல கலசங்களெலலாமவிரிந்து சிதறின, விளக்குகளேயெல்லாம் இருள்விழுங்கியது தோரணகம்பங்கள் இரண்டு துண்டாகமுறிந்தன;பட்டத்துயானையின் கொம்பு முறிந்தன, வேதமந்திரங்களைச்சொலலி முற்றத்துறந்தமுனிவர்களால் தாபிக்கப்பட்ட பூரணகும்பங்களி லிருக்கினற தீர்த்தம் கள்ளுபோலாகுவது போலப் பொங்கியது; சந்திரனைப் பிளந்துகொணடு கட்சத்திரம புறபபட்டது, மேகம் உதிரமழைபொழிந்தது. தண்டு சூலம வாள் விலமுதலாகிய ஆயுதங்கள் வீரர்கள் கையிலெடுத்து யுத்தஞ்செய்யாமல தடக்குத்தாமே ஒன்றுகொன்று போர்செய்தன. இப்பட்டணத்து மாதர்களுடைய தாலிகள் ஒருவரால் வாங்கப்படாமல் தாமே அற்று அவரவர்கள் முலைகளின்மேல் விழுந்தன; இன்னமொரு அதிசயஞ் சொல்லுகிறேன் கேளும, இப்பட்டணத்து அரசன் பெண்சாதியும் மயன்மகளுமாகிய மண்டோதரியின் கூந்தல் பின்புறத்தில் அவிழ்ந்து விழுந்தது, அதன்மேல் அக்கினிபட்டுவெந்தது,இது அவளுக்குத் தயரமவந்து நேருமென்பதற்கு ஏதுவலலவா? மற்றுமோன்கணட விபரீதகனாக்களை என்ன சொல்வேன்! மிக்கபலமுள்ள இரண்டு சிங்கம் அநேகம் புலிக்கூட்டங்களைக் கண்டு அவைகளுடனே கூடிக்கொண்டுவந்து அளவிறந்த யானைகளிருக்கின்ற அரணியத்தில் புகுந்து முழுதும் வளைந்துகொண்டு நெருக்கிப் போர்செய்து சின்னபின்னங்களாகக்கொன்று அவ்யானைப்பிணங்களை மலைமலையாகக்குவித்துத் திரும்பிப்போகும்பொழுது ஒருமயிலையுங் கூட்டிக்கொண்டு போயின; உம்மைப்போலவே ஒருமாது சுவர்ணத்தாம்பாளத்திலே ஆயிரந் திருவிளக்

சுனையுடைய ஒருதோர்விளக்கை யேற்றிவைத்து அதையோதிக்கொண்டு இரா வணன் வீட்டிலிருந்து புறப்பட்டு என்பீதாவாகிய விபீடணன் வீட்டிலேவந்து புகுந்தாள் இவ்வகையாக நான் சொப்பனங்கண்டு கொண்டேயிருக்கும்போது தான் என்னை நீரெழுப்பினீர். மேலும் என்னென்ன காணுமோ முடியக்காண வில்லையென்று சொன்னாள். அதுகேட்டுச் சானகியார் திரிசடைக்குக் கை கூப்பி வந்தனஞ்செய்து அமமா! அச்சொப்பனத்தின் குறியை இன்னமும் அறியவேண்டுமெ, நீ சிக்கிரமாய் நித்திரைசெய்யென்று சொன்னார். அப்படியிருக்கின்ற சமயத்தில இராமதூதனுகிய அனுமான் அச்சோலையில் பிராட்டியார் எழுந்தருளியிருக்கிறதைக் கண்டார். அததருணத்தில முன்பு உறங்கிக்கிடந்த அரக்கியாகளெலலாம விழித்துக்கொண்டு கெட்டகிதகினைவந்து நம்மைக்கெடுத்தென்று எவ்விடங்களிலுமிருந்து எழுந்து அதட்டி வேல மழு எழு சூல முதலாகிய ஆயுதங்களைக் கையிலெடுத்துகொணடு புறப்பட்டார்கள்; அவர் கள் எபபடிப்பட்டவாகளென்றால வயிறறிலே வாயிருக்கின்றவாகளும நெற்றி யில கணணிருக்கின்றவாகளும கோர திருட்டியுடையவர்களும் பல்லுக்குப் பல்லுமேல யாளிகள் போல்கள் பேய்கள் முதலானவைகளும உறங்குப்படி மலைக்குகைக்கு ஒபபாகிய வாயுணடானவாகளும் பத்துக்கையும் ஒருதலையு முடையவாகளும இருபதுதலையும இரணடுகையு முடையவாகளும மிக்கபயங் கரமாகிய உருவத்தையுடையவர்களும விகடமாகிய வேடத்தையுடையவர் களும உடமபெலலாம பர்வதங்கள்போலப பருதத பலபலமுலைகள் தொங்கு கினறவர்களும ஒற்றைமுலையை யுடையவாகளும சூலம வாள் சக்கரம் அங்கு சம மதாமரம கபபரம வெலமுதலாகிய ஆயுதங்களைக் கையில்தரித்துக் கொணடிருக்கின்றவாகளும காளகூடவிடமெ வடிவுகொணடதுபோலக் கறுத் திருக்கினற வாகளும எபபடிபபடடதுபோலக் கறுத்த பாக்கியமுள்ளவர்களும் யானை முகம குதிரைமுகம புலிமுகம கரடிமுகம யாளிமுகம பேய்முகம் சிங்கமுகம் கரிமுகம காய்முகங்களுணடானவாகளும முதுகிலெலுமுகமிருகின்றவர்களும் மூன்று கணணுள்ளவாகளும வாயிலெ புகைபெழும்புகின்றவர்களும் எண்ணு க்கடங்காத கூட்டமானவாகளும கணணுக்கடங்காத தோற்றத்தையுடைய வர்களும் க்ரலன் பலவுருவம்கொணடு பெணணென்று பெயர்வைத்துக்கொ ணடு திரிவதுபோ லிருக்கினறவர்களுமாகிய அவ்வரக்கமாதர்களெல்லாம் எழு ந்து இராமபிரானுடைய திருத்தேவியாரைச் சூறறிகொணடார்கள்; அப் போது அச் சானகியாரவர் ஒன்றுமபெசாமல் அவாகள் முகத்தைப்பார்த் துப் படபதவாயிருக்க சிராமதூதனுகிய திருவடி ஒரு விருட்சத்தின்மேலறி அதன்கிளையில மறைவாயிருந்து பாாக்கத் தலைபபட்டார் அரக்கியர்கள் கையி லே ஆயுதமபிடித்தவர்களாய் நிதானமாய் நீங்கிப் பலமபோ கூடியிருக்கின்றார்கள். இவர்களிப்படி கூடியிருப்பதற்கு ஏதுவென்னவென்று உற்றுப்பார்த்துக் கறு த்த மேகக்கூட்டத்தின்மத்தியிற் பிரகாசிக்கின்ற மின்னற்கொடிபோலக் கரிய நிறத்தையுடைய அவ்வரக்காகளின் கடவில உலகமுதல்வராகிய இரகுநாயக னுடைய தேவியாளைக்கண்டு அரக்கிமாகள் சுற்றிலுங் காவலாயிருக்க அவர் களுக்கு மத்தியில் இருக்கின்றவா தாமரைதாபிராட்டியார் போலக்காணின்றது.

இவரோ தடாகத்தின் கடவில் இருக்கின்ற அன்னப்பேடுபோலத் தமது கண் ணீல்நின்றும் ஒழுகுகின்ற சலப்பிரவாகத்தின் மத்தியிலிருக்கின்றார். இத்தேவி யாளைத் தேடிவந்தோன் இப்பொழுதுதான் கண்டேன், ஆகையால் தர்மம் பொய்த்துப்போய் விட்டதென்று நினைத்தேனே, அது அப்படியாகவில்லை. காணும் இனி இறக்கமாட்டேனென்று சொல்லி ஆனந்தமாகிய தேனையுண்டு உடல்பரவசமாய்த் தெரியாமல் இராமநாம சங்கீர்த்தனம் பாடிக்கொண்டு கூத்தாடினர். அங்கும் இங்குமாய் ஓடினர். எங்கும் உலாவினர் இகழப்படாத இவருடைய திவ்வியரூப சவுந்தரியலக்ஷணங்கள் எங்கள் ஐயனுகிய இராமசந் திரன்சொன்ன அடையாளத்திற்குச்சிலதாவது வித்தியாசப்பட்டிருக்கவில்லை. கள்ளச்செய்கையையுடைய இராவணனுனவன் இராகவனுடைய பிராணனு கிய இவனை யொளித்துவைத்தது எதற்காகவென்றால திரிலோகத்தாருக்கும் மகத்தாகிய அக்கிரமத்தைச்செய்கின்ற பாவியாகிய அவன் தன்னுயிரை யிழப தற்கே இதற்குமைபமொன்றுமிலலை; அச்சாமபிரான் ஸ்ரீவிஷ்ணுவே இந்தச் சீதாபிராட்டியார் தாமரைப புஷ்பாசனத்தில எழுந்தருளியிருக்கின்ற ஸ்ரீபகா லட்சுமியே அழுக்கடைந்திருக்கின்ற இத்திருமேனிப்போலவும் சூரியனுக்கு எதிரே உதயமாகிய சந்திரனைப்போலவும தேசுமாறியிருக்கின்ற இவருடைய கற்புக்கும் மனவுறுதிக்கும் பின்னமுண்டாகவில்லை;எங்கையாவது தர்மத்திற்கு அழிவுண்டா சிராமசந்திரனுடைய திருத்தோள்களைத்தான் சொலலவேனு! பஞ் விரதாஸ்திரீகளுக்கு முகதிலகமாகிய இந்த உத்தமியினுடைய குணாதிசயத் தையே சொல்லவேனு! அந்தச் சனகமகாராசனுடைய வமிசத்தின பெருமை யைத்தான் சொல்லவேனு! நான் எதைத்தான் சொல்லவேனென்று மிகவும் புக ழ்ந்து சுந்தோடித்துத்தேவர்களும் பிழைசெய்பவில்லைமுற்றத்துறந்தமுனிவர் களும்பிழைசெய்யவில்லை, தருமத்திற்குங்குறைவில்லை,இனிநான்செய்கிறதற்கு அருமையாகியகாரியம்என்னஇருக்கின்றது?எமபிரானுகிய இராமபிரானுக்குச் செய்கிறனன்னடிமைத்தொழிலும்சிறிதும் பிழைபடாவில்லை இந்த லோகநாயகி யாருடைய கற்பானது சிறிதுசிதையுமானால சுவாமிக்குக் கோபம்தோன் றும்; அதனல் சதுர்த்தசபுவனங்களுக்கும் நாசம்வருமென்று நினைத்தேனே அப்படிக் கற்புச்சிதையாமையால் இனி ஒரு சஞ்சலமுமில்லாமலும் உலகங்க ளெல்லாம் பல்லூழிகாலம்வாழ்ந்திருக்கும் கல்லகுடியிற்பிறந்து இல்லறத்திற்கு உரிய நற்குண நற்செய்கைகளையுடைய பதிவிரதாஸ்திரீகள் தங்கள்மனத்தைப் பலவிடங்களிலும் செல்லவொட்டாமல் நிறுத்துகின்ற தபோமகிமைக்கு முன் பஞ்சாக்கினி மத்தியிலிருந்து பஞ்சேந்திய நிக்கிரகஞ்செய்து அன்னபானாதி களைநீக்கி அகோரதபஞ்செய்கின்றவர்களுடையதபோமகிமைதான் எவ்வளவு? இப்பாக்கியவதி பூமியில்தோன்றினதால குடிப்பிறப்பும் அதனையுடைய பெண் பிறப்பும் அதற்குரிய நாணமுதலானவைகளும் தவஞ்செய்து சிறப்பினை அடை ந்தனை. இவ்விடத்தில் இவர் இப்படிப்பட்டமகத்தாகிய அருந்தவசு செய்துகொ ண்டிருக்கின்ற அதிசயங்களையெல்லாம் ஸ்ரீரகுகுலோத்தமர் தம்முடையதிருக் கண்களால் காண்கிறதற்குத்தவஞ்செய்யாமற்போனரோ! இங்குள்ள அரக்கியர் களெல்லாம் கிரமந்தப்பிநடக்கின்றவர்களாயிருக்கின்றார்கள். கல்லவேளை

இந்தப்பிராட்டியா ரொருவரேயல்லாமல் வேறொருவரில்லை; உலககாரணியா கிய சானகியாளைத் தர்மமே காத்ததோ? அல்லது தசமுகனுடைய தீவினை யே காத்ததோ? அல்லது இந்தச் சீதாபிராட்டியாருடைய மேன்மையாகிய கற்பே காத்ததோ? அம்மம்மா! இது அருமை அருமை! எவர்தான் இதைச் சகிப்பார்கள், ஒருவகையிலாவது என்னைப்போ லொத்தவர்களாற் சொல்லத் தக்கதாவென்று இப்படியெல்லாம் நினைத்து நினைத்து அதிக சந்தோடசித்த ராகி ஆஞ்சநேயர் அம்மரக்கிளையிலே தானே தங்கிப்பார்த்துக் கொண்டிருந் தார்; அந்தச்சமயத்திலே இராவணன் அச்சோலைக்கு வரும்படிப் புறப்பட் டான்.

காட்சிப்படலம்

முற்றிற்று.

நிந்தனைப்படலம்.

சிகரங்களையுடைய மலைகளெல்லாம் ஓரிடத்திற் சேர்ந்திருப்பதுபோல, வச்சிரத்தாற் செய்யப்பட்ட மகாகுண்டலங்க ளணைந்துகொண்டிருக்கின்ற இருபது தோள்களும இருப்பக்கத்திலும் பிரகாசிக்கவும், மாணிக்கமயமாகிய மகுடகாதியான து அவ்விராத்திரியைப் பகலாகவும், ஊர்வசி உடைவா னோதிக்கொண்டுவரவும, மேனகை தாம்பூலமடித்துக்கொண்டுவரவும், திலோ த்தமை பாதாட்சை தாங்கிக்கொண்டுவரவும, அரமடை காளாஞ்சி யேந்திவர வும், பற்றும எட்டுக்கோடி மாதாகள் கைகளில நெய்விளக்கு ஏத்துவரவும். யட்சமாதர்கள் தேவமாதாகள் விஞ்சையமாதர்கள் பன்னகமாதாகள், பெ ரியமலையைச் சூழ்ந்துவருகின்ற மயிற்கூட்டங்கள்போலப் புடைசூழ்ந்துவா வும, பச்சைக்கர்ப்பூரம கத்தூரி முதலாகிய வாசனைத்திரவியங்கள் சோக்கப் பட்ட கலவைச்சந்தனம் கமகமவென்று பரிமளிக்கவும, தேகத்திலணிந்திருக் கின்ற பலவகை இரத்தினாபரணங்களின் சோதியான து திருளைவிழுங்கிப் பிர காசிக்கவும், கால்களிலதரித்த சிலம்புகள் முழங்கிக்கிணகிணிகள் ஒலிக்க மேகலாபரணம் சப்திக்க அனேகமாதர்கள் அனைக்கூட்டங்கள் கடப்பது போலநடந்து, மிருதுவாகிய பலவகைமொழிகளைவசனித்துக்கொண்டுவரவும், நீலமலையில் ஒழுகாகின்ற வெண்மையாகிய அருவியாறுபோலத் தனது மார்பி னிருபுறத்திலும் வெள்ளைப்பட்டு உத்தரீயம தொங்கவும, சாலேகசுவரனாகிய ஸ்ரீமந் நாராயணனுடைய திருமார்பைப்போல அமமார்பினிடத்தில் பொன் னாரம் பிரகாசிக்கவும், மேகத்தின் மத்தியில்தோன்றிய மின்னலைப்போல முப் புரிநூல் விளங்கவும், இருபது தோள்களிலும் அணிந்த வாகுவலயங்களும், கேயூரங்களும், இராக்காலத்தில் ஆகாயத்தில் உதயமாகிய நட்சத்திரங்கள் நவக்கிரகங்களைப்போல மின்னவும், கால்களில் அணிந்திருக்கின்றவீரகண்டை களின் ஓசையான து பூரிமுழுதும பரவவும், வக்கிரதந்தங்கள் அர்த்தசந்திர னைப்போல இளநிலாவெறிக்கின்ற முகங்கள் இருளைப்பார்க்கிலும் கருமை யாய்ப் பிரகாசிக்கவும், இரத்தின கசிதமாகிய வீரசங்கிலியும் முத்காரமும்

யுகாந்தகாலத்திலே மகாமேருவில் தொத்திக்கொண்டிருக்கின்ற பல நட்சத்திரங்களும்போல மார்பில் அணிந்த சுவர்ண கவசத்தின்மேல் பிரகாசிக்கவும், சிரசில்தாங்கிய பத்துக்கீரீடங்களும் உதயகிரியின் சிகரங்களில் பன்னிரண்டு சூரியர்களில் இருவனைநீக்கிப் பத்துச்சூரியர்கள்உதயமானதுபோலச் சொலிக்கவும் பெண்கள் பாடுகின்ற பாட்டினுக்கு ஒத்திருக்க புள்ளாங்குழல் சில்லரி தாளம் மிருதங்கம் முதலாகிய பலவகை வாத்தியங்களும், விடத்தைக்கக்குகின்ற நாகங்களும் அமிர்தத்தைக் கக்குமபடி ஆகாசம் பூமியெங்கும் அளாவி முழங்கவும், தேவரம்பைகள் மேகம் வரக்கண்டு நடனமசெய்கின்ற மயில்களைப்போல எதிரே நாட்டியஞ்செய்துகொண்டு வரவும, புட்பத்தால் அலங்கரிக்கப்பட்ட விதானமும், சாமரைகளும், தவளக்குடைகளும், ஆலவட்டங்களும், துசங்களும், மகரதோரணங்களும், மயிற்றும்பைகளும, மாதர்கள் தாங்கிக்கொண்டு கூட நடந்துவரவும், அநதக்காலத்தில மன்மதன்பிரயோகித்த அக்கினிசொலிக்கின்ற பாணங்கள்தொளைத்த வெவ்விதாகிய புணணில வேலானது நுழைந்ததுபோலச் சந்திரகிரணங்கள் பாயவும், இளந்தென்றற் காற்றுனது புட்பங்கள்தோறும்போய் வாரிக்கொணடுவருது சிந்துகின்ற தேன் துளிகள் உருக்கிய செம்புபோலத்தெறிக்கவும், மாதாகளுடைய கடைக்கண் பார்வைகள் மார்பினிடத்திலும் தோளினிடத்திலுமவருது பதியவும், பூமாலைகளையும் கந்தத்தையும் கூட்டுவர்க்கத்தையும பூஷணங்களையும விலையுயர்ந்த மிருதுவாகிய ஆடைகளையும், இரத்தினங்களையும மற்றுமமவேண்டிய எல்லாப் பொருள்களையும் கற்பகவிருட்சமும் சங்கநிதி பத்மநிதிகளும பின்தொடர்ந்து கொடுத்துக்கொண்டு வரவும, பாற்கடலின வெண்மையாகிய அலைகள்கறுத்த பர்வதத்தின்மேல் தாவிவெண்சாமரை யிரட்டவும, கருங்கடலில் இருந்து உதித்து உயர எழுந்த களங்கமில்லாத பூரண சந்திரனைப்போலத் தவள பூச் சக்கரக்குடையானது முடியின்மேல பிரகாசிக்கவும, கடக்க அடிபெயர்த்து வைக்குந்தோறும் அவ்விலங்கையாகிய பர்வதமானது கீழுழுந்திச சமுத்திரத்தின் அலைகள் அதன்மேலாக ரான்று திக்கிலும் எழும்பித்தவழுவும், பூமியைத் தாங்குகின்ற ஆதிசேடனும தலைமாறித்தாங்கவும, பூமிதவி முதுகு கொளிக்கவும், கேடகமம மழு எழு சூலம அங்குசம கபாலம்ப வாள் வில் வச்சிர முதலாகியஎல்லாவாயுதத்தையும் தாடனைபடபாக்கிலும் இரணபூமிக் கபலத்தையும் கோரத்தையுமுடைய அரக்கபாதர்கள் தாங்கிக்கொணடு வருவதையும், தளிர் இலை அருபட்டு மலர் காய் பழம கிளை கொம்பு வேர் முதலானவைகளும், இரத்தினங்களினுலும பொன்னினுலும் சமைந்திருக்கின்ற விருட்சங்களையுடைய அந்தச்சோலையானது, திக்குகள்தோறும்கரிந்துதியும்படி தன் சுவாசமானது அக்கினியையக் கக்கிக்கொண்டு எழுந்து முன்னேபாயவும், சானகிபபிராட்டியார் எழுந்தருளியிருக்கின்ற திசையைத் தான் அறிந்திருந்தும் மனம தைரியத்துத் திசைதெரியாமல், பலதலைகளையுடைய பாம்பைப்போலப் பலவிடங்களிலும உழன்று திரிந்துகொணடு அசோகமரத்தின்கிளையில் தொத்திக்கொண்டிருந்தின்ற அஞ்சனை குமாரனுகிய அநுமான் செவ்வையாகப்பார்த்து, குணமும் செயலும் இனிமேல் விளையும் விளைவும் இவ்விடத்தில்

தெரிய்வருமென்று எண்ணி, ஸ்ரீராமசந்திரனுடைய திருநாமத்தைச்சொல்லி க்கொண்டு மறைவாயிருந்தனன். முன்பு அவ்வாறுகவந்த இராவணன் அந்தச் சோலையில்வந்து தன்னுடனே கூடவந்த அரமகளிர்களையும் மற்றுமுள்ள பல வகைமாதர்களையும், வெளியிலேபோய் இருக்கச்சொலலி ஆக்ஞைசெய்து தானொருவனுமாய், தனியேயிருக்கின்ற பெண்விளக்காகிய அந்த லோகமாதாவின் சமீபத்தில்வந்தான். அப்போது பிராட்டியார அவனைக்கண்டு உயிர் நீங்கினவர்போல நடுநடுங்கி, விழுங்கும்படிவந்த புகைகின்ற கண்களையுடைய பெரும்புலியைக்கண்ட இளமையாகிய பெண்மான்போலப்பயந்து திடுக்கிட்டுக் கலைந்தார். இவ்வண்ணமாக மனங்கூசி உயிர்நிலை கலங்கிய பிராட்டியாரையும அவர்மேற்கொண்ட ஆசையினல் பிராணசங்கடப்படுகின்ற மகாபாதகனாகிய இராவணனையும, திருவடி தமழுடைய இரண்டுகண்களும சானகியைப் பார்த்து, மனம் ஊசலாடிக்கொண்டிருந்த நிலைமையறிந்து மங்களாசாசனஞ் செய்வாராயினர.

கலிவிருத்தம்.

வாழி சானகி வாழியிராகவன
வாழி நான்மறை வாழிய ரந்தணர
வாழி கன்றை மென்றுற வாழ்த்தினர
வாழி தோறும் புதிதுறுஞ் சாதகியான்.

சனகமகாராசாவின் புத்திரியாராகிய இச்சீதாபிராட்டியார் வாழக்கடவர. இவருடைய நாயகராகியும இராகுருலதிலகராகியும் விளங்காநின்ற அவ்விராமபிரானும வாழக்கடவர. அவருடைய நாமரூபகுணங்களைச் சொல்லுகின்ற சதுர்வேதமும வாழக்கடவன. அவ்வேததனை அத்தியயனஞ்செய்கின்ற பிராமணோத்தமர்களும வாழக்கடவர்கள். அவர்களிடத்தில நிலைபெற்றிருக்கின்ற நாமமும வாழக்கடவதென்று சொலலிக கற்பங்கள்தோறும் அழியாதகோத்தினையையுடைய அநுமான் வாழ்த்தினவராயிருக்க, இராவணன் பிராட்டியாரைப்பார்த்து ஒருவாத்தை சொல்லுகிறான. குயிலுக்குசமானமாகிய இனிய குரலினையுடைய பெண்கள் சிகாமணி! பெண்கள் பூடணம! பெண்கட்கரசி! பெண்கள் பாக்கியம! எங்கள் குலதெய்வமே! என் பிராணதாரமாகிய சிதா! என்று அழைத்துக்கொலலுகின்ற விடத்தை அமிர்தமென்று நினைத்து உண்கின்றவனைபபோல நீ எப்போழுது என்னிடத்திற் கருணைசெய்வதென்றான்? சிவன்முதலானவர்களுக்கும அஞ்சாத திடசித்தத்தையுடைய இராவணன் ஆசையும நாணமும் தன்னைப்பிடிக்கும்படி, கூசிக்கூசிக்கொண்டு பின்னுஞ் சொல்லுகின்றான். இன்றைக்கும நாளையென்றும் வீணாக நாள் போய்விடுகின்றதே? நீ என்னைக் கொன்றபின்னர்தான் கூடவிருக்கின்றையோ? என்னுடைய அளவிலலாத பாக்கியமாகியஇராசரிக சாம்பிராச்சியத்திற்குத் திலகமாயிருக்கின்றவளே! உன்பொருட்டு மன்மதன் என்னிடத்திற் செய்கின்ற கலகத்தை நீ பார்ப்பதுமல்லாமல், அவனுக்கு நான் தோற்கின்றேன் என்னுடைய மிக்க ஐசுவரியத்தை இகழ்ந்துவிடுகின்றையே? உன்னையகனையிய இராமன் இறந்துபோகாமல் பிழைபபானை? அல்லவென்று இறவாதிருந்

தாலும் காட்டைக்கடந்து அயோத்தியிற்போய்ச்சேர்ந்து வாழ்வதோ பிரயாசம். அப்படி வாழ்ந்தபோதும் அது சொற்பமாகிய மானுடர்வாழ்வேயல்லாமல் வேறன்றே. அவ்வாழ்வுதானே நீ வாழநினைக்கின்றது. தவஞ்செய்கின்றவர்களும் அதிநுட்பமாகிய சாத்திரப்பொருள்களைத் தெளிந்தவர்களும் பெறும் பிரயோசனம் என்னவென்றால் என்னுடைய வார்த்தையைச் சிரசாகவகிக்கின்ற பிரமன்முதலான தேவர்களுடனே கூடியிருக்கின்ற இவ்பந்தானே. உனக்குப் பாதாதிகேசபரியந்தமாகிய அவயவங்களையெல்லாம் அழகாகத் தெரிந்துபடைத்த பிரமன், இடையும் கிருபையும் இல்லாமற்போம்படி செய்துவிட்டான். இளமைப்பருவமானது காளுக்குநாளென்ன விர்த்தியாகின்றதா? கொஞ்சங்கொஞ்சமாய் மாண்டுபோய்விடுகின்றதே. அப்படிப்பட்ட அருமையாகிய இளமை வேண்டியசுக மனுபவிக்கத்தக்க காலத்தில் வீணைப்போகுமானுல, அப்புறம் மனைபிட்டத்தை எப்பொழுதுதான் முடிக்க இருக்கின்றையோ? இளங்கிளிக்கு நிகராகிய சனகராச புத்திரியே! சிறந்த பெண்தன்மையும், உயர்ந்த வடிவிக்கணமும், மாறுபடாத திடச்சித்தமும் உண்டாயிருக்கின்ற உனக்குத் தாட்சணியமாத்திரம் இலலாமற்போனதென்ன? என் பிராணன்போனுலும் போகட்டும். உன்முகமாத்திரம கோணுமலிருக்கவேண்டும. அப்படியல்லாமல் நீ முகங்கோணினுல் குணம் அழகு காமமுதலானவைகளும் தங்கிநிற்பதற்கு இனியார் இருப்பிடமாவார்கள்? உன்கணவன் என்னைக் கொல்லும்பொழுதுநான் அலறிக் கூவுங்குரலைக்கேட்கவும் நான் இறந்துகிடப்பதைப்பார்க்கவு மிருக்கின்றையோ? வுழ்வினை எளிதாகவூட்டுகின்ற தர்மப்பயனுகிய கன்மையை இப்படி இகழ்ந்து தள்ளிவிடுகின்றவர்களை நானெங்கும் பார்க்கவில்லை. நீ ஒருத்தி என்னிடத்தில்வந்ததனுல் எனக்கு மகத்தாகிய சாமபிராச்சியமானது, மேன்மேலும் உண்டாயிற்றென்கின்ற கீர்த்தியைவிட்டு இன்னவளாலே, இன்னுன் மாண்டுபோய்ப் பாக்கியமும் இழந்துபோனுனென்கிற அபகீர்த்தியைச் சடுபாதித்துக்கொள்கின்றையோ? தேவர்களும் அவர்களுடைய தேவிமார்களும் கைகூப்பி அடிவணங்குகின்ற திரிலோகாதிபத்தியம் உன்னிடத்தில் வியவருகின்றது. அதை நீ விலக்கிவிடுகின்ற யாகையால் உன்னைப்போலும் பேதைமையான பெண்கள் யாரிருக்கின்றனர். மும்மையுலகத்தாரும் ஏவலசெய்யும்படியிருக்கின்ற திரிலோகாதிபதியான என்னை நீ அடிமைகொண்டருளக் கடவாயென்று இராவணேசுவரன் கைகளைகூப்பித் தலைமேல்வைத்துக்கொண்டு எட்டுறுப்புநிலமுறப் பூமியில்விழுந்து தண்டஞ்சமர்ப்பித்தான். சிவக்கக்காய்ச்சிய இருப்புச்சலாகைகளைக் காதில் ஏற்றியதுபோல இந்த வார்த்தைகள்வந்து நுழையாததற்குமுன்னே, சானகியார் செவிகள் தீந்தன. மனஞ்சுழன்றது, கோபமூண்டது, கண்சிவந்தது, அவற்றில் உதிரம் பாயத்தலைப்பட்டது. அப்போது பிராணன்போனுலும் போகின்றதென்று சிறிதாவது அஞ்சாமல் பெண்டன்மைக்கு ஒவ்வாத சொற்களானுலும், இவ்வேளையிற் சொல்லுகிறதே சரியென்று துணிந்து வஞ்சகனுகிய இராவணனுடைய மனம் நோறும்படி, கற்பினுல் தம்மனத்தைக் கல்லெப்பார்க்கிலும் மிகவும் உறுதிப்படுத்திக்கொண்டு அவன் முகத்தைப்பாராமற் கீழேகிடக்

கின்ற ஒரு அரும்பைப்பார்த்து, அவனை அத்துருமபாகவேமதித்து அடா அற்பமாகிய தாணயே? இப்பொழுது நான் சொல்லுகின்றசொல்லானது என்னைப் போலும் கல்லகுடிப்பிறப்பினையுடைய பெண்கள் சொல்லத்தக்கதன்று. ஆயினும் உன்னைக்குறித்துச்சொல்லுகிறேன் கேட்கக்கடவாயென்று கொடுமையாகிய பலசொற்களையும் சீதாபிராட்டியா சொலலுகினறார். மகாமேருவை உருவவேண்டு மென்றாலும், ஆகாயத்தைப்பிளந்துகொணடு அதற்கப்புறம் செல்லவேண்டுமென்றாலும், பதினான்குலோகத்தையும் முடிக்கவேண்டுமென்றாலும் இராமபாணம அப்படியேசெய்பதற்க பலமுடைததாயிருக்கின்றது. அனைத அறிந்திருந்தும் புத்தியிலலாமல் அநுசிதமாகிபவாத்தைகளை உனக்குச்சரிப்போனபடியெல்லாம் பிதற்றி உம்படத்துக்கலைகளும்அற்றுவிழுவாயா! என் நாயகருக்கு நீ பயந்ததாலை சமயமபாாத்து ஒருவஞ்சனையாகிய மாயை யேவி அவரை என்னைவிட்டு நீங்குப்படிசெய்து, உன்னுருவத்தை மறைத்து மாயாசகியாயிவ்விடவந்துகாண்டிவரதனை, பிழைத்தின்றவனுலைவிடமிடுவாய், உன்குலத்துக்கெலலாம் விடபாகிய என்னை உன்கணாலும் பார்க்கமாட்டுமா? இப்பத்துத்தலைகளும் இருபதுதோள்களும் கொதண்ட நீட்சாகுருவாகிய என்நாயகர் பலபலபாணங்களைப பிரயோகித்து வினையாடதறகுந்த விசித்திரமாகிய அலட்சியமாயிருக்கு மல்லாமல வெறுமனேசெய்யும். யுத்தத்தில் எதிர்க்கத்தக்க வலிமையை யுடையவனைப்போலப்போய் அன்னைத்தினம சடாயுபலத்துக்கு நிற்கமாட்டாமல் தரையிலேவிழுநதையே. அநத ஒருபறவைக்குத்தோற்றுப நிவனுடைய கைவாளிருநதே யன்றோவென்றுப். அலல வென்றால் அக்காளை இறக்நதுபோவாய்; கீரியநத தவமும் அதனாற்பெற்ற வரமும் தீக்காயுதமாகிய இலைகளிலலாம உனக்குக் கூற்றுவனுலை ஆயம வந்து கொணடிருப்பதைக்குறித்தி யலலாை, என் நாயகனுடைய கைப்பாணத்தினாலை இராவணருடபடைத்தலைகளுறித்து எதாவது தவஞ்செய்ததும வரம்பற்று நமுனைடார் ' ம் பெறறிருக்கின்ற அவ்வாளும் காளையும பிரமத்தினதும பற்றுமுள்ள சகலதனைதும உனக்குக்கொடுத்த பிரமாதிதேவர் களுடைய வரங்களிலலாம் இரகுநாயகர் தமது கோதண்டத்தை வளைத்து காணைவிட்டு ஒரு அஸ்திரத்தை மாத்திரமஅநுசாதானஞ்செய்து பிரயோகித் தாலுடனே உனனைவிட்டு விலகி எதாரத்தமாகவே அழிந்துபோகும். கன்று ய்ப் பிரகாசிக்கின்ற தீபச்சுடருக்குமுன் இருள்விலகிப்போகாமல் நிற்பதுமுண டா! நீ கைலாயகிரியை எடுத்தகாலில் காற்பெருவிரல நுனியால் உன்னை அழுத்திவென்ற திருபராக்கிரமருகிய நிவனுடைய கைவிலை என் பிராண நாயகராகிய இராகவர் வளைத்தபோது, அது அவர்பலத்திற்குப் பொறுக்காமல் ஒடிந்துவிழுந்த சத்தங்கேட்கவில்லையா! மலையை எடுத்தோன் அஷ்டதிக்கசங் களை வென்றோனென்று சொல்லுகின்ற நீ எங்கள் இராயபெருமாள் கையி லே வில்லெடுத்துக்கொண்டு நிற்க அங்கேபோய் அவரை வெல்லத்தக்க நிர் வாகமில்லாமல் நானுமொருவீரனென்று இன்னமும் தலையெடுத்துக்கொண்டு பெண்டுகள் காவில்விழுந்து கெஞ்சிக்கொண்டு நிற்கின்றையோ? அறிவில் லாதவனே! நீ ஒளித்துக்கொண்டிருக்கின்ற இடமாத்திரம் இன்னதென்று எங்

கள் சீராமபிரானுக்குத் தெரிந்தால், அப்போதே இந்தச் சமுத்திரமும் இலங்கையும் அழியும், உன்பிராணனும் நாசமாம். அம்மட்டிலே தானேபோமா? ஊழியுந் தீர்ந்துபோகும்; நீ யொருவன் இப்படிப்பட்ட வஞ்சனை செய்ததனல் சீராமசந்திரனுடைய கோபத்தால், இராட்சசருடனே மாத்திரம் முடிந்துபோகாமல் இந்த லோகாலோகங்களுக்கெல்லாம் என்ன அழிவு வருகின்றதோவென்று தருமதேவதை சான்றாக நான் அஞ்சிப்பார்க்கிறேன். இவ்விராமலட்சுமணர்கள் மனிதர்தானேயென்று உன்மனத்திலே நினைத்தையோ யானல், முன்னளில் உன்னைச்சிறையிலவைத்த கார்த்தவீரியனும் ஒரு மனிதன் அன்றோ. இவர்கள் இருவர்தானே. இவர்களுக்கு வேறொரு உபபலமுமில்லையென்று அலட்சியஞ் செய்வாயானல, சகலபுவனங்களையும் சகலாத்துமாக்களையும் சங்காரிக்கின்ற ஊழிநாதன் ஒருவனன்றோ. ஆதலால் அவர்களுக்கும் உனக்கும்யுத்தம நடக்குமபோது என்சொலமெய்போ? பொய்போ? பார்த்துக்கொள். இரணியன் இராணியாக்கனென்னும் அசுரோந்திரர்கள் அதிக பராக்கிரம சாலிகளாயும் உன்னிலும மேலாகிய சம்பத்தையுடையவர்களாயும் வெகுகாலம் வாழ்ந்திருந்தனரே. அவர்களும தருமந்தப்பி நடந்தார்கள். ஆயினும் இப்படிப் பரதாரத்தை இச்சிக்கவிலலை. அகங்காரத்தாலேயே பாண்டுபோயினர். மண்ணுலகத்தாரும சுவர்க்கலோகவாசிகளும நடுங்குமபடி, வாழ்கின்ற கொடும்பாவீ! உன்னுடைய அற்பமாகிய தூக்கிருத்தியத்தை விலக்காமல் உனக்குப் பயந்திருக்கினற பிரமன் விஷ்ணு உருத்திரர்களைபபோல எங்கள் இரகுநாயகனையும் நீ நினைந்தையோ? ஐமபுலன்களும செலகின்ற வழியிற் செல்லாமல் தருமத்தின் நிலையில் நின்றுவினையைக் கடந்தவா பிரமன் முதலாகிய தேவர்களா! அலது அசுரர்களா! எல்லாவுலகத்தாரும ஏவல் செய்யும்படி இம்மகாசம்பத்து உனக்குக் கிடைத்திருக்கின்றது புணணியத்தினலேயா! அல்லது பாவத்தினலேயா! அறிந்துபார். இப்படிப்பட்ட பெரிதாகிய செல்வத்தை உனக்குக்கொடுத்த பிரமதேசுவரனும் தருமமார்க்கத்தில் நின்றல்லவோ! அப்படிப்பட்ட இட்டகாமியத்தை அனுபவிக்கின்றன். நீ மாத்திரம் தருமந்தப்பிநடந்து ஒபபற்ற செல்வத்தையும் இழந்து பந்துசனங்களுடனே நிருமூலமாயழிந்துபோமபடி என் எத்தினைப்படுகின்றாய்! அடா! அறிவில்லாதவனே! போர்க்களத்தில் புறங்கொடுத்தோடாத மகாபலிட்டர்களானலும், தருமந் தவறினவர்களும சீவகாருண்ய மில்லாதவர்களுமன்றோ பிறந்து இறந்து உழல்கின்றவர்கள்? அவ்வாறுகிய சனன மரணத்தை நீக்கினவர்கள் அகங்காரமமகாரத்தைக்கெடுத்துக் காமம்வெகுளி மயக்கத்தைக் கடந்தவர்களேயல்லாமல் வேறையார்? அகத்தியர் முதலாகிய முற்றத்துறந்த முனிவர்களெல்லாங்கூடிப் புருடோத்தமராகிய சீராமரிடத்தில்வந்து அரக்கர்கள் செய்யும் உபத்திரவத்தைப் பொறுமல் தவமுதலாகிய வைதிக கருமங்களேயெல்லா மிழந்தோம் தேவரீர் அவர்களைச்சங்காரஞ் செய்தருளும். உம்முடைய பாணத்தினல் அவர்கள்சத்தியமாய் மாண்டுபோவார்கள். ஐயா! தசரதகுமாரரே எங்களைக் காத்தருளுமென்று முறையிட்டுக் கொண்டார்கள். அச்சமயத்தில் நான் அவர்பக்கத்திலிருந்து கேட்டேன்.

நீயோ அதற்கேற்றபடி நடந்துவருகிறாய். உன்னையும், உன்னுடைய பராக்கிரமத்தையும், நீ பெற்றிருக்கின்ற தீர்க்காயுளையும், சேதுபலத்தையும் முனிவர்கள் சொல்லக்கேட்டும் எங்கள் சீராமபிரான் எவ்வளவும் இலட்சியஞ் செய்யாமல் உன்தங்கையின் மூக்கையும், உன்தம்பிமார்களாகிய கரன் முதலானவர்களுடைய காசாணுதி அவயவங்களையும் சின்னபின்னப்படுத்திய செய்தியை நீ கேள்விப்படவில்லையோ? உன்னுடைய இருபதுகைகளையும் சேர்த்துப்பிடித்து உன்பத்துவாயின் வழியாகக் குபீர் குபீரென்று உதிரங்கக்கும்படிக்குத்தி, உன்னை அருஞ்சிறையில்வைத்த ஆயிரங்கைகளையுடைய கார்த்தவீரியார்ச்சுனனுடைய வைரமாகியதோள்களையும் மழுவாயுதத்தால்தறித்தெறிந்த பரசுராமரானவர், என்ஞாயகருக்குத் தோற்றுப்போன செய்தியை நீயறிவாயோ! மேல்வருங்கதியை யறியாத நீசனே! கடிக்கின்ற விஷப்பல்லுள்ள சர்ப்பமும் மந்திர உச்சாடனம் பண்ணுகிடத்தைப்படுகின்றதே. யுக்தாயுக்தந்தெரியாமல் களித்துத்துள்ளுகின்ற உன்னை, இதுதகும் இதுதகாதென்று அதற்கேற்ற ஏதுக்களுடனும் திருட்டாந்தங்களுடனும் புத்திசொல்லி இடிக்கின்றவர்களில்லையோ லும. நீ இனைத்தனையே சரிசரியென்று சொல்லி உன்னை முடித்துவிடத் தக்கவர்கள் மாத்திரமிருக்கின்றனர். இப்படியாயின்இனி உனகுகு நாசம்வருமேயல்லது வேறொன்று சமபவிக்குமாவென்றனர். இவ்வகைப்பட்ட தருமமார்க்கமாயிருக்கின்ற பலபலவார்த்தைகளையும் கர்னகடோரமாக அத்தருமனைபப பாதகவண்ணமாய்ப் பிராட்டியார் சொல்லவே, மேகத்தின்வயிற்றைக் கிழித்துக்கொண்டெழுந்த மின்னலைப்போலவே, இருபதுகண்களிலும கெருபபுப்பொறிகள் எழும்பவாய்களெலலாம் புகைய அதட்டி ஆர்ப்பரித்துக்காமத்திலும கோபமிருந்தவறைய் அநிகாணத்தைக்கொண்டு இவளைப்பிளந்துதின்று விடுகின்றனனென்று எழுந்துவந்தான. ஆசையுங் கோபமும் முன்னும் பின்னுந் தள்ளச் சானகியாருக்குச் சமீபத்திலவந்தவனை அநுமான்பார்த்து, என்னை அடிமையெனைட நாயகனுடைய தேவியானை என்னெதிரே இப்படியெல்லாம பேசியதசுறுகிய இராவணன் நீண்டுவதற்குமுன்னே, இவனுடைய பத்துத்தலைகளையும உதைத்து உருட்டிவிட்டுப் பின்பு எக்காரியமும் பார்த்துக்கொள்ளலாமெனறு நினைத்தும்பின்னும் இவ்விராவணனை தனியேயிருங்கின்றுணுகையால எளிதாக இவன்தலைகளை யுடைத்துத்தள்ளி இலங்கையையும் எடுத்துக் கடலிலை தலைகீழாக எறிந்துவிட்டு, பிராட்டியானை எடுத்துக்கொண்டு சீராமபிரானிடத்திற்குப்போவதே காரியமென்று துணிந்து அதிக கோபாவேசத்துடனே கையைப்பிசைந்து கொண்டிருந்தார். அண்டங்களை எல்லாம் அழிக்கும்படி மூண்டெழுந்த யுகாந்தகாலாக்கினியைப் போல முதிர்ந்து கோபத்துடனே கிட்டிவந்த இராவணன், அக்கோபாக்கினியைக் காமமென்கிற வெள்ளமானது அவிக்க, {உலகமாதாவாகிய சீதைக்கு எதிரே சும்மாநின்று நிலவார்த்தை சொல்லுகிறான். நானுன்னைக் கொல்லுகின்றேனென்று சொன்னனே அது இருக்கவே யிருக்கட்டும். உலகத்திலே எனக்கு ஒருவிடயம் சாத்தியப்படுவதென்றும சாத்தியப்படாதென்று மூண்டா? தோற்பதும் வெல்வதுவும் எனக்கு விளையாட்டுச்செய்கையா யிருக்

கின்றது.உன்னுடைய உயிருக்கு ஒப்பாகிய நாயகனை நான் கொன்றால் நீ இறந்துபோவாய். அதுகண்டால் நானுயிறந்துவிடுவேன், அச்சங்கடத்தை எண்ணித்தான் அன்று நானுன்னை வஞ்சனைசெய்து எடுத்துவந்தது. அல்லவென்று யுத்தஞ்செய்யத் தலைப்பட்டால் யார்தான் எனக்குநேர் நிற்கவல்லவர்கள்? மானுனது வந்தென்று அறிந்து அதைப்பிடிக்கத் தொடர்ந்துபோன மானிடர் என்னுஞ்ஞாதிகாரத்தை அறிந்தால் இந்தவழியும்வருவார்களா?முன்னாளில் யாரோ என்னை வென்றார்களென்று சொன்னையே! அவர்களு மிருக்கட்டும். சகலமானவர்களுக்கும் மேலானவர்களும் யாவராலும் இறவாதவர்களுமாயிருக்கின்றவர்களு மிருக்கட்டும். அக்காள் முதற்கொண்டு இந்திரன் பணிவிடைசெய்ய மூன்றுலகத்தையும் நானொருவனே ஆள்கின்றேன். இதைவிடவேறேகாரணஞ் சொல்லவேண்டுமோ? எல்லாரையும் நான் வெல்வதுமல்லாமல் என்னை ஏவல்கொள்ளுவதுமேயல்லாமல் என்னை ஏவல்கொள்ளுகின்றவர்களும் பின்னும் என்னை வெல்லுகின்றவர்களு மிருக்கிறார்களா?மும்மூர்த்திகளையும் மற்ற தேவர்களையும் பராக்கிரமம் அழியச்செய்த என்னுடைய பிராபத்திற்கு உன்னாலே பழிவருமென்றி, பயனில்லாத்தவத்தைச் செய்துகொண்டிருக்கின்ற சொற்பமனிசர்களை நானொருபயனு மெண்ணிக் கொல்லப்போகின்றேனே! இதோ அழைத்து ஏவல்கொள்ளுகிறேன். அந்தச்சாமர்த்தியத்தையும்பார். அற்பபலத்தையும் அற்பச் செய்கையையுமுடைய அற்பவிராகள் மேல் எனக்குக்கோபம் தோன்றுவதேயில்லை. ஆயினும் இற்றைத்தினமே போய் அவ்விராமலட்சுமணர்கள் இருவரையும் ஒருகையினற் பிடித்துக் கொண்டுவந்து உன்முன்னேவிடுகின்றேன்பார்; அவர்கள் மனிசர்களானாலும் ஸ்திரீரத்தினமாகிய உன்னை எனக்குக்கொடுத்த உபகாரத்தை ஆலோசித்துப்பார்த்தால் அவர்களைப் பிராண இம்சை செய்யக்கூடாது, அப்படியன்று, அவசியம் கொல்லவேண்டுமென்று உனக்கும் இட்டமிருந்தால் இப்பொழுதே கொல்லுகின்றேன். மேலும் அயோத்திக்குப்போய் அங்கிருக்கின்ற பரதன் முதலான யாவரையுங்கொன்று, மிதிலைக்குப்போய் அவ்விடத்திலுள்ள சனகன் முதலானவர்களையும் கருவறுத்துவிட்டு வினாவிலைவந்து உன்னுடைய உயிரையும் மாய்க்கின்றேன். என்பிரதாபத்தை நீ என்ன அறிவாய். கொஞ்சவயதுண்டானவ ளாகையால் அறியாமற் சொன்னையென்று; காலாக்கினி சொரூபமாய்க் கோபித்து, எரிகின்ற தன்கைவாளைப்பார்த்து உன்பிராணனைப் போக்கடிப்பதற்கு வெகுநாள் செல்லாது; இன்னம் இரண்டுமாதம்போலல் அப்புறம் உனக்கே தெரியவருகின்றதென்று அதட்டிப்பேசி, அச்சீதாபிராட்டியாருடைய திவ்ய சுந்தரமாகிய திருவுருவத்தைக் கண்ணிலேகண்டபடி மனத்திலே பதித்துவைத்துக்கொண்டு, அவ்விடத்தைவிட்டு நீங்கிக்காவலிருக்கின்ற அரக்கியர்களை இரகசியமாக அழைத்துப்பூங்கொடிபோலும் இளமையுடையளாகிய சானகியை, ஒருவகையினற் பயப்படும்படி செய்தாவது அல்லது அவளுக்குப் புத்திவரும்படித் தெரியப்படுத்தியாவது வசியஞ்செய்து என்னிடத்தில் மனம்பிரியாதிக்கும்படிச் செய்தீர்களானால்தான் பிழைத்தீர்கள். இல்லாவிட்டால் கொன்றுவிடுவேனென்று சொல்லிவிட்டுத் தன்மாளிகைபோய்ச்

சேர்ந்தான். பின்பு கேதுவென்னும் பாம்பு விழுங்கிக்கான்ற சந்திரனைப்போலிருந்த சிதாபிராட்டியாளைப் பொல்லாத அரக்கிமார்கள் சுற்றிக்கொண்டு ஆர்ப்பரித்து அதட்டிக்கோபித்துத் தங்கள் மனத்தில் தோற்றினபடியெலலாம் பேசத்தலைப்பட்டார்கள். சிலர்சூலம்வேல் முதலாகிய ஆயுதங்களை மேலே எறிந்துகொண்டு கொல்லுங்கள் கொல்லுங்களென்றும், இவளுடைய சரீரத்தைக் கண்டதுண்டமாக்கி வயிறாரத் தின்னுங்கள் தின்னுங்களென்றும் முடுகினார்கள். இந்தப்பிரதாபலங்கேசுவரன் சதுர்முகப் பிரமாவுக்குக் கொள்போன். புலத்திய பிரமனுக்குப்போன். விசிரவசபிரமாவுக்குப் புத்திரன், மேலும, சகத்திரவேதங்களும் அறிந்தவன், ஞானதிகன், சத்தியசந்தனன், வினயக்கடந்தவன், இவனென்ன சாமானியரு! இப்படிபட்டவன உன்னிடத்தில ஆசை வைத்தானே, இவ்விந்தையை என்ன சொலலலாம. இது ஒன்றேயல்லாமல் மற்றப்படி இவனிடத்தில என்னகுற்றமிருக்கின்ற தென்றார்கள். சிலர் அடி பெணகளுக்குள்ளே கொடியவளாயிருக்கின்றவளே! பொறுமையாகயோசித்துப்பாராமல, புன்னிலே கோவிட்டாற்போலக் கன்னகடோரமான வசனத்தைச்சொல்லி நீ முதலற்றுப்போவது மலலாமல், உலகத்திலுள்ளமானிடவருக்கமுழுமையுமமாய்வது போகத்தக்க மனவருத்தத்தையு முண்டாக்கினையே! காங்கள் சொலலுகின்ற உண்மைவாத்தையைத் தான் நீக்கமாக எண்ணிப்பாரென்று சொனனார்கள். சிலர் அடி கன்னெஞ்சையுடைய அறிவில்லாதவளே! நீ பிறந்தகுலத்திற்கும் புகுந்த குலத்திற்கும் கடுகெருப்பை வாரியிறைக்க ஏற்பட்டாபலலோ? நியய நிக்கணமே மாண்டாய். இனியொரு பொதும வாழமாட்டாய். காயகள் உனக்கு உறுதிப்படச் சொன்னோமென்று கூசலிட்டார்கள். இப்படி கொலலத் துணிந்தவாகளுடைய செய்கையில் யாதொன்றும் குறைவிலலாத கொடுமையை யுடையவர்களாய், அவ்வரக்கிமாகளெல்லாம வெருட்டுவதையும் இராவணன் அவர்களை இப்படிசெய்யாதே யென்னையுமே அடித்து, பிராட்டியார் கலைகளிற் சலமபெருகக் கிலேதித்துத் துக்கத்தினால கலைந்து மனம்மயகினார். அத்தருணத்தில திரிசடையென்பவள பிராட்டியைப்பார்த்து அமமா! ஏன அங்களைப்புகின்றீர். முன்னே நீர் தயிரியமாயிருமென்று சொலலிப்பின்பு அரக்கிமாகளைநோக்கி நீங்கள் இவ்வுத்தமியை அறியாமல விரைக அபசாரப்பட்டீரலை மகத்தாகிய தோஷம வருமென்று சொன்னாள். அதுகேட்டுதாயே கலலெதன்று அவர்களெல்லாம அடங்கினார்கள். பிராட்டியாரும பிராணனை நீலுத்திருந்தனர்.

திரிசடை படலம்
முற்றிற்று.

உருக்காட்டுப்படலம்.

அப்போது பாத்தின்மேல் நின்ற பாத்துக்கிகாலை திருந்திய அநுமான் இதுதான் காலைகிறதற்குத் தருணசமயமென்று அறிந்து. அவ்வரக்கியர்களுக்கெல்லாம உறக்கம வரும்படி ஒரு மநதிரத்தை உச்சரித்தனர்; அதனால் அவர்

களெல்லாம் பிரேதம்போல உறங்கிவிட்டார்கள். எப்பொழுதும் நித்திரைசெய் தறியாத அரக்கிகமார்களும் நித்திரைசெய்வது கண்டு துக்கத்தைப் பொறுமல் உய்கின்ற மார்க்கத்தையுங் காணுமல் மனந்தளர்ந்து அஞ்சி நெடுநாளாய் வருந் துகின்ற பிராட்டியார் சுவாமியினிடத்தில் தமக்குண்டாகிய அன்பினல் பிர லாபிக்கத் தொடங்கினர்.

கவி.

கருமேக நெடுங் கடல் காரணயான்
தருமே தனியே னெனதா ருயிர்தான்
ருமே றுறழ்வெஞ் சிலைகா ணெலிதான்
வருமே புனையாய் வலியார் வலியே.

கல்லா மதியே கதிர்வா ணிலவே
செல்லா விரவே சிறுகா விருளே
எல்லா மெனையே முனிவீர் நினையா
விவ்லா ளனையா தும்விளித் திலிரோ.

தழல்வீ சியுலாய் வருவா டைதழீஇ
அழல்வீ னெனதா வியறிந் திலிரோ
நிழல்வீ யையரு ருடனே நெடுநாள்.
உழல்வீர் கொடியீ ருனையா டிலிரோ.

வாரா தொழியா னெனுமவன் மையினல்
ஓரா யிரகோடி யிடர்க குடைவேன்
தீரா வொருநாள் வலிசே வகனே
ராரா யணனே தனிகா யகனே.

தருவொன் றியகா னடைவாய் நவிந்நீ
வருவன் சிலநா ளினின்மா நகர்வாய்
இருவென் றனையின் னருடா வரிதுவேல்
ஒருவென் றனியா வியையுன் றுதியோ.

பேறும் முணர்வே யுயிரே பெருநாள்
நாணின் றுழல்வீர் தனிகா யகனைக்
காணும் துணையுங் கழிவீ ரலிர்நான்
பூணும் பழியோ டுபொருந் துவதோ.

முடியா முடிமன் னன்முடிந் திடவும்
படியே முழுதுந் துயர்பா விடவும்
மடியா நெறிவந் துவனம் புகுதும்
கொடியார் வருமென் றுகுலா வுவதோ.

என்பன.

ஆ! ஆ! தடுக்கப்படாத வலிமையுடைய என்விதியே! கார்மேகத்திற் கும் கருங்கடலுக்கும் ஒப்பாகிய கறுத்தமேனியையுடைய என் பிராணநாய கர் தம்மைப்பிரிந்து தனியேயிருக்கின்ற என்னுடைய பிராணனைத் தருவாரா? பிரளயகால இடியோசைக்கு ஒப்பாகிய அவருடைய உக்கிரகோதண்டத்தின்

குணத்தொனியும் இவ்விலங்கையிலுள்ளவர்கள் கேட்கவருமா? நீசொல்லென்றும் அறிவில்லாத சந்திரனே! பிரகாசமாகிய சந்திரிகையே! தொலையாத இரவே! குறையாத இருளே! நீங்களெல்லாம் ஒருவந்தமாகக் கூடிக்கொண்டு என்னைமாத்திரம் உபத்திரவப்படுத்துகிறீர்களே இதைச்சிறிதேனும் நினையாத அக்கோதண்டராமனை இப்படிச் செய்யமாட்டீர்களாவென்றும் ஓ! பூங்கொடிகளே! நெருப்பைவாரி இறைக்குமாபடி எங்குஞ்சஞ்சரித்துவருகின்ற வாடைக்காற்றுடனே சேர்ந்து, என்னைச் சிறுகின்றீர்களா? என்னுயிர் நிலையை நீங்கள் அறியமாட்டீர்களா? சிராமபிரானுடனே அணியத்தில நெடுங்காலமா யுழலுகின்றீர்களே! அவருக்கு நீங்களாவது சொல்லமாட்டீர்களா வென்றும்; நம்முடைய பிராணபதமா யிருக்கின்றவர் வராமற் போகமாட்டாரென்கின்ற நிச்சயத்தினை லன்றே? அநேக கோடி துன்பத்திற்கும் சலியாம லிருகின்றேனென்றும்; அழிவில்லாத மஹாபராக்கிரமத்தையுடைய வீரசிகாமணியே! ஸ்ரீமந்நாராயணனே! சமானதிகமில்லாத பரமபுருஷனே! விருட்சங்கள் நெருங்கிய காட்டினிடத்தில் உமருடனே வருமாபடி கான எத்தனிப்பட்டபோது நீவந்தால்வருத்தப்படுவாய் வரவேண்டாம் கான்போய்ச் சிலகாளில் வருகின்றேன்கரத்தினிடத்தில தானே யிருக்கக்கடவாயென்று நியமித்தனையே, உம்முடைய கிருபை இப்படி இருக்குமாலை இப்போது நீர் தனித்திருந்து தமியளாகிய என்னுடைய உயிரை வருத்தலாமாவென்றும்; கான் கைவிடாதிருக்கின்ற என்னுடைய அறிவே! என்னுயிரே! வெகுநாளாக நீங்கள் அஞ்சியுழலுகின்றீர்களாமையால என் நாயகனைக்காணுகின்ற வளவும் என்னைவிட்டு நீங்கமாட்டீர்கள்போலக் காணுகின்றதே? கான் அடையும் பழியை நீங்களும் அடையவேண்டுமோ வென்றும்; இறவாத தமருடைய பிதாவாகிய சக்கரவர்த்தி இறக்கவும் தாய்மார் தமையனார் முதலானவர்களும் எழுலகத்தாரும் துயரப்படவும் இவற்றைக்குறித்தளவ்வளவும் இரக்கப்படாமல் என்னை அழைத்துக்கொண்டு வனத்திலவந்து புகுந்த பாதகர் இன்னமும் வருவார்வருவாரென்று நினைத்து கான் குலாவிக்கொண்டிருக்கிறதா வென்றும்; இபபடிப் பல பல வகையாக எண்ணி எண்ணி உயிர்தடுமாறியிருந்து பிலாபித்துச் சானகி என்னுயிரிருக்கிறவ்வையிலும் துன்பம் இடைவிடாமல சேர்ந்துகொண்டிருக்கும், இம்மட்டிலேகான் இறந்து விடுவேனையாயின் துன்பம் நீங்கிக்கோத்திகிடைக்குமென்று அதற்குத்தக்க யோசனைசெய்கின்றாள்.

கவி.

பொறையிருந் தாற்றியென் னுயிரும் போற்றினேன்
அறையிருங் கழலவற் காணு மாசையால்
நிறையிரும் பல்பக னிருதர் நீணகர்
சிறையிருந் தேனையப் புனிதன் றீண்டுமோ.

அற்புத னரக்கர்தம் வருக்க மாசற
விற்பணி கொண்டருஞ் சிறையின் மீட்டனாள்
இற்புகத் தக்கிலை யென்னின் யானுடைக்
கற்பினை யெப்பரி சிழைத்துக் காட்டுகேன். என்பது.

வீரகண்டை அணிந்த இரகுநாயகனைக் காணவேண்டுமென்கின்ற ஆசையினாலே பலவகைவருத்தத்தையும் பொறுத்துக்கொண்டு என்னுயிரைவிட்டுவிடாதிருந்தேன், இப்படிநெடுநாளாகஇவ்வரக்கருடைய சகாத்திலேசிறை இருந்தஎன்னை அம்மனுகுலோத்தமராகிய துல்லியர் தொடுவாரா? என்னைப் பரபுருஷர் இச்சித்தாரென்றறிந்தும் பலபேருஞ்சொன்ன பழிச்சொற்களெல்லாம் காதிலே விழக்கேட்டும் இவ்வுயிரை வைத்துக்கொண்டு எத்தனைக்காலமாயிருக்கிறேன்? என்னைப்பார்க்கிலும் கடினசித்தத்தையுடைய அரக்கியர்கள் வேறேயார்? நீங்காத பழியைச்சுமந்துகொண்டு இருக்கின்ற என்னுடைய குடிப்பிறப்பும் காணமும் நன்றாயிருக்கின்றதே. கதைகளிலே சொல்லப்பட்டிருக்கின்ற கற்புடைய மாதர்களுக்குள் மகாவாழ்க்கையை நீங்கிப் பிராணனேவிடிருக்கின்றவர்கள் கானல்லாமல்யாரிருக்கின்றார்கள்? அக்கியருடைய கிருகத்தை அடைந்தபெண்ணை விரும்புவது போக்கியமல்லவென்றுன்பிராணநாயகர் என்னைக்கைவிட்டவராகி வேறொரு மாதனைச்சேர்ந்து சுகித்திருக்க கான் மீண்பொழுதுபோக்கி அதர்மத்தைச்செய்து வேறொந்த உபாயத்தைக்கொண்டு அதைப்பொறுப்பேன்;எப்பொழுது கான்இந்தப்பெரும்பழிக்குஆளானேனே? அப்பொழுதே கான் பிராணத்தியாகம் பண்ணிக்கொள்ளவேண்டும். அப்படிச்செய்யாமல் உலகத்தார் அளவிடப்படாத நிந்தைகூற கான் துப்பழித்து உயிர்கொண்டிருப்பது மோட்ச சாம்பிராச்சியத்தை அடைவதற்கா? என்னையகனும் என்கொழுந்தனும் மனத்திலே அன்பில்லாதவர்களாய்ப் பொல்லாதபழியைச்சுமந்தாலுஞ் சுமக்கட்டும், கான்கோத்திபெற்ற கல்லருடியிற்பிறந்தேனே என்பழியைத் துடைக்கின்றவாகள் என்னைவிட யாரிருக்கிறார்கள். வஞ்சனையாய்வந்த மானின்பின்னே என் நாயகனைப்போக்கிப் பின்பு எனக்குக் காவலாயிருந்த என்மைத்துனப் பிள்ளையையும் அவர்பின்போவென்று அனுப்பிவிட்டு காளகூடவிடத்திற்கு ஒப்பாகிய அரக்கன்வீட்டிலே வந்திருக்கின்ற கான் பிராணனுடனிருந்தால் உலகம அங்கீகரிக்குமா! சுத்தவீரர்களாகிய இரகுநாயகனும் இளையபெருமானும் தங்களுக்குவந்த குற்றத்தை நீக்கிக்கொள்ளும்பொருட்டுப் போர்செய்து சத்துருக்களை வென்றாலும் வெல்லட்டும், அல்லவென்று இறந்துபோனாலுமபோகட்டும, கான்கிருகத்தம்மத்தப்பி நடந்தபின்பு சொல்லுகின்ற என்பழி அவாகளைச்சுற்றுமா! கவரிமானுக்குச் சமானமாகிய மானமுடைய பதிவிரதைகளுக்குளதிலே பெண்தன்மையையுடைய கான்புருஷோத்தமனுகிய தன்னையகனைப்பிரிந்து கள்ளர்கரத்திலே வாசமாயிருந்தவளிவளென்று அவர்கள் ஏசும்படிக்கேட்டுக் கொண்டிருப்பேனே! என்பிராணநாயகர்வந்து அரக்கர்வருத்தத்தையெல்லாம பற்றறக்கொன்று என்னிறை மீட்டகாலத்தினும் நீவிட்டிற்குள்ளே நுழைவதற்கு யோக்கியமானவளல்லளென்று சொன்னால் அப்போது என்கற்பை எவ்விதத்தில் பரீட்சைகொடுத்து நிலைநிறுத்துவேன், ஆகையால் இறந்துபோவதே தருமநெறியென்று நினைத்துப் பின்னும் என்னைச்சாவாமல் காத்துக்கொண்டிருக்கின்ற அரக்கிமாரும் என் அதிர்ஷ்டத்தினால் உறங்கிவிட்டார்கள், இதுதான் சமயம்; இதைவிட வேறுசமயங் கிடைக்காமாட்டாதென்று சானகியார் எழுந்து ஒருகுருக்கத்திப்

புகரினிடத்திற் போய்ச்சேர்ந்தார். அதுகண்டு அநுமான் பிராட்டியாருடைய கருத்தையுங் குறித்தறிந்துகொண்டு நடநடுங்கி இப்படிச் செய்யவேண்டாமென்று இக்கணமேபோய்க் கையைப்பிடித்துக்கொண்டு தடைசெய்யலாமென்று பார்த்தால் பதிவிரதா சிரோமணியாயிருக்கின்றவளைத் தீண்டக்கூடாதேயென்றுமனங்கூசினவராய் இராமஇராமவென்று எதிரேஓடிவந்து அம்மா! லோககாரணி! லோகபரிபூரணி! லோகநாயகி! லோகமாதா! லோகோத்தமி! அடியேன் தேவர் தேவராகிய உமதுபிராணநாயகருடைய தூதனென்று திருவடியில் விழுந்து சேவித்துச் சொலலுகின்றார. தாயே! சிராமபிரானுடையஆணையைச் சிரமேற்கொண்டு வந்தவன் நான. எனஅப்போல் அனேக வானரவீரர்கள் தேவரீரைக்குறித்து உலகமெலலாம்போய்த்தேடுகின்றார்கள். அடியேன்செய்த தபோபலத்தினாலே உம்முடைய பாதாரவிந்தத்தைவந்துதரிசித்தேன். தேவரீர இருக்கின்றதைச்சர்வலோகநாயகனாகிய இராகவபிரான் அறியார். இதற்குச்சான்று என்னவென்றால இனனம இராக்கதக்கூட்டங்கள் மாளாமல சீவனுடன்இருக்கின்றனவேதான், இதுதவிரவேறுசானறும் வேண்டுமா! திருவுள்ளத்தில ஐயப்படவேணடாம். அடையாளங்காணுவந்திருக்கிறேன், அதுவும பாரத்துக்கொளளும். அதுதவிரச் சிராமபிரான்திருப்பவளத்திறந்துசாதித்தருளிய திருவாய்மொழியுமிருக்கினறது. அதைக்கரதலாமலகமாகச் சொலலுகிறேன், அதையுங் கேட்டபிறதுகொள்ளும். மனத்தில் வேறேயோசனைசெய்யவேணடாமென்று இபபடி சொலலித் தாழ்ந்துவணங்கி மௌனித்து குழைந்துநினற அநுமானைப்பாரத்தருளி,முன்புவந்த இராக்கதனேவென்று கோபங்கொணடு பின்பு இரக்கமுறறு இவன் இராக்கதனல்லன். கல்லொழுக்கத்தில தினறு ஐம்பொறிகளையும வென்ற சர்வோத்தமனாக வேணடும, அலலவென்றால மதவறுகவேணடும. மேலும் அறிவிலும் வார்த்தையிலும பார்த்தால் பரிசுத்தனாகவும குறறமறறவனாகவும் காணகின்றான. ஆயினும அரக்கன்தானாகட்டும், தேவன்தானாகட்டும, அலலனென்று இபபொழுது கொணடிருக்கின்ற உருவத்தினைபபறறிய வானரச்சிரேஷ்டன்தானாகட்டும. இத்தருணத்திலசொலலிக்கொணடிவந்த வார்த்தையானது கொடுமையாகச் சொனனதாயிருந்தாலும இருக்கட்டும, அலலதனறு உணமையாக இரக்கமாய்ச் சொனனதாயிருந்தாலும இருக்கட்டும. எம்பெருமானுடைய திருநாமத்தைச் சொலலி என்மனத்தைமுருக்கி இச்சரமபத்திலே நலலதினிவைக்கொடுத்தானினறும்படிபார்க்கிலும உயிருக்குவேறுதவினனசெய்யவேணடும்! அலலவென்றால மற்றென்னதானிருக்கின்றதென்றுநினைத்துப் பிராட்டியார் கருணையுடனேபார்த்துப பின்னும் என்னுள்ள மிரங்குகின்றது. இவன்மனத்திலே கள்ளமில்லாதான். வஞ்சமார்க்கத்தை யுடையானல்லன், அந்தரங்கமான வார்த்தையுடனே கண்களில நீர்பெருகப் புலம்புகின்றான். ஆகையால் இவனைக்கேட்கலாமென்று எணணித் தாயப்பாவென்றுகேட்க, அந்தத்திருமொழியைச் சிரத்திலேதாங்கிக்கொணடு கைகூப்பித் தண்டஞ்சமர்ப்பித்துத் தாயே! தேவரீரை இராகுராயகன்பிரிந்தபின்பு சம்பாதித்த சினேகனும், சூரியனுடைய குமாரனும், வானராலத்திற்கெலலாந தலைவனும், மிகவும் நல்லவனுமாகிய

சுக்கிரீவனென்கின்ற காமத்தையுடையவனிருக்கின்றான். அவனுக்குத் தமையன் வாலியென்பவன். அவன் முன்னுரிலே இவ்விராவணனை வால்முனையிலே கட்டிக்கொண்டு எட்டுத்திக்குகளிலும் எழும்பிப்பாய்ந்து வெற்றிகொண்டவன். தேவர்கள் வேண்டிக்கொள்ள மந்தரமலையாகிய மத்தில்வாசுகியைக் கயிறுகச்சுற்றி அமிர்தமுண்டாகும்படிக் கடலைக்கடைந்த புயபலபராக்கிரமமுடையவன்; அப்படிப்பட்டவாலியை உம்முடையராயகர் ஒரு அம்பிலேலே பிராணனைவாங்கி, அவனுடைய இராசரிகத்தை அவன்தம்பியாகிய சுக்கிரீவனுக்குக்கொடுத்து அவனைத்தாழுணைக்கிக்கொண்டனர். அந்தச்சுக்கிரீவனே எங்களுக்கு அரசனையிருக்கின்றவன். அவனிடத்திலிருக்கின்ற மந்திரிமார்களில் நாயேன் ஒருமந்திரி, நான் வாயுகுமாரன், என்பேர் அநுமானென்பது. எங்கள் அரசனிடத்தில் எழுபதுவெள்ளஞ் சேனைவீரர்களிருக்கின்றார்கள். அவர்களில் ஒவ்வொருவரோ இவ்வுலகத்தையெல்லாம் பேர்த்தெடுக்கவேண்டுமென்றாலும் எடுப்பார்கள். சமுத்திரத்தையுந் தாண்டுவார்கள். அப்படிப்பட்டவர்களெல்லாம்கூட்டமாகக்கூடியிருக்கின்றார்கள். உம்முடைய பிராணநாயகர் எதைக்குறித்து ஆஜ்ஞாபித்தாலும அதைக்குறிப்பிலுல்தெரிந்துகொண்டு அக்கணமேதவறுமலசெய்வார்கள். அநேகவானரங்கள் எழுசமுத்திரமும், அச்சமுத்திரஞ்சூழ்ந்த எழுவகைப்பட்ட தீவாயிருக்கின்ற பூமியும, நாகலோகமும், தெய்வலோகமுமாகிய இந்தஅண்டமெல்லாந்தடியும உமைமைக்காணவிட்டால் இந்த அண்டத்துக்கு அப்பாலுமபோய்த் தேடுமபடிப் புறப்பட்டுப்போயிருக்கின்றார்கள். இராவணன் உமையையெடுத்துக்கொண்டுவருகிறபோது நீர்வத்திரத்தில் கட்டிப்பூமியில எறிந்த ஆபரணக்குறிபபிலுலே சீராமபிரான் என்னை அழைத்துத் தனியேயனைவத்துக்கொண்டு சொல்லவேண்டியவைகளெல்லாஞ் சொலலித் தென்றிசைக்குப்போய் வாவென்று ஆஜ்ஞாபித்தனர். அவருடைய கருணைக்கு விக்கினமவருமோ! அன்று நீர் கழற்றினெறிந்த ஆபரணங்களை எங்கள் மகாராசாவானவர் சுவாமி சந்நிதியிற்கொணடுவந்துவைத்தபோது அவருக்கு உண்டாகியதுக்கம என்னால் அறிந்துசொல்லக்கூடுமா! தேவரீரேயல்லாமல இராமசந்திரனுக்கு உயிராகிலேவேறுண்டா! அந்தத் திருவாபரணந்தான் இந்நாள்வனைக்கும் உம்முடைய மாங்கலயசூத்திரத்தைதக் காத்தது. அது அப்படியிருக்கட்டும. வாலியினுடைய குமாரனும, எங்களுக்கெல்லாம் இளவரசுமாகிய அங்கதப்பெருமானென்பவன் இரண்டுவெள்ளஞ் சேனையுடனே தெற்குத்திசையில் தேடுவதற்குப்புறப்பட்டுவந்திருக்கின்றான். அவன் இலங்கைக்குப்போய்வாவென்றுசொலலி என்னை அனுப்பினனென்று, நிக்தையை நீங்கிய திருவடி விண்ணப்பஞ்செய்து அன்புடனே மனமுருகினின்றார். இப்படி அவர்சொன்ன வார்த்தைகளைக் கேட்டமாத்திரத்தில், மகத்தாகிய பிரமானந்தம் பொங்கியெழும்பப் பிராட்டியார் பெருமூச்செறிவது தவிர்த்து, இளைத்திருந்த சரீரம் மிகவும் பூரித்து நான் உச்சீவிப்பதற்குக் காலம் வந்ததோவென்று கண்களில் அருவிபோல ஆனந்தபாஷ்பம் ஒழுக, அப்பா! அவ்விராகுகுலோத்தமனுடைய திருமேனி எந்தப்படியிருக்கும் சொல்லென்று அருளிச்செய்தார். அவ்வார்த்தையைக்கேட்டு அநுமான்கழிபெருமகிழ்ச்சியு

டனே, அம்மா! சீராகவபிரானுடைய திவ்விய சுந்தரம் இபபடி யிருக்குமென்று உவமானமெடுத்துக்காட்ட ஒருவாலுமாகாது. ஆயினும் காயேன் அநிந்தமாத்திரம் சொலலிக்கொண்டுவருகிறேன். அவற்றில் ஏதாவது தவறுவந்தாலும் உமது திருவுள்ளத்தில் ஆயாசப்படாமல் அவருடையதிருமேனியைத் தேவரீர் அறிந்திருக்கிறவரானபடியினலே மனத்திறற் சரியாகப் பாவனைசெய்து அங்கீகரித்துக்கொள்ளுமென்று சுவாமியினுடைய திருவழகைப் பாதாதிகேச பரியந்தஞ் சொல்லத்தொடங்கினர். சீராமபிரானுடைய திருவடிகளிரண்டுஞ் செந்தாமரைப்புட்பங்களென்று தேவாகள் துதிசெய்கிறபடியினலே அந்தக்கமலத்தை விடத்தான் வேறேஉபமானஞ் சொலலுகிறதற்கு என்னவல்லவிருக்கின்றது அப்படிப்பட்ட திருவடியின் காந்திக்குமுன் பவளநிறத்தைக் கருங்குவளையைபபோலக் கறுப்பெனறே சொலலவேணடும். அத்திருவடிகளின் விரலழகுக்கு உவமானஞ் சொலலுவதற்குக் கற்பகத்தின் அரும்பும் செம்பவளமும எவ்வளவு? அவைகளிருக்கட்டும. இளஞ்ஞாயிறு கிரணங்களை ஒருவேளை ஒக்குமென்று சொனனாலுஞ் சொலலலாம, அவ்விரல்நகங்களுக்குச்சிறியவைகளும பெரியவைகளுமாய்க்களங்கமிலலாமல் பத்துச்சுந்திரா உணடாயிருந்தால அவர்களை ஒபபிடலாம; அப்படித்தானிலலையே, இனிப் பிரகாசமுணடாகிய் வச்சிரத்தைச சொலலுமேவாமென்றால, அநிலதாட்சியுண்டாயிருக்கவிலலை, ஆகையால நகத்தின திருவழகுக்கு உவமானமறிந்து சொல்லமாட்டேன, அதந்திருவடி பூமியிலேபொருதாமல அரணியத்தில நடந்து வருந்தியதாலுஞ சாமுத்திரிகா சாத்திரத்திற் சொல்லப்பட்ட இலக்கணத்திறகுள் அடஙகாமல அநிலும அநித இலக்கணத்துடனே பிரகாசிக்கினறதும புவனமெலலாம கவிந்துகொண்டிருகினறது மாகையால அதனுடைய மகிமை ஒருவாலுஞ்சொலலி முடியாது. கணைக்காலுக்கு உவமானமம்பறாதூணியெனறுஞ சொலலலாம; சொனனால் அதுதான்சரியாமா? திருத்தொடைகளுக்கு மதயானையின சுமடிகையை ஒப்பாகச்சொலலுவோமென்றால் அநத அவைகள் வெட்கிபோம்படிசெய்து அதிலும் அதிகமும் அழகாயப் பட்டிராசனுடைய கரதலபம்போல ஜொலித்துக்கொண்டு இவ்வுலகத்தில வேறே உவமானமிலலையெனறு சொலலுமபடியிருக்கின்றன. அவருடைய திருவுந்திக்கமலதிற்கு வலமாகச் சுழித்தோடுகின்ற கங்காநதியின் நீர்ச்சுழியை உவமானமாகச் சொனனாலும சரியாகமாட்டாது, ஆகையால் மகிழமலாபோல விளங்குகின்றதென்று சொனனால சொலலலாம; அதைவிடவேறென்ன உவமைதானிருக்கின்றது. மரகதமலையானது அஞ்சும்படி அக்ன்றுயர்ந்து பிரகாசிக்கின்ற திருமாரபை, சிமகாலட்சுமிவிட்டுப் பிரியாதிருக்கும்படித் தவஞ்செய்யாளாலை அவளைவிட்டுத தரித்திரமுடையவர்கள் யாரிருக்கின்றார்கள்? கமலமெனறு வணடுகள்சுற்றும்படி முழங்கால் அளவும் நீண்ட திருக்கைகளுக்கு, ஐராவதத்தினுடைய துமபிக்கையானது சிறிது உவமையாகுமென்று சொல்லலாம. அதுதவிர வேறொன்று உவமையாகுமா? பகற்காலத்திலே தாமணாமலர்களைக் கணடதுபோலத் தோன்றுகின்ற அக்கைகளின் நகங்கள், முற்காலத்திலே இரணியனுடைய வச்சிர சரீரத்தைப்

பிளந்தபடியினாலே இப்பொழுது அவைகள் கூர்மழுங்கியிருக்கின்றன. அந்த அழகியமணவாளருடைய திருத்தோள்களுக்கு உவமானமாக மால்வனையைச் சொல்லுவோமென்றால் அது திரண்டிருக்கவேண்டும, பிரகாசமுண்டாயிருக்கவேண்டும், விசயலட்சுமி வாசமாயிருக்கவேண்டும், விலகாரி புரண்டுகொண்டிருக்கவேண்டும், கீர்த்திபொருந்தியிருக்கவேண்டும், ஒன்றைப்போல இரண்டு சேர்ந்திருக்கவேண்டும் இப்படியெல்லா மில்லாததினாலே அப்படியங்களுக்கு மலை உவமானமாகமாட்டாது. திருக்கழுத்திற்குச் சமுத்திரத்திலுண்டாகிய சங்கத்தையும் கன்னிக்கழுகையும் தெரியாதவர்கள் உவமானமாகச் சொல்லுவாகள். சேடசாயியாகிய திருமறுமார்பன் இடக்காத்தில் ஏந்துகின்ற பாஞ்சசன்னியமிருக்க அவைகளையெலலாம உவமிக்க எனக்குச் சம்மதமா யிருக்கவில்லை. எமபெருமானுடைய திருமுகத்திற்குச் சங்கமலத்தை உவமானஞ் சொல்லலாமென்றால் திருக்கணகளுக்கு உவமானமாகிய பொருள் வேறென்னசொல்லுவேன்? பூரணசந்திரனைச் சொல்லலாகாதாவென்று தேவரீர அருளிச்செய்வீரானால், அச்சந்திரன் தன்பிரகாசத்துடனே உருவமும் காளைக்காள் மெலிந்து தேய்ந்துபோவதனால் திவ்வியமாகிய பிரகாசத்துடனேகூடிய அத்திருமுகமண்டலத்திற்குச் சமானமாகதகக்கதா? திருவாயின் அழகுக்குச் சிவந்தநிறத்தையுடைய தாமனையே ஒப்பாகுமென்றால அதுகானபபடுமா, அப்படியிருக்க, குளிர்ச்சிபொருந்தி அமிர்தமூறுகின்றமிருதுவாகியஇன்சொலலுங் குறுநகையுமில்லாமலிருக்கின்ற பவளமா? அதறகு உவமை சொலலத்தக்கது? தகாததாயினும் பெரியோர்களாலே அத்தச்செவ்வாய் திருப்பவளமென்றுசொல்லப்பட்டிருக்கின்றது. கேளுமமமா சானகியாரே! சுவாமியின்வரிசையாகிய தந்தங்கள் முத்துகளோ நிலவின் துளிர்களோ? அமிர்தத்தின் துளிகளோ காமத்தின் முளைகளோ? மெய்ம்மையின் அரும்புகளோ அல்லது மற்றெவைகளோ? அவற்றின் திருவழகுக்கு உவமானம என்னவென்றுசொல்லுவேன்? கிருபாநிதியாகிய சீராமபிரானுடைய மேலவாய் அதரத்தைச் சேர்ந்திருக்கின்ற திருமூக்கு இந்திரநீலக்கொழுந்தும் மரகதத்தன காந்தியும்போலப்பசந்த மேனியை யுடையதாய், இந்திரகோபத்தைக் கவ்விய பச்சோந்தியைப்போலப் பிரகாசிக்கின்றதென்று சொல்லுவோமென்றால் அதுவும் உவமையாகமாட்டாது. அக்கரதூடண திரிசிராகளுடைய யுத்தத்திலே அநேக அரக்கவந்தங்களும், பல்வகைப்பட்ட பேய்களும, தேவர்களும், முனிவர்களும், தர்மமும், வேதமும், இனி அரக்கர்குலம கட்டழிந்துபோமென்று சந்தோஷித்துக் குதித்துக் கூத்தாடவும, சுவாமியினுடைய பிரசண்ட உத்தண்ட கோதண்டமானது வளையவும் அன்றுவளைந்த அவருடைய திருப்புருவத்திற்கு உவமானம் நீரே பார்த்துக்கொள்ளும். நெற்றியின் திருவழகுக்கு உவமானஞ்சொல்லவேண்டு மென்றால் பிறையைத்தான் சொலலவேண்டும். அதுவும் நடுவே மறுவும் வளர்வதும தேய்வதும் பாம்பின்வாயில் அகப்படுவதும் உதயமாவதும் அத்தமிப்பதும் இல்லாமல் பகற்காலத்திலும் பிரகாசிக்கின்றதாய் இருளின்கீழ் எக்காளும் சேர்ந்திருக்குமானால் அவருடைய திருநெற்றிக்கு உவமையாகும். கேசுமானது நீண்டு, குழன்று, நெய்தோய்ந்து, இருண்டு, நெறி

த்து, நெருங்கி நீலவர்ணமாய்முறுக்குற்றுச்சரிந்து, கடைசுருணைடு, அகிற்புகை யுடனே மற்றுமுள்ள வாசனைகளை பூட்டவும் புட்பமாலைகளைச் சூட்டவும் வேண்டுவதில்லை யென்னும்படி, இயற்கையாய்த் தெய்வமணம் வீசிக்கொணடு இப்போது சடையாயு மிருக்கின்றதனாலை அதைபோகதிறகுச் சமானபா மென்று சொல்வது இழிவலலவோ? பிதாவானவா பட்டாபிஷேகம் பண் ணிக்கொண்டி பாக்கியத்தையும் இராச்சியதையும் பெற்றிருந்து இராசரிகஞ் செய்யென்று சொன்னபோதும், சிறியதாயார் இராச்சியதனைவிட்டு அரணி யத்திற்குப் போவென்று சொல்லபபுறப்பட்டு வந்தபோதும் ஒருதன்மையாய்க் கடந்த அச்சீராமபிரானுடைய கடையை இடபத்தின இழிவாகிய கடைக்குச் சமானமாயிருக்கினறதனறு சொன்னல், அப்படி எகாளும ஒருதன்மையா கிய கடையிலலாத இடபத்தை உவமானமாகச் சொலலுகிறவாகள் என்னு டைய கடையைத்தானே சொல்லலாகாதாவென்று, மதயானை மனமவருந்து மே, ஆகையால் இரண்டையுஞ் சொல்லக்கூடாதமமாவென்று இவ்வணண மாக அனுமான்சொல்ல, அவற்றையெல்லாம காணுமிதமாகக் கேட்டுக்கொ ண்டுவந்த பிராட்டியார அக்கினியிலிட்டமெழுகேபோல உருகித்தமை அறி யாமல் பரவசப்பட்டு மனங்களைந்தார். அப்படி உருகின்ற சீதாபிராட்டியை மாருதி பூமியில்விழுந்து எட்டுறுப்பு நிலமுறச்சேவித்துக்கொணடு என்தாயே! சர்வலோக சரணியனாகிய உபமுடைய பிரானைநாயகாசொலலிய சிலகுறிக ளும் அடையாளச்சொற்களுமிருக்கின்றன; அவறறையுஞ் சொலலுகின்றேன், கேளுமமமா உலகமாதாவே! என்று சொலலுகின்றார்.

கவி.

நடத்தலரி தாகுறொறி நாள்கள்சில தாயாக்
கடுததபனி செய்திவ ணிருததியென வசசொற்
குடுத்ததுகி லொடுமுயி ருக்கவுட லொடுமெ
டுதததமுனி வோடுபய னின்றது மிசைபபாய.

* * * *

இருந்துபசி யாலிட ருழந்துவக் களெயதும
அருந்துமமு தாகிய கறததவனை யணமும
விருந்துமென லாகிய்து வீயுமுயிர மீளும
மருந்துமென லாகியது வாழ்மணி யாழி. என்பன.

இரகுநாயகன் தேவரீனைநோக்கி வழிநடக்கிறதோ உனக்குப்பிரயாசம. சிலநாள்மாத்திரம் எனக்குத்தாய்மாகளாகிய உங்கள் மாமிமார்களுக்கு உரிய பணிவிடைகளைச் செய்துகொணடு நீ இவ்விடத்திலதானே யிருமவென்று சொ ன்னவுடனே, நீர் உடுத்த ஆடையோடுமெ உயிர் பதைக்கின்ற பிரகதத்தோடும் மிகுந்தகோபத்தோடுமெ திருமாலினகையை விட்டுப் பிரயாண சங்காகமாய் அப் பால்வந்து நின்றீராம். அதையும் சொலலென்றும் .அதுவுமல்லாமல்மகுடாதி பதியாகிய தசரத சக்கரவர்த்தியினுடைய ஆணையைச் சிரமாசவகித்தத்தாம் பெற்ற பரிபூரணமாகிய சம்பத்துகளையெல்லாம் விட்டுநீங்கி, வனத்திற்குவரும் போது பட்டணத்துமதிலையும் கோட்டைவாசலையும் தாண்டி வெளிப்படாத கற்கு முன்னேதானே காடு எங்கேயென்று கேட்டீராம்? அதையுஞ் சொல்

லென்றும் உங்களைத் தேரின்மேல் ஏற்றிக்கொண்டுவந்து வழிவிட்ட சுமந்திரருடனே செய்தி சொல்லி அனுப்பும்போது நீர் அவனைப்பார்த்து என்தங்கைமார்களுடனே உங்கள் தமக்கையாகிய சிதையானவள் ஸ்ரீ ரகுநாயகன் திருவாய்மலர்ந்தருளுகின்ற வசனசாதுரியத்தால், மீனுதுக்கமெல்லாந் தணியப்பட்டாளென்றும் தான்வளர்த்த கிளிப்பிள்ளைக்கும் காகணவாய்ப்பறவைக்கும் சொற்கள் கற்பித்து அவைகள் இளைத்துப்போகாமல் சாக்கிரதையாகக் காப்பாற்றச் சொன்னாளென்றும் சொல்லச் சொன்னீராம்; அதையுஞ் சொல்லென்றும் மற்றுஞ் சொல்லவேண்டியது என்ன இருக்கின்றதென்றும சொல்லீத்தமது திருநாமத்தைப் பதித்திருக்கின்றதும், எழுதப்படாத சித்திரவேலையையுடையதும் அழகும் பிரகாசமுமுள்ளதுமாகிய,ஒருதிருவாழியை எடுத்து இதை நீ சானகிகையிற் கொடுவென்று கொடுத்தாரென்று இரண்டு கைகளாலும் ஏந்திக்கொண்டு காண்பித்தார். அந்தக்கணையாழியைப் பிராட்டியார் கண்டார், கண்டபொழுது ஸ்திரீ ரத்னமாயிருக்கின்ற சானகியாருக்கு உண்டாகிய சந்தோஷத்தை என்னசொலலுவேன்! மானிடராய்ப்பிறந்தும் மோக்ஷம் பெறவேண்டிய முயற்சியில்லாமல இறந்தவர்கள் அதைச் சர்வேசுரனுடைய நிர்ஹேதுக கருணையால் அடைந்தாரென்பதாகச் சொல்லுவேனே? ஒருபொருளைவைத்து மறந்துபோய்க்காணுமல் துக்கித்தவர்கள் மறுபடி அப்பொருளை நிதானத்தெடுத்தாக ளென்பதாகச் சொலலுவேனே? தேகத்தை விட்டு நீங்கிப்போன உயிரானது மீளவும அத்தேகத்தில்தானே வந்து புகுந்ததென்பதாகச் சொல்லுவேனே? இப்பிராட்டியாருடைய செய்கையை அறிவதெப்படி? காகமானது தானிழந்த தனது மாணிக்கத்தைத் தன் கண்ணுக்கு எதிரேயிருக்கக்கண்டது போலவும், தம்முடைய கையைவிட்டு நீங்கிய பிதிராரச்சிதமானதிரவியம கிடைக்கப்பெற்றவர்கள்போலவும், பிள்ளைக்கு ஏக்கற்றிருந்த மலடி பிள்ளையைப்பெற்றதுபோலவும, கண்ணில்லாமலிருந்த ஆன்மா கண் பெற்றதுபோலவும் அமரிமிதானந்தத்துடனே அதைவாங்கி ஸ்தனங்களினிடத்தில் வைத்துச் சிரத்தின்மேல தாங்கிக் கண்களில் ஒற்றிக்கொணடு, தோள்கள் பூரித்து மெலிந்து குளிர்ந்து வெதுமபி ஏங்கிப்பெருமூச்செறிந்தார். அதை இன்னதெனறு ஒருவரால தெரிந்து சொலலக்கூடுமோ? அத்திருவாழியை மூக்கினிடத்தில வைத்து மோபபார். திருமுலைகளின்மேல சோத்துமுயங்குவார். கண்ணீரைத் துடைத்துக்கொண்டு மறுபடியும கணைகளில் நீர்ததும்ப நெடுநேரம் உற்றுப்பார்ப்பார். அதனுடனே பேசலாமென்றும் நினைப்பார். ஒன்றுஞ் சொலலாதிருப்பார். மகிழ்ச்சியினற் சரீரம் புளகித்து மயிர்க்குச் சிலிர்ப்பப்படுவார். அதைவிழுங்குவாமென்றும் இச்சிப்பார். அந்த மோதிரத்தின் பிரகாசத்தினல், மின்னலுக்கு ஒப்பாகிய பிராட்டியாருடைய திருமேனிமுழுதும் மாற்றுயர்ந்த பொன்னிறமாய் ஒளிசெய்யத் தலைப்பட்டது. அதனல அந்தக் கணையாழியானது, தீண்டின மாத்திரத்தில் சகல வஸ்துகளையும் பொன்னுகச்செய்யும் ஸ்பரிச வேதியென்கின்ற தெய்வீகமாகிய ரத்னந்தானே? மற்றும் சானகியாருக்கு, அசோகவாள் பசியாயிருந்தவர்களுக்குத் தேவாமிர்தம் கிடைத்ததுபோலவும், தருமசிந்தை யுள்ளவர்க

ளிடத்தில்வந்த விருந்தினர்போலவும், பிராணன் போகின்ற சமயத்திலே கிடைத்த சஞ்சீவிமருந்து போலவு மிருந்தது. மாணிக்கமயமாகிய அத்திரு வாழியானது இவ்வாறுக உயினை உருக்குதலால் அச்சகன்மாதாகண்ணீர் முந்துப்போல் தனங்களின்மேல்துளிக்க, பவளமபோலப்பிரகாசிக்கின்ற திரு வாயிலிருந்து உற்பத்தியாகியசொற்கள் குழற அநுமானே! என்பிராணனைக் கொடுத்தாய், ஆதலால் நீ பரமோத்தமனென்று சொலலிப பின்னுஞ் சில வார்த்தை சொல்லுகின்றார்.

கவி.

மும்மையா முலகந்தந்த முதல்வற்கு முதல்வ முறறும்
செமமையா லுயிாதந்தாய்க்குச் செயலெனறு மிலளிய துண்டே
அம்மையா யததனுய வப்பனே யருளின வாற்ற
இம்மையே மறுமைதானு நல்கினை யிசையோ டென்றுள்.

* * * *

பாழியாம் பணைத்தோள்வீர துணையிலேன் பரிவு தீர்த்த
வாழியாய் வள்ளலேயான் மறுவிலா பனதே தெனன்னின
ஊழியோ பகலா யோது மாண்டெலா முலக மேழும
எழும்வீ வுற்ற நூன்று மின்றென விருத்தி யென்றுள்.

சுவர்க்கமர்த்திய பாதாளமாகிய மும்மையுலகத்திலுமுள்ள சகல உயிர்க ளையும் சிருட்டித்த முதல்வனுக்கும் முதலவனனவனே! என்சரீரத்தைவிட்டு நீங்கிப்போய்விடுகின்ற உயினைக்கொடுத்த உனகுக் கைம்மாறு காவென்ன செய்யப் போகின்றேன்? என்னல் செய்வதற்கு எளிதாயிருக்கின்றதா? எனக்குத் தாயும் தகைதையுமாகிய அப்பனே! கிருபைக்கு வாழ்வானவனே! இம்மையு மறுமையும் புகழுடன்தந்த வலியதோளையுடைய வீரனே! ஒருதுணையு மில்லாதென் துன்பத்தைத் தீர்த்தவனே! கான்ருற்றமிலலாத மனமுடையே னென்றுல ஊழியையோர் பகலாகக்கானடோதும் வருஷங்கள் எல்லாம் பதினன்குலகமும அழியும வனையும் இனறுபோல இருக்கவேண்டுமென்றுள். பின்னுஞ் சொல்லுவாரமெலாகிய குணத்தையுடையானே! இரகுநாயகனும இளையபெருமாளும எவ்வாறனடைந்தனர். எவ்வாறுனையடைந்தனா, அடி யேன் செய்கை யாசொலலவறிந்தென்றனா, அதற்கு அனுமானும சொல் லத்தொடங்குவார்; மானுருக்கொண்டு துன்பஞ்செய்தான் மழைபோலும் கருநிறத்தையுடைய மாரீசனென்பவன்; அவனை இராமபாணமபட பூமியில விழுந்தருணத்தில் அழைத்துக்கூவியபேரொலி யும்மை மயக்குங்காரணமாக வே அரக்கன்சொல்ல, அதைக்கண்ணுற்ற இராகவனும இக்குரல இளையவன் கேளாதொழிகவெனச் சபமளித்தருளினன், பின்னை விதியின் மெய்மை கைகூடியது, பொய்க்குரலென்றுபோலாம மெய்மை பின்னை தருமென்று நினைக்குமென்னும்காதண்டதிட்சாகுருவோ இளையவன்வரவைக்கண்டான். கண்டபின்பு இளையபெருமாளுடையமுகத்தினல் நடந்ததையறிந்துகொண்ட இரகுநாயகன் பின்னும நடந்த செய்தியையனைத்துமகேட்டான். வணடுறை சாலையையடைந்து உமதுதிருவுருக்காணுமல உயிருண்டோ இலலையோவென் னுந்தன்மையனுய்த் துன்பத்தால்மிகத்துன்பமுற்றிருந்தான். உலகமாதாவே!

உன்னையெங்குதேடி இப்பொழிலகத்துக்கண்டேன், இதுவனையும் தீதிலனாகவேயிருக்கின்றான், தேகத்திற்குடியிருக்கின்ற உயிரேபோகப் பொய்யுயிர்கொண்டிருக்கின்ற இறைவன் நெஞ்சினின்று மகலாதிருக்கின்றாய்; அழிவுண்டாபோ! இங்கே நீரிருக்கின்றீர், இராகவபிரான் ஆண்டெந்தவுயினைவிடும், அந்நிலையினின்ற இராகவபிரான் அங்கிருந்தும் உலகமாதாவே! உன்னைத்தேடத் துணிந்து மலைவனம் வனந்தாமுதலியவைகளைக்கடந்து தேடியுயிரில்லாமல கடக்கும யந்திரப்பாடவமேபோலத் தன்னுயிரைப் புகழின்பொருட்டுவிற்ற சடாயுவைக்கண்டான்

அவ்வாறுகண்டு அவன்மேனியைநோக்கி மிகத்துயரமடைந்து நீயடைந்தகாரணமெனவென, இரகுநாயகனுக்கு நின்னை இராவணன்செய்த வஞ்சனையைச்சொல்லச்சொலல உலகம் வெந்ததென்று சொல்லுமபடி கோபத்தீயெழுந்ததும் கால இவ்வுலகத்தை என்னமபாற் சுட்டெரிப்பேனென்று தன்கைவிலலை நோக்கியபோது அப்பா இரகுநந்தன! அற்பனுகிய இராவணன் திறுமையைச்செய்ய நீ யுலகமுழுதையும சுட்டெரிக்க வெண்ணலாமா? நீ கொண்ட கோபத்தணியென்று சடாயு தேறுவதிறற் கோபந்தணிந்து அவன் எவ்வழிசென்றான், எங்கிருப்பவன், அவன் ஊர்முதலியனயாவை? நீர் சொல்லுமென்றுசொலல, அதைச்சொலலதொடங்கியகாலத்தில் உயிர்நீங்கவே, இருவருமமிகத்துயரமடைந்தனர். பினனர் அச்சடாயுவை யீமத்தேற்றிச் செய்யத்தக்கடனமை முழுதுஞ்செய்து நாம அவன்சென்றவழிநாடித் தொடர்வோமென்று மலைவனமலைதாரமுதலியவைகளைக்கடந்துசென்றார்கள். அவ்வாறு நின்னைத்தேடியுங்காணமல கண்ணீர்ப்பெருக்கெடுத்தோடுவதனல் நிலதனைச்சேறுசெய்ய நெருபபைக்கண்ட மெழுகேபோல இரகுவீரன் உருகுமெய்யையுடையாராய் இவ்வாறு பிரலாபிக்கத்தொடங்கினன்.

கன்மத்தை யுலகத்தில் யார்தான் கடப்பார்கள். பொன்மொய்த்த தோளையுடைய இராகவபிரான் மையலகொண்டு புலன்கள்வெறுகி ஊமத்த மலரைப் பாமபினையலணிந்த நம்பனுகிய பரமசிவனேபோல உள்மத்தனைய்த் தன்னைச்சிறிது மறியாதவனையினன். பின்னும் மேகம்போல்பவனுகிய இரகுநாயகன் போதாயினபோது உனபால் தணணீரையாடுவதுபோய்யோ? சிதையாகிய பவளக்கொடிபோலபவள்ளதேதடியென்னிடதேதே நீபோ தாவேண்டும், நீதாமற்போலவையேயானல் நெருப்பாய்விடுவாயென்று கோதாவிரியாற்றைப் பார்த்துக்கோபித்தான். மலையைப்பார்த்துக் குன்றே வினைந்துபோகின்றாய்; கோமளக்கொம்பேபோன்ற என்மனைவியைக்காட்டு, நீகாட்டாவிட்டால் இங்கென்னம்போன்றேபோதும், உன்னுடைய குலமுள்ளனவனைத்தும் எரிந்துகரிந்து பொரிந்துபோகவென்றுஞ் சொல்லிக்கொள்வான். பொன்மானுருக்கொண்டு சிலமாயைகளைச்செய்யவலலவா! என்மான்போன்ற சானகிபிரிந்தனள், இப்போதென்று சொலலிக்கொண்டுங்கள் இனத்தை என்வில்லால் மாய்க்கின்றேனென்று மான்களைக் கோபிப்பான். இவ்வாறு தன்பெருமை தானறியாத்தன்மையனுகிய சிராமபிரான் துன்பத்திலாழ்ந்துவருந்த அதைக்கண்ட தம்பிசொல்லித்தேற்று மருந்தாகியமொழியினுல் வருத்தந்தணிவான்.

அவ்வாறு தணியப்பெறுபவனாகிய சீராமபிரான் அந்தஇளையபெருமாளுடனே கூடிக்கொண்டு புறப்பட்டுச் சூரியனுல்உற்பத்தியாகிய எங்கள் சுக்கிரீவமஹாராஜனிருந்த இரிசியமுக பர்வதத்திற்குவந்தார். வந்தவிடத்தில் தேவர்கள் உஜ்ஜீவிக்கும்படி ஸ்ரீராமலட்சுமணர்களுக்கும் சுக்கிரீவமஹாராஜனுக்கும் சிநேகமுண்டாயிற்று. அத்தருணத்தில் தங்களுக்குச்சம்பவித்த ஆபத்தையும் அதுகாரணமாகத் தாங்கள் அவனைத்தேடிவந்ததையும் ஒன்றுமுழியாமற் சொல்லி மனம்புண்ணுகாம்படி வருத்தப்படுமளவில் உம்முடைய திருவாபரணங்களை நாங்கள்காட்ட வேதத்தினுலும் ஞானத்தினுலும் காணப்படாத பரப்பிரமமாகிய இராகவர் அவைகளைக்கண்டு சரீரஸ்மரணையில்லாமல் மூர்ச்சித்திருந்தார்.

அவ்வாறு மூர்ச்சித்திருந்தபின்புதெளிந்து அவ்விரிசியமுகபர்வதத்திற்கு அப்புறத்திலுள்ள கிஷ்கிந்தா பர்வதத்திலிருக்கின்றவனும் இந்த இராவணனை முன்னளில் தன்வாலிலேலகட்டிக்கொண்டு மலைகளையும் கடல்களையும் தாவினவனும் சுக்ரீவனுக்குத் தமையனும் பகைவனுமாகிய வாலியென்பவனை ஒருபாணத்தினுலே பிராணனைவாங்கித் தம்மிடத்தில் அதிக இஷ்டத்தையுடையவளுகிய அவன் தம்பியினது துயரத்தையாற்றி அவனுக்கு இராச்சியபட்டாபிஷேகஞ்செய்வித்து அவனைச்சேனைகளைச் சேகரித்துக்கொண்டுவரும்படி ஆக்கியாபித்து அனுப்பிவிட்டு அவனச்சேனைகளைக் கூட்டிக்கொண்டு வருகின்றவனையும் எதிர்பார்த்துக்கொண்டு அப்பொழுது மாரிகாலமானபடியினல் ஆறுமாதபரியந்தம் மதங்கபர்வதத்திலிருந்தார். பின்புவந்துசேர்ந்த வானரச்சேனைகளைச் சுக்ரீவனுடைய ஆக்கினையினுலே எட்டுத்திக்குகளிலும் அவைகளுக்கு அப்புறத்திலும்போய் உம்மைத்தேடும்படி அனுப்பி அடியேனைத் தென்திசைக்குப் போய்வாவென்று அனுப்ப வந்தேனென்று பூதபௌஷ்ய வர்த்தமானமாகிய திரிகால அதிசயங்களையும் அறியத்தக்க திவ்விய ஞானியாகிய ஆஞ்சநேயர் மகத்தாகிய அன்புடனே இரண்டுகால்களையுஞ் சேரவைத்துக் கைகட்டி வாய்புதைத்துக்கொண்டு நின்று நைச்சியமாக விண்ணப்பஞ்செய்தனர். அவைகளைக்கேட்டுச் சிதாபிராட்டியார் சாத்விகப்பிரமமாகிய ஸ்ரீராமர் படும் உபத்திரவங்களையெல்லாம் நினைத்துநினைத்து எலும்பும் உருகிக்கனைய இரங்கி ஏங்கித்துக்கமும் சந்தோஷமும் மாறிமாறித்தோன்றுகின்ற உள்ளத்தையுடையவராய்க் கண்ணீர்தாரைதாரையாகப் பெருகப் பூரணகிருபையுடனே பார்த்து அப்பாகுழந்தாய் அநுமானே! நீவந்த மார்க்கத்தின்மத்தியிலே சமுத்திரமிருக்கின்றதே? அதை எப்படிக்கடந்துவந்தாய் சொல்லென்று கேட்டருளத்தரியே தேவரீருக்குத் காயகராகிய ஸ்ரீராமச்சந்திரருடைய பொன்னடியைத் தியானிக்கின்றவர்கள் ஒழியாத மூலப்பிரகிருதியாகிய பெரியமாயாசமுத்திரத்தைக்கடந்து பரமபதகூத்திரத்தைச் சேர்கின்றதுபோலத் தாசனுகிய நானும் அவர்திருவடியை ஸ்மரணைசெய்துகொண்டு என்காவினுலே தான் இக்கடலைக்கடந்துவந்து உம்முடைய சரணாரவிந்தத்தை அடைந்தேனென்று அநுமான் சொன்னர். அதுகேட்டுச் சிதாபிராட்டியார் ஆச்சரியப்பட்டுக் கேளப்பா! இவ்வளவு சொற்பமாகிய சரீரத்தையுடைய நீ அவ்

வுள்வு பெரிதாகிய சாகரத்தைக் கடந்துவந்தது தபோபலத்தினுலேயோ! அல்லது அணிமா, மகிமா, கரிமா, இலகிமா, பிராப்தி, பிரகாமியம், ஈசத்துவம், வசித்துவமென்கின்ற அஷ்டமாசித்திகளாலேயோ! சொல்லக்கடவாயென்று புன்சிரிப்புடனேகேட்க ஜகதீசுவரியே! என்னுடைய சொற்பமாகிய உருவத்தைப் பார்த்தருளுமென்று இரண்டுகைகளையுங் குவித்து அஞ்சலிபண்ணி நின்றபடியே, அணுமுகட்டைமுட்டுகின்ற சிரமும்திசைகளெல்லாம் நிறைந்ததோள்களும் பஞ்சமாபூதங்களுஞ்சேர்ந்து ஒருவடிவெடுத்ததுபோலச் சரீரகாத்திரமும் மாய் மகாமேருவில் வளர்ந்தோங்கிய விருக்ஷசாலங்கள்தோறும் மொய்த்துக் கொண்டிருக்கின்றமின்மினிகூட்டங்கள்போலதமதுதிருமேனியின்உரோமங் களேதோறும் சுரூத்திரங்கள் தொத்திக்கொண்டிருக்கவும கண்ணுக்கும் அறிவுக்கும் எட்டப்படாத காட்சியுடனே சுதிரமண்டல சூரியமண்டலங்களுக் குப் பிரியாய் இரண்டுகாதிலும் மகரகுண்டலங்கள் பிரகாசிக்கவும அதியுன்னதமாக வளர்ந்தார். அதற்குமுன் இதுமிகவும அற்பமாகிய ஒருகுரங்கென்று அலக்ஷியமாக நினைத்த பிராட்டியாரும அபபடி விசுவரூபங்கொண்ட ஆஞ்சனேயனை உற்றுப்பார்த்து இந்த அநுமானுடைய உயிர்வுக்குத்தமது திரிவிக்கிரம சொரூபத்தின் உயிரவும ஒரு இலக்ஷியமாகத்தக்கதன்றென்று, உலகங்களையெல்லாம் அளந்த மகாவிஷ்ணுவும வெட்கபபடுவாரென்று எண்ணினார். அப்பொழுது அஷ்டதிக்குகளிலும எலலா உலகங்களிலும உள்ள சகல ஆத்மாக்களும் அவரது திருமேனியைக்கணடன, அவரும் தமமுடையமேத்தி ரத்தினுல் சுவர்க்காதிலோகங்களிலுண்டாகிய சகலதேவர்களையும பாத்தார் இவ்வண்ணமாக எழுந்துயர்ந்த பரமோத்தமனுகிய அநுமானுடையஇரண்டு பாதங்களும் அழுந்துவதினுல் நிலமபுதைந்து இலங்கைக்குள்ளே சமுத்திரம் வந்துவிழுந்தது அலைவீசத் தலைப்பட்டதனுல கடலிலிருந்த மீன்களெல்லாம் அந்த இலங்காபட்டணத்திலே தெளிந்துபுரணடன மறுவிலலாத கற்புடைய ஸ்திரீரத்னமாகிய சானகியார் அந்த மாருதியினுடைய தாமரைப்புஷ்பத்திற்கு ஒப்பாகியபாதத்தின் உயரத்தையுங்காணுதவராய் அதிசயித்து இனிராக்கதவர் சுகம் நிர்மூலமாய்ப் போய்விடுமென்று திருவுள்ளதிற்குறித்துக்கொணடு அநுமானேநோக்கி அப்பா! என்கண்மணியாகிய ஆஞ்சனேயனே! எனக்குப்பாராக்கப் பயமாயிருக்கின்றது.உலகத்திலும உனதுடைய விசுவரூபத்தை முழுதும பார்க்கத்தக்கவர் யாவருமில்லை, ஆகையாலினைதச் சுருக்கிக்கொண்டு முன்பு உனக்குள்ள வடிவமே கொண்டிருவென்றுசொலலி இரகூராயகருடையதிருத் தோள்களினைத்தழுவியதுபோல ஆனந்தபரவசபபட்டார். அப்படிபபிராட்டியார் நியமித்தமாத்திரத்தில்என்தாயே புத்திபுத்தியென்று சொல்லி அண்டத்திற்கு மேலும் உயர்ந்த அநுமானே அந்த விசுவரூபத்தையடக்கிக் கண்ணுக்கு அடங்கத்தக்க முன்னைய உருவத்துடனே எதிரே நின்று சுமஸ்காரஞ்செய்தார். அவனைப்பார்த்தருளிப் பின்னும் பிராட்டியார்சொல்லுகின்றார்.

இடந்தாயுலகைமலியோடெழுத்தாவிசும்பையினைவகைக்கும்
படிந்தாழ்சலைவையொருகோத்தாம்பறித்தாயெனினும்பயனின்றால்
கடந்தாயிடையேயென்றனுமானுனக்குநானிற்கடலைக்
கடந்தாயென்றலென்னருங்காற்றுமன்னகில்லையால்.

* * * * *

மாண்டேனெனினும்பழுதன்றேயின்றேமாயச்சிறைநின்று
மீண்டேனெனவெயொறுத்தானைக்குலங்களோடும்வேரறுத்தேன்
பூண்டேனெங்கோன்பொலன்கழலும் புகழேயன்றிப்புன்பழியும்
தீண்டேனென்றுமனமகிழ்ந்தாடிருவின்முகத்துத்திருவன்னாள்.
என்பன.

பிரசண்டமாருதத்திற்கு ஒப்பானவேகத்தையுடைய அதிவீரனுகிய அநு மானே! உன்சாமர்த்தியத்தைப்பாத்தால நீ இந்தப்பூமியைப்பேர்த்தாலும்சப் தகுலபர்வதங்களுடனே ஆகாசத்தைஎடுத்தாலும், இவற்றைச் சுமந்துகொண் டிருக்கின்றஆதிசேஷனை ஒருகையினுற்பறித்தாலும் ஒருபிரயோசனமுமில்லை; அலலாமலும கடலின்மத்தியிலே நடந்தாயானாலும் அதுவுனக்கு நாணுதலாக வேயிருக்கும் அப்படியிருக்க நீ இக்கடலைக்கடந்தாயென்று சொல்லுகின்றது சிறுமையேயலலாமல் எவ்வளவுபெருமையாகும்? சக்கரத்தைக் கையிலேதாங்கிய அப்பாமபுருஷருடைய கிருபையையும் கீர்த்தியையும் அழிவில்லாமல் பல்லூழிகாலம் நிலைநிற்கும்படிச்செய்வதற்கு நீ ஒருவனே யுண்டாயிருக்கின் றாயாகையால் உன்பெருமைக்குத் தக்கபடி இந்தப் பகையாளியினுடையு இலங்கையானது ஏழுசமுத்திரத்திற்கும் அப்புறத்திலிராமல் இவ்வளவு சமீ பத்திலிருக்கின்றது இழிவன்றே? உனக்கு அறிவும் சொருபமும் பராக்கிரம மும் ஐமபுலன்களை அடக்குந்தன்மையும் செய்யுங்காரியமும் தெளிவும் தெளி ந்தஓழுக்கமும் நினைவும் நீதியுமாகிய இவையெலலாம் ஒன்றுக்கொன்று குறை வில்லாமலிருக்கின்றன. ஆதலாலஇனிப்பிரமாமுதலாகிய மேலானவர்களெல் லாம்இப்படிப்பட்டகுணங்களில் ஒன்றுமில்லாதவர்களென்றன்றே சொல்லப் படுவார்களென்றும மின்னலுக் கொப்பாகிய கோரப்பற்களையும் பலத்தையு முடைய இராக்கதக்கூட்டமமிகுதியாயிருக்கின்றதைப்பாராதும என்பிராண காயகருக்குத் தம்பியாகிய இலட்சுமணர் ஒருவரோயல்லாமல் வேறுதுணையில் லாத பிழையைப்பார்த்து எண்ணியெண்ணி மனந்தளர்ந்த கான் இந்தமகா புருஷன் என்னுயகருக்கு உபபலமாயிருக்கின்றதனுல பயமென்ன! இராக்கதர் கள் என்னத்திற்காவார்களென்று தைரியங்கொணடு இப்பொழுதுதான் அந்தச் சந்தேகம் ஒழிந்து உயிர்பெற்றேனென்றும் இனி நான்மாண்டாலும்பழுதில்லை, இன்றே இந்தமாயச்சிறையில நின்றுமீங்கினேன். எனக்கு இப்படிப்பட்ட துக்கத்தைக்கொடுத்த சத்துருக்களுடையகுலத்தையும கலத்தையும்வேரறுத் தேன். என்பிராணநாதருடையதிருவடியையுஞ்சேவித்தேன்இனிஎனக்குக் கீர் த்தியேயல்லாமல் பழிப்புண்டாகாதென்றுஞ் சொல்லிஸ்ரீமகாலட்சுமியின்திரு மூன்னர் திருமகளுக்குச்சமானமாகிய சீதாபிராட்டியார் சந்தோஷித்தார். அத்தருணத்திலே பிராட்டியாருடைய திருவடியைவணங்கிக் கேளுமம்மா! அருந்ததிக்கு ஒப்பாகிய கற்புக்கரசே! அடியேன் ஒருஅதிசயமானவனு? நான் எவ்வளவு? ஸ்ரீராமருக்கு இக்கக்கடலிலே கிடக்கின்ற மணலைப்போல அநேக வானர சேனவீரர்களிருக்கின்றார்கள். சுவாமியின் திருவடித்தொண்டு செய்கி ன்ற படைத்தலைவர்கள் எண்ணிறந்தவர்களிருக்கின்றார்கள். அப்படைத்தலை

வர்களுக்குள்ளே நான் ஒரு படைத்தலைவனுய்வந்தேன். அழைத்தகூரலுக்கு ஏனென்பேன். ஏவியபணிவிடைகளைச்செய்வேன், முன்சொன்ன வானர சைனியமே! ஒருவிதத்தினல் எழுபதுவெள்ளமாகும் அவற்றுக்குள்ளே ஒவ்வொரு கூரங்கு ஒவ்வொருகை அள்ளிக்குடிக்கிறதற்குத்தான் இந்தச்சமுத்திரசலம்போதுமா? கள்ளச்செய்கையையுடைய அரக்கர்களதுலங்கையை அவைகள் காணுதபடியினுலே இதுவனாக்கும் அழியாமலிருக்கின்றது இப்பொழுது அறிந்தபடியால் இனிநிற்குமா? நிற்கமாட்டாது; வாலியினுடைய தம்பி சுக்ரீவ மஹாராஜனும் அவன்புத்திரனுகிய அங்கதகுமாரனும் மயிந்தன், துமிந்தன், குமுதன், நீலன் ரிஷபன், குமுதாட்சன், பனசன், சரபன் ஜாம்பன், தூம்ரு ஹனன், காம்பன், கயவன்,கவயாட்சன், சங்கன், வினதன், துயிந்தன், கஜன், ஸ்ரம்பன், தூமன், திதிமுகன்சதவலி, என்றுசொல்லப்பட்ட வானரப்படைத் தலைவர்களும் இந்தவுலகத்துடனே எவ்வகைப்பட்ட உலகங்களையும் எடுக்கத் தக்க மகாபலவந்தர்களாயிருக்கின்றவர்கள். மேலும்இராமபாணத்தைப்போல உதவிசெய்கின்றவர்கள், அந்த வானரவீரர்களையெல்லாம் பார்த்தால் இந்த இராக்கதக்கூட்டம் அவர்கள்தொகைக்கு உறையிடுகிறதற்கும் போதாது; அப்படிஎண்ணத்தகாலையாத வானரசேனையிருக்கின்றதம்மாவென்று இப்படி விசதமாக ஆஞ்சனேயர்சொன்னர்.

உருக்காட்டுப்படலம்
முற்றிற்று.

சூடாமணிப்படலம்.

மறுபடியும் அந்த அநுமானனவர் ஸ்ரீமகாலட்சுமிக்குச் சமானமாகிய இத்தப்பிராட்டியார் வெகுவாகத்துன்பப்படுகின்றூர். இவருக்குத்துணையுமில்லை. சகலாண்டங்களுக்கும் தனிநாயகமாகிய எங்கள் இராமபிரானுடைய உயிருக்குயிர்ப்பாயிருக்கின்ற இவளைகான்பார்த்தும் இங்கேதனியேவிட்டுப்போகின்றது கண்மையன்று, சுவாமியினிடத்திற்கொண்டுபோகிறதே யுக்தமென்று தமக்குள்ளேயோசித்து லோகோத்தமியாகிய சானகியாளைநோக்கி, அம்மா கசயேன் ஒரு விண்ணப்பஞ்செய்துகொள்ளுகிறேன். அதைத்தேவரீர் கோபமில்லாமல்கேட்டருளவேண்டும். இந்த இராக்கதன் உம்மைக் கொன்றுவிடுவானேயானல் அப்புறம் இவனைக்கொல்லுகிறது காரியமன்று இவ்வளவு பிராணனுடனேவைத்திருக்கின்ற இந்தச்சமயத்தில்தானே உம்மைக்கொண்டுபோய்ச் சுவாமிசந்நிதியில்காட்டி, அவர்திருவடிக்குத் தண்டன்சமர்ப்பிக்கலாமென்று என்மனத்திலே தோன்றுகின்றது. ஆகையால் அதிகமிருதுவாகிய உரோமங்களிருங்கி அமிசதூளிகாமஞ்சம்போலிருக்கின்ற அடியேனுடைய தோளின்மேல் எழுந்தருளுவீராகில், தேவரீரை ஏந்திக்கொண்டு மத்தியிலெங்குந்தங்காமல் ஒரு இமைப்பொழுதுக்குள்ளே ஸ்ரீராகவர் எழுந்தருளியிருக்கின்ற மலையின்மேல்தாவிக் குதிக்கின்றேன். அதையறிந்து இராக்கதர்கள் இடையிலேவந்து தடுத்தாலும் அவர்களெல்லாமுறிந்து அதமாய்ப்போம்படி எதிர்த்து யுத்தஞ்செய்து சங்கரித்து என்கோபத்தை மூடித்துக்கொள்ளுகி

றேன். நான் ஒருநாளும் ஒருவர்கையிலுஞ்சாகாதவன். கேளுமம்மாதாயே! காயேன். இவ்வீடத்திற்குவந்து நீரிருக்கின்ற இருப்பைக்கண்டும் சுவாமியினிட த்தில் வெறுங்கையுடனே போகமாட்டேன். இலங்கையுடனே உம்மைக் கொண்டுபோக வேண்டுமென்று நீர் சொன்னலும் அப்படியே அடியோடே ப்றித்தெடுத்து, என்னுடைய உள்ளங்கையில் வைத்துக்கொண்டு எதிரோவந்து தடுத்தவர்களைக்கொன்று குவித்துவிட்டுப்போய் ஸ்ரீராம சந்திரனுக்குப் பாத காணிக்கையாகலைக்கின்றேன். இது எனக்கு ஒருபொருளன்று. நீரேசொல லும். சுந்தரத்திருத்தோளனகிய எம்பெருமான் பக்கலிற்போய் என்தாயாரும் உம்முடைய தேவியாருமாகிய தேவாமிர்தத்தை ஒத்த சீதையானவர் சதி காராகிய இராக்கதர்களுடைய பட்டணத்தில் சிறைவைக்கப்பட்டு, மிகுந்த துயரத்துடனே அந்த அருஞ்சிறை நீங்காதிருக்கின்றரென்று சொல்வேனே யானல் அப்பால் என்னடிமைத்திறம் என்னுகும்? பிரபலமாகிய யுத்தஞ் செய்து என்தோளிலே புண்படாமற்போய்ச் சுவாமிசந்நிதியில் சத்துருக்க ளுடைய பராக்கிரமத்தையே விஸ்தரித்து எடுத்துச்சொல்வேனு? அலது பிராட்டியாரைக் கொண்டுவரவில்லை என்பிராணனுக்குமாத்திரம் அபாயமில் லாமல் வந்தேனென்பேனு? அல்லது சானகியாரை நான்காணவேயில்லையென் பேனு? அப்படிவேண்டியதில்லை. ஒருகணப்பொழுதில் இராக்கதக்காவலி யுடைய இந்த இலங்கையைமுழுமையும் எரித்து நீறுக்கி, இராக்கதகுலத்தை யெல்லாங் கொன்றுகருவறுத்து ஜயம்பெற்றுக்கொண்டு சிக்கிரத்தில்போவெ ன்று நீர் ஆக்கியாபித்தாலும் அந்தப்படிச்செய்கின்றேன். அன்றென்றுஉம்மை நான்கொண்டுபோய் இரகுநாயகரிடத்தில் சேர்த்தேனேயாகில் அவருடைய சித்தசாஞ்சல்யம் நீங்கித் தெளிவுண்டாய், தேவரீருடன் அவரிவ்விடத்திற்கு வந்து அளவற்ற இராக்கதவமிசங்களை நாசமாகச் சங்காரஞ்செய்து பின்பு உல கத்திற்குச் சம்பவித்திருக்கின்றதுன்பத்தைநிவாரணஞ்செய்கின்றது, நன்மை யாகக்காணகின்றது. ஆகையால் இனிவேறே சொலலத்தக்கதில்லை. நானிந்த பேறுபெறும்படிக்கிருபைசெய்து கிலேசப்படாமல், அடியேனுடையதோளின் மேல் ஆரோகணித்தருளுமென்று சொலலித் திருவடியில் சாஷ்டாங்கமாக விழுந்து சேவித்தார். இவ்வாறுகத் தகுதியான கலவசனங்களை அன்புடனே வசனித்துத் •தாய்ப்பசுவைக்கண்ட இளங்கனறைப்போலக் களிக்கின்ற அனுமானைப்பார்த்து இவரிலே ஆகாதகாரியம் ஒன்றுமில்லை. தான்சொன்ன படியே செய்யத்தக்கவனென்று திருவுள்ளத்திலெண்ணிப் பிராட்டியார் சொல் லுகின்றார்.

கேளப்பா ஆஞ்சநேயனே! நீயுன்னுடைய சாமர்த்தியத்திற்குத்தக்க யோசனையேசெய்தாய். அது உனக்கு அரியதன்று, அப்படிச்செய்யுவே செய்வாய், அதற்குச்சந்தேகமேயில்லை. ஆயினும் இது உரிய செய்கையன் றென்று மிகுந்த பேதைமையான என்பெண்புத்திக்குத்தக்கதாக ஒருயோ சனை எனக்குத்தோன்றுகின்றது. அது என்னவென்றால், நீஎன்னை எடுத் துக்கொண்டுபோகிறபோது சமுத்திரத்தின் நடுவிலே இந்தக்கொடிய இராக்க தர்கள் வந்து சுற்றிக்கொண்டு, வில்லைவளைத்துப் பாணப்பிரயோகஞ்செய்து

போராடினால் அத்தருணத்தில் ஏன்னையே பாதுகாப்பையா? அவர்களுடன் யுத்தமேசெய்வையா? ஒருவருத்துணையில்லாமல் தனியையாயிருக்கின்ற நீ மிகவும் பிரமிக்கும்படிவருமே. அதுவுமல்லாமல் வேறொன்றிருக்கின்றது. ஸ்ரீராகவருடைய் விஜயகோதண்டத்தின் பிரதாபத்திற்கும் மாசுண்டாகும். ஆதலால் அதனால்வருகின்ற கண்ணமையென்ன? அவர்கள்தான் காய்போல் வந்திந்த ஒருவருமறியாமல் என்னைக்கொண்டுவந்துவிட்டார்கள். நீங்களும் அப்படி நினைக்கலாமா? யுத்தத்திலே சுவாமியின் வில்வீரத்தைத் தேவர்களெல்லாம் காண என்வடிவத்தைக்கண்ட பாவியாகிய இராவணனுடையகண்கள் காக்காகங்கள் கொத்திக்கொத்தித்தின்னும்படி, என்கண்ணிலுலே கண்ட போதல்லாமல் காணுயிருள்ளவளாவேனு? காணமில்லாத ராட்சதிகளுடைய தலிகளெல்லாம் சூர்ப்பநகியின் மூக்கறுபட்டதுபோல அறுபட்டபோதல்லது எனக்குரிய காணமும் பெருமையை யுடையதாகுமா? இலங்கையென்கின்ற பொன்மலையானது பனகவர்களுடைய அஸ்திமலையாகாமற்போனால், என்னுடைய குடிப்பிறப்பையும் ஒழுக்கத்தையும் கற்பையும் கான் பிறருக்கு எப்படி நிலைக்கக்காட்டுவேன்? அல்லாமலும் இந்த ஓரிலங்கையை மாத்திரமன்று; அனைறந்த அண்டங்களையெல்லாம் என்னுடையவாய்ச்சொல் ஒன்றினாலேயே பற்பமாய்ப்போம்படி எரிப்பேன். அவ்வண்ணமாகச்செய்வது இரகுராயகருடைய வில்லாண்மைக்குப்பழுதென்று பொறுத்துக்கொண்டிருக்கின்றேன். அப்பா என்புத்திரனுகிய ஆஞ்சநேயனே! இன்னமொருவார்த்தையுண்டு. அதுவுங்கேள்! வீரசிகாமணியாகிய ஸ்ரீராமபத்திரர் ஒருவர்மாத்திரம் தமது திருக்கரத்தால் தீண்டலாமேயல்லாமல், நீ பஞ்சேந்திரியங்களுஞ்செய்திருந்தும் ஆண்வடிவங்கொண்டிருக்கிறதினால் என்னைத்தொடக்கூடுமா? புத்தியீனனுகிய இராவணன் என்னைத்தீண்டுவானேயானால் இத்தனைகாள் உயிரோடுங்கூடிவாழ்வானு? அவன் இவளைத்தீண்டினால் ஒருகொடிப்பொழுதிற்குமுன்னம் மாண்டுபோய் விடுவோமென்றன்றே பூமியோடும் பேர்த்து எடுத்துக்கொண்டுவந்தான். இதுவுமல்லாமல் ஜகத்திரக்ஷகனுடைய திருவுந்திக்கமலத்தில் உற்பவித்த பிரமதேவன் பூர்வகாலத்தில் இந்த மகாபாதகனைக்குறித்தே, நீ உன்னிடத்தில் மனோரம்மியப்படாத ஸ்திரீகளைத்தொட்டால் உன்சிரம் சகஸ்திரபத்தலாக வெடிக்கக்கடவதென்று சாபமிட்டிருக்கின்றன். அதுவன்றே காணிறக்துபோகாமலிருக்கும்படி என்பிராணைக்காத்தது. அவன் என்னையெடுத்துவந்ததைக்குறித்து நான் துக்கப்படுகிற சமயத்தில் அவ்விதமாகிய பிரமசாபம் அவனுக்கு உண்டென்று, சத்தியசந்தனுகிய விபீஷணன்பும் புத்திரி திரிசடையென்பவள் என்னிடத்தில்அன்பினால் எனக்குஇரகசியமாகச்சொல்லி, அம்மா நீயாதொன்றுக்கும் அஞ்சாதையென்று எனக்குத்தயிரியத்தையுண்டாக்கி வியசனத்தைநீக்கினாள். இராவணன் அப்படிச்சாபம்பெற்றிருக்கின்றவனுகையால் அதிக்கிரமிப்பானேயானால் மரணமடைவானென்றும், தர்மந்தவறமாட்டானென்றும், என்னுயகருடைய புஜபராக்கிரமத்தையிடமான எண்ணியும், இவையல்லாமலும் என்கற்பின் மகத்துவத்தைக்காட்டவுமே இவ்வளவுகாலவ்வரைக்கும் இரகுகுலோத்தமனைப்பிரிந்து தனியே

யிருந்தும், இந்தச்சரீரத்தைவைத்துக்கொண்டிருக்கின்றேன். மேலும் இருந்த விடத்தைவிட்டு கான் அப்புறம் பெயரவேயில்லை. அதற்குத்திருஷ்டாந்தம் என்னவென்றால், முன்னாளில் எனக்கு இருப்பிடமாக இளையபெருமாளால் அமைக்கப்பட்ட பர்ணசாலை வஞ்சகனாகிய இராவணனால், தண்டகாரணியத்தி லிருந்து பலத்துடனே பேர்த்தெடுத்துக்கொண்டுவந்து இவ்விடத்தில் வைக் கப்பட்டிருந்தின்றது. இதை உன்னுடைய கருணைசுரந்தகண்களினால் செவ் வையாகப்பார். இந்த நீர் நிறைந்த தாமரைப்பொய்கையானது கோதண்ட தீட்சர் குருவாய் விளங்காநின்ற சுவாமியினுடைய மரகதத்திருமேனியைப் போலிருக்கின்றதாகையால் இவ்விடத்திற்குச் சோர்ந்துபோகின்ற என்பிரா ணனை இரட்சித்துக்கொள்கின்ற நிமித்தமாகவருவேன். இதுதவிர இருப்பிட த்தை ஒருபொழுதும் நீங்குகிறதேயில்லை. ஆகையினாலே நீ யென்னைக் கொண்டுபோகிறது காரியமன்று. ஐயா! வேதநாயகனாகிய ஸ்ரீராமச்சந்திர னிடத்திற்கு திரும்பிப்போய்ச்சேர்வது காரியமென்றுலோகமாதாவாகிய பிரா ட்டியார்சொல்ல, அந்த மகாதுல்லியாகிய ஆஞ்சனேயர் இந்த ஜகத்காரண ராகிய ஸ்ரீராகவருடைய தேவியார் கொண்டவிரதம், கன்றுயிருக்கின்றதை ன்று நினைத்துச் சந்தேகமும் வருத்தமும் நீங்கினவராய் மனமகிழ்ச்சிகூர்ந்து ஆனந்தபாவசமாய்த் துதிசெய்து, என்தாயே தேவரீர் திருவுள்ளம் அப்படி யானால் இராவணனால் இந்தவுலகம் அந்தகாரப்பட்டிருக்கின்றதே அது நிவா ரணமாகும். இனிச்சிலநாள் மாத்திரம் நீர் வருத்தப்படாமல் இவ்விடத்தில் தானே யெழுந்தருளியிரும்.

அவ்விடத்தில் பிரமைகொண்டிருக்கின்ற ஸ்வாமிக்கு அடியேன்போய்ச் சொல்லத்தக்கவார்த்தைகள் என்ன? அவற்றையும் அருளிச்செய்யுமென்று சாஷ்டாங்கமாகச்சேவித்தார். அத்தருணத்திலபிராட்டியார் சொல்லுகின்றார். நீதிமானாகிய அநுமானே! தமியேனாகிய கான் உன்னைப்பார்த்ததனால் இன் னம் ஒருமாதபரியந்தம் உயிரோடிருப்பேன். அதற்குமேல் அந்தஇராமச்சந்திர னுடைய திருவடிசாட்சியாகப் பிராணனைவைத்துக்கொண்ருடிக்கிறதில்லை. இதை நீ உறுதியாக மனத்திலேகொள். ஆரங்கள் பிரகாசிக்கின்ற திருமார்பை யுடைய இரகுகுலோத்தமருக்கு கான்பத்தினியல்லே னென்றிருந்தாலுமிருக் கட்டும். அவருடைய இதயதனில் இரக்கமும் அன்புமில்லாமலிருக்கும்படிக் காத்துக்கொள்ள நீ யவனா வேண்டிக்கொள். யாவரும் அதிசெய்யத்தக்க பராக்கிமசாலியாகிய இளையபெருமாளுக்கு உம்முடையதமையனர் ஆக்கினை ப்படி என்னை நீக்காதிருந்தவராகையால் மத்தியிலே எனக்குச் சம்பவித்த இந்தக்கொடியசிறையை மீட்கின்றகடன் உம்முடையதுதானென்று கான் சொன்னதாக ஒருவார்த்தைசொல்லு, மேலும், கான்கொண்டவிரதம் ஒரு மாதத்தில் முடிந்துபோம். அதற்குள்ளே ஸ்வாமியானவர் இங்கேயெழுந்தருளா விட்டால் அவர்கையினாலே கங்கையில் எனக்குச்செய்யவேண்டிய உதவிகள் கடனைச்செய்துவிடச்சொல்லு. சிரேஷ்டமாகிய எங்கள்மாமிமார் மூவருக் கும் உற்றன் மருமகளாகிய சிதையானவள் அவ்விடத்திலேதானே இருக் போலின்றாள். உங்களுக்கு நமஸ்காரஞ்செய்தாளென்று இந்தச்சொல்லை ஒரு

வேனை தர்மஸ்வரூபியாகிய என்னுயகர் என்னிடத்தில் கிருபைபில்லாமல் சொல்லுகிறதற்கு மறந்துபோனலும் நீ மறவாமற்சொல்லு. கல்யாணகுண பிராமானவர் என்னவந்து பாணிக்கிரகணஞ்செய்த அன்றைத்தினம் இந்த சன்மத்தில் நான் உன்னைவிட்டு மற்றொருஸ்திரீயைத்தொடும்படி மனத்தினலும் நினைக்கிறதேயில்லையென்று எனக்கு வரங்கொடுத்திருந்தார். அதையும் அவர் திருச்செவியிற்கேட்கும்படிச்சொல்லு. தான் இவ்விடத்திலிருந்து இந்தத்துயரத்திலல் மாண்டுபோனலும் புகர்ச்சன்மமெடுத்துவந்தாவது உம்முடையதிருமேனியைத்தழுவத்தக்கமகத்தாகியவொருவரம்வேண்டித்தொழுதுநிற்கின்றனென்றுசொல்லு. அவர்பட்டாபிஷேகஞ்செய்துகொண்டுவரத்தங்கா தனத்தில்எழுந்தருளியிருந்து இராசரீகஞ்செய்கின்றதிருவழகையும், சத்திரசா மரங்களுடனே பட்டத்து யானையின்மேலாக வீதியிற் பவனிவருகின்ற திருக் கோலத்தையும், கண்களிக்கும்படித் தரிசிக்கப் பிராப்தியில்லாத நான் பல பலவார்த்தைகளைச்சொல்லியும்என்னபயன்? என் விதிச்செயலிப்படியுமிருந்த தன்றோவென்று நினைக்கின்றேன். இன்னமொன்று கேளப்பா. ஆஞ்சநேயா! தம்மைப்பிரிந்ததைக்குறித்து, உலகத்தார் பிரலாபிப்பதற்காவும், தாய்மார்கள் படுகின்ற துக்கத்திற்காகவும், பரதாழ்வான் முதலாகிய தம்பிமார்கள் அடைக்த வருத்தத்திற்காகவும், அவ்விடத்திற்குப் போவாரேயல்லாமல் என் னைக்குறித்து இவ்விடத்திற்கு எப்படிவாப்போகிறார். மிதிலையிலிருக்கின்ற எங்கள் மாதாபிதாமுதலாகிய பந்துசனங்களுக்கெல்லாம்என்வந்தனைசொல்லு. வானரசேனாதிபதியாகியசுக்ரீவனை உன்னுடையதோழராகிய இரகுநாயகனைக் கைவிடாமல் பாதுகாத்து அயோத்திக்கு அழைத்துக்கொண்டுபோய்ப் பட்டாபிஷேகஞ் செய்விக்கச்சொல்லு என்று இவ்வண்ணமாகக் கண்களிலே நீர் பெருகிப் பாயும்படித் துககத்துடனேசொல்லினர். இப்படிச் சொல்லிக்கொண்டிவந்த பிராட்டியானைப்பார்த்து, அம்மா! இன்னமும் தேவரீருடையவிய சன்மம் நீங்கவில்லையே யென்று ஆஞ்சநேயா பின்னும் பலபல ஏதுக்களை யுடைய இனிமையுண்டாகிய நல்லவசனங்களைத் தெளியும்படிச் சொல்லத் தொடங்கினர்.

என்தாயே! தேவரீரும் இவ்விடத்தில் இறந்துபோவீர். அப்பால் மெய் தளர்ந்திருக்கின்ற ஸ்ரீராமச்சந்திரரும் இறவாமல் பிராணனுடன் அயோத்திக் குப் போய்மகுடாபிஷேகம் பண்ணிக்கொள்வார். கற்புக்கு உற்பத்தி ஸ்தான மாகிய உம்மைச்சிறைவைத்த பாவியும் ஜீவனுடனிருப்பான். வில்வீரர்களா கிய ஸ்ரீராமலக்ஷ்மணர்களும் தங்கள் புசபராக்கிரமம் பொய்த்துப்போவார் கள். இது மிகவும் ஆச்சரியமா யிருக்கின்றது. இதற்குச்சமானமாவதேது? உம்முடைய விஷயத்தில் அபசாரப்பட்ட பாபாத்மாக்களைக் கொல்லாமல் காணும்என்னுடனே கூடவந்த எல்லாவானரவீரர்களும் பிராணனுடனேமதங் காச்சிரமத்திற்குப்போகவும், அப்பால் அங்கெழுந்தருளியிருக்கின்ற சுவா மியும் தமக்கு உயிர்த்துணையாகிய உம்மைவிட்டு அவ்விடத்தைநீங்கிக்கையி லேபிடித்த வில்லுடனே கரத்தைதாடிப் போகவும் வேண்டாமா? அதிருக் கட்டும். துக்கசாகரத்தில் மூழ்கி அவதிப்பட்டுக் கொண்டிருந்த எங்களுக்

குப் பரிபூரணமாகிய சம்பத்தினைக்கொடுத்த அந்த ஸ்ரீராகவருக்கு, தேவரீரை மீட்டுக்கொண்டு போய்க் கொடாமற்போனல் எங்களைப்பார்க்கிலும் யோக்கியராவார் ஆரிருக்கின்றார்கள்? சன்மார்க்கத்தையுடைய ரிஷியீசுவரர்களெல்லாம் கொன்றுதின்றமகாபாதகர்களாகிய இராக்கதர்களுடையகுடல்களை இரணகளத்தில் பேய்கள்தின்னும்படிச்சங்கரித்தாலல்லாமல், இராச்சியத்திற் குப்போகிறதில்லையென்றுவாக்குப்பிரதானம் பண்ணியிருக்கின்றமஹாபூபர்வ ருக்கு இந்தவார்த்தையென்ன ஒவ்வாதா? பலவீனர்களாகிய சத்துருக்களால் சிறைவைக்கப்பட்ட தேவரீரை காங்கள் மீட்டுக்கொள்ளாமற் போவோமேயானால், உலகத்தில் சகலசாஸ்திரங்களையும் தேர்ந்த பண்டிதர்களேயல்லாமல் பாமரர்கள்தானுவது இந்தவார்த்தையைச்செவிகொடுத்துக் கேட்பார்களா? கற்புடையவளும் சத்தியந் தவறுதவளுமாகிய மனையாளானவள், வஞ்சகர் களாகிய இராக்கதர்களால் தீண்டப்படாததற்குமுன்னே மாண்டுபோய் விட் டானென்று, கொண்ட புருஷன் தனக்குத்தானே மனத்திலே சித்தப்படுத்திக் கொண்டு அவளைவந்துபாராமல் திரும்பிப்போய்விடுவானுனல் அப்புறம் அப் புருஷனுடையவீரம் நன்றுப்பிரசித்தப்படமாட்டாதா? லோகோத்தமியாகிய நீர் துக்கத்தினுல் உம்முடைய பிராணனை மாய்த்துக்கொள்வீரோ யாகில், அதற்காகளங்கள் ஐயனுகியஇரகுநாயகர்,இராக்கதவமிசத்துடனே சகலசரண்ட சாசரங்களையும் கூட்டி நீறுக்கினுலும் அந்த அபவாதம் தீராதன்றே? கம்மு டைய கோதண்டராமனை எதிசுரர் முதலானவர்களும் லோககர்த்தாவாகிய நீரே இப்படிச்செய்வது சற்காரிய மன்றென்று சொன்னலும், தேவரீர் பிராண னைவிட்டபின் அவர்சத்தியத்தைப் பார்ப்பாரா? திரிலோகங்களையும் முன்னே மாய்த்துபோம்படிச்செய்யாரா? சுவாமிக்குப் பிறக்கும் உக்கிர கோபமா னது கொடியவனுகிய இராவணனுடைய உயிரை மாத்திரம் நாசஞ்செய்வதினு லேயா? தணியும், பூலோகத்தையுஞ் சுவர்க்க லோகத்தையும் நாசஞ்செய் வதினுலேயா? தணியும். பூலோகத்தையும் சுவர்க்க லோகத்தையும் நாசஞ் செய்யாமல்விடுமா? கேளுமம்மா பரமேசுவரீ! இராமபத்திரருடைய அஸ்தி ரமானது சப்தசமுத்திரங்களையும் பதினுலுலோகங்களையும் யுகாந்தகாலாக்கினி யைப்போல கொடிப்பொழுதிலே கவளிகரிக்கமாட்டாதா? இரகுபதியானவர் இப்பொழுதே தேவர்களுடைய சத்துருக்களை நிர்மூலஞ்செய்தார். பெரி யோர்களுடைய ஆபத்துக்களை நீக்கினர், எப்போதும் தர்மத்தைத் தலை யெடுக்கும்படிச்செய்வார்.

பிரபலமாகிய கீர்த்தியைச் சம்பாதித்தாரென்றே கினைத்துக்கொள்ளும். யாவரும் வெறுக்கத்தக்கஇத்தக்கண்டகர்களுடைய இரத்தப்பிரவாகத்தில்பேய் க்குலங்கள் மூழ்கிக்குளிக்குந்தாறும்,இராக்கதர்களுக்குப்பயந்து ஒளிக்கின்ற தேவர்கள் கண்டு மனங்களிக்கின்றதைநீர்பார்ப்பீர். பிரளயகால இடியைப் போலச்சக்கரவர்த்திதிருமகனுடைய பாணமானது புறப்பட்டு இராக்கதர்களு டைய சரீரத்தைப்பிளக்க, அந்தப்புண்ணிலிருந்து ஒழுகாகின்ற உதிரமுந் தசையானது பெருகிவந்துவிழுவதினுல் எழுசமுத்திரங்களும் ஒன்றுய்த்தானுே இனாகின்றதையும், இராக்கதஸ்திரீகள் கர்ப்பம் நிறைந்த வயிற்றைப்பிளந்து

தொண்டு அழுது துக்கித்துக் கண்களினிருந்து தாரைதாரையாக நீரொழுகும் படி, வாயினுலும் தாண்டப்படாத மலைபோல அறுத்தெரிகின்ற தாலிக்குப் பைகளையும், ஆகாசத்தைத் தீண்டுகின்ற ஸ்தூலதேகத்தையுடைய பேய்க் கூட்டங்களும் நீண்ட சிறகுகளையுடைய பறவைச்சாதிகளும் இராக்கதர்களுடைய உதிரக்குடலில்முழ்கி, அவர்கள் பெண்சாதிமார்களுடைய கண்ணீராகிய ஆற்றில் குளிப்பதையும், மிருதங்கம் வீணை முதலாகிய வாத்தியங்கள் முழங்க, அரம்பாஸ்திரீகள் காட்டியஞ்செய்கின்ற இத்தகாடகசாலைகளில் ஸ்ரீராகவனுடைய பிரதாபத்தைப்பாடிக்கொண்டு, வானரங்கள் வரிசைவரிசையாக ஆடுகின்றதையும், இராவணன்முதலானவர்களுடைய சரீரத்திலிருந்து ஒழுகுகின்ற இரத்த ஆறுனது பிணமலைகளைப்புரட்டியிழுத்துகொண்டுபோய்ச் சமுத்திரத்தைத் தூர்ப்பதையும், தேவரீருடைய மாசற்ற திருமேனியைப்பார்த்த தசக்கிரீவனுடைய கண்களை, அவன் தலைகளின்மேல் தாவிக் காக்கைகள் கூரியமூக்கினால் கொத்திக்கொத்தித் தின்பதையும் நீர் பார்க்கப்போகிறீர். ஆகையால் இன்னமும் பலபலவார்த்தைகள் சொல்லவேண்டியதென்ன? ஒரு மாதவனைக்குங்கூட நீர் துயரப்பட்டுக்கொண்டு இவ்விடத்திலிருக்கவேண்டுவதில்லை. அடியேன்போய்ச் சுவாமிதிருவடியைத் தரிசிக்கிறதுதான் தாமதம். அப்பால் அவர் ஒருபொழுதாவது பொறுத்திருப்பார்களா? அவருக்கு உயிருண்டென்கின்ற சொல்மாத்திரந்தான் உண்டு. அரணியத்திலே அவருடைய திருமேனியைத் தீண்டித் தியாதபுட்பங்களும் தளிர்களுமில்லை. அவர் சரீர உஷ்ணத்தினுலே பொறியெழுந்து வேகாதசோலைகளுமில்லை. மேகம் கர்ச்சித்தாலும் இடியிடித்துவிழுந்தாலும் பாம்புகடித்தாலும் அவருக்குத்தெரியாது. நீர் பிரிந்ததனுல் மத்துக்கொண்டு கடையப்பட்ட தயிர்போல உயிர்தளர்ந்து கனைத்து ஐம்புலன்களும் வேறுபட்டுப் பித்துபிடித்தமையங்கி, நாள்தோறும் அடிக்கடி எவ்வளவோ வேதனைப்படுகின்றார்.

இப்படிப்பட்ட நிலைமையையுடைய அத்தப்புருஷோத்தமர் வாராமலு மிருப்பாரென்று நினைப்பீராகில் நான் சொன்னவற்றையெல்லாம் இப்போது தானே உம்முடைய உள்ளங்கை நெல்லிக்கனியைப்போலக் காண்பிக்கிறேன் பாரும். அதற்கு மாறுபட்டிருந்தால் அப்பொழுது பொய்யென்று நினைத்துக் கொள்ளும். ஸ்ரீராமரும் வானராதிபதியாகிய சுக்ரீவனும் உம்முடைய செய்தியைக்கேட்டு சந்தோஷிப்பதற்கு முன்னமே வானரங்கள்வந்து சமுத்திரத்தைத்தூர்த்து இலங்கையைச்சுற்றிக்கொண்டு ஆர்ப்பரிக்கின்றதைத்தேவரீர்கேட்டுச் சந்தோஷிக்கப்போகின்றீர். எண்ணப்படாத வானரசேனைகள் நாலாத்திசையும் இந்த நகரத்திற்குவந்தபோது அதற்குமேலே கருடன்மேல் ஆரோகணித்துவருகின்ற ஸ்ரீமந்நாராயணனைப்போல அடியேனுடையதோள்களின்மேல் இரகுநாயகர் எழுந்தருளிவரும்படிக்காண்பீர். உதயகிரியில் தோன்றுகின்ற இளஞ்சூரியனைப்போல அங்கதகுமாரனுடைய தோளின்மேல் இளையபெருமாளும் எழுந்தருளிவரக்காண்பீர். இனிமேல் தயரதத்தையும் சுமித்தையையும் விட்டுவிடும். இப்போது குறித்துச்சொல்லிய சிலதினத்திற்குள்ளேவந்து உம்முடைய சிறையைமீட்காவிட்டால் பழியும் பாவமும் சம்

பாதித்துக்கொள்ளுகிறதற்கு அந்த ஸ்ரீராமரே இராவணனும் இராவணனே ஸ்ரீராமரும் என்றுமதிருவுளத்தில்எண்ணிக்கொள்ளுமென்றுஇவ்வண்ணம் சாதோபசாகையாக ஆஞ்சனேயர் எடுத்துச்சொல்லியபோது அந்தவார்த்தை களெல்லாம் குற்றமற்றவைகளா யிருக்கக்கேட்டுப் பிராட்டியார் மனத்திலே அபரிமிதமாகிய மகிழ்ச்சிகூர்ந்து உஜ்ஜீவித்தவராய் மெய்தான், இவன் சிக்கிரத்தில்போய்ச்சேர்கிறதே உத்தமமென்றுகருதி அநுமானைப்பார்த்துச் சிலவார்த்தைசொல்லுகின்றார். ஐயா, மாருதியே நீ தரிதமாகப்போய்வா யாதொரு தீங்கும் உன்னை யணுகமாட்டாது. இனிநான் வேறொன்றுஞ்சொல்லுகிறதே யில்லை. உனக்குத்தெரியாததைக்குறித்து நானே சிறிதுசொல்லப்போகிறேன். என்பிராணநாயகருக்கு முன்பு நடந்தவைகளாகிய சிலஅடையாளங்களைச் சொல்லுகிறேன். பூர்வத்தில் ஒருமாயமாகிய காகமானதுவந்து என்சரீரத் தைத்தனது கூர்மையாகிய நகத்தினாலே கிழித்ததுகண்டு சுவாமியானவர் ஒரு சொற்பமாகிய புல்லைப்பிரயோகிக்க அதுவே அஸ்திரமாகித்தரத்த அதற் கஞ்சி அந்தக்காக்கைவடிவாய்வந்த இந்திரகுமாரனாகிய சயந்தனைவன் பிரம னிடத்திலும் சிவனிடத்திலும் மற்றதிக்குப்பாலகரிடத்திலும்போய்ச் சரண மடைய, அவர்களெல்லாம் இராமபாணத்திற்குப்பயந்து அபயஸ்தங்கொடாமல் அவனைப்பார்த்து ஐயையோ! இனி உனக்கு எங்களாண்டவனாகிய ஸ்ரீராம பிரானுடைய திருவடியல்லது வேறுகதியில்லை. மேலும் அவரே சரணாகத வாச்சல்யர். ஆகையால், நீபோய் அவ்விடத்தில்தானே சரணாகதஞ்செய்யெ ன்றுசொல்ல,அவன் அங்கிருந்துநடுநடுங்கி இராகவா! அபயம் இராமச்சந்திரா! அபயம் தாசரதி! அபயம் சீதாசமேதா! அபயம்கோதண்டபாணி! அபயம் அபய மென்று பூமியில்வந்துவிழுந்து தண்டன்சமர்ப்பித்த உடனே சுவாமி திருவுள மகிழ்ந்து அவன் பிராணனைவாங்கும்படி விட்டபாணம் அவனுடைய இரண்டு கண்களிலும் ஒருகண்ணைக்கிரகித்துக்கொண்டுபோம்படிக்கிருபைசெய்ய அது அப்படியே கிரகித்துக்கொண்டு தம்முடைய அம்புப்புட்டிலில்வந்துசேர்ந்தது. அப்பொழுது ஸ்ரீராமபத்திரர் நீ சரணாகதஞ்செய்ததனால் உன்குற்றத்தைப் பொறுக்கருளினோம் இன்றுமுதல் உன்னைப்போலிருக்கின்ற காக்கைக்கூட் டங்களின் இருகண்ணுக்கு ஒருமணியுலாவக்கடவதென்று சொன்னார். பின்பு காகாசுரன்வருத்தம்நீங்கிய ஸ்ரீரகுநாயகனைவணங்கிவிடைபெற்றுக்கொண்டு சுவர்க்கலோகத்திற்குப்போனான். தேவர்கள் சுவாமியின்காருண்யத்தைக்குறி த்துப் புஷ்பவருஷம்வருஷித்தார்கள், அந்தச்செய்தியைச்சொல்லு,அயோத்தி யிலிருந்த பொழுது சுவாமியை நோக்கிநான்வளர்த்த என்னுயிர்க்கொப்பாகிய இளங்கிளிக்கு என்ன பெயரிடுகின்றதென்று கேட்க, அவர்கைகையாகிய என் தாய்டையனைவைத்திடென்றுசொன்னார்.அதையும்அவரிடத்தில்சொல்லென்று சொல்லி பிராட்டியார் இனிஇவ்வளவுவிசேஷமாகிய அடையாளம்வேறொன்று மில்லையென்று யோசித்து நிச்சயம் பண்ணிக்கொண்டு காந்தியிலும் மேலேழு லோகங்களையும் கீழேழுலோகங்களையும் ஜயித்த சூடாமணியென்னும் இத் திருத்தைத்தமது திருவாடையில்வைத்திருந்தாமனாப்புட்பத்திற்குச் சமான மாகிய திருக்கரங்களாலெடுத்தார். எடுத்தமாத்திரத்தில் கவியாகாணபண

டிதாகிய ஆஞ்சனேயர் இது என்னவென்று பிரமித்துத் தேகம்பூரித்து எழு சயித்தார், அப்பொழுது சப்ததீவிலும் நிறைந்த இருளெல்லாம் சிதைந்து ஓடி யது இராக்கதர்கள் இப்பொழுது சூரியனெனவன் கொஞ்சமாவது மனங்கூசாமல் லங்கைக்குவந்தது ஏதென்றுசந்தேகித்தார்கள் அந்தாத்தில் சூரியன்வருநிறநில் லாமையால் எப்பொழுது சூரியனே வரக்காண்போமென்று துக்கமுற்றிருந்த சக்கரவாகப்பட்சிகளெல்லாம் களிகூர்ந்தன. தாமரைகள்மலர்ந்தன, சூரியகா ந்தக்கற்கள் தீயைச்சொரிந்தன அந்த ரத்னகிரணம் பிராட்டியாருடைய திரு மேனிமுழுதுஞ் சிவக்கும்படிச்செய்து ஸ்ரீராமசந்திரனுடைய திருவடிகளைப் போலும் ஜொலிக்கத்தலைப்பட்டது. அப்படிப்பட்ட திவ்வியமாகிய சூடாமணி யைக்காட்டி ஆஞ்சனேயர் கண்டார். பின்பு அவளைநோக்கி அப்பா அநுமா னே! என்கண்மணிக்கு ஒப்பாகிய இந்தச்சூடாமணியை இதுவரையில் என் வஸ்திரத்தில் வைத்துக்கொண்டிருந்தேன், இதுவேதசரதராஜனுக்குப்பெரிய அடையாளம் தேடிவந்து என்பிராணனை இரட்சித்த மஹாநுபாவா! நீ இதை வாங்கிக்கொள்ளென்று கொடுக்க வாயுகுமாரர்தொழுது அதை இரண்டுகையி னும்வாங்கி அந்தக்ஷணமே வஸ்திரத்தில் சுற்றிப்பதனம் பண்ணிவைத்துக் கொண்டு கண்களில்நீர்பாயும்படி ஜானகியாளைமூன்றுதரம் பிரதட்சணம்வந்து சாஷ்டாங்கமாகச் சேவித்து அடியேன் போய்வருகின்றேனென்று சொல்லி அந்தபிராட்டியாரும் தம்மையும் புகழ்ந்துவாழ்த்த அப்பால் நடந்தார்.

சூடாமணிப்படலம்
முற்றிற்று.

வனபங்கப்படலம்

அப்படி ஜானகியாரிடத்தில் நியமனம்பெற்றுக்கொண்டு வடதிசையை நோக்கிச் செல்லும்படி உத்தேசித்து அதிசிக்கிரமாக நடந்து எதிரேதோன்றிய அசோகவனத்தில் பாய்ந்துபோகின்றஅநுமானைவர் நான் இலங்கைக்குவந்து பிராட்டியாளைக்கண்டு அவரிடத்தில் மாத்திரம் சிலசமாச்சாரங்களைக் குறித் துப் பேசிவிட்டுப்போகிறது பிரதாபமன்று மிகவும் சொற்பமாகும் எனது டைய வீரத்திற்குத்தக்க ஒருபிரபலமானகாரியத்தைச்செய்து போகவேண்டு மென்று தமக்குள்ளே ஆலோசிக்கத்தொடங்கினர். கொடியபாபிஷ்டர்களா கிய இராக்கதர்களையெல்லாம்கொலைசெய்து இந்த இலங்காபட்டணத்தையும் வேருடனேகளைந்தெடுத்துச் சமுத்திரத்தில்அழுந்தும்படி எறிந்துவிட்டு லோக காயனியாகிய வைதேகியை என்னையனுகிய சக்கரவர்த்தித் திருமகன் திருவடி யிற்கொண்டுபோய்ச் சேர்க்காவிட்டால் நான் எவ்விதத்தில் அந்தவிஜயராகவ ருக்கு அடிமையாவேன் சுவாமித்துரோகியாகிய இராவணனை இறுக்கிப்பிடித்து என்னுடைய நீண்டவாலினால் அவன் பத்துத்தலைகளையும் இருபதுதோள்களை யும் சேர்த்துக்கட்டி இம்சித்துச் சிறைவைக்கவுமில்லை. அப்படியன்றென்று மும் அவனைகேரேயாவது ஜயித்தேனா? அதுவும் செய்யவில்லையே. இப்படியா னால் ஒருவர்மற்றொருவருக்கு அடிமையென்பதுதகுமா? என்கண்ணிற்கண்ட இராக்கதக்கூட்டங்களைச் சின்னபின்னம்பட அடித்து இலங்காதிபதியினுடைய

கண்களுக்குமுன்னே அவன்பெண்சாதியாகிய மண்டோதரியைத்தலைமயிரைப் பிடித்து இழுத்துவந்து சிறைவைத்தாலுந்தான் என்புஜபலத்திற்குப் பழுதண்டாகுமா? இராதகர்களாகிய அரக்கர்களுக்கு என்னுண்மையை யெல்லாம்நாட்டி அவர்களோத் திசைகள்தோறும் ஓட்டித்துரத்தித் தும்சஞ்செய்வதே பிரதானகாரியம் இனியெண்ணத்தக்கது மற்றொன்றுமில்லை. ஆதலால் அவர்களைச் சண்டைக்கு இழுக்கவேண்டுமே? அதற்குத்தக்க உபாயம் என்னவென்றும் நினைக்கின்றார்.

நான் இந்தச்சோலையை ஒருநொடிப்பொழுதில் அதஞ்செய்கிறேன். அப்படிச்செய்தால் அந்த ஆர்ப்பாடத்தைக் கேட்டமாத்திரத்தில் மிகுந்தகோபத்தோடும் ராட்சதர்கள் என்னுடன்வந்து எதிர்ப்பார்கள். எதிர்த்தபொழுது அவர்களைச் சந்ததியறக்கொன்று உயிர்குடிப்பேன், என்னோடு போர்செய்ய வருகின்றவர்களையெல்லாம் மறுபடி உயிரோடே போகவொட்டாமல் கொன்றால் அந்தஇராவணனும் எனக்குமுன்னேவந்து எதிர்ப்பான். எதிர்த்தால் அவனுடைய பத்துத்தலைகளையும் குழிந்துபோம்படிக் குட்டிஉதைத்து என்மனத்திலே பொங்குகின்றகோபமுஞ் சிறிதாறிச் சந்தோஷமாய்ப்போவேன். ஆகையால் இவ்விதமாகச்செய்வதே நல்லதந்திரமென்று தீர்க்காலோசனை செய்து சூரியசந்திரர் உதயமாகின்ற உதயகிரிக்குஞ்சமானமாக நீண்டதோள்களையுடையவராய்த் தமது விசுவரூபத்தைக்கொண்டு உலகமுழுதும் ஒரு கொம்பிலேதாங்கிய ஆதிவராகத்தைப்போல்ஓங்கியுயர்ந்து அந்த வனத்தையெல்லாம் தம்முடைய பாதத்தைக்கொண்டு தகைத்தார். தகைத்தபொழுது அதிலிருந்த விருக்ஷங்கள் முடிந்தும், பிளந்தும், முறிந்தும், நெரிந்தும், மடிந்தும், பொடிந்தும், மறிந்தும், பொரிந்தும், இடிந்தும், நைதந்தும், எரிந்தும், கரிந்தும், ஒடிந்தும், ஒசிந்தும், உதிர்ந்தும், பிதிர்ந்தும்போயின. சிலவிருக்ஷங்கள் வேரோடேசாய்ந்தன. சிலவிருக்ஷங்கள் சமூலமும் வெந்துவிழுந்தன. சிலவிருக்ஷங்கள் மேகமண்டலத்தைமோதிவிழுந்தன. சிலவிருக்ஷங்கள் காற்றில் அடிபட்டுக் கடலிலேபோய்விழுந்தன. சிலவிருக்ஷங்கள் சுவர்க்கத்தில்போய்விழுந்தன். சிலவிருக்ஷங்கள் அஷ்டகஜங்களுக்கெதிரே அலைகள் உண்கின்ற வுணவாகப்போய்விழுந்தன. சிலவிருக்ஷங்கள் கேசரமார்க்கமாகப்போய்த் தேவர்களுடைய கற்பகச்சோலையை மடித்தன. அசோகமரங்கள்போய் விழுகின்றதினால் சமுத்திரத்தில் அலைகள் மிகவும் பொங்கிப்புரண்டன. அசோகமரங்கள் இலங்கையில்விழுகின்றதினால் அங்குள்ள உப்பரிகைகள் இடிந்து உதிர்ந்தன. அசோகமரங்கள் சப்தகுலபர்வதங்களிற் போய்விழுந்து சிறுபொடியாயின. அசோகமரங்கள் தங்களுக்குச் சமீபத்தில் வந்துவிழுகிறதினால் விஞ்சயலோகத்திலும் யக்ஷலோகத்திலும் தேவலோகத்திலுமுள்ள ஸ்திரீகள் அவற்றிற் பூப்பறிக்கத்தலைப்பட்டார்கள். அசோகஞ் சுவர்ணவிருக்ஷங்களும், இரத்னவிருக்ஷங்களும், மின்னல்கள் சஞ்சரிக்கிறதுபோலவும், சூரியகிரணம் பாய்கிறதுபோலவும், சிலதினைசகளிலும் விசையாயெழும்பின. அசோகவிருக்ஷங்கள் ஊழிகாலத்து கங்காத்திரங்கள் உதிர்வதுபோல ஒன்றோடொன்றுமோதி உதிர்ந்தன. ஆஞ்சநேயர் மரக்

தினைகளைமுறித்துச் சமுத்திரத்தில்வீசிய அங்கினைகளிலிருந்தபட்டிகளையும், யண்டிகளையும், மலர்களையும், அரும்படிகளையும் தேனையும், கனிகளையும், காய்களையும், மீன்கள் விழுங்கிக்களித்துத் துள்ளிக்கொண்டிருக்கின்ற தருணத்தில், பலமரங்கள்வந்து மேலேவிழ அலைகள் மோதிக்குமுறித்தன. காகாவிதப்புஷ்பங்களாலும் நிறையப்பட்டுப் புலால்காற்றமில்லாமல் எட்டுத்திக்கிலும் நல்லவாசனையை வீசுதலால் கடலானது தேவர்கள் தங்கள்தேவிமார்களுடனே ஸ்நானஞ்செய்கின்ற திவ்வியதடாகத்தைப்போல விளங்கியது. அவ்வனத்திலிருக்கின்ற இரத்திரமேடைகளை இடித்தும், மரங்களை ஒடித்தும், ஒன்றின் பின்னே ஒன்றுகளறிவதலால் முழுதுஞ்சார்ந்து முன்பு உள்ளேயிறங்கக்கூடாத ஆழத்தையுடையதாய் அநுமான் அருமையாகத் தாண்டிப்போம்படியிருந்த அத்தச்சமுத்திரம் இரண்டுகாவிலும்லும் எளிதாகக்கடந்து போகலாமென்று சொல்லத்தக்கதாகியது. ஆகாசத்தில் எறிந்தமரங்கள்யந்து மேலேவிழுந்து ராக்ஷதர்கள் வாசஞ்செய்கின்ற சந்தகிதமாகிய மாடமாளிகை கூடகோபுரங்களெல்லாம் இடியினல் சின்னபின்னமாகிய பர்வதங்களைப்போலச்சிதைந்து பொடிப்பொடியாயின. நீருண்டமேகங்கள்தெருங்கியிருக்கின்றதுபோல இராவணனுக்கு ஆகாசத்திலும் ஒருசேனையுண்டென்றுசொல்லும்படி அநுமானைவர் அளவிறந்த மரங்களைப்பிடுங்கி மேலேயெறிந்தார். தேன்துளிக்கப் பலவிதப்பறவைகளும் மணிகள்போல் ஒலிக்கப் புஷ்பங்கள்நிறையப்பூத்த விருக்ஷங்கள் ஆகாசமார்க்கமாயெழும்பிப்போய் அவ்விடத்தில் சஞ்சரிக்கின்ற புஷ்பவிமானம்போலப் பிரகாசித்தன. பலகிளைகள் தழைத்திருக்கின்ற மரங்கள் அந்தரத்திலிருந்து சமுத்திரத்தில்விழுகின்றது நீருண்ணமேகங்கள் இறங்குகின்றனைப்போலிருந்தது. மத்தியில் புண்ணியவர்ஜிதமாய்ப் பூமியில்வந்து பிறந்த தேவர்கள் ஞாகத்தையடைந்து தங்கள் சுதேசமாகிய சுவர்க்கத்தைச் சேர்ந்ததுபோலப் பூர்வத்தில் இராவணனல்கொண்டுவந்து இலங்கையில் காட்டப்பட்டபஞ்சதருக்கள் அநுமான்பிடுங்கி எறிதலால்முன்னிருந்ததேவலோகத்தில் தானேபோய்ச்சேர்ந்தன. மற்றும் வாயுகுமாரரானவர் மாணிக்கக்கற்பதித்த இடங்களைக்குழிசெய்து மண்டபங்களை இடித்தெறிந்து வாவிகளைத்தூர்த்துச் சுவர்த்தலங்களை அழித்துக்கட்டுமலைகளைப்போர்த்து வேங்கைமரங்களைச்சிதைத்து மராமரங்களை வேருடனேபறித்துக் கற்பகமரங்களைப் பூவுடனே ஒடித்து நிலத்தில்தெய்த்துச் சண்பகமலர்ச்சாலைகளை அதஞ்செய்து பழுத்தமாமரங்களை முறித்துத்தள்ளினர். ஆஞ்சநேயருடையபாதம்படுதலால் சந்தனமரங்களும் பூமரங்களும் பிளந்து துணிந்து எரிந்து கரிந்தன. மல்லிகை மூல்லை முதலாகிய கொடிவகைகள் செடிவகைகள் சகலமும் தூள்தூளாயின. மயில்கள் குயில்கள் கிளிகள் வண்டுகள் முதலானவைகளும் நெருங்கிகலங்கி மடிந்தன. பட்சிகள் இனைகின்ற ஓசையும் மரங்கள் ஒடிகின்ற ஓசையும் அநுமான் அடிக்கடி கர்ச்சிக்கின்ற ஓசையுங்கூடி ஏககோலாகலமாய் இந்தஅண்டகடாகத்தைத்தாண்டி அப்பாலும் வியாபித்தது. காடுபோல் அடர்ந்து நெருங்கியமரங்களை அனைத்தெடுத்து அநுமான் வீசுதலால் யானைச்சாலைகள், புரவிச்சாலைகள் இரதசாலைகளும் அவைகளிலுள்ள யானைகள், புரவிகள், தேர்

களும், ஆடகங்குகளும், அன்னசத்திரங்களும், தண்ணீர்ப்பந்தல்களும், நிறைந்துகொறுங்கின. வலதுகையில் சிலசிலபெரியமரங்களோயும் இடதுகையில் சிலசில கட்டிமலைகளோயும் பேர்த்தெடுத்து எறிந்தார். மரம்போய்விழுந்ததனல் வங்கையைச்சூழ்ந்த பொன்மதில்கள் இடிந்து நெருபபெழுந்தன. மலை போய்விழுந்ததினல் மேல்மாடங்கள்நெரிந்து நீறழுந்தன. அதனல் இலங்கையிலிருந்தவர்களெல்லாம் பயந்தோடினர்கள். இந்தப்படி வாயுகுமார் சின்னபின்னஞ்செய்யும்போது இலங்கேசுவரனுனவன நான்சீதையிலல் விரகதாபப்பட்ட தருணத்தில் நீ யென்சரீரத்தைத் தகித்தாய், இப்பொழுது தேவர்களுக்குமுன்னே ஒரு குரங்குவந்து சோலையை அழிக்கும்படிப் பார்த்துக்கொண்டிருந்தாயென்று கோபிப்பானே ? இதற்கென்னசெய்வதென்று பயந்து ஒளித்ததுபோலச் சந்திரன் அஸ்தமித்தான்.

அந்தவனத்திலே குற்றமற்ற நவரத்தினங்களாலும் அபரஞ்சியாலும் சூரியகாந்த சந்திரகாந்தத்தினலும் நிர்மிக்கப்பட்டிருகின்ற பலபல மரங்களோயும் என்னையனுகிய அநுமான் தன்கைகளால் அள்ளிஅள்ளித் திக்குகள் தோறும்விச அவைகள் சாஜ்வல்யமாகிய சுடரெறிப்பதனல் உலகமுழுதும் இருள்நீங்கிப் பிரகாசித்தது ; நானவிதமான மிருகங்களும் மனம்மகிழ்ந்து கண்கலக்கங்கொண்டன, பலபேதமான பறவைகளில் சில குதறிக்கொண்டுபோய்க் கடலிலவிழுந்தன, சில பதறிப்பறைத்தன சிலமேலேபறைத்தன,சிலகீழவிழுந்து சிறகுகளோஉதறின, சிலசிறகுகளோ ஒடிக்கிக்கொண்டு இறந்தன, காக்கைகள் தெய்விகமாகிய மரங்கள்தோறும் கட்டியிருக்கின்ற கூட்டுடனே ஆஞ்சநேயர் கிருபையினல் சுவர்க்கமபோய்ச்சேர்ந்தன,இராக்கதர்களாலே காவல்செய்யப்பட்ட சோலையிலிருந்த சகலவிருக்ஷங்களும் அழிந்தபோயும் சீதாபிராட்டியார் எழுந்தருளியிருக்கின்ற ஒருவிருக்ஷமாத்திரம் அழியாமல் பரலோக பூலோக பாதாளலோகங்களெலலாம நாசமாய்விடுகின்ற மகாப்பிரளயகாலத்தில் ஸ்ரீமந்நாராயணன் திருக்கண்வளர்ந்தருளாகின்ற ஆல்போல் விளங்கியிருந்தது. மிகுந்த பிரகாசத்தையுடைய சூடாமணியாகிய ஜீவரத்நத்தைத் தன்பிராணனுக்குச் சமானமாகிய சக்கரவர்த்தித் திருமகனுக்கு அடையாளமாகக் கொடுக்கச்சொல்லி அநுமான்கையில் கொடுத்துவிட்டதனல் ஐயோ! சீதையானவர் வறுமையை அடைந்தாளென்று அவருக்குத்தாய்வீடாகியசமுத்திரம் ஒருசிகாமணியை அனுப்புவித்ததுபோலச் சூரியன் உதயமானுன்.

அந்தச்சோலையை முழுதும்பற்றறத்தொலத்துவிட்டுத் தனியேகிற்கின்ற ஆஞ்சநேயர் சதுர்த்தசயுவகங்களையும் அளந்த திருவிக்கிரமனைப்போலவும் கடலின் கடுவில்நின்ற மந்தரகிரியைப்போலவும் யுகாந்தகாலருத்திரனைப்போலவும் பிரகாசித்தார். இவ்விதமாயிருக்கின்ற சமயத்தில் அநுமான் முன்புசெய்த மந்திரோச்சாடனத்தால் பிரக்ஞையில்லாமல் சவம்போல் உறங்கிக்கிடந்த இராக்கதிகளெல்லாம் கித்திரைமாறி விழித்தெழுந்து வடமேருபர்வதம்போல விஸ்வரூபத்துடனே நிற்கின்ற சுத்தாத்மாவாகிய வாயுகுமாரனைப்பார்த்து அம்மம்மா இது எப்படிப்பட்ட சொரூபம் என்றும்,இந்தமகாபுருஷன் ஆரென்றும்,

மகத்தாகிய பிதியடைந்து ஜானகியாளைநோக்கி நீ இவனுடைய பூர்வோத்தரம் அறிவையா சொல்லென்றார்கள். அதுகேட்டுப் பிராட்டியார் தர்ச்சனர்கள் செய்த தர்க்கிர்த்தியங்களெயெல்லாம் அப்படிப்பட்ட தர்ச்சனர்கள் அறிவார் களேயல்லாமல் சற்சனர்களறிவார்களா? தண்டகாரணியத்தி லிருக்கும்போது மாயமானுனது வர அந்த மானைப்பார்த்து எங்கள் இனியபெருமானானவர் இது இராக்கதர்கள்செய்த மாயமாகும், உள்ளபடி மானன்றென்றுசொல்லியும் கேளாமல் மெய்யென்றுமயங்கிய நான்இதை எப்படி யறிவேனென்றுசொல்ல, அந்த இராக்கதஸ்திரீகள்வயிற்றிலடித்துக்கொண்டு மிகவும் அகமுற்றவர்களால் பூமியும் வனமும் மலையுங்கடலும் கிலகுலையும்படி ஓடத்தலைப்பட்டார்கள். அவ்விடத்தில், இராவணனுடைய ஆக்கினையைக்கொண்டுபிரமதேவர்சுவர்ணத் தினால் சிருஷ்டிசெய்ததும் கண்ணுக்கடங்காததும் காற்றுமோதப்படாததும் ஆகாசபரியந்தமீண்ட அகேகந் தூண்களையுடையதும் கவரத்தினங்கள் பதிக்கப் பட்டதும் இராக்காலத்திலும் இருள்விலகும்படி ஜொலிக்கத்தக்கதும் மகா மேரு பர்வதமும்வெட்கி வெதும்பிமனம்புண்படும்படி உயர்ந்ததும் இந்தப்பூமி யுந் தாங்கக்கூடாத பாரத்தையுடையதும் வித்வஜனர்களாலும் புகழ்தற்கு அமைதியாயிருக்கின்றதுவுமாகியவொருயாகமண்டபமிருந்தது அதைத்தம்முடைய தாதையாகிய வாயுவையொத்த பராக்கிரமமிருந்த ஆஞ்சனேயர் கண்டு அவர் பூர்வத்தில் தசக்கிரீவனுனவன் வெள்ளிமயமாகிய கைலாசகிரியைப்போற்றெ டுத்த சமாசாரங் கேள்விப்பட்டவராகையால் அவனுடைய புஜபலத்திற்குப் பின்னமுண்டாகும்படி அதற்குப்பிரதியாகத் தாம் பொன்மயமாகிய மேருகிரி யை யெடுத்ததுபோல அந்த யாகமண்டபத்தை அடியோடே பறித்தெடுத்து இலங்கையின்மேல் விட்டெறிந்தார். அதுபோய்விழுந்து அகேக மாடகூடங் கள் இடிந்து சுகர்ந்து பொடிப்பொடியாய் அவற்றிலிருந்து அனற்பொறியெழு நது பக்கங்களிலிருந்த சகலவஸ்துக்களையுஞ்சுட்டெரித்தன. அதனுல்எத்தனை யோ இராக்கதர்களிறந்தார்கள்; வெகுபேர் வீரமழிந்தார்கள்; ஆர்தானனுலும் பிறருக்குக் கேடுநினைத்தால் பிழைப்பார்களா? அச்சமயத்தில அந்தப் பூங்கா வனத்தைக்காக்கின்ற காவலாளர்களாகிய தேவர்கள் பிரமித்துத் திடுக்குற் றெழுந்துபார்த்து பதறி உடுத்த வஸ்திரத்துடனே சிறுநீர்விட்டுக்கொண்டு நெஞ்சிலேபயமாகிய நெருப்பிடப்பட்டவர்களாய் கிறம்வேறுபட்டு நடுநடுங்கிக் காவிடறும்படி ஓடி உக்கிரசிங்கத்திற்குச் சமானமாகிய இராவணன்சமீபத்திற் போய் அவனுடையபாதத்தில் சாஷ்டாங்கமாக விழுந்துவணங்கிக் கேசுமை யா! எங்களாண்டவனுகிய பிரதாபலங்கேசுவரா! இனிநாங்கள் காவல்செய்கிற தற்கு முடியாது ஏனென்றால் பர்வதத்திற்கு ஒப்பாகிய தோள்களையுடைய ஒருகுரங்குவந்து சிங்காசச்சோலையை அழித்தது, அதுசொல்லுதற்கு எளிதா யிருக்கின்றதன்று; காலினுலும், கையினுலும், வாலினுலும், தோளினுலும், உதைத்தும், பறித்தும, சுற்றியும், முட்டியும், ஒரு புல் புதர் தாசுமுதலான வையும் இல்லாமற்போம்படிப் பொடிப்பொடியாக்கி அந்தச்சோலையிலிருந்த யாகமண்டபத்தையும்பேர்த்தெறிந்து சிறிதிடமாத்திரம்தவிர இலங்காபட்டணை முழுமையும் நாசமாக்கிவிட்டதென்று சொன்னர்கள். அதுகேட்டமாத்திரத்

தில் ராவணனுனவன் அற்பஜந்துவாகிய ஒருகுரங்கானது நம்முடைய சுவர்ண கசிதமாகிய கற்பகவிருக்ஷமுதலிய பலவிருக்ஷங்களும் கொருங்கிய பூங்கா வனத்தைப்பொடிபடிமபடிகிர்மூலமாக்கி இராக்ஷதாகளால்காவல்செய்யப்பட்ட கல்யாண உப்பரிகையென்கிற யாகமணடபத்தையும்போத்தெறிந்து, அதனல் இலங்காபுரியையும் அழித்ததாம; ஆ' ஆ! இராக்ஷதர்களுடைய வீரப்பிரதாபம் கன்றுயிருக்கின்றது. இந்தச்சொல் மூடாகளுஞ் சொலலமாட்டார்களேயெ ன்று குலுங்கக்குலுங்க நகைத்தான். மறுபடியும் அந்தச்சோலையைக்காக் கின்ற தேவர்கள் இராவணேசுவரனைப்பார்த்துச் சுவாமி! ஆகாயம் பூமியெங் கும்நிறைந்த அதனுடைய தூலத்தைச்சுமக்கின்ற சத்தியையுடைய இந் தப்பூமியையல்லவோ புலவர்களெலலாம துதிசெய்யவேண்டியது. அந்தக் குரங்கு பிரமா விஷ்ணு ருத்திரனென்கின்ற மும்மூர்த்திகளில ஒருவனென்று சொன்னாலும் நிகராகமாட்டாது. அதைபபின்பு சேவரீரேபார்க்கப்போகின் றீரென்றார்கள். அத்தருணத்தில் பூமண்டலங்கிழியவும், கடல் பதினைகளி லும் மோழைபோகவும, அஷ்டகஜங்களும திக்குபபாலகர்களுமபயந்து ஓட்ட மெடுக்கவும, இராக்ஷதஸ்திரீகளுடைய கர்ப்பங்கள் கலங்கிவிழவும, அண்ட கடாகமும் வெடிபட்டதென்றுசொலலுமபடி. அநுமானைவர் அட்டகாசஞ் செய்து ஆர்ப்பரித்தார.

வனபங்கபபடலம்
முற்றிற்று.

கிங்கர்வதைப்படலம்.

அவ்விதமாக ஆஞ்ஞேயர் கர்ஜித்தமுழக்கமானது எழுந்து மலைக்குகை யில் விழுந்த இடியோசைபோலவும, முனூரளில் மிதிலையிலே சிவனுடைய வில்லொடிந்து பிறந்த சப்தமபோலவும, தசக்கிரீவனுடைய மாணிக்கக்கிரீ டங்களணிந்த பத்துத்தலைகளும குலுங்குமபடி, இருபதுகாதிலும்வந்துநுழை ந்தது. அபபோது இராவணனுக்குக்கொஞ்சம நடுக்கபபுதோன்றச் சகிக்கக் கூடாமல, மகாப்ராக்கிரமசாலிகளாகிய அநேகராக்ஷதகிங்கர்களைக்கூவி அந் தக்குரங்கு ஓடிப்போகாதகற்குமுன் சிக்கிரதில ஆகாயமார்க்கத்தையும் கவிகதுமபோய்க் கட்டிவளைத்து, அதைக்கொல்லாமல் இலகுவாய்ப்பிடித்துக் கொணடுவாருங்கோளடாவென்று ஆஜ்ஞாபித்தான. அத்தக்ஷணமே சூலா யுதம், வாளாயுதம், வேலாயுதம,தண்டாயுதம்,தோமராயுதம்,முசலம, பிணடி, பாலம், சக்கரம், முசுணடி, குலிசம, பாசம, மழு, கழு, குந்தம், வில், அம்பு, இவை முதலாகிய ஆயுதவர்க்கங்களைக் கையிலேதாங்கிக்கொண்டு காளகூட விஷத்தைப்போலச் சரீரங்கறுத்துத்தோன்ற, உலகத்தை அழிக்கும்படி ஊழி காலத்தில் விசையாய்ப பொங்கி எழுந்துவருகின்ற சமுத்திரத்தைப்போல அதிவேகமாக நடக்கின்றவர்களும, யுத்தங்கிடைத்ததென்றுசொல்லக்கேட்ட மாத்திரதில அந்தச்சொல் கள்ளுணடதைபபார்க்கிலும் அதிகமாகிய களிப்

பினையுண்டாக்கச் சந்தோஷிக்கின்ற சிந்தையையுடையார்களும், கூடுபோல நெருங்கிச்சூழ்ந்து சமுத்திரத்தைப்போல்க் கோஷிக்கின்றவர்களும், ஆகாயத்தைப்பார்க்கிலும் பரந்தகீர்த்தியையும், மலைபோலப்பருத்து உயர்ந்த தோள்களையுமுடையார்களும், தேவதானவர்களாகிய இருவகைப்பட்டபகைவர்களையும் அநாயாசமாக ஜயித்த வீரவிக்கிரமத்தையுடைய நாம், இப்பொழுது ஒரு சிறிய குரங்கினுடனேயா போர்செய்து ஜயம்பெறுகிறதென்றுநினைத்து, அந்த கிந்தைக்காக மிகுந்த நாணங்கொண்டு அது தங்களைவருத்த வருந்துகின்றவர்களும், அரையில் உடைவாளும், மார்பில வச்சிரகவசமும், காலில் வீரகண்டையும் தரித்தவர்களும், எட்டுத்திக்கிலும்போய் முட்டுகின்ற தோள்களையுடையார்களும் மேகத்தைத்தாவிப்பிடிக்கின்ற கைகளையுடையார்களும் அனைடத்தை அளாவுகின்ற தலைகளையுடையார்களும் காலடிகளால் மலைகளையிடறுகின்றவர்களும், மேகம் குமிறுவதுபோலவும, பேரிகை முழங்குவதுபோலவும் வசனிக்கின்றவர்களும், தேவர்கள் பிரயோகித்த தெய்விகமாகிய ஆயுதங்கள்பட்ட புண்ணும், அசுரர்கள் பிரயோகித்தஆயுதங்கள் பட்ட வடுவும் புஜங்களில் பிரகாசிக்க வருகின்றவர்களும், ஆண்யானைகளையும் பெண்யானைகளையும் வாரித்தின்கின்ற பிலத்தை யொத்த வாயில் பிறைபோல விளங்காநின்ற வக்கிரதந்தங்களும், கொதிக்கின்ற கண்களுமுடையாராகளும் ஒருவனையொருவர் இப்பொழுது படையெடுத்துப் போகின்றது, என்னவென்றுகேட்க, அவர் சொன்னசொல் இன்னதென்று தங்களுக்குத்தெரியாமல் கேட்டவர்க்கு எதிருத்தரமாக என்னவென்று யிறைவுகின்றவர்களும் தமக்குமுன்னே போகின்றவர்களுடைய முதுகைத் தமதுகோபாக்கினி தீக்குட்படி முனைகின்றவர்களும், ஒருகூங்கல்லவா அசோகவனத்தையும் யாகமண்டபத்தையும் அழித்தது நம்முடைய பராக்கிரமம் நன்றுயிருக்கின்றது. இனி இதைவிட வேறுபழியுமுண்டோவென்று சொல்லிக்கொண்டு கோபாவேசத்துடனே மேருவேகத்தைப்பார்க்கிலும் முந்திவருகின்றவர்களும், ரணபேரியின் ஓசையும், வில்காரியின் வீரகண்டையின் ஓசையும், சங்கோசையும, அதட்டிக்கனைக்கின்ற ஓசையும், ஒன்றுகச்சேர்ந்து ஊழிகாலத்துக்கடலோசையையும், சப்தமேகங்களின் ஓசையையும் அடக்கும்படி- தாங்கள்போவதற்குத்தருவின் இடம்போதாதென்று ஆகாசமார்க்கமாயெழுமபிப் போகின்றவாகளும, புருவழும் கைவில்லுமவளையுமபடிப் புகையெழுத்தக்கதாகப் பெருமூச்சுவிடுகினறவர்களும், ஒருவருக்கொருவர் முந்திக் கிரமமில்லாமற் கோபிக்கின்றவர்களும், நடக்கவழிகிடையாமையால் இவ்விலங்கை விசாலமாயிருக்கவில்லையென்று முன்னேபோகின்றவர்களை இதோ நாங்களும வருகின்றோம் நில லுங்கோளென்று அழைக்கின்றவர்களும், உறையிலிருக்கின்ற வாளையுருவிக் கையிலேபிடித்து அது பளபளவென்று பிரகாசிக்கத்தக்கதாக அசைக்கின்றவர்களும், வாயுதட்டைமடித்து மீசைமுறுக்கித் தோள்கொட்டித் தொடைதட்டிக்கொண்டு கற்கள் நொறுங்கும்படித் துகைத்து வாயிலுள்ளபற்களை நெறநெறவென்னும்படிக் கடிக்கின்றவர்களும், மலைகிற்பதுபோல கிற்கின்றவர்களும், அநேகவித ஆயுதபரிகரஞ்பண்ணியிருக்கின்றவர்களுமம, யுத்தத்திலே சிறந்த பெயர்பெற்றிருக்

கின்றவர்களும், பூமிகெளியச் சஞ்சரிக்கின்றவர்களும், வரத்தில் மிகுந்தவர்களும், போரையே ஆபரணமாக அணிந்திருக்கின்றவர்களும், தேவர்களைத் தோற்குமபடி வென்றவர்களும், அசுரர்களைக் கொன்றுதின்றவர்களும், பன்னகர்கள் உபுத்தத்திலே முதுகிட்டுப் போகபபார்த்துச் சிரித்துப் பரிகாசஞ்செய்தவர்களும், அளகாபுரியைக் கொள்ளையிட்டுக் குபேரனுடைய கீர்த்தியை அழித்தவர்களும், தேவர்கள் தினவெடுத்தாற் போரசெய்து அதைத்தீர்த்துக் கொள்ளவேண்டுமென்று கள்தோறும் தேவலோகமுதலாகிய சகலலோகங்களிலும்போய்த் திரிபவர்களுமம, அஷ்டதிகளையும காவிறலே இடறுங்கோளென்றலும், கடல்நீரைக் குடியுங்கோளென்றலுமம, "சூரியனைக் கீழே தள்ளுங்கோளென்றலும், மேகங்களைப் பிழியுங்கோளென்றலும், ஆதிசேஷனை இழுத்துநிலத்திலேமோதுங்கோளென்றலும், பூமியையெடுங்கோளென்றலும், அத்தவார்த்தை வாயிலிருக்குமபோதுதானே முடிக்கத்தக்கவர்களுமாகிய அந்தக் கிங்கரர்கள், கால்களிலிருந்து எழும்புகின்ற தூளிகளபோய்த் தேவர்களுடைய கண்களை மறைக்கப் புலிக்கூட்டங்கள் போலவும், சிங்கக்குழாங்கள் போலவும் ஆலாலவிஷமபோலவும அதிகவுக்கிரமாய்ச்சரவேகத்தைகொண்டு கரியமலைகள் உருப்பெற்றுவருவதுபோலவந்தார்கள். கலைகள் அக்கினிப்பொறியைக்கக்க, சுவாசம்புகைய,*வேலைகள்மின்ன இடிபோலக் கர்ஜித்து காலுதிக்கிலும் ஓடி, பிரசண்டமாருதமானது மோதுதலால் ஈசுவரத்திரங்கள் உதிர்வதுபோலச் செடிகொடிமரங்களெல்லாம் சிறுதுகளாயுதிர்ந்து, மேகசஞ்சாரமில்லாத ஆகாசம்போல உருவழிந்திருக்கின்ற அந்தச்சோலையைச் சுற்றிவளைத்தார்கள். இவ்விதமாகவந்து வளைத்தவர்களுடைய ஊதுகொம்புகளின் சப்தத்தையும், தவளச்சங்குகளின் ஓசையையும, பேரிகைமுழக்கத்தையும், வீரகர்ஜனையையும கேட்டுச் சூரியனும் பயந்துபோமபடி. அண்டமுகடுபரியந்தம் வளர்ந்து கைலாயபர்வதம்போல நிற்கின்ற அநுமானுனவா அவர்கள் வருவதைக்கண்டு போரசெய்ய வருகின்றாகளென்பதைக்குறித்துத் தமது முன்னே பீஷ்டஞ் சிதறித்தனைறு மிகவுஞ் சுருக்காழிப்பட்டார். அரத ராக்ஷசர்கள் அநுமானைப்பார்த்து, இவனதான் இவன்தானென்றும், இதுதான் இதுதானென்றும் சொல்லிக்கொணடே வாயுவைபபோலகிலும வினையாக எதிரேவந்து பகலானது இருண்டு இரவாக மாறும்படி அனைவரும் நெருங்கி சுவர்க்கமர்த்திய பாதாளமென்னும நிரிலோகங்களும கிடுகிடாய்க்க ஆர்ப்பரவாக்கங்களைப் பிரயோகித்தார்கள். சமவர்த்தம, ஆவர்த்தம, புஷ்கலாவர்தகம, சங்காரிதம், துரோணம், காளமுகி, நீலவருணமென்கின்ற எழுவகைப்பட்ட மேகங்களும்; இலவணம், இக்ஷு, சுரா, சாபபி, ததி, க்ஷீரம, சுதோதகமென்கிற எழுசமுத்திரங்களும் அஞ்சுமபடிப பேரிகையை முழக்கினர்கள். மலைமுழையைப்போலத் தங்கள் வாயைத்திறந்து அதிலிருந்து புகை தவழும்படிக்கோபித்தார்கள். ஆதிசேஷனுடைய பிடரோமியும்படி அடிபெயர்த்துவைத்து மூன்றிற்காட்டில் அக்கினிகலந்ததுபோல ஒன்றுகக்கலந்தார்கள். தர்மமூர்த்தியாகிய மாருதி பானவர், யுத்தசன்னத்தராய்வந்த இராக்ஷதர்களை அறிந்து, தமக்கு அருகில்

கள். அநேகர் தங்களாயுதங்களால தங்கள் மக்களைத் தாங்களேமடித்தார்கள். அஞ்சனாதேவி புத்திரானவர் இராக்ஷதஸ்திரீகள்படுத்துயரத்திற்காகி இறக்கப் பட்டு உங்கள் வீட்டைநோக்கிப் போங்கோளென்று சிலராக்ஷதனை அனுப் பிவிட்டார். கவமாகக்கூடிய நாயகிமார்கள்கையில் அவர்கள்உயிரைக்கொடுத் ததுபோலச் சில ராக்ஷதனைக்கொடுத்தார். தங்களைப்பிரிந்து யுத்தத்திற்குவந் தனைக்குறித்து ஊடின ஸ்திரீகளுக்காக அவர்கள் மாளிகையிற்போய்ச் சேரு மபடி சில ராக்ஷதனைப்போக்கினார். விருக்ஷங்கள்தோறும் தெற்றிகள்தோ றும், காற்சந்திகள்தோறும், சுடலைகள்தோறும, கோட்டையிடங்கள்தோறும், தோப்புகள்தோறும், தெருக்கள்தோறும், மடுக்கள் வாவிகள்தோறும், ஏரி கள் ஓடைகள்தோறும், அந்தத் தேசமுழுமையும் இராக்ஷதப்பிணமயமாம்படி செய்தார். அவர்களுடைய உயிர்களையெல்லாம் பிடித்துப்பிடித்து கமனும் கையுஞ்சலித்துக் காலுமோய்ந்தான். மாருதியும்ஜாடுகிறதோ தவிர்கிறதில்லை. ஈக்ஷத்திரமண்டலத்திலும், மேகமண்டலத்திலும், சுவர்க்கத்திலும் மற்று முள்ள பலவிதமாகிய பதவிகளிலும், இராக்ஷதர்களுடைய உயிர்கள்போய் நிறைந்தன. இவ்விதமாகிய உயுத்தம் நடக்கின்றசமயத்தில் மறுபடியும் இரா க்ஷதர்கள் மோகங்கொண்டவர்களைப்போலக் கோபாவேசமாய்வந்து ஆகாய முழுமையும் எட்டுத்திக்குகளும் மேகங்கள் கவிந்துகொண்டதுபோலக் கவி ந்துகொண்டார்கள். அவர்களுக்கு மத்தியில் வாயுகுமாரர் மேகத்தின் நடுவி லிருக்கின்ற சூரியனைப்போலப் பிரகாசித்தார். இரைகின்றதனைலும், அலை கின்றதனைலும், பெருத்திருப்பதனைலும், கறுத்துக்காண்பதனைலும், வேல், வாள்முதலாகிய ஆயுதங்கள்மகரமச்சங்கள்போலவிளம்புதலாலும், இராக்ஷதர் கள்கலங்கிய கடல்போலிருந்தார்கள். அநுமானைவர் அந்தக் கடலைக்கடை ந்த மந்தாகிரிபோலிருந்தார். ஆஞ்சநேயருடைய கையினைலும், மெய்யினைலும், காலினைலும், வாலினைலும், மணிமுடிகள் நெரிந்து சிதைந்தமடிந்த இராக்ஷதர் களோ தேவர்கள்நடுங்கும்படி கருடன் அமிதகடத்தைக் கிரகித்துக்கொண்டு போனகாலத்தில அவனால் சின்னபின்னப்பட்ட சர்ப்பராஜாகளைப்போலா னார்கள். பவனகுமாரரோ? அந்தக் கருடனைப்போலானர். தசைமுதலான வைகளும் அற்றுச் சிதறுண்படித் துகைத்துக்கொன்றும குறைவுபடாமலிருக் கின்ற அரக்கர்கள் யானைக்கூட்டத்தையொத்தாகள். அநுமானைவர் அந்த யானைகளுக்குச் சத்துருவாகிய சிங்கத்தையொத்தார். அண்டுகொண்டு எய்ததும், கதைகொண்டு அடித்ததும், சூலங்கொணடு எறிந்ததும, வாள்கொண்டு அறுத்ததும், கோலகொண்டு குத்தியதும், சுரிகைகொண்டு தோண்டியதும், வேல்கொண்டு தொளைத்ததும், சூடாரங்கொணடு பிளந்ததும், சக்கரங்கொ ண்டு கொய்ததும, பாசங்கொணடு சுற்றியதும், குறடுகொண்டு பற்றியதும, சலாகைகொணடு குடைந்ததுமாகிய பலவிதகாயங்களும், அநுமானுடைய புஜத்திலுண்டாயின. விசாலமாகிய சமுத்திரங்களும் மழைபெய்யும் பருவத் தையுடைய மேகக்கூட்டங்களும் அஞ்சுமபடி பிரபலமான போர்செய்கின்ற இராக்ஷதர்களுடையசண்டையின் ஆரவாரத்தைப்பார்க்கிலும் ஐயனுகிய அநு மானைப் புகழ்கின்ற தேவர்களுடைய ஸ்துதிமுழக்கமே அன்றைப்போரில்

அதிகரித்தது. கொடிய கோபத்தையுடைய கிசாசரர்கள் முறைமுறையாக விசையுடனே பிரயோகித்த எத்தனையாகோடி ஆயுதங்கள் பட்டபுண்களும் தேவர்களும் அவர்கள் பத்தினிமாகளும முனீசுவராகளும மழைபோலச் சொரிந்த புஷ்பங்களும் வாயுபுத்திரருடையதேளிலை வேறுமை தெரியாமல் விளங்கியிருந்தன. கிழக்கு, தென்கிழக்கு, தெற்கு, தென்மேற்கு, மேற்கு, வடமேற்கு, வடக்கு, வடகிழக்காகிய, அஷ்டதிக்குகளும எங்குபடிலோ லச் சுழல்வதிலையும்; ஆகாசத்திலை உயாந தெழுபடுவதிலையும அங்கிருந்து மலைவருவதுபோலப் பூமியிற்பாய்வதிலையும காலை ஒடிந்து கையறுந்து தோள்முறிந்து தொடைநெரிந்து வயிறுகிழிந்து குடாகள்சரிந்துதலைபிளந்து உடல் கசுங்கிராகூசர்களெல்லாம் இறந்தார்களேயலலாமல அநுமானுடைய சரீரம் சிறிதாவதுவெயர்க்கவுமில்லை அவாபெருமூச்செரியவுமிலலை. மனஞ்சலிக்கவுமில்லை. இராவணன் அனுப்புவிக்குபடியே விசிறுனாடுவாகளைபோல மயங்கி அநுமான்மேல் யுத்தஞ்செய்யவந்தஇராகூசாகளெலலாம், இவ்வாறுபோராடி மடிந்தார்களே யல்லது அவர்களில் ஒருவராகிலும பயந்து ஓடவேயில்லை யாகையால், அரக்கனைப்பாராக்கிலும் சுத்தவீரர்கள் ஆரிருக்கின்றார்கள் ? அந்தக் கிங்கரர்களெல்லாம் ஒருகூணைப்பொழுதில் மடிந்துபோகவே அதுகண்டு சிங்காரவனத்தின் காவலாளாகள் நடுக்கத்துடனே புறப்பட்டுக் கைகாலெழாமல் பயமானதுகழுத்தைப்பிடித்துத் தள்ளப்பினமலைகளின்மேல் விழுந்துதடுமாறி எழுந்து சீக்கிரமாக ஓடி இராவணனிடத்திலேபோய்ப் பயத்தினாலே சொல்லுகிறதற்கு நாவெழாமல் விம்மிவிம்மி, அநுமானாலே இராகூதர்கள் மடிந்ததைக் கையினாலே காட்டிக்காட்டித் திக்குகளை யெரிக்கவெறிக்கப்பாாத்துச் சஞ்சலப்பட்டார்கள். அவர்கள் படுகின்றவருத்தமை தனக்குச்சொல்லுமபடி இராவணன் அறிந்துகொண்டுஎன்னடாபேப்பயலகளே; நான் அனுப்பின இராகூதர்களெல்லாம் இறந்துபோனார்களோ? அலலவென்று எனனுடைய ஆஜ்ஞையைக்கடந்து துறந்துபோனார்களோ? அல்லவென்று யுத்தஞ்செய்து வெகுாளானபடியினாலே அதைமறந்துபோய்த் திரும்பிவந்து விட்டார்களோ? நீசகளேன் ஓடிவந்தீாகளென்று தன்பத்துவாய்களும நெருப்பைக் கக்கும்படிக் கேட்க, சுவாமீ! அப்படிக்கெல்லாம் வந்ததுறலைறுமிலலை. தாங்கள் அனுப்பிய கிங்கரார்களெல்லாம அந்தக்குரங்கினாலே யுத்தகளத்திலை பராக்கிரம மழித்து, அஞ்சாமல் பொய்ச்சாகூதி சொன்னவர்களுடைய சூலமபோல நிர்மூலமாக மடிந்துபோனார்களென்று சொன்னார்கள். அதுகேட்டுத் தனபக்கத்திலிருந்து ஏவல்செய்கின்ற அஷ்டதிக்குப் பாலகாகளாகிய தேவர்களைபபாாத்துமனத்திலே நாணங்கொண்டு, இதுவென்ன நீங்கள் அறியவிலலையாவென்று ஏழ்றுலகங்களையும் விழுங்கத்தக்கதாகக் கோபாக்கினியானது மூண்டெழச்சொன்னன். அதற்கு அவாகளொன்றும் பேசாமற்பயந்திருந்தார்கள். மறுபடியும் வந்துசொன்னவர்களைப்பார்த்து, அந்தக்குரங்குநம்முடைய இராகூதாகளைக் கொன்றதென்கின்ற வார்த்தை நீங்கள்காதினாலே கேட்டதா? அல்லது கண்ணினாலேகண்டதா? சொல்லுங்கோளென்று கேட்க, ஐயா! நாங்கள் ஒருபக்கத்திலிருந்து பார்த்தோம். சமுத்திரமபோலச் சுற்றி வளைந்துகொண்ட

கம்முடைய சேனைகளையெல்லாம் அந்தவானரம் மண்டலாகாரமாகச் சூழன்று சூழன்று ஒருமரத்தாலே அடித்துமடித்தது. இன்னமும் அம்முயற்சியை ஒழிகதல்லவென்று சொன்னார்கள்.

கிங்கரர்வதைப்படலம்.

முற்றிற்று.

ஜம்புமாலிவதைப்படலம்.

அப்போதுகைகூப்பிக்கொண்டு எதிரேநிற்கின்றமலைக்கு ஒப்பாகியதோள் சுளையுடைய அதிவீரனுகிய ஜம்புமாலி யென்பவனைப்பார்த்து, நீயிந்த க்ஷணமே யானைகுதிரை முதலாகிய சேனைகளுடனே போய்வளைத்து அந்தக்குரங்கின் மதத்தையடக்கி, அதைப்பிடித்துக் கயிற்றினுலே கட்டிக்கொண்டுவந்து என்முன்பாகவிட்டு என்னுடைய கோபத்தையாற்றென்று சொன்னன். அந்தவார்த்தைகேட்டு மிகவும் மகிழ்ச்சியாய்ச் சேவித்துக்கொண்டு கணக்கிடப்படாமல் திரண்டஇவ்வளவுஇராக்ஷத வீரர்களுக்குமுன்னேனையொரு பொருளாகமதித்து, நீ இந்தக்காரியத்தை முடிக்கவேண்டுமென்று ஏவத்தக்க பாக்கியம் நான்பெற்றேனே இனி என்னைப்பார்க்கிலும் உயர்ந்தவர்கள் ஆரிருக்கின்றார்களென்றுசொல்லி, அவ்விலங்காதிபதியாகிய இராவணனுடைய கோபந்தானே கடந்துபோகிறதுபோலத் தன்னுடைய சேனைகளுடனேயும், தனக்கு இராஜாவாகியஇராவணன்கூட்டிய சேனைகளுடனேயும்தன்பிதாவும் இராவணனுடைய முதல்மந்திரியுமாகிய பிரகஸ்தனென்பவன் அனுப்பிய சேனைகளுடனேயும், மற்ற இராக்ஷதசிரேஷ்டர்கள் விட்ட சேனைகளுடனேயும்,நமக்கு யுத்தம்வாய்த்ததென்கிற சுகோதாஷத்தைக்கொண்டு, ஜம்புமாலி புறப்பட்டான், இடிபோலுங்குரலினையும, சிவந்தகண்களையும், தாவள்யமாகியதந்தங்களையும், வீரபட்டங்கட்டிய நெற்றியையுமுடைய மலைபோலப்பருத்த யானைக்கூட்டங்களும், மேகமண்டலமட்டும் உயர்ந்த சக்கரங்களையும், தட்டுமொட்டுகளையும் முத்துச்சரங்கள்தூக்கிய கொடிச் சீலைகளையு முடைய ரதக்கூட்டங்களும் காற்றைப்பிடித்துக் கட்டிக்காலகள் முதலாகிய பலவுறுப்புகளும் ஏற்படுத்தி உயிருங்கொடுத்து எமனை மேலேயேற்றியதற்கு ஒப்பாயிருக்கின்ற புரவிக்கூட்டங்களும், சுழல்கின்ற விழிகளையுடைய புலிகளுக்குச்சமானமாகிய பதாதிக் கூட்டங்களும் நெருங்கவும, தோமரம், உலக்கை, கட்கம், கோடாரி, வச்சிரம், அங்குசம், சக்தி, சக்கரம், வில், அஸ்திரம், கதை, எறியீட்டி, இரும்பிற்செய்த நெருஞ்சில்முள், காலபாசம், வளைதடி, கவண்கல், வேல், பெருஞ்சவளம், எழு, கழு முதலாகிய அநேகவித ஆயுதங்கள் பிரகாசிக்கவும், பலபேதமாகிய சித்திரக்கொடிகள் ஆகாயத்தையளாவிக் காடுபோல அடர்ந்துவரவும், முரசங்கள், சங்கங்கள், எக்காளங்கள் முதலாகிய வாத்தியங்கள் சப்திக்கின்ற சப்தமும், தேர்வண்டிகள் கடகடவென்று ஒலிக்கின்ற ஒலியும், குதிரைகள் கனைக்கின்ற ஓசையும், யானைகள் முழங்குகின்ற முழக்கமும்,வில்லின்குணத்தொனியும், சகலஜீவராசிகளின் செவிகளும் செவிடுபடும்படி அண்டமுகடுமட்டும்போய்த் தேவர்கள் ஒருவர்க்கொருவர் பேசுகின்றவார்த்

தையை ஓிவரந்தெரியாமல் மயக்கவும், அந்தச்சேனை கடக்கும்போது சுவர்ன மயமாகிய இலங்கையிலிருந்து தூசுகளெழுந்துபோய்ப்படிகிறபடியினுலே மலை களெல்லாம் மகமேருபோலவும், நகரங்களெல்லாம் சுவர்க்கலோகம்போலவும், பிரகாசிக்கவுந் தலைப்பட்டன. பாவியாகிய ஜம்புமாலியினுடைய ரதத்தின் புறத்தில் வந்த தேர்கள் ஒருபதினுயிரம யானைகள் இருபதினுயிரம் குதிரைகள் நாற்பதினுயிரம். பதாதிகள் என்பதினுயிரம. அந்தத் தேர்களிலவருகின்ற வீரர்கள் பிரமவம்சத்தில பிறந்தவர்கள். தநுர்வேதத்தைக் கனாகண்டவர்கள். சமஸ்த மந்திரதந்திரங்களு மறிந்தவர்கள். அபரிமிதமாகிய வரம்பெற்றவர்கள். மிகவும் குரூரமானவர்கள். மகாபராக்கிரம சாலிகள். வச்சிரஸ்தம்பத்திற்கு ஒப்பாகிய தோளினிடத்தில வில்லைத் தாங்கினவர்கள். முதுகின் புறத்தில அம்பறாத்தூணி தூக்கினவர்கள். மார்பில் வெற்றிமாலையும் கவசமுந் தரித்தவர்கள். யானைமேல் வருகின்ற வீராகள். திருதியின் வமசத்திற் பிறந்தவர்கள். ஐராவதமென்னும வெள்ளையானையை ஏறி நடத்துகின்ற தேவேந்திரனுக்குச் சமானமாகிய அழகினையுடையவாகள். பலவகை ஆயுதபரீக்ஷையும் அங்குச பரீக்ஷையுந் தேர்ந்திருக்கின்றவாகள். நெருப்பைக்கக்குகின்ற கண்களும் சூரியனைப்போலப் பிரகாசிக்கின்ற சரீரமுமுடையவர்கள். அசுவத்தின் மேல் வருகின்ற வீரர்கள், பதினெணவகைப்பட்ட சாரிகையுந் தெரிந்தவர்கள். ஆயுதபரீக்ஷகளெல்லாம் அறிந்தவாகள். யுத்தத்தில்முனைந்து நிற்கவீரர்கள் கஜவீராகளுடைய சிரத்தின்மேலும் தாவிச்செல்லும்படிப் புரவியைஊட்டத்தக்கவர்கள். இப்படிப்பட்ட சேனைகளெல்லாம் சூழும்படி அந்தஜம்புமாலியென்பவன் தேவர்களும் பயந்துநடுங்க, அளவில்லாத ஆயுதங்களை யேந்திக்கொண்டு கண்களில நெருப்புப்பறக்க, மாபிலணிந்த கவசமும் கோரதந்தங்களும் பிரகாசிக்க வந்தான. அபபோது நந்தவனத்திலிருந்த ஸ்ரீராமதூதரானவர் ஏழை இன்னம் இராக்ஷதர்கள் வரவிலலையென்று அவர்கள் வரும்வழியைப்பார்த்து சோலையின் வாயிலில சந்திரன் முதலாகிய கிரகங்களும் நக்ஷத்திரங்களும மேலே தவழும்படி, இந்திரதநுசுபோலத் தோன்றுகின்ற தோரணகம்பத்தின் மேலேறி, அந்தக்கம்பத்தில பதிதிருக்கின்ற நவரத்தினங்களும் பொன்னும், ஆகாயத்தில நிறைந்த இருளைநீக்கிப் பிரகாசிக்கச் சமுத்திரத்தின் நடுவிலே உதயம்மாகிய சூரியனுக்குச் சமானமாய் எழுந்தருளியிருந்தார் அப்படியிருந்தவர் இடியுடனே மேகங்கள்சிந்தவும், கடலோசையடங்கவும் அஷ்டகஜங்கள் உயிரையும் விஷத்தையுங்கக்கவும், இராக்ஷதர்களுடைய நெஞ்சில் பயம்ஜனிக்கவும், தேவர்கள்நடுங்கவும், ஸ்ரீராமசந்திரனுடைய வில்லின்குணத்தொனியைப்போல கர்ஜித்து அஷ்டதிக்கிலுமுள்ள ஐராவதம், புண்டரிகம், வாமனம், குமுதம், அஞ்சனம், புஷ்பதந்தம், சார்வபௌமம், சுப்பிரதீபமென்கின்ற யானைகள் மதமடங்கி அசைவற்றிருக்கவும், தென்றிசையிலிருக்கின்ற யமனும் மனந்திடுக்கிடவும், ஆகாசத்தில் நின்றும் நக்ஷத்திரங்கள் பூவுதிர்வதுபோல வுதிரவும், பூமியும் அஷ்டகுல பர்வதங்களும் பிளக்கவும் சமுத்திரங்கலங்கவும் தோள்களைக்கொட்டினர். அத்தருணத்தில் நிருதர்களெல்லாம் சமுத்திரத்தைப்போல ஆர்ப்பரித்து நான்குதிசையிலும் இரத்தப்பிரவாகம் ஓட.

மத்தியில் மத்தியில் பிணமலைகள் தங்களைத்தடுப்பதனல் வருவதற்குச் செவ்வையாகிய வழியைக்காணுமல், எந்தவழியால் போவோமென்று சொல்லிக் கொண்டு தங்கள் தங்கள் இனத்தாருடைய சரீரத்தின்மேல் காலிடறிமேல் விழுத்தலைப்பட்டார்கள். ஜம்புமாலியானவன் அவ்விடத்தில் அந்தச்சேனை வெவ்வேறுக அணிவகுத்து இருபக்கங்களிலும் முன்னும் பின்னும், கிரமம் கிரமமாக முடுகிப்போம்படி ஏவித் தானும் தன்தேரை நடத்தினன். அதுகண்டு தோரண கம்பத்தின்மேலிருந்த ஆஞ்சநேயர் தம்முடைய அபீஷ்டமசித்தித்ததென்றறிந்து தோள்கள்பூரித்து, திருவாழி திருச்சங்கத்தை ஏந்திய ஸ்ரீமந்நாராயணருடைய திருமணகுறியானது தீபச்சுடர்போலப் பிரகாசிக்கின்ற தமது நெற்றியே முன்னணியாகவும, தேகத்தில் மொய்த்திருக்கின்ற ரோமங்களே கடுவணியாகவும், வாலே பின்னணியாகவும, கைகளிலும காலகளிலுமுள்ள நகங்களே வேலகள்வாள்களாகவும் தாமுமவர்களுக்கு எதிரேயுத்தசன்னத்தராய் நின்றார். அதுகண்டு, இராக்ஷதர்கள் கோபச்செருக்குற்றவர்கள்ாய் அவர்மேல் சூரியனைப்போல ஒளிவீசுகின்ற அநேகவித ஆயுதங்களை மழைபொழிவதுபோலப பிரயோகஞ் செய்தார்கள். கறுத்த சமுத்திரத்திருக்குச் சமானமாகிய அந்தராக்ஷதவீரர்கள் பிரயோகித்த ஆயுதங்களையெலலாம தமது சரீரத்தில் ஒன்றுவதுபடவொட்டாமல, கைகளாலபிடித்து ஒடித்துத் தூள்தூளாகும்படிப் பிசைந்து கடலிலெறிந்துவிட்டு, ரோமத்துவாரங்கள்தோறும் அனற்பொறிசிதறும்படி, வடவாமுகாக்கினியைப்போலக் கோபித்துத் தோரணகம்பத்தைவிட்டுப் பூமியிலே குதித்துப் பாய்க்குமபோது ஒரு மழுவாயுதங்கிடந்தது. அதையெடுத்துக்கொண்டுஇராக்ஷதக்கூட்டத்திலபிரவேசித்து அவர் தோரணகம்பத்தின் மேலிருக்கின்றுரொன்றும, அதிலிருந்து எழுந்தாரொன்றும், நிலத்திலிறங்கினுரொன்றும, மறுபடி ஏறினுரொன்றும, கான்குபக்கங்களிலும் திரிகின்றுரொன்றும,சண்டைசெய்கின்றுரொன்றும,அறியாதவர்களாய் எங்குமுவிரிந்து குவிந்து விலங்கிக்கலந்து பொருந்திநெருங்கிய அரக்கர்களெலலாம், உயுத்தகளத்தில சின்னபின்னபபடுமபடி ஜாடினர். அவர்கள் எறிகின்ற சக்கரமுதலானவற்றையும் எய்கின்ற அஸ்திரமுதலானவற்றையும், வல்விடிபோல மேல்வருகின்ற தண்டமுதலானவற்றையும இடதுகையினுற்பற்றிச் சிதைத்தார். யானைகள் மாயவும, தேர்களழியவும, குதிரைகள் நெரியவும் வலதுகையினல் குதிக்குமைத்தார் மற்றும் வாயுபுத்திரர் அந்த எழுவாயுதத்தைக்கொண்டு மோதுதலால் அநேகம்யானைகள் கொமபுகள்நெரிந்து தும்பிக்கைதுணிந்து கால்முறிந்து வால்சிதைந்து செவியறுந்து, தொனியடங்கி மதம்வறண்டு மத்தகம்பிளந்து கோபந்தணிந்து மடிந்தன, அநேக ரதங்கள் அச்சொடிந்து, மச்சழிந்து சகடுபிளந்து முகடுகுலைந்து மேற்பார்தகர்ந்து கீழ்ப்பார் நெரிந்து ஏர்க்கால்முறிந்து குத்துக்கால்துணிந்து தட்டுச்சிதைந்து சுற்றுப்பெயர்ந்து குடைசாய்ந்து கொடிவீழ்ந்து புரவிகள்மடிந்து வலவர்களிறந்து சின்னபின்னமாயின். அநேகங்குதிரைகள் இடுப்பொடிந்தும் மண்மேலுருண்டும் நெஞ்சுலர்ந்தும் வாய்புலர்ந்தும் வாலறுந்தும் கண்குழிந்தும் அஸ்திகள்நெரிந்தும் கால்மடங்கியும் கழுத்துத்துவண்டும் வயிறு பீறுண்டும்மாண்டன. அநே

கங் காலாள்கள்பயந்து பிரமித்துத் திட்டென்றுவிழுந்து பொட்டென்றெழுந்து அடியுண்டு பிடியுண்டு ஐம்பொறிகலங்கி அறிவுதடுமாறி உருண்டு சுருண்டு பிராணனேறு தலையிலேதானே உழைத்துக்கொண்டு புழுதியிற்புரண்டார்கள். மற்றும் யானைகளேவாரி யானைகளினமேல் மோதினர். தேர்களேத்தூக்கித் தேர்களின்மேற்புடைத்தார். குதிரைகளேயெடுத்துக் குதிரைகளின்மேலெறிந்தார். பதாதிகளேயள்ளிப் பதாதிகளினமேலிறைத்தார். சூளையும் உதிரமும் ஒன்றுகக்கலந்து குழம்பிச்சேறுக அந்தச்சேற்றில் யானைகள்விழுந்து அழுந்தவும், இராக்ஷதவீராகளுடையதலைகளும் தோள்களும் அறுபட்டுவிழவும், மிதித்தார். மலவீரர்களேயும், மற்றவீரர்களேயும பிடித்து அவர்களுடைய கோரதந்தங்களும், கைகளும, விற்களும், வேல்களும் போருக்கு அழைக்கின்ற சொற்களும், உயிரும, நிததூளியாமபடி நிலத்திலிட்டுத் துகைத்தார். நான்குதிக்கிலும நெருங்கியிருக்கினறதேர்கள்தோறும, யானைகள்தோறும், புரவிகள்தோறும், பதாதிகள்தோறும் நடநது நடநது அநேக சைனியங்களேமடித்தார். யுகாந்தகால இடியிடித்து விழுந்தாற்போல அநுமானனவர் உயர எழும்பிக் குதினைகளின்முதுகிலே குதிப்பார். குதினைகளின் முதுகிலிருந்து ரதருடைய மார்பிலேகுதிபபார. ராக்ஷதாகளுடைய மாபிலிருநது ரதங்களின்மேற்குதிப்பார. இரதங்களின்மேலிருநது மதயானைகளின் மேற்குதிப்பார். இருவினைகளேயுங்கடநத முக்காதமாக்களுடைய அவிவைப்போல ஒரு தன்மைப்பட்டிருப்பார். ஸ்தனமுதலாகிய அவயவங்களேச் சகலருக்கும் பொருளுக்கு விலைகூறுகின்ற வேசையாகளுடைய மனத்தைப்போலப் பல தன்மையராகக் காணபபடுவார. காற்றடியைப்போலச் சுழன்று சுழன்று திரிவார். ஸ்ரீமந்நாராயணனுடைய தாசபூதாகள் அவனுடைய குணதிசயத்தைப் பெறுவார்களென்கினற வேதப்பிரமாணத்தைப் பிரத்தியக்ஷப் படுத்துகின்றவனைப்போல ஸ்ரீரகுநாயகருக்கு அடிமையாகிய ஆஞ்சநேயர் பூமியிலும், ஆகாயத்திலும, எட்டுத்திகுகிலும பார்த்தவாகளுடைய கண்ணிலும் நினைத்தவர்களுடைய மனத்திலும, எங்கெங்கும தாமாய்க் கலந்திருந்தார். தேர்களே அவற்றிற்கட்டிய கொடி குடை முதலாகியபலவகை யுறுப்புகளுடனுமபூட்டியபுரவிகளுடனும மேலிருக்கினற இரதிகர்களுடனும், நடத்துகின்ற சாரதிகளுடனும், ஒருகையினலெடுத்து அடிதது நிலத்திலிட்டு அரைத்தார். மதயானைகளே அவற்றின்மேல்வைதத அம்பாரிகளுடனும் அவற்றில் உட்கார்ந்திருக்கின்ற வீரர்களுடனும், அவற்றைச்செலுத்துகின்ற பாகர்களுடனும் ஒருகையினற்பிடித்துப் பிசைந்து உயிரசோரும்படிப் பிழிந்தார். கருத்தகின்றத்தையும், வக்கிரதநதங்களேயும், எரியெழுமபடி விழிக்கின்ற கண்களேயும், கைகளிற்சூலத்தையும், பாசத்தையு முடையவர்களாய்க் கோரபீகரத்துடனே எமனேப்போலவந்த இராக்ஷதர்களேயெல்லாம் உருத்திரமூர்த்தியைப் போலத் தனித்தனி உதைத்து உதைத்துக் கொன்றார். சக்கரங்கள், தோமரங்கள், உலக்கைகள், தணடுகள், வேலகள், வாள்களும், குடைகள், கொடிகள், ஆலவட்டங்கள், சாமரங்களும், தேர்கள், யானைகள், குதினைகள், பதாதிகளும் சின்னபின்னப்பட்டு இரத்த ஆற்றின் அலேகள் பூரட்டி யுருட்டும்

படிப் போய்ச் சமுத்திரத்தில் விழுந்தன. அநுமான் கையிலிருக்கின்ற இருப்புலக்கையின் அடிபட்டு இராக்ஷதர்களுடைய தலைகள் எழும்பி அண்டத்தையெட்டி மலைகளைமுட்டித் திசைகளைக்கிட்டி ஒன்றோடொன்று ஓட்டித் தட்டுமுட்டாடின. இப்படியாகக் கூடவந்த யானைக்கூட்டங்களெல்லாம் ஒரு உக்கிர சிங்கத்தினற் கொல்லப்பட்டு இறக்கும்படித் தனித்துநிற்கின்ற மதயானையைப்போல ஜம்புமாலியென்பவன் தன்னைச் சூழ்ந்துவந்த சேனைகளெல்லாம் அநுமானாலே இம்சிக்கப்பட்டு மாண்டுபோகத் தான்மாத்திரம் தனியேநின்று, எமனைப்போலக் கண்கள் அக்கினியைச்சொரிய அதிக கோபாவேசங்கொண்டு அவ்விரணகளத்தில் மடிந்த யானைகள், குதிரைகள் ராக்ஷதர்களுடைய ரக்தநதியில் மூழ்கி, நிணச்சேற்றில் தன் தேர்வண்டில் அழுந்தி அப்புறம் பெயராமல்நின்ற நிலையை அறிந்து அதைவிட்டுவிலகிப் போவதற்கும் வேறொரு வெளியிடங்கிடையாமல், எங்கும் அலைந்து தடுமாறி மஹா பிரயாசத்துடனே ரதத்தை நடத்திக்கொண்டுவந்தான். அப்படிவந்த ஜம்புமாலியைப்பார்த்து, ஸ்ரீராமதூதரானவர் ஒருவார்த்தை சொல்லுகின்றார். அடா இராக்ஷதா என் கையிலேந்தியஆயுதமும ஒன்றே நீ ஏறியதேரும் ஒன்றேயாகையால் நீ மிகவும் இளைத்தவனையிருக்கின்றாய். இவ்விதமாக இளைத்த எளியவருடன் சண்டைசெய்து பிராணனை வாங்குகிறது நீதியல்ல. கூடவந்தவர்களையும் இரக்ஷிக்கத்தக்கசக்தியுனக்கில்லாமல்பின்னிட்டுநின்றாய். எதிர்த்தால் எப்படியும் இந்தக்ஷணமே யிறந்துபோவையல்லாமல் வேறென்ன செய்வாய், ஆதலால் வேண்டாம்.சும்மா தப்பிப்போய்விடென்று சொன்னார். அதுகேட்ட ஜம்புமாலியானவன் அப்படியா உன்னுடையவீரம் நல்லதுதான் நல்லதுதானென்று நெருப்பெழும்படிநகைத்து, இப்பொழுது உன்னை ஜயிக்காமட்டாமல் உன்மேல இறந்துபோன இரதச்சோம்பேறிகளைப்போலவா என்னையும் நினைத்துக்கொண்டாயென்றுசொல்லி, தன்னுடைய பலம்பொருந்திய வில்லிலே சாணைபற்றி ஒளிவீசுகின்ற பாணங்களை ஒன்று பத்து நூறு ஆயிரம பதினாயிரம் லட்சம் கோடியாகப்பூட்டிப் பிரயோகஞ்செய்தான், அப்படிப் பிரயோகித்த ஜம்புமாலியை ஆஞ்சநேயாபார்த்து அடா துஷ்டா! நீ சும்மாவிராதே இன்னமும் பாணங்களைப பிரயோகஞ் செய்கையிலே வில்லம்புமுதலாகிய ஆயுதங்களை யுடையவனையிருக்கிறவன் நிராயுதனை ஜெயிப்பது அருமையா? அருமையல்ல வென்றுசொலலி நகைத்துக் காற்றினுல் பல திசைகளிலும் சிதறிப்போகின்ற மேகத்தைப்போலச் சிதறிப்போம்படி, அவனுல் எய்யப்பட்ட பாணங்களையெல்லாம் தமதுகையிற்கொண்ட இருப்புலக்கையினுல் சின்னபின்னப்படுத்தினர். ஜம்புமாலிதன்னுல்பிரயோகிக்கப்பட்டு முன்னும்பின்னுமாகப்போகிய அஸ்திரங்கள் அநுமானுடைய தேகத்திற்படாமல் மூறிந்து விழுந்ததுகண்டு,அதிகோபதாபங்கொண்டு தன்னுடைய இரதத்தை அநுமான்மேல் செலுத்தும்படி எத்தனப்பட்டுப் போகிறதற்குவழிதுறைகாணாதவனைப்திகைத்துமுன்னிருந்த இடத்தில்தானேயிருந்தது, அக்கினியைக் கக்குகின்ற ஒரு அர்த்தசந்திர பாணத்தைவிட்டு ஸ்ரீராமதூதருடைய கையிலிருந்த அந்த இருப்புலக்கையைக் கண்டதுண்ட மாக்கினன். இருப்புலக்கை

யானது பொடிபட்டதுகண்டு எங்களாண்டவனுகிய ஆஞ்சநேயர் சற்றே மனஞ்சலித்து, மற்றும் அவன் எய்கின்ற பாணங்களையெல்லாம் ஒருமிக்கக் கையிலுல்பிடித்து மடக்கி ஒடித்து நொறுக்கி எறிந்துவிட்டுத் தேவாகள்பார்த்துச் சுந்தோஷித்துஆர்ப்பரிக்கும்படி, அவனுடைய தேரின்மேல்பாய்ந்து காவடத்தையுடைய அந்த ஜம்புமாலியின் கைவிலலை எட்டிப்பறித்து அவன் கழுத்திலேமாட்டி, விசையாகத்திருப்பி முறுக்கி இழுத்தார். இழுத்தமாத்திரத்தில் பெரியமலையற்று மறிந்து விழுவதுபோல அவன் தலையற்று மண்மேல்விழுந்தது. உடனே அவனுடையதேரும், சாரதியும், புரவியும் முறிந்து, நொறிந்து, சிதைந்து குழம்பாகும்படி, சரேலென்று எழுமபிக்குதித்து மிதித்துத் துகைத்துவிட்டு மறுபடியும் அந்த உன்னதமாகிய தோரண ஸ்தம்பதத்தின்மேல்வந்து ஏறிக்கொண்டார். அவரைப் பழித்துக்கொண்டுவந்து போர்செய்து மாய்ந்த இராக்ஷதர்களைக்கண்டு தேவர்களெலலாம பயந்து ஓடிப்போனர்கள். தங்களைப் பிரிந்ததனல் துக்கப்பட்டுக்கொண் டிருக்கின்ற மனையாட்டிமார்களாகிய அரக்கிமார்கள் காணும்படி, அவர்கள்நாயகன்மார்களுடையப் பிணமாகிய உடல்களை உதிர ஆறுனது இழுத்துக்கொண்டு போய் வீடுகள்தோறும் எறிய, லங்கையிலுள்ளவர்களெல்லாம் அஞ்சியோடினர்கள். இறந்த இராக்ஷதர்களுக்காக ராக்ஷச ஸ்திரீகள் அங்கங்கே அழத் தொடங்கினர்கள். இப்போது இந்த அநுமானலே இராக்ஷதர்களுடைய பல மழிந்ததென்று தர்மதேவதை சந்தோஷித்தது. அச்சமயத்தில் அந்தப் பூங்காவனத்தைக் காக்கின்ற தேவர்கள், இராவணன சமுகத்திற்குச் சீக்கிரமாகப்போய்ப் பயத்தினல் வாய்விட்டு ஒன்றுஞ் சொலலமாட்டாமல் விக்கிவிக்கித்தேம்பி அழுதுகொண்டு நின்றார்கள். அதுகண்டு இலங்கேசுவரன் நகைத்துப்பயப்படாதே சொல்லுங்கோளென்று சொல்லச்சுவாமீ! நமமுடைய குலத்தாரெல்லாம் மாண்டுபோனர்கள். அவர்களுடனேகூட ஜம்புமாலியும் இறந்துபோனன். அந்த ஒருகுரங்குதான் அத்தனைபேர்களையும மாய்த்துவிட்டதென்று சொன்னர்கள். இந்தச்சொல் சொல்லும்பொழுதே கோபாக்கினியானது திக்திக்கென்று எரிந்து ஓங்கி யெழும்படி, இந்தச்செய்தியை நினைக்கநினைக்க கண்களிலிருந்து இரத்தம் குமிழியிட்டுப்பாய, அப்படிப்பட்ட குரங்கைச் சிகரத்தில் நானேபோய்ப் பிடித்துவருகிறேனென்றுசொனனன். அதுகேட்டு விரூபாக்ஷன், யூபாக்ஷன், துர்த்தரக்ஷன், பிரகஸ்தன், பாசகர்ணனென்கின்ற பஞ்சசேனபதிகள் திடுக்கென்றெழுந்து கைகட்டிவாய்புதைத்துக்கொண்டுசொல்லுகின்றார்கள்.

ஜம்புமாலிவதைப்படலம்
முற்றிற்று.

பஞ்சசேனபதிகள்வதைப்படலம்.

கேளுமையா திரிலோகபயங்காரா யிருக்கின்ற பிரதாப இல்லங்கேசுவரரே! சிலந்திப் பூச்சியைப் பிடித்துத் தின்கின்ற சொற்பமாகிய ஒரு குரங்கின்மேல் தேவரீர், படையெடுத்துப் போவீரேயாமாகில், பூர்வம் நீர்செய்தயுத்த

த்தில் உம்முடைய நேத்திரத்திலிருந்து மூண்டெழுந்த கோபாக்கினியினாலே மதம் வற்றிக்கிடக்கின்ற திக்கஜங்களுக்கு மதமுண்டாகும். மேலும் மகத தாகிய பர்ாக்கிரமத்தையுடைய கருடனனவன், ஒருசிறிய மசகத்தைலக்ஷியம் பண்ணிக்கொண்டு அதன்மேல் யுத்தத்திற்குப் போவதுபோல, நீரிந்தக்குரங்கை ஒரு பொருளாக மதித்துக்கொண்டு யுத்தத்திற்குப்போனால், இரவும் பகலும் உமமுடைய புஜபலத்தை நினைத்துத்துக்கப்பட்டுக்கொண்டிருக்கின்ற கைலாசபர்வதத்திற்கும் துக்கநிவாரணமாகும. அதனால் உமக்குமஹாசாம்பிராஜ்யம்வருகின்றதென்ன? சிறிதாவது இழிவாகிய செய்கையைச்செய்பவர்களாயிருந்தவர்களெல்லாம், பெறுகின்றபேறு யாதொன்றையுங் கண்ணிலுங் காணுமல் காதிலுங்கேளாமலே போய்விட்டார்கள். மேலும் இதற்குச்சமானமாகிய இழிவு வேறென்ன இருக்கின்றது? ஆகையால் நீரந்தக் குரங்கின்மேல் போர்செய்யப்போவதனால், உம்முடைய பெருமை யிவ்வளவென்று தெரியாமல் நடுங்குகின்ற திரிமூர்த்திகளுடைய முகங்களிலும் சிரிப்புண்டாகும். அதுவுமல்லாமல் பார்க்கிறவர்கள் கேட்கிறவர்களுக்கு வேறே யும்மிடத்தில் பலசாலிகளில்லை யென்பதாகவுந் தோன்றும். முன்பு வீரமில்லாத பலவீனர்களையனுப்பினீர். போனதுபோகட்டும். இனியாவது நன்மையைப்பெறவேண்டுமென்று குறித்தீரேயாகில், எங்களுக்குச் செல்வுகொடுத்தனுப்பும்; அப்பொழுது எங்கள் சாமர்த்தியம் தெரியவருமென்றுசொல்லிக் கைகளையெடுத்து அஞ்சலிசெய்தார்கள். அதற்கு இராவணன் சம்மதித்தான். அத்தருணத்தில் திரிலோகாதிபத்தியமுந் தங்கள்வசமாகப் பெற்றவர்கள்போலப் பஞ்சசேனைபதிகளும் சந்தோஷசித்தர்களாய், நெற்றியிலணிந்த திலகமானது நிலத்திற்பொருந்தும்படித் தாழக்குனிந்து பின்னும பின்னும் பலதரஞ்சேவித்துக்கொண்டு இராவணனுடைய சபாமண்டபத்தைவிட்டு வெளியிலேவந்து, எண்ணிக்கையில்லாத இரதகஜதுரகபதாதிகள் சீக்கிரத்தில்வந்து சேரவேண்டுமென்றுசொல்லி யானையின்மேல பேரிகையறைவித்தார்கள். அத்தக்ஷணமே நாலவகைச்சேனைகளும் சமுத்திரம்போலவந்து எங்கும்பரந்து நிறைந்தன. மேககர்ஜிதம்போல இரணமுரசுமுதலாகிய சகலவிதவாத்தியங்களும் முழங்கின நானவிதமான ஆயுதங்களும் மின்னலபோல நெருங்கிவர, வெள்ளைக்கொடிகள் மேகத்தின்வயிற்றைத் தொளைத்துக்கொண்டுபோய் அநுமானுலே கோபிக்கப்பட்டு இறந்துபோன சத்துருக்களுடைய கீர்த்தியானது பரந்ததுபோலவும், சண்டமாருதமென்கின்ற காற்றுனது மோதும்படி ஆகாசகங்கையின் அலைகளெழுந்து புரண்டதுபோலவும் வானமுழுது மறையப்பரந்து அசைய, இராட்சதர்களெல்லாம் வீரகண்டைகட்டி, மார்க்கவசம்பூண்டு, அரைக்கச்சையிறுக்கி, பலவிதமாகிய அஸ்திரங்களைநிறைத்த அம்புப்புட்டிலை முதுகின்புறத்தில்சாத்தி வில்லேந்திப் போர்க்கோலங்கொண்டு தேர்கள், யானைகள், புரவிகள்முதலாகிய வாகனங்களை அலங்காரஞ்செய்து அவற்றின்மேலேறிப் பிரயாணப்பட்டார்கள். அந்தச் சேனையிலிருக்கின்ற யானைகளின் மதங்கள் பெருகிப் பூமியிற்பாய்தலால் அநேக ஆறுகளுண்டாயின. அவற்றில் சக்கரங்கள் அமிழ்த்தேர்களோடுதலால் அந்த ஆறுகள்வற்றிச் சேறுகின. அதில

குளம்புகள்பதியக் குதிரைகளோடுதலால் அந்தச் சேறுபுலர்ந்து நீறுகியது. அதில் குதிரைகளின் வாய்நுரை வழிந்துவிழுதலால் அந்த நீறுகூனங்து வேறுகியது. தேர்களின் முழக்கமும, குதிரைகளின் முழக்கமும், யானைகளின் முழக்கமும், வீரகண்டைகளின் முழக்கமும, படைவிகளுடைய கிண்கிணிமாலைகளின் முழக்கமும், பிரளயகால சமுத்திரமுழக்கத்திலும மூன்றுமடங்கு அதிகமாய் முழங்கின. தேர்கள் ஐம்பதினாயிரமும, யானைகள் ஐமபதினாயிரமும், குதிரைகள் நூறுயிரமும, பதாதிகள் இருநூறுயிரமும் சூழந்தலைப்பட்டன. ராவணனைவன் மேன்மேலும அழைத்தனுப்புந்தோறும திரண்ட சேனைப்பிரவாகம்வந்து சஞ்சரிப்பதற்கு இடமிலலாமல நெருங்குதலால், அந்தச் சேனவீரர்களுடைய ஆயுதங்களோடே ஆயுதங்கள்பட்டிழைந்து மேகக் கூட்டங்களுந் தீந்துபோமபடி நெருப்புபபொறிகள் எழுந்தன. யானைகளின் பக்கங்களில் தொங்கவிட்டிருக்கின்ற மணிகள் மேகங்களினிடத்தினிருந்து இடியிடிக்கிறதுபோல மிகவும ஒலிக்கத்தலைப்பட்டன., இவ்வாறுகப் பிரயாணப்பட்ட சேனைகளிலுள்ள அரக்கர்களை அவர்கள்கொண்ட பெணசாதிமார்களும, அவர்கள் வயிற்றிற்பிறந்த புத்திரிமார்களும் அவாகளைப்பெற்றெடுத்த தாய்மார்களும், அவர்களுக்கு மற்றுமுண்டாகிய உறவின் முறையாரா சகலமானவர்களுட், ஓடிவநது தடுத்து, முன்பு அக்குரூங்கின் முன்னே போனவாகளில ஒருவராவது உயிர்தப்பிமீண்டுவரவேயில்லை. அப்படியிருக்க இபபோது நீங்களும, போகிறபடியிலே நாங்களும் உங்களுடனேகூட வருகிறேமென்று இரங்கிப புலமபியழுதார்கள். அந்தச் சேனசமுத்திரத்தின் நடுவே பஞ்சமகாபூதங்களைப்போலவும, ஐந்துதேரின்மேல் ஐநது சூரியாகள வருகிறதுபோலவும, பஞ்சசேனதிபதிகள் பேரி, பூரி, ஏக்காளம, பேய்க்காளம, சலலரி எல்லரி தடாரி, தமபட்டம். காளம மத்தள முதலாகிய பலவாத்தியங்களும் முழங்கக் கோபாகனிப் பொறிசிந்த இடிமுழக்கமபோல விலலைக் குணத்தானி யெழுப்பிக்கொண்டு வநதார்கள். அவர்கள் எப்படிப்பட்டவாகளென்றால், முனிவாகளுக்கும தேவர்களுக்கும் சாவகாலமும பஞ்சேந்திரியங்களைபபோலச் சத்துருத்துவத்தைதக்கொணடு உபத்திரவஞ்செய்கினறவாகள். யுத்தஞ்செய்கின்ற சமயத்தில் இந்திரனுடைய வச்சிராயுதமும், வருணனுடைய பாசமும், எமனுடைய தண்டமும. சிவனுடைய சூலமுமென்னப்பட்ட தெய்விகமாகிய ஆயுதங்களெல்லாம ஒரு ஊசி நுழையதகடுக்க சொற்பமாகிய வடிவுஞ் செய்யமாட்டாத புஜபலத்தையுடையவர்கள். சூரபத்மனைச் சங்காரித்த சுப்பிரமணியரானவர் ஏறுகின்றவாகனமாகிய மயிலின்கலாபத்திலுள்ள இறகையும், சகலலோகங்களையுஞ் சிருஷ்டித்த பிரமதேவர் ஏறுகின்ற வாகனமாகிய அன்னத்தின்சிறகிலுள்ள இறகையும் பறித்து மத்தியில் மத்தியில்வைத்து முறுக்கித் தொடுத்துத் தலையிலும் நெற்றியிலும், விருதுகளாகக் கட்டிக்கொண்டிருக்கின்றவர்கள். பூர்வத்தில் குபேரனுடனே சண்டைசெய்து அவன் புறங்கொடுத்துப்போக, அவனுடைய பட்டணத்திலிருந்து கொள்ளையிட்டுக் கொண்டுவந்த நானவிதபூஷணங்களையும் பூண்டிருக்கின்றவர்கள், போரிலேதோற்ற இந்திரனுன்வன் பயத்தினால்

ஜாவதத்தை விசையாகடத்திக்கொண்டு போனதுகண்டு, அதன்வால்முனை யைப் பின்புறத்திலிருந்து பிடித்துக்கொண்டு அடா இந்திரா! நீ கடத்தத் தக்க சாமர்த்தியமுடையவனுனல் எதோ கடத்தடா பார்ப்போமென்றுசொல்லி யிழுத்துவந்த பராக்கிரமமுடையவர்கள். பிரமாவினுடைய சொல்லினல் எமனுனவன் உம்முடைய ஆஜனுயைக்கடந்து கடக்கின்றுனென்று சொல்லக்கேட்டு, ராவணனுக்குக் கோபமுண்டெழுந்ததுகண்டு, அந்தயமனை அதிவேகமாகப்போய் இறுகக்கட்டிக்கொணடுவந்து இராவணன்முன்னேவிட்டு அவன் கோபத்தைத் தணித்தவர்கள். கைலை, இமயம், மந்தரம், விந்தியம், நிஷதம், ஏமகூடம், நீலகிரி, கந்தமாதனமாகிய அஷ்டகிரிகளையும்நகைக்கின்ற விசாலமான மார்பினையும், உயர்ந்தெழுகின்ற கடலலைகளை நகைக்கின்ற பெரிய தோள்களையும், எமனுடைய கொலத்தொழிலை நகைக்கின்ற கடோரமாகிய கொலத்தொழிலையும், கொல்லனைவன் துருத்திகொணடு ஊதுகின்ற உலைக்களத்தை நகைக்கின்ற அக்கினியைக்கக்குங் கண்களையுமுடையவர்கள். யுகாந்தகாலாக்கினியானது ஜுவாலாமாலையா யெரிந்துகொண்டுவந்தாலும், யுகாந்தகால மாருதமானது மோதியடித்தாலும், யுகாந்தகால சமுத்திரம் பொங்கிப் புரண்டெழுந்தாலும், எவ்வளவும உபத்திரவமென்பதேயில்லாமல் நிர்ப்பயமாய்த் திகருகள்தோறுஞ் சஞ்சரிக்கின்றவர்கள். இப்படிப்பட்ட தன்மையையுடைய அப்பஞ்சசேனுதிபதிகள், தங்களைச் சூழ்ந்துவந்த சேனைகளுடனே அநுமான் ஏறியிருக்கின்ற தோரணஸ்தம்பத்தின் சமீபத்தில்போய் சுற்றிமொய்த்துக்கொண்டு சேனைகளை அணிவகுத்து யுகங்கட்டினர்கள். ஸ்ரீராமதூதராகிய ஆஞ்சநேயரும் அவர்களுடைய நிலைமையைத் தமது கண்ணிறுற்கண்டார் அபபடிப்பாராத்த திருவடிகளாகிய அநுமான அந்தநிசாசரர்கள் தலையை ஏறெடுத்துப்பார்த்து ஆ! ஆ! இதைப்பார்த்தால் மிகவும் அற்பமாகிய குரங்காகக்காண்கின்றது! இதுதேவாகளுடையகீர்த்தியை வேருடனே நாசமாமபடிசெய்த மகாபலிஷ்டர்களாகிய ராக்ஷசர்களை யுத்தத்திலே வென்று நிர்மூலமாகக்கொன்று அவர்களுடைய கீர்த்தியையுங் கிடைத்ததே யென்றுசொல்லி அதிசயமுற்றுச் சந்தேகபபட்டார்கள். அந்தச்சமயத்திலே அஞ்சநாதேவி புத்திரானவர் தேவந்திரனுடைய பட்டணமாகிய அமராவதியின் வாசலிலிருந்து கொண்டுவந்து இராவணனுடைய சிங்கார்த்தோட்டத்தினிடத்தில் காட்டியிருக்கின்ற தோரண ஸ்தம்பத்திலிருந்தபடியே யிருந்து அண்டமுகட்டையுந் தாண்டியப்புறத்திலும் ஊடுருவுமபடிப் பெருத்து உயர்ந்த விசுவரூபங்கொண்டார். அவ்வண்ணமாக விசுவரூபங்கொண்ட ஆஞ்சநேயனைக்கண்டு இராக்ஷதர்கள் ஆச்சரியப்பட்டுமகத்தாகியஉக்கிரகோபங்கொண்டு விற்களைவளைத்து அபரிமிதமாகிய அஸ்திர சஸ்திரங்களைப் பிரயோகஞ் செய்தார்கள். இடம்புரிச்சங்கம், வலம்புரிச்சங்கம், தவளச்சங்கம், இரட்டைச்சங்கம், வெற்றிச்சங்கங்கள் ஒலித்தன. இரணபேரி, மங்களபேரி, ஜயபேரி, வெண்கலபேரிகள் முழங்கின. மற்றும் அந்த ராக்ஷதவீரர்கள் அனற்பொறிகளைச் சிதறிப் புகைந்தெழுகின்ற எண்ணிறந்த ஆயுதங்களைக்கொண்டு எய்தார்கள், எறிந்தார், கொய்தார், குத்தினர், வெட்டினர், கட்டினர், எற்றி

னர், சுற்றினர். அவைகளெல்லாம் என்னையனுகிய அநுமானுடைய உரோமங்கள் நெருங்கிய சரீரத்திலுணடாகிய தினவு தீரும்படி சொறிந்ததுபோல இதமாயிருந்ததனல் அவருக்கு நித்திரைவந்தது. அதுபணடி ராக்ஷசர்கள் அம்மம்மா! இந்தக்குரங்குகம்முடைய ஆயுதங்களெயலலாம கொஞ்சமாவது லக்ஷியஞ்செய்யவில்லையென்று மனஞ்சருக்கி நெருக்கிப்பின்னும் தோமரம், எறிசக்கரம், பிண்டிபாலம், மழு, எழுமுதலாகிய கோடாகோடி ஆயுதங்களை ஓயாமல் மழைபோலப் பொழிந்ததுகணடு அநுமானனவர் மற்றுமுள்ள ராக்ஷசர்களெல்லாம் வந்துமாயும்படி இவர்களை எலலாம் அநிசிக்கிரத்தில் எற்றிக் கொல்லுவோமென்று சிந்தப்படத்திக்கொணடு ஒரு ஆயுதமும் இந்தச்சமயத்தில் கிடைக்கவில்லையேயென்று நினைக்கும்போது ராக்ஷசவீரனொருவன் தம்மேல் எறிந்த எழுத்தடியை எழும்பிபிடித்துக்கொணடு அதனல் அநேக யானைகளையும், குதிரைகளையும், தேர்களையும் ராக்ஷசவீரர்களையும அடித்தடித்துத் தும்சஞ்செய்து கொன்றார். அப்பால் மதயானைகளினுடைய கொம்புகளைமுறித்து அவற்றைபேகையில் ஆயுதமாக ஏந்திக்கொண்டு மோதிமோதிப் பலதேர்களை உடைத்தெறிந்தார். அந்தத்தேர்வண்டிலைக் கழற்றியெடுத்து உருட்டி யுருட்டி வெகுவீரர்களைக்கொனறார். அந்தவீரர்களுடைய கைவாளை எட்டிப்பறித்து ஓங்கிவெட்டிவெட்டி மிதமற்ற குதிரைகளைக்கொன்றார். இரண்டுகையிலும் இரணடுரதங்களை வாரிபெடுத்து எதிரேவருகின்ற இரண்டு மதயானைகளை மோதிக்கொன்றார். இரண்டு யானைகளைத்தூக்கியெடுத்து இரண்டு பக்கத்திலும்வருகின்ற குதிரைகளையெற்றிக் கொன்றார். ஒருமலையைப் பிடுங்கியெறிந்து ஆயிரக் தேராகளை மைமேபோலே அரைத்துவிட்டார். ஒருமாதத்தினல் ஆயிரம் யானைகளை ஒருக்ஷணப்பொழுதிலே மடித்துவிட்டார். பின்னும் யானைப்படைகளை விசையாயேயடி உதைப்பார். தேர்ப்படைகளை உருவழியும்படி கலக்குவார். புரவிப்படைகளை இடுப்பொடியுமபடி மிதிப்பார். பதாதிப் படைகளைப் பூமியிலிட்டுத் தேய்ப்பார். அநேகராக்ஷசர்களை இருப்புலக்கையால அடித்து மண்ணிலே உருட்டித்தள்ளுவார். அநேகருடைய தலைகளின் மேற்போய்க் குதித்துப் பல்லினற்கடித்துக் கையினற்குத்துவார். தேர்களையும் யானைகளையும எடுத்துப்பத்துபோல அஷ்டதிக்குகளிலும் ஆகாசத்திலும் விட்டெறிவார். குதிரைகளையும், கிருதாகளையும அவாகளுடைய ஆயுதங்களுடனே கையினற்பிடித்து மாப்பிளைகிறதுபோலப் பிளைந்தெறிவார். நீண்டதும்பிக்கையையுடைய மதயானைகளைக் கையிலெடுத்து எறிய, அவைகள் கடலிலே அமிழ்கின்ற கப்பலைப்போல ரக்தப்பிரவாகத்தில் விழுந்து அழுந்தின. அநுமான் தேர்களினவாரிச் சமுத்திரத்திலெறிய அவைகள் அக்கடலிலிருந்து உதயமாகின்ற சூரியனுடைய ரதம்போலவிழுந்து அழுந்தி மேலே கிளம்பின. அளவிறந்த குதிரைகளை எடுத்தெறிய அவைகள் ஆகாசத்தில் போய்முட்டி வாயினல் ரத்தங்கக்கிக்கொண்டு சமுத்திரத்தில்வந்து விழுந்து அங்குள்ள வடவாமுகாக்கினியைப்போல மேலே மிதக்கத்தலைப்பட்டன். ராக்ஷசர்களை வாலினலே சுற்றி வரிந்துகட்டி வீசுதலால் அவர்கள்வந்து சமுத்திரத்திலேவிழுந்து மந்தரகிரியை வாசுகியென்னும் பாம்பினற்கட்டி அநி

வீட்டுக் கடையும்போது அதுசுழன்றதுபோலச் சுழன்றார்கள். சுத்தவீராரா கிய ஆஞ்சநேயர் எடுத்துவீசுதலால் சமுத்திரத்திற்போய் விழுந்தயானைகள் தேர்கள் குதிரைகளை ரக்தநதியானது இழுத்துக்கொண்டோட, அவை லங்கையிலேபோய்ப் புகுந்தன. அத்தசந்திரனுக்குச் சமானமாகிய வக்கிரதந்தங்களையும் பிலத்துவாரத்திற்கு ஒப்பாகிய ஆழ்ந்தவாயினையும், அக்கினிப் பொறியையும், உதிரத்தையும் கக்குகின்ற நேத்திரங்களையும், கைகளில் ஆயுதங்களையுமுடைய ராக்ஷசப்பிணங்கள் அநுமானேறியிருக்கின்ற மகாதோரணஸ்தம்பத்தையும் மறைக்கும்படி ஆகாசபரியந்தம் மலைபோலக் குவிந்தன. ஆஞ்சநேயருக்கு மலைகளும் மரங்களும் இருப்புலக்கையுமே ஆயுதங்களாயிருக்கின்றன. மேலும் அவருடைய கைகளுங்கால்களும், வாலு மிருக்கின்றன. அவர் கொல்லுகிறதற்குப் பலவகை ஏதுக்களு மிருக்கின்றன. அவராலே கொல்லப் படுகிறதற்கு அநேகர் சத்துருக்களாயு மிருக்கின்றார்கள். ஆகையால், இப்போது யுத்தத்திற்கு வந்த ராக்ஷசர்களெல்லாம் இறந்துபோவார்களே யல்லாமல் ஒருவராவது தப்பி உயிரோடுபோவார்களா? சிவன் கையிலேதாங்குகிற மழுவாயுதத்தைப்போல உதிரந்தோய்ந்து விளங்காநின்ற எழுஸ்தம்பத்தால் அங்குவந்தராக்ஷசக்கூட்டம் சமூலமும்மாணகளத்தில்அதமாகும்படி ஆஞ்சநேயர் கொன்றுதொலைத்தார். அப்படி யந்த ராக்ஷசவர்க்கங்கள் நாசமானதைக்கண்டு தேவர்கள் சந்தோக்ஷித்தார்கள். லங்காபட்டணமானது அல்லோல கல்லோலப்பட்டது. இறந்தவர்களைக்குறித்து அழுகின்ற குரலோசையானது சமுத்திரகோஷமும் தாழும்படியாக அதிகரித்தெழுந்தது.

அந்தச் சமயத்தில் பஞ்சசேனைபதிகள் ரத்தநதியானது இழுக்குதலால் கால்வழுக்கித் தேர்ச்சக்கரங்கள் அதில் அழுந்த, மிகவும் வருத்தத்துடனே தேரைவிட்டுக்கொண்டுவந்து ஏக ஆர்ப்பாடமாகக் கொக்கரித்து ஒவ்வொருத்தர் ஆயிரமாயிரம் பாணங்களைப்பிரயோகித்து அஞ்சநாதேவியின் புத்திரசிகாமணியாகிய அநுமானுடைய சரீரத்தை மறைத்தார்கள். அவர்கள் பிரயோகித்த பாணங்களெல்லாம் தமது திருமேனியில்வந்து தாக்காமல் சிக்கிரத்தில் தும்சப்பட்டுப் போம்படி கையினல் பிடித்து ஒடித்துப் பொடியாக்கிவிட்டு, உடனே அந்தப் பஞ்சசேனாதிபதிகளில் ஒருவனுடைய தேரைப்போய் உதைத்து அழித்துச் சின்னபின்னப்படுத்தினர். தானேறிய தேரழிகிறதற்கு முன்னமே அதிலிருந்த வீரனனவன் ஆகாசத்தில் எழும்பிப்போய் அங்கிருந்தபடிப் பாணங்களைப் பொழிந்து போர்செய்தான். அதுகண்ட அநுமானவர் எழுவாயுதத்தை யெடுத்து அவன்மேல்மோதினர். அந்த அடியை அவன் விஞ்சிலே தாங்கினன். அதுபொறாமல் வில்முறிந்தது. ராக்ஷசன் ஒடிந்தவில்லை அநுமான்மேல் விட்டெறிந்துபோய் ஒருமலையைப்பேர்த்தெடுத்து வீசினன். அதுகண்டு ஆஞ்சநேயர் அந்த எழுவாயுதத்தினலேதானே யடித்து மலன்யையுந்தூளாக்கி அவனையுங்கொன்றார். அவன்மாளவே மற்ற நான்கு பேரும் பிரளய காலாக்கினிபோலக் கோபம்கொண்டு, வில்லுகளை நெறுநெறவென்று ஒலிக்கும்படி வளைத்துப்பாணங்களை அபரிமிதமாகப் பொழிந்தார்

கள். அவர்களுடைய கண்கள் புகைந்தன. அநுமானுடைய தோள்களில் உதிரம்பெருகிப் பாய்ந்தது. அப்போது அவர்மனங்கொதித்து அந்த ராக்ஷசர் களுடைய வல்லமையை அறிந்து ஒருமலையைப் பிடுங்கியெடுத்து. அவர்கள் மேல் எறிந்தார். அவர்கள் அம்புகளினல் அந்தமலையையும் பொடிப்பொடி யாகச் செய்துவிட்டு, மறுபடியும் அவர்மேல் அநேகபாணங்களை மாலைபோல வே ஒன்றின்பின்னே யொன்றுகத்தொடுத்து எய்தார்கள். அவை வந்து மார்பிலே தைத்து உருவ அதிசிக்கிரமாகச் சமீபத்திலோடி அந்நால்வரிலொரு வனை அவனுடைய தேரோடெடுத்து ஆகாசத்தில் சுழற்றியெறிந்தார். அந்த ரதமானது எழும்பி வாயுமண்டலம், வருணமண்டலம், சூரியமண்டலம், சந் திரமண்டலம், நக்ஷத்திரமண்டலங்க ளெல்லாந்தாண்டி ஆகாச முழுமையும் போய் அங்கிருந்து வேகமோய்ந்து விழுகிறதற்குமுன் அதிலிருந்த வீரன் பூமி யிற்பாய்ந்தான். அவன் பாய்ந்ததுகண்டு அவன்மேல் வீரர்களுக்குளெல் லாம் அதிவீராகிய அநுமானவர், மதயானையின்மேல் ஆண்சிங்கமானது பாய்கிறதுபோல விசைகொண்டு பாய்ந்துகுதித்து அவனுடைய பர்வதத்திற் குச் சமானமாகிய சரீரத்தின் அஸ்தி மாம்சமுதலாயினவையுங் குழம்பிப் போம்படி மிதித்துத் துவைத்துவிட்டார். அதுகண்டு மற்றமூவரும் கோப மூண்டெரியும்படி தேர்களை மனோவேகமாக நடத்திக்கொண்டுவந்து அடா இனி நீ எங்கேபோவாயென்று எதிர்த்து நின்று அஸ்திரங்களைப் புங்காநுபுங்க மாகப் பிரயோகம்பண்ணித் திரிமூர்த்திகள் போர்செய்வதுபோல வேண்டிய படிக்கெல்லாம் யுத்தஞ்செய்யத் தலைப்பட்டார்கள். அப்படி உயுத்தம்பண் ணத் தொடங்கிய மூவரில் இருவருடைய தேர்களைத் திரண்டுயர்ந்த தோள் களையுடைய அஞ்சநாதேவி குமாரரானவர் தேவர்களும் பார்த்துப்பயப்படும் படி இரண்டுகைகளினலும் கழங்குபோல அலக்ஷியமாக எடுத்துக்கொண்டு மேலெழும்பினர். எழும்பியவேகத்தில அந்தத்தேர்களில் கட்டியிருந்த புரவி கள்மடிந்தன. சாரதிகளும விழுந்து இறந்தார்கள், அதுகண்டு அந்த ரதிகர்க ளிருவரும் தேரைவிட்டுக் கிளம்பி ஆகாசமார்க்கத்திற் போனர்கள். போவ தற்கு முன் அவர்களை யப்பாலே போகவொட்டாமல் அநுமானவர் வெகுசீக்கிரமாக ஓடித்தொடர்ந்து எதிர்த்தார். அந்தச்சமயத்தில் அவர்கள் அஸ்திரங்களைப் பிரயோகிக்க எத்தனப்பட்டார்கள். அதற்குள்ளே அவர்களு டைய கைவில்லைப்பிடித்து மருக்கென்று முறியச்செய்தார். பின்பு அவர்கள் பாணங்களைப்பூட்டி யெய்கிறதற்கு வில்லிலலாமையால், அந்தபத்தில்நின்றபடி அநுமானுடனே மல்லுயுத்தஞ்செய்யத் தலைப்பட்டார்கள். வெண்மையாகி ய கோரப்பற்களையும், கறுத்துருண்ட சரீரத்தையும், ஆவென்றுதிறந்த பிளவா கிய பெருவாயையு முடைய தன்மையால், அந்த அரக்கர்களிருவரும் ராகு கேதுக்களுக்கு ஒப்பாயும், அநுமானவர்ராகுகேதுக்களால் மறைக்கப்பட்ட சூரியனுக்கு ஒப்பாயுமிருந்து போரசெய்யும்போது, வாலைக்கொண்டு அவர்க ளிருவரையும்வரிந்துகட்டி, இறுக்கி அவர்களுடையகால்களையும், தோள்களை யும் மளமளவென்றொடியும்படிஒடித்தார். உடனேசூரியனைநீங்கிய அந்த ராகு வும் கேதுவும்போல இருவரு மாண்டுவிழுந்தார்கள். ஆஞ்சநேயர் திரணம்

விட்ட சூரியனைப்போலப் பிரகாசித்தார். அவ்விதமாக விளங்கியிருந்த வாயு குமாரர் மற்றொருசேனபதிமாததிரம் தனித்துநின்றதுகண்டு, மலியன் மேல் தாவிக்குதிக்கின்ற சிங்கத்தைப்போல அவன் தலையின்மேல் தாவிக்குதித்தார். அந்தக்ஷணமே அவன்தன்தேருடனே பூமியில ஆழ்ந்து புதைந்து உருத்தெரி யாமல் மடிந்துபோனான்.

கவி.

வஞ்சமுங் களவும்வெஃகி வழியலா வழிமேலோடி
நஞ்சினுங் கொடியராகி நலைசெயற் குரியநீரார்
வெஞ்சின வரக்கரைவ ரொருவனே வெல்லப்பட்ட
அஞ்சனனும் புலன்களொத்தா ரவனுநல் லறிவுபோன்றான்.

வஞ்சனையையும், களவையும்விரும்பித் துன்மார்க்கத்தில் பிரவேசித்துக் காளகூட விஷத்தைப் பார்க்கிலும் மிகவும் கொடியவாகளும், குற்றத்தைச் செய்கிறதற்கு மனங் கூசாதவர்களுமாகிய, அந்தராக்ஷசர்க ளொந்துபேர்களும அநுமானொருவராலே கொல்லப்பட்டு, ஒரு அறிவினாலே வெல்லப்பட்ட ஐம புலங்களைப்போலானார்கள். அநுமானவனைவதோவென்றால், பஞ்சசேனபதிக ளையும் கொன்றதனால் ஐம்புலன்களையுமவென்ற அறிவைபோலத்திருந்தார் அந்தபோரில் எதிர்த்தராக்ஷசர்களின் உயிர்கொண்டுமீளாடவ ரொருவரு மில்லை யென்பதையும், எமனும்நடுங்கத்தக்க பஞ்சசேனாபதிகளும் கைகொ ட்டிக் கொக்கரித்துக்கொண்டு முடுகிப்போயிறந்ததையும் லங்கையிலுள்ள வர்கள் எல்லாருங்கண்டார்கள். அத்தருணத்திலே நாமை யெவ்விதத்துங் குரங்கானதுசொல்லுமென்று மனம்நடுங்கி ஏங்கித்தாக்கிக்கின்றராக்ஷசஸ்திரீகளை ப்பார்த்து, கோபித்துக் கடுஞ்சொற்சொல்லி வைதுவிட்டுச் சில ராக்ஷசர்கள்ஓ டிவந்து ஊழித்தீயைப்போல எழுவகைப்பட்ட உலகங்களும் எரியும்படி உக் கிரதிருஷ்டியாகப்பார்த்துக்கொண்டு, கோபமே ஒருவடிவெடுத்ததுபோலிருந்த ராவணசுவரனுடைய செவித்தொளைகள்வழுது தீயும்படிச்சொல்லைத் தூவ பட்டார்கள். கேளுமையா! விசிரவசுபிராமபுத்திராகிய ராவணசுவரரே! இங்கிருந்துபோன சேனைசமுத்திரம்அடங்கலும மடிந்துபோய்விட்டது. அது கண்டு சண்டைசெய்யப்போய்ப்பஞ்ச சேனபதிகளும மாண்டு போனார்கள். சங்கள் மாத்திரம் யுத்தஞ்செய்யாம லிருந்ததனால இறவாமல் மீண்டுவந் தோம். தேவர்கள் முதலானவர்களையும் ஜயித்த அவ்வீராதிவீரர்களையும் அதிசிக்கிரத்தில் மாயுமபடிப் பொடிசெய்துவிட்டு, மற்றுஞ் சண்டைசெய்கிற வர்கள்கிடையாமையால் அந்தக்குரங்கு சோம்பி யிருக்கின்றதென்று சொன் னார்கள்.

பஞ்சசேனபதிகள்வதைப்படலம்.
முற்றிற்று.

அக்ஷகுமாரன்வதைப்படலம்.

அவ்வார்த்தைகேட்கலே ராவணனனவன் கோபமாகியகடுகெருப்பானது மூண்டெழும்படிப் பெருமூச்சிவிட்டு மார்பிலணிந்த புஷ்பமாலைகளும், அவற் றில் பரிமளிக்கின்றதேனையுண்ணும்படி வந்தமொய்க்கின்ற

கருகும்படிச் செவ்வரக்குவளட்டியதுபோலக்கண்கள்சிவக்கதாமேபிரயாணப் பட்டுப்போய்ப் பிடித்துவரும்படித் 'தகாயத்தமானன். அப்படி. எத்தனைப் பட்ட பிதாவைப்பாராத்து, சனிஷ்டபுத்திரனுகிய அக்கினன்பவன்' எழுந்து அவனுடைய உபையபாதங்களையும் வணங்கிச்சுவாமி! இதப்பணிவிடை யை அடியேனுக்குக் கடாக்ஷித்தருளுமென்றுசொலலிப பினனுஞ்சொல்லுகின்றுன். சோமசூரியாக்கினியாகிய முச்சுடர்களையும் மூனறுசுத்திரமாக வுடைய கைலாசபதியேறுகின்ற வாகனமாகிய ரிஷபமுமல்ல. பரலோக பூலோக பாதாளலோகமாகிய திரிலோகங்களையும திருவடியினல் அளவிட்ட திரிவிக்கிரம சொரூபனன ஸ்ரீமந்நாராயணனுடைய வாகனமாகிய கருடனு மல்ல. அந்தப்பரமபுருஷன் திருக்கண்வளர்ந்தருளாகின்ற சயனமாகிய ஆதி சேஷனுமல்ல. அஷ்டதிக்கஜங்களுமல்ல. ஒருசிறியகுரங்கின்மேலேயா? பகா பிரதபசாலியாராகிய தேவரீர்படையெடுத்துப்போகிறது. இந்த ஊழியத்தை அடியேனுக்கு ஆஜஞ்டபித்துநீரிவ்விடத்திலதானேசுகமாயிருதருளும, முன னுளில அமரர், சித்தர, அசுரர், தைத்தியர், கருடர், கின்னரர், கிருதர், கிமபு ருஷர், கந்தர்வர், யிகூஹ, விஞ்சையர், பூதர், பைசாசர், முனிவர், உரகர், ஜூகா சவாசிகள் போகபூமியாகளாகிய பதினெண்தேவகணங்களுக்கும் அதிபதியா கிய இந்திரன்மேல கோபங்கொண்டு அவனைப பிடித்துக்கொண்டுவந்து கொடு வென்றுசொல்லி, அடியேன் பக்கத்திலிருக்கும்போதுதானே எனனையனுப்பா மல் எங்கள்தமையனன யனுபபுவித்தீரே அது என்மனத்திலே குறையாயிருக் கின்றது. அதகக்குறை தீருமபடி ஒருகுரங்கையாவது பிடித்துவர உத்தரவு கொடுத்தருளும. திரிலோகதாரியாகயசிவனே வஞ்சனையை மனத்திலெ ண்ணி இவ்விடத்தில ஒருசொற்பமாகிய பழியைவிளக்குப்படிக் கற்பிதம்பண் ணிக்கொண்டுதரங்குருவமெடுத்துவந்தாரனறும, நொடிப்பொழுதுக்குள்ளெ யிருத்து எளிதிலே பிடித்துக்கொணடுவந்து உமமிடத்தில கொடுக்கிறேன். பூர்வகாலத்தில வச்சிரஸ்தம்பத்தில் உற்பத்தியாகி இரணியசுவரனைச் சங்க ரித்த உக்கிரநரசிங்கமாறலும், ஒருகொமபிறலே பூமியைபபோத்தெடுத்த ஆதிபுருஷவராகமாறலும நான்போய் யுத்தஞ்செய்யுங்கால இநத அணடத் தைக்கடந்து அபபாலபோனபோது தொடாந்துபோயப்பிடித்துவநது உமக் கெதிரேவிடுகிறன் அப்படிச்செய்யாமல்போனேறகில அப்பொழுது என் னைச் சிரச்சேதம் செய்யுமையாவென்று இவ்வாறுசொலலி, கிருபைசெய்து உத்தரவுகொடுத்தருளுமென்றுன். இவ்வாறுகேட்டுநிற்கின்ற இளையகுமாறு கிபஅநுமனைப்பார்த்து மகிழ்ச்சிகூர்ந்து நகதையாகியராவணன் அப்பா! அபப டியே தேரேறிச் சேனைகளையுங் கூட்டிக்கொண்டு போவென்று சொன்னன். அவன்சொற்படியே உயுத்தத்திற்கு ஏற்ற அலங்காரஞ் செய்துகொண்டு புறப்பட்டு, முற்காலத்தில் யுத்தத்திலே தேவேந்திரனனவன் பயந்து, விட்டு விட்டோடிய ரதமொன்று இருநூறுபுரவிகட்டப்பட்டது. அதையலங்கரித்து அதன்மேலேறினன்.

அப்போது நிசாசரர்கள் ஆசீர்வாதஞ் செய்தார்கள். பேரிகைமுழ ங்கிபது. பிரளயகால சமுத்திரம்போலச் சேனைகள்வந்துகூடின. சமுத்தி

ரத்திலுள்ள மகரங்களை யெண்ணக்கூடுமாகில் அங்குவந்துகூடியுள யானை களை யெண்ணலாம். அத்தச் சமுத்திரத்தில் மற்றுஞ் சஞ்சரிக்கின்ற பல மச்சங்களையும் எண்ணக்கூடுமாகில் தேர்களையெண்ணலாம். கடற்கரை மணல்களை யெண்ணக்கூடுமாகில் காலாள்களை யெண்ணலாம். கடலின் அலை களை யெண்ணக்கூடுமாகில் குதிரைகளை யெண்ணலாம். அப்படி எண்ணி முடியாத சதுரங்கசேனைகளும் நெருங்க ராக்ஷசேந்திரர்களுடைய குமாரர் களும், அக்ஷகுமாரனுடைய உயிர்வேறும் அவர்கள் வேறுமாகாமல் அதிக அன்னியோன்னியமாயிருக்கின்ற தோழன்மார்களுமாகிய பன்னீராயிரம் பேர்கள், சதாரூடர்களாய் யுகமுடிவுக்காலத்தில் சகலத்தையுந் தகிக்கின்ற காலாக்கினி யின் சிகைகளைப்போல வந்துசூழவும், மந்திரிகளுடைய குமாரர்கள் லக்ஷம் பேர்கள், பிரதானிகளுடைய குமாரர்கள் லக்ஷம்பேர்கள், படைத்தலைவர்க ளுடைய குமாரர்கள் லக்ஷம்பேர்கள், தன் பிதாவாகிய ராவணனுக்குத் தெய்வப்பெண்கள் வயிற்றிற்பிறந்த குமாரர்கள் லக்ஷம்பேர்கள் ஆகிய இந்த காலுலட்சம்பேர்களும் தேரேறிக்கொண்டுவரவும், பெருஞ்சவளம், வல்லுலக் கை, திரிசூலம், எரிமழு, வச்சிரவாள், வச்சிரதண்டம், வெற்றிவில், உக்கிர வேல், அங்குசம். எறிபாசம், ஈட்டி, கட்கம், எழுத்தடி, எழுமுளை, வளைதடி, குந்தம், கப்பணம், காலசக்கரம், முதலாகிய அமேக்வித ஆயுதங்களும் ஜோதி மின்னல்களெல்லாம் ஓரிடத்திற்கூடியதுபோலத் தகதகவென்று ஒளிவீசவும் புழுதிகளெழும்பி எங்கும் பரவுதலால் பொன்மயமாகிய சுவர்க்கமுதலான சகலலோகங்களும் மண்மயமாகிய பூலோகம்போலாகவும். காகங்களும், கழுகு களும், பேய்களும், எமனும், அரக்கர்கள் நெடுங்காலஞ்செய்த பாவமுமெல் லாந் தொடர்ந்துவரவும், பார்க்கின்ற ஸ்திரீகளுடைய பார்வையும், மனமும், வண்டும் மொய்த்துச்சுற்றவும், மாண்டுபோன ராக்ஷசர்களை நினைத்துக்கொ ண்டு அவர்களுக்குரிய காயகிமார்கள் அழுகின்ற குரலோசையும் கடலோசை யும், கல்லுகைச்சேனைகளி லோசையும், இடக்கை, உடுக்கை, உறுமி, தம் பட்டம், பம்பை, பேரிகை, மத்தளம், முரசு, முருடு, முழவுமுதலான்கிய பல விதவாத்தியகளின் ஓசையும், இடியோசையைப்போல எழுந்து ஒருவரோ டொருவர் வசனிக்கின்ற வசனத்தை அவர்களுக்குக் கேட்கவொட்டாமல் அடக்கவும், ராக்ஷசர்கள் கையில்பிடிக்கின்ற ஆயுதங்களின் பிரகாசத்தை அவர்களுடைய கறுத்ததேகத்தின் ஒளியானது விழுங்குதலாலும, அவர்கள் கைகளில் தரித்திருக்கின்ற நீலமணிக் கடகத்தின் ஒளியை அவர்களுடைய கோரதந்தத்தின் வெண்மையாகிய ஒளியானது அடக்குதலாலும், அங்குள்ள சகல உயிர்களுக்கும் இரவென்றும், பகலென்றும் தோன்றுமல் அறிவுதடு மாறவும், ரதங்களிற்கட்டிய குதிரைகள் உறங்குகின்றதும், அந்த நிசாசரர்க ளுடைய இடதுதோளும், இடதுகண்ணும் துடிக்கின்றதும், மேகங்கள் எங்கெ ட்டத்திலும் ரக்தமழையைப்பொழிகின்றதும், வெள்ளைமேகத்திலிருந்து இடி இடிக்கின்றதும், காக்கைக்கூட்டங்கள் சப்திக்கின்றதுமாகிய துர்ச்சகுனங்கள் கானவும், தனக்குச்சொந்தமாகிய ஒருவெள்ளஞ்சேனைகள் சூழவும், அது கண்டு, சப்தமருத்துரைக்கவும், அஷ்டதிக்குப்பாலகர்கள், அஷ்டவசுக்கள் முத

லாகிய தேவர்களெல்லாம் பயமடையவும், காலன் இனி என்ன அசுத்தம் விளையுமோவென்று எண்ணி மனம்மெலியவும், பேய்கள், பூதங்கள், டாகினி, மோகினிகளெல்லாம் கண்களை உருட்டி விழித்துக்கொக்கரிக்கப் புஜங்கொட்டவும், அதிக உக்கிரகாடின்னியமாக வருகின்ற அந்த அக்ஷகுமாரனை வாயுபுத்திராகிய திருவடிகளானவா கண்டு இதோமகாபிரபல பிரதாப சம்பிரமத்தடனேகமக்கெதிரே வருகின்ற ராக்ஷசவீரன் ராவணனுடைய புதல்வனுகிய இந்திரஜித்தென்பவன்தானே? அல்லது அந்தராவணனேவென்று மனத்திலே மிகுந்தசந்தோஷங்கொண்டு, அவ்வானரசிங்கமாகிய ஆஞ்சநேயர், இவன்வந்ததனால் நம்முடையஎண்ணம் நிறைவேறியதென்று நினைத்துத்தமது உன்னதமாகியதோளைப்பார்த்துப்பரமபுருஷா, பக்தவச்சலா, ஜகத்ரக்ஷகா, சர்வந்தரியாமி, ஜானகி மனேகரா, தாரகபரப்பிரஹ்மமேயென்று ஸ்ரீரகுநாயகனை ஸ்துதிசெய்து அவரெழுந்தருளியிருக்கின்ற திக்குநோக்கித்தண்டஞ்சமர்ப்பித்து யோசிக்கின்றார். இவன் இப்போது நான்நினைத்த ராவணன் இந்திரஜித்துவென்கின்ற அந்த இருவரில் ஒருவனுயிருந்தால் பூர்வம்நான்செய்த புண்ணியபலன் எப்படியும் லப்தமாகும். எங்கள்சுவாமியாகிய ஸ்ரீராமபத்திரும்தபோபலத்தையுடையவராவார். அவரிடத்திலிருந்துவந்த காணுமிருக்கிறேன். எமனும் கதாயத்தமாகக் காத்துக்கொண்டிருக்கின்றுன். எண்ணியகாரியத்தையும் சிக்கிரத்தில் தடையில்லாமல் இனி முடிப்பேனென்று இவ்விதமாக யோசித்துப் பின்னும் அவன் சமீபத்தில் வரவரச் செவ்வையாகப்பார்த்து இந்தச் சேனையில் வருகின்ற நாயகனுடைய வடிவத்தைப்பாத்தால் தோஷமற்றதாகக் காண்கின்றது. ஆகிலும்இவனுக்குப்பத்துத்தலைகளில்லாமையால் ராவணனுமல்லன் இந்திரஜித்துவுமல்லன் அந்தப்பாலசுப்பிரமணியனுமல்லன். இவனுரோ நீலபர்வதம்போலிருக்கிறுனென்றும் நினைத்துக்கொண்டிருந்தனர். இந்திரதனுசுபோலிருக்கின்ற தோரணகம்பத்தின் மேலிராநின்ற அநுமானை, அந்த அக்ஷகுமாரன்பார்த்து அடடா! இதக்குரங்குதானு இத்தனைராக்ஷசக்கூட்டங்களையும்கொன்றதென்று சொல்லிக்குலுக்கென்றுநகைத்தான். அதைக்கண்டு, அவனுடைய ரதசாரதிசொலலுகின்றுன். கேளுமையா பிரதாபசூரனுகிய அக்ஷகுமாரனே! இதுதானுவென்று நீர அலக்ஷியமாக இகழ்ந்துசொல்லலாமா? உலகத்தில் எத்தனையோ விசித்திரமுண்டா யிருகினறன. முன்னுளிலே நம்முடைய ராஜாவுடனே எதிர்த்த வாலியுமொருகுரங்குதானல்லவோ! அவனைப்பார்க்கிலும் சாக்ஷி வேறேவேண்டுமோ? ஆகையால், எச்சரிக்கையாகவே பாத்து கடக்கவேண்டுமென்றுசொன்னன். அந்த வார்த்தைகேட்டுச் சாரதியை நோக்கி இப்போது இவ்விடத்திற்குவந்து இப்படிப்பட்ட துஷ்கிர்த்தியஞ்செய்த இந்தத் துஷ்டக்குரங்கு, திரிவிதலோகங்களில் எங்கேபோனலும் இதன்பின்னேவிடாது தொடர்ந்து தேடிக்கொண்டுபோய் ஜயித்து, இனிக் குரங்கென்பதே உலகத்திலில்லாமற்பேரம்படிக் கருவறுத்துவிடுகிறேன் பாரென்று அக்ஷகுமாரன்சொன்னன்.

அப்போது ராக்ஷசசேனையானது பொங்கியெழுந்து ஆர்ப்பரித்து அட்டகாசஞ்செய்து அஞ்சனாபுத்திராகிய அநுமானை நெருக்கிச் சுற்றி

மறைத்து, சோணமேகமானது இடைவிடாமல் அமோகமாக மழையைச் சொரிந்தாற்போலப் பலவித ஆயுதங்களையும் பிரயோகித்தது. அதனால் விண்ணுஞ்சலித்தது. மண்ணுஞ்சலித்தது. வீராதிவீராகிய ஆஞ்சநேயர் தனியே அந்தச்சேனைக்குமேலே பிரவேசித்தார். நிருதர்கள் எய்கின்றவையும், எறிகின்றவையுமாகிய அஸ்திரசஸ்திரங்களெல்லாம் அவர் திருமேனியின்மேற்பட்டு முறிந்தன. யானைகள்வந்து அநுமானைமுட்டி விழுந்து இறந்தன. தேர்கள் தலைகீழாக மறிந்து விழுந்து சிதைந்தன. குதிரைகள் எலும்புகள் நெரிந்து மடிந்தன. அவரெடுத்து எறிதலால ராக்ஷசர்களுடைய சரீரங்கள் லங்கையின்மார்க்கமாகப் போய்விழுந்தன. உலர்ந்த வைக்கோற் போரில் நெருப்புக்கலந்ததுபோல வாயுகுமாரரானவர் புகுந்து கொல்லுகின்ற ராக்ஷசர்களுக்கோ முடிவில்லை. அவர்களுயிரும் எமபுரம்போய்ச் சேர்வதோ ஓழிவில்லை ஆகையால், அந்தயமனுக்கு ஆயிரங்கோடி தூதர்கள் தானிருக்கின்றார்களோ தெரியவில்லை? போர்க்களத்தில் வந்தவர்களையும், வருகின்றவர்களையும், வருமவர்களையும் அநுமானவர் ஓடி யோடிவதைத் தமக்கு முன்னுண்டாயிருக்கின்ற பராக்கிரமத்திலும் மூன்றுபங்கு அதிக பராக்கிரமமுடையராய், ஊழிகாலத்தில் அதிதீக்ஷ்ணியமாக உதயமாகின்ற சூரியனைப்போல உக்கிரமாய் ஜ்வலத்தலைப்பட்டார். அந்த ராக்ஷசர்கள் சூரியகிரணஸ்பரிசத்தினால் சுருண்டு கருகிமடிகின்ற கிருமிகளைப்போல மடிந்தார்கள். யானைகள் பிளவுண்டு, தேர்கள் நெரிபுண்டு, குதிரைகள் சிதைவுண்டு, பதாதிகள் உதையுண்டு, உதிரம் ஆறுபோற்பெருகவும், மிகுந்த சேறுபோற்குழையவும், கடல்சூழ்ந்த லங்கையானது காலனுக்கு கொள்ளையிடப் பட்டதென்னும்படி ஐம்புலன்களையும்வென்ற ஆஞ்சநேயர் கொன்றுகுவித்தார். தங்கள் கண்ணுக்கெதிரே இறக்கின்றவர்களிறக்க அதைப் பார்த்தபடியே அவர்களுக்கத்தில் உபபலமில்லாமல் உயிர்நடுங்கி நிற்கின்றவர்களில் சிலர் சிலர் தேர்களும் தேர்ப்புரவிகளும், தேர்ச்சாரதிகளும, தேரூர்களுமே மிகுதியும அழிந்ததென்றார்கள். சிலர் சிலர் யானைகளும், யானைப்பாகர்களும், யானைவீரர்களுமே மிகுதியும் மாண்டதென்றார்கள். சிலர் சிலர் புரவிகளும, புரவிரௌத்தாகளும், புரவிவீராகளுமே மிகுதியும இறந்ததென்றார்கள். சிலர் சிலர் பதாதிகளை மிகுதியும் மாய்ந்ததென்றார்கள். சமுத்திரத்திற்கு ஒப்பாகிய சேனைகளையுடைய மகாபலிஷ்டர்களாகிய ராக்ஷசர்களோ ஆப்சியிற்கள் கடைகின்றதயிரைப்போலானார்கள். அவர்களைத் தும்சஞ்செய்கின்ற ஆஞ்சநேயரோ அந்தத்தயிரைக் கலக்குகின்ற மத்தைப்போலானர். அந்தப்போராக்களமோ சப்தலோகத்திற்கும் ஒப்பாயிருந்தது. அதிலே பிரவேசித்த சேனைவீர்களோ யுகாந்தகாலவெள்ளத்தை யொத்திருந்தார்கள். அவர்கள் மத்தியிலிருந்து யுத்தஞ்செய்கின்ற இந்த வாயுகுமாராகிய ஆஞ்சநேயரோ யுகாந்தகாலாக்நியை ஒத்திருந்தார். மற்றும் அக்ஷகுமாரனுடனே கூடவந்த ரத கஜ துரக பதாதிகளாகிய கூட்டங்களையெல்லாம் படுகுர்ணமாம்படி அநுமானவர் சங்கரித்தலால், அவர்களில் அநேகர் கால்வேறு, கைவேறு, தோள்வேறு, தொடைவேறு, தலைவேறு, உடல்வேறுறுனார்கள். இறவாமல்

தப்பிப்பிழைத்த சிலபேர்மாத்திரம் உதிரமானது. ஆறுபோலப் பெருகிவழியும் படிப்பயந்து நடுங்கிப் பின்னிட்டார்கள். பலதிசைகளிலும் பிணமலைகள் குவிந்தன. அந்தத்தருணத்திலேதலரிபென்ற இந்திரஜித்துவின் தம்பியாகிய அகம்பனனவன் கணகளெரியும்படிப்பாத்து, ஒருதேரோடே மலையைப்போல அபார்மாகிய தன்வில்லைச் சக்கராகாரமாகவளைத்து, காணேற்றிக் கூரைமையாகிய அம்புகளைதெரிதாடித்துப் பிரயோகஞ்செய்துகொண்டே அவருக்கு நேரேபோனான். அவன் அப்படிவரவே ஆஞ்சநேயரும் அவனைச்சந்தித்தார். இருவரும் ஒருவரையொருவர் சந்தித்தபோது தேவர்கள்கண்டு இனி அநுமானுடைய ஸ்திதி எதாகுமோவென்று சஞ்சலபபட்டு, இவர்களிருவருடைய சாகசத்தையும் பாக்கிறதற்கு காம் இமையாத கண்களைப்பெற்றிருக்கின்றதும், அதிஷ்டந்தானென்றுமினைத்து விலகாமல் யாவரும்எதிரொதாகநெருங்கிக காணத் தலைப்பட்டாகள். அந்தச்சமயத்திலே அகம்பகுமாரன் வாயினல் நெருப்பைக்கக்குகின்ற பதினன்குபாணத்தை ஆய்தெடுத்து அநுமான்மேல் எய்தான். அவைவந்து தமமேற்படவொட்டாமல் அவா கையிலிருந்த எழு வாயுதத்தினல் அடித்துப் பொடிப்பொடியாயுதிரும்படி செய்தார். அதுகண்டு பின்னும உக்கிரமாகிய பல அஸ்திரங்களைபபிரயோகித்து அந்த எழுவாயுதத்தைத் துண்டித்துப் பூமியிலேவிழுத்தள்ளி, மறுபடியும அநேகபாணங்களை வில்லிலேதொடுத்து நெறநெறவென்னும்படி சந்தத்தானையாகப்பொழிந்தான். ஆஞ்சநேயா அவைகளையெல்லாம வேறொரு ஆயுதமுமில்லாமையால தம்முடையகையையே ஆயுதமாகநீட்டி விலக்கிகொணடு சமீபலென்றுபோய் அகம்பகுமாரனுடைய தேரின்மேல் குபீரென்று எழுமபிக்குதித்தார். குதித்தமாத்திரத்தில் அரதத்தேர பூமியிலழுந்தியது. அதை கடத்துகின்ற சாரதியைக் கொன்றார். அதில் கட்டியிருந்த இருநூறு புரவிகளும் மடிந்தன. அகம்பகுமானை விற்குதை நிமிராதிருக்குமபடி எயகின்ற பாணங்களில சில பாணங்கள் அநுமானுடைய மாபிலே தைத்துருவின. சில பாணங்கள் தோளிலே புதைந்து மறைந்தன. சிலபாணங்கள் முகத்தை மறைத்தன. அதனற் கொஞ்சமாவது சலியாமலும் மெலியாமலும அவன்கையிலிருந்த வில்லை ஒரு கையினல்தாவிப் பறித்துக்கொண்டு அவனுக்கு எதிரோகின்றார். அவன் அந்தவில்லைத் தன் இரணடுகையினலும விடாமற் பிடித்திழுத்தான். இவரும் பிடித்தபிடிவிடாமல் உறுதியாகவலித்தார். இந்தப்போராட்டத்தில் அதுமனுக்கென்றுமுறிந்தது. அதைக்கண்டு அவன் அரையிலிருந்த உடைவாளை யுருவிவெட்டினன். ஸ்ரீராமதூதர் கண்களில்நின்று கோபாக்கினிப் பொறிபறக்க அந்த உடைவாளை ஒருகையினலே தட்டிப்பறித்து ஒடித்துத் தூளாக்கி விட்டார. அதுஒடிந்து கீழேவிழுதற்குமுன் அவன் வலுமையானதோள்களொன்றோடொன்றுதாக்கும்படி மல்லுத்தஞ்செய்ய எத்தனப்பட்டு, விசையாயெழும்பி அநுமானைக் கைகளினல இறுகக் கட்டிப்பிடித்தான். பிடித்தவுடனே அவனுடைய கையிலிருந்து கழுவி, தம்முடைய சரீரத்திலிருக்கின்ற ரோமங்கள் வேல்களைப்போல அவன்சரீரத்தில் தைக்கவும், தமது வாலானதுாண்டு அவனுடலை அசைக்கவும் திருபபவுமொட்டாமல்சுற்றி யிறுக்

கிக்கொள்ளவும் தாமும் அவனை நெருக்கிப்பிடித்தா. அப்படிப் பிடித்துக் கொண்டு வாள்போலக் கூர்மையாயிருக்கின்ற அவனுடைய பற்களுதிரும் படிக் கன்னத்தில் அறைந்து, மேகத்தினிடத்திலிருந்து மின்னல்கள் வழுவி விழுகின்றதுபோலக் குண்டலமுதலாகிய ஆபரணங்கள் தெறித்துவிழவும் குடல்சரிந்து தொங்கவும், அவனுடைய பிடரியில் தமது கையைக்கொண்டு கபிர்கபீரென்னும்படிக் குத்தியும் அவனுயிர் போகாததுகண்டு அவனைக் கீழே தள்ளி மேலேகுதித்தேறி, ஏழுலகங்களும் அழிகின்ற ஊழிகாலத்திலும் அழியாதகீர்த்தியையுடைய மாருதியானவர் பிரவாகமாகப் பெருகியோடுகின்ற உதிரமே நீராகவும், பூமியே அம்மிக்கல்லாகவும், அவனுடைய மாம்சாதிகளே அரிசியாகவுங்கொண்டு தமது வைரமாகிய கையினுலே சுவர்க்கலோகத்தாரும் பூலோகத்தாருங் காணத்தக்கதாக மாவாய்ப்போம்படி அரைத்துத் தேய்த்துவிட்டார். அதுகண்டு சிலராக்ஷசர்கள் நடுங்கிக் கிலிபிடித்து ரக்தவெள்ளத்திலேபோய் முழுகிக்கிடந்தார்கள். சிலராக்ஷசர்கள் பேய்கள் தின்கின்ற பழைய பிணக் குப்பல்களினிடத்திற்போ யொளித்துக் கொண்டிருந்தார்கள். சிலராக்ஷசர்கள் பயப்பிராந்திகொண்டு திசைதெரியாமல் மறுகினார்கள். சில ராக்ஷசர்கள் ஓடமாட்டாமல் நின்றுவிட்டாகள். சிலராக்ஷசர்கள் கையிலே ந்திய ஆயுதங்களை எறிந்துவிட்டுக் கண்டதிசைகளில் விசையாய்க் கால்சாய்த்துபோனர்கள். சிலர் மீனுருவங்கொண்டு சமுத்திரத்தில் ஓடிவிழுந்தார்கள். சிலர் பசுவாகத் தம்முடைய உருமாறி வழிதோறும் புல் மேய்ந்துகொண்டிருந்தார்கள். சிலர் மாம்சத்தைப்பக்ஷிக்கின்ற பருந்துகள் கழுகுகளின் வடிவு கொண்டு ஆகாசத்திற்பறந்தார்கள். சிலா வைதிக பிராமணர்கள்போல உருவெடுத்து நின்றார்கள். சிலர் ஸ்திரீரூபங்கொண்டு தலைமயிரை வகிர்ந்துகொண்டிருந்தார்கள். சிலர் அநுமானைநோக்கி எங்கள் ஐயனே நாங்கள் உம்முடைய அடைக்கலமென்றார்கள். சிலர் நாங்களுமக்குப் பகையாளிகளல்லோம், இதோ நிற்கின்றார்களை இவர்கள்தாமென்று எதிரேயிருக்கின்றவர்களைக் காட்டினர்கள். சிலர் தங்களுடைய மனையாட்டிமார்களும பிள்ளைகளும் மற்றுமுண்டாகிய சுற்றத்தார்களும் யுத்தகளத்தில்வந்து பந்துத்துவம் பாராட்டித் தங்களைத் தழுவிக்கொள்ள, நாங்கள் உங்களுடைய உறவின்முறையாரல்லோம் பூர்வம் தேவர்களாயிருந்து உங்கள்வீட்டில்வந்துபிறந்தோமென்று சொல்லிவிட்டு உடனே ஸ்ரீராமதூதரால் கொல்லப்பட்டு வீரசுவர்க்கத்திற்குப்போனர்கள். சிலா ஆஞ்சநேயர் தங்களைக் கொல்லவரும்போது நாங்கள் ராக்ஷசர்களல்லேம். மானிடர்களென்று சொன்னர்கள். சிலர் வண்டுகளாகிச் சோலைகளினிடத்திற் பறந்துபோனர்கள். சிலர் இன்னது செய்யலாமென்று ஒன்றுந் தமக்குத்தோன்றுமல் திப்பிரமைகொண்டு நின்றவிடத்திலேயே நின்றார்கள். சிலர் அநுமானுக்குத் தாங்கள் ராக்ஷசர்களென்று தெரியாமலிருக்கும்படி மூன்றுமும்பிறையையொத்த வக்கிரதந்தங்களை ஒடித்தெறிந்துவிட்டும், அக்கினிக்கொழுந்துபோற்சிவந்த செம்பட்டமயிர்களை அரிந்து விசிவிட்டும் ஜாடையாய் நழுவிப்போனர்கள். லங்காபட்டணத்திலுள்ள ராக்ஷசஸ்திரீகள் காதிலிருக்கின்ற குண்டலங்கள் கழலவும், ஸ்தனங்களில்பூசிய சந்தனகுங்குமங்கள்

கண்ணீர்சொற்கனைந்து ஒழுகவும், கூந்தலானது அதில் மொய்த்திருக்கின்ற வண்டுகளெழுந்து அலையும்படி அவிழ்ந்துவிழுந்து குதிகாலவருடவும், மேலு தடுஆகாயத்தைப்பொருந்தும்படி வாயைத்திறந்து அகக்கித்தலால் அவர்கள் அழுதவோசையானது அண்டத்தையளாவியது. காயகன்மார்களுடைய கால் மாட்டில்விழுந்து அழுது சோர்ந்துகிடக்கின்ற ராக்ஷசிகளுடைய சிவந்த கூந்த லுடனே, அந்த ராக்ஷசர்களுடைய சரீரத்தில்நின்றும் பெருகிய உதிரமா னது இடங்கள்தோறும வேற்றுமைதெரியாமற் பரவியிருந்தது. போர்க்கள த்தில்இறந்த ராக்ஷசர்கள்மேல் அவர்கள் பெண்சாதிமார்கள்விழுந்து உயிரொ ன்றும் உடலிரண்டுமா யிருக்கிறதனாலோ? உசுவாச நிசுவாசமில்லாமலும் கண்களை யிமையாமலும் அசைவற்றுக்கிடந்தார்கள். சிலராக்ஷசஸ்திரீகள் உயிரைத்தேடிக்கொண்டுபோகின்ற உடலைப்போல எங்கும் ஓடித்தேடி, இற ந்தவர்களுடைய சரீரக்குப்பைகளின் நடுவிலே குற்றுயிரோடுகிடக்கின்ற தங் கள் நாயகன்மார்களைக்கண்டு, சுவர்க்கத்திலிருக்கின்ற தேவதாஸ்திரீகள் பிணை ங்கும்படி தழுவிக்கொண்டாகள். வாளுக்கொப்பாகிய கண்களையுடைய ஒரு ராட்சதஸ்திரீயானவள் ரணகளத்தில் எழுந்துநின்று ஆடுகின்ற கவந்தத் தைக்கண்டு, என்னுடைய பிராணநாயகனை நீ காட்டவேணுமென்று கைகூ ப்பிக்கொண்டு பிரலாபித்தாள். பூங்கொம்புக்குச்சமானமாகிய சரீரத்தையு டைய ஒருபெண்ணானவள், உயுத்தகளத்தில்கூத்தாடுகின்ற தன்புருஷனுடை ய உடற்குறையுடனே அவன் தலையையெடுத்துச் சேர்த்துப்பார்த்து எங்கள் கோமானே! நீ கடனஞ்செய்து மிகவும இளைப்படைந்தாயாகையால் இனி யாவது சுமமா இருவெனறு கைகளால் உடலிறுகும்படி அணைத்துக்கொண் டாள். அப்படிப்பட்டதருணத்தில அவ்விடத்திலிருந்து காவலாளர்களாகிய தேவாகள் பயந்து ஓடி ராவணனுடனே கடுதசமாசாரத்தைச் சொன்னார்கள். அதச்சமயத்தில மயன் குமாரத்தியாகிய மண்டோதரியென்பவள் தன் பிள்ளை யிறந்துபோன செய்திகேட்டு, சேற்கண்டைகள் விரும்புகின்ற கண்க ளிரணடும மலைபருவிபோல ஜலத்தைக்கக்கவும், காமோகம் விரும்புகின்ற அளகபாரமானது அவிழ்ந்துவிழுந்து புழுதியிலேபுளளவும், வயிற்றில் அறை ந்துகொண்டு அதிகவருத்தத்துடனே தன்நாயகனுகிய ராவணசுவரனுடைய பாதத்தில் வந்துவிழுந்து கோவென்று கதறிஅழுதாள். அந்தப் பட்டணத்தி விருந்த ஸ்திரீகள்முதலாகிய சகலமானவர்களும தங்கள் ராஜாவாகிய ராவண னுடைய பாதத்திலவிழுந்து அழுதார்கள். அவ்வனத்தைக்காக்கின்ற தேவர் களுக்கு இவைகளெல்லாம் உள்ளுக்குள்ளே சந்தோஷடியாயிருந்தபோதிலும், லங்காதிபதிக்குப் பயந்தவர்களானபடியினலே தாங்களும் ஓடிபுக்குவிழுந்தழு தார்கள்.

அக்ஷகுமாரன்வதைப்படலம்

முற்றிற்று.

பாசப்படலம்.

அவ்விடத்தில் அந்த வார்த்தைகேட்ட பிரதாபலங்கேசுவரன் தன்னுடைய கண்களிலெல்லாம்நெருப்புச்சிதற, எவ்வகைப்பட்டவுலகங்களும் நிலை குலையும்படி அதிக கோபங்கொண்டான். அப்போது தன்தம்பி மாண்டானென்கின்ற சொல்வந்து நெஞ்சைச் சுடும்படிக்கேட்டு, இந்திரனை ஜயித்துக் கீர்த்திபெற்றதனால் இந்திரஜித்துவென்று பேர்படைத்த மேகநாதனனவன் அதிக வெப்பமுண்டாகப் பெருமூச்செறிந்து திரிபுரதகனஞ்செய்யும்படி மகமேருவை வில்லாகவளைத்த ருத்திரமூர்த்தியைப்போல மகத்தாகிய உக்கிரங்கொண்டு, அந்தக்ஷணமே அண்டகடாகத்தின் முடிவைக் காட்டுகின்ற அதியுன்னதமாகிய ஆயிரத்திருநூறுபேய்கள்பூண்ட தேரின்மேலேறினன். எட்டுத்திக்குகளுங்கிழிய அண்டமும் பிளக்க விருதுகூறி வீராவேசத்துடனே தும்பைமாலையும் அணிந்தான். வீரகண்டைகள் ஒலிக்கத் தலைப்பட்டன. இடியும் பய்ந்தோடும்படி ரணம்பரிமுழங்கியது. தேவேந்திரனனவன் உயிர் நடுங்கி உடல்புழுங்கி வெயர்க்குமபடி இந்திரஜித்து வருகின்றதனால யுத்தம் பிரபலப்பட்டது. இனி மோசமவந்துவிட்டதென்று பிரஹ்மருத்திராதியர்களாகிய திரிமூர்த்திகளுமம ஊக்கமழிந்தாகள். தம்பியை நினைக்குமபோதெல்லாம் அவனுக்குக் கண்களில் ஜலந் தாரைதாரையாகத் ததும்பத் தலைப்பட்டது. அவன் தன் கைவில்லைப்பாத்து வாயைமடித்து க்ஷோத்திரமிருந்து கலகலவென்று நகைத்தான். மரக்கிளைகளிலே சஞ்சரிக்கின்ற எளிதாகிய குரங்கினுலே தேய்ந்துபோனது என் தம்பியா? என்தந்தையாகிய பிரதாபலங்கேசுவரனுடைய கீர்த்தியல்லவா? என்றுஞ்சொன்னன். அந்தச்சொல் சொல்லும்பொழுதே கெடியவேற்படைகளும, கொடியவிற்படைகளும், மலையையும் இருகூறுகச்செய்கின்ற வாட்படைகளுமவந்து நெருங்கின. அவைகளின்தொகை எவ்வளவென்றால், என்றற்சாலலக்கூடாது. இரண்டுபக்கத்திலும் மதத்தைப்பொழிந்துநிலத்தைச்சேறுசெய்கின்ற யானைப்படைகள்பன்னீராயிரமும், தேர்ப்படைகள் பன்னீராயிரமும,மிதமில்லாத புரவிப்படைகளும் சேர்ந்தன. மற்றும் பலவகையாயுதங்களையுடைய ராக்ஷசேந்திராகள் எத்தனையோபேர்கள் கூடவர, தன் பிதாவிருக்கின்ற ஆஸ்தானமண்டபத்திற்குவந்து ராவணனுடைய இரண்டுபாதத்திலுமவிழுந்துசேவித்து, மாண்டுபோன தம்பியைக்குறித்து அலறியழுதான். அழுகின்ற ஜேஷ்டபுத்திரனைத் தசக்கிரீபனனவன் அவனிரண்டுகையையும்பற்றியெடுத்துத் தன்மாபுடனேதழுவிக்கொண்டு தானும் பிரலாபித்துச்சோகப்பட்டான். அப்போது ஸ்திரீகளெல்லாம் வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டுவந்து கோவென்று கூசவிட்டழுதார்கள். அதுகண்டு இந்திரசித்து அவர்களையெல்லாம்அதட்டி விலக்கிவிட்டுத் தன்பிதாவின் முகத்தைப்பார்த்துச் சொல்லுகின்றான். கேளுமையா! நீர் உறுதியொன்றும்பாராமல் சும்மாவிருந்து துயரப்படுகின்றீர். குரங்கினுடைய பலத்தைச் செவ்வையாக யோசித்தறிந்திருந்தும் நீங்கள்போய் அதனுடனே யுத்தஞ்செய்யுங்கோளென்றுசொல்லி, அனிபணியாகச் சேனைகளை அதன்மே

லேவி வீர்காமே ராக்ஷசக்கூட்டத்தையெல்லாம் அநியாயமாகக்கொன்றீர். கிங்கார்களும் ஜம்புமாலியும் பஞ்சசேனாபதிகளுமென்கின்ற இந்த ராக்ஷசவீர்களையும், இவர்களுடனே கூடப்போன சேனைகளையும் ஒருவராவது மீண்டு வாழ்வொட்டாமல் கொன்றதாலே அந்தக்குரங்கை யென்னவென்று நினைக்க வேண்டியது. சிவன், பிரமன், விஷ்ணு வென்றதான்சொன்னாலும சரியாமா? அஷ்டதிக்குகளையும்வென்றீர். திரிபுராந்தகனுகிய திரியம்பகனுடைய கைலாசத்தையும் திரிலோகங்களையும் ஜயித்தீர. இப்படிப்பட்ட மகாபிரதாபசாலியாகிய நீர் அக்ஷகுமாரனையுங்கொல்லும்படி ஒருகுரங்கை லக்ஷியம்பண்ணிக்கொண்டு, ஆடவிட்டு காடகம்பாகிறதுபோல அதற்கு இவ்வளவுதூரம் இடங்கொடுத்துவிட்டீர. அது இருக்கட்டும். அக்ஷகுமாரனைக்கொன்றதென்கின்ற அபகீர்த்தியானது இனிபந்தக்குரங்கைக்கொன்றாலுந்தான் நீங்குமா? ஆயினும் சீக்கிரத்திலே காணேபோ யந்தக்குரங்கைப் பிடிதத்துக்கொண்டுவந்து கொடுக்கிறேன். நீரொன்றுக்கும் அஞ்சவேண்டாம் துக்கப்படாமலிருமென்று சொல்லிவிட்டு, மேகநாதனனவன் உயுத்தத்திற்குப் பிரயாணப்பட்டு அதிரதம், மகாரதம், சமரதம், அர்த்தரதமாகிய நால்வகை ரதங்களும், ராஜமதங்கம, பத்திரமதங்கம், மிருகமதங்கமாகிய மூவகை யானைகளும், மல்லகதி, மயூரகதி, வியாக்கிரகதி, விருஷபகதி, வானரகதியாகிய பஞ்சகதிகளையுடைய புரவிகளும், வாள்வீரா, வேலவீர், வில்வீர்முதலான பதாதிகளுமாகிய சதுரங்கபலமுடனேகூடிய ராக்ஷசசேனைகள் யுகாந்தகால சமுத்திரம்போலச் சூழ்மபடி, அலைகளின்நடுவே நிற்கின்ற மகாமேருவுக்குச் சமானமாகிய தேரின்மேலாக வீராதிவீரனுகிய இந்திரஜித்துபோனன். போய் அநுமான் போரசெய்த போர்க்களத்தைப்பார்த்துத் தான் திக்குகளையும் சகல லோகங்களையும வென்றவனுயிருந்தும, அநுமானுடைய போர்ப்பிரதாபத்தைக்குறித்து நன்றுயிருக்கின்றதெனறு சந்தோஷப்பட்டான. அதுகண்டு இவன் சந்தோஷப்படுகிறுனே இது என்ன பிரமாதத்தை விளைக்குமோவென்று சகல மானவாகளும் நடுங்கினாகள். இந்திரஜித்துவா அமாமமா! எங்கேபாத்தாலும பிணங்களே அநேகமலைகளும, ரக்தமேகடல்களும, நிணமேநதிகளும, ஆயுதங்களே காடுகளுமபோலச் சூழும்படி இத்தாணைகளமானது வேறுருஉலகம்போலத் தோன்றுகின்றதேயென்று நினைத்து ஆச்சரியப்பட்டு, அவனெக்காலத்திலும் துக்கமென்பது அணுகாதிருக்கினற தன்மனத்தில் கொஞ்சவிசனமடைந்து, சமுத்திரத்தைப்போல அளவிடப்படாதவர்களும. மகாபராக்கிரமத்தையுடையவர்களும், சமானதிகமில்லாதவர்களுமாகிய ராக்ஷசர்களெல்லாம் இறந்தார்களே! இத்தனைபேர்களையுங்கொன்றது ஒருகுரங்குதானே இனிபந்தச்சினைக்கு காயகனுகிய ராமன்வந்து எதிர்த்து யுத்தஞ்செய்தால் நாம எந்தச்சேனையைக்கொண்டு வெல்லுகின்றதென்றுஞ் சொன்னன். அப்படிச் சொல்லிக்கொண்டே அவன் போகின்ற வழிமுழுதும் கண்ணுக்குச் சமானமானவர்களும், பிராணனுக்கு ஒப்பானவர்களும், யுத்தகளத்திலே உள்ளங்கைப்பொருளைப்போலக் காக்கின்றவர்களுமாகிய எண்ணிறந்த ராக்ஷசர்கள் இறந்துகிடக்கின்றதைக்கண்டு, அங்கங்கேகின்று வாயுதட்டை மடித்து

ரௌத்திராகாரமாய் ஆறுதபுண்ணினிடத்திலே கோவிட்டாற்போல, அபிமானதகிலுமேல மனம் கொந்துபுழுங்க, பின்னும் அரணியத்திலே எங்கள் அத்தைக்குவந்த அவமானமும் கான்முதலானவர்கள் பட்டபாடும், என்னைத் தனமபனுகப்படைத்த என்தம்பி அகம்பன் இறந்துபோனதும் இரண்டுமனிதர்களாலும் ஒருகுரங்கினாலுமல்லவா நடந்த காரியம் ஆ! ஆ! என்னுடைய வீரப்பிரதாபம் அழகாயிருக்கின்றதென்று நினைத்து அசோகம் பிணைக்குன்று கள்ளையிடறி ரக்தரதியை நினைச்சேற்றைக்கடந்து அதிக பிரயாசமாக ரதத்தை நடத்திக்கொண்டு போகையில், நிலத்திலே தெய்ப்புண்டு அனைபட்டுக் கிடக்கின்ற தன்தம்பியின் சரீரத்தைப்பார்த்தான்.

உடனே நெருப்பிலேகாய்ச்சப்பட்டசெம்பைப்போலத்தன் கண்கள்சிவந்தமனங்கறுக்கும்படி, சுப்பிரமணியராலேகொல்லப்பட்ட தாருகாசுரனுடைய சரீரத்திலிருந்துபெருகிய உதிர்த்தைபபோல எங்குங்தோய்ந்திருக்கின்ற உதிரப்பிரவாகத்தில், நரசிங்கபபெருமானுடைய கைந்நகங்களினால் அளையப்பட்ட இரணியாசுரனுடைய உடற்குழம்பைப்போல அந்த உடலான்து கோரமாய்க்கிடக்கக்கண்டு ஏறியதேரில்நின்றும் மெய்சோர்ந்து கையிலேதாங்கியவில்லையும் நழுவவிட்டு, விழிகளிலிருந்து உதிரமும் நீரும்நெருப்புங் குபீர்குபீரென்று சிதறப்பெருமூச்செறிந்து அடாதம்பி! உன்பிதாவினுடையஉக்கிரமாகிய ஆஜ்ஞையைக்குறித்துப்பார்த்தானேயானால்உன்னை எமனுங்கொண்டுபோகமாட்டான் மற்றலோகத்தாரும்உன்னை ஒளித்துவைக்கிறதற்குப் பயப்படுவார்களே ஐயா! எங்களைநீங்கி நீயெந்தலோகத்திற்குப்போய்ச் சோதாயோவென்று சொல்லிச் சொல்லி மனஞ்சகிக்காமல் அறிவழிந்து பிரலாபிக்கும்போது, கோபமானது ஜனித்து மேலிட்டு ஆணிக்கு எதிராணி கடாவினதுபோல இந்தத்துக்கத்தை வெளிப்படவொட்டாமல் அடக்கியது. இந்தப்பிரகாரமாய் நிகழ்கின்ற சமயத்தில் சூரியனுடைய ரதத்திற்கு ஒப்பாகிய ரதத்தின்மேலிருக்கின்ற இந்திரஜித்தை, மூப்புரங்களை எரிக்குமபடி முடுகிச்சென்ற கைலாசநாதனைக் கண்டதுபோல அநுமானனவர் கண்டார். கண்டு இவன்தான் இந்திரஜித்தென்பவன், முன்பு சிலவீரகளை நாம் ஜயித்தோமே அதுதானே ஒரு அதிசயமல்ல. இவனை யிவன்செய்த தீவினையே நமக்கெதிரேவருமபடிச் சிக்கிரத்தில் அழைத்துக்கொண்டு வந்துவிட்டது. இனிவெலவது தோற்பதாகிய இந்த இரண்டில் ஏதாவதொன்று உண்டாகு மானலுங்கோத்திரியே. துள்ளுகாளையாகிய இவன்மாத்திரம் நம்முடையகையிற் பட்டானலால் அது அந்தராவணன்மாண்டதற்குச்சரியாகும். பின்பாவது நாமறியாமற்கெட்டோமென்று அழியாத கற்பினையுடைய லோகமாதாவாகிய பிராட்டியாரையும்விட்டுவிடுவான். ராக்ஷசர்களுடையமதமும்அடங்கும்; இதனல்வரும் பிரயோசனம் இதுவொன்றுதானே? இந்திரனும் தன்வருத்தம் நீங்கிச் சுகப்படுவான். இப்பொழுதே லங்காபட்டணமுங் கட்டுக்காவலழிந்துபோம். நானே ராவணனையும் வேரோடேவென்றவனுமேவனென்று இவ்விதமாக எண்ணுகின்றதருணத்தில், ராக்ஷசர்களும், யானைகளும், தேர்களும், குதிரைகளும், மூன்றுதரம் மூன்றுலோகத்தையும்

ஜயித்துவந்த மேகநாதனுக்கு முன்னேவந்து கற்கண்டை எறும்புமொய்த்தது போல, தோரணகம்பத்தின்மேலிருந்த ஆஞ்சநேயனை காற்புறத்திலுஞ் சுற்றி வளைத்துக்கொண்டு உடைவாள்போலவும், எறிவேல்போலவும், சக்கரம்போலவும், தோமரம்போலவும், மழுப்போலவும், கொழுப்போலவுமை, சூரிபோலவும் கட்டாரிபோலவும், ஈட்டிபோலவும், எழுத்தாணிபோலவும், ஊசிபோலவும், உலக்கைபோலவும், கட்டைப்பாணைபோலவும், கதிர்க்கமபிபோலவும, சலாகைபோலவும், சங்கிலிபோலவும், காலுவிதரூபத்தையுடைய பாணங்களையும், வாளாயுதம்,வேலாயுதம், சூலாயுதம், காலாயுதம, சக்காராயுதம, வச்சிராயுதம, தண்டாயுதம், தோமராயுதம், எறிதடி, வளைதடி, குறுந்தடி, பருந்தடி, இருப்புலக்கை, வல்லுலக்கை, குந்தம், கோடாரி, பாசம, அங்குசம். கவண், கப்பணமுதலாகிய அநேகவித ஆயுதங்களையும்கொணடு, பிரளயகால மேகங்கள் சபதசமுத்திர ஜலத்தையும் உண்டு சூல்கொண்டுகறுத்துமின்னிக் குமிறி இடித்து, யானைத்துதிக்கைபோலப பருந்தாரைகளாக மழைபொழிவதுபோல அமோகமாகப பிரயோகஞ்செய்தார்கள்.

அதுகண்டு ஆஞ்சநேயரும் வந்தீர்களா வாருங்கோளென்று அழைத்துத் தோரணஸ்தம்பத்தைவிட்டுக் கீழேகுதித்து, பிரமாண்டபரியந்தம் வளர்ந்து உயர்ந்து கிளைத்துத்தழைக்கின்ற ஒருமராமரத்தை வேருடனேபிடுங்கியெடுத்துக்கராகரவென்று சுழற்றிக்கொண்டு உக்கிரமாகியகோபத்துடன்அந்தச்சேனைக்குள் பிரவேசித்தார். அவருடையகாலினல் சிலயானைகள்உதையுண்டன. சிலயானைகள்உருண்டன. சிலயானைகள்மிதியுண்டன. சிலயானைகள்விழுந்தன. சிலயானைகள் மண்ணிற்புதையுண்டன. சிலயானைகள் புரண்டன. சிலயானைகள் வதையுண்டன. சிலயானைகள்மறிந்தன. பலதேர்கள்முடிந்தன. பலதேர்கள்முறிந்தன. பலதேர்களிடிந்தன. பலதேர்களிற்றன. பலதேர்கள்அச்சொடிந்தன. பலதேர்கள் மச்சழிந்தன. பலதேர்கள் பொடிப்பொடியா யுதிர்ந்தன. பலதேர்கள் பூமியிற்படிந்தன. பலதேர்கள் கொடிகுடைமுதலானவைகளும பறிந்தன. அநேகங்குதிரைகள் தலைநெரிந்தன. அநேகங்குதிரைகள் கண்மணிசிதைந்தன. அநேகங்குதிரைகள்காலமுறிந்தன. அநேகங்குதிரைகள் முதுகுகோணினன. அநேகங்குதிரைகள் மார்பொடிந்தன. அநேகங்குதிரைகள் உதிரங்கக்கினன. அநேகங்குதிரைகள் குளமபுகள்பிளந்தன. அநேகங்குதிரைகள் கழுத்தற்றன. எத்தனையோராக்ஷசர்கள் அநுமான்கையிற்பிடியுண்டார்கள். எத்தனையோராக்ஷசர்கள் சரீரம் பிளபபுண்டார்கள். எத்தனையோராக்ஷசர்கள் தோளொடியுண்டார்கள். எத்தனையோராக்ஷசர்கள் தலையுடைபட்டார்கள். எத்தனையோ ராக்ஷசர்கள் தேகமுழுதுங் கடியுண்டார்கள். எத்தனையோ ராக்ஷசர்கள் கழுத்தறுபட்டார்கள். எத்தனையோராக்ஷசர்கள் அடியுண்டார்கன். எத்தனையோ ராக்ஷசர்கள் பயப்பிராந்திகொண்டார்கள். ராக்ஷசவீரர்கள் விற்கனவட்டமாகவளைத்துத் தூணியிலிருந்து ஆராய்ந்தெடுத்து அநுசந்தானம்பண்ணித் தைலதாராவிச்சின்னமாகப பிரயோகஞ்செய்தஅஸ்திரங்களும், மற்றும் பலவிதமாகிய ஆயுதங்களும் வாயுகுமாரர்மேல்வந்தபட்டிம், அவருக்கு ஓருப

த்திரவழும் செய்யாமல் பொடிப்பொடியாய்ப்பொறியெழுந்து திக்குகள் தோறுந் தெறித்துச்சிதறின. அது எப்படியிருந்ததென்றால, கொல்லனைவன் காய்ந்த இரும்பைப் பணையின்மேல்வைத்துச் சம்மட்டிகொண்டு அடிக்க அது அந்தப்பணையைச்சுடாமல், சிதைவுபட்டு அதன்றரு எங்குந் தெறித்துப்பறக் கிறதுபோலிருந்தது. அதுகண்டு இந்திரஜித்தானவன் நெருப்பைக்கக்குகின்ற அநேக பாணங்களை அவர்மேல் சந்தத்தானையாகப் பிரயோகஞ்செய்தான். அவைவந்து ஆஞ்சநேயர் திருமேனியிற் பட்டமாத்திரத்தில் அவருடைய கோபாக்கினியிலுலே சிலவெந்தும், சிலபுகைந்தும், சில எரிந்தும், சிலகரிந் தும், சிலநீறுகியும் போயின. அதைப்பார்த்துத் தேவர்களுடைய முகதேஜசு அழிந்து கண்ணெளிமயங்கியது. அநுமானுலே தன்னுடனேகூடவந்த தேர் களும் யானைகளும் புரவிகளும் காலாள்களுமாகிய சகலசேனைகளுமிறந்து போகவே, வேறுதுணையிலலாமல் தனித்துநின்ற பருத்ததோள்களையுடைய ஸ்ரீராதிவீரனுகிய இந்திரஜித்து கைப்புங்கோபமும் அதிகரிக்கும்படி, வாயு வேகமனேவேகமாகத் தேரைச்செலுத்திக்கொண்டு அடா எங்கோரமாகவுன் னைக்குறித்து நான் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறது? இவ்களை யெல்லாங் கொன்றுமை என் தோளின்திணவு தீரவில்லையே யாகையால், மகராஜனே! வந்த நீசிக்கிரமாய்வரப்போகாதா இனியாவது வாவ்வென்று தன்னையழைக் கின்ற அநுமானுக்குச் சமீபத்தில்வந்தான்.

கலி.

புரந்தரன்றலை பொதிபொறிந்திடப் புயல்வானில்
பரந்தபல்லுரு மேற்றினம் வெறித்துயிர்பதைப்ப
நிரந்தரந்தலை நெடுநிலஞ் சுமந்தபேருரகன்
சிரந்துளங்கிட வரக்கன்வெஞ்சிலையைநாண்டெறிந்தான்.

ஆண்டகாயகன் றாதனு மயனுடையண்டம்
கீண்டதாமெனக் கிரியுக நெடுநிலங் கிழிய
நீண்டமாதிரம்வெடிபட வவனெடுஞ் சிலையில்
பூண்டகாணிறத் தன்னெழிற் ரூள்களூப்புடைத்தான்.

நல்லைநல்லையிற் ஞாலத்துணின்றெக்க நல்லார்
இல்லையில்லையா லெறுழ்வலிக் கியாரொடுமிகல
வல்லை வல்லையின் ரூருநீபடைத்துளவாழ்நாட்
கெல்லை யெல்லை யென்றிந்திரசித்துவுமிசைத்தான்.

நாளுக்கெல்லையு நிருதராயுலகத்தை கலியும்
கோளுக்கெல்லையுங் கொடுந்தொழிற்கெல்லையுங் கொடியீர்
வாளுக்கெல்லையும் வந்தனவகைகொண்டு வந்தேன்
தோளுக்கெல்லையொன் றில்லையென்றநுமனுஞ்சொன்ரூன்.

அப்படி வந்துசேர்ந்து சுவர்க்காதிபதியாகிய தேவேந்திரனுடைய சிரசு அதிர்ந்து நடுங்கவும், மேகத்தினிடத்திலுண்டாகிய இடிகளும் திகைத்து உயிர் பதைக்கவும், சார்வகாலமும் பூமியைத் தாங்குகின்ற ஆதிசேஷனுடைய சகஸ்திரபணாமுடிகளும் அசையவும், அந்த இந்திரஜித்தானவன்தன்னுடைய

வில்லைக் குணத்தொனிசெய்தான். அதுகண்டு என்னைத் தன் தாசாநுதாச னாக ஆண்டுகொண்ட ஸ்ரீராமபிரானுடைய தூதராகிய ஆஞ்சநேயரும் பிரம்ம மாண்டம்பிளக்கவும், அதுபோல அஷ்டகுலகிரிகளும பொடிபடபொடிபாயுதிர வும், பூமிகிழியவும, திக்குகள்வெடிக்கவும, இந்திரஜித்துவின் வில்லிலேபூட்டிய காரியற்படவும, தமமுடைய தோள்களைக்கொட்டி அட்டகாசஞ்செய்தார். அதுகண்டு சித்தம்பிரமித்து நீயே கலலவன்! கல்லவன்! இந்த வுலகத்திலே உனக்குச் சமானமாகச் சொல்லுகிறதற்கு கலலவாகள் யாருமிலலே! இல்லே! பாகக்கிரமத்தைக்கொணடு சகலமானவர்களுடனேயும் யுத்தஞ்செயகிறதகு நீயே சமர்த்தன்! சமாதகன! நீபெற்றிருக்கினற பூமணையுவுியத்திற்கு இப்பொ ழுதே முடிவுவந்தது வாதகெனறு இந்திரஜித்துசொனனான். அப்படி யவன் சொன்ன உல்லங்கனமாகிய பாாத்தையைகேடடு அடாகான உங்களுடைய அடங்காத ஆண்மைககு முடிவும, பொலலாதவாகளாகிய நீங்கள் பிரம்மாதி தேவர்களைநோக்கித் தவஞ்செய்து பெற்ற வாள் முதலாகிய ஆயுதங்களுக்கு முடிவும்வந்து சம்பவிககத்தக்க வுபாயகதைத் தேடிவாதிருக்கினறீர. எனனுடைய புஜப்பராக்கிரமத்துக்கு ஒருபோதும் முடிவே யிலலையென்று வாயுபுத்திரனுஞ் சொனனான். அபபோது மேகநாதன் இந்த எண்ணத்தைக் கெடுக்கிறனென்று சொலலி அநுமானுடைய திருமேனியில உதிரமொழுக வும், அதைப்பாாத்துத் தேவர்கள் உடல்பதைக்கவும், வச்சிராயுதத்திலும் அதிக வலிமையையுடைய பாணங்களை விலலிலே பூட்டிப் பிரயோகித்து அவர்சிரசிலும் மாபிலும அழுத்தினன். அழுத்தலே ஆஞ்சநேயர் கோப மூண்டு ஆகாசம் குறுகியிருக்கினறதெனறு நினைதது தாமும் குறுகிய வுருவத்துடனிராமல, அதிலும் பெரியவுருவமெடுக்க வேண்டுமென்று, சிறிய காயினுடையவாய்மொழியைச் சாரசின்மேறகொண்டு ராஜ்யத்தைத்தம்பிக்குக் கொடுத்துத் தபோமாாகக முலலிற்கின்ற, தமமுடைய நாயகனுகிய ஸ்ரீராமச் சந்திரனுடைய கோத்திரையைப்போல நீண்டு உயாந்த விசுவரூபங்கொணடார். அப்படி விசுவரூபங்கொணடு நினற அநுமானை இந்திரஜித்துபார்த்து அவரு டைய பாதிச்சரீரமாத்திரம தெரிபககணடானேயலலாமல முழுதும தன்கண் ணுக்குத் தெரியுமபடிக் காணைனையால மனநதிகைத்தவனைபோல ஆச்சரியப் பட்டான். சுத்தவீரராகிய ஆஞ்சநேயர் தமமுடைய நீண்டகைகளை எதிரே நீட்டி அவன் எய்த அஸ்திரங்களெல்லாம் தம்மேல்வந்துபடாமல் திரும்பிப் போய்விழுமபடி தட்டி விசிவிட்டு, அவனுடைய ரதத்திற்கட்டியிருந்த பேய் களாகிய புரவிகளும சாரதியும மணணிலேவிழுந்து மாயும்படி அறைந்தார். அறைந்த அறையினல் தேரழிந்தது, உடனே யுகாந்தகால மாருதத்திற்குச் சமானமாகியவேகத்தையுடைய குதிரைகள்கட்டிய ஒருதேர்வந்து உதவியது. இந்திரஜித்து அதன்மேற்பாய்ந்தேறி மேன்மேலும் பாணங்களைப் பிரயோ கஞ்செய்து அந்தப் பாணங்களினலேயே ஆஞ்சநேயருடைய திருமேனியை மறைத்தான். அவனெய்த பாணங்களெல்லாம் அவர் மார்பில்வந்து புதைந் தன. புதைந்தமாத்திரத்தில் ரோமங்கள் உதிர்வதுபோல அந்தப்பாணங்கள் அந்தனையும் பலபலவென்று உதிரும்படி உதறி விட்டு அவள் தேரின்மேலே

மூம்பிக்குதித்து, உலகமுழுமையும் ஜயங்கொண்ட அவனுடைய அபாரமாகிய வில்லைத்தமதுகையா லெட்டிப்பறித்து மடமடவென்றுமுறியும்படி ஒடித்தெறிந்தார். அத்தவில்முறிந்த ஓசைபோயடங்குகிறதற்கு முன், பூர்வகாலத்தில் ராயுதத்தினால் மலைகளின் சிறகுகளைக்கண்டித்த இந்திரனைவன், போரி ல தனக்குப்பயந்து எறிந்துவிட்டுப்போன பிரசண்டதநுசு ஒன்றிருந்தது. அதை மகா உக்கிரத்துடனே எடுத்து நிறுத்தி யிழுத்து வளைத்து காரிபூட்டி. யிரலால் மூறிக்கித்தெறித்து வடித்துக்கூரிட்டுக் கடைந்து தைலதௌதம் டனனெ விஷம்பூசி யிருக்கின்றவையாகிய நூறு நூறு பாணங்களை, ஒவ் வொரு கோவையாகக்கோத்துச் சரசரவென்று மழைபொழிகிறதுபோல இந் திரஜித்து பொழிந்தான். அவைவந்து சுற்றிலுஞ்சூழ்ந்தென்று அநுமானுடைய சரீரத்தை தைத்துப் பலவிதகாயங்களைச் செய்ய ஸ்ரீராமதூதரானவர் சற்று ரௌத்ர மாயாசங்கொண்டிருந்தார். அதுகண்டு தேவர்கள் அறிவழிந்து துக்கப் பட்டார்கள். பின்பு மாருதியானவர் சோகம் நீங்கி ஒருபெரிய மராமரத்தை யெடுத்துச் சுழற்றிக்கொண்டே அவனுக்கெதிரேநடந்து, அவன்விடுகிற பாண ங்களையெல்லாம விசியடித்துத் தூளதூளாகுகித் தள்ளிவிட்டுப்போய் அந்த மரத்தினாலே அவனுடையதலையினமேல ஓங்கி அடித்தார். அந்த அடிபடமேல தேவர்களையெல்லாந் துரத்தியடித்த இந்திரஜித்துத் தன்கிரீடம உடைந்து விழும்படித் தலைபிளந்து மலையருவிபோல ரக்தமபெருகிப்பாய, மெய்தளராது மனங்கலங்கிப் பிரமைகொண்டிருந்தான். அவ்வணணமாயிருந்து தெளிவு வந்தமாத்திரத்தில் பற்கடித்து மீசைபடபடவென்று துடிக்க அதிக கோபா வேசங்கொண்டு, தேவர்களும அசுராகளும முனிவர்களும் திகைக்கபபாவதம போல எதிரே நிற்கின்ற அநுமானுடைய மாபுங்கலங்கத் தோளுங்குலுங்க, ஒன்றைப்போல மகா கடோரமாகிய ஆயிரம்பாணங்களை விலவிலபூட்டி றிவ் விவ்வென்று போய்த்தைக்கும்படி யெய்தான். அவனெய்த பாணங்கள்வந்து ராத்திலும் தொளிலும்பதியவே மாருதியானவர் மனங்கசந்து மிகவுங்கொதி த்துச் சுவேகத்தைப்பார்க்கிலும் அதிகவேகத்தைக்கொண்டு பாய்ந்து அவன் தனைமியொரு சுனைடக்காயைப்போல எளிதாக எடுத்து, ஆகாசத்திற்போம் படி எடுத்து காஜீத்துக்கொக்கரித்தார். அப்படி அநுமானெறிந்த விசையினால வாவிறகத புஜபலகதையுடைய சத்துருவாகிய இந்திரசித்தக்கண்ணின மே யையானது கீழ்மையுடனே வந்து தட்டுதற்குமுன்பாக, தேருடனே ஆகா மம எவ்வளவு உயரமோ அவ்வுயரத்திற்குமேலும்போய் அங்கிருந்து பூமி யிலவந்துவிழுந்தான். அவன் விழுந்தது விழாததற்கு முன்னே தனைவிட்டு ஆகாசத்தி லெழும்பினன். அப்போது அவனுடைய சேனையிலிருந்த கவாதன மபமாகிய சேமத்தேர்களையெல்லாம் ஒருஉழுந்து உருள்கின்ற பொழுதுக்குள் ளே ஆஞ்சநேயர்உதைத்து, அச்சுவேறுஆணிவேறுகும்படிசிதைத்துவிட்டார்.

பின்பு ஏறுகிறதற்குத் தேரில்லாமலும் எதிரேநின்று போராடுகிறதற்குப் பலமில்லாமலும் சங்கடப்பட்டு அவன் வேறொன்றுஞ்செய்யக் கூடாமையி தலே தனக்கு அவமானம்வந்து சம்பவித்ததேயென்றுமனசுக்கு விஷசார்ப்பம்

போலச் சீறி அதிககோபங்கொண்டு அங்குமிங்கும் உழன்று இனி எதுசெய்கி றது நம்மிடத்தில் பிரஹ்மபாசமொன்றுதானேயிருக்கின்றது. அதுவும்இப்படிப் பட்ட ஆபத்துக்காலதத்தில் உதவாமல மற்றென்னதான செய்ய விருக்கிறது. அதையாவது பிரயோகஞ் செய்வோமெனறு உத்தேகித்து, அதற்குப் புஷ்பம் சந்தனம் தீபம் தூபமுதலானவையுங்கொடுத்துச் சோடசவுபசாரத்துடனே மானஸ்யமாகப் பூஜித்து, தேவா, மானிடா, காகா, மிருகம, பறவை,ஊாவன, நீர்வாழ்வன, ஸ்தாவரமெனகின்ற எழுவகைதோற்றங்களையும் உண்டாக்கிய சதுர்முகபிரஹ்மாவினுடைய வரபிரசாதத்தினாற்பெற்ற அத்திப் பிரமபாசத் தைக்கையிலெடுத்து, வெற்றிவிலெயிலெறிதாடத்துஅறுபாதனுடையதோளுக்குச் சரியாகவிலக்கும்பாத்துமண்டூறுகடிக, விழனறுட்டங்க, திக்குகளுமகுமுக, மேருவுமகுங்க, அதைக் காதளவு இழுத்து அபிமந்திரித்து விட்டுவிட்டான். விட்டவுடனே தடுக்கபடாத அதுப பிரம்மபாசமானது அக்கினியைக் கக்குகின்ற கோபக்கணைகளையுடைய ராக்கூட்டங்களுக்கு ராஜாவாகிய ஆதி சேஷனுடைய உருவுதனைதகிகாணும், பொனகலவரியாகிய கருடனும் தடுக் கிட்டுகுங்குபடி விரைவுவாலுடனே பிரசண்ட வேகமாய்வந்து, ஆஞ்சநேய ருடையதோள்களை இறுக்கிகருக்கி ஒடுக்கிவிள்ளதுச் சுறறிக்கட்டியது. அந்தப் பாசமானது மகா திடமாயிருந்திய தமது சரிதனைக்கடைபடியபத்திரவப்படுத தவே வாயுகுமாரர் தமதினனை தொடாதுவந்த தாமதிதவதை கணணாவிடும் படி, தேகஸ்மரணையிலலாமல சுவாஸ்னமயமாகிய தோரணஸ்தம்பத்துடனே கற்பாந்தகாலத்தில ஆதித்தியாதி கிரகங்களுடனே சந்திரன் சாய்ந்ததுபோலச் சாய்ந்தார். இவவிதமாகச சோரவறுச் சாய்ந்தவர கொஞ்சம பிரக்ஞையு ளுனடாய் இதுகமைம வருத்தமவளைடிய காரணமஸ்னவினறு யோசித்து பிரமனுடைய வரபிரசாதமாய் இவனுக்குவந்த பிரமபாசமாக வேணுமெமை ன்று நிச்சயித்தறிந்து மற்ற அஸ்திரஸஸ்திரங்களைப்போல இதை அவமதித்து நடக்கிறது நமக்கு யுக்தமல்லவென்று கினைத்து ஸ்ரீராமபத்திரனை மனத்தில தியானித்துக்கொணடு கணகளைமூடினபடியே அசைவற்றிருந்தார். அப்போது மேகநாதனுனவன் இந்தமட்டிலே குரங்கினுடைய வலிகுனமி ஓட்டம் ஆட்ட மெல்லாம அடங்கிவிட்டதென்று சமீபதிலவந்தான். வந்தபோது அதற்கு முன்பயந்தோடிப்போய் அங்கங்கேபதுஙகிச் சமயமபாத்திருந்த ராக்ஷசர்கள் கொக்கரித்து ஓடிவந்து சுற்றிக்கொண்டு அநுமானுடைய சரீரத்தைச் சுற்றி யிறுக்கிக்கொண்டிருக்கிற சர்பபரூபமாகிய பிரமபாசத்தின் வாலையுந்தலையை யும் பிடித்திழுத்தார்கள். அந்தச்செய்திகேட்டுக் குரங்கினுடைய பலமழிந்த தென்று லங்காபட்டணத்தி லுள்ளவாகளெல்லாம் ஒருகூட்டமாகக்கூடிவந்து கைகொட்டிக் கூத்தாடியினைச்சலிட்டார்கள். அதனல் அந்தலங்கையானது சமுத்திரத்தையொத்திருந்தது. அநுமானைக்கட்டிய பாசமோ மந்தரகிரியிற் சுற்றிய வாசுகிபன்னும பாம்பையொத்திருந்தது. இராக்கதர்களே அமிர்தங் கடைந்த தேவர்களையொத்திருந்தார்கள். ஆஞ்சநேயரோ மகத்தாகிய பர்வதத் தையொத்திருந்தார். கறுத்தபாடபுருவமாகிய பாசமானது தமதுபொன்னை த்த மேனியைபக்கட்ட, தர்மதேவதைக் கொருதுணையாயிருக்கின்ற அநுமா

னைவர், பூர்வத்தில் வாயுமோதியடித்தது கண்டு வாசுகி தன்னுடலைக்கொண்டு சுற்றும்படிச் சலனமில்லாமலிருந்த மகாமேருவைப் போலவுமிருந்தார். அந்தரத்திலும் மேகமண்டலத்திலும் அஷ்டதிக்குகளிலும் ராக்ஷசர்களும் ராக்ஷசிகளும் பின்னும்வந்துமொய்ததுகொண்டு மழைபோல ஆரவாரித்தார்கள். அவர்களுக்கு அப்பொழுது உண்டாகிய சந்தோஷத்திற்கு ஒருமுடிவேயில்லை. அதைக்குறித்துச் சொல்லுமிடத்தில் இந்த மேகநாதனனைவன், தேவேந்திரனைப்பிடித்துக் கட்டிக்கொண்டு வந்தபோது லங்காபுரியானது எப்படிச் சந்தோஷித்ததோ அப்படியேயன்றுஞ் சந்தோஷித்ததெனறு சொலலலாம்.

பாசப்படலம்
முற்றிற்று.

பிணிவீட்டுப்படலம்.

சகலமானவர்களும் இந்தக் குரங்கு கெட்டது இனை எப்யுங்கோள், பிளவுங்கோள், வெட்டுங்கோள், பிறாண்கோள், அரியுங்கோள், குடலைக்கூறு கூறுக்குங்கோள், மண்ணிலடித்தெய்யுங்கோள், தின்னுங்கோள், இது பிழைத்தேதாயாமால் நம்முடைய பிராணனை மாய்த்துவிடுமென்று சொல்லிக்கொண்டு ஓடிவருகின்றார்கள். இலம்பர்கள் இது இந்த ஆயுதங்களிலெல்லாஞ் சாகத்தக்கதா? இதைக்கடலிலே கொண்டுபோய் அமிழ்த்தி வச்சிராயுதத்தையெடுத்து உச்சியிலடித்து அழுத்துங்கோள், அப்படியல்லவென்றால், நெருப்பாலழித்து அதிலே தள்ளிவிடுங்கோளென்று கோபிக்கின்றார்கள். அதேகம் விசாசரப்பிராணனை [illegible] மனைப்போல மனதுக்கினியவனாகிய [illegible] காலதாமசமாக உயிருடனே எமபதுக்கனுப்பி [illegible] சொலலிக் கொலைசெய்யப் பிரயத்தனப்படுகின்றார்கள். அதேகம்பேர்கள் பாவிகளுங்கே நீங்கள் தகப்பனையும், எங்கள் தாயினையும், எங்கள் தமையனையும், எங்கள் பிள்ளைகளையுங் கொன்று உம்மாயிலேபோட்டுத் தண்ணீர்வாரத்துக்கொண்டைடீரே! அவர்களை எங்களுக்குக்கொடுத்துவிட்டு அப்புறமேபோ அதற்குமுன் உங்களப்பனை போகக்கூடாதென்று குறுக்கேகின்று தடைசெய்கின்றார்கள். அதேகமேபோர்கள் இவன் சுவர்க்கத்திலிருக்கின்ற இந்திராதிதேவர்கள் ஆஜராபிக்க வந்தவனுகமேவண்டுமென்று கொல்லுகிறதற்கு அஞ்சுகின்றார்கள். அதேக ராக்ஷஸஸ்திரீகள் வயிற்றில் அறைந்துகொண்டுவந்து ஈலேபோலச்சலியாத பலத்தினையுடைய எங்கள் பிராணநாயகர்களை இதுவரையில் நாங்கள்பிரியாமலிருந்தோம இத்தக்கொலைப்பாதகனால் இன்றுடனேபிரிந்தோம் ஆகையால்அதைக்குறித்து இனித்துக்கிக்கிறதேயிலலை. இவன் சிரசு அற்றுப் பூமியில்விழ அதன்மேல நாங்களேறியிருந்து அதை எங்கள் காலினால் மிதித்தாலலது தாலிவாங்குகிறதேயில்லையென்று சொல்லுகின்றார்கள். அநுமானை யிழுத்துக்கொண்டுளதிலே வரும்போது லங்கையிலுள்ளவாகள் கண்டு சந்தோஷத்தினால் அண்டகடாக

மட்டும், அனாவும்படி ஆர்ப்பரிக்கின்ற சப்தத்தைக்கேட்டுக் கண்டதுண்டமாக மாண்டுபோன தங்கள் நாயகன் மார்களுக்காக அழுதுகொண்டிருந்த ஸ்திரீகளுக் துக்கம் நீங்கிச் சந்தோஷித்தார்கள்.

அநுமானனவா கிருதவீரர்களையும் யானைகளையும் தேர்களையும் குதிரைகளையும் தாம் எடுத்தெறிந்ததனல் இடிவிழுந்து சிதைந்துகிடக்கிறமலைகளைப் போல, உப்பரிகைகளெல்லாம் இடிந்து பொடிப்பொடியாய்க் கிடக்கின்றதை இலங்காபுரி வீதியில் கண்டுகொண்டேபோனா. ராக்ஷச ஸ்திரீகள் அநுமானுடைய தோளிற்கட்டிய கயிற்றைக்காணுமல ஐயோ! அந்தக் குரங்கு இங்கும் வந்துவிட்டதே என்ன செய்வோமென்று வயிற்றிலடித்துக்கொண்டு ஓடுகிறதைக்கண்டு அநேகா மயங்கினார்கள். அநுமான் சோவதிப்பதனல் அநேகர் பேசப்பயந்து வாயைத்திறவாமல அடங்கியிருந்தார்கள். சிலர் ஆஞ்சநேயர் செய்த யுத்தசமாசாரத்தைக் குறித்துப்பேசத் தலைப்பட்டார்கள். சிலர் அவருடைய ஸ்தூலகாத்திரத்தைப் பார்க்கப் பார்க்க பயபயிராந்தியதிகரித்தனல் பதைபதைத்து ஊரின் புறத்தில் வலசைவாங்கிப் போனார்கள். சிலர் அக்கினிச்சுவாலை வீசுகின்ற விஷப்பல்லியுடைய நாகபாசங்கட்டிய கட்டை ஒரு புஷ்பமாலையைக்கொண்டு கட்டியதுபோல லேசாகஎண்ணி, இந்தக்குரங்கினுடைய முகமானது வாடாமல் அதிக தேஜசுடனே யிருக்கின்றது ஆகையால், நீங்கள் செய்வதை பயன்படுமபடிச் செவ்வையாய் ஆலோசித்துச்செய்யுங்கோள். திடீரென்று நமதுடைய ராசாவினிடத்திலே கொண்டுபோய் விடுவது நன்மையலல வென்றார்கள். சிலர் இது இத்தனை யெளிதாய்வருகிறது இந்த நாகபாசத்திற்குப்பயந்தலல என்ன நிமித்தமோ வேணுமென்றே அகப்பட்டுக்கொண்டது ஆயினும, இதனெண்ணம் வேறுயிருக்கலாமென்று நினைத்து அநுமானைப்பார்த்து ஓய் மகாபுருஷனே! எங்களைச் சமாதானஞ்சித்தமாய்ப்பாரும் கோபிக்கவேண்டாமென்று கண்டபிட்டார்கள். பலர் மகாபலிஷ்டர்களாகிய அரக்கர்களுடைய செருக்கையழிக்குமபடி எமனுனவன் தன்னுடைய உருவத்தை மறைத்து, வானரத்தின உருவத்தைக்கொண்டு போர்செய்ய வந்தானே? என்றார்கள். பல கைலாசமலையி லெழுந்தருளியிராநின்ற மூழவாளியானவர் சிதாபிராட்டியினுடைய கற்பின்மகிமையால், ஒரு குரங்குவடிவெடுத்து இந்த லங்கையை அழிக்கவந்தாரோ யல்லாமல் இது சுபாவமாகிய குரங்கலலவென்றார்கள். பலர் க்ஷீரசாகரத்தில் திருக்கண்வளர்ந்தருளாநின்ற ஸ்ரீமகாவிஷ்ணுவும் மூலதாமையில உற்பத்தியாகி உலகங்களைச்சிருஷ்டித்த பிரம்மாவும, நமமைப்பகைத்துத் தங்களுக்குரிய சுயரூபத்தைமாற்றி இந்த ஒருகுரங்கின் வடிவத்தைக்கொணடு பூமியில்வந்தார்களென்னார்கள். கும்புகுமபாய் ஸ்திரீகளும்புருஷாகளும் நிலாமுற்றந்தோறும், சுவர்ணமயமாகிய மாளிகைகள் தோறும், சாளரங்கள் தோறும் வாசல்கள்தோறும கூடிநின்று பார்க்கத்தலைப்பட்டார்கள். தேவதாஸ்திரீகளும், வித்தைசயஸ்திரீகளும், நாகஸ்திரீகளும், சித்தஸ்திரீகளுமு, யக்ஷஸ்திரீகளுமாகிய அளவிறந்தபேர்கள் அணியணியாக எங்குநெருங்கிச்சூழ்ந்தாகள். ராக்ஷசர்களும் ராக்ஷஸி

களும் தவிர மற்றவர்களெல்லாம் சீதாபிராட்டியாருடைய துக்கத்தைப் பார்த்தோ? அலலது இரக்கத்தினாலேயோ? அல்லது தர்மம் இனைத்துப் போய்விட்டதென்றோ? பகிரங்கமாகக் கண்ணீர்விட்டழுதார்கள். கருட னைப்பார்க்கிலும் மூன்றுபங்கு விசேஷமாகிய பலத்தினையுடைய கிங்கரர்கள் ஐம்பதினாயிரம்பேர்கள் அநுமானைக்கட்டிய பாசத்தை இறுகப்பிடித்து இழுத் துக்கொண்டுபோனார்கள். அவர்கள் இழுத்துக்கொண்டுபோமபொழுது பரா க்கிரமச் செயலைகளையுடைய அநுமானுடைய அருமைத்தகப்பனாரை அவர்களைப் பிரித்துக்கொண்டு அப்புறம் போகாமலும், இப்படிசெய்யவேணுமென்னும் விருப்பமிலாமலும் [illegible] பாதிப்பராவணனைக்காணுகிற்தையுக்தமென்று மனத் திலே நினைத்து அவர்களுடனே கூடப்போனார். என்றிதாவாகிய வாயுபகவா னுடைய திருமைபையினாலும் ஸ்ரீராமபிரானுடைய திருவடித்தியானபலத்தினா லும், தேவர்கள் பூவம் எனக்குக்கொடுத்திருக்கின்ற வரத்தினாலும இந்தப் பிரமபாசத்தைக் கண்டதுண்டமாகச் செய்வேன் ஆயினும், அப்படிச்செய் யாமலிருக்கிற்தை சத்தியவாத்தமமென்றும், வக்கிரதந்தங்களையுடைய ராட்ச சாதிபதியினிடத்திற்போய், அவனும அவன் சமுகத்திலிருக்கின்ற மந்திரிமார் பிரதானிமார்களும மற்றுமுள்ள பெரியோர்களும அறியுமபடி, எதார்த்தமாக இன்னினையும் விளைவச்சொன்னால் ஒருவேளை மனந்தளர்ந்து பிராட்டியாரை என்வசமாகக்கொடுத்து விடுவானென்பதாக நினைத்தும், அப்படியாமலும அவனுக்கு உப பலமாயிருக்கின்றவர்களினுடைய பலாபலனென்பதாக தெரியலாமென்றும், அவர்களுடைய அபிப்பிராயத்தையுமறியலாமென்றும, ராவணனுடைய ஸ்திதியையும மனக் கருத்தையும் அவன முகக்குறிப்பிலே தாதாகசாலலவுந் தெரியலாமென்றும், மேலும வானினாண்டதும, மராமரம்பட்டபாடும், சுவாமிக்கு அநுகூலமாயிருக் கின்ற வானரசைன்யத்தின்பலமும மிகுதியும, சுக்கிரீவனுடைய ஆண்மையும பெருமையும, அவன புத்திரனுகிய அங்கதபெருமானுடைய பராக்கிரகமும் கமமாலேசொல்லக் கேள்விப்பட்டால ராவணனுடைய மனத்தில் உறுத்துமா கையால், அந்த ராக்ஷஸாதிபதிக்குச் சமீபத்திற்போய் ஆணைமையையும் நீதி யையும் அவன்மனத்திலே கொள்ளுமபடி நிறுத்தி, அதற்குச் சம்மதிபாமற் போனால் அப்புறம் அவனிடத்திலே இன்னம் இறவாமலிருக்கின்ற சேனைகளில பாதிக்கு மேற்படக்கொனறு குவித்துவிட்டு, மெதுவாய்ப்போய்விடுகிறதே காரியமென்றும் தீர்க்கமா யாலோசித்துச் சித்தபடுத்திக்கொண்டதுமல்லா மல் தம்முடைய புஜபலத்தின் சத்துவமானறையுங் காட்டாம லடக்கிக் கொண்டுமபோனார். இந்திரஜித்துவும சேனைசமுத்திரமானது நாற்புறத்திலும் மொய்த்துச் சுற்றிக்கொண்டுவர ஒரு ரிஷபமானது கட்டுபபட்டு வருகிறது போலக்கட்டுப்பட்டு வருகின்ற அதிவீரனுகிய அநுமானை ஏகசக்கரத்தை யுடைய ராவணசுவான் இருக்கின்ற அரண்மனைக்குக் கொண்டுபோனான். அப்போது தூதர்களோடி ராவணனைச் சேவித்துச் சுவாமி தேவரீருடைய ஜ்யேஷ்டபுத்திரர் யுக்தஞ்செய்து பிரமபாசத்தைவிட அதில் அந்தக் குரங்கு அகப்பட்டுக் கட்டுப்பட்டதென்று சொன்னார்கள். அந்த வார்த்தை கேட் கமவ மனத்துள்ளதிக சுகதோஷமாய்ச் சூரியன் நீங்கிய ஆகாசம்போலத் தன்

மார்பின் பிரகாசமாறி இருள்சூழும்படி, அதிலணிந்திருந்த கோடிசூரிய பிரகாசமாகிய ரத்னஹாரத்தைக் கழற்றி அந்தச்செய்தி சொன்னவாகளுக்குக் கொடுத்தான். பின்னும் அளவிலலாத மகிழ்சசியிறல் தன் தோள்கள் பூரித்து அவர்களைத் தன்கண்கள் மலரபபாத்து, சிக்கிரத்தில் நீங்கள்போய் அந்தக்ரூரங்கைகக் கொல்லாமற் கொண்டுவர நான் சொனனதாகச் சொலலுங் கோளென்று சொல்லியனுப்பினன். அதசச்சொல்லைத் தூதாகள் ஏடிவந்து இந்திரஜித்து அறியும்படிச்சொனனார்கள்.

அச்செய்தி இப்படி நடந்துகொண் டிருக்கும்போது ஆஞ்சநேயர் அசோகவனத்தை யழித்தாரென்றும், மிதமற்ற ராகஷசாகளை மாயும்படிக் கொன்றாரென்றும், அப்போதுக் கப்போது கேள்விபபட்டுச் சந்தோஷித்துக்கொண்டிருந்த பிராட்டியார், அநுமான் இநதிரஜித்துவின் கையிற் கிக்கிப் பாசத்தாற்கட்டுண்டு இழுத்துக்கொணடு போகபபட்ட சமாசாரங்கேடடு உயிர்சோரும்படி நிலத்திலவிழுந்து மாணிக்கபபிரதிமையானது புகைசூழுபபட்டதுபோல மிருதுவாகிவிளங்குகின்ற திருமேனியிற புழுதிபடியப் பாபாத்துமனுகிய வேடன் கையில் தன்குருஞ சிடிபட்டுபபோகக் கண்டு, தாயாகிய அன்னப்பேடு தூக்கிப்பதுபோல மகத்தாகிய வருத்தத்துடனே பிரலாபிக்கத் தொடங்கினர். அப்பனே! என்கணமணியாகிய ஆஞ்சநேயா! அநுமானே! அடிக்கடிகா யிராகின்ற அணடங்களெல்லாம ஊடுருவவளாந்து அவ்வணடங்கள் முழுமையும, உன்னுடைய உருவதநில மறையுமபடி ஓங்கிகின்றாய். வேதமவேதாங்கம் சாஸ்திர புராணம் ஆகமமுதலான வற்றையும சாஸ்திரபாங்கமாகக் கற்றுணாநதாய். இபபடிபடபட மகிமையையுடையநீயொரு கள்ளனுகிய ராகஷசனுற்றிடியுணடுபாசதத்தாற்கட்டுணடையே இது தாமேறு தர்மநீதியென்பது. டுஜ்டபலபராக்கிரமத்தையுடைய நீ யெப்போதுத்துக்கத்தில் நின்றும ஈடேற்றும்படி சமுத்திரதனைதக்கடநது இநதலாகைக்குவந்து, இஙகுள்ள ராகஷசாகளுடைய சரீரங்களை சிலரூபினைபபோதுநியும் உனக்கு ஒருதுன்பமிலலாமல ஜீவித்திருந்தாய், இபபோதுமுனனினும் அதிகவருத்தத்தைனக்குஉண்டாக்கிபபுரிநாயாருடையதிருவாழினையக்கொண்டுவருது காட்டி நீயென்பிராணனை இபடிதபடியிறுமே, கற்பாநதகாலபரியந்தம் இறவாமல சிரஞ்சிவியாயிருக்கும்படி உனக்கு நான வரங்கொடுத்தேன். அதுவோ என்றைக்குமழியாது, அதிருக்கட்டுமி இன்னமொன்றுண்டு என்னவென்றால், பர்வதத்திற்கு ஓபபாகிய உண்டுஜபலதனைதக் காட்டப்பேரய் உடனே பெரிதாகிய அபகீர்த்தியை விளைத்தாய். மேலும நீ என்னைக்கண்டு கொண்டுபோய் என்பிராணநாயகராகிய அந்தபுருஷோத்தமரிடத்திற்சொல்லி நானிருக்குமிடத்தை யவருக்குக்காட்டி அவனை யழைத்துவர, அவர்வந்து இந்தக்கொடிய பாபிஷ்டர்களாகிய ராவணனதி ராகஷசர்களை யுத்ததத்தில் சங்காரஞ்செய்து என்னைச் சிறைமீட்டுக்கொண்டு போவாரென்று நினைத்திருந்தேன். அக்காரியத்திற்குந் தடைசெய்தாயென்று இவ்விதமாகச் சொல்லிச்சொல்லித் தன்னுயிர் தேயும்படி இளங்கன்றைப் பறிகொடுத்த தாய்ப்பசு

வைப்போல, உடல்தளர்ந்து மதிமயங்கினர். தீயையுஞ்சுடுகின்ற கற்பினையுடைய சானகியார் உடல்தளர்ந்து மதிமயங்கிய அந்தச்சமயத்திலே மகாத்மாவாகிய அநுமானைக் கட்டிக்கொண்டுபோகிய இந்திரஜித்து அருமையாகிய தபோபலத்தினால திரிலோகங்களையும் தன்வசமாக்கிக்கொண்டு, தானே ஏகசக்கரமாக அரசாட்சிசெய்கின்ற பிரதாபலங்கேசுவரன் வீற்றிருக்கின்ற சபாமண்டபம்போய்ச்சேர்ந்தான்.

அத்தருணத்தில் அந்த ராவணேசுவரன் எப்படியிருக்கின்றனென்றால் பரலோகம், பூலோகம், பாதாள லோகமாகிய மூன்றுலோகத்திற்கும், வேறொரு பூரணசந்திரன் குறைவில்லாமல் தழைத்து உதயமாகியதுபோலவும், முன்னாளில் தான் பூமியினின்றும் ஆகாசத்தில் உயரத்தாக்கிய வெள்ளிமலையைப் போலவும், மூத்தச்சரங்கள் தொங்கவிட்டிருக்கின்ற வெற்றிக்குடையானது சிரசின்மேல் குளிர்ந்த நிழலைப் பரப்பித் தாவள்யமாய்ப் பிரகாசிக்கவும், கருடத்துவஜத்தையுடைய ஸ்ரீமகாவிஷ்ணுவின் சக்காரமும், சிவனுடைய மழுவும், இந்திரனுடைய வச்சிராயுதமும், வர்த்தாக்கிய வடுக்களும், மதனலீலாசம்பிரமத்தில் ஸ்திரீகள் தங்களுடைய வாள்போலுங் கூர்மையாகிய விரல்நகங்களினால் செய்யும்வடுக்களும் தோள்களிற்பிரகாசிக்கவும், தலைக்ளிலுள்ள சிவந்த மயிர்க்கற்றைகளே அக்கினிக்கொழுந்தாய், கோபத்தினால் பெருமூச்சுவிடுந்தோறும் வாய்களிலும் மூக்குகளிலும் இருந்து கொண்டல்கொண்டலாய்ப் புகையெழும்பத் தென்திசையிலும ஒருவடவாமுகாக்கினியை வைத்ததுபோலப் பிரகாசிக்கவும், பத்துக்கிரீடங்களிலும் பதித்திருக்கின்ற மரகத ரத்னகிரணகாந்தியும், மாணிக்கத்தின்சோதியும், நரகங்களிலுள்ள இருளையும ஒட்டும்படிப் பிரகாசித்தலால், ஆதிசேஷனனவன் தன்பணமுடிகளைத் திசைகள்தோறும் பரப்பிக்கொண்டிருக்கிறதுபோலவும், பலவித ரத்னபரணங்களும், பீதாம்பரமும், இருபது தோள்களிலும் அணிந்த புஜகிருதிகளும் பிரகாசிக்க, மகாமேருவையே சுவர்ணமகுடமாகத் தரித்துக்கொண்டு கருங்கடலானது திரண்டு எழுந்து உட்கார்ந்திருப்பதுபோலவும், இருளானது கரசரணாதி அவயவங்களோடு உருப்பட்டுச் சுக்திரனுகிய வெண்பட்டுக்குடைநீழலில நட்சத்திரங்களாகிய முத்தாத்தைப்பூண்டு அந்திவானமாகிய செம்பட்டாடையை உடுத்து வீற்றிருப்பது போலவும், ஔதாரியத்திற்கும், வேதமுதலாகிய சகலகலைகளுக்கும், சௌரியத்திற்கும் வாசஸ்தானமாகிய தன்முகங்களில் விளங்குகின்ற கண்களால் எட்டுத்திசைகளையும் பார்க்குந்தோறும் அந்தந்தத் திசைகளிலிருக்கின்ற திக்கஜங்களுக்கும், இந்திரன் முதல் ஈசானன்வரையிலுள்ள திக்குப்பாலகர்களுக்கும், பிரமவிஷ்ணுக்களுக்கும், மகத்தாகிய பயம் ஜனிக்கவும், சர்வேசுவரனுகிய ஸ்ரீராமச்சந்திரனுடைய தேவியாளைத் தான் கண்டபின்பு காகலோக முதல் சத்தியலோக பரியந்தமாகிய சகலவிடங்களிலுமுள்ள ஸ்திரீகளின் இச்சை இல்லாதிருக்கிறபடியினாலே அவர்களெல்லாம் புருஷபாவமடையச்

தன்னை நீங்காமற்சூழ்ந்திருக்கவும், வானரங்களும், ஸ்ரீராகவனும், இளையபெரு மானும், தன்னால் மிகவும் அற்பமாக எண்ணப்பட்ட மனிதர்களும், முனிவர் களுமாகிய சிலர்தவிர மற்றதேவர்கள்முதலாகிய யாவரும் ராக்ஷசக்கூட்டங்க ளோடுத் தன்னைமொய்த்துச் சுற்றிப் பயபக்தியுடனே பணிவிடைசெய்யவும், ஒருபக்கத்தில் யாழும், கைத்தாளமும், சல்லரியென்னும் வாத்தியமும், குற டென்னும் ,வாத்தியமும் முழங்கத் தேவஸ்திரீகள் தன்னுடைய செவிகள் தோறும்கேட்கும்படி அமிர்தஞ்சொரிவதுபோலப் பாடல்களைப்பாடவும், மற் றொருபக்கத்தில் தாளவோசை மிருதங்கவோசையுடனே தொந்தப்படும்படி காலடிகளை மெல்லமெல்லவைத்து மிதித்து, அபிநயங்காட்டுகின்ற கையுடனே பார்வையும் மனமுந்தொடர்ந்துசெல்ல அருணமயாகிய தவத்தையுடைய முனிவர்களும், பார்த்தால் பூரணமாகிய மோக்ஷானந்தத்திலும் ,விரக்தி தோன்றும்படி கடனஞ்செய்கின்ற மோகையென்கின்ற தேவதாசியின்மேல் தனக்குக் குறுநகையுண்டாகவும், தன்னிடத்தில் பிணங்கியிருக்கின்ற ஸ்திரீ களின் முகத்தழகாகிய தேனைத் தன்பத்துமுகத்தில் ஒருமுகமானது உண்ண வும், தன்னைப்புணர்ந்தபெண்களின் முகத்திலுண்டாகிய சந்தோஷமென்னும் மதுவை ஒருமுகமானது பானம்பண்ணவும், பாடுகின்ற மதங்கியர்கள் முகத் தில் தோன்றிய பலவித ராகமாகிய அமிர்தத்தை ஒருமுகமானது குடிக்கவும், பரதநாட்டியஞ்செய்கின்ற கூத்தியர்களுடைய முகத்தில் காணுகின்ற அபிநய மாகிய சர்க்கரைப்பாகை ஒருமுகமானது பருகவும், தேவர்களுடனே கூடியிரு ந்து ஒருமுகமானது அரசியல் செலுத்தவும், மந்திரிமார் பந்துக்கள் சிநேகிதர் களாகிய முக்திறத்தார்களுடன் ஒருமுகமானது ஆலோசனைசெய்யவும், பாப கிர்த்தியத்தையுடைய தனது ஜாதிக்குரியகுணத்தை ஒருமுகமானது விடாது அநுசரிக்கவும்ஜானகியாருடைய உருவெளியை ஒருமுகமானதுகண்டு கொண் டிருக்கவும், சீதாபிராட்டியாருடைய கற்பாகிய கடலை யென்றைத் தினத்திற் கடந்தேறலாமென்று ஒருமுகமானதுநினைக்கவும் களபகஸ்தூரிகளை அணிந்த ஸ்தனங்களையுடைய மங்கையர்கள் தனக்கெதிரேயேந்துகின்ற கண்ணாடியில ஒருமுகமானது அழகுபார்க்கவும், தன்னாலணுகப்படாத புதருக்குளிருக்கின்ற தேனைப்போய்உண்ணுகிறதற்குப் பதிகொண்டலைகின்ற வண்டைப்போல ஜனக ராஜ புத்திரியின்மேல் தன்மனமானது சுழன்று செல்லுதலால்தங்களிடத்தில் சரசவினையாட்டுகளைச்செய்யவில்லையென்றுசகிக்காமல்மனம்வெதும்பி, உடல் புழுங்கிக்கண்களில்ஜலம்பெருகத் துக்கிக்கின்ற ஸ்திரீகளுடைய கண்களாகிய கூரியவேல்கள்வந்து தோள்கள்தோறும் தைத்தருவவும், பரிமளபுஷ்பத்தின் மகரந்தப்பொடிகளைத்திமிர்த்துகொண்டுதேனையுண்டுஸ்திரீகளுடைய ஸ்தனங் களில்அப்பியசிதளசந்தனக் குழம்பிலேமூழ்கித்தோய்ந்த இளந்தென்றலானது விஷத்தைப்போலஅடிக்கடிவந்து தன்சரீரத்தில் மன்மதபாணம்பட்ட புண் ணில்நுழையவும்,ஸ்திரீகளுடைய செவ்வரிபரந்தகண்கள்சூரியனைக்கண்ட தா மரையைப்போலத் தன்னைக்கண்டு மலர்ந்தபடியிருக்கவும், தேவதானவர்க ளுடைய ஸ்திரீகள் சந்திரனைக்கண்ட தாமரையைப்போலத்தன்முன் குவிந்த படியிருக்கவும் இப்படிப்பட்ட அநேகவித சம்பிரமத்துடனேயிருந்தான்.

அந்தப் பிரதாபலங்கேசுவானை ஆஞ்சநேயர் கண்டார். காணவேபத்துத் தலை காகத்தைக்கண்ட கருடனைப்போல மனங்கொதித்துத் தமது தோளினிடத்தில் இறுகக்கட்டியபாசத்தை அறுத்துவிட்டு ஆலாலவிஷத்தைப்போல இவன் மேற்பாய்ந்து கொல்லுவேனென்று ஆக்குரோஷமாய்ப் பெருமூச்செறிந்து ராத்திரி இவன் நித்திரைசெய்து கொண்டிருக்கக் கண்டபோழுது கொல்லுகிறது தர்மமல்லவென்று விட்டுவிட்டேன். இப்போது சபையிலே ரத்ன சிங்காதனத்திலிருக்கக் கண்டேன். ஆகையாவினிப் பலவித யோசனை செய்யவேண்டியதென்ன? இவன்மேல் சிக்கிரத்திலெழும்பிப்பாய்ந்து இவனுடைய பத்துத்தலைகளையும் உதைத்துச் சிதைத்துத்தள்ளிவிட்டு, ஜகன்மாதாவாகிய பிராட்டியானை மீட்டுக்கொண்டுபோகிறதே காரியமென்று தாயத்தமானர். அதிவீரதீரசூர பிரதாபசாலியாகிய ரகுநாயகனுடைய பிராணதாதமர் யிருக்கின்ற தேவியானை எடுத்துவந்து சிறைவைக்குமபடிப் பார்த்துக்கொண்டிருந்த தேவர்கள் அசுரர்கள் முதலாகிய சகலருடைய கண்களுக்கும் முன்பாக இந்தப்பாபகாரியாகிய ராவணனுடைய மாணிக்ககிரீடத்தையணிந்த தலைகளைச் சின்னபின்னமாகும்படிப் பறித்தெறியாமற் போவேனையானால் இனி மேல் நான்செய்யத்தக்க சேவகந்தான் என்னவிருக்கின்றது! இந்தப்படிமுடித்தால் உலகத்தாரென்னசொல்வார்களென்றால், பிராட்டியானைத் தேடிக்காணவந்த ஒருகுரங்கானது ராவணசுவரனுடைய பக்கத்திலிருந்து போகிப்பதற்குரிய நாயகிமாராகளெல்லாம் பிரமித்து உள்ளே ஓடியொளிக்க அவன்சிரசுகளைத்திருகித் திக்குகள்தோறும் உருட்டி ஜயம்பெற்று ஆர்ப்பரிக்கின்றது. அம்மம்மா இது கொடிது கொடிதென்று சொல்லுவார்கள். அப்படிச் சொல்லுஞ் சொல்லென்ன எளிதாகக்கிடைக்கின்றதா? இந்தமாகாசேந்திரனைப் பிரத்தியகஷமாகக்கண்டுதிலதசாற்களைச் சொலலிவிட்டு இந்தஉயிரைச்சுமந்துகொண்டு திரும்பிப்போனால் அவமரியாதைஅபகீர்த்திகிடைக்கும். அப்படிச்செய்யாமல் மேல்நினைத்தபடிச்செய்தால் நான்ஜயிக்காமற்போனாலும இறந்தாலும் கீர்த்தி உண்டாகுமென்று நிச்சயப்படுத்திக்கொண்டு. தோளினிடத்திற்கட்டிய பிரமபாசமானது இற்றுப்பொடிப்பொடியாய்ப்போம்படி பர்வதத்தின்மேல் தாவிபாய்கின்ற ஆண்சிங்கத்தைப்போல, இவன்மேலெழும்பிக் குதிக்கலாமென்று யோசித்தார். அப்படி யோசித்த ஆஞ்சநேயர் பொறுத்துநின்று உடனே வேறொருயோசனைசெய்தார். எப்படியென்றால் சர்வசங்காரகாலத்தின் இருளெல்லாந்திரண்டதற்கு ஒப்பாயிருக்கின்ற கறுத்த நிறத்தையுடைய இந்த ராவணனே மகாபலவான், ஒருவராலே கொல்லுந்தாழுடையவனுமல்லன், வெல்லுந்தர முடையவனுமல்லன், இவனுடைய புஜபலமோ ஸ்ரீராமச்சந்திரனால் வெல்லப்படுமேயல்லாமல் பிறரால் வெல்லத்தக்கதா? இவனுக்குவன்னை ஜயிக்கிறதும் அருமையாகும். அல்லவென்று யுத்தஞ்செய்ய ஏற்பட்டால் தோற்புக்கெலிப்பில்லாமலே வெகுகாலம் வீணுகக்கழிந்துபோம். அதனால் போர்செய்யத் தொடங்குவது யுக்தமல்ல, அல்லாமலும் ஊழிமுதல்வனுகிய ஸ்ரீராமச்சந்திரன் சப்தலோகத்தாரும் தன்பம் நீங்கி யின்பத்தையடைய அந்தத் திரிலோகபயங்கரனுகிய ராவணனுடைய இருபது

தோள்களோயும் பத்துத்தலைகளோயும், அஸ்திரத்தினால் அறுத்துத்தள்ளிப்புழுதி கிற்புரளும்படி செய்கின்றது என்னுடைய கடனென்று முன்பு குறித்துச் சொல்லிய வார்த்தையுமிருக்கின்றது. மேலும் நாம்சண்டைக்கு ஆரம்பித்துக் கொண்டு அதிலே வீண்பொழுதுபோக்கினால் பிராட்டியாரை யம்முடனே இவ் விடத்தில் இன்னம் ஒருமாதபரியந்தந்தான் நான் பிராணனுடனிருப்பேனென் று ஸ்ரீராமபத்திரருடைய திருவடி-சாகூதியாகச் சொலலியிருக்கின்றதனால் அவர் எதார்த்தமாக இறந்துபோவார். ஆகையால் யுகதருசெய்கிறது கன்மை யேயல்ல, நாம் தூதனுகவே பேசுகிறபடியோக்கியமென்று நினைத்து, வேகவா யகனுகிய சக்காவர்த்தி திருமகனுக்குத் தூணவராகிய ஆஞ்சநேயர் அந்த ரா வணனுக்குச் சமீபத்திற்போனார். ஸ்திரீகள் கூட்டத்தில் நடுவிலிருந்த தன் பிதாவாகிய தசக்கிரீவனுக்கு அநுமானைக்காட்டி இந்திரஜித்து சொல்லுகின் றான். ஐயா! உலகங்களைத்தனையுண்டோ அத்தனையும ஜயித்த இரணியே சுரனைச் சங்கரித்த நரசிங்கப்பெருமானைப்போலவும், சங்காரகர்த்தாவாகிய சிவனைப்போலவும், மகாசேவகனையிருக்கினறவன் இந்தக குரங்குருவத்தை யுடையவனென்றுசொல்லி இரண்டு கைகளையுங்கூப்பி நமஸ்காரஞ்செய்தான். அபபொழுது கண்களிலும வாய்களிலும நெருப்புபுபோறிகள் குப் குப் திக் திக்கென்று எழுந்து பறந்து பக்கத்திலிருக்கிறவாகள் விழுந்து அவர்கள் சரீ ரத்திலிருக்கின்ற மயிர்கள் சுறுசுறுவென்று நெய்ப்பிடபாத்து, புகையெழும் பும்படிப் பெருமூச்செறிந்து மகுதாகிய கோபத்தாலே தேவர்கள் அசுரர் கள் முதலாகிய சத்துருக்களெல்லாம் பயபீதாந்தகரணமடைந்திடும் படி அதட்டி-, எமனைப்போல உக்கிரமாகவுருக்கி நீயெள்ள நிசித்தமாக இங் கேவந்தாய்? அந்த மகாவிஷ்ணுவோ ? தேவேந்திரனே? கைலாசாதிபனே? பிரம்மதேவனே ? பூமியைத் தாங்குகின்ற சகஸ்திர பணமுகுடங்களை யுடைய ஆதிசேஷனே? காலனே? வேலனே? யமனே? திக்குப்பாலகர்களி லொருவனே? அல்லது நிஷ்டியேசுவரர்கள் யாகத்தில் உற்பத்தியாகும்படி செய்து தங்களாஜ்ஞையின்படி முடித்துவர அனுப்புவிக்கத பெருமாளோ? பிரம்மா வானவன் லங்காபட்டணமுழுமையும அழிந்துவிடென்று புதிதாகச் சிருஷ்டி. த்துவிடுத்த யந்திரதேவதையோ? காமரூபங்களை மறைத்துக்கொண்டுவந்த யேயோர்? இவ்விடத்திற்கு வந்தகாரணமென்ன? அருளோடுபயபடினவர்கள்? எங்களுக்குத் தெரியத்தக்கதாக உள்ளதைச்சொல்லென்று தேவர்களுடைய கீர்த்தியை வேரோடுவிழுங்கிய ராவணன்கேட்டான். அதற்கு ஆஞ்சநேயர். பிரதியுத்தரஞ் சொல்லுகின்றார்.

இப்பொழுது நீ குறித்துச் சொன்னவர்களெலலா மல்லன். அந்தச்சொ ற்ப பலமுள்ளவர்கள் ஏவும்படி வந்தவனுமல்லவன். புண்டரீகாக்ஷனுகிய ஒருகோதண்ட தீக்ஷாகுருவினுடைய தூதன் நான். அவராரென்று அறியக் கேட்பையே யாமாகில் முனிவர்களும், தேவர்களும், மும்மூர்த்திகளும், மற்றுமுண்டாகிய யாவரும், எவைகளும் நினைப்பதற்கும் அருமையாகிய பெரியகாரியங்களை முடிக்கின்ற நிமித்தம் வந்திருக்கின்றவர். உங்களுடைய

பலத்தையும், பூர்வத்தில் கேங்கள்செய்த தவத்தையும் சேனைகளையும், ஆயுதங்களையும், தேவர்கள்கொடுத்த வரங்களையும், எண்ணத்தையும், வாழ்வையும், பின்னுமுங்களுக்குரிய தர்க்குணம் தர்க்கிரியை முதலாகிய சகலத்தையும் ஒரோபாணத்தினுலே வேருடனேகளையும்படி உத்தேசித்திருக்கின்றவர். தேவர்களுமல்லர். மற்றவர்களுமல்லர். திக்கஜங்களுமல்லர். திக்குப்பாலர்களுமல்லர். கைலாசபர்வதமுமல்ல. திரிமூர்த்திகளுமல்லர். முனிவர்களுமல்லர். பூலோகபுரந்தரனுகிய தசரதசக்கரவர்த்திகுமாரர். ஞானமும், சாஸ்திரக்கேள்வியும், உண்மையாகிய மஹாதவமும் அழியாதவரங்களும், மற்றுமுண்டாகிய சகலமும் அவரெப்படி நினைக்கின்றுரோ அப்படியெல்லாம் சித்திக்கும். இதற்குச்சாகூடி என்னவென்றுல், வேதங்களும், தர்மதேவதையுமே கொல்லும. அவரது காரணத்தைக்கேட்பையாகில் முடிவில்லாத வேதசாகைகளும் நிச்சயித்துச் சொல்லக்கூடாத அறிவுக்கறிவாயுமிருக்கின்றவர். பூர்வத்திஸ் முதலிவாயில் அகப்பட்டுச் சகலாத்துமாக்களுக்கும் அடைக்கலஸ்தானமாகிய ஆதிமூலமேயென்றழைத்த கஜேந்திராழ்வானே ரகூஷிக்கும்படிவந்தவரே இப்பொழுது தேவர்களை ரகூஷிக்கின்ற நிமித்தமாய் வந்திருக்கின்றுர். ஆதிமத்தியாந்தரகிதமாய்ப் பூதபௌஷ்ய வர்த்தமானமாகிய திரிவிதகாலங்களையும், கணிதங்களையும், கடந்துநிற்கின்ற அந்தச் சர்வகாரணரானவர் கையிலே வில்லையேந்திக்கொண்டு சூலமும்சங்குசக்கரமும் கமண்டலமுங்கைவிட்டு வடபத்திரத்தையும, மூலதாமரையையும், வெள்ளிமலையையுந்துறந்து அயோத்தியாபுரியில் வந்தவதரித்தார். மேலும் தர்மத்தை நிலைநிறுத்தி வேதஞ் சொல்லுகின்ற நீதிகளையெல்லாம் அறிந்து உலகத்தார் நடக்கும்படிச் சன்மார்க்கத்திலே அவர்களைச்செலுத்தி, துர்ச்சனர்களைச் சங்கரித்துச் சற்சனர்களுடைய துக்கத்தைநீக்கி ரகூஷிக்கின்ற நிமித்தமாகவந்தார். தம்முடைய பொன்னடியை ஸ்துதிசெய்கின்றவர்களுடைய பிறவிப்பிணியைநீக்குகின்ற பரமௌஷதமாயிருக்கின்றவர் அவரே வேறில்லை. அப்படிப்பட்டவருக்குத் தொண்டுசெய்வேன். என்பெயர் அநுமானென்பது. நான் சீதாபிராட்டியாளைத் தேடிக்கொண்டு நான்குதிக்கிலும் போயிருக்கின்ற வானராதிபதிகளில் தென்திசைக்குவந்த வானரசேனைகளுக்குராஜனுகிய வாலிகுமாரனென்கிற அங்கதப்பெருமானுடைய தூதனுய்த் தனியே இந்தலங்காபுரிக்குவந்தேனென்று சொன்னர். இவ்வண்ணமாக அநுமான்சொன்னசொல்லை லங்காதிபதியாகிய ராவணன்கேட்டு மேகத்தின்மத்தியில் மின்னல் பிரகாசிக்கிறதுபோல நகைத்து, வாலிபுத்திரன் அனுப்பும்படிவந்த தூதனே அந்தவாலி சுகமாயிருக்கிறனு? அவனுடைய ராஜரிகம் செவ்வையாக நடந்துவருகின்றதா வென்றுகேட்டான். அதைக்குறித்து ஸ்ரீராமதூதராகிய ஆஞ்சநேயர்சிரித்து, ராக்ஷசாதீபயப்படாதே அந்தவாலியானவன் பூமியிலில்லை அன்றே சுவர்க்கம்போனன். அவன் திரும்பிவரமாட்டான். அவனுடையவாலும்போய்விட்டது. என்காயகராகிய ஸ்ரீராமருடைய ஒருபாணத்தினுலேதான் அவனிறந்தது. இப்போது எங்களுக்குச் சூரியகுமாரனுகிய சுக்கிரீபன் ராஜாவாயிருக்கின்றனென்று சொன்னர். அதுகேட்டு என்னநிமித்தமாக வாலியை ராமனென்பவன் கொன்றான்.

அந்தராமுன் எங்கேயிருக்கின்றான், அவன்பெண்சாதியை அங்கதனைவன் தேடவேண்டியகாரணமென்ன சொல்லென்று ராவணன்கேட்க, வாயுகுமார் சொல்லுகின்றார். ஸ்ரீராகுநாயகர் தம்முடைய திருத்தேவியாளைத் தேடிக்கொண்டுவந்தார். அந்தப் புருஷோத்தமனை எங்கள் சுக்கிரீபமகாராஜன் பிராணப்பிரமாகச் சிநேகித்து எனக்குச் சம்பவித்திருக்கின்ற துக்கத்தை நிவர்த்தி செய்யவேண்டுமென்று முறையிட்டுக்கொண்டான். அப்பொழுது சித்திரக்காரரால் எழுதப்படாத திவ்வியமாகிய ரூபசவுந்தரியத்தையுடைய ஸ்ரீராமச்சந்திரர் வாலியைக்கொன்று, அவனால் அபகரிக்கபட்டிருந்த சுக்கிரீபனுடைய பெண்சாதியாகிய உருமை யென்பவளையும், ராசரிகமாகிய மகாசம்பதையும் அவனுக்கு மீட்டுக்கொடுத்து, அவனுடனேகூட அவ்விடத்தில் ஆறுமாதமிருந்து வானரசைனியங்களை வரவழைத்துப்பின்பு அவர் ஜானகிபிராட்டியாளைப் போய்த் தேடவேணுமென்று ஆஜ்ஞாபித்தலைப்பெற்று, சுக்கிரீபமகாராஜன் எங்களுக்கு உத்தரவுசெய்ய, நாங்கள் அந்தலோகமாதாவைத்தேடிக்கொண்டு புறப்பட்டோம். இதுதான் நடந்த சமாசாரமென்று மாருதியானவர்சொல்ல, ராவணன் சொல்லுகின்றான்.

உங்கள் குலத்திற்கு அதிபதியும் தனக்கு ஒருவருஞ் சமானமில்லாத வனுமாகிய சிலாக்கியனையிருந்த வாலியை ஒரு பாணத்தினாலேகொன்ற மனிதர்களுக்கு அடிமைப்பட்டு, அவர்கள் ஏவிய பணிவிடையைச் செய்துகொண்டிருக்கின்றீர்களே இப்படி யிருப்பீர்களாகில் உங்களுடைய கீர்த்தி அழிந்துபோம். உலகமும் மாசடையும். தன்தமயனைக் கொல்லும்படி செய்து அவனைக்கொன்ற ராமன் விஷயத்தில அதிக அன்புகொண்டிருக்கின்ற உங்கள் ராஜனுகிய சுக்கிரீபன் அநுப்பும்படி எனக்கு என்ன சமாசாரந் தெரிவிக்கவந்தது. தூதுவந்த நீயுத்தஞ்செய்ய வேண்டியதென்ன, ஒருவேளை உன்னை நாங்கள் கொல்லுவோமென்று பயப்படுவாய் கொல்லவில்லை மனத்திலே அச்சமில்லாமற்சொல்லென்று, இவ்விதமாக ராவணன் சொன்னசொற்களை ஆலோசித்துப்பார்த்து, பொதுமையாயிருக்கின்ற சிலநீதிகளை யிவனுக்கு நாம் போதித்தால் ஏற்றிருக்குமென்று சற்குணத்தையுடைய ஆஞ்சநேயர் சொல்லுகின்றார். உன்வாழ்வை வீணுகக் கெடுத்துவிட்டாய். சிறிதாவது ராஜதர்மமும் பார்க்கவில்லை. பாபத்தையேசெய்ய ஏற்பட்டாய் ஆகையால் உனக்கு மூடிவுவந்துவிட்டது. ஆகிலும், இன்னமொரு உறுதி சொல்லுகிறேன்கேள். அதனால் நெடுங்காலம் உயிர் நிலைபெற்றுவாழ்வாய். அழியாத மகத்தாகியகற்பினால் அக்கினியைப்போலும் பரிசுத்தத்தையுடைய சீதாபிராட்டியாளைத் துன்பப்படுத்தியதால், நீங்கள் ஐம்பொறிகளையும் அடக்கிச்செய்த உங்களுடைய மூடிவில்லாத மகாதபங்களெல்லாம் மாண்டுபோகும்படி சேர்ந்தது. தீமையானது நன்மையை யழிக்கமாட்டாதென்கிற உண்மையைக் கைவிட்டாய். லோகநாயகியாகிய வைதேகியின் திருவழுனிமித்தம் உனக்குண்டாகிய காமவியாதியினால், நீ அகோரத்தபசு செய்துபெற்ற அகண்டைசுவரியத்தையும் முன்பின்பாராமல் இழந்துவிடுகின்றாய், வகைகெட்ட

காமச்செருக்கினல் தம்மைத்தாம்மறந்து மதிமயக்கங்கொண்டு, தர்மந் தவறினவர்கள் இம்மையில் தங்கள் செல்வத்தையிழந்து துர்மரணத்தையுற்றி மறுமையில் ரௌரவாதி நரகத்தையடைந்து, பின்னும் பிறழ்ந்து உழல்கின்றதேயல்லாமல், அவர்களில் ஆர்தான் நிலைபெற்று வாழ்ந்தார்கள். ஸ்திரீகள் மேற் காமங்கொண்டு இறந்தவர்கள் மிதமில்லாதவர்கள். சன்மார்க்கத்தையுடைய பெரியோர்கள் பொருளும், ஸ்திரீயின்பமுமாகிய இந்த இரண்டையும் அபேக்ஷிக்கிறதைப்பார்க்கிலும் வேறே நரகவாதனையுண்டென்றும், தானமும், சிவகாருணியமும், காமமில்லாமையுமாகிய இவற்றைப்பார்க்கிலும் வேறே மோட்சசுகம் உண்டென்றும் நினையார்கள். துரிச்சையினல் பரதாரத்தை விரும்பி எக்காலமும் யாவரும் நகைக்கக்கண்டும், நாணமில்லாமல் உழல்கின்றவன் தன்னுடற் பசையற்றுப் பழிக்கு உடன்படுவான். அப்படிப்பட்டவனுடைய ஆண்மையும் நசித்துப்போமேயல்லாமல் வித்தியாகமாட்டாது. சமுத்திரஞ்சூழ்ந்த உலகத்தையாண்டு அரசுசெய்தவர்களுக்குள் உன்னைவிட நீதியுடையவர்களும் சதுர்வேதபண்டிதர்களும் ஆரிருக்கின்றார்கள். ஆ! ஆ! கன்றுயிருந்தது. அப்படிப்பட்ட நீ இபபொழுது தர்மப்பிரமாணத்தைக் கடக்கின்றையோ? ஒருவன் தன்னிடத்தில விருபபமில்லாத ஒருத்தியை அபேக்ஷித்துவேண்டி, கூடாதென்று அவளால் தடுக்கப்பட்டால் உடனே பிராணத்தியாகம் பண்ணிக்கொள்ளவேண்டும். அப்படிச்செய்யாமல் வாழ்கின்ற வாழ்வைப்பார்க்கிலும் சிறந்த முகத்தின்நடுவே அழகாக நீண்டியோந்த மூக்கறுப்புண்பதுவே அழகென்று சொல்லப்படும். உலகத்தைப்பொடிசெய்கின்ற வலுவைப்பெற்றவையாய் இப்பொழுதிருக்கின்ற இந்த இருபது புஜங்களும், பத்துத்தலைகளுமேயல்லாமல் இன்னமும அநேக புஜங்களும், அநேக சிரசுகளும் உனக் குண்டாயிருந்தாலும் அவையெல்லாம் ஊனைப்பற்றி யெரிக்கின்ற கடுகெருப்பின்மேலிட்ட பலபல வஸ்திரங்களும், அந்தகெருப்பை மீறவொட்டாமல் அடக்கி ஊனா ரட்சிக்கமாட்டா. அதுபோலவே உனக்குவருங் கேட்டைநீக்கிப் பிரயோசனபபடமாட்டா. மேலும் முப்புரங்களும் அக்கினித்தத்தமாம்படி கோபித்த உமாபதியானவர் கொடுத்தவர முதலானவையும் பயன்படாமல் அழித்துபோமென்று எண்ணவேண்டுமேயல்லாமல், வேதநெறிதவறுத ஸ்ரீராமச்சந்திரனுடைய பாணங்கள் உன்னைக்கொல்லாமல் விடுமென்று நினைக்கக்கூடுமோ? கூடாதே ஆகையால் நீ யழிவில்லாத மானமழியக் குறைவில்லாத நல்ல சம்பத்தையும் எளிதிலே கெடுத்துக்கொண்டு ராமபாணத்தினல் வருந்துவையா? உலகத்திலே பிறந்தவர்களும், இனிப்பிறவாத மோட்சசாம்பிராச்சியத்தை யடைந்தவர்களும், தேவர்களும், அந்தத் தேவர்களுக்குந் தேவர்களாகிய பிரஹ்மருத்திராதியர்களும், மற்றுமுள்ளயாவரும் சத்தியமாக ஸ்ரீராமபிரானைத் தியானஞ்செய்யாமல் மறந்திருக்கிறதேயில்லை. ஆகையால் நீ வருந்தித் தவஞ்செய்து அருமையாகப்பெற்ற செல்வம் நிலைபெறவும், அபரிமிதமாகிய சுற்றத்தார் சுகப்படவும், நீயும் அந்தக் கோதண்டபாணியின் அம்புக்கு இலக்காகாமல் உயிரோடு வாழ்ந்திருக்கவும் நினைத்தால், அந்த ஜகன்மாதாவாகிய ராமபத்தினியை விட்டுவிடும்படி எங்கள் சூரியகுமாரனுகிய

கக்கிரீப மஹாராஜன் உனக்குச் சொல்லச்சொன்னானென்று ஆஞ்சநேயர் சொன்னார். சொன்னவுடனே ஜயமென்ப தொன்றையேயல்லாமல் வேறொன்றையும் நினையாத ராவணேசுவரனுனவன், குன்றுகளில் சஞ்சரிக்கின்ற ஒரு புன்குரங்கல்லவா இந்த நீதிகளை எனக்குச்சொல்லியது. கலைது! கல்லது! இனிக்குரங்கின்புத்தியைக்கேட்டுத்தான் நான் பிழைக்கவேண்டுமென்றுசொல்லிக் கனக்கநகைத்து அடா! அந்தச் சுக்கிரீபனுகிய குரங்குசொன்ன மநுநீதிக்கிரமமும், ராமலட்சுமணாகளாகிய சொற்ப மநுஷருடைய வீரபிரதாபமும் அப்படியிருக்கட்டும், எப்படிப்பட்டவாகளாலும் கடக்கக்கூடாத காவலையுடைய இந்த லங்காபுரத்தில் தூதாகவந்த நீ ராட்சசர்களைக்கொன்றையே அதென்ன சொல்லடாவென்று அதிக கோபத்துடனேகேட்க, அநுமானுனவர் இவன் மரியாதைதவறிப் பேசுகின்றதனால காம மாத்திரம மரியாதையுடனேபேசவேண்டுவதென்னென்று தசக்கிரீபனைபபாாத்து அடா! கேளடா! உன்னை யெனக்குநேரே காட்டுகின்றவா ஒருவருமிலலாமையால் பூங்காவை அழித்தேன். அபபடியழிக்கின்ற என்கருததை யறியாதவர்களாய் சூழக்கர்களாகிய ராட்சசாகள் என்னைக்கொல்லவநதார்கள். அதுகண்டு என்னைக்கொல்லவந்தவர்களை நான்கொன்றேன். பின்பு வேண்டுமென்றே இநதிரஜித்து பிரஹ்மபாசத்திற் கட்டுண்டவனுய் அடங்கி உன்னைக்கணடு பேசவநதேனடாவென்று சொன்னவுடனே. இருபதுகண்களிலுமிருந்து அனற்பொறிபறக்கப் பத்துவாய்களிலுமுள்ள பற்களைக்கடித்து அகோரமாகிய கோபத்தையுடையவனுய்க் கொலைசெய்வோரைப்பாாத்து இநதத் துஷ்டக்குரங்கைச் சின்னபின்னமாம்படிக் கொல்லுங்கோளென்று சொனனனை. தகூணமே அவர்கள் கூட்டமாகத் திரண்டுவந்தாகள். அப்போது நீதிபாராகியவிபீஷணுழ்வானுனவர் அக்கொலையாளரைப்பாாத்து நில்லுங்கோள் நிலலுங்கோளென்று மறுத்தவராய்ச் சீக்கிரத்தில் எழுந்துனறு இரண்டுகைகளையுங் குவித்துத் தமக்குத் தமையனுகிய ராவணேசுவரனுக்குத் தணடமிட்டு அவனைப்பிராாத்தித்து நீர் கோபிப்பது முறைமையல்லவென்று அநேகமாகிய சநதிய வசனங்களைச் சொல்லத்தொடங்கினர்.

திரிலோகங்களையும் சிருஷ்டிதத பிரமதேவனிடத்திலும், சிவனிடத்திலும், மிகுந்த பக்திசெய்கின்ற தபோமாாக்கத்தையறிநது, தேவேந்திரனே ஏவல்செய்யும்படி ராஜரிகம்செய்கின்ற பிரதாபலங்கேசுவரனே! தூதாகவந்தேனென்று சொல்லக்கேட்டுங் கொல்லுகிறதா! வேதங்களிற் பூரணபாண்டித்தியமுடையவனே! பூலோகத்திலும், தேவலோகத்திலும், சத்தியலோகத்திலும், பாதாளலோகத்திலும் இருக்கின்ற அரசர்களுக்குள் ஸ்திரீகளைக்கொலைசெய்தவர்களிருந்தாலு மிருக்கலாம். தூதர்களைக்கொன்றவர்கள் ஆராகிலுமுண்டா? உண்மையாக உலகங்களைச் சம்ரக்ஷணைசெய்கின்ற அரசனுகிய நீரும்முடைய சத்துருக்களால் அனுப்பப்பட்ட தூதனைக்கொல்லுதல் மகத்தாகிய குற்றமாகும். மேலும் பிரஹ்மா, விஷ்ணு, ருதிரன் முதலாக நம்முடனே எதிர்த்துச் சண்டைசெய்யச்சக்தியில்லாமற் பயந்திருக்கின்ற தேவர்களுக்கெல்லாம் சிரிப்

புக்கு இடமாகும். நம்மூடைய தங்கையாகிய சூர்ப்பணகை மூக்கையுங்காலை யும் அறுத்துக்கொல்லாமல், இவ்விடத்தில் கடந்த சங்கதிகளையெல்லாம் போய்ச்சொல்லென்று உண்மையை யறியத்தக்க வீரர்களாகிய ராமலட்சு மணர்கள் அனுப்பினர்களே அது ஏதுக்காக? தங்கள் புஜபராக்கிரமத்தை நமக்கு அறிவிக்கும்பொருட்டல்லவோ? இவனை உயிருடனேவிடாமல் கொல் லுவையேயானால் இவன் வந்து நம்மிடத்திற்கண்ட நமது பிரதாபத்தை மீ அவர்களுக்குத் தெரியப்படுத்துகிறதற்கு, பயந்தவனுய் விடுகின்றுயென்று இப்படி இளக்கமாகவும், நயமாகவுஞ்சொல்லக்கேட்டு, ராவணேசுவரன் இது மெய்தான்தம்பி! நீ நல்ல சொல்சொன்னுய், நமக்குத் துஷ்கிர்த்தியத்தைச் செய்தாலும் இவனைக் கொல்லுகிறது குற்றந்தான் இருக்கட்டும். சிக்கிரமா கப்போய் இச்செய்தியைச்சொல்லி அந்தமனிதர்களை யழைத்துக்கொண்டு வாயென்று இந்தக்குரங்கினுடைய வாலானது முதலற்றுப்போம்படி முழுதுஞ் சீலைகளைச்சுற்றி நெய்யிலேதோய்த்து நெருப்பிலே கொளுத்திப் பட்டணத் தைச்சுற்றி இழுத்துக்கொண்டுபோய் இந்த எல்லையிலிருக்கவொட்டாமல் அப் பாலே தூரத்திலே தூரத்திவிடுங்கோளென்று சொன்னன்: அந்தவார்த்தை சொல்லக் கேட்டமாத்திரத்தில் ராக்ஷசர்கள் அநேகர் அப்படியேசெய்கிறே மென்று இசைந்துகொண்டு புறப்பட்டார்கள். அந்தருணத்தில் இந்திரஜித் தானவன் இதைக்கட்டிய பிரமபாசத்துடனேகொளுத்துகிறது தோஷம் யுக்த மல்ல, இனிக் கயிறுகளைக்கொண்டுவந்து கட்டுங்கோளென்றுசொல்லி அனுமா னுடைய தோள்களைச் சுற்றி இறுக்கிக்கொண்டிருந்த பிரஹ்மாவின் வரப்பிர சாதத்தால் பெற்ற பாசத்தின் கட்டவிழ்த்துவிட்டான். உடனே ராக்ஷச வீரர்கள் காலுதிக்கிலும் ஓடி காட்டிலுள்ளகயிறுகள், நகரத்திலுள்ள கயிறுகள், வீட்டிலுள்ள உஞ்சற்கயிறுகள், தேர்வடக்கயிறுகள், குதிரைகட்டுங் கயிறுகள், யானைக்கழுத்திலிறுக்கிய கயிறுகள், யானைச்சங்கிலிகள், அரைக்கயிறுகள், தா ம்புக்கயிறுகள், கப்பற்கயிறுகள், மேகநாதன் முதலானவர்கள் எமன்முதலா கிய பல்தேவர்களையுஞ்செயித்து அவர்களிடத்திலிருந்து பறித்துவந்த எமபாச முதலாகிய கயிறுகள், அசுரர்களுடனே யுத்தஞ்செய்து அவர்களிடத்தில்பறி த்த கயிறுகள், தங்கள் தங்கள் பெண்சாதிமார்களுடைய கழுத்திற்கட்டிய தா லிக்கயிறுகள் மாத்திரந்தவிர மற்றகயிறுகள் ஏதேதுண்டோ? அவற்றையெல் லாந் தேடிக்கொண்டுவந்து மலைபோலக்குவித்து ஆஞ்சநேயனை இறுக்கிக்கட் டினர்கள். அதுகண்டு காம தெய்விகமாகிய பாசத்தை அலகுபண்ணி அறுத்துச் சிதைத்துத் தர்மந்தப்பலாகாதென்று ஆஜ்ஞைக்கல்லவோ அந்தி யிருந்தோம். அவ்வண்ணமே தெரிதவறுதிருக்கும்படி சத்துருக்களை அதை விடுவித்து நம்மூடையபக்ஷத்தில் மிகவும் உதவிசெய்தார்கள். இனிகாம் ஜயித் தோம்இவர்கள்நம்மூடைய வாலைச்சுடும்படிநினைத்தனினவு ஏதாயிற்றென்றால் நம்மைநோக்கி இத்தலங்கையை நீசுட்டொரித்துவிடென்று துணிவுகொண்டு ஏவினதையாருமென்று பொதுவாக நிச்சயம்பண்ணிக்கொண்டு, பலதிசையை யும்பார்த்துத் தோஷரஹிதராகிய அவ்வாஞ்சநேயர் வெகுவாய்ச்சந்தோஷித்துச் சொற்பமாகிய கயிறுகளைக்கொண்டுகட்டி யிழுப்பதைச் சகிக்கத்தக்கசக்தியில்

லாதவனைபோலச் சரீரம்நடுங்கியும், கொடியவர்களாகிய ராக்ஷசர்கள்பக்கத்தி
லிருந்து உபத்திரவஞ்செயய, அதை நீக்கிக்கொள்ளத்தக்க உபாயதந்திரத்
தை யறிந்திருந்தும அப்படிச் செய்யவேண்டுமென்னும நினைவில்லாமலும்
என்னையராகிய ஆஞ்சநேயர் மெய்ஞ்ஞானத்தை யறிந்தும் அறியாதவன்போ
லிருந்து பிரபஞ்சமாயையாகிய பொய்யை மெய்போலக்கொண்டு நடிக்கின்ற
யோகிபோல அவர்கள்செய்யும் மாயைகளை யெலலாம் வேடிக்கையாகப்
பார்த்துக்கொண்டு அவர்களுடனே கூடப்போனர். ராஜாவின் அரண்மனை
ஆசாரவாசலுக்கடந்து சிக்கிரத்தில் வெளியிலே கொண்டுவந்து ஒருபுறத்தில்
நிறுத்திச் சாந்தமில்லாத மூர்க்கர்களாகிய அந்த ராக்ஷசவீரர்கள் நாற்புறமும்
நெருங்கிநின்று, நீண்டு உயர்ந்த அவருடைய வாலில் ராஜாராஜாக்களுடைய கிரீ
டத்தின்மேற் கட்டுகின்ற பரிவட்டச்சீலைகளையும் அவர்களேறுகின்ற ரதங்க
ளின்மேலும் மாடமாளிகை கூடகோபுரங்களின்மேலும் பறக்கின்ற கொடிச்
சீலைகளையும், சபாமண்டபமுதலானவற்றின் முகப்புகளில தொங்கவிட்டிருக்
கின்ற திரைச்சீலைகளையும், தேர்ச்சீலைகளையும், மற்றும் பலவகைப்பட்ட பட்
டுச்சீலைகளையும், நெருங்கச்சுற்றி நெய்யும் எண்ணெயும் ஜாடிஜாடியாகக் கொ
ண்டுவந்து கொப்பறைகளில் நிறையவார்த்து முழுதுந்தோய்த்து நுனியில்
நெருப்பிட்டுக்கொளுத்தி அண்டகடாகமுங் கலங்குமபடிக் கைகொட்டிநகைத்
தார்கள். பின்பு தோள்களிலும், தொடைகளிலும், கால்களிலும், கைகளி
லும், கழுத்திலும், இடுப்பிலும் கட்டிய மிதமில்லாத உரம்பெற்ற கயிறுகளைப்
பக்கந்தோறும் இருகூறாய், நூறுயிரம்போகள் இறுகப்பிடித்துக்கொண்டு
போகத்தொடங்கினார்கள். ஆயுதபாணிகளாக இரண்டு பக்கத்திலும் காவல்
வீரர்கள் கணக்கற்றபோகள் சமுத்திரம் புரண்டுவருவதுபோலத் திரண்டுவரத்
தலைப்பட்டார்கள். மேலும அவர்களைச்சூழ்ந்து போகின்றவர்கள் நான்கு
திக்கிலும் இடமில்லாதபடிக்கு நெருங்கி நிறைந்திருப்பதனால் புறத்திலிருந்து
பார்க்கின்றவர்களுக்கு எனனதெரியவரும? மகாதிங்காரமாகிய சுகரத்தையும்
பரிமளிக்கின்ற சோலையையும அழித்து, எதிர்த்த அக்ஷகுமாரன் முதலாகிய
ராக்ஷசவீரர்களையும, சின்னபின்னப்படக்கொன்று, சீதையுடனும் கணடுபேசி
ராமலட்சுமணர்களாகிய அந்த மனிதர்களுடைய வீலலாண்மையை நம்மு
டைய ராஜாவாகிய ராவணனிடத்தில சொலலுமபடிவந்த குரங்குக்குச்
சம்பவித்ததைபபார்க்க, வாருங்கோள் வாருங்கோளென்று தெருக்கள்தோறும்
வாசல்கள்தோறும சகலமானவர்களும்அறியக்கூவி யழைத்தார்கள். பின்னும்
இந்தச்செய்தியை அணடத்திற்கு அப்புறத்தி லுள்ளவர்களுக்கும், அறிவிக்
கின்றவர்களைப்போலக் கோவென்று இரைந்து அநுமானை முன்னும் பின்னு
மாக இழுத்து, வீதிகளிலே பேரிகைகளை வரிசையாகவைத்து அடித்து, இடி
இடித்தாற்போலப் பெருங்கூச்சலிட்டு எந்தபபக்கத்திலும் ஓடியோடி ஜானகி
யாரிடத்திலும்போய்ச் சமாசாரஞ் சொன்னார்கள். அதுகேட்ட பிராட்டி
யாரும் உயிர்பதைத்து உடல்வெயர்த்து வாயுலர்ந்து விம்மிவிம்மி மண்மேல்
விழுந்து அழுது பெருமூச்செறிந்து சொல்லுகின்றார். ஐயா! அக்கினிதேவ
னே! தாய்க்குச் சமானமாகிய காருண்ணியத்தையுடைய ஆஞ்சநேயன் உன்

நிகேகன் புத்திரனுகவேண்டுமே! அப்படிப்பட்டவனைப் பெருமையில்லாத நாய்க்குச்சமானமாகிய ராக்ஷசர்கள் இம்சிக்கும்படிக் கண்டால் உதவிசெய்யாமலிருக்கலாமோ? நான் கற்பிலே பரிசுத்தை என்பது நீ உலகத்திற்கெல்லாம் உண்மையாகிய சாக்ஷியாயிருக்கின்றவனுகையால் உனக்கே தெரியவரும். உன்னைக்குறித்து வந்தனஞ்செய்கின்றேன். அவனைச்சுடவேண்டாம் சுடவேண்டாமென்று இவ்விதமாக அருளிச்செய்தமாத்திரத்தில் அக்கினிதேவன் திடுக்கிட்டு மனங்கூசிப் பிராட்டியார் திருவுளக்கருத்தின்படியே அநுமானுக்குக் கொஞ்சமாகிலும் சுடுகையென்ப தில்லாமல், குளிர்ச்சியாயிருக்கும்படிக்குத் தன்சுடுமையை அடக்கிக்கொண்டான். அப்பொழுது புறத்திலுள்ள மயிர்கள் சிலிர்க்கும்படிக்கு வாயுகுமாரனுடைய வால் அஸ்திவரைக்குங் குளிர்ந்தது. ஜானகியாருடைய நேமனத்தால அக்கினி உஷ்ணிக்காமல் குளிர்ந்த அதிசயத்தைக்குறித்து மற்றும் நாம் விஸ்தரித்துச்சொலவதென்ன? சமுத்திரத்திலுள்ள வடவாமுகாக்கினியுங் குளிர்ந்தது. பூமியில் கல் மரமுதலானவற்றிலுள்ள அக்கினியும் குளிர்ந்தது. சுவர்க்கத்திலுள்ள அக்கினியுங் குளிர்ந்தது. ரிஷிகளாற் பாதுகாக்கப்பட்ட காருகபத்தியம், ஆகவனீயம், தக்ஷிணக்கினி என்கின்ற மூன்றுவகையாகிய வேதாக்கினியுங் குளிர்ந்தன. மூப்புரத்தையெரித்த பார்வதிபாகனுடைய நெற்றிக்கண்ணின் அக்கினியுங் குளிர்ந்தது. உலகத்தையளந்த வாமனனுடைய வலதுகையிலுள்ள அக்கினியும் குளிர்ந்தது. எக்கியகுண்டங்களெல்லாங் குளிர்ந்தன. மேகத்திலுண்டாகின்ற இடிகளுங்குளிர்ந்தன. இருளேயோட்டுகின்ற பிரகாசத்தையுடைய சூரியமண்டலமுங் குளிர்ந்தது. பாதாளத்திலுள்ள அக்கினிப்பிரபையாகிய காகவட்டமுங் குளிர்ந்தது. அத்தருணத்தில் அன்புநீங்காத சிந்தையையுடைய ஆஞ்சநேயரும் கவளமலைபோலப் பிரகாசிக்கின்ற அதியுன்னதமாகிய தமது திருமேனியின் நாற்புறத்திலும் இடைவிடாதுசூழ்ந்து அக்கினியானது சுவாலாமாலையாய்க் கொழுந்துவிட்டெரிந்தாலும் தமமைச் சுடாமலும், தமக்கு ஒன்றும் உபத்திரவஞ் செய்யாமலுமிருந்த ஆச்சரியத்தை நினைத்துப் பார்த்து இது கிருபாநிதியாகிய பிராட்டியாருடைய கற்பின் மகிமையாலும், அவர்திருவருளாலும், அவர்செய்த மங்களாசாசனத்தினாலுமே நம்மைவருத்தாமலிருக்கின்றதென்று தமது புத்திநேகாசரத்தால் தெளிந்து பரமானந்தசாகரத்தில் மூழ்கினர். அன்றையராத்திரி மைதிலியாகிய சீதையைத் தேடித்திரிந்தபொழுது அந்தப்பட்டணமுழுதையும் தமது அறிவினுற்குறித் தறியாவிட்டாலும் ஐம்பொறிகளும் முன்புசெல்ல அவற்றைத்தொடர்ந்து மறைந்துசென்று விஷயத்தை அறிகின்ற அறிவைப்போல அநுமானுனவர் கல்விப்பயிற்சி இல்லாத ராக்ஷசர்கள் தமக்குமுன்னேகடந்து காட்டும்படி இந்தக்குரங்கு நாற்புறத்திலுஞ் ஜாக்ரதையாகப் பார்த்துக்கொண்டு போகின்றதென்று தம்முடைய அபிப்பிராயம் அவர்களுக்குத் தோன்றுமலிருக்க உபாயமாக ஒன்றுவது தவறுமல் அவ்விடத்திலுள்ள சகல விசித்திரமும் தெரியும்படிப் பார்த்துக்கொண்டு போனர். இவ்வண்ணமாக லங்கையின் ஆபால கோபாலமுமுண்டுகொண்டேபோனர்.

அவ்வாறுபோன ஆஞ்சநேயர் இவர்களைவிட்டு கழுவுதற்குச் சமயமிது வேயென்று நிச்சயித்து, தம்மை யிரண்டுபக்கத்திலும் இரண்டுலகங்களால் உறுதியாகப் பிடித்துக்கொண்டிருந்த நூறுயிரம்போர்களும் கயிறுகளும் கூடவுழும்ப மாருதியானவர் ஆகாசமார்க்கத்தில் எழும்பினர். அந்தக்கயிறு களைவிடாமல் பிடித்துக்கொண் டிருந்தவர்களுடைய கைகள் எழுத்தடிக களைப்போலத் தொங்கும்படி அவரெழும்பியபோது, தோள்கள் பிய்ந்துபோய் ராக்ஷசர்கள் கீழேவிழுந்து உயிர்மாய்ந்தார்கள். தமது திருமேனியிற்சுற்றிய கயிறுகளுடனே பூமியிலிருந்து மேலேகிளம்பிய வாயுகுமாரரானவர் சர்ப்பக் கூட்டங்களை வாரிக்கொண்டு வானத்தில் எழும்பிய கருடனைப்போல அந்த ரத்திற் பிரகாசித்தார். கமலன்முதலாகிய சத்துருக்கள்மூவரும் அரசாண்டு கொண்டிருந்த மூன்றுபுரங்களையும் தகித்த காரணத்தால், திரிபுராந்தகனென்று பெயர்பெற்ற சங்கரனும், அவனுக்கு உபபலமாயிருந்த பலபொருள் களும் காணிப்போகப் பாதகர்களாகிய ராவணாதி ராக்ஷசர்களுக்கு வாசஸ்தானமாயிருக்கின்ற இந்த லங்கையானது பற்றியெரியும்படி ஸ்ரீராமபிரானை ஸ்தோத்திரஞ்செய்து இதைக் கொளுத்திவிடுவோமென்று நினைத்து அந்தச் சுவர்ணமயமான நகரத்தின்மேல் தமது வாலைநீட்டினர். சுற்றிலும் சமுத்திர பரியந்தம் லங்காபுரியை எந்தப்புறங்களிலும் ஒருக்ஷணப்பொழுதில்பற்றியெரிக்கத் தலைப்பட்டதனால் அந்தவாலானது, பவளமலையைப்போலச் சிவந்த மேனியையுடைய கைலாசபதியானவர மகமேருவை வில்லாகவளைத்துத் திரிபுரதகனஞ்செய்யும்படிப் பிரயோகித்த பாணத்தைப்போலவிளங்கியது. தாவள்யமாகிய வெள்ளியைக்கொண்டும், சுமையாகிய பொன்னைக்கொண்டும் பிரகாசமாகிய பலவித ரத்னங்களைக்கொண்டும் தெய்வத்தச்சனாகிய விசுவகர்மா அநேகநாள், கைபழகி அருமையாகச்செய்த உன்னதமாகிய வீடுகள்தோறும் மலைகளின்மேல் ஊழிகாலத்து இடியானது அக்கினிமயமாயிடித்துவிழுவதைப் போல, கிரமக்கிரமமாகத் திடீர்திடீரென்று தாவித்தாவிக் குதித்துத் தகித்தார். நீலநிறத்தையுடைய நிசாசரர்கள் உலகத்தில் பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சகலமானவர்களும், அக்கினிஷ்டோமம், அத்தியக்கினிஷ்டோமம், உக்தியம், சோடசீ, வாசபேயம், அதிராத்திரம், அப்தோரியாமம், அக்கினியாதேயம், அக்கினிகோத்திரம், தரிசபூரணமாசம், சாதுர்மாசியம், நிரூடபசுபந்தம், ஆக்கிரயணம், சௌத்திராமணி, அஷ்டகை, பாவணம், சிரார்த்தம், சிராவணி, ஆக்கிரசாயணி, சைத்தி, ஆசுவயுசி யென்கின்றயாகங்கள், எக்கியங்கள், கிருதுக்கள், ஓமங்கள் செய்யவொட்டாமல் தடுத்தபடியினலே எங்கும் ஆகுதி கிடையாமல் நெடுங்காலமாய்ப் பசியுடனேயிருந்த அக்கினிதேவனனவன், அநுமானுடையவாலை ஆதரவாகப்பற்றிக்கொண்டு விஷத்தையுண்ட பிரளயகால ருத்திரன் அக்காலத்திலே ஊட்டத்தான் சகலபுவனங்களையும் அழியும்படி உண்பதுபோலச் சீக்கிரத்தில் தகித்து உண்டான்,

பிணிவீட்டுப்படலம்
முற்றிற்று.

ஊர்சூடுபடலம்.

சுமேமையாகிய அக்கினியானது காவலையுடைய மாளிகைகள்தோறும் கட்டியகொடிகளைப் பற்றிப்போய் மேற்கட்டிகளைக்கொளுத்தி, மீண்டதூண்களைத் தாவியெரித்து, உயர்ந்த சுவர்களைச் சுற்றுமுற்றுஞ்சுட்டு நீறுக்கியது. அநுமான் அந்தக் கோட்டைவாசலிலிட்ட தீயானது அதற்குள்ளிருந்த வீடுகளெல்லாம் காசமாம்படி அவ்விதமாகப்பற்றியெரிக்க, எங்கேபார்த்தாலும் எரிகிறபடியிலே, அப்பட்டணத்திலுள்ளவாகள் சகலரும் பயப்பிராந்திகொண்டு ஊசலாடுகிறவர்கள்போல அங்குமிங்கும், ஓடியோடியலைந்து அழுகுரலுடனே ஒருவனையொருவர் கூப்பிடத்தலைப்பட்டார்கள். ரத்நத்தாற்கட்டிய கிருகங்களெல்லாம் நெருப்பைப்போல ஜோதிமயமாகிய கிரணங்களை வீசுதலால் அவை தீப்பட்டு எரிகின்றனவென்றும் இலலையென்றும் அறியாமல், வளைய லைக் கையிலணிந்த ஸ்திரீகள் அறிவுதடுமாறித் திரிகதாகள். ஆகாசவெளி முழுதும் மறையும்படிப் புகையெழும்பி எங்கும்பரவிச் சூழ்ந்துகொண்டதனல் காட்டில்சஞ்சரிக்கின்ற மயில்போலுஞ் சாயலையுடைய ஸ்திரீகள், தாங்கள் போனதிசைதெரியாமலும் தங்கள் நாயகன்மார்களைக் காணுமலும் திகைத்துப் புலம்பினர்கள். ராக்ஷசவீராகளுடைய சிக்கையின்மேலும் அவர்கள் ஸ்திரீகளுடைய கூந்தலின்மேலும் கொழுமையாகிய நெருப்புவிழுந்து பற்றி எரிகின்றதை ஒருவர்க்கொருவர்காட்டக் கண்ணிறைகண்டும் செம்பட்டமயிராகையால் தீப்பட்டதும் படாததும் தெரியாமல் மயங்கினர்கள். வாமனரூபமாய்ப்போய்ப் பலிச்சக்வர்த்தியானவன் உலகங்களைத் தானமாகக்கொடுக்க, ஸ்ரீமகாவிஷ்ணுவானவர் தமது திருவடியினல் அளந்துகொள்ளும்படி அண்டமுகடுவனைக்கும் வளர்ந்தெழுந்து உயர்ந்த திரிவிகிரம சொரூபம்போல, புகையானது எழுந்து மேலேபோய், எங்குங் கவிந்து நெருப்பானது மேல்விழுந்து சரீரமுழுமையும் தகித்தலினல் வெந்துகறுத்த தோலுரிந்தயானைகளெல்லாம், கீழ்த்திசையிலிருக்கின்ற இந்திரனுடைய ஐராவதமென்னும் வெள்ளையானைக்கு ஒப்பாயிருந்தன. பனிசூழ்ந்ததுபோலப் புகையுந்தியும் வீடுகளெங்குஞ் சுற்றிக்கொண்டதினல் எருமைகள் மேகங்களைப்போலப் போய்த் தடாகங்களில்விழ, அவற்றிலிருக்கின்ற அன்னங்கள் விலகிப்போவதுபோல ஸ்திரீகள் ஓதுங்கிச் சென்றாகள். பெரியபெரிய அக்கினிப்பொறிகள்எழும்பிப் போய் இடிக்கூட்டங்களைப்போல விழுகிறதினல் சமுத்திரம்வெதும்பி அதிலுள்ள திமிங்கலமுதலாகிய மீன்கூட்டங்கள், வெந்துபுலர்ந்து துடித்து உயிர் சோர்ந்தன. தணலானது உள்ளேபுகுந்து பற்றியெரிப்பதனல் சுவர்ணமதில்கள் உருகியோடிக் கடலுக்குள்ளேபாய்ந்து இறுகித் தண்டுதண்டாய்த் திரண்டனவானல் பர்வதங்களைபபோல வரிசையாயுயர்ந்திருக்கின்றஉப்பரிகைகளும் பூஞ்சோலைகளும் எவ்விதத்தில்வேகாமலிருக்கும். அந்தலங்கை ஆதியந்தமும் பொன்னுயிருப்பத்னல்தனையும்வெந்து உருகியது. கல்லைப்பார்க்கிலும் மிகவும் கடினமாய்த்தடித்த புகையானதுபோய்த் தேவலோகத்தைச் சுற்றிக்கொள்ளுதலால் அந்தலோகமும் இருள்சூழப்பட்டது. ரதங்களெல்லாம் சக்காமுத

லாகிய பலபலவுறுப்புகளுடனே உருகிக்குழைந்து ஏகவுருவாகின. கல்லவர்களாயிருக்கின்றார்வகள் பொல்லாதவர்களிருக்குமிடத்திற்குப்போனால் அந்தப் பொல்லாதவர்கள் சுபாவமாகச்செய்யும் பொல்லாங்கையும சகவாசதோஷத்தினால் இந்த நல்லவர்களுஞ் செய்வார்களல்லவா? அதுபோலப் புனிதமாகிய அக்கினியும் சாம்பரிமாயையையுடைய ராக்ஷசர்கள் உண்ணுப்படி ஜாடிகளில் நிறைத்திருக்கின்ற கள்ளையுண்ணத்தலைப்பட்டது. லங்கையிற்பற்றியெரிகின்ற நெருப்பானது தாவிப்பாயச் சமுத்திரமவெது கொல்லன் உலைக்களத்திலிருந்து எழும்புவதுபோல, அதிலிருந்து அனற்கொழுந்து குபீர்குபீரென்று எழும்புதலால் கடல்நீரை உண்கின்ற மேகங்களுங் கொதித்தன. சில ராக்ஷசர்களுடைய சரீரத்தை நெருப்புச்சுடுதலினால் வருத்தமுற்று அந்த உஷ்ணஞ் சகிக்கமாட்டாமல் தண்ணீரைத் தேடிக்கொண்டு ஓடியோடி, காட்டிலேயோடுகின்ற ஆற்றுநீரென்று நினைத்துக்கானற்சலத்திலேபோய்விழுந்தார்கள். தேனைச்சொரிகின்ற சோலைகளெல்லாம தீப்பட்டெரிய அங்குள்ளபுஷ்பங்களில் மொய்த்துக்கொண்டிருந்த வண்டுகள் எழும்பிப்பறந்து நாலுபக்கங்களிலும தாவிப்படர்கின்ற அந்த அக்கினிஜ்வாலையைக்கண்டு, சிவந்த தாமரைப்புஷ்பக்காடென்று எண்ணி அதிலேபோய்விழுந்து கரிந்து மடிந்தன. வில்லேவென்ற புருவத்தையுடைய கற்புள்ள ஸ்திரீகள் குரங்குகொல்லும்படி நமமுடைய நாயகன்மார்களிறந்துபோனார்கள். நாம வாசஞ்செய்கின்ற வீட்டுக்குள்ளுமம அக்கினி பிரவேசித்தது ஆதலால் நமக்கென்ன வாழ்விருக்கின்றது இனி வீட்டுவாசற்படிகடந்து அபபுறமபோவதுமதர்மமல்லவென்று தாம் தாமிருந்தவிடங்களிலேதானே யிருந்து வெந்துதீய்ந்துமாய்ந்துபோனார்கள். புஷ்பங்கள் பொரிந்து இலைகள்தீய்ந்து, கிளைகள்சுருணடு, வேர்கள்கரிந்து, மரங்கள், செடிகள், கொடிகளெல்லாம சாம்பலாகச் சோலைகளெரிந்தன. மேகங்கள் முழுகுமபடி, ஓங்கியெழுந்த அக்கினிக்கொழுந்துபோய்ப் பொன்னுலகமுழுதுஞ் சுட்டெரிக்க, அது வெந்தருகி அங்கிருந்து ஆகாசமெலலாம் பொன்வேய்ந்தது போலச் சுவர்ணதாரைகள் மாறுமல் ஒழுகத் தலைப்பட்டன. லங்கையிலிருந்து நெருப்புப்பொங்கி மேலே எழுந்துபோய் ஜ்வாலையானது சந்திரனுடைய சரீரத்தில்தாக்க அது உருகிச்சிதறிய அமிதபிந்துக்கள், மேலேதளித்தலால் மாண்டுகிடந்த ராக்ஷசர்களிலுஞ் சிலா உயிர்பெற்றெழுந்தார்கள். சூரியனுக்கு நேராயெழுந்துபாய்ந்த அக்கினிஜ்வாலையினுலே அதன்பக்கத்திற் சுற்றியிருந்த மேகங்கள்முழுமையும் எரிந்து கருகிப்போக, நடுவிலிருந்த அந்தச் சூரியன் அக்நெருப்பிலுருகித் திரண்ட பொன்னுருண்டையைப் போலிருந்தது. கால்களிற்பூட்டியதளைக்கயிறுகளைக் கொளுத்திப் பின்புறத்திலுள்ள வால்களைக்கொளுத்தி முகத்தினிடத்தில் மொய்த்துக்கொண்டிருக்கின்ற பிடர்மயிர்களையுங் கொளுத்துதலால் வளைந்த குளம்பினையுடைய குதிரைகள் பதைத்துவிழுந்தன. எமனையும் எடுத்து விழுங்குகின்றகொடிய இராக்கதர்கள் அநேகர் அக்கினிமுழுதும் பற்றிக்கொண்டு வருவதுகண்டு அதற்குத் தப்பிப் போகும்படி ஆகாசமார்க்கத்திலெழும்ப, அவ்விடத்திலும் புகைவந்து சுற்றிக் கொள்ளுதலால் ஆழமாகிய தடாகஜலத்தில்விழுந்து அமிழ்ந்தவர்களைப்போ

லக் கண்களைமூடிக்கொண்டு சுவாசம்விடக்கூடாமல், மறுபடியும் அந்தெரு ப்பிலேதானே விழுந்து முடிந்துபோனர்கள். அநேக ஸ்திரீகள் அணையிலுடுத்த பட்டாடையிலேபற்றிய நெருப்பு, மார்பிலேதரித்த உத்தரீயத்திற்பற்றித் தலைமயிரிலும் பற்றிக்கொள்ள மயங்கித் தியங்கி மடிந்துபோனார்கள். இலவம் பஞ்சுக்குள்ளும் சில முத்துகளுண்டென்று சொல்லும்படி பிரகாசிக்கின்ற லெந்தவாயினையும் அதற்குள் இருக்கின்ற வெண்மையாகிய பற்களையுமுடைய ராகதஸ ஸ்திரீகள் தங்கள் நாயகன் மார்களிடத்திற் பிணங்கிய பிணக்குத் தீர்த்துகூடுகிறதற்கு முன்னே வஸ்திரம்வெந்து கடலிலேபோய்விழும்படி ஓடினார்கள். கூந்தலுடனே பசுங்கிளிகள் துடிக்க அதைக்கண்டு கண்களிலிருந்து அருவிபோல ஜலம்பெருகி ஸ்தனத்தினிடத்தில்வழிய, மதயானைக்கினையாகியபுருஷர்களைப்போய்க் கட்டிக்கொள்ளவேண்டுமென்று வருகின்ற அவசரத்தால் மேகத்தில்மறைகின்ற மின்னலைப்போல அநேகம் பெண்கள்புகையிலே மறைந்துபோனார்கள். பாவதங்களைப்போல உன்னதமாகிய உப்பரிகைகள் அக்கினியில் வெந்துபோக அவற்றிலிருந்த ஸ்திரீகள் தாங்களணிந்த சுவர்ணபரணங்களும் ரத்னபாணங்களுமபிரகாசிக்கும்படி ஆகாசத்திலெழும்பிப்போம் பொழுது புகைகள்வந்து சூழ்ந்துகொள்ள, மேனிகறுத்துக் கலங்கித் தினைக்குள்ளே காண்கின்ற சிதரப் பிரதிமைகளைப்போலத் தோன்றத் தலைப்பட்டார்கள். யுகமுடிவிலே கடுமையாகிய காலாக்கினியினால் சமுத்திரம் வேகிறதுபோல சந்தனவனங்கள் தீப்பட்டு அவற்றிலுள்ள, அகில்விருக்ஷங்கள், சந்தனவிருக்ஷங்கள் முதலாகிய அநேக வாசனைமரங்கள் உலகமெல்லாம் பரிமளிக்கும்படி வெந்தன. அக்கினியானது உலகமுழுதும் விழுங்கும்படி எட்டுத் திக்குகளிலும் தாவிப் படர்கின்றதனால் அந்தஜ-வாலையில், கற்பகக் காட்டில் வெந்தனவும் வேகாதனவுமாகிய தளிர்கள், இலைகள் மலர்கள் முதலானவையும், வேற்றுமை தெரியாம லிருந்தன. எங்கும் புகைமூடிக்கொள்ளுதலால் மேகங்கள் சமுத்திரஜலத்தைப் பானம்பண்ணப் போகிறதற்கும் பானம்பண்ணி வருகிறதற்கும் வழிகிடையாமல் தடுமாறின. அஷ்டதிசைகளிலும் வெண்மையாகிய புகைமூடிக் கவிக்கின்றதனால் சிவனுடைய வாசஸ்தலமாகிய வெள்ளியமலையும், மற்றமலைகளும் பிரஹ்மாவினுடைய வாகனமாகிய அன்னப்பறவையும், காக்கைகளும், நாராயணனுடைய சயனஸ்தானமாகிய திருப்பாற்கடலும், மற்றகடல்களும் கீழ்த்திசை யானையும், மற்ற யானைகளும், ஒத்து வேறுபாடு தெரியவேயில்லை. சரீரங்கள் வெந்து கரிந்து சிந்தும்படி அக்கினிஜ்வாலையானது மேலேதாவத் தோலுரிந்தவர்களாய் ராகதஸஸ்திரீகளும் புருஷர்களும் ஓடிப்போய்க் கடலிலே விழுந்தபோது அவர்களுடைய செம்பட்டமயிராகிய கூந்தலுஞ் சிகையும் அக்கினிக்கொழுந்துபோல எங்கும் நெருங்குதலால் அந்தச் சமுத்திரமும் பற்றி யெரிகிறது போலிருந்தது. ஒருபிள்ளையை இடுப்பின்மேல் வைத்துக்கொண்டு ஒருபிள்ளையைக் கையிலே பிடித்துக்கொண்டு மற்றொருபிள்ளை பின்னே அழுதுகொண்டோடத் தலைமயிர் பற்றியெரிய, ராகதஸஸ்திரீகள் கதறிக்கொண்டேபோய்ச் சமுத்திரத்தில் விழுந்தார்கள். ஆயுதசாலைகள் வெந்து அவற்றிலுள்ள விற்க

ளும் வேல்களும் குந்தங்களுமுதலான ஆயுதங்களெல்லாம் உருகிப் பலபல கிற்றுண்டைகளாய்விட்டன. யானைகள் உடல்வேகக் காலிற்பூட்டிய சங்கிலியையும் கழுத்திலிறுக்கிய கயிற்றையும் அறுத்துச் சிதறிவிட்டுக் கட்டுத்தறியைப் பெயர்த்துக்கொண்டு செவிகளை அசையவொட்டாமல் கிறுத்தி, வாலை முதுகின்மேல் வளைத்து முறுக்கித் தும்பிக்கையைத் தலையின்மேல் உயர எடுத்து வீசிட்டுக்கொண்டோடின. ஆகாசத்தில கொண்டல்கொண்டலா யெழும் பிப்பாய்கின்ற புகைக்கூட்டத்திலை பலசாதிபட்சிகளும் மேலே எழுந்து பறக்கப்பயந்து சமுத்திரத்திலேவிழுந்து அமிழ்ந்து, மனத்தில சிறிதுந் தயையில்லாத வஞ்சகரிடத்தில் அடைக்கலம் புகுந்தவர்களைபபோல அந்தக் கடலிலுள்ள மீன்கூட்டங்கள் விழுங்கும்படி இறந்தன. யுகாந்தகாலத்திலே பிரளயாக்கினியானது தோன்றிச் சப்த சமுத்திரஜலத்தையும வற்றுமபடி உண்டு புவனமாதியந்தமுஞ் சஞ்சரித்துத் தடவிகொணடு, விருக்ஷஜாலங்களையெல்லாந் தகித்துப் பர்வதங்களையெல்லாஞ் சுட்டுபபின்பு மகாமேருவைப் போய்ப் பற்றியெரிக்கிறதுபோல, லங்கையாகிய ஊளையெல்லாஞ்சுட்டு நீறுக்கிய தீயானதுகண்டு ராவணேசுவரனுடைய அரணமனையிலுமபோய்ப் பற்றியது.

அதிற்பற்றியதுகண்டு அவ்விடத்திலிருந்த தேவஸ்திரீகளும், காகஸ்திரீகளும், வித்தியாதர ஸ்திரீகளும் மற்றும் பலபலஸ்திரீகளும், பூர்வத்தில இந்த ராவணன்போய்த் தேவலோகத்தைக் கொள்ளையடிக்குமளவில் அந்தத்தேவர்கள் எப்படி அலைந்து தடுமாறினார்களோ ? அப்படியே மனமறுகிக் கதறி எழுந்து ஓடி ஒருவர்போனதிசையை ஒருவராறியாமல் அங்கங்கே திகைத்து நின்று தடுமாறினர்கள். கஸ்தூரி, கதமபம், சந்தனம், அகில்முதலாகிய வாசனாதிரவியங்களும், கற்பக புஷ்பங்களும், வெந்துபுகைந்து அந்தப்புகைதிக்குகள்தோறும பரவ அங்கங்கேயுள்ள ஸ்திரீகளுடைய தலைமயிரெல்லாம் பரிமளம் வீசத்தொடங்கின. அதியுஷ்ணத்தையுடைய அக்கினிபோய்ப் பற்றுதலால் யாவரும் நெருங்கப்படாத உக்கிரகோபத்தையும் ஆண்மையையுமுடைய ராவணன் வாசஞ்செய்கின்ற ஏழுநிலையுப்பரிகையும், ஊழித் தீயானது தகிக்கும்படி ஏழுலகங்களும் வேகிறதுபோல வெந்தன. லங்காபதியினுடைய நெடியமலைபோல ஓங்கி உயர்ந்தபெரியநிலைகளையுடைய அரண்மனையானது குற்றமற்ற ஆயிரத்தெட்டு மாற்றுத்தங்கத்தால் கட்டப்பட்டதாகையால் அதுமுழுதும் அக்கினிதத்தமாயுருகிக் குழைந்து ஒருபிண்டமாய்த் தெற்குத்திசைக்கும் ஒருமகாமேருவுண்டாயிருக்கின்றதென்று சொல்லும்படி நின்றது. இந்தத்தருணத்தில் தசக்கிரீவன் அவனுடையஸ்திரீகளும், மக்களும், ஒக்கலும், மற்றுமுள்ள பந்துவர்க்கங்களுமாகிய சகலருடனேயும், நவரத்னமயமாய்ப் பிரகாசிக்கின்ற புஷ்பகவிமானத்தின்மேலே ஆகாசமார்க்கத்தில் தப்பிப்போய் விட்டான். மின்னுமினைக்கும்மாத்திரத்தில அரக்கர்களும் அவர்களுடைய பிள்ளைகள் பெண்சாதிகள் அனைவரும் எதேச்சையாயோடிப் போனார்களானகையால், அந்தநெருப்பை அவிக்கத்தக்க பிரயத்தினஞ் செய்வாரொருவரும் இல்லாமல் லங்காபட்டணமானது சூழலுமெங்கு

டதை. அப்பொழுது ராவணனனவன் ராக்ஷசர்களைக் கோபாக்கினி ஜ்வாலிக் கப்பார்த்து அடடா! பதினலுலோகங்களும் பற்றி யெரியத்தக்க ஊழிகாலந் தான் வந்ததோ? வேறுகாரணம் ஏதாவதுண்டோ! நம்முடைய லங்கையை நெருப்புத் தகிக்கவேண்டிய நிமித்தமென்னவென்று அதட்டிக்கேட்டான். அந்தச்சமயத்தில் தங்கள் புத்திரமித்திர களத்திராதி பந்துஜனங்களையும் வஸ்திர ஆபரண வாகன தனதானியாதி பாக்கியங்களையும் அக்கினிக்கு இரை யாகக் கொடுத்துவிட்டு இனியெப்படி ஜீவிப்போமென்று அழுதுகொண்டு வந்து எதிரேநிற்கின்ற ராக்ஷசர்கள் கைகளைக்கூப்பித் தண்டமிட்டு ஐயா! கட லைத்தாண்டி இவ்விடத்திற்கு வந்தகுரங்கு சமுத்திரத்தின் நீளத்திலும் அதிக நீளம்மிக்கிய அதன்வாலிலே நாம கொளுத்திவிட்ட நெருப்பைக்கொண்டு சுட்ட தென்று சொன்னார்கள். அதுகேட்டு மிகுந்த கோபத்துடனே கொதித்து ஆ! ஆ! ஒருகுரங்கு தன்சாமர்த்திபத்தினல் இத்தகாரத்தைக் கொளுத்து வதும், அதன்வாலிலிருந்த அக்கினியானது கொழுத்துப்போய் எரிப்பதும், இதனுலே லங்காதேபமானது முழுதும்வெந்து பொடியாவதும், இதைக்கண்டு தேவர்கள் கைகொட்டிச் சிரிப்பதுமாய் முடிந்ததல்லவா! இப்படியாகும்மானல் ரணசூரனும் பிரதாபலங்கேசுவரனுமா யிருக்கின்ற என்னுடைய பராக்கிரமம் நன்றுகும் நன்றுகுமென்று கலகலவென்றுநகைத்து, குரங்குதான்தெரியாமற் கொளுத்தினலும் அக்கினியெப்படி எரிக்கலாம்? அவனுக்கென்ன தெரியாதா இந்தலங்கையைக்கொஞ்சமாவது பயமில்லாமல் எரித்த அந்தத்துஷ்டனுகிய அக்கினியைக் கண்டவர்கள் முன்னே கைப்பிடியாகபபிடித்து இழுத்துவாருங் கோளென்றும், கலகஞ்செய்யக்கற்றுக்கொண்ட குரங்கையும் பிடிதபிடியோ டே கொண்டுவாருங்கோளென்றும், தேவனைவென்ற ராவணன் மிதமற்றகோ பத்துடனே பற்களைகடித்துச்சொன்னன். சொன்னமாத்திரத்தில் பக்கத்தில் நின்றுகொண்டிருந்தராக்ஷசவீரர்கள் சுவாமி! அப்படியே செய்கின்றுமென்று ரதாரூடர்களாய் ஆஞ்சநேயனைத்தேடிக்கொண்டு அதிவேகமாய்ப்போனர்கள். அவர்களுக்குப்பின்னே கடலிலும்அதிகமாகிய வில்லையும் வாளையும் வேலையும் ஈட்டியையுமுடைய சேனைகள்சூழப்போர்க்கோலங்கொண்டு, போர்குறித்துத் தும்பைமாலைசூடி, ஸப்தவீரர்கள் புறப்பட்டார்கள். அவர்கள் அனைவரும் ஆகாசம் பூமியாதியந்தமும ஓடிவளைத்து மொய்த்துச்சுற்றி இரைச்சலிட்டுக் கொண்டுபோகிறபொழுது அநுமான் ஒருபக்கத்தில் இருக்கக் கண்ணிறற் கண்டார்கள். கண்டவுடனே பிடியுங்கோள்பிடியுங்கோள் அடியுங்கோள்அடி யுங்கோள் கட்டுங்கோள் கட்டுங்கோள் வெட்டுங்கோள் வெட்டுங்கோள் வளை யுங்கோள் வளையுங்கோளென்று கோபத்தோடு நானவிதமான ஆயுதவர்க்கங் களைப் பிரயோகஞ்செய்து எதிர்த்ததை சகலவேதசாஸ்திரங்களையுங் கற்றுணர்ந்த பண்டித சிரோஷடராகிய மாருதியானவர்கண்டு ஒருவரும் ஓடிப்போக வொட்டாமல் தசதிசையிலும் வாலைவீட்டி ஒருமிக்கவளைத்து இழுத்து அநேக னை வலதுகாலைக்கொண்டு உதைத்து, இடது காலைக்கொண்டு எற்றி, வலது கையைக்கொண்டு குத்தி, இடதுகையைக்கொண்டு மோதி, இரண்டுதோளினு லும் இறுக்கி, இரண்டுதொடையினலும் நெருக்கி, முழங்காலினல் முட்டி,

முழங்கையினல் இடித்து, அக்குளிலிட்டு அரக்கினர். பின்னும் பிரஹ்மாண்ட பரியந்தமுயர்ந்த ஒருமராமரத்தை வாலினல் வளைத்துப்பற்றிப் பறித்து எடுத்து மோதியடித்தார். அடிக்கவே ஆயுதங்களெல்லாம் பொடிப்பொடியாகத் தோள்துணிந்து, தாள்தறிந்து, தொண்டைகிழிந்து, மண்டைபிளந்து, மெய் சிணைந்து, கையொடிந்து, விழிபிதுங்கி, செவியறுந்து, ஆவியும் ஆயுசும் முடிந்து பாவிகள் பரதபித்தார்கள். இவ்விதமாக ஆஞ்சநேயர் கொல்லும்படி இறந்தவர்களுடைய சரீரத்திலிருந்து பெருகியாக்த ஜலமானது செறுய் இலங்கையைச்சுட்ட கெருப்பும ஆறும்படிப் பெரிய ஆறுய் ஓடியது. முன்னின்று போராடினவர்கள் இறந்துபோனதுகண்டு பின்னின்ற வீராதி வீரர்களெல்லாம எதிர்தோறிச் சண்டைசெய்தார்கள். அபபொழுது அதிசிக்கிரத்தில் வாயுகுமாரர் எமனைப்பார்க்கிலும் மூன்றுபங்கு அதிகமாகக்கொன்றார். அதனல் கருமேகத்துக்கு ஒப்பாகிய நிறத்தையும பலத்தையுமுடைய ஐம்பதினயிரம் ராக்ஷசவீரர்கள் மடிந்தார்கள். மற்றவாகளெல்லாம் அவருக்குமுன் நிற்கமாட்டாமல் சமுத்திரத்தில் ஓடிவிழுந்தார்கள். அத்தருணத்தில் சப்தவீரர்கள் இந்தக்குரங்கு எத்தனையோராக்ஷசர்களைத் தன்வாலை நீட்டிவளைத்தது. அந்த வாலில் அகப்பட்டு அநேகர்மாண்டார்கள். சிலபேர் கடலுக்குள் ஓடிவிழுந்து முழ்ந்தார்கள். அம்மம்மா! இதுவென்ன ஆச்சரியம்! இப்படியானல் கணடவர்கள் கேட்டவர்களுக்கெல்லாம் ஏச்சல்லவோ? பேச்சல்லவோ வென்றெண்ணிக் கோபக்குரோதர்களாய்த தேர்களை வேகமாய் நடத்திப்போய்ச் சுற்றிக்கொண்டு விற்களை வளைத்து, வாசாமகோசரமாகப் பாணங்களைப் பிரயோகித்துத் தங்கள் வீரதீரத்தைக்காட்டிப் பிரபலமாகிய யுத்தஞ்செய்தார்கள். மாருதியானவர் அவர்கள் விட்டபாணங்களையெல்லாம் லக்ஷியம்பண்ணாமல் அத்தனழுபேர்களையும் ஏககாலத்திற் கொல்லவேணுமென்று உத்தேசித்துத்தமது கையைக்கொண்டு ஓரோ அறைகொடுத்தார். அந்த அறையுடனே தேர்கள் குதிரைகள் சாரதிகளும் சிதைந்து வில்லும்முறிந்து ஏழுவீரர்களும ஒருமிக்க மாய்ந்துபோனர்கள். பின்பு ஊர்முழுதும் அழிந்துபோய்விட்டதோவென்று பார்த்துவந்த விஞ்சையர்கள் சகலத்தையுஞ் சுட்டெரித்த அக்கினியானது சீதாபிராட்டியாரிருக்கின்ற சோலையைமாத்திரம தகிக்கவில்லையே; அதுஅந்தக் குணநிதியாகிய ஜானகியாருடைய கற்பின்மகிமையினல்லவா? வேகாதிருந்ததென்று சொன்னர்கள். அவர்கள் சொன்னசொல்லைக்கேட்டு ஆஞ்சநேயர் அதிசயித்துச் சந்தோஷித்து நான் பிழைத்தேன் நான் பிழைத்தேனென்று ஆனந்தித்து, இவிடத்திற்குப்போய், லோகமாதாவின் திருவடிகளைச் சேவித்துநின்றார்: பிராட்டியாரானவர் சிசுவைக்கண்ட தாயைப்போல அநுமானைப்பார்த்து அதற்குமுன்னே நம்முடையபுத்திரனை அக்கினிதகித்து விடுமே என்னசெய்வதென்று, மனந்தளர்ந்து துக்கத்தினல் முகம்வெயர்த்து நெருப்பிலேவிழுந்த புழுப்போலப் பதைத்துப்பற்றியெரிந்த திருமேனி குளிர்ந்து அதிக மகிழ்ச்சியானர். அந்தச்சமயத்தில் அஞ்சநாகுமாரர் முன்னமேதானே சகலமும்பேசி முடிந்தபடியால் இனியென்னவார்த்தை இருக்கிறதென்று நினைத்துத்தாயே! நாயேன் போய்வருகிறேனென்று தண்டம் சமர்ப்பித்

தத் திரும்பினர். அவர் அப்புறம்போனவுடனே ஸ்ரீராமதூதர் போய்விட்ட படியினல் கள்ளர்களாகிய ராக்ஷதர்கள் கண்டால் நம்முடைய நகரத்தைச் சுட்டெரித்தது இந்த அக்கினிதானேயென்று, நம்மைப் பிடித்துப்போய்த் தண்டிப்பார்களென்று அக்கினிதேவன் அவர்கள் கண்ணுக்குத்தோற்றுமல் ஒளித்துப்போனன்.

ஊர்சுடுபடலம்
முற்றிற்று.

திருவடிதொழுதபடலம்.

அதிசீக்கிரமாகப்போய்ச் சேரவேண்டுமென்கின்ற நினைவைக்கொண்டு எங்களையராகிய ஆஞ்சநேயர், அங்கே வொருபக்கத்திலிருந்த பர்வதத்தின் சிகரத்திலே அஸ்தமனபர்வதத்தை அடைந்த சூரியனைப்போலப்போயேறி அந்த இடத்திலிருந்து, உலகங்களையெல்லாம் விழுங்குவதுபோல நீண்டுவளர்ந்து ஸ்ரீராமபிரானுடைய திருவடித்தாமரையை மனத்திலே தியானித்து, திக்குநோக்கித் தண்டம் சமர்ப்பித்து ஆகாசமார்க்கத்தில் எழும்பிப் பாய்ந்து போனர். போய்த் தம்முடைய வரவை எதிர்பார்த்துக்கொண்டிருந்த மேரு தேவியின்பிள்ளையாகிய மைநாகபர்வதத்தின்மேல் குதித்தார். அந்த மைநாக பர்வதம் அவருக்கு உபசாரஞ்செய்து என்னசமாசாரமென்று விசாரிக்க, அதனுடனே நடந்தகாரியத்தைச் சொல்லிவிட்டு, அங்கிருந்து எழும்பித் திக்கஜத்துக்குச் சமானமாகிய ஆஞ்சநேயர், அங்கதன், ஜாம்புவந்தர்முதலாகிய வானரவீரர்களிருந்த மஹேந்திர பர்வதத்தின்மேல் ஒருகணப்பொழுதிலேவந்துகுதித்தார். தூரத்திலே போயிருந்த தாய்ப்பறவையானது வருகிறவழியைப் பார்த்துக்கொண்டிருந்த அப்பறவைக்குஞ்சுகள் அதுவரக்கண்டதுபோல லங்கைக்குப்போன அநுமானனவர் எப்பொழுது வருவார்வருவானென்று வழிபார்த்துக்கொண்டிருந்த அந்தவானரவீரர்கள் இவரை நேரிலேகண்டவுடனேபோன காரியம் முடிந்ததென்று, சரீரம்புளகிக்க மயிர்க்குச்சிறிய அதிகமகிழ்ச்சியையடைந்து அவர்களில் சிலபோர் அழுதார்கள். சிலபேர் எதிரேநின்று ஆரவாரஞ்செய்தார்கள். சிலபேர் சமீபத்திற்போய் அன்புடனேதொழுது கொண்டார்கள். சிலபேர்துள்ளிக்கூத்தாடினர்கள். சிலபேர் அவரை எடுத்துவிழுங்குகிறவர்களைப்போல ஆசையினல் மொய்த்துக்கொண்டார்கள். சிலபேர் தழுவி அணைத்துக்கொண்டார்கள். சிலபேர் தூக்கியெடுத்துக்கொண்டு எங்குந்திரிந்தார்கள். சிலபேர் ஐயா! வாயுகுமாரரே நீர்போய்வந்த செய்தியை உமது வாயைத்திறந்து சொல்லாமலே உம்முடைய முகாரவிந்தமே எங்களுக்குத் தெரியச்சொல்லியது. ஆகையால், மகத்தாகிய சந்தோஷமுண்டாகியது. வெகுதூரம்போய் இளைப்புடனேவந்தீரே உமக்கு அந்த இளைப்புத்தீரும்படித் தேனும் கிழங்குகளும் கனிகளும் காய்களும் தளிர்களும் நாங்கள் கல்லருசியுடையனவாக அருமையாய்த் தேடிக்கொண்டுவந்து வைத்திருக்கிறோம். அவற்றைச் சாப்பிடுமென்று அவருக்குமுன்பாக வரிசையாய்க் கொண்டுவந்து வைத்து

உபசரித்தார்கள். பின்பு அநுமானுடைய கால்களிலும், கைகளிலும் மார்பிலும், தோளிலும், தலையிலும், வாள்களும், வேல்களும், அம்புகளும் பட்டபுண்கள் சிருஷ்டிகாலந்தொடங்கி உலகத்தில இதுவனையிலுல் கழிந்துபோன நான்களைப்போல, அளவிறந்தனவாக நிறைந்திருக்கக் கண்ணிறற் பார்த்துப்பார்த்துத் தங்கள் பிராணன் சிந்திப்போமபடி மனம்குழைந்து பெருமூச்சுவிட்டார்கள். அப்பொழுது மாருதியானவர் தங்கள் இளவரசாகிய அங்கதனை முன்புவணங்கிப்பின்பு காடிகளுக்கு ராஜாவாகியஜாம்பவந்தனைச் சேவித்துக்கொண்டு, மற்றுமுள்ளவாகளுக்கெலலாம் அவரவர்களுக்கு ஏற்றபடிச்செய்யவேண்டியமரியாதைகளைச்செய்து அவ்விடததில்உட்கார்ந்து, லோகநாயகராகிய ஸ்ரீராமச்சந்திரருடைய திருத்தேவியாராகிய ஜானகியார் உங்களுக்கெல்லாம் ஆசீர்வாதம் சொன்னுசொன்றுசொன்னர். இபபடிச் சொன்னமாத்திரத்தில் அனைவருமெழுந்திருந்து சிரசின்மேற் கைகளை அஞ்சலிபண்ணிக்கொண்டு தனைமட்டுந்தாழ்ந்து திக்குநோக்கி வணங்கிநின்று கண்களில், ஆனந்தபாஷ்பம்பெருகமனத்திலே மகா சந்தோஷத்தையுடையவர்களாய் அநுமானை நோக்கி இங்கிருந்து நீர்புறப்பட்டு லங்கையைநாடிப் போனதுமுதல் அங்கிருந்துவந்து சேர்ந்ததுவனைக்கும் என்னென்ன அதிசயம் நடந்தனவோ! அவற்றையெல்லாம் ஒன்றுவதுவிடாமல் நாங்கள் கேட்கும்படிச் சொல்லவேண்டுமென்றார்கள். அப்பொழுது அவர் பிராட்டியாருடைய திருவடிகளை நெஞ்சிலேஸ்மரித்துத்தாழுது அந்த ஸ்ரீராமபத்தினியாருடைய மகிமைபொருந்திய திருவுளக்கருத்தை நன்றுய்த் தெரியச்சொல்லி, பின்பு தாம் அங்கிருந்து சுவாமிக்கு அடையாளமாகச் சூடாமணியை அவர்கொடுக்கும்படி வாங்கிவந்ததையுஞ் சொன்னதோயல்லாமல், மகாபலிஷடர்களான பஞ்சசேனாதிபதிகளுடனேயும் அக்ஷகுமாரன் முதலாகிய வெகுராக்ஷசர்களுடனேயும் போர்செய்து அவர்களையெல்லாம் கொன்றுவென்ற சமாசாரத்தையும், லங்காபட்டணத்தை எரித்து நீறுக்கிய சமாசாரத்தையுமாத்திரஞ் சொல்லவில்லை. என் சொல்லவில்லையென்றால், இந்த இரண்டுகாரியமும் தம்முடைய ஜயப்பிரதாபத்தைக் குறிப்பதுபற்றி அதைச்சொன்னல் தற்புகழ்ச்சியாய் முடியுமென்று நினைத்துச் சொல்ல வெட்கப்பட்டுக்கொண்டு, அதுநீங்கலாக மற்றவற்றையெல்லாம் ஒன்றுவது ஒளியாமற்சொன்னர். அந்தச்செய்தியைக்கேட்டு அதிக சந்தோஷமுற்று அங்கதன் ஜாம்பவந்தன் முதலானவர்கள் வாயுபுத்திரனை ஊடுருவப்பார்த்து, இவர் லங்கையிலுள்ள ராக்ஷசர்களுடனே எதிர்த்துப்பின்னிடாமல் உக்கிரமாய்ப் போர்செய்ததை, இவருடைய தேகமாதியந்தமுமிருக்கின்ற காயங்களே சொல்லவும், அவர்களை ஜயித்த சமாசாரத்தை இவர் அவர்களால் சிறைசெய்யப்படாமல் திரும்பிவந்ததே சொல்லவும், அந்த லங்கையைக் கொளுத்திபசெய்திபை அந்தத்திசையில் ஓங்கிக் கறுகதழுகின்ற புகையேசொல்லவும், ஜானகியானவர் இறக்கவுமில்லை மற்ற எந்தஇடத்திலும்போகவுமில்லை ராவணனுடைய நகரத்தில்தானேஇருக்கிறரென்பதை இவர்தென்திசையை நோக்கித்தண்டம் சமர்ப்பித்துக்கொண்டு வருவதேசொல்லவும், சத்திருக்கள் சாமானியர்களல்லர் அவர்களெல்லாம்அதிவீரபராக்கிர

மர்க ளென்பதை ஜகன்மரீதர்வானவர் இன்னம் சிறைமீளா திருப்பதீதசொல்லவும், பிரகடமாக அறிந்து இனிச் செய்யவேண்டுவதென்ன சொல்லுமையா அநுமர்னேயென்று கேட்டார்கள். இனி எவற்றையும் சிறிதும் எண்ணவேண்டுவதேயில்லை. சிக்கிரமாய் ஸ்ரீராமபத்திரருடைய சந்நிதானத்திற்குப் போய் அவருடைய திருத்தேவியாரைக்கண்ட சுபச்செய்தியைச்சொல்லி, அவர் மனக்கிலேசத்தை அகற்றுவதே உத்தமமென்று ஆஞ்சநேயர் சொல்ல, அப்படியே செய்வோமென்று சகலரும் சமமதித்து அத்தக்ஷணமே பிரயாணப்பட்டு கடந்தார்கள். அவ்வாறு மகிழ்ச்சியுடனே ரகுநாயகன் தனதுகோதண்டத்திற் பூட்டியெய்தபாணத்தைப்போல அதிவேகமாய் ஆகாசத்திலே தாவிப்பாய்ந்துபோய்ச் சூரியன் உச்சியில்வருகின்ற சமயத்தில் மதுவனத்தில்வந்துசேர்ந்து அதிலேதங்கினார்கள்.

அத்தவனத்தில் தெருங்கிய மரக்கொம்புகளிலெல்லாம் அபரிமிதமாகத் தேன்கூடு கட்டியிருக்கக்கண்டு அத்தத்தேனை யுண்ணவேண்டுமென்று ஆசை கொண்டு வானரவீரர்கள் வைதேகியைத்தேடிவந்து வெகுநாளாய்விட்டதென்று எங்கள் மனத்துக்குச் சஞ்சலமுனைடான படியிலேலே நாங்களெலலாம் உணவில்லாமல், இதுவரையிலும வெகுவாய் வருத்தபபட்டோம். இப்பொழுது எங்களுக்கு உணவைக்கொடுத்தருளுமென்று அங்கதப்பெருமானிடத்திற் சொல்லிக்கொள்ளுவோம் வாருங்கோளென்று உடனே எழுந்துபோனர்கள். அவாகளில் அநுமானைவர் அங்கதப்பெருமானுக்குச் சமீபத்திற்போய் அவனைக் கைகூப்பிப்பணிந்து தேன்பொருந்திய பூமாலையையணிந்த எங்கள் ராஜசாரமோ கேளும். உம்முடைய வானரசேனை உணவிலலாமல் மிகவும் பசியும் தளைப்புங்கொண்டு ஆயாசமாய் வருத்தபபடுகின்றது ஆகலால், அதற்கு இப்பொழுது இத்தச்சோலையிற்கட்டிய கூடுகளிலிருந்து ஒழுகுகின்றதேனையுண்ணும்படி உத்தரவுகொடுக்கவேணடுமென்றார். அவன் அப்படியே செய்யலாமென்றுசொல்ல, அதுகேட்டு ஆஞ்சநேயர் வானரங்களைக் கண்காட்டச்சமுத்திரம்ஙபோலும்படிமிகவும இரைச்சலிட்டுக்கொண்டுபோய், தேன்கூடுகள்தொங்குகின்ற அத்தச்செழுமையான வனத்திற்குள்ளே இத்தக் குரங்குகளெல்லாம் பிரவேசித்துத்தேனையுண்ணும்படி வண்டுகள்வந்தமொய்ப்பதுபோல, எங்கும் மொய்த்துச் சுற்றித்தொடர்ந்து ஒன்றன்முன்னேயொன்றுபாய்ந்து மரக்கிளைகளை ஒடித்துத் தேன்கூடுகளை அழித்து அவற்றிலுள்ள தேனைக்குடித்துக் களிகூர்த்தலைப்பட்டனை. வானரவீராகளில் ஒருவர்வாயைத்திறந்து உண்ணபோகின்ற தேனை அந்தச்சமயத்தில்மற்றொருவர்வந்து எளிதாக உண்டுவிட்டுப்போவார். ஒருவர் பிரயாசப்பட்டுக் கையிலல் அழித்தெடுத்ததேனை ஒருவர் பிரயாசமில்லாமல்வந்து அபகரித்துக்கொண்டு ஓடிப்போவார். ஒருவருடனையொருவர் உடலும் உடலும் தெருங்கும்படிக் கட்டித்தழுவித் தேனுண்டமயக்கத்தால் தளைபிலவிழுவார். ஒருவர்மேலொருவர் ஓடிப்போயேறிக்கொண்டு புதுகசுத்தோஷத்தையடைவார். இத்தப்பிரகாரம் மட்டிலாத மதுவைக்கொள்ளையிட்டுக் குடித்துக்களித்துச் சம்பிரமமாய்க் கூத்தாடும்போது அத்தவனத்துக் காவலாயிருந்த வானரர்கள் கண்களைத்திப்பறக்க விழித்துச் சினியெ

ழுந்து ஸீவர்களை எதிரிட்டுச் சூரியகுமாரனுகிய சுக்கிரீப மகாராஜாவினுடைய ஆஜ்ஞையைத்தடுத்து நீங்களெல்லாம எனனநினைத்து என்னசெய்தீர்கள். உங்களுயிருக்கு மூடிவுவந்துவிட்டது. இதச்சமாசாரத்தை எங்கள் எஜமானறிந்தால எங்கள்மேல் கோபஞ்செய்வானே நாங்கள்என்னசெய்வோமென்று சொல்லிவிட்டுப்போய், தங்களுக்கு அதிபதியாகிய ததிமுகனென்ற வானரனுடனே நம்முடைய வனத்தைக் குரங்கின் சேனைகள்வந்து இப்பொழுது அழித்துவிட்டன ; அந்தச் சத்துருக்களுடைய செய்கைக்குப் பிரதியாகச் செய்யத்தக்கது இனி எங்களாலிலலையென்று முறையிட்டுக்கொண்டார்கள். அதுகேட்டு அந்தத்ததிமுகன் மதுவனத்தை அழித்தவர்கள் ஆர்? அவாகளைக் காட்டுங்கோள் பார்ப்போமென்று புறபபட்டான். அவாகள் ஐயா! வாலி குமாரன்முதலான வானரர்கூட்டம்வந்து நிழலுகுத்தங்கியது. பின்பு அங்கதனுடைய ஏவலினுலே அந்தக் குரங்கின்சேனை மரக்கிளைகளிற்பாய்ந்து தேன்கூடுகளையெலலாம் நிர்மூலமாக்கியதுகண்டு நாங்கள்போய் அதனைத் தடுத்தோம்! எங்களைப் பேசப்படாத வசபுவார்த்தை பேசி இடக்குபடணனிக் கைகளைக்கொண்டு ஓங்கியடித்ததனலமிகவும எங்களுடம்பு நொந்தாம ஆண்டவனேயென்றுசொல்லவே, ததிமுகனடடா தன்தகதையாகிய வாலி நாசமாய்ப்போனதை அவன் பிள்ளையாகிய இந்த அங்கதனென்ன அறியாதவன்போலிருக்கிறனென்றுசொல்லி, நெருப்பைபபோலபபொஙகி, அவ்விடமவிட்டு எழுந்து இரண்டுகோடி வானரங்கள் கல்லென்று ஆபபரித்து நெருங்கிச்சூழ்ந்துவரும்படி மதுவனத்திற்குள்ளேவந்து நுழைந்தான். அங்கே யதுவையுண்டு கொண்டிருக்கின்ற வானரசேனபானது பயந்து எழுந்து ஸ்ரீகாதண்டதீக்ஷா குருவைவாழ்த்திக்கொணடே ஓடிப்போய் வாலிபுத்திரனுடைய பாதத்தில்விழுந்தது. அப்பொழுது ததிமுகன் அங்கதனைப்பார்த்துச் சொல்லுகின்றான். கேளாய் அங்கதனே! தேவேந்திரனைவன வாலிக்குங்கொடுத்த உசிதமாகிய இந்த மதுவனமானது தேவாகளுங் கணகளைவிழித்துப் பார்க்கிறதற்கு அரிதாக என்னுலே காவல்செய்யபபட்டிருகின்றது. இப்படிப்பட்டஎன்னுடைய ஆஞ்ஞையை நீ அசட்டைபண்ணினுய் இதற்கு உடையாகிய சுக்கிரீபமஹாராஜனே லேசானவனலலன். அவனுடைய பராக்கிரமத்தைச் செவ்வையாயாலோசித்துப்பாா? ஓகோ! உன்னுடையவாழ்வு இன்றைத்தினத்துடனே முதலற்றுப்போய்விட்டது. இப்படிபபட்ட திவ்வியமானவனத்தை நீ வானரங்களை ஏவி அழித்துவிட்டாயல்லவா? என்று கொதித்துக் கொக்கரித்து அந்தக்ஷணமே ஒருபெரிய கருங்கற்பாறையை அடியோடேட பேர்த்தெடுத்து அங்கதன்மேல் விசையாக விட்டெறிந்தான். அதைப புறங்கையினுலே தட்டிவிட்டு வாலிகுமாரன் கோபித்தெழுந்து ததிமுகனைக் கெட்டியாய்ப்பிடித்துத தன் கைவிரலை முடக்கிக்கொண்டு கொம்கொம்மென்யதாகக் குத்தி, வாயின்வழியே இரத்தஞ்சோரும்படிப் பிரமிக்கப்பின்னும் அடித்து, இந்தச்செய்தியைப் போய்ச் சுக்கிரீபனுக்குச் சொல்லென்று அவனைத்தூதத்திவிட்டு, கோபாக்கினி ஜொலிக்கும்படி அவனுடைய சேனைகளைப் பற்றிக்கட்டி அனற்பொறிபறக்க நன்முய்க் குத்திக் குமையுங்கோளென்று

தன்சேனைவீரர்களுக்கு உத்தரவுசெய்தான். அந்த உத்தரவு வாயிலிருந்து வெளிப்படுகிறதற்குள்ளே வானரவீரர்கள் அவர்களை ஓடிப்போய்ப் பிடித்து வந்து காட்டிலேபடர்ந்திருக்கின்ற கொடிகளை அறுத்துத் தோளழுந்தக்கட்டி முன்பக்கத்திலும் பின்பக்கத்திலும் இருப்புலக்கையினால் இடிப்பதுபோல இடியும் அஞ்சியோடும்படிப் பலம்பொருந்திய கைகளால் இடித்தார்கள். அது பொறுக்கமாட்டாமல் சோலைக்காவலாளர்கள் முதலாகிய வானரர்கள் சரீரம் துடித்துக்களைத்து விழுந்ததுகண்டு நீங்களும் போய்ச்சொல்லுங்கோளென்று அங்கதன்சொல்ல, அதிபயத்துடனே அவர்களும் எழுந்து அலறிக்கொண்டே ஓடினார்கள். பின்னும் ஜலத்திலேமூழ்கி விளையாடுகிறவர்களைப் போலக் கூடுகளிலுள்ள தேனையன்றிக் கனிகளிலுள்ளதேனையும், புஷ்பங்களிலுள்ள தேனையும் நிறையக்குடித்து அவற்றிலேதானே மூழ்கிவிளையாடித் தங்கள்தங்கள்தலைவர்களுக்கும் அந்தத்தேனையும்கனிகளையும்கிழங்குகள் சாகங்களையும், கொண்டுபோய்க்கொடுத்து, அவர்களையும் உண்ணும்படிச்செய்ய யாவரும்உண்டதேக்கி வருத்தமாறிச் சூரியனுடைய வெயிலின் உஷ்ணந்தணிந்த வுடனே போகலாமென்று பொழுதைப் பார்த்துக்கொண்டு மதுவனத்திற்கு அடுத்த உபவனத்தில் இருந்தார்கள்.

அவர்கள் அப்படியிருக்க; சூலாயுதத்தை ஏந்திய சங்காரனும் முடிப்பதற்கு அரிதாகிய பெருங்காரியத்தைமுடித்து, ஸ்ரீராமதூதராகிய சாதுரியத்தையுடைய ஆஞ்சநேயர்மீண்டு வந்ததுவரையில் அந்தத்தென்றிசையில் நடந்தசரித்திரங்களையெல்லாம் நாம் அறிந்தமாத்திரஞ்சொன்னேம். சுவாமி விஷயமாயிவ்விடத்தில் நடந்தவற்றையெல்லாம் இனிச்சொல்லத் தொடங்கினேம். சுக்கிரீபனுடைய அநுமான்முதலாகிய வானரசைனியங்களைச்சீதாபிராட்டியாளைத் தேடிவாருங்கோளென்று நான்கு திக்கினிடங்களிலும், அனுப்புவித்து சிகியமுகபர்வதத்திலிருந்து ஸ்ரீராமபிரானை இனிமையாகிய கல்ல சொற்களினாலே தேற்ற அந்த ஸ்ரீகோதண்டபாணியானவர், அடிக்கடிச் சோர்ந்து சோர்ந்து அப்படி மூர்ச்சிக்குந்தோறும் அநேகமாயிரம் உயிருடையவர்போலத் தெளிவுவந்து உயிர்த்தெழுந்திருப்பார். மறுபடியும் சீதாபிராட்டியாளை நான்குதிக்கிலும்தேடப்போன வானரவீரர்களில்வடக்கு கிழக்குமேற்காகிய மூன்றுதிக்கிலும்போனவர்கள் ஈர்ங்கள் காணவில்லையென்று வந்துசொன்னசெய்யலாலே, உடலுக்குள்ளே உயிருண்டு இல்லையென்னும்படிச் சோகிப்பார். பின்னும் தெற்குத்திசைக்குப் போயிருக்கின்றவர் ஆஞ்சநேயரல்லாவென்று அவனைத்தமது திருவுள்ளத்திலே நினைத்துக்கொண்டு சூரியகுமாரனாகிய சுக்கிரீபனைப்பார்த்து அப்பா! சுக்கிரீபா! நாம்செய்த எத்தனங்களெல்லாம் அநுகூலமாகவில்லை. அபகீர்த்திக்கிடமாயிற்று. நாம் குறித்துச்சொல்லிய காள்களெல்லாங் கழிந்துபோய்விட்டன. மூன்று திக்கிலுந் தேடப்போனவர்களோ வந்துசேர்ந்தார்கள். தென்றிசையை நோக்கித் தேடப்போனவர்கள் மாத்திரம் இதுவரையிலும் மீண்டு இவ்விடத்திற்கு வரவேயில்லை. ஆகையால் அவர்கள் இறந்ததான் போனார்களோ? அல்லது அவர்களுக்கு மற்றென்ன ஆபத்துத்தான் சம்பவித்ததோ? அல்லது ஒருவேளை

சீதை மாண்டுபோய், இவள் மாண்டுபோன சமாசாரத்தை மீண்டுபோய் அவர்களுக்கு எப்படிச்சொல்லுகிறது? இதைவிட காரும் மடிந்துபோகிறதே கல்லதென்று துக்கத்தினுலே தாங்களும் பிராணத்தியாகம் பண்ணிக்கொண்டார்களோ? அல்லது இன்னமும் தேடிக்கொண்டே திரிகிறார்களோ? அல்லது இராக்கதனைக்கண்டு கோபமதிகரிக்கச் சண்டைசெய்து அவர்கள்செய்த வஞ்சனையாகிய மாயையினுல் மாய்ந்து வீரசுவர்க்கமடைந்தார்களோ? அல்லது எக்காலமும் மீளாத அருஞ்சிறையில் அகப்பட்டுக்கொண்டார்களோ? அல்லது நமக்கு நியமித்துச்சொன்ன தவணைநாளுக்குள்ளே சுக்கிரீவன்முதலானவர்க எிருக்குமிடத்தில் நாம்போய்ச் செய்திசொல்லுகிறதற்கில்லையே ஆகலால், அங்கேபோக லச்சையாயிருக்கிறதென்று நினைத்து இன்பதுன்பங்களத்துறந்து தபசுதான் செய்கிறார்களோ? அல்லது இவையெல்லாமல்லாமல் அந்த அநுமான் முதலானவர்களுக்கு மேலே என்ன சம்பவித்தோ? நீ சொல்லென்று, இப்படி அகேகவிதத்திற்சொல்லிச் சுவாமியானவர் விசனப்படுவார்.

அப்படியிருக்கிற தருணத்தில், கதிமுகனென்பவன் தன்பின்னே அடித்துத் துரத்தப்பட்ட இரண்டுகோடி வானரர்களும், அழுது கூச்சலிட்டுக்கொண்டுவரச் சுக்கிரீவமகாராஜனுக்கு முன்பாக, தலையிலிருந்து ஒழுகிப்பாய்கின்ற உதிரத்துடனேவந்து இரண்டுகைகளையுங்கூப்பி வணங்கி எழுந்தின்று ஐயா! இன்றைத்தினத்துடனே நம்முடைய மதுவனமழிந்ததென்று சொன்னமாத்திரத்தில், ரக்தம் ஒழுகுகின்ற அவன்முகத்தைப்பார்த்து அப்படிச் செய்தவர்கள் யார் சொல்லென்று சூரியகுமாரன்கேட்க, நீலனென்பவனும், குமுதனென்பவனும், மலைபோலுயர்ந்த தேகத்தையுடைய ஜாம்பனென்பவனும், சமுத்திரம்புரண்டுவந்து மூடிக்கொண்டதுபோல வெகுவானரசேனைகளும் மேலிட்டுவந்து, நமது மதுவனத்தை அழித்தன. இப்படிச் செய்யவேண்டாமென்றுபோய்த்தடுக்க, சேனைகளை அடித்துத்துரத்தி வாலிகுமாரனுகிய அங்கதன் உம்மையும் இகழ்ந்துபேசினன். அவனுக்கு இஷ்டமானபடிக்கெல்லாஞ் சொன்னசொல் எங்களுக்குச் சகிக்காமல் செவிதீய்ந்து முகம்புதைந்து மனம்வெதும்பி இமைப்பொழுதுக்குள்ளே, ஒருகருங்கற்பாறையைப்போற்தெடுத்து வாலிபுத்திரனுடைய சரீரஞ்சிதையும்படிஎறிந்தோம். அதைப்புறங்கையால் தடுத்துவிட்டு, மூங்கிற்காடு பற்றியெரிந்தாற்போலக் கோபத்தாலெரிந்து என்னைப்பிடித்து உயிர்பதைக்கும்படிக் குத்திக் குமைந்து நீ யெவ்விடத்தில்போய்ச் சொல்லிக்கொள்ள வேண்டுமோ? அவ்விடத்திற் சொல்லிக்கொள்ளென்று அனுப்பிவிட்டானென்று கதிமுகன் சொன்னன். கேட்டவுடனே சுக்கிரீபமகாராஜன் அதிக ஆனந்தத்தோடு எழுந்தின்று சேஷசாயியாகிய சாக்ஷாத் ஸ்ரீராமனைச்சேவித்துச் சுவாமி! அங்கதன் முதலானவர்களுக்கு இப்பொழுது உண்டாகிய கோபமானது என்தாயாகிய ஜானகி, மகிமைபொருந்திய கற்பழியாதிருக்கிறுளென்று நமக்குத் தெரியச்சொல்லியது. க்ஷேமமாயிருக்கும்படிப் பிராட்டியானை அவர்கள் பிரத்தியக்ஷமாகக் கண்டார்கள். அந்தச் சுகதோஷத்தினுலேதான் மதுவனத்தை யழித்து அதிலுள்ள

தேனைக்குடித்து விளையாடினர்கள். ஆகையால் தேவர்பெருமானுகிய ஸ்ரீராகு காயகனே! இனித் தேவரீர்சங்தேகித்துக் துக்கப்படவேண்டுவ தில்லையென்று விண்ணப்பஞ்செய்ய, அதைத் திருச்செவி சாத்தியருளிய எங்கள் தந்தையாகிய ஸ்ரீராமபத்திரர், தெற்குத்திசைக்குப்போனவர்கள் வந்தார்கள். இனி அவர்க ளென்னசெய்தி சொல்லுவார்களோ எல்லாம் அறியலாமென்று தமது திருவுளத்திற் குறித்துக்கொண்டு இருந்தார். சுக்கிரீபன் அடிபட்டுச் சரீரம் நொந்துவந்த கதிமுகனுடைய முகத்தைப்பார்த்து, அவ்விடத்தில் வந்திருக் கிறவர்கள் ஆரார் சொல்லென்றுகேட்க, அநுமான், அங்கதன், மயிந்தன், ஜாம் பவந்தர் முதலாகப் பதினேழு வானரசிரேஷ்டர்கள். கடலும் காணும்படி, அதிலும் அதிகமாக ஒலிக்கின்ற சேனைகளையுடையவர்களாய் வந்திருக்கின்றார்க ளென்றுசொல்ல, அச்சமயத்தில் வானராதிபதி ஒருபோதும் ஆஜ்ஞை தவறுத வனுயிருந்தும்அவனுக்குச்சுவாமிகாரியம் அநுகூலப்பட்டதுவே விசேஷமாகை யால் அவர்கள் தன் பிராணனுக்கு ஒப்பாகிய மதுவனத்தை அழித்தார்களென் றும் கேள்விப்பட்டும், அதைக்குறித்து எள்ளளவும் கூசாத்திரமில்லாமல் மறு படியும் அவனேநோக்கிப் புஜபலத்திலுயாகத கதிமுகனே! உனக்கு நான்சொல் லத்தக்கது ஒன்றிருக்கின்றது. என்னவென்றால், அங்கதனனவன் அமையாக் கியர்களுக்குரிய அற்பமாகிய செய்கையையுடையவனல்லன். சக்கரவர்த்தித் திருமகனுடைய ஆஜ்ஞையைச் சிரசின்மேலகொண்டு அவனும், மற்றவானரர் களும் சமுத்திரஞ்சூழ்ந்த பூமி ஆதியந்தமும்போய்த் தேடிச் சீதாபிராட்டி யாைக் கொண்டுபோன சத்துருக்களுடனே சண்டைசெய்து ஜயித்து, வீரா வேசத்தோடே வந்திருக்கிறார்கள். ஆகையால் அவர்களைக்குறித்து நாமிப் பொழுது என்னசொல்லுகிறது. இது சமயமுமல்ல. அல்லாமலும் உனக் கென்ன தெரியவில்லையா? வாலிகுமாரன் சாமானியனு? இளவரசாயிருக்கி றவனுகையால் அவன் நாம் கேட்டகேள்விக்குத் தாழ்ந்து உத்தரவுசொல்லுகி றதுஅருமை; இப்படிக்கெல்லாம் தர்மசங்கடமாயிருக்கிறபடியால், நீ யொன்றும் யோசிக்கவேண்டா; உனக்கு உறுதியைச் சம்பாதித்துக்கொள்ளவேண்டுமெ ன்று மனமிருந்தால அவனிடத்திற்போய் இப்பொழுதே சரணமடையென்று சுக்கிரீபன்சொல்லவே, அதற்குத் கதிமுகன் ஒன்றுஞ்சொல்லாமல் வாயை மூடிக்கொண்டு அவனுக்குத் தலைவணங்கித் தண்டம்பிடு மனமெலிந்து சரீர மொடுங்கி அங்கிருந்துபுறப்பட்டு, தன் சேனைகளுடனே திரும்பி அந்த உப வனத்திற்குவந்தான். அவனை வாலிகுமாரன்கண்டு அதிககோபம் உதிக்கும் படி ஓடிப்போய்விட்டவன் மறுபடியும் வந்தபடியினுலே, இவனைச் சித்தமாய்க் கொன்றுவிடுவோமென்று நினைத்தான். அச்சமயத்தில் கதிமுகனைவன் ஐயா! நான் உம்முடைய அடிமையாகையால் என்னைட்சிப்பது உமதுகடனே யாகு மென்று கைகுவித்துப் பணிந்து எதிரேநின்று, வாளைக்கொண்டு உமது மார் பைப் பிளந்ததுபோல மனவாக்குக் காயங்களினுலே நான்செய்த குற்றங்களை யெல்லாம் பொறுத்துக்கொள்ள வேண்டுமென்றுசொல்லி, அங்கதப்பெருமா னுடைய காலில்விழுந்தான். விழுந்தபொழுது கோபந்தணிந்து கதிமுகன் கையைப்பிடித்துத்தூக்கி மார்பிறுகத்தழுவிக்கொண்டு, நான் உம்முடைய

விஷயத்தில்செய்த குற்றங்களை நீரும் பொறுத்துக்கொள்ள வேண்டுமென்று விசேஷமாகச்சொன்னன். பின்பு அநுமானைநோக்கி அன்று எங்களுக்குச் சுக்கிரீபமகாராஜா சொன்னகாள் கழிந்துபோனதைக்குறித்து காங்களிறந்து போம்படி யத்தினப்பட்டதையறிந்து, எங்களை இவ்விடத்திலே யிருக்கச் செய்து லங்கைக்குப்போய்வந்து எங்களுடைய கலக்கத்தை நீக்கி ரகூவித் ததுபோல, இப்பொழுது புண்டரீசாகூரகிய ஸ்ரீராமச்சந்திரருடைய துக்கத் தையும் ஆற்றும்படி நீர் முன்னுகப்போமையா ஆஞ்சநேயரேயென்று அங்கத மகாராஜன் சொல்ல, அவனைவணங்கி இதுவே என்பாக்கியமென்று போனர். அவர் போனபின்பு சூரியனுடைய கிரணஷ்ணந்தணிந்தவுடனே அங்கதன் முதலானவர்கள் மகாபாக்கிரமத்தையுடைய ஆஞ்நாசக்கிரத்தைச் செலுத்து கின்ற நம்முடைய சுக்கிரீபமகாராசாவும், நாம் அவர்விஷயத்திற்செய்த அபசா ரத்தைக்குறித்து நம்மேல் அவருக்கு உண்டாகிய கோபமாறினர். சூரியனுக் தனது வெப்பமாறினன். ஆகையால் யாவரும் இனியவிடத்திற்குப்போவ தே நலமென்றுநினைத்து முன்பு தாங்கள் அந்த வானராதிபதியின் சோலையை அழித்து, அதற்குக் காவலாயிருந்தவர்களையும் அழித்துத் சீதத்தினதைப் பற்றி அவனென்ன ஆஜ்ஞைசெய்வாரோவென்று, நடுநடுங்கிப் பயப்பட்டிருந்த வருத்தம் நீங்கினவர்களாயெழுந்து நடக்கத் தலைப்பட்டார்கள். இப்பால் ஸ்ரீராமபத்திரர் சூரியபுத்திரனைப்பார்த்து இப்பொழுது தென்திசையிலிருந்து வருகின்ற வானரவீரர்கள் ஜானகியை மெய்யாய்க்கண்டோமென்று சொல்லு வார்களோ! அவ்விடத்தில் இல்லையென்றேசொல்லுவார்களோ! எனக்கு ஒன் றுந்தோற்றவில்லை அப்பா நீசொல்லென்றுகேட்டார். இப்படிச் சொல்லிக்கொ ண்டிருக்கும்போதே ஸ்ரீராமதூதராகிய ஆஞ்சநேயரும் சூரியனுனவன் தெற் குத்திசையில் உதயமானதுபோல, தமது திவ்விபசொரூபமானது பிரகாசிக் கும்படிக் காணப்பட்டார். அவனைக்கண்டு சுக்கிரீபன் இதோ அநுமான்வந் தானென்று சொல்ல, சுவாமியானவர் இதயத்தில்அதிகமாகியஅன்பு உதிக்கும் படிப் பார்த்தருளினர். அப்படிவந்த ஆஞ்சநேயர் சுவாமியினுடைய பொன் னடியைத்தொழாமல் தாமனையாசனத்தைவிட்டு நீங்கி லங்காதிபத்தில் எழுந் தருளியிருக்கின்ற பிராட்டியானைச் சிரசின்மேற் கைகளைக்கூப்பித் தென் றிசையை நோக்[illegible]க்கொண்டே, சமீபத்தில்வந்து பூமியில் காசர ணுதி அவயவங்கள் [illegible]படித்தாழ்ந்து மகத்தாகிய பயபக்தியுடனே சாஷ் டாங்கமாகத் தண்டம் சமர்ப்பித்தார். அந்தமகாபலிஷ்டராகிய வாயுகுமார ருடைய செய்கைகளையும் முகக்குறிமுதலானவற்றையும் நன்றுகப்பார்த்து, வண்டின்கூட்டத்தையும் கருமணலையும் ஒத்தஅளகபாரத்தையுடைய ஜானகி கேஷமமாய் இருக்கின்றார். இதஅநுமான் அவளைக்கண்டதும்உண்டு, அவரு டைய பதிவிரதா தர்மமும் சிதையவில்லையென்று, சகலத்தையும் குறிப்பிணு லறியத்தக்க திறத்தையுடைய சிதாபதியானவர் தெரிந்துகொண்டார். இவ் வாயுபுத்திரனுடைய குறிகுணங்களே பிரமாணமாகுமென்று அவற்றினல் தமது அதிசூட்சுமமாகிய பேரறிவைக்கொண்டு, நடந்தகாரியங்களையெல்லாம் அறிந்துகொண்டமாத்திரத்தில் தோள்கள்பூரித்தன. கண்களில்நின்றும் ஜலம்

பெருகின. மீண்டுதற்கருமையாகிய துக்கமும்நீங்கியது. கொடியனவில்லுணையா னது அதிகரித்தது. அப்பொழுது மாருதியானவர் சுவாமியைநோக்கித் தேவர் பெருமானுமிய கோதண்டபாணி? கண்டேன்கண்டேன் கற்பினைபூஷணத்தைக் கண்டேன். கருணைநிதியைக் கண்டேன். குணாத்னத்தைக்கண்டேன், ஜகன் மாதானவைக்கண்டேன்,ஜானகியமிர்தத்தைதென்சமூத்திரத்தின்மத்தியிலுள்ள லங்காபுரியில் எழுந்தருளியிருக்க அடியேன்கண்ணாரகணைடேன், இனிதேவ ரீர் திருவுளத்திற்சந்தேகங்கொள்ளவேண்டுவதில்லை. நெடுநாளாகக்கொண்டிரு ந்த துயரத்தையும் கையற விட்டுவிடுமென்றுசொல்லி, மறுபடியும் ரகுநந்தன னைப்பார்த்துச் சீதாபிராட்டியானவர் உம்முடைய மகிமைத்திருத்தேவியென் கின்ற உரிமைக்குமை,உம்மைப்பெற்றபிதாவாகிய தசரதசக்கரவர்த்தியினுடைய மூதன்மைச்செல்வ மருமகளென்கின்ற பெருமைக்குமை, ஜனகமகாராசாவி னுடைய அருமைத் திருமகளென்கின்ற ஒருமைக்குமை தக்கவர். எனக்குச் சாக்ஷாதுதெய்வமாய் விளங்கியிருக்கின்றவா ஐயா, இன்னமும் அந்த மீது பாவியினுடைய குணதிசயத்தை நாயே னறிந்தமாத்திரஞ் சொல்லுகிறேன சற்றேறுருச்செவிசாத்தியருளும்,களங்கமற்றபொன்னுக்குச்சானை, அதபோ ன்னேயலலாமல்வேறில்லை அதுபோலமிகவும் பொறுமையையுடைய எமபிரா ட்டியார்க்குச் சமானம் அவரேயல்லாமல் வேறிலையென்கிற நன்மையைத் தான் கைக்கொண்டார். அவருக்குப் பிராணநாயகராக வாய்த்த உமக்குச் சமானம் உம்மையல்லாமல வேறிலை என்கிற மேன்மையை உமக்குக்கொடு த்தார். எனக்குச்சமானம் என்னையல்லாமல் வேறில்லை என்கின்ற கீர்த்தியை எனக்குத்தந்தார். மேலும் கீர்த்திக்குத்தாமொருவரே உரியவராயிருக்கின்ற என் அன்னையானவர் தேவரீருடையகுலத்தைத் தேவரீருக்கு உரித்தாக்கி,தம் முடைய குலத்தைத் தமக்குரித்தாக்கிக்கொண்டு தம்மை இப்படிப்பிரிதனை யத்துக்கொண்டுபோய்த் தமகருக் கிலேசத்தைக்கொடுத்த ராவணுதிராக்ஷசர் குலத்தை எமனுக்கு உரித்தாகக்கொடுத்துத தேவர்கள்குலத்தை அவர்களு க்குஉரித்தாகவாழ்வித்துஎன்குலத்தை எனக்குக்கடாக்ஷித்தருளினர்.இதைப் பார்க்கிலும் அவாவேறென்ன உதவிசெய்யவேண்டும், வில்லேத்தாங்கிய உன் னத புசத்தையுடைய ஸ்ரீராகுவீரரே அந்த லங்[redacted]யென்னான் கேண்டாயென்று கேட்பீரானால் குடிப்பிறப்[redacted]றும் பெருமை யென்றதொன்றும் கற்பென்பதொன்றும்ஆகியஇம்மூன்றும் சந்தேகவித்து கட னஞ்செய்திருக்கக்கண்டேன். அந்த அகிலநாயகியாருடைய கண்ணினிடத்தி லும் நீரிருக்கின்றீர். கருத்தினிடத்திலும் நீரிருக்கின்றீர். வாக்கினிடத்திலும் நீரிருக்கின்றீர். ஸ்தனத்தினிடத்திலும் நீரிருக்கின்றீர், மன்மதனெய்த புஷ்ப பாணத்தைத்த ஆறுதபுண்ணினிடத்திலும் நீரிருக்கின்றீர். இப்படிக் கெல்லா மிருக்கும்போதே உம்மைவிட்டு அந்தமகராசியானவர் பிரிந்தாரென்று நீர் சொல்லுகிறதும் அந்தப்பாக்கியசாலியான்விட்டு நீர்பிரிந்தீரென்று அவர்சொ ல்லுகிறதும் என்னகாரணமையா இது ஒவ்வாதுஒவ்வாது, அவமானதுசெய்த தவமாய்வினைங்குகின்ற னைவேதகியாரென்ற சீதையானவர் லங்கையென்னும்

கரத்தில் ஒருபக்கில, சூரியன் உதயமாகின்ற காலமும் அஸ்தமிக்கின்ற காலமுமெரியாமலிருக்குமடிப் பூமிதொட்டுஆகாசபரியந்தம் செழுமையாய் உயார்ந்து நெருங்கிவளர்ந்துறைத்து சூழ்ந்துசுவர்ணமயமாயும், கலாதன்கதிமாயும் பிரகாசிக்கின்ற ழகாகிய ஒருசோலைகுள் தேவரிருடையதிருத்தம்பியாராகிய இனையபெருள் சிரமப்பட்டு, தர்பைப்புல முதலானவற்றைக்கொணடு விசேஷதமாகக்கட்டிய பர்ணசாலையின்கவிடில எழுந்தருளியிருகின்றார்.

பிரபஞ்சங்களையலலாம் சிருஷ்டித்த பிரஹ்மதேவன் பூர்வகாலத்தில் உன்னிடதில இஷ்மிலலாதவள் எவளோயாவது நீ பலாத்காரமாய்த் தொடுவையாயானல் உன்ரு சகஸ்ரபத்தலாக வெடிக்கப்பட்டு நீ உயிர்மாய்ந்து போவாயென்று தங்குக் கொடுத்த சாபத்தை நினைத்து ராவணனவன், விசேஷமாகிய மகத்துவத்தைப்பெற்ற கற்புக்கரசி யென்னும் பிராட்டியாருடைய புணணியம ஒருவடிவெடுத்ததுபோல விளங்குகின்ற அருமைத் திருமேனியை, கெனையைப்பச் செய்கின்ற தன முருட்டுகைகளால தீண்டுகிறதற்கு அஞ்சினவைய, மலலணிந்துடனே பலாத்தமெடுத்துக் கொணடுபோனன். அவன் எதிர்தீதமாகத தீணடமெயிலலை யெனபதாரு, அண்டகடாகம பிளந்துபோகாதிருப்பதும, ஆதிசேஷனுடைய தலை கிழிந்துபோகாமலிருப்பதும், சமுத்ரமபொங்கி வராமலிருப்பதும, வேதம் இறந்துபோகாமலிருப்பதுமே, சாட்சியாகப் பாரத்துக்கொள்ளும. அவன தொட்டிருந்தால் இவையெலலாம் இனறுமநிலகுலையாமலிருக்குமா? அபபொழுதே ஸகாசமாய்ப போய்விடாவா? பெண்ணைப்பிறந்தவாகளுக்குள்ளே உழமைக்காணமையால் சோகத்தை யடைநதிருகின்ற அநதபபிராட்டியார ஒருவா கற்பழியாதிருக்கின்றதால, இந்திராணி சாசுவதி முதலாகிய தேவஸ்திரீகளும் முன்னிலும் இபபொழுது அதிகச் சிறபபினையுடையவர்களானார்கள். சிவனுடையவாமபாகத்திலிருக்கின்ற பார்வதியும இனி அவனது சிரசிலிருக்கத்தக்க ஆதிக்கத்தை யுடையவளானள். ஸ்ரீமகாவிஷ்ணுவினுடைய திருமாரபில் எழுந்தருளியிருக்கின்ற லக்ஷ்மியும இனியதப்பகவானுடைய சகஸ்ரசிரசுகளிலும் இருக்கின்ற ஆதிசேஷனுடைய தினத்தை யுடையவளானள். லங்கைமுழுமையுந்தடித்த [illegible] அரண்மனைக்குள்ளேபோய் அங்கிருக்கின்ற ஸ்தரீகளை மெலல [illegible] த்துக்கொணடு அப்புறம்போய், இளந்தென்றல் உலாவுகின்ற [illegible] றுந் தெய்வீகமாகிய பரிமளம்வீசுகின்ற புஷ்பசசோலைக்குள்ளே [illegible] பார்க்குமளவில அவ்விடதில தெய்வப்பெண போலவும் எழுநதருளியிருக்கின்ற ஜானகியாரை அவர் உடமைவிட்டுப் பிரிந்தகைக்குறித்துத் [illegible] மெலியுமபடி அழுது புலமபுதலால், பெருகிப் பாய்கின்ற கண்ணீராகிய கடல நடுவே கோமேடன். அங்கே எண்ணிக்கையில லாத கோர ரூபதாரிணியுடைய ராக்ஷசஸ்திரீகளும் விகாரமாகிய பேய்க்கூட்டங்களும் சுற்றிலுமிருந்து, யாவரும் பயப்பிராந்தி கொள்ளும்படி செருக்குற்றுச்செயல [illegible] பத்திரவத்தைக்கண்டு திருவினீடுங்கிப் பதைக்கத் துக்கமென்பதுதானும் [illegible] பண் வடிவுகொண்டு. சிறைப்பிருபபதுபோலிருக்கின்றார். மேண்ணை [illegible] டன் நற்புடைய பெண்ணரசியாகிய அந்தப்பிராட்டியார்

உம்மிடத்தில் மாறாது வைத்திருக்கின்ற ஆசையைக்குத்து யோசிக்கும் போது, பார்க்கின்றவர்களுடைய கண்களுக்கு வெறுப்பிராமல் இனமுமிப் பார்க்கவேண்டுமென்று விருப்பங்கொள்ளத்தக்க கட்டழகுடையீவராகிய நீ ஒருவர்மாத்திரமே, உலகத்தில் புருஷர்களாய்ப்பிறந்தவர்களுக்குள்ளே மகா பாக்கியத்தைப் பெற்றவரா யிருக்கின்றீர். முண்டி தங்க தேந்திரங்களால் தரியாதவர்களா யிருந்தாலும அந்த லங்கைக்குத் தலைவனாகிய ராவணனுக்குரிய ராக்ஷசஸ்திரீகளும், அங்குள்ள பலவித தேவஸ்திரீகளும் பிராட்டியாருடைய திவ்விய திருமேனியையும் கற்பையும் கண்டவுடனே அவனை லோகநாயகியென்று நிச்சயம்பண்ணிக்கொண்டு அவருடைய வாசமும், பிராணனும் க்ஷணந்தோறும் அகத்திலும் புறத்திலும் போவதும் வருவதுமாயிருப்பதைக் கண்டு சகிக்காமல் ஐயோ! இந்த ஜகதீசுவரிக்கு இப்படிப்பட்ட விபத்துச் சம்பவித்ததேயென்று தங்கள் பிராணன் போவதும் வருவதுமாய் ஊசலாடும் படிக்குத் துக்கிக்கின்றார்கள். அடியேன் சீதாதேவியாரைக்கண்டு சேவித்துக் கொள்ளத்தக்க சமயம் பார்த்துக்கொண்டிருக்கும்போது வெற்றிமாலையை அணிந்த வேலாயுதத்தைக் கையிலேந்திய பாதகனாகிய ராவணனவன், அந்த இடத்திற்குவந்து என் தாயினுடைய திருவடிக்கமலத்தில் தண்டாகாரமாய் விழுந்துசேவித்து நேரிலேநின்று இருபதுகையையும்விரித்துக்கொண்டு, தன்குறையைச்சொல்லி இரக்கமாயிரந்தான். அதற்குப்பிராட்டியார் கடோரமானசொற்களால் அவனை நிந்திக்க, அந்தத்துராத்மா கோபித்துக்கொண்டு கொலைசெய்ய எத்தனப்பட்டான். அந்தருணத்தில் ஜடாயுவாருடைய கற்பும், தேவரீருடைய கடாட்சமும், தர்மமுமென்று சொல்லப்பட்ட இவை மூன்றும்தாடார்த்து நின்றுகாக்க, அவன் ராக்ஷசிகளைப்பார்த்து நீங்கள்சொல்லிச் சம்மதப்படுத்துங்கோளென்று அவர்களைக் கண்காட்டி ஏவிவிட்டுப்போனான். அவர்களனைவரும் என்னுலே ஜபிக்கப்பட்ட மந்திரத்தினால் உறக்கங்கொண்டுவிட்டார்கள். அவ்வேளையில என்னம்மையானவள், தன்பிராணனைப் போக்கடித்துக் கொள்ளும்படி நிச்சயித்துக்கொண்டு ஒருகொடியைக்கொய்தெடுத்து மரக்கிளையிலே சுற்றிமுடிந்து, அதைக்கழுத்திலேகட்டிக்கொள்ளப் போகிற சமயத்தில் இதேதுபழிவருகிறதென்று நினைத்து சீக்கிரத்திற் போய்த்தடத்துத் திருவடியிலே [redacted]ராமமென்று தேவரீர் திருநாமத்தை ஸ்மரித்தேன். அப்போது [redacted]குத்தாயகமாகிய ராக்ஷசர்களுடைய மாயச்செய்கை இதுவென்று மனதிலே குறித்துக்கொண்டு அடியேனைநோக்கி, எளியவளாகிய நானிறக்குஞ்சமயத்தில் தாரகப்பிரமமந்திரமாகிய ஸ்ரீராமநாமத்தைச்சொல்லி எனக்குமோக்ஷத்தைக்கொடுத்தாயேயென்று, கண்ணீர்பெருகித் திருமுன்னேனினிடத்தில் விழுப்படி ஆனந்தத்துச்சொன்னார். அப்போது தேவரீர் தெளிவாக என்னிடஞ்சொல்லியிருந்த அடையாளங்களையெல்லாம் நான்சொல்லிப்பின்னும் உம்முடைய தேவியின் திருவுள்ளத்தில், மாறுபாடில்லாம விருக்கச் செய்யவேண்டுமென்று தினைத்து உமது திருவாழியையும் எடுத்துக்காட்டத் தன் திருக்கண்களாற் கண்டார், அந்நேரத்தில் அந்த மோதிரமானது சீதாபிராட்டியாருக்கு கிரியாண

காலத்தில் உயினாக்கொடுக்கின்ற சஞ்சீவிமருந்தைப்போலு மிருந்தது. கேளு மையா மகதைசுவரியத்தையுடைய ஸ்ரீராமச்சந்திரரே ? ஜானகியாரிடத்தில் ஒருக்ஷணப்பொழுதுக்குள்ளே இரண்டு அதிசயத்தைக்கண்டேன். அவையென்னவென்றால், தேவரீருடைய பிரகாசம்பொருந்திய ரத்னமழுத்திய திருவாழியைத் தமது திருமுலையினிடத்தில் ஊன்றுமபடி வைத்தணைத்துக்கொண்டார். உடனே அவர் உம்மிடத்தில்வைத்த அவாவினாலுண்டாகிய காமாக்கினியால் அதுவெந்து நீராயுருகியது. மற்றும் அவருக்குத் தேவரீருடைய அடையாளத்தைக் காணப்பெற்றேமென்பதாகிய சந்தோஷமும் உள்ளத்திலுதிக்க அந்தக்குளிர்ச்சியினால், அபபொழுதே ஆறிஇறுகி முன்னிருந்தபடியேயாய்விட்டது. அடியேன் கொடுக்கும்படி அவர் திருக்கரத்தையேந்தி அன்புடனே வாங்கிய திருவாழியை அது பாபிஷ்டர்களாகிய ராக்ஷசர்களுடைய ஆரூசமான ருதிரத்தினிடத்திற் கொண்டுவரப்பட்டதேயென்று, ஆயிரங்கலசம் நிறையத் தெய்விகமாகிய கங்காதீர்த்தத்தைக்கொண்டு திருமஞ்சனஞ்செய்தத்போலத் தமது கண்ணீரினாற்கழுவி, ஏக்கற்றவரா யிருந்தாரேயில்லாமல் திருவாயைத் திறந்து அவர் ஒருவார்த்தையுஞ் சொல்லவில்லை. இளைத்திருந்த திருமேனி பூரித்ததேயல்லாமல் கண்கள் இமைக்கவே யிலலை. அன்றியும அடிக்கடிப் பெருமூச் செறிந்துகொண்டிருந்தார். அதுகண்டு பிராட்டியாருக்கு உம்மைவிட்டு அவர்பிரிந்தபின்பு நடந்தசெய்திகளையெல்லாம் சொல்லுங்கிரமப்படியே தெரியச்சொல்லித் தாயே ! நீர் எழுந்தருளியிருக்கின்றஸ்தானம் இன்னதென்று தெரியாமையால் இதுவனையிலும தாமசப்பட்டதென்றுஞ்சொல்லி, தேவரீர் படுகின்ற வருத்தத்தையுந்தெரியும்படி விண்ணப்பஞ் செய்தேன். அதைக்கேட்டுச்சோகமாறித் தமது பிராணன் நிலைக்கப்பெற்றார். அப்பால் இவ்விடத்திலுள்ள சமாசாரங்களையெல்லாம் சம்மதமாகக் கேட்டருளினார். அவ்விடதில் நடந்த சமாசாரங்களையும அடிமைப்புத் தெளியும்படித் திருவாய்மலாந்தருளினார். மேலும் நான இனனம் ஒருமாதமட்டுந்தான் உயிருடனேயிருப்பேன். இதற்குள்ளே சுவாமிக்கு இங்கே விசயம்பண்ணுகிறதற்குத் திருவுளமில்லாவிட்டால் அவசியம் பிராணத்தியாகம் பண்ணிக்கொள்ளுவேன் என்று தேவரீர் எழுந்தருளியிருக்கின்ற திக்கைநோக்கித் தண்டம் சமர்ப்பித்து பின்பு தமது பொன்னுடையில் வைத்திருந்த மணிராஜமாகிய விலையிலாத சூடாமணியை யெடுத்துச் சந்தோஷமாக என்கையிற்கொடுத்தார். இதோ உமதுடைய தாமனைமலருக் கொப்பாகிய கணகளாதக் கண்டருளுமையா வென்று வேத சாஸ்திரங்களெல்லாம், எந்தமட்டும் அழியாமலிருக்குமோ அந்தமட்டுமழியாத கீர்த்திபுடனே நித்தியத்துவந்தப் பெற்றிருக்கின்ற ஆஞ்சநேயர் சுவாமிகையிற்கொடுத்தார். அந்தச் சூடாமணியை ஸ்ரீராமர் தம்முடைய திருக்கையில் வாங்கினமாத்திரத்தில் நாள்தோறும் அவர்திருமேனி வேறுபடக் காமமானது பொங்கி எழுந்தோங்கச் சரீரம்வெதும்பித் திருவுளமெலியும்படி சம்பவித்திருந்த துக்கத்தைவிட்டுவிட்டார். அம்மை கொடுத்தனுப்பிய சூடாமணியானது கையில்வரப் பெற்றபோது சுவாமிக்கு எப்படியிருந்ததென்றால், பூர்வம் மிதிலாபுரியில் ஓமாக்கினிக்கு முன்

பாகத் தமது கையினல் அந்த ஜானகியாருடைய திருக்காத்தைப்பிடித்த போது எவ்வளவு சுகஸ்பர்ஷமாயிருந்தோ அவ்வளவு சுகஸ்பர்ஷமாயிருந்தது. அனேயும ரோமங்கள் சிலிர்த்தன. ஆனந்தக்கண்ணீர் பெருகியது. மார்பும் தோளும் துடித்தன. வெயர்வு துளித்துளியாகத் தோன்றியது. அழகு பொருந்திய வாயிதழ்பனைத்தது. ஆவியானது வருவதும் போவதுமாயதை திருமேனிபுளகித்தது. அந்தக்குணங்களை அறியதகைவாகள் ஆரிருக்கின்றார்கள். அச்சமயததில இரணடுவெள்ளம் வானரசேனையுடனே அநுமதன் முதலானவாகள் வந்து ஸ்ரீராமபத்திரனையும சுக்கிரீபமகாராசனையும வணங்கிப் போனகாரியம் முடிந்ததைக்குறித்து உணடாகிய சந்தோஷத்தினல பூரண சந்திரனபோலப்பிரகாசிக்கின்ற முகமதஜனசயுடையவாகளாயிருந்தாகள். அபபொழுது சுகரிபா எழுந்திருந்து சுவாமியைச்சேவித்து, கௌரையா ரகுநாயகமா! மோட்டியாரானவா முனபோல எவ்விடததி லிருக்கின்றாரோ வென்று நீனைக்குடபடி அருளையாயாயிருக்கவில்லை. இப்பொழுது காமகாளு கூறதறப் பிகவுநு சுலபோயிருக்கிறானென்று அநுமனை முதலானவாகள்வந்து சொலலியும, காலதாமசமாக இனி இவ்விடததி லிருகக்வேணடியதனென வெணறுசொன்னார. அபபடிச சொன்னமாதிரததில சுவாமி பானவர் அதி சீகரமாக எழுந்து பிரயதனபடட, நமமுடைய சைனியங்களை யெலலாகக்கபபிரயாணபபடுமபடி கதாவுசெய்யப்பாவினார. அவர அபபடியே உதாவுசெயதார. வானரசனியம இநதசமூணமே புறப்படக்கடவ தென்று யாவருக்குந தெரியுமபடி பிரயாணமேபரி யடிகைகப்பட்டது. அழித த வடமேன சமுதிரமானது பொஙகியெழுந்து பூமியிலவாதது்போலக் குரஙகின சேனையானது ஆபபரிதது்கொணடு நிரியமுக பாவதத்தை விட்டெழுந து தெறகுத்திசையைலாகைகடநதது. அப்பொழுது ஸ்ரீராமபிரானுனவா இநத சேனை காட்டைவிட்டு காட்டினவழியேயாடநதால உலகத்தார பயந்து பிரமிபபார்கள். மேலும இவறறுகலெலாம உணவுகிடைக்கினறதோ பிரயாசமாயிருக்குமெனறு நினைத்து இலைகள், தளிர்கள், மலர்கள், காய்கள், கனிகள, கிழஙகுகளும, தேனமுதலானவைகளும, விசேஷமாகக் கிடைக்கத்தக்க வெணகள் மலைகளின் வழிபோய்ப்ப போகவேணடுமெனறு ஆஜ்ஞாபித்தார. சைனியமா னது காடுகரங்களினமார்க்கமாகப போகாமல சுவாமிசானனை மார்க்கமாக வேபோயிற்று. அதன்பினனே விரதீரத்தையுடைய ஸ்ரீராமரும் லட்சமண ரிபெருமானும சுக்கிரீபமகாராஜன முதலானவாகள் சூழ்ந்துவர, அநுமான தென்சமுதிரதினை மததியில மகாமேருசிகரதின்மேல லஙகாபட்டண மிருக்கினற சிஙகாரத்தையும அஙகே பொலலாதராக்ஷசர்கள் வெகு ஜாகரி ரதையுடனே காவலாயிருக்கின்றதையும கோட்டைக் கொதத்தளங்களி னிலை த்தையும தலைவனுகிய ராவணனுடைய பராக்கிரமத்தையும உக்கிரமமாயப் சேனைகளின் அளவிலலாமையையும சொலலிக்கொணடு தொடரக்கேட்டுக் கொணடே பிரயாசமிலலாமல வேடிக்கையாக வழிநடநதாகள். அபபடி யே வெகுதூரம் வாநரசேனாபதியாகிய சுக்கிரீபனுடனே ஸ்ரீராமலட்சுமணர் கள்போக அவர்களுடனே கூடிக்கொணடுபோகினற வானரசேனவீராகள் பவளமலையினிடதத்திபோய் ஒரு பகலமுழுதும் தஙகியிருந்து பின்பு புறப் பட்டுப் பன்னிரணடுகொளளுபோயனதென்சமுத்திரத்தைக் கணடாகள்.

திருவடிதொழுதபடலம்,
முற்றிற்று.

சுந்தரகாண்டம் முற்றுப்பெற்றது.
